ஸ்ரீ

பகவத் விஷயம்

ஏழாம் பத்து

திருவாய்மொழி மூலமும்

ஆறாயிரப்படி, ஒன்பதிநாயிரப்படி, பன்னீராயிரப்படி,
இருபத்திநாலாயிரப்படி, ஈடு முப்பத்தாறாயிரப்படி வ்யாக்யாநங்களும்,
சீயர் அரும்பதவுரை, ப்ரமாணத்திரட்டு, த்ரவிடோபநிஷத்ஸங்கதி,
த்ரவிடோபநிஷத்தாத்பர்யரத்நாவலி, திருவாய்மொழி
நூற்றந்தாதி இவைகளுடன்.

சே. கிருஷ்ணமாசாரியர் பதிப்பு

வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரியராலும்,
சே. பார்த்தஸாரதி ஐயங்காராலும்,
பரிசோதிக்கப்பெற்றது.

திருவல்லிக்கேணி,
நோபில் அச்சுக்கூடம்.

விபவஹு] [1928.

ஸ்ரீ:

முதல் திருவாய்மொழி—உண்ணிலாவிய - ப்ரவேஶங்கள்.

ஆறாயிரப்படி.

(உண்ணிலாவிய) - இப்படி எம்பெருமானை ஶரணம்புக்கு, "என்னுடைய ப்ரக்ருதி ஸம்பந்தத்தைப் போக்கி என்னை அடிமைகொண்டருளவேணும்" என்று அபேக்ஷிக்கச்செய்தேயும் அவனுக்குத் தம்முடைய திருவுடம்பிலுள்ள லோபத்தாலும், இவரைக்கொண்டே திருவாய்மொழியை முடிக்கத் திருவுள்ளமாகையாலும் இப்ப்ரக்ருதி ஸம்பந்தத்தைத் தவிர்த்தருளாமையாலே, பண்டுபோலே இந்த்ரியங்கள் நடுவே தாமிருக்கிறபடியைக் கண்டு, இவர் தம்முடைய கரணங்கள் ப்ராக்ருதவிஷயவிமுகமாய் பகவத்ப்ரவணமாயிருக்கச்செய்தேயும்; விஷயப்ரவணகரணஸஜாதீயமாகையாலும், இன்றளவும் வர அநாதிகாலமெல்லாம் விஷயப்ரவணமாய் பகவதநுபவவிரோதியாகையாலும், இப்போதும் அபிமதஸம்ஶ்லேஷப்ரதிபந்தகமாகையாலும், ஹேயமாகையாலே பகவத்ஸம்ஶ்லேஷாநர்ஹமாகையாலும் இவற்றினுடைய தர்ஶநமாத்ரத்தாலே விஷயங்களிலே ஆக்ருஷ்யமாணரைப்போலே அதிமாத்ரபீதராய், எம்பெருமானைக் காணப்பெறாத வ்யஸநத்தாலே பீட்யமாநருமாய்க்கொண்டு எம்பெருமானை நோக்கி, இக்கரணஸந்நிதாநத்தைத் தவிர்ப்பித்தருளவல்லையாயிருந்துவைத்துத் தவிர்த்தருளாமையாலே, "நீ இவற்றையிட்டு என்னை ஹிம்ஸிப்பித்து உன் திருவடிகளிற் சேராதபடி பண்ணுகிற இத்தால் உனக்கு என்ன ப்ரயோஜநமுண்டு? பரமகாருணிகனே! இவற்றினின்றும் உன் திருவடிகளிலே என்னை வாங்கியருளாய்" என்று திருவடிகளைப் பூண்டுகொண்டு கிடந்து, எம்பெருமானைக் காணப்பெறாத வ்யஸநத்தாலும் தத்ஸம்ஶ்லேஷப்ரதிபந்தகப்ரக்ருதி ஊர்ஶந ஜநிதவ்யஸநத்தாலுமாக, அஶோகவநிகையில் பிராட்டி கூப்பிட்டாற்போலே கூப்பிடுகிறார்.

ஒன்பதினாயிரப்படி.

ஏழாம்பத்தில், முதல் திருவாய்மொழியில், இப்படி பெரியவார்த்தியோடேகூட எம்பெருமானை ஶரணம்புக்கவிடத்திலும் தம்முடைய அபிலஷிதம்பெறாதே மிகவும் அவஸந்நரான ஆழ்வார்-தாம் ஜிதேந்த்ரியராய் இருந்தாரேயாகிலும், ப்ரக்ருதிஸம்பத்தரானவர்கள் ஹேயதையாலே பகவதநர்ஹமாய் விஷயாந்தரப்ரவணமாய் பகவதநுபவவிரோதியாயுள்ள இந்த்ரியங்களாலே நலிவுபடுகிறபடியைக்கண்டு, தாமும் ப்ரக்ருதி ஸம்பத்தராகையாலே தாத்ருஶமான இந்த்ரியங்களாலே நலிவுபடுகிறாராகவும், ஸத்வாதிகுணங்களும் இந்த்ரியங்களும் விஷயங்களும் தானிட்ட வழக்காய் எல்லார்க்கும்ரக்ஷகனுமாய் ரக்ஷிக்கைக்கீடான ஸாமர்த்யத்தையுமுடையனாய் ரக்ஷிக்கைக்கும் உறவுடையனாயிருந்துவைத்துத் தம்முடைய உஜ்ஜீவத்தைப் போக்காதொழிந்தவாறே, "குணத்ரயத்தாலே பேர்க்கவொண்ணாதபடி கட்டி இந்த்ரியங்களாகிற பட்டரையிட்டுக் குத்துவித்து * அயர்வறுமமரர்களும் தானும் இதுவே போதுபோக்காகப் பார்த்திராநின்றான்"

என்றும்பொடிபண்ணி,“பரமதயாளுவாய் ரக்ஷிக்கைக்குஶக்தனுமாயிருக்கிற நீ இங்ஙன நோவுபடக் கண்டிருக்கலாமோ?” என்று கேட்டார்க்கும் தரிக்கவொண்ணாதபடி பெரு கூப்பீடாகக் கூப்பிடுகிறார்.

பன்னீராயிரப்படி.

(ஏழாம்பத்தில்),கீழிரண்டுபத்தாலே - உபாய ஸ்வரூபஶோதநத்தையும், த ஸ்வீகாரத்தையும் அருளிச்செய்து, மேலேழாம்பத்தாலும் எட்டாம்பத்தாலும் - உபா நிவர்த்யமான விரோதிஸ்வரூபத்தையும், தந்நிவ்ருத்திப்ரகாரத்தையும் அருளிச்செ கிறார். அதில் விரோதிஸ்வரூபபரமான இப்பத்தாலே - நிவர்த்யமான விரோதியாயுள்ள ஶரீரேந்த்ரியாதிகள் நிவர்த்தகனான ஈஶ்வரனிட்டவழக் கென்னுமத்தையும், விரோதி நிவ்ருத்தி பிறவாதபோது ப்ராப்யகதப்ராவண்யம் ஆர்த்திஜநக மென்னுமித்தையும் ஆர்த்திஶமிப்பது அபிநிவிஷ்டனான ஈஶ்வரனுடைய தேசப்ராப்தியாலே யென்னுமத்தை யும், ஆர்த்திஹேதுவான விரோதியானது ஜகத்ரக்ஷணஹேதுவான விஜயபதாநங்களை யுடைய ஸர்வஶக்திக்கே நிவர்த்தநீயமென்னுமத்தையும், ரக்ஷகனான அவனையொழி வேறுநிவர்த்தகரில்லையென்னுமிடம் ஸர்வஸம்மத மென்னும்படியையும், ஸர்வஸ்ரஷ்ட வான அவனுடைய காலைக்கட்டிக் கூப்பிட்டு விரோதியைக் கழித்துக்கொள்ளவேணு மென்னுமத்தையும், உருவெளிப்பாடான அநுபவம் நடக்கச்செய்தேயும் அலாபஜநிதை யான ஆர்த்தி விரோதிகார்ய மென்னுமத்தையும், விசித்ரவிரோதிநிவர்த்தநத்தி விசித்ரவிபூதிவிசிஷ்டனான விசித்ரஶக்தியுக்தனே வேணுமென்னுமத்தையும், விரோதி விசிஷ்டவேஷத்திலே வாசிக கைங்கர்யங்கொண்ட ப்ரீத்யதிஶயத்தாலே விரோதியை விஹஸ்தமாக்கின ஹர்ஷத்தையும், ப்ராப்யவிஷயத்தில் ப்ராவண்யம் அதிசயித்தா ப்ரதிபந்தகம் உபாயபூதன் போக்கு மென்னுமத்தையும் அருளிச்செய்து, விரோதிய னுடைய ஸ்வரூபத்தை ஶோதித்தருளுகிறார்.

இதில் முதல் திருவாய்மொழியில் - கீழே ப்ராப்த்யர்த்தமாக ஶரணாகதியை யநுஷ்டித்த இவர்க்கு ப்ராப்திவிரோதி நிவ்ருத்த்யர்த்தமாக ப்ரதிபந்தகப்ராபல்யத்தை ப்ரகாசிப்பிக்க, “காட்டிப்படுப்பாயோ” “இன்னங்கெடுப்பாயோ” என்று பண்டே அஞ்சியிருக்கிற இவர்,ப்ரதிபந்தகமான தேஹேந்த்ரியாதிகளுடைய அதிப்ரவ்ருத்தியை அபரோக்ஷித்து “ஸம்ஸாரஸ்ய ஹேவிதாவதத்வேதா:” என்கிறபடியே, அதிசய தார்த்தியையுடையராய், விரோதிநிவர்த்தகனான ஈஶ்வரனுடைய ஸம்பந்தாதிகுண பௌஷ் கல்யத்தையும், போக்யதாதிஶயத்தையும், ரக்ஷணார்த்தவ்யாபாரத்தையும், அகடி தகடநாஸாமர்த்யத்தையும், விரோதிநிரஸநஸ்வபாவத்தையும், ஸர்வப்ரகாரஸந்நிதி யையும், அருந்தொழில்செய்தும் ஆஶ்ரிதகார்யஞ் செய்யும்படியையும், அஸாதாரணசிஹ் நாதியோகத்தையும், ஸகலஜகத்ஸ்ரஷ்ட்ருத்வாதிகளையும், ஸாரஸங்க்ரஹணஸாமர்த் யத்தையும் அநுஸந்தித்து, “ஏவம்விதஸ்வபாவனான நீ, உனக்கு விதேயமான ஶரீ ரேந்த்ரியாதிகள் என்னை நலியக் கண்டு நிவர்த்திப்பியாதிருந்தாய்” என்று பந்துவிஶேஷ மடியாகப் பெரிய ஆர்த்தியோடே கூப்பிடுகிறார்.

இருபத்திநாலாயிரப்படி.

ஏழாம்பத்தில், முதல் திருவாய்மொழியில்—கீழ் பெரிய ஆர்த்தியோடே பிராட்டிமுன்னாக ஶரணம்புக்கவிடத்திலும் தம் அபேக்ஷிதம் கிட்டிற்றில்லை: அதுக்கு அடி, இவரை இங்கேவைத்துத் தான் கொள்ள நினைத்த காரியம் தலைக்கட்டினால் பின்ட

*செய்வானாக நினைத்திருக்கை: அந்த க்ரமத்தை ஸஹித்ததில்லை, இவர்க்குக் கீழ் தமக்குப் பிறந்தவாற்றாமை. அத்தாலே மிகவும் அவஸந்நராய், அத்தாலே தாம் ஜிதேந்த்ரியராய் * முடியானேயிற் சொன்ன காரணங்களையுடையராயிருக்கச் செய்தேயும், ஸம்ஸாரிகள் இந்த்ரியவஶ்யராகக் காண்கையாலும், அவை நடையாடுகிற தேசத்திலே தேஹஸம்பந்தத்தோடே யிருக்கையாலும் "நமக்கு இது வரிற் செய்வதென்?" என்று அஞ்சி, ஸர்வரக்ஷகனாய், பிறர்நோவறியுமிடத்தில் ஸர்வஜ்ஞனாய், பரிஹரிக்கைக்கு ஶக்தனுமாய், ப்ராப்தனுமாய், இந்த இந்த்ரியாதிகளும் தானிட்ட வழக்காயிருக்கத் தம்முடைய து:க்க நிவ்ருத்தி பண்ணாமையாலே, குணத்ரயத்தாலே பந்தித்து இந்த்ரியங்களாகிற [illegible]ராலே நலிவித்து நித்யவிபூதியிலே நித்யஸூரிகளும் தானுமாகத் தம் எளிவரவு கண்டு சிரித்திருக்கிறானாக நினைத்து "பரமதயாவானாய் ரக்ஷகனான நீ என்னை இங்கே நோவுபடக் கண்டிருக்கலாமோ?" என்று கேட்டார்க்குத் தரிப்பரிதாம்படி கூப்பிடுகிறார். ஸ்வகர்மத்தாலே வந்த நோவை "அவன் நலிகிறான்" என்று சொல்லலாம்படியிறே ஸம்பந்த மிருப்பது. பேறு அவனாலேயானால் இழவும் அவனாலேயென்னத் தட்டில்லையிறே.*

ஈடு முப்பத்தாறாயிரப்படி.

"அமர்ந்துபுகுந்தேன்" என்று தம்மால்ஆனவளவும் புகுரநின்றார். அநந்தரத்தில் அவனைப் புகுரநிற்கக்கண்டிலர். "இனிக் கைவிடப்பார்த்தானாகாதே" என்று விழுந்து கிடந்து கூப்பிடுகிறார். விளம்பஹேதுவில்லாத ஸாயநத்தைப் பரிக்ரஹித்தவன், அது ஸகல ப்ரதமாந்தனையுங் கிடந்து கூப்பிடுமேத்தனையிறே. இவர்தாம் கீழ்ச்செய்ததாயிற்று - திருவேங்கடமுடையான் திருவடிகளிலே பெரியபிராட்டியார் முன்னிலையாகத் தம்முடைய ஆகிஞ்சந்யத்தை விண்ணப்பஞ்செய்துகொண்டு ஶரணம்புக்காராயிறே யிருக்கிறது. அது "மாமேவ யே ப்ரபத்யந்தே மாயாமேதாம் தரந்தி தே" (மாமேவயேப்ரபத்யந்தேமாயாமேதாம் தரந்திதே) என்கிறபடியே கடுகப்பலித்துக்கொடு நிற்கக்கண்டிலர். இனி, "நம்மைக்கைவிடப் பார்த்தானாகாதே" என்று இன்னாதாகிறார். ஸம்ஸாரஸ்வபாவத்தை அநுஸந்தித்துப்போக்கடியற்று அவ்வடியைப்பற்றி ஶரணம்புக்கவிடத்திலும் தம்மபேக்ஷிதம் செய்யாமையாலே,

---

உண்ணிலாவிய ப்ரவேஶ:—கீழிற்றிருவாய்மொழியோடு இத்திருவாய்மொழிக்கு ஸங்க்ரஹேண ஸங்கதி அருளிச்செய்கிறார் - அமர்ந்து இத்யாதிவாக்யத்ரயத்தாலே. தம்மாலானவளவும் புகுரநிற்கையாவது - புருஷகாராகிஞ்சந்ய புரஸ்கார பூர்வகமாக அடைந்து, ஸ்வீகாரத்திலுபாயபுத்தியையும் தவிருகை. அவனைப் புகுரநிற்கக் கண்டிலரென்றது - விரோதியைப்போக்கி ப்ராப்தியைப்பண்ணித்தரக் கண்டிலரென்றபடி. ஸாதநாநுஷ்டாநம் பண்ணினவன் ஃபலப்ராப்தி யளவும் ஆறியிருக்குமாபோலே பண்ணின ப்ரபத்தி ஃபலிக்குமளவும் ஆறியிராதே! கூப்பிடுகிறதென்? என்ன - விளம்பஹேது இத்யாதி.

விஸ்தரஸங்கதி - இவர்தாம் இத்யாதி. "ஆனவளவும்" என்றதின்விவரணம் - திருவேங்கடமுடையான் இத்யாதி. "அநந்தரத்திலவனை" இத்யாதியின் விவரணம் - அது மாமேவ இத்யாதி. "தைவீஹ்யேஷா" இத்யாதி, கீதாஸப்தமே. "இனிக்கைவிட" இத்யாதியின் விவரணம் - இனிநம்மைஇத்யாதி. "மாமேவயே ப்ரபத்யந்தே" என்கிறது - "பக்திவிரோதிபாபக்ஷயத்துக்கும் பக்த்[illegible]க்கும் உறுப்பான ப்ரபத்தியைச் சொல்லுகிறது" என்று அங்கப்ரபத்தி பரமாக ஶ்ரீகீதாபாஷ்யத்திலேவ்யாக்யாதமாகிலும், 'மோக்ஷஸாதநமானஸ்வதந்த்ரப்ரபத்திபரம்' என்று இவர்க்குவிவக்ஷிதம். இன்னாதாகிற ப்ரகாரத்தைக் காட்டுகிறார் - ஸம்ஸார இத்யாதி கூப்பிடுகிறரென்னுமளவும்.

ஶரணம்புக்கார்மேலேவேற்காரரை ஏவிஹிம்ஸிக்கும்க்ரூரஸம்ஸாரோபாதியாக அவனைநினைத்
ஹீதராய், ஈஶ்வரன் க்ருபைபண்ணுகைக்கு வேண்டுவது - ஸம்ஸாரத்தினுடையஹேயத
நெஞ்சிலே படுகையும், அத்தலையில் வைலக்ஷண்யத்தை யநுஸந்திக்கையும்: ப்ரபத்திபண்
ணுகைக்கு மேற்படவில்லையிறே; இவ்வளவிலும்ஃபலிக்கக்காணாமையாலே, "வைப்பனு
வைத்தப்ரஹ்மாஸ்த்ரம்வாய்மடிந்ததுகிடீர்!"என்றுகூப்பிடுகிறார். "இனித்தான்'க்ஷிபாமி'
[க்ஷிபாமி]யாதல், ந க்ஷமாமியாதல், இரண்டேயிறே; அதில் "க்ஷிபாமி" [க்ஷிபாமி] என்னும
விலேயாகாதேநாம்" என்றிருந்தார். அதுவேன்? இவர்க்கு 'ந க்ஷமாமி' [ந க்ஷமாமி] என்றபுத்தியோக
பண்ணிக்கொடுத்தானேயென்னில்; "அதுவும் நோவுபடுகைக்கு உடலாகத் தந்தான்" என்
ருக்கிறார். தம்முடைய ஶக்திகொண்டு பெறவிருந்தாரல்லர்; அவனுக்கு அஶக்தியுண்டாயிழ
கிறாரல்லர்; பேற்றுக்குவேண்டுவது முன்பேசெய்துநின்றார்; ஆனபின்பு, இவர்க்கு இப்போ
இழக்கவேண்டுவதில்லையிறே. ஆனால் ஃபலியாதொழிவானேன்? என்னில்; "இவர்துறை
யாலே வைக்கிலிறே ஃபலித்ததில்லையாவது: நமக்காகவிருக்கிற பின்பு இவர்இங்கேயிரு
தால் நல்லது" என்றிருந்தான். அவனும் இவரைக்கொண்டு ஒருகார்யங் கொள்ளவிறே
யெண்ணியிருக்கிறது. அதுவுமொழிய, இவருடைய சரமதேஹமாகையாலே, இவர் ப்ரபத்
பண்ணினவிடத்திலும், இவர்திருமேனியில் தனக்குண்டான ப்ராவண்யத்தாலே கார்ய
செய்திலன். இவர்திருமேனியில் ப்ராவண்யமிறே "மங்கவொட்டு" என்று அவனைக் கா
கட்டிற்றும். மெய்யான ப்ரேமமுண்டானால் இங்ஙனல்லதிராதே. இது ப்ரக்ருதியாயிற்றே

*'ஈஶ்வரன் க்ருபைபண்ணுகைக்கு' இத்யாதிவாக்யத்தை முன்னே அநுஸந்தித்து, பின்பு 'ஸம்ஸா ஸ்வபாவத்தை' இத்யாதிவாக்யத்தைஅநுஸந்தித்து, பின்பு 'இவ்வளவிலும்ஃபலிக்க' இத்யாதிவாக்ய அநுஸந்தேயம். சடக்கெனப்பலியாவிட்டால் "க்ரமேணபலிக்கிறது" என்றிராதே, "ஃபலியாது" என்று பட்டுக்கூப்பிடுகைக்கு ஹேதுவேது? என்ன - இனித்தான்க்ஷிபாமி இத்யாதி. "தாநஹம் த்விஷதः க்ரூராந் ஸம்ஸாரேஷு நராதமாந் । க்ஷிபாம்யஜஸ்ரமஶுபாநாஸுரீஷ்வேவ யோநிஷு" இதி கீதாஸு ஶ்லோகத்வயம். "தேஷாம் ஸததயுக்தாநாம் பஜதாம் ப்ரீதிபூர்வகம் । ததாமி புத்தியோகம் தம் யேந மாமுபயாந்தி தே" இதி ஶ்லோகே
*'க்ஷிபாமிக்குஇலக்காவோம்" என்று அதிஶங்கைபண்ணுவானென்? "ததாமி" என்ற புத்தியோகப் பண்ணிக்கொடுத்தானே யென்கிற சங்கையை அநுவதித்து, இப்போது கார்யகரமாகாமையாலே அதுவும் அந்யதாஸித்தமென்று, வெறுக்கிறாரென்று பரிஹரிக்கிறார் - அதுவேன் இத்யாதி வாக்ய த்வயத்தாலே. கீழே "விளம்பஹேதுவில்லாத" இத்யாதி வாக்யவிவரணமாதல், மேலில் ஶங்கைக்கு உபோத்காதமாதல் - தம்முடைய ஶக்தி இத்யாதி நாலுவாக்யம். முன்பே செய்துநின்றரென்றது - ப்ரபத்தி பண்ணினரென்றபடி. இப்படியானால் இவர்அபேக்ஷிதம் செய்யாதொழிவானென் னென்கிற சங்கையை அநுவதிக்கிறார் - ஆனால் இத்யாதி. பரிஹாரம் - இவர்துறையாலே இத்யாதி வாக்ய த்வயம். கீழ் வாக்யவிவரணம் - அவனும் இத்யாதி. ஒருகார்யம் - ஜகத்தைத் திருத்துவதொருகார்ய மென்றபடி. பரிஹாராந்தரம் - அதுவுமொழிய இத்யாதி. அதுவுமின்றியிலே யென்றபடி. "ஈஶ் வரன் சரமதேஹத்தை விரும்பும்" என்றதுக்கு ப்ரமாணமாக- †"ஸஹஸ்ரஶீர்ஷம் ஸம்ஜ்ஞேயம் தேவம் ஶோசிஷ்கேஶம் । ஹரிதஶ்மஶ்ருஶரீரம் தேந ஸம்ஜ்ஞஸ்ய ஸர்வம் வேதாந்தேஷு" என்கிற ஶ்ருதியை அருளிச்செய்வர். இவர் திருமேனியில் ப்ராவண்யத்துக்கு நியாமக மேது? என்ன - இவர்திருமேனியில் இத்யாதி. அல்லாதாரிடத்தில் இங்ஙன் காணோமே யென்ன - மெய்யான இத்யாதி. மெய்யான ப்ரேமமுடையார்திருமேனியில் ப்ராவண்யம்அவனுக்கு ஸஹஜ மென்னுமத்தை ரஸோக்தியாக அருளிச்செய்கிறார் - இது ப்ராக்ருதியாயிற்றே அவனுக்கு என்று,

† யஜுர். ஆரண. ப்ர-3. அநு-14.

அவனுக்கு: அவன் தம்மைக்கொண்டு கொள்ள விருக்கிற கார்யந்தன்னை இதில் பொருந்துவாரையிட்டுக் கொண்டாலாகாதோ என்றாயிற்று இவர்நினைத்திருக்கிறது. “பண்ணிக் கொடுத்த ஜ்ஞாநலாபம் இவர்க்கு தரிக்கைக்கு உடல்” என்றிருந்தான்அவன்: அதுதானே த்வரைக்கு உடலாயிற்று இவர்க்கு. “க்ரமத்திலே காரியஞ்செய்கிறோம்” என்றிருந்தான் அவன்: அது தன்னையேகொண்டு “நம்மைக் கைவிட நினைத்தான்” என்றிருக்கிறார் இவர். நித்யவிபூதியையும் திவ்யமங்களவிக்ரஹத்தையும் ஸாக்ஷாத்கரித்து “அங்கேபோய்அப்படியே அநுபவிக்கவேணும்” என்னும் பதற்றத்தையுடைய இவர்க்கு, “ஸம்ஸாரம் ததீயமாயிருப்பதும்ஓராகாரமுண்டு” என்னும் ஜ்ஞாநமாத்ரத்தாலே தரித்திருக்கப்போகாதே. “யானுநீதானாய்த்தெளிதோறும் நன்று மஞ்சுவன் நரகம்நானடைதல்” என்றிறே இவர் இருப்பது. இப்படியிருக்கிற தம்மையும், அவனுக்கு ரக்ஷ்யவர்க்கம் குறைவற்றிருக்கிற படியையும், ரக்ஷகத்வம் ஸ்வரூபமாயிருக்கிறபடியையும், ரக்ஷிக்கைக்கு உடலான ப்ராப்தியிருக்கிறபடியையும், தமக்கு இவற்றில் அந்வயமற்றிருக்கிறபடியையும், ஸத்த்வாதிகுணங்கள் அதுக்கடியான தர்மதேஹேந்த்ரியாதிகள் இவற்றுக்கடியானமூலப்ராக்ருதி மஹான் அஹங்காரம் அதின்கார்யமான விஷயங்கள் அவித்யாகர்மவாஸநாருசிகள் இவையெல்லாம் ததீநமாயிருக்கிறபடியையும் அநுஸந்தித்து, “விஷயங்களும் இந்த்ரியங்களும் நடையாடுகிற ஸம்ஸாரத்தேவைத்தபோதே இவற்றுக்கு நம்மை இரையாக்கிப்போகட நினைத்தானித்தனை: “**க்ஷிபாமி**” [க்ஷிபாமி] என்கிறகோடியிலேபுக்கோம். இனித்தான்இவன்பரிகரங்கள்கண்டதும் நம்மையகற்றுகைக்கு உறுப்பாக. அதில், நித்யவிபூதியில் ஓலக்கமிருக்கிறது நாம்படுகிற நலிவுகண்டு அங்குள்ளாருடனே கூடச் சிரித்திருக்கைக்கு; லீலாவிபூதிகண்டது நமக்குச் சிறைக்கூடமாக. * மயர்வறமதிநலமருளிற்றும் - அல்லாதாரைப்போலே ஸுகமே

ப்ராக்ருதி - ஸ்வபாவமும், ப்ரயோஜநமும். இது-ப்ராவண்யம். * மயர்வறமதிநலம்பெறுகையாலே அவன் தம்மை வைத்தகாரியம் அறிந்திருக்கச்செய்தே த்வரிக்கிறதென் ? என்ன - அவன்தம்மை இத்யாதி. இதில் பொருந்துவாரை என்றது - திருமழிசைப்பிரான் போல்வாரை யென்றபடி. ஹேதுத்வயத்தாலே வைத்தானாகிலும், ஆர்த்தரானஇவரை தரிப்பிக்கவேண்டாவோ ? என்ன-பண்ணிக்கொடுத்த இத்யாதி. ஜ்ஞாநலாபமென்றது - ஏதேனுமொன்றைப் பற்றினாலும் அதுதன்னையே பற்றிற்றென்று சொல்லலாம்படியான ததீயத்வப்ரதிபத்தி. “நமக்காகவிருக்கிற பின்பு” இத்யாதி வாக்யவிவரணம் - க்ரமத்திலேஇத்யாதி. கீழ் காட்டிக்கொடுத்த ததீயத்வ ப்ரதிபத்தியாலே தரித்திருக்கவொண்ணாதோ? என்ன அருளிச்செய்கிறார் - நித்யவிபூதியையும்இத்யாதி. உக்தார்த்தத்துக்கு ப்ரமாணம் - யானுநீதானாய் இத்யாதி. யானுநீதானாய்த்தெளிதோறும்- நான்உனக்கு அத்யந்தசேஷபூதனென்கிற தெளிவு பிறக்கப்பிறக்க. நன்றுமஞ்சுவன் நரகம் நானடைதல் - ஸம்ஸாரத்திலிருப்பை நான் மிகவும் அஞ்சாநின்றேன். சேஷத்வ ப்ரதிபத்திக்கு விரோதியாகையாலே யென்றபடி. இதுக்கு - “வானுயரின்பம்மன்னிவீற்றிருந்தாய்” என்றதிலே நோக்கு. இப்படி ப்ராஸங்கிகஶங்காபரிஹாரம்பண்ணி, அநந்தரம் பாட்டுக்களுக்குபாவம் - இப்படியிருக்கிற இத்யாதி. இப்படியிருக்கிற தம்மையும் - “அவனைப்பெறவேணும்” என்னும் ஆர்த்தியோடே ப்ரபத்திபண்ணின தம்மையுமென்றபடி. அவனுக்கு ரக்ஷ்யவர்க்கமென்று தொடங்கி ஸத்த்வாதிகுணங்களென்னுமளவும் “உலகமூன்றுடை,” “கடல்ஞாலங்காக்கின்ற” “அண்ணலே” “வலமுதல் கெடுக்கும்வரமேதந்தருள்கண்டாய்” “குணங்கள் - கொண்டமூர்த்தி” என்றத்தைப்பற்ற. “குணங்கள் - கொண்டமூர்த்தி” என்று - ஸத்த்வாதிகுணங்களைச் சொல்லுகையாலே, “தர்மதேஹேந்த்ரியாதிகள்” என்றவையெல்லாம்அர்த்தாத்ஸித்தம். இவற்றிலென்றது - ரக்ஷ்யாதிகளிலென்றபடி. தர்மமென்றது - கர்மத்தை. “குமைதீற்றி நலிவானின்னமெண்ணுகின்றாய்” என்றத்தைப்பற்ற - விஷயங்களும்இத்யாதி. பரிகரங்களென்றது-நித்யவிபூதி தொடக்கமான பரிகரங்களென்றபடி. இத்தை விவரிக்கிறார்-அதில் நித்யவிபூதியில்இத்யாதி.

யிராதே துடித்து நோவுபடுகைக்காக'' என்று அறுதியிட்டு, அவன்திருவடிகளிலே தலையை மடுத்து, கேட்டாரடங்கலும் நீராம்படி கிடந்து கூப்பிடுகிறார்.

* மின்னிடைமடவாரில் - ஒருபிராட்டிதசையை ப்ராப்தராய் ப்ரணயரோஷந் தலையெடுத்துச் சொல்லிற்றெல்லாம் பிறர்வாயாலே சொன்னாற்போலே யிருக்கையாலே, ஆழ்வாரான தன்மையிலே நின்று இன்னாதாம்படியான உசை விளைந்தது இவர்க்கு. இவரெல்லாவளவிலும் ஸ்ரீஜநகராஜன் திருமகளோடொப்பாரொருவராயிற்று. அதாகிறது - அத்தலையில் குறையிடுவாரொருத்தரன்றிக்கே ''இவற்றுக்கெல்லாம்அடி நம்முடையபாபம்'' என்றிருப்பாரொருத்தரிறே. இங்ஙனே யிருக்கக்கடவ இவர் அவன்தலையிலே குறையையேறிட்டுக் கூப்பிடுகிறாரிறே. இவர்தாம் தம்மாலேவந்தத்தை அவன்தலையிலே யேறிடுவானேன்? என்னில்; ப்ராப்தியை யுணர்ந்தால், இத்தலையாலே வந்தத்தையும் அவன்பக்கலிலே ஏறிடலாயிருக்குமிறே. ப்ரஜை கிணற்றிலே விழுந்தால்; ''மாதாவானவள் தள்ளினாள்'' என்னக்கடவதாயிருக்கும். அதுக்கடி ''தாயானவள்கண்ணிலே வெண்ணெயிட்டுப் பார்த்திருந்தாளாகில் இப்ப்ரஜை விழுமோ? இவள் நோக்காமையிறே அந்தரப்பட்டது'' என்றுகொண்டு அவள்தலையிலே குறைசொல்லக்கடவதாயிருக்கும். உதங்கன் க்ருஷ்ணன்பக்கலிலே வந்து, ''உனக்கு இரண்டுதிறத்தாரோடும் ஸம்பந்தமொத்திருக்கச்செய்தே, பாண்டவர்களை அழியச்செய்யாதே துர்யோதநாதிகளை அழியச்செய்தாய்; இப்படி சார்வுசெய்யப்போமோ?'' என்றாற்போலேயிருக்க அவன் சொல்ல, க்ருஷ்ணனும் அவர்கள் குறைகளையெல்லாஞ் சொல்லி, ''அவர்களுக்கு தர்மருசியில்லைகாண்'' என்ன, ''நீ பின்னை அவர்களுக்கு தர்மருசியுண்டாக்கிக் கொடாதொழிவானேன்?'' என்றானிறே. ''பலநீகாட்டிப் படுப்பாயோ,'' ''கிறிசெய்தென்னைப்புறத்திட்டின்னங் கெடுப்பாயோ'' என்று சொல்லுகிறபடியே அவற்றின் ஸந்நிதியும் அஸஹ்யமாம்படியாய், இனித்தாம் அறியாதிருக்கச்செய்தேயும் பகவத்விஷயத்தில் ப்ரவணமான * முடியானேயிற் கரணங்களையுடைய இவர்க்கு இந்த்ரியவஶ்யதை யுண்டென்னுமிடம் கீழோடு விருத்தமன்றோ? என்னில்; அசல்அகம் நெருப்புப்பட்டு வேவாநின்றால் தந்தாம்அகம் பரிஹரியாதிருப்பாரில்லையிறே;புற்றினருகே பழுதைகிடந்தாலும் 'ஸர்ப்பம்' என்று புத்திபண்ணி ப்ரமிக்கக்கடவதாயிருக்குமிறே. அங்குத்தைக்கும் இங்குத்தைக்கும் பொதுவான உடம்போடே யிருக்கிறபடியைக் கண்டார்: நாட்டாரடைய இந்த்ரியவஶ்யராய்க்கிடந்து நோவுபடுகிறபடியையுங் கண்டார்: 'இது நம்மளவும்வரிற்

கிளைப்பற்றஇதில்ஆர்த்திஅதிசயித்திருக்குமென்கிறார்-மின்னிடைஇத்யாதி.''உசைவிளைந்தது'' என்கைக்கு,இவர்க்கு ஸ்வாபாவிகாகாரமேதென்கிற சங்கையிலே,இவருடைய வாஸ்தவாகாரத்தையும், இப்படியிருக்கிற இவர் அவனைவெறுக்கிறது உபாவிஶேஷமென்னுமத்தையும் விஶதமாக அருளிச்செய்கிறார் - இவர்எல்லாவளவிலும்இத்யாதி. கூப்பிடுகிறாரிறே-அந்ததசை விளைகையாலேயென்று கூட்டுவது. அவனைவெறுக்கிறதுக்கு ஹேது உபாவிசேஷமேயன்றிக்கே, ஸம்பந்தமடியாகவும் வெறுக்கலாமென்னுமத்தை ஶங்காபரிஹாரமுகேந அருளிச்செய்கிறார் - இவர்தாமித்யாதி வாக்யத்வயத்தாலே. இவ்வர்த்தத்துக்குஉபபத்தி-ப்ரஜைஇத்யாதி. விவரணம்-அதுக்கடிஇத்யாதி. அந்தரப்பட்டது - அநர்த்தப்பட்டது. அநுஷ்டாநமுங்காட்டுகிறார் - உதங்கன்இத்யாதி. இவர் இந்த்ரியங்களுக்கு பயப்பட்டுக் கூப்பிடுகிற இது அஸம்பாவிதமென்று சங்கிக்கிறார் - பலநீகாட்டிஇத்யாதி. இதுக்குப் பரிஹாரம் - அசல்அகம்இத்யாதி. அதாவது - யோக்யதையாலே பயப்படுகிறாரென்றபடி. ''இனித்தாமறியாதிருக்க'' இத்யாதிக்கும் பரிஹாரம் - புற்றினருகேஇத்யாதி. அதாவது - ப்ராந்தியாலே யென்றபடி. தார்ஷ்டாந்திகத்தில் ப்ரயஹேதுவேதென்ன - அங்குத்தைக்குமித்யாதி. வ்யஸநத்தாலே கூப்பிடுகிறதுக்கு த்ருஷ்டாந்தத்ரயம்-ஶாகாம்ருகா இத்யாதி, ராக்ஷஸைர் இத்யாதி, ப்ரியஜநம்

செய்வதேன்?' என்றஞ்சிக் கூப்பிடுகிறார். *“ஶாகாம்ருகா:”* (ஶாகாம்ருகா:) - பூசலிலே புக்கு அங்குண்டானவாஸனையின்றிக்கே யிருக்கை. பணையோடுபணை தத்தித்திரியுமவை யிறே. *“ராவணஸாயகார்த்தா:”* (ராவணஸாயகார்த்தா:) - திக்பாலர்களையுங்கூட அச்சமுறுத்தி வளர்ந்தவன்கையிலம்புகள். *“ஜக்முஶ்ஶரண்யம் ஶரணம் ஸ்மராமம்”* (ஜக்முஶ்ஶரண்யம்ஶரணம்ஸ்மராமம்) -தங்களுடைய ஆபத்தையறிந்து பரிஹரிக்கவல்லவனை யும்பார்த்துப் பற்றினார்கள். *“ராக்ஷஸைர்வத்யமாநாநாம் வாநராணாம் மஹாசமூ: | ஶரண்யம் ஶரணம் யாதா ராமம் தஶரதாத்மஜம்”* (ராக்ஷஸைர் வத்யமாநாநாம் வாநராணாம்மஹாசமூ: | ஶரண்யம்ஶரணம்யாதா ராமம் தஶரதாத்மஜம்) என்று முதலிகளடங்கலும் ராக்ஷஸர்வாயிலேகிடந்து பெருமாளை ஶரணம்புக்காற்போலே, இவரும் * மனமாளுமோரைவர் வன்குறும்பரான விந்த்ரியங்களுக்கு பயப்பட்டுக் கூப்பிடுகிறார். *“ப்ரியம் ஜநமபஶ்யந்தீம் பஶ்யந்தீம் ராக்ஷஸீகணம்| ஸ்வகணேநம்ருகீம் ஹீநாம் ஸ்வகணைராவ்ருதாமிவ”* (ப்ரியம்ஜநமபஶ்யந்தீம் பஶ்யந்தீம்ராக்ஷஸீகணம் ஸ்வகணேநம்ருகீம்ஹீநாம்ஸ்வகணைராவ்ருதாமிவ) என்று ஸ்ரீஜநகராஜன் திருமகள் பட்டது படுகிறார். பிள்ளைதிருநறையூரரையர் “இப்பாட்டுக்களில் பூர்வார்த்தமடைய - புலியின்வாயிலே அகப்பட்ட ப்ரஜை தாய்முகத்திலே விழித்துக்கொண்டு புலியின்வாயிலேகிடந்து நோவுபடுமாபோலேயாயிருக்கிறது” என்று பணிப்பர். *“தாவதார்த்தி:”* (தாவதார்த்தி:) இத்யாதி ஶ்லோகத்திற்படியே, ஶரணம்புக்கால் தம்மைஇன்னாதாக ப்ராப்தியில்லையே; அவனை இன்னாதாமித்தனையிறே. திருமலையிலே புகுந்துகிட்டிநின்றதுவும் இவர்க்குப்பேற்றுக்கு உடலாகைதவிர்ந்து கூப்பிடுகைக்கு உடலாயிற்றித்தனையிறே.

---

*இத்யாதி. ‘வாநரா:.’ என்னாதே, “ஶாகாம்ருகா:” என்று விசேஷித்ததுக்கு பாவம் - பூசலிலே இத்யாதி. “ஶாகாம்ருகா:” என்றால்-இப்படிதோற்றுமோவென்ன-பணையோடு இத்யாதி. *ராவணஶப்தத்துக்குஅர்த்தம்-திக்பாலர்களையும் இத்யாதி. “ஸர்வலோகஶரண்யாய” என்றத்தை விவக்ஷித்து “ஶரண்யம்” என்றதுக்கு பாவம்-தங்களுடைய இத்யாதி. ‘தேவதாநாமிவ ஶக்தேர்விஷாத: । ஶாகாம்ருகா ராவணஸாயகார்த்தா: ஜக்முஶ்ஶரண்யம் ஶரணம் ஸ்மராமம்” இதி யுத்தகாண்டே ஏகோநஷஷ்டிதமே [சஞ] .“ராக்ஷஸைர்வத்யமாநாநாம் வாநராணாம் மஹாசமூ: । ஶரண்யம் ஶரணம் யாதா ராமம் தஶரதாத்மஜம்” இதி சதுர்நவதிதமே. [கஎ] “ப்ரியம் ஜநமபஶ்யந்தீம்” இத்யாதி ஸுந்தரகாண்டே பஞ்சதஶே [உச]. பிள்ளைதிருநறையூரரையர் நிர்வாஹத்துக்கு, பாட்டுக்களிலுத்தரார்த்தங்களெல்லாம் குறைநுஸந்தாநபரமென்று கருத்து. மற்றை நிர்வாஹத்துக்கு, உத்தரார்த்தங்களெல்லாம்-வெறுப்பிலே. அவனை இன்னாதாகைக்கு த்ருதீயஹேது-தாவதார்த்தி: இத்யாதி. ப்ரதமேம்ஶநவமே.[எஙு]இஶ்ஶ்லோகம்*உலகமுண்டபரவேஶலிகிதம். அதாவது-ப்ரபத்திபலியாமையாலுமின்னாதாகிறாரென்றபடி. முந்தினஹேது த்வயமாவது - “மின்னிடைமடவாரில்” இத்யாத் யுக்தார்த்யதிசயமும், “ப்ராப்தியையுணர்ந்தால்” இத்யாத்புக்தமான ப்ராப்தியும். ஆஶ்ரிதகார்யம் செய்கைக்காகத் திருமலையிலே ஸந்நிஹிதனாயிருக்க, அவனை வெறுக்கிறதென்? என்ன - திருமலையிலே இத்யாதி. “மனமாளுமோரைவர்வன்குறும்பர்” என்றதுக்கு அர்த்தம் - தங்களுக்குமுதலியான மனஸ்ஸைத்தங்கள் அதீநமாக்கியாளுமவையாய்,நலியுமிடத்தில் அத்விதீயங்களான,ஒன்றிரண்டன்றிக்கேஅஞ்சாய்,அதி ப்ரபலங்களாய், காணுதிபன்கீழடங்காமல் குறும்புசெய்யும் ஶ்ரோத்ராதிகளான இந்த்ரியங்களை யென்றபடி. பெரியதிருவந்தாதி, ஐம்பத்தோராம்பாட்டு.*

முதற்பாட்டு.

உண்ணிலாவியஐவராற்குமைதீற்றி என்னையுன்பாதபங்கயம்
நண்ணிலாவகையே நலிவான் இன்னமெண்ணுகின்றாய்
எண்ணிலாப்பெருமாயனே! இமையோர்களேத்தும்உலகமூன்றுடை
அண்ணலே! அமுதே! அப்பனே! என்னையாள்வானே!

ஆ.—மத் வ்யஸந நிரஸநாநுகுண அஸங்க்யேய விசித்ரஶக்தியுக்தனாய் ஸர்வஸ்வாமியாய்நிரவத்யநிரதிஶயபோக்யஸஹஜகல்யாண குணபராஜித மத்ஸ்வரூபனாயிருந்துவைத்து, இன்றளவும் வர அநாதிகாலமெல்லாம் உன் திருவடிகளையிழப்பித்து வைத்து, இன்னமும் என்னுடைய ஶரீரோவர்த்தமாநமுமாய் அதஏவ அவர்ஜநீயமுமாய் ம்ருத்யு ஸத்ருஶமுமாய் பயங்கரமுமாயிருந்த பஞ்சேந்த்ரியங்களாலும் விஷயங்களிலேஎன்னை ஆகர்ஷிப்பித்து; உன்திருவடிகளை ஒருக்ஷணம் விஶ்லேஷிக்கிலும் தரிக்கமாட்டாதிருக்கிற என்னை, உன் திருவடிகளை இழப்பிக்கவோ பார்த்தருளுகிறது? பிரானே! என்று கூப்பிடுகிறார்.

ஒ.—முதற்பாட்டில், "தன்னாலல்லது செல்லாதபடியாய் உன்திருவடிகளிலே ஶரணம்புகுந்த பின்பும் என்னை இந்த்ரியங்களாலே நலியப்பாராநின்றாய்" என்று இன்னாதாகிறார்.

[உண்ணிலாவிய] என்று தொடங்கி - விஷயங்களில் விமுவனான என்னை உள்ளே வர்த்திக்கிற ஐந்து இந்த்ரியங்களாலும் மிகவும் நலிவுபடுத்தி. [எண்ணிலா] என்று தொடங்கி - நீ வேண்டாதாரை நலிகைக்கீடாய் அபரிச்சேத்யமாய் ஊஸ்தரமான ப்ரக்ருதியை உபகரணமாகவுடையையாய்க் குணத்ரயாதீதரான நித்யஸூரிகளாலே ஏத்தப்படுவதுஞ்செய்து ஸர்வத்தையுமுடைய ஸ்வாமியாய், நிரதிஶயபோக்யனுமாய், உபகாரகனுமாய், என்னிடையாட்டம்உனக்கேபரமாகஏறிட்டுக்கொண்டு நிர்வஹிக்கிறவனே!

ப.—முதற்பாட்டில், விரோதிநிரஸநத்துக்கு ஏகாந்தமான ஸம்வந்யாதிகளையுடைய நீ, இந்த்ரியங்களையிட்டு என்னை நலிவித்து உன் திருவடிகளைக் கிட்டாதபடி பண்ணாநின்றாயென்கிறார்.

உள் - உள்ளே, நிலாவிய - நிரந்தரவாஸம் பண்ணுகையாலே ஆந்தரஶத்ருக்களாயிருக்கிற, ஐவரால் - இந்த்ரியங்கள் ஐந்தாலும், குமைதீற்றி - நலிவு உண்ணும்படி பண்ணி, என்னை - (இவற்றுக்குஅஞ்சி உன்னை ஶரணம்புகுந்த) என்னை, உன் - ப்ராப்தனாய் போக்யனான உன், பாதபங்கயம் - திருவடிகளை, நண்ணிலாவகையே - நண்ணாதபடியாகவே, இன்னம் - ("காட்டிப்படுப்பாயோ" என்னும்படி) ஆர்த்திபிறந்தபின்பும், நலிவான் - (ஸம்ஸாரத்திலே வைத்து) நலிய, எண்ணுகின்றாய் - எண்ணாநின்றாய்; எண்ணிலா - ("அநந்தஸ்ய ந தஸ்யாந்த: ஸங்க்யாநம் வாபி வித்யதே" என்று) அஸங்க்யேயமாய், பெரு - அபரிச்சிந்நமாய், மாயனே - ஆஶ்சர்யாவஹமான ப்ரக்ருதிதத்த்வத்தை ப்ரகாரமாகவுடையனாய், இமையோர்கள் - (அஸ்ப்ருஷ்டஸம்ஸார கந்தராய் அஸ்கலித ஜ்ஞாநரான) நித்யஸூரிகளாலே, ஏத்தும் - ஸ்துத்யனாய்க்கொண்டு, மூன்றுஉலகம் - த்ரிவிதசேதநாசேதநங்களையும், உடை - ஶேஷமாகவுடைய, அண்ணலே - ஸ்வாமியாய், அமுதே - ஸ்வதஸ்ஸித்தமான நித்யபோக்யதையையுடையையாய், அப்பனே - உத்பத்தியே பிடித்து உப

காரகனாய், என்னை - என்னை, ஆள்வானே - இவ்வளவும்நிர்வஹித்துக்கொண்டு போருகிறவனே! "உண்ணிலாவிய" என்று தொடங்கி, "நலிவானின்னமெண்ணுகின்றாய்" என்று அந்வயம். உபகாரகனான ஈஸ்வரனை அபகாரகனாகச்சொல்லுகிறது - வங்யுத்தியூற்றத்தாலே. இந்த்ரியங்களுக்குப் புருஷஸமாதி-ப்ரவர்த்தகத்வபுத்தியாலே. "எண்ணிலாப் பெருமாயனே" என்று - அஸங்க்யேய அபரிச்சிந்நாஸ்சர்யகுணன் என்றுமாம்.

இ.—முதற்பாட்டில், "உன்னாலல்லது செல்லாதபடிபண்ணி உன் திருவடிகளிலே ஶரணம் புகுந்தபின்னையும் என்னை இந்த்ரியங்களாலே நலியப்பாராநின்றாய்" என்கிறார்.

[உண்ணிலாவிய] - உள்ளே வர்த்திக்கிற. புறமிட்டுவந்து நலிந்தனவாகில் இறாய்க்கலாமிறே; ஸஹஜஶத்ருக்களென்கை. [ஐவரால்] - ஒருவர் இருவரன்று, ஐவராலே. மேல் விழுந்து நலிகிறபடியாலே - சேதநஸமாயியாலே சொல்லுகிறார். [குமைதீற்றி] - நலிவுபடுத்தி. [தீற்றி]-"இந்த்ரியங்கள் தன்னளிபண்ணாமே யொக்க விருந்து நலிவிக்கிறான்" என்றிருக்கிறார். [என்னை] - "பலகோட்டிப் படுப்பாயோ" "இன்னங்கெடுப்பாயோ" என்றிருக்கிற வென்னை. [உன்பாதபங்கயம்] - "தாவி வையங்கொண்ட தடந்தாமரைகள்" என்று நிரதிஶயபோக்யமாய் ஸுலபமான திருவடிகளை. [நண்ணிலாவகையே] - நான் கிட்டாதபடியே. [வகையே] - சிலர் நித்ய ஸித்தரானாற்போலே நான் நித்யஸம்ஸாரியாம்படி. [நலிவான்] - "அவனைக் கிட்டாமைக்கு மேற்படத் தமக்கு நலிவில்லை" என்றிருக்கிறார். [இன்னம்] - இந்த்ரியங்களுக்கு அலைந்து உன்னை ஶரணம்புக்க பின்பும். [எண்ணுகின்றாய்] - "என்னை நித்யஸம்ஸாரியாக்கி அகற்றும் விரகு எண்ணுகிறான்" என்றிருக்கிறார். [எண்ணிலாப் பெருமாயனே] - எண்ணிறந்த காரியங்களை விளைக்கவற்றாய் ஊஸ்தரமான ப்ரக்ருதியையுடையவனே! "நீவேண்டாதாரை நலிகைக்கு ப்ரக்ருதியை உபகரணமாகவுடையவள்" என்கை. "ஐஐஶோயா ஊராத்யா." "ஸமஸ்தகல்யாணகுணாத்மகன்" என்று பிள்ளான்பணிக்கும். என்னுடைய நோய்க்கும் உன்னுடைய குணங்களுக்கும் என்ன சேர்த்தியுண்டு. [இமையோர்களேத்தும்] - ப்ராதாக்களிலே ஒருவன் ஜீவிக்க ஒருவன் சிறை கிடந்தாற்போலேயிருக்கிறதாயிற்று இவர்க்கு. [உலகமூன்றுடை யண்ணலே] - ஸர்வலோகங்களையுமுடைய ஸர்வேஶ்வரனே! ஸர்வரக்ஷகத்வத்தைக் காட்டிற்றும் "நம்மைக் கைவிடான்" என்றிருக்கைக்காகவன்றோ? [அமுதே] - போக்யதையை அறிவித்ததும் மேல் காகவல்லவோ? [அப்பனே] - உபகாரகனே! உபகாரகத்வத்தைக் காட்டிற்றும் "இவ்வளவு உபகரித்தவன் இனிக் கைவிடுமோ?" என்றிருக்கைக்காக. [என்னையாள்வானே] - என்னிசைவின்றிக்கேயிருக்க, என்காரியம் உனக்கே பரமாக ஏறிட்டுக்கொண்டதுவும் நான் "கைவிடான்" என்றிருக்கைக்காகவன்றோ.

ஈடு. — முதற்பாட்டு. "உன்னாலல்லது செல்லாதபடியாய் உன் திருவடிகளிலே ஶரணம்புகுந்த என்னை இந்த்ரியங்களாலே நலியப் பாராநின்றாய்" என்கிறார்.

முதற்பாட்டு.—உண்ணிலாவிய இத்யாதி. "என்னை-ஐவரால்குமைதீற்றி - நலிவானின்னமெண்ணுகின்றாய்" என்கிற பதங்களைக் கடாக்ஷித்து அவதாரிகை - உன்னாலல்லது இத்யாதி.

[உண்ணிலாவிய] இத்யாதி- ரக்ஷகன்ஸந்நிதியாகைதவிர்ந்து பாதகர்ஸந்நிதியாயிற்றுக்கிடீர். தேவர், எனக்குப் பகைப்புறம்பிட்டுவருகிறதென்றோ இருக்கிறது? [நிலாவிய] - உள்ளானாலும், போக்குவரத்துண்டாமாகில் படைப்போதறிந்து இருக்கலாமிறே. [நிலாவிய] - வர்த்திக்கிற. பாதகவர்கம் அந்தரங்கமாய் நின்று நலிகிறபடி. "தேஹாத் வ்யதிரிக்தமாயிருப்பதோர் ஆத்மவஸ்து உண்டு" என்றுஅறிகிறிலர்; இவையே வர்த்திக்குமத்தனை என்றிருக்கிறார். [ஐவரால்] - இப்படி நலியாநின்றாலும், ஒருவரிருவராகில் அறிந்து பரிகரிக்கலாமிறே. இவர்களிலே நால்வர் ஒருமுகமாய் நின்றுநலிய, ஒருவருடலாந்தமாயிருக்கும். ரக்ஷகனொருவனாயிருக்க, பாதகர் ஐவராயிருக்கிறபடி. அஞ்சாலென்னாதே, "ஐவரால்" என்றது - அசேதநங்களா யிருக்கச்செய்தேயும் சேதநஸமாதியாலே சொல்லுகிறாராயிற்று, பாதகத்வத்தில் ஊற்றங்கொண்டு. ஆத்மாவென்றுஒன்று உண்டாய், அதினுடைய ஜ்ஞாநப்ரஸரத்வாரமாத்ரம் மநஸ்ஸாய்,அதுக்குஇவைசேஷமென்றுஅறிகிறிலர். [குமைதீற்றி]-நலிவுபடுத்தி. விடுநகங்கட்டுவாரை "நெகிழக்கட்டினாய்" என்று உறுக்கிக் கட்டுவிப்பாரைப் போலே,"இந்த்ரியங்கள் தண்ணளிபண்ணாமே ஒக்கவிருந்து நலிவிக்கிறான்"என்றிருக்கிறார். நலிகிற நலிவைக்கொண்டு, சேதநஸமாதியாலேசொன்னோமாகில், இவற்றின்பக்கல் குறையுண்டோ? இவை நலிகிறபோதும் இவனில்லாமையில்லையிறே. இவனுக்கு இவைதான் அவிதேயமுமன்றே? ஹ்ருஷீகேசனே! [என்னை] - "பலநீகாட்டிப்படுப்பாயோ," "இன்னங்கெடுப்பாயோ" என்று அவற்றின் ஸந்நிதியிலே முடியும்படியான என்னை. [உன்பாதபங்கயம்] - "தாவிவையங்கொண்ட தடந்தாமரைகள்" என்றும், "பூவார்கழல்கள்" என்றுஞ் சொல்லுகிற திருவடிகளை. [உன்பாதபங்கயம்] - என்னையன்றோ சொல்லவேண்டுவது? உன்னை நீ அறிதியிறே! உன்னடி அறியாமல்தான் அகற்றுகிறாயன்றே. * பேதைக்குழவி

பூர்வார்த்தத்துக்கு ஸமுதாயதாத்பர்யம் - ரக்ஷகன் இத்யாதி. "உள்" என்றதுக்கு பாவம் - தேவர்எனக்கு இத்யாதி. "நிலாவிய" என்கிற வர்த்தமானார்த்தம் - உள்ளானாலும் இத்யாதி. படைப்போது - யுத்தகாலம். இவ்வாக்யத்துக்கு சேஷம் - நிலாவிய இத்யாதி. "தேவர் எனக்கு" இத்யாதி வாக்யவிவரணம்-பாதகவர்கம் இத்யாதி. "நிலாவியஐவர்" என்றதுக்கு பார்த்தபாவம்-தேஹாத் இத்யாதி. "உண்ணிலாவிய" என்றஅநந்தரம் "ஐவர்" என்றதுக்கு பாவம் - இப்படி இத்யாதி. நலியும்க்ரமமேது? என்ன - இவர்களிலே இத்யாதி. சக்ஷுஶ்ஶ்ரோத்ரஜிஹ்வாக்ராணங்கள் முகத்திலவையாகையாலே,சாடேக்தியாலே-ஒருமுகமாய்என்கிறார். த்வகிந்த்ரியம் ஸர்வஶரீரவ்யாபியாகையாலே உடலாந்தமாயிருக்குமென்று சாடு. உடலாந்தம் - ஸர்வசரீரவ்யாபி. த்வகிந்த்ரியமென்றபடி. பிள்ளை திருநறையூரரையர் நிர்வாஹத்திலே பாவம் - ரக்ஷகன் இத்யாதி. இவற்றை சேதநராகச்சொல்லி விஷண்ணராகிறவருடைய பார்த்தபாவமாதல், பலிதமாதல் - ஆத்மாவென்று இத்யாதி. குமை - பாதை. தீற்றி-புஜிப்பித்து: நலிவுபடுத்தி யென்றபடி. சேதநஸமாதியாலே இந்த்ரியங்கள் நலிகிறனவாகச் சொல்லிவைத்து, ஈஶ்வரன் பாதிக்கிறானென்பானென்? என்ன-விடுநகம் இத்யாதி,ஹ்ருஷீகேசனேயென்னுமளவும். விடுநகம் - கிட்டிக்கோல். உறுக்கி - உறுத்தி. இவைநலிகிறபோது இவன் ஸந்நிஹிதனாகையாலும், ஹ்ருஷீகேசனாகையாலே நிவர்த்திப்பிக்க ஶக்தனாகையாலும், பாதியாதபடி பண்ண ப்ராப்தமாயிருக்க, அதுசெய்யாமையாலே "இவனே பாதிக்கிறான்" என்னலாமென்று இவ்வாக்யங்களுக்கு பாவம். திருவடியைத் தாமரையாகச் சொல்லுகிறதுக்கு ப்ரமாணம் - தாவிவையம் இத்யாதி. "பாதபங்கயம்" என்கிற பதப்ரயோகத்துக்கும், "உன்" என்றதுக்கும் பாவம் - என்னையன்றோஇத்யாதிவாக்யத்வயம். என்னையன்றோ - என்னுடைய்மையையன்றோ உனக்குச் சொல்லவேண்டுவது? என்றபடி. உன்னைநீ அறிதியென்றது - போக்யமான திருவடிகளையுடைய உன்னை யென்றபடி. ஏதத்விவரணம் - உன்னடியறியாமல் இத்யாதி. அடியென்று - ஶ்லேஷம்; மூலமும், திருவடி

பிடித்துச் சுவைத்துண்ணும் பாதக்கமலம்இறே. ஸம்ஸாரத்தில் அருசிபிறவாதார்க்கும் விடவொண்ணுதபடி போக்யமான திருவடிகளை. *தேனேமலரும் திருப்பாதமிறே. [நண்ணிலாவகையே] - காதாசித்கமாகக் கிட்டாதொழிகையன்றிக்கே, கிட்டாதொழிகையே ஸ்வபாவமாக. "இனி நண்ணப்புகாநின்றுமோ?" என்றிருக்கிறார். [நலிவான்] - நண்ணுமை யென்றும் நலிவென்றும், இரண்டில்லை இவர்க்கு; திருவடிகளைக் கிட்டாதொழிகையே இவ்வாத்மாவுக்கு நலிவு. இக்க்ரூரமானவகையே நலிவான். [இன்னம்] - "அகலகில்லேனிறையு மென்றலர்மேல்மங்கை யுறைமார்பா, உன்னடிக்கீழமர்ந்து புகுந்தேன்" என்ற பின்பும். [எண்ணுகின்றாய்] - "ஈஶ்வரனுக்கு வேறு க்ருத்யமில்லை" என்றிருக்கிறார். "யஸ்யமந்த்ரீச கோப்தா ச ஸுஹ்ருச்சைவ ஜநார்த்தந:" (யஸ்யமந்த்ரீச கோப்தாச ஸுஹ்ருச்சைவ ஜநார்த்தந:) என்று பாண்டவர்கள் கார்யம் மநோரதித்தாற்போலே, இங்குக் கார்யம் செல்லாநிற்கச்செய்தே, மந்த்ரமும் செல்லுகிறபடி. "இவரை நம் பக்கலினின்றும் பிரித்தோமாம் விரகேன்றோ!" என்று சிந்திக்கிறானென்றிருக்கிறார். [எண்ணிலாப்பெருமாயனே] - "அஸ்மாந்மாயீ ஸ்ருஜதே விஶ்வமேதத்" (அஸ்மாந்மாயீ ஸ்ருஜதே விஶ்வமேதத்) என்றும், "மம மாயா துரத்யயா" (மமமாயாதுரத்யயா) என்றும் சொல்லுகிறபடியே, எண்ணிறந்தசெயல்களைச் செய்யவற்றாய், நீ வேண்டாதாரைச் சிறையிட்டு நலியக்கடவதான ப்ரக்ருதியைப் பரிகரமாகவுடையவனே! அன்றிக்கே, "எண்ணிறந்த மஹாஶ்சர்யமான குணங்களையுடையவனே!" என்று பிள்ளான் பணிக்கும்படி. இப்படி குணவானாயிருக்கிற உனக்கு என்னை நலிகைக்கு என்ன சேர்த்தி யுண்டு? விடுநகங்கட்டி நலியாநிற்கச்செய்தே "தண்ணீர்" என்பாரைப்போலே, அவன் குணங்களைச் சொல்லுகிற

கனும். தன்னடியில் போக்யதைதான் அறியுமோ? என்ன - பேதை இத்யாதி. "[illegible]" என்னுமாபோலே பருவத்துக்குத்தக்க அறிவில்லாத குழவி, திருக்கையாலே பிடித்துத் திருப்பவளத்திலேவைத்து ஆஸ்வாதித்து புஜிக்கும் திருவடித்தாமரை யென்றபடி. பெரியாழ்வார்திருமொழி, "சீதக்கடலுள்" இத்யாதி. திருவடிகள் போக்யமானதின் எல்லையை அருளிச்செய்கிறார் - ஸம்ஸாரத்தில் இத்யாதி. இதுக்கு ப்ரமாணம் - தேனேமலரும் இத்யாதி. "வகையே" என்கிற அவதாரணார்த்தம் - காதாசித்கம் இத்யாதி. பலிதம் - இனிநண்ண இத்யாதி. "நண்ணிலாவகையே" என்ற வநந்தரம் "நலிவான்" என்கையாலே - கிட்டாமையே இவர்க்கு நலிவென்கிறார் - நண்ணுமையென்றும் இத்யாதி. இவர்க்கே யன்றிக்கே, ஸ்வரூபஸ்திதியை விசாரித்தாலும் இதுவே நலிவென்கிறார் - திருவடிகளை இத்யாதி. இக்க்ரூரமான வென்றது - "நண்ணிலா" என்றத்தை. "எண்ணுகின்றாய்" என்கிற வர்த்தமாநார்த்தம் - ஈஶ்வரனுக்கு இத்யாதி. "துமைத்ற்றி" என்றத்தைக்கடாக்ஷித்து, "இன்னமெண்ணுகின்றாய்" என்ற வர்த்தமாநத்துக்கு ஸத்ருஷ்டாந்தமாக அவாந்தரம் - யஸ்யமந்த்ரீச இத்யாதி. இதம் மஹாபாரதே. "எண்ணுகின்றாய்" என்றதுக்கு பப்தார்த்தமாதல், இவர்விஷயத்தில் கார்யம்பண்ணும் ப்ரகாரமாதல் - இவரைநம்பக்கலில் இத்யாதி. "மாயன்" என்றதுக்கும்; ப்ரக்ருதி எண்ணிறந்த செயல்களைச் செய்யுமென்னுமதுக்கும் ப்ரமாணம் - அஸ்மாந்மாயீ இத்யாதி. அஸ்மாத் - ப்ரதாநாத்இத்யர்த்த:. ப்ரக்ருதி எண்ணிறந்த செயல்களைச் செய்கையாவது- அநேககார்யங்களை ஸ்ருஷ்டிக்கவற்றா யிருக்கை. மாயீ என்று - ப்ரக்ருதியைப் ப்ரகாரமாகவுடைய ஈஶ்வரனைச் சொல்லுகிறது. "பெருமாயன்" என்றதுக்கு ப்ரமாணம் - மமமாயா இத்யாதி. பிள்ளைதிருநறையூரரையர் நிர்வாஹத்திலே அருளிச்செய்கிறார் - இப்படிகுணவானாய் இத்யாதி. மற்றை நிர்வாஹத்திலே, நலிகிறவனை குணவானென்கிறதென்? என்ன - விடுநகம் இத்யாதி. "உலகமூன்றுடை", இத்யாதியாற்சொன்ன குணங்களுக்கும் இந்த ந்யாயம் ஒக்கும். இமையோர்களேத்தும் என்றதுக்கும்

படி. [இமையோர்களேத்தும்] - ''தன்னாலல்லது செல்லாதாரை ஒருவன் போகடவல்ல படியே'' என்று கொண்டாட ஒருவிபூதியுண்டாவதே ? ''அவர்கள் முகங்கொடுக்கையிறே அவன் இங்கு வராதிருக்கிறது'' என்றிருக்கிறார். த்ரிசங்குவினுடைய ஓலக்கம் கிளர்ந்தாற் போலே கிளர்ந்ததாகில் அவனுக்கு என்னை விட்டிருக்கப்போமோ? [உலகமூன்றுடையண்ணலே] -''தான்நினைத்தபோது கார்யஞ்செய்கிறான்'' என்றுஇவரிருக்கைக்காகத்தன்னுடைய சேஷித்வத்தைக் காட்டினான்அவன்; '''இப்படி ரக்ஷகனானவன் நம்மை நலியுமோ?'' என்றிருக்கும்படி பண்ணிப்பின்னைநலிகைக்காகக்காட்டினான்'' என்றிருக்கிறார்இவர். [அமுதே] - அவன் தன்னுடைய போக்யதையைக்காட்டிற்றும் தம்மை புஜிப்பிக்கைக்கல்ல; புறம்பு ஒன்று பொருந்தாதே நோவுபட'' என்றிருக்கிறார். [அப்பனே] -'''இப்படி உபகாரகனானவன் நலியாநின்றானே?'' என்று விஶ்வஸிக்கப்பண்ணிப் பின்னை அபகரிக்கைக்காகக் காட்டினான்'' என்றிருக்கிறார். [என்னையாள்வானே] - ''ப்ராங்ந்யாயம் ஃபலிக்கும்'' என்றிருக்கைக்காகக் காட்டினானென்றிருக்கிறார். ''இதுக்கு முன்பெல்லாம் நம்மை நிர்வஹித்துக் கொண்டு போந்தது நாமும் சிலசெய்தோ ? அப்படியே மேலும் நம்கார்யம் அவன் செய்யும்'' என்றுஇருக்கைக்காகச் செய்தானத்தனை; நினைவு வேறே யென்றிருக்கிறார். [என்னையாள்வானே] - ''நலிவானின்னமெண்ணுகின்றாய்'' என்கிறார்.

ரண்டாம் பாட்(

என்னையாளும்வன்கோ ஓரைந்திவைபெய்து இராப்பகல்மோதுவித்திட்டு
உன்னைநான்அணுகாவகை செய்துபோதிகண்டாய்
கன்னலே! அமுதே! கார்முகில்வண்ணனே! கடல்ஞாலங்காக்கின்ற
மின்னுநேமியினாய்! வினையேனுடைவேதியனே!

றும்.)- ''ஸௌந்தர்யத்தாலேயும் போக்யதையாலேயும் நிரவதிகனான என்னை உமக்குத்தந்து உம்முடைய மத்விஶ்லேஷாஸஹிஷ்ணுத்வத்தையும் அறிந்து ஸர்வலோக பரிபாலகனுமா யிருந்துவைத்து, நான் உபமை இந்த்ரியவஶ்யனாக்கி என்னையிழப்பிப்பனோ?'' என்னில்; ''எனக்குநிரவதிகபோக்யஸௌதாத்மப்ரதனாய், தத்ஸ்வபாவனுமாய், ஸர்வலோக பரிபாலகனுமாயிருந்தாயேயாகிலும், உன்னை ஶரணம் புக்க பின்பும் இந்த ப்ரக்ருதியிலே என்னைவைத்தருளுகையாலே, உனக்கு அநந்பார்ஹ

''நலிவானின்னமெண்ணுகின்றாய்'' என்றதுக்கும அநுகுணமாக ஸாவம் - தன்னாலல்லது இத்யாதி, நித்யஸூரிகளை வெறுப்பானென்? என்ன - அவர்கள் இத்யாதி. அவர்கள் முகங்கொடாவிட்டால் இங்கு வருவனேவென்ன த்ரிசங்கு ஆத்யாதி. அவன் இவாயரிக்கைக்காகக் காட்டின ஶேஷித்வத்தை ''நலிவானினனமெண்ணுகின்றாய்'' என்றதுக்கு அநுகுணமாக யோஜிக்கிறாரெனகிறார்-தான் நினைத்த போது இத்யாதி வாக்யத்வயத்தாலே. இந்த ந்யாயம் - ''அமுதே'' என்று தொடங்கி மேலே சொல்லுகிற பதங்களுக்கும் ஒக்கும். ப்ராங்ந்யாயமாவது - கீழே * மயர்வறமதிநலமருளித் தன்னாலல்லது செல்லாமையை யுண்டாக்கினபடி. ஃபலிக்குமென்றது - இதுக்குமேலும் அநிஷ்டநிவ்ருத்திபூர்வகமாக இஷ்டப்ராப்தியும்பண்ணித் தருமென்றபடி. கீழ்வாக்யவ்வரணம் - இதுக்குமுன்பு இத்யாதி. அறையர் நிர்வாஹத்திலே அந்வயங்காட்டுகிறார் - என்னையாள்வானே இத்யாதி. மற்றைப்பக்ஷத்துக்கு அடைவே அந்வயம்.

ஶேஷமான என்னை அதிப்ரபலங்களான இந்த்ரியங்களுக்கு ஶேஷமாக்கி இவற்றையிட்டு வாயிப்பித்து உன்திருவடிகளைச்சேராதபடி பண்ணிப்போகிறாயென்று பயப்படாநின்றேன்'' என்கிறார்.

ஒ.—இரண்டாம்பாட்டில், ''ஸர்வலனான என்னை இந்த்ரியங்களாலே இரவும் பகலும் நலிவித்து உன்னை நான் கிட்டாதபடிபண்ணி இந்நோவை அறிவிக்கவொண்ணாதபடி நீயும் போதி'' என்று இன்னாதாகிறார்.

[என்னையென்று] தொடங்கி - எனக்குவிதேயமாகை தவிர்ந்து, என்னை தன் கருத்திலே நடத்தாநின்றுள்ள ப்ரபலமான ஐந்து இந்த்ரியங்களையும் என்பக்கலிலே விட்டு. [கன்னலே]யென்று தொடங்கி - நிரதிஶயபோக்யனுமாய் அத்யுதாரனுமாய் ஜகத்தையெல்லாம் ரக்ஷியாநிற்பதும் செய்து அதுக்கு உறுப்பாக விளங்காநின்றுள்ள திருவாழியையுடையையுமாய் வைத்து என் பாபத்தாலே எனக்குக் காணவொண்ணாதே வேதைகஸமதிகம்யனாயிருக்கிறவனே!

ப.—அநந்தரம், ஸர்வப்ரகாரபோக்யனான நீ, ப்ரபலமான இந்த்ரியங்களாலே அநவரதம் நலிவித்தகலநில்லாநின்றாய்'' என்கிறார்.

கன்னலே - ஸர்வதோமுகமான போக்யதையையுடையையாய், அமுதே - அவ்வளவேயன்றியே ஸத்தாதாரகஸாரஸ்யவானாய், (இப்படி போக்யமாமளவில்), கார் முகில் வண்ணனே - ஸர்வோபகாரகமான காளமேகம்போலே வரையாமலுபகரிக்கும் ஸ்வபாவத்தையுடையையாய், (உபகரிக்குமிடத்தில்), கடல் - கடல்சூழ்ந்த, ஞாலம் - பூமியையடங்க, மின்னு – உஜ்ஜ்வலமான, நேமியினாய் - திருவாழியையுடையையாய், காக்கின்ற - காத்தூட்டுமவனாய், வினையேனுடை - உன்னைக்கிட்டுகைக்கு விரோதியான பாபத்தையுடையேனான எனக்குக்கேட்டுவிடும்படி, வேதியனே - வேதைக வேத்யனானவனே! என்னை - (உனக்குக்கிங்கரனான) என்னை, ஆளும் - தங்களுக்கு நிதேஶகாரியாம்படி ஆண்டுகொள்ளக்கடவனவாய், (எனக்குக் கரணதயாபாரதந்த்ர்யமாய் வைத்து என்னளவில்), வன் - ப்ரபலமான, கோ - ஸ்வாதந்த்ர்யத்தையுடைத்தாய், ஓர் - ஒன்றுக்கொன்று ஒவ்வாதபடி அத்விதீயமான, இவை - இந்த, ஐந்து - ஐந்திந்த்ரியங்களையும், பெய்து-எனக்குபாருகத்வேந நியோகித்துவைத்து, இராப்பகல்-அஹோராத்ரவிபாகமற, மோதுவித்திட்டு - பிடிப்பித்து, உன்னை - ப்ராப்தனாய் போக்யபூதனானஉன்னை, நான் - (உன்வாசியறிந்த) நான், அணுகாவகை - கிட்டாதபடி, செய்து-பண்ணி, போதி கண்டாய் - முகந்தோற்றாதபடி போகாநின்றாய்.

இ.—இரண்டாம்பாட்டில், ''ஸர்வலனான என்னை இந்த்ரியங்களாலே ஸர்வ காலமும் நலிவித்து, இந்நோவை அறிவிக்கவொண்ணாதபடி போதி'' என்கிறார்.

[என்னையாளும்] - எனக்கு விதேயமாகை முறையாயிருக்க, அது தவிர்ந்து தன்கருத்திலே என்னைப் பண்ணிக்கொள்ளும். நீ அடிமைகொள்ளுகையொழிய, இவை பணிகொள்ளும்படியாவதே. [வன்கோ] - நீ நிர்வாஹகனாகை தவிர்ந்து, மிடுக்காலே இவை நிர்வாஹகமாவதே. [ஓரைந்து] - அத்விதீயமான ஐந்து. [இவைபெய்து] - இவற்றை உண்டாக்கி என்பக்கலிலே விட்டு. [இராப்பகல் மோதுவித்திட்டு] - காலத்துக்கு விநியோகம் இதுவேயாவதே. அழகிதாக ''ஒழிவில் காலம்'' என்று ப்ரார்த்தித்தேன். [உன்னை] - ப்ராப்தனாய் போக்யபூதனான உன்னை. [நான்] - ஜ்ஞாநம்

பிறந்த நான். [அனுகாவகைசெய்து]-கிட்டாதபடிபண்ணி. [போதிகிடாய்] - என்நோவை அறிவிக்கவொண்ணாதபடியிறே கடக்கப்போகிறது. [கன்னலே] இத்யாதி - அகலப்போனால் ஆற்றவொண்ணாதஹோக்யதை இருக்கிறபடி ஸர்வதோமுகமான ஸாரஸ்யம்; அவ்வளவன்றிக்கே, சாவாமல்காக்கும்மருந்து; அந்தஹோக்யதைதன்பேறாகத் தருமவன். வரையாதே எல்லாவற்றையும் நோக்குகை; நோக்கும்போது ஸங்கல்பத்தாலே அன்றிக்கே, விளங்காநின்றுள்ள திருவாழியாலே ரக்ஷிக்கை. [வினையேனுடை வேதியனே] - என் பாபத்தாலே கண்ணுக்கு அவிஷயமாய், வேதைகஸமதிகம்யனானவனே! இந்த ஹோக்யதையும் ரக்ஷகத்வமும் ஓலைப்புறத்திலே கேட்கும்படியாவதே!!

ஈடு.—இரண்டாம்பாட்டு. "துர்ப்பலனானஎன்னை இந்திரியங்களாலே ஸர்வகாலமும் நலிவித்து, இந்நோவை யறிவிக்கவொண்ணாதபடி போதி" என்கிறார்.

[என்னையாளும்வன்கோ] - ஸத்தைநோக்குவாய் நீயாய், பணிகொள்வார் வேறேசிலராவதே. அத்தலையித்தலையாயிற்றுக்கிடாய். ஈஶ்வரனேன்பான்ஒருவனுண்டாய், அவனுக்குஆத்மாஶேஷமாய், அவனுக்கு மநஸ்ஸு அந்தரங்கபரிகரமாய், அதுக்குஇந்த்ரியங்களும் ஶேஷமாகைதவிர்ந்து பள்ளிகள் கலகம்போலே என்னை இந்த்ரியங்களாளும்படியாவதே!! [வன்கோ] - ப்ரபலருமாய் வந்தேறிகளானவர்களுக்குப் பணிசெய்து வெறுத்தேன். (வன்மை - பலாத்காரம்.) "கோவா யைவரேன் மெய்குடியேறிக் கூறைசோறிவைதாவென்று குமைத்துப்போகார்." ஒரு நீர்மையுடையவன் ஶேஷியாகைதவிருவதே! (வன்மை- காடிந்யம்.)ஸமஸ்த கல்யாணகுணாத்மகன் ஶேஷியாகைதவிர்ந்து, நிர்க்குணர் ஶேஷிகளாயிற்றுகிடீர். [ஓரைந்து] - குணப்ரதாநபாவத்தாலன்றிக்கே, ஸமப்ரதாநமாய் நலிகிறபடி. கடவானொருவனாய், பணிசெய்வதும்அவனுக்கான நிலைகுலைந்தது. **"பதிம் விஶ்வஸ்ய"**(பதிம்விஶ்வஸ்ய) என்றும் "அனைத்துலகுமுடையஅரவிந்தலோசநன்" என்றும் ஒருவன் ஶேஷியாகைதவிர்ந்ததிறே. [ஐந்து] - ஏகஶேஷமாகை தவிர்ந்ததுகிடீர். [இவை

இரண்டாம்பாட்டு.—என்னையாளும் இத்யாதி. "போதிகண்டாய்" என்னுமளவுங்கடாக்ஷித்தவதாரிகை - துர்ப்பலனான இத்யாதி. துர்ப்பலனான என்னை என்றது - "போதுவித்து" என்றத்தாலே ஸித்தமென்று விவக்ஷிதம்.

"ஆளும்" என்றதுக்குபாவம் - ஸத்தை இத்யாதி. அத்தலை இத்தலையாகையாவது - ஈஶ்வரனுளுகை தவிர்ந்து இந்த்ரியங்களாளுகை. ஏதத்விவரணம் - ஈஶ்வரன் இத்யாதி. 'கலஹத்தில் - பள்ளிகள்போலே' என்றந்வயிப்பது. அதாவது - ஒருவனுக்கு உபாஸனைபள்ளியே, அராஜகமானால் ஸ்வதந்த்ரனாய் ஸ்வாமியை நலியுமாபோலே என்றபடி. "வன்கோ" என்றது - வலியாலே கோவென்றாய், ஆமந்த்ரகமென்கிறார் - ப்ரபலருமாய் இத்யாதி. "வந்தேறி" என்றதுக்குப்ரமாணம்-கோவாய் இத்யாதி. நீஶேஷியாமது தவிர்ந்துஇவை யெனக்கு நியாமகமாய்க்கொண்டுவந்து என்சரீரத்திலே குடிபுகுந்து, நான் கூறையும் சோறுமாக நினைத்திருக்குமவையொழிய வேறே சிலவற்றைத்தா என்று என்னைநெருக்கி, க்ஷணமும் கால்வாங்குகிறிலரித்யர்த்தஃ. திருமொழி ஏழாம்பத்து ஏழாந்திருமொழி ஒன்பதாம்பாட்டு. * வன்மைக்கு - பலாத்காரமாகக் கீழருளிச்செய்து, மநஃகாடிந்யமாக அர்த்தாந்தரம்-ஒருநீர்மை இத்யாதி. ஏதத்விவரணம் - ஸமஸ்த இத்யாதி. குணப்ரதாநபாவமாவது - அப்ரதாநப்ரதாநபாவம். "ஶப்தாதிவிஷயா: பஞ்ச" என்றிறே நிகண்டு. 'ஆளும் - ஐவர்" என்றதுக்குபலிதம் - கடவான் இத்யாதி. ஏதத்விவரணம் - பதிம்விஶ்வஸ்ய இத்யாதி. ஏகசேஷமாகை தவிர்ந்தது கிடீரென்றது - அப்ராப்தமாகிலும் ஏகஶேஷமாகலாமிறே, அதுவும் தவிர்ந்ததென்றபடி. பெய்தல் - இடுதலாய், இவற்றையிட்டென்றபடி. அவற்றை அசேதநமாகச் சொல்லி, நலிகிற

பெய்து]-அவற்றின்பக்கல் குறையுண்டோ, அவற்றையிட்டு நலிவிக்கிறாய் நீயல்லையோ? ஸ்ரீப்ரஹ்லாதனைப் பாம்புகளைக்கூடவிட்டுக்கட்டி நலிந்தாற்போலேயிருக்கிறதுகாணும், இவற்றையுண்டாக்கி என்பக்கலிலே நீ விட்டது. [இராப்பகல் மோதுவித்திட்டு] - காலத்துக்கு விநியோகம் இதுவேயாவதே! "ஒழிவில்காலமெல்லாம்" என்று அழகிதாக அடிமைசெய்யவாசைப்பட்டேன். "அடியார்கள் குழாங்களை - உடன்கூடுவதென்று கொலோ"என்று ப்ரார்த்தித்த எனக்கு, இவற்றினுடனே கூடும்படியாவதே. [உன்னை நான்]-பெற்றல்லது தரிக்கவொண்ணாதபடியாயிருக்கிற உன்னை, கிட்டியல்லது ஜீவிக்க மாட்டாதபடியான நான்: நிரதிசயபோக்யனானஉன்னை, புஜித்தல்லது தரிக்கமாட்டாத நான். [அணுகாவகைசெய்து] - கிட்டாதபடிபண்ணி. [போதிகண்டாய்] - உன்னை யநுபவிக்கவேணுமென்று போந்த பிராட்டியை மாயமானைக்காட்டிப்பிரித்து, ஏகாக்ஷி ஏககர்ணிகைகள் கையிலே காட்டிக்கொடுத்து உன்னைக்கொண்டகன்றாற்போலே கிடாய் இதுவும்! [கன்னலேயமுதே] - ஒருவகையால்வந்த போக்யதையாகில் நான் ஆறியிரேனோ? **"ஸர்வகந்த: ஸர்வரஸ:"** (ஸர்வகந்தஸ்ஸர்வரஸ:) என்கிறபடியே ஸர்வவிதபோக்யமுமாய், *அளவிறந்து,*கொள்ளமாளாஇன்பவெள்ளமாயிராநின்றதே. கன்னலென்று - கருப்புக்கட்டி. அமுதென்று - போக்யமுமாய், சாவாமல் காக்குமதுவுமாயிருக்கை. [கார்முகில்வண்ணனே] - அந்தபோக்யதையைத் தன்பேறாகத்தருமவன். பரமோதாரனென்றபடி. அன்றிக்கே, கார்காலத்தில் மேகம்போலே ஸ்ரமஹரமான வடிவை யுடையவனே! என்னுதல். [கடல்ஞாலம்] இத்யாதி - "போதிகண்டாய்" என்று ஆர் காற்கட்ட நீ அன்றுநோக்கிற்று. "இந்த்ரியங்களாலே நோவுபட்டோம்"என்று இவர்கள் அபேக்ஷித்தபோதோ நீ நோக்கிற்று! நீ போக்யன் என்றறியாதாரையுங்கூட நோக்குமவனல்லையோ? கடலோடுகூடின பூமியைக் கண்ணிலேவெண்ணெயிட்டுக் கொண்டு நோக்கும் ஸ்வபாவ னல்லையோ? [காக்கின்ற]-ரக்ஷணந்தான் காதாசித்கமோ உனக்கு? [மின்னுநேமியனாய்]-இயற்றியுண்டேன்று ஸங்கல்பத்தாலே நோக்குமவனோ? ஆசிலேவைத்தகையும் நீயுமாயன்றோ நோக்குவது. "அருளார் திருச்சக்கரத்தாலகல்விசும்

வன் ஈஸ்வரனுகச்சொல்லுகிறதுக்கு பாவம் - அவற்றின்பக்கல் இத்யாதிவாக்யத்வயம். இதுக்கு த்ருஷ்டாந்தம் - ஸ்ரீப்ரஹ்லாத இத்யாதி. "இராப்பகல்" என்றதுக்கு பாவம் - காலத்துக்கு இத்யாதி. பலிதம் - ஒழிவில் இத்யாதி. "இவைபெய்து" என்றத்தைக் கடாக்ஷித்து பாவம் - அடியார்கள் இத்யாதி. விவரணம் - நிரதிசய இத்யாதி. "போதி" - போனுயென்றபடி. "நானுன்னைக்கிட்டாதபடி பண்ணிக்கடக்கப்போனுய்" என்னுமத்தை த்ருஷ்டாந்தபூர்வகமாக அருளிச்செய்கிறார் - உன்னையநுபவிக்க இத்யாதி. "கன்னலே" என்றது - ஸர்வரஸத்துக்கும் உபலக்ஷணமாக விவக்ஷித்து பாவம் - ஒருவகையால் இத்யாதிவாக்யத்வயம். 'அளவிறந்து' என்றதும், கொள்ளமாளா என்றதும்-அர்த்தாத் ஸித்தம். "கன்னலே, அமுதே" என்கிற அடைவுக்கு பாவம் - கன்னலேன்று இத்யாதி· முந்தினதுக்கு; "வண்ணம்" என்ற - ஸ்வபாவமாய், ஔதார்யத்தைச்சொல்லுகிறது. இத்தால்பலித்தபாவம்-அந்தபோக்யதையை இத்யாதி."கடல்ஞாலம்" என்றஅசேதநஸமாதிக்குபாவம்; போதிகண்டாய் இத்யாதி. காற்கட்ட - ப்ரார்த்திக்க. விவரணம் - இந்த்ரியங்களாலே இத்யாதி. "கன்னலேயமுதே" என்றவநந்தரம் "கடல்ஞாலம்" என்றதுக்குபாவம் - நீபோக்யன் இத்யாதி. ஸப்தார்த்தம் - கடலோடு இத்யாதி. வர்த்தமாநார்த்தம் - ரக்ஷணந்தான் இத்யாதி. "காக்கின்ற" என்றவநந்தரம் "நேமியனாய்"என்றதுக்கு பாவம் - இயற்றி இத்யாதி. இயற்றியென்று - யத்நமாய், ஸாமார்த்யமென்றபடி. ஆசிலே- ஆயுதப்பிடியிலே. ஆயுதங்கொண்டு ஜகத்தைரக்ஷிக்குமதுக்குப்ரமாணம் - திருச்சக்கரத்தால் இத்யாதி. க்ருபையால் பூர்ணனான திருவாழியாழ்வானாலே, பரந்தவிசும்

புமிலனுமிருளார்வினைகெடச்செங்கோல் நடாவுதிர்'' என்னக்கடவதிறே. உருவினவாள் உறையிலிடாதேயன்றேநோக்குவது? விளங்காநின்றுள்ள திருவாழி. [வினையேனுடைவேதியனே] - ''தேவாநாம் தாநவாநாஞ்ச ஸாமாந்யமதிதைவதம்'' (தேவாநாம் தாநவாநாஞ்சஸாமாந்யமதிதைவதம்) என்றும், ''போதுநின்றபொன்னங்கழல்'' என்றுஞ் சொல்லுகிறபடியே ஊர்ப்போதுவாயிருக்கிற நீ, என்னளவிலேவந்தவாறே வேறைகஸமயிகம்யனுனாய். இன்றிருந்து ஓலைப்புறத்திலே கேட்கும்படியான பாபத்தைப்பண்ணுவதே நான்! (உ)

மூன்றும் பாட்டு

வேதியாநிற்கும்ஐவரால் வினையேனைமோதுவித்து உன்திருவடிச்
சாதியாவகைநீ தடுத்துஎன்பெறுதி! அந்தோ!
ஆதியாகிஅகலிடம்படைத்து உண்டுமிழ்ந்துகடந்திடந்திட்ட
சோதிநீள்முடியாய்! தொண்டனேன்மதுசூதனனே!

*ஆ.—(வேதியாநிற்கும்.) - உம்மை நான் இந்தப்ரக்ருதியிலே வைத்ததுஒரு ப்ரயோஜநார்த்தமாகவாதலால் இந்தப்ரக்ருதிஸம்பந்தத்தை நிவர்த்திப்பிக்கக்கடவதென்? என்னில்; ''நிகிலஜகந்நிர்மாணநிரஞ்ஜநோத்தரணக்ரமணோத்தரணதிலீலனாய் ஸர்வேச்வரனாய் அவாப்தஸமஸ்தகாமனாய் * குணார்த்தாஸ்பமுபாகத மஹிஷ்டநிவாரணைகப்ரயோஜநனுமாயிருந்த உனக்கு, ப்ரக்ருதியிலே என்னை வைத்து, அநவரத வ்யாகுலத்வைக ஸ்வபாவமான இந்த்ரியங்களாலும் வ்யாகுலப்பித்து உன்திருவடிகளைச் சேராதபடி தடுத்தால் என்னப்ரயோஜநமுண்டு?'' என்கிறார்.*

ஒ.—மூன்றும்பாட்டில், ''ஜகத்துக்கு நீயே ஸர்வவிதரக்ஷகனாய்வைத்து, என்னை உன்திருவடிகளிலேவந்து அணுகவொண்ணாதபடி இந்த்ரியங்களையிட்டு நிரந்தரமாக நலிவித்து உனக்கு என்னப்ரயோஜநம் உண்டு?'' என்கிறார்.

[வேதியாநிற்கும்] என்று தொடங்கி - இடைவிடாதே நலியாநின்றுள்ள ஐந்து இந்த்ரியங்களாலும் திருவடிகளைப்பெறாதபடி தடுத்து. [ஆதி] என்று தொடங்கி - ஸர்வைச்வர்யஸூசகமாய் நிரவதிகதேஜஸ்ஸான திருவபிஷேகம் முதலான திவ்யாபரணங்களையும்உடையையாய்இருந்துவைத்து ஸ்ருஷ்டி ஸம்ஹாரங்களைப் பண்ணுகிறவனாய் ஜகத்ஸ்ருஷ்ட்யாதி வ்யாபாரங்களைப் பண்ணினவனே! [தொண்டனேன் மதுசூதனனே] - விரோதியாகிற

யையும் பூமியையும் மோஹாந்தகாரஸஹசரிதமான விபரீதவ்ருத்தங்கள் போம்படி ஸங்கல்பரூபமான ஆஜ்ஞையைநடத்தாநிற்புதிர் இத்யர்த்தః. ''மின்னு'' என்றதுக்கு பாவம் - உருவின இத்யாதி. ''கடல் ஞாலங் காக்கின்ற'' என்றத்தைக்கடாக்ஷித்து, ''வினையேனுடை வேதியனே'' என்றதுக்கு பாவம் - தேவாநாம் இத்யாதி. ''வினையேன்''என்றதுக்கு பாவம் - இன்றிருந்து இத்யாதி. மூன்றாந்திருவந்தாதி, ''அதுநன்றிதுதீது'' இத்யாதி. ''போதுநின்றபொன்னங்கழல்'' என்றதுக்கர்த்தம் - ஸர்வாச்ரித ஸாதாரணமாய் ஸ்ப்ருஹணீயமாய் அழகிதாயிருந்துள்ள திருவடிகளை யென்றபடி. ''கன்னலே'' என்று தொடங்கி, ''வேதியனே-போதிகண்டாய்'' என்றந்வயம், (உ)

அஸுரனைப் போக்கினாற்போலே திருவடிகளில் ருசிபிறக்கைக்கு விரோதிகளான ஹேயனான என்னுடைய பாபங்களையெல்லாம் போக்கினவனே!

ப.—அநந்தரம், "ஸர்வப்ரகாரரக்ஷணவ்யாபாரத்தையுடைய நீ, இந்த்ரியங்களாலே நலிந்து உன் திருவடிகளைக் கிட்டாதபடி பண்ணினால் உனக்கு என்ன லாபமுண்டு?" என்கிறார்.

ஆதி - காரணபூதன், ஆகி - ஆய்க்கொண்டு, அகல் - அதிவிஸ்தீர்ணமான, இடம் - ஜகத்தை, படைத்து - ஸ்ருஷ்டித்து, உண்டு - (ப்ரளயாபத்திலே) வயிற்றிலே வைத்துநோக்கி, உமிழ்ந்து-(அநந்தரம்)உமிழ்ந்து, கடந்து-(அந்யாபிமாநமறும்படி) அளந்து இடந்திட்ட-(நைமித்திகப்ரளயத்திலே வராஹரூபியாய்) இடந்து, (அத்தாலே), சோதி - (ஸர்வஸ்வாமித்வஸூசகமான) ஔஜ்ஜ்வல்யத்தையும், நீள் - உத்துங்கதையையுமுடைத்தான, முடியாய் - திருவபிஷேகத்தை யுடையையாய், தொண்டனேன் - உன்னை யநுபவிக்கையிலே சபலனான எனக்கு, மதுசூதனனே - (ப்ரதிபந்தகத்தை யழிக்குமிடத்தில்) மதுவையழித்தாற்போலே அழிக்கவல்லனானவனே! வேதியாநிற்கும் - ஊடுருவ நலியாநிற்கக்கடவராயிருக்கிற, ஐவரால் - ஐந்துஇந்த்ரியங்களாலே, வினையேனை - (உன்னுடைய ரக்ஷணத்துக்கு விஷயமாகாதபடி பண்ணும்) பாபத்தையுடையேனான என்னை, மோதுவித்து-பீடிப்பித்து, உன்-(ஸர்வரக்ஷகனான) உன், திருவடி - திருவடியை, சாதியாவகை - ப்ராபியாதபடி, நீ—, தடுத்து - நிரோதித்து, என்-என்ன ப்ரயோஜநம், பெறுதி - பெறுவுதி? அந்தோ - ஐயோ! "ரக்ஷகனானவன் பாதகனாவதே" என்று கருத்து.

இ.—மூன்றாம்பாட்டில், "ஜகத்துக்கு ஸர்வவிதரக்ஷகனாய்வைத்து, என்னை உன் திருவடிகளிற்கிட்டாதபடி இந்த்ரியங்களாலே நலிவித்தால் உனக்கு என்ன ப்ரயோஜநம் உண்டு" என்கிறார்.

[வேதியாநிற்குமைவரால்] - இடைவிடாதே நலியாநிற்கும் ஐந்து இந்த்ரியங்களாலே. "இராப்பகல் என்று-நித்யாக்நிஹோத்ரம்போலன்றிக்கே நிரந்தரமாக நலிகை." அழகிதாக "உடனாய் மன்னி" என்று ப்ரார்த்தித்தேன். [வினையேனை மோதுவித்து]- பாபத்தைப்பண்ணின என்னை மிகவும் நலிவித்து. "க்ரியதாமிதி மாம் வத" என்று நீஏவப் பணிசெய்கைதவிர்ந்து, இந்த்ரியங்கள் ஏவல்செய்யும்படி பாபத்தைப்பண்ணினேன். [உன் திருவடிச் சாதியாவகை நீதடுத்து] - வருத்த திருவடிகளைக் கிட்டாதபடி நீ தடுத்து; அவஸரப்ரதீக்ஷனாயிருக்கிறவனை பாதகனைச் சொல்லுமாபோலே சொல்லுகிறாரிறே. தாம் ஸாதநாநுஷ்ட்டாநம் பண்ணாநிற்க அவன் விலக்கினாற்போலே சொல்லுகிறார். [என்பெறுதி] - பெருமாள் ஸத்யஸங்கல்பராகைக்குத் தம் முடிவை இசைந்த இளையபெருமாளைப்போலே, உனக்கு ப்ரயோஜநமுண்டாகில் என்னிழவையும் பொறுப்பனிறே. [அந்தோ] - ரக்ஷணமே ப்ரயோஜநமாயிருக்கிறவன் ந்ருஸம்ஸரைப்போலே யாவதே! [ஆதியாகி இத்யாதி]-ஆதிராஜ்யஸூசகமான திருவபிஷேகத்தையுடையையாய் நித்யவிபூதியிலே பேரோலக்கமாக இருந்துவைத்து, ஜகத்காரணபூதனாய், அழிந்துகிடக்கிற ஜகத்தை ஸ்ருஷ்டித்து, ப்ரளயாபத்திலே வயிற்றிலேவைத்து நோக்கி, உள்ளே இருந்து தளராமே உமிழ்ந்து, மஹாபலி அபஹரிக்க எல்லைநடந்து மீட்டு, நைமித்திகப்ர லே மஹாவராஹமாய் எடுத்து, இப்படி ஸர்வவிதரக்ஷணமும் பண்ணினவனே! [தொண்டனேன் மதுசூதனனே] - கண்டதெல்லாவற்றிலும் சபலனான

என்னுடைய இந்த்ரியவஶ்யதையைத் தவிர்த்தவனே! மயூவாகிற அஸுரனைபம்பாக்கினற்போலே, உன்திருவடிகளில் ருசிக்கு விரோயியான இந்த்ரியவஶ்யதையைத் ...னே! " ... பொல்லாது" என்று அஞ்சிக் கூப்பிடும்படி பண்ணினவன் என்கை.

ஈடு.—மூன்றாம்பாட்டு. "ஜகத்துக்கு ஸர்வவிதரக்ஷகனாய்வைத்து, என்னை உன்திருவடிகளிலே கிட்டாதபடி இந்த்ரியங்களாலே நலிவித்தால் உனக்கு என்னப்ரயோஜநம்உண்டு?" என்கிறார்.

[வேதியாநிற்கும்] - அழகிதாக எல்லாஅவஸ்த்தைகளிலும் அடிமைசெய்ய ஆசைப்பட்டேன். "உடனாய்மன்னி" என்று பாரித்ததெல்லாம் இவற்றுக்குப் பணிசெய்கைக் காவதே! [வேதியாநிற்கும்] - வேதனையே பண்ணாநிற்கும். "**யாவஜ்ஜீவ மக்நிஹோத்ரம் ஜுஹுயாத்**" (யாவஜ்ஜீவமக்நிஹோத்ரம் ஜுஹுயாத்) என்றால் - "**ஸாயம்ப்ராதஃ**" (ஸாயம்ப்ராதஃ) என்றுஒருகாலங்களிலே ஓதுக்காநின்றதிறே; அங்ஙனன்றிக்கே, ஸர்வாவஸ்த்தைகளிலும் அடிமைசெய்ய ஆசைப்பட்டுச் சொன்னதெல்லாம் இவற்றின்பக்கலிலே யானபடி. [வினையேனை] - ஹோமத்துக்குப் பாரித்ததெல்லாம் க்லேஶப்படுகைக்கு உடலாவதே. [உன்திருவடிச்சாதியாவகை நீதடுத்து] - என்னஉறவின் கனந்தான்! தம்முடைய குற்றத்துக்கும் அவனைவெறுக்கும்படிகாணும் ஸம்பந்தமிருக்கிறபடி. ஸாதநாநுஷ்ட்டாநம்பண்ணி ஃபலத்துக்கு விரோதம் பண்ணுவாரைச் சொல்லுமாபோலே சொன்னபடி பாரீர். உன் திருவடிகளை ஸாதியாதபடி தகைந்து. [என் பேறுதி] - என் ஸ்வரூபமழியு மித்தனையோ வேண்டுவது ? நான் படுகிற வ்யஸநத்தால் உனக்குஒருப்ரயோஜநமுண்டாகில் எனக்கு அதுவே யமையும்;உனக்காக இருக்குமதிறே எனக்குவேண்டுவது. "**ஜலாந்மத்ஸ்யாவிவோத்த்ருதௌ**" (ஜலாந்மத்ஸ்யாவிவோத்த்ருதௌ) என்கிற இளையபெருமாள், துர்வாஸா வர, "பெருமாளுக்குஓர்அவத்யம் வரவொண்ணாது" என்று தம்நோவுபாராதே விடைகொண்டாரிறே. [என்பேறுதி] -

---

மூன்றாம்பாட்டு - வேதியா இத்யாதி. "படைத்துண்டுமிழ்ந்து" இத்யாதியைக்கடாக்ஷித்து-ஜகத்துக்கு இத்யாதி. "உன்திருவடிச்சாதியாவகை" இத்யாதியைக்கடாக்ஷித்து - என்னையுன்திருவடிகளிலே இத்யாதி.

'இடைவிடாதே நலியாநிற்கும் ஐந்திந்த்ரியங்களாலே' என்று ஶப்தார்த்தம். "வேதியாநிற்கும்" என்கிற வர்த்தமாநத்தைக் கடாக்ஷித்து ஹார்த்தஹாவம் - அழகிதாக இத்யாதி.விவரணம் - உடனாய் இத்யாதி.'கீழிற்பாட்டிலே "இராப்பகல்" என்றுவைத்து, "வேதியாநிற்கும்" என்று - இங்கேவர்த்தமாநமாகச்சொன்னால் புநருத்தியன்றோ? என்ன - யாவஜ்ஜீவம் இத்யாதி. அதாவது - ஸர்வாவஸ்த்தைகளிலுமென்றபடி. வ்யாக்யாதாவின்ஈடுபாடு - என்னஉறவின் இத்யாதி. விவரணம்- தம்முடைய இத்யாதி. ஸம்பந்தத்தையநுஸந்தித்து இவர் வெறுக்கும்படிஎன்னென்ன - ஸாதநாநுஷ்ட்டாநம் இத்யாதி. 'சொன்னபடிபாரீர்'-ஸம்பந்தத்தாலேயென்றபடி. "சாதியாவகை"என்றது-ஸாயியாவகையென்றாய், கிட்டாவகை யென்றபடி. "என்பெறுதி" என்கிற ஸ்வரத்தாலே ஸித்தித்தவர்த்தம் - என்ஸ்வரூபம் இத்யாதி. அதாவது - என்னை நீ தகைந்துஎன்னப்ரயோஜநம் பெறுகிறாய்?என் ஸ்வரூபமழியுமதொழிய வேறொரு ப்ரயோஜநங் காணேனென்றபடி. இத்தால் - ஒருப்ரயோஜநம் உண்டானாலறியிருப்பரோ?என்ன - நான்படுகிற இத்யாதி. ப்ரயோஜநமுண்டானால் தந்தாமை யழியமாறக்கூடுமோவென்ன - உனக்காக இத்யாதி. சேஷியினதிசயார்த்தமாகத் தந்தாமை யழியமாறினாலென்ன - ஜலாந் இத்யாதி. !ஸ்வப்ரயோஜநார்த்தமாக புதுஃகம்பாராதே அவன் பொகட்டு

ஸ்ரீபரதாழ்வானை நீ ஸத்யப்ரதிஜ்ஞனைகைக்காகப் பிரித்துவைத்தாய்; என்னிருப்புக்கு உனக்கென்ன ப்ரயோஜநமுண்டு? [அந்தோ] - ஸ்வப்ரயோஜநமின்றியிலே பராநர்த்தமே ப்ரயோஜநமாக நலியும்படி பிறந்தேனே. ரக்ஷணமே ப்ரயோஜநமாக இருக்கிறவன், ந்ருஸம்ஸரைப்போலேயாவதே ! [ஆதியித்யாதி] - உனக்கோரு ப்ரயோஜநமின்றிக்கேயிருக்கச்செய்தேயும் ரக்ஷிக்குமவனல்லையோ நீ! ஆனபின்பு உனக்குஇதுபோருமோ? †(ஆதிராஜ்யஸூசகமான) திருவபிஷேகந் தொடக்கமான திவ்யாபரணங்களை யரித்துக் கொண்டு நித்யஸூரிகள் நடுவேயிருக்கக்கடவ நீ, ஜகத்காரணபூதனாய்ப் பரப்பையுடைத்தான பூமியை ஸ்ருஷ்டித்து, பின்னை ப்ரளயாபத்து வர வயிற்றிலே யெடுத்துவைத்து, அநந்தரம் வெளிநாடுகாணப் புறப்படவிட்டு, பின்னை மஹாபலி அபஹரிக்க எல்லை நடந்து மீட்டுக்கொண்டு, பின்னை நைமித்திகப்ரளயத்திலே மஹாவராஹமா யெடுத்துக் கொண்டேறி, இப்படிகளாலே ஸர்வரக்ஷணங்களையும் பண்ணுமவனல்லையோ? [தொண்டனேன்இத்யாதி] - இவன் ரக்ஷகன் என்னுமிடத்துக்கு முன்னே யொன்று தேடிச்சொல்லவேணுமோ? மதுவைப்போக்கினாற்போலே என்இந்த்ரிய வஶ்யதையை இன்றிருந்து போக்கினவனன்றோ? (தொண்டன் - இதரவிஷயசபலன்.) தன்படிகளைக் காட்டி யெனக்குப் புறம்புண்டான வாஸநையைப்போக்கி, இன்று கைக்கெட்டாதிருக்கிற இதுவேயிறே குறை. (௩)

நாலாம் பாட்டு.

சூதுநான் அறியாவகைச்சுழற்றிஓரைவரைக்காட்டிஉன்னடிப்
போதுநான்அணுகாவகைசெய்துபோதிகண்டாய்
யாதும்யாவருமின்றிநின்னகம்பாலொடுக்கிஓராலினீளிலை
மீதுசேர்குழவி!வினையேன்வினைதீர்மருந்தே.

ஆ.—(சூது)-"இந்த்ரியக்ருதமான என்னுடைய வாஸனையைப் போக்கவல்லையுமாய் என்னுடையவாஸனையைப்போக்குகைக்காகக்ல்ப்தஸ்வரூபனுமா யிருந்துவைத்து "உன்திருவடிகளைப் பெறுகைக்கு உபாயம் உன்திருவடிகளே" என்றிருக்கிற இந்த என்னுடைய அறிவுக்கூட அழியும்படி இந்த்ரியங்களைக்காட்டி என்னைக்கலக்கி உன்திருவடிகளைச் சேராதபடி பண்ணிப்போகவாகாதே புகுகிறது" என்கிறார்.

ஸ்ரீபரதாழ்வானை இத்யாதி. "என்பெறாதி" என்றத்தைக் கடாக்ஷித்து, "அந்தோ" என்றதுக்கு பாவம் - ஸ்வப்ரயோஜநம் இத்யாதி. "ஆதியாகி" இத்யாதி மேலைக்கடாக்ஷித்து, "அந்தோ" என்றதுக்கு பாவாந்தரம் - ரக்ஷணமே இத்யாதி. அறையர் நிர்வாஹத்திலே பாவம்-உனக்கோரு இத்யாதி வாக்யத்வயம். போருமோ-சேருமோ. "சோதிநீண்முடியாய் இருந்துவைத்து - "ஆதியாகி" இத்யாதிக்கு ஸப்தார்த்தம் - திருவபிஷேகம்இத்யாதி. "தொண்டனேன்" - விஷயசபலனென்றபடி. இந்த்ரியவஶ்யதையைப் போக்கினானாகில் "மோதுவித்திட்டு" என்பானென்? என்ன - தன்படிகளை இத்யாதி. 'மதுசூதனனே! தடுத்தென்பெறாதி: அந்தோ!' என்றந்வயம். (௩)

† குண்டலிதம் க்வாசித்கம்.

ஒ.—நாலாம்பாட்டில், "நீயே இவ்வாத்மாவுக்கு நிரதிஶய புருஷார்த்தம் என்னுமிடத்தை நான் அறியாதபடி ஶப்தாதிவிஷயங்களைக்காட்டி என்னை ப்ரமிப்பித்துப் போகாநின்றாய்" என்கிறார். [சூது] - உறுவது. [யாதும்என்று தொடங்கி] - சிறுவயிற்றிலே சேதநாசேதநங்களையடைய வைத்து ஓர் ஆலின் தளிரின்மேலே சிறு பிள்ளையாய்க் கண்வளர்ந்தருளின ஆஶ்சர்யம்போலே எனக்குஉண்டான ஶப்தாதிவிஷய ப்ராவண்யத்தைத் தீர்க்கவல்லவனே!

ப.—அநந்தரம், "அகடிதகடநாஸமர்த்தனாயிருக்கிற நீ, இந்த்ரியங்களாலே என்னெஞ்சைக் கலக்கி, போக்யமான உன்திருவடிகளைக் கிட்டாதபடி பண்ணாநின்றாய்" என்கிறார்.

யாதும் - ஸகலாசேதநங்களையும், யாவரும் - ஸகலசேதநரையும், (அபேக்ஷா நிரபேக்ஷமாக), இன்றி - ஒன்றொழியாமல், நின் - உன், அகம்பால் - திருவயிற்றில், ஒடுக்கி - ஏகதேசத்திலே பொதுங்கும்படிபண்ணி, ஓர் - (இன்னவிடத்திலே முளைத்தெழுந்ததென்று தெரியாத) ஓர், ஆலின் - ஆலினுடைய, நீள்-(முகிழ்விரிந்து) நீளும்படியான, இலை - இலையின், மீது - மேலே, சேர் - ("ப்ரளயாபத்தில் விழுவேோம்" என்றறியாமல்) கண்வளர்ந்தருளுகிற, குழவி - ஶைஶவத்தை யுடையனாய், வினையேன் - பாபமே நிரூபகமான என்னுடைய, வினை - பாபம், தீர் - போக்கும், மருந்தே - மருந்தாகவல்லவனே! ஓர் - அத்விதீயஸ்வலரான, ஐவரை - ஐந்திந்த்ரியங்களை, காட்டி-காட்டி, நான் - (பரமபுருஷார்த்த யோக்யமான ஸ்வரூபத்தையுடைய) நான், சூது - உறுவது, அறியாவகை - அறியாதபடி, சுழற்றி - விஷயங்களிலே ப்ரமிக்கும்படி பண்ணி, உன் - (ஆபத்ஸகனான) உன்னுடைய, அடிப்போது - அதிஶயிதபோக்யமான திருவடித்தாமரையை, நான் - (அநந்யஶரணனான) நான், அணுகாவகை - அணுகாதபடி, செய்து - பண்ணி, போதிகண்டாய் - கண்காணாதபடி கடக்க நில்லாநின்றாய்காண்.

இ.—நாலாம்பாட்டில், "நீயே நிரதிஶயபுருஷார்த்தம் என்னுமிடத்தை அறியாதபடி ஶப்தாதிகளைக்காட்டி ப்ரமிப்பித்துப் போகாநின்றாய்" என்கிறார்.

[சூது நானறியாவகை சுழற்றி] - சூது - உறுவது. "உறுவது இன்னது" என்று நான் அறியாதபடி ப்ரமிப்பித்து; "பகவத்ப்ரவணனாமதுவே உறுவது: விஷய ப்ராவண்யம் அநர்த்தஹேது" என்று விவேகிக்கவொண்ணாதபடி மநஸ்ஸைக் கலக்கி. [ஓர் ஐவரைக்காட்டி] - 'ஐவர்' என்று—ஶப்தாதிகள். தனித்தனியே பாதகமான ஶப்தாதிகளைக்காட்டி, உன் திருவடிகளாகிற செவ்விப்பூக்களை நான் கிட்டாதபடிபண்ணி. [போதிகண்டாய்] - "கண்ணோட்டம் பிறக்கும்" என்று கண்ணாற்காணவொண்ணாதபடி உன்னைக் கொண்டுபோகாநிற்றிகிடாய். [யாதும் யாவருமின்றி] - சேதநம் அசேதநம் என்கிற வாசியின்றிக்கே. [நின்னகப்பாலொடுக்கி] - உன் திருவயிற்றிலே சேர்த்து. [ஓராலினீளிலைமீதுசேர் குழவி] - ஓர் ஆலந்தளிரின்மேலே ஸ்தநந்தயமான வடிவைக் கொண்டு கண்வளர்ந்தவனே! [வினையேன் வினைதீர்மருந்தே] - அந்த அகடிதகடநாஸாமர்த்யம்போலேயாயிற்று என்னுடைய இந்த்ரிய வஶ்யதையைத் தவிர்த்தபடி.

ஈடு.—நாலாம்பாட்டு. "நீயே இவ்வாத்மாவுக்கு நிரதிஶயபுருஷார்த்தமென்னுமிடத்தை நான் அறியாதபடி ஶப்தாதிவிஷயங்களைக் காட்டி என்னை ப்ரமிப்பித்துப் போகாநின்றாய்" என்கிறார்.

[சூது இத்யாதி] - சூது - உறுவது. "இவ்வாத்மாவுக்கு விஷயப்ராவண்யம் நாஶஹேது, ஹகவதநுஹவம் உஜ்ஜீவநம்" என்று. நான் அறியாவகை - இது நான்அறியாதபடி. [ஓரைவரைக்காட்டி - சுழற்றி] - நான்உறுவதறியாதபடி ஶப்தாதிவிஷயங்களைக் காட்டி, ப்ரமிப்பித்து: உன்மத்தங்காய் தின்னப்பண்ணி. [உன்னடிப்போது நான் அணுகாவகைசெய்து] -உன் திருவடிகளாகிற செவ்விப்பூக்களை நான் கிட்டாதபடிபண்ணி. மயிர் கழுவியிருக்கிறவனைச் செவ்விப்பூச்சூடாமல் தடுப்பாரைப்போலே. [போதிகண்டாய்] - கூடநிற்கில் இதெல்லாம் படவல்லேன் கிடீர்! "கூடநிற்கில் கண்ணோட்டம் பிறக்கும்" என்று கடக்கப் போவாரைப்போலே. 'நீர் சொல்லுகிறவையெல்லாம் நமக்குச் செய்ய வரிது காணும்' என்ன, 'ஓம், நீ அரியவை செய்யமாட்டாயிறே' என்கிறார்—[யாதும்யாவரும்] என்றுதொடங்கி. சேதநாசேதநங்களொன்றும் பிறிகதிர்ப்படாதபடி உன் வயிற்றிலே வைத்து, ஒருபவனாய் முகிழ்விரியாததோர் ஆலந்தளிரின்மேலே, உனக்கு ரக்ஷகர் வேண்டுவதோர் அவஸ்த்தையை ப்ராபித்துக் கண்வளர்ந்தருளுவானொருத்தனல்லையோ? அரியவை செய்யவல்லை என்னுமிடத்துக்கு ஒருபழங்கதை சொல்லவேணுமோ? [வினையேன்வினை தீர்மருந்தே] - பாபமே நிரூபகமான என்னுடைய பாபம்போக்கும் மருந்தாகவல்லவனே! என்னுடைய ஶப்தாதிவிஷயப்ராவண்யத்தைப் போக்கி என்னை இப்படித் துடிப்பித்தவனல்லையோ! (௪)

ஐந்தாம் பாட்டு.

தீர்மருந்தின்றிஐந்துநோயடுஞ் சேக்கிலிட்டுத் திரிக்கும்ஐவரை
நேர்மருங்குடைத்தாவடைத்துநேகிழ்ப்பானொக்கின்றாய்
ஆர்மருந்தினியாகுவார்! அடலாழியேந்தியசுரர்வன்குலம்
வேர்மருங்கறுத்தாய்! விண்ணுளார்பெருமானேயோ!

ஆ.—(தீர்மருந்தின்றி.) - "ஆஶ்ரிதவிரோதிநிரஸநைகஸ்வபாவனாய் ததநுகுணசக்ராதிதிவ்யோபகரணபுஷ்கலனுமாய் ஸமர்த்தனுமாயிருந்துவைத்து,

நாலாம்பாட்டு.—சூதுநான் இத்யாதி. "சூது நானறியாவகை" என்றதொடங்கி, "ஐவரைக்காட்டி - சுழற்றி - போதி கண்டாய்" என்றத்தைப்பற்ற அவதாரிகை - நீரோ இத்யாதி.

"சூது" என்று - உறுவதாய், ப்ராப்தமாவதென்றபடி. இவ்விடத்தில், "ஐவர்" என்கிறது- ஶப்தாதிவிஷயங்களை. உன்மத்தங்காய்தின்னப்பண்ணுகையாவது - அவற்றிலே போக்யதாபுத்தியைப் பிறப்பித்து நெஞ்சு கலங்கும்படி பண்ணுகை. "ஓர்" என்று - இவற்றுக்கு அத்விதீயத்வமாவது - தனித்தனியே வ்யாபகமாகை. திருவடிகளைப் பூவாக ரூபிக்கிறதுக்கு பாவம்-மயிர் இத்யாதி. தாம் திருவடிகளை ப்ராபிக்கப் பெறுவதுஎப்போதோ? என்று ப்ரபத்தி பண்ணியிருக்கிற ஆகாரத்தை நினைத்து - மயிர்கழுவியிருக்கிறவனை என்கிறது. இப்படியிருக்கிற தம்மைத் தன்திருவடிகளில் அநுபவகைங்கர்யங்களைக் கொடாமையைப்பற்ற - செவ்விப்பூச் சூடாமல் தடுப்பாரைப்போலே என்றது. "போதிகண்டாய்" என்றதுக்கு தாத்பர்யவிவக்ஷிதார்த்தம் - கூடநிற்கில்இதெல்லாம் இத்யாதி. அவன்தான் கூடநில்லாமற்போவானென்? என்ன - கூடநிற்கில் கண்ணோட்டம் இத்யாதி. கண்ணோட்டம் - க்ருபை. மேலுக்கவதாரிகை - நீர் இத்யாதி. "குழவி" என்றதுக்குஅர்த்தம்-உனக்கு ரக்ஷகர் இத்யாதி. "வினையேன்வினை தீர்மருந்தே" என்றதுக்கவதாரிகை - அரியவை இத்யாதி. 'தீர்மருந்தே - சூதுநானறியாவகை - ஓரைவரைக்காட்டி - சுழற்றி - உன்னடிப்போது' என்றுதொடங்கி, 'போதிகண்டாய்' என்றந்வயம். (௪)

ஸ்பவிஷபாக்யமஹாவ்யாதிபஞ்சகங்களாலே அதிமாத்ரபீடிதனுக்கொண்டு ப்ரக்ருதியிலே இவ்வாத்மாவை பரிப்ரமிப்பிக்கிற இந்த்ரியங்களாலே சுற்றும் நிரோதிப்பித்து என்னைக் கைவிடுவாரைப்போலே யிராநின்றாய்; நீ யென்னைக் கைவிட்டால் வேறுஎனக்கு ரக்ஷகருளரோ ? ஆதலால், அஸாதேந்த்ரியங்களுக்கு அபூமியாயிருந்த திருநாட்டிலே * அயர்வறுமமரர்கள்சூழ எழுந்தருளியிருந்த உன்திருவடிகளிலே அடியேனை வாங்கியருளாய்'' என்கிறார்.

ஒ.—அஞ்சாம்பாட்டில், ''அப்ரதிக்ரியமாம்படி விஷயங்களாலும் இந்த்ரியங்களாலும் நலிவித்து என்னை நீ கைவிட்டால் வேறு எனக்கு ரக்ஷகர் உண்டோ ?'' என்கிறார்.

[ஐந்து நோய் என்று தொடங்கி] - ஐந்து விஷயங்களுமாகிற நோயாலே இவ்வாத்மாவை முடிக்கவல்லவாய் உடம்பாகிற செக்கிலேயிட்டுத் திரிக்கும் ஐந்து இந்த்ரியங்களையும் எதிரும் பார்ஶ்வங்களிலும் நிறுத்தி என்னைக் கைவிடுவாரைப்போலே இருந்தாய். [ஆர்மருந்து என்று தொடங்கி] - ப்ரதிபக்ஷத்தை அடர்க்குந்திருவாழியை ஏந்தி ஆஶ்ரிதர்க்கு ப்ரதிகூலரான அஸுரரை நிஶ்ஶேஷமாக்கின நீ உபேக்ஷித்தால், இனி பரிஹரிக்கவல்லார் ஆர்? [விண்ணுளார் பெருமானேயோ] - ''ஹா! ராம, ஹா! லக்ஷ்மண'' என்னுமாபோலே, தமக்கு உறவுமுறையாரான * அயர்வறுமமரர்களையும் எம்பெருமானையும் நினைத்துத் தம்முடைய ஆர்த்தியாலே கூப்பிடுகிறார்.

ப.—அநந்தரம், '' ப்ரதிகூலநிரஸநஸ்வபாவனான நீ, விஷயேந்த்ரியாதிகளோடேஸம்பந்திப்பித்துவைத்து அகற்றுவான்போலே யிராநின்றாய்; வேறுஇனி ரக்ஷகர்ஆர்? என்கிறார்.

அடல்-(ஆஶ்ரிதவிரோதிகளையழியச்செய்கைக்குஅடியான)யுத்தோத்யோகத்தையுடைய, ஆழி-திருவாழியை, ஏந்தி-ஏந்தி, அசுரர் - ப்ரதிகூலரான அஸுரர்களுடைய, வன் - ப்ரபலமான, குலம் - ஸங்கங்களை, மருங்குவேர் - பக்கவேரோடே, அறுத்தாய்-அறுத்தவனாய், விண்ணுளார் - பரமபதவாசிகளுக்கு, பெருமானே - நிரவதிகபோக்யபூதனான நிர்வாஹகனானவனே! (வேறு), தீர் - ஶாந்திஹேதுவான, மருந்து-ப்ரத்யௌஷதம், இன்றி - இல்லாதபடி, ஐந்து-ஐந்துவகைப்பட்ட (ஶப்தாதிகளாகிற), நோய் - நோயாலே, அடும் - முடிக்கக்கடவதான, செக்கில் - ப்ராந்திஹேதுவாயுள்ள ஶரீரமாகிற செக்கிலே, இட்டு - இட்டு, திரிக்கும் - ப்ரமிப்பியாநிற்கிற, ஐவரை - ஐந்திந்த்ரியங்களையும், நேர் - என்முகப்பும், மருங்கு-பக்கமும், உடைத்தா-உடைத்தாம்படி, அடைத்து - நிறுத்தி, நெகிழ்ப்பானொக்கின்றாய் - நெகிழவிடுவான்போலே யிராநின்றாய்; இனி - (விரோதிக்கு நிவர்த்தகனான நீயே ப்ரவர்த்தகனான) பின்பு, (இந்நோய்க்கு), மருந்து - மருந்து, ஆகுவார் - ஆவார், ஆர்-ஆர்? ''நோயானவிஷயங்கள் மருந்தாகவோ? நோவுபடுகிறநான் மருந்தாகவோ, நோவிக்கிற இந்த்ரியங்கள் மருந்தாகவோ?'' என்று கருத்து. 'ஓ' என்று - ''ஸூரிகளோடு ஸமாநபோகனாய்வைத்து, வ்யாதிக்ரஸ்தனாய் மிடறடைய உண்பதே'' என்று விஷண்ணராகிறார்.

இ.—அஞ்சாம்பாட்டில், ''விஷயங்களாலும் இந்த்ரியங்களாலும் அப்ரதிக்ரியமாம்படி நலிந்து, என்னை நீ கைவிட்டால் வேறு ரக்ஷகர் உண்டோ ?'' என்கிறார்.

[தீர்மருந்தின்றி] - ப்ரதிக்ரியை இல்லாதபடி. ப்ரதிக்ரியை உண்டாகில் ஆறியிருக்கலாம்போலே. [ஐந்து நோய்] - ஶப்தாதிகள். [அடும் செக்கு] - இவ்வாத்

மாவை முடிக்கும் ஶரீரம்.. அதிலே ப்ரவேஶித்து நெருக்கும் ஶ்ரோத்ராதிகளை: ஶரீரத்திலே ப்ரவேஶிப்பித்து ஶப்தாதிகளைக்காட்டி நெருக்குகிற ஶ்ரோத்ராதிகளை, நேருடைத்தாகவும், மருங்குடைத்தாகவும், அடைத்து - முன்பும் பார்ஶ்வத்திலும் நிறுத்தி. [நெகிழ்ப்பானொக்கின்றாய்] - "நீயே ரக்ஷகன்" என்கிற விஶ்வாஸத்தையும் நெகிழ்ப்பாரைப்போலே இருந்தாய் என்னுதல்; கைவிடுமாபோலே இருந்தாய் என்னுதல். [இனி-ஆர்மருந்து - ஆகுவார்] - ரக்ஷகனை நீ உபேக்ஷித்தால், ஆர் மருந்தாகுவார்? பிறர் இல்லாத அற்றைக்கு "நீதுணை"என்றிருக்கலாம்; நீ கைவிட்டால், நோக்கக்கடவாருண்டோ?. மருந்தாவது எது? என்னாதே, "ஆர்" என்கிறது-"ஒரு பரமசேதநனே மருந்தாவான்" என்றிருக்கிறார். "ஔஷதம் ஜாஹ்நவீ தோயம் வைத்யோ நாராயணோ ஹரி:." [அடலாழி இத்யாதி]-யுஜோங்ஙவமானதிருவாழியைவந்தி, வலிதான அஸுரர்குலத்தைப்பக்கவேரோடேவாங்கினவனே! நீ உபேக்ஷித்தால் நான் ரக்ஷித்துக்கொள்ளவோ? பிறர் ரக்ஷிக்கவோ?. [விண்ணுளார்பெருமானேயோ]-நித்யஸூரிகளுக்கு ஓலக்கங்கொடுத்திருக்கிறபடியை அநுஸந்தித்து "நான் அதுக்கு அசலாவதே" என்று கூப்பிடுகிறார். "ஹா! ராம, ஹா! லக்ஷ்மண" என்னுமாபோலே; உறவுமுறையாரான நித்யஸூரிகளையும் அவனையும் நினைத்துத் தம் ஆற்றாமையாலே, அங்கே சென்று கேட்கும்படி கூப்பிடுகிறார்.

ஈடு.— அஞ்சாம்பாட்டு. "விஷயங்களாலும் இந்த்ரியங்களாலும் அப்ரதிக்ரியமாம்படி நலிந்துஎன்னை நீ கைவிட்டால் வேறுரக்ஷகர் உண்டோ?" என்கிறார்.

[தீர்மருந்தின்றி] - வேறொரு ப்ரதிக்ரியையுண்டாகிலும் ஆற்றலாமிறே: ஸர்வஶக்தியாலும் போக்கப்போகாதாகாதே. [ஐந்துநோயடும்சேக்கிலிட்டு] - ஶப்தாதிவிஷயங்களாகிற நோயாலே இவ்வாத்மாவை முடிக்கும் ஶரீரமாகிறசேக்கிலே யிட்டு. [திரிக்குமைவரை] - பாதிக்கிற ஶ்ரோத்ராதிகளை. ஶரீரத்திலே ப்ரவேசிப்பித்து ஶப்தாதிவிஷயங்களைக் காட்டி நெருக்குகிற ஶ்ரோத்ராதிகளை. [நேர்மருங்குடைத்தாவடைத்து] - எதிரும் பக்கங்களுமாக அடைத்து. 'அபிமந்யு'என்றுஒருபாலனை நலிகைக்கு அதிரத மஹாரதர்களடங்கலும் சூழப்போந்தாற்போலே, இந்த்ரியங்களைக் கையடைப்பாக்கி. [நெகிழ்ப்பானொக்கின்றாய்] - இதுவோதான் எனக்கு நிலைநிற்கப்புகுகிறது? "இங்ஙனே தான் செல்லுகிறதோ?" என்றுஇருக்கவொண்ணாதபடி உன்பக்கல் பண்ணினவிஶ்வாஸத்தையும் குலையாநின்றாய்.

அஞ்சாம்பாட்டு.—தீர்மருந்தின்றி இத்யாதி. "ஆர்மருந்தினியாகுவார்" என்னுமளவுங்கடாக்ஷித்தவதாரிகை - விஷயங்களாலும் இத்யாதி.

"தீர்மருந்து" - தீர்க்கும் மருந்து. இத்தால் - 'ப்ரதிக்ரியை' என்றபடி. "தீர்மருந்தின்றிக்கே பாதிக்கிறது" என்கிறவருடைய ஹார்த்தபாவம் - வேறொரு இத்யாதி. இன்றாலேயென்று விசேஷியாமையாலேபாவம் - ஸர்வஶக்தி இத்யாதி. அடும் - முடிக்கிற. முடிக்குமென்றது - முடிக்கைக்காகவென்றபடி. இட்டு - ப்ரவேசிப்பித்தென்றபடி. "ஐந்து நோவைக்கொண்டு இவ்வாத்மாவை முடிக்கைக்காகச்சேக்கிலேஇட்டுத்திரிக்குமைவரையும் நேர்மருங்குடைத்தாவடைத்துநெகிழ்ப்பானொக்கின்றாய்" என்று வாக்யயோஜனை. நேர்மருங்குடைத்தாம்படி யடைத்தென்று ஶப்தார்த்தம். எதிரும் பக்கங்களுமாக அடைக்கையாவது - முன்னும் பார்ஶ்வங்களுமாக நிறுத்துகை. த்ருஷ்டாந்தபூர்வகோக்தார்த்தோபபாதநம் - அபிமந்யு இத்யாதி. இந்த்ரியங்களைக் கையடைப்பாக்கி - இந்த்ரியங்களுக்குக் கையடைப்பாக்கி என்றபடி. கையடைப்பாக்கி - வசமாக்கி. "நெகிழ்ப்பானொக்கின்றாய்" என்கிறதென்? "இந்த்ரியங்கள்பாதகங்கள்" என்னும்புத்தியைத் தந்தோமே என்ன - இதுவோதான் இத்யாதி. இதுவோதானென்றது - இந்த்ரியங்கள் பாதகங்களென்கிற புத்தியோதான் என்றபடி. நிலை

ஆனால் நம்படி இதுவாகில், உமக்கோரு பரிஹாரந் தேடிக் கொண்டாலோ என்றான்: [ஆர்மருந்தினியாகுவார்] - என்னிடையாட்டம் பிறர்க்குக்கொடு காரியமில்லை: நான்நோவு படாநின்றேன், நீ கைவாங்கினாய்; ஆனபின்பு, எனக்குஒரு ரக்ஷகருண்டோ? நானும் பிறரு மில்லாதவன்று நீயுண்டு: நீவிட்டவன்று ஆருண்டு? "ஆனால் நீரோ?" என்றான்; நானும் கையுந்திருவாழியுமாயிருந்தேனாகில் நான் என்னைநோக்கிக்கொள்ளேனோ? மருந்தாம்போதும் ஒருசேதநன் வேணுமாகாதே. * மருந்தும்பொருளும் அமுதமுந் தானேயிறேயிவர்க்கு. [அடலாழியேந்தி யசுரர்வன்குலம் வேர்மருங்கறுத்தாய்] - யுத்தோந்முகமான திருவாழியை ஏந்தி அஸுரருடைய வலிதானகுலத்தைப் பக்கவேரோடே வாங்கினவனே! அவ்வாஸனை யோ உம்மைநலிகிறது? [விண்ணுளார்பெருமானேயோ] - ஒருத்தன் சிறையிருக்க, பிதா வும் மாதாவும் ப்ராதாக்களுமாய்க்கல்யாணஞ்செய்யக்கண்டு தான்கூடப்பெறாதே நோவுபடு மாபோலே, நித்யஸூரிகளும் பிராட்டியும் அவனுமாகப் பரமபதத்திலேயிருக்கிறபடியை அநுஸந்தித்து அங்கேகேட்கும்படி கிடந்துகூப்பிடுகிறார். "ஹா ராம ஹா லக்ஷ்மண ஹா ஸுமித்ரே" (ஹாராம ஹாலக்ஷ்மண ஹாஸுமித்ரே) என்று பிராட்டி தனியேகிடந்து கூப்பிட்டாற்போலே, பரமபதத்திலிருப்பும் அணிகலங்கும்படி கூப்பிடுகிறார். (ரு)

நில்லாமைக்கு அடியேது? என்ன - இங்ஙனேதான் இத்யாதி. அதாவது - இந்தபாதகத்வபுத்தியோடே செல்லவொண்ணாதபடி தேவர்திருவடிகளில் விஶ்வாஸத்தை நெகிழ்கைக்காக விருந்தாற்போலே இராநின்றாயென்றபடி. "ஒக்கின்றாய்" - இருந்தாற்போலே இராநின்றாய். இங்ஙனேதான் - இந்த பாதகத்வபுத்தியோடேதான் என்றபடி. ஆனாலென்றது - 'நாம்கைவிட்டோம்' என்று உமக்குத் தோற்றுகிறதாகில் என்றபடி. ஏதத்விவரணம் - நம்படி இதுவாகில் என்றது. "இனி" என்றதுக் கர்த்தம் - என்னிடையாட்டம் இத்யாதிவாக்யத்ரயம். விவரணம் - நானும் பிறரும் இத்யாதி. "ஆர் மருந்து - ஆகுவார்" என்றதுக்கு - உபாயாந்தரங்கள் ரக்ஷகமாகமாட்டாதென்றர்த்தாந்தரம்விவக்ஷித்து, "அடலாழியேந்தி" என்றதுக்குஅவதாரிகை-ஆனால்நீரோ என்றானென்று. இப்பக்ஷத்தில், ஏதுமருந்தினியாகுமென்னாதே, "ஆர்மருந்தினி" என்றதுக்குபாவம் - மருந்தாம்போதும் இத்யாதி. அப்படி சேதநரோ மருந்தோவென்ன - மருந்தும் இத்யாதி. அநிஷ்டமான ஸம்ஸாரவ்யாதியைப்போக்கும் பேஷஜமும், இஷ்டமானமோக்ஷத்தைத் தரும்பொருளும், ஸ்வத: இஷ்டமாய்போக்யமான அம்ருதமும் திருவடிகள்தானே யித்யர்த்த:. மூன்றாந்திருவந்தாதி நாலாம்பாட்டு. "வேர்மருங்கு" என்றது - மருங்குவேர் என்றபடி. அவ்வாஸனையோ என்றது - அந்தவிரோதிநிரஸநமாத்ரமேயோ நலிகிறதென்ன; அன்று, ப்ராப்தியுமென்கிறாரென்றபடி. 'உம்மைநலிகிறது' என்றவநந்தரம், பின்னையும் நலிகிறதுண்டோவென்ன? என்றத்யாஹரிப்பது. "விண்ணுளார்பெருமானே" என்றஸம்போதித்து "ஓ" என்றதுக்குபாவம் - ஒருத்தன் இத்யாதி. த்ருஷ்டாந்தபூர்வகமாக உபபாதநம் - ஹாராம இத்யாதி. இது - கூப்பிடுகிறமாத்ரத்துக்கு த்ருஷ்டாந்தம். "ஹா ராமே ஹா லக்ஷ்மண ஹா ஸுமித்ரே ஹா ராம மாத: ஸஹ மே ஜநந்யா । ஏஷா விபத்யாம்யஹமல்பபாக்யா மஹார்ணவே நௌரிவ மூடவாதா" இதி சுந்தரகாண்டே வேண்யுத்க்ரதநோத்யோகஸமயே. [28-8] 'அடலாழி' என்றுதொடங்கி, 'விண்ணுளார்பெருமானே-நெகிழ்ப்பாயொக்கின்றாய், ஆர்மருந் தினியாகுவார்: ஓ' என்றந்வயம். (ரு)

ஆறாம் பாட்டு.

விண்ணுளார்பெருமாற்கடிமைசெய்வாரையுஞ்செறும்ஐம்புலனிவை
மண்ணுளென்னைப்பெற்றால்என்செய்யாமற்றுநீயும்விட்டால்?
பண்ணுளாய்!கவிதன்னுளாய்! பத்தியினுள்ளாய்!பரமீசனே !வந்தென்
கண்ணுளாய்!நெஞ்சுளாய்!சொல்லுளாய்! ஒன்றுசொல்லாயே.

ஆ.—(விண்ணுளார்) - திருநாட்டிலே அயர்வறுமமரர்களதிபதியாயிருந்த உன்திருவடிகளிலே அடிமைசெய்கிற அயர்வறுமமரர்களையுங்கூட ஸ்வப்ரவணமாக்கி உன்திருவடிகளை இழப்பிக்கவல்ல இந்த ஶப்தாதி விஷயங்கள் தம்கிலமாவது, பின்னை நீயும் கைவிடுவதானால் என்னை என்செய்யா? இவைசெய்யும் வாயை சொல்லகில்லமல்ல. இந்த வாயையாலே கூப்பிடுகிற என்னுடைய சொற்களிலும் த்வத்விஶ்லேஷாஸஹிஷ்ணுத்வரூபமான என்னுடைய ஸ்நேஹத்திலும், உன்னைக்காணப்பெறுமையாலே அவஸந்நமான என்னுடைய சக்ஷுராதிகரணங்களிலும் அவஸ்த்திதனாய் ஸர்வஜ்ஞனுமாய் ஸர்வேஶ்வரனுமாயிருந்த நீ, என்னுடைய இந்த வ்யஸநமெல்லாந் திரும்படி என்னை உன்திருவடிகளிலே வாங்குகிறேனென்று சொல்லுதல்; நான் ஆசைபடும்படி வாங்கக்கடவதன்றென்று சொல்லுதல்; இரண்டத்தொன்று சொல்லாய்! என்று கூப்பிடுகிறார்.

*ஒ.—ஆறும்பாட்டில், எத்தனையேனும் அளவுடையாரையும் நலியவல்லவான இந்த்ரியங்கள், நீ கைவிட்டால், அதிதுர்ப்பலனான என்னை எல்லா அகார்யமும் படுத்தாவோ! என்கிறார். [விண்ணுளார் என்று தொடங்கி] - *அயர்வறுமமரர்கள் ஸம்ஸாரத்திலே எம்பெருமானுக்கு "அடிமை செய்பவேணும்" என்று வந்துபுகுரிலும் அவர்களையும் நலியவல்லவான ஐந்து இந்த்ரியங்கள் இவை. எம்பெருமானுக்கு அடிமை செய்யும் இங்குண்டான வைஷ்ணவர்களை என்றுமாம். [மண்ணுள் இத்யாதி] - தனக்கு நிலமான ஸம்ஸாரத்திலே, அதிதுர்ப்பலனான என்னை விஷயமாகப் பெறுவதுக்குமேலே ரக்ஷகனான நீயும் விட்டால் எப்பாடு படுத்தா? [பண்ணுளாய் என்று தொடங்கி]-என்னுடைய சக்ஷுராதிகளிலே ஸந்நிஹிதனாய் என்னுடைய ஆர்த்தஸ்வரத்தையும் ஆர்த்திகர்ப்பமான என்னுடைய உக்தியையும் உன்னாலல்லது செல்லாததான என்னுமையையும் அனுஸந்திப்பதும்செய்து நினைத்தது முடிக்கவல்லையுமாயிருக்கிற நீ வந்து, இந்த்ரியங்களாலுள்ள நலிவுதீர்த்து நான் உன்னைப் பெறும் விரகு சொல்லவேணும்.*

ப.—அநந்தரம், என்பக்கலிலே ஸர்வப்ரகாரத்தாலும் ஸந்நிஹிதனான நீ, முகந்தோன்றநின்று ரக்ஷியாவிட்டால், அளவுடையாரையும் நலியும்இந்த்ரியங்கள் என்னை என்செய்யாது? சொல்லாய்! என்கிறார்.

விண்ணுளார் - பரமபதவாஸிகளாய்வைத்தே, பெருமாற்கு - ஸர்வாதிகனான உனக்கு, அடிமைசெய்வாரையும் - அடிமைசெய்வாரான வைநதேயாதிகளையும், மண்ணுள் - தன்னிலமான இந்த லோகத்திலே, செறும்-மேலிட்டுநலியக்கடவதான, இவை-இந்த, ஐம்புலன் - ஐந்துஇந்த்ரியங்களானவை, என்னை - இவற்றை வெல்லுகைக்கீடான

பலமில்லாதஎன்னை, பெற்றால்-பெற்றால், மற்றும் - அதுக்குமேலே, நீயும் - (நியந்தாவான) நீயும், விட்டால் - கைவிட்டால், (அவை), என்-என், செய்யா - செய்யாதன? என் - (ஈடுபட்டுக்கூப்பிடுகிற) என்னுடைய, பண் - ஆர்த்தஸ்வரத்துக்கு, உள்ஆய்-உட்பாடனாய், கவி தன் - ஸ்வராஶ்ரயமான ஶப்தஸந்தர்ப்பத்துக்கு, உள்ஆய் - ப்ரதிபாத்யனாய், பத்தியின் - (அதுக்கடியான) ப்ராவண்யத்துக்கு, உள்ளாய் - விஷயபூதனாய், (அவ்வளவன்றியே), பரம் - (ஸர்வமும்உனக்கு விதேயமாம்படி) ஸர்வாதிகனாய், ஈசனே - நியந்தாவாய், (நியாம்யங்களில் தனித்தனியே "சக்ஷுஷி திஷ்டந், மநஸி திஷ்டந்" என்கிறபடியே),கண் - கண்ணோடு, உளாய்-, நெஞ்சு - நெஞ்சோடு, உளாய்-, சொல் - வாகிந்த்ரியத்தோடுவாசியற, உளாய் - உள்ளே ஸந்நிஹிதனாயிருக்கிறநீ, வந்து-, (என்தளர்த்தி தீரும்படி), ஒன்று - ஒருவார்த்தை, சொல்லாய் - அருளிச்செய்யவேணும். சொல்லாயேயென்று - வந்து சொல்லுகிறிலையென்றுபொருளாய், விட்டபடியை யுபபாதித்ததாகவுமாம். என்செய்யாவென்று - அநாயகவிஷயத்தில் குறும்பரைப்போலே அழித்தேவிடுமென்று கருத்து.

இ.—ஆறும்பாட்டில், அளவுடையாரையும் நலியவல்ல இந்த்ரியங்கள், நீ கைவிட்டால் துர்பலனான என்னை என்படுத்தா? என்கிறார். [விண்ணுளார் இத்யாதி] - * அயர்வறுமமரர்களதிபதிக்கு அவர்களோடேகூட அடிமைசெய்ய ருசியுடையாரையும் விஷயங்களிலேமூட்டி நலியும்இந்த்ரியங்கள் இவை. விரக்தனான விஶ்வாமித்ரனையும், கைங்கர்யருசியுடைய மஹாராஜரையுங்கூட நலிந்ததிறே. விண்ணுளாராய், "ஸர்வஸ்வாமியாயிருக்கிறவனுக்கு அடிமை செய்யவேணும்" என்று இங்கேவரினும், எனக்கு என்னப்பண்ணும் இந்த்ரியங்கள்: பெரிய திருவடி, "பிராட்டிமாரையும் தேவரையும் நான் வஹித்தேன்" என்றானிறே. [மண்ணுள்] - தம் நிலமான ஸம்ஸாரத்திலே. [என்னைப்பெற்றால்] - ஸம்ஸாரிகளுக்கும் அவ்வருகாயிருக்கிற என்னைப்பெற்றால். [என் செய்யா] - இந்த்ரியங்கள் அளவுடையாரையும் அகப்படுத்த வல்லவை: அவை, அகப்படுத்த வேண்டாதே மேல்விழுமவன் நான்: ஆனால், எல்லாம் படுத்தாவோ? [நீயும்விட்டால்] - இந்த்ரியவஶ்யதையைப் போக்கக்கடவ நீயும் உபேக்ஷித்தால் எல்லாவனர்த்தமும் படுத்தாவோ? [பண்ணுளாய்] - என்னுடைய ஆர்த்தஸ்வரம் அறியாதிருக்கிறாயல்லையே! [கவிதன்னுளாய்] - அவ்வார்த்திக்கு ஆஶ்ரயமான உக்திகேளாதிருக்கிறாயல்லையே! [பத்தியினுள்ளாய்] - இத்தைச் சொல்லுவிக்கிற ஆற்றாமையை அறியாதிருக்கிறாயல்லையே! [பரமீசனே] - இந்த்ரியங்களுக்கும் ஈசனே! என்னைப்போலே அஶக்தனாய்த்தான் இருக்கிறாயோ? [கண்ணுளாய்] - அஸந்நிஹிதனல்லை. [நெஞ்சுளாய்] - ஹ்ருதிஸ்யிதன். [சொல்லுளாய்] - கவிதன்னுளாய் என்று பாசுரஞ்சொல்விற்று; இது வாகிந்த்ரியத்தைச் சொல்லுகிறது. [வந்து - ஒன்று சொல்லாய்] - அர்ஜுநனுக்குப்போலே வந்து "மாஶுச:" என்று சொல்லவேணும்.

ஈடு - ஆறும்பாட்டு. அளவுடையாரையும் நலியக்கடவ இந்த்ரியங்கள், நீயும் கைவிட்டால், துர்ப்பலனான என்னை என்படுத்தா? என்கிறார்.

ரார் இத்யாதி. "மற் ம்விட்டால்" என்னுமளவும் கடாக்ஷித் தவதாரிகை - அளவுடையாரையும் இத்யாதி.

[விண்ணுளார்பெருமாற்குஇத்யாதி] - அயர்வறுமமரர்களதிபதிக்கடிமை செய்வாரையும் சேறும். [பெருமாற்கடிமைசெய்வாரையுஞ்சேறும்]- ஒக்கப்பிறந்துஇளையபெருமாளைப் போலே யடிமைசெய்து திரிவாருண்டிறே. விண்ணுளாராய்ப் பெருமாற்கடிமைசெய்வாரையும் சேறும். திருவடியையுமகப்பட "எனக்கு" என்னப்பண்ணிற்றிறே. ஸுமுகனென்கிற ஸர்ப்ப விசேஷம் திருவடிகளிலேசென்றுகிட்ட, பெரியதிருவடி ஓடிச்சென்று,"எனக்கு ஆமிஷமாயிருக்கிற இத்தைக் கைக்கொண்டு நோக்குவதே!" என்று வெறுத்து, "தேவரீரையும் நாய்ச்சிமாரையும் நெடுங்காலம் வஹித்துக்கொண்டு திரிந்தேன்: நான் என்பெற்றேன்?" என்றானிறே. இதிறே ஸம்ஸாரஸ்வபாவ மிருக்கும்படி. அவன்தான் அவதரித்து சோகிப்பது மோஹிப்பதானாற்போலேயாயிற்று இவர்களும். அன்றிக்கே *அயர்வறுமமரர்களதிபதியாயிருக்கிற ஸர்வேஶ்வரனுக்கு, ஸம்ஸாரத்திலே முமுக்ஷுக்களாய்க்கைங்கர்யத்திலே யவகாஹித்திருக்கக்கடவரானவர்களையும் நெருக்கக்கடவ இந்த்ரியங்களிவை. ஒரு விஶ்வாமித்ர ஸுக்ரீவாதிகளைக் கண்டோமிறே. ஜ்ஞாநாதிகனானவிஶ்வாமித்ரன்அகப்பட ஒருவிஷயத்தின் காற்கடையிலே நெடுங்காலங்கிடந்தானிறே; பெருமாளுக்குப்பரிவரான மஹாராஜர்,பெருமாளை மின்னுக்கும்இடிக்கும்இரையாகவிட்டுவைத்து நாலுமாஸம் இந்த்ரியபரவசராய் அவ்வழியென்று நினைத்திலரிறே. [மண்ணுள்இத்யாதி] - இவர்தாம் விண்ணுளாரில் ஒருவராகாதே தான்? இவற்றுக்குத்தந்நிலமாவது; நான் இவையிருந்தஇடந்தேடிச்சென்று கழுத்திலே கயிறிட்டுக்கோடு நிற்கவல்லேனொருவனாவது; இங்ஙனேயிருக்கிற என்னைப் பெற்றால் இவை என்பண்ணா? [மற்றுநீயும்விட்டால்] - எல்லாரும்விட்டு, விழுந்துயரிக்கும் பூமியான நீயும் விட்டால். ரக்ஷகனான நீ விட்டிலையாகில், மஹாராஜர் வாலியை வென்றாற்போலே நானும் இந்த்ரியங்களை வெல்லேனோ? "தஸ்யாஹம் நிக்ரஹம்

"அடிமைசெய்வார்" என்று - முமுக்ஷுக்களாக அர்த்தம் - அயர்வறும் இத்யாதி. நித்யஸூரிகளாக அர்த்தாந்தரம் - பெருமாற்குஇத்யாதி. இவ்விடத்திலே நித்யஸூரிகள்அடிமைசெய்வர்களோ? என்ன - ஒக்க இத்யாதி. த்விதீயார்த்தத்துக்கு ஶப்தநிர்வாஹம் - விண்ணுளாராய் இத்யாதி: அவதாரதசையில்இந்த்ரியங்கள் பாதித்தஇடமுண்டோ? என்ன-திருவடியையும் இத்யாதி. விவரணம்- ஸுமுகன் இத்யாதி. "அஸ்ப்ருஷ்டஸம்ஸாரகந்தரை இந்த்ரியங்கள் பாதிக்கும்" என்னலாமோ? என்ன - இதிறே இத்யாதி. அகர்மவஶ்யர்க்கும் இது கூடுமோ? என்ன - அவன்தான் இத்யாதி. அதாவது பாவனையென்றபடி. முந்தினஅர்த்தவிவரணம் - அன்றிக்கே அயர்வறும் இத்யாதி. முமுக்ஷுக்கள் இந்த்ரியவஶ்யரான இடமுண்டோ? என்ன - ஒருவிஶ்வாமித்ர இத்யாதி. இத்தை விவரிக்கிறார் - ஜ்ஞாநாதிகன் இத்யாதிவாக்யத்வயத்தாலே. 'ஜ்ஞாநாதிகனான' என்றவிடத்திலே - "பஹூநி வர்ஷபூகாநி விஶ்வாமித்ரோ மஹாதபா:" இத்யாத்யநுஸந்தேயம். 'நெடுங்காலம்' என்றவிடத்திலே - "ஸுக்ரீவேணாபி தத்ர வஸதா ஸுகம்" என்றது, அநுஸந்தேயம். "மண்ணுள்" என்றதுக்கு பாவம் - இவர்தாம் இத்யாதி. "மண்ணுள்" என்கையாலே - முன்பு விண்ணுளாரென்று தோற்றுகிறது. "மண்ணுளென்னை" என்று விசேஷித்ததுக்கு பாவமாதல், ஶப்தார்த்தமாதல் - இவற்றுக்கு இத்யாதிவாக்யத்வயம். "மற்றும்" - அதுக்குமேலே யென்றபடி. எல்லாரும் விட்டென்றது - "ஸவித்ராவ" இத்யாதிப்படியே: எல்லாரும் விட்டாலு மென்றபடி. விழுந்து யரிக்கும் பூமியானவென்றது-விட்டசடியாக மேல்விழுந்து யரிக்கும் பூமியானஎன்றபடி. நான் விடாவிடில் நீர் செய்கிறதென்? என்ன - ரக்ஷகனான இத்யாதி. அவன் கைவிட்டால் இந்த்ரியங்களை வெல்ல அரிதோ? என்ன - தஸ்யாஹம் இத்யாதி. கீதாஸுஷ்ஷ்டே 'உத்துங்க

மந்யேவாயோரிவஸுதுஷ்கரம்'' (தஸ்யாஹம்நிக்ரஹம்மந்யேவாயோரிவஸுதுஷ்கரம்) என்றானிறே. காற்றை ஓரிடத்திலேசட்டிவைக்கிலிறே மநஸ்ஸை நியமிக்கலாவது? '' 'இந்த்ரியஜயம்அரிது' என்று சொல்லுகிறாயாகில் நம்பக்கலிலே மநஸ்ஸை வை'' என்றருளிச்செய்த நீயும் விட்டால். ''நான்விட்டிலேனீ! உம்மை விடுகையாவதேன்?'' என்றான்; ஆகில், நீ அஸந்நிஹிதனோ அஶக்தனோ நான்இழக்கிறது? [பண்ணுளாய்] - என்னார்த்தஸ்வரம்கேளாதிருக்கிறாயல்லையே. [கவிதன்னுளாய்] - என்னுடையஆர்த்திகர்ப்பமானஉக்தி கேளாதிருக்கிறாயல்லையே. [பத்தியினுள்ளாய்] - இப்படி சொல்லுவிக்கிற ஆற்றாமை யறியாதிருக்கிறாயல்லையே. [பரமீசனே] - உனக்கு முடியாததோன்று உண்டாயிருக்கிறாயல்லையே. உன்ஶேஷித்வம் ஏறிப்பாயாதஇடமுண்டோ? (இந்த்ரியங்களுக்குமீசனே) - இது கிடக்கிடு; நீதான் முன்பே செய்யாததோன்று உண்டோ? என்கிறார். ''ஆனால்இனிச்செய்யவேண்டுவதில்லையே'' என்றான்; நானும் நீசெய்த அம்ஶத்தில் குறையுண்டென்கிறேனல்லேன்; நீ செய்யாத அம்ஶத்தையிறே சொல்லுகிறதென்கிறார்: [என்கண்ணுளாய் நெஞ்சுளாய் சொல்லுளாய்] - பாஹ்யகரணங்களுக்கும் ஆந்தரகரணத்துக்கும் உன்னையொழிய விஷயமுண்டோ? * நெடியானேயென்றுகிடப்பது, * உன்னைமெய்கொள்ளக்காணவிரும்புவது, * வஞ்சனே என்பதாயிறே அவையிருப்பது. கவிதன்னுளாயென்று பாசுரஞ்சொல்லிற்று; சொல்லுளாயென்று - வாக்இந்த்ரியத்தைச்சொல்லுகிறது. ஆனால், நம்மைச் செய்யச்

ப்ர.— கீதாஸுஷஷ்டே, ''சஞ்சலம் ஹி மந: க்ருஷ்ண ப்ரமாதி பலவத்த்ருடம் । தஸ்யாஹம் நிக்ரஹம் மந்யே வாயோரிவ ஸுதுஷ்கரம் ॥௩௪॥''

*ஹிமந:க்ருஷ்ணப்ரமாதிபலவத்த்ருடம்'' இதி பூர்வார்த்தம். இதுக்கர்த்தம் - காற்றை இத்யாதி. ''நீயும்'' என்றதுக்கு - 'எல்லாரும்விட்டு' இத்யாதி வாக்யத்திலே ஒருதாத்பர்யம் அருளிச்செய்து, பாவாந்தரம் - இந்த்ரியஜயம் இத்யாதி. ''உசிதஸஸதஸஹவ'' என்றத்தைப்பற்ற-நம்பக்கலிலே மநஸ்ஸை வை என்றது. மேலுக்கவதாரிகை - நான்விட்டிலேனீ இத்யாதி. ''பண்ணுளாய்'' இத்யாதி பதத்ரயத்தையுங் கடாக்ஷித்து - அஸந்நிஹிதனோ என்றது. ''பரமீசனே'' என்றத்தைப்பற்ற - அஶக்தனோ என்றது. ஸந்நிஹிதத்வ ஶக்திமத்த்வங்களைப் பதங்களிலே ஏறிட்டுக்காட்டுகிறார் - பண்ணுளாய் இத்யாதி. ''பண்ணுளாய்'' இத்யாதி பதத்ரயத்துக்கும் பேதம்அருளிச்செய்கிறார் - என்னார்த்தஸ்வரம் இத்யாதி வாக்யத்ரயத்தாலே. 'கேளாதிருக்கிறாயல்லையே, அறியாதிருக்கிறா யல்லையே' என்கையாலே - ஸந்நிஹிதத்வத்தை இப்பதத்திலே தர்ஶிப்பித்தாராயிற்று. ''பரமீசன்'' என்றபதத்தாலே - ஶக்திமத்தையையும் தர்ஶிப்பிக்கிறார் - உனக்குமுடியாதது இத்யாதி. ''பரம்'' என்றதுக்குபாவம் - உன்ஶேஷித்வம் இத்யாதி. ''கண்ணுளாய்'' இத்யாதிக்கவதாரிகை - இது கிடக்கிடு இத்யாதி. முன்பேயென்றது - * முடியானேயிலென்றபடி. ''கண்ணுளாய்'' இத்யாதியைக்கடாக்ஷித்துபாவம் - நானும் இத்யாதி. அன்றிக்கே, 'இதுகிடக்கிடு, நீதான்முன்பே' இத்யாதிவாக்யம் - ''கண்ணுளாய்நெஞ்சுளாய்சொல்லுளாய்'' என்றத்தைக் கடாக்ஷித்துபாவமாய், 'நானும் நீசெய்த' இத்யாதிவாக்யம் - ''ஒன்றுசொல்லாய்'' என்றதுக்கு பாவமாதல். ''கண்ணுளாய்'' இத்யாதி-'செய்த அம்ஶம்'. ''வந்து - ஒன்றுசொல்லாய்'' என்றது-'செய்யாதஅம்ஶம்'. ''கண்'' என்றது - செவிமுதலானவற்றுக்கும் உபலக்ஷணம் என்றுவிவக்ஷித்து - பாஹ்யகரணங்களுக்கும் என்கிறார். ஸர்வகரணங்களுக்கும் விஷயம்அவனேயிருக்குமோ? என்ன - நெடியானே இத்யாதி. ''ஆனால்இனி'' என்கிறவாக்யம் - ''ஒன்றுசொல்லாய்'' என்கிறபதத்துக்கவதாரிகையென்று தோற்றுகைக்காக, பதம் வந்தவிடத்திலே அருளிச்செய்கிறார் - ஆனால்நம்மை இத்யாதி. கீழே ''பண்ணுளாய்'' இத்யாதித்ரயத்

சொல்லுகிறதேன்? என்ன, [வந்து - ஒன்றுசொல்லாயே] - எனக்காக நாலடி நடந்துவந்து, நீ யஞ்சாதே கோள் என்று - என்னை, "மாஶுச:" (மாஶுச:) என்னவேணும். "உன் ஸத்஭ாவத்தில் எனக்குஅதிஶங்கை உண்டோ? என்கண் காணவந்து ஒன்றுசொல்லுகையன்றோ எனக்குத்தேட்டம்"? என்கிறார். (௬)

ஏழாம் பாட்டு.

ஒன்றுசொல்லியொருத்தினில்நிற்கிலாதவோரைவர்வன்கயவரை
என்றுயான்வெல்கிற்பன் உன்திருவருளில்லையேல்
அன்றுதேவரசுரர்வாங்க அலைகடலரவமளாவி ஓர்
குன்றம்வைத்தஎந்தாய்! கொடியேன்பருகுஇன்னமுதே!

ஆ.— (ஒன்றுசொல்லி.) - இப்படி இந்த விஷயங்கள் உமக்கு பாதகமாகில், இவற்றில் ப்ரவணமாகாதபடி உம்முடைய இந்த்ரியங்களை ஜயிக்கமாட்டீரோ? என்னில்; அம்ருதமதநே ப்ரக்ராந்தரான தேவர்களுங்கூட உன்னையொழிய தந்நிவர்த்தந க்ஷமராயிற்றிலர்; அவ்யவஸ்த்தித ஸ்வபாவமுமாய் அதிபலமுமாய் பராஹிம்ஸைகருசிகளுமாயிருக்கிற இந்த்ரியங்களை, உன்னுடைய க்ருபையையொழிய நான் எங்ஙனே ஜயிக்கும்படி? ஆதலால், உன்னுடைய க்ருபையாலே நீ என்னுடைய ப்ரதிபந்தகமான பாபத்தைப்போக்கி, நிரவதிகபோக்யபூதனான உன்னை எனக்குபுஜிக்கத் தந்தருளினாற்போலே, இன்னமும் உன்க்ருபையாலே நீயே இந்தக்கரணஸம்பந்தத்தைப்போக்கி உன்திருவடிகளிலே வாங்கியருளவேணும் என்கிறார்.

ஒ.— ஏழாம்பாட்டில், நீ உபேக்ஷித்தால், அதிவலமான இந்த்ரியங்களை என்னால் வெல்ல உபாயம் உண்டோ? என்கிறார்.

[ஒன்று என்று தொடங்கி] - ஒன்றைச்சொல்லி ஒருவழிநில்லாத அதிவலமாய்த்தனித்தனியே ப்ரயாஸமான ஐந்து இந்த்ரியங்களையும் நீ உன்க்ருபையாலேவென்று தாராயாகில் வெல்ல உபாயமில்லை. [அன்று தேவரசுரர்வாங்க] - தேவர்களும் அசுரர்களும் வலிக்க. அவர்கள் மாட்டாதே கைவாங்க என்றுபாம். [அலைஎன்று தொடங்கி]- அலைகையாலே கடைய அரிதான கடலிலே வாஸுகியைச்சுற்றி மந்தரபர்வதத்தை வைத்த என் நாயனுமாய், தேவர்களைப்போலே நீ தந்தத்தைக்கொள்ளாதே உன்னையே ஆசைப்படுகிற எனக்கு நிரதிஶய போக்யனுமானவனே.

ப.—அநந்தரம், ஆஶ்ரிதர்க்கு அருந்தொழில்செய்தும் அபேக்ஷிதந் தலைக்கட்டும்படியான உன்னுடைய க்ருபையில்லையாகில், ப்ரபலமான இந்த்ரியங்களை என்று வெல்லக் கடவேன்? என்கிறார்.

அன்று - (நித்யத்வஸ்ரத்தையாலே உன்னை ஶரணம்புகுந்த) அன்று, தேவர் - தேவர்களும், அசுரர் - (அவர்களோடே அம்ருதார்த்தமாக ஸங்கதரான) அசுரர்களும்,

---

துக்கும் - ஸந்நிஹிதத்வத்தைப் பற்ற விவக்ஷித்தருளிச்செய்து, நீயும் உளையாயிருக்க நானிழப்பதே என்று ஸத்பாவ விவக்ஷயா ஹாவாந்தரம் - உன்ஸத்பாவத்தில் இத்யாதி. 'விண்ணுளார்' இத்யாரப்ய, 'என்னைப்பெற்றால் - மற்று நீயும்விட்டால் - என்செய்யா? 'பண்ணுளாய்' என்றுதொடங்கி, 'வந்து - ஒன்றுசொல்லாயே' இத்யந்வய:. (௬)

வாங்க - வலிக்கும்படியாக, அலை - அலையெறிகிற, கடல் - கடலிலே, அரவம் - வாசுகியென்கிற பாம்பை, அளாவி - சுற்றி, ஓர்-அத்விதீயமான, குன்றம் - மந்தரபர்வதத்தை, வைத்த - அலையாமல் நாட்டின உபகாரகத்வத்தைக் காட்டி, எந்தாய் - எனக்கு ஸ்வாமியானவனாய், கொடியேன் - அவர்களைப்போலே அந்தஅம்ருதத்தில்பர்யவஸியாதே, ("உன்னையே புஜிக்கவேணும்" என்னும்) கொடுமையையுடைய நான், பருகு - பருகுகைக்கு, இன்னமுதே - நித்யபோக்யமா யிருக்கிறவனே! உன்-உன்னுடைய, திருவருள்-நிரவத்யகருபையை, இல்லையேல் - இல்லையாகில், ஒன்று - ஒரு விஷயத்தைத் தேடித்தாவென்று, சொல்லி-, (அதுபெற்றுஅநுபவிக்குந் தனையும்), ஒருத்தினில் - ஒருபடிப்பட, நிற்கிலாத - நில்லாதே, ஓர் - ஒன்றுக்கொன்று சேராச்சேர்த்தியாய்த் தனித்தனியே ஸ்வதந்த்ரமான, ஐவர் - ஐந்திந்த்ரியங்களாகிற, வன் - ப்ரபலராய், கயவரை - பழகியும் முகமறியாத கயவரை, யான் - ஸ்வயம்அஶக்தனான நான், (முன்புமாட்டாதவோபாதி), (மேலும்), என்று - என்று, வெல்கிற்பன் - வெல்லவல்லேனாவேன்?

இ.—ஏழாம்பாட்டில், நீ உபேக்ஷித்தால் அதிவேலமான இந்த்ரியங்களை என்னால்வெல்ல உபாயமுண்டோ? என்கிறார்.

[ஒன்றுசொல்லியொருத்தினில் நிற்கிலாத] - ஒருவிஷயத்திலே சாபலத்தைப் பண்ணி அது கைப்புகுருந்தனையும் அதிலே நிலைநில்லாத. ஒருத்து-ஒருமைப்பாடு. [ஓர்ஐவர்] - ஒருவர்நினைத்தத்தை ஒருவர்நினையாதே தனித்தனியே ப்ரதானராயிருக்கை. [வன்கயவரை] - வன்மையாலேகாரியம் கொள்ளக்கடவராய், கயவராய்-வலராய், முகம் பழகப்பழக வாயகராகை. [என்றுயான் வெல்கிற்பன்] - என்று நான் இவற்றை வென்று தலைக்கட்டக்கடவேன். [உன்திருவருள் இல்லையேல்] - உன்னருள் பெற்றேனாகில், நானும் இவற்றைவென்று தலைக்கட்டேனோ? உன்னருள் பெறுகையாலே அர்ஜுநன் ஜயத்ரதனை ப்ரதிஜ்ஞைபண்ணிவென்றிலனோ? மஹாராஜர் உன்னை அண்டைகொண்டு வாலியை நிரஸித்திலரோ? [அன்றுதேவர்இத்யாதி] - ப்ரயோஜநாந்தரபரரும் உன்னருளாலே ஸ்வாபிமதம் பெற்றிலர்களோ? [அன்று]-க்ஷீராப்திமதநம் பண்ணின அன்று. [தேவர் அசுரர்வாங்க] - தேவர்களும் அஸுரர்களும் ஸங்கதராய்க் கடல்கடையப்புக்கு இளைத்துக் கைவாங்க என்னுதல்; வாங்கல் என்று - வலித்தலாய், அவர்கள்கடைந்தாராய்த் தலைக்கட்டும்படி என்னுதல். [அலைகடல்] - க்ஷுபிதமான கடலிலே. [அரவமளாவி] - வாஸுகியைச்சுற்றி. [ஓர்குன்றம்வைத்த] அத்விதீயமானமலையை வைத்தநொய்ப்பம் அம்ருதம் கிளருந்தனையும் தானே திரியும்படியாகவாயிற்று. [எந்தாய்] - அச்செயலைக்காட்டி என்னை எழுதிக்கொண்டவனே! [கொடியேன் பருகுஇன்னமுதே] - தேவர்களைப்போலே நித்யத்வத்தைக்கொள்ளாதே உன்னையே ஆசைப்படுகிற எனக்கு நிரதிஶயபோக்யனானவனே! தேவர்களைப்போலே உப்புச்சாற்றிலே த்ருப்தனைப்பெற்றிலேன். தோளும் தோள்மாலையுமாய்க் கடலைக்கடைகிற போதை அழகாயிற்று, இவர்க்கு அம்ருதம். இவருடைய அம்ருதம் விஜாதீயமாயிருக்கிறபடி.

ஈடு.— ஏழாம்பாட்டு. நீஉபேக்ஷித்தால், அதிவேலமான இந்த்ரியங்களை என்னாலே வெல்ல உபாயமுண்டோ? என்கிறார்.

ஏழாம்பாட்டு.—ஒன்றுசொல்லி இத்யாதி. "உன்திருவருளில்லையேல் - வன்கயவரான - ஓர்ஐவரை - என்றுயான் வெல்கிற்பன்" என்ற பதங்களைப்பற்ற அவதாரிகை - நீஉபேக்ஷித்தால் இத்யாதி.

[ஒன்றுசொல்லி] - "ராமோ த்விர் நாபிபாஷதே" (ராமோத்விர்நாபிபாஷதே) என்பாரைப்பற்றிப் பயங்கெட்டிருக்கிறேனே? அங்ஙனேயாகில், "ஏதத் வ்ரதம் மம" (ஏதத் வ்ரதம் மம) என்றதுவும் தப்பாதிறே. [ஒன்றுசொல்லியொருத்தினில்நிற்கிலாத] - ஒரு வார்த்தையைச் சொல்லி அதுக்கீடான ஓரர்த்தத்திலே நிற்கக்கடவதல்லாத. ஒரு விஷயத்தைச் சொல்லி, அது அநுபவிக்குந்தனையும் ஓரிடத்திலேநில்லாத. ஒருத்து - ஒருமைப்பாடு. [ஓரைவர்] - இப்படியிருப்பார் அநேகர். [வன்கயவரை] - பழகப்பழக நிர்வ்ருணரானவர்களை. [என்றுயான்வெல்கிற்பன்] - "இன்றல்லவாகில் நாளைவெல்லுகிறுன், தானே வென்று வருகிறுன்" என்றிருக்கிருயோ? [உன்திருவருளில்லையேல்] - அவன் ப்ரஸாதமுண்டாகில் ஜயிக்கவுமாமாகாதே. "அருளென்னும் ஒள்வாளுருவி எறிந்தேனைம் புலன்கள்" என்னக்கடவதிறே. உன்னை யண்டைகொள்ளாதே பாண்டவர்கள் துர்யோதநனை வெல்லுமன்றன்றே, நான் இந்த்ரியங்களை வெல்லுவது. க்ருஷ்ணனையாஶ்ரயித்து அர்ஜுநன் ஶத்ருக்களை ஜயித்தானிறே: "க்ருஷ்ணாஶ்ரயா: க்ருஷ்ணபலா: க்ருஷ்ணநாதாஶ்ச பாண்டவா:." (க்ருஷ்ணாஶ்ரயா:க்ருஷ்ணபலா:க்ருஷ்ணநாதாஶ்சபாண்டவா:.) [அன்றுதேவரசுரர்வாங்க] - நம்மருள்பெற்று வென்றாருண்டோ? என்ன; துர்வாஸஶ்ஶாபத்தினன்று உன்ப்ரஸாதம்பெற்றன்றே தேவர்கள் கடலைக்கடைந்தது? தேவர்களும் அசுரர்களும் கைவாங்கக் கடைந்தானென்னுதல். அன்றிக்கே, வாங்குதல் - வலித்தலாய், அவர்கள் தங்களுக்கே கடையலாம்படி பண்ணிக்கொடுத்தானென்னுதல். [அலைகடல் இத்யாதி] - பெரிய அலையையுடைத்தானகடலிலே, ஒரு † சித்வஸ்துவான வாசுகியைக் கயிறாகக்கொண்டு, சலிப்பிக்கவொண்ணுததொரு பர்வதத்தை மத்தாகக்கொண்டு, அத்தை வாசுகியையிட்டுச்சுற்றிவைத்த நொய்ப்பம் எல்லார்க்கும் கடையலாம்படியிருக்கை: நமக்கும் கடையப்போம்படியா யிருக்கை. [எந்தாய்] - தாமும் ஒரு ப்ரயோஜநம்பெறப் பார்க்

"ஒன்றுசொல்லி யொருத்தினில் நிற்கிலாத" என்றதுக்கு ஹார்த்தஸாவம் - ராமோத்விர் இத்யாதி. "தத் ப்ரூஹி வசநம் தேவி ராஜ்ஞோ யதபிகாங்க்ஷிதம் । கரிஷ்யே ப்ரதிஜாநே ச ராமோ த்விர் நாபிபாஷதே" இதி அயோத்யாகாண்டே. [கஅ-௩௦] அவர்களைப் பற்றினுல் பயம் கெட்டிருக்கலாம் ப்ரகாரமேதென்ன - அங்ஙனேயாகில் இத்யாதி. அங்ஙனேயாகில் என்றது - இரண்டாம்வார்த்தை இல்லையென்றாகில் என்றபடி. ஶப்தார்த்தம் - ஒருவார்த்தையை இத்யாதி. விவரணம் - ஒருவிஷயத்தை இத்யாதி. "ஓர்" என்று - அத்விதீயத்வம். ஆவது - ஒருவர்நினைத்தத்தை யொருவர் நினையாதே தனித்தனியே ப்ரதாநரா யிருக்கை * வன்மைக்கர்த்தம் - பழகப்பழக இத்யாதி. கயவர் - நிர்வ்ருணர்: வலரென்றுமாம். "என்றுயான்வெல்கிற்பன்" என்றதுக்கு ஸாவம் - இன்றல்லவாகில் இத்யாதி. ஒருநாளும் வெல்லமுடியாதென்று கருத்து. வ்யதிரேக ஸித்தார்த்தத்தை அருளிச்செய்கிறார் - அவன் ப்ரஸாதம் இத்யாதி. அவன் ப்ரஸாதமுண்டானுல் ஜயிக்கலாமோ? என்ன - அருளென்னும் இத்யாதி. அருளாகிற அழகிய புகரையுடைய வாளை உருவிவீசினேன் ஐம்புலன்களை யென்றபடி. திருமொழி, ஆறும்பத்து இரண்டாந் திருமொழி, நாலாம்பாட்டு: "பிறிந்தேன்" இத்யாதி. "உன் திருவருளில்லையேல் - என்று யான்வெல்கிற்பன்" என்றதுக்கு த்ருஷ்டாந்தம் - உன்னை யண்டை இத்யாதி. அவனை யண்டைகொண்டே ஜயித்தார்களோ? என்ன- க்ருஷ்ணனை இத்யாதி. உக்தார்த்தத்துக்கு ப்ரமாணம் - க்ருஷ்ணாஶ்ரயா இத்யாதி. "அன்றுதேவர்" இத்யாதிக்கு அவதாரிகை - நம்மருள் இத்யாதி. "அன்று" - 'துர்வாஸஶ்ஶாபத்தின் அன்று. நொய்ப்பம் - நேர்ப்பு. 'எல்லார்க்கும்' என்றதுக்குஸாவம் - நமக்கும் பாரக்காகக் கடைந்ததுக்குத் தோற்று, "எந்தாய்" என்பானென்? என்ன - தாமுமொரு இத்யாதி. அதாவது -

† விர்மாத்ரமான என்று பாடாந்தரம்.

கிறு ராகையாலே அது தம்பேறுயிருக்கிறபடி. [கொடியேன்பருகு இன்னமுதே] - கடைந் தத்தையே ஆசைப்படப் பெற்றிலேன். நீ செய்தது கொண்டு த்ருப்தனாகவேண்டியிருக்க, ''அட்டதொழியச்சுட்டதுகொடுவோ'' என்று உன்னை நிர்ப்பந்திக்கும்படியான பாபத்தைப் பண்ணினேன். (எ)

எட்டாம் பாட்டு.

இன்னமுதெனத்தோன்றி ஓரைவர்யாவரையும்மயக்கநீவைத்த
† முன்னமாயமெல்லாம் முழுவேரரிந்து என்னையுன்
சின்னமுந்திருமூர்த்தியுஞ் சிந்தித்தேத்திக்கைதொழவேயருளெனக்கு
என்னம்மா! என்கண்ணா! இமையோர்தம்குலமுதலே!

ஆ.—(இன்னமுதென) - அநுபவவேளையாம் அம்ருதோபமமாய், விபாகே நிரயஹேதுத்வேந விஷோபமமாய், த்வத்ஸ்வரூப ரூபகுண விபவைஶ்வரிய யாதாத்ம்ய விஷயமோமுக்ஷீகரான தேவாதிகளையுங்கூட மோஹிப்பிக்கும்படி ஶப்தாதிவிஷயரூபேண உன்னாலே நிர்மிதமான ப்ரக்ருதி ஸம்பந்தத்தை ஸஹேதுகமாகப்போக்கி, அயர்வறு மமரர்கள் பரிஷத்திலே என்னைவாங்கி, ப்ராக்ருதவிஷய விஸ்மரணபூர்வகமாக, உன்னுடைய சங்கசக்ரகதா சார்ங்காதி அஸங்க்யேய திவ்யசிஹ்நங்களையும், அவற்றாலே யலங்க்ருதமான திருமேனியையுமே சிந்தித்தேத்திக் கைதொழவேயருள் எனக்குஎம்பிரானே! ஆஶ்ரிதவத்ஸலனே! என்றுஎம்பெருமானை ப்ரார்த்திக்கிறார்.

ஒ.—எட்டாம்பாட்டில், என்னுடைய ப்ரக்ருதி ஸம்பந்தத்தை அறுத்து, நான் மநோவாக்காயங்களினால் உன்னை நிரந்தரமாக அனுபவிக்கும்படிபண்ணி அருள வேணுமென்கிறார் [இன்னமுது என்றுதொடங்கி.]- நிரதிஶயபோக்யம்போலே தோற்றி ப்ரபலமான ஶப்தாதி விஷயங்களானவை எத்தனையேனும்அளவுடையாரையும் மதி கெடுக்கைக்கடியாக நீ பண்ணிவைத்த பழையதான இஸ்ஸம்ஸாரஸம்பந்தத்தை என்னை நிஶ்ஶேஷமாகவிடுவித்து. [உஞ்சின்னமும் என்றுதொடங்கி]-எனக்குப்பரிவனானக்ருஷ்ணனே! அயர்வறுமமரர்களை அடிமைகொண்டு உஜ்ஜீவிப்பிக்குமாபோலே நான் உன்திரு

ஆஶ்ரிதரிலேயொருவர் அர்த்திக்தகார்யம் செய்தால் அல்லாதார் அர்த்திக்தகாரியமும் செய்ய வேண்டுகையாலே, தாம் அர்த்திக்தகாரியமும் செய்யும் என்று அறுதியிட்டு-'அவர்களுக்குச்செய்தது தம்பேறுயிருக்கும்' என்றபடி. ''இன்னமுதே'' என்றத்தைக் கடாக்ஷித்து, ''கொடியேன்'' என்றதுக்கர்த்தம் - கடைந்தத்தை இத்யாதி. அர்த்தாந்தரம் - நீசெய்தது இத்யாதி. அதாவது-மாநஸாநுபவத்தில் த்ருப்தனாகாதே ''காணவேணும்'' என்னும்படியான பாபத்தைப்பண்ணினேன் என்றபடி. அட்டதொழியச் சுட்டது கொடுவோ என்றது - தன் பிள்ளையையறுத்து உடலைச்சமைத்துத் தலையையடுப்புக்கிடையிலே பொகட்டு உடல்மாம்சத்தை விருந்திட்ட சிறுத்தொண்டனைப்பார்த்து, அவன் மநஶ்ஶோதநார்த்தமாக, ''அட்டமாம்சமிருக்கச் சுட்டமுதத்தைக்கொடுவோ'' என்று ருத்ரன் சொன்னது. அன்று 'தேவர்' என்றுதொடங்கி, 'இன்னமுதே - ஒன்றுசொல்லி' என்றுதொடங்கி, 'வன்கையவரை - உன் திருவருளில்லையேல் - என்று யான் வெல்கிறபன்' இத்யந்வயஃ. (எ)

---

† 'முன்னை' என்பதும் பாடம்.

வடிவையும் திருவாழிமுதலான திவ்யசிஹ்நங்களையும் நிரந்தரமாகச் சிந்தித்துவத்திக் கைதொழும்படி பண்ணியருளவேணும்.

ப.—அநந்தரம், எனக்கு விஷயேந்த்ரியங்களை வென்று உன்னுடைய அஸாதாரணசிஹ்நங்களை அநுபவிக்கும்படி க்ருபைபண்ணியருளவேணும் என்கிறார்.

என் - எனக்கு, அம்மா - நிருபாதிகஸ்வாமியாய், (அந்தஸம்பந்தமடியாக), என் கண்ணா - உன் ஸௌலப்யத்தை எனக்கு ப்ரகாசிப்பித்தவனாய், இமையோர்தங் குலம் - நித்யஸூரிகள் திரளுக்கு, முதலே - ஸத்தாதிஹேதுபூதனானவனே! ஓர் - அத்விதீயமான, ஐவர் - ஐந்திந்த்ரியங்களாலே, இன் - இனிய, அமுது - அம்ருதம், என - என்னும்படி போக்யமாய், தோன்றி - ப்ரகாசித்து, யாவரையும் - எத்தனையேனும் அளவுடையரான ப்ரஹ்மாதிகளையும், மயக்க - மோஹிப்பிக்கைக்காக, நீ - (ஸர்வஶக்தியான) நீ, வைத்த-(உண்டாக்கி)வைத்த, முன்னம்-அநாதிஸித்தமாய், மாயம் - அஜ்ஞாநவர்த்தகமாகையாலே மாயாஶப்தவாச்யமான விஷயங்கள், எல்லாம் - எல்லாவற்றையும், முழு - முழுக்க, வேர் - வேர், அரிந்து - அறுத்து, என்னை-ஸம்ஸாரபீதனான என்னை, உன் - உன்னுடைய, சின்னமும் - அஸாதாரணசிஹ்நமான சங்கசக்ராதிகளையும், திரு - அவற்றால் அலங்க்ருதயான, மூர்த்தியும் - விக்ரஹத்தையும், சிந்தித்து - நெஞ்சாலே நினைத்து, ஏத்தி - வாக்காலே ஸ்துதித்து, கை - கையாலே, தொழ-தொழும்படியாக, எனக்கே - எனக்கென்ன விசேஷித்து, அருள் - க்ருபைபண்ணியருளவேணும். ‘‘ஐவரையும், மாயமெல்லாவற்றையும்’’ என்று - எண்ணுகவுமாம்; மாயமென்று - ஶப்தாதிஸஹிதையான ப்ரக்ருதியாகவுமாம்.

இ—எட்டாம்பாட்டில், என் ப்ரக்ருதிஸம்பந்தத்தை அறுத்து, நான் மநோவாக்காயங்களாலே உன்னை நிரந்தரமாக அநுபவிக்கும்படிபண்ணி அருளவேணும் என்கிறார்.

[இன்னமுதெனத் தோன்றி] - முகப்பிலே நிரதிஶய போக்யம்போலே தோன்றி. ‘‘ஊஜெ z8ஜ தஜிவ’’ என்னும்படியே, விபாகத்தில் இருக்குமிருப்பு உபக்ரமத்திலே தோன்றிற்றாகில் மேல்விழாதொழியலாயிற்று. வாயிலிட்டால் ரஸித்து, அநந்தரம் முடிப்பன சிலவிஷங்களுண்டு; அதுபோலே ஆயிற்று. [ஓரைவர்]-தனித்தனியே ப்ரபலமாய் அத்விதீயமான ஶப்தாதிகள் ஐந்தும். [யாவரையும் மயக்க] - எத்தனையேனும் அதிஶயிதஜ்ஞாநரையும் கலங்கப்பண்ணும்படியாக. [நீவைத்த] - ஸர்வஶக்தியான நீவைத்த. [முன்னமாயமெல்லாம்] - அநாதியான ப்ரக்ருதி ஸம்பந்தத்தைக் கார்யத்தோடேகூட. [முழுவேர் அரிந்து] - ஸவாஸநமாகப்போக்கி. [என்னை] - ஸம்ஸாரஹயபீதனான என்னை. [உன்சின்னமும்]-ஶங்கசக்ராதி திவ்யாயுதங்களையும். [திருமூர்த்தியும்] - அவற்றுக்கு ஆஶ்ரயமான திவ்யமங்கள விக்ரஹத்தையும். [சிந்தித்து] - நெஞ்சாலே அநுஸந்தித்து, அந்த ப்ரீதி உள்ளடங்காதே வாயாலே பேசித்தொழுமிதுவே யாத்ரையாம்படி பண்ணியருளவேணும். [என்னம்மா] - எனக்குத் தாய் போலே பரிவனானவனே! [என்கண்ணா] - எனக்குஸுலபனானவனே! [இமையோர் தம் குலமுதலே]-நித்யஸூரிகள் ஸமூஹத்தை அடிமைகொண்டு உஜ்ஜீவிப்பிக்குமவனே! நித்யஸூரிகளை அடிமை கொள்ளுமாபோலே, நானும் அடிமை செய்யும்படிபண்ணியருளவேணும்என்கை. ஒரு விஸூதிக்காகத் தாயும் தந்தையுமாய் அவர்கள் சிந்தித்து ஏத்தித்தொழும்படி அருளிக்கொண்டிருக்கிறவனே!

ஈடு.—எட்டாம்பாட்டு. என் ப்ரக்ருதிஸம்பந்தத்தை யறுத்து, நான் மநோ வாக்காயங்களாலே உன்னை நிரந்தரமாக அநுபவிக்கும்படி பண்ணியருளவேணும் என்கிறார்.

[இன்னமுதெனத்தோன்றி]-விபாகத்தில்ஹலிக்குமது முகப்பிலே யாகப்பெற்றேனாகில் கைவிடலாங்கிடீர். 'அமெ ஊரதெலவஜி' (அக்ரேம்ருதோபமம்)இறே; பரிணாமத்தில் விஷமிறே. விபாகத்தில் ஹலிக்குமது உபக்ரமத்தே தோன்றிற்றாகில் மேல்விழாதொழியலாயிற்று. பழியும் தர்மஹாநியுமாய், மேல் நரகமானாலும் விடப்போகாதிருக்கை. ப்ரக்ருதி ப்ராக்ருதங்களுக்கு இங்ஙனே யொருதன்மையுண்டு; த்ருதராஷ்ட்ரனோடொக்கும். அகவாயில் தர்மருசியின்றிக்கே இருக்கச்செய்தே, வாயாலே அநுகூலம்போலே இருக்குமவற்றைச் சொல்லாநிற்கும்அவனும். [ஓரைவர்] - தனித்தனியே ப்ரபலமாய் அத்விதீயமான ஶப்தாதிவிஷயங்கள் ஐந்தும். [யாவரையும்மயக்க] - க்ஷுத்ரரான மநுஷ்யரோடு, அளவுடையரான ப்ரஹ்மாதிகளோடு வாசியற அறிவுகெடுக்கும்படிக்கீடாக. [நீவைத்த] - ஸர்வஶக்தியான நீ வைத்த. தன்னாலே ஸ்ருஷ்டமாயிற்றது என்றறியாதே, "அதிலே ஒருபோக்யதையுண்டு" என்று ஸ்ப்ருஹை பண்ணுகிறானிறே ப்ரஹ்மா. [முன்னமாயமெல்லாம்] - அநாதியான ஸம்ஸாரத்தையெல்லாம். [முழுவேரரிந்து] - ஸவாஸநமாகப்போக்கி. [என்னை]- ஸம்ஸாரஹயஹீதனான என்னை. செய்தஅம்ஶத்தே த்ருப்தனாயிருக்குமிறே அவன். "ஜ்ஞாநலாபம் பண்ணிக்கொடுத்தோம்" என்றிறே அவனிருக்கிறது. அதுபோராதிறே; ஸம்ஸாரத்தை ஸவாஸநமாகப் போக்கவேண்டியிருக்குமிறே இவர்க்கு. [உன்சின்னமுந்திருமூர்த்தியும்] - "தவளவொண்சங்குசக்கரம்" என்றும், "வலக்கையாழியிடக்கைச்சங்கம்" என்றும், "அரவிந்தலோசனன்" என்றுஞ்சொல்லுகிறபடியே, திவ்யாயுதங்களையும் அவற்றுக்கு ஸத்ருஶமான திருமேனியையும். [சிந்தித்து இத்யாதி]-இவற்றை நெஞ்சாலே யநுஸந்தித்து, உள்ளடங்காமல் வாய்விட்டு ஸ்தோத்ரம்பண்ணி, பின்னைத்திருவடிகளிலே விழும்படிக்கு ஈடாக எனக்குஅருளவேணும். வாயாலே யொன்றுசொல்லாநிற்க, நெஞ்சு வேறேயொன்று

எட்டாம்பாட்டு.—இன்னமுது இத்யாதி. "மாயமெல்லாம் முழுவேரரிந்து, சிந்தித்தேத் திக்கைதொழவே யருள்" என்ற பதங்களைக்கடாக்ஷித்து அவதாரிகை - என்ப்ரக்ருதி இத்யாதி.

இனிய அம்ருதமாயென்னாதே, "இனிய அம்ருதமென்னலாம்படி தோன்றி" என்கையாலே ஆபாத ப்ரதீதியிலே யம்ருதமாய் விபாகத்தில் அநர்த்தமென்னுமிடம் ஸித்தித்ததிறே; இத்தைச் சொல்லி, விஷண்ணராகிறவருடைய ஹார்த்தபாவத்தை அருளிச்செய்கிறார் - விபாகத்தில் இத்யாதி. முன்னே இன்னமுதெனத்தோன்றுமோ? என்ன - அக்ரேம்ருதோபமம்இத்யாதி. "விஷயெந்த்ரியஸம்யோகாத்யத்தத்அக்ரே ஊரதெலவஜி । வரிணாமேவிஷமிவ தத்ஸுகம்ராஜஸம் ஸ்ம்ருதம்" இதிகீதாஸு அஷ்டாதஶே(௰அ). விவரணம்-விபாகத்தில் இத்யாதி. இனிமைக்கர்த்தம்-பழியும் இத்யாதி. விபாகத்தில் விஷமாய் உபக்ரமத்தில் அம்ருதமாயிருக்குமது, ப்ரக்ருதி ப்ராக்ருதங்களுக்குள்ள ஸ்வபாவ மென்னுமத்தை ஸநிதர்சநமாக அருளிச்செய்கிறார் - ப்ரக்ருதி இத்யாதி வாக்யத்வயத்தாலே. எப்படி யொக்குமென்ன, த்ருதராஷ்ட்ரன்படியை யருளிச்செய்கிறார் - அகவாயில் இத்யாதி. அப்படியே இவையும் முகப்பிலின்னமுதாய் அநந்தரம் விநாசமாக்குமென்றபடி. ப்ரபலமாய் அதஏவஅத்விதீயமான என்றபடி. "யாவரையும்" என்ற சப்தார்த்தம் - க்ஷுத்ரரான இத்யாதி. ப்ரஹ்மா இந்த்ரியவஶ்யனானானோ? என்ன - தன்னாலே இத்யாதி. "முழுவேர்" - வேர்முழுக்கவென்றபடி. "முழுவேரரிந்து கைதொழவேயருள்" என்று அர்த்திக்கிறதென்? ஸர்வஜ்ஞனாறி

நினைத்தல்; "உனக்குசேஷம்" என்று வேறேயோரிடத்தே தொழில்செய்தல் செய்கையன்றிக்கே, மநோவாக்காயங்கள் மூன்றும் உன்பக்கலிலே ப்ரவணமாம்படி பண்ணியருளவேணும். [என்னம்மா] - எனக்குத்தாய்போல் பரிவனானவனே! இஸ்ஸப்தம் வசிக்கிறபடி:—அம்மே என்கிறதிலே ஸம்போதநவசநமாகையாலும் சேதநனைச்சொல்லுகையாலும் ஆகாரமேற்று விளியாய் 'அம்மா' என்றுகிடக்கிறது. [என்கண்ணா] - அந்தப்பரிவை அர்த்தக்ரியாகாரியாக்கினவனே! [இமையோர்தங்குலமுதலே] - ஒருநாட்டுக்காக உன்னைக் கொடுத்துக்கொண்டு இருக்கிறவனல்லையோ? அநேகர் ஆசைப்பாடு ஒருவனுக்குஉண்டானால் கொடுக்கலாகாதோ? 'என்னம்மா' இத்யாதிக்கு - எனக்கு ஸ்வாமியாய், "ஸ்வத்தை நசிக்கக் கொடுக்கவொண்ணாது" என்று க்ருஷ்ணனாய்வந்து அவதரித்து என்னைநோக்கினவனே! அவதாரம் ஸர்வஸாதாரணமாயிருக்கச்செய்தே, இவர் தமக்காகச்செய்ததென்றிருப்பரே. மநோவாக்காயங்கள் மூன்றும் ஒருங்கி உன்பக்கலிலே ப்ரவணமாம்படி ஒருநாட்டுக்குப் பண்ணிக்கொடுத்த நீ, அத்தை எனக்கொருவனுக்கும் செய்யத்தட்டேன்? (அ)

ஒன்பதாம் பாட்டு.

குலமுதலடுந்தீவினைக் கொடுவன்குழியினில்வீழ்க்குமைவரை
வலமுதல்கெடுக்கும் வரமேதந்தருள்கண்டாய்
நிலமுதலினியெவ்வுலகுக்கும் நிற்பனசெல்வனவெனப் பொருள்
பலமுதல்படைத்தாய்! என்கண்ணா! என்பரஞ்சுடரே!

ஆ.—(குலமுதல்.) - ஸங்கல்பமாத்ர பரிநிர்மித நிகிலபுவந ததந்தர்வர்த்தி ஸசராசர ஜந்துஜாதனாய், ஸ்வஸக்தியாய், ராமக்ருஷ்ணாதிரூபேண அவதீர்ய ப்ரணதஜந பரித்ராண தத்விரோதி நிரஸநைக தோஹனாயிருந்த நீ, ஸாந்வயமத்விநாஸகர துஷ்க்ருதாதிகோர துராரோஹ அநாத்ய மூர்த்தநிபதந ஹேதுபூதமான பஞ்சேந்த்ரியங்களினுடைய

டானோ? என்ன - செய்தஅம்சத்தே இத்யாதி. விவரணம் - ஜ்ஞாநலாபம் இத்யாதி. "கைதொழவே" என்கிற ஏவகாரார்த்தம் - வாயாலே இத்யாதி. அதாவது - கரணத்ரயமும் உன்பக்கலிலேயாகவேணும் என்றபடி. 'இஸ்ஸப்தம்வசிக்கிறபடி' என்றதுக்குக்கருத்து:—தாயாரை ஸம்போதிக்குமிடத்தில, "அம்மே" என்று ஸம்போதிக்க வேண்டியிருக்க, "அம்மா" என்று ஸம்போதிக்கிறது புருஷனைத் தாயாராக ஸம்போதிக்கையாலே, "அம்மா" என்ற ஆகாரமேற்று விளியாயிருக்கிறதென்றபடி. ஆகாரமேற்றுவிளியாவது-ஏகாரஸ்தாநத்திலே ஆகாரம்ஆதேஸமாயேறி, "அம்மா" என்று ஸம்போதித்துஅழைக்கையாயிருக்கை என்றபடி. ஏற்றென்றது-ஆதேஸம். விளி-அழைக்கை. அந்தப்பரிவை - தாய்போலேபரிவனான ஆகாரத்தை என்றபடி. அர்த்தக்ரியாகாரி - அநுஷ்டாநபர்யந்தம். அவர்கள் அநேகராகையாலே செய்தோமென்ன - அநேகர் இத்யாதி. "அம்மா" என்றதுக்குக் கீழ் பரிவனாக அருளிச்செய்து, அர்த்தாந்தரம் - எனக்குஸ்வாமியாய் என்று. அவதாரம் ஸர்வஸாதாரணமாயிருக்க, "என்கண்ணா" என்கிறதென்? என்ன - அவதாரம் இத்யாதி. "இமையோர்தங்குலமுதலே - சிந்தித்தேத்திக் கைதொழவேயருள் எனக்கு" என்று அந்வயமுகேநபாவம்- மநோவாக்காயங்கள் இத்யாதி. 'என்னம்மா' என்று தொடங்கி, 'குலமுதலே - இன்னமுதென' இத்யாரப்ய, 'என்னுடைய - முன்னமாயமெல்லாம் முழுவேரரிந்து - உன்சின்னமுந்திருமூர்த்தியும் சிந்தித்தேத்திக்கைதொழவே - எனக்கு அருள்' இத்யந்வயம். 'என்னை' என்றவிடத்தில், ஐகாரம் - அவ்யயமாய், என்னுடைய என்றபடி. (அ)

பலத்தை ஸஹேதுகமாகக்கெடுக்கையாகிற என்னுடைய அஹில
யம்

ஒ.—ஒன்பதாம் பாட்டில், ஸாநுபந்தமாக முடிக்கவற்றான பாபங்களை விளைக்கும் விஷயங்களிலே ஆத்மாவைத் தள்ளும் இந்த்ரியங்கள் என்னை நலியாதபடி பண்ணியருளவேணும் என்கிறார்.

[குலமென்று தொடங்கி]-குலத்தை அடியோடே முடிக்கவற்றான மஹாபாபங்களை விளைப்பனவுமாய் துஷ்பரிஹாரமாய்ப் புக்காரைத் தன்பக்கலில்நின்றும் போகாதபடி பிடிக்கவற்றான ஶப்தாதி விஷயங்களிலே புகத்தள்ளும் ஐந்து இந்த்ரியங்களையும். [வலம் என்று தொடங்கி] - பலத்தை முதலிலே கெடுக்கும் ப்ரஸாதங்களையே பண்ணியருளவேணும். [நிலமுதல் என்றுதொடங்கி] - பூமிதொடக்கமாக மற்றும் எல்லா லோகங்களுக்கும் ஸ்தாவரஜங்கமாத்மகமான அநேக பதார்த்தங்களையும் முதலிலே உண்டாக்குவதுஞ்செய்து எனக்குஸேவ்யனாய் நிரதிஶயபோக்யனுமானவனே! நினைத்தது செய்யவல்லையாய் எனக்கு உபகாரகனுமான நீ என்னுடைய இந்த்ரியபாதையைப் போக்கி அருளவேணுமென்று கருத்து.

ப.—அநந்தரம், ஸகலஜகதுத்பாதகனாய் எனக்குஸேவ்யனாய் போக்யனான நீ, விஷயங்களிலே தள்ளும் இந்த்ரியபலத்தை உந்மூலநம்பண்ணும்படி ப்ரஸாதத்தைப்

நிலம் - பூமி, முதல் - முதலாக, இனி - மற்றும், எவ்வுலகுக்கும் - எல்லா லோகங்களுக்கும், நிற்பனசெல்வனவென - ஸ்தாவரஜங்கமரூபமான, பொருள் - பதார்த்தங்கள், பல - பலவற்றையும், முதல் - ப்ரதமத்திலே, படைத்தாய் - படைத்தவனாய், என்கண்ணா - (ஜகத்ரக்ஷணார்த்தமாக) க்ருஷ்ணனாயவதரித்த ஸௌலப்யத்தை எனக்கு ப்ரகாஶிப்பித்தவனாய், என் - எனக்கநுபாவ்யனுமாய், பாஞ்சுடரே - நிரதிஶயஔஜ்ஜ்வல்யயுக்தமான வடிவையுடையவனே! குலம் - வம்ஶத்தை, முதல் - மூலபூதபுருஷனோடே, அடும் - அதஃபதிக்கும்படி முடிக்கவல்ல, தீ - தாபகரமான, வினை - பாபத்துக்கு ப்ரவர்த்தகமாம், கொடு - கொடுமையை யுடைத்தான, வன் - வலியவிஷயங்களாகிற, [கரையேறவொண்ணாத], குழியினில் - படுகுழியிலே, வீழ்க்கும் - தள்ளக்கடவவான, ஐவரை - ஐந்து இந்த்ரியங்களை, வலமுதல் - ஸ்வபலமூலமான துர்வாஸனையோடே, கெடுக்கும் -, வலமே - ப்ரஸாதபலத்தையே, தந்தருள்கண்டாய் - தந்தருளவேணும். வலமென்று - ப்ரபலமான ப்ரஸாதத்தை லக்ஷித்தல்; வலமென்று - ஆநுகூல்யமாய், ப்ரஸாதந்தானுதல.

இ.—ஒன்பதாம்பாட்டில், ஸாநுபந்தமாகமுடிக்கும் விஷயங்களிலே ஆத்மாவைத்தள்ளும் இந்த்ரியங்கள் என்னை நலியாதொழியவேணும் என்கிறார்.

[குலமுதல் அடும்] - குலத்தை அடியோடே முடிக்கவற்றானவை. ஒருவன் செய்தபாபம் அவனளவிற்போகாது, குலமாக முடிக்கும். [தீவினை] - இப்படிப்பட்ட மஹாபாபங்களை விளைக்கவற்றாய், கொடிதாய் - துஷ்பரிஹரமாய். [வன்குழி]-வலிய குழி. புக்கால் கால்வாங்கவொண்ணாத ஶப்தாதிகளிலே. [வீழ்க்கும்ஐவரை] - புகத்தள்ளும் ஶ்ரோத்ராதிகளை. "நஹி தர்மவிருத்தேஷு பஹ்வபாயேஷு கர்மஸு। மூலகாதிஷு ஸஜ்ஜந்தே புத்திமந்தோ பவத்விதா:" என்று மால்யவான் ராவண

னுக்குச் சொன்னானிறே. [வலமுதல் இத்யாதி] - இந்த்ரியங்களுடைய வலத்தை வாஸநையோடே போக்கவல்லேனும்படி ப்ரஸாதங்களைப்பண்ணி அருளவேணும். [நில முதல் இத்யாதி] - பூமிதொடக்கமாக மற்றுமெல்லாலோகங்களுக்கும் ஸ்தாவரஜங்கமாத்மகமாயுள்ள அநேக பதார்த்தங்களையும் முதலிலே படைத்தாய். ஸ்ருஷ்டிக்கு ப்ரயோஜநம் மோக்ஷமான பின்பு அதுதான் பெறவேண்டாவோ? என்கை. [என் கண்ணா என்பரஞ்சுடரே] - எனக்கு ஸ்வாமியுமாய் நிரதிசயபோக்யனுமாய் உள்ளவனே! ஸர்வஶக்தியாய் எனக்குஸ்வாமியாய் போக்யனுமான நீயே என் இந்த்ரியவாஸநையைப் போக்கியருளவேணும்.

ஈடு.—ஒன்பதாம்பாட்டு. (ஸாநுபந்தமாக முடிக்குமதான பாபங்களை விளைக்கும்) விஷயங்களிலே ஆத்மாவைத் தள்ளும் இந்த்ரியங்கள் என்னை நலியாதபடி பண்ணவேணு மென்கிறார்.

[குலமுதல்இத்யாதி] - ஒருவன் பண்ணின பாபம் அவன்தன்னளவிலே போகையன்றிக்கே குலமாக முதலற முடிக்கவற்றான பாபங்களை விளைக்கக்கடவதாய், கொடியதாய் அநுபவித்து முடியவொண்ணாதபடியாய், வன்குழியாய் - வலியதாய், கால் வாங்கவொண்ணாதபடியான ஶப்தாதிவிஷயங்களாகிற குழிகளிலே தள்ளக்கடவதான இந்த்ரியங்களை. "நஹி தர்மவிருத்தேஷு பஹ்வபாயேஷு கர்மஸு | மூலகாதிஷு ஸஜ்ஜந்தே புத்திமந்தோ பவத்விதா:" (நஹிதர்மவிருத்தேஷு பஹ்வபாயேஷுகர்மஸு! மூலகாதிஷு ஸஜ்ஜந்தேபுத்திமந்தோபவத்விதா:) 'செய்யக்கடவதல்லாததாய், சொல்லுகிற பலத்தினளவல்லாத அபாயங்களையுடைத்தாய், வம்ஶங்களை முதலற முடிக்கக்கடவதான செயல்களிலே, உன்போல்வராய்ப் புத்திமாங்களாயிருப்பார் ப்ரவர்த்தியார்கள் காண்! என்றானிறே' மால்யவான், ராவணனுக்கு. [வலமுதல் கெடுக்கும் வரமே தந்தருள்கண்டாய்] - இவற்றினுடைய பலத்தை முதலிலே முடிக்கக்கடவதான உன்னுடைய ப்ரஸாதத்தைப் பண்ணியருளவேணும். நம்மாலே தனியே இங்ஙனே செய்யலாயிருக்குமோ? என்ன; [நிலமுதலித்யாதி.] - நீ, ஜகத்ஸ்ருஷ்ட்யாதிகள் பண்ணுகிறபோது உனக்குஆர் துணைப்படச்செய்தாய்? என்கிறார். ஸ்ருஷ்டி ப்ரயோஜநம் மோக்ஷமன்றோ? அது பெறவேண்டாவோ? பூமி முதலாக மற்றும்இப்படியுண்டான எல்லா லோகங்களிலும் ஸ்த்தாவரஜங்கமங்களான பலபதார்த்தங்களையும் முன்பேயுண்டாக்கினாய். (இனி மற்றும்) [என்கண்ணா, என்பரஞ்சுடரே!] - அப்படிப்போதுவான ரக்ஷ

ஒன்பதாம்பாட்டு.—குலமுதல் இத்யாதி. "வரமேதந்தருள்கண்டாய்" என்னுமளவுங் கடாக்ஷித்தவதாரிகை - விஷயங்களிலே இத்யாதி.

"கொடு" என்றதுக்கர்த்தம் - அநுபவித்துமுடியவொண்ணாதபடியாய் என்று. "விஷயப்ராவண்யம் குலமாக நசிப்பிக்கும்"என்றதுக்கு ப்ரமாணம் - நஹிதர்ம இத்யாதி. 'நஹி தர்மவிருத்தேஷு பஹ்வபாயேஷு கர்மஸு | மூலகாதிஷு ஸஜ்ஜந்தே புத்திமந்தோ பவத்விதா:' இதி ராவணம்ப்ரதி மால்யவான். இதுக்கர்த்தம் - செய்யக்கடவது இத்யாதி. இதுக்கு - மூலகாதிஷு என்கிறதிலே நோக்கு. வலம் - பலம். முதலிலேயென்றது - முதலிலே வாராதபடி யென்றபடி. "வரம்" - ப்ரஸாதத்தை. மேலுக்கவதாரிகை - நம்மாலே இத்யாதி ஜகத்ஸ்ருஷ்டியைச் சொல்லுகிறதுக்குபாவம் - நீ ஜகத்ஸ்ருட்யாதிகள் இத்யாதி. ஶாஸ்த்ராந்தரம்- ஸ்ருஷ்டி ப்ரயோஜநம் இத்யாதி. "இனி" என்றதுக்கர்த்தம் - மற்றுமிப்படி என்றது. "பல - பொருள்"

ணமொழிய, க்ருஷ்ணனாய் வந்தவதரித்து எனக்கு ஸஹாயனாய், வடிவழகை எனக்கு உபகரித்தவனே! ஒருநாடாக அநுபவிக்கும் வடிவழகை என்னையொருவனையும் அநுபவிப்பித்தவனே! அழிந்தஜகத்தை உண்டாக்கின உனக்கு, உள்ளதுக்குஒருகுணாதாநம்பண்ணுகை யரிதோ? (கூ)

பத்தாம் பாட்டு.

என்பரஞ்சுடரே! என்றுன்னையலற்றி உன்னைத்தாமரைகட்கு
அன்புருகிநிற்குமதுநிற்கச்சுமடுதந்தாய்
வன்பரங்களெடுத்து ஐவர்திசைதிசைவலித்தெற்றுகின்றனர்
முன்டரவைகடைந்து அமுதங்கொண்டமூர்த்தியோ!

ஆ.—(என்பரஞ்சுடரே.) - ஆஶ்ரிதருடைய அபேக்ஷிதத்தை முடிப்பானொருவனுமாய் முடிக்கவல்லானொருவனுமா யிருக்கச்செய்தே, உன்னுடைய கல்யாணகுணாநுஸந்தாநஜநித நிரதிஶய ப்ரீதியாலே அப்ராக்ருதிங்கதனாய்க்கொண்டு, 'என்பரஞ்சுடரே!' என்று உன்னையலற்றி உன்திருவடிகளிலுள்ள ப்ரேமாதிஶயத்தாலே நீராயுருகி நிற்கையாகிற என்னுடைய ஸ்வரூபத்தையொழிய, விஷயாநுபவோபகரணமான ப்ரக்ருதியை எனக்குத்தந்தாய்; 'இந்த ப்ரக்ருத்யாஶ்ரமான இந்த்ரியங்கள் துர்ஹரமான விஷயபாரங்களையெடுத்து ப்ரதிதிஶம்ஆகர்ஷித்து என்னை பாதியாநின்றனகிடாய்' என்று எம்பெருமானைக் கூப்பிடுகிறார்.

ஒ.— பத்தாம்பாட்டில், அடிமைக்கு விரோதியாய் விஷயாநுபவங்களுக்குப் பாங்கான உடம்பை எனக்குத்தந்தாய்; அதுவேஹேதுவாக ஐந்து இந்த்ரியங்களும் பொறுக்கவொண்ணாதபடி என்னை நலியாநின்றன. அவற்றைப்பரிஹரித்தருளவேணும் என்று ஆர்தராய் மஹாத்வநியோடு கூப்பிடுகிறார்.

[என்பரஞ்சுடரே என்றுதொடங்கி] - எனக்கு நிரதிஶயபோக்யமானவனே என்று உன்னைக்குறித்துக் கூப்பிட்டு ஸ்ப்ருஹணீயமான உன்திருவடிகளிலுண்டான ஸ்நேஹத்தாலே ஶிதிலனாய்நிற்கையாகிற இப்புருஷார்த்தத்தை ஒழிய இந்த்ரியங்கள் சுமத்தின சுமையையெல்லாம் சுமக்கைக்கு ஈடான ஶரீரமாகிற சும்மாட்டைத் தந்தாய். [வன்பரங்கள் என்றுதொடங்கி] - துர்ஹரங்களான விஷயபாரங்களைச் சுமத்தி ஐந்து இந்த்ரியங்களும் திக்குத்தோறும் வலித்து எற்றாநின்றன. ஆஶ்ரிதாபேக்ஷித பூரணக்ஷமனான நாயனேயோ! இந்த்ரியங்களை சேதநரைப்போலே பேசுவானென்? என்னில்; சிலசேதநர்வேணும் என்றுகோலி பாதிக்குமாபோலே பாதகமாகையால்.

ப்ரபதம். "என்பரஞ்சுடரே" என்றதுக்கர்த்தம் - வடிவழகை இத்யாதி. "பரஞ்சுடர்" என்று விசேஷித்து, "என்" என்றதுக்கு அர்த்தம் - ஒருநாடாக இத்யாதி. "பரம்" என்கையாலே - பரமபதவிக்ரஹமென்று ஸித்தம். "நிலமுதல்" இத்யாதியின் முந்தினதாத்பர்யவிவரணம் - அழிந்த இத்யாதி. யத்வா, உம்முடைய இந்த்ரியவஶ்யதையைப் போக்குகை அரிதகாணும் என்ன - அழிந்த இத்யாதி என்று த்ருதீயதாத்பர்யமாதல். உத்தரார்த்தாநுஸர்தாநாநந்தரம், பூர்வார்த்தாநுஸந்தாநம் அந்வயப்ரகாரః. (க)

ப.—அநந்தரம், கடலைக்கடைந்து ஸாரமானஅம்ருதத்தைக்கொண்ட ஸ்வாமியான நீ, நிரதிஶயஸாரமான உன்னுடைய அநுபவம் நிற்க, விஷயபாரங்களையெடுத்து இந்த்ரியங்கள் நலியும்படியான சுமைபொறுக்கும் ஶரீரத்தைத்தந்தாய் என்கிறார்.

முன்-முற்காலத்திலே, பரவை - பரந்தஸமுத்ரத்தை, கடைந்து - கடைந்து, அமுதம் - (அதின்ஸாரபூதமான) அம்ருதத்தை, கொண்ட - கொண்டு (தேவாதிகளுக்கு) உபகரித்த, மூர்த்தி - ஸ்வாமித்வத்தையுடையவனே! என் - எனக்கு, பரஞ்சுடரே - நிரதிஶயமான உஜ்ஜ்வல போக்யமே! என்று-என்று, உன்னை-உன்னை நோக்கி, அலற்றி-ப்ராவண்யத்தாலே அக்ரமமாகக்கூப்பிட்டு, உன் - உன்னுடைய, இணை - பரஸ்பர ஸத்ருஶமான, தாமரைகட்கு - திருவடிகளிரண்டுக்குமாக, அன்பு - ப்ரேமத்தாலே, உருகி - த்ரவீபூதனாய், நிற்கும் - நிற்கிற, அது - அந்தநிரதிஶயஸாரஸ்வதமான ஆகாரம், நிற்க-, சுமடு-பாரஸஹமான சரீரமாகிற சும்மாட்டை, தந்தாய் - தந்தாய்; (அதடியாக), வன்-ப்ரபலமான, பரங்கள் - விஷயபாரங்களை, எடுத்து-, ஐவர் - ஐந்திந்த்ரியங்களானவை, திசைதிசை - ஸ்வாபிமதமானதிக்குக்களிலே, வலித்து - இழுத்து, எற்றுகின்றனர் - பீடியாநின்றன. ஓ - ஓ! இதென்ன அநர்த்தமென்று கருத்து.

இ.—பத்தாம்பாட்டில், அடிமைக்கு விரோதியாய் விஷயாநுபவத்துக்குப் பாங்கான உடம்பைத் தந்தாய்; அதுஹேதுவாக ஐந்து இந்த்ரியங்களும் நலியாநின்றன. அவற்றைப் பரிஹரித்தருளவேணும் என்று ஆர்த்தியோடே கூப்பிடுகிறார்.

[என்பரஞ்சுடரே இத்யாதி] - எனக்கு நிரதிஶயபோக்யனானவனே என்று என்னைக்குறித்து அடைவுகெடக்கூப்பிட்டு, அந்யோந்யம் ஒப்பாய் ஸ்ப்ருஹணீயமான உன்திருவடிகளிலுண்டான ப்ரேமத்தாலே ஶிதிலனாய்நிற்கும் அந்தபுருஷார்த்தத்தை ஒழிய. [சுமடுதந்தாய்] - இந்த்ரியங்கள் சுமத்தின சுமையெல்லாம் சுமக்கைக்கு ஈடான ஶரீரமாகிற சும்மாட்டைத்தந்தாய். ராஜபுத்ரன்தலையில் முடியைவாங்கி சும்மாட்டைக் கொடுத்து வழிக்கரையிலேநிறுத்தினால் கண்டார் எல்லாரும் சுமை ஏற்றுமாபோலேயிறே இந்த்ரியங்கள். இந்த்ரியபாரயைக்கு ஈடான ப்ராக்ருதஸம்பந்தம். [வன்பரங்கள் இத்யாதி]- நீ தந்த ப்ராக்ருதியோட்டை கர்மபந்தமேஹேதுவாக துர்வஹமான விஷயங்களைச்சுமத்தி ஐந்துஇந்த்ரியங்களும் திக்குத்தோறும் வலித்துநலியாநின்றன. முன் கடலைக்கடைந்து, ஆஶ்ரிதர் அபேக்ஷைமுடிக்க க்ஷமனான நாயனேயோ! கடலைக்கடைந்து அம்ருதத்தை வாங்கித் தேவர்களுக்குக்கொடுத்து அஸுரவர்க்கங்களைப் பறக்க அடித்தாற்போலே, இந்த்ரியவஶ்யதையையும் பாறவடித்துத்தரவல்லையே.

ஈடு.—பத்தாம்பாட்டு. அடிமைக்கு விரோதியாய் விஷயாநுபவத்துக்குப் பாங்கான உடம்பைத்தந்தாய்; அதுவேஹேதுவாக ஐந்துஇந்த்ரியங்களும் நலியாநின்றன; அவற்றைப் பரிஹரித்தருளவேணுமென்று ஆர்த்தியோடே கூப்பிடுகிறார்.

ப்த்தாம்பாட்டு—என்பரஞ்சுடர் இத்யாதி. ''சுமடுதந்தாய், எற்றுகின்றனர், அமுதங்கொண்டமூர்த்தியோ'' என்ற பதங்களைக்கடாக்ஷித்து அவதாரிகை-அடிமைக்குவிரோதியாய்இத்யாதி. ''அலற்றி'' என்றதுக்குஅர்த்தம் - அடைவுகெடக்கூப்பிட்டு என்று.

[என்பரஞ்சுடரித்யாதி] - எனக்கு உன்வடிவழகைக்காட்டி உபகரிக்குமவனே என்னைக்குறித்து அடைவுகெடக் கூப்பிட்டு. [உன்னிணைத் தாமரையித்யாதி] - ஒன்றுக்கொன்றுஒப்பாயிருப்பன இரண்டுசெவ்விப்பூப்போலே யிருக்கிற உன்திருவடிகளில் போக்யதையை அநுஸந்தித்து ப்ரேமபரவசனாய் நெகிழ்ந்து நீராய்நிற்கை, இவ்வாத்மாவுக்கு ஸ்வரூபமாகக்கடவது. [அதுநிற்கச்சுமடுதந்தாய்] - ஸ்வரூபமிதுவாயிருக்க, உன்பக்கலினின்றும் அகற்றி விஷயங்களிலேகொடுபோய் மூட்டக்கடவதான ஶரீரத்தைத்தந்தாய்; உன்னையநுபவிக்கைக்கு உறுப்பாக தேஹத்தைத் தந்தாயானாய் நீ; அதுதானே எனக்கு இழவுக்கு உடலாயிற்று. ராஜபுத்ரன்தலையில் முடியைவாங்கிச் சும்மாட்டைக்கொண்டு வழியிலேநின்றால், அடியறியாதார்சுமை யெடுத்திக்கொண்டு போமாபோலேயாயிற்று பகவதநுபவத்துக்கு ஈடாகக்கொடுத்த ஶரீரம் இந்த்ரியங்களுக்குப் பணிசெய்யும்படியாய்விட்டது. சுமடு - சும்மாடு. ஶரீரமாகிற சும்மாட்டைத்தந்தாய். [வன்பரங்களித்யாதி] - "அப்ராப்தவிஷயத்திலே போனேன்" என்றோ நான் இப்போது அஞ்சுகிறது? பொறுக்கலாமளவு சுமையெடுத்ததாகில் நான் சுமவேனோ? வலியபாரத்தையெடுத்தி. கனத்த சுமையை யெடுத்தி. [ஐவர்] - அவர்கள்தான் ஒருவரிருவராகில் நான்ஆற்றேனோ? [திசை திசை வலித்து] - இத்தனைவரும் ஒருதிக்கிலே போகவிழுத்தார்களாகில்தான் மெள்ளப் போகேனோ? [எற்றுகின்றனர்] - உடையவனாகிலிறே போக்குவிட்டு நலிவது? (எற்றுகை- ப்ரஹரிக்கை.) ஒருதுர்பலன் தலையிலே அதிபாரத்தையெடுத்திச் சுற்றும்நின்று தந்தாம் வழியேயிழுத்துக்கொண்டு போகத்தேடுமோபோலேகாணும் இவையும். [முன்பரவையித்யாதி] - கடலைநெருக்கி அதில் அம்ருதத்தைவாங்கி, ப்ரயோஜநாந்தரபரரானவர்களுக்குங் கூடக் கொடுக்கக்கடவ மஹாபாஹுவையுடையவனே! என்னுடைய இந்த்ரியங்களைப் பாறவடித்துப்போகட்டு, கடல்கடைந்தபோதை ஒப்பனையோடேகூடினவடிவைக் காட்ட வல்லையே! (௪௦)

"விவிக்தாஸேவீ லக்வாஶீ யதவாக்காயமாநஸ:" இத்யாதிப்படியே நம்மையநுபவிக்கைக் கன்றோ தந்ததென்ன - உன்னையநுபவிக்கைக்கு இத்யாதி. "அதுநிற்கச்சுமடுதந்தாய்" என்றதுக்கு த்ருஷ்டாந்தம்-ராஜபுத்ரன் இத்யாதி. 'அடியறியாதார்' - ராஜபுத்ரனென்றறியாதார் என்றபடி. "வன்பரங்கள்" என்றதுக்குவாஸனை-அப்ராப்த இத்யாதி. விவரணம்-பொறுக்கலாம் இத்யாதி. ஶப்தார்த்தம்-வலிய இத்யாதி. பாரத்துக்கு வன்மையாவதேதென்ன - கனத்த இத்யாதி. பாரத்தையென்றது-ஶப்தாதிகளை. "எற்றுகின்றனர்" என்ற வந்த்தமாநார்த்தம் - உடையவனாகில் இத்யாதி. "திசைதிசை வலித்தெற்றுகின்றனர்" என்றதுக்கு த்ருஷ்டாந்தம் -ஒருதுர்பலன் இத்யாதி. "பரவைகடைந்தமுதங் கொண்டமூர்த்தியோ" என்றதுக்குபாவம் - கடலை இத்யாதி. "மூர்த்தி" - வடிவு. மூர்த்தி ஶப்தம், திருக்கைகளுக்கு உபலக்ஷணமென்று கருத்து. "எற்றுகின்றனர்" என்றதின் பாவத்தைக்கூட்டி, "மூர்த்தி" என்றதக்குபாவாந்தரம் - என்னுடைய இத்யாதி. 'சுமடுதந்தாய் என்னுமளவும் க்ரமத்திலேசொல்லி, 'முன்பரவைகடைந்து அமுதங்கொண்டமூர்த்தி, ஐவர்திசைதிசை வலித்தெற்றுகின்றனர்; ஓ' என்றந்வயம். அத்தைப்பரிஹரித்தருளவேணுமென்று கூட்டிக்கொள்வது. (௪௦)

பதினோராம் பா

கொண்டமூர்த்திஓர்மூவராய்க் குணங்கள்படைத்தளித்துக்கெடுக்கும்அப்
புண்டரீகக்கொப்பூழ்ப் புனற்பள்ளியப்பனுக்கே
தொண்டர்தொண்டர்தொண்டர்தொண்டன்சடகோபன் சொல்லாயிரத்துள் இப்பத்தும்
கண்டுபாடவல்லார் வினைபோங்கங்குலும்பகலே.

ஆ.—(கொண்டமூர்த்தி.) குணத்ரயாஶ்ரய த்ரிமூர்த்திரூபேண நிகிலஜகத்ஸர்க்கஸ்திதி ஸம்ஹாரஹேதுபூதனாய், ஸ்ருஷ்டமான ஜகத்தினுடைய ரக்ஷணார்த்தமாக க்ஷீரார்ணவே ஶயானனாய், புண்டரீகஸத்ருஶமான திருநாபியையுடையனாயிருந்த எம்பெருமானுடைய ஸர்வஜ்ஞத்வ ஸர்வஶக்தித்வ ஸத்யஸங்கல்பத்வ காருண்ய வாத்ஸல்ய ஸௌந்தர்யாதிகுணங்களுக்குத் தோற்று அநந்யார்ஹஶேஷபூதரானவர்களுடைய தொண்டர்தொண்டர் தொண்டன் சடகோபன் சொல்லாயிரத்துள் அந்தகுணங்களையே தமக்குப்பற்றாசாகக்கொண்டு கூப்பிட்ட இத்திருவாய்மொழியில் பாவநையுள்ளபடி அறியக்கண்டு பாடுவாருடைய ப்ரக்ருதி ஸம்பந்தஹேதுபூதமான பாபம் நிஶ்ஶேஷமாகப் போமென்கிறார்.

ஒ.—நிகமத்தில், இத்திருவாய்மொழியை அப்யஸித்தார்க்கு நிரந்தரமாக இந்த்ரியங்களால் ஆத்மாவுக்குவரும் நலிவு போம் என்கிறார்.

[கொண்ட என்றுதொடங்கி] - குணாநுரூபமான வடிவையுடைய மூவருமாய் ஸ்ருஷ்ட்யாதிகளையும் பண்ணும் ஸ்வபாவனுமாய். [அப்புண்டரீகம் என்று தொடங்கி] - ஜகத்ஸ்ருஷ்ட்யாதிகாரணதயா ப்ரஸித்தமான புண்டரீகத்தோடுகூடின திருநாபியையுடைய ஏகார்ணவஶாயியான எம்பெருமானுக்கே. [கண்டுபாட] - அநுஸந்தித்துப்பாட.

ப.—அநந்தரம், இத்திருவாய்மொழியை அர்த்தத்தோடே ப்ரீதியுக்தராய்ப் பாடுவார்க்கு ஸர்வபாபங்களும் போமென்று பலத்தையருளிச்செய்கிறார்.

குணங்கள் - (ஸத்த்வரஜஸ்தமோரூபமான) குணங்களை, கொண்ட-, மூர்த்தி- (ப்ரஹ்மவிஷ்ணுருத்ர) மூர்த்திகளையுடைத்தாய், ஓர் - அத்விதீயரான, மூவர் - (காரண புருஷர்கள்) மூவரும், ஆய்-, படைத்து-(ப்ரஹ்மாந்தர்யாமியாய்ப்) படைத்து, அளித்து - (ஸ்வாவதாரமான விஷ்ணுரூபியாய்) ரக்ஷித்து, கெடுக்கும் - (ருத்ராந்தர்யாமியாய்) ஸம்ஹரிக்குமவனாய், அ-இதுக்கெல்லாம் மூலமாகப்ரமாணஸித்தமான, புண்டரீகம் - புண்டரீகத்தையுடைய, கொப்பூழ் - திருநாபியையுடையனாய்க்கொண்டு, புனல் - காரணஜலத்திலே, பள்ளி - கண்வளர்ந்தருளின, அப்பனுக்கு - மஹோபகாரகனுக்கு, தொண்டர் - ஸம்பந்திகளானாரை, தொண்டர் - ஸம்பந்தித்தாரை, தொண்டர் - ஸம்பந்தித்தார்க்கு, தொண்டன் - ஶேஷபூதரான, சடகோபன் - ஆழ்வார், சொல் - அருளிச்செய்த, ஆயிரத்துள் - ஆயிரத்து, இப்பத்தும் - இப்பத்தையும், கண்டு - அர்த்தாவலோகநம்பண்ணி, பாடவல்லார் - ப்ரீதிப்ரேரிதராய்ப் பாடவல்லார்க்கு, கங்குலும் பகல் - அஹோராத்ராதி விபாகமற ஸர்வகாலத்திலும், வினை-பகவதநுபவப்ரதிபந்தக பாபம், போம்-. இது-

இ.—நிகமத்தில், இத்திருவாய்மொழியை அப்யஸிக்கவல்லார்க்கு, இந்த்ரிய வஶ்யதைக்கு அடியான பாபம் போம் என்கிறார்.

[குணங்கள் - கொண்டமூர்த்தி யோர்மூவராய்] - ஸத்வாதிகுணாநுரூபமான வடிவையுடைய மூவராய். [படைத்தளித்துக்கெடுக்கும்]-சதுர்முவாந்தர்யாமியாய்நின்று ஸ்ருஷ்டித்து, ஸ்வேநரூபேண நின்று பரிபாலநம்பண்ணி, ருத்ராந்தர்யாமியாய் ஸம்ஹரித்துச் செய்தருளுகிற. [அப்புண்டரீகக்கொப்பூழ்இத்யாதி] - ஜகத்காரணதயா ப்ரஸித்தமான புண்டரீகத்தோடேகூடின திருநாபியையுடைய ஏகார்ணவஸாயியான ஸர்வகாரணனுக்கே. [தொண்டர் இத்யாதி] - "நான், எனக்கு" என்னப்பண்ணும் இந்த்ரியவஸ்யதைக்கு அஞ்சி, ஶேஷத்வத்தின் எல்லையிலே தாழநிற்கிறார். [கண்டுபாடவல்லார்] - இதில்ஓடுகிற பாவத்தை அநுஸந்தித்துப் பாடவல்லார் என்கிறது. தம்முடைய ஊமையை அநுஸந்தித்தால் பாடவொண்ணாது என்றிருக்கிறார். [வினைபோம் கங்குலும்பகலே]- திவாராத்ரம் இந்த்ரியவஸ்யதைக்கு ஹேதுவான பாபம் போம் என்னுதல், திவாராத்ரம் அடிமைசெய்கைக்கு விரோதியான பாபம்போம் என்னுதல்.

ஈடு.—நிகமத்தில் - இத்திருவாய்மொழி அப்யஸித்தார்க்கு இந்த்ரியங்களால் ஆத்மாவுக்குவரும் நலிவுபோம் என்கிறார்.

[கொண்டமூர்த்தியோர் மூவராய்க்குணங்கள்] - குணங்கள் கொண்டமூர்த்தியோர் மூவராய் - ஸத்த்வாதிகுணாநுரூபமானவடிவையுடைய மூவராய். குணாநுகுணமான ஸ்ருஷ்ட்யாதிகள் அந்தந்தவ்யக்திதோறும் பர்யவஸிக்குமிறே. இரண்டில் ஜீவவ்யவதாநேநநின்று, ஒன்றில் ஸ்வரூபேண நின்றபடி. [படைத்துஇத்யாதி] - ரஜோகுணத்தையுடையனைக்கொண்டு ஸ்ருஷ்டித்து, தமோகுணத்தையுடையனைக்கொண்டு ஸம்ஹரித்து, ஸத்த்வகுணத்தையுடையனைக்கொண்டு இவற்றையடைய ரக்ஷித்துக் கொடுநிற்கிறபடி. [அப்புண்டரீகம்இத்யாதி] - இவற்றையெல்லாவற்றையும் உண்டாக்குகைக்

நிருமம்.— கொண்ட இத்யாதி. "கண்டுபாடவல்லார், கங்குலும்பகல், வினைபோம்" என்ற பதங்களைக் கடாக்ஷித்தவதாரிகை - இத்திருவாய்மொழி இத்யாதி.

ஸத்வாதி குணாநுரூபமான வடிவையுடைய அத்விதீயரான மூவரா யென்ற ஸப்தார்த்தம். "படைத்தளித்துக்கெடுக்கும்" என்று - ஸாமாந்யேநசொன்னால், இன்னதுக்கு இன்னார் கர்த்தாவென்றறியும்படி யென்? என்ன-குணாநுகுணமான் இத்யாதி. இங்கே. "ஸ்ருஷ்டிஸ்திதியந்தகரணீம் ப்ரஹ்மவிஷ்ணுஶிவாத்மிகாம் ஸ ஸம்ஜ்ஞாம் யாதி பகவாநேக ஏவ ஜநார்த்தந:" (ஸ்ரீவிஷ.1,2, 24) இத்யாத்யநுஸந்தேயம். தானேமூவரானுனேஎன்ன-இரண்டில்இத்யாதி.ஜீவவ்யவதாநேந நின்ற-ஜீவனையதிஷ்டித்தென்றபடி."குணாநுகுணம்"இத்யாதிவாக்யவிவரணம் - ரஜோகுணத்தை இத்யாதி. "அ" என்றப்ரஸித்திக்கர்த்தம் - ஜகதுத்பத்தி இத்யாதி. இவ்விடத்திலே -"அஜஸ்ய நாபாவத்யேகமர்ப்பிதம் யஸ்மிந்நிதம் விஶ்வம் புவநமதிஶ்ரிதம் விஶ்வகர்மா ஹ்யஜநிஷ்ட தேவ:" (யஜுர்வே-காண்.4,ப்ர.6. பா.8.)என்றது அநுஸந்தேயம். அஸ்யாஶ்ருதேரயமர்த்த:; அஜஸ்ய-ஜந்மாதிரஹிதஸ்யஸர்வேஶ்வரஸ்ய.நாபாவதி-நாபௌ.ஏகமர்ப்பிதம்-ஏகம்கமலமாவிர்ப்பூதமித்யர்த்த:; யஸ்மிந் - கமலே, இதம்விஶ்வம்புவநம் - இதம் ஸகலம்ஜகத்,அதிஶ்ரிதம்-ஸமாஶ்ரிதம்;விஶ்வகர்மாதேவ:-ப்ரஹ்மா, அஜநிஷ்ட-ஜாதோபூதித்யர்த்த:. நாபிபத்மஸ்ய புவநாதாரத்வம்-புவநகாரணபூதப்ரஹ்மாதாரத்வாதுபபத்யதே.மஹாபாரதே"அஜஸ்ய நாபாவத்யேகம் யஸ்மிந் விஶ்வம் ப்ரதிஷ்டிதம் । புஷ்கரம் புஷ்கராக்ஷஸ்ய தஸ்மை பத்மாத்மநே நம:". "ரக்ஷார்த்தாய ஸர்வபூதாநாம் ஸ்ருஷ்டியர்த்தம் ப்ரஹ்மணோ ஹரி: । யஸ்ய நாபிஸமுத்பூதம் பங்கஜாதபவஜ்ஜகத்"(விஷ்-பு,5,5,14)இத்யாதி ஸ்ம்ருதியும் அநுஸந்தேயம் கீழ்ச்சொன்ன ஸாமாநாதிகரண்யம் - கார்யகாரணபாவ நிபந்தநமென்கிறார்-அப்புண்டரீகம் இத்யாதி. "அப்புண்டரீகக்கொப்

காக ஏகார்ணவத்திலேவந்து கண்வளர்ந்தருளினபடியைச் சொல்லுகிறது. ஜகதுத்பத்தி காரணதயா ப்ரஸித்தமான திருநாபிகமலத்தையுடையனாய்க்கொண்டு ஸ்ருஷ்ட்யுந்முகனாய் ஏகார்ணவத்திலே கண்வளர்ந்தருளின உபகாரகனானவனுக்கே. அப்புண்டரீகக் கொப்பூழென்கையாலே - ப்ரஹ்மாதிகள் கார்யமென்னுமிடமும், அவன் காரணபூதனென்னுமிடமுஞ் சொல்லிற்று. ஒருவனுக்கு உத்பத்தியிறே சொல்லவேண்டுவது: "ப்ரஹ்மண: புத்ராய ஜ்யேஷ்டாய ஶ்ரேஷ்டாய" (ப்ரஹ்மண:புத்ராயஜ்யேஷ்ட்டாயஶ்ரேஷ்ட்டாய) என்று மற்றையவனுடைய உத்பத்தி தன்னடையேவருமிறே. "நான்முகனைநாராயணன் படைத்தான்" என்றால், மற்றையவன்பிறப்பும் அநந்தரஞ்சொல்லுமிறே. இப்படி வேதவைதிகங்கள்சொல்லாநின்றதிறே. [தொண்டரித்யாதி]-விஷயங்களையும் இந்த்ரியங்களையும் அநுஸந்தித்த நெஞ்சாரல்தீர, ஶேஷத்வத்தினுடைய எல்லைநிலத்திலேபோய் நிற்கிறார்; தாபார்த்தன் மடிவிலே தாழவிழியுமாபோலே. [கண்டுபாடவல்லார்] - இவருடைய தசையை யநுஸந்தித்தால் பாடப்போகாதாகாதேதான். [கண்டு] - நமக்குத்தஞ்சமென்றுஅநுஸந்தித்து. [வினைபோம் கங்குலும்பகலே] - இரவுபகலில் வினைபோம். (திவாராத்ரமிந்த்ரிய வஶ்யதைக்கு ஹேதுவானபாபம்போம்.) "இராப்பகல் மோதுவித்திட்டு" என்கிறதுரிதம் போம்.

பூழ்" என்கிறஇத்தால் ப்ரஹ்மோத்பத்திசொன்னால், ருத்ரோத்பத்தியும் சொல்லவேண்டாவோ? என்ன. ஒருவனுக்கு இத்யாதி. இவ்வர்த்தத்தை அபியுக்தோக்தியாலும் உபபாதிக்கிறார் - நான்முகனை இத்யாதி. நான்முகன்திருவந்தாதி. படைத்தான் - ஸ்ருஷ்டித்தான். நான்முகனாய் - தானேப்ரயோஜநனாய். உத்தரார்த்தநிகமநம் - இப்படிவேத இத்யாதி. வைதிகங்களென்றது - "நான்முகனை" இத்யாதியான வைதிகவசநங்களென்றபடி. இப்போது ஶேஷத்வகாஷ்டையை அநுஸந்திப்பானென்? என்ன - விஷயங்களையும் இத்யாதி. இதுக்கு த்ருஷ்டாந்தம் - தாபார்த்தன் இத்யாதி. "வல்லார்" என்றதுக்குபாவம் - இவருடைய இத்யாதி. இரவுபகலில் வினையாவதேதென்ன - இராப்பகல் இத்யாதி. "கண்டு" - இவருடைய தசையையநுஸந்தித்து. "வினை" - விஷயப்ராவண்யம். 'குணங்கள் - கொண்டமூர்த்தியோர்மூவராய் - படைத்தளித்துக்கெடுக்குமவனாய், அப்புண்டரீகக்கொப்பூழையுடையனான புனர்பள்ளியப்பனுக்கே இத்யாரப்ய, பாடவல்லார்க்கு - கங்குலும்பகல் - வினைபோம்' இத்யந்வய:. (கக)

த்ரவிடோபநிஷத்ஸங்கதி.— க்ஷேத்ரஜ்ஞாநிஸ்ஸீமகீர்த்திஸ் ததநு ஸத்வ தகவிஷ்வக்ஸேநவிஷ்ணு: । ஶம்ஶேந பாதிதவிஷ்ணு ஸம்வேக்ஷ்ய ஶகைதத்வஸ்ஸந்திவஞ்சிஷயேம்ப்ரியேஷு:॥

த்ரவிடோபநிஷத்தாத்பர்யரத்நாவலி.— நிஸ்ஸந்த்ராஸ்ஸாந்த்ரமாநந்திதநஸுதயாவைஜ்ஞாநகாவ்யமிதயாஷ்டிகாஷ்ஷ்டாநித்யஸ்வதயா வாஞ்சநஸஞ்சியாநாக: । வீதஶேஷஸ்ஸ்ஷாநைர்வைதியா ஶோகஸம்ரக்ஷணைர்ஷ்யாஶாந்தஸகாஸதேதி தநாநஸாநதேத்வாஹவிஜ்ஞாநிகஸ்ஸ: ॥

திருவாய்மொழி நூற்றந்தாதி.

உண்ணிலாவைவருடனிருத்தியிவ்வுலகில்
எண்ணிலாமாயனெனநலிய - எண்ணுகின்றான்
என்றநினைந்தோலமிட்டவின்புகழ்சேர்மாறனெனக்
குன்றிவிடுமேபவக்கங்குல்.

ஸ்ரீ:

இரண்டாந்திருவாய்மொழி — கங்குலும் - ப்ரவேஶங்கள்.

ஆ.—(கங்குலும்பகலும்.) - இப்படி திருவேங்கடமுடையானோடே ஸம்ஶ்லேஷிக்கப்பெறாத வ்யஸநத்தாலும் தத்ஸம்ஶ்லேஷ ப்ரதிபந்தகப்ரக்ருதி தர்ஶநஜநித வ்யஸநத்தாலும் அத்யந்தம் அவஸந்நராய் அவன் திருவடிகளைப்பூண்டுகொண்டுகிடந்து கூப்பிட்டு, பின்னையும் தம்முடைய அபேக்ஷிதம்பெறாமையாலே, "இனிக்கோயிலிலே பெரியபெருமாள் திருவடிகளிலேசென்று விழுந்தாலல்லது என்னுடைய க்லேஶம் போகாது" என்று பார்த்துப் பெரியபெருமாள் திருவடிகளிலேசென்று விழுந்து அங்கும் ஒரு கடாக்ஷம்பெறாமையாலே * மதியெல்லாம் உள்கலங்கி "எனக்குச்செல்லுகிற வ்யஸநமொன்றும் தெரிகிறதில்லை; சொல்ல க்ஷமனாகிறிலேன்; பிரானே! என்னை என் செய்ய நினைத்தருளினாய்?' என்று, தாம் பெரியபெருமாளைநோக்கிக் கூப்பிடுகிற பாசுரத்தை அந்யாபதேஶத்தாலே பேசுகிறார். பெரிய பெருமாளோடே கலந்து பிரிந்தாளொருபிராட்டி, வ்யஸநாதிஶயத்தாலே மோஹதஶாபந்நையாயிருக்கிறபடியைக் கண்டு இவளிலும் அவஸந்நையாயிருந்த இவளுடைய திருத்தாயார், இவளுக்குச்செல்லுகிற தஶை சொல்ல நிலமல்லாமையாலே, இவளுடைய தஶையைப் பெரியபெருமாளுக்குக் காட்டி இவளுடைய வ்யஸநகாரிதமான சேஷ்டிதங்களையுஞ்சொல்லி இவள் திறத்து என்செய்யநினைந்தருளினாயென்று பெரியபெருமாளைநோக்கிக் கூப்பிடுகிற பாசுரங்களாகச் சொல்லுகிறாள்.

ஒ.—இரண்டாந் திருவாய்மொழியில், திருவேங்கடமுடையான் திருவடிகளிலேபுக்கு அடிமைசெய்தல்லது தரிக்கமாட்டாமை தாத்பர்யமாக அவன் திருவடிகளிலே ஶரணம்புக்கவிடத்திலும் ஸ்வாபேக்ஷிதம்பெறாதே மிகவும் நோவுபட்டிருக்கிறதுக்குமேலே, தமக்கு பகவத்ப்ராப்தி ப்ரதிபந்தகங்களான விஷயேந்த்ரியாதிகளுடைய ஸ்வபாவத்தை நிரூபித்துக்கலங்கின ஆழ்வார் "இவ்வார்த்தி தீரலாம்" என்று பெரிய பெருமாள் திருவடிகளிலேசென்றுவிழ "இவரை எங்ஙனே பரிஹரிப்போம்" என்று அவனும் சிந்தியாநிற்க, அத்தை அநுஸந்திக்கக்ஷமரன்றிக்கே தம்மை ஒரு விஶேஷகடாக்ஷம்பண்ணி அருளிற்றிலராகக்கொண்டு அத்யந்தம் அவஸந்நராய், தம்முடைய தஶையை அந்யாபதேசத்தாலே பேசுகிறார். பெரிய பெருமாளோடே ஸம்ஶ்லேஷித்து விஶ்லேஷித்தாள் ஒருபிராட்டி, விஶ்லேஷவ்யஸநத்தினுடைய முறுகடியாலே அத்யந்தம் அவஸந்நையாய், க்ஷணந்தோறும் இருந்து கண்ணநீர்கள் வெள்ளமிட அழுதும், க்ருதாஞ்சலியாய்க்கொண்டு தொழுதும், பரவஶையாய்மோஹித்தும், உணர்ந்தும், அவருடைய அஶரண்யஶரண்யத்வாதிகுணங்களையும் அழகுகளையும் நினைத்தும், அவற்றைப்பேசியும், ஶாஸ்த்ரங்களிற்சொல்லுகிற அடைவு அன்றிக்கே அக்ரமமாக எல்லாதஶைகளும்வந்து தலைகாட்டி நோவுபடுகிற இவளுடையதஶையை அநுஸந்தித்து மிகவும் அவஸந்நையான திருத்தாயார், பெரியபெருமாளுக்கு இவளுடைய அவஸ்தைகளை விண்ணப்பஞ்செய்து, இவள் திறத்துச்செய்தருள நினைத்தது என்? என்று அதிதாருண த்வநியாக மிகவும் கூப்பிடுகிறாள்

ப.—இரண்டாந்திருவாய்மொழியில், கீழே - விஷயேந்த்ரியாதிகளுடைய அதிப்ரவ்ருத்தியை யநுஸந்தித்து ஆர்த்தராய்க் கூப்பிட்டவர், "கன்னலேயமுதே" என்று கீழநுஸந்தித்தபோக்யதையாலே இந்த ஆர்த்தியோடேகூட அதிப்ராவண்யமும் நடந்து, ப்ராவண்யாநுரூபமான அநுபவம் லபியாமையாலே "அது ப்ரதிபந்தககார்ய மிறே" என்றுஅநுஸந்தித்து, ப்ரதிபந்தகங்களைப்போக்கி யநுபவிப்பிக்கவேண்டும் போக்யதைக்கீடான ப்ராப்யபூதனுடைய அநுபாவ்ய சிஹ்நயோகத்தையும், ரக்ஷணார்த்த ப்ரவ்ருத்திவிசேஷத்தையும், ரக்ஷணப்ரதிபந்தக நிவர்த்தகத்வத்தையும், அபரிச்சிந்ந மாஹாத்ம்யத்தையும், ஆஶ்ரிதாபேக்ஷிதகரத்வத்தையும், ஆஶ்ரித ஸம்ரக்ஷணார்த்தமான ஆயுதபூர்த்தியையும், ஸம்ரக்ஷணோபயுக்தமான ஸமுத்ரஶாயித்வத்தையும், அவதார தசையில் அதிமாநுஷசேஷ்டிதத்தையும், ப்ரணயித்வாதிஶயத்தையும், ஈஶ்வராபிமாநிகளுக்கும் அந்தராத்மாவான ஈஶ்வரத்வாதிஶயத்தையும் அநுஸந்தித்து, "இப்படி ரக்ஷகனுமாய் போக்யனுமான அவன் ப்ரதிபந்தகத்தைப்போக்கி யநுபவிப்பிக்கிறிலன்" என்கிற ஆர்த்யதிஶயத்தாலே அரதிக்ருதமான அநேகவ்யாபாரங்களைப்பண்ணி அவஸந்நராய், அர்ச்சாவதாரஸுலபமானபெரியபெருமாளை நோக்கிப் பிறந்தஅபிநிவேஶாதிஶயத்தாலே அப்ராக்ருதிங்கதரான ப்ரகாரத்தையநுஸந்தித்துப் பரிவரானவர்கள் இவருடைய தஶையைஅவர்க்கு விண்ணப்பஞ்செய்த ப்ரகாரத்தை நாயகரான பெரியபெருமாளோடு விஶ்லிஷ்டையான நாயகியினுடைய ஆர்த்யதிஶயத்தை யநுஸந்தித்துஆற்றாளாய் நற்றாயானவள் தன்னுற்றாமையின் மிகுதியாலே அவரை புத்தியாலே அபரோக்ஷித்து இரங்கியுரைத்த பாசுரத்தாலே அருளிச்செய்கிறார்.

இ.—இரண்டாந்திருவாய்மொழியில், திருவேங்கடமுடையான் திருவடிகளிலே பிராட்டி புருஷகாரமாக ஶரணம்புக்கவிடத்திலும் ஸ்வாபேக்ஷிதம்பெறாமையாலே மிகவும் அவஸந்நரானதுக்குமேலே, தமக்கு பகவத்ப்ராப்தி ப்ரதிபந்தகங்களான விஷயேந்த்ரியாதிகளுடைய ஸ்வபாவத்தை நிரூபித்துக்கலங்கினவர், "வானவர்கள் சந்திசெய்யநின்றான் அரங்கத்தரவினணையான்" என்று திருவேங்கடமுடையான்வந்து சாய்ந்தருளின இடமாகையாலே "இவ்வார்த்தி தீரலாம்" என்று பெரியபெருமாள் திருவடிகளிலேவிழ, அவரும் "முதலிலே தம்முடைய கார்யம் நமக்கே பரமென்று ஸமர்ப்பித்தாராகில் நாமும் அதுசெய்யக்கடவோமாய், இவரைஇங்கேவைத்துக் கொள்ளக்கடவ கார்யமும்கொண்டு க்ரமத்தாலே இவர் அபேக்ஷிதம் செய்கிறோமென்று ஆறியிருந்தோம்: இந்த்ரியம்வாயகங்களாகாதபடி- பல்வாங்கின பாம்புபோலே தங்கார்யம் செய்யாதபடி-பண்ணி இங்கே தம்மை நிரந்தராநுபவம் பண்ணும்படி பண்ணினோம்:அந்தக்ரமத்தைப் பொறுக்கமாட்டாதே த்வரியாநின்றார்: இவரை எங்ஙனே பரிஹரிப்போம்?" என்று சிந்தித்தருளாநிற்க, அத்தை அநுஸந்திக்கக்ஷமரன்றிக்கே, தம்மை விஶேஷகடாக்ஷம் பண்ணிற்றிலர் என்று அத்யந்தம் அவஸந்நராய், தம்முடைய தஶையை அந்யாபதேஶத்தாலே பேசுகிறார். பெரிய பெருமாளோடே ஸம்ஶ்லேஷித்து விஶ்லேஷித்தாள் ஒரு பிராட்டி பிரிவாற்றாமையாலே மிகவும் நோவுபட்டு, விழுவது எழுவதாய்க் கண்ணநீர் வெள்ளமிட- அழுதும், க்ருதாஞ்சலியாயும், பரவஶையாய் மோஹித்தும், உணர்ந்தும், அவருடைய அஶரண்யஶரண்யத்வாதிகளை நினைத்தும், அவற்றைப்பேசியும், அக்ரமமாக எல்லா தஶைகளும்வந்து தலைகாட்டி நோவுபடுகிற இவள்தஶையை அநுஸந்தித்து மிகவும் நோவுபட்ட திருத்தாயார், ஏதேனும் தஶையிலும் அத்தலையிலே அறிவித்துப்

பரிஹரிக்கும் குடியாகையாலே, பெரியபெருமாள் திருவடிகளிலே இவளைப்போகட்டு இப்படியே உம்மை ஆசைப்பட்ட இவள்திறத்துச் செய்தருள நினைத்ததென் என்று அதிதாருணத்வநியாகக் கூப்பிடுகிறாள்.

ஈடு.—*உண்ணிலாவியில்-*நமஶ்ஶப்தார்த்தம் பலவகையாலும், "தொண்டர் தொண்டர் தொண்டர் தொண்டன் சடகோபன்" என்றுததீயஶேஷத்வ பர்யந்தமாக வுள்ளபடி அநுஸந்தித்தாராயற்றது. * உலகமுண்டபெருவாயனில் - பெரிய பிராட்டியார் முன்னிலையாகத் திருவேங்கடமுடையான் திருவடிகளிலேவிழுந்து ஶரணம்புக்கார்; விஷயங்களும் இந்த்ரியங்களும் நடையாடுகிற ஸம்ஸாரத்திலே வைத்தபோதே தன்பக்கலினின்றும் நம்மை யகற்றப்பார்த்தானாகாதே யென்றுகூப்பிட்டார் - *உண்ணிலாவியில். வ்யபிசாரமுமின்றிக்கே வ்யவதாநமுமின்றிக்கே யிருக்கிற ஸாதநத்தைப்பற்றின பின்பும் அதுஃபலியாவிட்டால் அவன்தன்னையே இன்னாதாய்க்கொண்டு கூப்பிடுமத்தனையிறே. இப்படி கண்ணழிவற்றது பின்னையும் ஃபலியாதொழிவானேன்? என்னில்; அது ஃபலியாநிற்க, க்ரமப்ராப்திபொறுக்கமாட்டாமல் படுகிறார்: ஈஶ்வரனுடைய ஸர்வஜ்ஞத்வத்துக்கும்அவ்வருகான இவருடைய மார்த்தவவேஷ மிருக்கிறபடி. பிராட்டியைப் போலே†"[illegible]" (தத்தஸ்யஸத்ருஶம்பவேத்) என்றிருக்கமாட்டார், ருசிஅளவில்லாமையாலே. ஸம்ஸாரத்தினுடையதோஷத்தையும் அநுஸந்தித்து

*கங்குலும்பகலும் ப்ரவேஶ; 'உண்ணிலாவியில் நமஶ்ஶப்தார்த்தம்' என்கிறதுக்குஇரண்டுஸங்கதி: முந்தினது, உலகமுண்ட பெருவாயனிலே - த்வயத்தில் பூர்வகண்டார்த்தத்தை அருளிச்செய்தார்; உண்ணிலாவியில் உத்தரகண்டத்தில் நமஶ்ஶப்தார்த்தத்தை யருளிச்செய்தார்; இதில் - ஸ்ரீமத்பதநாராயண பதார்த்தத்தை யருளிச்செய்கிறார். "என்றிருமகள்சேர் மார்பன்" என்றதிலே - * ஸ்ரீமத்பதார்த்தம் ஸூசிதம். "[illegible]", என்று - பாடக்ரமாத்அர்த்தக்ரமஸ்யபலீயஸ்த்வாத்,விரோதிநிவ்ருத்த்யநந்தரம்கைங்கர்யம்ஸித்திக்கவேண்டுகையாலே, முந்தற, உண்ணிலாவியிலே - நமஶ்ஶப்தார்த்தம் சொல்லிற்றென்று. இப்பக்ஷத்தில், உத்தரவாக்யஸ்த்தநமஸ்ஸில் ததீயஶேஷத்வம் சொல்லப்படாமையாலே, அத்தை - இங்கே, "தொண்டர் தொண்டர் தொண்டர் தொண்டன்" என்றுசொல்லும் கிஞ்சித்அஸ்வாரஸ்ய முண்டு, ஆகையாலே, உலகமுண்டபெருவாயனிலே, "புகலொன்றில்லாவடியேன்" என்று - ப்ரணவார்த்தம் சொல்லிற்று; உண்ணிலாவியில் - திருமந்த்ரத்தில் நமஶ்ஶப்தார்த்தம் சொல்லிற்று; கங்குலும்பகலிலே - திருமந்த்ரத்தில் நாராயணபதார்த்தம் சொல்லுகிறதென்று கொள்ளவேணுமென்று இரண்டாம் ஸங்கதி. * கங்குலும்பகலில் - திருமந்த்ரத்தில் நாராயணசப்தார்த்தம்சொல்லுகிறபடி யெங்ஙனே? என்னில்; நாராயணபதத்தில் சதுர்த்யர்த்தம் - கைங்கர்யமுமாய், அதுதான்அநுபவஜநித ப்ரீதிகாரிதமாய், அவ்வநுபவந்தான் ப்ராவண்யகார்யமாய், அந்தப்ராவண்யத்தை இதிலே சொல்லுகையாலே. இத்திருவாய்மொழிக்கு ஸங்கதியருளிச்செய்வதாக, கீழிரண்டுதிருவாய்மொழிகளில் ப்ரமேயங்களை யநுவதிக்கிறார் - உலகமுண்டஇத்யாதிவாக்யத்வயத்தாலே. ஸாதநத்தை யநுஷ்டித்தவர்கள் ஃபலஸித்திபர்யந்தம் ஆறியிருக்குமாபோலே யாறியிராமல் கூப்பிடுவானென் ?என்ன - வ்யபிசாரமும்இத்யாதி. வ்யபிசாரம் - ஃபலாவ்யாப்தி. வ்யவதாநம் - காலவிளம்பம். ஸித்தஸாதநமாகையாலே இரண்டுமில்லையென்றபடி. இப்படியிருக்கிற ப்ரபத்தி விஃபலமாவானென் ? என்கிற ஶங்கையை யநுவதித்துப்பரிஹரிக்கிறார் - இப்படி இத்யாதிவாக்யத்வயத்தாலே.பொறுக்கமாட்டாமைக்கு ஹேதுவேதென்ன - ஈஶ்வரனுடையஇத்யாதி. ஆனாலும், பிராட்டியைப்போலே தரித்திருக்கவொண்ணாதோ என்ன - பிராட்டியைஇத்யாதி. ருசியினளவில்லாமையை ஹேதுபூர்வகமாக விவரிக்கிறார் - ஸம்ஸாரத்தினுடையஇத்யாதி. இப்படி அலாபத்தில் நோவுபட்டதுக்கு இவர்க்குஒப்புண்டோ?

† ராமா - ஸு - 39, 30.

எம்பெருமானுடைய குணோத்கர்ஷத்தையும்அநுஸந்தித்தால் ஆறியிருக்கப்போகாதிறே. ஹகவத்விஷயம்அறியாத ஸம்ஸாரிகள்இவர்க்குக்கூட்டல்ல;ஹகவதலாஹம்அறியவேண்டாத நித்யஸூரிகளும் இவர்க்குக்கூட்டன்று; அலாஹத்தில் நோவுபடுக்கைக்கு இவரோருவருமேயுள்ளார். பட்டர், இத்திருவாய்மொழி யருளிச்செய்யும் போதெல்லாம் "ஆழ்வார்க்கு ஓடுகிற ஒவையறியாதே அவருடைய ஹாவவ்ருத்தியுமின்றிக்கே யிருக்கிற நாம்என்சொல்லுகிறோம்?" என்று திருமுடியிலே கையை வைத்துக்கொண்டிருப்பர். அவனும், "இவர் நமக்கேஹரமேன்னுமிடம்அறிவித்தாராகில், நாமும்இவர்கார்யம்செய்யக்கடவதாக அற்றபின்பு செய்து தலைக்கட்டிற்றன்றோ? இவர் அங்குப்போய்அநுஹவிக்கும் அநுஹவம் இங்கேயிருந்தே குறைவற அநுஹவியாநின்றாராகில், 'விரோதிபோயிற்றில்லையே' என்று இவர்பண்ணுகிற அதிஶங்கையும் போக்குகிறோம்; நாலுநாள் முற்பாடுபேற்பாடன்றோ? இதில் கார்யமேன்?" என்றிருந்தான். பிற்பாடு பொறுக்கமாட்டாத இவரை வைக்கப்போருமோ?என்னில்; ப்ரஜைகளைப் பட்டினியிட்டு வைத்தும் வந்த விருந்தினரைப் பேணுவாரைப்போலே, "இவர்தாம் நாலுநாள் நோவுபட்டாராகில் படுகிறார்; இவருடைய ப்ரபந்தத்தைக் கொண்டு நாட்டை வாழ்விப்போம்" என்றிருந்தான். இவர் ஒருமுஹூர்த்தமிருக்கையாவது, தன்னாலும் திருத்தவொண்ணாத ஸம்ஸாரம் திருந்தி வாழும்படியாயிருந்தது என்றதுக்காக வைத்தான் அவன்; இவர், "நம்படியறிந்தானாகில், தனக்கு ஶக்தியில் குறையில்லையாகில், இதுபொருந்தாத நம்மையிட்டுக் காரியங்கொள்ள வேணுமோ? இவ்விருப்பில் பொருந்துவார் ஒருவரைத் திருத்திக் காரியங்கொள்ளத் தட்டேன்?" என்றிருந்தார். அவனும் "அது பொருந்தாதாரையேகொண்டு காரியங் கொள்ளவேணும்" என்றிறே இருக்கிறது. தேசிகரையிட்டுக் காரியங்கொள்ளவேணுமே. பண்ணின ப்ரபத்தி சடக்கெனப்பலியாதொழிந்தது, ப்ரஹ்மாஸ்த்ரம்வாய்மடிந்த மாத்ரமிறே. இனித்தான்அவனும் ஸ்ரீபரதாழ்வான் மாதுலகுலத்தில்நின்றும் வந்து தாயாரை நமஸ்கரிக்க, அவள் †"**ஶாஜந**" (ராஜந்) என்ற வெம்மை பொறுக்கமாட்டாமைப் பெருமாள் திருவடிகளிலே தன்ஆற்றாமையோடே விழுந்து ஶரணம்புக்கு, "தேவர் மீண்டருள

என்ன - ஹகவத்விஷயம்இத்யாதிவாக்யத்ரயம். இப்படியிருக்கிற இவருடைய ஆர்த்தியைப்ரகாஶிப்பிக்கிற இத்திருவாய்மொழிக்கர்த்தம், கரைமேலேநிற்கிறஅஸ்மதாதிகள் சொன்னால் விரஸமாயிருக்குமென்னுமத்தை ஆப்தஸம்வாதத்தாலே உபபாதிக்கிறார் - பட்டர்இத்யாதி. ஈஶ்வரன்தான் இவரை வைத்ததுக்குக் கருத்தென்? என்ன - அவனும்இத்யாதி. இவரிருந்தால் ஜகத்துத்திருந்துமோ? என்ன - இவரொருமுஹூர்த்தம்இத்யாதி. அத்தையறிந்த இவர் த்வரிக்கிறதென்? என்ன - இவர் நம்படிஇத்யாதி. இவ்விருப்பில் பொருந்துவார் - திருமழிசைப்பிரான்போல்வார். அவனுக்கும் இதில் பொருந்துவாரையிட்டுக் காரியங்கொள்ள வொண்ணாதோ? என்ன - அவனும்இத்யாதி. அதுக்கு ஹேதுவேதென்ன - தேசிகரைஇத்யாதி. தேசிகரென்கிறது - ஸம்ஸாரதோஷமும் ஹகவத்வைலக்ஷண்யமும் நன்றாக அறிந்தவர்களென்றபடி. அதாவது - ஸம்ஸாரத்தில் பொருந்தியிருக்கும் அவர்களைத் திருத்தும்போது ஸம்ஸாரம் தூஸ்ஸஹமாம்படியான ப்ரேமமுடையாரைக்கொண்டு கார்யங்கொள்ளவேணும்; இப்படியன்றிக்கே, இதில் பொருந்துவாரைக்கொண்டு கார்யங்கொண்டால் "தனக்கொன்றும் பிறர்க்கொன்றுமாய்இவன்சொல்லுகிறபடி பாரீர்!" என்று அவர்கள் இருந்தார்கள் என்று அவற்குக்கருத்தென்றபடி. 'தேசிகரைக்கொண்டுகார்யங்கொள்ளவேணும்' என்றிருக்கிறது அறிந்திருக்க இவர்கூப்பிடுவானென்?என்ன- பண்ணின இத்யாதி. "பிற்பாடுபொறுக்கமாட்டாத" இத்யாதிவாக்யோக்தஶங்கைக்குப் பரிஹாராந்தரம்-இனித்தானவனும் இத்யாதி. அதாவது - ஸ்ரீஹரதாழ்வானைப்போலே ஸ்வாதந்த்ர்யத்தாலே வைத்தானென்றபடி. கீழே "ஈஶ்வரனுடைய ஸர்வஜ்ஞத்வத்துக்கும்" இத்யாதி

---

† *ராமா - அயோ.* 72, 24.

வேணும்'' என்ன; பெருமாளும், மீளாமைக்கு ஹேதுவாயிருப்பன அநேகத்தைஇவனுக்குச் சொல்லி, ''பிள்ளாய்! நீ நிர்ப்பந்திக்கக்கடவையல்ல; உன்னை ஸ்வதந்த்ரனாக்கி வார்த்தைசொன்னோமேதிரே, உன் ஸ்வரூபாநுரூபமான பாரதந்த்ர்யத்தைப்பெற்று நீ போ'' என்று சொன்னாற்போலே; இவர் அபேக்ஷித்ததொழிய ஏதேனுமொன்றைக் கொடுத்துப் போகட்டுப் போகவல்லானொரு ஸ்வதந்த்ரனிறே; ஆகையாலேதான் நினைத்தபோது கார்யம் செய்யக்கடவனுமா யிருக்குமிறே. ஸர்வஜ்ஞனானவன் இவர்க்குஒடுகிற தசையறிந்து, தன்னுடைய ஸர்வசக்தித்வங்கொண்டு இவர்க்குஒரு பரிஹாரம் பண்ணவொண்ணாதபடி இவருடைய பாவிசேஷமிருக்கிறபடி. இவர்தாமும் ''விண்ணுளார்பெருமானேயோ!'' என்றும் ''முன்பரவைகடைந்தமுதங்கொண்டமூர்த்தியோ!'' என்றும், ''பலமுதல்படைத்தாய்!'' என்றுஞ் சொல்லுகிறபடியே - பரத்வம், அவதாரம், ஜகத்காரணத்வம் இவற்றைச் சொல்லியிறே கூப்பிட்டது; அதில், பரத்வம் லோகாந்தரமாகையாலே, ''கிட்டப்பெற்றிலோம்'' என்றாறியிருக்கலாம்; அவதாரம் காலாந்தரமாகையாலே, ''அக்காலத்தில்உதவப்பெற்றிலோம்'' என்றாறியிருக்கலாம். ''ஜகத்காரணத்வம் தான் அறிந்துசெய்யுமதாகையாலே, ''நம்மால்செய்யலாவதில்லை'' என்றுகொண்டு ஆறியிருக்கலாம்; அவ்விழவுகளெல்லாம்தீரும்படி ஸந்நிதிபண்ணிக்கொண்டு கோயிலிலே கண்வளர்ந்தருளுகிற பெரியபெருமாள் திருவடிகளிலேவிழுந்து தம்அபேக்ஷிதம்பெறாவிட்டால் தரிக்கவொண்ணாதிறே. விஷயம்அஸந்நிஹிதமாதல், ஜ்ஞாநத்தில்கொத்தையுண்டாதல் செய்யிலிறே தரித்திருக்கலாவது. நீர்மையில் கண்ணழிவுண்டாயாதல், மேன்மையில் கண்ணழிவுண்டாயாதல் இழக்கின்றாரன்றே. இப்படியிருக்கச்செய்தேயும் அவன்திருவடிகளிலே தமக்குநினைத்த பரிமாற்றம்பெறாமையாலே தாமானதன்மைபோய் ஒருபிராட்டிதசையை ப்ராப்தராய் அவ்வளவிலும் தமக்கு ஓடுகிற தசையைத் தாம் அறிந்து கூப்பிடப்பெறாதே, திருத்தாயார் கூப்பிடும்படியாய் விழுந்தது. ஸம்ஸ்லேஷ விஸ்லேஷங்களில் பிறக்கும் லாபாலாபங்களாலே தாம் பிராட்டிமார் தசையையுடையராகிறார்; திருத்தாயாரான ஸ்வபாவம் விளைந்தபடி எங்ஙனே? என்னில்; கிண்ணகம்பெருகியோடாநின்றால் இருகரையும்ஆறுகளாகப் பெருகிப்போகாநிற்கச்செய்தேயும் கடலிற்புகும்அம்சம்குறையாமல் போய்ப்புகுமாபோலேயாயிற்று, இவ

வாக்யவிவரணம்-ஸர்வஜ்ஞனானவன் இத்யாதி. இவ்வளவும்-உண்ணிலாவியில்ப்ரமேயத்தையநுவதித்து. இதக்கு-''கங்குலும்பகலோடே'' ஸங்கதி-இவர்தாமும்இத்யாதி. ஜகத்காரணமென்ற-தவ்யூஹத்தை. இவர் அசித் அவிசேஷிதராய்க்கிடக்க ஒருகாலவிசேஷத்திலே தானறிந்து செய்யுமதாகையாலே என்றபடி. இங்குஅபேக்ஷிதங்கிடையாவிட்டால் தரிக்கவொண்ணாமைக்கு ஹேதுவையருளிச்செய்கிறார் - விஷயம்இத்யாதி. ஜ்ஞாநத்திலென்றது - ஈஸ்வரஜ்ஞாந சக்த்யாதிகளிலென்றபடி. ஏதத்விவரணம் - நீர்மையில்இத்யாதி.மேன்மையாவது - ஜ்ஞாநசக்த்யாதிபூர்த்தி. இப்படி மேன்மை நீர்மைகளிரண்டும் குறைவற்றிருக்கிறவிடத்திலும் அபேக்ஷிதங்கிடையாமையாலே வந்தஆற்றாமையின்கனத்தை யருளிச்செய்கிறார் - இப்படியிருக்கச்செய்தேயும் இத்யாதி. பிராட்டிதசையும் திருத்தாயார்தசையும் ஏககாலத்திலேயுண்டாகில் இவருடைய ப்ராவண்யம் ஸங்குசிதமாகாதோ? என்கிறசங்கையை யநுவதித்துப் பரிஹரிக்கிறார் - ஸம்ஸ்லேஷஇத்யாதிவாக்யத்வயத்தாலே. திருத்தாயாரான ஸ்வபாவம் விளைந்தபடியெங்ஙனே? என்றவநந்தரம், 'விளைந்ததாகில் இவருடைய அபிநிவேசத்துக்குக் குறைவு வாராதோ? என்னில்' என்றுஅத்யாஹார்யம். மேல்பரிஹாராநுகுணமாக,அபிநிவேசம்குறையாதுஇருக்கிறபடி என்று கூட்டுவது. ஆக, பரிஹாரம் - தாயாராயும் சொல்லலாம்; அபிநிவேசத்துக்குக்

ருடைய "அதனிற்பெரிய வென்னவா" என்கிற அவிநிவேஶமிருக்கிறபடி; ஆகையாலே இவர்க்கு எல்லார்பேச்சும் பேசக்குறையில்லை. இப்பெண்பிள்ளை மோஹித்துக்கிடக்க, இவளைக்கண்டு உறவுமுறையாரடங்கலும் மோஹித்துக்கிடக்க; பெருமாளிலும் இளையபெருமாளுக்குத் தளர்த்தியுண்டாயிருக்கச்செய்தே பெருமாளுடைய ரக்ஷணத்துக்காக இளையபெருமாள் உணர்ந்திருக்குமாபோலே, திருத்தாயாரும் இவளுடையரக்ஷணத்துக்காக வுணர்ந்திருந்து, ஏதேனுமொரு தஶையிலும் தங்கள் காரியம் தாங்கள் செய்யக்கடவதன்றிக்கே இவன்காலிலேவிழுந்து தங்கள்காரியம் தலைக்கட்டுங்குடி யாகையாலே, பெரியபெருமாள்திருவடிகளிலே இவளை யிட்டுவைத்துக் கொண்டிருந்து, "இவளழுவது, தொழுவது, மோஹிப்பது, ப்ரலாபிப்பது, அடைவு கெடப் பேசுவது, நெடுமூச்செறிவது, அதுதானும் மாட்டாதொழிவது, ஸ்தப்தையாயிருப்பது, இப்படி †அரதிவிஞ்சிச் செல்லாநின்றது; இவள் திறத்திலே நீர் என்செய்யக்கடவீர்?" என்று கூப்பீடாய்ச் செல்லுகிறது. எல்லாவளவிலும் அவனையே பரிஹாரங்கேட்கும் குடியாகாதே. ஆண்டாள்ஒருநாள் ஆழ்வானுக்கு, "பிள்ளைகள் விவாஹப்ராப்தராணுர்கள்: இவ்விடையாட்டமொன்றும் ஆராயாதிருக்கிறதேன்?" என்ன, "ஃகவத்குடும்பத்துக்கு என்னை இன்றிருந்து கரையச்சொல்லுகிறாயோ? நாளை நான் வாசித்துச்சமையக் கொள்ள, அங்கேவரக்காட்டு" என்ன, பட்டரையும் சீராமப்பிள்ளையையும் கொடுத்துப் போகவிட, வாசித்துச்சமைந்து பெருமாள்திருவடிகளிலே நிற்க, "ஒன்றுசொல்லுவாய் போலே யிருந்தாயீ!" என்று திருவுள்ளமாக, "'இவர்கள் விவாஹப்ராப்தராணுர்களென்னுநின்றார்கள்" என்று விண்ணப்பஞ்செய்ய, "எல்லாம்செய்கிறோம்" என்று திருவுள்ளமானார்; பிற்றைநாளே மன்னியைக்கொண்டுவந்து கொடுத்தார்கள். **அகளங்க** ப்ரஹ்மராயர் அடையவளைந்தான் செய்யாநிற்கச்செய்தே மதிள் போக்குகைக்காக இளையாழ்வானகத்தை வாங்கப்புக, பட்டர் அத்தைக்கேட்டருளி, "வாரீர் பிள்ளாய்! நீர் செய்கிற மதிள் பெருமாளுக்கு ரக்ஷகமென்றிராதேகொள்ளீர்; இங்குக்கிடக்கிற நாலுகுடியுங் காணும் பெருமாளுக்கு ரக்ஷை; ஆனபின்பு நீர் செய்கிறவையெல்லாம் அழகிது; இவையெல்லாம் நாம் செய்கிறோமென்றிராதே, பெருமாள் செய்விக்கிறாரென்றிரீர்; உமக்கு நல்வழிபோக வுடலாங்காணும்" என்றருளிச்செய்தார். இத்திருத்தாயாரும் ஸர்வபாரங்களையும் அவர்தலையிலேபோகட்டுப் பெண்பிள்ளையைத் ‡ திருமணத்தூணுக்குள்ளே போகட்டு, அவருடைய அஶரண்யஶரண்யத்வாதி குணங்களை விண்ணப்பஞ்செய்யாநின்று கொண்டு, ஒருகாலநியதியாதல், ஒருதேஶநியதியாதல், அதிகாரிநியதியாதலின்றிக்கே ஸர்வஸமாஶ்ரயணீயரா யிருக்கிறபடியை யநுஸந்தித்து, தன் பெண்பிள்ளையினுடைய தஶையைத் திருவுள்ளத்திலே படுத்துகிறாள் இத்திருவாய்மொழியாலே

குறைத்தலில்லையென்றபடி. இத்திருவாய்மொழியில் நாயகியினுடைய ***ஆர்த்திப்ரகாரங்களை*** *விஸ்தரேண அருளிச்செய்கிறார்-இப்பெண்பிள்ளை இத்யாதி. "மயங்கும்" என்றத்தைப்பற்ற-மோஹித்து என்றது. பந்துக்களடங்கலும் மோஹித்தார்களாகில் திருத்தாயார் உணர்ந்திருக்கும்படி யெங்ஙனே? என்ன - பெருமாளிலும் இத்யாதி. "அழுந்தொழும்" என்றத்தைப்பற்ற-அழுவது இத்யாதி. "வெவ்வுயிர்க்கும்" என்றத்தைப்பற்ற - நெடுமூச்செறிவது என்றது. அவனைக்கேட்கிறதென்? தாங்களே பரிஹரித்துக்கொள்ள வொண்ணாதோ? என்ன - எல்லாவளவிலும் இத்யாதி. இதுக்கு ஸம்வாதத்வயம் - ஆண்டாள் இத்யாதி. 'பெருமாள் செய்விக்கிறார்' என்றவிடம் அபேக்ஷிதம். "பற்றிலார்பற்ற நின்றானே" என்றத்தைப்பற்ற - அஶரண்யஶரண்யத்வாதி என்றது.*

---

† *'ஆர்த்தி' என்று பாடாந்தரம்.* ‡ *திருமணத்தூண் - ஆமோதஸ்தம்பம்: "மாயோனை மணத்தூணேபற்றி நின்று" என்ற பெருமாள் திருமொழியையுங் காண்க.*

முதற்பா

கங்குலும்பகலும்கண் துயிலறியாள்கண்ணநீர்கைகளாலிறைக்குஞ்
சங்குசக்கரங்களென்றுகைகூப்புந்தாமரைக்கண்ணென்றேதளரும்
எங்ஙனே தரிக்கேனுன்னைவிட்டென்னுமிருநிலங்கைதுழாவிருக்குஞ்
செங்கயல்பாய்நீர்த்திருவரங்கத்தாய் இவள்திறத்தென்செய்கின்றாயே?

ஆ.—உன்னைக் காணப்பெறாத நிரவதிக வ்யஸநத்தாலே திவாராத்ர விபாகமின்றியே ஒருகாலும் நித்ரையானது எங்ஙனேயிருக்கும் என்றறியாள். உன்னைக் காண்கைக்காகப் பெருத்தாகவூறுகிற கண்ணநீராகிற கடலைத் தன்னுடைய அஹி! ஸத்தாலும் மௌக்த்யத்தாலும் தன்சிறுக்கைகளாலே இறையாநிற்கும். "கூராராழிவெண்சங்கேந்திக் கொடியேன்பால் வாராய்" என்று சொல்லத்தொடங்கி முடியச்சொல்ல க்ஷமையல்லாமே, அவ்விரப்புத் தோன்றும்படி கைகளாலே தொழாநிற்கும். தாமரைக்கண்களால் நோக்காய் என்றுசொல்ல உத்யோகித்தமாத்ரத்திலே தளரும். என்னையுங்கூடத் தோற்பித்து அடிமையாக்கின கண்களையுடைய உன்னைப்பிரிந்து, தீக்ஷ்ணமான விஷத்தைப் பாநம்பண்ணினாற்போலே ஒருபடியாலும் தரிக்கமாட்டேனென்று சொல்லாநிற்கும். தன்னுடைய ஸந்தாபத்தைப் பொறுக்கமாட்டாமே, மஹீதலத்திலே விவேஷ்டநம் பண்ணாநிற்கும். "நிகில ஜந்துஜாதசரண்யனே! கோயிலிலே கண்வளர்ந்தருளுகிறது இவளுக்காகவன்றோ? இவளுடைய தசையிருக்கிறபடி பார்த்தருளாய், பிரானே! இவள்திறத்து என்செய்ய நினைத்தருளினாய்?" என்கிறாள்.

ஒ.—முதற்பாட்டில், இப்பிராட்டியுடைய, பேசநிலமன்றிக்கே இருக்கிற தசையைப் பெரிய பெருமாளுக்கு அறிவித்து, இவள்திறத்துச்செய்தருளக்கடவது என்? என்கிறாள்.

[கங்குலும்பகலும் என்று தொடங்கி] - உறங்குகைக்கு அடைத்த இரவோடு உறங்காமைக்கு அடைத்தபகலோடு வாசியின்றிக்கே நித்ரைஎன்று ஒருதத்த்வம் உண்டு என்று அறியாள். "இப்படி நோவுபடாநிற்க வாராதொழியான்" என்று அத்யவஸித்து அவன்வந்தால் காண்கைக்கு ப்ரதிபந்தகமான கண்ணநீரை "கடலைக்கையாலே இறைக்க" என்று உபக்ரமிப்பாரைப்போலே கைகளாலே இறையாநிற்கும். "கூராராழி வெண்சங்கேந்திக்கொடியேன்பால் வாராய்" என்று சொல்லத்தொடங்கிச் சங்கு சக்கரங்கள் என்ற மாத்ரத்திலே இளைத்து, விடாய்த்தார் ஹஸ்தசேஷ்டையாலே தண்ணீர் வேண்டுமாபோலே, தன் கருத்தைக்குறையும் அஞ்ஜலியாலே தெரிவியாநின்றாள். "திருக்கண்களாலே நோக்கியருளவேணும்" என்றுசொல்ல உபக்ரமித்து அத்தைச் சேஷ்டையாலும் தலைக்கட்டமாட்டாதே மிகவும் தளராநின்றாள். இவ்வழகையுடைய உன்னைப் பிரிந்தால் தரிக்கமுடியுமோ என்னாநின்றாள். தன் ஆற்றாமையாலே இம்மஹாப்ருதிவியை எல்லாம் தன் கைகளாலே துழாவாநின்றாள். [செங்கயல்பாய் நீர்த்திருவரங்கத்தாய்] - ஜலசரஸத்வங்களுங்கூட ஹர்ஷப்ரகர்ஷத்தாலே களிக்கும்படியான கோயிலிலே உள்ளவனே! ஜலசரஸத்வங்களுக்கு ஜலத்தை ஒழியச்செல்லாதாப்போலே உம்மையொழிய இவளுக்குச்செல்லாது என்றதாகவுமாம்.

ப.—முதற்பாட்டில், அநுஹாவ்யமான அஸாதாரண சிஹ்நங்களைச் சொல்லி 'இவளார்த்தையாகாநின்றாள்: இவளளவில்என்செய்ய நினைத்திருக்கிறீர்? என்கிறாள்.

கங்குலும் - (நாட்டார்உறங்கும்) கங்குலும், பகலும் - (ப்ரணயிநிகள்உறங்கும்) பகலும், கண்-கண்கள், துயில் - துயிலவேணுமென்று, அறியாள் - அறிவும் நடையாடுகிறிலள்; (இவள் கண்வட்டத்திலுறக்கம்வாராதபடி ஶோகாஶ்ருவெள்ளங்கொள்ளுகையாலே, கடலைக் கையிட்டிறைப்பாரைப் போலே), கண்ணநீர் - கண்ணநீரை, (மாற்றுவதாக), கைகளால் - கைகளாலே, இறைக்கும் - இறையாநிற்கும்; (இக்கண்ணநீர்க்கு இரங்கிவருமென்று நினைத்து அபேக்ஷிக்கிடாகக் * கூராராழிவெண்சங்கேந்திவாக்கூடுமாகையாலே), சங்குசக்கரங்கள் - சங்குசக்கரங்கள், என்று - என்று, (அவற்றைச் சொல்லி), கைகூப்பும் - வந்தால்பண்ணும் அஞ்சலியைப்பண்ணாநிற்கும்; (வந்தால் குளிர நோக்கும் கண்களை நினைத்து), தாமரை - தாமரைபோன்ற, கண்-கண், என்றே - என்று சொல்லி, (அது பெறுமையாலே), தளரும் - தளராநிற்கும்; உன்னை - (இந்த ஆயுய ஶோபையையும் அவயவஶோபையையுமுடைய) உன்னை, விட்டு - விட்டு, எங்ஙனே - எங்ஙனே, தரிக்கேன் - யரிக்கக்கடவேன்? என்னும் - என்னும்; (தன்னார்த்த்யதிஶயத்தாலே), இருநிலம் - பூமிப்பரப்படங்க, (அவன் காலாலே துழாவினவோபாதி, தான்), கை - கையாலே, துழா - துழாவி, இருக்கும் - (அதுக்கும் ஶக்தையன்றியே நிர்வ்யாபாரையாய்)இருக்கும்; செம் - இளமையாலே சிவந்தபுகரையுடைத்தான, கயல் - கயலானது, பாய் - உகளித்துப்பாய்கிற, நீர் - நீரையுடைத்தான, திருவரங்கத்தாய் - கோயிலிலே ஸந்நிஹிதனானவனே! இவள்திறத்து - இப்படி அதிஶயிதமான விகாரத்தையுடையளாய், (அந்த நீரைப்பிரிந்த கயல்போலே உன்னைப்பிரிந்து தரியாத இவளளவிலே) என்-எது, செய்கின்றாய் - செய்கிறாய்? இவ்வார்த்தியைத் தீர்க்க நினைக்கிறாயோ? அதிஶயிப்பிக்கநினைக்கிறாயோ? என்று கருத்து.

இ.—முதற்பாட்டில், பேச்சுக்கு நிலமன்றிக்கேஇருக்கிற இவள் தஶையை அவர்க்கு அறிவித்து, இவள்திறத்துச் செய்யக்கடவது என்? என்கிறாள்.

[கங்குலும் பகலும் கண்துயிலறியாள்] - உறங்கக்கடவ இரவோடு, உறங்காமைக்குக்கண்ட பகலோடு வாசியற நித்ரை என்பதொன்று அறிகிறிலள். கண்துயிலாள் என்னாதே, அறியாள் என்கிறது - நித்ரையை அறிந்து "விரோயி" என்று கைவிட்ட இளையபெருமாளில் வாசி சொல்லுகிறது. இளையபெருமாளுக்கு முன்பு இல்லையாகிலும், ஜந்மத்தில் மெய்ப்பாட்டாலேபற்றி விடவேண்டிற்று; இவளுக்கு அதுவுமில்லை. நாட்டார் இரவு உறங்குவர்கள்: ப்ரணயிநிகள் பகல் உறங்குவர்கள்: இப்படி உபயவ்யாவ்ருத்தமாய், இரவும் பகலும் உறங்காதபடி ஆனாள். "அநித்ரஸ்ஸததம்ராமஃ" என்கிற உம்முடையபடியை இவள் உடையளானாள். [கண்ணநீர் கைகளால் இறைக்கும்]-கண்ணுறங்காமையாலேபோதுபோக்கரிதாய், அதினாலேகண்ணநீர்வெள்ளமிடத்தொடங்கிற்று. "இவ்வாற்றாமையில் அவன் வாராதொழியான்" என்று அத்யவஸித்து, "வரும்போது காண்கைக்குக் கண்ணநீர் பகையாகவொண்ணாது" என்று அத்தைமாற்றப் பாராநின்றாள். கடலைக் கையாலே இறைக்கத்தொடங்குவாரைப்போலே; இது என்ன ஸாஹஸம் என்கிறாள். * கடல்கொண்ட கண்ணீர் அருவிசெய்யாநிற்குமிறே. இவள கண்ணும் கண்ணநீரும் தாயார்க்கு ஶோகாஶ்ரயமாயிற்று "கிமிதம்தவ

நேத்ராஸ்ராஃ". இவள் "தர்மநவிரோயி" என்று மாற்றப்பார்க்கிறாள் இத்தனை. [சங்குசக்கரங்கள் என்று கைகூப்பும்] - வந்துதோற்றும்படி "கூராராழிவெண்சங்கேந்திக்கொடியேன்பால் வாராய்" என்று சொல்லக்கருதி, முடியச்சொல்லமாட்டாமையாலே, விடாய்த்தார் ஹஸ்தமுத்ரையாலே தண்ணீர்வேண்டுமாபோலே அஞ்ஜலியாலேகுறையும் தலைக்கட்டாநின்றாள். "இன்னார்என்று அறியேன்" என்று அறிவழிப்பனவும் இவை: "செருவொண்சக்கரம் சங்கு" என்றுஅறியப்பண்ணுமவையும் இவை; "சங்குசக்கரமென்று இயலாதலோ?" என்று பிள்ளை திருநறையூர் அரையர். "வைஹுவசநத்துக்குப் பொருள்கண்டிலோமீ" என்ன; "இசையிலே தூக்கினவிடத்து இரண்டும் இசைந்து கிடக்கையாலே, சொல்லிப்போருகிறபடியே 'சங்கு சக்கரங்கள்' என்ன அமையும்" என்று ஆப்பான் நிர்ணயித்தார். [தாமரைக்கண் என்றேதளரும்] - இரண்டாழ்வார்களளவும் வந்துஅலையெறிகிற கண்களின் அழகை இடைவிடாதே சொல்லநினைத்துத் தளரா நின்றாள். "தாமரைக்கண்களால் நோக்காய்" என்கிறபடியே "திருக்கண்களாலே நோக்கியருளவேணும" என்ன உபக்ரமித்து, ஹஸ்தசேஷ்டையாலும் தலைக்கட்டமாட்டாதே தளராநின்றாள். "ராஜேந்த்ரநயநவேஶ்மநீஸாக்ஷாத் விதா". தளரலாமோ, "தத்³வஸ்" என்று இருக்கவேண்டாவோ? என்ன, [எங்ஙனே தரிக்கேன் உன்னைவிட்டென்னும்,] - பரவ்யூஹவிபவங்களிலே ஆசைப்பட்டேனோ "தூரஸ்யேன்" என்று க்க? அவதாரங்களிலே ஆசைபபட்டேனோ "ஸமகாலமன்று" என்று ஆறியிருக்க? அந்தர்யாமித்வத்திலே ஆசைப்பட்டேனோ "கண்ணுக்கு விஷயமன்று" என்று ஆறியிருக்க? 'உன்னை'என்கிறது - வடிவழகையும் சீலாதிகளையும். இவளை அறியாதொழிந்தால் உம்மையும் அறியாதொழியவேணுமோ? உம்மைக் கண்ணாடிப்புறத்திலும் கண்டு அறியீரோ? அநந்தரம் வரக்காணாமையாலே, [இருநிலங் கைதுழாவிருக்கும்] - இம்மஹாப்ருதிவி எல்லாம் கைகளாலே துழாவாநின்றாளிறே. பூமிப்பரப்படங்க ஒருராஜநத்துக்கு உட்பட்ட சந்தநம்போலேஆயிற்று இவள் கைக்கே படுகிறது. ஸர்வஶக்தியே வேண்டாவாகாதே பூமியை அளக்க: ஆற்றாமையாலும் அளக்கலாமாகாதே. [செங்கயல் இத்யாதி] - ஜலசரஸத்வங்களுங்கூட ஹர்ஷத்தாலே களிக்கும்படியான கோயிலிலே உள்ளவனே! செங்கயல் - இளமையாலே சிவந்த புகரை யுடைய கயல். [இவள் திறத்து] - அந்த ஸத்வங்களுக்கு ஜலத்தை ஒழியச்செல்லாதாப்போலே உம்மை ஒழியச்செல்லாத இவள்திறத்து. நிறமும் இழந்து ஸஞ்சாரமுமற்றிறே இவள் கிடக்கிறது. 'ஸஹிவஸ்ஸரீராணி" என்று வடிவைக் காட்டுகிறாள். [திருவ தாய் என்செய்கின்றாயே] - பரமபதத்தில் இருப்பிலேயோ கேட்கிறது? விஷயமான இடத்தேயன்றோ சாய்ந்தருளிற்று. இவள் நிறமும்பெற்றுச் செருக்கிநடக்கும்படிபண்ணப் பார்த்ததோ, தவிரப்பார்த்ததோ? இவளை அவ்வூர்படியாகப்பார்த்தாயோ, இவ்வூர்ப்படியாகப் பார்த்தாயோ?

ஈடு.—முதற்பாட்டு. இப்பிராட்டியுடைய பேச்சுக்கு நிலமன்றிக்கே யிருக்கிற தசையைப் பெரியபெருமாளுக்கு அறிவித்து, இவள்திறத்துச் செய்தருளநினைத்திருக்கிறதென் ? என்கிறாள்.

முதற்பாட்டு—கங்குல் இத்யாதி. இப்பிராட்டியுடைய அநேக அவஸ்த்தைகளைச்சொல்லுகிற "கங்குலும்" இத்யாதிபதங்களையும், "என்செய்கின்றாய்" என்றபதத்தையுங்கடாக்ஷித்தவதாரிகை- இப்பிராட்டியுடைய இத்யாதி.

[கங்குலும்பகலும்கண்துயிலறியாள்] - இவளை எப்போது கண்துயிலப்பண்ண விருக்கிறீர்? விரஹிணிகளுக்கு ஓடுகிற வ்யஸநம் மாற்றுகைக்காக "இரா, பகல்" என்று ஒரு வரம்பு கட்டினவித்தனையிறே; அது இவளுக்குக்காரியமாகிறதில்லை ராத்ரியில் விஷய லாபத்தாலேபோதுபோக்கவும், பகல் இந்த்ரியங்களானவைவிஷயாந்தரங்களிலே கோடுபுக்கு மூட்டி "அப்போதாயிற்று, இப்போதாயிற்று" என்று காலக்ஷேபத்துக்கு உடலாயிருக்கு மிறே; "எங்ஙனேதரிக்கேனுன்னைவிட்டு" என்று சொல்லுகையாலே, இவளுக்கு அங்ஙனென்றுசொல்லித் தரிக்கவோண்ணாதே. தனக்கு ஆஶ்வாஸஹேதுவாகப் பண்ணின திவாராத்ரவிபாகமும் அறிகிறிலள். பகலும் இரவோடொக்கஉறங்கக்கண்டதிறே. [பகலும்]- (நாட்டாரிரவுஉறங்குவர்கள், ப்ரணயிநி) யௌவநங் குடிபுகுந்தால் இராமாறு நாயகனுக்கு அலைகொடுக்கையாலே உறக்கமில்லை; அவ்விழவுக்கும் எற்றிஉறங்குவது பகலிறே! அதுவம் பெறுகிறதில்லை. "அநித்ரஸ்ஸததம்ராம:" (அநித்ரஸ்ஸததம்ராம:) என்றுகொண்டு தன் படியாக்கினான் "பரமம்ஸாம்யமுபைதி" (பரமம்ஸாம்யமுபைதி) என்கிறபடியே தம்மோடு ஸாம்யாபத்தி கொடுத்தபடி. கண்துயில் கொள்ளாளென்னாதே, அறியாளென்கிறது - ஸம்ஶ்லேஷத்தில் அவன்உறங்கவொட்டான், விஶ்லேஷத்தில் விரஹ வ்யஸநம் உறங்கவொட்டாது; ஆகையாலே, இவளுக்கு இரண்டுபடியாலும் உறக்க மில்லாமையாலே. இவள் கலந்தவன்று உறங்கினாலும், இவள் இப்போதுபடுகிற வ்யஸ நத்தை யநுபவித்த திருத்தாயார்க்கு அது ஒன்றுய்த்தோற்றாதே! இவ்வ்யஸநத்துக்குப் பூர்வ ரங்கமாய் வந்ததோன்றுகையாலே அத்தையொன்றாக நினைத்திருக்கிறிலள். என்றும் சிறைக் கூடத்திலே பிறந்து வளர்ந்தாரைப்போலே, பிரிந்தநாளையிழவேகாணும் இவள்நெஞ்சிலே பட்டுக்கிடக்கிறது. [அறியாள்] - ஒக்கவிருக்கச்செய்தே "கைங்கர்யவிரோதி" என்று

"நித்ரைக்குக் கல்பிதமான ராத்ரியும்பகலும் கண்துயிலறியாள்" என்கிறவளுடைய ஹார்த்த ஹாவம் - இவளையெப்போது இத்யாதி. கண்துயிலறியாளென்னாதே, "கங்குலும்பகலும்" என்று விசேஷித்ததுக்கு ஹாவம் - விரஹிணிகளுக்கு இத்யாதிவாக்யத்வயம். விரஹிணிகளுக்கென்றது - விரஹாஸஹிஷ்ணுக்களுக்கென்றபடி. வ்யஸநம் ஆரம்ப்ரகாரமேதென்ன - ராத்ரியில் இத்யாதி. இவளுக்கும் அப்படி போதுபோக்கவொண்ணாதோ? என்ன - எங்ஙனேதரிக்கேன் இத்யாதி ஆகை யாலே, 'தனக்குஆஶ்வாஸஹேதுவாக' என்றுகூட்டுவது. 'பகலுங்கண்துயிலறியாள்' என்கைக்கு, பகலி லுறங்கப்ராஸக்தியுண்டோ? என்ன - பகலுமிரவோடு இத்யாதி. உறங்கக்கண்டதேதப்படி? என்ன - யௌவநம் இத்யாதி. அலைகொடுக்கையாலே - கலவிக்குஇடங்கொடுக்கையாலே. அலையென்று - வ்யாபாரமாய், ஸம்ஶ்லேஷத்தைச்சொல்லி; அலைகொடுக்கையாவது - ஸம்ஶ்லேஷிக்கையென்றபடி. ஹ்ருதம் - அநித்ர இத்யாதி. "அநித்ரஸ்ஸததம் ராமஸ்ஸுப்தோऽபி ச நரோத்தம:। ஸீதேதி மதுராம்வாணீம் வ்யாஹரந் ப்ரதிபுத்யதே" இதி ஸுந்தரகாண்டே ஸர்கம் | ப்ரதி ஹநுமாந். [௩௬ - ௪௪] "ததா வித்வாந் புண்யபாபே விதூய நிரஞ்ஜந: பரமம் ஸாம்யமுபைதி" இதி முண்டகோபநிஷதி-(௩ க)நாயகனுறங்குகிறபோதாகிலும் உறங்கவில்லையோ? என்ன - இவள்கலந்த இத்யாதி. ஹேதுபூர்வகவிவரணம் - இவ்வ்யஸநத்துக்கு இத்யாதி. பூர்வரங்கமாவது - ஹாவிர்ப்பாவ ஸூசகபூர்வஹாவவ்யாபாரம். ஆனால் இவள்நெஞ்சிலே பட்டுக்கிடக்கிறதுதான் எது? என்ன - என்றும் இத்யாதி. சிறைக்கூடத்திலேபிறந்துவளர்ந்தவர்களுக்குக்கலவிதோன்றுதாற்போலேயென்ற படி. "அறியாள்" என்றதால் வ்யாவ்ருத்தி - ஒக்க இத்யாதி. நித்ரையோடொக்கவிருக்கச்செய்தே யென்றபடி. "ஜஹௌ நித்ராம் ச லக்ஷ்மண:" என்று - கைங்கர்யவிரோதியென்று கைவிட்ட இளைய பெருமாளைச்சொல்லுகிறது. "நாயகன்வரும்" என்கிறதெளிவையும், நித்ரையில் வ்யுத்பத்தியில்லாமை

கைவிட்டவர்களிற்காட்டில் இவளுக்கு உண்டான வாசியிருக்கிறபடி முன்பில்லையாகிலும் இஜ்ஜந்மத்தில் மெய்ப்பாடுபெற்றி விடவேண்டிற்று. [கண்ணநீர்கைகளாலிறைக்கும்] - இவளுக்கு இவ்வறியாமை எங்குமொக்க அநுவர்த்திக்கப் பெற்றதில்லை! "இவ்வாற்றாமையில் ஸர்வஜ்ஞ நாயகன் வாராதிரான்" என்று பார்த்து, அப்போதாகப் பகைகொண்டாடவொண்ணாது; ப்ரதம பரிஷ்வங்கந் தொடங்கிக் காணவேணும்" என்று கண்ணநீரை மாற்றப் பாராநின்றாள். இதென்ன ஸாஹஸந்தான்! இது தன்னால்இயலு மென்றுதொடங்கினாளே. * கடல்கொண்ட கண்ணீரிறே. கோகுள்இலையைக்கொண்டு கடலைவற்ற இறைப்பதாக நினைப்பாளே! தன்கையாலே கண்ணநீரை இறைக்கப் பாராநின்றாள். "கிமர்த்தம் தவநேத்ராப்யாம்" (கிமர்த்தம் தவநேத்ராப்யாம்) என்னும்படிகாணும் இருக்கிறது. [சங்கு] - கண்ணநீரை மாற்றினால், கண்ணாலேகாண வந்துதோற்றும்படியை நினையாநின்றாள். "தவளவோண்சங்குசக்கரம்" என்று திவ்யாயுதங்களோடே காணவிறே இவள் தான் ஆசைப்பட்டிருப்பது! உகவாத கம்ஸாதிகளுக்கிறே த்விபுஜனாகவேண்டுவது. "தேநைவ ரூபேண சதுர்புஜேந" (தேநைவரூபேண சதுர்ப்புஜேந) என்றனிறே காணவாசைப்பட்ட அர்ஜுநன். "கூராராழிவெண்சங்கேந்தி வாராய்" என்னக் கணிசித்து, வலஹஸ்தியாலே தலைக்கட்டமாட்டாதே, விடாயன் கையைமடுத்துத் தண்ணீரை வேண்டுமாபோலே, குறையும்அஞ்சலியாலே தலைக்கட்டாநின்றாள். [தாமரைக் கண்ணென்றேதளரும்] - அவ்வாழ்வார்களளவுவந்து அலையெறிகிற கண்ணழகைச் சொல்

லையும் அநுஸந்தித்து வ்யாக்யாதாவின் ஈடுபாடு - இவளுக்கு இத்யாதி. எங்குமொக்கவென்றது - நித்ரையிற்போலே அவன் வரவிலும் அறியாமை யநுவர்த்திக்கப்பெற்றதில்லை யென்றபடி. கண்ணநீரைமாற்றுகைக்கு ஹேதுசொல்லுகிறாள் - இவ்வாற்றமையில் இத்யாதி. பகைகொண்டாட-ப்ரதிபந்தகமாக. 'இவ்வாற்றாமையில்' என்கிறவாக்யாநந்தரம், 'இவளுக்கு' இத்யாதிவாக்யம் அநுஸந்தேயம். "கைகளாலிறைக்கும்" என்கிறவளுடைய ஹார்த்தஸாவம் - இதென்ன இத்யாதி. ஏதத்விவரணம் - இது தன்னால் இத்யாதி. இயலும் - நிறைவேறும். கடல்கொண்டவென்றது - கடலோடொத்த என்றபடி. 'கடல்கொண்டகண்ணீர்' என்கிறபாசுரம் திருவிருத்தத்தில், "கடல்கொண்டெழுந்தது" இத்யாதி. கையாலேயிறைக்கிறது ஸாஹஸமோ? என்ன - கோதுள்இலையை இத்யாதி. கோகுள் - வ்ருக்ஷவிசேஷம். ப்ரப்தார்த்தம் - தன்கையாலே இத்யாதி. கீழே - அபரிச்சேத்யமாகையாலே இறைத்துமுடியாதென் றருளிச்செய்து, ஸாத்யமாயிருக்க எதுக்கிறைக்கிறாளென்று ஸாவாந்தரம் - கிமர்த்தம் இத்யாதி. "கிமர்த்தம் தவநேத்ராப்யாம் வாரி ஸ்ரவதி ஸோகஜம் । புண்டரீக பலாஸாப்யாம் விப்ரகீர்ண மிவோதகம்" இதி ஸுந்தரகாண்டே ஸீதாம்ப்ரதி ஹநுமான்.

[நூ - ௪] "கண்ணநீர்கைகளாலிறைக்கும்" என்றவநந்தரம் "சங்குசக்கரங்கள்" இத்யாதி. கதநத்துக்கு ஸாவம் - கண்ணநீரை இத்யாதி. "தாமரைத்தடங்கண்" என்றாற்போலே அவயவங்களைச்சொல்லாதே திவ்யாயுதங்களைச்சொன்னதுக்கு ஸாவம் - 'தவளவோண்சங்கு' இத்யாதி. அதாவது - அவயவங்களோபாதி இவையுமுத்தேஸ்யமென்றபடி. பெரியபெருமாள் த்விபுஜராயன்றோ இருப்பது: அவர்க்குச் சங்கு சக்கரங்களுண்டோ? என்ன - உகவாத இத்யாதிவாக்யத்வயம். சங்குசக்கரங்களோடே வரவேணுமென்னாதே, "கைகூப்பும்" என்றதுக்கு ஸாவம்-கூராராழி இத்யாதி. "கிரீடிநம் கதிநம் சக்ரஹஸ்தம் இச்சாமி த்வாம் த்ரஷ்டுமஹம் ததைவ । தேநைவ ரூபேண சதுர்புஜேந ஸஹஸ்ரபாஹோ பவ விஸ்வமூர்த்தே" இதிவிஸ்வரூபதர்ஸநாநந்தரே அர்ஜுநஃ. (பகவத்கீதாயாம், கக-சசு) "சங்குசக்கரங்கள்" என்றஅநந்தரம் "தாமரைக்கண்" என்றதுக்கு ஸாவம் - அவ்வாழ்வார்கள் இத்யாதி.

லப்புக்கு, நடுவே தளராநின்ருள். ''உன்தாமரைக்கண்களால் நோக்காய்' என்று சொல் லப்புக்கு, நடுவே தளராநின்ருள். ''ராமம்ரக்தாந்தநயநமபஶ்யந்தீ ஸுது:கிதா'' (ராமம்ரக்தாந்தநயந மபஶ்யந்தீஸுது:கிதா) என்னுமாபோலே. தளருகிறதென்? வேறென்றுலே போதுபோக்கினலோ என்பர்களே; [எங்ஙனேதரிக்கேனுன்னைவிட்டேன் னும்]-பரவ்யூஹவிபவங்களிலே யாசைப்பட்டேனய்ஆறியிருக்கிறேனே? [உன்னைவிட்டு எங்ஙனே தரிக்கேன் - என்னும்] - உறக்கத்தாலே, சூது சதுரங்கத்தாலே போதுபோக்க லாம் விஷயத்திலேயோ அகப்பட்டதென்னும். ''உம்முடையவைலக்ஷண்யம் நீர் அறிந் தால், நம்மைப்பிரிந்தார் தரிக்கமாட்டார்கள்'' என்னுமிடம் நீரே யறியவேண்டாவோ? [உன்னைவிட்டு எங்ஙனேதரிக்கேன் என்னும்] - உன்னைக் கண்ணுடிப்புறத்திலும் கண்டறி யாயோ? கண்டாயாகில் பிரியாய்: பிரிந்தாயாகில் இவள்பட்டது படுவதி. ''எங்ஙனே தரிக்கேன்?'' என்ற அநந்தரம் வரக்காணுமையாலே, [இருநிலம்கைதுழாவிருக்கும்] - (கண்ணநீர்ப்ரவஹிக்கச் சேருகையால்) மஹாப்ருதிவி ஒருபீங்கானுக்குஉட்பட்ட சந்தபங் கம் பட்டது படாநின்றது. [சேங்கயல்] - அவ்வூரில் வர்த்திக்கிற திர்யக்குக்களின்ஸ்வ பாவம் இவளுக்குஅரிதாவதே! அவை தந்நிறம்பெற்று வர்த்தியாநின்றன; இவள் நிறமிழந் தாள். நாரத்தைப்பற்றினது களித்து வர்த்தியாநின்றது, நாராயணனைப்பற்றின இவள் துக்கிப் பதே? [சேங்கயல்] - அழகிய கயல். அக்கயல் ஜலத்தைப்பிரிந்து தரிக்கிலன்றே இவள் உன்னைவிட்டு தரிக்கவல்லது? ''ஜலாந்மத்ஸ்யாவிவோத்ருதௌ'' (ஜலாந்மத்ஸ்யாவி வோத்ருதௌ) என்னக்கடவதிறே இவளையும். [இவள்திறத்து] - ''ஸாஹம் வஸ்யாமி

விவரணம் - உ மரை இத்யாதி. தாமரைக்கண்ணென்று தளர்ந்ததுக்கு த்ருஷ்டாந்தம் - ராமம் இத்யாதி. ''ஸா ஸம்க்ஷோபமநிஷ்ப்ரா தம்விநா வியதமஸ்ய நந்ய । ராமம்ரக்தாந்தநயந மபஶ்யந்தீஸுது:கிதா'' (ஸுந்தரகாண்டேஸப்தவிம்ஶே(உஎ).மேலுக்கு அவதாரிகை தளரு கிறதென் இத்யாதி. 'போதுபோக்கினலோ' என்கிறவர்கள் தாய்மாராகில், ''உன்னைவிட்டு'' என்றது சேராதாகையாலே; தாய்மாருக்கியாகிலும் ஈஶ்வரோக்தியாகவே ப்ரமித்து உத்தரம் சொல்லுகிறுளென் னுதல். 'என்பர்கள்' என்றத்தை பூஜாயாம் பஹுவசநமாக்கி, என்கிறவன் -அவன்றனேயாய், அதுக்கு உத்தரம் - ''உன்னைவிட்டு'' என்றதென்னுதல். ''திருவரங்கத்தாய்'' என்றத்தோடே கூட்டி ''உன்னை'' என்றதுக்குபாவம் - பரவ்யூஹ இத்யாதி. ''தாமரைக்கண்'' என்றத்தைக் கடாக்ஷித்து பாவார்தம் - உறக்கத்தாலே இத்யாதி. அகப்பட்டது விலக்ஷணவிஷயத்திலேயன்றே என்னுமென்றபடி. வில க்ஷணவிஷயத்திலே யகப்பட்டாயாகில் நம்மை யென்செய்யச் சொல்லுகிறுயென்ன - உம்முடைய இத்யாதி. வைலக்ஷண்யமாவது - கண்ணழகென்ருய், அது நமக்குத்தெரியுமோ? என்ன - உன்னைக் கண்ணுடி இத்யாதி. கண்டாலென்செய்வோமென்ன - கண்டாயாகில் இத்யாதி. கண்டாயாகில் - கண்ணுடிப்புறத்தி லுன்னைக் கண்டாயாகிலென்றபடி. பிரியாயென்றது - கண்ணுடியைப் பிரியா யென்றபடி. ''கைதுழாவிருக்கும்'' என்றதுக்குபாவம் - மஹாப்ருதிவி இத்யாதி. ''கைதுழாவிருக் கும் - '' கையாலேதுழாவாநிற்குமித்யர்த்த:. ''கை - கையாலே; துழா - துழாவி, இருக்கும் - அதுக் கும் ஶக்தையன்றியே நிர்வ்யாபாரையாயிருக்கும்''என்ற உரையில் ஶப்தார்த்தம்: கயலினுடைய சிவப் பைச்சொல்லுகிறவளுடைய பாவார்த்தபாவம் - அவ்வூரில் இத்யாதி. விவரணம் - அவைதந்நிறம் இத்யாதி. ''பூயீர்'' என்றதுக்குபாவம் - நாரத்தை இத்யாதிவாக்யத்வயம். நாரம் - ஜலம். ''சேங் கயல்'' என்றதுக்குபாவார்தம் - அக்கயல் இத்யாதி. உக்தார்த்தத்துக்குப்ரமாணம் - ஜலாந் இத் யாதி. ''நவஸீதாகயயாஹீநா'' இத்யாதி ஶ்லோகத்தடி. இவளாற்றுமை இன்னபடிப்பட்டி ருக்கு மென்னுதே, ''இவளிடையாட்டம்'' என்றதுக்குபாவம் - ஸாஹம் இத்யாதி.''ஸாஹம் வஸ்ய

ராணி'' (ஏஹிபஶ்யஶரீராணி) என்னுமாபோலே, இவள்படி பேச்சுக்கு நிலமல்லாமை யாலே காட்டுகிறாள். ராக்ஷஸர்தின்ற உடம்பைக் காட்டினாற்போலே, விரஹம்தின்ற உடம்பைக்காட்டுகிறாள். [என்செய்கின்றாயே] - இவள் திறம் செய்யப் பார்த்ததேன்? உம்முடையவூரில் பதார்த்தங்கள் பெற்றதும் பெறவேண்டாவோ, உம்மையாசைப்பட்ட (க)

ரண்டாம் பாட்(

என்செய்கின்றாயென்றாமரைக்கண்ணாவென்னுங்கண்ணீர்மல்கவிருக்கும்
என்செய்கேனெறிநீர்த்திருவரங்கத்தாயென்னும்வெவ்வுயிர்த்துயிர்த்துருகும்
முன்செய்தவினையேமுகப்படாயென்னும்முகில்வண்ணாதகுவதோவென்னும்
முன்செய்திவ்வுலகமுண்டுமிழ்ந்தளந்தாயென்கொலோமுடிகின்றதிவட்கே.

ஆ.—(என்செய்கின்றாய்.) - என்னைத்தோற்பித்து அடிமையாக்கின தாமரைக்கண்களையுடையவனே! அக்கண்களாலே என்னைக் குளிரப்பார்த்தருள நினைத்தாயோ இல்லையோ என்னும். உன்னுடைய அவலோகநாலாவஜநித ஸந்தாபத்தாலே அக்கண்ணநீர்வெள்ளமெல்லாம் ஶோஷிக்கையாலே கரைக்குட்பட்ட கண்ணநீரையுடையளாய், ஒருசேஷ்டிதக்ஷமையன்றியே யிருக்கும். "என்னுடைய ஸந்தாபத்தையெல்லாம் போக்குகைக்காகவன்றோ கோயிலிலே கண்வளர்ந்தருளிற்று? இஸ்ஸந்தாபமொன்றும் பொறுக்கமாட்டுகிறிலேன்; என்செய்கேன்''என்னும். தன்னுடைய ஸந்தாபஜநித தீர்க்கோஷ்ண நிஶ்வாஸ பரம்பரைகளாலே உருகாநிற்கும். ஈத்ருஶமான வ்யஸநத்தை அநுபவிக்கைக்கு ஜந்மாந்தரத்திலே என்ன பாபத்தைப்பண்ணினேனோ? என்னும். பரமோதாரனே! என்னுடைய அபேக்ஷிதம் செய்யாதொழிகை உன்னுடைய ஔதார்யத்துக்குப் போருமோ? என்னும். நிர்ஹேதுகமாக லோகத்தைப்படைத்து ரக்ஷித்தருளுகிற பரமகாருணிகனே! இவளுக்கு என்னாய்விளைபுகோ? என்கிறாள்.

ஒ.—இரண்டாம்பாட்டில், இப்பெண்பிள்ளையுடைய தஶை என்னாய்விடக் கடவது? என்கிறாள்.

[என்செய்கின்றாய் என்று தொடங்கி] - உன் கண்ணழகைக்காட்டி என்னை அடிமைகொண்ட நீ என் ஆர்த்திதீரக்கண்களாலே நோக்கியருளப்பார்த்தாயோ இல்லையோ என்னும். தான் அபேக்ஷித்தபோதே நோக்கி அருளாமையாலே, இன்னாப்பாலே கண்ணநீர் வெள்ளமிட சேஷ்டிக்கக்ஷமையன்றிக்கே யிருக்கும். ஶ்ரமஹரமான கோயிலையும் பெரியபெருமாள் திருவழகையும் நினைத்துப்பெறுவிடாயாலேகாணப்பெறாமையாலே, செயலற்று "என்செய்கேன்?'' என்னும். இதுக்குமேலே ஸந்தாபத்தாலே எவ்விதமாக

ஶரீராணி ஜநஸ்தாநநிவாஸிநாம்'' இத்யாதி. படி - ப்ரகாரம். "இவள்திறத்து" என்றது - இவளளவிலென்றபடி. "ஏஹி'' இத்யாதிக்கு அர்த்தகதநபூர்வகமாக, இவள்காட்டினது இன்னதென்னுமத்தையும் அருளிச்செய்கிறார் - ராக்ஷஸர் இத்யாதி. "செங்கயல்'' இத்யாதியையுங்கூட்டி "என்செய்கின்றாய்'' என்கிறவளுடைய ஹார்த்தபாவத்தை யருளிச்செய்கிறார் - உம்முடைய இத்யாதி. "நீர்'' என்றது-நாரத்துக்கு வாசகமாகையாலே, நாரமென்றது - ததீயாபிப்ராயத்துக்கும் ஸூசகம். (க)

பலகால் நெடுமூச்செறிந்து அவ்வுஷ்ணத்தாலே உருகாநிற்கும். இத்துர்த்தைக்கு அடியாக நான் பண்டுபண்ணின பாபமே உன்னுடையவடிவைக் காட்டவல்லதே என்று அதின் கொடுமையைச் சொல்லாநிற்கும். கர்மாநுகுணமாக நான் நோவுபடக்கண்டு உபேக்ஷித்திருக்கை ஜலஸ்தலவிபாகமில்லாத உன்னுடைய ஔதார்யத்துக்கு ஸத்ருசமோ? என்னும். [முன்செய்து இவ்வுலகமுண்டுமிழ்ந்தளந்தாய்]-நான் உதாரனாய் இருந்தேனோ? என்னில்; நிர்ஹேதுகமாக பண்டு ஜகத்ஸ்ருஷ்ட்யாதிகளைப் பண்ணியருளினவனல்லையோ?

ப.—அநந்தரம் நீ ஸர்வப்ரகாரரக்ஷகனாயிருக்க, இவளுடைய ப்ரகாரம் என்னாய்முடிகிறது? என்கிறாள்.

என் - (ப்ரதமத்திலே) என்னை அநந்யார்ஹையாக்கி, தாமரை - (ஆசையை விளைக்கும்படி) அதிசயிதபோக்யமான, கண்ணா - கண்ணையுடையவனே! (அநுபவபர்யந்தமாகப் பார்க்கநினைக்கிறாயோ? அவ்வளவிலே ஒடியெறிந்திட்டுவைக்க நினைக்கிறாயோ?) என் செய்கின்றாய் - என்செய்யநினைக்கிறாய்? என்னும் - என்னும்; (அதுக்கு ஒருமறுமாற்றங்காணாமையாலே அந்தஸ்தாபத்தாலே, ஆகவாயில்), கண் - கண், நீர் - நீர், மல்க - சுவறித்துளும்புமளவாம்படி, இருக்கும் - ஸஞ்சாரக்ஷமையன்றியே யிருக்கும்; எறி - அலையெறிகிற, நீர் - நீரையுடைத்தான, திருவரங்கத்தாய் - கோயிலிலே ஸந்நிஹிதனானவனே! (உன்னைக்கிட்டுகைக்கு சக்தனாய் ஸாபேக்ஷனான நீ ஒன்றுஞ்செய்யாதிருக்க, அசக்தையாய் ஆர்த்தையான நான்), என் - எத்தை, செய்கேன் - செய்வேன்? என்னும் - என்னும்; (இந்த ஆகிஞ்சந்யத்துக்கும் முகங்காட்டாமையாலே), வெவ் - (அந்த ஸ்தாபத்தாலே) வெவ்விதாம்படி, உயிர்த்துயிர்த்து - பலகாலும்மூச்சுவிட்டு, உருகும் - அப்பரிதாபத்தாலேயுருகாநிற்கும்; (இப்படி க்லேசிக்கைக்கடியாக), முன் - முன்பு, செய்த - (நான்) பண்ணிவைத்த, வினையே - கர்மமே, முகப்படாய் - முகந்தோற்றநில்லாய், என்னும் - என்று க்லேசாகரமாகையாலே சேதநஸமாதியாலே சொல்லாநிற்கும்; ("அதுவும் அவனிட்டவழக்கு" என்கிற தெளிவுபிறந்தவாறே), முகில்வண்ணா - ஜலஸ்தலவிபாகமற உபகரிக்கும் மேகஸ்வபாவனானவனே! (நீ முகங்காட்டாதிருக்குமது), தகுவதோ - (அந்தவுபகாரத்துக்குத்) தகுவதோ? என்னும் - என்னும்; (அந்தவுபகாரகத்வம் ஸலமாம்படி), இ - இந்த, உலகம் - லோகத்தை, முன் - ப்ரதமத்திலே, செய்து - ஸ்ருஷ்டித்து, உண்டு - (ப்ரளயத்திலே) உண்டு, உமிழ்ந்து - உமிழ்ந்து, அளந்தாய் - (அந்யாபிமாநம் போம்படி) அளந்துகொண்டவனே! இவட்கு - (உன்னையொழியச்செல்லாதபடியான) இவளுக்கு, என் - என்னாய், முடிகின்றதுகொலோ - முடியப்புகுகிறதோ? இந்த ஆர்த்திக்குஎல்லையுண்டாம்படி உன்னுடைய ரக்ஷ்யவர்க்கத்திலே இவளுக்கும் அந்தர்பாவமுண்டாகிறதோ? பாஹ்யமாய்விடும்படி இவற்றின் புறத்தாளாம்படியாகிறதோ? என்று கருத்து.

ஈ.—இரண்டாம்பாட்டில், இவள்தசை என்னாய் விடக்கடவது? என்கிறாள். [என்செய்கின்றாய் என் தாமரைக்கண்ணா என்னும்] - "தாமரைக்கண் என்றே தளரும்" என்று தளர்த்திக்கு உடலானது இப்போது பாதகமாய்ச்செல்லுகிறது. நீர் ஏறுண்டார்க்கு அந்நீரைத்தெளித்து ஆச்வஸிப்பிக்குமாபோலே, எனக்கு ஆற்றாமையை விளைத்த கண்களாலே என் ஆர்த்திதீர்க்கப்பார்த்தாயோ, இல்லையோ? கண்களாலே பிறர்க்கு ஆகாதபடி பண்ண அமையுமோ? ஸஹ்ருதயத்தையும் பண்ணவேண்டாவோ? முதலிலே "நானும் என்உடைமையும் நீ இட்டவழக்கன்றோ?" என்று கண்ணாலே சொன்ன

வார்த்தை ப்ரதிஜ்ஞாமாத்ரமாக அமையுமோ? அது அர்த்தக்ரியாகாரியாக வேண்டாவோ? [கண்ணீர் மல்கவிருக்கும்]-அப்போதே நோக்கக்காணாமையாலே கண்ணீர் மல்காநின்றது. "கைகளால் இறைக்கும்" என்கிற அளவுபோய், செறிந்து இற்றுப்பாயும் அளவாயிற்று. ஸஞ்சாரக்ஷமையுமன்றிக்கே, ஒன்றை அநுஸந்திக்கவும் மாட்டாதே ஸ்தப்தையாய் இருக்கும். [என்செய்கேன் எறிநீர்திருவரங்கத்தாய் என்னும்] - 'ஶ்ரமஹரமான கோயில்வாஸத்தை நான் பெறுகைக்கு நான் என்செய்வேன்?' என்னாநின்றாள். அவ்வலை ஏற்றுவாயிலே கொண்டுபோய் என்னைப் பொகடுகைக்கு நான் என்செய்வேன்? திருப்பொருநல் பிரிந்தார்க்கு நிலாப்போலே அஸஹ்யமாய் இருக்கிறதாயிற்று. என்செய்கின்றாய் என்றாள், குளிர்ந்தநோக்கை நினைத்து; என்செய்கேன் என்கிறாள், செயலறுதியாலே. [வெவ்வுயிர்த்துயிர்த்துருகும்] - இவள் தனக்கு அங்கேபோய்ப் புகுகைக்கு அபேக்ஷையும் உண்டாய், ஸகலதாபமும் ஆறும்படி ஶ்ரமஹரமான தேஶமாயிருக்க, அதுபெறாமையாலே நெடுமூச்செறியாநின்றாள். வெவ்விதாகப் பலகால் நெடுமூச்செறிந்து, அவ்வுஷ்ணத்தாலே உருகாநிற்கும். "உஹஜீவநிஶ்வாஸௌஷ்ண்யக்ஷாநுஷ்ஷயாஸிண:"-ஶோஷணாதிகளுக்கு அநர்ஹமான ஆத்மவஸ்து த்ரவத்ரவ்யமாகாநின்றது. [முன்செய்த இத்யாதி]-இத்துக்கத்துக்கு அடியாக நான்முன்புபண்ணின பாபமே என்னுடைய வடிவைக் காட்டவல்லையே; என்ஸ்வரூபத்துக்கு விரோதமாக அவனை இன்னாதாகாமே, "உன்னாலேல்வந்தது" என்று நான் ஆறியிருக்கும்படி. அதின் கொடுமையை நினைத்துச் சொல்லாநிற்கும் என்றுமாம். [முகில்வண்ணாதகுவதோ என்னும்] - கர்மாநுகுணமாக நான் நோவுபடக்கண்டு உபேக்ஷித்திருக்கை, ஜலஸ்தலவிபாகமில்லாத உன்னுடைய ஔதார்யத்துக்கு ஸத்ருஶமோ என்னும். துக்கஹேதுவான பாபம் முன்னேநின்றாலும், அதுக்கு உயிர் இல்லாமையாலே இன்னாதாகைக்கு ப்ராப்தி இல்லை; ப்ராப்தியுள்ள உனக்கு இவ்வளவில் முகங்காட்டாதொழியப் போருமோ? முன்செய்த வினையே முகப்படாய் என்ற இடம்—ஸ்வரூபஜ்ஞானம் அவிஶதமானார்வார்த்தை; முகில்வண்ணாதகுவதோ என்கிற இது—ஸ்வரூபத்தை உள்ள அளவுகண்டார் வார்த்தை. "அசேதநமாய் அநீஶ்வரமாய் இருந்துள்ள க்ரியாகலாபம் ஃபலப்ரதமாகமாட்டாது: ஸர்வநியந்தாவாயிருப்பானொருவனுடைய ஹ்ருதயத்தில் நிக்ரஹத்தாலே ஃபலம்" என்றிருக்கையிறே அதாகிறது. "க்ஷமெஶரணாமதாநாம்வராஹவ:" "தொஷாய த்ருவிதஸ்யஸ்யாக:" என்றிறே இத்தலையில் வார்த்தை. முன்செய்த என்கிறவிடம் பதினெட்டுஓத்தாலும் சொன்ன அர்த்தம்போலே இருக்கிறது; முகில்வண்ணா என்கிறஇடம் சரமஶ்லோகம்போலே இருக்கிறது. இப்படி நான் உதாரனாய் இருந்தேனோ என்ன, [முன்செய்து இவ்வுலகம் இத்யாதி] - நிர்ஹேதுகமாக முன்பு ஜகத்ஸ்ருஷ்ட்யாதிகளைப் பண்ணினவன் அல்லையோ? ஸ்ருஷ்ட்யாதிகளில் யௌகபத்யத்தை "கர்மாநுகுணம்" என்னவொண்ணுமோ? அபுநராவ்ருத்திலக்ஷண மோக்ஷத்தைப் பெறுகைக்கு அடியாய் இருப்பதொரு கனவியதொன்று சேதநன் தலையில் கிடக்கவற்றோ? [என்கொலோ முடிகின்றது இவட்கே] - இவள் இடையாட்டத்தில் நீ செய்யப் பார்த்தபடி என் என்னுதல் இவளுடைய தஶை என்னாய்விடக்கடவது என்னுதல். இவள் என்கிறது, நீர் ரக்ஷித்த ஜகத்துக்கும் இவளுக்கும் உண்டான நெடுவாசி அறியீரோ? அநந்யபரையாய் அநந்யகதியாய் அபலையாய் இருக்கிற இவள் இடையாட்டத்தில் என்செய்தருள நினைத்தருளினீர்? என்கிறாள்.

ஈடு.—இரண்டாம்பாட்டு. இப்பெண்பிள்ளையுடைய தசை என்னாய் விளைய க்கடவது ? என்கிறாள்.

[என்செய்கின்றாய்]-ஆற்றாமை மிகமிக அவனைக்கேட்கும் இத்தனையிறே. [என் தாமரைக்கண்ணாவென்னும்] - ஒருநீர்ச்சாவியான பயிருக்கு ஒருபாட்டம் வர்ஷிக்கக்கடவ தன்றோ? என்கிறாள். ''அவலோகநதாநேந பூயோமாம்பாலய'' (அவலோகந தாநேநபூயோமாம்பாலய) என்னக்கடவதிறே. ''தாமரைக்கண்ணனென்றேதளரும்'' என்றது; உணருகிறபோது கண்களை வாய்வெருவிக்கொண்டாயிற்று உணர்ந்ததும். கிட்டின ஸமயத்தில் ''நானும் என்னுடைமையும் நீயிட்ட வழக்கன்றோ'' என்றது கண்ணாலேயிறே; அதிலேயிறே இவளேழுதிக்கொடுத்தது. கண்ணாலேநோக்கி அணைக்கும்படியைநினைத்து, அந்த ஹாவநாப்ரகர்ஷத்தாலே கலந்துபிரிந்தாற்போலே கண்ணீர்மல்கவிருக்கும். [என் செய்கேனித்யாதி] - என்தாபம்ஆறும்படி அவ்வலையேற்றிலே கொண்டுபோய்ப் போகட வல்லிகோளே என்னும். திருப்பொருநலில் நீர், பிரிந்தார்க்கு நிலாப்போலே * உபதப்தமா யிராநின்றதுபோலே. [என்செய்கேன்] - உன்னைக்கிட்டுகைக்கு நான்செய்வதென் ? அப் போதே கிட்டப்பெறாமையாலே, 'ஆசைப்பட்ட நாம் அழகிதாகப்பெற்றோம்'' என்று நெடு மூச்செறியாநிற்கும். ''உஷ்ணஞ்சிவ நிஶ்வஸ்ய ஶைவ ஶ்ருங்கஷாது வஜ்ரவயாரிண:''

ப்ர.—[வெவ்வுயிர்த்துயிர்த்து]—ஸாஹுரகாணே [கள] ''தாம த்ருஷ்டா ஹநூமந்தம் ஸீதாம்ஶ்ருமுகாவ நிரைக்ஷணாழ !உஅ॥ ஶ்ருமுகந்யாஸிவத்ருஷாம் வீக்ஷ ணாம் ஸஸேதஃ । உஷ்ணஞ்சிவநிஶ்வஸ்ய ஶைவ ஶ்ருங்கஷாதுவஜ்ரவயாரிண:!உகூ॥ஸஹாத ஸிவஶோகாநாம் தாூ:வஸேஷ்யாஸி நிர்வேதிதாழ !உகூ॥''

இரண்டாம்பாட்டு.—என்செய்கின்றாய் இத்யாதி. ' என்கொலோமுடிகின்றதிவட்கு'' என் றத்தைக்கடாக்ஷித்தவதாரிகை - இப்பெண்பிள்ளை இத்யாதி.

தலைமகள் ''என்செய்கின்றாய்'' என்று அவனைக்கேட்கிறதென் ? என்ன - ஆற்றாமை இத் யாதி. ''தாமரைக்கண்ணா'' என்கிற மகளுடையபஹார்த்தபாவம் - ஒருநீர்ச்சாவி இத்யாதி. ஒருநீர்ச் சாவி - ஒருநீருக்காகப்பட்டுப்போகிறசாவி. ஒருபாட்டம் - ஒருபாறல். அவன்கடாக்ஷம் ப்ரார்த்யமோ? என்ன-அவலோகந இத்யாதி. ''தேவஸ்ருஷ்வஸாதிஹஸ்ருஷ்வஸாதகாரகேஶவ! அவலோ கநதாநேந பூயோமாம்பாலயாவ்யய'' இதி ப்ரதமேப்யே. (உ0 கக) பரிதாபஹேதுவும் ஆஶ்வாஸஹேதுவும்இதுவேயென் றவிவக்ஷித்தருளிச்செய்கிறார்-தாமரைக்கண்ணனென்றே இத்யாதி. இதுக்குக்கருத்து - அங்கு ''தளரும்'' என்று மோஹத்தைச்சொல்லி, இங்கே ''என்தாமரைக்கண்ணா' என்கையாலே - இது உணர்த்தியில் வார்த்தையென்கிறதென்று. ''இது - ஸந்திக்யம்'' என்றும் சொல்லுவர்கள். ''என்'' என்றதுக்குபாவம்-கிட்டின இத்யாதி வாக்யத்வயம். ''என்தாமரைக்கண்ணா'' என்றவநந்தரம், ''கண்ணீர்மல்கவிருக்கும்'' என்றதுக்குபாவம் - கண்ணாலேநோக்கி இத்யாதி. 'எறிநீர்'' என்றதுக்குபாவம் - என்தாபம் இத்யாதி. ''எறிநீர்'' - அலையெறிகிற நீரென்றபடி. அலையேற்றிலே - அலையெறிதலிலே. இங்கே திருப்பொருநலுண்டே என்ன - திருப்பொருநல் இத்யாதி. திருப்பொருநல்-திருத்தாம்ரபர்ணி. ''உபதப்தோதகாநத்ய: ப்லவகா நிஸ்வநாம் வஹ'' இத்யாதி. (ரா.அ.ருக-5) ''என்செய்கேன்'' என்றஅநந்தரம், ''வெவ்வுயிர்த்துயிர்த்துருகும்'' என்றதுக்கு பாவம் - அப்போதே இத்யாதி. வெவ்விதாம்படி பலகாலும் நெடுமூச்செறிந்துருகாநிற்குமென்று ஸப் தார்த்தம். ஸோஷ்ணமாக நெடுமூச்செறிகிறதுக்கு ப்ரமாணம் - தஹைந்தீம் இத்யாதி. 'உஷ்ணஞ்சிவ நிஶ்வஸ்ய ஶைவ ஶ்ருங்கஷாது வஜ்ரவயாரிண:ஸம்வாதஸிவஶோகாநாம் தாூ:வஸேஷ்யாஸி

(தஹந்தீமிவநிஶ்வாஸைர்வ்ருக்ஷாந்பல்லவதாரிண:)-நெடுமூச்சாலே தன்பகையறுக்கப் பாரா நின்றாள். பல்லவதாரிகளாயிருக்கை இப்போது இவளுக்குப்பகையிறே! ஒருபடிப்பட நின்று நலிகிறபடியிறேஅவை. ராக்ஷஸிகளுறங்கும்போதுமுண்டிறே; உருவ இப்படியே நிற்கிறஇத்தனையவை. [உருகும்]-உருகுகிறபடியே நிற்குமத்தனை. இனிநெடுமூச்செறிகைக்கு தர்மியுமில்லையோ என்னும்படியுருகும். வெவ்விதாகப் பலகால் நெடுமூச்செறிந்து, அவ் வுஷ்ணத்தாலே யுருகாநிற்கும். [முன்செய்தவினையே] - வலிக்கைக்கு விரகுபார்க்கிறபடி. நான்முன்புபண்ணினபாபமே, என்முன்னேவந்து நிற்கவல்லையேஎன்னும். நீ முகங்காட்டினையாகில், ''தாமரைக்கண்ணா - என்செய்கின்றாய்'' என்று அவனைக் கேளாதொழியவாயிற்றே. ''நான்செய்தவினையின்பயன் இதுவானபின்பு நாம்ஆரைவெறுப்பது?'' என்றிருக்கலாயிற்றே. ஸ்ரீஜநகராஜன்திருமகளுக்கும் இவர்க்குமுள்ளது ஒன்றாயிற்று; ''நன்மைஅவனாலே'' என்றும், ''தீமை தந்தாமாலே'' என்றுமாயிற்றுஇருப்பது. ''மமைவ துஷ்க்ருதம் கிஞ்சிந்மஹதஸ்தி ந ஸம்ஶய:'' (மமைவதுஷ்க்ருதம்கிஞ்சிந்மஹதஸ்திநஸம்ஶய:) என்றாளிறே. [முகில்வண்ணாதகுவதோஎன்னும்] - நான் பண்ணின பாபம் கிடக்கிடும், கர்மாநுகுணமாகவோ நீர் காரியஞ்செய்யுமது ? (தகுவதோ - சேருமோவென்றபடி.) ஜலஸ்த்தலவிபாகம்பாராதே நீர்வர்ஷிக்கும்உம்முடைய ஔதார்யகுணத்துக்குப்போருமோ?என்னும். ''ஒருக்ரியாமாத்ரத்துக்கு இத்தனையுயிருண்டோ? நான்காண் இது விளைத்தேன்''என்றுஅவ் வடிவைக்கொண்டுவந்து காட்டவல்லையே என்னும். இது பக்திகார்யமேயாகிலும், பகவதநுபவவிரோதியாகையாலே - பாபமென்கிறது. அநிஷ்டாவஹம் - பாபமாமித்தனையிறே. தகவிதோ என்றபாடத்தில் நான்பண்ணினபாபம் எனக்கநுபவிக்கவேணுமாகில் உம்முடைய தகவுக்கு விஷயம்இன்னது என்னும். முன்செய்தவினையே முகப்படாயென்கிற

ஶோசிதாம்'' இதி ஸுந்தரகாண்டே. ''உஹஸீம்'' என்றதுக்கு பாவம் - நெடுமூச்சாலே இத்யாதி. பகையாவது-வ்ருக்ஷங்கள். ''தாரிண:'' என்கிறவர்த்தமாநத்துக்கு பாவமாதல், ''தாரிண:'' என்றதுக்கு தாச்சில்யே ணிநி ப்ரத்யயமாக்கி பாவமாதல்-ராக்ஷஸிகள் இத்யாதி. உருகுகிற சமயத்திலே ''முன்செய்தவினையே முகப்படாய்'' என்கிறதென் ? என்ன - வலிக்கைக்கு இத்யாதி. பப்தார்த்தம் - நான் முன்பு இத்யாதி. நான் முன்னேநின்றால் பெறுகிறதென் ? என்ன - நீ முகங்காட்டினையாகில் இத்யாதி. விவரணம் - நான்செய்த இத்யாதி. தன்பாபமாகச் சொன்னாருண்டோ ? என்ன - ஸ்ரீஜநகராஜன் இத்யாதி வாக்யத்வயம்.பிராட்டி அப்படிச்சொன்னாளோ ? என்ன-மமைவ இத்யாதி. ''மமைவ துஷ்க்ருதம் கிஞ்சிந்மஹதஸ்தி ந ஸம்ஶய:। ஸமர்த்தாவபி தௌ யந்மாம் நாவேக்ஷேதே பரந்தபௌ'' இதி ஸுந்தரகாண்டே. (௩அ-௪அ)''தகுவதோ'' என்றது-போருமோ என்றபடி. நீ செய்த கர்மபலமாகில் அது நீயே அநுபவிக்கவேண்டாவோ? என்செய்கின்றாய் என்று என்னைக்கேட்கிறதென் ? என்ன - நான் பண்ணின இத்யாதி. ''வினை''என்றத்தைக் கடாக்ஷித்து, ''வண்ணம்'' என்றதுக்கு வடிவாக அர்த்தாந்தரம் - ஒரு க்ரியாமாத்ரத்துக்கு இத்யாதி. இவ்வாற்றாமைக்கடி பக்தியன்றோ? அத்தை பாபமென்பானென் ? என்ன - இது பக்திகார்யமே இத்யாதி. எத்தனையென்றாலும், ப்ரேமபலமாய்வந்தத்தை பாபபலமென்னலாமோ? என்ன - அநிஷ்டாவஹம் இத்யாதி. ''தகுவதோ'' என்றன்றிக்கே, ''தகவிதோ'' என்றபாடாந்தரமாக்கி, அதுக்கர்த்தம் - நான்பண்ணின இத்யாதி. தகவுக்குவிஷயமென்னதென்னுமென்றது - தயைக்கு விஷயமின்னதென்று அருளிச்செய்யவேணுமென்று சொல்லுமென்றபடி. இந்தப்பாடத்தில், ஓகாரம் - பாதபூரணார்த்தம். தகவு - தகவுக்கு. இது - விஷயமிதுஎன்றபடி. என்னவேணுமென்று அத்யாஹார்யம். ''முன்செய்தவினையேமுகப்படாய்'' என்று - கர்மபலப்ரஸ்தமாகச் சொன்னவிடம் பூர்வ

விடம் - "க்ரியை அத்ருஷ்டரூபத்தாலே நின்று ஃபலந்தரும்" என்பார்வார்த்தை ; முகில் வண்ணா என்கிறவிடம் - ஒரு பரமசேதநனுடைய அநுக்ரஹமே ஃபலப்ரதமாவது" என்றிருக்கும் வேதாந்திகள் வார்த்தை. "ஸதோஷராயிருப்பார் ராமகோஷ்டிக்காளல்லர்" என்கிற மஹாராஜர்தோடக்கமானார் வார்த்தைபோலே கீழ்ச்சொன்னது: "தோஷோயத்யபி தஸ்யஸ்யாத்" (தோஷோயத்யபிதஸ்யஸ்யாத்) என்ற ராமஸித்தாந்தம்போலே மேல். "ஸர்வ தர்மாந் பரித்யஜ்ய" (மாம்நமஸ்குரு) என்றாற்போலே கீழ்ச்சொன்னது: "மாமேகம்" (மாமேகம்) என்றாற்போலே 'தகவிதோ' என்கிறது. "முகில்வண்ணா" என்கைக்கு நம்ஔதார்யம் எங்கே ஃபலிக்கக்கண்டு சொல்லுகிறது? என்ன, [முன்செய்துஇத்யாதி]-நிர்ஹேதுகமாக முன்பு ஜகத்ஸ்ருஷ்ட்யாதிகளைப்பண்ணி "தகவிதோ" என்கைக்கு உபகரணமில்லாதவன்று இத்தையுண்டாக்கி நோக்கினாய் நீயன்றோ? கரணகளேபர விதுரமான இத்தை வெறும்உன்க்ருபையாலே உண்டாக்கினாய் இத்தனையன்றோ? உண்டாக்கிவிட்டளவேயோ? ப்ரளயாபத்திலே வயிற்றிலே வைத்துரக்ஷித்து, உள்ளேகிடந்து நோவுபடாதபடி புறப்படவிட்டு, எல்லைநடந்துமீட்டுக்கொண்டு, ஸர்வவிதரக்ஷணமும் பண்ணிற்றில்லையோ! [என்கொலோமுடிகின்றதிவட்கே] - இவளளவில் யர்மிலோபமேயோ ஃபலிக்கப் புகுகிறது. நீர் ரக்ஷிக்கிறபூமிக்கும் இவளுக்கும் ஒருவாசியுண்டாக நினைத்திருக்கிறிலீரோ? (அநந்யபரையாய்அநந்யகதியாய்அபலையாயிருக்கிறவள்;) இவளுடையகர்மமோ, உம்முடைய அநுக்ரஹமோ ஃபலிக்கப்புகுகிறது? (இவளிடையாட்டத்தில் நீர் செய்யப்பார்த்தபடி எங்ஙனேயென்னுதல், இவளுடைய தசை என்னாய்விளையக்கடவதென்னுதல்.) (உ)

பக்ஷமாய், "முகில்வண்ணாதகவிதோ" என்று ஈஸ்வரன் ஃபலப்ரதனாகச்சொன்ன இடம் ஸித்தாந்தமாயிருக்கிறதென்று விவக்ஷித்தருளிச்செய்கிறார் - முன்செய்த இத்யாதிவாக்யத்வயத்தாலே, அத்ருஷ்டரூபத்தாலே ஃபலந்தருமென்பார் - பூர்வமீமாம்ஸகர். வேதாந்திகளாவார் - வ்யாஸாதிகள். இந்தபூர்வபக்ஷ ஸித்தாந்தங்களுக்கு த்ருஷ்டாந்தத்வயம்-ஸதோஷராய் இத்யாதிநாலுவாக்யத்தாலே. அதாவது - மாஹாராஜர்வார்த்தையை பூர்வபக்ஷமாக்கிப் பெருமாள் "தோஷோயத்யபி"என்றத்தை ஸித்தாந்தமாக்கினாற் போலேயும், "ஸர்வதர்மாந்"என்ற ஃபக்தியைபூர்வபக்ஷமாக்கி "மாமேகம்" என்ற ப்ரபத்தியை ஸித்தாந்தமாக்கினாற்போலேயும், "முன்செய்தவினையேமுகப்படாய்" என்ற அசேதந க்ரியை ஃபலப்ரதமென்றத்தை பூர்வபக்ஷமாக்கி "முகில்வண்ணாதகவிதோ"என்ற பரமசேதநன் ஃபலப்ரதனென்றத்தை ஸித்தாந்தமாக்கினார் என்றபடி. மேலுக்கவதாரிகை - முகில்வண்ணா இத்யாதி. கீழ்வாக்யத்தாலே ஃபலிதம் - கரணகளேபர இத்யாதி. "உருகும்" என்றத்தைக்கடாக்ஷித்து, 'கொலோ" என்கிற ஸ்வரத்துக்குபாவம் - இவளளவில் இத்யாதி. "இவட்கு" என்றதுக்குபாவம் - நீர் ரக்ஷிக்கிற இத்யாதி. "முன்செய்தவினை" என்றத்தையும் "முகில்வண்ணா" என்றத்தையுங்கடாக்ஷித்து,"கொலோ" என்றதுக்குஹாவாந்தரம்-இவளுடைய இத்யாதி. "என்செய்கின்றாய்" என்றது - தலைமகள் வார்த்தையாதல், திருத்தாயார் வார்த்தையாதல். திருத்தாயார்வார்த்தையானபோது, கீழேயும் "என்செய்கின்றாய்" என்றுவைத்து, இங்கேயும் "என்செய்கின்றாய்" என்றால் புநருக்தியன்றோ? என்ன - ஆற்றமை இத்பாதி அடியில்வாக்யம் என்று ஸங்கதி. தலைமகள்வார்த்தையென்றதுக்கு நியாமகம் - 'நீமுகங்காட்டினாயாகில் தாமரைக்கண்ணா என்செய்கின்றாயென்று அவனைக்கேளாதொழியலாயிற்றே' என்றவாக்யம். 'என் தாமரைக்கண்ணா! என்செய்கின்றாய்?' என்றுதொடங்கி, 'அளந்தாய் - இவட்கு - என்கொலோமுடிகின்றது' இத்யந்வயஃ. (உ)

மூன்றாம் பாட்டு.

வட்கிலளிறையுமணிவண்ணா!என்னும் வானமேநோக்கும்மையாக்கும்
உட்குடையசுரருயிரெல்லாமுண்ட ஒருவனே! என்னும்உள்ளுருகும்
கட்கிலீ!உன்னைக்காணுமாறருளாய் காகுத்தா! கண்ணனே! என்னும்
திட்கொடிமதிள்சூழ்திருவரங்கத்தாய்! இவள்திறத்தென்செய்திட்டாயே?

ஆ.—(வட்கிலளிறையும்.) - உன்னைக் காணப்பெறாத வ்யஸநத்தாலே, தன்னுடைய ஸ்வரூபநிரூபகமான ஸ்த்ரீத்வகுணங்களையும் இழந்தாள். பின்னை நெடும்போது கூட லப்தஸம்ஜ்ஞையாய், நிரதிசயஔஜ்ஜ்வல்யஸௌலப்யாதி கல்யாணகுணங்களையுடையவனே என்னும்: "ஸ்ரீகஜேந்த்ராழ்வானுக்கு வந்து தோற்றினாற்போலே பெரிய திருவடி திருத்தோளிலே ஏறியருளிவந்து தோன்றுவதுகாண்" என்று ஆகாசத்தைப் பார்த்துக் கொண்டிருக்கும். அங்குங்காணாதொழிந்தவாறே மயங்கும். சிறிது ஸஞ்ஜ்ஞாம் ப்ரதிலப்ய, ஆஸ்ரிதப்ரதிகூலராய் அதிபலபராக்ரமரான அஸுரரையெல்லாம் நிரஸித்து நிருபமமான ஸாமர்த்யத்தையுடையவனே! உன்னைக்காண்கைக்கு என்பக்கலுள்ளப்ரதிபந்தகத்தையெல்லாம் போக்கியருளாய் என்னும். பின்னையும் அவன் வரக்காணாமையாலே நெஞ்சுருகும், "ப்ராக்ருதமான சக்ஷுஸ்ஸுக்களுக்கு நான்ஒருநாளும் விஷயமாகேன்" என்று உனக்குஒரு நிர்ப்பந்தமுண்டாகில், நானொருத்தியும் உன்னைக்காணும்படி க்ருபைபண்ணாய் என்னும். அங்ஙனேசெய்யக்கடவதோ? என்னில், "உன்னைக் காணவேணும்" என்று ஆசைப்பட்டார் காண்கைக்காகவன்றோ சக்ரவர்த்தித்திருமகனையும் ஸ்ரீவஸுதேவர்திருமகனையும் பிறந்தருளிற்று என்றுசொல்லும். இவளோடே ஸம்ஶ்லேஷிக்கைக்காக த்வஜபதாகாலங்க்ருதமான ப்ராகாரங்களாலே பரிவ்ருதமான கோயிலிலே இவள்திறத்து என்செய்யநினைத்தருளினாய்? என்கிறாள்.

ஒ. -மூன்றாம்பாட்டில், இவள் இவ்வவஸ்தையை ப்ராப்தையாகைக்கு இவளிடையாட்டத்தில் நீர்செய்தது என்? என்கிறாள். [வட்கிலள் என்று தொடங்கி.] - ஒன்றும் லஜ்ஜிக்கத்தவிர்ந்தாள். லஜ்ஜைபோகையாலே ஸம்ஶ்லேஷாபேக்ஷை தோற்றும்படி, மணிவண்ணா! என்று திருநாமத்தை வாய்விட்டுச் சொல்லாநிற்கும். 'இவ் வார்த்தத்வநிவழியே ஸ்ரீகஜேந்த்ராழ்வானுக்கு வந்துதோற்றினாற்போலே தோற்றியருளவேணும்" என்று ஆகாஶத்தைப் பாராநிற்கும். அங்குவந்தருளக்காணாமையாலே அறிவுகெடும். பின்னையும் அக்ஷணமேதெளிந்து 'மிடுக்குடையரான அஸுரரை முடித்த ஏகவீரனே!' என்று ப்ரதிபந்தகநிரஸநஸாமர்த்யத்தைச் சொல்லி அது தனக்குஉதவாவிட்டவாறே உள் உடையும். [கட்கிலீஎன்று தொடங்கி] - பாஹ்யசக்ஷுஸ்ஸுக்கு ஒருநாளும் விஷயமன்றிக்கேயிருக்கிற நீ, நான் உன்னைக்காணும்படி க்ருபை பண்ணியருளவேணும்- [காகுத்தா] - இங்ஙனே அரிதானபொருளைச் செய்வரோ என்னில், காகுத்ஸ்தனல்லையோ? [கண்ணனே என்னும்] - அங்குப்பெறாதனவும் பெறுவிக்கும் க்ருஷ்ணன் அல்லையோ என்னும். [திட்கொடிமதிள்சூழ் திருவரங்கத்தாய்] - ராமக்ருஷ்ணாதி அவதாரங்களில் பெறாதார்க்கும் உன்னைக்கொடுத்தருளக் கடவதானமை தெரியும்படி கொடிகட்டிக்கொண்டன்றோ கோயிலில் கண்வளர்ந்தருளுகிறது?

ப.—அநந்தரம், ஆஸ்ரிதவிரோதி நிவர்த்தகமான அவதாரங்களையுடையை யாய் வைத்து, இவள் இப்படி ஆர்த்தையாகைக்கு என்செய்தாயென்கிறாள்.

இறையும் - ஏகதேசமும், வட்கு - தனக்கு நிரூபகமான லஜ்ஜையை, இலள் - உடையவளாயிருக்கிறிலள்; (அத்தாலே என்முன்பென்று பாராதே), மணிவண்ணா - முடிந்தாளலாம்படியான நீலரத்ந ஸ்வபாவனைப்போலே எனக்கு ஸுலபனானவனே! என்னும் - என்னும்; (இவ்வார்த்த த்வநிக்கு வருவதென்று), வானமே - ஆகாசத்தை, நோக்கும் - பார்க்கும்; (காணாமையாலே), மையாக்கும் - மயங்கும்; (ப்ரதிபந்தகத்தாலே விளம்பித்ததென்னுமைக்கு), உட்கு - மிடுக்கை, உடை - உடையரான, அசுரர் - ஆஸுர ப்ரக்ருதியினுடைய, உயிர் - ப்ராணங்களை, எல்லாம் - நிரவசேஷமாக, உண்ட - க்ர ஸித்த, ஒருவனே - ஏகவீரனே! என்னும் - என்னும்; (அந்த விரோதிநிரஸன ஸாமர்த் யத்தை நினைத்து), உள் - உள், உருகும் - உடையாநிற்கும்; ("நவக்ஷாஷாவஸ்தி" என்கிறபடியே), கட்கு - கண்ணுக்கு, இலீ - காணவரிய நீ! உன்னை - (கண்டல்லது தரிக்கவொண்ணாத) உன்னை, காணுமாறு - காணும்படி, அருளாய் - க்ருபைபண்ணி யருளவேணும்; (நீ காட்ட நினைத்தபோது), காகுத்தா - "வஸாம்ஸஹ்ருஷ்டிதாவ ஹாரிண:" என்றும், "ஊஷ்ருஸீவிதாகாபா:" என்றும் நாட்டோடு காட்டோடு வாசியற தர்ஸிப்பித்த சக்கரவர்த்தித்திருமகனையும், கண்ணனே - "தாஸாமாவிர பூச்ச" என்று இடைச்சிகளுக்கும் வடிவைக்காட்டின க்ருஷ்ணனையும் அவதரித்தவ னல்லையோ? என்னும் - என்னும்; (அதுக்குப் பிற்பட்டாரு மிழவாதபடி), திண் - திண்ணியதாய், கொடி - கொடியையுடைத்தான, மதிள் - மதிள், சூழ் - சூழ்ந்த, திரு வரங்கத்தாய் - கோயிலிலே ஸந்நிஹிதனானவனே! இவள்திறத்து - இவளிப்படி ஆர்த் தையாகைக்கு, என்செய்கிட்டாய் - நீ செய்ததேது? வடிவழகுஇப்படி மதிமயக்கு மோ? என்றுகருத்து. வட்குதல் - வெட்குதலாய், லஜ்ஜை. உட்கு - மிடுக்கு.

இ.—மூன்றாம்பாட்டில், இவள் இவ்வவஸ்தையை ப்ராப்தையாகைக்கு இவ ளிடையாட்டத்தில் நீர்செய்தது என்? என்கிறாள். [இறையும் வட்கிலள்] - 'வட்கு' என்று லஜ்ஜை. இறையும் இலள் என்றது - தாய் என்று பாராதே, சொல்லக்கடவதல் லாத வார்த்தையைச் சொல்லி அநுகரிக்கவும் அறியாதிருக்கை. இவளுக்கு நிரூபக மான நாண் மடம் அச்சம் என்கிற இவை இல்லாமையாலே நிரூப்யமான தர்மிலோபம் பிறந்தது என்கை. இவளுக்குலஜ்ஜை குடிபோனபடி நீ அறிந்தபடிஎங்ஙனே? என் னில், [மணிவண்ணாஎன்னும்] - தாயாரான என்முன்னே ஸம்ஸ்லேஷாபேக்ஷை தோற் றும்படி ஸஹ்ருத நாமக்ரஹணம் பண்ணாநின்றாள். காமிநியானவள் வடிவழகிலேபிறே ஈடு படுவது? அதுதோற்ற வாய்விடாநின்றாள். "ஸத்ருக்ஷவர்ணவக்த்ரஸநாஸ்ரூஸ்மீரா உநவிநீ। தெநநூதெநநூ நீதெநவாகிஹீஸவீக" என்று எல்லாரு மறி யிலும் வாய்விடக்கடவதன்றிக்கேயிறே இருப்பது. [வானமேநோக்கும்] - "மணி வண்ணா! என்கிற ஆர்த்தத்வநிகேட்டு இருக்கக்ஷமனல்லன்: த்வநிவழியே ஸ்ரீகஜேந்த் ராழ்வானுக்கு வந்துதோற்றினாற்போலே தோற்றிபருளும்" என்று ஆகாசத்தையே பார்க்கும். "வஸாவஸாவஸ:" என்கிற வசநத்துக்கு மேலேயிறே இவளுடைய தசை. அங்குவந்து தோற்றக்காணாமையாலே [மையாக்கும்] - மயங்காநின்றாள். அறிவுகெடாநின்றாள். ப்ரபலப்ரதிபந்தகங்கள் உண்டானால்வரப்போமோ? நீ இங்

ளன்அழிகிறதென்? என்ன, [உட்குடைஅசுரர்இத்யாதி] - நான் வரப்பார்த்தால் ப்ரதிபந்தகமுண்டித்தனைபோக்கி, நீ வரப்பார்த்தால் நிவாரகர் உண்டோ? உட்கென்று மிடுக்கு. ப்ரபலமான அஸுரவர்கத்தை நிஶ்ஶேஷமாகமுடித்த ஏகவீரன் என்னுநின்றாள். "ஶேஷிக்கில் பின்பும் ஆஶ்ரிதர்க்கு நலிவுவரும்" என்று நிஶ்ஶேஷமாக முடிக்கை. ப்ரபலப்ரதிபந்தகங்களை அழிக்கைக்கு ஸஹகாரிவேணுமோ? உன்னால் அழிக்கவொண்ணாத விரோதி என்னால் அழிக்கப்போமோ? [உள்ளுருகும்] - அப்போது செய்யக்காணாமையாலே உள்ளுருகும். நீர்ப்பண்டம்போலே ஶிதிலையாகாநின்றாள். உருகாநிற்குமத்தனையோ, அதீந்த்ரியவஸ்துவை "காண" என்றால் காணமுடியுமோ? என்ன; தன் தலைபாலேகாண இழிவார்க்கன்றோ அவ்வருமை. நீகாட்டக்காண்பார்க்கு அவ்வருமையுண்டோ? [கட்கிலீ] - பாஹ்ய சக்ஷுஸ்ஸுக்கு அவிஷயமான நீ, நான் உன்னைக்காணும்படி க்ருபை பண்ணியருளவேணும். "ந சக்ஷுஷா பஶ்யதி" என்கிறது—தாம் தாமே காண இழிவார்க்கு; "தமேவைஷ வ்ருணுதே தேந லப்யஸ்தஸ்யைஷ" என்று அவன்தானே காட்டுமன்று அவ்வருமையில்லை. சிலர்க்கு ஸாக்ஷாத்காரம்பண்ணக் கொடுத்திலையோ? கட்கிலீ - கண்ணுக்குஇலீ என்றபடி. இப்படி அரிதானபொருளை நாம் சிலர்க்கு அருளிற்றுண்டோ? என்ன [காகுத்தா] - "ராமோ விக்ரஹவாந் தர்ம:" என்றும், "ராமம் ஸம்ஹநநோபேதம்" என்றும் நாகரிகர்க்கும் வநவாஸிகளுக்கும் காட்டிக்கொடு திரிந்திலையோ? ஒருகாற்செய்ததுகொண்டோ? என்ன, [கண்ணனே என்னும்] - "ரூபௌதார்யகுணை: பும்ஸாம் த்ருஷ்டிசித்தாபஹாரிணம்" என்றும், "தாஸாமாவிரபூச்சௌரி:" என்றும் இடைச்சிகளுக்கும் அகப்படக் காட்டிக்கொடுதிரிந்திலையோ? இரண்டு அவதாரமும் தீர்த்தம் ப்ரஸாதித்ததே என்ன, [திட்கொடி இத்யாதி] - அவதாரங்களில் பிற்பட்டாரும் இழவாமைக்கன்றோ இங்கேவந்து சாய்ந்தருளிற்று. திண்ணியமதிள் என்னுதல்: திண்ணிய - கொடிஎன்னுதல்; அவிழ்த்துக்கட்டாத கொடிஎன்கை. "வருவாரெல்லோரும் வாருங்கோள்" என்று உறுதியாகக் கொடிகட்டிக்கொண்டன்றோ கிடக்கிறது? [இவள்திறத்து என்செய்திட்டாயே] - இவளுக்கு இவ்வளவான தசையை விளைக்கைக்கு நீஇட்டமருந்துஎன்? என்கிறாள். அதாகிறது - உன்முகம் மாயமந்திரந்தான்கொலோ என்றுவடிவழகைக் காட்டுகையிறே. இவள் கேட்கிறதென் என்னில்; அதுவாகில், அதுக்கு ப்ரதிக்ரியையாக "த்ரைலோக்யராஜ்யம் ஸகலம் ஸீதாயா நாப்னுயாத் கலாம்" என்கிற இவளை அவன்முன்னே நிறுத்தி, இவள்பட்டதெல்லாம் அவனைப்படுத்துவளாக நினைக்கிறாள். (௩)

ஈடு.—மூன்றாம்பாட்டு. இவள்இவ்வவஸ்தையை ப்ராப்தையாகைக்கு இவளிடையாட்டத்தில் நீர் செய்ததேன்? என்கிறாள்.

மூன்றாம்பாட்டு.—வட்கு இத்யாதி. "வட்கிலள்" என்று தொடங்கி, "கண்ணனேயென்னும்" என்னுமளவாக ந்த அவஸ்தைகளையெல்லாம் விவக்ஷித்து 'இவள் இவ்வவஸ்தையை' என்கிறார். "இவள் ன்செய்திட்டாய்" என்றத்தைக் கடாக்ஷித்தருளிச்செய்கிறார் - ப்ராப்தையாகைக்கு இத்யாதி.

[வட்கிலள்இறையும்]-இதுக்கு சீயர்அருளிச்செய்வது,"இவள்முடிந்தாள்"என்று. (வட்கென்று - லஜ்ஜை) லஜ்ஜையையிட்டிறே ஸ்த்ரீத்வத்தைஅறிவது. ஸ்வரூபத்தைப் பற்றிவரும் குணம்போனால் ஸ்வரூபமும்போயிற்றுமத்தனையிறே. நிரூபகத்தையொழிய நிரூப்யஸித்தியில்லையே. இவள்லஜ்ஜை குடிபோனமைக்கு ஸூசகமேன்? என்னில், [மணிவண்ணவென்னும்] - பர்த்ருநாமக்ரஹணம் பண்ணாநின்றாள். பெற்றதாய்முன்னே வடிவழகைச் சொல்லாநின்றாள். நான் கேட்டாலும் மறைக்குமத்தைத் தான் வெளியிடாநின்றாள். காமிநி ஆசைப்படுவது வடிவழகையிறே; தான்அகப்பட்ட துறையைச் சொல்லாநின்றாள். மெய்யேநினைத்து, மெய்யே சொல்லி, மெய்யே யநுபவிக்கை இவர்க்கு ப்ரக்ருதியாய்விட்டதே! "உன்சின்னமுந்திருமூர்த்தியும் சிந்தித்தேத்திக் கைதொழவே யருளேனக்கு" என்று அவன்பாடு இவள்வேண்டிக்கொள்வதும் இதுவேயிறே. [மணிவண்ணவென்னும்]- வடிவழகைச்சொல்லுவது, ஸௌலப்யத்தைச் சொல்லுவதாகாநின்றாள். "[Grantha text]" (அத்ருஷ்டபூர்வவ்யஸநாம்ருதுஸீலாமநஸ்விநீ | தேநதுஃகேநருததீநைவமாகிஞ்சிதப்ரவீத்) என்று, எல்லாதசையிலும் வாய்விடக்கடவதன்றிக்கேயிருப்பதொன்றிறே இது. [வானமேநோக்கும்] - "மணிவண்ணா!" என்கிற ஆர்த்தத்வநி கேட்டிருக்க க்ஷமனல்லன், த்வநிவழியே ஸ்ரீகஜேந்த்ராழ்வானுக்குவந்து தோன்றினாற்போலே தோன்றி யருளுமென்று ஆகாசத்தையே பாராநிற்கும். "[Grantha text]" (பரமாபதமாபந்நஃ) என்கிற அதுக்கும் அவ்வருகேயிறே இவளுடைய தசை. அங்குவந்து தோற்றக்காணாமையாலே, [மையாக்கும்] - மயங்காநின்றாள்: அறிவுகேடாநின்றாள். மயங்கத் தீருமோ விரோயி கனத்திருக்கில்? என்ன, [உட்குடை இத்யாதி.] - நான் வரப்பார்த்தால் ப்ரதிபந்தகமுண்டத்தனையல்லது, நீயே வரப்பார்த்தால் நிவாரகருண்டோ? உட்கென்று - மிடுக்கு. எதிரிகள் மிடுக்கருமாய் பலருமாமத்தனையன்றோ வேண்டுவதுஅழியச்செய்கைக்கு.

"வட்கிலளிறையும்" - அல்பமும் லஜ்ஜையில்லாதவள் இதிபாவார்த்தஃ. வட்கு - லஜ்ஜை. "முடிந்தாள்" என்கிறது என்கொண்டு? என்ன - லஜ்ஜையைஇத்யாதி. விவரணம் - ஸ்வரூபத்தை இத்யாதி. அதெங்ஙனே? என்ன - நிரூபகத்தைஇத்யாதி. "மணிவண்ணா" என்றதுக்கு ரூடியைப்பற்ற பாவம் - பர்த்ருநாம இத்யாதி. பர்த்ருநாமக்ரஹணம்பண்ணுகையாவது-ஸம்ஶ்லேஷத்தில் அபேக்ஷை தோற்றும்படி அவன்நாமத்தைச்சொல்லுகை. யோகத்தைப்பற்றபாவம் - பெற்றதாய்இத்யாதி. பெற்றதாய்முன்னே சொல்லவொண்ணாதோ? என்ன - நான்கேட்டாலும்இத்யாதி. ஸ்வரூபகுணாதிகளிருக்க வடிவழகைச்சொல்லுவானென்? என்ன - காமிநிஇத்யாதி. விவரணம் - தான்அகப்பட்டஇத்யாதி. அகப்பட்டதுறை இதுவென்கைக்கு நியாமகமேதென்ன, ப்ரமாணங்காட்டுவாராக பீடிகை - மெய்யேஇத்யாதி. மெய்யென்று வடிவும், ஸத்யமும், ப்ரக்ருதியாய் விட்டபடியெங்ஙனே? என்ன, ப்ரமாணம் - உன்சின்னமும்இத்யாதி. மணியினுடைய ஸ்வபாவத்தையுடையவனேஎன்று பாவார்த்தம். "வண்ணம்" என்று - அழகாதல், ஸௌலப்யமாதல்; உபயத்தையும் அருளிச்செய்கிறார் - வடிவழகைஇத்யாதி. தான்கேட்டாலும் மறைக்கும்படி வடிவழகு வாய்விடக்கூடுவதன்றோ? என்ன - அத்ருஷ்டபூர்வஇத்யாதி. அயோத்யாகாண்டே தஶரதம்ப்ரதி ஸுமந்த்ரஃ. இதுவென்றது - வடிவழகாதல், லஜ்ஜையாதல். "மணிவண்ணா" என்றால் வாராதிருக்க, "வானம்" என்பானென்? என்ன - மணிவண்ணாஇத்யாதி. ஸ்ரீகஜேந்திராழ்வானைப்போலே இவளுக்குஆபத்துண்டோ? என்ன- பரமாபதம்இத்யாதி "[Grantha text]" இத்யாதி. மேலுக்கவதாரிகை - மயங்கஇத்யாதி. "அசுரருயிரெல்லாமுண்ட" என்றதுக்குபாவம் - நான்வரப்பார்த்தால் இத்யாதி. "உட்குடை" என்றும், "அசுரர்" என்றும் சொல்லுகிறதுக்குபாவம் - எதிரிகள்இத்யாதி.

[உண்ட] - "வவௌஜநார்த்தநக்ருத்தஃ" (பபௌஜநார்த்தநஃக்ருத்தஃ) என்கிறபடியே. [ஒருவனே யென்னும்] - வடிவழகுக்குப் போலியுண்டாகிலும் வீரத்துக்குப் போலிசோல்லலாவதில்லை. [உட்குடை இத்யாதி] - தான் வீரபத்நியென்னுமிடந் தோற்றச்சோல்லாநின்ருள். "த்வம்நீசஶஶவத்ஸ்ம்ருதஃ" (த்வம்நீசஶஶவத்ஸ்ம்ருதஃ) என்னுமவளிறே. [உள்ளுருகும்] - "என்னகுறையுண்டாயிழக்கிறேன்?" என்று ஶயிஷிலையாம். விளம்பஹேதுவின்றிக்கே யிருக்க, ஶலியாதோழிந்தவாறே நீர்ப்பண்டம்போலே யுருகும். 'உருகுங்காட்டில் அதீந்த்ரியவஸ்து கண்ணுக்கிலக்காமோ?' என்பர்களே; அருளாலே பெறுவார்க்கு அங்ஙனேரு நியதி யுண்டோ? என்னுமாயிற்றுஇவள். "நசக்ஷுஷாபஶ்யதி" (நசக்ஷுஷாபஶ்யதி) என்கிறது-தாந்தாமே காண இழிவார்க்கு; "தஸ்யைஷ ஆத்மாவிவ்ருணுதே தநூம்ஸ்வாம்" (தஸ்யைஷஆத்மாவிவ்ருணுதேதநூம்ஸ்வாம்) என்று - அவன்தானே காட்டுமென்று அருமையில்லை. அர்ஜுநாதிகளுக்கு திவ்யசக்ஷுஸ்ஸைக்கோடுத்துக் காட்டிற்

றிலனோ? அருளாலே நாம ஆர்க்குக்காட்டினேம்? என்ன, [காட்டாய்] - "ரூபௌதார்யகுணைஃ" (ரூபௌதார்யகுணைஃ) என்றும் "ரூபம்ஸம்ஹநநம் லக்ஷ்மீம்" (ரூபம்ஸம்ஹநநம் லக்ஷ்மீம்) என்றும், நாகரிகர்க்கும் வநவாஸிகளுக்கும் காட்டிக்கோடுத்திலையோ? ஒருகால் செய்ததுகோண்டோவென்ன, [கண்ணனே] - ஸஜாதீயைகளான

போக்கினன்என்றதே, "உண்ட" என்றதுக்குப்ரமாணம் - பபௌ இத்யாதி. ப்ரதமேம்ஶே ஷஷ்ேடா ஶிம்ஶே ப்ரஹ்லாதசரிதே, "ஹ்ருஷ்யத்ஸ்யத்ததஸ்ஸர்வம்வாயுஃகிஶோஷணம் । பபௌ ஜநார்த்தநஃக்ருத்ஸ்நம்ஸப்யோநிதிஃக்ஷயம்" (க - கக. உச) "மணிவண்ணு" என்றத்தைக்கடாக்ஷித்துஹாவம் - வடிவழகுக்குஇத்யாதி. "உட்குடையசுரர்" என்றுபோரப்பொலியச்சொல்லி, "உண்டவொருவன்" என்றதுக்குஹாவம் - தான்வீரபத்நிஇத்யாதி. அப்படி தன்நாயகன் வீரந்தோற்றச் சொல்லுமோ? என்ன - த்வம்நீசஇத்யாதி. "யதாந்தரம்ஸிம்ஹஶ்ருகாலயோர்வநே ததாந்தரம் தாஶரதேஸ்தவைவ ச । யதாந்தரம் ஸ்வர்ணஸீஸயோஶ்ச த்வம்நீசஶஶவத்ஸ்ம்ருதஃ" இதி ஸுந்தரகாண்டே ராவணம்ப்ரதிஸீதா. (22-16)இப்படிப்ரதிபந்தகங்களைப்போக்குமவன் வரக்காணுமையாலே என்றிவ்வளவும் அத்யாஹரித்து, அநந்தரம்'என்னகுறையுண்டாய்' இத்யாதிசொல்லிக்கொள்வது. விவரணம் - விளம்பஇத்யாதி. "கட்கிலீ" என்றதுக்கவதாரிகை - உருகுங்காட்டில்இத்யாதி. "கட்கிலீ" என்றத்தால் ஸித்தமான அதீந்த்ரியத்வத்தைப்பிடித்துத் தாய்மார் சங்கித்தத்தைப்பரிஹரித்துக்கொண்டு,"உன்னைக்காணுமாறருளாய்" என்றதுக்கவதாரிகை - அருளாலேபெறுவார்க்கு இத்யாதி. ஆனால், "நசக்ஷுஷாபஶ்யதி" என்றிருக்கிறதேயென்ன-நசக்ஷுஷா இத்யாதிவாக்யத்வயம். அப்படிநாம்ஆருக்குக்காட்டினேமென்ன- அர்ஜுநாதிஇத்யாதி. "கட்கிலீ" - கண்ணுக்குவிஷயமாகாதவனே இத்யர்த்தஃ. கீழுக்தமான அர்த்தத்வயத்தையும் நாயகியினுடைய ஹாவத்தாலேயருளிச்செய்கிறுர் - உன்னைக்காண இத்யாதிவாக்யத்வயத்தாலே. ரூபௌதார்யேத்யாதிஶ்லோகங்களிரண்டும் - அடைவே, நாகரிகர்க்கும் வநவாஸிகளுக்கும் காட்டினதுக்குப்ரமாணம். "ஸமுத்ஸுகாஃநாகராஃ தீவ்ரதயா பஶ்யந்தி । ரூபௌதார்யகுணைஃபும்ஸாம்த்ருஷ்டிசித்தாபஹாரிணம்" இத்யயோத்யாகாண்டே (ங-உக) "ரூபம்ஸம்ஹநநம் லக்ஷ்மீம்ஸௌகுமார்யம் ஸுவேஷதாம் । தத்ருஶுர்விஸ்மிதாகாரா ராமஸ்யவநவாஸிநஃ" இத்யாரண்யகாண்டே, (க-கரு) பெண்களுக்குக்காட்டினதுக்குப்ரமாணம்-

பெண்களுக்கு உன்னைக்காட்டிற்றிலையோ? ''தாஸாமாவிரபூச்'' (தாஸாமாவிரபூத்) - ஒருநீர்ச்சாவியிலே ஒருபாட்டம் மழைவிழுந்தாற்போலேயிருக்கை. ''ஸ்மயமாநமுகாம்புஜ꞉''(ஸ்மயமாநமுகாம்புஜ꞉) - அவர்கள் முன்னேதோற்றினபின்பு வடிவில்பிறந்த சேவ்வி. ''பீதாம்பரதர꞉ஸ்ரக்வீ''(பீதாம்பரதரஸ்ஸ்ரக்வீ) - பெண்கள்நேஞ்சில் மறத்தை மாற்றுவது, பரிவட்டவாய்ப்பையும் தோளில்மாலையையுங் காட்டியாயிற்று. ''ஸாக்ஷாந்மந்மதமந்மத꞉''(ஸாக்ஷாங்மங்மதமங்மத꞉)-காமன்கையிலேநாடுபமேத்தைக்காமன்தான்படும்படியிருக்கை. [திட்கோடியித்யாதி] -அவதாரகாலத்தில் உதவிற்றிலீரே! என்ன; அவதாரகாலத்தில் உதவப்பெறுதார் இழவுதீர்க்கவன்றே இங்குவந்துசாய்ந்தருளிற்று. உகந்தார்க்கு காட்சி கொடுக்கக் கோடிகட்டிக்கொண்டன்றே கிடக்கிறது. திண்ணியமதிள் என்னுதல், திண்ணியகோடியேன்னுதல்: அவிழ்த்துக்கட்டாத கோடியேன்கை. ''வருவாரேல்லாரும்வாருங்கோள்''என்று கட்டினகோடி. [இவள்திறத்தேன்செய்திட்டாயே] - இவள்இப்படிபிச்சேற என்னமருந்திட்டாய்? அவன் இவளறியாதபடி ஒருமுகத்தாலே மருந்திடுமே. ''மையலேற்றி மயக்க உன்முகம் மாயமந்திரந்தான்கொலோ!'' என்று தன்முகத்தைக் காட்டுகையிறே அவன் மருந்திடுகையாவது. இவள்கேட்கிறதேன்? என்னில்; அதுவாகில் அதுக்குப்ரதிக்ரியையாக, ''த்ரைலோக்யராஜ்யம்ஸகலம் ஸீதாயா நாப்நுயாத்கலாம்'' (த்ரைலோக்யராஜ்யம்ஸகலம் ஸீதாயாநாப்நுயாத்கலாம்) என்கிறஇவளை அவன்முன்னே நிறுத்தி, இவள்பட்டதேல்லாம் அவனைப் படுத்துவாளாக நினைக்கிறாள். (௩)

நான்காம் பாட்டு.

இட்டகாலிட்டகை ‡யளாயிருக்குமெழுந்துலாய் மயங்குங்கைகூப்பும்
கட்டமேகாதலேன்றுமூர்ச்சிக்குங்கடல்வண்ணா!கடியைகாணேன்னும்
வட்டவாய்நேமிவலங்கையாஎன்னும்வந்திடாயேன்றேன்றேமயங்கும்
சிட்டனே!சேழுநீர்த்திருவரங்கத்தாய்!இவள்திறத்தேன்சிந்தித்தாயே?

ஆ.—(இட்டகால்.) - இவள் பராதீநசேஷ்டிதயான கரசரணாத்யவயவங்களையுடையளாயிருக்கும். இப்படி சேஷ்டிதக்ஷமையன்றியேயிருக்கச்செய்தே, அவஸாநஸமயத்திலே ப்ரதீபம்போலே ஸஹஸா எழுந்துலாவி மயங்கிக்கிடக்கும். பின்னையும்

தாஸாம்இத்யாதி.'' தாஸாமாவிரபூச்சௌரி꞉ஸ்மயமாநமுகாம்புஜ꞉। பீதாம்பரதர꞉ஸ்ரக்வீஸாக்ஷாந்மந்மதமந்மத꞉'' இதி ஸ்ரீபாகவதே கோபிகாகீதாநந்தரே. (௩௨ - ௨) இதுக்கர்த்தம் - ஒருநீர்இத்யாதி. ஒருபாட்டம் - ஒருபாறல்.'சௌரி꞉'' என்றவநந்தரம் ''ஸ்மயமாநமுகாம்புஜ꞉என்றதுக்குஹாவம் - அவர்கள்முன்னேஇத்யாதி. மறத்தை-கோபத்தை. ''திருவரங்கத்தாய்'' என்றத்தைக்கடாக்ஷித்தருளிச்செய்கிறார் - அவதாரகாலத்தில்இத்யாதி. கொடியைச்சொன்னதுக்கு ஹாவம் - உகந்தார்க்குஇத்யாதி. திண்மை மதிளுக்குவிசேஷணம். ''இட்டாய்'' என்றதுக்கு ஸ்வாரஸ்யம் - இவள்இப்படிஇத்யாதி. அவன்செய்தபடியேதென்ன - அவன்இவளறியாதபடி இத்யாதி. ஒருமுகத்தாலே என்றது - சாடு. அவன்முகம்பருந்தோ? என்ன - மையலேற்றிஇத்யாதி. பிச்சேற்றி அறிவுகெடுக்க உன்முகம் அம்மான்பொடியோ? என்றபடி. நாய்ச்சியார்திருமொழி, இரண்டாந்திருமொழி, நாலாம்பாட்டு: ''பெய்யுமாமுகில்'' இத்யாதி.அம்மான்பொடியாவது - †சொக்குப்பொடி.| (௩)

---

† சக்குப்பொடி என்று வழங்குவர். ‡ 'கைகளாய்' என்பது சிலர்பாடம்.

பரபுலையாயத் தன்னுடைய வ்யஸநாதிஶயத்தாலே உன்னைத்தொழாநிற்கும். ஸ்நேஹமானதித்தனை பொல்லாதாகாதே, ஸ்நேஹப்ரக்ருதிகளல்லாதார் என்னபாக்யம்பண்ணினரோ?என்றுசொல்லி மோஹிக்கும். அநவதிகாதிஶயாஸங்க்யேய கல்யாணகுணகணன் என்றுஉன்னைச் சொல்லுகிற இதெல்லாம் பொய்;நீ சாலநிர்க்க்ருணன்காண் என்றுசொல்லும்.வலத்திருக்கையிலே திருவாழியையேந்திக்கொண்டிருக்கிற அவ்வழகை நான்காணும்படி வந்திடாய் என்று சொல்ல வுபக்ரமிக்கும்; முடியச்சொல்ல க்ஷமையல்லாமை வட்டவாய்நேமி வலங்கையா என்னும்; பின்னையும் நெடும்போது கூடவந்திடாய்என்னும்.வரக்காணாமையாலே பின்னையும் வந்திடாய் என்னும். வரக்காணாமையாலே மயங்கும். இங்ஙனே செல்லாநிற்கும். செழுநீர்த்திருவரங்கத்தாய்! இதுவோ உன்னுடைய ஶீலவத்த்வம்? இவள்திறத்து என்செய்ய நினைத்தருளினாய் என்கிறாள்.

ஒ.—நாலாம்பாட்டில், இப்பெண்பிள்ளை திறத்துச் செய்தருள நினைத்தது என்? என்று பெரியபெருமாளுக்கு விண்ணப்பம் செய்கிறாள்- [இட்டகாலென்று தொடங்கி.] - ஸ்வாதீனையல்லாமையாலே தோழிமார் இட்டுவைத்த காலும் கையுமாய் தான் சேஷ்டிக்கமாட்டாதே இருக்கும்படி அவஸந்நையாயிருக்கச்செய்தே விளக்கு முடியுமளவில் கிளம்பாஅவியுமாபோலே ஸ்வஸ்தரைப்போலே எழுந்திருந்து உலாவி மோஹிக்கும். உணர்த்தி இன்றிக்கே இருக்கச்செய்தே பூர்வவாஸனையாலே கைகூப்பும். அத்தாலேஉணர்ந்து "பெரியபெருமாள் பக்கலுள்ள ஸ்நேஹமே புருஷார்த்தம்" என்று இருக்கக்கடவ இவள் ஸ்நேஹம்போலே பொல்லாதது இல்லைஎன்றுசொல்லிப் பின்னையும் காணப்பெறாத வ்யஸநாதிஶயத்தாலே மோஹிக்கும். ஸகலபதார்த்தத்தையும் தன்னுள்ளே அடக்கி ஒன்றையொன்று நலியாதபடி பரிஹரிக்கும் கடலின்தன்மையானநீ என் திறத்தில் கண்ணறையனாயிராநின்றாய் என்னும். [வட்டவாய் என்றுதொடங்கி] - "கையும் திருவாழியுமான அழகைக்காணவேணும்" என்று ஆசைப்பட்டு 'வட்டவாய் நேமிவலங்கையாவந்திடாய்'என்று சொல்ல உபக்ரமித்து,நடுவே இளைத்து திரியக் குறையும்சொல்லாநின்றுகொண்டு மோஹியாநின்றாள்.கோயிலின் நிலமிதியாலே நிறையநீர்மையுடையீரான நீர் இவள்திறத்துச் செய்தருளப் பார்த்தருளிற்றுஎன்?

ப.—அநந்தரம், அபரிச்சிந்நமஹிமனாய்வைத்து இவளை ஆர்த்தையாக்கின நீ, இவளளவில் என் நினைத்திருக்கிறாய்? என்கிறாள்.

(ஆர்த்தியினதிஶயத்தாலே பரவசையாய்), இட்டஇட்ட - இட்டுவைத்தவிடத்தே கிடக்கும்படியான, கால் - காலையும், கையள் - கையையும், ஆய் - உடையளாய், இருக்கும்—;(ஆர்த்தி முதிர்ந்தபடியாலே, ஸந்நிபதிதரைப்போலே), எழுந்து - பாரவஶ்யங் குலைந்தெழுந்திருந்து, உலாய் - உலாவாநிற்கும்; மயங்கும் - அநந்தரத்திலே மோஹிக்கும்; (காலமுணர்த்த மோஹந் தெளிந்தவளவிலே "வரக்கூடும்" என்று), கைகூப்பும் - அஞ்சலிபண்ணும்; (வரக்காணாமையாலே), காதல் - காதல், கட்டமே - சட்டமாயிருந்ததீ, என்று - என்றுவெறுத்து, மூர்ச்சிக்கும் - மூர்ச்சிக்கும்; கடல்வண்ணா - தனக்குள்ளே எல்லாவற்றையுமொதுக்கி ரக்ஷிக்கும் அபரிச்சிந்நாகாரமான கடலின்படியையுடையவனே! கடியைகாண் - எனக்குக்கடியையிராநின்றாய்காண்! என்னும் - என்னும்; (ஆஶ்ரிதரக்ஷணத்தில்), வட்டவாய் - ஸர்வதோமுகமான, நேமி - திருவாழியை, வலங்கையா - வலக்கையிலேயுடையவனே! என்னும் - என்னும்; (நடுவேயிளைப்பாறி), வந்திடாய் - கையுந்திருவாழியுமாய்க்கொண்டு வந்திடாய், என்றென்றே - என்று பல

காலும் ஆவர்த்திக்கபேக்ஷித்து, மயங்கும் - "அபேக்ஷையில் ஆவ்ருத்தியாலே ஸ்வரூபமிழந்தோம், அவன் வாராமையாலே யபிமதமுமிழந்தோம்" என்று அறிவு அழியாநிற்கும்; (இப்படி இவளைக்லேஶிப்பித்து), சிட்டனே - சிஷ்டாசாரவனைபண்ணி, செழுநீர்த்திருவரங்கத்தாய் - அழகிய நீர்க்கரையிலே கிடக்கிறவனே! இவள்திறத்து - (வ்யதிரேகத்தில் மோஹிக்கும்படியான) இவள்திறத்து, என் - என், சிந்தித்தாய் - நினைத்திருக்கிறாய்? மோஹிப்பிக்கவே நினைத்திருக்கிறாயோ? தேற்றங் கொடுக்க நினைத்திருக்கிறாயோ? என்றுகருத்து.

இ.—நாலாம்பாட்டில், உம்மையொழிய ஜீவிக்கமாட்டாதிருக்கிற இவள்திறத்துச் செய்தருள நினைத்திருக்கிறது என்? என்கிறாள். [இட்டகாலிட்ட கைகளாயிருக்கும்] - ஸ்வாதீநமல்லாமையாலே, தோழிமார் இட்டுவைத்தகாலுங் கையுமாய் இருக்கும். விரஹம் ஸந்திபந்தங்களையும் குலைத்துச்சிதறிக் கிடக்கிறவித்தனை. [எழுந்துலாய்] - இவ்வளவான தசையாய் இருக்கச்செய்தே, அவியும் விளக்குக் கிளப்பிஅவியுமாபோலே, ஸ்வஸ்தரைப்போலே எழுந்திருந்து உலாவாநின்றாள். [மயங்கும்] - கிளம்பின ஸமநந்தரத்திலே அவியுமாபோலே மயங்காநின்றாள். [கைகூப்பும்] - உணர்த்தியின்றியே இருக்க, பூர்வவாஸநையாலே கைகூப்பும். மோஹித்த தசையிலும் தவிருகிறிலள். மயங்காநிற்கச்செய்தே உணர்த்தி யுடையாரைப்போலே ஆயிற்று அஞ்ஜலிபண்ணுகிறது. [கட்டமேகாதல் என்று மூர்ச்சிக்கும்] - "அமுதவெள்ளத்தானாஞ் சிறப்புவிட்டு" என்று ப்ரேமமே புருஷார்த்தம் என்றிருக்கிற இவள், ப்ரேமம்போலே தண்ணிதாய் இருப்பதில்லை என்னாநின்றாள். இது ரஸிப்பது இவ்விஷயத்தினுடைய ஸௌஹார்த்தமானபோதிறே. விஶ்லேஷத்தில் நலிவுக்கு உடலாகையாலே தண்ணிதுஎன்றாள். இது கட்டமென்னுங் காட்டில் இதுக்குபரிஹாரம் பிறந்ததாகாமையாலே மூர்ச்சிக்கும். [கடல்வண்ணா கடியைகாண் என்னும்] - சேர்ந்து குளிர்ந்த தண்ணீரை விடாயர்க்கு எட்டாதபடி வைப்பாரைப்போலே, ஶ்ரமஹரமான வடிவைக்கொண்டு எனக்கு எட்டாதபடி இருக்கிறவன் என்னுதல். கடல்போலே ஸகலபதார்த்தங்களையும் தன்னுள்ளே அடக்கி, ஒன்றையொன்று நலியாதபடி பரிஹரிக்கும் ஸ்வபாவத்தையுடைய நீ என்திறத்துக் கண்ணறையனாய் இராநின்றாய் என்னுதல். உனக்கு லீலாதிகளைச் சொல்லுகிற ப்ரமாணங்களும் அந்ருதபாஷணம்பண்ணுகிறன; நிர்க்ருணன்காண் என்றாநின்றாள். நான் நிர்க்ருணனன்றிக்கே ஒழிவதுஎன்செய்தால்? என்னில்; "வட்டவாய்நேமி வலங்கையா என்றுதொடங்கி"-நடுவேஇளைத்து [வந்திடாயென்றென்றே மயங்கும்] - கையுந்திருவாழியுமான ஸந்நிவேஶமே ஆயிற்று இவள்நெஞ்சில் பட்டுக்கிடக்கிறது; "வந்திடாய்" என்கிற இத்தையே ஆவர்த்தியாநின்றாள். இவ்வாவர்த்தியில் பிறபட்ட த்வநிகள் வெண்கலத்வநிபோலே ஓய்ஞ்சு செல்லாநின்றது. ப்ரதிகூலநிரஸநத்தில் ஸர்வதோமுகமான வாயையுடைய திருவாழியை பரிகரமாகவுடைய உனக்கு வரத் தட்டென்? என்னாநின்றாள். [மயங்கும்] - "வந்திடாய்" என்கிற இதுதானும் ஒவிற்று. [சிட்டனே] - இப்படி ஸ்த்ரீவதம்பண்ணி நீர் விஶிஷ்டராய் இருக்க, பெண்பிறந்தார்க்கு அழகிதாக ஜீவிக்கலாய் இருந்தது. க்ராமணிகள் குடிகளைப் பரியும்படி அந்யாயங்களை ப்ரவர்த்தியாநிற்கச்செய்தே அத்தியயநாதிகளைப் பண்ணுமாபோலே. ஶ்ரமஹரமான கோயிலில் நிலமதியாலே தண்ணளி மிக்கிருக்கிற நீர். [இவள்திறத்து]-பேச்சுக்கு நிலமல்லாதபடி நோவுபட்டுக்கிடக்கிற இவள்திறத்து. [என் சிந்தித்தாயே] - நினைத்திருந்தது

என் ? ஜீவிப்பிக்க நினைத்தீரோ, முடிக்கநினைத்தீரோ ? இப்படிப்பட்ட ஆற்ருமையையும் பேற்றுக்குடலாக நினைத்திருக்கிறிலள், அவன்நினைவாலே பேறு என்றிருக்கிருள். ''உன்மனத்தாலென் நினைந்திருந்தாய்'' என்னக்கடவதிறே. (ச)

ஈடு.—நாலாம்பாட்டு. உம்மையொழிய ஜீவிக்கமாட்டாத இவள்திறத்துச் செய்தருள நினைத்திருக்கிறதேன் ? என்கிருள்.

[இட்டகா லிட்டகைகளா யிருக்கும்] - இவளுக்கு நீர்உடம்புகொடுக்க வேண்டா, இவளவயவங்கள் இவளதீநமாகப்பண்ண வமையும். ''**ஸகீபி⁴ர் ந்யஸ்த ப்ரகீர்ண பரதந்த்ர விபாண்டு³ ராங்கீ³**'' (ஸகீபிர்ந்யஸ்தப்ரகீர்ண பரதந்த்ரவிபாண்டு ராங்கீ) என்று, தோழிமார் போகட்டவிடத்தே கிடக்குமித்தனை. ஸ்வாயீநமல்லாமையாலே தோழிமாரிட்டுவைத்த காலும்கையுமாயிருக்கும். [எழுந்துலாய்மயங்கும்] - அவியும் விளக்குக் கிளர்ந்தெரியுமாபோலே அடியற்றவெழுச்சியும் அடியற்றவுலாவுகையுமாயிராநின்றது; அதுகிளம்பின ஸமநந்தரத்திலே அவியுமாபோலே மயங்காநின்ருள். [கைகூப்பும்] - உணர்த்தியில் தொழுமவளல்லள், மயங்கிஞல் தொழாதிருக்க வல்லளல்லள், ஸாதநபுத்த்யா தொழுமதில்லை; ஆற்ருமையாலே வருமது தவிரமாட்டாள். [கட்டமேகாதலென்று] - ஸாதநபுத்த்யாதொழுதாளாகில் ''கட்டமேகாதல்'' என்னக்கூடாதிறே. விஶ்லேஷத்தில் நலிவுக்குடலாகையாலே ப்ரேமம் தண்ணிதென்கிருள். [கடல்வண்ணுகடியைகாணென்னும்] - கடல் ஸகல பதார்த²ங்களையும் தன்னுள்ளே யடக்கி, ஒன்றையொன்று நலியாதபடி நோக்குமாயிற்று; அப்படியே ஸர்வரக்ஷகனை நீ நிர்க்க்ருணனுய் என்னும். அன்றிக்கே, பிரிந்தார்க்குத் தரிக்கவொண்ணுத வடிவுபடைத்த நீ *வா*துகனுகாநின்றுய் என்னும். [வட்டவாய்நேமி] - ''சங்குசக்கரங்கள்''என்று சொல்லும் நிலையும் போச்சு. இப்போது கண்ணுக்கு விஷயமன்றிக்கே யிருக்கச்செய்தேயும், அதினுடைய ஸந்நிவேசம் *யீ*ஸ்த்தமாயிருக்கிறபடி; பிடித்தவிடமெங்கும் வாயாய்க்கிடெ

நாலாம்பாட்டு - இட்டகால்இத்யாதி ''இவள்திறத் தென்சிந்தித்தாய்?'' என்றத்தைக் கடாக்ஷித் தவதாரிகை - உம்மையொழிய இத்யாதி.

''இட்டகாலிட்டகையளாயிருக்கும்'' என்கிற தாயாருடைய ஹார்த்தபாவம் - இவளுக்குநீர் இத்யாதி வாக்யத்வயம். என் ? இவளவயவங்கள் இவளதீநமல்லவோ ? என்கிற சங்கையிலேயாதல்; ஆராலே இட்டகாலிட்டகை என்கிறசங்கையிலேயாதல் அருளிச்செய்கிருர் - ஸகீபிஃஇத்யாதி. இஶ்ஶ்லோகத்துக்கு ஆகாரங் கண்டுகொள்வது. இட்டகா லிட்டகையளாஞல்எழுந் துலாவக் கூடுமோவென்ன-அவியும்விளக்கு இத்யாதி. கீழே மயங்குகிறதுக்கு முன்னே யெழுந் துலாவுகிறதுக்கு த்ருஷ்டாந்தம் அருளிச்செய்து, எழுந்துலாவினவநந்தரம் ''மயங்கும்'' என்றதுக்கு த்ருஷ்டாந்தம் அருளிச்செய்கிருர்-அதுகிளம்பின இத்யாதி. எழுந்திருந்துலாவாநிற்கச்செய்தே மோஹிக்கும்இதிசப்தார்த்தஃ. ''மயங்கும் - கைகூப்பும்'' என்று கூட்டி, வ்யதிரேகத்தாலும் அந்வயத்தாலும் பாவம்-உணர்த்தியில் இத்யாதி. ஸ்வாபதேசம் - ஸாதநஇத்யாதி. ஸாதநத்வேந தொழுகிருளென்ருலோ ? என்ன-ஸாதநபுத்த்யா இத்யாதி''இது கட்டம்'' என்னுங்காட்டில் பரிஹாரம்பிறந்ததாகாமையாலே மோஹியாநின்ருளென்றபடி. ''வண்ணம்'' என்று - ரக்ஷகத்வஸ்வபாவமாதல், வடிவழகாதல். இரண்டர்த்தத்திலும் பாவமருளிச்செய்கிருர் - கடல்இத்யாதி வாக்யத்வயத்தாலும்; அன்றிக்கே இத்யாதியாலும். வாதகஞகையாவது - வடிவை அநுபவிப்பியாதிருக்கை. ''நேமி'' என்ருென்றைச் சொன்னதுக்கு பாவம்- சங்குசக்கரங்கள்என்று இத்யாதி. காணுதிருக்க, ''வட்டவாய்'' என்றறியும்படியென் ? என்ன-இப்போதுஇத்யாதி. ''வட்டவாய்'' என்றதுக்கு பாவம் - பிடித்தவிடம்இத்யாதி. இப்பதப்ரயோகத்

ரிருப்பது. விரோதிபோக்கப் பரிகரமின்றிக்கேயிருக்கிறாயன்றே. [வந்திடாயென்றென்றே மயங்கும்] - ஒருகால் "வந்திடாய்" என்றாலாறியிருக்க வல்லளல்லளே. விடாய்த்தவன் தாஹம் சமிக்குந்தனையும் "தண்ணீர், தண்ணீர்" என்னுமித்தனையிறே; அப்படியே, "வந்திடாய், வந்திடாய்" என்றுருவ அத்தையே சொல்லும்; மற்றொன்றறியாள். [மயங்கும்] - வாஸனையே உபாத்யாயராகச் சொல்லு மத்தனை. [என்றென்றே] - வெண்கல த்வநிபோலே சொல்லுக்குச்சொல் ஓய்கிறபடி. [சிட்டனே] - சிட்டன் திருமாலென்ற படி. பிராட்டிவிஷயத்திலே வ்யாமோஹத்தை யுடையவனென்னுதல்; பிராட்டியைத் தன் பக்கலிலே பித்தாக்கித் துடிக்கப்பண்ணுமவனென்னுதல் ; உம்முடைய படி சால அழகிதாயிருந்தது. உம்மைப்போலே சில சிஷ்டர்களமைந்திருந்ததிறே அபலைகள் குடி கெடுக்கைக்கு. அழகிதாக ஆந்ருஶம்ஸ்யப்ரதாநராயிருந்தீர். ப்ரஹ்மஹத்யைகளைப் பண்ணிப் பூணூலை வெளுக்கவிட்டுக் கையிலே பவித்ரத்தையுமிட்டு ஓத்துச்சொல்லித் திரிவாரைப்போலேயிருந்ததீ உம்முடையபடி. [செழுநீர்த்திருவரங்கத்தாய்] - ஶ்ரமஹரமான நீரையுடைய கோயில். தண்ணீர்ப்பந்தலிலே வ்யாதுகரோதுங்கினவோபாதியாகாதே நீர் இவ்வூரில் சாய்ந்ததும். [இவள்திறத் தென்சிந்தித்தாயே] - ஸர்வஜ்ஞனுக்கும், இவளுக்கு ஓடுகிறதுகைக்குப் பரிஹாரம் சிந்திக்கவேணுமோ என் றிருக்கிறாள்: திருத்தாயார் தெளிவிருக்கிறபடி. "அவன் நினைவே கார்யமாய்த் தலைக்கட்டுவது" என்று அவனைக் காலைக்கட்டிக் கேட்கிறாள். "ஶ்ரேயோத்யாயதி கேஶவ:" (ஶ்ரேயோத்யாயதி கேஶவ:) என்று, அநுகூலவிஷயத்தில் சிந்திப்பானும் அவனிறே. இங்ஙனே மநோரதமாயே போமித்தனையோ, நிர்ணயாந்தமாகக் கடவதன்றோ. (ச)

துக்கு ஹாவம் - விரோதி இத்யாதி. "என்றென்றே" என்கிறவீப்ஸைக்கு ஹாவம் - ஒருகால் இத்யாதி வாக்யத்ரயம். "என்றென்றே" என்கிற வர்த்தமாநத்துக்குச்சேர - "மயங்கும்" என்றதும், 'வந்திடாய்' என்றதும் ஏககாலீநமாய்த் தோற்றுகையாலே. 'மயங்கினால் வந்திடாய் என்னக்கூடுமோ? என்ன - வாஸநையேஇத்யாதி. "என்றென்றே" என்கிற ஸ்வரத்துக்குத் தாளகதியிலே ஹாவம் - வெண்கலஇத்யாதி. "சிட்டன்" என்று - ஶ்ரீக்கு இஷ்டனென்று விவக்ஷித்து - திருமாலென்றபடிஎன்றது. சிஷ்டனென்று விவக்ஷித்து, வெறுப்பிலேயாக்கி அர்த்தாந்தரம் - உம்முடையஇத்யாதி. "அழகிதாயிருந்தது" என்றதுக்குவிவரணம் - உம்மைப்போலே இத்யாதிவாக்யத்வயம். நம்மை "ஆந்ருஶம்ஸ்ய ப்ரதாநரல்ல" என்று உபேக்ஷிக்கிறதென்? நம்வடிவிலே தெரியாதோ நம்முடைய ஆந்ருஶம்ஸ்யம்? என்ன - ப்ரஹ்மஹத்யைகளைஇத்யாதி. ஓத்து - வேதம். ஆந்ருஶம்ஸ்யப்ரதாநனல்லாவிட்டால் பரமபதத்திலே இரானோ? அப்படியன்றிக்கே கோயிலிலே வந்து சாய்ந்தபோதே நான் ஆந்ருஶம்ஸ்யப்ரதாநனென்னுமிடமெல்லாருமறியாரோ? என்ன-தண்ணீர்ப் பந்தலிலே இத்யாதி. கீழைப்போல் "என்செய்கின்றாய்" என்னாதே, "சிந்தித்தாய்" என்றதுக்கு ஹாவம்-ஸர்வஜ்ஞனுக்கும்இத்யாதி. "என்சிந்தித்தாய்" என்று அவனை ஸம்போதித்துக் கேட்கிறதுக்கு ஹாவம் -திருத்தாயார் இத்யாதிவாக்யத்வயம். அவன் தானப்படி சிந்திக்குமோ? என்ன - ஶ்ரேயோத்யாயதிஇத்யாதி. "சிந்தித்தாயே" என்கிறஅவதாரணார்த்தம் - இங்ஙனேஇத்யாதிவாக்யத்வயம். 'சிட்டனேசெழுநீர்த் திருவரங்கத்தாய்! இட்டகாலிட்டகையளாயிருக்கும்?' என்றுதொடங்கி, 'இவள்திறத்தென் சிந்தித்தாயே ?' இத்யந்வய:. (ச)

ஐந்தாம் பாட்டு.

சிந்திக்குந்திசைக்குந்தேறும்கைகூப்புந்திருவரங்கத்துள்ளாயென்னும்
வந்திக்குமாங்கேமழைக்கண்ணீர்மல்கவந்திடாயென்றென்றேமயங்கும்
அந்திப்போதவுணனுடலிடந்தானே! அலைகடல்கடைந்தவாரமுதே!
சந்தித்துன்சரணஞ்சார்வதேவலித்தவிதையலைமையல்செய்தானே.

ஆ.—(சிந்திக்கும்.)-உன்னழகையும் உன்னழகோடு பண்டுஸம்ஶ்லேஷித்த படியையும் நினைக்கும், நினையா மோஹிக்கும். நெடும்போது கூட லப்த ஸம்ஜ்ஞை யாம். தன்னுடைய அபேக்ஷிதம் பெறுகைக்காக உன்னைத்தொழாநிற்கும். தன்னுடைய வ்யஸநம் பொறுக்கமாட்டாமையாலே, திருவரங்கத்துள்ளாய் என்னும். த்வந் நாஶ்ரயாயிருந்துவைத்தே நாஶ்ரிதைநயப்போலே திருவடிகளிலே விழுந்துகிடக்கும். அங்ஙனேவிழுந்து கிடந்து, தன்னுடைய அழகிய கண்கள் நீர்மல்க, வந்திடாய் என்றென்றே மயங்காநிற்கும். உன்திருவடிகளை ஒருகால்கண்டு ஸம்ஶ்லேஷிக்கவேணுமென்னும் ஆசையாலே தன்னை ஶ்ரீத்துக்கொண்டிருக்கிற இப்பெண்பிள்ளையை இப்பாடுபடுத்தவேணுமோ? உன்னுடைய நிரவஶ்ரீகமான ஆஶ்ரித வாத்ஸல்யமெல்லாம் எங்கே போயிற்று? என்கிறாள்.

ஒ.—அஞ்சாம்பாட்டில், இவளுக்கு ப்ரதிக்ஷணம் ஜநித்துவருகிற அவஸ்ஶ்ராவிஶேஷங்களை விஜ்ஞாபித்து இவளை இப்பாடுபடுத்துகை தேவருடைய ஆஶ்ரித வத்ஸலத்வாதிகளுக்குப் போருமோ? என்கிறாள்.

[சிந்திக்கும் என்று தொடங்கி] - உன்னுடைய ஸௌந்தர்யாதிகளையும் உன்னோட்டை ஸம்ஶ்லேஷத்தையும் நினைக்கும். அப்போதே ஸம்ஶ்லேஷிக்கப் பெறாமையாலே மோஹிக்கும்; ஒரு ஹேதுவின்றியே இருக்கச்செய்தே அபேக்ஷிதம்பெற்றுத் தரித்தாரைப்போலேஸபாவஹமாம்படி தேறும். தேவர்படிகளை நினைத்து ஈடுபட்டுக்கைகூப்பும்; மீளவும் வ்யஸநாஸஹிஷ்ணுதையாலே திருவரங்கத்து உள்ளாய்என்னும். [வந்திக்கும்] - செயலறுதியாலே திருவடிகளைநினைத்துத் தண்டனிட்டுக்கிடக்கும்; ஸ்தோத்திரம் பண்ணும் என்றுமாம். அத்தசையிலே கண்மிகவும் நீர்மல்குவதும் செய்ய 'பிரானே வாராய்!' என்றுநின்றுகொண்டே அறிவுகெடும். [அந்திப்போது என்று தொடங்கி] - அஸுரர்க்கு பலம்வர்ஶ்ரிக்கும் ஸந்த்யாகாலத்திலே ஸ்ரீப்ரஹ்லாதாழ்வானுக்காக ஹிரண்யனுடைய ஶரீரத்தைப்பிளந்தருளி ப்ரயோஜநாந்தரபரருமாய் அபிமாநிகளுமாய்ப் பெருமிடுக்கருமான தேவர்களுக்காக நிரதிஶயபோக்யமான வடிவோடே கடல்கடைந்தருளினாய்; இப்படிச்செய்வான் ஒருவனாயிருந்துவைத்து உன்திருவடிகளை சிந்தித்தோமாய் முடியவேணுமென்று துணிந்துஇருந்துள்ள இப்பெண்பிள்ளைக்கு உன்னைக்காட்டாதே இவளை மதிகெடுத்தவனே! "உன்னைக்கண்டு உன்எதிரே முடியவேணும்" என்று ப்ராணன்களை ஶ்ரீத்திருக்கிறாள் என்றுமாம்.

ப.—அநந்தரம், ஆஶ்ரிதர் அபேக்ஷிதஞ்செய்யும்படியான ஶௌஶீல்யத்தையுடையையாயிருக்க, இவள் ப்ரதிக்ஷணம் அவஸ்த்தாபேதம் பிறக்கும்படியான ஆர்த்தியையுடையளாகாநின்றாளென்கிறாள்.

அந்தி - ஸந்த்யை யென்ற, போது - ஒருகாலவிசேஷத்திலே, அவுணன் - அஸுரனான ஹிரண்யனுடைய, உடல் - ஶரீரத்தை, இடந்தானே - பிளந்தவனே, அலை - அலையையுடைத்தான, கடல் - கடலை, கடைந்த - கடைந்து, ஆரமுதே - நிரதிஶயபோக்யனைப் வைத்து, (அப்படி காலநியதியுமின்றியே ப்ரபலவிரோதியு மின்றியே, அருந்தொழில் செய்வித்துக்கொள்ளவும் வேண்டாதபடி, ஆந்தராநுபவமாத்ரமன்றியே), சந்தித்து - பாஹ்யமான ஸம்ஶ்லேஷத்தைப்பண்ணி, உன் சரணமே - உன் திருவடிகளையே, சார்வது - சேர்ந்தநுபவிக்கவேணுமென்கிற, வலித்த - சிக்கெனவையுடையவளா யிருக்கிற, தையலை - இப்பெண்பிள்ளையை, மையல்செய்தானே - மதிகெடுத்தவனே! (இவள்), சிந்திக்கும் - பூர்வஸம்ஶ்லேஷ ப்ரகாரத்தைச் சிந்தியாநிற்கும்; திசைக்கும் - (அதுஅப்போதே ஸித்தியாமையாலே) அறிவழியாநிற்கும்; தேறும் - அஶங்கிதமாகத் தேறாநிற்கும்; (அவ்வளவிலே வந்தாயாகக் கருதி), கைகூப்பும் - கைகூப்பாநிற்கும்; (ஆஸந்நமாக), திருவரங்கத்துள் - கோயிலிலே, உள்ளாய் - கண்வளர்ந்தருளுகிறவனே! என்னும் - என்று கூப்பிடாநிற்கும்; வந்திக்கும் - (அவ்வடிவழகை நினைத்துத்) தலையாலே வணங்கும்; (அவ்வளவிலும் வரக்காணாமையாலே), ஆங்கே - அவ்விடந்தன்னிலே யிருந்து, மழை - குளிர்ந்த, கண்ணீர் மல்க - கண்ணீர்மல்கும்படி, வந்திடாய் - வந்துகொள்ளாய், என்றென்றே - என்று பலகாலுஞ்சொல்லி, மயங்கும் - (உக்திஸாபல்யத்தை யாகக் காணாமையாலே) மோஹிக்கும். காமாதுரைகள் விகாரத்தில் இவளுக்கில்லாதன வில்லை என்று கருத்து.

இ.—அஞ்சாம்பாட்டில், இவளுக்கு ப்ரதிக்ஷணம் ஜநித்து ஒன்றோடு ஒன்று சேராதே வருகிற அவஸ்தாபேதங்களை அறிவித்து இவளை இப்படிப்படுத்துகை உம்முடைய நீர்மைக்குப் போருமோ? என்கிறாள்.

[சிந்திக்கும்] - உம்முடைய ஸௌந்தர்யாதிகுணங்களையும் உம்மோட்டை ஸம்ஶ்லேஷத்தையும் நினைக்கும். முன்பு இவ்வநுஸந்தாநமின்றியே யாயிற்று இருப்பது. மோஹித்தவோபாதி இதுவும் ஒருபடிவிக்ருதி இருக்கிறபடி. அப்போதே காணப்பெறாமையாலே [திசைக்கும்] - மோஹிக்கும். [தேறும்] - ஒருஹேதுவின்றிக்கே யிருக்கத் தேறாநின்றாள். இதுதானும் ஸாவஹமாயிருக்கிறதாயிற்று. மோஹம் செல்லாநிற்க, அபேக்ஷிதம் பெற்றாரைப்போலே தேறுகை ஸாவஹமிறே; சரமதஶையில் பிறக்கும் தெளிவுக்கு அஞ்சவேணுமே! [கைகூப்பும்] - தேவர்படிகளை நினைத்து ஈடுபட்டுக் கும்பிடும். கீழே, "மயங்கும் கைகூப்பும்" என்றது, "இங்கு தேறும் கைகூப்பும்" என்றது: அல்லாதன ஸஞ்சாரியாய்ச் செல்லாநிற்க, இதுஒன்றும் ஸ்திரமாய்ச் செல்லாநின்றது; ஸ்வரூபாநுபந்தியான தர்மமாகையாலே. "நித்யாஞ்ஜலிபுடா:" என்னக்கடவதிறே. ஆற்றாமையாலே, [திருவரங்கத்துள்ளாய் என்னும்] - நீர் உம்முடைய செல்லாமைதோற்றக்கிட்டிவைத்து, இவளுடைய அஞ்ஜலியை மறுக்கிறதென்? ஶேஷபூதனுக்கு அஞ்சலியோபாதியிறே ஶேஷி கிட்டவந்திருக்கையாகிறது. பெருமாளே! என்னாநின்றாள். [வந்திக்கும்] - செயலறுதியாலே பெருமாள் எழுந்தருளி இருக்கிறபடியை நினைத்துத் தண்டனிடும். வந்திகளுடைய கார்யமாகையாலே, ஸ்தோத்ரம்பண்ணும் என்றுமாம். "இதொருதோளே! தோள்மாலையே! முறுவலே!" என்று அங்யரைப்போலே புகழாநின்றாள். [ஆங்கே மழைக்கண்ணீர்மல்க] - அத்தஶையிலே கண்ணநீர்வெள்ளமிட, தண்டனிட்டுக்கிடக்கும் என்னுதல்; ஸ்தோத்ரம்பண்ணாநிற்கும் என்னுதல். [வந்தி

டாய்] - தன் ஆற்றுமைதோற்ற பிரானே! வாராய் என்னும். [என்றென்றே] - ஒருகால் அழைத்தால் வாராதொழிந்தால் பின்னையும் அத்தையே சொல்லுமித்தனையல்லது, வேறு சிலதான் சொல்லுமவ ளன்றே. அச்சொலவுதானே வெண்கலத்வநிபோலே ஒய்ஞ்சு செல்லாநின்றது. [மயங்கும்] - அதுதானும்போய் அறிவுகெடாநின்றுள். "வந்திடாய்" என்றதுவும் இழக்கக்கிடாய் புகுகிறது: நினைத்தபோதாக வரப்போமோ? என்ன, [அந்திப்போது இத்யாதி]-ப்ரதிஜ்ஞாஸமகாலத்திலே தூணிலேவந்து தோற்றிற்றிலையோஎன்கிறுள்: அஸுரர்களுக்கு பலம்வர்த்திக்கும் காலத்திலே. அவனுடைய வரத்திற்புகாத காலத்திலே, [அவுணனுடல்]-வரபலத்தாலே திருவுகிருக்கு ஊட்டியாகவளர்த்த ஹிரண்யனுடைய ஶரீரத்தைப் பிளந்தானே! "நரஸ்யார்த்த தநும் க்ருத்வா ஸிம்ஹஸ்யார்த்த தநும் ததா" என்று இரண்டுயோநியை ஒன்றுக்கி, அவன் வரத்திற்புகாதவடிவாலே பிளந்தவனே! "உத்தஸ்தவஸம்ஸதஃ" என்னுந் தெளிவுடையார்க்கோஉதவலாவது? மயங்கின இவளுக்கு உதவலாகாதோ? ஆணுமாய் மிடுக்கனுமானவனுக்கோ உதவலாவது? அப்பருவத்தில் அபலைக்கு உதவலாகாதோ? பிறரால்வரும் நலிவோ பரிஹரிக்கலாவது? உன்னால்வந்தது பரிஹரிக்கலாகாதோ? இவளுக்கு உதவுமிடத்தில் காலநியதி வேண்டா, உன்னையழிய மாறவேண்டா. அவ்வளவேயோ? [அலைகடல் கடைந்த ஆரமுதே] - ப்ரயோஜநாந்தரபரருமாய் ஈஶ்வராபிமாநிகளுமானுர்க்கு, நிரதிஶயபோக்யமானவடிவைக்கொண்டு, க்ஷுபிதமான கடலைக் கடைந்தவனே! இவளுக்குக் கடல்கடையவேணுமோ, கடல்கடைந்த வடிவைக்காட்ட அமையாதோ? ஒருப்ரணயிநியை லபிக்கைக்குப் பண்டு கடல்கடைந்தவனல்லையோ? [சந்தித்துன் சரணம்சார்வதே வலித்ததையலை மையல்செய்தானே] - தெளிவுடைய இறுக்கனுக்கு உன்னை அழியமாறி உதவினுய்: ப்ரயோஜநாந்தரபரர்க்கு உடம்புநோவக் கடல்கடைந்தாய்: உன்னையல்லது அறியாத இவளை அறிவுகெடுத்து வைத்தாய். உன்திருவடிகளைக்கிட்டி முடியவேணும் என்று துணிந்திருக்கிற இப்பெண்ணை என்னுதல், உன்னைக்கண்டு உன்எதிரே முடியவேணும் என்று ப்ராணனையரித்திருக்கிற இவளை என்னுதல். "நவாஸ்யோ தாநவீ தாநவாந்ய:". மாநஸாநுபவமேயன்றி, உன்னைக்கிட்டி பாஹ்ய ஸம்ஶ்லேஷம் பண்ணினேனுகவேணும் என்று துணிந்திருக்கிற இவளை என்னுதல். [மையல் செய்தானே]- உன்னைக்காட்டாதே இவளை மதிகெடுத்தவனே!

ஈடு.—அஞ்சாம்பாட்டு. இவளுக்கு ப்ரதிக்ஷணம் பேதித்து ஒன்றேடொன்று சேராதே வருகிற அவஸ்தாபேதங்களை அறிவித்து, இவளை இப்படி படுத்துகை உம்முடைய நீர்மைக்குப் போருமோ? என்கிறுள்.

[சிந்திக்கும்] - உம்முடைய ஸௌந்தர்யாதிகளையும் உம்மோட்டைக்கலவியையும் நினைக்கும். முன்பு இவ்வநுஸந்தாநமும் இன்றிக்கேயாயிற்றிருந்தது; மோஹத்தோபாதி இதுவும் ஒரு விக்ருதியாயிருக்கிறபடி. [திசைக்கும்] - அப்போதே காணப்பெறுமை

அஞ்சாம்பாட்டு - சிந்திக்கும்இத்யாதி. "சிந்திக்கும்" என்றுதொடங்கி, "மயங்கும்" என்னுமளவுங்கடாக்ஷித் தருளிச்செய்கிறுர் - இவளுக்குப்ரதிக்ஷணம்இத்யாதி. "அந்திப்போது" இத்யாதிகளைக் கடாக்ஷித்து - இவளைஇப்படிஇத்யாதி.

சிந்தாவிஷயத்தையும் சொல்லாநின்றுகொண்டு, "சிந்திக்கும்" என்றதுக்கர்த்தம்அருளிச்செய்கிறுர் உம்முடைய இத்யாதி. இவ்வநுஸந்தாநம் ப்ரதிக்ஷணம் பேதித்த அவஸ்த்தையோ? என்ன - முன்பு இத்யாதிவாக்யத்வயம். இப்போது "சிந்திக்கும்" என்கையாலே - முன்புமோஹம் ஸித்தம் "திசைக்கும்" என்றது - திகைக்குமென்றுய், அதாவது - அறிவுகலங்குகையாய், மோஹிக்கும் என்ற

யாலே மோஹிக்கும். [தேறும்] - ஒரு ஹேதுவின்றிக்கே யிருக்கத் தேறுகின்றாள். இது தானும் ஹயாவஹமாயிருக்கிறதாயிற்று; மோஹம் செல்லாநிற்க, அபேக்ஷிதம்பெற்றாரைப் போலே தேறுகை ஹயாவஹமிறே. சரமதசையில் பிறக்கும் தெளிவுக்கும் அஞ்ச வேணுமே. உய்ந்தபிள்ளைபாடும்போது, "கேட்டேன், இவள்'தேறும்' என்பதே"என்று சீயரருளிச்செய்வராம். [கைகூப்பும்] - இதுஇவளுக்கு ப்ரக்ருதி. கீழே "மயங்கும் கைகூப்பும்" என்றது: இங்கே 'தேறும்கைகூப்பும்' என்றது; அல்லாதன ஸஞ்சாரியாய்ச் செல்லாநிற்க, இது ஒன்றும் ஸ்த்திரமாய்ச்செல்லாநிற்கும்; ஸ்வரூபாநுபந்தியாகையாலே. "நித்யாஞ்ஜலிபுடா:" (நித்யாஞ்ஜலிபுடா:) என்னக்கடவதிறே. மோஹத்திலும் உணர்த்தியிலும் ஸத்தையுண்டே; "வழுவிலாவடிமைசெய்யவேண்டுநாம்" என்றதிறே நிலைநின்ற ஸ்வரூபம். அநுவர்த்தமாநமானதிறே பரமார்த்தமாவது. [திருவரங்கத்துள்ளா யென்னும்] - "பெருமாளேயென்னும்" என்று சீயர். அவ்வூரில் ஸம்பந்தங்கொண்டு போலேகாணும் அவரையும் விரும்பிற்று. [வந்திக்கும்] - "திருவரங்கத்துள்ளாய்" என்றது நெஞ்சிலேவடிம்பிட்டு, "ஒருமுகமே, முறுவலே, ஒருவளையமே" என்று ஸ்தோத்ரம் பண்ணுநின்றாளென்னுதல்; ஹக்நாபிமானையாய்த் திருவடிகளிலே விழுந்துகிடக்குமென்னுதல். [ஆங்கே] - அவ்வவஸ்தையிலே. [மழைக்கண்ணீரித்யாதி] - குளிர்ந்தகண்ணீர் மல்க, வந்திடாயென்றென்று சொல்லி, அச்சொலவோடே யறிவுகெடும். நினைத்தபோதாக வரப்போமோ? என்ன, [அந்திப்போது] - "மத்தஸ்ஸர்வமஹம் ஸர்வம்" (மத்தஸ்ஸர்வமஹம் ஸர்வம்) என்று தெளிந்திருப்பார்க்கோ உதவலாவது? அறிவுகெட்டோர்க்கு உதவலாகாதோ? அவன் வரத்துக்கு விருத்தமாயிருப்பதொரு காலத்திலே, ஆஸுரப்ரக்ருதியாயிருக்கிற அவுணனுடைய ஶரீரத்தைப் பிளந்து போகட்டிலையோ? தமப்பன் பகையாளனோ

படி. தேறுகை நல்லதன்றோ? என்ன - இதுதானும் இத்யாதி, [illegible]மெப்படியென்ன-மோஹம் இத்யாதி. இதுக்குநியாமகமேதென்ன - சரமதசையில்இத்யாதி. தேறுமது ஹயாவஹ மென்கைக்கு ஸம்வாதம் - உய்ந்தபிள்ளைஇத்யாதி. இது ஸ்வபாவமானபடி எப்படி? என்ன; ஸஹேதுமாக அருளிச்செய்கிறார் - கீழேமயங்குமித்யாதி வாக்யத்ரயத்தாலே. நித்யாஞ்ஜ மென்றது, அஞ்சலியை. ஸ்வரூபாநுபந்தியாகையாலே அஞ்சலிநித்யமென்னுமதுக்கு ப்ரமாணம் - நித்யாஞ்சலி இத்யாதி. "ஏகாந்திநாம் லக்ஷணம் ஹ்யேதத் ஸ்வதந்த்ரேணவாவிநாம் நித்யாஞ்ஜலிபுடா ஹ்ருஷ்டா: நம இத்யேவவாதிந:" (பார - மோக்ஷ - ௬௭). இதுக்குஉபபத்தி-மோஹத்திலும்இத்யாதி. அத்தாலேதென்ன - வழுவிலாஇத்யாதி. அதாவது - [illegible] அஞ்சலியும் நித்யமாய்ச்செல்லுமென்றபடி- மோஹமுமுணர்த்தியும் ஸஞ்சாரி, அஞ்சலி ஸ்த்திரமென்னுமத்தை, உபபாதிக்கிறார் அநுவர்த்தமாநமானது இத்யாதி. பெருமாளே என்றர்த்தமானால், திருவரங்கத்துள்ளாய் "என்ன"வேணுமோ? என்ன - அவ்வூரில்இத்யாதி. "வஸதி ஸவிதா ஸ்ரீரங்கநாத:" என்கிறதாதுவைப்பற்ற. "வந்திக்கும்" என்றதுக்கு-ஸ்துதிக்கும். ஸேவிக்கும்என்று அர்த்தத்வயமருளிச்செய்கிறார்- திருவரங்கத்துள்ளாய் இத்யாதி வாக்யத்வயத்தாலே. வடிம்பிட்டு - ப்ரேரித்து, வடிம்பிடுகை - தணிபேட்டுக் கிளப்புகை. கீழே 'கைகூப்பும்' என்கையாலே இங்கே - ஸாஷ்டாங்கப்ரணாமம் விவக்ஷிதம். ப்ரஹ்லாதனுக்காக ஹிரண்யனுடலைப் பிளந்தானென்று விவக்ஷித்து, அத்தைச் சொல்லுகிற - தாயாருடைய ஹார்த்தஸாவம் - மத்தஸ்ஸர்வம் இத்யாதி வாக்யத்ரயம். ஶப்தார்த்தம் - அவன்வரத்துக்கு இத்யாதி. "மத்தஸ்ஸர்வமஹம் ஸர்வம் மயி ஸர்வம் ஸநாதநே" இத்யாதி- ப்ரதமேம்ஶே ஏகோநவிம்ஶே ப்ரஹ்லாதசரிதே. "அவுணனுடலிடந்தானே" என்கிறவளுடைய ஹார்த்தஸாவத்தை ப்ரகாராந்தரேண அருளிச்செய்கிறார் - தமப்பன் இத்யாதிவாக்யத்வயத்தாலே.

வுதவலாவது ? நீர் பகையாளு வுதவலாகாதோ ? இவ்வளவில்உதவாமைக்கு மேற்படப் பகையில்லையிறே. அது ஒருகால் சிறுக்கனுக்கு உதவினமையுண்டு. அது தப்பிற்றிறே யென்ன, பின்போ நீயுதவாதது ? [அலைகடல்கடைந்த]-ப்ரயோஜநாந்தரபரர்க்கும் அகப் படக் கடலைக்கடைந்துகொடுத்திலையோ ? உன்னைக்கொண்டு ஒருப்ரயோஜநங் கொள் வார்க்கோ உதவலாவது ? உன்னையே "ப்ரயோஜநம்"என்றிருப்பார்க்கு உதவலாகாதோ? [ஆரமுதே] - இவருடைய அம்ருதத்தைக்கொண்டாயிற்று அவர்கள் கடல் கடைந்தது. [சந்தித்துஇத்யாதி]-உன்னைக்கிட்டித் திருவடிகளைச் சாரவேணுமென்று வ்யவஸிதையா யிருக்கிற இவளை இப்படி யறிவுகெடுப்பதே! (வலித்த ப்ராணனை பலாத்காரத்தாலே யரித்த.)அன்றிக்கே, உன்னைக்கிட்டி ஸந்நிதியிலே முடியுமித்தனையென்று ப்ராணனையரித் திருக்கிறவளை என்னுதல். (வலித்த - அத்யவஸித்த.) "தாவஜ்ஜீவிஷ்யே ஹம்ஹ்ரு தஜிஜீவி ஷெயஂ" (தாவத்த்யஹம்தூதஜிஜீவிஷேயம்) என்றுகாணும்இருக்கிறது. [மையல்செய் தானே] - உம்மை யாசைப்பட்டவளுக்கும் மயக்கமேயோ பலித்துவிட்டது. (ரு)

ஆறும் பாட்டு.

மையல்செய்தேன்னைமனங்கவர்ந்தானே!என்னும்மாமாயனே!என்னும்
செய்யவாய்மணியே!என்னும்தண்புனல்சூழ்திருவரங்கத்துள்ளாய்என்னும்
வெய்யவாடண்டுசங்குசக்கரம்வில்லேந்தும்விண்ணோர்முதல்!என்னும்
பைகொள்பாம்பணையாய்!இவள்திறத்தருளாய்பாவியேன்செயற்பாலதுவே.

ஆ.—(மையல்செய்து.) - அதிக்ஷுத்ரமான காகத்தின்பக்கலிலே ப்ரஹ்மாஸ்த்ரத்தைவிட்டருளின உன்னுடைய ஸர்வவசீகரணமான ப்ரணயித்வ குணத்தாலே என்னுடைய மநஸ்ஸை அபஹரித்தவனேயென்னும். வக்ஷ்யமாணமான அவனுடைய

அவன் பகையோ? என்ன - இவ்வளவில்இத்யாதி. மேலுக்கவதாரிகை - அதொருகால்இத்யாதி வாக்யத்வயம். 'அதொருகால்' இத்யாதிக்குக் கருத்து - அவதாரம் முன்பின்னானாலும் இப்படியநேக வ்யாபாரங்களைச் செய்தான்என்று. இத்தைச் சொல்லுகிறவளுடைய ஹார்த்தபாவம் - உன்னைக் கொண்டுஇத்யாதி வாக்யத்வயம். "ஆரமுதே" என்றத்தைப்பற்ற - உன்னையேப்ரயோஜநமென் றிருப்பார்க்கு என்றது. "ஆரமுதே" என்றதுக்கு பாவம் - இவருடைய இத்யாதி. கிட்டி - ஆந்தரமாகவன்றிக்கே பாஹ்யமாகக்கிட்டி. சரணம் சார்வதே - சரணம் சாரவேணுமென்றே. முந்தினவர்த்தத்துக்கு, சரணம் சாருகை - ஸம்ஶ்லேஷிக்கை; வலிக்கை - வ்யவஸ்திதையாகை. த்விதீயார்த்தத்துக்கு, சரணம் சாருகை - முடிகை; சந்திக்கை - ப்ராபிக்கை, வலிக்கை - யரிக்கை. அப்படி யரித்திருந்தபேருண்டோ? என்ன - தாவத்த்யஹம் இத்யாதி. "நவாஸ்ரோதா நவிதா நவா நூஃ ஸ்நேஹா த்விஷிஷ்டோஸ்த்யாஸரோவா । தாவஜ்ஜீவிஷ்யேஹம்ஹ்ருதஜிஜீவிஷேயம், யாவச்ச்ரு ஷ்டிம் ஸ்ருணுயாம் ப்ரியஸ்ய" இதி ஸுந்தரகாண்டே ஹநூமந்தம்ப்ரதி ஸீதா. (ங௬-ங௦) அவதாரணார்த்தம் - உம்மை இத்யாதி. 'சிந்திக்கும்' என்று தொடங்கி, 'மையல்செய்தானே - இவள் திறத்தருளாய்' என்று மேலிற்பாட்டில் க்ரியையோடே அந்வயம். (ரு)

மஹாஸ்சர்யபூதமான ஸௌந்தர்யத்தை அநுஸந்தித்து, மஹாஸ்சர்யபூதனேயென்று சொல்லும். நிரதிஸய தீப்தியுக்தமாயிருப்பதொரு நீலரத்நம், செந்தாமரை பூத்தாற்போலேயிருந்த திருவுடம்பையும் திருப்பவளத்தையுமுடையவனே என்று அவ்வழகைச் சொல்லும். அடியேனுக்கு ஆத்மலாபம் பண்ணுகைக்காகவன்றோ கோயிலிலேவந்து கண் வளர்ந்தருளுகிறது? என்னும். ஸர்வஜ்ஞனுமாய் ஸர்வஸக்தியுமாய் அத்யுக்ரமாயிருந்த ரதாங்கசங்கசார்ங்காதி திவ்யாயுதங்களை ஏந்தியருளுகிறதெனக்காகவன்றோ? என்னும். இவளுக்காக நீ கோயிலிலேவந்து கண்வளர்ந்தருளாநிற்கச்செய்தே, இவள்பக்கல் க்ருபை பண்ணியருளுகிறதில்லை; இதுக்குஹேது என்னுடைய பாபமேயிறே என்கிறாள்.

ஒ.— ஆறும்பாட்டில், இவள் இவ்வவஸ்தாபந்நையாயிருக்க இவள் ஆர்த்தி தீர்த்தருளாதொழிகைக்குக் காரணம் என்னுடைய கர்மவிபாகம் என்கிறாள்.

[மையல் என்று தொடங்கி] - என்பக்கலிலே அதிவ்யாமோஹத்தைப்பண்ணி என்னை அறிவழித்து என்மநஸ்ஸை நிஸ்ஸேஷமாகப் பறித்துக்கொண்டவனே! என்னும். ஸம்ஸ்லேஷதஸையில் ஆஸ்சர்யமான சேஷ்டிதங்களை உடையவனே! என்னும். ஸம்ஸ்லேஷதஸையில் வார்த்தை அருளிச்செய்யும்போது திருப்பவளத்திலும் திருவுடம்பிலும் பிறக்கும் அழகை நினைத்துச் செய்யவாய்மணியே! என்னாநிற்கும். ப்ரமஹரமான கோயிலில் கண்வளர்ந்தருளுகிறபடியை நினைத்து இவள் தனக்கு உதவுகிறிலை என்று சொல்லாநிற்கும். [வெய்யவாள் தண்டு சங்கு சக்கரம் வில்லேந்தும் விண்ணோர்முதல்! என்னும்] - அயர்வறுமமரர்களுக்கு அதிபதியாய் இருந்துவைத்து ஆஸ்ரிதருடைய ஆபந்நிவாரணார்த்தமாகக்காணவே எதிரிகள் ஐபப்படும்படி கொடியவான திவ்யாயுதங்களை தரித்திருக்கிற நீ, என்னுடைய ப்ரதிபந்தகங்களை நீக்கி என்னோடே ஸம்ஸ்லேஷித்தருளாதொழிவதே என்று கருத்து. [பைசொல்பாம்பணையாய் இவள் திறத்தருளாய்] - ஆஸ்ரிதஸம்ஸ்லேஷைக ஸோகனாயிருக்கிற நீ, இவளிடையாட்டத்தில் க்ருபை பண்ணுகிறிலை. இவள் து:கிதையாய் இருக்கச்செய்தே இவளை விஷயீகரியாதே "படுக்கை நேர்பாடாயிருந்ததி" என்று உறங்கி அருளுவதே! என்றுமாம்.

ப.— அநந்தரம், ஆஸ்ரிதஸம்ரக்ஷணார்த்தமான ஆயுதபூர்த்தியை யுடையையாயிருக்கச்செய்தே இவளை இப்படி யலற்றும்படி பண்ணின நீ, இவளளவில் நான் செய்யக்கடவபடி அருளிச்செய்யவேணுமென்கிறாள்.

(உன்னுடைய ஹ்ருத்யதையாலே,) என்னை-என்னை, மையல்செய்து-மயல்கொளப்பண்ணி, மனம் - நெஞ்சை, கவர்ந்தானே - அபஹரித்தவனே! என்னும்-என்னும்; மாமாயனே - மையல்கொள்ளுகைக்குப்பண்ணின நிரவதிகாஸ்சர்ய சேஷ்டிதங்களை யுடையவனே! என்னும் - என்னும்; (ஹ்ருத்யதாப்ரகாஸகமான உக்தியாலே ஸ்ப்புரிக்கிற,) செய்ய-சிவந்த, வாய் - அதரஸோபையையுடையையாய்க்கொண்டு, மணியே - மணிபோலே முடிந்தாளலாம்படி ஸுலபனானவனே! என்னும் - என்னும்; தண் - (உன்னைக்கிட்டி என் பரிதாபந்தீருகைக்கிடாகக்)குளிர்ந்த, புனல் - நீர், சூழ்-சூழ்ந்த, திருவரங்கத்து - கோயிலிலே, உள்ளாய் - ஸந் னே! என்னும் - என்னும்; வெய்ய - யத்தில் வெம்மையேவடிவான, வாள் தண்டு சங்கு சக்கரம் வில் - ஸ்ரீபஞ்சாயுதங்களையும், ஏந்தும் - ப்ரணதரக்ஷா விளம்பம் பெறாதாரைப்போலே எப்போதும் ஏந்தியிருந்து, (அவ்வழகை), விண்ணோர் - ஸூரிகளுக்கநுபவிப்பித்து, முதல் - அவர்கள் ஸத்தாதி

ஹேதுபூதனானவனே ! என்னும் - என்னும்; பை - உன்னுடைய ஸ்பர்ஶத்தாலே விரி
கிறபணத்தை, கொள் - உடையனாய், பாம்பு - (ஜாதிப்ரயுக்தமான மென்மைகுளிர்த்தி
நாற்றத்தாலே நிரதிஶயபோக்யமான) திருவநந்தாழ்வானை, அணையாய் - படுக்கையாக
வுடையவனே! இவள்திறத்து-(நீ படுக்கைபொருந்திக்கிடக்கத் தரைப்பட்டுக்கிடந்தலற்று
கிற) இவள்திறத்து, பாவியேன் - இவளையிப்படி காணவைத்த பாபத்தையுடையநான்,
செயற்பாலது - செய்யும்ப்ரகாரம், அருளாய் - அருளிச்செய்யவேணும். நீ அநாதரித்த
வளவில் என்னாற்செய்யலாவதொரு பரிஹாரமுண்டாக உன்னாலும் சொல்லமுடியா
தென்று கருத்து. மையல்செய்தென்று - பிச்சரைப்போலே ஶாவித்துக்காட்டியென்று
மாம்

ஈடு.—ஆரும்பாட்டில், இவ்வவஸ்தாபந்நையாயிருக்கிற இவள் ஆர்த்திதீர்த்
தருளாதொழிகைக்குக் காரணம் என்கர்மவிபாகமேயிறே என்கிறாள்.

[மையல் இத்யாதி] - என்பக்கலிலே அதிவ்யாமோஹத்தைப்பண்ணி என்
மநஸ்ஸை அபஹரித்தவனே! தன்மேன்மைபாராதே தாழநின்று பணிமொழிகளைச்
சொல்லி இழிதொழில்களைச்செய்து தன் ஆற்றாமையை ஆவிஷ்கரித்து, ஸர்வேந்த்ரிய
கந்தமான மநஸ்ஸை அபஹரித்தவனே! என்னும். தங்கள் இழவு தெரியாதபடியிருந்து
பிறர்நெஞ்சை அபஹரிக்கையிறே ஸ்த்ரீத்வமர்யாதை; என் நினைவு அவன் நினைவாய்
அத்தலை இத்தலையாயிற்று என்கிறாள். [மாமாயனே என்னும்] - ஸம்ஶ்லேஷதஶையில்
ஆஶ்சர்யமான சேஷ்டிதங்களை உடையவனே! என்னும். [செய்யவாய்மணியே என்னும்]-
இதுவும் அந்தமாயங்களிலே ஒன்று. தாழ்வுதோற்ற வார்த்தை சொல்லத்தொடங்கி,
அது தலைக்கட்டமாட்டாதே ஸ்மிதம் பண்ணுநிற்கும்போதைத் திருவதரத்திற்பழுப்பு,
‘‘செவ்வாய்முறுவலோடு எனது உள்ளத்திருந்த அவ்வாயன்றியானறியேன்’’ என்னும்
படியிறே முறுவல் துவக்கவல்லபடி. [மணியே] - ஸ்மிதம்பண்ணும்போது திருமேனி
யெங்குமொக்கப் பிறக்கும் எழிலும் குளிர்த்தியுமிருந்தபடி. [தண்புனல்சூழ் திருவரங்
கத்துள்ளாய் என்னும்] - குளிர்த்திக்கு இவ்வடிவழகு தேடிப்போகவேண்டாதபடி
தேசமே ப்ரமஹாரமாய் இருக்கிறபடி. ஸந்நிஹிதனாய்வைத்து எனக்கு உதவாதொழி
வதே; [வெய்யவாள் இத்யாதி] - அயர்வறுமமரர்கள் அதிபதியாய்வைத்து ஆர்தரக்ஷ
ணார்த்தமாக அன்றோ திவ்யாயுதங்களை தரித்தது? காணவே, எதிரி மண் உண்ணும்படி
யான திவ்யாயுதங்களை தரித்திருக்கிற நீ, என்விரோதிகளைப்போக்கி முகங்காட்டா
தொழிவதே என்கை. [பைகொள்பாம்பணையாய் இவள்திறத்து அருளாய்] - ஆஶ்ரித
ஸம்ஶ்லேஷ ஸ்வபாவனான நீ இவள்திறத்து க்ருபைபண்ணுகிறிலை. ஸ்வஸ்பர்ஶத்
தாலே விகஸிதமான ஃபணத்தைஉடையனாய், ஜாதிப்ரயுக்தமான மென்மை குளிர்த்தி
நாற்றங்களையுடைய திருவனந்தாழ்வானைப் படுக்கையாகஉடையனாகை. நீரும் இவளு
மாக இருக்கக்கடவபடுக்கை, இவள் தரைக்கிடை கிடக்க உமக்குப் பொருந்துவதே !
[இவள் திறத்து] - பாடோடிக்கிடக்கிற இவள்திறத்து. [அருளாய்] - அருள்கொள்வார்
தேட்டமானநீ, அருள்பெறில் ஜீவிக்குமவளை இப்படி தரைக்கிடைகிடக்க விட்டு வைப்
பதே; [பாவியேன்செயற்பாலதுவே] - பாவியேன் செயலிடத்தது இவள் பக்க...
குறையல்லை, உம்முடைய பக்கலிலும் குறையில்லை. இருவருமானசேர்த்திபெற
கிற என்பாபமிறே இதுக்கு ஹேது. ‘‘த்³வாவேவ து நிர்தோ³ஷௌ.’’

ஈடு.—ஆறும்பாட்டு. இவள் இவ்வளவு ஆபந்நையாயிருக்க,இவளார்த்திதீர்த்து அருளாதொழிகைக்குக் காரணம் என்னுடைய கர்மவிபாக மென்கிறாள்.

[மையல்செய்து] - உணர்த்தியுண்டாகில் நெஞ்சிழவாள்காணும். எதிரிகளுடைய அநவதாநம்பார்த்திருந்து அவர்கள் கோட்டைகொள்ளுவாரைப்போலே. [என்னை] - கடலைத் தறைகண்டா னென்னுமாபோலே. [மனங்கவர்ந்தானே] - புழுகூற்றிச்சட்டம் போகடுவாரைப்போலே. [மையலித்யாதி] - கொன்று கிழிச்சிறையறுப்பாரைப்போலே. [மாமாயனே யென்னும்] - மையல்செய்த ப்ரகாரங்கள். கலக்கிற ஸமயத்தில் தாழநின்று கையைக்காலைப்பிடித்த பரிமாற்றங்காணும் இவள்நெஞ்சில் பட்டுக்கிடக்கிறது. ஸ்வதஸ்ஸித்தமானமேன்மை போலல்லவாயிற்று, ப்ரணயித்வத்தாலே தாழநின்றநிலை. ஸம்ஶ்லேஷ தசையில் ஆஶ்சர்யமான சேஷ்டிதங்களை யுடையவனே! என்னும். [செய்யவாய்மணியே யென்னும்] - இதுவும் அந்தமாயங்களிலேயொன்று. தைர்யபங்கம்பிறந்து "நான்உன்சரக்கன்றோ?" என்று சொல்லுகிறபோதை அதரத்தில் பழுப்பு. "ஸவிலாஸஸ்மிதாதாரம்" (ஸவிலாஸஸ்மிதாதாரம்) என்னக்கடவதிறே [மணியே] - புஷ்பம் விகஸிதமாம்போது எங்குமொக்க ஒருசெவ்வி பிறக்குமாபோலே,ஸ்மிதம்பண்ணுகிறபோதுவடிவிலேஎங்குமொக்க ஒருசெவ்வி பிறந்தபடி. [தண்புனல்]-ஸ்மிதத்தில்குளிர்த்திபோலாயிற்று ஊரில்குளிர்த்தியும். அவ்வாயில் குளிர்த்திபோலேகாணும் இவ்வாயில்குளிர்த்தியும். (வாய் - இடம்.) [வெய்யவாளித்யாதி] - திவ்யாயுதங்கள் எதிரிகளையழிக்கைக்கு உடலாயிருக்குமாபோலே காமிநிகளை யழிக்கைக்கும் உடலாயிருக்குமிறே. உகப்பாரையும் உகவாதாரையும் ஒக்கத்தோற்

ஆறும்பாட்டு.—மையல் இத்யாதி. "பாவியேன் செயற்பாலதுவே" என்றதைப் பற்றி[1] - இவள் இவ்வளவு இத்யாதி.

மையல்செய்தபின்பு "மனங்கவர்ந்தான்" என்றதுக்கு பாவம் - உணர்த்தி இத்யாதி. உணர்த்தியறப்பண்ணி நெஞ்சை அபஹரித்ததுக்கு த்ருஷ்டாந்தம் - எதிரிகளுடைய இத்யாதி. மனங்கவர்ந்தானென்னாதே, "என்னை" என்று விசேஷித்ததுக்கு பாவம் - கடலை இத்யாதி. ஶரீரத்தைப் போகட்டு ஸாராம்ஶமானமநஸ்ஸை யபஹரித்ததுக்கு த்ருஷ்டாந்தம் - புழுகூற்றி இத்யாதி- ப்ராந்தியைவிளைத்து ஸாராம்ஶத்தை யபஹரித்ததுக்கு த்ருஷ்டாந்தம் - கொன்று இத்யாதி. கிழிச்சிறை - சாளிகைப் பை. மேலுக்கெல்லாம் அவதாரிகை - மையல்செய்தப்ரகாரங்கள் என்று. "மாமாயன்" என்றதொடக்கி "விண்ணோர்முதலென்னும்" என்னுமளவுக் கடாக்ஷித்து 'மையல்செய்தப்ரகாரங்கள்' என்றது. "மாயன்" - வ்யாமோஹயுக்தனென்றபடி. மாயமாவதேதென்ன - கலக்கிற இத்யாதி. "மா" என்றதுக்கு பாவம் - ஸ்வதஸ்ஸித்தமான இத்யாதி. "மா" - மஹத்தான என்றபடி. இத்தால் - பரத்வத்திற்காட்டில் ப்ரணயித்வத்துக்கு ஆதிக்யமுண்டென்றபடி. சிவப்புத்தோற்றுவது வார்த்தையிலேயாகையாலே,வார்த்தை சொல்லும்போதைச்சிவப்பாக விவக்ஷித்து அர்த்தம் - தைர்யபங்கம் இத்யாதி. ஸ்மிதத்தாலேவந்த சிவப்பாக அர்த்தாந்தரம் - ஸவிலாஸ இத்யாதி. "ஸவிலாஸஸ்மிதாதாரம் பிப்ராணம் தேவகீஸுதம் । தாம்ரோஷ்டநவம் ... ஸாநுகம்பஸ்மிதம்" இதி பஞ்சமேம்ஶே ஸப்ததஶே அக்ரூரத்ருஷ்ட பகவத்ரூபவர்ணநே. (௧எ-௨௪). "மணி" என்றதுக்கர்த்தம் புஷ்பம் இத்யாதி. கீழுக்தத்தை ரஸோக்தியாக அருளிச்செய்கிறார் - அவ்வாயில் இத்யாதி. இவ்வாயிலென்றது - இவ்விடத்திலென்றபடி. காமிநி, அவயவங்களைவிட்டு ஆயுதங்களைச் சொல்லுவானென் ? என்ன - திவ்யாயுதங்கள் இத்யாதி. விவரணம் - உகப்பாரையும் இத்யாதி. அதாவது - மேன்மையாலும் அழகாலும் இருவரையும் அழிக்குமென்றபடி. இவற்றில்ஈடுபடுகைக்கு, இவள் இவற்

---

[1] 'இவள்திறத்தருளாது' என்று பாடாந்தரம்.

பிக்குமவை. முன்னே கைகண்டுவைக்கிறவையிறே. காணவே எதிரிகள்மண்ணுண்ணும்படியான திவ்யாயுதங்களை தரித்திருக்கிற நீ என்விரோதிகளைப்போக்கி முகங்காட்டாதொழிவதே. [விண்ணோர்முதலென்னும்] - திவ்யாயுதங்களோட்டைச் சேர்த்தியால் வந்தஅழகைக்காட்டிநடத்த, அதுவே ஜீவநமாகவாயிற்று அந்நாடு கிடப்பது. இல்லையாகில், அங்கே வினையுண்டாய் தரித்துக்கொண்டிருக்கிறானன்றே. [பைகொளித்யாதி] - ஸ்மிதத்தோடு, திவ்யாயுதங்களோடு, நித்யவிபூதியுக்தனுயிருக்கிறஇருப்போடு, திருவநந்தாழ்வான் மேலே சாய்ந்தருளினத்தோடு வாசியற எல்லாம்உத்தேஶ்யமாயிருக்கிறதாயிற்று. பகவத்விக்ரஹஸ்பர்ஶத்தாலுண்டான ஹர்ஷத்தாலே விகஸிதமான பணங்களையுடையனான திருவநந்தாழ்வானைப் படுக்கையாகவுடையவனே! தனிப்படுக்கையிலேசாய்வதே நீர், இவள் தறைக்கிடைகிடக்க. [இவள்திறத்தருளாய்] - படுக்கையில் சேர்த்திபெறுவிட்டால், நாட்டுக்குப்பண்ணும் அருளுமின்றிக்கே யொழியவேணுமோ? [இவள்திறத்து] - பாடோடிக்கிடக்கிற இவள்திறத்து. [அருளாய்] - அருள்கொள்வார் தேட்டமான நீ, அருள்பெறில் ஜீவிக்குமிவளை இப்படி தறைக்கிடைகிடக்க விட்டுவைப்பதே! (அருளாய் - அருளுகிறீரில்லையென்றபடி.) [பாவியேன்] - நீரருளாதவராயல்ல; இவள்அதுபெறுவிடில் ஜீவிப்பாளாயல்ல; இதுக்கடி நான் பண்ணின பாபமிறே. "மத்பாபமேவாத்ர நிமித்தமாஸீத்" (மத்பாபமேவாத்ரநிமித்தமாஸீத்) என்னுமாபோலே. [செயற்பாலது] - என்னுடைய செயலிடத்தது அருளாமைக்குஅடி; (பாவியேன்செயலிடத்தது - இவள்பக்கலிலும் குறையில்லை, உம்முடைய பக்கலிலும் குறையில்லை, இருவருமானசேர்த்திபெறவிருக்கிற என்பாபமிறே இதுக்கு ஹேது.) (௬)

றையறிந்தபடி எங்ஙனே? என்ன - முன்னே இத்யாதி. இது - சாடு; கைகண்டுவைக்கிறவை - அநுபவித்தவையென்றும், கையிலேகண்டு வைக்கிறவையென்றும்; முன்னே - பூர்வம், ப்ரத்யக்ஷத்திலேயென்றும். திவ்யாயுதங்களுக்கு அநந்தரம் "விண்ணோர்முதல்" என்றதுக்கு பாவம் - திவ்யாயுதங்கள் ஓட்டை இத்யாதி. அவர்கள் ஜீவநார்த்தமாகவோ தரிக்கிறதென்ன - இல்லையாகில் இத்யாதி. ப்ரணயினி "மாயன்" என்றாற்போலே சொல்லாதே, "விண்ணோர்முதல்" என்று நித்யவிபூதியுக்தனான ஆகாரத்தைச் சொன்னதுக்கு பாவம் - ஸ்மிதத்தோடு இத்யாதி. "பைகொள்" இத்யாதிக்கு ஶப்தார்த்தம் - பகவத் இத்யாதி. இப்பதப்ரயோகத்து பாவம் - தனிப்படுக்கையிலே இத்யாதி. "அருளாய்" என்றதுக்குபாவம் - படுக்கையில் இத்யாதி. "அருளாய்" - அருளுகிறிலை. பாடோடி - து:கத்தோடு. "பாவியேன்" என்றதுக்கு பாவம் - நீரருளாதவராய் இத்யாதி. "மாமாயன்" என்று - நிரதிஶய வ்யாமுக்தராகையைப்பற்ற - நீரருளாதவரா யல்ல என்றது. இத்தால் - அருளாதது உம்முடைய பக்கல் குறையல்ல என்றபடி. உம்முடையபக்கலிலே அறிவழிந்தமையைப்பற்ற-இவள்அது பெறவிடில் ஜீவிப்பாளாயல்லஎன்றது. இத்தால்-உம்முடையபக்கல் இவள் அதிமாத்ரப்ரவணையாகையாலே, நீரருளாதது இவள்குறையல்ல என்றபடி. இதுக்குப்ரமாணம் - மத்பாபம் இத்யாதி. "நஸோயமபராதோஸ்ய ஹநூமதோ நராதிபஸ்ய நாபராதஸ்ய। மத்பாபமேவாத்ர நிமித்தமாஸீத் ந ஸ்யாஸ்ய ஹேதுர்ந" இத்யயோத்யாகாண்டே ஹேது:. செயலிடத்ததென்றது - கர்மத்திடத்ததென்றபடி: செயலடியான என்னுடைய தோஷமென்றபடி. (௬)

ஏழாம் பாட்டு.

பாலதுன்பங்களின்பங்கள்படைத்தாய்! பற்றிலார்பற்றநின்றானே!
காலசக்கரத்தாய்!கடலிடங்கொண்டகடல்வண்ணா! கண்ணனே!என்னும்
சேல்கொள் தண்புனல்சூழ்திருவரங்கத்தாய்!என்னும்என்தீர்த்தனே! என்னும்
கோலமாமழைக்கண்பனிமல்கஇருக்கும் என்னுடைக்கோமளக்கொழுந்தே.

ஆ.—(பாலதுன்பங்கள்.) - ஸுகது:க்கங்களை அநுகூலப்ரதிகூலரூபமாக நீபண்ணினவ்யவஸ்தையை என்னளவிலே விபர்யஸ்தமாக்கவோ பார்த்தருளிற்றென்றும், உன்னுடையஅஶரண்யஶரண்யத்வம் எங்ஙனே போயிற்றென்றும், ஆஶ்ரிதவிரோதிகளுடைய ஆயுரவஸாநகணநைக ஸ்வபாவமான திருவாழியை ஏந்திக்கொண்டிருக்கிறது அடியேனுக்காகவன்றோ? என்றும், திருப்பாற்கடலிலே வந்துகண்வளர்ந்தருளுகிறதும் ஸ்ரீநந்தகோபர் திருவவதாரம்பண்ணியருளினதும் கோயிலிலே வந்துகண்வளர்ந்தருளுகிறதும் ஆஶ்ரிதார்த்தமாகவன்றோ? என்றும், த்வத்ப்ராப்தி ப்ரதிபந்தகமான போக்யத்வ விரோதியாய் மத்கதமான அஶேஷதோஷங்களையும் போக்கிறபோலே, த்வத்ஸமஶ்லேஷ விரோதியான என்னுடைய பாபங்களையும் போக்கியருளாயென்றும் விக்கொண்டு, பிரிவென்னும் சொல்லுக்கூடப் பொறுக்கமாட்டாதபடி ம்ருதுஸ்வபாவையான என்னுடைய பெண்பிள்ளை தன்னுடைய அழகியகண்கள் நீர்மல்கவிருக்கும் என்கிறாள்.

ஒ.— ஏழாம்பாட்டில், அவ்வவபதார்த்தங்களை அநுஸந்தித்து அவைபொறுக்குமளவுகளிலேயன்றோ ஸுகது:க்கங்களைச் சுமத்துவது; இப்படி என்னைப்படுத்தலாமோ? என்றுநின்றாள் என்கிறாள். ஆஶ்ரிதரைவாழ்விக்கையும் அநாஶ்ரிதரை து:கப்படுத்துகையுமன்றிக்கே மற்றைப்படியே ஆயிற்றே உம்முடையபடி? என்றுநின்றாள் என்றுமாம். [பாலவென்றுதொடங்கி] - இடம்அறிந்து ஸுகது:க்கங்களைப் படைத்தவனே! [பற்றிலார்பற்றநின்றானே] - தந்தாமுக்கே சிலதன்மை இல்லாதாரை விஷயீகரிக்கக்கடவதோ? என்னில், அபராதமேயாய்த் தங்களுக்கு ஒருபற்றும்இன்றிக்கே இருக்கிற ஜபர்தன்போல்வார்க்கும் ஆஶ்ரயிக்கலாம்படியான நீர்மையையுடையவன் அல்லையோ? [காலசக்கரத்தாய்] - காலத்தைநடத்தும் திருவாழியை உடையவனே! விஷயீகரிக்கக்காலமாகவேணுமோ? என்னில்; காலதத்வமும் நீ இட்டவழக்கன்றோ? என்றுமாம். [கடலென்று தொடங்கி] - ஒருகடல்ஒருகடலிலே சாய்ந்தாற்போலே ஆஶ்ரிதாநுக்ரஹார்த்தமாகத் திருப்பாற்கடலிலே கண்வளர்ந்தருளி அங்குவரமாட்டாதார்க்கும் ஆஶ்ரயணீயனைக்கொண்டு ஸ்ரீநந்தகோபர் திருமகனாய்வந்து திருஅவதாரம் பண்ணியருளி அங்குஉதவாதார்க்கும் இழக்கவேண்டாதபடி மத்ஸ்யாதிகளும் அசைப்படத் தந்தாமுடைய யாதங்களை இழவாதே பூஜிக்கலாம்படியான கோயிலிலேவந்து நித்யஸந்நிஹிதனாய் இருக்கிறாய் அல்லையோ? என்னும். [என்தீர்த்தனே என்னும்]-உன்னுடைய போக்யதாதிஶயத்தினாலே உன்னையல்லதுசெல்லாதபடி என்னைப்பண்ணினவனே! என்னும். நான் இழிந்தாடும்துறையே என்றுமாம். [கோலமா மழைக்கண்பனிமல்கஇருக்கும்] - அழகியதாய்ப் பெருத்து ஶ்ரமஹரமான கண் நீர்மல்க இராநின்றாள். இவ்வழகு போக்தாவானவன் பூஜிக்கப்பெறாமையாலே காட்டில்எறித்த நிலாவாகாநின்றது என்று திருத்தாயார்க்குக்

கருத்து. [என்னுடைக்கோமளக் கொழுந்தே] - விஶ்லேஷது:க்கம் அநுபவிக்கைக்குப் பாத்தமில்லாதபடி மிகவும்பாலையான என்மகள்.

ப.—அநந்தரம், ஆஶ்ரித ஸம்ரக்ஷணார்த்தமான அர்ணவஶாயித்வாதி குணங்களை யுடையவன் ஸ்வபாவங்களைச்சொல்லி க்லேசியாநின்றுளென்கிறுள்.

என்னுடை - என்னுடைய, கோமளம் - ம்ருதுஸ்வபாவமான, கொழுந்து - லதாக்ரம்போலே மெல்லியளாயிருக்கிறஇவள், பால - இடந்தோறுமிடந்தோறும், துன்பங்கள் - அநாஶ்ரிதவிஷயத்திலே துன்பங்களையும், இன்பங்கள் - ஆஶ்ரிதரிடத்திலே இன்பங்களையும், படைத்தாய் - உண்டாக்கினவனாய்; (எத்தனையேனும் அபராதிகளாயும்), பற்று - புறம்புபற்று, இலார் - அற்றாரான ஜயந்தன்போல்வாரும், பற்ற - பற்றும்படி, நின்றானே - அஶரண்யஶரண்யனாய்நிற்பானாய், காலசக்கரத்தாய் - (ஆஶ்ரிதருடைய ப்ராப்திகாலம் நீ யிட்டவழக்காம்படி மாஸருதுவத்ஸராதி பரிவ்ருத்தியையுடைத்தான) காலசக்கரத்துக்கு நிர்வாஹகனாய்க்கொண்டு, (ஆஶ்ரிதரக்ஷணார்த்தமாக), கடல் - திருப்பாற்கடலிலே, கடல்வண்ணா - கடலிலேயொருகடல் சாய்ந்தாற்போலே, இடங்கொண்ட-கண்வளர்ந்தருளுமவனாய், (க்ஷீரார்ணவநிகேதனனான அந்தவாகாரத்தை விட்டு), கண்ணனே - ரக்ஷணார்த்தமாகக்ருஷ்ணனாய்வந்தவனே! என்னும் - என்னும்; (அதுக்கும்பிற்பட்டார்க்காக), சேல் - சேல்களை, கொள் - உடைத்தான, தண்-குளிர்ந்த, புனல் - புனல், சூழ் - சூழ்ந்த, திருவரங்கத்தாய் - கோயிலிலேஸந்நிஹிதனானவனே! என்னும் - என்னும்; (அந்த ஸௌலப்யத்தாலே), என்-நான் அவமாஹிக்கைக்கு, தீர்த்தனே - துறையானவனே, என்னும் - என்னும்; (இவ்வார்த்தத்தவசியில்வரக்காணாமையாலே), கோலம் - தர்ஶநீயமாய், மா - பெருத்து, மழை - குளிர்ந்த, கண் - கண்ணானது, பனி - நீர், மல்க - விஞ்சும்படி, இருக்கும் - நிர்வ்யாபாரையாய் நிற்கும். இப்பாட்டு - திருத்தாயார்வார்த்தையான முன்னிலையில்லாமையாலே, அவள் தன்னுடைய உட்கொண்டிரங்குதல். அன்றியே, 'கடல்வண்ணா' என்னுமளவும் - தாய்வார்த்தையான நாயகன் முன்னிலையாய், 'கண்ணனே' என்று தொடங்கி நாயகிடாசுரத்தைச்சொன்னாளாகவுமாம்.

இ.—ஏழாம்பாட்டில், ஆஶ்ரயங்களை அநுஸந்தித்து, பொறுக்குமளவிலேயன்றோ து:க்கங்களைச்சுமத்துவது? இப்படி என்னைப்படுத்தலாமோ? என்றுநின்றாள் என்கிறாள். ஆஶ்ரிதரை வாழ்விக்கையும் அநாஶ்ரிதரை நலிகையுமன்றிக்கே, இப்போது விபரீதமாயிற்றே உம்முடையபடி? என்றுநின்றாள் என்றுமாம். இக்கோமளக்கொழுந்துக்கு, கைம்முதல் ஒன்றும் இல்லாதார்பற்றினால் ரக்ஷிக்கும் நீர்மையையுடையவன் ஸந்நிதியிலே இதெல்லாம்படவேண்டுகிறது என்னோட்டை ஸம்பந்தம் என்று மநோரதிக்கிறாள். [பாலதுன்பம்இத்யாதி] - இடமறிந்து ஸுகது:க்கங்களைப் படைத்தவனே! பாலவாக - ஸாநேஸாநே ஆக. பிரிந்தார்எல்லாரும் அநுபவிக்கும்இத்தை இவள்ஒருத்தியையும் அநுபவிப்பிக்கப்பார்த்தால் இவளால் பொறுக்கப்போமோ? அங்ஙனன்றிக்கே, ஆஶ்ரிதர்வாழ்வும் அநாஶ்ரிதர் கெடும்படியாகவும் அன்றோ பண்ணிவைத்தது. தீமையுன்னடியார்க்குத் தீர்த்து அசுரர்க்குத் தீமைகள் செய்யுமவனன்றோ? பண்டுகட்டின மர்யாதையும் இல்லையோஇவளுக்கு? அபராதங்கள் கனத்துத் தந்தாமுக்கென்ன ஒரு கைம்முதல் இல்லாதாரை விஷயீகரிக்கக்கடவதோ என்னில்; [பற்றிலார்பற்றநின்றானே]-

அபராதமேயாய் ஸுக்ருதலேஶமும் இல்லாத ஜயந்தன் போல்வார்க்கும் லாம படியன்றோ உம்முடையசீர்மை? "ஸவித்ராஉவாஸிக்ருத:". [காலசக்கரத்தாய்]-விஷயீகரிக்கக் காலமாகவேணுமே என்ன, காலதத்வம் நீ இட்டவழக்கன்றோ? ஆஶ்ரிதர்க்காகப் பகலை இரவாக்கினவன் அன்றோ? அங்ஙனன்றிக்கே, ப்ரதிபந்தகமுண்டு காணும் என்ன; ப்ரதி-க்ஷத்துக்கும் ருத்புவான திருவாழியையிலேயிருக்க ப்ரதிபந்தகமுண்டோ? நாம் அஸந்நிஹிதர் அன்றோ? என்ன, [கடலிடங்கொண்ட கடல்வண்ணா]-நீ எங்களைக்காலம் பார்த்தன்றோ கிடக்கிறது? ஒருகடல் ஒருகடலிலே சாய்ந்தாற்போலே, அணித்தாகத் திருப்பாற்கடலிலே சாய்ந்திலையோ? அவ்வளவு வரவல்லார்க்கேயென்ன, [கண்ணனே என்னும்] - அஶக்தரான இடையர்க்கும் இடைச்சிகளுக்கும் க்ருஷ்ணனாய்வந்து உதவிற்றிலையோ? "நாஹம்வஶ்ய ...த்வா..." அதுதப்பிற்றே என்ன, [சேல்கொள் இத்யாதி] - மத்ஸ்யாதிகளுக்குந் தந்தாமுடைய யாபகாதிகள் இழவாதபடியான கோயிலிலே நித்யஸந்நிஹிதன் அல்லையோ? என்னும். உம்மாலல்லது தரிக்கமாட்டாத இவள் இப்படிபடக்கடவளோ? "ஜானந்தி...வொ...ஜ்ஜன்" என்றிருக்குமவளிறே இவள். [என் தீர்த்தனே என்னும்] - புறம்புள்ளாரோடு பொருந்தாதபடியாக்கின ஸௌசீல்யத்தைச் சொல்லுதல், உன்னைச்சொல்லிக் கூப்பிடும்படி பண்ணினவன் என்னுதல். தண்புனல் என்று-புனல் ப்ரஸ்துதமாகையாலே, நான் இழிந்தாடும்துறை என்னுதல். [கோலமாமழைக் கண்பனிமல்கவிருக்கும்]-தர்ஶநீயமாய்ப்பரந்து ஶ்ரமஹரமான கண்ணீர்மல்கவிராநின்றாள். கண்ணும் கண்ணநீருமாயிருக்கிற இவ்வழகுக்கு போக்தாவாயிருக்கிறவன் க்ருஷிபண்ணி, ஸலவேலையிலே எனக்கு இரையாக்குவதே. [என்னுடைக்கோமளக் கொழுந்தே] - ஸம்ஶ்லேஷமும் பெறாத இவளுக்கு விஶ்லேஷத்தை விளைப்பதே. [கொழுந்தே]-உபக்ரமத் தேட்டமானவளவிலே தரையிலேபடாவிடுவதே! "வதிஸம்யோகஸாஜ்ஜவய:". இப்பாட்டில், ஒருதலைக்கட்டின்றிக்கேயிருக்குமதுக்குக் கருத்து - "'பரிஹரிக்கும் எல்லைகழிந்தாள். நாம் இவர்க்குச் சொல்லுவதென்?' என்று தன்னிலே நோவுபடுகிறாள்" என்று வங்கிப்புரத்துநம்பி பணிக்கும்.

ஈடு.—ஏழாம்பாட்டு. ஆஶ்ரயங்களை யநுஸந்தித்து, பொறுக்குமளவுகளிலே யன்றோ ஸாவதாநங்களைச் சுமத்துவது? இப்படி என்னைப்படுத்தலாமோ என்று நின்றாளென்கிறாள். "ஆஶ்ரிதரைவாழ்விக்கையும் அநாஶ்ரிதரை நலிகையுமன்றிக்கே, இப்போது விபரீதமாயிற்றே உம்முடையபடி என்கிறாள்" என்றபிள்ளான். இக்கோமளக் கொழுந்துக்கு, கைம்முதலொன்றுமில்லாதார் பற்றினால் ரக்ஷிக்கக்கடவ நீர்மையுடைய

ஏழாம்பாட்டு-பாலஇத்யாதி. 'இக்கோமளக்கொழுந்துக்கு' இத்யாதிவாக்யத்தை "என்னுடைக் கோமளக்கொழுந்து" என்றதையும், "பற்றிலார்பற்றநின்றானே" என்றதையும் கடாக்ஷித்துப் பாட்டுக்கவதாரிகையாக முந்துறஅநுஸந்தித்து, அநந்தரம், 'ஆஶ்ரயங்களை' இத்யாதி வாக்யத்வயத்தையும் - "பாலதுன்பங்களின்பங்கள் படைத்தாய்" என்றதின் அர்த்தத்வயாநுகுணமாக, பதாவதாரிகையாக வாதல் தாத்பர்யமாகவாதல் அநுஸந்திப்பது. யத்வா. "பாலதுன்பங்களின்பங்கள் படைத்தாய்" என்கிறபதத்திலே நோக்காக - அதின் அர்த்தத்வயாநுகுணமாக இரண்டவதாரிகையும், "என்னுடைக் கோமளக்கொழுந்து - கோலமாமழைக்கண்பனிமல்கவிருக்கும், பற்றிலார்பற்றநின்றானே" என்கிற பதங்களிலே நோக்காக ஓர்அவதாரிகையும் ஆக, மூன்றவதாரிகையும் க்ரமேண அருளிச்செய்கிறார் - ஆஶ்ரயங்களை இத்யாதி வாக்யத்ரயத்தாலே என்னுதல். ஆஶ்ரயங்களையநுஸந்தித்தென்றது - அவரவர்களளவுகளை யநுசந்தித்தென்றபடி. பொறுக்கத்தக்கவர்களை விசாரித்தென்றபடி. இப்போது

வன் ஸந்நிதியிலே இதெல்லாம் படவேண்டுகிறது, என்னோட்டை ஸம்பந்தமென்று மநோ ரதிக்கிறாள்.

[பாலஇத்யாதி] - இடமறிந்து ஸுகதுக்கங்களைப்படைத்தவனே! பாலென்றது - இடமென்றபடி; அப்பாலிப்பாலென்றால் - அவ்விடமிவ்விடமென்றபடி. பாலவாக-ஸ்த்தாநேஸ்த்தாநேயாக. உம்மைப்பிரிந்தார் எல்லாரும் அநுபவிக்கும் துக்கத்தை இவளொருத்தியை அநுபவிக்கப்பார்த்தால் இவளால் பொறுக்கப்போமோ? அங்ஙனன்றிக்கே, ஆஶ்ரிதர்வாழவும் அநாஶ்ரிதர் கெடும்படியாகவுமன்றோ நீபண்ணிவைத்தது? பாலென்பது - முறை. செய்குந்தா வருந்தீமை யுன்னடியார்க்குத்தீர்த்து அசுரர்க்குத் தீமைகள் செய்குந்தனன்றோ. பண்டேகட்டின மர்யாதையும்இவளுக்கில்லையோ? பாலென்று-பாகமும், இயல்வும், இடமும், ந்யாயமும், இவைநாலுக்கும் பேர். தந்தாமால் பொறுக்கவொண்ணாதவை தாந்தாமே ஏறிட்டுக்கொள்ளும்போது நம்மால் செய்யலாவதுண்டோ? நம்பக்கல் குறையில்லை, பேறு தந்தாமதானால் தாங்களும் சிலசெய்யவேணுமென்று அவனுக்குக்கருத்தாக, [பற்றிலார்பற்றநின்றானே] - ஒருகைம்முதலில்லாதார்க்காகவன்றோ இங்குவந்து சாய்ந்தருளிற்று? இக்கிடை நித்யஸூரிகளுக்காகவோ? உம்முடைய பக்கல்பற்றறுத்துக்கொண்ட ஜயந்தன்போல்வார்க்கும் பற்றாயிருக்கும்அவரன்றோநீர்! 'தமேவ ஶரணம் கத:'(தமேவசரணங்கத:)அன்றோ? அதுஉண்டானாலும்அதுக்கோருகாலமுண்டேஎன்ன, [காலசக்கரத்தாய்]-அக்காலசக்கரம் நீயிட்ட வழக்கன்றோ? ஆஶ்ரிதர்க்காகப் பகலையிரவாக்கினவனன்றோ? அன்

விபரீதமாகையாவது - ஆஶ்ரிதையான இவளை துக்கம்அநுபவிப்பிக்கை. மநோரதிக்கிறாளென் - ஸ்வகதமாக எண்ணுகிறாளென்றபடி.

ஶப்தார்த்தம் - இடமறிந்துஇத்யாதி. "பால்" என்றால் - இடத்தைச் சொல்லுமோ? என்ன லௌகிகப்ரயோகம் - அப்பால் இத்யாதி. பாலதுன்பங்களின்பங்கள்படைத்தாய்" என்கிற தலைமகள் வார்த்தையை அநுவதிக்கிற திருத்தாயாருடைய ஹார்த்தபாவம் - உம்மைப்பிரிந்தார் இத்யாதி. "பாலதுன்பங்கள்" இத்யாதி - திருத்தாயார் வார்த்தையாகில், 'மூகம்பாராதே வார்த்தை சொல்லுகிறாள்' என்கிற மேலில் வாக்யத்தோடே விரோதிக்கும். 'இப்படி யென்னைப்படுத்தலாமோ என்னாநின்றாள்' என்கையாலே - தலைமகள்வார்த்தை யென்னுமிடம் ஸ்புடமிறே. அர்த்தாந்தரம் - அங்ஙனன்றிக்கே ஆஶ்ரிதர் இத்யாதி. "பால்" என்றால் - இவ்வாகாரத்வயத்தையுங் காட்டுமோ? என்ன - பாலென்பது முறை என்று. கீழ்ச்சொன்ன ஆகாரத்வயத்துக்கும் ப்ரமாணம் - செய்குந்தா இத்யாதி. ஆக "பால" இத்யாதிக்கு - பொறுக்கத்தக்க இடமறிந்து தத்தத் ஸ்த்தாநங்களிலே ஸுக துக்கங்களைப் படைத்தவனே யென்று முந்தினவர்த்தம்; பால - பொறுக்கத்தக்க இடங்களிலே யென்று ஶப்தார்த்தம்; 'அறிந்து' என்றது - அர்த்தாத்ஸித்தம். ஆஶ்ரிதரான முறையிலே ஸுகத்தையும் அநாஶ்ரிதரானமுறையிலே துக்கத்தையும் படைத்தவனே என்றிரண்டாமர்த்தம். இரண்டாம் அர்த்தத்துக்குச் சேர ஹார்த்தபாவம்-பண்டுகட்டின இத்யாதி. "பால் என்றால் - இடத்தையும் முறையையுங்காட்டுமோ? என்ன - பாலென்று இத்யாதி. ந்யாயம் - முறை. கீழ்ப்பதத்தில் அர்த்தத்வயாநுகுணமாக மேலுக்கவதாரிகாத்வயம் - தந்தாமால் இத்யாதிவாக்யத்வயம். த்விதீயசங்கதிக்குஉத்தரம் - ஒருகைம்முதல்இத்யாதிவாக்யத்வயம். ப்ரதமஸங்கதிக்குஉத்தரம் - உம்முடையபக்கல் இத்யாதி. ஜயந்தன் பற்றினானோ? என்ன, ப்ரமாணம் - தமேவஇத்யாதி. "ஸபித்ரா ச பரித்யக்த:" இத்யாதி. 'ஜயந்தன்போல்வார்க்கும்' இத்யாதிக்குஅநுகுணமாகஸங்கதி-அதுஉண்டானாலும்இத்யாதி. அதுண்டானாலும் - ஸாபராதர்க்கும் பற் [illegible] ஸுண்டானாலும் என்றபடி அப்படி காலம் நானிட்டவழக்காக விநியோகங்கொள்ளக் கண்ட[illegible]ோ? என்ன - ஆஶ்[illegible] காகஇத்யா[illegible] 'ஒருகைம்முதலில்லாதார்" இத்யாதிக்கநுகுணமாக ஸங்கதி - அன்றிக்கேஇத்யாதி. "காலம்" என்று - காலத்தையும், ம்ருத்யுவையும் சொல்லுகிறது. காலசக்ரநிர்வாஹகன் என்று முந்தினஅர்த்தம், ம்ருத்யுவான

றிக்கே, ப்ரதிவந்யகமுண்டே யென்னில்; ப்ரதிவந்யகத்துக்கு ம்ருத்யுவானதிருவாழி யன்றோ யரித்திருக்கிறது. பரிகரமுண்டானாலும் நான் தூரஸ்த்தனன்றோ என்னவொண்ணுதே! [கடலிடங்கொண்ட கடல்வண்ணு] - நீ எங்களைக் காலம்பார்த்தன்றோ கிட்டக் கிடக்கிறது. ஒருகடல் ஒருகடலிலே சாய்ந்தாற்போலே அணித்தாகத் திருப்பாற்கடலிலே சாய்ந்திலையோ? ஆனால் அங்கேவரலாகாதோ? என்ன; அவ்வலையலைக் கேட்கமாட்டாத இடையர்க்கும்இடைச்சிகளுக்குமாகக்ருஷ்ணனாய்வந்துஉதவிற்றிலையோ? என்கிறாள். [கண்ணனேயென்னும்] - ‘‘[illegible]’’ (நாகபர்யங்கமுத்ஸ்ருஜ்யஹ்யாகதோ மதுராம்புரீம்) என்று அக்கிடையைவிட்டு இடையிலே வந்து உதவிற்றிலையோ? அது தப்பிற்றிறே என்ன, அவ்வவதாரம் பரத்வமென்னும்படியன்றோ கோயிலிலேவந்து சாய்ந்தருளிற்று? [சேல்கொளித்யாதி] - ‘[illegible]’ (ஜலாந்மத்ஸ்யாவிவ)† அன்றோ; ஜலசரஸத்த்வங்கள்ஜலத்தைப்பிரிந்து யரிக்கிலன்றோ இவள் உம்மைப்பிரிந்து யரிக்கவல்லளாவது? அவ்வூரிலே வர்த்திக்கிற உமக்குப்போருமோ இவளுக்குமுகங்காட்டாதொழிகிறவிடம். [என்தீர்த்தனேயென்னும்] - நீ உபேக்ஷித்தாலும் உன்னையொழிய எனக்குச்செல்லாதபடிபண்ணினவனே! என்னுதல்; (புறம்புள்ளாரோடுபொருந்தாதபடியான சுத்தியோகத்தைச்சொல்லுதல்;) நான்இழிந்தாடும் துறையென்னுதல். [கோலமித்யாதி] - தர்சநீயமாய்ப்பரந்து ஸ்ரமஹரமான கண் நீர்மல்க இரங்கின்றாள். கண்ணுங் கண்ணநீருமான அழகு காட்டிலெறித்த நிலாவாவதே! இக்கண்ணநீருக்கு ஸாதநாநுஷ்டாநத்தைப்பண்ணி பலவேளையிலே யிழப்பதே! [என்னுடைக்கோமளக்கொழுந்தே] - கலக்கப்பொறாத மார்த்தவத்தையுடையவள் பிரியப்பொறுக்குமோ? ‘‘தசை முறுகினால் வைத்யர் கண் முகம்பாராதாப்போலே, மகளவஸ்தையைக்கண்டு தளர்ந்து பெரியபெரு

சக்ரத்தையுடையவன் என்று இரண்டாமர்த்தம். ‘‘கால்சக்கரத்தாய்’’, என்றதின் முந்தின அர்த்தத்தால் பலிதம்-ஆஸ்ரிதர்அபேக்ஷாகாலமே ரக்ஷிக்கைக்குக் காலமென்றாய், ‘அப்படி ஆஸ்ரிதர் அபேக்ஷா காலம் பார்த்திருந்த இடமுண்டோ? என்ன என்று ஸங்கதியை விகஸித்த பாவாந்தரம் - நீஎங்களைஇத்யாதி. ‘‘கடல்வண்ணு’’ என்னுதே, ‘‘கடலிடங்கொண்ட’’ என்று விசேஷித்ததுக்கு பாவம் - ஒருகடல்இத்யாதி. ‘அவ்வலையலைக்கேட்கமாட்டாத’ என்றவிடத்திலே - ஏக தத்வதத்ரிதர்கள் கதையை நினைப்பது. ‘அலையலை’ அலையென்று - ஸப்தமாய், அலையலையென்று, பஹூசப்தமென்றபடி. கடலிடங்கொண்டவனே கண்ணனாகவந்தான்? என்ன, ப்ரமாணம் - நாகபர்யங்கம் இத்யாதி. ‘‘[illegible]’’ இத்யாதி. (ஹ-ர-ஹரி-113-62)

இடையிலே -மத்யே, இடையரிலே என்றும். ‘‘சேல்கொள்’’ இத்யாதி பதப்ரயோகத்துக்கு பாவம் - ஜலாந்இத்யாதி வாக்யத்வயம். ‘‘திருவரங்கத்தாய்’’ என்றதுக்கு பாவம் - அவ்வூரிலேஇத்யாதி. ‘‘தீர்த்தன்’’ என்றதுக்கு முந்தினவர்த்தம் - பாவநத்வத்தைப் பற்ற; இரண்டாவது - ஸௌலப்யத்தைப் பற்ற. முந்தினவர்த்தத்துக்கு ஸப்தநிர்வாஹம், தீர்த்தன் - உனக்கே அற்றுத்தீரப்பண்ணினவனே என்று; இரண்டாமர்த்தத்துக்கு, இழிந்தாடுந் துறைபோலே ஸுலபனாயிருக்கிறவனே என்று. மழை - குளிர்த்தி. ‘‘கோலமாமழைக்கண்’’ இத்யாதி பதப்ரயோகத்துக்கு பாவம் - கண்ணும் கண்ணநீரும்இத்யாதி வாக்யத்வயம். ‘‘தண்புனல்சூழ்திருவரங்கத்தாய்’’ என்றதைப்பற்ற - ஸாதநாநுஷ்டாநத்தைப்பண்ணி என்றது. ‘‘கோமளம்’’ என்றதுக்கு பாவம் - கலக்கஇத்யாதி. கலக்கப்பொறாத - ஸம்ஸ்லேஷார்த்தமாக இட்டணைக்கவும் பொறாத என்றபடி. கீழ்ப்பாட்டுக்களிற்போலே ‘‘திருவரங்கத்தாய்’’ என்று அவனை ஸம்போதியாதே, ஸ்வகதமாகச் சொல்லுகிறதுக்கு பாவம் - த்யாதி. ‘அருளிச்செய்வர்’—சீயர் என்றத்யாஹார்யம். ‘‘கொழுந்து’’ என்றதுக்கு

† இதன் விவரம் இத்திருவாய்மொழியின் இறுதியில் காண்க.

மாள்முகம் பாராதேவார்த்தை சொல்லுகிறாள்'' என்றருளிச்செய்வர். [கொழுந்து] - உபக்ரம் தேட்டமானவளவிலே தறையிலேபடரவிடுவதே. ''வதிஸம்யோகஸுலபம்
வயஃ'' (பதிஸம்யோகஸுலபம்வயஃ). இப்பாட்டிலொருதலைக்கட்டின்றிக்கே யிருக்கு மிதுக்குக் கருத்து ''பரிஹரிக்கும் எல்லைகழிந்தாள், நாம் இவர்க்குச் சொல்லுவதென்? என்று தன்னிலேநோவுபடுகிறாள்'' என்று, வங்கிப்புரத்து நம்பிபணிக்கும். (எ)

எட்டாம் பா

கொழுந்துவானவர்கட்கு!என்னும்குன்றேந்திக்கோநிரைகாத்தவன்! என்னும்
அழுந்தொழும்ஆவியனலவெவ்வுயிர்க்கும்அஞ்சனவண்ணனே!என்னும்
எழுந்துமேல்நோக்கியிமைப்பிலளிருக்கும்எங்ஙனேநோக்குகேன்?என்னும்
செழுந்தடம்புனல்சூழ்திருவரங்கத்தாய்!என்செய்கேன்என்திருமகட்கே.

ஆ.—(கொழுந்து.) - ஸ்ரீவைகுண்டநிலயனாய் அயர்வறும் அமரர்களதிபதியாய் அவாப்தஸமஸ்தகாமனாயிருந்துவைத்து, கோபவேஷபூஷிதனாய்க்கொண்டு பிறந்தருளி, வர்ஷத்தினாலே அதிபீட்யமாநமான கோப கோபீஜநங்களையும் பசுக்களையும் ஸ்ரீகோவர்த்தநத்தையெடுத்து ரக்ஷித்தருளின உன்னுடைய நிரவதிகமான காருண்ய குணத்துக்குங்கூட விஷயமல்லேனோ? என்னும். பின்னையும், நீபார்த்தருளாதொழிந்தவாறே அழாநிற்கும். தன்னுடைய அபேக்ஷிதம்பெறுகைக்காக உன்னைத்தொழாநிற்கும். தன்னுடைய ஆத்மஸ்வரூபம் அங்காரமயமாம்படி தீர்க்கோஷ்ணநிஶ்வாஸத்தைப்பண்ணும். என்னுடையஸந்தாபமெல்லாம் போம்படி, உன்னுடைய அதிசீதளமான அஞ்சனமேனியைக் காட்டியருளாய்என்னும். நீ வரும்படி காணவேணுமென்று எழுந்திருந்து அநிமிஷலோசனையாய் ஆகாசத்தைப் பார்த்துக்கொண்டிருக்கும். அங்குக்காணாதொழிந்தவாறே உன்னைக் காண்கைக்கு உபாயம் ஏதோ? என்னும். செழுந்தடம்புனல்சூழ் திருவரங்கத்தாய்! என்திருமகட்கு இனி நான்செய்வதென்? என்று கூப்பிடுகிறாள்.

ஒ.—எட்டாம்பாட்டில், இவளுக்கு மேன்மேலன வருகிற நோவுகள் தீர்க்கைக்கு நான் செய்வதென்? என்கிறாள்.

[கொழுந்தென்று தொடங்கி] - அயர்வறுமமர்களுக்கு அதிபதியாயிருந்துவைத்து க்ருஷ்ணனாய் வந்து திருவவதாரம்பண்ணியருளி கோவர்த்தநோத்தரணம் பண்ணி பசுநிரை மேய்த்தவன்கிடீர் என்னுடைய ஆர்த்தி போக்காதொழிகிறான் என்று சொல்ல உபக்ரமித்து நடுவேஇளைத்துப் பின்னையும் வார்த்தை ஒருபடி தலைக்கட்டும், இப்படி எல்லார்க்கும் ரக்ஷகனாயிருக்கிற இவன் தன்னாலல்லது செல்லாத என்னுடைய

ஸாவம் - உபக்ரம்இத்யாதி. ''கொழுந்து'' என்றதுக்கு ப்ரமாணம் - 'வதி' இத்யாதி. ''வதிஸம்யோகஸுலபம் வயோத்ருஷ்ட்வா பிதா । சிந்தாபிஸமபிப்லுதோ வித்தநாஶ இவாதநஃ'' இதி அநஸூயாம்ப்ரதி ஸீதா (ரா - அ - 118—34). ''உசைமுறுகினால்'' இத்யாதி வாக்யவிவரணமாதல், க்ரியாபதமில்லாமைக்குஸாவமாதல் - இப்பாட்டில்இத்யாதி. தலைக்கட்டு - க்ரியாபதம். ''கோலமாமழைக்கண்'' இத்யாதிக்கு - உர்ஶநீயமாய்ப் பெருத்துக்குளிர்ந்த கண்ணீர் விஞ்சும்படி நிர்வ்யாபாரையாயிராநிற்கும்'' என்று உரையில் ஸப்தார்த்தம். (எ)

ஆர்த்தியைத்தீர்த்திலன் என்று தன்இன்னாப்பாலே அழும். ப்ருதோபநிஷத்தரைப் போலே தன்னுடைய அபேக்ஷிதஸித்யர்த்தமாகத் தொழுவதும் செய்யும். தொழுதவிடத்திலும் நீர்வரக்காணாமையாலே ஆத்மதத்த்வமெல்லாம் நெருப்பாம்படி நெடுமூச்செறியும். என்னுடைய விரஹாக்நி அவியலாம்படி உன்னுடைய ஸ்ரமஹரமான நிறத்தோடே வந்து தோற்றவல்லையே என்னும். தன்னுடைய ஆர்த்தத்வநிவ்ருத்தியே வருகிறாய் என்று அத்யவஸித்து உன்னுடைய ஸர்வபரிஸ்பந்தமும் காணலாம்படி எழுந்து மேலே பார்த்து இமைகொட்டாதே இருக்கும்; பின்னையும் தோற்றாதொழிந்தவாறே உன்னை நான் காணும் விரகென்? என்னும். [செழுந்தடமென்று தொடங்கி] - அழகிய மிக்க நீர்சூழ்ந்து இருந்துள்ள கோயிலை இடமாக உடையவனே! லக்ஷ்மீ ஸமையான என்னுடைய மகள், அந்த ஸ்ரமஹரமான தேஹத்திலேவந்து புரிக்கைக்கு நான் என்செய்வேன்?

ப.—அநந்தரம்,உன்னுடைய அதிமாநுஷசேஷ்டிதத்திலே யகப்பட்டு மேன்மேலன க்லிஷ்டையாகிற இவளுக்கு என்செய்வேன்? என்கிறாள்.

வானவர்கட்கு - நித்யஸூரிகளுக்கு, கொழுந்து - சிரோபூதனானவன், என்னும் - என்னும்; (அந்தமேன்மையோடேகூட ஆஸ்ரிதரக்ஷணார்த்தமாக அவதரித்து), குன்று - மலையை, ஏந்தி - அநாயாஸேநவேந்தி, கோநிரை - பசுக்களை, காத்தவன் - ரக்ஷித்தஅதிமாநுஷசேஷ்டிதத்தையுடையவனே! என்னும் - என்னும்; (அந்தரக்ஷணம் தன்னளவிலேபலியாமையாலே), அழும் - பக்திபரவசரைப்போலே கண்ணும் கண்ணநீருமாயிருக்கும்; தொழும் - ப்ரபந்நரைப்போலே அஞ்சலிபந்தம்பண்ணாநிற்கும்; (இரண்டும்பலியாமையாலே), ஆவி-அதாஹ்யமான ஆத்மவஸ்து, அனல் - தக்தமாம்படி, வெவ் - வெவ்விதாக, உயிர்க்கும் - மூச்சுவிடும்; அஞ்சனவண்ணனே - இப்படியார்த்தையாக்கின ஸ்யாமளவிக்ரஹத்தையுடையவனே! என்னும் - என்னும்; ("இக்குரலைக்கேட்டுவரக்கூடும்" என்று,) மேல் - மேலே, எழுந்து - தலையெடுத்து, நோக்கி - பார்த்து, இமைப்பிலள் - இமையாதே, இருக்கும் - இருக்கும்; எங்ஙனே - எந்தப்ரகாரத்தாலே, நோக்குகேன் - உன்னைக்காண்பேன்? என்னும் - என்னும்; செழு - ஸ்ரமணீயமாய், தடம் - பெருத்த, புனல் - புனல், சூழ் - சூழ்ந்த, திருவரங்கத்தாய் - கோயிலிலேஸந்நிஹிதனானவனே! என் - என்னுடைய, திருமகட்கு - லக்ஷ்மீஸமானையான இவளுக்கு, என் - எத்தை, செய்கேன் - செய்வேன்? ஆர்த்திக்குஅடியான ப்ரேமத்தை அளவுபடுத்துவேனோ? வாராதஉன்னை வரப்பண்ணுவேனோ? இரண்டும் முடியாதிறே என்று கருத்து.

இ.—எட்டாம்பாட்டில், இவளுக்கு மேன்மேலும் வருகிறநோவுகள் தீர்க்கைக்கு நான் செய்வதென்? என்கிறாள்.

[கொழுந்துவானவர்கட்கென்னும்] - அயர்வறுமமரர்களுக்குத் தலைஎன்னும். [குன்றேந்திக்கோநிரைகாத்தவன் என்னும்] - அம்மேன்மைபாராதே க்ருஷ்ணனாய் வந்து அவதரித்து, இடையர்க்கும் பசுக்களுக்கும் நலிவு வாராமல் மலையைஎடுத்து நோக்கினவன் என்னும். நித்யஸூரிகள் பரிய இருக்கிறவன்கிடீர் பசுக்களுக்கும் இடையர்க்கும்தான் பரிவான் ஆகிறான். நித்யஸூரிகள்வேராய்த் தான் கொழுந்தாய் ஆயிற்று இருப்பது. நித்யஸூரிகள் ப்ரேயம் இவளுக்கு உண்டாகையாலும் இழக்க வேண்டா; பசுக்களுடைய வெறுமை உண்டாகையாலும் இழக்கவேண்டா. குன்

றெடுத்து என்னாதே, வந்தி என்றது - ஆஸ்ரிதார்த்தமான ப்ரவ்ருத்தி யாகையாலே அநாயாஸமாய் இருக்கையாலே. [அழும்] - வரையாதே ரக்ஷிக்குமவனுடைய ரக்ஷணத்துக்குப் புறம்பாவதே! என்று அழும். பாலர்செய்வதும் செய்யும் என்னுதல், ஸ்நேஹிகள் செய்யுமதுஞ்செய்யும் என்னுதல். [தொழும்] - புகலற்றார் செய்வதுஞ்செய்யும் என்னுதல். வேதாந்த ஜ்ஞாநமுடையார் செய்வதும் செய்யும் என்னுதல். [ஆவியனலவெவ்வுயிர்க்கும்] - தொழுதவிடத்திலும் முகங்காட்டக் காணாமையாலே, அஶாஹ்யமான ஆத்மவஸ்து அக்நிமயமாம்படி நெடுமூச்செறியாநின்றாள். [அஞ்சனவண்ணனே என்னும்] - விரஹாக்நியை அவிக்கலாம்படி ஸ்ரமஹரமான நிறத்தோடேவந்து தோற்றவல்லையே என்னும். [எழுந்து மேனோக்கி] - வடிவை நினைத்தவாறே த்ரித்து எழுந்திருந்து, "ஆனைக்கு உதவினாற்போலே வரக்கூடும்" என்று மேல் நோக்கிப்பார்த்து, "ப்ரஹ்மபரிஸ்பந்தமே தொடங்கிக்காணவேணும்" என்று இமை கொட்டாதே இருக்கும். [இங்ஙனே நோக்குகேன் என்னும்] - பின்னையும் தோற்றாதொழிந்தவாறே, நான் உன்னைக்காணும் விரகென்? என்னும். [செழுந்தடப்புனல் சூழ் திருவரங்கத்தாய்] - அழகியதாய்ப்பெருத்த நீர்சூழ்ந்த கோயிலை இடமாக உடையவனே! ஸ்ரமஹரமான தேஶத்தை உடையீரான நீர் இத்தலைக்குப் போக்கடிசொல்லீர். [என் செய்கேன்] - இப்படி அலமாக்கிற இவள் உம்மைப்பெற்று ஆளாகைக்கு நான் செய்வது என்? ஸ்ரமஹரமான அந்த தேஶத்திலேவந்து இவள் த்ரிக்கைக்கு நான் செய்வதுஎன்? உம்மால் அல்லது செல்லாமைக்குப் பிராட்டி அளவல்லள். [என்திருமகட்கே] - அவள் உம்மை ஆசைப்பட்டிருக்கும்; இவள் உம்மையும் அவளையுஞ்சேர ஆசைப்பட்டிருக்கும்.

ஈடு —எட்டாம்பாட்டு. இவளுக்குமேன்மேலனவருகிறநோவுகள் தீர்க்கைக்கு நான்செய்வதென்? என்கிறாள்.

[கொழுந்துவானவர்கட்கென்னும்] - நித்யசூரிகளுக்கும் தலையானவனே! என்னும். அன்றியே, அவர்கள்வேராகத் தான் கொழுந்தானவன் என்னுதல். (அவர்களாலே லப்தஸத்தாகனாகை.) [குன்றேந்தி] - லோகாந்தரத்தில் பரிமாற்றந்தேடவேணுமோ? பசக்களுக்கும் தத்ப்ராயரான இடையர்க்கும் உதவினவனன்றோ? மேன்மை யில்லாமை யிழக்கிறேனோ, நீர்மையில்லாமை யிழக்கிறேனோ என்னும். [அழும்] - மலையையெடுத்து ஒருவர்ஷத்தைப்பரிஹரித்த நீர் இவ்வர்ஷத்தைப் பரிஹரித்தாலாகாதோ? "பஹூதாஸந்ததது:கவர்ஷிணீ" (பஹூதாஸந்ததது:கவர்ஷிணி) என்கிற இது பரிஹரித்தாலாகாதோ? [அழும்] - பாலர்செய்வதையும் செய்யும்என்னுதல்; ஸ்நேஹிகள்

எட்டாம்பாட்டு.—கொழுந்துஇத்யாதி. 'கொழுந்துவானவர்கென்னும்" என்றுதொடங்கி "என்திருமகட்கு - என்செய்கேன்" என்னுமளவுங்கடாக்ஷித்தவதாரிகை - இவளுக்குஇத்யாதி.

கொழுந்து வ்ருக்ஷத்துக்கு ப்ரதாநமாகையாலே-தலையானவனேஎன்றது. இரண்டாமர்த்தத்துக்கு, அவர்கள் வ்யஸநத்துக்குத் தான் அபிமாநிஎன்று ஹலிதம். கீழ்ப்பதத்தோடே இப்பதத்துக்கு ஸங்கதி-லோகாந்தரத்தில்இத்யாதி. "கோன், நிரை" என்றுபதச்சேதமாய் 'தத்ப்ராயரான இடையர்' என்னுதல், கோநிரையென்று - பசுநிரைஎன்னுதல். "கொழுந்துவானவர்கட்கு" என்றத்தையுங் கூட்டிஹாவம் - மேன்மையில்லாமைஇத்யாதி. "குன்றேந்தி" என்றத்தோடேகூட்டி "அழும்" என்றதுக்குஹாவம் - மலையைஇத்யாதி. விவரணம் – வைஹாயா இத்யாதி. "க்ஷிவேக்ஷவநாஸஹீஜவைஹாயாஸந்ததது:கவர்ஷிணீ"இதி ஸ்தோத்ரே. "அழும்" என்றதுக்கு அர்த்தத்வயம் - பாலர் இத்யாதி வாக்யத்வயம். "தொழும்" என்றதுக்கர்த்தத்வயம் - புகலற்றார்இத்யாதி.

செய்வதையும் செய்யுமென்னுதல். [தொழும்] - புகலற்றார்செய்வதைச் செய்யுமென்னுதல்; வேதாந்தஜ்ஞாநமுடையார்செய்வதைச் செய்யுமென்னுதல். [ஆவியனலவெவ்வுயிர்க்கும்] - தொழுதவநந்தரம் வரக்காணாமையாலே, 'ப்ரஹ்மாஸ்த்ரம்வாய்மடிந்தது' என்று, அசாஹ்யமானஆத்மவஸ்து அக்நிமயமாம்படிநெடுமூச்செறியும்;'தீர்க்கமுஷ்ணஞ்சநிஶ்வஸ்ய' (தீர்க்கமுஷ்ணஞ்சநிஶ்வஸ்ய) என்கிறபடியே. [அஞ்சனவண்ணனேயென்னும்] - நெருப்பிலே நீரைச்சொரிந்தாற்போலே அக்குளிர்ந்தவடிவைக் கொண்டுவந்து தோற்றவல்லையேயென்னும். "மேகஶ்யாமம்" (மேகஶ்யாமம்) என்னும்வடிவிறே: கைகேயி வார்த்தையால் பிறந்ததாபமடைய ஆறுங்கிடீர் அவ்வடிவழகிலே விழிக்கப்பெற்றோமாகில் என்றார்களிறே. [எழுந்துஇத்யாதி] - வடிவைநினைத்தவாறேதரித்தெழுந்திருந்து, வரஸம்பாவனையுள்ள திக்கைப்பார்த்து, "ப்ரதமபரிஸ்பந்தமேதொடங்கிக்காணவேணும்"என்று இமைகொட்டாதே பார்த்துக்கொண்டிருக்கும். [எங்ஙனேநோக்குகேனென்னும்] - தான்பார்த்த திக்கில் வரக்காணாமையாலே, "பின்னேக்கிவந்துகட்டிக்கொள்ளும்" என்று புரிந்துபாரா நிற்கும். [எழுந்து மேல்நோக்கி] - வடிவைநினைத்தவாறே தளர்த்தியிலே எழுந்திருந்து, "ஆனைக்கு உதவினாற்போலே வரக்கூடும்" என்று மேல்நோக்கிப் பார்த்து, "ப்ரதமபரிஸ்பந்தமேதொடங்கிக் காணவேணும்" என்று இமைகொட்டாதே யிருக்கும்; [எங்ஙனே நோக்குகேனென்னும்] - பின்னையும் தோற்றக்காணாமையாலே, நான் உன்னைக்காணும் விரகு எது? என்னும். [செழுந்தடம்புனல்சூழ் திருவரங்கத்தாய்] - அழகிதாய்ப்பெருத்த

வாக்யத்வயம். புகலற்றாரென்றது - "க்ருதாவராயஸ்ய" இத்யாதிப்படியே ஸாபராதரென்றபடி. வேதாந்தஜ்ஞாநமுடையாரென்றது - "ஜ்ஞாநீ த்வாத்மைவ மே" இத்யாதிப்படியேப்ரபத்திவைபவம் அறிந்தவர்களென்றபடி. யத்வா, புகலற்றாரென்றது - ப்ரபத்திநிஷ்டரை; வேதாந்தஜ்ஞாநமுடையாரென்றது - உபாஸகரை. உபாஸகர்க்கு "நமஸ்யந்தஶ்ச" என்று தொழுகையுண்டிறே. புகலற்றார் - அநந்யகதிகள். "ஆவி -" ஆத்மா. "அனல -" அக்நிமயமாம்படி: தக்தமாம்படி. "வெவ்வுயிர்க்கும்"-வெவ்விதாக மூச்சுவிடுமிதி ஸப்தார்த்தஃ. அக்நிமயமாம்படி நெடுமூச்செறியும், என்றதுக்குப்ரமாணம் - தீர்க்கம் இத்யாதி. "தீர்க்கமுஷ்ணஞ்ச நிஶ்வஸ்ய தேஜஸா நிர்தஹந்நிவ | உவாச வசஸா ஸம்ஸ்லிஷ்டம் தேஜஸா க்ருத்தமாநஸ:" இதி ராவணவ்ருத்தாந்தே ராமஃ. "அஞ்சனம்" என்று கறுப்பாய், அத்தால் - குளிர்த்திவித்தம். "வடிவுதாபஹரம்" என்றதுக்குப்ரமாணம் -மேகஶ்யாமம் இத்யாதி. "மேகஶ்யாமம் மஹாபாஹும் ஸ்திரஸத்வம் த்ருடவ்ரதம் | கதா த்ரக்ஷ்யாமஹே ராமம் ஜகத: ஶோகநாஶநம்" இத்யயோத்யாகாண்டே ராமநிர்க்ருமநே சித்ரகூடம்ப்ரதி கச்சந்த: பௌரா: (83-8). இஶ்ஶ்லோகத்துக்கர்த்தம் - கைகேயி இத்யாதி. "த்ரக்ஷ்யாமஹே" என்றதுக்கு பாவம்-அவ்வடிவழகிலே இத்யாதி. 'என்றார்களிறே என்றது, பஹுவசநத்தைப்பற்ற. மோஹித்தவளெழுந்திருக்கக் கூடுமோ? என்ன - வடிவைஇத்யாதி. "இமைப்பு" - இமைகொட்டுகை. இமைப்பிலளிருக்கும் - இமைகொட்டாதே யிருக்கும். "எங்ஙனே நோக்குகேனென்னும்" என்றதுக்கர்த்தம் - தான்பார்த்தஇத்யாதி. அதாவது - பின்னே கட்டிக்கொள்ளுமென்று புரிந்துபார்த்து-பின்னேயிருந்தால் நான்நோக்கும்படியெங்ஙனே? என்னுமென்றபடி. புரிந்து - திரும்பி- "எழுந்து, மேல்நோக்கி யிமைப்பிலளிருக்கும்" என்றதினர்த்தத்தை அநுவதித்துக் கொண்டு, "எங்ஙனேநோக்குகேன்" என்றதுக்கர்த்தாந்தரம்அருளிச்செய்கிறார் - வடிவைஇத்யாதி. "எங்ஙனேநோக்குகேன்" என்றதுக்கர்த்தாந்தரம் - பின்னையும்இத்யாதி. அதாவது பின்னையும் தோற்றக்காணாமையாலே - "ஸாதநாநுஷ்டாநம் பண்ணவேணும்" என்று வாராதிருக்கிறானென்றுபார்த்து,நான் உன்னைக்காணும் விரகுஎது? என்னுமென்றபடி. விரகு - ஸாதநம். தட - பெருமை. "செழுந்தட" இத்யாதி பதப்ர

நீர்சூழ்ந்தகோயிலை இடமாகவுடையவனே! இப்படி ஶ்ரமஹரமானதேசத்திலே நீர்வந்து சாய்ந்தது இவள்வரவுபார்த்தன்றோ? அத்தலை இத்தலையாயிற்றோ? [என்செய்கேன்] - கர்த்தவ்யமடங்கலும் தானேயநுஷ்டித்தாள், நான்இனிச்செய்வதேன்? உபாயாந்தரஸாத்யமோ உம்முடைய ஔர்ஜ்ஜ்நம்? [என்திருமகட்கே] - இவளை இழக்கலாமோ உமக்கு? உம்மை ஒருவரையும் ஆசைப்பட்ட ஏற்றமன்றோஅவளது? உம்மையும் அவளையும்சேர ஆசைப்பட்ட ஏற்றமுடையவளல்லளோஇவள்? ஸாக்ஷால்லக்ஷ்மியோடொக்கச் சொல்லலா மாகாதே இவளை! (௮)

ஒன்பதாம் பா

என்திருமகள்சேர்மார்பனே! என்னும்என்னுடைஆவியேஎன்னும்
நின்திருவெயிற்றாலிடந்துநீகோண்டநிலமகள்கேள்வனே! என்னும்
அன்றுருவேழுந்தழுவிநீகோண்டஆய்மகளன்பனே! என்னும் [க்கே.
தென்திருவரங்கங்கோயில்கோண்டானே! தெளிகிலேன்முடிவுஇவள்தன

ஆ.—(என்திருமகள்.) - ஸர்வலோகமஹேஶ்வரியாய் ஸமஸ்த கல்யாண குணாம்ருதோததியாயிருந்த பெரிய பிராட்டியார்க்கும் ஶேஷியாய், உன்னுடைய குணங்களாலே தாஸ்யமுபாமதையான ஸ்ரீபூமிப்பிராட்டியாருக்கும் ஶேஷியாய், தன்னுடைய நிரவதிக ஸௌந்தர்ய ஸௌகந்த்ய ஸௌகுமார்ய லாவண்ய யௌவநாத்யஸங்க்யேய கல்யாண குணங்களாலே பரமபோக்யபூதையான நப்பின்னைப்பிராட்டிக்கும் ப்ரணயிநியாயிருந்த நீ, தத்பரிக்ரஹமாகையாலே என்னை த்வதேகதாரகை யாக்கினாற்போலே, இன்னமும் "தத்பரிக்ரஹம்" என்று என்னை உன்திருக்கண்களாலே பார்த்தருளாய் என்று சொல்லும். இவளுக்காகக் கோயிலிலே கண்வளர்ந்தருளுகிற நீ இவளைப் பார்த்தருளுகிறிலை; இனி இவளுக்குஎன்னுய்விளையுமென்று ஒன்றும் அறிகிலேன் என்கிறாள்.

ஒ.—ஒன்பதாம் பாட்டில், இப்பிராட்டிக்கு ஓடுகிற தஶையைக்கண்டு, இவளுடைய தஶைவத்துக்கு ஒருமுடிவுகாண்கிறிலேன் என்கிறாள்.

[என்திருமகள்சேர் மார்பனே என்னும்] - என்திருமகள் என்றது தான் எம்பெருமானை ஸ்நேஹிக்கைக்கு நிபந்தநம். [என்னுடை என்று தொடங்கி] - திருமகள்சேர் மார்பனைக்கொண்டு எனக்கு தாரகனானவனே என்னும்; ஆஶ்ரிதாஶ்ரயத்தாலே உன்னுடைய திருவெயிற்றாலே நீ இடந்துகொண்ட நிலமகளுக்கு வல்லபனானவனே என்னும்; நப்பின்னைப்பிராட்டி உன்னோடே ஸம்ஶ்லேஷிக்கவல்லளேனே என்று

யோகத்துக்குபாவம் - இப்படிஇத்யாதி. "என்செய்கேன்" என்றதுக்குஇரண்டுபாவம். முந்தினது - கர்த்தவ்யம்இத்யாதி. கர்த்தவ்யமடங்கலுமென்றது - "அழுந்தொழும்" இத்யாதியை. அன்றிக்கே, ஸாதநாநுஷ்டாநம் பண்ணவேண்டாவோ? என்கிற ஶங்கையிலே "என்செய்கேன்"என்றதுக்குஅர்த்தாந்தரம் - உபாயாந்தரஇத்யாதி. "என்திருமகள்" என்றதுக்கு - லக்ஷ்மீயில் வ்யாவ்ருத்தியாகபாவம் - இவளைஇத்யாதி. அவளில் வ்யாவ்ருத்திதன்னை யருளிச்செய்கிறார் - உம்மையொருவரையும் இத்யாதி வாக்யத்வயத்தாலே. திருமகள் என்றதுக்குபாவம் - ஸாக்ஷாத்இத்யாதி. (௮)

துளும்புகிற ஊமையிலே ம்ருத்யுவைப்போலேஇருக்கிற ருஷபங்கள் ஏழையுந்தழுவி நீ கைக்கொண்ட நப்பின்னைப்பிராட்டிக்கு ஸ்நேஹியானவனே! என்னும். இப்படி இவர்களை ஸ்நேஹித்துவைத்து, இவர்கள் அடிபேறுபிருக்கிற என்திறத்தில் அங்கீ காரம் பண்ணுமைக்கு நிபந்தநமென்? என்று கருத்து. ப்ரணயிநீவிஷயத்தில் இப் படி அபிநிவிஷ்டனாயிருந்துவைத்து என்னை அங்கீகாரம் பண்ணுதிருப்பானென்? என்றுமாம். [தென்னன்று தொடங்கி] - எல்லாருடைய ஆர்த்திகளையும் தீர்த்து அரு ளுகைக்காகத் தெற்குத்திக்குக்கு ஸ்லாக்யமான கோயிலை ஸ்தாநமாகக்கொண்டவனே!

ப.—அநந்தரம், லக்ஷ்மீபூமிநீளாநாயகனை உன் ப்ரணயித்வாதிஸயத்திலே அகப்பட்ட இவளுக்குக் காரியந் தலைக்கட்டவிருக்கிறபடி பறிகிறிலேனென்கிறாள்.

என் - எனக்குஸ்வாமிநியான, திருமகள் - லக்ஷ்மியானவள், சேர் - தனக்கபி மதஸ்தாநமாகச் சேர்ந்த, மார்பனே - திருமார்பை யுடையவனே! என்னும் - என்னும்; (அச்சேர்த்தியழகோடே), என்னுடை - எனக்கு, ஆவியே - தாரகமான ப்ராணனைக் கொண்டு என்னெஞ்சிலே யிருந்தவனே! என்னும் - என்னும்; ("நீலவரையிரண்டுபிறை கவ்வி" என்கிற கணக்கிலே வடிவுக்குப் பரபாகமான), நின் - உன்னுடைய, திருவெயிற் றால் - திருவெயிற்றாலே, இடந்து - (ப்ரளயத்திலே மூழ்கி அண்டகபாலத்தினின்றும்) இடந்தெடுத்து, நீ-, கொண்ட - உனக்கபிமதையாகக் கொண்ட, நிலமகள் - ஸ்ரீபூமிப் பிராட்டிக்கு, கேள்வனே - ஸத்ருஸநாயகனே! என்னும் - என்னும்; அன்று - ருஷபங் களை சுல்கமாகநியமித்தவன்று, உரு - இடிபோலே பயாவஹத்வநியான ருஷபங்கள், ஏழும் - ஏழையும், தழுவி - (அபிமதவிஷய கண்டாஸ்லேஷம்போலே அநாயாஸேந) தழுவி, நீ-, கொண்ட - நிதியெடுத்துக்கொண்டாற்போலே ஸ்வீகரித்த, ஆய்மகள் - ஸத்ருஸகோபகுலத்திலேபிறந்த நப்பின்னைப்பிராட்டிக்கு, அன்பனே - வத்ஸலனானவனே! என்னும் - என்னும்; (இப்படி யவர்கள்பக்கலிலே யுன் ப்ரணயித்வத்தை ப்ர காசிப்பித்தாற்போலே இவளுக்கும் உதவுகைக்காக),தென் - கட்டளைப்பட்ட, திருவரங் கம் - ஸ்ரீரங்கக்ஷேத்ரத்தை, கோயில் - வாஸஸ்தாநமாக, கொண்டானே - அங்கீகரித் தவனே! இவள்தனக்கு - இவளுக்கு, முடிவு - ஆர்த்திபர்யவஸாந ப்ரகாரம், தெளிகி லேன் - அறிகிறிலேன். உருமென்றும் பாடமாம்.

ஈ.—ஒன்பதாம்பாட்டில், இவளுடைய தசாவத்துக்கு ஒருமுடிவுகாண்கிறி லேன் என்கிறாள்.

[என்திருமகள் சேர்மார்பனே என்னும்] - என் என்கிறஇடம் திருமகளிலே அந்வயிக்கிறது; மார்பனே என்கிற இடத்தில் அந்வயிக்கிறதன்று. எனக்கு ஸ்வாமிநி யான பிராட்டியைத் திருமார்விலே யுடையவனே! என்னுநின்றாள். இவ்வபிப்ரா வண்யம் பிராட்டியடியாகவந்தது என்கை. [என்னுடையாவியே என்னும்]- இவளுடைய ப்ராணன் பஞ்சவ்ருத்தியாயன்று இருப்பது; ஒருமிதுநமாயிற்று இவளுக்கு ப்ராணன்! திருமகள் சேர்மார்பனைப்பெற்றுக்கொண்டு எனக்கு தாரகனானவனே என்னும். [நின் திரு வெயிற்றால்] - அழகுக்கு நின்திருவெயிறு என்னுமித்தனை. [இடந்து நீகொண்ட] - நீ இடந்துகொண்ட: அந்தப்புரகார்யத்துக்கு ஆளிடவொண்ணாதே. ஸ்ரீபூமிப்பிராட் டிக்கு வல்லபனானவனே! என்னும். [அன்று] - "உன்னோடே ஸம்ஸ்லேஷிக்கவல் லேனே" என்று துளும்புகிறவன்று. [உருவேழுந்தழுவி] - ம்ருத்யுஸத்ருஸமான

ருஷஹங்கள் ஏழையும் தழுவி. உருவென்று - உருமு. இடிபோலே ஹயங்கரமான ஏறு. "அந்தரமேழுமதிருமிடிகுரல்" என்னக்கடவதிறே. அவளை லபிக்கைக்கு நிமித்த மாகையாலே, அவள் முலையிலே அணைந்தாற்போலே இருக்கை. நப்பின்னைப்பிராட் டிக்கு ஸ்நிக்யுனைவனே! என்னும். [நீகொண்ட] - நீகைக்கொண்ட: இத்தால் - என் ஸ்வாமிநிகளுக்கு உதவின நீ, அவர்கள் அடியேனை எனக்கு உதவாதொழிவதே என்னு தல்; ப்ரணயியான நீ, என்னை அங்கீகரியாதொழிவானென்? என்னுதல். [தென்திரு வரங்கம் இத்யாதி] - இவளை விரஹப்ரளயங்கொள்ளாமைக்கும் இடைச்சுவர்போகைக்கு மன்றோ கோயிலிலே சாய்ந்தது? [தென்திருவரங்கம்] - தெற்குத்திக்குக்கன்றோ கோயி லிலே வந்து சாய்ந்தருளிற்று? [தென்திருவரங்கம்] - தெற்குத்திக்குக்கு ஶ்லாக்யமான கோயில். [இவள் தனக்கு - முடிவு - தெளிகிலேன்] - அவர்கள் எல்லார்படியையுமுடைய இவள் உம்மைப்பெற்றுளாம் விரகு அறிகிறிலேன்.

ஈடு.—ஒன்பதாம்பாட்டு. இவளுடைய துஃகத்துக்கு ஒருமுடிவு காண்கிறிலே னென்கிறாள்.

[என்திருமகள்சேர்மார்பனே யென்னும்] - என் பேற்றுக்குப் புருஷகாரமில்லா மல் இழக்கிறேனே? என்னும். விசிஷ்டத்திலன்று என் என்கிறஇது; விசேஷணத் திலே; (அதாவது - என் என்கிறவிடம் திருமகளிலே யந்வயிக்கிறது: மார்பனே என்கிற விடத்தில் அந்வயிக்கிறதன்று.) அநந்தாழ்வான் தன் பெண்பிள்ளையை "என்திருமகள்" என்று திருநாமஞ் சாத்தினான். பட்டர் பெருமாளுக்கு, "அடியேனை 'ஸ்த்ரீயநமாகப் பிராட்டிக்குவந்தவன்' என்று திருவுள்ளம்பற்றவும்; நானும் 'இவர் எங்கள்நாய்ச்சியார்க்கு நல்லர்' என்று, அவ்வழியே 'அழகியமணவாளப்பெருமாள்' என்று நினைத்திருக்கவுமாக வேணும்"என்று வேண்டிக்கொண்டார். [சேர்மார்பனே]-ரஹஸ்யத்தில் நித்யயோகத்தைச் சொல்லுகிறது: அவள்ஒருக்ஷணம் பிரியவிருக்கிலன்றோ எனக்குப் பேறுதாழ்க்கவேண்டுவது? "பெருமாளுக்கு விண்ணப்பஞ்செய்யுமவை கேட்கைக்காக நஞ்சீயரை யழைத்தருளித்தாம் அமுதுசெய்யாநிற்கச்செய்தே இத்திருவாய்மொழி இயலைக் கேட்டருளாநிற்க, இப்பாட்டளவிலே வந்தவாறே 'என்திருமகள்சேர்மார்பனேயென்னும் என்னுடையாவியே என்னும்' என்றுஇயலைச் சேர்த்தருளிச்செய்ய, அத்தைக் கேட்டுக் கையையுதறி, 'ஸ்ரீரங்கநாய' என்று அணையிலே சாய்ந்தருளினார் பட்டர்" என்று அருளிச்செய்வர். "அப்போது திருமேனியிலே பிறந்த விக்ருதியைக்கண்டு 'இவர்க்கு ஹகவத்ப்ராப்தி யணித்தாகிறதோ? என்று அஞ்சியிருந்

ஒன்பதாம்பாட்டு.—என்திருமகள் இத்யாதி. "தெளிகிலேன் என்றத்தைக் கடாக்ஷித்தவதாரிகை - இவளுடைய இத்யாதி.

பிராட்டியோட்டைச் சேர்த்தி சொன்னதுக்குஹாவம் - என்பேற்றுக்கு இத்யாதி. "என்" என்கிறது - திருவுக்கு விசேஷணமென்கிறார் - விசிஷ்டத்தில் இத்யாதி. திருவுக்கு விசேஷணமாக் கினதுக்கு ஸம்வாதம் - அநந்தாழ்வான் இத்யாதி. ஸம்வாதாந்தரம் - பட்டர் இத்யாதி. 'வேண்டிக் கொண்டார்'-"ராதவஊக்ஷி" இத்யாதியாலே வேண்டிக்கொண்டார் என்றபடி. "சேர்" என்கிற வர்த்தமாநத்தாலே - மதுப்பிலர்த்தம் சொல்லுகிறதென்கிறார் - ரஹஸ்யத்தில் இத்யாதி. ரஹஸ்ய மாவது - மந்த்ரரத்நம். நித்யயோகத்துக்கு ஹாவம் - அவளொருக்ஷணம் இத்யாதி. இவளுக்கு மிது நம் ப்ராணனென்று வக்ஷ்யமாணத்துக்குஸம்வாதம் - பெருமாளுக்கு இத்யாதி. விண்ணப்பஞ் செய்யுமவை கேட்கைக்காக என்றது-ஸந்நிதியிலே புராணஶ்லோகார்த்தோபந்யாஸோப யுக்தமாகச் சந்தைத் திரட்டுக்கனெடுக்கைக்கு மூலம் கேட்கைக்காக என்றபடி. இயலை - ஶப்தத்தை. இயல் - ஶப்தமும்,

தேன்" என்று சீயர்அருளிச்செய்வர். [என்னுடையாவியே யென்னும்]-இவர்க்கு ப்ராணன் ஒரு வாயுவிசேஷமல்ல; ஒருமிதுநமாயிற்று. திருமகள்சேர்மார்பனைக்கொண்டு எனக்கு தாரகனானவனே! என்னும். [நின் இத்யாதி] - ப்ரணயிநிகளுக்குக் காரியஞ்செய்யும்போது உன்னையழியமாறியன்றோ கார்யஞ்செய்வது? ஸ்ரீபூமிப்பிராட்டிபக்கல் முகம்பெறலாவது அவள்விபூதியைத் தன்முகேந நோக்கினலிறே? "நின்திருவெயிறு" என்னுமித்தனை யழகுக்கு. [இடந்து நீகோண்ட] - நீ யிடந்துகொண்ட. ஸ்ரீபூமிப்பிராட்டிக்கு வல்லபனானவனே! [அன்று இத்யாதி] - ஒருநாள்உதவின நீ, இன்று உதவினலாகாதோ? நப்பின்னைப் பிராட்டியுடைய ரக்ஷையை - அன்றேன்னு மித்தனை. ஒன்றிரண்டன்றிக்கேயிருக்கிற ருஷபங்களேழையும் தழுவி. அவள்திருமுலைத்தடத்தை யணைத்தாற்போலேயிருக்கிறதாயிற்று, அவளைப்பெறுகைக்கு உபாயமாகையாலே. உருவென்று - இடி. இடிபோலே பயங்கரமான குரலையுடைய ஏறென்னுதல். உருவென்று - மிடுக்காய், மிடுக்குத்தான் வடிவுகொண்டாற்போலே என்னுதல். "உருவட்கு" என்றுஉரிச்சொல்லு. நீகோண்ட - நீகைக்கொண்ட. [ஆய்மகளன்பனேயென்னும்] - என்னைக் கைவிட்டு என் ஸ்வாமிநிகள்பக்கலில் எங்ஙனே முகம்பெற இருக்கிறாய்? என்னும். [தென்திருவரங்கங்கோயில்கொண்டானே] - தெற்குத்திக்குக்கு ஶ்லாக்யமான ஸ்ரீரங்கக்ஷேத்ரத்தை வாஸஸ்தாநமாக வுடையவனே! "எருதேழடர்த்த அவதாரத்திலே முகங்காட்டப் பெற்றதில்லை" என்னும் குறையுண்டோ? அவதாரங்கள்போலன்றியே நித்யவாஸம் பண்ணுகிறது, பிற்பாடர்க்கு உதவவன்றோ? "கதஸ்ஸ்வஸ்த்தாநமுத்தமம்" (கதஸ்ஸ்வம்ஸ்த்தாநமுத்தமம்) என்னவேண்டாதபடி கோயில்கொண்டானாயிற்று. [தேளிகிலேன்] - அங்குக் குறையற்றபின்பு "தப்பாது" என்று தெளியவிறேயடுப்பது, அது மாட்டுகிறிலேன். "மாஸுச:" (மாஶுசஃ) என்றத்தை யநுஷ்ட்டாநபர்யந்தமாக்கிக்கொண்டு நீ கிடந்தால்,

---

தாநமும். இப்படி சேர்த்தத்தால் தோற்றின அர்த்தமேதென்ன - இவர்க்கு ப்ராணன் இத்யாதி. "என்திருமகள்சேர்மார்பனே" என்று சொல்லப்படுகிற என்னுடைய ப்ராணனேயென்னுமென்று பதார்த்தம். பதப்ரயோகத்துக்கு பாவம் - ப்ரணயிநிகளுக்கு இத்யாதி. சாடு - ஸ்ரீபூமிப்பிராட்டி இத்யாதி. அவள்விபூதியை - பூமியை. தன்முகேந - தான் ப்ரதாநமாகவென்றும், தன்முகத்தாலேயென்றும் அர்த்தத்வயம். ஒருத்ருஷ்டாந்தம் சொல்லாதே, கேவலம் "திருவெயிறு" என்றதுக்கு பாவம் - நின்திருவெயிறு என்னும் இத்யாதி. திரு - அழகு. "அன்று" என்று சொல்லுகிறவனுடைய ஹார்த்தபாவம் - ஒருநாள் இத்யாதி. "அன்று" என்றதுக்கு ஸ்வாரஸ்யம் - நப்பின்னை இத்யாதி. அதாவது - வாக்குக்கு விஷயமன்றென்றபடி. 'அடர்த்தென்றதே, "தழுவி" என்பானென்? என்ன - அவள் திருமுலை இத்யாதி. "அன்று - ருஷபங்களை சல்கமாகநிபமித்தவன்று" என்று உரையிலர்த்தம். "உருவு" என்றால் - மிடுக்கைக் காட்டுமோ? என்ன - உருவுட்கென்று இத்யாதி. உரிச்சொல்லு - நைகண்டுகவிசேஷமித்யர்த்த:. உட்கு - மிடுக்கு. உரு - இடியும், மிடுக்கும். வெறுப்பாகபாவம் - என்னை இத்யாதி. ஸ்வாமிநிகளென்று - கீழுக்தரான மூவரையும் சொல்லுகிறது. "அன்பனே" என்றது - அன்புக்கு விஷயமானவனே! என்றபடி. "கோயில்கொண்டானே" என்றதுக்கு பாவம் - எருதேழடர்த்த இத்யாதி. விவரணம் - அவதாரங்கள் இத்யாதி. "அவதாரம் காதாசித்கம்" என்னுமதுக்கு ப்ரமாணம் - கத இத்யாதி. மஹாபாரதே; "க்ருஷ்ணாஸாஹாவதாரணம் வ்ருஷ்ணிவ்ருஷ்ணி: வ்ருஷ்ணிவம்ஶோத்பவ: । ஶோஷயித்வா ஜகத்ஸர்வம் கதஸ்ஸ்வம்ஸ்த்தாநமுத்தமம்"

'கதஸ்ஸ்வம்ஸ்த்தாநம்' இத்யாதிவாக்யம் - கீழ்வாக்யவிவரணம். "தெளிகிலேன்" என்றதுக்குபாவம் - அங்கு இத்யாதி. குறையற்றபின்பென்றது - "திருவரங்கம் கோயில் கொண்டானே" என்றத்தைப் பற்ற. விவரணம் - மாஶுச: இத்யாதி. தெளிந்திருக்கமாட்டாமைக்கு ஹேதுவேதென்ன - இவ

“ஸ்தி தோஸ்மி கதஸந்தேஹ:” (ஸ்த்திதோஸ்மிகதஸந்தேஹ:) என்றிருக்கவிறேயடுப்பது? அதுமாட்டுகிறிலேன். இவள் தனக்கு - முடிவு-தேளிகிறிலேன். இவளவஸ்தை இதுவாயிருக்க, ஒரு ஜ்ஞாநலாபத்தாலே யாறியிருக்கப்போமோ? (௯)

பத்தாம் பாட்டு.

முடிவு இவள் தனக்கொன்றறிகிலேனென்னு மூவுலகாளியே! என்னும்
கடிகமழ்கோன்றைச்சடையனே! என்னும்நான்முகக்கடவுளேயென்னும்
வடிவுடைவானோர் தலைவனே! என்னும்வண் திருவரங்கனே! என்னும்
அடியடையாதாள்போலிவளணுகியடைந்தனள்முகில்வண்ணனடியே.

ஆ.—(முடிவு இவள் தனக்கு.) - இப்பெண்பிள்ளை, தனக்கு முடிகைக்கு ஒருபாயம் அறிகிறிலேன் என்னும். ப்ரஹ்மருத்ராதி ஸகலதேவதைகளுக்கும் அந்தராத்மதயாவஸ்த்திதனாய் அவர்களுடைய ஸ்வரூபஸ்த்திதி ப்ரவ்ருத்த்யைஶ்வர்யாதி ஹேதுபூதனானவனே! உன் திருவடிகளில் அவர்களோபாதி உறவுபோராதோ? என்னும். அயர்வறுமமரர்களையுங்கூடத் தோற்பித்து அடிமையாக்கிக்கொண்டிருக்கிற உன்னைக் காட்டியருளாய் என்னும். கோயிலிலே புகுந்து கண்வளர்ந்தருளி ஆஶ்ரிதர்க்கு ஆத்மதாநம்பண்ணிக்கொண்டிருக்கிற பரமோதாரனே! என்னும். “இனிப்பெருமாள் திருவடிகளைச்சேர்ந்து முடியமாட்டாள்: போய்முடிந்தாள்” என்னும்படி தூர்த்தஶாபன்னையான இவள், வ்ருத்தமான இந்த விஶ்லேஷநிபந்தநமான நிரவதிக துக்கமெல்லாம் விஸ்ம்ருதமாம்படி, தான் ஆசைப்பட்டபடியே பெரியபெருமாள் திருவடிகளையே ஸம்ஶ்லேஷிக்கப்பெற்றாளென்று இவளுடைய திருத்தாயார் ப்ரீதையாகிறாள்.

ஒ.—பத்தாம்பாட்டில், பெரியபெருமாளை ஸம்ஶ்லேஷிக்கப் பெறாளோ என்று தோற்றும்படி அவஸந்நையான இப்பெண்பிள்ளை அவர் திருவடிகளை அணுகி ஸம்ஶ்லேஷிக்கப்பெற்றாள் என்கிறாள்.

[முடிவிவள் தனக்கொன்று அறிகிலேன் என்னும்] - இப்பெண்பிள்ளை தனக்கு ஒருமுடிவு காண்கிறிலேன் என்னாநின்றாள். [மூவுலகென்று தொடங்கி] - மூன்று லோகத்தையும் ஆளக்கடவ இந்த்ரனுக்கு அதுக்கீடாக ஆத்மாவாய் நின்றவனே! என்னும். தன்னுடைய ஐஶ்வர்யத்துக்கீடான தாரையுடையனாய் ஸாயகனென்று தோற்றும்படியான ஜடையையுமுடையனான ருத்ரனுக்கு ஆத்மதயாநின்று அவனுக்கு நிர்வாஹகனானவனே! என்னும். சதுர்முகனான தைவத்துக்கு அந்தராத்மதயாநின்று நிர்வாஹகனானவனே! என்னும். உன்னோடு ஒத்தவடிவையுடைய அயர்வறுமமரர்களுக்குத் தலைவனானவனே! என்னும். அந்யபரரோடு அநந்யபரரோடு வாசியின்றிக்கே எல்லார்க்கும் நிர்வாஹகனான நீ, உன்னையல்லது செல்லாதிருக்கிற என்னை ரக்ஷியாதொழிவதே! என்று கருத்து. [வண்திருவரங்கனே என்னும்] - கீழ்ச்சொன்னவைபோலன்றிக்கே மிகவும் ஔதார்யத்தை உடையையாய்க்கொண்டு கோயிலிலே ஸந்நிஹிதனானவனே! என்னும்.

இவளவஸ்தை இத்யாதி. “இவள் தனக்கு - முடிவு - தெளிகிலேன்” என்றதுக்கு இவளுடைய துக்காவதி காண்கிறிலேனென்று ஸப்தார்த்தம். முடிவு - துக்காவதி. (௯)

ப.—அநந்தரம், ஈஶ்வராபிமாநிகளுக்கும் அந்தராத்மாவான ஸர்வேஶ்வரனுடைய ஆர்த்தியையறிந்து தன்ஶீலாதிஶயத்தாலும் ஔதார்யத்தாலும் தன்வடிவழகாலும் ஆந்தர ஸம்ஶ்லேஷத்தை விஶ்லேஷித்து ப்ரகாஶிப்பிக்க, இவளுக்கு அத்தால்பிறந்த விஶ்வாஸத்தைக்கண்டு ஸ்வகதமாகத் தாயார் ஸந்துஷ்டையாய்ச் சொல்லுகிறாள்.

இவள் - (ப்ரத்யக்ஷஸித்தாவஸாதத்தையுடைய) இவள், தனக்கு-இப்படி அவஸந்நையான தன்படிக்கு, முடிவு-, ஒன்று-, அறிகிலேன் - அறிகிறிலேன்; என்னும்-; மூவுலகாளியே - த்ரைலோக்யேஶ்வரனை இந்த்ரனுக்கு அந்தராத்மாவாய்க்கொண்டு நிர்வஹித்தவனே! என்னும்; கடிகமழ் - பரிமளப்ரவாஹியான, கொன்றை - கொன்றைத் தாரையுடைத்தான, சடையனே - ஜடையையுடையனை ருத்ரனை அதிஷ்டித்து நின்று அவனுடைய ஈஶ்வரத்வோபாஸகத்வங்களுக்கு உள்ளிடானவனே! என்னும்-; நான்முகன் - (இவர்களுக்கு ஶேஷியான) சதுர்முகனை, கடவுளே - தைவத்துக்கு ஆத்மாவானவனே! என்னும்-; (இப்படி ஈஶ்வராபிமாநிகளான ப்ரயோஜநாந்தரபரர்க்கும் ப்ரகாரியானசீலத்துக்கும்மேலே),வடிவுஉடை - தன்னோடுலப்தஸாம்யரான, வானோர்- நித்யஸூரிகளுக்கு, தலைவனே - ஶேஷியானவனே! என்னும்-; (அம்மேன்மையோடே). வண் - (ஆசைப்பட்டார்க்குத் தன்னைக்கொடுக்கும்) ஔதார்யத்தையுடையனைக்கொண்டு, திருவரங்கனே - கோயிலுக்குநிர்வாஹகனானவனே! என்னும்-; (இப்படி நீர்மையையும் மேன்மையையும் ஔதார்யத்தையும் அநுஸந்தித்து ஈடுபட்டு, இனி). அடி - அவன்திருவடிகளை, அடையாதாள்போல் - கிட்டமாட்டாள்போலே யென்னும்படியிருக்க, இவள்-, முகில்- ஜலஸ்தலவிபாகமற உபகரிக்கும் காளமேகம்போலேயிருக்கிற, வண்ணன் - வடிவையுடையவனுடைய உபகாரகத்வாதிஶயத்தாலே. அடி - அவன்திருவடிகளை, அணுகி - கிட்டி, அடைந்தனள் - ப்ராபித்தாளாயிருந்தது.

இ.—பத்தாம்பாட்டில், இனிக்கிட்டமாட்டாளோ? என்னும்படி அவஸந்நையான இவள், பெரியபெருமாள்திருவடிகளிலே ஸம்ஶ்லேஷிக்கப்பெற்றாள் என்கிறாள்.

[முடிவுஇவள் தனக்குஒன்றறிகிலேன் என்னும்]- இவள், தனக்கு ஒருமுடிவு காண்கிறிலேன் என்றுநின்றாள். [மூவுலகாளி இத்யாதி] - த்ரைலோக்ய நிர்வாஹகனை இந்த்ரனுக்கு ஆத்மாவாய்நின்று அவனுடைய அதிகாரத்தை நடத்தினவனே! என்னும். ஐஶ்வர்யஸூசகமான தாரையும், ஸாதகத்வஸூசகமான ஜடையையும் உடைய ருத்ரன் அதிகாரத்தை அவனுக்கு ஆத்மாவாய்நின்று நிர்வஹித்தவனே! என்னும். கடிகமழ் - பரிமளம்மிகுகை. சதுர்முகனை தேவதைக்கு ஆத்மாவானவனே! என்னும். உன்னோடொத்த வடிவையுடைய நித்யஸூரிகளுக்கு நிர்வாஹகனானவனே! என்னும். அந்யபரரான ஈஶ்வராபிமாநிகளோடு, அநந்யபரராய் நிர்மமரானாரோடு வாசியற எல்லார் காரியமுஞ்செய்கிற நீ, உன்னையல்லது செல்லாத எனக்கு உதவாதொழிவதே? என்கை. [வண் திருவரங்கனே என்னும்] - "[illegible]" என்று என்னை உன்பேறாக அணைக்கைக்குக் கோயிலிலேவந்து ஸந்நிஹிதனானவனே! என்னும். [அடிஇத்யாதி] - "ஜீவிப்பாரைப்போலேயிருந்து முடிந்துகொடு நின்றாள்" என்று பூர்வர்கள் நிர்வாஹம்; "அங்ஙனேயானால் மேல்ப்ரபந்தம் நடவாதென்று, ஸம்ஶ்லேஷிக்கப்பெற்றாளோ என்று தோற்றும்படி அவஸந்நையான இவள் கிட்டிஸம்ஶ்லே

ஷிக்கப்பெற்றாள், காளமேகநிபஶ்யாமமான பெரியபெருமாள் திருவடிகளை" என்று எம்பெருமானார் நிர்வஹித்தருளினார்.

ஈடு.—பத்தாம்பாட்டு. இனிக்கிட்டமாட்டாளோ என்னும்படி அவஸந்நை யான இவள், பெரியபெருமாள்திருவடிகளை ஸம்ஶ்லேஷிக்கப் பெற்றாளென்கிறாள்.

[முடிவுஇவள் தனக்கு ஒன்றுஅறிகிலேன் என்னும்]-பெண்பிள்ளைவார்த்தையைத் திருத்தாயார் அநுபாஷிக்கையாலே, "இவள் தனக்கு - முடிவு - ஒன்றறிகிலேன்" என்னா நின்றாளென்கிறாள். இத்துக்கஸாகரத்தைக் கரைகாணும் விரகுஅறிகிறிலேனென்னுதல்; முடிந்துபிழைக்கும் விரகுஅறிகிறிலேனென்னுதல். [மூவுலகுஇத்யாதி] - "மூவுலகாளியே! கடிகமழ்கொன்றைச்சடையனே! நான்முகக்கடவுளே! என்னும் வடிவுடைவானோர்க் குத் தலைவனே! என்னும்" என்று திருமாலையாண்டான் வையதிகரண்யமாக்கி நிர்வஹிக்கும். என்னும் என்னுமது - என்னுமவளாய் எம்பெருமானார் கேட்டருளி, ஸாமாநாதி கரண்யத்தாலே அருளிச்செய்தருளினார்-"த்ரைலோக்யத்துக்கும் கடவனான இந்த்ரனுக்கு அந்தர்யாமியாய் நின்று அவனுடைய அதிகாரத்தை நிர்வஹிக்கிறவனே! என்னும்; பரி மளத்தையுடைத்தான கொன்றையை ஜடையிலேயுடைய ருத்ரனுக்கு அந்தர்யாமியாய் நின்று அவனுடைய பதத்தை நிர்வஹிக்கிறவனே! என்னும்; அவர்களோடு இவ்வருகுள்ளா ரோடு வாசியற எல்லார்க்கும் நிர்வாஹகனாயிருக்கிற சதுர்முகனாகிறதேவதைக்கு அந்தர்யாமி யானவனே! என்னும்." [வடிவுடைஇத்யாதி] - பகவதநுபவத்தால்வந்த ஹர்ஷம் வடிவிலேதோற்றும்படியிருக்கிற நித்யஸூரிகளுக்கு நாயகனானவனே! என்னும். வடி வுடைவானோர்தலைவனே என்றத்தோடு, மூவுலகாளியேஎன்றத்தோடு கடிகமழ்கொன்றைச் சடையனே என்றத்தோடு.நான்முகக்கடவுளே என்றத்தோடு வாசியற்றிருக்கிறதாயிற்று இவர் க்கு: மயர்வறமதிநலம் பெறுகையாலே; விசேஷணம்ஶத்தில் பர்யவஸிக்குமவரல்லரே; ஸர்வ நிர்வாஹகனென்றுஉணர்ந்திருக்குமவராயிற்று இவர். [வண்திருவரங்கனேயென்னும்]- நித்ய ஸூரிகளே அநுபவித்துப்போகையன்றிக்கே, நித்யஸம்ஸாரிகளும் இழவாமைக்குஅன்றோ

பத்தாம்பாட்டு.—முடிவுஇவள் இத்யாதி. "அடியடையாதாள்போலிவளணுகி" இத்யாதி களைக் கடாக்ஷித்தவதாரிகை - இனிக் கிட்டமாட்டாளோ இத்யாதி.

'முடிவு இவள் எனக்கு' என்னாமல், "தனக்கு" என்பானென்? என்ன - பெண்பிள்ளை வார்த்தையை இத்யாதி. "இவள், தனக்கு-முடிவு - ஒன்றறிகிலேனென்னும்" என்றந்வயிப்பது, "முடிவு - அறிகிலேன்" என்றதுக்கு இரண்டுவகையாக அர்த்தமருளிச்செய்கிறார் - இத்துக்கஸாக ரத்தை இத்யாதி வாக்யத்வயத்தாலே. "முடிவு" - துக்காவஸாநமென்னுதல், நாசமென்னுதல். திரு மாலையாண்டான் நிர்வாஹத்துக்கு, "என்னும்" என்கிறது - சொல்லப்படுகையாய், "மூவுலகாளியே" இத்யாதியாற் சொல்லப்படுகிற வடிவுடைவானோரான இந்த்ராதிகளுக்குத்தலைவனே! என்றபடி. "மூவுல காளியே" இத்யாதியில் ஏகாரம் - "ஒன்றே, இரண்டே" என்னுமாபோலே எண்ணிலேயாகிறது. இந்தநிர்வாஹத்துக்கு, "மூவுலகாளியே" என்று பாட்டுத்தோறும் ஸம்போதநமாய் வருகிறவற்றையும், "என்னும், என்னும்" என்று மகள்வார்த்தையைத் தாயார் அநுபாஷிக்கிறத்தையும் இறுக்கியோஜிக் கையாகிற அஸ்வாரஸ்ய முண்டென்று திருவுள்ளம்பற்றி அருளிச்செய்கிறார் - எம்பெருமானார் இத் யாதி. ஸாமாநாதிகரண்ய ப்ரக்ரியையை விவரிக்கிறார் - த்ரைலோக்யத்துக்கும் இத்யாதி. திருமாலை யாண்டான் நிர்வாஹத்தில் - லீலாவிபூதிமாத்ரநாதத்வம்; எம்பெருமானார் நிர்வாஹத்தில் - உபயவிபூதி நாதத்வமேற்றம். "வானோர்தலைவனே" என்று - அஸாதாரண விக்ரஹ விஶிஷ்டனையும், "மூவுல காளியே" இத்யாதியாலே - ஸாதாரண விக்ரஹ விஶிஷ்டனையும் ஒக்க அநுபவிப்பானென்? என்ன - வடிவுடை இத்யாதி. பலிதம் - விசேஷணம்ஶத்தில் இத்யாதி. அந்யாபதேச ப்ரக்ரியைக்கு

இங்குவந்துகண்வளர்ந்தருளுகிறது.இங்குச் சாய்ந்தருளினதின் ஃலம் நான் பெறவேண்டாவோ? என்னும். ஆசைப்பட்டார்க்குத் தன்னைக் கொடுக்கும் ஔதார்யம்.[அடியடையாதாளித்யாதி] - "ஜீவிப்பாரைப்போலேயிருந்து, கடுகமுடிந்துகொடுநின்றாள்" என்று நிர்வஹிப்பாருமுண்டு; "அப்போது மேல்ப்ரஸங்கம் நடவாதாகையாலே, திருவடிகளைக்கிட்டாதாரைப்போலே யிருந்து க்ரமத்திலே கிட்டிக்கொண்டு நின்றாள்" என்று அருளிச்செய்யும்படி. இதுதான் - மாநஸாநுபவத்திலே ஒருவைஶத்யத்தைச் சொன்னபடி. [அடியடையாதாள்போல்] -இவள் இப்போதே திருவடிகளைச்சேரமாட்டாள்:இன்னம் சிறிதுகாலமிருக்கும் என்றுபோலேயிருந்தது; முடிந்துகொடுநின்றாளென்னுதல். இனி, 'ஸம்ஶ்லேஷிக்கப்பெறுவளோ?' என்று தோற்றும்படி அவஸந்நையான இவள், கிட்டி ஸம்ஶ்லேஷிக்கப்பெற்றாள் காளமேகநிபஶ்யாமமான பெரியபெருமாள் திருவடிகளையே என்னுதல். (௰)

பதினோராம் பாட்டு.

முகில்வண்ணனடியையடைந்தருள்சூடிஉய்ந்தவன்மொய்புனல்பொருநல், துகில்வண்ணத் † தூநீர்ச்சேர்ப்பன்வண்பொழில்சூழ்வண்குருகூர்ச்சடகோபன், முகில்வண்ணனடிமேற் சொன்னசொல்மாலையாயிரத்திப்பத்தும்வல்லார், முகில்வண்ணவானத்து இமையவர்சூழவிருப்பர்பேரின்பவெள்ளத்தே.

*ஆ.—(முகில்வண்ணன்.) - பெரியபெருமாள்திருவடிகளைச் சேர்ந்து ஸர்வப்ரகார ஸம்ஶ்லேஷமும்பண்ணப் பெறுகையாலே லப்தோஜ்ஜீவநராய், ஸுப்ரஸந்நஸலிலபூரபரிபூர்ணமான திருப்பொருநலாலும், அதிரமணீய திவ்யகந்தஸுமநோஅபிராம தருநிகரங்களாலும் பரிஷ்க்ருதமான திவ்யநகர நிலயராயிருந்த சடகோபன், முகில்வண்ணனடிமேற்சொன்ன சொன்மாலையாயிரத்துள்இப்பத்தும் வல்லார்,பெரியபெருமாள் திருமேனியில் நீலமான ஜ்யோதிஸ்ஸின் வெள்ளத்தாலே திவ்யமான திருநாட்டிலே * அயர்வறுமமரர்கள்சூழ, ஸவிபூதிகபரமபுருஷாநுபவஜநித நிரவதிகாநந்த மஹார்ணவாந்தர்நிமக்நராயிருப்பரென்கிறார்.*

ஒ.—நிகமத்தில், இத்திருவாய்மொழி அப்யஸித்தார், ஆழ்வார்பட்ட க்லேஶம்படாதே திருநாட்டிலே நிரதிஶயாநந்தயுக்தராய்க்கொண்டு அயர்வறுமமரர்கள்சூழ இருப்பர் என்கிறார்.

ஸாமாநாதிகரண்யம் உபயோகமல்லவே யென்ன - ஸர்வநிர்வாஹகன்இத்யாதி. எம்பெருமானார் நிர்வாஹம் - ஆகையாலேஇத்யாதி. அருளிச்செய்யும்படி எம்பெருமானாரென்று கூட்டுவது. ஆனால், ப்ரத்யக்ஷமாகக் கிட்டினாளோ? என்ன - இதுதான்இத்யாதி. அணுகியடைந்தனள் - கிட்டிப்ராபித்தாளென்றபடி. முகில்வண்ணன் - மேகம்போன்ற வடிவையுடையவன். (௧0)

---

† 'அடியே'என்று உரைக்குப்பாடம்.

[முகில்வண்ணன் என்று தொடங்கி] - பெரியபெருமாள் திருவடிகளிலே சேர்ந்து அங்குத்தை ப்ரஸாதத்தைப்பெற்று தரித்தவன்: மிக்க புனலையுடைய திருப்பொருநலில் துகில்வண்ணமான தூநீரிலே சேரக்கடவன். [வண்பொழில்சூழ் வண்குருகூர்ச்சடகோபன்] - அழகிய பொழில்சூழ்ந்திருந்துள்ள வண்குருகூர்ச்சடகோபன். [முகில்வண்ணன் என்று தொடங்கி] - பெரியபெருமாள் திருவடிகளிலேசொன்ன ஆயிரந் திருவாய்மொழியிலும் இத்திருவாய்மொழி வல்லார் எம்பெருமானுடைய திருநிறத்தாலே முகில்வண்ணமான திருநாட்டில்.

ப.—அநந்தரம், இத்திருவாய்மொழியை அப்யஸித்தவர்கள் பரமபதத்திலே ஸூரிகள் நடுவே ஆநந்தநிர்ப்பரராயிருப்பரென்று ஃலத்தை யருளிச்செய்கிறார்.

முகில்வண்ணன் - உதாரமானமேகவஸ்வபாவரான பெரிய பெருமாளுடைய, அடியே - திருவடிகளையே, அடைந்து - ப்ராபித்து, (அதுக்கடியான), அருள் - அவருடையக்ருபையை, சூடி - தலைக்கொண்டு, உய்ந்தவன் - உஜ்ஜீவித்தவராய், மொய் - மிக்க, புனல் - புனலையுடைத்தான, பொருநல் - திருப்பொருநலினுடைய, துகில் - துகிலின், வண்ணம் - நிறம்போலே, தூ - பரிசுத்தமான, நீர் - ஜலத்தையுடைத்தான, சேர்ப்பன் - பர்யந்தப்ரதேசத்தையுடையராய், வண் - மது புஷ்ப ஸம்ருத்தியாலுள்ள வைலக்ஷண்யத்தையுடைய, பொழில் - பொழில்களாலே, சூழ்-சூழப்பட்டு, வண்-நிரதிசயஸம்பத்விசிஷ்டமான, குருகூர் - திருநகரிக்கு நிர்வாஹகரான, சடகோபன் - ஆழ்வார், முகில் - காளமேகம்போலே, வண்ணன் - நிரதிசயஸௌந்தர்ய யுக்தரான பெரிய பெருமாள், அடிமேல் - திருவடிகள்விஷயமாக, சொன்ன - அருளிச்செய்த, சொல் - சப்தாத்மகமான, மாலை - மாலைகள், ஆயிரத்து-, இப்பத்தும் - இப்பத்தையும், வல்லார் - பாவவ்ருத்தியோடே அப்யஸிக்கவல்லவர்கள், (ஸ்ரீவைகுண்டநாதன் திருமேனியில்நிழலீட்டாலே), முகில் - மேகஶ்யாமளமான, வண்ணம்-நிறத்தையுடைய, வானத்து-பரமபதத்திலே,இமையவர் - நித்யஸூரிகள், சூழ-பரிவேஷ்டிக்க, பேரின்பவெள்ளத்தே-நிரதிசயாநந்தஸாகரமத்யத்திலே, இருப்பர் - இருப்பர்கள்; இது - எழுசீராசிரிய

இ.—நிகமத்தில், இத்திருவாய்மொழியை அப்யஸிக்கவல்லார் இ ாபடட க்லேசம்படாதே திருநாட்டிலே நிரதிசயாநந்தயுக்தரான நித்யஸூரிகள்சூழ)ருக்கப் பெறுவர்கள் என்கிறார்.

[முகில்வண்ணன் இத்யாதி] - பெரியபெருமாள் திருவடிகளைக்கிட்டி அங்குத்தை ப்ரஸாதத்தைப் பெற்று தரித்தவன். பூர்வாவஸ்தையில் ஸத்தையும், மேலுள்ளவையும் அவனருளாலேயாயிருக்கையாலே ‘ உய்ந்தவன் ’ என்கிறது. வலியையுடைய புனலையுடைத்தான பொருநலில் துகிலினுடைய வர்ணமான சுத்தஜலத்திலே சேர்க்கப்பட்டவர். மொய் - வலி. ஆற்றுப்பெருக்காலே வலிபெற்றிருக்கை. “ஸக்ஷீ ரஸிகம் தீர்த்தம் ஸுபிக்ஷ ஜநிஶாயே । ரமணீயம் ப்ரஸந்நாம்பு ஸந்மநுஷ்யமநோ யதா ” என்று தம்முடைய திருவுள்ளம்போலே ப்ரஸந்நமான ஜலத்தோடே ஸங்கதரானவர். [தூநீர்ச்சேர்ப்பன்] - தூநீர்த்துறைவன். தர்சநீயமான பொழிலையுடைத்தாய் உதாரமான திருநகரி. “பெரியபெருமாள் திருவடிகளிலேயாயிற்று ஆயிரமும் சொல்லிற்று: ‘திருமோகூர்க்கீத்தபத்து’ என்றும், ‘திருவேங்கடத்துக்கிவைபத்து’ என்றும் பிரித்துக்

கொடுத்த இத்தனை; திருப்பலகையில் அமுதுபடியிலே திருப்பதிகளில் நாயன்மார்க்கு அளந்து கொடுக்குமாபோலே'' என்று பிள்ளை அருளிச்செய்வர். [முகில்வண்ண வானத்து] - முகில்வண்ணனுடைய வானம் என்னுதல். அவனுடையநிழலீடான வானம்என்னுதல். [இமையவர் சூழவிருப்பர் பேரின்பவெள்ளத்தே] - தாம் மோஹித்துத் திருத்தாயார் தனியே கூப்பிடஇருந்த இவருடையக்லேஶ மின்றிக்கே, நித்யஸூரிகள் நடுவே ஆநந்தநிர்ஹரராய் இருக்கப்பெறுவர்கள்.

ஈடு.—நிகமத்தில், இத்திருவாய்மொழியப்யஸிக்கவல்லார், இவர்பட்ட க்லேசம்படாதே திருநாட்டிலே நிரதிஶயாநந்த யுக்தராய், நித்யஸூரிகள்சூழ இருக்கப்பெறுவர் என்கிறார்.

[முகில்வண்ணன்இத்யாதி] - பெரியபெருமாள் திருவடிகளைக்கிட்டி அங்குத்தைப்ரஸாதத்தைப்பெற்று தரித்தவன். பூர்வாவஸ்தையில், ஸத்தையும் அழியும்படியாயிருக்கையாலே உய்ந்தவனென்கிறது. மொய்யென்று மிகுதிக்கும், வலிக்கும் பேர். இப்போது, நீரோட்டத்தால்வந்த வலியைநினைக்கிறது. வலியையுடைத்தான ஜலத்தோடேகூடின பொருநலில் துகிலினுடைய வண்ணத்தையுடைத்தான தூநீர்த்துறைவன். சேர்ப்பன் - துறைவன்: நெய்தல்நிலத்தில் தலைமகன். மொய்புனலென்னாநிற்க, தூநீரென்றது-பெருவெள்ளமாயிருக்கச்செய்தே தெளிந்திருக்கும்படியைப்பற்ற. **''ரமணீயம்ப்ரஸந்நாம்பு ஸந்மநுஷ்யமநோ யதா''** (ரமணீயம்ப்ரஸந்நாம்பு ஸந்மநுஷ்யமநோயதா) என்கிறபடியே ஶ்ரீமநீயமான பொழிலையுடைத்தாய் உதாரமான திருநகரிக்குநாயன். [முகில் இத்யாதி] - காளமேகம்போலே நிரதிஶய ஸௌந்தர்யயுக்தரான பெரியபெருமாள் விஷயமாக அருளிச்செய்த ஶப்தாத்மகமான மாலைகளாயிரத்துஇப்பத்தையும் ஆவ்ருத்தியோடே அப்யஸிக்கவல்லவர்கள். ''பெரியபெருமாள்திருவடிகளிலே - திருவாய்மொழியாயிரமுஞ்சொல்லிற்று ''திருமோகூர்க்கீத்தபத்து'', ''திருவேங்கடத்துக்கிவைபத்து''என்று பிரித்துக்கொடுத்தஇத்தனை; பெருமாள்திருப்பலகையில் அமுதுபடியிலே மற்றைத்திருப்பதிகள்நாயன்மார்க்கும் அளந்துகொடுக்குமாபோலே'' என்று பிள்ளையருளிச்செய்வர். [முகில்வண்ண வானத்து] - அங்கிருக்கிறவனுடைய நிழலீட்டாலே அவன்படியாயிருக்கிறவானம் என்

நிகமம்.—முகில் இத்யாதி. ''இப்பத்தும் வல்லார் முகில்வண்ணவானத்திமையவர் சூழவிருப்பர் பேரின்பவெள்ளத்தே'' என்றதைக் கடாக்ஷித்தவதாரிகை - இத்திருவாய்மொழி இத்யாதி.

*மேலில் திருவாய்மொழி க்லேசமாயிருக்க, ''உய்ந்தவன்'' என்று-தரிப்புண்டாகச்சொல்லலாமோ? என்ன - பூர்வாவஸ்தையில் இத்யாதி. ''துறைவன்'' என்றதுக்குபாவம் - நெய்தல் நிலத்தில் தலைமகனென்றது. ''சேர்ப்பன்'' என்றது - துறைவனுக்கும், நெய்தல்நிலத்தில் தலைமகனுக்கும்பேர். இங்கு, துறைவனைச்சொல்லுகிறது. ''மொய்'' என்று - மிகுதியாகஅர்த்தாந்தரம் விவக்ஷித்து, மிகுதியானால் ''தூநீர்'' என்கிறதுகூடுமோ? என்ன - மொய்புனல் இத்யாதி. இதுக்குப்ரமாணம்- **ரமணீயம்** இத்யாதி. ''அகர்தமமிதம் தீர்த்தம் பரத்வாஜ நிஶாமய । ரமணீயம்ப்ரஸந்நாம்பு ஸந்மநுஷ்யமநோ யதா'' இதிபாலகாண்டே (உ-ரு). ''மொய்புனல்'' இத்யாதிக்கு -''மிக்கஜலத்தையுடைய திருப்பொருநலினுடைய, துகிலின்நிறம்போலேபரிசுத்தமான ஜலத்தையுடைத்தான பர்யந்தப்ரதேசத்தையுடைய'' என்ற உரையிலே ஶப்தார்த்தம். ஆயிரமும்இவர் விஷயமானால் திருவேங்கடமுடையான்முதலானார்க்குஇன்றிக்கேபோமேயென்ன - திருமோகூர்க்கு இத்யாதி. ''முகில்வண்ணவானத்து'' என்றதுக்கு அர்த்தத்வயமருளிச்செய்கிறார் - அங்கிருக்கிறவனுடைய இத்யாதிவாக்யத்வயத்தாலே. முகில்வண்ணமானவானத்து - மேகஶ்யாமளமான நிறத்தையுடைய பரம*

னுதல்; முகில்வண்ணனுடைய வானமென்னுதல். [இமையவர்இத்யாதி] - இவள் மோஹித்துக் கிடக்கத் திருத்தாயார் தனியேயிருந்து கூப்பிட்டவளிவரவதீர, நித்யஸூரிகள் திரளவிருக்க அவர்கள்நடுவே ஆநந்தநிர்ப்பரராயிருந்து அநுபவிக்கப் பெறுவர்கள்.(கக)

பதத்திலே என்று முந்தினவர்த்தம். 'முகில்வண்ணனடியை அடைந்து'என்று தொடங்கி, 'இமையவர் சூழ - பேரின்பவெள்ளத்தே - இருப்பர்'இத்யந்வயம். வண்பொழில்சூழ் வண்குருகூர்ச்சடகோபன் - விலக்ஷணமான பொழிலாலேசூழப்பட்டு நிரதிஶய ஸம்பத்விஶிஷ்டமான திருநகரிக்கு நிர்வாஹகரான ஆழ்வாரென்று ஶப்தார்த்தம். சொன்மாலை - ஶப்தாத்மகமான மாலை. வல்லார் - அப்யஸிக்கவல்லார்கள். பேரின்பவெள்ளத்தே - நிரதிஶயாநந்த ஸாகரமத்யத்திலே. (கக)

த்ரமிடோபநிஷத்ஸங்கதி.—க்ருத்வா பாலாவஸ்தாம் ஹிதஞ்ஜநநா நாநேத்ருஷ்டேக்ஷேதயாஹரிணா த்ருஶா தாம்ஸ । ஸ்ரீரங்கேணாத்ய ஸாம்யக்ஸ்வஸ்யாயத்வி நாஶோ ஸ்யஸாரா ஸாதீநோவஸ்நிதிர்ப்ருதீயே॥

த்ராவிடோபநிஷத்தாத்பர்யரத்நாவலீ.— ஸ்ரீரங்கேஶஸ்யா நாஶி விஜ்ஞப்த்யநந்யஸ்வ ஷட்த்ருதா ஸெத்ர்யஸ்தாவித்வாத்யஸாநிஷ்டஸாவாப்தோஜ்ஜ்வலஸம்பந்நதம் ஸ்வாம் ஸ்வாக்ஷீர்ணாநாந்ந ஸ்வபாவம் । ஶக்தாஶக்தத்வாதாநாஜ்ஞஸ்த நாநாதயோவக்தியாதத்வர ஸ்வாக ஸ்வாதீஸ்வாநாம் விமஹத்ராவஶஸ்யதிவேத்யாஹயோநு ஶரணி: ॥

திருவாய்மொழி நூற்றந்தாதி.	}	கங்குல்பகலரதி கைவிஞ்சிமோகமுற அங்கதனைக்கண்டோராரங்கரைப்பார்தது இங்கிவள்பால் என்செயநீரெண்ணுகின்றதென்னுநிலைசேர்மாறன் அஞ்சொலுறநெஞ்சுவெள்ளையாம்.

ஆழ்வார் திருவடிகளே ஶரணம், ஜீயர்திருவடிகளே ஶரணம், எம்பெருமானார் திருவடிகளே ஶரணம்.

---

† கௌதமபுத்திரர்களாகிய ஏகதத்விதரென்பவர்கள் யாகஞ்செய்ய விரும்பி, சூட்சுமபுத்தியும் பெருங்கல்வியும்படைத்தத் திரிதரென்ற தமது உடன்பிறந்தவரோடு சேர்ந்து அதற்கு வேண்டிய யாகபசு முதலிய த்ரவியங்களைச் சம்பாதித்துக்கொண்டு காட்டுவழியாகச் செல்கையில், சிறிதுதூரம் முன்னாகப்போய்க்கொண்டிருந்த த்ரிதர் ஒரு செந்நாயைக்கண்டு அஞ்சியோடி கொடிபடர்ந்து வாய்மறைந்திருந்த கிணற்றினுள் விழுந்து கூவ, ஏகதத் விதர்கள், த்ரிதனில்லாமலே நாம் பசுக்களையோட்டிக்கொண்டுபோய் யாகத்தை நிறைவேற்றலாமென்ற துர்ப்புத்தி கொண்டு அவரை விட்டிட்டுப் போய்விட, பாழ்ங்கிணற்று வீழ்ந்த த்ரிதர் தமது மகிமையால் ஸரஸ்வதிநதி தீர்த்தத்திலிருந்த அந்தக் கிணற்றில்தானே தண்ணீர் முதலியவற்றைத் தமது பாவனையால் யாகத்திற்கு வேண்டிய நெய் முதலிய பொருள்களாகக்கொண்டு பெருங்குரலோடு மந்திரத்தை யுச்சரிக்க, ஸ்வர்க்கலோகத்தை யளாவிய அந்த மஹா ஶப்தத்தைக் கேட்டுத் தேவதைகள் நடுநடுங்கி ப்ருகஸ்பதியின் ஆலோசனையின்படி த்ரிதர்இருக்குமிடம்வந்து ஹவிர்ப்பாகம் பெற்று அந்த த்ரிதர்க்கு வரங்கொடுத்துச் சென்றனரென்பது மகாபாரதத்துச் சல்லியபருவத்துச் சரித்திரம்.

ஸ்ரீ:

மூன்றாந்திருவாய்மொழி—வெள்ளைச்சுரிசங்கு - ப்ரவேஶங்கள்.

ஆ—(வெள்ளைச்சுரிசங்கு.)—இப்பிராட்டியோடே பெரியபெருமாள் ஸம்ஶ்லேஷ ரஸத்தை யநுபவித்து, அந்த ஸம்ஶ்லேஷரஸமுள்ளடங்காதபடி பெருகினவாறே, அது ஸாத்மிக்கைக்காகவும் ஆஶ்ரிதப்ரதிகூல ஶத்ரு ஶமநார்த்தமாகவும் தென்திருப்பேரையிலே எழுந்தருளத் திருவுள்ளத்தே கோலியருளி, இவளுடைய ஸமாதாநார்த்தமாக இவளிடத்திலே அதிமாத்ர ஸம்மாநத்தைப் பண்ணியருளி "தென்திருப்பேரையிலேவேட்டைக்குப் போய்வருகிறோம்" என்றருளிச்செய்ய, இப்படி பதிஸம்மாநிதையான இவள் அவ்யுத்பந்ந விஶ்லேஷையாகையாலும், இவன் எழுந்தருளுகை இவளைக் காணுதொழிகைக்கு ஹேதுவென்னுமிடம் அறியாமையாலும் எழுந்தருள ஸம்வதித்து விஜயத்தை ஆஶாஸித்து திவ்யாயுதங்களைக் கொடுத்தருளி "[illegible]" என்னும் ப்ரக்ரியையாலே திருப்பல்லாண்டுபாடிக்கொண்டு திருவணுக்கன் திருவாசலளவும் பின்னே எழுந்தருளப் பெரியதிருவடி திருத்தோளிலே ஏறியருளி, ஒரு தாமரைத்தடாகம் மலர்ந்தாற்போலே யிருந்த திருக்கண்களாலே இவளைப் புரிந்து பார்த்தருளிஇவளாலே அநுஜ்ஞாதனுய்த் தென்†திருப்பேரையிலே யெழுந்தருள, இவள் அவனைக்காணாமையாலே அத்யந்தம் அவஸந்நையாய் அவனெழுந்தருளியிருந்த தென்திருப்பேரையிலே எழுந்தருள உத்யோகிக்க, இவளுடைய திருத்தாயாரும் தோழிமாரும் மற்றுமுள்ள பந்துக்களும் இவளை ப்ரதிபந்திக்க: "நான் போகை தவிரேன், தனியேபோனாள் என்னும் பழி உங்களுக்கு வாராமே நீங்களே என்னைத் தென்திருப்பேரையிலே ஈண்டக்கொண்டு போய்விடுங்கோள்" என்கிறாள்.

ஒ.—மூன்றாந்திருவாய்மொழியில், இப்படி அவஸந்நையானபிராட்டி, பெரியபெருமாளுடைய அஶரண்யஶரண்யதை தொடக்கமான கல்யாணகுணகணஸௌந்தர்யாதிகளைத் தாம் வாய்வெருவியும், அத்தைத்திருத்தாயார் அநுபாஷித்தும், ஆகஇப்படி ப்ராஸங்கிகமாக ப்ரவ்ருத்தமான திருநாமத்வநி செவிவழியேபுக, அதுஶிஶிரோபசாரமாகதரித்து, ஸர்வைஶ்வர்யஸம்பூர்ணனுய்க்கொண்டு தன்னுடைய விடாய்க்கீடாம்படி அணித்தாகத் தென்திருப்பேரையிலேவந்து வீற்றிருந்தருளின மகரநெடுங்குழைக்காதனுடைய ஸ்மிதவீக்ஷிதாதிகளிலே அபஹ்ருதசித்தையாகையாலே அவனையொழிய தரிக்கமாட்டாதே பதற, இவளை "நீ என்பட்டாய்?" என்று தாய்மாரும் தோழிமாரும் மற்றுமுள்ள உறவுமுறையார்களும்வினவ, அவர்களைக்குறித்து "நான் மகரநெடுங்குழைக்காதனிலே அபஹ்ருதசித்தையானேன், அவன் எழுந்தருளிஇருந்தருளின திருப்பேரையிலே புக்கல்லது தரிக்கமாட்டேன்; என்னை அங்கேகொண்டுபோய் விடுங்கோள்" என்ன, அவர்கள் "இது நம்முடைய ஸ்த்ரீத்வாதிகளுக்கு ஈடன்று" என்று நிஷேதிப்பாரும் பொடிவாருமாக, நீங்கள் கொடுபோய் விட்டிலீர்களாகில் நான்போய்ப்புகத் [illegible]ன என[illegible]ள். "விஶ்லேஷம் அவ்யுத்பந்நம் என்னும்படி ஸம்ஶ்லேஷம் பிறந்து ஸர்வகாமஸம்ருத்தியாய்க்கொண்டு இப்படி † அநேககாலஞ்சென்று இனிவிஶ்லேஷியாவிடில் பொறுக்கவொண்ணாத தஶையிலே, ஶத்ருஶமநாதிவ்யாஜத்தாலேயாகிலும் விஶ்லே

† திருப்பேரையிலே என்று வ்யாக்யாநங்களில்வரும் இடங்களிலெல்லாம் திருப்பேரெயிலில் என்று இருக்கலாமென்று தோன்றுகின்றது.

ஷிக்கவேணும்' என்று பார்த்து 'போய் வருகிறோம்' என்ன, தன்மௌக்த்யத்தாலே ஸம்ஶ்லேஷத்திலே ஒரு ப்ரகாரமிறே விஶ்லேஷம் என்று பார்த்து 'போகலாகாதோ' என்ன, அவனும் விஶ்லேஷிக்க, அநந்தரத்திலே இப்பிராட்டியும் பொறுக்கமாட்டாதே மிகவும் அவஸந்நையாய், * பேரெயில்சூழ்கடல் தென்னிலங்கை செற்றபிரான் தென் திருப்பேரையிலேவந்து வீற்றிருந்தருளினான்: நான் அங்கேபோவேன்' என்ன, தாய்மாரும் தோழிமாரும் 'அவன் தானே வரக் காணவேணும்' என்று நிஷேதிக்க, அது கேளாதே நானேபோனே னாகாமே நீங்களே என்னைத்தென்திருப்பேரையிலே கொண்டு போய் விடுங்கோள் ! என்கிறாள்'' என்றும் சொல்லுவர்.

ப.—மூன்றாந்திருவாய்மொழியில், கீழ் - பெரிய பெருமாளுடைய ஔதார்ய குணாநுஸந்தாநத்தாலே ஆஶ்வஸ்தரான இவர்க்கு பாஹ்யாநுபவாலாபம் அநுவர்த்திக்கையாலே அத்யந்தம் ஆர்த்தராய், அந்தவார்த்தி சமிக்கைக்கு அவன் ஆஸந்நமாகத் திருப்பேரையிலே எழுந்தருளியிருக்கிறபடியை யநுஸந்தித்து, ஆந்தராநுபாவ்யமான அவனுடைய ஆயுதாதி வைலக்ஷண்யத்தையும், அதிஶயிதமான பாத்வஸௌலப்யங்களையும், ஆகர்ஷகமான அவயவாதி ஶோபையையும், அநுபாவ்யமான ஆஶ்சர்யகுணாதி யோகத்தையும், அநிஷ்டவர்க்க நிரஸநத்தையும், ஔதார்யாதிஶயத்தையும், ப்ரபல ப்ரதிபந்தக பங்கத்தையும், ப்ரக்ருஷ்டஶக்தி வர்யகத்வத்தையும், ப்ரளயாபத்ஸகத்வத்தையும், ஆஶ்ரிதவிரோதி நிபர்ஹணத்தையும் சிந்தித்து, ஏவம்பூதனானவன் எழுந்தருளியிருக்கிற தேசத்திலே செல்லுகையிலுண்டான த்வராவிசேஷத்தைக்கண்ட பார்ஶ்வஸ்த்தரான ஸுஹ்ருத்துக்களுக்கும் பரிவார்க்கும் ப்ராப்திஜநித வ்யவஸாயத்தை யறிவித்த ப்ரகாரத்தை, நாயகனான மகரநெடுங்குழைக்காத னெழுந்தருளியிருக்கிற தென்திருப்பேரையிலே செல்லுகையிலே த்வரையை யுடைய நாயகியானவள், ''இது அநுரூபமன்று'' என்று விலக்கத்தேடுகிற தோழிமார் தாய்மார் முதலானாரைக்குறித்து, ''நான் அத்தேசத்திலே செல்லல் தவிரேன்; நீங்கள் கொடுபோய்விடுங்கோள்; இல்லையாகில் நானேபோவேன்'' என்று தன் துணிவை வெளியிட்ட பாசுரத்தாலே அருளிச்செய்கிறார்.

தி.—மூன்றாந்திருவாய்மொழியில், பெரியபெருமாளுடைய அஶரண்ய ஶரண்யத்வாதி கல்யாணகுணங்களையும் ஸௌந்தர்யாதி விக்ரஹகுணங்களையும் தான் வாய்வெருவியும், அத்தைத்திருத்தாயார் அநுபாஷித்தும் இப்படிப்ராஸங்கிகமாக ப்ரவ்ருத்தமான திருநாமத்தைக் கேட்டு இதுவே ஶிஶிரோபசாரமாக மோஹம் தெளிந்து அநந்தரம் ஸம்ஶ்லேஷாபேக்ஷை பிறந்து பெருமையாலே அவஸந்நையாய், தன்விடாய்க் கேடாம்படி அணித்தாகத் தென்திருப்பேரையிலேவந்து ஸர்வைஶ்வர்யத்தோடே வீற்றிருந்தருளின மகரநெடுங்குழைக்காதனுடைய ஸ்மிதவீக்ஷணாதிகளிலே அபஹ்ருதசித்தையாய் அவனையொழிய தரிக்கமாட்டாதேபதற, தோழிமாரும்தாய்மாரும் பந்துக்களும் இவள் தரையைக்கண்டு ''உனக்குஓடுகிறதென்?'' என்றுவினவ, '' என்நெஞ்சு மகரநெடுங்குழைக்காதன்பக்கலிலே அபஹ்ருதமாயிற்று; நானும் அங்கேபோய்ப்புக்கல்லது தரியேன்'' என்ன, அவர்களும் ''இது உன்வம்ஶத்துக்கும் உன்ஸ்த்ரீத்வத்துக்கும் போராது'' என்ன; ''வம்ஶத்தை நோக்கப்பார்த்திகோளாகில் நீங்களே கொடுபோய் விடுங்கோள், இல்லையாகில் நான்போகத்தவிரேன்'' என்று தனக்குப்பிறந்த துணிவைச் சொல்லுகிறாள். அதவா, கீழ் பட்ட க்லேஶம் அவ்யுத்பந்நம் என்னும்படி பெரிய பெருமா

ளோடே ஸம்ச்லேஷம் உக்மஸ்தகஸமாம்படி வ்ருத்தமாய், விச்லேஷிக்கில் தர்மி அழியுமளவானவாறே, ம்ருகயாதி வ்யாஜத்தாலே விச்லேஷிப்போம்" என்று பார்த்துப் பிரிவை ப்ரஸங்கிக்க, பிரிவு பேசுகிறானாக தன் மௌக்த்யத்தாலே "இதுவும் கலவியிலே ஒருவகையோ?" என்று அநுமதிபண்ணித் திருவனுக்கன் திருவாசலளவும் ஒருப் படுத்திவிட்டு, அநந்தரம், விரஹத்தைப் பொறுக்கமாட்டாதபடியாலே நடுக்கடலிலே புக்காரைப்போலே நோவுபடுகிறதசையிலே, தாய்மாரும் தோழிமாரும் பந்துக்களும் "உனக்குறுகிறதென்?" என்ன, "நாயகன் ம்ருகயாதிவ்யாஜத்தாலே தென்திருப்பேரை யிலே இருந்தான்; நானும் அங்கே புக்கல்லது தரியேன்" என்ன, "அவன்தானே வரக் காணுமதொழியப் பதறுகை இவ்வம்சத்துக்குப் போராதுகாண்" என்ன; ஆகில், நீங்கள் கொடுபோய்விடப் பாருங்கோள்: இல்லையாகில் நானே போகை தவிரேன்" என்று தனக் குப்பிறந்த துணிவைச் சொல்லுகிறாள் என்றுமாம். குணஜ்ஞானத்தாலே தரித்த நான் அவன்இருந்த ஊரிலேபோய்ப்புகவேணும் என்கிறாளாதல், ஸம்ச்லேஷம் வ்ருத்தமாய்ப் பின்பு பிரிவுவிளைந்து அவன் இருந்த தேசத்திலேபோய்ப் புக்கல்லது தரியேன் என்கிறா ளாதல். "ஆராமஞ்சூழ்ந்த அரங்கம்" என்று திருப்பதிகள் பெருமாளுக்குப் பகலிருக்கை யாகையாலே, "தென்திருப்பேரையிலே போனேன்" என்று அங்கேபோகத் தேடுகிறாள். இதில் சொல்லிற்றாய்விட்டது - விஷயப்ரவணனை சாஸ்த்ரத்தால் மீட்கவொண்ணா தாப்போலே, பகவத்விஷயத்திலே ப்ரவணரானாரை வைதிகராலும் மீட்கவொண்ணாத அதிப்ராவண்யத்தைச் சொல்லுகிறது.

ஈடு.— கீழ், "இட்டகாலிட்டகை" என்கிறபடியே இவள்மோஹித்துக்கிடக்க, இவளுக்கு முன்னே தோழிமாரும் தரைப்பட, திருத்தாயாரொருத்தியும் இவள்தசையை அநுஸந்தித்து அருகேயிருந்து கூப்பிட்டுப் போருமது தவிர்ந்து, இப்பெண்பிள்ளை தானே யெழுந்திருந்து கால்நடை தந்துபோமளவாய் விழுந்தது. அதுக்கடி: "பற்றிலார்பற்றநின் றானே" என்று பெரியபெருமாளுடைய அசரண்ய சரண்யத்வம் தொடக்கமான இவளுக் குப் பற்றாசான குணங்களையும் ஸௌந்தர்யாதி விக்ரஹகுணங்களையும் இவள் தான் வாய் வெருவியும் திருத்தாயார் சொல்லவும் கேட்டு அத்தாலே தரித்தாள். போனஉயிரை மீட்க வற்றாயிறே குணஸ்வபாவமிருப்பது. கீழ்ப்பிறந்த மோஹமும் தெளிந்து, விச்லேஷ வ்யஸந மும் அநுஸந்திக்க வல்லளாய், பின்பு, "அவனைக்கிட்டியல்லது நில்லேன்" என்னும் ஆற் றாமையும்பிறந்து, அது பெருமையாலே அவஸந்நையாக, இவள்விடாய்க்குடாம்படி அணித் தாகத் தென்திருப்பேரையிலே வீற்றிருந்த மகரநெடுங் குழைக்காதனுடைய அபேக்ஷிதாதி களிலே அபஹ்ருதசித்தையாய், "அவனிருந்தவிடத்தேறப்போகவேணும்" என்றஒருப் பட, பழையபடியே தோழிமாரும் தாய்மாரும் அவளைச்சூழப்போந்து "உனக்கு இத்தனை அதி மாத்ரப்ராவண்யமாகாது; நமக்கு இதுபழியாய்விளையும்" என்ன, "நீங்கள் சொல்லுகிறவற்றால்

வெள்ளைச்சுரிசங்குப்ரவேசம் : ஸங்க்ரஹஸங்கதி - இட்டகால்இத்யாதி. மோஹித்தவளுக் குத் தெளிவுபிறக்கைக்கு ஹேதுவேதென்ன - அதுக்கடிஇத்யாதி. குணங்கள் தரிப்பிக்குமோ? என்ன - போனஉயிரைஇத்யாதி. இவ்விடத்திலே - "உதஃவஸம்ஸ்ம்ருதஸஞ்ஜீவநீஸௌபாவ்ருத்தாநுகயாரோஹ" என்ற ஸஹஸ்ரநாமபாஷ்யவாக்யத்தை நினைப்பது.

விஸ்தரஸங்கதி - கீழ்ப்பிறந்தமோஹமும்இத்யாதி. ஒருப்பட - உத்யோகிக்க. "என்னெஞ் சொழிந்தார்" என்றதைப்பற்ற - அபஹ்ருதசித்தையானேன் என்றது. "என்னைக்காட்டு

ப்ரயோஜநமுண்டாகமாட்டாது, நான் அவன்பக்கலிலே அபஹ்ருதசித்தையானேன்; ஆன பின்பு, நானேபோனேனாகாமே நீங்கள் என்னோடேஉடன்பட்டு அங்கே கொடுபோய்ச் சேர்க்கப் பாருங்கோள்'' என்று தனக்குப் பிறந்த துணிவை அவர்களுக்கு அறிவித்துச்சொல்லுகிறதாயிருக்கிறது.

அங்ஙனன்றிக்கே, பிள்ளான் பணிக்கும்படி: - "('முகில்வண்ணனடியே - இவளணுகியடைந்தனள்' என்றதாகையாலே) "**ஸமாத்வாதஶதத்ராஹம்**" (ஸமாத்வாதஶதத்ராஹம்) என்கிறபடியே பெரியபெருமாளோடே சிரகாலம் உந்மஸ்தகரஸமான ஸம்ஶ்லேஷம் ப்ரவ்ருத்தமாய், பிரிந்துகூடாவிடில் இரண்டுதலைக்கும் அழிவுவருமளவாச்சுதாய்- இனியெல்லாவளவிலும் ஒருநீராகக் கலக்கிறது த்ர்மியிரண்டும் கூடியிறே; ஆகையாலே, பிரியாவிடில் த்ர்மிலோபபர்யந்தமாகப் புக,—இவ்வளவில்,நாயகனானஇவன் இரண்டுதலையும் ஜீவிக்கப்பார்ப்பானொருவனாகையாலே பிரிவை ப்ரஸங்கிக்க, இவளும் விஶ்லேஷத்தில் வாஸனையில்லாதாளொருத்தியாகையாலே 'கலவியிலேயோருவகையோ' என்று கொண்டு இவளும்அநுமதிபண்ண, அவனும்அவ்வேட்டைநிமித்தமாகப்புறப்பட, இவளும் திருவணுக்கன் திருவாசலிலளவும் ஒருப்படுத்திமீள,--எல்லாவளவிலும் பிரிவு தன் காரியம் செய்தன்றி நில்லாதிறே: அநந்தரம் இவள் நோவுபடப்புக,— இத்தைக்கண்டதோழிமாரும் தாய்மாரும் 'உனக்கோடுகிறதேன்? என்றுகேட்க, 'ஸ்ரீஜநகராஜன்திருமகள் காட்டிலே கூடப்போய் அவரிருந்தவிடம் நின்றவிடம் உலாவினவிடந்தோறும் கூடவிருந்துஅநுபவித்தாற்போலே, நானும் அவனிருந்தவிடத்தே போய்ப்புக்கல்லது நில்லேன்' என்ன, 'உனக்கு இது தலைமைக்குப்போராது: நீ சொல்லுகிறவை ‡வார்த்தை யன்று' என்ன, 'அவர்களை நீங்கள் நிரோதிக்கிறத்தால் பெற்றதேன்? நான்போகை தவிரேன்; நீங்களே என்னைக் கொடு போய்விடுங்கோள்' என்ன, அவர்கள் 'அதுக்கு நாங்கள் வழிப்படோம்' என்ன, 'ஆகில் நானேயாகிலும் போகை தவிரேனென்கிறாள்' என்று. "**ஸமாத்வாதஶதத்ராஹம்**" (ஸமாத்வாதஶதத்ராஹம்) இப்போது காதாசித்க த்ர்ஶநமுங்கூட அரிதாம்படியிருக்கிறநான், முன்பு சிரகாலம்அவரோடேயநுபவிக்கப்பெற்றேன்காண்! "**ராகவஸ்யநிவேஶநே**" (ராகவஸ்யநிவேஶநே) எங்கள்மாமனாருடைய மாளிகையிலே அவர் தண்ணீர்த்துரும்பறுத்துத் தர, நெடுங்காலம்அநுபவித்தேன். "**புஞ்ஜாநாமாநுஷாந்போகாந் ஸர்வகாமஸம்ருத்திநீ**" (புஞ்ஜாநாமாநுஷாந்போகாந் ஸர்வகாமஸம்ருத்திநீ) "**ஸர்வகா**

*மிநே'' என்றத்தைப்பற்ற - நீங்கள்என்னோடுடன்பட்டுஇத்யாதி. "அணுகியடைந்தனள்' என்றது- ஸாக்ஷாத்ஸம்ஶ்லேஷத்தை''என்று பிள்ளான் நிர்வாஹம்; அத்தையருளிச்செய்கிறார் - அங்ஙனன்றிக்கேஇத்யாதி· பிள்ளான் நிர்வாஹத்தில், ஸம்ஶ்லேஷமுண்டானால் ஒருதிருவாய்மொழியருளிச் செய்வர்; அது செய்யாமையாலே அஸ்வரஸம். உந்மஸ்தகரஸமான ஸம்ஶ்லேஷம் ப்ரவ்ருத்தமானால் பிரியவேண்டுவானென்? என்ன - பிரிந்துகூடாவிடில்இத்யாதி. ஏகதத்த்வமென்னலாம்படி கலந்துவைத்துப் பிரியக்கூடுமோ? என்ன - இனியெல்லாவளவிலும்இத்யாதி. பிரிவை ப்ரஸங்கித்தால் "வேண்டா' என்னவொண்ணாதோ? என்ன - இவளும்இத்யாதி. ஒருப்படுத்தி - அனுப்புவித்து. வழிவிட்டென்றபடி. இப்படி வழிவிட்டு மீண்டாளாகில் து:கப்படுவானென்? என்ன - எல்லாவளவிலும்இத்யாதி. நானேயாகிலும் போகைதவிரேன்என்றது . "சென்றே - சேர்வன்'' என்றத்தைப் பற்ற. கீழ் ப்ரஸ்துத ஶ்லோகத்துக் கர்த்தம் - ஸமாத்வாதஶ இத்யாதி. * காலாத்வநோரத்யந்தஸம்யோகே த்விதீயையாகையாலே தத்பலிதம் - தண்ணீர்த்துரும்பறுத்துஇத்யாதி. தண்ணீர்த்துரும்பு- ப்ரதிவந்யகம். "மாநுஷாந் போகாந் - புஞ்ஜாநாஸதீ, ஸர்வகாமஸம்ருத்திநீ*

‡ *'வார்த்தையென்' என்று பாடாந்தரம்.*

ஈநு'' (ஸர்வாங்காமாங்) என்கிறபடியே எல்லாம்அநுபவிக்கப்பெற்றேன். அப்படியுமன்றிறே இங்கு; ''ஸஹவொ நூவகஷ்யாணமுணா:'' (பஹவோங்ருபகல்யாண குணா:) என்று குணங்களிரட்டித்தவிடமிறே இது. ஆக இத்தால் சொல்லிற்றாயிற்று: நமக்கு ஶப்தாதிவிஷயங்களினின்றும் இந்த்ரியங்களை மீட்கவோண்ணாதாப்போலேயிறே இவரை ஭கவத்விஷயத்தினின்றும் மீட்கவோண்ணாதபடி. அது கர்மமடியாக வருகிறது: இது ஭க்வத்ப்ரஸாதமடியாக வருகிறது. திருத்தாயார் பேச்சாய்வருகிறவை, ஆழ்வார்தமக்குப் பிறந்த உபாவிசேஷம்: தலைமகளாய்ப் பேசுகிறதும் - இவர்க்குப் பிறந்ததோர் அவஸ்த்தா விசேஷம்; அதில், நிஷேதிக்கிற திருத்தாயார்முகத்தாற் சொல்லுகிறது - ஸ்வரூபமான ப்ராவண்யத்திலே உபாயம் சேரிற்செய்வதென் என்னுமதுக்குச் சொல்லுகிறது; பெண்பிள்ளை கருத்தாற் சொல்லுகிறது-உபாயம் அவனேயாகில் ப்ராவண்யம் ஸ்வரூபமாமத்தனையன்றோ? என்று. ஆக, இவ்விரண்டர்த்தத்தையும் இரண்டுமுகத்தாலே ஆழ்வார் தாம்அநுஸந்தித்த படியைச் சொல்லுகிறது. மோஹமுந்தெளிந்து தானேகூப்பிட வல்லளானஇதுவே - இத்திருவாய்மொழிக்கு ஏற்றம்.

முதற் பாட்டு.

வெள்ளைச்சுரிசங்கொடாழியேந்தித்தாமரைக்கண்ணனென்னெஞ்சினூடே, புள்ளைக்கடாகின்றவாற்றைக்காணீரென்சொல்லிச்சொல்லுகேன் அன்னைமீர்காள்! வெள்ளச்சுகமவன்வீற்றிருந்தவேதவொலியும் விழாவொலியும், பிள்ளைக்குழாவிளையாட்டொலியும் அறாத்†திருப்பேரெயில்சேர்வனே.

ஆ.—நிரதிஶயஔஜ்ஜ்வல்யபரிபூர்ண நிர்மல ஶாரத சந்த்ரமண்டலம் போலேயிருந்த ஸ்ரீபாஞ்சஜந்யத்தையும், நிரதிஶயதீப்தியுக்த ஸௌர்யமண்டலம்போலேயிருந்த திருவாழியையும் ஏந்தி, * பொன்மலையின்மீமிசைக் கார்முகில்போலே பெரிய திருவடித் திருத்தோளிலே ஏறியருளி, இலங்கொளிசேர் அரவிந்தம்போன்று நீண்ட கண்களையுடையனானவன் என்னெஞ்சினூடே சாரிகை திரிந்தருளுகிறபடி நீங்கள் காண்

ஈஹவு'' ஸமஸ்த கல்யாணகுணாநுபவத்தாலும் பூர்ணையானேன்என்றபடி. 'ஸவபூாநுகாரோநு' என்றது - பரத்வத்திலேயன்றோ, இங்குண்டோ? என்ன - அப்படியும்இத்யாதி. இங்கு - ராமாவதாரத்திலென்றபடி. ப்ரமாணமேதென்ன - ஬ஹவஇத்யாதி. இத்திருவாய்மொழிக்கு ஸ்வாபதேஶம்- ஆகஇத்தால்இத்யாதி. இவ்வுபயத்துக்கும் ஹேதுவேதென்ன - அது கர்மம்இத்யாதி. திருத்தாயாரான அவஸ்த்தைக்கும் தலைமகளான அவஸ்த்தைக்கும் பேதம் சொல்லுவதாக அதுதன்னை யநுவதிக்கிறார் - திருத்தாயார்இத்யாதி. 'அவஸ்த்தாவிசேஷம்' என்றவநந்தரம் 'ஆயிருக்க, நிஷேதிக்கிறதும் ப்ரவர்த்திக்கிறதும் ஒருவர்க்கே கூடுமோ? என்ன' என்று அத்யாஹரிப்பது. அந்யோந்ய வைஷம்ய கதநபூர்வகமாக உத்தரம் அருளிச்செய்கிறார் - அதில்இத்யாதிவாக்ய த்வயத்தாலே. முந்தினயோஜனையில் ஏழில்திருவாய்மொழியைப்பற்ற இதுக்கு வாசி ஏதென்ன - மோஹமும்இத்யாதி.

† 9-ம் பாசுரத்தில் 'தென்திருப்பேரெயின்மாநகரே' என வருவதனையும், அதன் வியாக்கியானங்களையும் 5, 6, 7-பாசுரங்களில் 'பேரெயிற்கே' எனவருவதனையும் ஊன்றிப்பார்த்தால், நம்மாழ்வார் ''திருப்பேரெயில்'' என்றே இந்தத் திவ்யதேசத்தைக்கொண்டு வழங்கினாரென்பது, தெற்றெனவிளங்குவதால், 'திருப்பேரெயில்' என்றே பதிப்பிக்கலாயிற்று; இச்சொல் பிற்காலத்தில் 'திருப்பேரை'என மருவி வழங்கலாயிற்றென அறிக.

கிறிலிகோள்: இன்னபடி என்று எனக்குச்சொல்ல நிலமாகிறதில்லை. ஆதலால், அவனை ஒருக்ஷணம் காணுதொழியில் தரிக்கமாட்டேன்; வேதகோஷத்தாலும் மஹோத்ஸவ கோஷத்தாலும் க்ரீடமாநரான பாலர்களுடைய பரமபுருஷகுணஸ்துதிகோஷத்தாலும் பரிபூர்ணமான திருப்பேரையிலே,மஹாஸம்ச்லேஷ நிரவதிக ஸுகமஹோததிநிமக்நனாய்ப் பரிபூர்ணனாய்க்கொண்டிருக்கிற இருப்பைக் காணவேணும்; நீங்கள் என்னைக்கொண்டு போய்விடீர்களாகில் நானேயாகிலும் போவேனென்று, தன்னை ப்ரதிபந்திக்கிற தாயா ரையுந் தோழிமாரையுங் குறித்துச்சொல்லுகிறாள்.

ஒ.—முதற்பாட்டில், இப்பிராட்டி வாசாமகோசரமாம்படி தனக்கு வர்த்திக் கிற வ்யஸநத்தாலே தென்திருப்பேரையிலே போகவேணுமென்று தனக்குப் பிறந்த உபாயத்தைவினவுகிற தாய்மார்க்குச் சொல்லுகிறாள்.

[சுரிசங்கு] - சுரிந்திருக்கிற சங்கு. [ஊடே] - உள்ளே. கடாவுகை - நடத் துகை. [காணீர்] - காண்கிறிலீர். [என்சொல்லிச் சொல்லுகேன் அன்னைமீர்!] - "உனக் கோடுகிற உபாயத்தை நாங்கள் அறிகிறிலோம், நீயேசொல்லிக்காண்" என்று தாய்மார் கேட்க, நான்படுகிற வ்யஸநஞ்சொல்லுகைக்குப் பாசுரங்காண்கிறிலேன் என்கிறாள். [வெள்ளச்சுகமென்று தொடங்கி] - நீங்களே என்னைக்கொடுபோய் விட்டிலீகோளாகில், தன்னை விச்லேஷித்தபின்பும் ஸம்ச்லேஷஜநிதப்ரீதி மாறாதே நிரதிசயஸுகத்தோடே அவன் வீற்றிருப்பதும்செய்து வேதத்வநியும் திருநாளில் வாத்யகீதாதிகோலாஹலமும் "ப்ராஸாதவாஸி க்ரீடநா:" என்னும் கணக்காலே அவனுடைய ஸௌந்தர்யாதிகளாலே ஜிதரான பிள்ளைக்குழாங்களுடைய விளையாடுகிறகோஷமும் நிரந்தரமாகச்செல்லுகிற தென்திருப்பேரையிலே நான் போய்ப் புகுவன்.

ப.—முதற்பாட்டில், அநுபாவ்யமான ஆயுதங்களோடும் அவயவங்களோ டும் தன்னெஞ்சிலே பெரியதிருவடியை நடத்தி ப்ரகாசிக்கிற ஆகாரத்தாலே ஈடுபட்டு, அவனிருந்த தென்திருப்பேரையிலே செல்லுகையிலுண்டான துணிவைத் தாயாரைக் குறித்துச் சொல்லுகிறாள்.

அன்னைமீர்காள்-(வாசாமகோசரமான அகவாயில் விகாரம்அறியாதே,)"பெற்ற வர்களிறே நாம்" என்றே விலக்கத்தேடுகிறவர்களே! (நாணைசைப்பட்டபடியே), வெள்ளை - வெளுத்தநிறத்தையும், சுரி - சுரியையுமுடைத்தான, சங்கொடு - ஸ்ரீபாஞ்சஜந்யத் தோடே, ஆழி- திருவாழியையும், ஏந்தி-, தாமரைக்கண்ணன் - (நான் தளரும்படி அநந் யார்ஹையாக்கின) தாமரைக்கண்ணையுடையவன், (தானும்தன்விபூதியும் புகுந்தாலும் இடமுடைத்தான), என்-, நெஞ்சின்-, ஊடே - உள்ளே, புள்ளை - பெரியதிருவடியை, கடாகின்ற - (தன் அபிநிவேசாநுரூபமாக) நடத்துகிற, ஆற்றை-ப்ரகாரத்தை, காணீர்- நீங்களறிகிறிலீகோள்! (இவ்வநுபவத்துக்கு), என்சொல்லி - என்னபாசுரமிட்டு, சொல்லுகேன் - நான் சொல்லுவேன்? (இவ்வளவில்), வெள்ளச்சுகம் - ஸுகவதநுபவத் தாலே யபரிமித ஸுகார்ணவத்தை யுடைத்தாய், அவன் - என்நெஞ்சுக்குள்ளே ப்ர காசிக்கிறவன், வீறு - தன்மேன்மைதோன்ற, இருந்த - இருக்குமிடமாய், வேத வொலியும்- அந்த ஆஸநசோபையை யநுபவிக்கிறவர்களுடைய வேதகோஷமும், விழா- நிரந்தரோத்ஸவத்தாலுண்டான, ஒலியும் - வாத்யாதிகோஷமும், "ப்ராஸாதவாஸி க்ரீ டநா:" என்கிறபடியே அவனுடைய குணசேஷ்டிதாதிகளைப்போற்றிட்டுக்கொண்டு, பிள்ளைக்குழா - பிள்ளைகள் திரள், விளையாடு - விளையாடும், ஒலியும் - கோஷமும், அறா-

அவிச்சிந்நமாய் நடக்கும், திருப்பேரையில் - திருப்பேரெயிலே, சான், சேர்வன் - சேருவன்.

இ.—முதற்பாட்டில், தனக்கோடுகிற வ்யஸநத்தாலே, "தென்திருப்பேரையிலே போகவேணும்" என்று பிறந்த துணிவை வினவுகிற தாய்மார்க்குச் சொல்லுகிறாள்.

[வெள்ளைச்சுரிசங்கு இத்யாதி] - ஶ்யாமமானவடிவுக்கு பரபாகமான வெண்மையையும் சுரியையுமுடைய ஸ்ரீபாஞ்சஜந்யம், பற்றைக் கைக்கு ஆபரணமான திருவாழி; இரண்டாழ்வார்களிலும் வந்து அலைபெறுகிறகண்கள். "சங்கு சக்கரமென்று கைகூப்பும் தாமரைக்கண்ணென்றேதளரும்" என்று கீழ் வாஸிதமானது ப்ரகாசிக்கிறபடி. "ஜிதந்தே" என்னப்பண்ணுகைக்குத் திருக்கண்களோடு திவ்யாயுதங்களோடு வாசி இல்லை. [என்நெஞ்சினூடே] - நாங்கள் காண்கிறிலோமீ என்ன; உட்கண்விழியாத உங்களுக்குத் தெரியுமோ? [புள்ளைக்கடாகின்றவாற்றை] - பெரியதிருவடியை நடத்துகிறபடியை. இவளுடைய த்வரையைக்கண்டு பெரியதிருவடி பிற்காலிக்கப்பிற்காலிக்க, வடிம்பாலே தாக்கிக்கொண்டுபோனபடி. கலவியாலும் பிரிவாலுமாக நெஞ்சினூடு என்னும்படியாக ஆயிற்று, நெஞ்சு இடம்பெற்றபடி. பரமபதத்தில் அழகு சென்றேறுமா போலே ஆயிற்று, நெஞ்சிலே அழகுசென்றேறுகிறபடி. [காணீர்] - தன் நெஞ்சில் ப்ரகாஶம் பாஹ்யேந்த்ரியங்களுக்கும் விஷயமாய் என்றிருக்கிறாள். [காணீர்] - காண்கிறிலீர். கண்ட நீ சொல்லிக்காண் என்ன, [என்சொல்லிச் சொல்லுகேன்] - என்னுடைய அநுபவத்துக்கு என்னபாசுரத்தைச்சொல்லி நான் உங்களுக்குச் சொல்லுவது? இவ்வநுபவத்தில் வ்யுத்பத்தி இல்லாத உங்களுக்கு எத்தைச்சொல்லுவது? [அன்னைமீர்காள்] - இவ்வநுபவத்துக்கு தூரஸ்தைகளாய் ஹிதம்சொல்லிமீட்கிற உங்களுக்கு நான் சொல்லுவது என்? ஸமானஹ்ருதயர்க்குச்சொல்லுவதை உங்களுக்குச் சொல்லவோ? ஒருஸம்பந்தம் அமையுமோ சொல்லுகைக்கு? எங்களுக்குச்சொல்லவொண்ணாதாகில் நீ செய்யப்பார்த்ததென்? என்ன; அவன் இருந்ததேசத்திலே நான் போய்ப்புகப்பார்த்தேன் என்கிறாள்: [வெள்ளச்சுகமவன்] - ஸுகவெள்ளத்தை உடையவன்; விஶ்லேஷதஶையிலும் ஸம்ஶ்லேஷ ஜநிதமான நிரதிஶயஸுகம் மாறாதவன். பிரிந்துபோகிறபோது, விஶ்லேஷதஶையிலும் ஸம்ஶ்லேஷதஶையிலும் ப்ரீதிமாறாதபடி ஆயிற்று விளைநீர் அடைத்துக்கொண்டுபோவது. [வீற்றிருந்து] - இத்தலையைத் தோற்பித்த வற்றத்தாலேவந்த வேறுபாடு தோற்ற ஓலக்கம் கொடுத்திருக்கை. வீற்றிருந்த திருப்பேரை என்று அந்வயம். [வேதவொலியும்] - இவளைத் தனக்காக்குகையாலே "கர்த்தவ்ய தந்த்ரமில்லை" என்று பழம்புணர்ப்புக் கேளாநின்றாள். [விழாவொலியும்] - திருநாளில் வாத்யகீதாதிகோலாஹலமும். [பிள்ளைக்குழா விளையாட்டொலியும்] - பிள்ளைகள்திரண்டு ஸௌந்தர்யாதிகளாலே ஜிதராய் விளையாடுகிற கோஷமும். இற்றைப்புறப்பாடே! உலாவினபடியே! முறுவலும் தோளும் தோள்மாலையுமே! என்றுகொண்டு விளையாடுகை. "பாலா அபி க்ரீடமாநா க்ருஹத்வாரேஷு ஸங்கஶ: । ராமாபிஷேகஸம்யுக்தாஶ்சக்ருரேவமித: கதா:" என்னக்கடவதிறே. இவை நிரந்தரமாகச் செல்லுகிற தேசம். நிஷேதிக்கிற நீங்கள் இருந்த தேசத்தில்நின்றும், பகவத்ப்ராவண்யமே யாத்ரையாய்ச்செல்லுகிற தேசத்திலே போய்ப் புகக்கடவேன்,

ஈடு.—முதற்பாட்டு. இப்பிராட்டி வாசாமகோசரமாம்படி தனக்குவர்த்திக்கிற வ்யஸநத்தாலே, தென்திருப்பேரையிலே போகவேணுமென்று தனக்குப் பிறந்த உபையை, வினவுகிற திருத்தாய்மார்க்குச் சொல்லுகிறாள்.

[வெள்ளைச்சுரிசங்கொடாழியேந்தி] - "தவளவொண்சங்குசக்கரம்" என்றும், "கூராராழிவெண்சங்கு" என்றும், "சங்குசக்கரங்களென்று கைகூப்பும்" என்றும் கையுந் திருவாழியுமான அழகு கைவிடாதே இவரை யநுவர்த்திக்கிறபடி. முகில்வண்ணனிறே: அந்நிறத்துக்குப் பரபாகமான வெளுப்பையும், சுரியையுமுடைத்தான ஸ்ரீபாஞ்சஜந்யத்தையும், அங்ஙனமொருவிசேஷணமிட்டுச் சொல்லவேண்டாதபடியான அழகையுடைத்தான திருவாழியையும் ஏந்தி. [தாமரைக்கண்ணன்] - "தாமரைக்கண்ணனென்றேதளரும்" என்றது பின்னாட்டுகிறபடி. திருமேனிக்கு திவ்யாயுதங்கள் ப்ரகாசகமாயிருக்குமாபோலே, ஆத்மகுணங்களுக்கு நோக்கு ப்ரகாசகமாயிருக்கிறபடியும். அகவாயில் தண்ணளியெல்லாம் கண்வழியேயிறே தோற்றுவது. ப்ரதிகூலர்க்கு திவ்யாயுதங்களோடொக்கத் திருக்கண்களும் விரோதியாய்த்தோற்றுமாபோலேயிறே, அநுகூலர்க்குத் திருக்கண்களோபாதி திவ்யாயுதங்களும் அழகுக்கு உடலாய்த் தோற்றும்படி. திருக்கண்களோடே திவ்யாயுதங்களையும் திவ்யாயுதங்களோடே திருக்கண்களையும் சேர்த்தநுபவிப்பர்கள். ஆயுதங்களோடே திருக்கண்களைக் கூட்டுகிறது தோற்பித்தபடிக்கு; "ஜிதந்தே"(ஜிதந்தே)என்னப்பண்ணுமிறே. கண்களோடு திவ்யாயுதங்களைக் கூட்டுகிறது அழகுக்கு. இவ்விடத்தேநிலாத்துக்குறிபகவர்வார்த்தையை யருளிச்செய்வர் சீயர். கைக்கு ஆழ்வார்கள் ஆபரணமாயிருக்குமா

முதற்பாட்டு - வெள்ளை இத்யாதி. "என்சொல்லிச்சொல்லுகேன், திருப்பேரெயில்சேர்வன்நான், அன்னைமீர்காள்!" என்கிறபதங்களைக் கடாக்ஷித்தவதாரிகை - இப்பிராட்டி இத்யாதி.

திருக்கண்களுக்குமுன்னே திவ்யாயுதங்களைச் சொல்லுவானென்? என்ன; போக்யதையாலேயென்கிறார் - தவளம் இத்யாதி. ஸப்தார்த்தம் - முகில்வண்ணன் இத்யாதி. முகில்வண்ணனிறே என்றது - "நிகரில்முகில்வண்ணன்" என்றத்தைப்பற்ற; "வெள்ளை" என்று சங்குக்குவிசேஷணமிட்டுச் சொன்னாற்போலே சொல்லாதே, வெறுமனே "ஆழி" என்றதுக்குபாவம் - அங்ஙனம் இத்யாதி. இதுக்குஅநந்தரம் "தாமரைக்கண்" என்றதுக்குபாவம் - தாமரைக்கண்என்றே இத்யாதி. திவ்யாயுதங்களோடே திருக்கண்களைக்கூட்டிச்சொன்னதுக்கு பாவத்வயம் – திருமேனிக்கு இத்யாதியாலும், ப்ரதிகூலர்க்கு இத்யாதியாலும். அதாவது - ப்ரகாஶகத்வாகாரமும், ஆகர்ஷகத்வாகாரமும் இரண்டுக்கும் ஒத்திருக்கையாலே கூட்டிச்சொல்லுகிறாரென்று க்ரமேண இரண்டு வாக்யத்துக்கும் பாவம். அப்படி ப்ரகாஶகமோ? என்ன – அகவாயில் இத்யாதி. ப்ரதிகூலர்க்குத் திருக்கண்கள் விரோதியாய்த் தோற்றுமென்னுமதுக்கு, "துச்சோதனையழலவிழித்தானே" என்றது ப்ரமாணம். இந்தப்ரஸங்கத்திலே, - திவ்யாயுதங்களோடே திவ்யாவயவங்களைச்சேர்த்தும் திவ்யாவயவங்களோடே திவ்யாயுதங்களைச்சேர்த்தும் ஆழ்வார்கள் அநுபவிப்பர்களென்கிறார்-திருக்கண்களோடே இத்யாதி. இவ்வுபயத்துக்கும் ஹேதுவேதென்ன – ஆயுதங்களோடே இத்யாதி வாக்யத்ரயத்தாலே. ஆயுதம்போலே திருக்கண் தோற்பிக்குமோ? என்ன – ஜிதந்தே இத்யாதி. திருக்கண்களோடே திவ்யாயுதங்களைச்சேர்த்ததுக்கு, "செய்யகண்ணு உருவச்செஞ்சுடராழிவல்லானே" என்றத்தைக் கண்டுகொள்வது. திவ்யாயுத ப்ரஸங்கத்திலே, த்விபுஜனோ சதுர்ப்புஜனோ ஸர்வேஶ்வரனென்று சங்கைவர - இவ்விடத்தே இத்யாதி. அதாவது:—நிலாத்துக்குறிபகவர் ப்ரஶ்நத்துக்கு பட்டர் பரிஹரித்த வார்த்தையை யருளிச்செய்வரென்றபடி. 'பயிலும்சுடரொளி' இரண்டாம்பாட்டிலே இந்த ஐதிஹ்யங் கண்டுகொள்வது. ஒப்பனையழகாலும் திவ்யாயுதங்களுக்கும் திருக்கண்களுக்கும் சேர்த்தியுண்டென்று மூன்றாம்பாவம்-கைக்கு இத்யாதி. "திவ்யாயுதங்களாபரணம்" என்னுமதுக்கு ப்ரமாணம்-

போலேயாயிற்று, முகத்துக்குத் திருக்கண்கள் ஆபரணமாயிருக்கும்படியும். "திருக்கண்டேன் பொன்மேனிகண்டேன் திகழும் அருக்கனணி நிறமுங்கண்டேன் - செருக்கிளரும் பொன்னாழிகண்டேன், புரிசங்கங்கைக்கண்டேன், என்னாழிவண்ணனன்பால்இன்று" என்று வடிவழகோபாதி திவ்யாயுதங்களும் ஆபரணமாய் அழகியதாயிறேயிருப்பது. ஆழ்வார்கள் தான் அவனைக் கைசெய்திருக்கையாலே ஆபரணகோடியாயிற்றே இருப்பது. கைசெய்கையென்று அலங்கரிக்கைக்குப்பேர். [என்னெஞ்சினூடே]-தங்கள் நெஞ்சிலில்லாமையாலே "இது கூடாது" என்றிருப்பர்களிறே. [என்னெஞ்சினூடேபுள்ளைக்கடாகின்ற] - இவர்க்கு மயர்வறமதிநலமருளி "நெஞ்சமேநீணகர்" என்னும்படியிறே திருத்திற்று; ஒரு த்ரிபாத்விபூதியிலும் இடமுடைத்தாயிருக்கை. திருவடி திருத்தோளிலேயேறி அங்குள்ளார்க்குஉஜ்ஜீவநமாகச் சாரிகைவந்துகாட்டுமாபோலே, இவர் நெஞ்சினுள்ளே ஸஞ்சாரமாக அழகுசெண்டேறுகிறபடி. [நெஞ்சினூடே] - "அகவாயிலுள்ளது கண்ணுக்குத்தெரியாதோ?" என்றிருக்கிறார்களாயிற்றுஇவர்கள். ("நிர்குண: பரமாத்மாஸௌ தேஹம் வ்யாப்ய திஷ்டதி" (நிர்க்குண:பரமாத்மாஸௌதேஹம்தேவ்யாப்யதிஷ்டடதி.) என்னுமாபோலே.) "நெஞ்சிலில்லையாகில் நானுமில்லையென்றுநினைத்திருக்கலாயிற்றுக்கிடீர்" என்றிருக்கிறாள் இவள். (ஒருவாசத்தடத்தில்) ஹம்ஸசக்ரவாகங்கள்போலே ஆழ்வார்களும், காடு பட அலர்ந்த தாமரைபோலேயிருக்கிற திவ்யாவயவங்களும், அத்தடாகத்தில்நீரும்இலையும்போலே யிருக்கிற திருமேனியுமாய், அத்தைக் கினிய ஒருமேரு வஹித்தாற்போலே யிருக்கிற பெரிய திருவடியோடேகூட இவர்திருவுள்ளத்தே உலாவுகிறபடி. இப்படியேயிறே அநுகூலரோடு பரிமாறும்படி. நஞ்சீயர் கோயிலுக்கெழுந்தருளாநிற்க, வழியிலேபிள்ளானைக்கண்டு "ஈச்வரனுக்கு ஸ்வரூபவ்யாப்தியேயோ, விக்ரஹவ்யாப்தியும் உண்டோ?" என்று கேட்க, பாஷ்யகாரர்†தோற்றவருளிச்செய்துகோண்டுபோந்ததுஸ்வரூபவ்யாப்தியாயிருக்கும்; ஆகிலும், எம்பார் ஒருநாள்'உபாஸகாநுக்ரஹார்த்தமாக ஆச்ரிதருடைய நெஞ்சிலே விக்ரஹத்தோடே

"திருக்கண்டேன்"இத்யாதி. பாட்டுக்குச்சமேனார்த்தம் - பெரியபிராட்டியாரைக்கண்டேன், பொன் போலே ஸ்ப்ருஹணீயமான திருமேனியைக்கண்டேன், விளங்குகிற பாலார்க்கனைப்போலே இருவருடையவொளியும் தன்னிலேகலசி விளங்காநின்றுள்ள அழகியநிறத்தையுங்கண்டேன், யுத்தோன்முகமாய்க் கிளருகிற பொற்சென்ற நிறத்தையுடைய திருவாழியைக் கண்டேன். சுற்றும் முற்றும் சீறிப் பார்க்கிற ஸ்ரீபாஞ்சஜந்யத்தையுங் கண்டேன். புரிசங்கம் - கோஷத்வத்தாலே ப்ரஸித்தமானத்தையுடைய சங்கென்றுமாம். என்னுடைய, கடல்போலே ஸ்ரமஹரமான வடிவையுடையவன்பக்கலிலே ஆழ்வார்களிருவரும் காட்டக்கண்ட இன்று. காடு - ஆழ்வார்கள்தான் இத்யாதி. கைசெய்கை-அலங்கரிக்கையும், ஸஹாயஞ் செய்கையும், யுத்தம்பண்ணுகையும். "என்" என்றதுக்கு பாவம்-தங்கள் நெஞ்சில் இத்யாதி. அணுவானநெஞ்சுக்குஉள்ளுண்டோ? என்ன - இவர்க்கு இத்யாதி. "நீணகர்" என்றதுக்கர்த்தம் - ஒருத்ரிபாத்விபூதி இத்யாதி. "கடாகின்ற" என்றதுக்குபாவம் - திருவடி இத்யாதி. சாரிகை - வையாளி. அழகுசெண்டேறுகை - விளையாட்டுச்சாரிகைவருகை: அழகுகாட்டிக் கொண்டு புறப்படுகையுமாம். "நெஞ்சு" 'என்றதுக்கு பாவமாதல், "நெஞ்சினூடே" என்ற அவதாரணத்துக்கு பாவமாதல் - அகவாயில் இத்யாதி வாக்யத்வயம். அகவாயிலுள்ளது மேலே தோன்றுமென்றதுக்கு ப்ரமாணம் - 'நிர்க்குண: பரமாத்மாஸௌ தேஹந்தே வ்யாப்யதிஷ்டடதி' என்கிறவசனம். இவையெல்லாங்கூட்டி பாவம் - ஹம்ஸ இத்யாதி. அத்தை - தடாகத்தை, கினிய - கபளீகரிக்க. எல்லாருமிருக்க இவருடைய ஹ்ருதயத்திலே செய்வானேன்? என்ன - இப்படியேயிறே இத்யாதி. "நெஞ்சினூடேபுள்ளைக்கடாகின்ற" என்றப்ரஸங்கத்திலே, அநுகூலரோடே ஸவிக்ரஹனாய்ப்பரிமாறுமென்றதுக்குஆப்தஸம்வாதம் - நஞ்சீயர் இத்யாதி. தோற்றவருளிச்செய்து - வ்யாக்யாநம்செய்து.

† *தோற்றச்செய்து என்று அடையவளைந்தானரும்பதத்துக்குப் பாடம்.*

வ்யாபித்திருக்கும்'என்றுஅருளிச்செய்யக்கேட்டேன்'' என்று பணித்தான்; ''குஹாயாம்'' (குஹாயாம்),''கஹ்வரேஷ்டம்புராணம்''(கஹ்வரேஷ்ட்டம்புராணம்) ''அரவத்தமளி யினோடு மழகிய பாற்கடலோடும் அரவிந்தப் பாவையுந்தானும்அகம்படி வந்துபுகுந்து'' என்றும், 'யேஷாமிந்தீவரஸ்யாமோ ஹ்ருதயே ஸுப்ரதிஷ்டித:' (யேஷாமிந்தீவரஸ்யா மோஹ்ருதயேஸுப்ரதிஷ்ட்டிதஃ) என்றும், 'என்நேஞ்சினூடே புள்ளைக்கடாகின்ற' என்றுஞ் சொல்லுகிறபடியே. ஶுபாஶ்ரயப்ரகரணங்களிலும் ''தஸ்யைஷ ஆத்மா விவ்ருணுதே தநூம் ஸ்வாம்'' (தஸ்யைஷ ஆத்மாவிவ்ருணுதேதநூம்ஸ்வாம்) என்கிறபடியே அவ்வடிவேயாயிற்று த்யேயமாகச் சோல்லுகிறது; பின்பு ''ஏஷ ஸர்வஸ்வபூத:'' (ஏஷஸர்வஸ்வபூதஸ்து) என்று கோடுப்பதும் அவ்வடிவேயாயிற்று. புறம்புள்ளார் சோன்னபடி சோல்லுகிறார்கள்; நம்ஆழ்வார்கள் போனவழி இதுக்குமேற்படவில்லை: 'இதுக்குமுள்ளே ஒன்றுண்டு'! என்று சோல்லுகிறவர்கள் - ஸ்வரூபஸத்பாவஞ் சோல்லுகிறார்களித்தனை; விக்ரஹமில்லையேன்றன்று. [புள்ளைக்கடாகின்ற] - ''அகவாயில் நின்றுசுழிக்குமத்தனையோ?'' என்று அவன் த்வரித்து வடிம்பிட்டுத்தாக்க ''ஓம் காண்! நீயறிந்தாயோ?'' என்று ப்ரேரித்து மீளாநிற்கும்; ''தீமத:'' (தீமதஃ) என்கிறபடியே, பக்ஷபாதத்தோடே சேர்க்கையிலேயிறே அவனுக்கும் பணி. [கடாகின்ற] - பூதமாய் விஸ்மரிக்கிறிகோளன்று, ஭விஷ்யமாய் உபதேசிக்கிறதன்று, வர்த்தமாநத்துக்கு உபதேசம் வேணுமோ? [காணீர்] -

---

விக்ரஹவ்யாப்திக்கு ப்ரமாணங்கள் - அரவத்தமளி இத்யாதி. 'சொல்லுகிறபடியே' என்னுமளவும் - பிள்ளான்வார்த்தை. பெரியாழ்வார் திருமொழி அஞ்சாம்பத்து இரண்டாந்திருமொழி. 'அரவத்தமளியினோடும்' - திருவநந்தாழ்வானுகிற படுக்கையோடும்; அமளி - படுக்கை; அத்து - சாரியைச்சொல்; 'அழகிய பாற்கடலோடும்' - அழகிய திருப்பாற்கடலோடும்; 'அரவிந்தப்பாவையும்' - பிராட்டியும்; 'தானும்' - உபயவிபூதிவிசிஷ்டனான தானும்; 'அகம்படிவந்துபுகுந்து' அந்தரங்கரான அடியாரோடே வந்து புகுந்தென்றபடி. அகம்படி - அந்தரங்கரான அடியார். ''லாபஸ்தேஷாம் ஜயஸ்தேஷாம் குதஸ்தேஷாம் பராபவ: | யேஷாமிந்தீவர'' இத்யாதி. விக்ரஹம் கால்பநிகமென்கிறார்களே என்ன - பரமார்த்தமென்கைக்கு உபபத்தி யருளிச்செய்கிறார் - ஶுபாஶ்ரய இத்யாதிவாக்யத்வயத்தாலே. ஆக, இத்தால் - உபாஸநவேளையிலே விக்ரஹத்தை த்யேயமாகச் சொல்லுகையாலும், பலவேளையிலுங் கொடுப்பதும் * ஸூராபஸ்யந்திக்குவிஷயமும் விக்ரஹமேயாகையாலும், விக்ரஹம் கால்பநிகமன்றென்றபடி. ஆனால்,மாயிகள்இதுக்குஇசையவில்லையே என்ன;நமக்குஅவர்களைக்கொண்டு கார்யமென் ? நம்ஆழ்வார்கள் சொன்னதே நமக்கு விஶ்வஸநீயமென்கிறார் - புறம்புள்ளார் இத்யாதி வாக்யத்வயத்தாலே. ''இவ்வுபபத்திகளெல்லாம் '.தஸ்யா உபாஸ்யாயா தேவதாயா ரூபமேவ சோபவர்ண்யதே''இத்யாதியாலே த்ரமிடபாஷ்யகாரராலுமுக்தங்கள்''என்றுஅருளிச்செய்வர். ஆனால், '.தஸ்ய தாவதேவ சிரம்'' இத்யாதியாலே - விக்ரஹத்தைவிட்டு அவ்வருகேபோவானென்கிறதே என்ன - இதுக்குமுள்ளே இத்யாதி. இதுக்கும் - விக்ரஹத்துக்கும். ''கடாகின்ற'' என்று - திருவடியைஅசேதநமாகச் சொல்லுவானென் ? என்ன - அகவாயில் இத்யாதி. 'வடிம்பிட்டு - ப்ரேரித்து, தாக்க - ஓங்காண் நீயறிந்தாயோவென்று மீளாநிற்கும்' என்றந்வயிப்பது. வடிம்பிட்டு-தணிபோட்டு. அப்படி ஈஶ்வரனைப்பற்றவும் இவர்க்கு ரக்ஷணப்பாரிப்புண்டோ? என்ன - தீமத: இத்யாதி.''ராமஸ்ய வ்யவஸாயஜ்ஞோ லக்ஷ்மணஸ்ய ச தீமத: | நாத்யர்த்தம் க்ஷுபிதே தேவீ கங்கேவ ஜலதாகமே'' இதி ஸுந்தரகாண்டே(கசு-ச).'தீமத:'என்கிறது-த்ருஷ்டாந்ததயாவந்ததித்தனை இப்பதத்தில். கடாகின்ற - நடத்துகிற இத்யர்த்தஃ. ''கடாகின்ற'' என்றத்தை - ''காணீர்'' என்றத்தோடே

காண்கிறிலீர். வர்த்தமாநமும் கார்யகரமன்றிக்கே யோழிகிறது நிரோதிக்கிற நிர்ப்பந்தத்தாலேயிறே. உங்களுக்குக் குரகோஷம்கேட்கிறதில்லையோ? ப்ரஸித்தமான அர்த்தம் உபதேசிக்கவேண்டுவதே. [காணீர்] - உங்களுக்குக் கண்ணுஞ்செவியுமின்றிக்கே யிருந்தோ நிஷேதிக்கிறது? என்னைப்போலே உட்கண்ணாலே காணிகோள்! நாங்கள் கண்டிலோம்; கண்ட நீ சொல்லிக்காணாய்! என்றார்கள். [என் சொல்லிச்சொல்லுகேன்] - எனக்குச் சொல்லலாவதில்லை; என்னபாசுரமிட்டு எத்தைச்சொல்லுவது? உங்கள் கண்ணுக்கு விஷயமாகாதாப்போலே என்வாக்குக்கும் விஷயமாகிறதில்லை. இவர்க்கு நெஞ்சுநிறைந்தது வாய் கொள்ளுகிறதில்லைகாணும்! [என்சொல்லிச்சொல்லுகேன்] - நான் பலஹாநியாலேசொல்லமாட்டேன்;விஷயம் இயத்தாராஹித்யத்தாலேசொல்லிமுடிக்கப்போகாது; உங்களுக்குப்ரதிபத்திபண்ணுகைக்குப்பரிகரமில்லாமையாலேசொல்லத்தான்வேண்டா. [அன்னைமீர்காள்] - ஜ்ஞாதாம்ஸங்கொண்டு வேறாயடந்தபரஸ்பரம்பண்ணலாயிற்றிறே ஸஜாதீயைகளானிகோளாகில். [என்சொல்லிச்சொல்லுகேன் அன்னைமீர்காள்] - எனக்கோடுகிற வ்யஸநத்துக்குப் பாசுரமில்லை; அவஸ்த்தாஜ்ஞாநமின்றிக்கே பழமைகொண்டாடுகிறிகோளித்தனையிறே; நிஷேதிக்கைக்கு அநுவர்த்தநீயைகளாமத்தனையோ வேண்டுவது? எங்களுக்குக் காணவும் கேட்கவும் கண்ணும் செவியுமில்லையாகில், நீதான் செய்யப்பார்த்ததேன்? என்ன; ஹிதஞ்சொல்லி மீட்கநினைப்பார் இல்லாத ஊரிலே போய்ப்புகுமித்தனை என்கிறாள். பிரிந்துபோனாரை நினைக்கவொட்டாத தேசமிறே: ''**நோபஜநம் ஸ்மரந்**'' (நோபஜநம்ஸ்மரந்) என்கிறபடியே. [வெள்ளச்சுகமவன்] - ஸுகவெள்ளத்தையுடையவன். விஶ்லேஷதசையிலும் ஸம்ஶ்லேஷ ஜநிதமான நிரதிஶயஸுகம் மாறாதவன். பிரிவிலும் அரையாறுபடாதபடிகாணும் கலவியில் அவன்தேக்கினஸுகாதி

கூட்டிஸாவம் - பூதமாய் இத்யாதிவாக்யத்ரயத்தாலே. இப்படியானால் உபதேசிக்க வேண்டுவானென்? என்ன; ''காணீர்''என்கிறபதத்துக்கர்த்தத்தைடம் அருளிச்செய்யாநின்றுகொண்டு அதுக்கு ஹேதுவையருளிச்செய்கிறார் - காண்கிறிலீர் இத்யாதி வாக்யத்வயத்தாலே. ''காணீர்'' என்றதுக்கு இரண்டர்த்தம்; காண்கிறிலீரென்னுதல்; காணுங்கோளென்னுதல். இந்த இரண்டாமர்த்தத்தை, ஶ்ரவணேந்த்ரியத்தாலும், சக்ஷுரிந்த்ரியத்தாலும் உட்கண்ணாலுங்காணுங்கோளென்று த்ரிவிதமாக அருளிச்செய்கிறார் - உங்களுக்கு குரகோஷம் என்றுதொடங்கி உட்கண்ணாலே காணிகோள் என்னுமளவாலே. இத்தால்ஃபலிதம் - ப்ரஸித்தமான இத்யாதி. கீழ்ச்சொன்ன அர்த்தத்வயத்தையுங்கூட்டி அருளிச்செய்து, உட்கண்ணாலே காணுங்கோள் என்ற மூன்றும் ப்ரகாரத்தை அருளிச்செய்கிறார் - உங்களுக்குக்கண்ணும் இத்யாதி. ''என்சொல்லி'' என்றதுக்கவதாரிகை - நாங்கள் இத்யாதி. எத்தைச்சொல்லுவதென்றது - எந்தஅர்த்தத்தைச் சொல்லுவதென்றபடி. பாசுரமிட்டுச் சொல்லவொண்ணாதோ? என்ன - உங்கள் இத்யாதி. ஸார்த்தஸாவமாதல், ஏதத்விவரணமாதல், '' என்னெஞ்சினாடே '' இத்யாதியையும் ''என்சொல்லிச்சொல்லுகேன் ?'' என்றத்தையுங்கூட்டி ரஸோக்தியாதல் - இவர்க்குநெஞ்சு இத்யாதி. சொல்லப்போகாமைக்கு ஹேதுத்ரயம் அருளிச்செய்கிறார் - நான்பலஹாநி இத்யாதிவாக்யத்ரயத்தாலே. எல்லாம்சொல்லப் போகாவிட்டாலும், அறிந்தவம்ஸம் சொல்லவொண்ணாதோ? என்ன - ஜ்ஞாதாம்ஸம் இத்யாதி. ஸஜாதீயைகளானிகோளாகில்- தோழிமாரானிகோளாகில் என்றபடி. ''அன்னைமீர்காள்'' என்றதுக்கு - கீழ், வ்ருத்தைகளென்றருளிச்செய்து, நியாமகத்வவிவக்ஷயாஸாவாந்தரம் - எனக்கோடுகிற இத்யாதிவாக்யத்வயம். பழமைகொண்டாடுகிறிகோள் என்றதின் விவரணம் - நிஷேதிக்கைக்கு இத்யாதி. உத்தரார்த்தத்துக்கவதாரிகை - எங்களுக்கு இத்யாதிவாக்யத்வயம். அவனேவாரானோ? என்ன - பிரிந்துபோனாரை இத்யாதி. நினைக்கவொட்டாததேஸமுண்டோ? என்ன - நோபஜநம் இத்யாதி. 'வெள்ளச்சுகமவன்''-

ஸயமிருந்தபடி. [வெள்ளை] - என்று பாடமானபோது மறுவற்ற ஸுகமென்கை. (து:கா மிஶ்ரசுகமென்றபடி.) அவன்வீற்றிருந்த - தென்திருப்பேரெயில் என்று அந்வயம். இட்டகாலிட்டகையளாயிருக்கிற இருப்புக்குஎதிர்த்தட்டாயிருக்கிற இருப்பிறே அது. இத்தலையைத் துடிக்கவிட்டுத் தன்ஐஶ்வர்யந்தோற்ற ஸுகோத்தரமாக இருக்கிறபடி. [அவன் வீற்றிருந்த] - இத்தலையைத் தோற்பித்த தன்வெற்றியெல்லாம் அவ்விருப்பிலே தோற்றும்படியிருந்த. அவன் மெய்ம்மறந்து அப்படியிருந்தால் நாமும் மெய்ம்மறந்திருக்கவோ? பரிபூர்ணனாய் அவன் செருக்காலேயிருந்தால், குறைவாளராய் நோவுபடுகிறநாமும்இருக்கவோ? அவன் முறைதப்பநின்றால் நாமும் முறைதப்புமித்தனையன்றோ? பிரிந்தால் முறைபார்த்திருக்கலாம் விஷயத்துடனே கலந்தோமாகிலன்றோ நாம் ஆறியிருக்கலாவது? முறையை யழித்தாகிலும் மடலே யெடுத்துக்கொண்டுபோமித்தனையன்றோ? "நமக்கே நலமாதலின்" என்னக்கடவதிறே. [வேதவொலியும்] - அவன் நெஞ்சொழிந்து பழம்புணர்ப்புக் கேளாநின்றான்காணும். அதாவது - பண்டு தான்வென்ற வெற்றிமாலைகள் கேட்கையிறே. அதாவது **"ஜிதந்தே புண்டரீகாக்ஷ"** (ஜிதந்தேபுண்டரீகாக்ஷ) என்கிற வெற்றிமாலைகளிறே. [விழாவொலியும்] - இவளைத் தோற்பித்ததுக்கு நெய்யாடல் போற்றுகிறபடி. [அறா] - தீர்த்தம் ப்ரஸாதித்த பிற்றைநாளே திருமுளைச்சாத்தாநிற்குமத்தனை. ஸ்யமந்தக மணி கைப்பட்டபின்பு அக்ரூரன்அடுத்தடுத்து அஶ்வமேதம்பண்ணினாற்போலே, அவர்க்கும் அடுத்தடுத்து உத்ஸவமாய்ச் செல்லுகிறஇத்தனை; ஸ்த்ரீரத்நமிறே இவள். இவளிருக்கிறவிடமிறே மங்களகோஷங்கள் மாறிக்கிடக்கிறது. [பிள்ளைக்குழா விளையாட்டொலியும் அறா] - பருவம்நிரம்பியிருக்கச்செய்தே நிஷேதிப்பார் இருக்கிற ஊரைவிட்டு பருவம்நிரம்புவதற்குமுன்னே பகவதநுபவமே யாத்ரையாய்ச்

ஸுகார்ணவத்தையுடையவனித்யர்த்தஃ. ஸுகாதிசயம்வருகைக்குஹேதுவருளிச்செய்கிறார் - பிரிவிலும் இத்யாதி. மறுவற்ற - ஸ்வச்சமானஇத்யர்த்தஃ. மறுவற்றஸுகத்தையுடையவனித்யர்த்தஃ. "வெள்ளம்" என்றபோது, வெள்ளமென்று - ஸமுத்ரம். வீற்றிருந்த - வேறுபாடு தோற்றவிருந்த. "வீற்றிருந்த" என்றதுக்கு வ்யாவர்த்யம் - இட்டகால் இத்யாதி. வேறுபாடு ஏதென்ன - இத்தலையை இத்யாதி. "வீற்றிருந்த" என்றதுக்கு - ராஜாவாயிருந்த என்று அர்த்தாந்தரம் - இத்தலையைத்தோற்பித்த இத்யாதி. வெற்றி-ஜயம். அவன் அப்படிவீற்றிருந்தால் நீ உபேக்ஷியாதே "சேர்வன்" என்கிறதென்? என்ன-அவன் மெய்ம்மறந்து இத்யாதி. அவன் மெய்ம்மறந்து-அவன் நம்முடைய வைலக்ஷண்யத்தைமறந்து. அப்படியிருந்தால்-உபேக்ஷித்திருந்தால். நாமும் மெய்ம்மறந்திருக்கவோ-நாமும்அவன் வைலக்ஷண்யத்தைமறந்து உபேக்ஷித்திருக்கவோ? என்றபடி. அதுக்கடியேதென்ன-பரிபூர்ணனாய் அவன் இத்யாதி. அவன் வாராதிருந்தால், "தத்ஸ்ய ஸஹ்ருஷ்யம்ஸ்வெக" என்றிருக்கக்கடவ நாம் த்வரிக்கலாமோ? என்ன - அவன்முறை இத்யாதி. அவன் முறைதப்பினானென்று, நமக்குத்தப்பலாமோ? என்ன - பிரிந்தால் இத்யாதி. முறைதப்பும் ப்ரகாரத்தைச் சொல்லுகிறார்- முறையையழித்தாகிலும் இத்யாதி. அப்படி ஸ்வயத்நத்திலே அந்வயித்தாருண்டோ? என்ன - நமக்கே இத்யாதி. நமக்கே நன்மை பார்க்கக் கடவோமென்றபடி. திருமொழி ஒன்பதாம்பத்து மூன்றாந்திருமொழி ஒன்பதாம்பாட்டு "ஓதிநாமம்" இத்யாதி. "வேதவொலி" என்றதுக்கு பாவம் - அவன்நெஞ்சு இத்யாதி. பழம்புணர்ப்பு - பழையவெற்றிமாலைகள். புணர்ப்பு -வெற்றிமாலை. நெய்யாடல்போற்றுகை - நெய்யிறைத்து விளையாடுகை. "அறா" என்றதுக்கு பாவம் - தீர்த்தம் ப்ரஸாதித்த இத்யாதி. த்ருஷ்டாந்த பூர்வகோபபாதநம் - ஸ்யமந்தக இத்யாதி. வ்யதிரேக விஸ்தாரம் - இவள் இருக்கிற இத்யாதி. "பிள்ளைக்குழா விளையாட்டொலியும்", என்றதுக்கு பாவம் -பருவம் நிரம்பி இத்யாதி. அப்படி பால்யத்திலும் பகவதநுபவபரரா யிருப்பார்களோ? என்ன-அவ்வூரில் இத்யாதி. இதுக்கு ப்ரமாணம்

செல்லுவார்இருந்த ஊரில் போய்ப்புகுமித்தனை என்கிறாள். அவ்வூரில் பருவம் நிரம்பாத பிள்ளைகளும் அகப்பட மகரநெடுங்குழைக்காதனுடைய வடிவழகிலே தோற்று, வாய்வெருவா நிற்பர்கள்; "பாலா அபி க்ரீடமாநா க்ருஹத்வாரேஷு ஸங்கஶ: | ராமாபிஷ்டவஸம்யுக்தாஶ்சக்ருரேவம் மித: கதா:" (பாலா அபிக்ரீடமாநாக்ருஹ த்வாரேஷுஸங்கஶ: | ராமாபிஷ்டவஸம்யுக்தாஶ்சக்ருரேவம்மித:கதா:) என்னும்படியே. 'ராமோராமோராம இதி" (ராமோராமோராமஇதி) - "சோறுசோறுசோறு" என்பாரைப்போலே. "ப்ரஜா நாமபவந்கதா:" (ப்ராஜாநாமபவந்கதா:)-ஜந்துர்மாக்களுக்கெல்லாம் பாசுரம் இதுவே. 'ராமபூதம் ஜகதபூத்'(ராமபூதம்ஜகதபூத்)-நாடுஅடங்க ராமாத்வைதமானபடி. நித்யவிபூதியிலே பரிமாறக்கடவது இங்கேபரிமாறுகைக்கு ஹேது வென்? என்னில், "ராமோராஜ்யம்ப்ரஶாஸதி" (ராமோராஜ்யம்ப்ரஶாஸதி) - நாடு அடங்கலும் தந்தாமுடைய கர்மபலம் புஜிக்கப்பெற்றார்களில்லை; ராமஸாக்யமே யநுப வித்துவிட்டது. "நசாக்நிஜம்பயம் கிஞ்சித்" (நசாக்நிஜம்பயம்கிஞ்சித்)-அக்நியும்சோறு வேவிக்கவேண்டும் ஔஷ்ண்யத்துக்கு மேற்பட உடைத்தாவதில்லை. "நாப்ஸுமஜ்ஜந்திஜந்தவ:" (நாப்ஸுமஜ்ஜந்திஜந்தவ:) - கோண்டுஆழக்கடவ ஜலந்தானே கோண்டுமித்தக் கப்புக்கது ராமஶரத்துக்கு அஞ்சி, பண்டே கைகண்டிருப்பதொன்றே ஜலந்தான். வேலை வேவ வில்வளைத்தவனிறே. [திருப்பேரெயில்சேர்வன்நானே] - ஜயித்தார் இருந்த விடத்தே தோற்றார் சென்றுவிழும் அத்தனையிறே. தாமரைக்கண்ணன் என்னெஞ்சி னூடே யிறே: ஆகையாலே "ஜிதந்தே" (ஜிதந்தே) என்று சென்றுவிழுமத்தனையிறே.

பாலாஅபி இத்யாதி. "பாலா அபி க்ரீடமாநா க்ருஹத்வாரேஷு ஸங்கஶ: | ராமாபிஷ்டவஸம்யுக்தாஶ்சக்ருரேவம் மித: கதா:" இத்யயோத்யாகாண்டே(சு-கசு). பாலர்களேயன்றிக்கே, ஜந்தர்மாக்கள் எல்லாரும்இப்படியேயென்று விவக்ஷித்து, அதுக்கு ப்ரமாணம் - ராமஇத்யாதி. "ராமோராமோராமஇதி ப்ரஜாநாமபவந்கதா: | ராமபூதம்ஜகதபூத்ராமே ராஜ்யம்ப்ரஶாஸதி" இத்யுத்தரஶ்ரீராமாயணே. வீப்ஸைக்குஅர்த்தம் - சோறுஇத்யாதி. ஜந்தர்மாக்கள் - பிறந்தவர்களென்றபடி. அப்படி ஸ்வகர்மபலம் புஜித்திலர்களோ? என்ன, ப்ரமாணம் - "நசாக்நிஜம்" இத்யாதி. ஶ்ரீஸங்க்ஷேபே, "நசாக்நிஜம்பயம்கிஞ்சிந்நாப்ஸுமஜ்ஜந்திஜந்தவ: | நவாதஜம்பயம்கிஞ்சிந்நாபிஜ்வரக்ருதம்ததா"(சு-கஉ)ராமஶரத்துக்குஅஞ்சியிருக்குமோ? என்ன - பண்டேஇத்யாதி. சரத்தாலே ஸமுத்ரத்தைத் தஹித்ததுக்கு ப்ரமாணம் - வேலைஇத்யாதி. திருச்சந்த விருத்தம் முப்பத்தோராம்பாட்டு, "காலநேமி" இத்யாதி. ஸமுத்ரம் தக்தமாம்படி வில்வளைத்தவனித்யர்த்த:. தான் சேருகிறதென், அவன்வரப்பார்த்திருந்தாலோ என்கிற ஶங்கைக்கு, பூர்வார்த்தத்திலே நோக்காகப் பரிஹாராந்தரம் - ஜயித்தார்இத்யாதி. †முந்தின பரிஹாரம்-பிரிந்துபோனளை இத்யாதி வாக்யம். அப்படி தான் தோற்றாளோ? என்ன - தாமரைஇத்யாதி வாக்யத்வயம். (க)

† இந்த அவதாரிகைக்கும் ப்ரீதிகத்துக்கும் ஏற்ப மூலத்தில் நக்கவேண்டிய வாக்யம் ப்ரமுஷிதமானதுற்போற் காண்கிறது.

ரண்டாம் பாட்டு.

நானக்கருங்குழல்தோழிமீர்காள்! அன்னையர்காள்! அயற்சேரியீர்காள்!
நான்இத்தனிநெஞ்சங்காக்கமாட்டேன்என் வசமன்றிதுஇராப்பகல்போய்
தேன்மோய்த்தபூம்பொழில்தண்பணைசூழ்தென்திருப்பேரெயில்வீற்றிரு
வானப்பிரான்மணிவண்ணன்கண்ணன்செங்கனிவாயின்திறத்ததுவே. [ஙூ

ஆ.—(நானக்கருங்குழல்.) - அதிபரிபள நீலாலகாலங்க்ருத வதநாரவிந்தங்களையுடைய தோழிமாரும் அன்னையரும் மற்றுமுள்ள பந்துஜநங்களும் "நீ தனியேபோகை ஈடல்ல" என்றுசொல்ல, அவர்களைக்குறித்து, "நான் என்னுடைய ஸ்வதந்த்ரமான நெஞ்சைக் காக்கமாட்டேன்; எனக்கு விதேயமன்று; ஆஶ்ரயஸுலபனுகைக்காகத் திருநாட்டில் நின்றும் ஸ்ரீவஸுதேவர் திருமகனாய்வந்து பிறந்தருளி, அக்காலத்தில் பெறுதாருடைய இழவுதீரும்படி, தேன்மொய்த்த பூம்பொழில் தண்பணைசூழ் தென்திருப்பேரையில் பரிபூர்ணனாய் எழுந்தருளியிருந்த அவனுடைய, யத்ஸம்ஶ்லேஷத்தாலே புதுக்கணித்த திருப்பவளத்திலே என்னெஞ்சு இராப்பகல் போய்ப்படிந்து கிடக்கும்; இனி நான் எங்ஙனே போகாதிருக்கும்படி?" என்கிறாள்.

ஒ.—இரண்டாம்பாட்டில், "இங்ஙன் பதறலாமோ? நெஞ்சைச் சிக்கெனப் பிடித்துக்கொண்டு யரித்துக்கொண்டிருக்க வேண்டாவோ?" என்று தோழிமார் தொடக்கமானார் சொல்ல, "தென்திருப்பேரையிலே எழுந்தருளியிருந்தருளுகிற எம்பெருமானுடைய திருப்பவளத்தில் மிகவும் ப்ரவணமான என்னுடைய ஹ்ருதயம் என் அதீநமன்று" என்கிறாள். [நானம்] - கந்தம். இவள் திண்மைக்காகத் தோழிமார் தரித்துக்காட்டினபடி. [அயற்சேரியீர்காள்] - இவளுடைய விரஹவ்யஸநம் ப்ரஸித்தமான படியைச் சொல்லுகிறது. [தனிநெஞ்சம்] - ஸ்வதந்த்ரமானநெஞ்சு. [தேனென்று மேலுக்கு] - வண்டுகள்மொய்த்த பூம்பொழிலையுடைய அழகிய நீர்நிலஞ்சூழ்ந்த தென்திருப்பேரையில் வீற்றிருந்தருளுவதும் செய்து வேண்டற்பாட்டையும் அழகையும் குணத்தையும் உடையவனாயுள்ளவனுடைய திருப்பவளத்தில் அழகிலேபடிந்தது.

ப.—அநந்தரம், நிரவதிகமான பரத்வ ஸௌலப்யங்களையுடையவன்பக்கலிலே ஸக்தமாய்ப்போன என்னெஞ்சைத் தகையமாட்டுகிறிலேனென்று தோழிமாரையும் தாய்மாரையும் அயலாரையுங்குறித்துச் சொல்லுகிறாள்.

நானம் - பரிமளோத்தரமான கந்தத்ரவ்யத்தாலே வாஸிதமாய், கரு - கறுத்த, குழல்-குழலையுடையவரான, தோழிமீர்காள் - தோழிமீர்காள்! அன்னையர்காள் - (அவர்களோடு என்னோடுவாசியற நியந்த்ரிகளான) அன்னைமீர்காள்! அயற்சேரியீர்காள்-(செய்தி வினவவந்த) அயற்சேரியீர்காள்! நான் -(அதிப்ரவணையான) நான், தனி - (என்னிலும் அதிஶயித ப்ராவண்யத்தையுடைத்தாய்) ஸ்வதந்த்ரமான, இ - இந்த, நெஞ்சம் - நெஞ்சை, காக்கமாட்டேன் - (என்னைவிட்டுப்போகாமல்) தகையமாட்டேன்; என் - எனக்கு, வசம் - விதேயம், அன்று - அல்ல; இது இராப்பகல் - இதுஇரவோடு பகலோடு வாசியற, போய் - என்னைவிட்டுப்போய், தேன் - வண்டுகள், மொய்த்த, பூம்பொழில் - பூம்பொழிலையுடைத்தாய், தண் - குளிர்ந்த, பணை-நீர்நிலங்கள், சூழ்

தென்-சுட்டளப்பட்ட, திருப்பேரெயில் - திருப்பேரெயிலே, வீற்று - தன்பெருமை தோன்றும்படி, இருந்த - இருக்கிற, வானம் - பரமபதநிலயனை, பிரான் - மேன்மையுடையனாய், மணி - உஜ்ஜ்வலமான மாணிக்கம்போலேயிருக்கிற, வண்ணன் - வடிவையுடையனாய், கண்ணன் - (ஆஸ்ரிதஸுலபனை) க்ருஷ்ணனுடைய, செம் - சிவந்த, கனி - கனிபோலேயிருக்கிற, வாயின் - அதராமைபக்கலிலே, திறத்தது - ஸக்தமாயிற்று. நானம் - மயிர்க்கு இடும் கந்தத்ரவ்யம்: புழுகாகவுமாம்.

இ.—இரண்டாம்பாட்டில், 'இங்ஙனே பதறுகிறதென்? நெஞ்சைச் சிக்கெனப்பிடித்துக்கொண்டு தரித்திருக்க வேண்டாவோ?' என்ன, 'மகரநெடுங்குழைக்காதன் பக்கலிலே என்மநஸ்ஸு அபஹ்ருதமாயிற்று' என்கிறாள்.

[நானக்கருங்குழல்] - நானம் என்று கந்தம். இவள் தளராமைக்காகத் தோழிமார் தரித்துக்காட்டினபடி. தோழிமாரோடு தாய்மாரோடு அயலாரோடு வாசியற ஹிதம் சொல்லத்தொடங்கினார்கள். ஏககண்டைகளான தோழிமாரோடு அயலாரோடு வாசியற இவள் ஆற்றாமை ப்ரஸித்தமானபடி. ஸர்வத்ர ஸாவண்யத்தாலே உங்களில் வ்யாவ்ருத்தையான என்னைக்காட்டில் ப்ரவணமாகையாலே ஸ்வதந்த்ரமான நெஞ்சை நோக்கமாட்டேன்: உனக்கு மோக்ஷமன்றோ நெஞ்சம்? என்ன [என்வசமன்று]- நான் உங்களுக்கு மோக்ஷம் அன்றோ, மோக்ஷஸாதநமென்று ஸம்பாவனையோ? [இராப்பகல் இத்யாதி]- ஹிதம்சொல்லுகிற உங்களுக்கு ஸங்கிஹிதை நான்: அதுவுமில்லை என்நெஞ்சுக்கு. [இராப்பகல்போய்] - ஒருபோதுபோய் மற்றைப்போது முகங்காட்டிலன்றோ ஹிதம் சொல்ல வாவது? [தேன்மொய்த்த இத்யாதி] - தேன் என்று வண்டு. அத்தாலே நெருங்கப் பூம்பொழிலையுடைத்தாய்க் குளிர்ந்த நீர்நிலங்களாலே சூழப்பட்ட தேசத்திலே, புக்கார்க்கு மீளலாம்தேசமன்றே என்கை. [வீற்றிருந்து] - பரமபதத்திற்போலே தன் வேறுபாடெல்லாம் தோற்றவிருந்த. [வானப்பிரான்] - மேன்மை இருக்கிறபடி. [மணிவண்ணன்] - அம்மதிப்பில்லைபாகிலும் விடவொண்ணாத அழகு. [கண்ணன்] - இரண்டுமில்லையாகிலும் விடவொண்ணாத ஸுலபதை. [செங்கனிவாயின் திறத்ததுவே]- இவைமூன்றிலும் போகவொட்டாத ஸ்மிதத்திலே படிந்தது. பிரிவை ப்ரஸங்கித்துத் தாழ்வுதோற்ற வார்த்தை சொல்லப்புக்குத் தலைக்கட்டமாட்டாதே ஸ்மிதம்பண்ணி நின்றபடி.

ஈடு.—இரண்டாம்பாட்டு. தாய்மார் முகம்பார்த்துச் சொன்னாளாயிறே சீழ்ப்பாட்டில் நின்றது; ''இவள் இவ்வளவில்மீளுமவ ளன்றிக்கே யிருந்தாள்'' என்றுதாய்மாரோடு தோழிமாரோடு அயற்சேரியுள்ளாரோடு வாசியற வந்துதிரண்டு ஹிதஞ்சொல்லப் புக்கார்கள். ''உங்கள் ஹிதவசநங்கேளாதபடி நிரவதிகமான பரத்வஸௌலப்யங்களையுடையவன் பக்கலிலே ஸக்தமாய்ப் போன என்னெஞ்சைத் தகைகயமாட்டுகிறிலேன்; என்னெஞ்சைக் கடல்கொண்டது காணுங்கோள்!'' என்கிறாள்.

இரண்டாம்பாட்டு - நானம் இத்யாதி. ''தோழிமீர்காள்! அன்னையார்காள்! அயற்சேரியீர்காள்!'' என்றத்தையும், ''வானப்பிரான்மணிவண்ணன்'' இத்யாதி மேலெல்லாவற்றையுங் கடாக்ஷித்து வ்ருத்தாநுவாதபூர்வகமாக அவதாரிகை - தாய்மார்இத்யாதிவாக்யத்ரயத்தாலே. அயற்சேரியுள்ளாராவது - அந்தர்யாமித்வத்திலே யுறைத்திருக்குமவர்கள்.

[நானக்கருங்குழல் தோழிமீர்காள்] - நானம் - நறுநாற்றம். அவர்களுக்கு ஒரு பழி சொல்லுமாபோலே சொல்லுகிறாள். அவர்கள் தலையான நறுநாற்றத்துடனே வந்து நிற்கையாலே. மயிர்படமாந்தும்படியிறே இவள் படி. உங்கள் ஸந்நிதியிலல்லையாகில் நான் இங்கேஇரேனோ? * மைவண்ண நறுங்குஞ்சிக்கு ஸ்மாரகமாயிராநின்றதே இவர்கள் குழல். "ஏகது:கஸுகா வயம்" (ஏகதுக்கஸுகஞ்சநோ) என்று இவளுடைய ஸுகதுக்கங்களே தங்களுக்கும் ஸுகதுக்கமாம்படி இருக்கையிறே தோழிமாராகையாவது? இவள் மயிர்முடி பேணாதே, பரிமளங்காணில் முடியும்படியாயிருக்க, இவர்கள் குழல் பேணிப் பரிமளங்கொண்டு காரியங்கொள்ளப் போருமோ? என்னில், - கலவியில் இவளோடு அவன் நெருங்க நெருங்கச் சாத்திக் கழித்தபடியே ஸர்வஸ்வதாநம் பண்ணுவதுஇவர்களுக்கே; அப்போது அவன்பண்ணின ப்ரஸாதாதிசயத்தாலே, அது சருகானாலும் அவர்கள் மாறாதேவைத்துக்கொண்டிருப்பார்களே! அது இவளுக்கு ஸ்மாரகமாய் நலிகிறபடி. அன்றிக்கே, இவர்கள் தாம் பரிமளங்கொண்டு கார்யங்கொள்ளவும் வல்லவர்கள். அதாவது: தாங்கள் தளர்ந்துகாட்டில் இவள் மிகவும் தளரும் என்றுஒப்பித்துக்கொண்டிருப்பர்கள். தந்தாமுடைய பொறாமையும் பாரார்களாயிற்று, இவளையுஜ்ஜீவிப்பிக்கைக்காக. அகாரவாச்யனைஅவனும் ஜீவித்து மகாரவாச்யனைஇவனும் ஜீவித்து அநாதிகாலம் போரச்செய்தேயும், உஜ்ஜீவிக்கப் பெறாதே நடுவே கிடந்து போயிற்றே. இனி,ஃபடகக்ருத்யமிறே உஜ்ஜீவிப்பிக்கை; அப்படியேஇவளை இசைவித்து உஜ்ஜீவிப்பிக்கவேணுமே. தந்தாம்க்லேசங்கள்பாரார்களிறே,"மோக்ஷிக்கதிசயம்வேணும்" என்றிருப்பார்; பெருமாளிலும் க்லேசம் விஞ்சியிருக்கச்செய்தே பெருமாளுடைய ரக்ஷணத்துக்காக இளையபெருமாள் தம்மைப் பேணிக்கொண்டு தரித்திருக்குமாபோலே. பரமஹோகிகளிறே இளையபெருமாள்தாம்.

நறுநாற்றத்தையுடைய கறுத்த குழலையுடைய தோழிமீர்காள் என்றுஸமுதாயார்த்தம். "நானக்குழல் தோழிமீர்காள்" என்று ஸம்போதிக்கிறவளுடைய ஹார்த்தபாவம் - அவர்களுக்கு இத்யாதி. தலையான - தலையிலே யுண்டான, ஶ்ரேஷ்டமான என்றும். "கருங்குழல்" என்றத்தைக் கடாக்ஷித்து ரஸோக்தி - மயிர்படஇத்யாதி. மயிர்படமாந்துகையாவது-இவர்கள்மயிர் அவன் மயிருக்கு ஸ்மாரகமாய் பாதகமாகை; கவரிமான் மயிரிலேபட்டால் அங்ஙனேமாந்துமென்று த்வநி. மாந்துகை-நசிக்கை. நறுநாற்றம்-ஸுகந்தம். "நானக்கருங்குழல்" என்கிறவளுடைய ஹார்த்தபாவம்-உங்கள்ஸந்நிதி இத்யாதி. அவர்கள்ஸந்நிதிஇவளுக்கு பாதகமோ? என்ன-மைவண்ணம்இத்யாதி. இது-"கருங்குழல்" என்றதுக்குபாவம். கீழே-ஸத்ருஶமாய் ஸ்மாரகமாகிறதென்று அருளிச்செய்து, ஸம்பந்திதர்ஶநத்தாலேயும் ஸ்மாரகமென்கிறார் - கலவியில்இத்யாதி. தாத்பர்யாந்தரம் - அன்றிக்கேஇத்யாதிவாக்யத்வயம். தங்களுக்குத் தளர்த்தியுண்டாயிருக்க, ஒப்பனைபொறுக்குமோ? என்ன - தந்தாமுடையஇத்யாதி. இவர்களாலே யுஜ்ஜீவிக்கவேணுமோ? தாந்தாமே யுஜ்ஜீவிக்கவொண்ணாதோ? என்ன; ஸ்வாபதேஶத்திலே, ஆசார்யனில்லாவிட்டாலும் உஜ்ஜீவநமுண்டோ? என்கிறார் - அகாரவாச்யனை இத்யாதிவாக்யத்ரயத்தாலே. "தந்தாமுடைய" இத்யாதி வாக்யவிவரணம் - தந்தாம்க்லேசங்கள்இத்யாதி. இதுக்கு த்ருஷ்டாந்தம் - பெருமாளிலும்இத்யாதி. "பெருமாளுடைய ரக்ஷணத்துக்காக" என்கைக்கு இவர் தாம்அப்படி விஶ்லேஷம்பொறுக்கமாட்டாரோ? என்ன - பரமஹோகிகள்இத்யாதி. போகி -போகமுவானும், ஸர்ப்பமும். அப்படி தரித்திருந்ததுக்கு ப்ரமாணம்-"ஸௌமித்ரஇத்யாதி, "ஸௌமித்ரே

பஶ்யபம்பாயா: சித்ராம் ஶோபநகாநநாம். ஹ்ருதா நாநாநுமாநே விஹத ஸ்தத:

சேந்தாகாண்டே. தத்ரைவ, "ஸம்பமேஸ்யாவிஸஜ்யாஸௌஸஸக்ஷஸுவம் ஸுவநேளாஸ்ரீவோராவம்வாக்ருதிதாவாவருஹாஷவக" (நி-௪அ) இதுக்குபாவம்

"ஸௌமித்ரே பஶ்ய பம்பாயா:" (ஸௌமித்ரேபஶ்யபம்பாயா:)-அங்ரத்தைஹோக்யதை நெஞ்சிலே படச்செய்தேயும், பெருமாளுக்கு அங்யபரதை விளக்கைக்காக முகத்தை மாறவைத்துக்கொண்டு நின்றார்; பிள்ளாய், பாராய் இதுஇருந்தபடி! என்கிறார். [நானக்கருங் குழல்] - ஒரு தமிழன் "நானமென்று-குழலுக்கு விசேஷணமாகையாலே, நாவிபோன்ற குழல்" என்றான். அத்தால் நினைக்கிறதும் பரிமளத்தை. [தோழிமீர்காள்]-ப்ரியஞ்சொல்லுவாரும் ஹிதஞ்சொல்லுவார் கோடியிலே புகுவதே! [தோழிமீர்காள்! அன்னையர்காள்! அயற்சேரியீர்காள்!]-தான் அறிந்து தோழிமார்க்குச் சொல்லாதே யிருப்பதோர் அவஸ்த்தையும், தோழிமாரும் தானும்அறிந்து தாய்அறியாதேயிருப்பதோர்அவஸ்த்தையும், தானும் தோழியும் தாயுமறிந்துபிறரறியாதிருப்பதோர்அவஸத்தையுமாயாயிற்று இருப்பது; அந்நிலைகுலைந்து எல்லாரையும்ஒக்க ஸம்போதிக்கும்படியாயிற்று ஜகத்ப்ரஸித்தமானபடி. பிறர்க்குச் சொல்ல வேண்டுவதில்லையிறே; ஆயிருக்க, ப்ரதிகூலர்க்குங்கூட தயைபண்ணவேண்டும்படி காணும் இவளுடையஆர்த்தி. "மாம் ஸமாநய துஃகிதாம்" (மாம்ஸமாநயதுஃகிதாம்) என்று என்னை நீ பெருமாளுடனே கூட்டவல்லையே என்றாளிறே ராவணனை. "ததாகுரு தயாம் மயி" (ததாகுருதயாம்மயி) என்றும், "வாஸாதர்மமவாப்நுஹி" (வாசாதர்மமவாப்நுஹி) என்றும் ஒரு திருவடிபோல்வார்க்குச் சொல்லக்கடவவார்த்தையையிறே, பிரித்தவனைப் பார்த்துச் சொல்லிற்று. [தோழிமீர்காள்இத்யாதி] - 'எங்ஙனே நான்உகந்ததுஉகந்திகோள்! எங்ஙனே எனக்கு ப்ரியஹிதம்பார்த்திகோள்! எங்ஙனே யுதாஸீநைகளாயிருந்திகோள்! 'எங்கள்பக்கல் குறையுண்டோ? நீ மர்யாதைதப்பினவாறே நாங்களும் முறைதப்பினோமித்தனையன்றோ?'என்ன, [நான் இத்தனிநெஞ்சங் காக்கமாட்டேன்]-உங்களுக்கும் இங்ஙனே ஏதேனும் இருப்பது ஒருஹேதுவுண்டோ முறைதப்புகைக்கு? [நான்]-நீங்களும் ஏதேனும்நெஞ்சுஇழந்திகோளோ? உங்களளவல்லவென்றபடி. [இத்தனிநெஞ்சம்]-உங்களில் நான் வ்யாவ்ருத்தையானாற்போலேயாயிற்று, என்னிலும் என்னெஞ்சு வ்யாவ்ருத்தமான

அந்நத்தைஇத்யாதி. "நானம்" என்றதுக்கு-நாவியென்றர்த்தாந்தரம்-ஒருதமிழன் இத்யாதி "தோழிமீர்காள்" என்கிற ஸம்போதநத்துக்குபாவம் - ப்ரியம்இத்யாதி. "தோழிமீர்காள்" இத்யாதியாலே - எல்லாரையும்ஸம்போதித்ததுக்குஅவதாரிகையில்உக்தமானபாவமொழிய பாவாந்தரம்-தானறிந்துஇத்யாதி. ப்ரதிகூலரான அயற்சேரியார்க்குள்வஹுமையைச்சொல்லுவானென்? என்ன-பிறர்க்கு இத்யாதி. இப்படி சொன்னபேருண்டோ? என்ன-மாம் ஸமாநய இத்யாதி. "ஸாயம் ராவண ராஜேந்த்ரம் ஸமாநய துஃகிதாம் விதாய வசநம் ஸீதயா ஸார்த்தம் கருணை வஶ ஜாயிபடு" இதி ஸுந்தரகாண்டே. (உக-கஅ½) "ஸோபி ஸஸ்நேஹ வசநம் ஸீதயா மந்த்ர வாச ஸம்ஶ்ரா விதயா தயா:" இதிராமாநுஜீயம். இத்தாலே-ப்ரதிகூலர்க்கும் தயைபண்ணவேண்டியிருக்குமென்று தோற்றிற்றோ? என்ன-ததாகுருஇத்யாதி "யதா தம் பாண்ட ஷட்வா ஸம்மா ஶோகாகுலிதம் ஸம்ஸ்ப்ருஶ்ய ஸகாஶம் ததாகுரு தயாம் மயி," "ஜீவந்தீம் மாம் யதா ராம: ஸம்பாவயதி கீர்த்திமாந் । தத் த்வயா ஹநுமந் வாச்யம் வாசா தர்மமவாப்நுஹி" இதி ஸுந்தரகாண்டே ஸீதா. மூன்றுபேரையும் ஸம்போதிக்கிறதுக்குபாவம் - எங்ஙனேநான் இத்யாதிவாக்யத்ரயம். பாவம் - உங்களுக்குஇத்யாதி: இதுக்கு - 'கண்ணன் செங்கனிவாயின் திறத்தது' என்றதிலே நோக்கு. "உங்களுக்கும்" இத்யாதி வாக்ய விவரணம் — நீங்களும்இத்யாதி: இத்தால் பலிதம் - உங்களளவல்லவென்றபடி என்று. "தனி" என்றதுக்கு பாவம் - உங்களில்இத்யாதி. 'வ்யாவ்ருத்தமானபடி' என்றத்தால் பலிதமாதல், ஸப்தார்த்தமாதல்.

படி. [தனிநெஞ்சம்]-சொல்லிற்றுக்கேளாத ஸ்வதந்த்ரமான நெஞ்சம். "தத்தஸ்ய ஸத்ருஸம்பவேத்" (தத்தஸ்ய ஸத்ருஸம்பவேத்) என்றிருப்பார் நெஞ்சமும் இதுக்குஒப்பல்ல. [காக்கமாட்டேன்]-(பாரணஸாமர்த்த்யம் வேணுமே காக்க.) "முந்துற்றநெஞ்சேயியற்றுவா யெம்மொடுநீகூடி" என்றிருக்கும் இத்தனையொழிய, இவளால் தடுத்துவைக்கப்போகாதே. "குரவ: கிம் கரிஷ்யந்தி" (குரவ:கி. கரிஷ்யந்தி) என்று ஒருவரையும்பாராதே போகா நின்றது; ஒன்று கேட்டு மீளுமளவல்ல: மீட்கலாமளவும் காற்கட்டிப்பார்த்து, போகாமை யாலே கைவாங்கினமை தோற்றுகிறதுகாணும் - மாட்டேன்என்கிற வுறைப்பாலே. ஸம் ஸாரிகள் ஶப்தாதிவிஷயங்களினின்றும் மீளமாட்டாதாப்போலேயிறே இவர் ஭கவத்விஷ யத்தினின்றும்மீளமாட்டாதபடி. "மாட்டேன்" என்று சொல்லும்இதுவார்த்தையோ? எல்லா வளவிலும் தந்தாம் நெஞ்சு தந்தாமுக்கு விதேயமாக வேண்டாவோ? என்னில், [என்வசமன்றிது]-என்செய்வோம், தாய்வேறு கன்றுவேறுக்கும் விஷயமானால்? கைகேயிசொற் கேட்டு ஸ்ரீ஭ரதாழ்வான் ராஜ்யம்பண்ணுமன்றுயிற்றுஇவளும் இத்தாயார்வார்த்தைகேட்டு மீளுவது. இப்போது நான் உங்கள் மகளன்றே? (மகளோன்னு஭வ்யராவரோ?) என்னைப் போலுமன்றே, என்னெஞ்சு. எனக்குத்தானென்றிருக்கும் நிலைகுலைந்தது, தன் வழியே நானொழுகும்படி யாயிற்று தந்தாமுடைய நெஞ்சு அ஭வ்யமானாலும், ஭வ்யமாயிருப்ப தொருபோது பார்த்து ஹிதஞ்சொல்லவேண்டாவோ? என்ன, [இராப்பகல்போய்]-ஸ்ருஷ்ட மானகாலத்திலே இதுக்கு ஹிதம் சொல்லலாவது ஒருபோதுகாண்கிறிலேன்; ஒருபோது ஭கவத்விஷயத்திலும் கைவைத்து, ஒருபோது ஸம்ஸாரயாத்ரையிலும் கைவைக்கும் அள வல்லவிறே, இவளுடைய ப்ராவண்யம். இங்கேயிருப்பது ஒருபோதுஉண்டாகிலிறே ஒன்று சொல்லிமீட்கலாவது? [தேன்மொய்த்த இத்யாதி] - இது மீட்கலாம் விஷயத்திலேயோ அகப்பட்டது. அவ்வூரில் ஭ோக்யதையிலே படிந்தாரையும் மீட்கப்போமோ? தேன் என்று வண்டு. [பூம்பொழிலித்யாதி]-பூத்த பொழிலையும் குளிர்ந்த நீர்நிலங்களையுமுடைத்தான தென்திருப்பேரையில். [வீற்றிருந்த]-பரமபதத்தில் இருப்படங்கலும் தோற்றும்படியிருக்கை

சொல்லிற்றுஇத்யாதி. "இ" என்றதுக்கு ஭ாவம் - தத்தஸ்யஇத்யாதி. "காக்கமாட்டேன்"
என்றதில் வ்யதிரேகஸித்தார்த்த கதநபூர்வகமாக ஶப்தார்த்தம்-முந்துற்றஇத்யாதி. முற்பட்டநெஞ்சே,
பிற்பட்ட என்னோடேகூடி கார்யத்தை நடத்தப்பார்இத்யர்த்த:. இயற்றுகை - எத்னுகையென்றுமாம்.
"போகாது" என்கிறதென், தடுக்கிறதுக்கென்? என்ன - குரவஇத்யாதி. "குரவோ ஜனா:
தாவத்ஸம்கிம்பவிஷ்யந்தக்ஷ: I குரவ:கிம்கரிஷ்யந்தி தக்தாநாம்விரஹாக்நிநா"
இதி பஞ்சமேபஸே அஷ்டாதஸே,(22). ஶலிதமாதல், விவரணமாதல்-ஒன்றுகேட்டுஇத்யாதி. காவே
னென்னுதே, "காக்கமாட்டேன்" என்றதுக்கு஭ாவம் - மீட்கலாமளவும்இத்யாதி. இதுக்கு ஸ்வாப
தேஶம்-ஸம்ஸாரிகள்இத்யாதி. மேலுக்கவதாரிகை - மாட்டேன்என்று இத்யாதி. தாயின் ஸ்தாநத்தில்
மகள், கன்றின் ஸ்தாநத்திலே மகஸ்ஸு. த்ருஷ்டாந்தமுகேநவிவரணம் - கைகேயிஇத்யாதி. "இது
என்றதுக்கு஭ாவம் - இப்போதுஇத்யாதிவாக்யத்வயம். 'என்னைப்போலுமன்று' என்றத்தை இரண்டு
வாக்யத்தாலே விவரிக்கிறார் - எனக்குத்தான்இத்யாதி. ஒழுகும்படி - போம்படி. "இராப்பகல்"
என்றதுக்கவதாரிகை - தந்தாமுடையஇத்யாதி. "இராப்பகல்அங்கே ப்ரவணமாச்சுது" என்கிறவளு
டைய ஭ார்த்த஭ாவம் - ஸ்ருஷ்டமானஇத்யாதி. ஒருபோது காணாமைக்கு ஹேதுவேதென்ன -
ஒருபோதுஇத்யாதி. "போய்" என்றதுக்கு஭ாவம் - இங்கேயிருப்பதொருஇத்யாதி. 'தேன்மொய்த்த'
என்றுதொடங்கி "செங்கனிவாயின் திறத்ததுவே" என்னுமளவுக்கும் ஭ாவம் - இதுமீட்கலாம்இத்
யாதி. விவரணமாதல், "தேன்மொய்த்த" என்றதுக்கு ஭ாவமாதல் - அவ்வூரில்இத்யாதி. "வீற்றி
ருந்த" என்றதுக்கு஭ாவம் - பரமபதத்தில்இத்யாதி. ஸாம்யம்அருளிச்செய்து, ஆதிக்யம்அருளிச்

அவ்விடம்போலுமன்றிறே இவ்விடம்? ஒருவர்கூறையெழுவருடுக்கிறவிடமிறே; அவ்விடத்தோடொக்க இவ்விடத்தையும் திருத்திக்கொண்டிருக்கிறவிடமிறே. [வானப்பிரான்]-இத்தால் கண்ணழிவற்றமேன்மையைச் சொல்லுகிறது. [தென்திருப்பேரெயில் வீற்றிருந்த வானப்பிரான்] - ஸ்ரீவைகுண்டத்திலிருப்பை நமக்காக இங்கேயிருக்கிற உபகாரகன். [மணிவண்ணன்]-மேன்மையில்லையாகிலும் விடவொண்ணாதவடிவிற் படைத்திருக்கிறபடி. [கண்ணன்]-அங்குள்ளார்க்குப்படிவிடும்உடம்பை இங்குள்ளார்க்கு வரையாதேகொடுத்துக்கொண்டிருக்கிறவன். [வானப்பிரானித்யாதி] - மேன்மையளவிடவோ? வடிவழகளவிடவோ? நீர்மையளவிடவோ? [செங்கனிவாயின் திறத்ததுவே]-கிண்ணகத்தில் ஒரு சுழியிலேயகப்படுவாரைப்போலே, வாய்க்கரையிலேயகப்பட்டது; ஆசைப்பட்ட விஷயத்தைக் கரைகண்டதாகிலன்றோ மீளுவது? சிவந்து கனிந்த திருப்பவளத்தினிடையாட்டத்தது: இதுமீள நினைக்கிலன்றோ உங்கள்வார்த்தை கேட்கைக்கு அவகாசமுள்ளது. (௨)

மூன்றாம் பாட்டு.

செங்கனிவாயின்திறத்ததாயும்செஞ்சுடர்நீள்முடிதாழ்ந்ததாயும்
சங்கொடுசக்கரங்கண்டுகந்தும்தாமரைக்கண்களுக்கற்றுத்தீர்ந்தும்
திங்களும்நாளும்விழாவறாததென்திருப்பேரெயில்வீற்றிருந்த
நங்கள்பிரானுக்கென்னெஞ்சந்தோழீ!நாணும்நிறையும்இழந்ததுவே.

ஆ.—(செங்கனிவாயின்.) - உன்னுடைய லஜ்ஜைக்கும் நிறைவுக்கும் போருமோ தனியேபோகை? என்று தோழிசொல்ல, திருப்பவளத்தழகிலே போய்ப் படிந்தும், திருப்பவளத்தில் ஒளி கொழுந்துவிட்டு மேல்நோக்கிவளர்ந்ததோவென்னும்படி நீண்டிருந்த திருவபிஷேகத்தில் அழகிலே தாழ்ந்தும், திருவாழியும் திருச்சங்குமேந்தினவழகைக் கண்டுகந்தும், மற்றோர் அழகுக்கு உரித்தல்லாதபடி தாமரைக்கண்களுக்கு அற்றுத்தீர்ந்தும், என்னுடைய நெஞ்சானது, திங்களும் நாளும் விழாவறாத தென்திருப்பேரையிலே வீற்றிருந்த நங்கள்பிரானுக்கு நாணும் நிறைவும் இழந்தது; இனி எனக்கு நாணும் நிறைவுமுண்டோ? என்று தோழியைநோக்கிச் சொல்லுகிறாள்.

செய்கிறார்- அவ்விடம்போலும் இத்யாதி. அதெங்ஙனேயென்ன அருளிச்செய்கிறார் - ஒருவர்கூறை இத்யாதிவாக்யத்வயத்தாலே. "வானப்பிரான்" என்றதுக்கர்த்தம் - இத்தால்இத்யாதி. "பிரான்" என்றதுக்குஅர்த்தாந்தரம் - ஸ்ரீவைகுண்டத்தில்இத்யாதி. "வானப்பிரான், மணிவண்ணன்" என்ற இரண்டையுங் கூட்டி பாவம் - அங்குள்ளார்க்குஇத்யாதி. "திறம்" என்றதுக்கு - ஸமூஹமாகவர்த்தம் - மேன்மைஇத்யாதி வாக்யத்ரயத்தாலே. அவயவாந்தரங்களிருக்க, "செங்கனிவாய்" என்றவிசேஷித்ததுக்கு பாவம் - கிண்ணகத்தில்இத்யாதி. கிண்ணகம் - ப்ரவாஹம். வாய்க்கரை - அதரம், மேலென்று த்வநி. "திறத்ததுவே" என்றதுக்குபாவார்த்தபாவம் - ஆசைப்பட்ட இத்யாதி. 'ஆசைப்பட்ட' இத்யாதியாலே, "திறம்" என்று - ஸமூஹமாகவருளிச்செய்து, இடையாட்டமாக அர்த்தாந்தரம் - சிவந்துஇத்யாதி. அவதாரணார்த்தம் - இதுமீளஇத்யாதி. நாணக்கருங்குழல்என்றுதொடங்கி, 'அயற்சேரியீர்காள்! இது - என்வசமன்று, இராப்பகல் போய்'இத்யாரப்ய, 'செங்கனிவாயின்திறத்ததுவே; நான்இத்தனிநெஞ்சங் காக்கமாட்டேன்'இத்யந்வயஃ. (௨)

ஒ.—மூன்றாம்பாட்டில், "இங்ஙனேசெய்கை நம்முடைய லஜ்ஜைக்கும் மேன்மைக்கும்போருமோ" என்று தோழிமார்சொல்ல, "அவனுடைய அழகிலே அகப்பட்டு என்னுடைய ஹ்ருதயம் அவற்றையெல்லாம் ஒழிந்தது என்கிறாள். [தாமரைக்கண்களுக்குஅற்றுத்தீர்ந்தும்]-திருக்கண்களுக்கு அநந்யார்ஹசேஷமாயும். [திங்களுமென்று தொடங்கி] - என்றுமொக்க திவ்யோத்ஸவமாய்ச் செல்லுகிறதென்திருப்பேரையிலே நமக்கு அணித்தாகவந்து வீற்றிருந்தருளின மஹோபகாரகனுக்கு.

ப.— அநந்தரம், அவனுடைய அவயவாதிசோபையிலேயகப்பட்ட நெஞ்சு, நாணும் நிறையும் இழந்ததென்று அந்தரங்கையான தோழிக்குச் சொல்லுகிறாள்.

செம் - சிவந்த, கனி - கனிபோலே போக்யமாய், இன் - ஸாந்த்வவாதிகளாலே ஆகர்ஷகமான, வாய் - திருப்பவளத்திலே, திறத்ததாயும்-அபிநிவிஷ்டமாயும், (ஆதிராஜ்யசூசகமாய்), செம் - சிவந்த, சுடர் - ஒளியையுடைத்தாய், நீள் - உத்துங்கமான, முடி - திருவபிஷேகத்திலே, தாழ்ந்ததாயும் - அம்மேன்மைக்கீடாகத்தாழ்ந்து வர்த்திப்பதாயும், சங்கொடுசக்கரம் - அந்தப்பரத்வத்தை நிர்வஹித்துக்கொடுக்கும் திவ்யாயுதங்களை, கண்டு உகந்தும் - ஹர்ஷயுக்தமாயும், தாமரை - அதிசயிதபோக்யமான தாமரைபோன்ற, கண்களுக்கு - திருக்கண்களுக்கு, அற்று - புறம்புதோற்றற்று, தீர்ந்தும் - அநந்யார்ஹமாயுமிருக்கிற, என் நெஞ்சம் - என்நெஞ்சானது, தோழீ - முன்பு ஸம்ஶ்லேஷிக்கைக்கு ஸஹகாரியானதோழீ! திங்களும் - மாஸங்கள்தோறும், நாளும் - திவஸங்கள்தோறும், விழா - உத்ஸவங்கள், அறாத - இடைவிடாமல்செல்லுகிற, தென் திருப்பேரெயில் - திருப்பேரையிலே, வீற்று - தன்வாசி தோன்ற, இருந்த - எழுந்தருளியிருந்தவனாய், நங்கள் - நம்போல்வார்க்கு முகந்தருகிற, பிரானுக்கு - அர்ச்சாவதாரசுலபனான உபகாரகனுக்கு, நாணும் - ஸ்வாபாவிகமான லஜ்ஜையையும், நிறையும் - அடக்கத்தையும், இழந்தது - இழந்தது.

இ.—மூன்றாம்பாட்டில், "ஏதேனும் செய்தாலும் ஸ்த்ரீத்வப்ரயுக்தமான லஜ்ஜையையும் மடப்பத்தையும் நோக்கவேண்டாவோ?" என்று தோழிசொல்ல, அவனுடைய அழகிலே அகப்பட்ட என்நெஞ்சம் அவற்றை இழந்தது என்கிறாள்.

[செங்கனிவாயின்திறத்ததாயும்] - பிரிகிறபோது தன் ஆற்றாமையும் வரவு தாழாமையும் தொடக்கமான தாழ்வுசொல்லுகிற திருவதரத்தில் பழுப்பிலேபாயிற்று நெஞ்சுதோற்றது. அப்போதைத்தாழ்வுகள் ஒரு மஹாபாரதத்துக்குப் போருமென்கை. ஓர்ஶனீயமாய் உபவிநோதிக்கும் கவித்தமுடியைக்காட்டியாயிற்று, என்னை எழுதிக்கொண்டது. தன்சேஷித்வத்தின் எல்லையைக்காட்டி யாயிற்று சேஷத்வத்திலே நிறுத்திற்று. [சங்கொடுசக்கரம் இத்யாதி] - ஆயுதமும் ஆபரணமுமாயிருக்கிற ஆழ்வார்களுடைய சேர்த்தியைக்கண்டு உகந்தும், தன்னோட்டை ஸம்பந்தமெல்லாம் தோற்றும்படி நோக்கின கண்ணழகிலே அநந்யார்ஹசேஷமாயும். [திங்களும் இத்யாதி] - "விழாவொலி" என்று பொதுவாகக் கீழேசொல்லிற்றே; அத்தைவிசேஷிக்கிறது மாஸத்திருநாளும் விசேஷதிவஸங்களுமான திருநாள்உச்சிவீடுவிடாதே செல்லும்ஊர். [நங்கள்பிரான்] - பரவ்யூஹவிபவங்கள்போலன்றிக்கே உகந்தருளினதேசம்; அவற்றுக்குப் பிற்பாடாரைகையாலே நமக்கு உபகரிக்கைக்காகஎன்கை. [என்நெஞ்சம்] - அவ்விருப்பில் ப்ராப்தியையும் சுவட்டையும் அறிந்த என்நெஞ்சம். [தோழீ] - முதல்

உறவு பண்ணுகிறபோது நாணையும் மடப்பத்தையும் தவிர்த்துப் பொருந்தவிட்டவள் அல்லையோ? அப்போது அவை தவிர்க்கைக்குப் படும் பாடு அறிவுதியே: இப்போது நெஞ்சுக்கு நீயும் வேண்டிற்றில்லை.

ஈடு.—மூன்றாம்பாட்டு. சேர்க்குமவளொருத்தியுமேயாக அல்லாத பங்களமடங்கலும் ''நடக்குநிலமன்று'' என்று கைவாங்கிற்று; தோழியானவள் ''இது நமக்குப்போராது காண்: நெஞ்சை ஒருங்கப்பிடித்து யிரித்திருக்கவேண்டாவோ?'' என்ன, ''அந்நெஞ்சுதான் இனிச்செய்வதென்? அவயவாதிஶோபைகளிலே அகப்பட்டு அதுவும் தனக்குள்ள தடங்கலும் இழந்ததுகாண்'' என்கிறாள்.

செங்கனிவாயின் திறத்ததாயும், செஞ்சுடர் நீண்முடித் தாழ்ந்ததாயும், சங்கொடு சக்கரங்கண்டுகந்தும், தாமரைக்கண்களுக்கு அற்றுத்தீர்ந்தும் - நெஞ்சு நாணும்நிறையும் இழந்ததுகாண்! என்கிறாள். சௌபரிஎன்பான் ஒருத்தன் ஒருஸாக்ருதமடியாக ஐம்பது வடிவுகொண்டானிறே. அவ்வளவல்லவிறே, இவள் கலந்தவிஷயம் பண்ணவல்லது. அவன் வ்யக்திதோறும் பரிஸமாப்ய வர்த்திக்குமாபோலேயாயிற்று, இதுவும் அவயவங்கள் தோறும் தனித்தனியகப்படவல்லபடி. ''*ஸ ஏகதா பவதி த்ரிதா பவதி*'' (ஸஏகதா பவதித்ரிதாபவதி) என்கிறபடியே அநுபவியாநின்றால் பிறக்கும் நாநாபாவம், பிரிவிலேநெஞ்சுக்கு உண்டாகாநின்றது. [செங்கனிவாயின் திறத்ததாயும்] - ''பிரிந்துகடக்கவிருக்கிலேன்? உன்கண்வட்டத்திலே கிடக்கிலேன்? இது உன்சரக்கன்றோ?'' என்றுசொல்ல உபக்ரமித்து, தழுதழுத்துவருகிற திருவதரத்திலே யகப்பட்டபடி. அதிலும் அதரத்தில் பழுப்புக்குள் இழியமாட்டுகிறதில்லை. [வாயின்திறத்ததாயும்] - அதுதான் ஒருமஹாபாரதத்துக்குப்

ப்ர.—[*செங்கனிவாய் இத்யாதி*] - *சாந்தோக்யே* [எ-உகு] *ஷட்விம்ஶ்யாம் [illegible]. ''ததேஷ ஶ்லோக: । ந பஶ்யோ ம்ருத்யும் பஶ்யதி ந ரோகம் நோத து:கதாம் । ஸர்வம் ஹ பஶ்ய: பஶ்யதி ஸர்வமாப்நோதி ஸர்வஶ இதி । ஸ ஏகதா பவதி த்ரிதா பவதி பஞ்சதா । ஸப்ததா நவதா சைவ புநஶ்சைகாதஶ: ஸ்ம்ருத: । ஶதஞ்ச தஶ சைகஶ்ச ஸஹஸ்ராணி ச விம்ஶதி: ।''*

மூன்றாம்பாட்டு.—செங்கனிவாயின் இத்யாதி. கீழே எல்லாரையும் ஸம்போதித்து வைத்து, இதிலே ஒருத்தியை ஸம்போதித்ததுக்கு பாவம் அருளிச்செய்யாநின்றுகொண்டு, ''தோழீ - என்னெஞ்சம் - நாணும்நிறையும் இழந்தது'' என்றத்தைப்பற்ற அவதாரிகை - சேர்க்குமவள் இத்யாதி வாக்யத்வயத்தாலே. பங்களம் - கூட்டுப்படை. ஒருங்கப்பிடித்து - ஒருபடிப்படப் பிடித்து.

நெஞ்சு நாணும்நிறையும் இழந்ததுக்கு ஹேது - செங்கனிவாயின் இத்யாதி. ஒருநெஞ்சே அநேகஅவயவங்களை யநுபவிக்கக் கூடுமோ? என்ன- அநேகம் வடிவுகொள்ளுகையாலே கூடுமென்னுமத்தை ஸத்ருஷ்டாந்தமாக அருளிச்செய்கிறார் - சௌபரி இத்யாதி. பலவடிவுகொள்ளாவிடிலும் அநேகாவயவங்களிலே யகப்படக்கூடுமென்று பரிஹாராந்தரத்தை ஸத்ருஷ்டாந்தமாக அருளிச்செய்கிறார் - அவன் வ்யக்திதோறும் இத்யாதி. அநேகம் வடிவுகொண்டதுக்கு த்ருஷ்டாந்தாந்தரம் - ஸ ஏகதா இத்யாதி. நாநாபாவம் - அநேக ஶரீரபரிக்ரஹம். இதுக்கு மூன்றும் த்ருஷ்டாந்தம்-மேலே 'அம்ருதமதநத்தில்' இத்யாதி வாக்யத்திலே கண்டுகொள்வது. சிவப்புத்தோற்றுவது வார்த்தையாலேயாகையாலே, அவனுடைய உக்தியை யருளிச்செய்கிறார் - பிரிந்து இத்யாதி. கண்வட்டத்திலே - கண்முன்னே. ''வாயின் திறத்ததாயும்'' என்றதுக்குபாவம் - அதிலும் இத்யாதி. 'பிரிந்துகிடக்க' இத்யாதிவாக்யத்திலே, ''திறம்'' என்று - இடையாட்டமாக அருளிச்செய்து, ஸமூஹமாகவர்த்தாக்

போருமாகாதே? [சேஞ்சுடர்இத்யாதி] - பிரிவை ப்ரஸங்கித்துப் பேரநின்றபோது, ஆதிராஜ்ய ஸூசகமாய் "உபயவிபூதிநாயன்" என்று தோற்றும்படியிருக்கிற திருவபிஷேகத்தைக் கண்டு தறைப்பட்டுக் காலைப்பிடித்தது. [சங்கோடுஇத்யாதி] - பிரிந்தால் விரோதியைப் போக்குகைக்குப்பரிகரமாய், வைத்தகண் மாறவொண்ணாத அழகையுடையஆழ்வார்களைக் கண்டுகேந்தது. [தாமரைக்கண்களுக்கற்றுத்தீர்ந்தும்] - "தவாஸ்மி"(தவாஸ்மி)என்றுசொல் லப்புக்கு மாட்டாதொழிந்தால், குறையும் தலைக்கட்டின திருக்கண்களுக்காயிற்று அநந் யார்ஹமாக எழுதிக்கொடுத்தது. பிரிகிறபோது நோக்கினநோக்கிலே, பிறர்க்காகாதபடி உஜ்ஜீ விக்கப்பண்ணினான். அம்ருதமதநத்தில் தான் எட்டுவடிவுகொண்டாற்போலேகாணும், இதுவும் விஷயாதீநமாகப் பலவடிவு கொள்ளுகிறபடி. அவனுடைய ஐஶ்வர்யமடைய இதுக்குஉண்டாகக்கடவதிறே. [திங்களும்நாளும்இத்யாதி]- உத்தேஶ்யபூமியிலே நித்யோத் ஸவம் சேல்லாநிற்க, அது இங்கே நம்கண்வட்டத்தே துஃகத்துக்கு இலக்காயிருக்குமோ! மாஸத்திருநாளும் நித்யத்திருநாளுமோவாத. [வீற்றிருந்த நங்கள்பிரானுக்கு] - இவ்விருப்பு நமக்குஆக்கிக்கொண்டிருக்கிற உபகாரகனுக்கு. பரத்வம் நித்யமுக்தர்க்கு; வ்யூஹம் முக்த ப்ராயர்க்கு; விபவம் புண்ணியம் பண்ணினார்க்கு; இவ்விருப்பு, பாபம் பண்ணின ஸம் ஸாரிகளுக்காகஇறே. [என்னெஞ்சம்] - அவனுடைய உபகாரமும் ஸௌந்தர்யாதிகளும் வயிரவுருக்காகை. நேஞ்சினுடைய வன்மையறிதியிறே. நேஞ்சும் அவனும் ஒரு கோவை யிலே அடைப்புண்டபடி. [நங்கள்பிரானுக்கு என்னெஞ்சம்] - "ராகவோர்ஹதி வைதேஹீம்" (ராகவோர்ஹதிவைதேஹீம்) என்னுமாபோலே [தோழீ] - நேஞ்சைத்

தாம் - அதுதான் இத்யாதி. திருவபிஷேகத்தில் வருகைக்கு ப்ரஸங்கம் அருளிச்செய்கிறார் - பிரிவை இத்யாதி. "தாழ்ந்து" - தறைப்பட்டு. சங்கொடு சக்கரம் கண்டுகேக்கைக்கு ஹேது அருளிச்செய்கிறார் - பிரிந்தால் இத்யாதி. "தாமரைக்கண்கள்" இத்யாதிக்கு பாவம் - தவாஸ்மி இத்யாதி. பாவாந்தர மாதல், விவரணமாதல் - பிரிகிறபோது இத்யாதி. அநேக ஶரீரபரிக்ரஹம் பண்ணினதுக்கு மூன்றும் த்ருஷ்டாந்தம்-அம்ருதமதநத்தில் இத்யாதி. 'எட்டுவடிவென்று' தேவர்கள், ராக்ஷஸர்கள், வாஸுகி, மந்தரம், இவற்றுக்கெல்லாம் அந்தர்யாமியாய்; கூர்மம், அந்தரிக்ஷாவதாரம், உபேந்த்ரன், மலையைச் சாயாமல் பற்றினவனுமா யிருக்கிறபடி சொல்லுகிறது. அவன் சக்தி இதுக்குண்டாகக் கூடுமோ? என்ன - அவனுடைய ஐஶ்வர்யம் இத்யாதி. "திங்களும்" இத்யாதிக்கு பாவம் - உத்தேஶ்யபூமி யிலே இத்யாதி. அது-மநஸ்ஸு. அறாத - ஓவாத, விச்சேதமில்லாத என்றபடி. இவ்விருப்பு நமக்கா யிருக்குமோ? என்ன - பரத்வம் இத்யாதி. "செங்கனிவாயின்திறத்ததாயும், நங்கள்பிரான்" என் கிற பதங்களைக்கடாக்ஷித்து, "என்னெஞ்சம்" என்றதுக்கு பாவம் - அவனுடைய இத்யாதி. வயிர வுருக்கு - வஜ்ரத்தை த்ரவீபவிப்பிக்கை. ஸ்த்ரீத்வாபிமாநத்தாலே "ஒருவர்க்கும் ஈடுபடோம்" என்றிருந்த நெஞ்சையும் உருக்குகை என்றபடி. என்னெஞ்சம் - கடிநமானநெஞ்சமென்றபடி. "என்னெஞ்சம்" என்றத்தோடே "தோழீ" என்றதுக்குபாவம் - நேஞ்சினுடைய இத்யாதி. "நங் கள்பிரான், என்னெஞ்சம்" என்று - அவனையும் நெஞ்சையும் தனக்கு சேஷமாகச் சொல்லுகையாலே பாவம்-நேஞ்சும்அவனும் இத்யாதி.என்னோட்டை ஸம்பந்தம் ஒத்திருக்கையாலே-ஒருகோவையிலே என்கிறது. இத்தால் - அவனோபாதி எனக்கு பாரதந்த்ரமான நெஞ்சென்றபடி; "என்னெஞ்சம்" என்றதுக்கு - பகவத் ப்ரவணமான நெஞ்சென்று அர்த்தாந்தரம் - ராகவோர்ஹதி இத்யாதி. "துல்யஶீலவயோவ்ருத்தாம் துல்யாபிஜநலக்ஷணாம் । ராகவோர்ஹதி வைதேஹீம் தம் சேயம் அஸிதேக்ஷணா ।" (ஸுந். ஹநூமாந். (௧௬ - ௫)) அதாவது - அவன் ஆஶ்ரிதவிஷயத்தில் அத்யந்தம் ஸ்நிக்தனாயிருக்கும். இது,முன்துற்றநெஞ்சாய்பகவத்விஷய ப்ர வணமாயிருக்கும்; ஆகையாலே பரஸ்பர ஸத்ருஶமாயிருக்குமென்றபடி,'நெஞ்சினுடையவன்மையறிதி

திருத்திக்கலப்பிக்கப்பட்ட வருத்தம் அறிதியிறே. இப்போது நீயுங்கூட எதிர்த்தலை யாம்படியிறே வாய்த்தது. [நாணும்நிறையும் இழந்ததுவே] - இது இழவாதது உண்டோ? அரைக்ஷணம் அவன்பேரநின்று படுத்தினபாடெல்லாம் என்தான்!! நான் தன்னையிழந்தேன்: தாய்மார் தோழிமார்கள் என்னையிழந்தார்கள்: நெஞ்சு நாணும் நிறையும் இழந்தது. (௩)

நான்காம் பாட்டு.

இழந்தஎம்மாமைத்திறத்துப்போனஎன்னெஞ்சினாரும்அங்கேயொழிந்தார்
உழந்தினியாரைக்கொண்டென்உசாகோ! ஓதக்கடலொலிபோல‡ எங்கும்
எழுந்தநல்வேதத்தொலிநின்றோங்கு தென்திருப்பேரெயில்வீற்றிருந்த
முழங்குசங்கக்கையன்மாயத்தாழ்ந்தேன் அன்னையர்காள் என்னையென் முனிந்தே.

ஆ.—(இழந்த) - "யுக்தமோ, அயுக்தமோ?" என்று நிரூபியாதே போகப் பெறலாமோ என்று அன்னைமார் தன்னைமுனிய, இழந்த எம் மாமைத்திறத்துப்போன என்னெஞ்சினாரும் அவனுடைய அழகைக் கண்டு என்னைமறந்து, வாராதே அங்கே யொழிந்தார்; இனி இங்கிருந்து என்னபுருஷார்த்தம் ஸாதிப்பது? ஆரோடே எத்தை நிரூபிப்பது? ஓதங்கிளருகிற கடலினுடைய கோஷம்போலேயிருந்த மங்களமான வேத கோஷத்தாலே ஸம்ருத்தமான தென்திருப்பேரையிலே வீற்றிருந்தருளினவனுடைய, * நண்ணுவசுரர்நலிவெய்த நல்லவமரர் பொலிவெய்தும்படி முழங்குகிற ஸ்ரீபாஞ்சஜந்யத்தை ஏந்தின அழகுவெள்ளத்திலே புக்கழுந்தினேன்; இனி, என்னைமுனிந்து ப்ரயோஜநமென்? என்று தன்னுடைய அன்னைமாரைநோக்கிச் சொல்லுகிறாள்.

ஒ.—நாலாம்பாட்டில், ஏதேனுமொன்றைக்கொண்டுவருந்திபாகிலும் போது போக்காதே இங்ஙனே செய்யலாமோ?" என்று பொடிகிற தாய்மாரைக்குறித்து, 'என் நெஞ்சும் அவனாலே அபஹ்ருதமாயிற்று, நான் எத்தைக்கொண்டு போதுபோக்குவது?' என்கிறாள். [இழந்த என்று தொடங்கி] - இழந்த என்னுடைய நிறத்தை மீட்கவேணுமென்றுபோன என்னெஞ்சும் பரிபராஜகுலமும்தானுமாய் என்னைமறந்து அங்கேநின்றுவிட்டது. இனி வருந்தி ஆரைக்கொண்டு, எத்தைச்சொல்லிப் போதுபோக்குவேன்? [முழங்கென்று தொடங்கி] - வேதத்வநியாலே எப்போதும் முழங்காநின்ற ஸ்ரீபாஞ்சஜந்யத்தாலே அலங்க்ருதமான திருக்கையையுடைய அவ்வழகிலே நிமக்னையானேன்.

யிறே' என்றதுக்குச்சேர ஭ாவம் - நெஞ்சைத்திருத்தி இத்யாதி. இதினுடைய வன்மையைத் தோழிக்குஅறிவிக்கிறவளுடைய ஹார்த்த஭ாவம் - இப்போதுநீயும் இத்யாதி. வாய்த்தது - பலித்தது. நாணும்நிறையுமிரண்டும் - மாமைமுதலானவற்றுக்கும் உபலக்ஷணமாக்கி ஭ாவம் - இதுஇழவாததுண்டோ என்று. அவனுடைய க்ஷணகால விஸ்லேஷத்தால் தான் பட்ட படிகளைச்சொல்லி ஈடுபடுகிறாள் - அரைக்ஷணம் இத்யாதி நாலுவாக்யத்தாலே. விவரணம் - நான் தன்னை இத்யாதி. 'தோழீ! என்னெஞ்சம் - திங்களும்' என்று தொடங்கி, 'நங்கள்பிரானுக்கு - செங்கனிவாயின்' இத்யாரப்ய, 'அற்றுத்தீர்ந்தும் - நாணும்நிறையுமிழந்தது' இத்யந்வயஃ. (௩)

ப.—அநந்தரம்,'அவனுடைய குணசேஷ்டிதங்களிலே யகப்பட்ட என்னெஞ்சும் அங்கேபோயிற்று; இனி யாரைக்கொண்டு போதுபோக்குவது?' என்று, நியமிக்கிற தாயாரைக் குறித்துச் சொல்லுகிறாள்.

இழந்த - முன்பேயிழந்த, எம் - என், மாமைத்திறத்து - நிறத்துக்காக, போன-, என்-, நெஞ்சினாரும்-, அங்கே - அங்கே யாஸந்நராய், ஒழிந்தார் - ராஜகுலத்தாலே என்னையொழிந்து நின்றார்; இனி-, (அந்தரங்கமான நெஞ்சுபோனபின்பு), உழந்து - அலமந்து, ஆரை - இவ்வநுபவ†ஸிரையில்அநபிஜ்ஞரானாரை, கொண்டு-, என்- (அவர்களுக்கு நிலமல்லாத) எந்தஅர்த்தத்தை, உசாகோ-உசாவுவேன்? (உசாவவிருக்கிற நான்காணும்), ஓதம் - திரைக்கிளப்பத்தை யுடைத்தான, கடலொலிபோல-, எங்கும் - ஸர்வப்ரதேசத்திலும், எழுந்த - கிளர்ந்த, நல்வேதத்தொலி - ஸாமவேதகோஷமானது, நின்று - (எக்காலத்திலும்) நின்று, ஓங்கு - கிளர்ந்துவருகிற, தென்திருப்பேரெயில் - தென்திருப்பேரையிலே, வீற்றிருந்த - எழுந்தருளியிருப்பானாய், முழங்கு- (அந்த வேதகோஷ ப்ரதித்வநியாலே)முழங்குகிற, சங்கம்-ஸ்ரீபாஞ்சஜந்யத்தை, கையன்- திருக்கையிலே யுடையவனுடைய, மாயத்து - ஆஸ்சர்யமான ஶீலஸௌலப்யாதி ப்ரகாசக சேஷ்டிதங்களிலே, ஆழ்ந்தேன் - அவகாஹித்தேன்; அன்னையர்காள் - (''மூப்பும் முறையுமுடையோம்'' என்றிருக்கிற) அன்னைமீர்! என்னை - (துணையற்று ஈடுபட்டிருக்கிற) என்னை, முனிந்து-, என் - என்ன ப்ரயோஜநமுண்டு?

இ.—நாலாம்பாட்டில், '' ஏதேனுமொன்றைக்கொண்டு வருந்தியாகிலும் போதுபோக்க வேண்டாவோ? '' என்று நியமிக்கிற தாய்மாரைக்குறித்து, 'என்நெஞ்சம் அவனாலே அபஹ்ருதமாயிற்று; எத்தைக்கொண்டு போதுபோக்குவது?' என்கிறாள்.

[இழந்த இத்யாதி] - நிறந்தானேபோயிற்று''அவனை நிறங்கொள்ளவேணும்'' என்று கோலியிருந்த என்னுடைய நிறத்தையிறே இழந்தது. ''அந்நிறத்தை மீட்டுக்கொண்டு வருகிறேன்'' என்று போன என்மநஸ்ஸாகிறதும் என்னை மறந்து அங்கே அடியுற்றது. ''அவன் இழவாளனாய் நாம் இழவு பரிஹரிக்கையின்றிக்கே, நாம் இழவாளர் ஆவதே!'' என்று அபிமாநித்துப்போன நெஞ்சை, வினைத்தலையிலே படையறுத்துக் கொள்வாரைப்போலே படையறுத்துக்கொண்டான். லங்கையை அரணழிக்கைக்கு ஸ்ரீவிபீஷணாழ்வானைப் பெற்றாற்போலே, என்னுடைய ஸ்த்ரீத்வமாகிற அரண் அழிக்கைக்கு உள்ளாள் பெற்றோம் என்று நெஞ்சைப் படையறுத்துக்கொண்டான். லங்கையின் அளவன்றிக்கே ஸ்த்ரீத்வாபிமாநத்துக்கு அவன் அஞ்சியிருப்பது. [நெஞ்சினார்] - அங்குத்தை ராஜகுலத்தாலே என்னைமறந்தார். பெற்றாரைக்கொண்டு வ்ருத்தகீர்த்தநம் பண்ணியாகிலும்தரிக்கவேண்டாவோ? என்ன, [உழந்துஇனிஇத்யாதி]-[உழந்து]-வருந்தி. [இனி] - என்நெஞ்சைஇழந்தபின்பு. வருந்தினால்தான் வார்த்தை கேட்பாருண்டோ? கேட்பாருண்டானால்தான் என்னவார்த்தைசொல்லுவது? [ஓதக்கடலொலிபோல] - திரைக்கிளர்த்தியையுடைய கடல்போலே வேதத்வநிவந்து செவிப்படாநிற்க,வேறுபோது போக்கப்போமோ? [எங்கும்எழுந்த]-ஸார்வத்ரிகமாகப்பரவாநிற்கை. இதுநடையாடாததோர் இடம்பெற்றாலிறே போதுபோக்கி தரிக்கலாவது. [நல்வேதத்தொலி]-ஸாமவேதத்வநி. ''வேதா₃நாம் ஸாமவேதோ₃ஸ்மி'' [நின்றோங்கு] - இடைவிடாதே மிக்குநிற்கை. [முழங்குசங்கக்கையன்] - வேதத்வநி ஸ்ரீபாஞ்சஜந்யத்திலே ப்ரதித்வநிக்க, அதில்

† ஸிரை - யாரை.

ப்ரதித்வநியும் வேதவோஷமுமாய் இரட்டித்துச்செல்லாநிற்கை. [மாயத்தாழ்ந்தேன்]-அவனுடைய ஸ்மிதவீக்ஷணாதிகளிலே மீளவொண்ணாதபடி அகப்பட்டேன். தாய்மார் என்கிற முறையைக்கொண்டு முனிந்தால் என்னப்ரயோஜநமுண்டு? ப்ராப்தியையும் மூப்பையுங்கொண்டுமுனியஅமையுமோ? ப்ரயோஜநம் வேண்டாவோ? அழுகிலேயிடுபட்டாரை ஹிதம் சொல்லி மீட்கவோ?

ஈடு.—நாலாம்பாட்டு. "ஏதேனுமொன்றைக்கொண்டு வருந்தியாகிலும் போதுபோக்காதே இங்ஙனே செய்யலாமோ?" என்று பொடிகிற தாய்மாரைக்குறித்து, 'என்னெஞ்சம் அவனாலே யபஹ்ருதமாயிற்று: நான் எத்தைக்கொண்டு போதுபோக்குவது?' என்கிறாள்.

[இழந்த எம்மாமைத்திறத்துப்போன]-நாணும்நிறையும் இழந்ததென்றவிடம்-உபலக்ஷணமாகாதே; அநுஸாஷணத்திலே நிறமிழந்தமையும் தோற்றச்சொல்லாநின்றாள். (இழந்தவெம்மாமை யென்று அநுஸாஷணத்திலே - மாமையென்கிற நிறம் பூர்வமேயிழந்தமை தோற்றுகிறது; ஆகையாலே, நாணும்நிறையுமென்று உபலக்ஷணம்.) "அத்தலையிலுள்ளது நாம் ஸர்வஸ்வஹரணம்பண்ணுகை போய், நமக்கு உள்ளதிலேயொன்றைச் சிலர் கொடுபோகையாவதேன்?" என்று அபிமாநித்து, "இப்போதே மீட்டுக்கொடுவருகிறேன்" என்று த்வரித்துப்போன நெஞ்சும் அங்கே படையற்றது. [என்னெஞ்சினாரும் அங்கேயொழிந்தார்] - அங்கேபுக்காரையும் தம்படியாக்கிக்கொண்டார். "பிரியேன்" என்று சொன்னவரிறே இத்தலையைப்பிரிந்து நினையாதிருக்கிறார். [நெஞ்சினார்] - அலைந்த பரிவட்டமுந் தாமுமாய் அணுக்கடித்துத் திரியாநின்றாராயிற்று. [நெஞ்சினார்] "ப்ரவேக்ஷ்யாமிசவாஹிநீம்" (ப்ரவேக்ஷ்யாமிசவாஹிநீம்) என்று வாசித்தலையில் வ்யாபரிப்பேன் நான் என்றானிறே ஸ்ரீவிபீஷணாழ்வான். [இழந்த இத்யாதி] - நிறந்தொடக்கமான இழந்தவையடைய மீட்பதாகச் சொல்லிப்போன நெஞ்சு ...

நாலாம்பாட்டு.—இழந்த இத்யாதி. "என்னெஞ்சினாரும் அங்கேயொழிந்தார். உழந்தினி யாரைக்கொண்டென்னுசாகோ" என்கிற பதங்களைக் கடாக்ஷித்து அவதாரிகை - ஏதேனும் இத்யாதி. பொடிகிற - வைகிற.

மாமை - நிறம். கீழிற்பாட்டிலே நிறமிழந்தமை சொல்லிற்றே இப்போதநுபாஷிக்கைக்கென்ன - நாணும் இத்யாதி. இதுக்கு நியாமகமேதென்ன - அநுஸாஷணத்திலே இத்யாதி. "ஒழிந்தார்" என்னுமளவுக்கும் ஸப்தார்த்தமருளிச்செய்யாநிற்கச்செய்தே, "மாமைத்திறம்" என்றதுக்கு, மாமைநிமித்தமாக என்று அர்த்தம்அருளிச்செய்கிறார் - அத்தலையில் இத்யாதி. சப்தார்த்தம் - அங்கே புக்காரையும்இத்யாதி. படையற்றதென்றது - கிட்டிற்றென்றபடி. தம்படியேதென்ன - பிரியேன் இத்யாதி. "நெஞ்சினார்" என்ற பூஜ்யோக்திக்குபாவம் - அலைந்த இத்யாதி. அணுக்கடித்து-அந்தரங்கராய் அணுக்கடிக்கை - அந்தரங்கயாகை. இதுஅணுக்கடித்துத் திரிகிறதுக்கு த்ருஷ்டாந்தம் - ப்ரவேக்ஷ்யாமி இத்யாதி. "ராக்ஷஸாநாம் வதேஸாஹ்யம் யுத்தே ப்ராணாநவேக்ஷணே। கரிஷ்யாமியதாப்ராணம் ப்ரவேக்ஷ்யாமிசவாஹிநீம்" இதி ராமம் ப்ரதிவிபீஷணஃ (யுத். ௧௧ - ௨௩) தூசித்தலை - ஸேநாமுகம். "திறம்" என்றதுக்கு - ஸமூஹமாக அர்த்தாந்தரம்விவக்ஷித்து, ஸப்தார்த்தம் -நிறந்தொடக்கமான இத்யாதி. கீழே, "அங்கேபுக்காரையும் தம்படியாக்கிக்கொண்டார்" என்கைக்கு, உன்கார்யத்துக்காகப் போனநெஞ்சு அவன்வார்த்தைகேட்கைக்கு ஹேதுவேதென்ன - வினைத்தலையிலே இத்யாதி. வினைத்தலை-யுத்தமுகம். படையறுக்குமாபோலே-எதிர்த்தலையில்ஸேனை

யாபத்தியுங் கோடுத்தார். (வினைத்தலையில் படையறுக்கையாவது - யுத்தஸமயத்திலே எதிர்த்தலையில் சேனையைத் தன்பக்கலிலே யாக்கிக்கொள்ளுகை.) "**ராஜாஹேஷ விபீஷண:**"(ராஜாஹ்யேஷவிபீஷண:) என்னுமாபோலே வரிசைபெற்றுத் திரியாநின்றார். ராவணன் முன்னே, அவன்சோற்றையுண்ட ஶுகஸாரணர்கள் விபீஷணாழ்வானை, "ராஜா" என்பானேன் ? என்னில்,—எழுத்துஉருவழியாதேகிடந்தாலும், புள்ளிகுத்தினால் அத்தைக்கழித்து மேலேபோமாபோலே, முடிகோடுக்குமவர்கையாலே வைக்கையாலே. என்றாலும், ராவணன்க்ரௌர்யத்தை யறிந்துவைத்துக் கூசாதே இங்ஙன் சொல்லுவானேன் ? என்னில்,—"சித்ரம்குத்துமோ" என்றிருந்தார்கள். "நிலவரைக் கோண்டு வினைசெய்யலாம்"என்று தரங்கோடுப்பரிறே. [என்னெஞ்சினுருமங்கேயொழிந்தார்] - நிறம்மீட்கப்போனாரும் நிறங்கோடுபோனாரோடோத்தார். இத்தலையில் வெறுமை கண்டு போனதுவும் பௌஷ்கல்யங்கண்டுபோனவனோடு ஒத்தது. போவார்போவாரெல்லாம் இத்தலைக்குக் காரியமாகக்காணும் போம்போது சொல்லிப்போவது ! அவன்தானே " இத்தலையூற்றிருக்கவேணும்"என்று போனானென்; இதுஇத்தலையில் வெறுமைகண்டு, நோக்குகைக்காகப் போயிற்று.நாம்தாம் அவர்களை வெறுக்கிறதேன்? "**நோபஜநம்ஸ்மரந்**"(நோபஜநம்ஸ்மரந்) என்று புக்கார் மீளாத தேசமானபின்பு.[அங்கேயொழிந்தார்] - "கடலுக்குக் குறைநிரப்பவேணும்" என்று திரியாநின்றார். [உழந்துஇத்யாதி] - பண்டு

ப்ர.—தமேவ [உஅ] ராஜஸேநாதிபத்யஸ்ய ஸாரணாதிகாரஸ்ய ஸ்திதிம் ராவணம் ப்ரதி ஸாரண:, "யஸ்ய ஸைந்யஸ்ய பக்ஷம் ராஜஸ்ரீஸ்ருதிஷ்டதி। ரக்ஷோகணபரிக்ஷிப்தோ ராஜாஹ்யேஷ விபீஷண: ॥ உஎ ॥ ஸ்ரீமதா ராஜராஜேந லங்காயாமபிஷேசித: । த்வாமேவ ப்ரதி ஸம்ரப்தோ யுத்தாயைஷோபிவர்த்ததே॥

யைத்தன்வசமாக்கிக்கொள்ளுமாபோலே என்றபடி. லங்கையை யழிக்கைக்கு ஸ்ரீவிபீஷணாழ்வானை அபிஷேகித்ததை இதுக்கு த்ருஷ்டாந்தமாக அருளிச்செய்கிறார் - ராஜா இத்யாதி. "யஸ்ய ஸைந்யஸ்ய பக்ஷம் ராஜஸ்ரீஸ்ருதிஷ்டதி। ரக்ஷோகணபரிக்ஷிப்தோராஜாஹ்யேஷவிபீஷண:" இதி ராவணம்ப்ரதி ஸாரண:. ராவணன்முன்னே இவனை "ராஜா" என்னக்கூடுமோ? என்று சங்கித்து பரிஹரிக்கிறார் - ராவணன்இத்யாதி வாக்யத்வயத்தாலே. புள்ளிகுத்துகை - அக்ஷரத்தின் மேலே குத்துகை. முடிகொடுக்குமவர்கையாலேயென்றது - ப்ராப்தராய் ஶக்தரானவர்கையாலே என்றபடி. 'வைக்கையாலே'என்ற அநந்தரம் என்றார்களென்றுசேஷம். இப்படிச்சொல்லில் அவன் நலியானோவென்று சங்கித்துப் பரிஹரிக்கிறார் - என்றாலும் இத்யாதி. உஹயர்க்கும் வரிசைகொடுக்கைக்கு ஹேதுவேதென்ன - நிலவரை இத்யாதி. லங்கையை யழிக்கைக்கு "நிலவர்" என்று பெருமான் விபீஷணாழ்வானுக்கு வரிசை கொடுத்தார்; இவள் ஸ்த்ரீத்வாபிமாநத்தை யழிக்கைக்கு "நிலவர்" என்று நெஞ்சுக்குஇவன் வரிசைகொடுத்தானென்றபடி. "அங்கேபுக்காரையும்" இத்யாதிவாக்ய விவரணம் - நிறம்மீட்க இத்யாதி. ஏதத்விவரணமாதல், ஸாவாந்தரமாதல் - இத்தலையில் வெறுமை இத்யாதி. இப்போது வாராதேயிருந்தவர்களை இவளுக்காகப்போனார்களென்னக் கூடுமோ ? என்ன - போவார்போவார் இத்யாதி. ஆனால் அவன் எதுக்காகப்போனான் ? நெஞ்சு எதுக்காகப்போயிற்று ? என்ன - அவன்தானே இத்யாதிவாக்யத்வயம். ஊற்றிருக்கவென்றது - அபிநிவேசம் அதிசயிக்கவென்னுதல் ; உந்மஸ்தகப்ரீதிவிஸ்லேஷத்தாலே ஸாத்மித்து ஸ்வஸ்தமாயிருக்கவென்னுதல். வெறுமை - ஒன்றுமில்லாமை. "அங்கே" என்றதுக்கு - தேசமென்று விவக்ஷித்து ஸாவம் - நாம்தாம் பாதி. "அங்கே" என்றது - ஈஶ்வரவிஷயமாக விவக்ஷித்து ஸாவாந்தரம் - கடலுக்கு இத்யாதி.

நெஞ்சிழந்தவர்களும் வருந்தி யரித்துச் சிலரோடே வ்ருத்தகீர்த்தநம்பண்ணி யிருந்திலர்களோ? நீயும் அப்படியே வருந்தியாகிலும் சிலரோடே காலக்ஷேபம் பண்ணவேண்டாவோ? என்ன, [இனி-உழந்து-ஆரைக்கொண்டு-என்-உசாகோ] - உழந்து—வருந்தி. [இனி] - என்னெஞ்சை இழந்தபின்பு. இனி து:கப்பட்டு ஆரோடேகூட எத்தைச் சொல்லி நான் காலம்போக்குவது? லங்கையிலே இருந்தவளுக்கு ஒருவனுதல் ஒருவன்குடியாதல் உண்டு; அதுவுமில்லையே எனக்கு! "ஜ்யேஷ்டாகந்யாநலாநாம விபீஷணஸுதா" (ஜ்யேஷ்டாகந்யாநலாநாமவிபீஷணஸுதா) - இங்கேயிருந்தே அங்குத்தைக்குஆவாளொருத்தி காண்! "கபே" (கபே) -ஒரோஅவஸ்த்தைகளிலே நீ உதவுமாபோலேகாண் இவளும் ஒரோதசைகளிலே யுதவவல்லபடி. பலசொல்லியேன் உன்னோடொப்பாளொருத்தி? [ஆரைக்கொண்டென்னுசாகோ] - தேஹாத்மாபிமாநிகளான ஸம்ஸாரிகளைக்கொண்டு போதுபோக்கவோ? "ஈச்வரோஹம்" (ஈச்வரோஹம்) என்றிருக்கிற ப்ரஹ்மேசாநாதிகளைக்கொண்டு போதுபோக்கவோ? பகவதநுபவத்திலே அநந்யபரராயிருக்கிற நித்யஸூரிகளைக்கொண்டு போதுபோக்கவோ? இத்தலையை உரிகூறைகோண்டுபோனவனைக் கொண்டு போதுபோக்கவோ? ஆரைக்கொண்டு எத்தை யுசாவுவது? [என்னுசாகோ] - "ஸமாத்வாதஸ்த்ராஹம்" (ஸமாத்வாதஸ்த்ராஹம்) என்றுசொல்லலாமிறேயவளுக்கு. அப்படியே நமக்கும் ஏதேனுமுண்டோ? கலவியில் அபர்யாப்தியிருக்கிறபடி. [ஆரைக்கொண்டு] - நெஞ்சுபோலே நமக்குப் பாங்காயிருப்பாருண்டோ? ஆனல். செய்யவடுப்பதேன்? என்னில், [ஓதக்கடல்இத்யாதி]-அங்குத்தையது இங்கே நடையாடாநின்றபின்பு,நாமும்அங்கேபோய்ப்புகுமத்தனை.

[இனியாரைக்கொண்டென்னுசாகோ] - ஸுந்தரகாண்டே [௩௭], "விபீஷணேந ச ப்ராத்ரா மம நிர்யாதநம் ப்ரதி । அநுநீத: ப்ரயத்நேந ந ச தத் குருதே மதிம் ॥௯॥ ப்ரதிப்ரதாநம் ஹி ராவணஸ்ய ந ரோசதே । ராவணம் மார்கதே ஸங்க்யே ம்ருத்யு: காலவசம் கதம் ॥௰॥ ஜ்யேஷ்டாகந்யாநலாநாம விபீஷணஸுதா கபே । தயா மமேதமாக்யாதம் மாத்ரா ப்ரஹிதயா ஸ்வயம் ॥௧௧॥

மேலுக்கவதாரிகை - பண்டுநெஞ்சு இத்யாதி. பண்டுநெஞ்சிழந்தவர்கள் - ஸ்ரீஜநகராஜன்திருமகள் முதலானார். சிலரோடே - த்ரிஜடாதிகளோடே "ஆரைக்கொண்டு" என்றதுக்கு - பிராட்டியில் வ்யாவ்ருத்தி - லங்கையிலே இத்யாதி. ஒருவனுதல் என்றது - ஸ்ரீவிபீஷணாழ்வானை; திருவடியையாதல். ஒருவன் குடியாதல் என்றது - த்ரிஜடையை. அப்படி யுண்டாயிருந்ததோ? என்ன - ஜ்யேஷ்டா இத்யாதி. "ஜ்யேஷ்டாகந்யாநலாநாமவிபீஷணஸுதாகபே । தயா மமேதமாக்யாதம் மாத்ரா ப்ரஹிதயா ஸ்வயம்" இதி ஹநுமந்தம்ப்ரதி ஸீதா. "நாம" என்கிற ப்ரஸித்திக்கர்த்தம் - இங்கேயிருந்தே இத்யாதி. அங்குத்தைக்கு - பெருமாளுக்கு. ஸ்வாபதேசம் - தேஹாத்மா இத்யாதி. உரிகூறைகொண்டு - வஸ்த்ரத்தை யுரிஞ்சுகொண்டு. † கூறை - வஸ்த்ரம். வஸ்த்ரம்முதல்கொள்ளையிட்டுக்கொண்டென்றபடி. பிராட்டியில் வ்யாவ்ருத்தி - ஸமாத்வாதஸ இத்யாதி. அப்படி இவளுக்குக் கீழ்ஒருகாலும் ஸம்ச்லேஷமில்லையோ? என்ன - கலவியில் இத்யாதி. அந்யாபதேசத்திலே அர்த்தம் - நெஞ்சுபோலே இத்யாதி. "இனி" என்றதுக்கர்த்தமாதல். "ஓங்கு" என்றதுக்குஹாவம் - அங்குத்தையது இத்யாதி; அதாவது - பரமபதத்திலே யுண்டான ஸாமக்ராநம் இங்கே நடையாடாநின்றபின்பு என்றபடி. ஓதக்கடல் - திரைக்கிளப்பத்தையுடைய கடல். ஓதங்கிளர்ந்த - அலையெழுந்த என்னுதல், ஸம்ருத்தமான என்னுதல். தென்திருப்பேரெயிலுள்ளார்

† உரி-வஸ்திரம் என்ற இருப்பின் நலம்: அன்றி, உரி கூறைகொண்டு என்ற மூலபாடத்தைக்கொண்டு, கூறை - வஸ்திர மெனினுமாம்.

ஓதங்கிளர்ந்தகடல்போலேயிருந்துள்ள வேதகோஷமானது எங்கும் பரம்பாநின்ற தென் திருப்பேரையில்வீற்றிருந்த. [நல்வேதம்] - "வேதாநாம்ஸாமவேதோஸ்மி" (வேதாநாம்ஸாமவேதோஸ்மி) என்கிற ஸாமத்வநியாய்க்கிடக்குமத்தனை, பார்த்தபார்த்தவிடமெங்கும்; அவ்விருப்பைக்கண்டு முக்தர் ஸாமகாநம்பண்ணி ப்ரீதிக்குப் போக்குவிடுமா போலே. [முழங்குசங்கக்கையன்] - வேதத்வநியானது ஸ்ரீபாஞ்சஜந்யத்தைக்கிட்டி ப்ரதித்வநியெழாநிற்கும். [மாயத்தாழ்ந்தேன்] - அவனுடைய ஸ்மிதவீக்ஷணாதிகளிலே மீளவொண்ணாதபடி யகப்பட்டேன். [அன்னையர்கா ளென்னை யென்முனிந்தே] - ப்ராப்தியுண்டேன்னாச் சீறுமத்தனையோ? சீற்றத்துக்கெதிர்த்தலையும் வேண்டாவோ? யர்மியுண்டாய் முனியவேணுமே! [மாயத்தாழ்ந்தேன் - என்னையென்முனிந்தே] - ஸ்வாதீநரையன்றோ முனிந்தால் ப்ரயோஜநமுள்ளது! (௪)

ஐந்தாம் பாட்டு.

முனிந்துசகடமுதைத்துமாயப்பேய்முலையுண்டுமருதிடைபோய்க் [ன்
கனிந்தவிளவுக்குக்கன்றெறிந்தகண்ணபிரானுக்குஎன்பெண்மைதோற்றே
முனிந்தினியென்செய்தீர் அன்னைமீர்காள்?முன்னியவன்வந்துவீற்றிருந்த
கனிந்தபோழில்திருப்பேரெயிற்கே காலம்பெறஎன்னைக்காட்டுமினே.

ஆ.—(முனிந்து) - உன்னுடைய ஸ்த்ரீத்வத்துக்குப் போருமோ என்று அவர்கள் பின்னையும் தன்னைமுனிய, ஸ்தந்யார்த்தியாய் ரோஷத்தாலே சகடத்தைப் பாய்ந்த திவ்யசேஷ்டிதத்துக்கும், வஞ்சனையால் வந்த பேய்ச்சிமாயும்படி முலையுண்ட திவ்யசேஷ்டிதத்துக்கும், கனிந்தவிளவுக்குக்கன்றெறிகைக்காக விளங்கனியைக் குறித்துப் பார்த்தருளின பார்வைக்கும் என்பெண்மை தோற்றேன்; நீங்கள் இனி என்னை முனிந்துசெய்வதென்? என்னுடைய வரவுபார்த்து முன்னமேபோய் அவன்வீற்றிருந்த நிரவதிகபோக்யமான சோலையையுடைத்தான தென்திருப்பேரையிலே கொண்டுபோய் அவன்பக்கலிலே என்னை ஈண்டக் காட்டிக் கொடுங்கோள் என்கிறாள்.

ஒ.—அஞ்சாம்பாட்டில், "இங்ஙனேவிரைகை ஸ்த்ரீத்வத்துக்குப்போராது காண்" என்றுதாய்மார் அலைக்க,'அது பண்டேபோயிற்று;ப்ரயோஜநமில்லாத உமையிலே கொண்டுபோகநில்லாதே, ஒக்கவேகொண்டுபோய்த் தென்திருப்பேரையிலே என்னை விடுங்கோள்' என்கிறாள். [முனிந்து] - யசோதைப்பிராட்டி முலைதாழ்த்தவாறே சீறி; கண்வளர்ந்த நளுகைக்கு விரோயமாம்படி யூரப்புக்கவாறே சீறி என்றுமாம். [மாயப்

ஸாமகாநம்பண்ணுகிறதுக்கு த்ருஷ்டாந்தம் - அவ்விருப்பை இத்யாதி. அவ்விருப்பை - பரமபதத்திருப்பை. முழங்குகைக்கு ஹேது - வேதத்வநி இத்யாதி. இவ்வாக்யாநந்தரம் அவ்விருப்பை இத்யாதிவாக்யமிருந்ததாகில், முழங்குகிறதுக்கு த்ருஷ்டாந்தம் - அவ்விருப்பை இத்யாதி என்று கண்டுகொள்வது. பதார்த்தம் - அவனுடைய இத்யாதி. "அன்னையர்காள்! முனிந்து - என்?" என்றதுக்குபாவம் - ப்ராப்தி இத்யாதி. "என்னை" என்றதுக்கு பாவம் - சீற்றத்துக்கு இத்யாதிவாக்யத்வயம். "ஆழ்ந்தேன்" என்றதிலே நோக்காக பாவம் - ஸ்வாதீநரை இத்யாதி. "வேதாநாம்ஸாமவேதோஸ்மி தேவாநாமஸ்மி வாஸவ:" இத்யாதி கீதாயாம் உக்தமே. 'அன்னையர்காள்! இழந்தெம்மாமை' என்று தொடங்கி, 'மாயத்தாழ்ந்தேன், என்னை - முனிந்து - என்' இத்யந்வய:. (௫)

பேய்] - வஞ்சகையான பேய். [கண்ணபிரானுக்குஎன்பெண்மைதோற்றேன்] - மஹோபகாரகனான க்ருஷ்ணனுக்கு என்ஸ்த்ரீத்வத்தைத் தோற்றேன். [முன்னி] - முற்கோலி.

ப.—அநந்தரம், அநிஷ்டநிரஸந சீலனான க்ருஷ்ணனுக்கு என்னுடைய ஸ்த்ரீத்வத்தை இழந்தேன்; நிர்த்தகமாக நியமிக்கத்தேடாதே, விளம்பியாதே அவனிருக்கிற தேசத்திலே கொடுபோய்க் காட்டுங்கோளென்கிறாள்.

முனிந்து - முலைவாயுதாழ்த்துச்சீறி, (புத்ரசேலதிருவடிகளைநிமிர்த்து), சகடம் - சகடத்தை, உதைத்து-, மாயம் - தாய்வடிவுகொண்டுவந்த, பேய்-பேயை (முடியும்படி), முலைஉண்டு-, மருதிடை - (த்வந்த்வமான) மருதிடையே, போய் - (வழிகண்டு) போய், கனிந்த - பழுத்த, விளவுக்கு - விளவாய்நின்றவசுரனைக்குறித்து, கன்று - கன்றாய் வந்தஅசுரனை, எறிந்த-, கண்ணன் - க்ருஷ்ணனாகிற, பிரானுக்கு - மஹோபகாரகனுக்கு, என்—என்னுடைய, பெண்மை - ஸ்த்ரீத்வத்தை, தோற்றேன் - இழந்தேன்; இனி - இவ்வளவிலும், (இவ்வவஸ்த்தைபறிந்தே), அன்னைமீர்காள் - தாய்மாரே! முனிந்து - என்னை நியமித்து, (என்னிஷ்டஞ்செய்திகோளல்லீர், உங்களிஷ்டம் தலைக்கட்டிற்றில்லை); என் - என்னகாரியம், செய்தீர் - செய்தீராநின்றீர்; (என்னபிமதம் கேட்கில்), அவன்-, முன்னி - முற்கோலி, வந்து-, வீற்றிருந்த - எழுந்தருளியிருக்கிற, கனிந்த - ஸகலபலபூர்ணமான, பொழில் - பொழிலையுடைய, திருப்பேரெயிற்கே-, என்னை - (க்ரமப்ராப்திபற்றாத) என்னை, காலம்பெற - விளம்பியாதபடி, காட்டுமின் - கொடுபோய்க் காட்டுங்கோள்.

ஈ.—அஞ்சாம்பாட்டில், "இந்நன்விரைகை ஸ்த்ரீத்வத்துக்குப்போராது" என்று தாய்மார்அலைக்க, 'அதுவும் பண்டேபோயிற்று; ப்ரயோஜநமில்லாத ஊமையிலே கொடுபோகநில்லாதே, ஏற்கவே அங்கே கொடுபோய்விடுங்கோள்' என்கிறாள். [முனிந்துசகடமுதைத்து] - ஸ்தந்யார்த்தியாய்ச்சீற, அதுக்குஇலக்காய் சகடாஸுரன் முடிந்துபோனான். ஸ்தந்யார்த்தியாய்ச்சீற, அதிலே நசித்தான். சகடம்மேலிடப்புக்க வாறே சீறிஎன்றுமாம். தாய்வடிவுகொண்டுவந்த பூதனையை "ப்ராணஸஹிதம்வளகௌவஸஹிதம்" என்கிறபடியேமுடித்து. செறிந்துநின்ற மருதின்நடுவே வழிகண்டு போய். பழுத்த விளவாய்நின்ற அஸுரனைக் கன்றாய்வந்த அஸுரனாலேஎறிந்து ஊட்டியாகமாய்த்த உபகாரகனான க்ருஷ்ணனுடைய பும்ஸ்த்வத்துக்கு என்ஸ்த்ரீத்வத்தைத் தோற்றேன். விரோதிவர்க்கத்தை அழியச்செய்த ஆண்பிள்ளைத்தனத்தைக்காட்டி, ஒருகாலும் அழியாதஸ்த்ரீத்வத்தை அழித்தான். [முனிந்தினி]-அவன் அவ்வபதாநஞ்செய்வதற்குமுன்பே மீட்கப்பார்க்கவேண்டாவோ? [என்செய்தீர்] - எனக்கு அநுகூலைகளானீரல்லீர்; மீட்கத்தொடங்கினது தலைக்கட்டிற்றன்று. [அன்னைமீர்காள்]-பொடிகைக்கு முறையமையுமோ? ஃபலம்வேண்டாவோ? [முன்னியவன்வந்து] - அவன் முறைகூறிக் கொண்டுவந்து. [வீற்றிருந்த] - இத்தலையை அழிக்கைக்குவேண்டும் பரிகரத்தால் குறைவற்றிருந்த. [கனிந்தபொழில்]-ஸர்வதா ஃபலமாயிருக்கும்பொழில். [காலம்பெற]-மதேஜலே ஸேதுபந்தநமாகாதபடி ஏற்கவேஅவ்வூரிலே கொடுபுகுங்கோள். [என்னை]-என்னைக்கண்டிகோள்! உங்களுக்கு "க்ரமத்திலேசெய்கிறோம்" என்னலாயிருந்ததோ?

ஈடு.—அஞ்சாம்பாட்டு. "இங்ஙனேவிரைகை ஸ்த்ரீத்வத்துக்குப் போராது காண்"என்று தாய்மார்அலைக்க,'அதுவும்பண்டேபோயிற்று; ப்ரயோஜநமில்லாததசையிலே கொடுபோகநில்லாதே, என்னைஏற்கவே கொடுபோய்த் தென்திருப்பேரையிலே விடுங்கோள்' என்கிறாள். முனிகிறதுதான் எனக்கு ஹிதம்பார்த்தேயாகில் என்ஹிதத்திலே ப்ரவர்த்திக்கப் பாருங்கோள்.

[முனிந்துஇத்யாதி] - என்னினைவுதன்னை புத்திபண்ணுங்கோள் ; அவன் முனிவிலே யகப்பட்டநான் இனியுங்கள் முனிவுக்கு மீளுவனோ ? ஹிதமுமாய் ப்ரியமுமானமுனிவிலே யகப்பட்டநான் அஹிதமுமாய்அப்ரியமுமான உங்கள்முனிவுக்கு மீளுவனோ ? [முனிந்துசகடமுதைத்து] - முலைவரவுதாழ்த்ததென்று சீறிநீட்டின திருவடிகளுக்கு இலக்காய்ப் பொடிபட்டதாயிற்று சகடம். " [illegible] " (ஸ்தந்யார்த்தீ ப்ரருரோதஹ) இறே. [மாயப்பேய்முலையுண்டு] - "முலையை நினைத்துச் சீறினான்" என்று முலைகொடுக்கத் தாய்வடிவுகொண்டுவந்த வஞ்சகையான பேய்ச்சியை முடித்து. [மருதிடைபோய்] - முலையுண்டால் தவழுமத்தனையிறே. புறம்புநின்றும்வந்து நலிகை யன்றிக்கே, நின்றவிடத்தே நின்று தப்பாமே கொல்லநினைத்த யமளார்ஜுநங்களைப் பொடிபடுத்தி. [கனிந்தஇத்யாதி]-அசுராவேசத்தாலே ஒன்று கனிந்தவிளவாய், ஒன்று கன்றாய்நின்றது; அதிலேயொன்றையிட்டொன்றையெறிந்து இரண்டையும் முடித்த. [கண்ணபிரானுக்கென்பெண்மைதோற்றேன்] - அழியுமவற்றையும்அழித்தான்: அழியாததையும் அழித்தான். வன்மையாலேயழித்தான்அவற்றை (கண்ணபிரானிறே) ;மென்மையாலே யழித்தான்† இவளை.[பிரானுக்கு] - அவற்றின் கையில் தான்அகப்படாதே தப்பித் தன்னைத்

அஞ்சாம்பாட்டு.—முனிந்து இத்யாதி. "கண்ணபிரானுக் கென்பெண்மை தோற்றேன் காலம்பெறவென்னைக் காட்டுமின்"என்கிற பதங்களைக் கடாக்ஷித்தவதாரிகை - இங்ஙனே இத்யாதி. விரைகை - த்வரிக்கை. "தோற்றேன்" என்று - பூதமாயிருக்கையாலே பண்டேபோயிற்றென்றது. "முனிகிறவெங்களைக் காட்டுமின்" என்கிறதென்? என்ன-முனிகிறதுதான் இத்யாதி வாக்யத்வயம்.

"தோற்றேன்" என்னுமளவுக்கும்ஸாவம் - என்னினைவுதன்னை இத்யாதி. விவரணமாதல், "முனிந்தினியென்செய்தீர்" என்றதுக்கு ஸாவமாதல் - அவன் முனிவிலே இத்யாதி. அதுக்கு ஹேதுவேதென்கிற சங்கையிலேயாதல், ஏதேனுமாகமுனிவிலே யகப்படுகிறாயாகில் எங்கள் முனிவிலே யகப்பட்டாலோவென்கிற சங்கையிலேயாதல் அருளிச்செய்கிறார்-ஹிதமுமாய் இத்யாதி. அதாவது- அவன்முனிவு ஆஸ்ரிதவிரோதிநிவ்ருத்திக்குஉடலாகையாலும்,அதுதான் ஆஸ்ரிதவாத்ஸல்யமாகையாலும், ஹிதமாயும் ப்ரியமாயுமிருக்கும்; உங்கள் முனிவு சேஷியிருந்த விடத்தில் செல்லுகை ஸ்வரூபமாயிருக்க இத்தை ஸ்வரூபவிருத்தமென்று விலக்குகையாலும், அதுதான் எனக்கு அநிஷ்டமாயிருக்கையாலும், அஹிதமாயும் அப்ரியமாயும் இருக்குமென்றபடி. சீறியுதைக்கும் ப்ரகாரத்தைக்காட்டுகிறார் - முலைவரவு இத்யாதி. உக்தார்த்தத்துக்கு ப்ரமாணம்-ஸ்தந்யார்த்தீ இத்யாதி. "[illegible]" இதிபஞ்சமேம்ஸே ஷஷ்ட்டேக. முனிந்து - சீறி. மாய - முடியும்படி. பௌர்வாபர்யத்துக்குஸாவம்- முலையுண்டால் இத்யாதி. கனிந்த - பழுத்த. விரோதிநிரஸநகதநாநந்தரம், "பெண்மைதோற்றேன்" என்றதுக்குஸாவம் - அழியுமவற்றை இத்யாதி. அழியுமவையாவன - விரோதிகளாகையாலே யழிக்கைக்கு யோக்யங்களான சகடாதிகள். அழியாதது - பெண்மை. எத்தாலேயழித்தான்?என்ன-வன்மையாலே இத்யாதி. மென்மையென்று - மார்த்தவமாய், அத்தாலே - ஸௌலப்யமென்றபடி. இவளுக்குச்செய்தவுபகாரமேதென்ன - அவற்றின் இத்யாதி. "பிரான்" என்றதுக்கர்த்தாந்தரமாதல், இவ்

† இவற்றை என்று பாடாந்தரம்.

தந்த வுபகாரத்துக்குளழுதிக்கோடுக்கிறாள் காணும். சேஷியானதன்னையுண்டாக்கி, என்னை சேஷத்வத்தினுடைய எல்லையிலே நிறுத்தினான். 'பஹூநி மே வ்யதீதாநி ஜந்மாநி' (பஹூநிமேவ்யதீதாநிஜந்மாநி) என்கிற அவதாரங்களோபாதி பரப்புப்போருங்காணும் இவ் வவதாரத்தில்இவளைப்பெறுகைக்குப் பண்ணின ப்ரவ்ருத்திகளும் அவனுக்கு. ஆஶ்ரிதவாத் ஸல்ய கார்யமான முனிவிறே. [கண்ணபிரானுக்கு என்பெண்மைதோற்றேன்] "அதோஸ்மி லோகே வேதே ச ப்ரதித: புருஷோத்தம:" (அதோஸ்மிலோகேவேதேசப்ரதித:புருஷோத்தம:) என்றும் "ஜ்ஞாநாதி புருஷோத்தம:"(ஜ்ஞாநாதிபுருஷோத்தமம்)என் றுஞ்சொல்லுகிற தன்னுடையபும்ஸ்த்வத்தைக்காட்டிக்காணும் இவளுடைய ஸ்த்ரீத்வத்தை யபஹரித்தது! [பெண்மைதோற்றேன்]-தோலாததுதோற்றேன். [முனிந்தினியித்யாதி]-இனி மீட்கலாமென்றோ நினைக்கிறது? மீட்கநினைக்கிறநீங்கள்அவனுடைய அபதாநங்களுக்கு முன் னேயன்றோமீட்கப்பார்ப்பது? [என்செய்தீர்]-எனக்குஅநுகூலரானீரல்லீர்;மீட்கத்தொடங் கினது தலைக்கட்டிற்றன்று. [அன்னைமீர்காள்] — ஜந்மப்ரப்ருதிஎன்ப்ரக்ருதியறிந்துபோருகிற நீங்கள் மீட்கப்பார்ப்பதே! அவன்பண்ணினஉபகாரங்களை யறியாமையிறே நீங்கள் பொடி கிறது. 'அவன் பண்ணினவுபகாரம் மறக்கவொண்ணாதாகில் நினைக்கிறாய். பெற்றுவளர்த்த எங்களுடைய உபகாரமும் நினைக்கவேணுங்காண்!' என்ன, [முன்னியவன்வந்து வீற்றி ருந்த]-உபகாரத்தில் முற்பாடன்அவன் காணுங்கோள். [முன்னி] - முற்பாடனாய்நின்று: "பூர்வஜ" (பூர்வஜ) என்னும்படியே; என்னைப்பெறுகைக்குஅவஸரப்ரதீக்ஷனாய்க் கொண்டு தன்வேறுபாடு தோற்றவிருக்கிற. [கனிந்தபொழிலித்யாதி]-கொண்டேக்குக்காட்டு வார்தாழ்வே; அங்குள்ளதெல்லாம் பக்வபலமாயிருக்கும். கனிந்தமரம் கண்டால் "அஸுர ராவேசமுண்டு" என்றுஅஞ்சவேண்டாத சோலை. [காலம்பெறவென்னைக்காட்டுமினே]-இக்

வுபகார கதநாநந்தரம் "பெண்மைதோற்றேன்" என்கிறதுக்குபாவமாதல் - சேஷியான இத்யாதி. அநேகவிரோதிநிரஸநம் அருளிச்செயததுக்குபாவம்-பஹூநி இத்யாதி. ப்ரவ்ருத்திகளாவன:சகடா சுரநிரஸநாதிகள். முனிவுக்கிடுபடக்கூடுமோ? என்ன - ஆஶ்ரித இத்யாதி. நிழெல்லாங்கூட்டி "பெண்மைதோற்றேன்" என்றதுக்குபாவம் - அதோஸ்மி இத்யாதி. "யஸ்மாத்க்ஷரமதீதோஹம் அக்ஷராதபி சோத்தம: । அதோஸ்மி" இத்யாதி. "யோமாமேவமஸம்மூடோ ஜாநாதி புருஷோத்தமம் । ஸ ஸர்வவித்பஜதி மாம் ஸர்வபாவேந பாரத" இதி சரமம் (சு) புருஷோத்தம வித்யயாம். லோகமென்றது-ஸ்ம்ருதி.ஈறந்தொடக்கமானவை இழந்ததுண்டாயிருக்க "பெண்மைதோற்றேன்" என்றதுக்குபாவம் - தோலாதது இத்யாதி. "இனி" என்றதுக்குபாவம் - இனிமீட்கலாம் இத்யாதி. மீட்கலாமென்றே என்கிறவிடத்திலே - காகுஸ்வரம். பின்னைபெப்போது மீட்கலாமென்ன - மீட்கநினைக்கிற இத்யாதி. "அன்னைமீர்காள்" என்கிறதுக்குபாவம்-ஜந்மப்ரப்ருத இத்யாதி. மீட்கப்பார்ப்பதே என்கிறவநந்தரம், ஆகையாலே 'அவன்பண்ணின' என்று கூட்டுவது. மேலுக்கவதாரிகை - அவன்பண்ணினவுபகாரம் மறக்க இத்யாதி. முன்னி - முற்பாடனாய். அப் படி முற்பாடனாயிருக்குமோவென்ன, ப்ரமாணகதந பூர்வகமாக ஸப்தார்த்தம் - பூர்வஜ இத்யாதி. "ஜிதந்தே வைகுண்டநாதாக்ஷ" இத்யாதி பதப்ரயோகத்துக்குபாவம் - கொண்டுபுக்கு இத்யாதி. அங்குள்ளதெல்லாம் பக்வபலமாயிருக்கும் என்றதுக்குபாவம் - அங்கீகரிக்கைக்கு அவஸரப்ரதீக்ஷனா யிருக்குமென்றபடி. "கனிந்தபொழில்" என்கையாலே *கனிந்தவிளவில் வ்யாவ்ருத்தியருளிச் செய்கிறார் - கனிந்தமரங்கண்டால் இத்யாதி. அதாவது - உகந்தருளினநிலமாகையாலே விரோதி களில்லையென்றபடி. காட்டுகை நிஸ்சிதமானாலன்றோ "காலம்பெற - காட்டுமின்" என்பது? என்ன-

குடிக்கும்எனக்கும் பரிஹாரமொன்றேயிறே. பின்னையும் என்னையங்கேகொண்டுபோய்ப் பரிஹரிக்கை தவிரிகோள் ; நானுளேனனபோதே அத்தைச்செய்யப்பாருங்கோள். பின்னை மதேஜலே ஸேதுபந்த மாகாமே, நான்ஜீவிக்கும்எல்லையிலேகாட்டுங்கோள். (ரு)

ஆறாம் பாட்டு.

காலம்பெறவென்னைக்காட்டுமின்கள் காதல்கடலின்மிகப்பெரிதால் [ன்
நீலமுகில்வண்ணத்தெம்பெருமானிற்குமுன்னேவந்தென்கைக்குமெய்தா
ஞாலத்தவன்வந்துவீற்றிருந்தநான்மறையாளரும்வேள்வியோவா
கோலச்செந்நெற்கள்கவரிவீசுங்கூடுபுனல்திருப்பேரெயிற்கே.

ஆ.—(காலம்பெற.) - "வேட்டைக்கெழுந்தருளினவத்தனையன்றோ, இப்போதே யெழுந்தருளுகிறானிறே! இங்ஙனே பதறவேணுமோ?" என்று அவர்கள் சொல்ல, எனக்குஅவன்திறத்திலுள்ள அபிநிவேசவெள்ளத்துக்கு ஒருமுடிவில்லை; நீலமேகநிபமான திவ்யரூபத்தினுடைய அழகாலே என்னைத்தோற்பித்து அடிமையாக்கினவன் என்கண்களிலே வந்துதோற்றாநிற்கும்: என் கைக்குமெய்தான். பரமபுருஷ ஸமாராதநைகவேஷ நித்யநைமித்திகாதி ஸர்வகர்மாநுஷ்டாந நிரதராய் வேதவிதக்ரேஸரான திவ்யஜநங்களாலே ஸததபரிபூர்ணமாய், அதிரமணீயபரிணதசாலி சாமரங்களாலே வீஜ்யமாநமாய், ஸுப்ரஸந்ந ஸலிலதாம்ரபர்ணீஸரித் பரிவ்ருதமாயிருந்த திருப்பேரையிலே எனக்காகவெழுந்தருளியிருந்த பெரியபெருமாள் பக்கலிலே காலம்பெற என்னைக்காட்டுமின்களென்று தன்னுடைய அன்னைமாரை நோக்கிச்சொல்லுகிறாள்.

ஒ.—ஆறாம்பாட்டில், நீங்கள் "'கொண்டுபோவோமோ, அல்லோமோ" என்று விசாரிக்கும் ஊமையன்றிக்கே, எனக்கு அபிநிவேசமானது அறமிக்கது; எனக்கு இங்குத்தரிப்புஅரிது; ஈண்டென என்னைத்தென்திருப்பேரையிலே கொண்டு போய்க் காட்டுங்கோள்' என்கிறாள்.

[நீலமுகில்வண்ணத்தெம்பெருமான் நிற்கும்முன்னே வந்தென் கைக்குமெய் தான்] - உருவெளிப்பாட்டாலே நலிகிறபடியைச் சொல்லுகிறது. [ஞாலத்தவனென்று தொடங்கி] - ஸம்ஸாரத்திலே அவன்வந்து தன்னுடைய ஐஶ்வர்யமெல்லாம் தோற்றும்படி யிருந்தருளுவதுஞ்செய்து அவனுக்கு வைதிகர்பண்ணும் ஸமாராதநங்கள் நிரந்தரமாகச் செல்லாநிற்பதுஞ்செய்து கவரி வீசினாற்போலே மநோஹரமாம்படி செந்நெற்கள் அலைவதுஞ்செய்து சுற்றும் சேர்ந்திருந்துள்ள புனலையுடைத்தான தென்திருப்பேரையிலே. கூடுபுனல் - ஊற்று நீரும், மழைநீரும், ஆற்றுநீரும்கூடின புனல் என்றுமாம்.

இக்குடிக்கும் இத்யாதி. இவள் ஜீவநத்வாரா இக்குடிக்கும் ஜீவநமென்றுகருத்து. "காலம்பெற" இத்யாதிக்கர்த்தம் - பின்னையும் இத்யாதிவாச்யத்வயம். விவரணம் - பின்னை மதேஜலே இத்யாதி 'அன்னைமீர்காள், முனிந்துசகடம்' என்றுதொடங்கி, 'தோற்றேன், இனி - முனிந்து - என்செய்தீர்? முன்னியவன்' இத்யாரப்ய, 'காட்டுமினே' இத்யந்வயஃ.

(௬)

ப.—அநந்தரம், உதாரஸ்வபாவனான அவன் ஸந்நிஹிதனாய்வைத்து ஸம்ச்லேஷ ப்ரதனல்லாமையாலே அபிநிவேசம் கரைபுரண்டு செல்லாநின்றது; அவனிருக்கிற தேசத்திலே சடக்கெனக் கொடுபோங்கோளென்கிறாள்.

நீலமுகில் - காளமேகம்போலே, வண்ணம் - உதாரஸ்வபாவமான வடிவழகைக்காட்டி, எம் - என்னையடிமைகொண்ட, பெருமான் - ஸ்வாமியானவன், முன்னை - என்முன்னே, வந்து - வந்து, நிற்கும் - உருவெளிப்பாடாம்படி நில்லாநிற்கும்; (வந்தவன் தானே மேல்விழுந்தணையாதொழிகையன்றியே), என் - என், கைக்கும் - கைக்கும், எய்தான் - (எட்டாதபடி அம்மேகம்போலே) தூரஸ்தனாகாநிற்கும்; (ஆகையாலே), காதல் - காதலானது, கடலில் - கடல்புரையுமளவன்றியே, மிக - மிக, பெரிது - பெரிதாயிராநின்றது; (ஆனபின்பு), ஞாலத்து - பூமியிலே, வந்து - (அவ்வடிவழகோடே) வந்து, அவன் - அவன், வீற்று - தன் ஔதார்யந்தோற்றும்படி, இருந்த - இருக்குமிடமாய், (அங்குவர்த்திக்கிற), நான்மறையாளரும் - சதுர்வேதிகளான விலக்ஷணபுருஷர்களும், வேள்வி - ததாராதநரூபமான வைதிகாநுஷ்டாநத்தில், ஓவா - ஓவாதே நடக்கும்படியாய், கோலம் - தர்சநீயமான, செந்நெற்கள் - செந்நெற்கதிர்கள், கவரி - கவரிபோலே, வீசும் - அசையும்படியுமாய், கூடு - ததநுரூபமாகச் சேர்ந்த, புனல் - ஜலஸம்ருத்தியையுமுடைய, திருப்பேரெயிற்கே - திருப்பேரெயிற்கே, என்னை - (விளம்பாக்ஷமையான) என்னை, காலம்பெற - கடுக, காட்டுமின்கள் - கொடுபோய்க் காட்டுங்கோள்.

இ.—ஆறாம்பாட்டில், 'நீங்கள் ஆறியிருக்கும் அளவல்லாதபடி எனக்கு அபிநிவேசம் மிகாநின்றது, சடக்கென அங்கேகொண்டுபோய்விடுங்கோள்' என்கிறாள்.

[காலம்பெற] - ஒரு க்ஷணமாகிலும் முற்படச்செய்யப் பாருங்கோள். [என்னை] - எனக்கு ஸ்வபாவமென்று செய்யப்பார்த்திலீர்களாகிலும், என்னை விசேஷித்துக்கொண்டு போகப்பாருங்கோள். 'உனக்கு வாசிஎன்'? என்ன, [காதல் கடலில் மிகப்பெரிதால்] - "காதல் கடல்புரையவிளைவித்த" என்ற அளவன்று; மடலூரப்புக்கபோது விலக்கினவர்கள் தாங்களே கொண்டுபோய்க் காட்டவேண்டும் உரையிறேஇது. அதுக்குஹேது என்? என்ன, [நீலமுகில்வண்ணத்தெம்பெருமான் நிற்கும்முன்னேவந்து] - ப்ரமஹரமானவடிவைக் காட்டியாயிற்று ஆசையை வளர்த்தது. அவன் காதலுக்கு க்ருஷிபண்ணுகிறக, என்னால் ஸ்த்ரீத்வத்தைநோக்கி இருக்கப்போமோ? முன்னே நிற்கை பொல்லாதோ? என்ன, [என் கைக்குமெய்தான்] - உருவெளிப்பாடன்றிக்கே, கையாலே   க்க எட்டிறுலன்றோ அழகிது. வார்த்தை சொல்லாமையன்றிக்கே,
         ம் எட்டுகிறிலன். தான் மேல்விழுந்து அணையாமையன்றிக்கே, நான் மேல்விழுந்து அணைக்கைக்கும் எட்டுகிறிலன். ஆனால் செய்யவடுப்பது என்? என்ன, அவன் வந்திருக்கிற ஊரிலே கொண்டுபோய்விடப் பாருங்கோள். [ஞாலத்தவன்வந்து வீற்றிருந்த] - நீலமுகில் வண்ணத்தை யுடையவன் பரமபதத்தில் நின்றும்வந்து "ஸம்ஸாரம்" என்று உபேக்ஷியாதே, * கலங்காப்பெருநகரிலே இருக்குமாபோலே குறைவற்றிருக்கிற தேசம். [நான்மறை இத்யாதி] - வேதார்த்தவித்துக்களும் ஸமாராதநத்திலே நிரந்தரமாக ப்ரவ்ருத்தரானார்கள்; செந்நெற்களும் மநோஹரமாம்படி கவரி வீசினாற்போலே அசைந்துவாராநின்றது; * சூட்டுநன்மாலைப்படியே இங்குள்ள வேதநரோடு அங்குள்ள வேதநரோடுவாசியற அநுகூலமாயிருக்கிறபடி. [கூடுபுனல்] - ஆற்றுநீரும்

ஊற்றுநீரும், வர்ஷஜலமும் அவனும் நானும் ஜலக்ரீடைபண்ணலாம் தேசத்தே கொடு போய்விடப்பாருங்கோள். சுற்றும் சேர்ந்த புனல் என்றுமாம்.

ஈடு. — ஆறும்பாட்டு. நீங்கள் "கொடுபோவோமோ அல்லோமோ?" என்று விசாரிக்கும் தசையன்றிக்கே, எனக்குஅபிநிவேசமானது அறமிக்கது; எனக்குஇங்குத்தரிப்புஅரிது; ஈண்டென என்னைத்தென்திருப்பேரையிலே கொடுபுக்கு மகரநெடுங்குழைக்காதனைக்காட்டுங்கோ ளென்கிறாள்.

[காலம்பெறவென்னைக்காட்டுமின்கள்] - குடிக்குப் பரிஹாரமன்றாகிலும் எனக்குப் பரிஹாரம்இதல்லதில்லை. இனி என்மேல் குற்றமில்லை. என்? இப்படிக் கடுகவேண்டுவானேன்? என்னில், [காதல்கடலின் மிகப்பெரிதால்] - இக்காதல்அளவுபட்டோ இருக்கிறது? முதற்சொன்னவார்த்தையைக்காணுங்கோள். நீங்கள் நினைக்கிறது * கடல்புரைய என்றாளே. ஒருகாரியப்பாட்டாலே விளைந்ததுபோலன்றிறே உகப்பாலேவிளைந்ததிருப்பது. ஆனாலும் காதலையளவுபடுத்தி, நாங்கள் சொல்லுகிறவார்த்தையைக்கேட்டு எங்களோடே ஒழுகவேண்டாவோ? என்ன, [நீலமுகில்வண்ணத்தெம்பெருமான்] -நான்உங்கள் வழியே போகவோ? இவன்வழியேபோகவோ? என்னை அப்படிசேர்த்துவிடவந்து முன்னேநிற்க, நான்மீளும்படியேன்? அப்படியாலே அவன் துவக்காநிற்க, உங்கள்வார்த்தையைக்கேட்கவோ? ஸ்ரமஹரமான வடிவைக்கொண்டு முன்னேநின்று காதலுக்கு வர்த்தகனாகநின்றான். இக்காதலை ஒருபடியேவளர்க்கிறதிறே. * கடல்புரையவிளைவித்ததும் காரமர் மேனியிறே. [நிற்கும்முன்னேவந்து] - இவன் கிட்டநின்றிலனாகில் நான்உங்கள்வார்த்தை கேட்டு மீளேனோ? ஆனால்உனக்குப்போல்லாதோ? என்ன, [என் கைக்கு மெய்தான்] - அழகிதிறே,எனக்கு இப்படி தரப்பெறில், வார்த்தைசொல்லுதல், அணைத்தல் செய்யாமையே

ஆறும்பாட்டு.—காலம்பெற இத்யாதி. "காதல்கடலின்மிகப்பெரிதால், திருப்பேரையிற்கே - காலம்பெறஎன்னைக்காட்டுமின்கள்" என்கிற பதங்களைக் கடாக்ஷித்தவதாரிகை - நீங்கள் இத்யாதி. ஈண்டென - இப்போதே.

கீழேயும் "காலம்பெற" என்று இங்கேயும் "காலம்பெற" என்றதுக்கு ஹாவத்வயம்-குடிக்கு இத்யாதிவாக்யத்வயம். முதற்சொன்னவார்த்தையேதென்ன-கடல் இத்யாதி. ஸாயுஜ்யஸக்திபோலன்றிக்கே இவர் ஸக்தி கரைபுரண்டிருக்கைக்கு ஹேதுவேதென்ன - ஒருகாரியம் இத்யாதி. காரியப்பாட்டாலே விளைந்ததுபோலென்றது - கார்யார்த்தமாக விளைந்த ஸாயுஜ்யஸக்திபோலென்றபடி. அன்றிக்கே, கடல்புரையவிளைவித்த காதலைப்பற்ற இதுக்குஆதிக்யஹேதுவேதென்ன - ஒருகாரியம் இத்யாதி. அதாவது - ஜகத்தைத் திருத்துகையாகிற கார்யார்த்தமாக விளைவித்த காதல்போலன்றே, ஸ்வயமேவ வைலக்ஷண்யமடியாக ராகப்ராப்தமான காதலென்றபடி. மேலில்பதத்துக்குஅவதாரிகை - ஆனாலும் இத்யாதி. அதுக்குஹாவம் - நான்உங்கள் இத்யாதி. விவரணம்-என்னையப்படி இத்யாதி. அப்படிசேர்த்துவிடவென்றது - சாடு. அந்தப்ரகாரம் சேர்த்துவிடவென்று சாடுவுக்கு; அந்தத்திருமேனியாலே சேர்த்துவிடுகைக்காகவென்று ஸ்வஹாவார்த்தம். கீழ்வாக்யத்தில் விவக்ஷிதமான அர்த்தத்தை முக்தகண்டமாக அருளிச்செய்கிறார் - அப்படியாலே இத்யாதி. அந்தவிக்ரஹத்தாலேயென்று ஸ்வஹாவார்த்தம். துவக்காநிற்க - ஈடுபடுத்தாநிற்க. "நீலமுகில்வண்ணத்து" இத்யாதிக்கு ஶப்தார்த்தம்-ஸ்ரமஹரமான இத்யாதி. "காதல்" இத்யாதிக்கநந்தரம் "நீலமுகில்வண்ணம்" என்று வடிவைச் சொன்னதுக்கு சாடுவாகஹாவம் - இக்காதலை இத்யாதி. ஒருபடியே - ஒருப்ரகாரமாயே என்றும், ஒருவிக்ரஹமே என்றும், விக்ரஹம் காதலைவிளைக்கிறதோ? என்ன - கடல்புரைய இத்யாதி. "முன்னேவந்து - நிற்கும்" என்றதின் வ்யதிரேக விஸ்தார்த்தத்தை அருளிச்செய்கிறார் - இவன் கிட்ட இத்யாதி. "என் கைக்குமெய்தான்" என்றதுக்குஅவதாரிகை-ஆனால் இத்யாதி. "கைக்கும்"

யன்று; என் கைக்கும் எட்டுகிறிலன். இனி நீ செய்யப்பார்த்ததேன்? என்ன; உருவெளிப்பாடன்றியிலே கண்ணாலேகண்டநுபவிக்கலாந் தேசத்திலே போகப்பார்த்தேன். [ஞாலத்தவன் வந்துவீற்றிருந்த]-தூரப்போய்க்காணவேண்டாதபடி பரமபதத்தில்ஐச்வர்யமெல்லாம் இங்கே தோற்றும்படியிருந்த. [நான்மறையாளரும்வேள்வியோவா]-வேதார்த்தவித்துக்களும் ஸமாராதநத்திலே நிரந்தரமாக ப்ரவ்ருத்தரானார்கள். என்னோடு ஸஜாதீயரும், தந்தாமுக்கு வகுத்த கைங்கர்யம்பெற்று வர்த்தியாநிற்பர்கள். [கோலச்செந்நெல் இத்யாதி]-வ்ருஷ்ட்யந்நாதி விஷயமாக அங்குள்ளார்க்கு யத்நிக்கவேண்டாதே யிருக்கை. அவை ஆநுஷங்கிகபலமாய்வருமத்தனை; "நீள்செல்வம் வேண்டாதான்தன்னையேதான் வேண்டும்" என்றும், "அங்கங்கேயவைபோதரும்" என்றும் சொல்லக்கடவதிறே. சார்மாரீயமான செந்நெற்களானவை அங்குத்தைக்குக் கவரிவீசினாற்போலே அசையாநிற்கும். [கூடுபுனல் திருப்பேரெயிற்கே] - ஆற்றுநீர், ஊற்றுநீர், வர்ஷஜலம் இவைமூன்றும் கூடியிருக்கையாலே ஜலஸம்ருத்தியையுடைத்தாயிருக்கை. [திருப்பேரெயிற்கே - காலம்பெறவென்னைக்காட்டுமின்கள்] - என் விடாய்தீர ச்ரமஹரமான தேசத்திலே கோடுபோய்ப் போகடப் பாருங்கோள். அங்குள்ள செந்நெலுக்கு நீர் தாரகமா யிருக்குமாபோலே, இவளுக்கும் அவ்வூரில் காட்சியே தாரகமாயிருக்கிறபடி. (௬)

ஏழாம் பா

பேரெயில்சூழ்கடல்தென்னிலங்கைசெற்றபிரான்வந்துவீற்றிருந்த
பேரெயிற்கேபுக்கென்னெஞ்சம்நாடிப்பேர்த்துவரவெங்குங்காணமாட்டேன்
ஆரையினியிங்குடையந்தோழீ! என்னெஞ்சங்கூவவல்லாருமில்லை [னே.
ஆரையினிக்கொண்டென்சாதிக்கின்றதென்னெஞ்சங்கண்டதுவேகண்டே

ஆ.—(பேரெயில்சூழ்.) - உனக்கு அவன்பக்கலுள்ள ஆஸக்திவேகம் நிரவதிகமாயிருந்ததாகிலும் அவனை எழுந்தருளுமளவும் இங்கேயிருக்குமத்தனை; அங்

என்ற சப்தார்த்தம் - வார்த்தை இத்யாதி. உத்தரார்த்தத்துக்கு அவதாரிகை - உருவெளி இத்யாதி. உருவெளிப்பாடு - ப்ரத்யக்ஷ ஸமாநாகாரமான ஸ்வாநுபவம். "ஞாலத்து வீற்றிருந்த" என்றதுக்கு பாவம் - தூரப்போய் இத்யாதி. "அவன் - ஞாலத்து - வந்து வீற்றிருந்த" என்ற அந்வயம். "வேள்வியோவா" என்றதுக்கு பாவம் - என்னோடு இத்யாதி. ஸஜாதீயரென்றது - அநந்யப்ரயோஜநராகையாலே. "ஓவா" என்ற வர்த்தமாநத்துக்கு பாவம் - வ்ருஷ்ட்யந்நாதி இத்யாதி. பலார்த்தமாகவன்றிக்கே கைங்கர்யதயா அநுஷ்டித்தார்களாகில் பலமுண்டாகிறபடியென்? என்ன - அவை இத்யாதி. ஆநுஷங்கிகமாக வருமோ? என்ன, ப்ரமாணம் - நீள்செல்வம் இத்யாதி. உன்னையே அபேக்ஷித்து நிரவதிகஸம்பத்தைக் காற்கடைக்கொண்டவன்தன்னையே யபேக்ஷித்திருக்கும் ஐஸ்வர்யம் போலே என்றபடி. பெருமாள்திருமொழி அஞ்சாந்திருமொழி ஒன்பதாம்பாட்டு, "நின்னையேதான்" இத்யாதி. பெரியாழ்வார் திருமொழி, "நெடுமையாலுலகேழுமளந்தாய்" இத்யாதி. 'அங்கங்கேயவை போதரும்': அவை - கூறைசோறுமுதலானவை தன்னடையேவரும் என்னுதல்: அவையடிமைபுகுரும் என்னுதல். அங்கங்கே - தேவமநுஷ்யாதி ஜந்மந்தோறும். "கூடுபுனல்" என்றதுக்கர்த்தம் - ஆற்றுநீர் இத்யாதி. "கூடுபுனல்" இத்யாதிக்கு பாவத்வயம் - என்விடாய் இத்யாதிவாக்யத்வயம். 'நீலமுகில்வண்ணத்தெம்பெருமான் நிற்கும் முன்னேவந்து, என் கைக்குமெய்தான்: அவன் - ஞாலத்து' என்றுதொடங்கி, 'திருப்பேரெயிற்கே - காலம்பெற வென்னைக்காட்டுமின்கள்: காதல்கடலில் மிகப் பெரிதால்' இத்யந்வயః. (௬)

குப்போகை யுக்தமன்று என்றுதோழிசொல்ல, அத்யுச்ச்ரித ப்ராகார ஜலபரிகா பரிவ்ருதமான லங்கையிலே ராவணனை, ஸபுத்ரஜநபாந்தவமாகக் கொன்றருளி விஜய லக்ஷ்மீபரிவ்ருதனாய்க்கொண்டு தென்திருப்பேரையிலே எழுந்தருளியிருந்த இருப்பைக் கண்ட நெஞ்சு இன்னம் மீண்டுவாராது ; எனக்குஇங்கொரு துணையுமில்லை; துணையான என்நெஞ்சையழைக்க வல்லாருமில்லை. இங்கு ஆரைக்கொண்டு என்னபுருஷார்த்தம் ஸாதிப்பது ? இனி, என்னெஞ்சுபுக்க தேசத்திலேபோய்ப் புகுமித்தனை என்று தன் தோழியைக்குறித்துச் சொல்லுகிறாள்.

ஒ.—ஏழாம்பாட்டில், பெருமாள் இளையபெருமாளுக்கு விடைகொடுத்தருளினபின்பு, "லக்ஷ்மணோநமதாம்மதிம்" என்னும்படியாலே அவன் போனவிடத்தில் போவேன் என்று துணிந்தாற்போலே, இப்பிராட்டியும் என் நெஞ்சுபுக்கைக்கு விரகுபார்த்துத் தென்திருப்பேரையிலே புக்காற்போலே நானும் அங்கேபோய்ப் புகுமத்தனை என்று தோழியைக்குறித்துச் சொல்லுகிறாள்.

[பேரையிலே என்று தொடங்கி] - பெரிய மதிளையும் அதுக்கு அகழாய்ச் சூழ்ந்திருக்கிற கடலையுமுடைத்தான லங்கையை அழிக்கையாகிற மஹோபகாரத்தைப் பண்ணின தாசரதாத்மஜன்வந்து தன்னுடைய ஐஶ்வர்யந்தோற்ற எழுந்தருளியிருக்கிற திருப்பேரையிலேசென்று புக்கு என்நெஞ்சம் தேடி மீண்டுவரக்காண்கிறிலேன். [ஆரையினிஎன்று மேலுக்கு] - நெஞ்சுபோனபின்பு இனி இவ்விடத்தில் துணையாகவல்லார் ஆருமில்லை; இனி ஆரைக்கொண்டு என்னபுருஷார்த்தத்தை ஸாதிப்பது ?

ப.—அநந்தரம், ப்ராப்திக்கு ப்ரபலப்ரதிபந்தகமான லங்காநிரஸநத்தைப் பண்ணினவன் வர்த்திக்கிற தேசத்திலே சென்று புக்க நெஞ்சு மீளவரக்காண்கிறிலேன்; நானும் இனி அங்கேபோமித்தனை என்கிறாள்.

பேர் - பெரிய, எயில் - மதிளாலே, சூழ் - சூழப்பட்டு, கடல் - (அதுக்ககழான) கடலையுடைத்தாய், தென் - கட்டளைப்பட்ட, இலங்கை - இலங்கையே, செற்ற- செறுத்தழியச்செய்த, பிரான் - உபகாரகனானவன், வந்து - (ஸ்ரமந்தீருகைக்காக)வந்து, வ இருந்த - அந்தவீர ஸ்ரீ தோன்றும்படி எழுந்தருளியிருக்கிற, பேரெயிற்கே - ப்பேரெயிற்கே, புக்கு - சென்றுபுக்கு, என்-, நெஞ்சம் - நெஞ்சமானது, நாடி - அவனைத்தேடி, பேர்த்து - மீண்டு, எங்கும் - ஓரிடத்திலும், வர-, காணமாட்டேன் - காண்கிறிலேன் ; இனி - ஆனபின்பு, தோழீ - (என்னோடு ஸமதுःகையாயிருக்கிற) தோழி! இங்கு - இவ்வவஸ்த்தையில், (நியமிக்கிற தாய்மாரையும் பழிசொல்லுமூராரையுமொழிய துணையாக), ஆரை-, உடையம் - உடையோம் ? (போன), என்-, நெஞ்சம்-நெஞ்சை, கூவ - அழைத்துத்தர, வல்லாரும்-வல்லாரும், இல்லை-; இனி-(நெஞ்சுஉதவாதே நீயும்தளர்ந்த) பின்பு, ஆரை-, கொண்டு-, என்- என்ன ப்ரயோஜனத்தை, சாதிக்கின்றது - ஸாதிப்பது? (ஆகையாலே), என்-, நெஞ்சம் - நெஞ்சு, கண்டதுவே - கண்ட விஷயத்தையே, கண்டேன் - நானும்கண்டுவிட்டேன். நாடியென்று - நாட்டம்பெற்றென்றுமாம்.

இ.—ஏழாம்பாட்டில், "லக்ஷ்மணோநமதாம்மதிம்" என்று இளையபெருமாள் போனவிடத்திலே நானும்போவேன் என்று பெருமாள் துணிந்தாற்போலே என்

நெஞ்சு தரிக்கைக்கு அங்கேபோய்ப்புக்கது; நானும் அவ்வூரிலேபோய்ப்புகுமித்தனை என்று தோழியைக்குறித்துச் சொல்லுகிறாள்.

[பேரெயில் இத்யாதி] - பெரிய மதிளாலே சூழப்பட்டு, அதுக்கு அகழாகப் போரும்படி அத்தைச்சூழ்ந்த கடலையுடைத்தான லங்கையை அழியச்செய்த மஹோபகாரகன், அங்குத்தைச்ரமந்தீரவந்து தன்பூர்த்தியோடேநிற்கிற தேசம். அவ்வூரிலே என்னெஞ்சுபுக்குத் தேடிமீண்டுவரக்காண்கிறிலேன். லங்கையிலே புக்காரும் மீண்டார்கள்; என்னெஞ்சு மீளக்காண்கிறிலேன். பிடித்தாரைக்கொண்டு வ்ருத்தகீர்த்தநம்பண்ணியிரிக்கவேண்டாவோ? என்ன, [ஆரையினியிங்குடையந்தோழீ] - நீ என்னுடைமையைக் கண்டு பரியிலே ஆகாநின்றாய்; தாய்மார் ஹிதஞ்சொல்லிமீட்கத் தேடாநின்றார்கள்; இனிப் பழிசொல்லுவாரைக்கொண்டு போதுபோக்குமித்தனையிறே. போதுபோக்குகைக்கு என் நெஞ்சை அழைத்துத்தருவாருமில்லை. அத்தை அழைத்துத்தரும்போது நெஞ்சிலும் அண்ணியராக வேணுமிறே. இனி யாரைக்கொண்டு என்ன புருஷார்த்தத்தை ஸாதிப்பது? நெஞ்சுமீளாதே வ்ருத்தகீர்த்தநத்துக்கும் ஆளின்றிக்கே ஒழிந்ததாகில் நீசெய்யப்பார்க்கிறதென்? என்ன, [என்னெஞ்சம் கண்டதுவே கண்டேனே] - என்னெஞ்சு யாதோரிடத்தேபோய்த் தரித்தது, நானும் அங்கேபோய்ப்புகுமித்தனை. என்னெஞ்சு மீளாதபின்பு, எனக்கும் அதல்லது புகலுண்டோ? "அஹஞ்சாநுகமிஷ்யாமி லக்ஷ்மணேநகதாம்கதிம்"

ஈடு.—ஏழாம்பாட்டு. "அஹஞ்சாநுகமிஷ்யாமி லக்ஷ்மணேநகதாம்கதிம்" (அஹஞ்சாநுகமிஷ்யாமி லக்ஷ்மணேநகதாம்கதிம்) என்ற பெருமாளைப்போலே இப்பிராட்டியும் 'என்னெஞ்சு தரிக்கைக்கு விரகுபார்த்துத் திருப்பேரையிலே புக்காற்போலே நானும் அங்கேபுகுமத்தனை' என்கிறாள். [பேரெயில்இத்யாதி] - கீழில் அளவுகள் குலைந்தபின்பு இனிநான் செய்யப்பார்த்ததிது என்கிறாள்.

பேரெயில்-பெரியமதிள். [சூழ்கடல்] - மதிளுக்கு அகழாம்படி அம்மதிளைச் சூழ்ந்த கடலையுடைத்தாய், கேட்கவஞ்சும்படியான ஊரை முலையடியே நடக்கப்பண்ணின உபகாரகன். [வந்துவீற்றிருந்த] - அப்போது முகம்மாறவைத்த இழவுதீர அணைக்கலாம்படி கிட்டவந்திருக்கிற. "விமலஸஸாங்கநிபாநநா" (விமலஸஸாங்கநிபாநநா) என்கிறபடியே - எப்போது பெருமாள் முகம்வைக்கவொண்ணாதபடி கோடியரா யிருந்தார், அவ்

ஏழாம்பாட்டு - பேரெயில்இத்யாதி. "என்னெஞ்சங்கண்டதுவேகண்டேன்" என்றத்தைப் பற்ற ஸங்கதமாக அவதாரிகை - அஹஞ்சாநுகமிஷ்யாமி இத்யாதி. கீழிற்பாட்டோடேஸங்கதி - கீழிலளவுகள்இத்யாதி: "இனி" என்றதுக்கு பாவமாதல். கீழிலளவுகள் குலைந்தபின்புஎன்றது - நிறந்தொடக்கமானவற்றையும் உசாத்துணையான நெஞ்சையும்இழந்து, தாய்மார் காட்டவொருப்படுகை யன்றிக்கே நிஷேதிக்குமளவானபின்பு என்றபடி.

"தென்னிலங்கைசெற்றபிரான்" என்றத்தையுங்கூட்டி "வந்துவீற்றிருந்த" என்றதுக்கு பாவம் - அப்போதுஇத்யாதி. அப்போது - ராவணவதாநந்தரம். முகம்மாறவைத்த - இவளுக்குஅபிமுகராகாதிருந்தஎன்றபடி. அவர் முகம்மாறவைத்தபோது இவளிருந்த ப்ரகாரமேதென்ன; அதுக்கு ப்ரமாணம் - விமலஇத்யாதி. "அயஸவேநாநுநதஞ்சிஸாஸாவிரராஜஷ்டிதீக்ஷ்யவை வியஸ்ய। வநதீக்ஷிதவபுஷாகாஙஞ் விமலஸஸாங்கநிபாநநாதஸீஸ" இதியுத்தகாண்டே ஸப்தஸததமே (கக). "ததா-விமலஸஸாங்கநிபாநநா" என்றதுக்குப் பொருள்-எப்போதுஇத்யாதி. எப்போது - யாதொருபோதென்றபடி. முகத்தில்குளிர்த்திமாறுமைச்

வளவிலும் இவள் மறுவற்ற சந்த்ரமண்டலம்போலே முகத்தில் குளிர்த்திமாறாதே யிருந்தாள். "दीपो नेत्रातुरस्येव प्रतिकूलासि मे दृढम्" (தீபோநேத்ராதுரஸ்யேவ ப்ரதிகூலாஸிமேத்ருடம்): இதுக்கு ஆளவந்தார் அருளிச்செய்யும்படி - "நேத்ர தோஷத்தால் வந்ததுபோக்கி, தீபதோஷத்தால் வந்ததன்று" என்று. [செற்றபிரான் வந்து வீற்றிருந்த] - ப்ரதிகூலநிரஸநம் பண்ணி விடாய்த்துவந்திருக்கும்; "भर्तारं परिषस्वजे" (பர்த்தாரம் பரிஷஸ்வஜே) என்னும்படியே ஶிஶிரோபசாரம் பண்ணப்போக வேணும். [பேரேயிற்கே இத்யாதி] - அவனிருந்த திருப்பேரையிலேபுக்குத்தேடி என்னெஞ்சானதுஓரிடத்திலும் மீண்டுவரக்காண்கிறிலேன். மீளவோண்ணாத லங்கையிலே புக்க திருவடியும் மீண்டுவேந்தான்; அணித்தான இவ்வூரிலே புக்க நெஞ்சு மீண்டுவரக் காண்கிறிலேன்! நெஞ்சுங்கூடவாராதபின்பு அவன் வாராமை சொல்லவேண்டாவிறே. நெஞ்சின் வரவுபார்த்துக் கண்மறைந்துகாணும் இவள் நிற்கிறது. [மாட்டேன்] - கண்டு ஜீவியாதே நான் இங்ஙனே முடிந்து போமித்தனையாகாதே. அபிமதன்வருந்தனையும், அவனுக்காக வ்ருத்தகீர்த்தநம்பண்ணி தரித்திருக்கவேண்டாவோ? என்னில், [ஆரையினி யிங்குடையந் தோழீ] - நெஞ்சுமில்லாதவன்றுஇனியாருண்டு? [தோழீ]-"நெஞ்சிலண்ணியன்நானே" என்றுயாகில், நீ நீயானுயே. இப்போது நான் இங்கில்லையோ? [என்னெஞ்சங் கூவவல்லாருமில்லை]-நெஞ்சைமீட்கைக்கு நீவேணுமே, நெஞ்சை யவனுக்காக்கின நீ,வேணுமே எனக்கு ஆக்கும்போதும்; உன்ஜமையிது, உனக்குக்கால்கள் நடைதாராது: அல்லாதார்க்கு"கூட்ட வேணும்" என்னும் த்வரையில்லை: ஆர் நெஞ்சை யழைப்பார்? [ஆரையினிக்கோண்டேன் சாதிக்கின்றது]-ஆரைக்கோண்டுதான் சாதிப்பது?இனி ஸாத்யந்தான் எது? நெஞ்சும்அவனும் வந்தால் இனி நான்தான் உண்டாகவேணுமே? இங்கு வெறுந்தறையாயிறே கிடக்கிறது.

கடி -சிரகாலம் பிரிந்து சேவிக்கப்பெற்றப்ரீதியும், அங்யஸ்பர்ஶதோஷமில்லாமையும், "சேஷியின் விநியோகப்ரகாரங்கொண்டு கார்யமென்?" என்கிற நினைவும்என்றபடி."தஜ"என்றதுக்குச்சேர,யஜாஎன்றத்யாஹார்யமென்று திருவுள்ளம்பற்றி - எப்போதுஎன்றது. அவர்முகம் மாறவைத்ததுக்குப்ரமாணம் - தீபஇத்யாதி. "प्राप्तचारित्रसन्देहा मम प्रतिमुखे स्थिता । दीपो नेत्रातुरस्येव प्रतिकूलासि मे दृढम्" இதிராவணவதாநந்தரே (யுத் - ககஅ - கஎ.) த்ருஷ்டாந்தபலத்தாலே-பிராட்டிக்கு நைர்த்தோஷ்யந்தோற்றுகிறதென்கைக்குபரமாசார்யஸம்வாதம்- இதுக்கு இத்யாதி."இலங்கைசெற்றபிரான் வந்துவீற்றிருந்த திருப்பேரையிலேபோகவேணும்"என்கிறவளுடைய ஆவம்- ப்ரதிகூலஇத்யாதி.ஶப்தார்த்தம் - அவனிருந்தஇத்யாதி. "பேரெயிற்கே" என்கிற அவதாரணத்துக்கர்த்தம் - மீளவோண்ணாதஇத்யாதி வாக்யத்வயம். தூதானநெஞ்சு வாராமையாலே, அவன் வாராமை சொல்லவேண்டாஎன்கிறுள் - நெஞ்சங்கூடஇத்யாதி. "மாட்டேன்" என்றதுக்கு முந்தினஆவம் - நெஞ்[illegible]வுஇத்யாதி. கண்மறைந்து - கண்பூத்து. ஆவாந்தரம் - கண்டுஜீவியாதேஇத்யாதி. "ஆ[illegible]யினி" என்றதுக்குஅவதாரிகை - அபிமதன்இத்யாதி. "இனி" என்றதுக்கு ஆவம் -'நெஞ்சும்இத்யாதி. நீ நீயானுயேயென்றது - நீ தோழியாம்படியாயே யிருந்தாயென்றபடி. அதாவது - என் வ்யஸநத்தைக்கண்டு எனக்குமுன்னே தளர்ந்துகிடந்தாயென்றபடி. இப்போது நான் இங்கில்லையோ? என்றது-தோழிவார்த்தை. 'நான்இங்கில்லையோ' என்றவநந்தரம், உன்னெஞ்சை யழைத்துக் கொள்ளுகிறதுக்கென்ன என்று கூட்டுவது. நெஞ்சைமீட்கைக்கு நான்வேணுமோ? என்ன - நெஞ்சை யவனுக்குஇத்யாதி. நான்மாட்டேனே?என்ன - உன்ஜமைஇத்யாதி. வேறே சிலரையிட்டழைத்துக்கொண்டாலோ? என்ன - அல்லாதார்க்குஇத்யாதி. 'உன்ஜமை' இத்யாதி வாக்யத்வயமும் - "கூவவல்லார்" என்ற பஹுவசநார்த்தம். ஶப்தார்த்தம் - ஆரைக்கோண்டுதான் இத்யாதி. "ஆரையினியிங்குடையம்" என்றதுக்கும் "ஆரையினிக்கொண்டு" என்றதுக்கும் வாசியே

ஆனால், செய்யப்பார்த்ததேன்? என்னில், [என்னெஞ்சங்கண்டதுவேகண்டேனே]-மீளாதே நெஞ்சுபோனவழியே போகப்பார்த்தேன். "அத்யைவாஹம் கமிஷ்யாமி லக்ஷ்மணேந கதாம் கதிம்" (அத்யைவாஹம் கமிஷ்யாமி லக்ஷ்மணேநகதாம்கதிம்) என்கிறபடியே நெஞ்சுபோனவழியே போகப்பார்த்தேன். (எ)

எட்டாம் பாட்டு.

கண்டதுவேகொண்டெல்லாருங்கூடிக்கார்க்கடல்வண்ணனோடு என் திறத்துக், கொண்டுஅலர்தூற்றிற்றதுமுதலாக்கொண்டஎன்காதலுரைக்கிற் றோழீ, மண்திணிஞாலமுமேழ்கடலும்நீள்விசும்புங்கழியப்பெரிதால், தெண்திரை சூழ்ந்துஅவன்வீற்றிருந்ததென்றிருப்பேரெயில்சேர்வன்சென்றே.

ஆ.—(கண்டதுவேகொண்டு.) - ஆந்தரமான அபிநிவேசம் ஸமக்ரமாயிருக்கச்செய்தே புறம்புதோற்றுகிற மாத்ரத்தையேகொண்டு, தத்வைலக்ஷண்ய குணஜநிதமான என் அபிநிவேசத்தைக் குற்றமாகவுங்கொண்டு லோகமெல்லாங்கூடி "ஒருத்திக்குஎம்பெருமான்பக்கலுள்ள அபிநிவேசமே! இப்படி அபிநிவேசிக்கை குடிப்பழியன்றோ?" என்று என்னையலர்தூற்ற, அது அடியாகக்கொண்டுகிளர்ந்தெழுந்த என் அபிநிவேசத்தின் பெருமை சொல்லநிலமன்று. சொல்லில், தோழீ! இவ்வஸங்க்யேயமான அண்டங்களும் அளவிறந்ததிருநாடும் நிறையப்பெருகி, அதுவும் இடம்போராமல் பொங்கிப் பெருகாநின்றது. ஆதலால், அவன்எழுந்தருளியிருந்த தென்திருப்பேரையிலே நானேயாகிலும்சென்று ஸம்ஶ்லேஷிக்கைதவிரேனென்கிறாள்.

ஒ.—எட்டாம்பாட்டில், எனக்கு "அவனைக்காணவேணும்" என்னும் அபிநிவேசம் "கடலில் - பெரிது" என்னுமளவன்றிக்கே அறமிக்கது; ஆனபின்பு, நீங்களாக இசையிலேயாகில், ஜலஸம்ருத்தியை யுடைத்தாய், தன் வேண்டற்பாடுதோற்ற எழுந்தருளியிருக்கிற தென்திருப்பேரையிலே நான் போய்ப்புகுவேன் என்கிறாள். [கண்டதுவே என்று தொடங்கி] - தோழீ! நான் அவன் குணசேஷ்டிதங்களைப் பண்ணக்கண்டதே பற்றாசாகக்கொண்டு, 'அவன் அழகிலே இவள் அகப்பட்டாள்' என்று எல்லாரும் பழிதூற்றினஅத்தை முதலாகக்கொண்டு ப்ரவ்ருத்தமான என்னுடைய ஸ்நேஹத்தின் படி சொல்லப்புகில்.

ப்ர.—[என்னெஞ்சங்கண்டதுவே கண்டேனே] - உத்தரஸ்ரீராமாயணே, "விஸ்ருஜ்ய லக்ஷ்மணம் ராமோ து:கஶோகஸமந்வித: । புரோதஸம் மந்த்ரிணஶ்ச நைகமாம்ஶ்சேதமப்ரவீத் ॥ அத்ய ராஜ்யேऽபிஷேக்ஷ்யாமி பரதம் தர்மவத்ஸலம் । அயோத்யாயா: பதிம் வீரம் ததோ யாஸ்யாம்யஹம் வநம் ॥ ப்ரவேஶயத ஸம்பாராந் மா பூத்காலாத்யயோ யதா । அத்யைவாஹம் கமிஷ்யாமி லக்ஷ்மணேந கதாம் கதிம் ॥."

தென்ன - நெஞ்சும்அவனும்இத்யாதி. அதாவது கீழே, தோழியுமில்லைஎன்றது, இங்கே தானுமில்லை என்கிறாள் என்றபடி. க்ரமேணாந்வய: "ப்ரவேஶயத ஸம்பாராந்மா பூத்காலாத்யயோ யதா । அத்யைவாஹம் கமிஷ்யாமி லக்ஷ்மணேந கதாம் கதிம்" இதி உத்தர ஸ்ரீராமாயணே ஸப்த ஶததமே. (எ)

ப.—அநந்தரம், அவனோட்டை ஸம்பந்தமடியாக ஊர்ப்பழிவிளையும்படி வந்த காதலானது ஸர்வலோகத்தையும் விளாக்குலைகொண்டு போகாநின்றது; ஆன பின்பு, அவனிருக்கிறதிருப்பேரையிலே சென்று புகுவேனென்கிறாள்.

கண்டதுவே - புறவாயில்கண்ட வைவர்ண்யாதிகளையே, கொண்டு-, எல்லாரும் - (தாய்மாரோடு ஊராரோடு வாசியற) எல்லாரும், கூடி - (ஒருமிடறாய்)கூடி, கார் - கறுத்த, கடல் - கடல்போலே ப்ரமஹாமான, வண்ணனோடு - வடிவையுடையவனோடேகூடி, என்திறத்து - என்னிடையாட்டமான சைதில்யத்தை, கொண்டு - அவலம்பித்துக்கொண்டு, அலர் - பழியை, தூற்றிற்று - தூற்றினவதுவே, முதலா-ஹேதுவாக, கொண்ட - இடங்கொண்ட, என்-, காதல்-, தோழீ - (அடியிலே இதுக்கு ப்ரவர்த்தகையான) தோழீ! உரைக்கில் - (பாசுரமிட்டுஉரைக்கப்) பார்க்கில், ("கடலின்மிகப் பெரிது" என்றவளையல்ல), மண்-, திணி - செறிந்த, ஞாலமும் - பூமியும், (அத்தைச் சூழ்ந்த), கடல் ஏழும்-, நீள்-(இதெல்லாவற்றுக்கும் இடங்கொடுக்கும்) மஹாவகாசமான, விசும்பும் - ஆகாசமும், கழிய - தனக்குள்ளேயாம்படி அவ்வருகே, பெரிது - பெருத்திரா நின்றது; (ஆனபின்பு), தெள் - தெளிந்த, திரை - நீர்த்திரையையுடைத்தாகையாலே ப்ரமஹாமாய், சூழ்ந்தவன் - காதலைப்பெருக்க வளைத்தவன், வீற்றிருந்த - இருக்கிற, தென்திருப்பேரெயில் - தென்திருப்பேரெயிலே, சென்று - (என்தாபம்ஆறும்படி) சென்று, சேர்வன் - சேரக்கடவேன்.

இ.—எட்டாம்பாட்டில், எனக்கு "அவனைக்காணவேணும்"என்னும் அபிநிவேசம் "கடலினும் பெரிது" என்னுமளவன்றிக்கே இருக்கையாலும் நான் தென்திருப்பேரெயிலைப் போய்ப்புகக்கடவேன் என்கிறாள்.

[கண்டதுவேகொண்டு] - "தலையில் வணங்கவுமாங்கொலோ" என்று அவன் குணங்களைச் சொல்லியும் புறம்புகண்டமாத்ரம் கொண்டிறே பழிசொல்லஇழிந்தது. என் அகவாயிருந்தபடி கண்டார்களாகில் என்படக்கடவர்கள்? [எல்லாருங்கூடி] - அந்யோந்யம் விரோதித்துவர்த்திக்குமவர்களும், பழிசொல்லுமதிலே வந்தவாறே ஏககண்டரானார்கள். [கார்க்கடல்வண்ணனோடு என்திறத்துக்கொண்டு] - என்வைவர்ண்யத்தைக் கண்டு "இவள் நிறத்தை இழக்கும்போது அந்நிறத்தையுடையவனுக்கு ஆகவேணும்" என்று கொண்டார்கள்: அவன் அழகிலே இவள் அகப்பட்டாள் என்கை. [அலர் தூற்றிற்று] - பழிதூற்றினார்கள். [அதுமுதலாக்கொண்ட என்காதல்] - அது அடியாக - அதுவேஎருவாக, இடங்கொண்ட; "ஊரவர்கவ்வையெருவிட்டு" என்னக்கடவதிறே. [என்காதலுரைக்கில்] - "யதோவாசோ நிவர்த்தந்தே" என்கிறஆநந்தத்துக்குஅவயியுண்டாகிலும் இக்காதலுக்குப் பாசுரமிட்டுச்சொல்லப்போகாது.[தோழீ] - அவன் காதலின் பெருமை சொல்லி அதடியாக என்காதலுக்கு க்ருஷிபண்ணின நீ, படும்பாடு அறிவுதியே. [மண்திணி இத்யாதி] - "உரைக்கில்" என்கிறதென்? "காதல்கடலின் மிகப்பெரிதால்" என்று இலையோ? என்ன, அது முகப்பில் வார்த்தை; பெரியதில் எல்லாவற்றிலும் பெரியது என்னுமித்தனை. மண்ணாலே நெருங்கின பூமி, கடினையான பூமி என்றபடி. அத்தையும் சூழ்ந்தகடலேழும், அவற்றுக்கெல்லாம் அவகாசமான ஆகாசமும், இவை இத்தனைக்கும் அவ்வருகுபட்டிருக்கை. இப்படி காதல் கரைபுரண்டதாகில் செய்யப்பார்த்ததென்? என்ன, [தெண்திரைஇத்யாதி] - இக்காதலுக்கு விஷயம் ஸந்நிஹிதமல்லாமையாலேவந்த வெக்காயந்தீர, ப்ரமஹாமாய் அவன் குறைவற்றிருக்கிற

தேசத்திலேபோய்ப் புகக்கடவேன். [சென்றே - சேர்வன்] - இனி, எதிரே அவன் வரி லும் மீளேன். அவனைச்சேருகையன்றுஉத்தேஶ்யம், அங்கேசென்றுகிட்டுகை.

ஈடு.—எட்டாம்பாட்டு. எனக்கு "அவனைக்காணவேணும்" என்னும் அபி நிவேஶம் "கடலில் மிகப்பெரிது" என்னுமளவன்றிக்கே, அறமிக்கது. ஆனபின்பு, நீங்க ளாக இசையிகோளாகில், தன்வேண்டற்பாடுதோற்ற எழுந்தருளியிருக்கிற தென்திருப் பேரெயிலே நான்போய்ப் புகுவேனென்கிறாள்.

[கண்டதுவேகோண்டு] - அவன்பேர் சோல்லுதல், "தலையில்வணங்கவுமாங் கோலோ?" என்று ஒருப்ரணாமஞ்சேய்தல் செய்யுமிறே: அம்மாத்ரத்தையேகோண்டு; புற விதழ்கண்டு படுகிறபடி இதுவானால், அகவாயிலோடுகிறது அறியில் என்படுவார்கள்? [எல்லா ருங்கூடி] - பரிவரோடு, ஹிதகாமரோடு, "இவையிரண்டுந்தானென்?" என்றுஇருப்பாரோடு வாசியறக்கூடி. பிறரைப்பழிசோல்லவென்னில், தம்மில் தாம் சேராதவர்களும் சேர்வர்க ளிறே. [கார்க்கடல்வண்ணனோடு என்திறத்துக்கோண்டு] - இவள்நிறம் விவர்ணமாம் போது, அவன்திறத்தே இழந்ததாகவேண்டாவோ? கடல்ஏறிவடிந்தவிடமென்று தோற்றுகிற தில்லையோ? என்னிடையாட்டத்தை ஶ்ரமஹரமான நிறத்தையுடையவனோடே கூட்டி. [அலர்தூற்றிற்றது முதலாக்கோண்ட என்காதலுரைக்கில்] - இவர்கள் பேசாதேயிருந்தார்க ளாகில் நானும் ஸாகமேயிரேசே? ஏநான்பழிக்குஅஞ்சி மீளுவேனென்று காணும்இவர்கள் பழிசோல்லப்புக்கது. [அலர்தூற்றிற்று]-அலர்தூற்றினார்கள். [அதுமுதலித்யாதி]-அதுதானே யடியாகக்கோண்ட என் காதலானது ஶதசாகமாகப்பணைக்கப்புக்கது. [காதலுரைக்கில்] - தன் காதல் தன்னாலும் சோல்லிமுடியவோண்ணாது காணும், "யதோவாசோ நிவர்த்தந்தே"(யதோவாசோநிவர்த்தந்தே) என்கிற †விஷயத்தைச்சோல்லிலும்இவள்காதல் பேச்சுக்கு நிலமன்று. இக்காதலுக்கு விஷயபூதனானவனையும் விளாக்குலைகோள்ளவற் றான காதலிறே. "சுடர்ஞான வின்பம்" என்று - பகவதாநந்தத்தைச்சோல்லிவைத்து, "அதனிற்பெரியவென்னவா" என்றதிறே. [தோழீ] - இக்காதலைவிளைக்கைக்கு நீ பண்

எட்டாம்பாட்டு - கண்டதுவேஇத்யாதி. "மண்திணிஞாலமும்" என்றுதொடங்கி "சேர் வன்சென்றே" என்னுமளவுங்கடாக்ஷித்தவதாரிகை - எனக்குஅவனைஇத்யாதி. வேண்டற்பாடு - பெருமையும், வைலக்ஷண்யமும்.

கண்டதாகிறதேதென்ன - அவன்பேர்சோல்லுதல்இத்யாதி. ஸகலதமாதல். அவயவா ணார்த்தமாதல் - புறவிதழ்இத்யாதி. புறவிதழ் - பாஹ்யவ்யாபாரம். அகவாயில் - நெஞ்சில். "எல் லாரும்" என்றதுக்குஅர்த்தம் - பரிவரோடுஇத்யாதி. தாய்மார் தோழிமாரொழிய, அயற்சேரியார் கூடு வர்களோ? என்ன - பிறரைஇத்யாதி. கார்க்கடல்வண்ணனிடத்தில் இவள் ப்ரவணையானளென்கிறது அறிந்தபடி என்? என்ன - இவள்நிறம்இத்யாதி. இதுக்குநியாமகமேதென்ன - கடல்ஏறிஇத்யாதி. ஶப்தார்த்தம் - என்னிடையாட்டத்தைஇத்யாதி. இடையாட்டம் - பரிப்பு: வ்யாபாரமாதல். "அலர் தூற்றிற்றதுமுதலா" இத்யாதியில் வ்யதிரேகஸித்தார்த்தம் - இவர்கள்பேசாதே இத்யாதி. அவர்கள் பழிசொல்லுகைக்கு ப்ரயோஜநமேதென்ன- நான்பழிக்குஅஞ்சி இத்யாதி. அவர்கள்சொன்னது விபரீத மாகவே பலித்ததென்கிறாள் - அதுதானேஇத்யாதி. பதிஶப்தார்த்தம்-தன்காதல்இத்யாதி. சொல்லி முடிக்கவொண்ணாமையின் எல்லையை அருளிச்செய்கிறார் - யதோவாசஇத்யாதி. பேச்சுக்கு நிலமல் லாமைக்கு ஹேதுவேதென்ன - இக்காதலுக்குஇத்யாதி. விளாக்குலைகொள்ளுகை - கபளீகரிக்கை, அவனையும் விளாக்குலைகொள்ளவற்றோ? என்ன - சுடர்ஞானம்இத்யாதி. "தோழீ" என்று ஸம்

† 'விஷயத்தைச்சொல்லிலும்' என்றஇடத்து 'ஸம்பகவதாநந்தத்துக்கு எல்லையுண்டாகிலும்' என்றுபாடாந்தரம்.

ணும் க்ருஷியறிதியிறே:இதுஇருந்தபடி பாராய்.[மண்திணிஞாலமித்யாதி]- "காதல்கடலில் மிகப்பெரிதால்" என்றவிடம் - ஓராதே சொன்னோம்; ஆனால் எங்ஙனே சொல்லும்படி என்னில்? பெரியவற்றில் பெரியதென்னுமித்தனையல்லது, ஒருபாசுரமிட்டுச் சொல்லலாவதில்லை. மண்ணாலே நெருங்கின பூமியென்றபடி. அத்தையும் சூழ்ந்தகடலேழும், அவற்றுக்கெல்லாம் அவகாசமான ஆகாசமும், இவை யித்தனைக்கும் அவ்வருகுபட்டிருக்கை. இப்படி காதல் கரைபுரண்டால் செய்யப்பார்த்ததென்? என்ன, [தெண்திரை இத்யாதி] - இக்காதல் மறுநனையும்படியான விஷயம்இருந்தவிடத்தே போய்ப் புகுமத்தனை. தெளிந்த திரைகளாலே சூழப்பட்டு அவன் வீற்றிருந்த தென்திருப்பேரையிலே போய்ப்புகுமத்தனை. "தஸ்யோபவநஷண்டேஷு நாநாபுஷ்பஸுகந்திஷு | விஹ்ருத்யஸலிலக்லிந்நா தவாங்கேஸமுபாவிஶம்"(தஸ்யோபவநஷண்டேஷு நாநாபுஷ்பஸுகந்திஷு | விஹ்ருத்யஸலிலக்லிந்நா தவாங்கேஸமுபாவிஶம்) என்கிறபடியே அநுபவயோக்யமான தேசத்திலே போய்ப்புகக் கடவோம். [சேர்வன்சென்றே] - இனிப் பகட்டால் தீராது, புக்கல்லது விடேன். ஆள் விடுதல், அவன் வரவுபார்த்திருத்தல் செய்யேன். [சென்றே-சேர்வன்] - இனி எதிரே அவன்வரிலும் மீளேன். அவனைச்சேருகை யன்று உத்தேஶ்யம், அங்கே சென்று கிட்டுகை. (அ)

ப்ர.—எட்டாம்பாட்டு. [கண்டதுவேகொண்டுஇத்யாதி] - [தெண்திரை சூழ்ந்தவன்வீற்றிருந்ததென் திருப்பேரெயில்] ஸுந்தரகாண்டே ஷட்த்ரிம்ஶஸர்கே ஸீதாவசநம் "ஶைலஸ்ய சித்ரகூடஸ்ய பாதே பூர்வோத்தரே புரா ॥ ௧௨ ॥ தாபஸாஶ்ரமவாஸிந்யா: ப்ராஜ்யமூலபலோதகே । தஸ்மிந் ஸித்தாஶ்ரமே தேஶே மந்தாகிந்யா ஹ்யதூரத: ॥ ௧௩ ॥ தஸ்யோபவநஷண்டேஷு நாநாபுஷ்பஸுகந்திஷு । விஹ்ருத்யஸலிலக்லிந்நா தவாங்கே ஸமுபாவிஶம் ॥ ௧௪.

போதிக்கிறவனுடைய ஹார்த்தபாவம் - இக்காதலைஇத்யாதி. "மண் ... ... இதுகைவத கை-இதிருந்தபடிபாராய் என்று, இப்போதிப்படி சொல்லுகிற நீ "காதல்கடலில் மிகப்பெரிதால்" ... முன்பு சொல்லுவானென்?என்ன- காதல்கடலில்இத்யாதி."அவன் வீற்றிருந்ததென் திருப்பேரெயில் என்றதுக்குபாவம் - இக்காதல்மறுஇத்யாதி. "தெண்டிரைசூழ்ந்தவன்" என்றதுக்குபாவம் - தஸ்யோபவநஇத்யாதி. "தஸ்யோபவநஷண்டேஷு நாநாபுஷ்பஸுகந்திஷு । விஹ்ருத்யஸலிலக்லிந்நா தவாங்கேஸமுபாவிஶம்" இதி ஸுந்தரகாண்டேஸீதா. "சென்றே" என்கிற ஏவகாரத்துக்கர்த்தம் - இனிப்பகட்டால்இத்யாதி. பகட்டுகை- "போவேன்" என்று அச்சமுறுத்துகை. "சென்று - சேர்வன்" என்றதுக்குபாவம் - ஆள்விடுதல்இத்யாதி. 'தோழீ! கண்டதுவே கொண்டு' என்றுதொடங்கி, 'சென்றே . சேர்வன்'இத்யந்வய:. மண்திணிஞாலம் - மண்செறிந்தபூமி. நீள் விசும்பு - மஹாவகாசமான ஆகாசம். கழியப்பெரிது - இவைதனக்குள்ளே அடங்கும்படி அவ்வருகே பெருத்திருக்கை. (அ)

ஒன்பதாம் பாட்டு.

சேர்வன்சென்றுஎன்னுடைத்தோழிமீர்காள்! அன்னையர்காள்என்னைத்தேற்றவேண்டா, நீர்களுரைக்கின்றதுஎன்இதற்கு? நெஞ்சும்நிறைவுமெனக்குஇங்கில்லை, கார்வண்ணன்கார்க்கடல்ஞாலமுண்டகண்ணபிரான் வந்துவீற்றிருந்த, ஏர்வளவொண்கழனிப்பழனத் தென்திருப்பேரெயின் மாநகரே.

ஆ.—(சேர்வன்சென்று.) - "இப்போதே தானே எழுந்தருளுகிறானிறே! இப்படிபதறவேணுமோ?" என்றும், "போகைதானும்கடவதல்ல" என்றும் தோழிமாரும் அன்னையருஞ்சொல்ல, 'நீங்கள் என்னையொன்றும் தேற்றவேண்டா; போகைக்குநீங்கள் சொல்லுகிற விரோதமென்? போனால் வரக்கடவ விரோதமுண்டோ?" என்று இவள் சொல்ல, "உன்னுடைய தைர்யசாதுர்யாதிகளுக்குப்போராது" என்று அவர்கள் சொல்ல,' அவனுடைய ஸௌந்தர்யஸௌசீல்யகாருண்யாதி குணங்களாலே என்னுடைய தைர்யசாதுர்யாதிகள்அபஹ்ருதங்களாயற்றின; ஆதலால்,அதிஸம்ருத்தமாய் அதிரமணீயமாய் என்னோடு ஸம்ச்லேஷிக்கைக்காக அவன் வந்தெழுந்தருளியிருந்த தென்திருப்பேரெயிலைச் சேர்வன் சென்று' என்கிறாள்.

ஒ.—ஒன்பதாம்பாட்டில், 'நீங்கள் என்னைத்தேற்றி ப்ரயோஜநமில்லை; தென்திருப்பேரெயிலைப்போய்ப் புகக்கடவேன்' என்கிறாள்.

[நீர்களுரைக்கின்றதென்இதற்கு] - எனக்கு ஓடுகிறதுசைக்கு நீங்கள் சொல்லுகிற வார்த்தையோடு என்னஸங்கதி உண்டு? [நெஞ்சும்நிறைவுமெனக்கிங்கில்லை] — நிறைவுடையார் இங்ஙன்படக்கடவதோ, நெஞ்சை வருந்திப்பிடித்து தரிக்கவேண்டாவோ? என்ன, அவையும் எனக்கிங்கில்லை. அவன் பக்கலின. [கார்வண்ணனென்று மேலுக்கு] - பரமோதாரனாய் ஆபத்ஸகனான க்ருஷ்ணன்வந்து இருந்தருளின ஸ்ரீன் மிகுதியையுடைய அழகிய கழனிகளோடேகூடினபழனங்களையுடைய தென்திருப்பேரெயிலாகிற மஹாநகரம்.

ப.—அநந்தரம், ப்ரளயாபத்ஸகனானவன் வர்த்திக்கிற தேசத்திலேசென்று புகத்தவிரேன். நீங்களென்னைத் தேற்றியுரைக்கிறதுக்கு ப்ரயோஜநமில்லையென்று தோழிமாரையும் தாய்மாரையும்பார்த்துச் சொல்லுகிறாள்.

என்னுடை - எனக்கு ஸமாநது:கைகளாயிருக்கச்செய்தே ஹிதஞ்சொல்லவொருப்பட்ட, தோழிமீர்காள்-! அன்னையர்காள்-(ஹிதபரைகளாயேபோரும்) அன்னைமீர்காள்! என்னை-, தேற்றவேண்டா - தேற்றவேண்டுவதில்லை; இதற்கு - இந்த அவஸ்த்தைக்கு, (தேறுகைக்குறுப்பாக), நீர்கள்-, என்-என்னவார்த்தை, உரைக்கின்றது - சொல்லுவது? நெஞ்சும் - (தேறியிருக்கைக்கு அடியான) நெஞ்சும், நிறைவும் - பூர்த்தியும்,• எனக்கு - எனக்குஉறுப்பாம்படி, இங்கு இல்லை -; (அவையங்கேயான பின்பு தேற்றமுமங்கேபோயிற்று; ஆதலால், நெஞ்சையும் நிறைவையும்அபஹரிக்கைக்கடியான), கார் - ச்யாமளமான, வண்ணம் - வடிவையும், கார்க்கடல் - ப்ரளயாபந்நமான, ஞாலம் - ஜகத்தை, உண்ட - அமுதுசெய்தவாபத்ஸகத்வத்தையும், பிரான் - ஆஸ்ரி

தோபகாரகமான ஹ்வயதையையுமுடைய, கண்ணன் - க்ருஷ்ணன், வந்து-, வீற்றிருந்த- இருக்குமிடமாய், ஏர்-ஏரினுடைய, வளம் - மிருதியையுடைத்தாய், ஒண்-ஊர்ஸநீயமான, கழனி - கழனியையும், பழனம் - நீர்நிலங்களையுமுடைத்தான, தென்திருப்பேரெயில் - திருப்பேரெயிலாகிற, மாநகர் - மஹாநகரத்தை, சென்றுசேர்வன் - சென்றுகிட்டிவிடக்கடவேன்.

இ.—ஒன்பதாம்பாட்டில், 'இப்படி அதிஸாஹஸத்திலே துணியுமது ஸ்த்ரீத்வத்துக்குப்போராது; செய்து தலைக்கட்டவும் போகாது' என்ன, நீங்கள்தேற்றினால் ப்ரயோஜநமில்லை, அங்கேபோய்ப் புகக்கடவேன் என்கிறாள்.

[சேர்வன் இத்யாதி] - அங்கேபோய்ப் புகுகைதவிரேன். என்வழியே ஒழுகுவாரோடு, தந்தாம்வழியே என்னைப்போக்கத் தேடுவாரோடு வாசிபற ஒருவரும் எனக்கு வார்த்தை சொல்லவேண்டா. [என்னைத் தேற்றவேண்டா] - கலங்கினாரோ தெளிந்தார்க்கு உபதேசிப்பார்? அஜ்ஞரோ வ்யவஸிதரை உபதேசத்தாலே மீட்கப்பார்ப்பார்? விஷயாயீநமாய் வருகிறத்தை ஸாயநத்திலே செலவு எழுதுகிறவர்களோ எனக்கு வார்த்தை சொல்லுவார்? இவள் தன்னைமறந்து அவனையே பார்த்துச்சொல்லுகிறாள்; அவர்கள் அவனைமறந்து தந்தாமையேபார்த்து மீட்கத்தேடுகிறார்கள். [நீர்களுரைக்கின்ற தென்இதற்கு] - எனக்கு ஓடுகிற ஊமைக்கு உங்கள் வார்த்தையோடு என்னஸங்கதியுண்டு? நீங்கள் சொல்லுகிறவார்த்தை எது, நான் நிற்கிறநிலைஎது? 'நிறைவுடையார் இங்ஙன்படக்கடவரோ? நெஞ்சை வருந்திப்பிடித்து யரிக்கவேண்டாவோ?' என்ன, [நெஞ்சும்நிறைவும் எனக்கிங்கில்லை] - மநஸ்ஸும் அடக்கமும் எனக்குஇங்கில்லை; அவன் பக்கலின; அங்கேபோய்ச் சொல்லப்பாருங்கோள். [கார்வண்ணன் இத்யாதி] - ஸ்த்ரீத்வத்தையும் மனஸ்ஸையும் அபஹரித்தபரிகாரம் இருக்கிறபடி. ஒன்றை யாராயாதபடி பண்ணிற்றும்ஸத்ரீத்வத்தை அழித்ததும் வடிவழகைக்காட்டியாயிற்று. வடிவழகு இல்லையாகிலும் விடவொண்ணாத ஆபத்ஸகத்வம்.உபகாரஸீலனான க்ருஷ்ணன். [வந்துவீற்றிருந்த]- தன்ஐஸ்வர்யத்தோடே காணலாம்படி இருந்த. அவன் கிட்டஇருந்தால் எனக்குப் புகாதொழியப்போமோ? [ஏர்வளம் இத்யாதி] - ஏரினுடைய மிகுதியையுடைத்தாய் அழகிதான வயலையும் அத்தோடேசேர்ந்த நீர்நிலங்களையுமுடைய தென்திருப்பேரெயிலாகிற மஹாநகரத்திலே சென்று சேருகை தவிரேன்? என்னைத் தேற்றவேண்டா. வளம் என்று மிகுதிக்குப்பேர்.

ஈடு.—ஒன்பதாம்பாட்டு. நீங்கள் இனி என்னைத்தேற்றி ப்ரயோஜநமில்லை: தென்திருப்பேரெயிலைப் போய்ப்புகக்கடவேன் என்கிறாள்.

[சேர்வன்சென்று] - உன்னுற்றமையாலே சிலசொல்லுகிறாயாகில்இது கடைப்படவற்றோ? என்ன,'அவஸ்யம்அங்கே புக்கல்லது விடேன்'என்கிறாள்.[என்னுடைத்தோழி

ஒன்பதாம்பாட்டு.—சேர்வன் இத்யாதி. "அன்னையர்காள், என்னைத்தேற்றவேண்டா, தென்திருப்பேரெயில் மாநகர் - சேர்வன் சென்று" என்கிறபதங்களைக்கடாக்ஷித்தவதாரிகை - நீங்கள் இனி இத்யாதி. தேற்றுகையாவது - இப்படி ஸாஹஸத்திலேதுணியுமது ஸ்த்ரீத்வத்துக்குப்போராது, செய்து தலைக்கட்டவும்போகாது; ஆகையால்இத்தை விடு என்கை.

கீழேயும் "சேர்வன் சென்று" என்றுவைத்து, திரியவும் சொன்னதுக்குஹாவம் - உன்னுற்றமை இத்யாதி. கடைப்படவற்றோ-நிறைவேறவற்றோ.கடைப்படுகை - நிறைவேறுகை. தோழிமீர்க

மீர்காளித்யாதி] - எனக்காயிருப்பாரும், என்னைத் தங்களுக்காக நினைத்திருப்பாரும் ஒன்றுஞ் சொல்லவேண்டா. தோழிமாரோடு தாய்மாரோடு வாசியில்லை காணும் இவளைத் தேற்றப்போகாமைக்கு. அஜ்ஞரோ வ்யவஸிதரை உபதேசத்தாலே மீட்கப்பார்ப்பார்? விஷயாயீநமாக வருகிறத்தை ஸாயநத்திலே செலவெழுதுகிறவர்களோ எனக்கு வார்த்தைசொல்லுவார்? இவள் தன்னைமறந்து, அவனையே பார்த்துப் பேசுகிறாள்; அவர்கள் அவனைமறந்து, தந்தாமையேபார்த்து மீட்கத் தேடுகிறார்கள். [நீர்களுரைக்கின்றதென் இதற்கு] - கலங்கினாரோ தெளிந்தாரைத்தேற்றுவார்? நீங்கள் நிற்கிற நிலையேது? என் நிலையேது? போகையிலே துணிந்திருக்கிற என்னை, ''புறப்படுகைபழி'' என்றிருக்கிற நீங்கள் சொல்லுவதென்? [இதற்கு]-எனக்கோடுகிற தசைக்கு. ஆனாலும், நெஞ்சும்அடக்கமுமுடையார்க்கு இது வார்த்தையோ? நாங்கள் சொன்னபடிசெய்து எங்கள் வழியே ஒழுகவேண்டாவோ? என்ன, [நெஞ்சும்நிறைவுமெனக்கிங்கில்லை] - அதுவேணுமாகில் அங்கேபோய்ச் சொல்லுங்கோள். மநஸ்ஸும் அடக்கமும் அவன்பக்கலின. நிறைவாவது - அடக்கம். நெஞ்சாவது - அதுஇட்டுவைக்கும் கலம். [கார்வண்ணனித்யாதி] - நெஞ்சும் நிறைவும் எனக்காம்படியாயோ அவன்படி இருக்கிறது? [கார்வண்ணன்] - தாய்மார் தோழிமாரானவர்கள் வார்த்தைகேளாதபடியாக வடிவுபடைத்தவன். வெறும்வடிவழகேயோ உள்ளது? என்னில், [கார்க்கடல் ஞாலமுண்ட] - தளர்ந்தார் தாவளம். ஆபத்துவந்தால் ரக்ஷித்துவிடுமத்தனையோ? என்னில்: [கண்ணபிரான்]-தன்னைப் பிறர்க்காக்கிவைக்கும் உபகாரகன். [வந்துவீற்றிருந்த] - தன்ஐஶ்வர்யமெல்லாந் தோற்றும்படியிருந்த. [ஏரிஇத்யாதி] - ஏரினுடைய ஸம்ருத்தியையுடைத்தாய், அழகிதான கழனியையும் நீர் நிலங்களையுமுடைய திருப்பேரெயிலாகிற மாநகரிலே சென்று சேர்வன். உங்கள் தடைக்குமீளுதல், அவ்வழியில் நிற்றல் செய்யேன். என்னைத் தேற்றவேண்டா. வளமென்று - மிகுதிக்குப்பேர். (௯)

பத்தாம் பாட்டு.

நகரமும்நாடும்பிறவும்தேர்வென்நாண்எனக்கில்லையென்தோழிமீர்காள்!
சிகரமணிநெடுமாடநீடுதென்திருப்பேரெயில்வீற்றிருந்த
மகரநெடுங்குழைக்காதன்மாயன்நூற்றுவரையன்றுமங்கநூற்ற
நிகரில்முகில்வண்ணன்நேமியான்என்நெஞ்சங்கவர்ந்தெனையூழியானே.

ளென்னுதே, ''என்னுடைத்தோழிமீர்காள்'' என்று விசேஷிக்கையைப்பற்ற - எனக்காயிருப்பாரும் என்கிறது. ''அன்னையர்காள்'' என்று கௌரவிக்கையாலே - என்னைத்தங்களுக்காக நினைத்திருப்பாரும்என்றது. தாய்மார்க்கொழியத்தோழிமார்க்கும்தேற்றப்போகாதோவென்ன-தோழிமாரோடுஇத்யாதி. ''நீர்கள்'' என்றதுக்குஹாவம் - கலங்கினாரோ இத்யாதி. விவரணம் - நீங்கள் இத்யாதிவாக்யத்வயமும் ''இங்கில்லை'' என்றதுக்குஹாவம்-அதுவேணுமாகில் இத்யாதி. ''கார்வண்ணன்'' என்றத்தை ''நெஞ்சும்நிறைவும் எனக்கிங்கில்லை'' என்றத்தோடே கூட்டிஹாவம் - நெஞ்சும் நிறைவும் இத்யாதி. 'தோழிமீர்கா ளன்னையர்காள்'' இத்யாதியோடேகூட்டி ஹாவாந்தரம் - தாய்மார் தோழிமாரான இத்யாதி. தளர்ந்தார்தாவளம் - தளர்ந்தார்க்குஆதாரம். ''சென்று - சேர்வன்' என்றதுக்குஹாவம் - உங்கள்தடைக்கு இத்யாதி. 'என்னுடைத்தோழிமீர்காள்' இத்யாரப்ய, 'மாநகரே - சென்று - சேர்வன்' இத்யந்வயః. இதற்கு - இந்தவவஸ்த்தைக்கு. நீர்களுரைக்கின்றதென் - தேறுகைக்குறுப்பாக நீங்கள் சொல்லுகிறவார்த்தையெது? (௧)

ஆ.—(நகரமும்.) - அவன் எழுந்தருளியிருந்த தென்திருப்பேரையிலே நீயே போகில் ஊரும் நாடும் மற்றும் எல்லாரும் உன்னைப் பழிசொல்லாரோவென்று தோழிமார் சொல்ல, 'அவர்களையிறே நான் தேடுகிறது' என்று இவள் சொல்ல, "பழி சொன்னால் உனக்கு லஜ்ஜையாகாதோ?" என்றுபின்னையும் தோழிமார்சொல்ல, அவனுடைய நிரதிசயாச்சர்ய ஸௌந்தர்யாதி கல்யாணகுணங்களாலும், அவனுடைய ஆச்சர்ய திவ்யசேஷ்டிதங்களாலும் என்னுடைய நெஞ்சும் லஜ்ஜையும் அபஹ்ருதமாய் எத்தகாலமுண்டு? ஆதலால் இனித் தென்திருப்பேரையிலே நானேயாகிலும் போமத்தேன.

ஒ.—பத்தாம்பாட்டில், "இருந்ததேகுடியாக உன்னைப் பழிசொல்லாரோ?" என்று தோழிமார்சொல்ல, அவர்களையன்றோ நான் தேடித்திரிகிறது? என்கிறாள்.

[பிறவும்] - மற்றமுள்ளனவும். [நாண் எனக்கில்லை யென்தோழிமீர்காள்] - தோழிமார் "ஸ்த்ரீத்வத்துக்கு ஏகாந்தமான லஜ்ஜாதிகளுக்குப்போருமோ" என்று சொல்ல, 'எனக்கு லஜ்ஜாதத்த்வம்பண்டே அறப்போயிற்றுக் காணுங்கோள்!' என்கிறாள். [சிகரமென்று மேலுக்கு] - பர்வதசிகரம்போலே நெடிதாய் மணிமாடங்களையுடைத்தாய்ப் பெரிதான தென்திருப்பேரையிலே வீற்றிருப்பதுஞ்செய்து ஆச்சர்யமான குணசேஷ்டிதாதிகளையுடையவனுமாய், துர்யோதநாதிகளை நிஸ்ஸேஷமாகமங்கும்படி மந்த்ரித்த ஒப்பில்லாத மேகம்போலேயிருக்கிற திருநிறத்தையும் திருவாழியையுமுடையனான மகரநெடுங்குழைக்காதன் என்நெஞ்சம்கவர்ந்து எத்தனைகாலத்தான் ?

ப.—அநந்தரம், ஆச்ரிதவிரோதி நிரஸநசீலனாய்த் திருப்பேரையிலே யிருந்த மகரநெடுங்குழைக்காதன் என்னெஞ்சை யபஹரித்து அநேககாலமுண்டு: அவனிருந்த நகரத்தோடுநாட்டோடு மற்றுமுள்ள தேசங்களோடு வாசியற நானே புறப்பட்டு ஆராயக்கடவேன்; எனக்கு லஜ்ஜையில்லை என்கிறாள்.

என் — எனக்கு, தோழிமீர்காள் - தோழிமாரென்று பெயராய் ஹிதஞ்சொல்லி நியமிக்கத்தேடுகிறவர்களே, சிகரம் - சிகரங்களையுடைத்தாய், மணி - மணிமயமாய், நெடு - ஓங்கின, மாடம் - மாடங்களையுடைத்தாய், நீடு - சிரகாலஸ்த்தாயியான, தென் திருப்பேரெயில் - தென்திருப்பேரையில், வீற்றிருந்த - எழுந்தருளியிருக்கிற, மகரம் - மகராகாரமான, நெடு - பெரிய, குழை - ஆபரணத்தையுடைய, காதன் - கர்ணபாசங்களையுடையனாய், மாயன்- அவ்வாபரணசோபைபோபாதி ஆச்சர்யங்களான குணசேஷ்டிதங்களை யுடையனாய், நூற்றுவரை - ஆச்ரிதவிரோதிகளான துர்யோ அன்று-(பாரதஸமரம் ப்ரவ்ருத்தமான)அன்று, மங்க - நசிக்கும்படி, நூற்ற - மந்த்ரித்து, (அத்தாலே), நிகர்இல் - ஒப்பு இல்லாத, முகில் - காளமேகநிபமான, வண்ணன் - வடிவிற்புகரையுடையனாய், நேமியான் - (ஆச்ரிதஸம்ரக்ஷணார்த்தமான) திருவாழியையுடையனவன், (இவ்வபதாநத்தைக்காட்டி), என்நெஞ்சம் - என்நெஞ்சை, கவர்ந்து - அபஹரித்துக்கொண்டு, எனையூழியான் - எத்தனைகாலத்தான்; (ஆனபின்பு),நகரமும் - (அவனிருந்த) நகரமும், நாடும் - (அத்தோடு சேர்ந்த) நாடும், பிறவும் - மற்றுமுண்டான பத்தநாதிகளும், (நானே), தேர்வேன் - போய்ஆராயக்கடவேன்; நாண் - ("இவர்கள் பழிக்கும்படி யிவர்கள் ஸந்நிதியிலே போகும்படியென்?" என்கிற ஸ்த்ரீத்வப்ரயுக்தமான) லஜ்ஜை, எனக்கு

இ.—பத்தாம்பாட்டில், "இருந்ததே குடியாகப் பழிசொல்லாரோ?" என்று தோழிமார்சொல்ல, அவர்களையன்றோ நான் தேடித்திரிகிறது என்கிறாள்.

[நகரம் இத்யாதி] - படைவீட்டிலும் நாட்டிலும் பத்தநாதிகளிலும் பழி சொல்லுவாரைத் தேடுவேன். [பிறவும்] - மற்றுள்ளனவும். [தேர்வேன்] - நிரூபிப்பேன் என்கிறத்தைவிட்டு, தேடுவேன் என்கிறது. அவனே வாரானாகில், நீங்கள் போகவொட்டீர்களாகில், அவனையும் என்னையும் சேர்த்துப் பழிசொல்லுவார் தேட்டம் என்கை. நகரங்களோடு நாடுகளோடு பத்தநங்களோடுவாசியறத் திரண்டார் திரண்ட விடமெல்லாம் உன்னைப்பழிசொல்லுகை பணிபோரும்படி இருக்கிற இருப்பு உனக்குத் தேட்டமாகை ஸ்த்ரீத்வப்ரயுக்தமான லஜ்ஜைக்குப் போருமோ? என்ன, [நாண் எனக் கில்லை] - லஜ்ஜை முதலிலேயில்லை. இங்கில்லை என்றதுவும் வார்த்தையன்று; அங்கும் இல்லை. [என்தோழிமீர்காள்] - ஸுகதுக்கங்கள் ஒக்கஅநுபவிக்க முறையாயிருக்க, லஜ்ஜைபோனமை என்வாயிலே கேட்கவிருப்பதே நீங்கள்! மாம்பழவுண்ணிபோலே பேரைப்பெற்றிருந்தீர்களித்தனை. [சிகரம் இத்யாதி] - பர்வதசிகரம்போலேநெடிதாய் மணிமயமான மாடங்களையுடைத்தாய்ப் பெரிதானதேசம். [மகரநெடுங்குழைக் காதன்] - தான் அகப்பட்ட துறை சொல்லுகிறாள். [மாயன்] - மற்றும் அகப்படுத்திக் கொள்ளவல்ல ஆஸ்சர்யமான ஸ்மிதவீக்ஷணாதிகள். ஊர்யோபுநாதிகளை முதலறஅழியச்செய்தவன். சிலரையழிக்க நினைத்தால் முதலறஅழிக்குமவன். ஆயுதம் எடுக்கவொட்டோம் என்ன, மந்த்ரத்தாலே அழியச்செய்கை. [நிகரில்முகில்வண்ணன்] - என்னை அழிக்கைக்கு மந்த்ரமும் வேண்டிற்றில்லை, வடிவேஅமைந்தது. [நேமியான்] - பகலைஇரவாக்கும் பரிகரமுடையவன். [என்நெஞ்சங்கவர்ந்து எனையூழியானே] - வடிவழகையும் ஆயுதசேர்த்தியையும்காட்டி என்நெஞ்சை அபஹரித்துப்போய் எத்தனை காலத்தான்? * மாசறுசோதி அக்காலமேபோயிற்றே! ஆனபின்பு, நாண் எனக்கில்லை; பழிசொல்லுவார் தேட்டம் எனக்கு.

ஈடு.—பத்தாம்பாட்டு. "இருந்ததே குடியாக நாட்டார் உன்னைப்பழி சொல்லார்களோ?" என்று தோழிமார்கள்சொல்ல, 'அவர்களன்றோ எனக்குத் தேட்டம்?' என்கிறாள்.

[நகரமும்நாடும்இத்யாதி]-உன் துணிவுதுணிவாக, நாட்டார்நகரத்தார் மற்றுமுள்ளாரும் எல்லாம் அறிந்து பழிசொல்லுகிறார்களிறே என்ன, எனக்குத்தான் அவனையோதேட்டம்? நகரம், நாடு, பத்தநாதிகள், இவற்றிலுள்ளாருடைய பழியேயன்றோ எனக்குத்தேட்டம்? [தேர்வேன்] - தேடுகிறேனென்றபடி. நீங்கள் சேரீர்களாகில், அவன் தானாக வாரானாகில், அவனுடனே கூட்டிப் பழிசொல்லுகிற இவர்களன்றோ ஸத்தையைநோக்குகிறார்கள்; †"அலரெழவாருயிர்நிற்கும்" என்றானிறே. பிறவும் - மற்றுமுள்ளனவும். [நாண்

பத்தாம்பாட்டு - நகரமும்இத்யாதி. "நகரமும்நாடும் பிறவும்தேர்வேன்" என்றத்தைக்கடாக்ஷித்தவதாரிகை - இருந்ததேஇத்யாதி. இருந்ததேகுடியாக - குடியிருக்கிறபேரெல்லாரு மென்றபடி. நகரமும்நாடும், பிறவும்-மற்றமுண்டான பத்தநாதிகள், இவற்றிலுள்ளாருடைய பழியைத் தேடுவேனென்ற படியர்த்தம். தேருகை - தேடுகை. விவரணம் - நகரம்நாடுஇத்யாதி. தேட்டமாகைக்குஹேதுவேதென்ன - நீங்கள்இத்யாதி. சேரீர்களாகில் - சேரவிடாதவர்களாகில். "பழிஸத்தையைநோக்கும்" என்னுமதுக்குப்ரமாணம் - அலர்இத்யாதி. அலரெழல் - பழிகிளம்பில். அலர் - பழி.

† குறள்-1141.

எனக்கில்லை] - லஜ்ஜை இங்கில்லாமையேயன்று; அங்குப்போனாலுமில்லை. இவ்வ்யக்தி தன்னில் முதலிலே யில்லாமை. [என்தோழிமீர்காள்] - இது நான் உங்களுக்குச்சொல்லி யறியவேண்டும்படியாவதே! [சிகரம் இத்யாதி] - பர்வதசிகரங்களைக் கொடுவந்து வைத் தாற்போலே ஓக்கமுடைத்தாய், ரத்நமயமான மாடங்களையுடைய பெரிதான தென்திருப் பேரையிலே வீற்றிருந்த. [மகரநெடுங்குழைக்காதன்]-மகராகாரமான பெரியவாபரணத்தை யுடைய கர்ணபாசங்களை யுடையவன். அவனுடைய ஓரோவவயவங்களிலே படிந்தாரை மீட்கலாயோவிருப்பது? [மாயன்] - சொல்லிச்சொல்லாத தேஹகாந்தியையும் ஆத்மகுணங் களையும் நினைக்கிறது. [மாயன்] - ஆஶ்ரித பக்ஷபாதம். [நூற்றுவரை அன்று மங்கநூற்ற] - சிலரையழிக்கநினைத்தால் ஒன்றும்ஶேஷியாதபடி யழிக்குமவன். துர்யோதநாதிகளை பாரத ஸமரம் ப்ரவ்ருத்தமானவன்று நசிக்கும்படி மந்த்ரித்த. [நிகரில்முகில்வண்ணன்] - ஒப்பில் லாத காளமேகம்போலேயிருக்கிற வடிவழகு. இத்தால் - விரோதியைவளர்த்தாலும் விட வொண்ணாதவடிவழகு என்கை. [நேமியான்] - ஆஶ்ரிதவிரோதிகளைப் போக்கும்போது பகலை இரவாக்கும் பரிகரத்தையுடையவன். திருவாழியைக் கொண்டு பீஷ்மாதிகளையும் தொடாராநிற்குமிறே. [நிகரில் முகில்வண்ணன் நேமியான்]-துர்யோதநாதிகளுக்கு மின்னும் இடியுமாய், பாண்டவர்கள் ஆர்த்திதீர வர்ஷித்துநின்றபடி. அவன்உன்விரோதிகளைப்போக் கிக்கூட நினையாதபின்பு, அவன்தானேவந்து உன்காலிலே விழும்படி மந்த்ரித்தாலோ? என்ன, [என்னெஞ்சங்கவர்ந்தெனையூழியானே] - அதுக்கீடான பரிகரமிழந்து நான்எத்தனை காலமுண்டு? வடிவழகையும் ஆயுதச்சேர்த்தியையுங்காட்டி என்நெஞ்சை யபஹரித் துப்போய் எத்தனைகாலத்தான்? [எனையூழியானே] - அநேககல்ப முண்டு. துர்யோதநாதி களைவெல்ல எண்ணினாற்போலே என்னெஞ்சை யபஹரிக்கைக்கு எத்தனைகாலமெண்ணி (க௦)

ஆருயிர்நிற்கும் - ப்ராணன் நிற்குமென்றபடி. இங்கில்லையென்றதே, “ ஹாவம் - லஜ்ஜைஇத்யாதி. விவரணம் - இவ்வ்யக்திஇத்யாதி “தோழிமீர்காள்” என்றதுக்குஹாவம்- இதுநான்இத்யாதி. “சிகரம் - நெடு - மணி - மாடநீடு” என்று அந்வயித்தர்த்தம் - பர்வதஇத் யாதி. “மகரநெடுங்குழைக்காதன்” என்றத்தோடே “என்னெஞ்சங்கவர்ந்து” என்று கூட்டிஹாவம் - அவனுடையஇத்யாதி. மாயன் - ஆஶ்சர்யபூதன் இத்யர்த்தஃ. இன்னத்தால் ஆஶ்சர்யபூதனென்று விசேஷியாமையாலே அருளிச்செய்கிறார் - சொல்லிஇத்யாதி. “நூற்றுவரை” இத்யாதியோடே கூட்டி “மாயன்” என்றதுக்குஅர்த்தாந்தரம் -ஆஶ்ரிதஇத்யாதி. “மங்க” என்றதுக்கு ஹாவம் - சிலரை இத்யாதி.நிழிற்பதத்தைக்கடாக்ஷித்து ஹாவம் - இத்தால்விரோதியைஇத்யாதி. “நேமியான்” என் றத்தை“நூற்றுவரை” இத்யாதியோடேகூட்டி ஹாவம் - ஆஶ்ரிவிரோதிகளைஇத்யாதி. அந்தரங்கராயி ருப்பாரும் ஆஶ்ரிதவிரோதிகளாகில் இத்தைக்கொண்டேஜயிப்பதென்கிறார் - திருவாழியைஇத்யாதி. “முகில்வண்ணன் நேமியான்” என்றத்தை - “நூற்றுவரை” இத்யாதியோடேகூட்டி, விஷய விபாகத்திலே ஹாவாந்தரம் - துர்யோதநாதிகளுக்குஇத்யாதி. “என்னெஞ்சங்கவர்ந்து” என்றதுக் கவதாரிகை - அவன்இத்யாதி. “நூற்றுவரை” இத்யாதியோடே “என்னெஞ்சங்கவர்ந்து” என் றத்தைக்கூட்டி ஹாவமாதல், விவரணமாதல் - துர்யோதநாதிகளைஇத்யாதி. ‘என்தோழிமீர்காள், ‘சிகரமணி’ என்றுதொடங்கி, ‘எனையூழியான்; நாணெனக்கில்லை,நகரமும்நாடும்பிறவும் தேர்வேன்’ இத் யந்வயஃ. அன்று - பாரதஸமரம் ப்ரவ்ருத்தமான அன்று. மங்க - நசிக்க. நூற்ற - மந்த்ரித்த, ஆலோசித்த. கவர்ந்து - அபஹரித்து. எனையூழியானே - எத்தனைகாலத்தான்? எத்தனை காலத்தை யுடையனென்றபடி. (க௦)

பதினோராம் பாட்டு.

ஊழிதோறூழியுருவும்பேருஞ்செய்கையும்வேறவன்வையங்காக்கும்
ஆழிநீர்வண்ணனையச்சுதனைஅணிகுருகூர்ச்சடகோபன்சொன்ன
கேழிலந்தாதிஓராயிரத்துள் இவைதிருப்பேரெயின்மேயபத்தும்
ஆழியங்கையனையேத்தவல்லாரவரடிமைத்திறத்தாழியாரே.

ஆ.—(ஊழிதோறூழி) - ப்ரதியுகம் விலக்ஷண ரூப நாமசேஷ்டிதங்களைக்கொண்டு ஸ்வாஸாதாரண திவ்யரூபேண அவதீர்ணனைப் ஆஶ்ரிதரை ரக்ஷித்தருளும் ஸ்வபாவனாயிருந்த அச்சுதனை அணிகுருகூர்ச்சடகோபன்சொன்ன, ஸகலகுணங்களாலும் நிருபமமாயிருந்த திருவாய்மொழியில் தென் திருப்பேரையைச்சொன்ன இத்திருவாய்மொழியைக் கொண்டு, அவனுடைய திருவாழியுங்கையுமாயிருக்குமழகை ஏத்தவல்லார், திருவாழியோடொக்க அடிமைசெய்யப் பெறுவாரென்கிறார்.

ஒ.—நிகமத்தில், இத்திருவாய்மொழி கற்பார் அடிமையிலே மிகவும் அவகாஹித்தார் என்கிறார்.

[ஊழிஎன்றுதொடங்கி] - யுகந்தோறும் ஆஶ்ரிதரக்ஷணத்துக்கு ஈடான ரூப நாமசேஷ்டைகளை வெவ்வேறேயுடையனைக்கொண்டு ஜகத்தை ரக்ஷிக்கும் ஸ்வபாவனைக் கடல்போலே ஶ்ரமஹரமான திருநிறத்தையுடையனைப் ஆஶ்ரிதரை ஒருநாளும் விடாத்தன்மையையுடைய எம்பெருமானை. [கேழிலந்தாதி] - ஒப்பில்லாத அந்தாதி.

ப.—அநந்தரம், இத்திருவாய்மொழியைச்சொல்லி ஸ்துதிக்கவல்லவர்கள் பகவத்கைங்கர்யத்தில் அவகாஹத்தையுடையவராவரென்று பலத்தையருளிச்செய்கிறார்.

ஊழிஊழிதோறு - கல்பந்தோறும் கல்பந்தோறும், பேரும்உருவும் செய்கையும் - நாமரூபவ்யாபாரங்களை, வேறவன் - வேறாகவுடையனைக்கொண்டு, வையம் - ஜகத்தை, காக்கும் - ரக்ஷிக்குமவனைப், ஆழிநீர் - ஸமுத்ரஜலம்போலே பசுத்த, வண்ணனை - அஸாதாரணவிக்ரஹத்தையுடையனைப், அச்சுதனை - ரக்ஷ்யவர்க்கத்தை நழுவவிடாதவனானவனை, அணி - ஜகத்துக்கலங்காரமான, குருகூர் - திருநகரிக்கு நிர்வாஹகரான, சடகோபன் - ஆழ்வார், சொன்ன - அருளிச்செய்த, கேழ் - ஒப்பு, இல் - இல்லாத, ஓரந்தாதி ஆயிரத்துள் -, திருப்பேரெயில்-, மேய - சேர்ந்த, இவைபத்தும் - இப்பத்தை, கொண்டு, ஆழியங்கையனை - கையுந்திருவாழியுமான ஸர்வேஶ்வரனை, ஏத்த - ஸ்துதிக்க, வல்லாரவர் - வல்லரானவர்கள், அடிமைத்திறத்து - சேஷவ்ருத்திவிஷயத்தில், ஆழியாரே - அவகா஢ரே. இது - எண்சீராசிரியவிருத்தம்,

இ.—நிகமத்தில், இத்திருவாய்மொழிகற்பார் அடிமையிலேமிகவும் ப்ரவணராவர் என்கிறார்.

[ஊழிஇத்யாதி] - யுகந்தோறும் ரக்ஷணத்துக்கு ஈடான ரூபநாம சேஷ்டிதங்களை வெவ்வேறே உடையவனைக்கொண்டு ஜகத்தைரக்ஷிக்கும். "பாலினீர்மை செம்பொனீர்மை" என்கிறபடியே ருச்யநுகுணமான ரூபநாமாதிகளையுடையனாயிற்று ஜகத்ரக்ஷணம் பண்ணுவது. [ஆழிநீர்வண்ணனை] - நிலைநின்றவடிவு. கடல்போலே ஶ்ரமஹரமான வடிவு. "முழுது ன்றபின்னை வண்ணம் கொண்டல்வண்ணம்" என்னக்கடவதிறே.

[அச்சுதனை] - ஸதைகரூபமான வடிவுஎன்னுதல். அவ்வடிவைப்பற்றினாரை நழுவவிடாதவன் என்னுதல், எவ்வவஸ்தையிலும் ஆஸ்ரிதரக்ஷணம் நழுவவிடாதவன் என்னுதல். [அணிகுருகூர்]- ஆபரணமான திருநகரி. [கேழிலந்தாதி] - ஒப்பில்லாதவந்தாதி. [ஆழியங்கையனையேத்தவல்லார்] - கையும்திருவாழியுமான அழகை ஏத்தவல்லார். இவர்க்கு கையும் திருவாழியுமான அழகாயிற்று, எங்கும் அநுவர்த்தித்துப் போருவது. அடிமை இடையாட்டத்திலே அவகாஹித்துப்பெறுவர். "அதிப்ராவண்யமாகாது" என்றுமீட்கப் பார்க்கவொண்ணாதபடிப்ராவணராவர். [ஆழியாரே] - ஆழியின் தன்மையை உடையவராவர் என்றுமாம். "கைகழலாநேமியான்" என்கிறபடியே பிரியாதே அடிமைசெய்யப் பெறுவர்.

ஈடு—. நிகமத்தில் இத்திருவாய்மொழி கற்றார் பகவத்கைங்கர்யத்திலே மிகவும் அவகாஹித்தாரென்கிறார்.

[ஊழியித்யாதி] - ஆஸ்ரிதரக்ஷணார்த்தமாக கல்பந்தோறும் கல்பந்தோறும் திருமேனியும் திருநாமமும் சேஷ்டிதங்களும் வேறுபடக்கோள்ளுமவன். இதுக்குப்ரயோஜநமேன்? என்னில், [வையங்காக்கும்] - ஜகத்ரக்ஷணார்த்தமாக. [ஊழிதோறூழியித்யாதி]- அப்படியே ரக்ஷித்திலனாகில் இப்படி விஸ்வஸிப்பாரில்லையே, இவனை "ரக்ஷகன்" என்று. [ஆழிநீர்வண்ணனை] - நோக்காதே படுகொலையடிக்கிலும் விடவொண்ணாத வடிவு. வேறுபடாதே அங்குள்ளார்க்குக் காட்சிகோடுக்கும் அஸாதாரணவிக்ரஹத்தைச் சோல்லுகிறது. [அச்சுதனை] - அவ்வடிவதனக்குஒருநாளும் அழிவில்லையென்னுதல்; பற்றினாரை ஒருநாளும்விடா னென்னுதல். [அணிகுருகூர்] - ஆபரணமான திருநகரி. [கேழிலந்தாதி] - ஒப்பில்லாத அந்தாதி. தம்மாலும் பிறராலும் மீட்கவொண்ணாதபடி பகவத்விஷயத்திலுண்டான வ்யவஸாயத்தைச்சோன்ன பத்தாகையாலே ஒப்பின்றிக்கேயிருக்கிறபடி. ஒப்பில்லாஆயிரத்துள் திருப்பேரையிலே சேர்ந்த இப்பத்தைக்கோண்டே. [ஆழியங்கையனையேத்தவல்லார்] - இதேல்லாவற்றாலும் சோல்லிற்றாயிற்று, கையுந்திருவாழியுமானவழகிலே இவர் அகப்பட்டபடி. அல்லாத அழகுகள் ஒருபடியும் இதுஒருபடியுமாயிருக்கை; இது

நிகமம் - ஊழிதோறு இத்யாதி "ஏத்தவல்லார் அவரடிமைத்திறத்தாழியார்" என்றதைக் கடாக்ஷித்தவதாரிகை-இத்திருவாய்மொழிகற்றார் இத்யாதி.

ஸப்தார்த்தம் - ஆஸ்ரித இத்யாதி. இதுக்கு - வேறுபடக்கொள்ளுகைக்கு. 'ஆஸ்ரிதரக்ஷணார்த்தமாக' என்று கீழேயருளிச்செய்திருக்க, 'இதுக்குப்ரயோஜநமென்னென்னில்' என்கிற சங்கையுதிக்கக்கூடுமோ? என்னில் - "கீழே - வ்யாக்யாதா அருளிச்செய்தமாத்ரம்: இங்கே - மூலஸ்பர்ஸியாக சங்கிக்கிறார்" என்றருளிச்செய்வர். 'ஜகத்ரக்ஷணார்த்தமாக' என்றதுக்கு விவரணம் - ஆஸ்ரிதரக்ஷணார்த்தமாக என்ற கீழ்வாக்யமென்று கண்டுகொள்வது. "வேறவன்" - வேறாகவுடையவனாய் இத்யர்த்தः. சாடுவுக்காக பதோபாதாநம் - ஊழிதோறு இத்யாதி. சாடு-அப்படியேஇத்யாதி. அப்படி - அந்தப்படியாலே. இப்படி - இந்தப் பூமியிலே. படி-ப்ரகாரமும், விக்ரஹமும், பூமியும். "வையங்காக்கும்" என்றவநந்தரம் "ஆழிநீர்வண்ணனை" என்றதுக்கு பாவம் - நோக்காதே இத்யாதி. படுகொலையடிக்கிலும் - கொலையிலேபட்டுவிழும்படி - ஹிம்ஸிக்கிலும். "வேறவன்" என்றவநந்தரம் "ஆழிநீர்வண்ணனை" என்று கூட்டிபாவார்த்தம் - வேறுபடாதே இத்யாதி. கடல்நீர்போலே குளிர்ந்து பசுத்தவடிவையுடையவனை என்று ஸப்தார்த்தம். கீழிற்பதத்தைக்கடாக்ஷித்து "அச்சுதன்" என்றதுக்கர்த்தம் - அவ்வடிவு இத்யாதி. "வையங்காக்கும்" என்றத்தைக்கடாக்ஷித்துஅர்த்தாந்தரம்-பற்றினாரை இத்யாதி. இந்த அர்த்தத்வயமும் - ச்யுதோநபவதீத்யச்யுதः, ஆஸ்ரிதாந்நச்யாவயதீத்யச்யுதः என்கிற வ்யுத்பத்தித்வயத்தைப்பற்ற. ஒப்பில்லாமைக்கு ஹேதுவேதென்ன - தம்மாலும் இத்யாதி. இதேல்லாவற்றாலும்- இத்திருவாய்மொழி எல்லாவற்றாலுமென்றபடி. "தாமரைக்கண்ணன்" என்றும் "செங்கனி

கைமேலே யநுபவித்துக்காணலாமே. [அவரடிமைத்திறத்தாழியாரே] - அடிமைவர்க்கத்தில் திருவாழியின் தன்மையையுடையவரென்னுதல்; அடிமையிடையாட்டத்தில் ஒருவரால் மீட்கவொண்ணாதபடி உட்புகுவரென்னுதல். (கக)

வாய்" என்றும் "செஞ்சுடர்நீண்முடி" என்றும் சொல்லிற்றேயென்ன - அல்லாத இத்யாதி. ஒருபடியும் - ஒருதட்டுமென்றபடி, அதெப்படி? என்ன - இதுகைமேலே இத்யாதி. முக்தினவர்த்தத்தில், "அடிமைத்திறத்து" என்றது; "திறம்" என்று - ஸமூஹமாய், 'அடிமைவர்க்கத்தில்' என்றபடி; "ஆழியார் -" 'திருவாழியின்தன்மையையுடையவர்' என்றபடி; தன்மை - ஸ்வபாவம். த்விதீயார்த்தத்தில், "திறம்" என்று - இடையாட்டமாய், அடிமைவிஷயத்திலென்றது; "ஆழியார் -" ஆழ்ந்தவர்கள்; அவகாஹித்தவர்களென்றபடி. 'ஊழிதோறூழி' இத்யாதிப்ய, க்ரமேணாந்வய: திருப்பேரெயில் மேயபத்தும் - திருப்பேரையிலேசேர்ந்த இப்பத்தைபுங்கொண்டு; வத்தவல்லாரவர் - வத்தவல்லரானவர்கள். (கக)

த்ரமிடோபநிஷத்ஸங்கதி.—ஶ்ரீரூமதராஶரண்ய ஶரண்ய பாவ ப்ரஸ்தாவஸ்ய ப்ரதிரஸ்மதளஸமேபேய: । ஸ்வஸ்ரீது ஹிதவாக்யவநோதர நிவிஶ்யெஶேஷஸாஸீக்ஷவாணமமாஸாமிராணி ஸ்ப்ருத்யெ ॥

த்ரவிடோபநிஷத்தாத்பர்யரத்நாவலீ.– (வெள்ளைச்சுரிசங்கு.) வக்ஷா ஸ்யக்கநஶத்ரு: வாரவேநிஜயஸ்வாவகாரீவிமஜ்ஜத்தெநாநிஷ்ப்ரமதாரஸ்ஸ விஜலநக்ரூக்ஷகொமோயிக்ஷ்ஹ்ய: க்ஷவத்ரா்ரக்ஷகஸ்ரீகோரவாஜலக்ஷணஸ்வாஜ காஞ்யாஸ்வேஷஸ்வஶோஷ்ஹாவப்ரகடயகீஸரிஸ்வேத்யஶம்ஸஶோஸி: ॥

திருவாய்மொழி நூற்றந்தாதி. { வெள்ளியநாமங்கேட்டு விட்டகன்றபின்மோகம்
தெள்ளியமால் தென்திருப்பேர் சென்றுபுக - உள்ளமங்கே
பற்றிநின்றதன்மை பகருஞ்சடகோபற்கு
அற்றவர்கள் தாமாழியார்.

ஆழ்வார் திருவடிகளே ஶரணம், எம்பெருமானார் திருவடிகளே ஶரணம், ஜீயர்திருவடிகளே ஶரணம்.

நான்காந்திருவாய்மொழி—ஆழியெழ - ப்ரவேசங்கள்.

ஆ.—(ஆழியெழ) - இப்படி தென்திருப்பேரையிலே தாமேபோக அத்ய வஸித்திருந்த ஸமயத்திலே, "பதாவ்ருஜிஸம்ஹாரம் ஹ்ராதோ ப்ருதநமர்ஸ்வா | மஹா ஸௌரிந் ஸவிசேதா நாவிஜித்ய நிவர்த்ததே || ஸஜாதோத்வரநராமஸ்ய காஞ்ஜேரேண ரயேணவா | வஸாராநுஸஜநவஸ்திக்யம் காஷ்யம் வரிவ்ருஷ்டி" என்னும் ப்ரக்ரியையாலே தென்திருப்பேரையிலே ம்ருகயார்த்தமாக எழுந்தருளின பெரியபெருமாள் விஜயலக்ஷ்மீ பரிவ்ருதராய்க்கொண்டு எழுந்தருளினபடியைக்கண்டு நிரதிசயப்ரீதியுக்தராய் ஸம்ப்ராந்தமாநஸராய்க்கொண்டு, "தம் த்ருஷ்ட்வா ஶத்ருஹந்தாரம் மஹர்ஷீணாம் ஸுகாவஹம் | பபூவ ஹ்ருஷ்டா வைதேஹீ பர்த்தாரம் பரிஷஸ்வஜே" என்னும் ந்யாயத்தாலே ப்ரதிகூலநிரஸநஜநித ஶ்ரமத்துக்கு ஶிஶிரோபசாரமாகப் பெரியபெருமாளோடே ஸம்ஶ்லேஷித்து, ததீய திவ்யசேஷ்டிதங்களைச்சொல்லி, என்னப்பன் செய்தருளினபடியென்? பிரான்செய்தருளினபடி யென்? என்றநுபவிக்கிறார்.

ஒ.—நாலாந்திருவாய்மொழியில், அறக்கொடிய வ்யஸநங்கள் வந்தவிடத்திலும் தன்னைவிடாதே புறம்புள்ள பற்றெல்லாம்விட்டு, தன்னைக்காணப்பெறாமையாலே மிகவும் அவஸந்நரான இவர்க்கு, விரஹத்தால் வந்ததளர்த்திதீர்ந்து மிடுக்குண்டாம்படியாக, எல்லா ஹ்ருதியையும் போக்கவற்றாய் எல்லா விஸ்மயத்தையும் பண்ணவற்றாயுமுள்ள தன்னுடைய விஜயங்களை எம்பெருமான் காட்டியருளக்கண்டு தரித்த ஆழ்வார் திருவுலகளந்தருளுகை தொடக்கமான அவனுடைய விஜயங்களெல்லாம் அவ்வவகாலத்திலே ஒக்க அநுபவித்து எம்பெருமானையேத்தி இனியராகிறார்.

ப.—நாலாந்திருவாய்மொழியில், விஶ்லேஷஜநிதமான ஆர்த்தியாலே ப்ராப்தித்வரையையுடைய இவர், தம்முடைய ஆர்த்திஹேதுவான ப்ரபல ப்ரதிபந்தகங்களைப் போக்குகைக்கு, ஸர்வசக்தியான ஸர்வேஶ்வரனையொழிய ஸமர்த்தரில்லையென்று அறுதியிட்டு, அவனுடைய த்ரைவிக்ரம வ்யாபாரத்தையும், அம்ருத மதநத்தையும், பூம்யுத்தரணத்தையும், ஜகந்நிகரணத்தையும், பாரதஸமரப்ரவர்த்தகத்வத்தையும், ஹிரண்யவதத்தையும், லங்காதஹநத்தையும், பாணயுத்தத்தையும், ஜகத்ஸ்ருஷ்டி ப்ரகாரத்தையும், கோவர்த்தநோத்தரணத்தையும் அநுஸந்தித்து, ஏவம்விதவிஜயாபதாந விசிஷ்டனான ஸர்வேஶ்வரனுடைய விரோதி நிரஸந ஸாமர்த்யத்தை யநுஸந்தித்தருளுகிறார்.

இ.—நாலாந்திருவாய்மொழியில், அறக்கொடியவாய்ப் பொறுக்கவொண்ணாத விஶ்லேஷவ்யஸநங்கள் வந்தவிடத்திலும் தன்னைவிடாதேயிருந்து புறம்புள்ள பற்றெல்லாம்விட்டு, தன்னைக் காணப்பெறாமையாலே நெடுநாள் நோவுபட்டுப்போந்த இவர் தசையை அநுஸந்தித்தருளி, "இவர்நம்மை அநுபவிக்கவும் ஆளாகமாட்டார், இவர்க்கு மிடுக்கையுண்டாக்கவேணும்" என்று "இவர்தாம் * வளவேழுலகிலாழ்வார், நம்விஜயம் கண்டால் உகப்பர்" என்று தான் க்ரமத்தாலே பண்ணின அபதாநங்களை ஒருகாலே காட்டியருளக்கண்டு தரித்த ஆழ்வார், திருவுலகளந்தருளுகை தொடக்கமான அவனுடைய விஜயபரம்பரைகளை, * மயர்வற மதிநலமருளப் பெற்றவராகையாலே, ஸமகாலத்திலே அநுபவித்தவர்களைப்போலே அநுபவித்து ஏத்திஹ்ருஷ்டராகிறார், அங்ஙனன்

றிக்கே "பேரெயில்சூழ்கடல் தென்னிலங்கை செற்றபிரான்" என்று ராமாவதார விஜயம் ப்ரஸ்துதமான ப்ரஸங்கத்தாலே, அவதாராந்தரங்களில் விஜயத்தையும் பேசி அநுபவிக்கிறார் என்னுதல். "கண்ணபிரானுக் கென்பெண்மை தோற்றேன்" என்று தம்முடைய தோல்வி ப்ரஸ்துதமாகையாலே, எதிர்த்தலையில் வெற்றியை அநுஸந்தித்து அக்கோடி சேர்ந்த அல்லாதவிஜயங்களையும் பேசி அநுபவிக்கிறார் என்னுதல்.

ஈடு.—கீழில்திருவாய்மொழியிலே - ஸம்வத்விஷயத்திலே இவர் அபஹ்ருத சித்தரானபடி சொல்லிற்று; கீழ் இவர்க்குப்பிறந்த அவஸாதம், ஒன்றைக்கொடுத்து மாற்றுதல் ஒருவராலேபரிஹரித்தல்செய்யுமதொன்றன்றிறே; "இனிஇவர்க்குச்செய்யலாவதென்?" என்றுபார்த்தருளி, "ஒன்றுகொடுக்கலாவது இதுக்குமேலில்லையிறே" என்றுபார்த்துத் தன்னுடைய விஜயபரம்பரைகளைப் பத்தும்பத்தாகக் காட்டிக்கொடுக்கக் கண்டநுபவித்து ஹ்ருஷ்டராகிறார். அவனுக்கு உறுப்பாமன்று தாமும்வேண்டி, அவனுக்கு உறுப்பாகாதவன்று தாமும் வேண்டா என்றிருக்கும் வளவேழுலகிலாழ்வாரிறே இவர்தாம்! தம்மை அழியமாறியும் அத்தலைக்கு நன்மை தேடுமவர்இறே! இப்படி இவர் ப்ரக்ருதி அறியுமவனாகையாலே, தன்னுடைய அபதாநங்களைக்காட்டி இவருடைய இழவெல்லாந்தீரும்படி ஸமாதாநம்பண்ண அநுபவித்துத் தலைக்கட்டுகிறார். பூதகாலத்திலுள்ளவையடங்கலும் ஸமகாலத்திற்போலே ப்ரத்யக்ஷவிஷயமாம்படிபண்ணிக்கொடுத்தான். அடியிலே இவர் தாம் ஸாக்ஷாத்கரிக்கவல்லராம்படி பண்ணிக்கொடுத்தானிறே. மயர்வறமதிநலமருளின பின்பும் இவ்வளவம்வர வாஸனைபண்ணுவித்தானே! ஆகையால், இவர்க்கு ஒருகுறைகளில்லையே.

அன்றிக்கே, கீழே "பேரெயில்சூழ்கடல்தென்னிலங்கைசெற்றபிரான்" என்று ராமாவதாரவிஜயம் ப்ரஸ்துதமாகையாலே, அவ்வழியாலும் எல்லாவவதாரங்களிலுமுண்டான விஜயங்களை யநுஸந்தித்து, ராமாவதாரத்தில் விஜயங்களைக் கண்டுகேக்கும் சக்ரவர்த்தியைப்போலவும், க்ருஷ்ணாவதாரத்தில் விஜயங்களைக் கண்டுகேக்கும் ஸ்ரீவசுதேவரைப் போலவும் இவரும் உகந்துபேசுகிறார் என்னுதல். "அஹம்வேத்மி" (அஹம்புநர்)-என்

ஆழியெழப்ரவேசே: வ்ருத்தாநுவாத பூர்வகமாக வர்த்திஷ்யமாணஸங்கதி - கீழில்திருவாய்மொழியிலே என்று தொடங்கி, ஹ்ருஷ்டராகிறார் என்னுமளவாலே. விஜயபரம்பரைகளைக் காட்டிக்கொடுக்கைக்கு ஹேதுவை யருளிச்செய்கிறார் - கீழ்இவர்க்கு இத்யாதி. மாற்றுதல் - பரிஹரித்தல், பரிஹரிக்கும் ப்ரகாரமருளிச்செய்கிறார் - இனிஇவர்க்கு இத்யாதி. பத்தும்பத்தாக - பத்துப்பாட்டிலுமென்று ஸ்வஹாவார்த்தம்; நன்றாகவென்று த்வநி. ஸம்ஶ்லேஷார்த்தமாக துக்கப்படுகிற இவர்க்கு விஜயபரம்பரைகளைக் காட்டிக்கொடுத்தால் தீருமோ? என்ன - அவனுக்கு உறுப்பாமன்று இத்யாதி வாக்யத்ரயம். விவரணம் - தம்மை இத்யாதி. அதீதகாலத்திலுள்ளவற்றை இப்போது ப்ரத்யக்ஷமாகக் காணும்படியென்? என்ன - பூதகாலத்தில் இத்யாதி. அப்படி கொடுத்தானோ? என்ன - அடியிலே இத்யாதி. ஆனாலும் எல்லா அவதாரவிஜயங்களையும் ஒருகாலே யநுபவிக்க ஶக்தியுண்டோ? என்ன - மயர்வற இத்யாதி. வாஸனை பண்ணுவிக்கையாவது - அந்த ஜ்ஞாநத்தை இவ்வளவாக விசதமாக்

ஸங்கத்யந்தரம் - அன்றிக்கே இத்யாதி. அப்படி ராமாவதாரவிஜயத்தைக்கண்டு சக்ரவர்த்தியுகந்தானோ? என்ன-அஹம்புநர் இத்யாதி. "அஹம்வேத்மி மஹாத்மாநம் ராமம் ஸத்யபராக்ரமம் । வஸிஷ்டோபி மஹாதேஜா யே சேமே தபஸி ஸ்திதா:"

ப்ரக்ருதியை அறிந்து என்வழியே போந்த நீ, "பெருமாள்காடேறப்போக" என்றால் நான் ஜீவிப்பேனென்று சொன்னாயே. "தேவகுமாரரூபம்" (தேவகுமாரரூபம்) - அது கிடக்க; இவரையே நீதான் "காடேறப்போக" என்கிறது? "இவர்க்குமவ்வளவேயோ" என்று சிறியாத்தான் கேட்க, "கண்ணேச்சிலாம்" என்று தரம்போராதாரை ஒப்பாகச் சொல்லி ருஷி கரிபூசுகிறான்" என்றார். "அலங்க்ருதம்" (அலங்க்ருதம்)-அத்தாலும் வெறும் புறங்கிடர் ஒருபோலி சொல்லலாவது? ஒப்பித்தாலோக்கச்சொல்லலாவாரில்லை. "தர்ஸநீயம்" (தர்ஸநீயம்) - இவனுக்கு இரண்டுபடியும் உத்தேஸ்யமாயிருக்கிறபடி. "ஆவ்ரஜந்தம்" (ஆவ்ரஜந்தம்) - புஷ்பம் மலரும்போது எங்கும் ஒக்கப்பிறக்கும் விகாஸம்போலே. அதுவும் வண்டைநோக்கியிறே யலருவது, இவரும் போக்தாக்களைக்குறித்திறே. [நந்தாமி இத்யாதி] - கண்டபடியே யிருக்கச்செய்தே, காணுதுகண்டாரைப்போலேயாயிற்று நாடோறும் நாடோறும் க்ஷணந்தோறும் க்ஷணந்தோறும் உகக்கும்படி. "தர்ஸநேந" (தர்ஸநேந)-அணைத்தல்,வார்த்தைசொல்லுதல் செய்யவேண்டா; காட்சியேஅமையும். கரைபுரண்ட அநுபவமுள்ளவிடத்திற்போலேகாணும் ப்ரயோஜநம்; * ஸதாபஸ்யந்திஇறே. "பவாமித்ருஷ்ட்வாசபுநர்யுவேவ" (பவாமித்ருஷ்ட்வாசபுநர்யுவேவ) - அறுபதினாயிரம் ஸம்வத்ஸரம் வயஸ்ஸைப்புக்கு வ்ருத்தனான சக்ரவர்த்தி, பெருமாளைக்கண்டபின்பு, பெருமா

வேவ" இத்யயோத்யாகாண்டே தஸரதப்ரலாபே (கஉ-கo௫) இது - போக்யதைக்கு ப்ரமாணமேயா கிலும். விஜயங்களுமிப்படி போக்யமாயிருக்குமென்கைக்காக இத்தையெடுத்தருளினாரென்னுதல்; ஸ்வ வ்யதிரிக்த காந்திகளை உத்போதகல்பமாக்கும் வடிவழகும் விஜயாந்தர்ப்பூதமென்று கருத்தென்னுதல். புந:-வ்யாவ்ருத்தியுண்டென்றபடி. கைகேயியைப்பார்த்து "இப்போது நான்வ்யாவ்ருத்தன்" என்று சொல்லுகிறவனுடையபாவம் - என்ப்ராக்ருதியை இத்யாதி. அதுகிடக்க - எனக்கு ஹிதகாமையா யிருக்கிற ஆகாரமில்லாவிட்டாலுமென்றபடி. இவரையே - இவ்வழகுடையவரையே. தேவகுமார: - ஸுப்ரஹ்மண்ய:. இவர்க்கும் - பெருமாளுக்கும். அவ்வளவேயோ - அழகு ஸுப்ரஹ்மண்யனளவோ? என்றபடி. நம்பிள்ளையைக் கேட்க என்றபடி. கண்ணெச்சில் - த்ருஷ்டிதோஷம். கரிபூசுகை - த்ருஷ்டிதோஷ பரிஹாரமாகக் கரியைப்பூசுகை. அழகைமறைக்கிறானென்றபடி. "தேவகுமாரரூபம்" என்றவநந்தரம் "அலங்க்ருதம்" என்றதுக்கு பாவம் - அத்தாலும் இத்யாதி. அத்தாலும் - கரிபூசுகிற ஆகாரத்தாலுமென்றபடி. இவனுக்கென்றது - சக்ரவர்த்திக்கென்னுதல், ருஷிக்கென்னுதல். இரண்டு படியும் - அழகும் புத்ரத்வமும் என்றபடி. ஆஸமந்தாத்வ்ரஜந்தமென்று விவக்ஷித்து பாவம் - புஷ்பம் இத்யாதி. அதாவது - பூஅலரும்போது ஓடைஎங்குமொக்க ஒருவிகாஸம்பிறக்குமாபோலே, இவர் நடக்கும்போது திருமேனியெங்கும் ஒக்கவொருசெவ்விபிறக்குமென்றபடி. எங்குமொக்க - ஓடை முதலான ப்ரதேஸமெங்குமொக்க என்றபடி. ஆபிமுக்யேந வ்ரஜந்தமென்று விவக்ஷித்தார் தாந்தரம் - அதுவும்வண்டைஇத்யாதி. "அஹந்யஹநி, நந்தாமி" என்கிறவர்த்தமாநத்வயத்துக்கர்த்தம் - கண்ட படியேஇத்யாதி. "அஹந்யஹநி" என்றது - நாள்தோறும் என்றபடி. "நந்தாமி" என்றது - க்ஷணந்தோறும் என்றபடி என்று வர்த்தமாநத்வயத்துக்கர்த்தம். இப்படி க்ஷணந்தோறும் உகக்கிறது ஸம்பாஷண ஸம்ஸ்லேஷங்களாலேயோ? என்ன - தர்ஸநேந என்று ஸங்கதி. கரைபுரண்ட அநுபவமுள்ள இடமாவது - பரமபதம். காட்சிமாத்ரமேபோருமோ? என்ன - கரைபுரண்டஇத்யாதி. அங்கும் காட்சியேயோ ப்ரயோஜநம்? என்ன - ஸதா இத்யாதி "பஸ்யந்தி" என்கிற வர்த்தமாநத் தாலே - ஸர்வகாலமுமென்கிறவர்த்தம் ஸித்தியாநிற்க, "ஸதா" என்கிறது - ஸர்வாவஸ்தைகளி லும் என்றபடி. கீழ்ச்சொன்ன தர்ஸநந்தன்னையே - "த்ருஷ்ட்வா" என்று அர்த்தாந்தரவிந்யாஸார்த்த மாக அநுவதிக்கிறது. "பவாமித்ருஷ்ட்வாசபுநர்யுவேவ" என்றதுக்கர்த்தம் - அறுபதினாயிரம்இத்யாதி.

ளுக்கும் தனக்கும் வாசிதெரியாதபடியானான். "காமனைப்பயந்தகாளை" என்னுமா போலே தன்னையநுபவிப்பாரையும் தன்னைப்போலேயாக்கி உஜ்ஜீவிப்பிக்கும் விஷயம் போலேகாணும். "யுவேவவஸுதேவோஹம் விஹாயாஸ்யாமதாம்ஜராம்" (யுவேவவஸுதேவோபூத்விஹாயாப்யாகதாம்ஜராம்)என்னும்படியானாரிறே ஸ்ரீவஸுதேவரும். "கீழே 'கண்ணபிரானுக்கென்பெண்மை தோற்றேன்' என்றுகொண்டு இத்தலையில் தோல்வித்த எதிர்த்தலையான அத்தலையில் விஜயங்களை யநுஸந்திக்கிறார்" என்று பிள்ளை திருநறையூரரையர் பணிக்கும்படி.

முதற் பாட்டு.

ஆழியெழச்சங்கும்வில்லுமெழத்திசை
வாழியெழத்தண்டும்வாளுமெழஅண்டம்
மோழையெழமுடிபாதமெழ அப்பன்
ஊழியெழ உலகங்கொண்டவாறே.

ஆ.—சதுர்த்தசபுவநாந்தர்வர்த்திகளான ஸர்வாத்மாக்களினுடையும் ஸ்துாயமானாய், ஸ்ருஷ்டபந்தமென்னும்படி ஆச்சரியமத்திகமாக ஸம்வர்த்தித திவ்யாவயவ திவ்யாயுதோபேதனாய்க் கொண்டு என்னப்பன் மஹாபலியை ஜயித்து லோகத்தை யளந்துகொண்டருளினபடி என்! என்கிறார்.

ஒ.—முதற்பாட்டில், திருவுலகளந்தருளினபடியை அநுஸந்தித்து விஸ்மிதராகிறார். [ஆழிஎன்றுதொடங்கி] - தான்வளர்ந்தருளப்புக்கவாறே திருவாழிதொடக்கமான திவ்யாயுதங்கள் தன்னிற்காட்டில் வளர இவ்வழகைக்கண்டு அநுபவிக்கிறவர்களுடைய மங்களவாதங்கள் திக்குத்தோறும் எழ. [அண்டம்மோழையெழ என்று மேலுக்கு] - தன்னுடையவளர்த்திக்கு அண்டாந்தராளம் இடம்போராமைபாலே விம்மி அண்டபித்திபிளந்து ஆவரணஜலம் உள்ளேவந்து புகுருமபடியும் முடியும் பாதமுமொக்க எழும்படியாகவும் தைத்யர்களாலே உபத்ரவப்பட்ட காலம்போய் நல்லகாலமாகவும் எம்பிரான் உலகை அளந்துகொண்டருளினபடி.

ப.— முதற்பாட்டில், திருவுலகளந்தருளின ப்ரகாரத்தை யநுஸந்தித்து ஸந்துஷ்டராகிறார்.

(திருவுலகளந்தருள வளருகிறபோது, திவ்யாயுதங்கள் பரிவாலே "ஸஹாயா:" என்கிறகணக்கிலே), ஆழி - ப்ரதாநரான திருவாழியாழ்வான், எழ - முன்னேயுயர்ந்துதோன்றவும், (அநந்தரம்), சங்கும் - ஸ்ரீபாஞ்சஜந்யமும், வில்லும் -

---

வ்ருத்தனானவன் மகனைப்போலே யாகக்கூடுமோவென்ன, த்ருஷ்டாந்தம் - காமனை இத்யாதி. காமனைப்பெற்ற யுவா என்றபடி. ஸர்வஶக்தியாகையாலே அவனுக்குக்கானையாகலாம், இவனுக்குக் கூடுமோ? என்ன - தன்னை இத்யாதி. க்ருஷ்ணாவதாரத்தில் விஜயங்களைக்கண்டு ஸ்ரீவஸுதேவரும் உகந்ததுக்குப்ரமாணம் - யுவேவஇத்யாதி. "உக்ஷோத்வஹிவாஸாஷ்வஸுத்ராநநவிஜோகநம்! யுவேவவஸுதேவோபூத்விஹாயாப்யாகதாம்ஜராம்" இதிபஞ்சமேஸ்மே. (உ0, இஉ). மூன்றாம் ஸங்கதி - கீழேகண்ணபிரானுக்குஇத்யாதி.

ஸ்ரீஶார்ங்கமும், எழ - தோன்றவும், தண்டும் - கதையும், வாளும் - நந்தகமும், எழ - தோன்றவும், (இவ்வாயுதபூர்த்தியைக் கண்டுகந்து, "ஸஶங்கசக்ராணாம்" என்கிறபடியே), திசை - திக்குத்தோறும் நின்றநின்றநிலையிலே, வாழி - (தேவமநுஷ்யாதிகளுடைய) மங்களாஶாஸந கோஷம், எழ - கிளம்பும்படியாகவும் (அவிளம்பமாக வளர்ந்தபடியாலே), அண்டம் - அண்டகபாலம்பிளந்து, (ஆவரணஜலம்), மோழை - குமிழி, எழ - கிளம்பும்படியாகவும், (வளர்ந்தருளின சடக்காலே), முடி - திருமுடியும், பாதம் - எடுத்த திருவடியும், எழ - ஒக்கக்கிளம்பும்படியாகவும், (ஆஸுரப்ரக்ருதியான மஹாபலி அபிமாநம் நடந்தகாலம்போய்), ஊழி - விலக்ஷணகாலம், எழ - கிளம்பும்படியாகவும், அப்பன் - ஸர்வஸ்வாமியான ஸர்வேஶ்வரன், உலகம் - லோகத்தை, கொண்ட - அளந்துகொண்ட, ஆறு - ப்ரகாரம், ஏ - இருந்தபடியே! மோழை - குமிழி.

இ.—முதற்பாட்டில், திருவுலகளந்தருளின அபதாநத்தை அநுஸந்தித்து விஸ்மிதராகிறார்.

[ஆழியெழ] - மஹாபலிபக்கலிலே அர்த்தியாய்ச் சென்று அபேக்ஷித்துக் கையிலே நீர்விழுந்தவநந்தரம் வளர்ந்தருளினபோது, "அவ்விடத்திலே என்ன தீங்குவருகிறதோ?" என்று ஒக்கக்கிளர்ந்தபடி. "ஆயிரக்காதம் பறப்பதன்குட்டி ஐஞ்ஞூற்றுக்காதம் சிறகடிக்கொள்ளும்" என்று பிள்ளை அருளிச்செய்வர். [சங்கும் வில்லுமெழ] - தூசியிலே திருவாழியாழ்வான் ஏறினவாறே அநந்தரம் திவ்யாயுதங்கள் ஒக்கவெழ. "த்ரிவிக்ரம: க்ரமாக்ராந்த த்ரைலோக்ய: ஸ்புரதாயுத:". [திசைவாழியெழ] - திவ்யாயுதங்கள் அவனுக்குப் பரிந்தெழ, அவனுக்கும் இவற்றுக்கும் பரிந்து ஸர்வதோதிக்கமாக அநுகூலருடைய மங்களாஶாஸநத்வநி எழ. "ஸஶங்கசக்ராணாம் திவி ஸ்தைஸ்ஸுஸ்யாதநூ ஷ்ணம் ...... ஸ்தூதஸ் ஸுராஸு ...... ஸ்தாநாஜ்ஜக்ஷ்மியஸ்ய வியத்யஹரி: ॥" "ஏத்தவேழுலகங்கொண்ட" "இடங்கை வலம்புரிநின்றார்ப்ப" என்கிறபடியே வலம்புரிமுழங்க, திருவாழி அழலுமிழ. [தண்டும்வாளுமெழ] - "புறப்பட்டோம்" என்று மற்றுள்ள திவ்யாயுதங்களும் கிளர. [அண்டம்மோழையெழ] - "தரணிதலமுழுதுந் தாரகையின்னுலகுந் தடவியதன்புறமும் விம்மவளர்ந்தவனே" என்று தன்னுடையவளர்த்திகண்டு ஆந்தரம்இடம்போராமையாலே அண்டபித்திபிளந்து, ஆவரணஜலம் உள்ளேவந்துபுக. மோழை - குமிழி. [முடிபாதமெழ] - முடியும்பாதமும்ஒக்கவெழ. [அப்பன்] - என்நாயன்பண்ணின உபகாரமே! என்கிறார். [ஊழியெழ] - மஹாபலியால் உபத்ரவப்பட்ட காலம்போய் நல்லகாலம் வந்து தோற்றும்படியாகவும். [உலகங்கொண்டவாறே] - உலகை அளந்துகொண்ட ப்ரகாரம். "தேவாஸ்ஸஸ்யாந்நீயாம்ஶ்ச தேதிஸ்தாஸ்ஸ்வேஷ்டதாம் கதா: ॥ நஹ்யம் விஷ்ணுதேகினம் ஜ்ஞாதம் ஸம்ஶயதாஜய:."

ஈடு.—முதற்பாட்டு. அவையெல்லாவற்றுக்கும் அடியாக, திருவுலகளந்தருளின பெரிய விஜயத்தை யநுஸந்திக்கிறார்.

முதற்பாட்டு - ஆழியெழ இத்யாதி. "உலகங்கொண்டவாறே" என்றத்தைக்கடாக்ஷித்து அவதாரிகை - அவை இத்யாதி. அவையெல்லாவற்றுக்கும் - பத்துப்பாட்டில் விஜயங்களெல்லாவற்றுக்கும் என்றபடி. இது பெரிய விஜயமோ? என்ன - தேவா இத்யாதி. "தேவாஸ்ஸஸ்யாந்நீயாஞ்சி

“தேவாஸ்ஸ்வாஸ்த்ராநமாயாந்தி நிஹதா தைத்யதாநவா: | நபயம் வித்யதே கிஞ்சிஜ்ஜிதம் பகவதா ஜகத்” (தேவாஸ்ஸ்வாஸ்த்தாநமாயாந்தி ந்ஹதா ஸ தத்யதாநவாः | நபயம்வித்யதேகிஞ்சிஜ்ஜிதம்பகவதாஜகத்) என்கிறபடியே தனக்சாக்கிக்கொண்ட செயலிறே. ராவணனைப்போலே எதிரியாக்கிக்கொல்லாதே. துணைவமுண்டாகையாலே நின்றநிலையிலே தோற்பித்துக் கொண்டபடி. நாயகனுக்கடியாரிறே வென்று கொடுப்பார். [ஆழியெழ] - “த்ரைலோக்யத்தையும் காற்கீழேயிட்டுக்கொள்ள வேணும்” என்னும் கறுவதலுள்ளது ஸர்வேஸ்வரனுக்கேயிறே; அவ்வலி ஸந்நிதியின்றிக்கே யிருக்கச்செய்தேயும் அவனுக்கு முன்பே பரிகரம் முற்பட்டபடி. “காட்டுக்குப் போம்” என்று நியமித்தது பெருமாளையேயா யிருக்க, இளையபெருமாள் முற்பட்டாற்போலே, “ஸ பூர்வஜஸ்யாநுயாத்ரார்த்தே த்ருமசீரைரலங்க்ருத:” (பூர்வஜஸ்யாநுயாத்ரார்த்தே த்ருமச்ரைரலங்க்ருதः) என்று கொண்டுபோக்குக்கிடாக முற்கோலியலங்கரித்துக்கொண்டுநின்றாரிறே. [ஆழியெழ] - தோற்றத்திலே அரசு போராயிற்று; * ஹேதிராஜனிறே. திவ்யாயுதங்களுக்கெல்லாம் ப்ரதாநமிறே திருவாழி. பரிகரம் நிற்க மஹாராஜர் ராவணன்மேலேபாய்ந்தாற்போலே, “பையல் முடியுந் தானுமாய்ப்பெருமாள்திருமுன்பேநிற்பதே! ஈரசாயிற்றே” என்று பொறுமையாலே மேல்விழுந்தாரிறே. “அத ஹரிவர நாத:” (அதஹரிவரநாத:) - தம்மோடொக்கவினைசெய்யவல்லபேர் தனித்தனியே யநேகரிறே. “ப்ராப்ய ஸங்க்ராமகீர்த்திம்” (ப்ராப்யஸங்க்ராமகீர்த்திம்) -

நிஹதா தைத்யதாநவா:| நபயம் வித்யதே கிஞ்சிஜ்ஜிதம் பகவதா ஜகத்” என்று திருவுலகளந்தருளினபோது ஜாம்பவான்மஹாராஜர் பறைபறைந்தபடியே. மஹாபலி பக்கலிலே இரந்து அளக்க வேணுமோ? அவனை ஸம்ஹரித்து விடவொண்ணாதோ? என்ன - ராவணனைப்போலே இத்யாதி. துணையாவது ஔதார்யம்.

முந்துற திவ்யாயுதங்களைச் சொல்லுகிறதுக்கு பாவம் - நாயகனுக்கு இத்யாதி. அடியாரென்றது - சாடு. திருவடிகளும், ப்ருத்யரும். வென்று கொடுப்பார் - ஜயித்துக்கொடுப்பார். அவனிருக்க, ? என்ன - த்ரைலோக்யத்தையும் இத்யாதிவாக்யத்தாலே. அதாவது - ...னுலேயென்றபடி. கறுவுதல் - ஆக்ரஹம். பரிகரம் முற்பட்டதுண்டோ? என்ன - காட்டுக்கு இத்யாதி. அவர் முற்பட்டாரோ? என்ன, ப்ரமாணமாக அருளிச்செய்கிறார் - பூர்வஜஸ்யேத்யாதி. “ஸ ஏவ தாதேஹாஹாம ஸௌமித்ரிர் மித்ரநந்தந: | பூர்வஜஸ்யாநுயாத்ரார்த்தே த்ருமசீரைரலங்க்ருத:” இதி ஸுந்தரகாண்டே ஹநுமத்ப்ரதி ஸீதா. (ங௩-உச)
இஸ்ஸ்லோகத்தில் “ஸ ஏவ” என்றதைக்கடாக்ஷித்து ‘முற்கோலி’ என்றது. அல்லாத திவ்யாயுதங்களிருக்க, திருவாழியெழுவானென்? என்ன, பாவம் - தோற்றத்திலே இத்யாதி. தோற்றத்திலே - உபக்ரமத்திலே. அரசுபோர் - ராஜயுத்தம். இவனரசோ? என்ன - ஹேதிராஜனிறேயென்று. இதுக்கர்த்தம் - திவ்யாயுதங்களுக்கெல்லாம் இத்யாதி. “தோற்றத்திலேயரசுபோர்” என்றதுக்கு த்ருஷ்டாந்தம் - பரிகரம் இத்யாதி. மஹாராஜர் மேல்விழுகைக்கு ஹேதுவருளிச்செய்கிறார் - பையல் இத்யாதி. அப்படி மேல்விழுந்தாரோ? என்ன, ப்ரமாணம் - அத இத்யாதி. அத ஹரிவர நாத: ப்ராப்ய ஸங்க்ராமகீர்த்திம் நிஸிசரபதிமாஜௌ யோஜயித்வா ஸ்ரமேண | ககநமதிவிஸாலம் லங்கயித்வார்க்கஸூநு: ஹரிவரகணமத்யே ராமபார்ஸ்வம் ஜகாம” இதி யுத்தகாண்டே. (சo-உக). ஹரிநாதரென்னாதே, “ஹரிவர நாத:” என்றதுக்கு பாவம் - தம்மோடொக்க இத்யாதி. வினை - யுத்தம். ஆனால், தாம் முற்பட மேல்விழுவானென்? என்ன - இவர்களோடு இத்யாதி. ஒத்த

இவர்களோடுகூடிநின்று ஒத்தபோராகவொண்ணாது, தூசித்தலையிலே ஓர் ஏற்றம்செய்து தரம்பேறவேணுமென்றிருந்தார் பூசல்தலையிலே பெருமாளுக்குண்டான கீர்த்தியையும் தந்தலையிலே ஏறிட்டுக்கொண்டார். "**நிஶிசரபதிம்**" (நிஶிசரபதிம்)- அத்தலையிலும் அவனோடொக்க வினைசெய்யவல்லாரநேகரிறே. "அவன்கீழ்த்திரியுமவர்கள் தரம் போரார்" என்று அவன்தன்னோடே பொருதபடி. "**ஆஜௌ**" (ஆஜௌ) - அவர்களைப் போலேவழியல்லாவழியே இளைப்பிக்கையன்றிக்கே, செவ்வைப்பூசல்செய்துஇளைப்பித்த படி. "**யோஜயித்வாஶ்ரமேண**" (யோஜயித்வாஶ்ரமேண) - இதுக்குமுன்பு கூடாத தோன்றோடே கூட்டினார். "**ககநமதிவிஶாலம்லங்கயித்வா**" (ககநமதிவிசாலம்லங்கயித்வா) - பரப்பையுடைத்தான ஆகாசத்தைத் திறலாலே வருத்தமறக்கடந்தார்; "**அர்க்கஸூநு:**" (அர்க்கஸூநு:) - மீட்சியில் தம்வரவு தெரியாதபடி மீண்டார். பிறப்புக் கீடாகச்செய்தார். தன்னிலமிறே. ஆதித்யன் ஓரிடத்தினின்றும் ஓரிடத்தேறப்போம்போது தெரியாதிறே. "**ஹரிவரகணமத்யே**" (ஹரிவரகணமத்யே) - இவர்களிலொருவ்யாவ்ருத்திதோற்றவொண்ணாது" என்று இவர்கள்நடுவேநின்றார். "**ராமபார்ஶ்வம்ஜகாம**" (ராமபார்ஶ்வம்ஜகாம) - தூசித்தலையிலே மதிக்க ஒருவினைசெய்தாரன்றோ முன்னிற்கப் பெறுவார்" என்று பெருமாள்பார்ஶ்வத்திலேவந்துநின்றார். [ஆழியெழ] - "ஆயிரக் காதம் பறப்பதின்குட்டி ஐஞ்ஞூற்றுக்காதம் சிறகடிக்கொள்ளும்" என்னுமாபோலே முற்கோலிவளர்ந்தபடி. சிறகடிக்கொள்ளுகை யாவது - பின்புதூரப்பறக்கைக்கு யோக்யமாம்படி வால்யத்திலே அப்யஸிக்கை. ஸயஶங்கையில்லாதவிடத்தே யிருந்து பயப் படக்கடவார், ஸயஸ்த்தாநத்தைக்கண்டால் பேசாதிரார்களிறே. ஸயசங்கையில்லாத விடத்திலும் ஸயப்படப்பண்ணுகிறது விஷயவைலக்ஷண்யமிறே. துர்யோதநகோஷ்ட்டியிலேக்ருஷ்ணனெழுந்தருளினபோது அவர்கள்பண்ணின வஞ்சநத்தைக்கண்டுஅதிசங்கை பண்ணி, தம்முடைய திருமாளிகையில் படுக்கையையும் தடவிப்பார்த்தாரிறே; "**ஸம்ஸ்ப்ருஶந்நாஸநம்ஶௌரேர்விதுர: ஸ மஹாமதி:**" (ஸம்ஸ்ப்ருஶந்நாஸநம்ஶௌரேர்

போர்-ஸமாநயுத்தம். தூசித்தலை-யுத்தமுகம். தரம் - ஶ்ரைஷ்ட்யம். "ஸுஹ்ருத்தமஸ்யாநுநாய" இத்யாதியைக்கடாக்ஷித்து ஸாவம் - பூசல்தலைஇத்யாதி. பூசல் தலை - யுத்தமுகம். "நிஶிசரபதிம்" என்றதுக்கு ஸாவம் - அத்தலையிலும்இத்யாதி. 'அத்தலையிலும்' என்ற ச ஶப்தம் - நம்மோடொக்க வினைசெய்யவல்லபேர் என்றத்தை ஸமுச்சயிக்கிறது. அத்தலையிலும் - ராவணனிடத்திலும். ஆனு லவர்களோடே யுத்தம்பண்ணுகிறதுக்கென் ? என்ன - அவன்கீழ்த்திரியும்இத்யாதி. செவ்வைப்பூசல் - தர்மயுத்தம். "யோஜ வாத" இத்யாதி பூர்வார்த்தத்தைக் கடாக்ஷித்து ஸாவம் - இதுக்குமுன் இத்யாதி. "லங்கயித்வா" என்றதுக்குஸாவம் - பரப்பைஇத்யாதி. திறலாலே - மிடுக்காலே. இப் படி மீளுகைக்கு ஹேதுவேதென்ன ; அர்க்கஸூநுவாகையாலே யென்கிறார் - பிறப்புக்குஇத்யாதி. அப்படிசெய்கைக்கு ஹேதுவேதென்ன - தன்னிலமிறே என்று. தம் வரவு தெரியாதபடி மீண்ட ஆகாரம் சூர்யனுக்குண்டோ? என்ன - ஆதித்யன் இத்யாதி. 'மத்யே' என்றதுக்குஸாவம் - இவர் களில்இத்யாதி. "பார்ஶ்வம்ஜகாம" என்றதுக்குஸாவம் - தூசித்தலையிலேஇத்யாதி. மதிக்க - பெருக்க, எல்லாரும் சந்தோஷப்பட என்றுமாம். அவனுக்குமுன்பே பரிகரம் முற்பட்டபடி "என்ற திலே ரஸோக்தி - ஆயிரக்காதம்இத்யாதி. முற்கோலுகைக்கு ஹேதுவேதென்ன - ஸயசங்கை இத்யாதி. ஸயசங்கையல்லாத விடத்தே ஸயஹேது ஏதென்ன - ஸயசங்கைஇத்யாதி. வைலக்ஷண்யத்தைக்கண்டு அஸ்த்தாநே ஸயசங்கைபண்ணினாருண்டோ? என்ன - துர்யோதந இத்யாதி. தடவிப்பார்த்ததுக்குப்ரமாணம் - ஸம்ஸ்ப்ருஶந் இத்யாதி "மஹாமதி:" என்ற

விதுரஸ்ஸமஹாமதி:) என்கிறபடியே - கடல்கலங்குவது தன்னளவிலேயிறே. பிள்ளையுறங்காவில்லிதாசர் "மஹாமதி: என்றது - மதிகேடரென்கிறபடியோ?" என்றார். பிள்ளைதாம் பெருமாளெழுந்தருளும்போது "எங்கேனுமொரு சலநம்பிறக்கில் நம் ப்ராணனைவிடுமத்தனை" என்று சொட்டையையுருவிப்பிடித்துக்கொண்டு சேவிப்பராம்; நம்முதலிகள் அத்தைக்கண்டு, இவரை "மஹாமதிகள்" என்றழைப்பர்கள். அறிவுண்டாகையாவது - பகவத்விஷயத்திலே மதிகேடுகையிறே. [ஆழியெழ] - இவன் வளர்ந்தருளுகைக்குக் கணிசித்தபடியைக்கண்டு "தனிபாகவொண்ணாது" என்று பயப்பட்டுத் திருவாழியாழ்வானுருகையிலேயேறினார். [சங்கும் வில்லுமெழ] - தூசியேறினவர்கள் போரப்புக்கவாறே நின்றஇளவணிகலங்கி மேலேநடக்குமாபோலே மற்றையாழ்வார்களும் மற்றைக்கையிலே ஏறினார்கள். இரைபெறுதவிடத்தேயிருந்து சிறுபாறு என்னக்கடவவர்கள் இரையுள்ளவிடத்தில்ஒருவர்க்கொருவர் விட்டுக்கொடார்களிறே. இனத்திலே யொருவன்ஜீவிக்கக்கண்டவாறே பந்துவர்க்கம்வந்து மேல்விழுமாபோலே, மற்றைதிவ்யாயுதங்களும் மேல்விழுந்தபடி. [இடங்கைவலம்புரிநின்றார்ப்ப] - இவனுடைய வடிவழகையநுஸந்தித்து ஸ்ரீபாஞ்சஜந்யமானது நின்றார்ப்ப. [எரிபித்யாதி] - அவனைப்போலார்த்துக்கொள்ள அவஸரமற்று அக்நியை உமிழ்ந்துகொண்டு, நமுசிப்ரப்ருதிகளை வாய் வாய் என்றது திருவாழி. [விடங்காலுமித்யாதி] - கிடந்தவிடத்தேகிடந்து சத்ருக்கள்மேலே விஷாக்நியைஉமிழுமத்தனையிறே திருவநந்தாழ்வானாலாவது. [அரவணைமேற்றோன்றல்] - திருவநந்தாழ்வானைப் படுக்கையாகவுடைய ப்ரதாநன். [திசையளப்பான்பூவாரடிநிமிர்த்தபோது] - ஒருபூவைக் கொண்டாகாதே காடுமோடையும் அளந்துகொண்டது. பூவையிட்டுப் பூவைக்கொண்டான் காணும். அப்படுக்கையிலே பொருந்தும் ஸௌகுமார்யத்தையுடையவன் இக்காடுமோடையுமான ஜகத்தையளக்கப்புக்கால், இவர்களுக்கு இப்படி படவேண்டாவோ? அவன் இப்படி அளவாநின்றால் இவர்கள் பேசாதிரார்களிறே. [திசைவாழியெழ] "அவனுக்குஎன்வருகிறதோ?" என்றுமிற்று திவ்யாயுதங்கள்கிளருகிறது! "அவை

யம - கடல்இத்யாதி. "ஜ்ஞாநாதிக்யம் ப்ரேமத்தாலே கலங்குகைக்குடல்" என்னுமர்த்தை ஆப்தஸம்வாதத்தாலே தர்ஶிப்பிக்கிறார் - பிள்ளையுறங்காவில்லித்யாதி. இந்தவாகாரமவர்க்கும் ண்டென்கிறார் - பிள்ளைதாமித்யாதி. சொட்டை - ஆயுதம். "மஹாமதி:" என்றால் - மதிகேடரென்று காட்டுமோ? என்ன - அறிவுண்டாகையாவதுத்யாதி. இதி "த்ரைலோக்யத்தையும்" இத்யாதி வாக்யவிவரணம் - இவன்வளர்ந்தருளுகைக்குத்யாதி. கணிசித்த - சிந்தித்த. எழ - கிளரவென்றபடி. போரப்புக்கவாறே - யுத்தம்பண்ணப்புக்கவாறே. இளவணி - காலாள். ஏறினார்களென்றது - அர்த்தஸித்தம். மற்றையாழ்வார்கள் திருவாழியாழ்வானிடத்தில் பரிவாலேகிளம்பினதாகக் கீழருளிச்செய்து ஈஶ்வரனிடத்தில் பரிவாலே கிளம்பினதாக விவக்ஷித்தத்தை த்விவிதமாகக் காட்டுகிறார் - இரைபெறுதவிடத்தே இத்யாதிவாக்யத்வயத்தாலே. முந்தினவிதம், கேவலம் பரிவாலே மேல்விழுந்தது; இரண்டாம்விதம் - பொறாமையால்வந்த பரிவாலே மேல்விழுந்ததென்றபடி. இனத்திலே - ஸ்வஜனத்திலே. திருவுலகளந்தபோது திவ்யாயுதங்கள் பரிவாலேகிளம்பிற்றோ? என்ன. ப்ரமாணம் - இடங்கைஇத்யாதி. ஆர்த்துக்கொள்ள - ஸம்ப்ரமிக்க. வாய்வாய் - கபோலதாடநம். அடங்கார் - சத்ருக்கள். காலும் - உமிழாநிற்கும். 'விடங்காலுந்தீவாய் - அரவு, அரவு - அணைமேல்" என்றிரண்டிடத்திலும் அரவு அந்வயிப்பது. தோன்றல் - ஸ்வாமி. சாடு - பூவையிட்டுஇத்யாதி. பூவை - பூமியை. பூவையிட்டு - புஷ்பம்போன்ற திருவடிகளை இட்டு. அவனளந்தால் இவர்களிப்படிபடவேணுமோ? வென்ன - அப்படுக்கையிலேஇத்யாதி. சாடு - அவனிப்படிஇத்யாதி. படி - ப்ரகாரமும், பூமியும், ஜீவநமும். பேசாதிரார்களிறே - வெறுமனிரார்களிறே என்றபடி. "ஆழி

தமக்கென்வருகிறதோ?'' என்று ''வடிவார்சோதிவலத்துறையும் சுடராழியும்பல்லாண்டு படைபோர்புக்கு முழங்கும் அப்பாஞ்சசன்னியமும் பல்லாண்டு'' என்னுநிற்பர்களிறே. ''நின்கையில் வேல்போற்றி'' என்று வேல்தனக்கும் பரியவேண்டியிருக்குமிறே. திக்குக்கள்தோறும் அநுகூலருடைய 'வாழிவாழி'என்கிற மங்களாஶாஸநத்வநிகள்கிளர. திவ்யாயுதங்களிலும்அவனுக்குரக்ஷை இவர்களுடையமங்களாஶாஸநமென்றிருக்கிறார்; திவ்யாயுதங்களுக்கு நடுவே இவற்றைச் சொல்லுகையாலே. [திசைவாழியெழ] - * ஏத்தவேழுலகங்கொண்ட கோலக்கூத்தனிறே. ''த்ரிவிக்ரமக்ரமாக்ராந்தத்ரைலோக்யஸ்ஸ்புரதாயுத:'' (த்ரிவிக்ரமஃக்ரமாக்ராந்தத்ரைலோக்யஸ்ஸ்புரதாயுதஃ) [தண்டும்வாளுமெழ] - ''தூசித்தலையில் அவர்களே கைதொடராய்த் தரம்பெற்றுப்போகவொண்ணாது'' என்று நின்றபேரணியும்குலைந்து மேல்விழுமாபோலே; ''பிற்பட்டோம், கெட்டோம்'' என்றுஒருவர்க்கொருவர் படுகிறபடி; ஒருவர்க்கிட்ட சோற்றைப் பலர் ஆசைப்படுமாபோலேகாணும் இவர்கள் படுகிறபாடு. அநுகூலன்வந்துபுகுர, ''வத்யதாம்'' (வத்யதாம்) என்கிறவர்கள், ப்ரதிகூலருள்ளவிடத்தில் பேசாதிரார்களிறே. ''என்னிதுமாயமென்னப்ப னறிந்திலன் முன்னையவண்ணமேகொண்டளவாய்'' என்று நமுசிவந்து என்பிதா உன் வஞ்சநம் அறிந்திலன். நீ முன்புபோலே நின்றுஅளக்கவேணுமென்று திருவடிகளைக்கட்டிக்கொண்டு கிடந்தானிறே. அன்றேபிறந்து அன்றேவளர்ந்தான்ஒருவனுடைய வ்யாபாரமிறே இதுஅடைய; ஆகையாலே, பரிகைக்குஹேதுவுண்டேன்றபடி. [சீராற்பிறந்தித்யாதி] - உன்கையிலே பருத்திபட்ட பன்னிரண்டும் படுகிற ஸௌமியை நீர் ஏற்

யெழச் சங்கும்வில்லுமெழ'' என்றவநந்தரம் ''திசைவாழியெழ'' என்கையாலே, திவ்யாயுதங்களுக்கு மங்களாசாஸனம் பண்ணுகிறார்களென்கிறார் - அவனுக்கு இத்யாதிவாக்யத்வயத்தாலே. ஆயுதங்களுக்கு மங்களாசாஸநம்பண்ணுகிறதுக்கு ப்ரமாணாந்தரம் - நின்கையில்இத்யாதி. ஈஶ்வரவிஷயமாக மங்களாசாஸநம்பண்ணுகிறார்களென்ற ஸாவாந்தரம் - திவ்யாயுதங்களிலும்இத்யாதி. இதுக்குநியாமகம் - திவ்யாயுதங்களுக்குஇத்யாதி. திருவுலகளந்தபோது மங்களாசாஸநம் பண்ணினார்களோ? என்ன - ஏத்தவேழுலகம்இத்யாதி. திவ்யாயுதங்கள் கிளர்ந்ததுக்கு ப்ரமாணாந்தரம் - த்ரிவிக்ரம இத்யாதி. ''வாமேநாரக்ஷதாஸஹாயவர்க்கய: க்ஷணாதஹஸ்திக: । த்ரிவிக்ரம: க்ரமாக்ராந்தத்ரைலோக்யஸ்ஸ்புரதாயுத:'' இதி பஞ்சமேம்ஶே நந்தகோப: (௧௭). இதில் 'ஸ்ப்புரதாயுத:' என்றது இங்குவேண்டுவது கைதொடராய் - கைவிடாதவராய். ஸஹாயபூதராயென்றுமாம். தரம் - பஹுமாநம். பேரணி - ஸேநாவ்யூஹம். இதுக்கு த்ருஷ்டாந்தம் - ஒருவர்க்குஇத்யாதி. அஸ்தாநே பயசங்கைபண்ணினதுக்கு விதுரரையே யன்றிக்கே மஹாராஜரையுங்காட்டுகிறார் - அநுகூலன்இத்யாதி. ப்ரதிகூலருண்டோ? என்ன - என்னிதுமாயம்இத்யாதி. பெரியாழ்வார் திருமொழி முதற்பத்து ஒன்பதாந்திருமொழி - எட்டாம்பாட்டு. எடுத்தபாசுரத்துக்கர்த்தம் - நமுசிவந்துஇத்யாதி. மாயம் - வஞ்சநம். முன்னையவண்ணமேகொண்டு - முற்பட்ட வடிவையேகொண்டு. மன்னு என்றதுக்கர்த்தம் - திருவடிகளைஇத்யாதி. கீழே - பரிகைக்கு ஹேது ஸௌகுமார்யாதி வைலக்ஷண்யமென்றருளிச்செய்து, ஹேத்வந்தரம் - அன்றேபிறந்துஇத்யாதி. அன்றேபிறந் தன்றேவளர்ந்த வ்யாபாரத்துக்குப் பரிந்தபேருண்டோ? என்ன - சீரால்இத்யாதி. இப்பாட்டுக்கு ஸாவம் - உன்கையிலேஇத்யாதி. ''மார்பாரப்புல்கிநீயுண்டுமிழ்ந்த'' என்றத்தைக்கடாக்ஷித்து - உன்கையிலே பருத்திபட்ட பன்னிரண்டும் படுகிறபூமியை என்றது. இப்படி படவேணுமோ? என்றது - ''சீராற்பிறந்து சிறப்பால்வளராது, பேர்வாபணகொக்கால்'' என்றத்தைக் கடாக்ஷித்து. பெரியதிருவந்தாதி பதினாறும்பாட்டு. இந்தப்பாட்டுக்கு - கீழே வ்யாக்யாந மெழுதிற்று. பருத்திபட்ட பன்னிரண்டும் படுகையாவது - இஷ்ட ஸர்வ சேஷ்டாவிஷயமாகை. அண்டம் குமிழி

தும்போது இப்படிப்படவேணுமோ? என்கிறார். [அண்டம்மோழையேழ] - இந்த்ரனுக்காக த்ரைலோக்ய மித்தனையும் அளந்துகொடுப்பதாக விறே உபக்ரமித்தது; கணிசம் அவ்வள வல்லாமையாலே அண்டாவகாசமுள்ள இடமெங்கும் சென்றளந்து, அண்டகடாஹத்திலே திருவடிசென்று "ஒண்மிதியிற்புனலுருவி யொருகால்நிற்ப" என்கிறபடியே கீழில் அண்டகடாஹத்தை யுருவிநிற்க, கீழிலாவரணஜலம் மேலேயெழ. ஆவரணஜலத்துக்கு நடுவே ஒருகழல்போலேமிதக்கும் இத்தனையிறே அண்டம். "ரக்ஷகமானசெயலே வாயகமாகிறதோ?" என்றுஅஞ்சவேண்டும்படியிறே அப்போதைக்கறுவுதல். மோழை-குமிழி. [முடிபாதமேழ] - திருவபிஷேகத்தளவும் திருவடிகள் கிளர. "முடிமேலேபாதமேழ" என்றுஞ்சொல்லுவர்கள் ந்ருத்தலக்ஷணத்துக்காக. [அப்பனூழியேழ] - மஹாபலி அப்ராப்தமாக ராஜ்யம்பண்ணுகையால் வந்த பொல்லாக்காலமானது போய், நல்லடிக்காலமாயிற்று; நல்லடிக்காலம் கிளரும்படியாகவும். [அப்பன்-உலகங்கொண்டவாறே]- மஹோபகாரகனான ஸர்வேஶ்வரன் லோகத்தைக்கொண்ட ஆஶ்சர்யம் இருந்தபடியென்? என்னுதல்; அன்றியே, லோகத்தைக்கொண்ட ப்ரகாரம்இருந்தபடி என்? என்னுதல். அப்பன், அப்பன் என்று ஹ்ருஷ்டராகிறாராகவுமாம். [அப்பன்] - இந்த்ரனுக்கு ராஜ்யத்தைக்கொடுத்த செயலாலே எனக்கு ஸத்தையைத் தந்தானென்கிறார். (க)

இரண்டாம் பாட்டு.

ஆறுமலைக்கெதிர்ந்தோடுமொலி அர
வூறுசுலாய் மலைதேய்க்குமொலி கடல்
மாறுசுழன்று அழைக்கின்றவொலி அப்பன்
சாறுபட அமுதங்கொண்டநான்றே.

யெழுகைக்கு வகை யருளிச்செய்கிறார் - இந்த்ரனுக்காக இத்யாதி. கணிசம் - எண்ணம். ஒண்மிதியில் - அழகியஅடிவைப்பில், புனலுருவி - கீழாவரணஜலத்தையுருவி, ஒருகால்நிற்ப - ஒருதிருவடி நிற்க இத்யர்த்தஃ. திருநெடுந்தாண்டகம் அஞ்சாம்பாட்டு. அண்டத்துக்குக்கீழே ஜலமுண்டோ வென்ன - ஆவரண இத்யாதி. கழல் - கழற்கோடி. அவன் செயல் ரக்ஷணத்துக்கு உடலாயிருக்க, இப்படி கலக்கவேண்டுவானென் ? என்ன - ரக்ஷகமான் இத்யாதி. கறுவுதல் - ஆக்ரஹமும், கோபமும். "ஊழியெழ" என்றதுக்கு - பொல்லாக்காலம்போகவென்று விவக்ஷித்தருளிச்செய்கிறார் - மஹாபலி இத்யாதி. 'நல்லடிக்காலமாயிற்று' என்றது - அர்த்தாத்ஸித்தம். நல்லடிக்காலம் - நல்ல வடியையுடையவனுடைய காலம், நன்மைக்கு மூலமான காலம். "ஆழியெழ" என்று தொடங்கி "உலகங்கொண்டவாறே" என்று - ஆஶ்சர்யத்திலே யாதல், †ஆறு - ஆஶ்சர்யம்; "அப்பன் - உலகங்கொண்ட ப்ரகாரம் - ஆழியெழ" என்று தொடங்கியாதல்; ஆறு-ப்ரகாரம், என்றிப்படி இரண்டந்வயம் அருளிச்செய்கிறார்-மஹோபகாரக இத்யாதி வாக்யத்வயத்தாலே. அன்றிக்கே, "ஆழியெழ" என்று தொடங்கி "உலகங்கொண்டவாறே, என்னப்பன்" என்னுதல். இத்தையருளிச்செய்கிறார் - அப்பன்அப்பனென்று ஹ்ருஷ்டராக்ரராகவுமாம் என்று. இந்த மூன்றுமந்வயமும்-மூன்றின அந்வயவிவரணமாதல். "அப்பன்" என்றதுக்கு ஜநகனென்றர்த்தாந்தரம் - இந்த்ரனுக்கு இத்யாதி. (க)

† இருபொருளிலும், ஆறென்பதற்கு ப்ரகாரம் என்று பொருளாதலால், ஏ - ஆஶ்சர்யம் என்று இருப்பின்நலம், இரண்டாவதுபொருளில், ஏ - அசை.

ஆ.—(ஆறு) - கடைந்தருளுகிறபோது மலைகளிற்காட்டில் கடலுக்குகை யாலே ஆறு மலையைநோக்கி ஓடுகிற ஓசையும், பாம்பினுடம்பைச்சுற்றி மலையைத்தேய்க்கிற த்வநியும், பர்வதத்தைவலித்தபோது இடமும்வலமுமாய்ச் சுழன்றுகோஷிக்கிற கோஷமும், என்னப்பன் நீர் கோதாம்படி பசைபடக் கடைந்துஅம்ருதம் வாங்கினநாள் இவையெல்லாம் உளவாயினவென்று ஸமுத்ரமதநப்ரக்ரியையை யநுஸந்திக்கிறார்.

ஒ.—இரண்டாம்பாட்டில், ஸமுத்ரமதந ப்ரக்ரியையை அநுஸந்திக்கிறார்.

[ஆறென்றுதொடங்கி] - கடைந்தருளுகிறபோது மலைகளிற்காட்டில் கடல் உசருகையாலே ஆறு மலையைநோக்கி ஓடுகிற ஓசையும், பாம்பின் உடம்பைச்சுற்றி மலையைத்தேய்க்கிற த்வநியும், பர்வதத்தை வலித்தபோது கடல் இடமும் வலமுமாக எதிராகச் சூழ்ந்துகோஷிக்கிற கோஷமும். [அப்பனென்றுதொடங்கி] - என்னப்பன் நீர்கோதாம்படி பசைபடக்கடைந்து அம்ருதம்வாங்கின நாள் இவையெல்லாம் உளவாயின.

ப.—அநந்தரம், அம்ருதமதநவ்ருத்தாந்தத்தை யநுஸந்தித்து ஸந்துஷ்டராகிறார்.

அப்பன் - மஹோபகாரகனான ஸர்வேஶ்வரன், (தேவர்களுக்கு), சாறு - மஹோத்ஸவம், பட - உண்டாம்படியாக, (கடலைக்கடைந்து), அமுதம் - அம்ருதத்தை, கொண்ட - கொண்ட, நான்று - நாள், (கடைந்தவேகத்தாலே), ஆறு - ஆறுகளானவை, மலைக்கு-(தனக்குப் பிறப்பிடமான)மலையைநோக்கி, எதிர்ந்து - எதிரே, ஓடும் - ஓடுகிற, ஒலி-ஒலியும், அரவு - வாசுகியாகிற பாம்பினுடைய, ஊறு - உடம்பை, சுலாய் - சுற்றி, மலை - மந்தரத்திலே, தேய்க்கும் - தேய்க்கிற, ஒலி-ஒலியும், (கடைகையாலே), கடல்-, மாறு - இடம்வலமாகமாறி, சுழன்று-, அழைக்கின்ற-கூப்பிடுகிற, ஒலி-ஒலியும், (ஆயிற்றின). சாறு - உத்ஸவம், ஸாரமுமாம். நான்று-நாள். ஊறு - உடம்பு. சுலாய் — சுற்றி.

இ.—இரண்டாம்பாட்டில், தன்னை அபேக்ஷிப்பாக்கி இந்த்ராதிகள்காரியஞ்செய்தபடி சொல்லிற்று; அவர்களுக்காக உடம்புநோவக் கடல்கடைந்தபடி சொல்லுகிறது.

[ஆறுமலை இத்யாதி] - கடலைத் தாழியாகக்கொண்டு, மலையை மத்தாகக் கொண்டு, வாஸுகியைக் கயிறாகக்கொண்டு, "ஆயிரந்தோளால்" என்கிறபடியே தோளும் தோள்மாலையுமாய், ஒரு மஹாவ்யூஹம் கடைகிறபோது கடல்கொந்தளித்து ஸஹ்யங்களைநோக்கி ஆறு எதிரே ஓடுகிற ஓசையும்; வாஸுகியினுடைய உடம்பைச்சுற்றி மலையைத் தேய்க்கிற த்வநியும். அரவு - வாஸுகி, ஊறு - உடம்பு, சுலாய் - சுற்றி. மந்தரம் திரிந்து வருகிறபோது கடல் இடமும் வலமுமாக எதிராகச்சுழன்று தன்னிலைஎதிர்த்து கோஷிக்கிற கோஷமும். [அப்பன்] - உபகாரகனானவன். நீர்கோதாம்படி பசைபட அம்ருதம்வாங்கின நாளிலே இவையெல்லாம் உளவாயின. ரஸத்ரவ்யத்திலே கோது கழித்து அதில்ஸாரத்தை வாங்கினபடி. சாறென்று - விழாவாய், தேவர்கள் இடர்போய் உத்ஸவமாய்ச் செல்லும்படி என்றுமாம்; நீரிலே ஸாரமான பசைபட என்னுதல்; உத்ஸவமாம்படி என்னுதல். [அமுதம்கொண்டநான்றே] - அம்ருதமதநம் பண்ணின காலத்தில் இவையெல்லாம் உண்டாயிற்று.

ஈடு.—இரண்டாம்பாட்டு. ஸமுத்ரமதந வைசித்ரியை யநுஸந்திக்கிறார்.

இரண்டாம்பாட்டு - ஆறு இத்யாதி. "சாறுபட" இத்யாதியைக்கடாக்ஷித்தவதாரிகை - ஸமுத்ர இத்யாதி.

[ஆறுமலைக்கெதிர்ந்தோடுமொலி] - கடலிலே மந்தரத்தை நட்டவாறே கடல் கொந்தளித்து, ஸஹ்யம்போய்த் தாழ்ந்துகொடுத்தது; நீரானது தாழ்ந்தவிடத்தே ஓடக்கடவதிறே. ஆறுகளானவை மலையைக் குறித்து எதிரிட்டோடுகிறபோதை த்வநியானது இவர்க்குச் செவிப்படுகிறபடி. இவர்க்குக் காலத்ரயத்திலுமுள்ளதெல்லாம் தெரியும்படியிறே அவன் வெளிச்சிறப்பித்தது. (ஆறு ஸஹ்யங்களைநோக்கிஎதிரேயோடுகிறவோசையும்.) [அரவூறுசுலாய்மலைதேய்க்குமொலி] - ஊறு - உடம்பு. சுலாய் - சுற்றி. வாசுகியினுடைய உடலைச்சுற்றிக் கடைகிறபோதைச் சரசரவென்கிற த்வநியும். [கடல்மாறுசுழன்றழைக்கின்றவொலி] - மந்தரத்தைக்கொடுபுக்கு நட்டுத்திரித்தபோது, கீழ்கடல் மேல்கடலாய்க் கிடாய்ப்பாய்ச்சல்போலே திரையோடு த்ரைதாக்கிக்கிளருகிற ஒலியும். [அப்பன்] - உபகாரகன். [சாறுபட] - கடலில் நீர்கோதாம்படி ப்ரயோஜநமான அம்ருதமுண்டாக. சாறென்று - உத்ஸவமாய், தேவஜாதிக்கு உத்ஸவமுண்டாம்படியாக என்னுதல்; சாறுபட - விழவுபடவென்றபடி. நீரிலே ரஸமானபசைபட என்னுதல், உத்ஸவமாம்படி என்னுதல். [அமுதங்கொண்ட நான்றே] - அம்ருதமதநம்பண்ணின காலத்தில் இவையெல்லாமுண்டாயிற்று. (உ)

— —

மூன்றாம் பாட்டு.

— —

நான்றிலஏழ்மண்ணுந்தானத்தவே பின்னும்
நான்றில ஏழ்மலை தானத்தவே பின்னும்
நான்றில ஏழ்கடல்தானத்தவே அப்பன்
ஊன்றியிடந்தெயிற்றில்கொண்டநாளே.

ஆ.—(நான்றில.) - என்னப்பன், ரஸாதலகதையான பூமியைத் திருவெயிற்றிலே இடந்தெடுத்தருளினபோது, ஸப்தத்வீபங்களும் ஸப்தகுலபர்வதங்களும் ஸப்தஸமுத்ரங்களும் தந்தாமுடைய ஸ்தாநங்களிலே நிஶ்சலமாயிருக்கும்படி எடுத்தருளினான்; இதென்ன ஆஶ்சர்யம்! என்னப்பன், என்னப்பன்! என்கிறார்.

ஒ.—மூன்றாம்பாட்டில், மஹாவராஹவ்ருத்தாந்தத்தை அநுஸந்திக்கிறார். [நான்றிலஇத்யாதி] - [தானத்த] - ஸ்வஸ்தாநஸ்தமாயின. [ஊன்றி] - மறுபாடுருவக்

ஆறுமலைக்கெதிரேயோடுகைக்கு ஹேதுவேதென்ன - கடலிலேஇத்யாதி. கொந்தளித்து - பொங்கி. போய் - மிகவும். மலைதாழ்ந்தால் அங்கேயோடவேணுமோ? என்ன - நீரானதுஇத்யாதி. சப்தார்த்தம் - ஆறுகளானவைஇத்யாதி. பூதகாலத்தில் த்வநி செவிப்படக்கூடுமோ? என்ன - இவர்க்குஇத்யாதி. வெளிச்சிறப்பித்தது - ஜ்ஞாநவைசத்யத்தைப்பண்ணிக்கொடுத்தது. தேய்க்கும் - கடைகிற. திரித்தபோது - திருப்பிக்கடைகிறபோது. கீழ்கடல் மேல்கடலாயென்றது - கிழக்குத்திசையில் நீர் மேற்கேபோக, மேற்குத்திசையில் நீர் கிழக்கேவர என்றபடி. கிடாய்ப்பாய்ச்சல் - மேஷயுத்தம். அழைக்கின்ற - கிளருகிற. சாறு-ஸாரம். பட-உண்டாக. அர்த்தாந்தரம்-சாறென்று இத்யாதி. நான்று-அன்று. 'அப்பன் சாறுபட வமுதங்கொண்டநான்று - ஆறு மலைக்கு'என்றுதொடங்கி 'அழைக்கின்றவொலி இவையெல்லாமுண்டாயிற்றின' இத்யந்வய꞉. (உ)

ப.—அநந்தரம், பூம்யுத்தாரண வ்ருத்தாந்தத்தை யநுஸந்தித்து ப்ரீதராகிறார்.

அப்பன் - (தன்வடிவை யழியமாறி, நீருக்குஇறாயாத வராஹவேஷத்தைக் கொண்ட) மஹோபகாரகன், (ப்ரளயாந்தர்க்கதையான பூமியை), ஊன்றி - அண்ட கபாலத்தில் ஓட்டுவிடும்படி குத்தி, இடந்து - இடந்து, எயிற்றில் - எயிற்றின்மேலே, கொண்ட - கொண்ட, நாள் - காலத்தில், ஏழ்-ஸப்தத்வீபரூபமான, மண்ணும்-பூபேதங்களானவை, நான்றில - நழுவாதே, தானத்த - ஸ்வஸ்த்தாநஸ்த்தங்களாயிற்றின; பின்னும் - அதுக்குமேலே, (அதுக்குயாதாரகமான), ஏழ்மலை - ஸப்தகுலபர்வதங்களும், நான்றில - சலியாதனவாய்க்கொண்டு, தானத்த - ஸ்வஸ்த்தாநஸ்த்தங்களாயிற்றின; பின்னும் - அதுக்குமேலே, ஏழ்கடல் - ஸப்தஸமுத்ரங்களும், நான்றில - உடைந்தொழுகாதே, தானத்த - ஸ்வஸ்த்தாநஸ்த்தங்களாயிற்றின.

இ.—மூன்றாம்பாட்டில், மஹாவராஹவ்ருத்தாந்தத்தை அருளிச்செய்கிறார்.

[நான்றில இத்யாதி] - பூமியைப்ரளயங்கொள்ள, மஹாவராஹமாய் பூமியுத்தாரணம்பண்ணினபோது. [நான்றில] - சலித்ததில்லை. [ஏழ்மண்ணும்] - ஸப்தத்வீபமும். [தானத்தவே] - ஸ்வஸ்தாநஸ்தங்களாயிற்றின. ஒரு வ்யாபாரத்தாலே செய்ததாயிருக்கையன்றிக்கே, ஸ்வஸங்கல்பத்தாலே செய்தாற்போலே யிருக்கை. [பின்னும்] - அதுக்குமேலே. [ஏழ்மலை] - பூமிக்கு ஆதாரமான குலபர்வதங்களும் சலியாதே ஸ்வஸ்தாநஸ்தமாயிற்றின. இவை திண்ணிதாகையாலே இப்படி செய்யலாம், த்ரவத்ரவ்யமான ஸமுத்ரமும் சலியாதே ஸ்வஸ்தாநஸ்தமாயிற்றின. [அப்பன்] - நஷ்டோத்தாரணம்பண்ணின உபகாரகன். [ஊன்றி இத்யாதி] - மறுபாடுருவக்குத்தி இடந்தெடுத்து, பந்தையெடுத்துச் செண்டிலே ஏற்றுமாற்போலே இருந்தது திருவெயிற்றிலே ஏற்றபோது.

ஈடு.—மூன்றாம்பாட்டு. மஹாவராஹ வ்ருத்தாந்தத்தை யநுஸந்திக்கிறார்.

[நான்றிலவேழ் மண்ணும் தானத்தவே] - ஏழுபூமியும் நாலாதபடி எடுக்கை. ஸப்தத்வீபவதியான பூமியையெடுக்கச் செய்தே, ஒன்றும் நாலாதே முன்புபோலே ஸ்வஸ்த்தாநத்திலே கிடக்கும்படி. இவன் பெரிய ஆனைத்தொழிலைச் செய்யாநிற்கச்செய்தேயும், முன்புபோலே ஒருகுறையற, உண்பாருடுப்பாராய்ச் செல்லுகிறபடி. ஆதாரமானவன் கூடநிற்கையாலே இவற்றுக்கு ஒரு குறைவாராதே. ஸப்தத்வீபமும் சலித்ததில்லை, ஸ்வஸ்த்தாநஸ்தங்களாயிற்றின.

[பின்னும்]-அதுக்குமேலே. [நான்றிலவேழ்மலைதானத்தவே] - பூமிக்கு ஆணியடித்தாற்போலே யிருக்கிற ஸப்தகுலபர்வதங்களும் ஒன்றுங்குலையாதே ஸ்வஸ்த்தாநங்களிலே நிற்கும்படி. ஒரு கோத்ரஸ்கலநம் பிறந்ததில்லை. பின்னும் பின்னுமென்று

மூன்றாம்பாட்டு - நான்றிலஇத்யாதி. ‘‘அப்பனூன்றியிடந்து’’ இத்யாதியைச்கடாக்ஷித்தவதாரிகை - மஹாவராஹஇத்யாதி.

விவரணம் - ஸப்தஇத்யாதி. ‘‘ஏழ்மண்ணும் - நான்றில - தானத்தவே’’ - ஸப்தத்வீபவதியான பூமியும் நழுவாதபடி ஸ்வஸ்த்தாநத்திலே கிடந்ததென்றபடி. நான்றில - நாலாதபடி. சலியாதபடியென்றுமாம். நழுவாதபடி,சலியாமையின சரமாவதி - இவன்பெரியஇத்யாதி. ஆனைத்தொழில்-அதிமாநுஷவ்யாபாரம், ஸ்வாதந்த்ர்யக்ருத்யமும். இதுக்குஹேதுவேதென்ன - ஆதாரம்இத்யாதி. முன்புபோலே - ஸ்ருஷ்டிகாலம்போலே. மண்ணைச்சொன்னவநந்தரம் மலையைச்சொன்னதுக்கு ஹாவம் - பூமிக்குஇத்யாதி. ரஸோக்தி - ஒருஇத்யாதி. கோத்ரஸ்கலநம் - பர்வதஸ்காலித்யம், நாம

வருகிறதுக்குக்கருத்து-இவற்றிலே யொரு வ்யாபாரமமையுங்கிடீர்! அதுக்குமேலே இவையும் செய்தா னென்கைக்காக. [நான்றிலவேழ்கடல்தானத்தவே] - அவைதாம் காடிந்யத்தாலே குலையாதே ஒழிந்ததேன்னவுமாமிறே; அதுவுமில்லையிறே இதுக்கு; த்ரவத்ரவ்யமிறேஜலம்; அதுவும் ஸ்வஸ்த்தாநத்திலே கிடக்கும்படியாக. அவற்றின்காடிந்யமும் இவற்றின் த்ரவத்வமும்அப்ரயோஜகம்; அவன் திருவுள்ளக்கருத்து யாதொன்று, அதுவேகார்யகரமாவதேன்கை. இவையிப்படிகிடக்கிறது அவன்அவஹிதனாய்க்கொண்டு ரக்ஷிக்கும்போதோ? என்னில்,—[ஊன்றியிடந்தெயிற்றிற்கொண்டநாளே]-மறுபாடுருவத் தைக்கும்படிகுத்தி, அண்டபித்தியினின்றும் ஒட்டுவிடுவித்துஎடுத்தேறட்டு, எயிற்றிலே எற்றிக்கொண்டு வ்யாபரித்தபோது, "மண்ணேல்லாமிடந்தெடுத்து மதங்கள் செய்து" என்கிறபடியே.அவன்இப்படி முக்யமாக ரக்ஷிக்கப்புக்கால் அவை சலிக்குமோ? அசலங்களோடு சலங்களோடு வாசியற ஸ்வஸ்த்தாநத்திலே நின்றன. (௩)

நான்காம் பாட்டு

நாளுமேழ்நிலநீருமேழ்விண்ணும்
கோளுமேழ்எரிகாலுமேழ்மலை
தாளுமேழ்ச்சுடர்தானுமேழ்அட்டன்
ஊளியேழ்வுலகமுண்டவூணே.

(நாளுமேழு.) * கலாமுஹூர்த்தாதிமயமான காலத்தையும், ப்ருதிவ்யாதி பஞ்சபூதங்களையும், ஸகல குலாசலங்களையும், நக்ஷத்ர ஜ்யோதிஸ்ஸமூஹங்களையும், ப்ரளயகால ஸலில பூராபிபூதமான ஸமஸ்த ஜகத்தையும்அநாயாஸேந ரக்ஷணம்பண்ணினாற்போலே நிரவசேஷமாகவுண்டருளினான் என்னப்பன்! என்னப்பன்! என்கிறார்.

ஒ.—நாலாம்பாட்டில், ப்ரளயகாலத்தில் ஸர்வதேவதைகளோடுகூடின ஜகத்தைத் திருவயிற்றிலேவைத்து ரக்ஷித்தபடியைச்சொல்லுகிறார்.

[நாளுமேழு] - காலவ்யவஸ்தையெல்லாம்படி. ஏழுஎன்கிறவையெல்லாம் - பெற என்கிறது. கோளும்சுடருமாகிறன - க்ரஹநக்ஷத்ரங்கள். [ஊளியேழு] - லோகத்தைத்திருவயிற்றிலே வைக்கிறபோது எழுந்தஓசை. உறிஞ்சினஓசை என்றுமாம்.

வ்யத்யாஸமென்று சாடு. கோத்ரம் - பர்வதமும் பேரும், கோத்ரமும். "பின்னும், பின்னும்" என்கிறது - ஒவ்வொன்றே அசக்யமென்றபடி. கீழ்ச்சொன்னவைபோலன்றிக்கே, நாலாமைக்கு அஸம்பாவிதமானத்தையும் நாலாதே ஸ்வஸ்த்தாநத்திலே கிடக்கும்படிபண்ணின ஸாமர்த்யத்தை யருளிச்செய்கிறார் - அவைதாம்இத்யாதி நாலுவாக்யத்தாலே. கிழுக்கத்தால்ஸலிதம் - அவற்றின்இத்யாதி வாக்யத்வயம். அவஹிதனாய் - ஸாவதானனாய். எயிற்றிலே - தம்ஷ்ட்ரையிலே. அப்படியூன்றியிடந்தானே? என்ன - மண்ணேல்லாம்இத்யாதி. பூமிப்பரப்பையடங்கவெடுத்து ஈஶ்வரத்வத்தால் வந்த செருக்காலே மதகார்யமான வ்யாபாரங்களைப்பண்ணியென்றபடி. திருமொழி மூன்றாம்பத்து நாலாந்திருமொழி மூன்றாம்பாட்டு, "வையணைந்த" இத்யாதி. ரஸோக்தி - அவன் இத்யாதி. முக்யம் - முகசம்பந்தியும், ஶ்ரேஷ்டமும். கீழெல்லாவற்றையும் நிகமிக்கிறார் - அசலங்களோடு இத்யாதி. 'அப்பனூன்றியிடந் தெயிற்றிற்கொண்டநாளே - நான்றிலவேழ்' இத்யாரப்யாந்வய:. (௩)

ப.—அநந்தரம், ஜகந்நிகாணத்தை யநுஸந்தித்து ஸந்துஷ்டராகிறார்.

நாளும் - திவஸாதிவிபாகம், எழ - நிலைகுலைந்துபோகவும், நிலநீரும் - ப்ருதிவீஜலங்களும், எழ - நிலைகுலைந்துபோகவும், விண்ணும் - ஆகாசமும், கோளும் - க்ரஹங்களும், எழ - நிலைகுலைந்துபோகவும், எரிகாலும் - அக்நிவாயுக்களும், எழ - நிலைகுலைந்து போகவும், மலை - பர்வதங்கள், தாள் - அடி, எழவும் - பறிந்துபோகவும், சுடர்தானும் — நக்ஷத்ராதி தேஜ:பதார்த்தங்களும், எழ - குலையவும், அப்பன் - ப்ரளயாபத்ஸகனான மஹோபகாரகன், ஊளியெழ - "பசித்துண்டான்" என்று தோன்றும் படியாக, உலகம் - லோகத்தை, உண்ட -, ஊண் -, ஏ - இருந்தபடியே! கோள் - க்ரஹம். ஊளி - பசி; "உறிஞ்சினவோசை" என்பாருமுளர்.

இ—நாலாம்பாட்டில், ப்ரளயகாலத்திலே பூதஜாதிகங்களோடேகூடின ஜகத்தைத் திருவயிற்றிலே வைத்தபடியைச்சொல்லுகிறார்.

[நாளுமெழ] - காலவ்யவஸ்தைபோக. வ்யவச்சேதகரான ஆதித்யாதிகள் போனவாறே, கலாகாஷ்டாதிரூபமான வ்யவச்சேதமும்போயிற்றதென்கை. [நிலநீருமெழ] - காரணமான பூமியும் ஜலமும்போக. [விண்ணும்கோளுமெழ] - ஆகாசமும் க்ரஹங்களும்போக. [எரிகாலுமெழ] - அக்நியும் வாயுவும்போக. [மலைதாளுமெழ] - பூமிக்கு ஆதாரமான மலைகள் வேரோடு பறிந்துவிழ. [சுடர்தானுமெழ] - அநுக்தமான நக்ஷத்ராதிதேஜ: பதார்த்தங்கள் போக. [அப்பன்] - ப்ரளயாபத்ஸகன். [ஊளியெழ] - திருவயிற்றிலேபுகுகிற நெருக்கத்தால்வந்த ஆரவாரமுண்டாம்படி. ஊளி - சப்தம். உறிஞ்சினஓசை என்னவுமாம். எழ என்றது - தோற்ற என்றபடி. லோகத்தை உண்டபடி.

ஈடு.—நாலாம்பாட்டு. மஹாப்ரளயத்தில் ரக்ஷணப்ரகாரத்தை அருளிச்செய்கிறார். "'இப்போதிருக்கிறப்போலே மார்க்கண்டேயன் திருவயிற்றினுள்ளே ஒன்றுமழியாதேயிருக்கக் கண்டான்' என்கிற புராணாநுரூபமாக அவாந்தர ப்ரளயத்தை இவ்விடத்தே அருளிச்செய்கிறாராகவுமாம்" என்றருளிச் செய்வர்.

[நாளுமெழ] - காலவ்யவஸ்த்தைபோக. "நாஹோ நராத்ரி:" (நாஹோ நராத்ரி:) என்னும்படியே. எழ - பேர. ஆண்டென்றும், மாஸமென்றும், நாளென்றும், கலையென்றும், காஷ்ட்டையென்றும் சொல்லுகிறவையெல்லாம் ஆதித்யனுடைய கத்யாகதியாலே வருகிறவையிறே; வ்யவச்சேதகனான ஆதித்யன் உள்ளேபுக்கால் வ்யவச்சேத்ய

நாலாம்பாட்டு - நாளும் இத்யாதி. "உண்ட" என்று - ஸாமாந்யசப்தமாகையாலே, "அத்தா சராசரக்ரஹணாத்" என்கிறபடியே மஹாப்ரளயமாதல், அவாந்தரப்ரளயமாதலென்று அவதாரிகாத்வயம் - மஹாப்ரளயத்தில் இத்யாதி வாக்யத்வயத்தாலே. "ததஸ்ஸ த்ருஷ்டவாந் தேவம் குக்ஷௌ தஸ்ய மஹாத்மந:" என்றத்தைப்பற்ற - திருவயிற்றினுள்ளே என்றது.

நாளுமெழ - காலம்போகவென்று விவக்ஷித்து, "அநாதிர் பகவாந் கால:" என்ற நித்யமான காலம் போகக்கூடுமோ? என்ன - காலவ்யவஸ்த்தைபோக என்கிறார். காலவ்யவஸ்த்தைதான் இன்னதென்னுமத்தையும், அவ்வ்யவஸ்த்தைக்கு ஹேது இன்னதென்னுமத்தையும், ஹேதுபூதன் உள்ளே புகுருகையாலே கார்யமான இவ்வ்யவஸ்த்தையும் போமென்னுமத்தையும் அடைவே யருளிச்செய்கிறார் - நாஹோநராத்ரி ரித்யாதி வாக்யத்ரயத்தாலே. "நாஹோ நராத்ரிர் ந நபோ ந பூமி

மான இவையும் போமித்தனையிறே. [நிலநீருமெழ] - காரணங்களோடு, கார்யங்களோடு வாசியற உள்ளேபுக. கார்யமுள்ளவிடத்தே காரணம் அநுவர்த்திக்கக் காணாநின்றோம்; "மாமாயை - மங்கவொட்டு" என்று - ப்ரக்ருதிதத்த்வத்தைச் சொல்லாநிற்கச்செய்தே, "இங்கு இவ்வுயிரேய்பிரகிருதி" என்றுசொல்லாநின்றாரிறே. இதுதான் காரணத்திலே போகாமைக்காக. உயிரேய் பிரகிருதியென்கிறார் - சேதநஸம்ஸ்ருஷ்டையான ப்ரக்ருதியென்று தோற்றுகைக்காக. [விண்ணுங்கோளுமெழ] - ஆகாசமும் அங்குள்ள க்ரஹங்களுமெழ. [எரிகாலுமெழ] - அக்நி தத்த்வமும் வாயுதத்த்வமும்போக. [மலைதாளுமெழ] - பர்வதங்களடியோடே பறிந்து உள்ளேபுக; வேர்க்குருத்தோடேபறிய. [சுடர்தானுமெழ] - அநுக்தமான தேஜஸ்தத்த்வங்களும் உள்ளேபுக. [அப்பனொளியேழ] - ஊளி - ஶப்தம். எழவென்றது - தோற்றவென்றபடி. ஓரோக்ஷோபங்களுண்டானால் நம்முடைய அடையவளைந்தானுக்கு உள்ளே புகும்போது திருவாசலில் பிறக்கும் ஆரவாரம்போலே, திருவயிற்றிற் புகுகிறபோது ப்ராணிகளுக்கு உண்டான ஸம்ப்ரமத்வநிகள் கிளர; அன்றியே, "'இவற்றை யுறிஞ்சுகிறபோதைத்வநி காண்!' என்று அம்மாள் பணிக்கும்படி" என்றருளிச்செய்வர்; அத்தால் நினைக்கிறது – ஈஶ்வரத்வப் பிடராலன்றியே பத்தும்பத்தாக ஆஶ்ரிதரக்ஷணமேயாயிருக்கிறபடி. (௪)

ர்ந நபோ ந பூமிர்நாஸீத்தமோ ஜ்யோதிரபூச்ச நாந்யத்। ச்ரோத்ராதிபுத்த்யாநுபலப்யமேகம் ப்ராதாநிகம் ப்ரஹ்ம புமாம்ஸ்ததாஸீத்" இதி ப்ரதமேம்சே த்விதீயே (௨௩.) நாஹோ ந ராத்ரி: என்றது - மஹாப்ரளயபக்ஷத்துக்கு ப்ரமாணம். அவாந்தர ப்ரளயபக்ஷத்துக்கு ப்ரமாணமாகில், நாஹோ ந ராத்ரி: என்றமாத்ரமே வேண்டுவது. பஞ்சபூதங்கள் அண்டத்துக்குப் புறம்பானபோது காரணங்களாய், அண்டத்துக்கு உள்ளானபோது கார்யங்களாயிருக்குமென்றிட்டு 'காரணங்களோடு கார்யங்களோடு வாசியற' என்கிறார். "நிலநீருமெழு" என்றதிலே - கார்யமான பூதங்களையன்றோ சொல்லுகிறது. காரணங்களையும் இதுக்கர்த்தமாக்கும்போது கார்யத்திலே காரணமுண்டோ? என்ன - கார்யமுள்ளவிடத்தே இத்யாதி. இதுக்கு நியாமகமேதென்ன - மாமாயை இத்யாதி. அதாவது - "மங்கவொட்டுன்மாமாயை" என்று - மூலப்ரக்ருதியைச் சொல்லச் செய்தேயும், "இங்கிவ்வுயிரேய்பிரகிருதி" என்று-ஸ்தூலசரீர விஶிஷ்டசேதந ஸம்ஸ்ருஷ்ட ப்ரக்ருதியென்று காரணம்ஶத்தைப் பிரித்துச்சொன்னாரிறே. இந்த காரணம்ஶமானது மூலப்ரக்ருதியாய்ப் போகாமைக்காகவென்றபடி. இதுதானென்றது - ஸ்தூலசரீர விஶிஷ்டசேதந ஸம்ஸ்ருஷ்டகாரணம்ஶமான இந்தப்ரக்ருதிதான். காரணத்திலே போகாமைக்காக என்றது - மூலப்ரக்ருதியாய்ப் போகாமைக்காகவென்றபடி. "இது தான் காரணத்திலே போகாமைக்காக" என்றத்தை விவரிக்கிறார் - உயிரேய்பிரகிருதி இத்யாதி. எய்கை - பொருந்துகை. அயமர்த்த:; மாமாயையென்று - ப்ரக்ருதியைச் சொல்லச்செய்தே, உயிரேய் பிரகிருதியென்று - புந: ப்ரக்ருதியைச் சொன்னது - இந்தக்கார்யமான சரீரத்திலே காரணமான மூலப்ரக்ருதி யநுவர்த்திக்கிறதென்று தோற்றுகைக்காகவென்று. ஆக, இத்தால் கார்யங்களிலும் காரணாம்ஶம் அநுவர்த்திக்குமென்றபடி. "கோள்" - ஜ்யோதிஸ்ஸு. "எழ" போக. விவரணம் - வேர்க்குருத்தோடே இத்யாதி. "ஊளி" - த்வநி. இங்கே, "எழ" என்றது - கிளரவென்றபடி. ஈஶ்வரத்வப் பிடர் - ஈஶ்வரத்வத்தாலே வந்த கர்வம். 'நாளுமெழ' என்று தொடங்கி, 'உலகமுண்டவூணே' இத்யந்வய:. உண்டவூணே - உண்டவூணிருந்தபடியே! என்றபடி. (௪)

ஐந்தாம் பாட்டு.

ஊணுடைமல்லர்ததர்ந்தவொலிமன்னர்
ஆணுடைச்சேனைநடுங்குமொலிவிண்ணுள்
ஏணுடைத்தேவர்வெளிப்பட்டவொலியப்பன்
காணுடைப்பாரதங்†கையறைபோழ்தே.

ஆ.—(ஊணுடைமல்லர்.) - அதி பலபராக்ரமரான மல்லருடைய ஷித்வம் ஸநத்வநியும், ஶௌர்ய வீர்யாதி பரிபூர்ணஸைந்ய ஸஹிதரான ராஜாக்களுடைய பயஜநிதமான மஹாகோஷமும், ப்ரஹ்ருஷ்டரான ப்ரஹ்மேஶாநாதிகளுடைய ஸ்வவிஷய ஸ்துதி கோஷமு மெழும்படியாக, தர்ஶநீயமான மஹாபாரத யுத்தத்திலே அணிவகுத்து என்னப்பன் ஸாரத்யம்பண்ணினபடி என்? என்கிறார்.

ஒ.—அஞ்சாம்பாட்டில், பூபாரநிர்ஹரணார்த்தமான பாரதஸமரவ்ருத்தாந்

[...ணன் ...ாடங்...] - யுத்தார்த்தமாக பக்ஷ்யபோஜ்யாதிகளை மிகவும் புஜித்து மலைபோலே இருக்கிறமல்லர் நெரிந்த ஒலி. [ஆணுடைச்சேனை] - ஆண்பிள்ளைத்தனத்தை உடையஸேனை. [ஏணுடைத்தேவர்] - எண்ணப்படும் தேவர்கள். [அப்பன் காணுடைப்பாரதம் கையறைபோழ்தே] - அப்பன்கண்டு நிற்கவேணும்படி பாரதஸமரம் தொடங்கினபோது.

ப.—அநந்தரம், பாரதஸமரப்ரவர்த்தகத்வத்தை யநுஸந்திக்கிறார்.

அப்பன் - ஆஶ்ரிதபக்ஷபாதியானக்ருஷ்ணன், காணுடை - தர்ஶநீயமான, பாரதம் - பாரதத்தை, கை - கைகுவித்து, அறை - பொருத, போழ்து - போது, ஊண் - பலகரமானவூணை, உடை - உடைய, மல்லர் - பெருமிடுக்கரான மல்லரானவர்கள், (த்வந்த்வயுத்தம்பண்ணி), ததர்ந்த - நெரிந்துவிழுகிற, ஒலி - ஓசையும், மன்னர் - ராஜாக்களுடைய, ஆண் - வீரபுருஷரை, உடை - உடைத்தான, சேனை - ஸேனைகளானவை, (க்ருஷ்ணபலாநுஸந்தாநத்தாலே யஞ்சி), நடுங்கும் - நடுங்குகிற, ஒலி - சப்தமும், விண்ணுள் - ஆகாசத்திலே, ஏண் - தந்தாம் பதமர்யாதைகளை, உடை - உடைய, தேவர் - ப்ரதாநதேவர்கள், (யுத்ததர்ஶநார்த்தமாக), வெளிப்பட்ட - வெளிப்பட்டுக்கொண்டாடுகிற, ஒலி - ஓசையும், (ஆயிற்று). ததர்தல்-நெரிதல்.

இ.—அஞ்சாம்பாட்டில், பாரதஸமரவ்ருத்தாந்தத்தை அநுபவிக்கிறார்.

[ஊணுடைமல்லர்] - பலகரமான த்ரவ்யங்களை மிகவும் புஜித்து மிடுக்கரானமல்லர். [ததர்ந்தவொலி] - நெரிந்துவிழுகிற ஓசை. [மன்னராணுடைச்சேனை] - ராஜாக்களுடைய ஆண்பிள்ளைத்தனத்தை உடைத்தான ஸேனையென்னுதல்; பீஷ்மாதிகளை ரக்ஷகமாக உடைத்தானஸேனை என்னுதல். [நடுங்குமொலி] - க்ருஷ்ணன் ப்ரதிபக்ஷத்திலாமென்று நடுங்கி அலமாக்கிறத்வநி. [விண்ணுளேணுடைத்தேவர்] - ஸ்வர்கத்திலே மதிப்பாக எண்ணப்பட்டதேவர்கள். [வெளிப்பட்டவொலி] - "தெரிவரிய சிவன் பிரமன் அமரர்கோன்" என்கிறபடியே பரோக்ஷபூதரானவர்கள், கண்ணுக்கு விஷய

† 'கையெறி' என்று பாடாந்தரம்.

மாய் ஸ்துதிக்கிற த்வநி. ஸ்ரீவேதவ்யாஸபகவான் த்ருதராஷ்ட்ரனை "யுத்தங்காண்டிருப்பாயோ உனக்குக் கண்தரச்?" என்ன, "நான் பொறுக்கமாட்டேன்" என்ன, ஸஞ்சயனுக்குக் கண்கொடுத்து "கண்டுசொல்" என்றான். [அப்பன்] - பூபாரநிர்ஹரணம் பண்ணின உபகாரகன். [காணுடைப்பாரதம்] - ஊர்ஜஸ்வியமான பாரதம். அதாவது - ஒட்டுக்கொள்ளும் பிறவாய்க்கவிழ் சொரிந்துமாய் பாரதயுத்தத்தோடேயின்றதில்லை. [கையறைபோழ்தே] - கையும் அணியும் வகுக்குத் திரிகிற ஸமயம். தொடங்கினபோது என்றபடி.

ஈடு.—அஞ்சாம்பாட்டு பாரதஸமர வ்ருத்தாந்தத்தை அருளிச்செய்கிறார்.

[ஊனுடைமல்லர்ததர்ந்தவோலி] - ஏற்றிலக்கை பெற்றுண்கிற மிடுக்கை யுடையரான துர்யோதநன் பரிகரம் தேர்க்காலிலே நெரிந்த ஓசை. மல்லென்று - மிடுக்கு. மிடுக்கையுடைய பரிகரமென்றபடி. மல்லர்க்கு மிடுக்குண்டாகைக்காக துர்த்ரவ்யங்களையும் மாம்ஸங்களையும் புஜிப்பித்து ஆட்டத்துவெளியிலே நிறுத்தினுறைபிற்று நலிகைக்காக; அத்தையறிந்து பையல்களைத் தேர்க்காற்கீழேயிட்டு நெரித்தபோதை த்வநி பலத்தைப்போரப் போலியச்சொல்லிவைத்து, ததர்ந்தவென்கிறார்காணும், பசளைக்கலம் நெரித்தாற்போலே அநாயாஸேந நெரித்தபடியைப்பற்ற. [மன்னரித்யாதி] - ராஜாக்களுடைய ஆண்பிள்ளைத் தனத்தையுடைத்தான ஸேநை, "க்ருஷ்ணன் ஸாரத்யம்பண்ணுவதாக ஏறினான்" என்று கேட்டவாறே "நாம் முடிந்தோமன்றோ" என்று அவ்வளவில் குடல்குழம்பிக்கூப்பிட்டஒலி ஆண்பிள்ளைகளான மிக்மத்ரோணாதிகளிறே கூசிப்போயினபேர். [விண்ணுளேனுடைத்தேவர் வெளிப்பட்டவோலி] - ஸர்வேஸ்வரனோடொக்க இன்னாரின்னாரென்னும்படி தந்தாமைச்சமையவிட்டுக்கொண்டு அபிமாநிகளாய் ஒரோ இருப்பிடங்களையுடையராயிருக்கிற தேவஜாதி. கண்ணுக்குத்தோற்றும்படிநின்று ஸ்தோத்ரம்பண்ணுகிற த்வநி. "வஸவோ ஹ்ராவஸ்ச்ச வஸவ:" (ஸப்ரஹ்மகாஸ்சிவஸ்ஸேந்த்ரா:) என்றொருகோவையிலே எண்ணலாம்படியிருக்கிறவர்கள். இந்த அந்தரஜாதிகளைத் தன்னுடனே ஸஹபடிக்கலாம்படி தன்னைத்தாழவிட்டுவைக்குமே தன் ஸௌலப்யத்தாலே! [அப்பன்]-பூபாரநிர்ஹரணம் பண்ணின வுபகாரகன். [காணுடையித்யாதி] - சக்ஷுராதி கரணங்களைப்படைத்ததுக்கு

அஞ்சாம்பாட்டு - ஊனுடை இத்யாதி. " ... பாரதம் ...
தவதாரிகை - பாரத இத்யாதி.

ஏற்றிலக்கை - அதிகாடயம். மல்லர் - மிடுக்கையுடையவர்கள். ததர்ந்த - நெரிந்த. ... "மல்லர்" என்று - மிடுக்கையுடையவர்களென்றருளிச்செய்து. ஸ்வஹாகமான மல்லென்றர்த்தாந்தரம் - மல்லர்க்கு இத்யாதி. 'ஊனுடைமல்லர்' என்றதுக்கு - வலகரமான ஊனையுடைய மிடுக்கையுடையவர்களென்று முந்தினவர்த்தம். வலகரமான ஊனையுடைய மல்லென்றிரண்டாமர்த்தம். ஆட்டத்துவெளி - வையாளிவிடுகிற வெளி. 'ஊனுடைமல்லர்' என்று - இவர்களைவர்ணித்து, "ததர்ந்த" என்றதுக்கு பாவம் - பலத்தை இத்யாதி. பசளைக்கலம் - பச்சைப்பானை. "ஆணுடை" என்கிறது ஆரை? என்ன - ஆண்பிள்ளைகளான இத்யாதி. "ஊனுடை" என்றதுக்கு - உயர்த்தியுடையவென்றர்த்தம் - ஸர்வேஸ்வரனோடு இத்யாதி. சமையவிட்டுக்கொண்டு - சக்ருதவிசேஷத்தாலே பாக்கிக்கொண்டு. அதாவது - உகக்ருஷ்டாரம்படி பண்ணிக்கொண்டென்றபடி. 'எண்' என்றதுக்கு - எண்ணிக்கையென்றர்த்தாந்தரம் - ஸப்ரஹ்மா இத்யாதி. எண் - உயர்த்தியும், எண்ணிக்கையும் ஸர்வேஸ்வரனோடொக்க எண்ணலாமோ ஈஸ்வராபிமாநிகளானவர்களை? என்ன - இந்தவந்தரஜாதி இத்யாதி. இந்தவந்தரஜாதிகளையென்றது - சாதி; ஆகாசத்திலே பிறந்தவர்களென்று ஸ்வஹாவார்த்தம், ஹீநஜாதியென்று த்வநி. "காணுடை"-ஊர்ஜஸ்வியமான. பாரதஸமரம் காட்சியையுடைத்தாயிருக்கும்படியை யருளிச்செய்கிறார் - சக்ஷுராதி இத்யாதி. அற்றைநில்லை - அப்போதைய்க்கில்லை."அற்றை

ப்ரயோஜநம் அற்றநிலையைக்காண்கையிறே. ஸேநாதூளியும், கையும் உழவுகோலும் சிறுவாய்க்கயிறும், நாற்றின திருவடிகளுமாய் நிற்கிறநிலை யிறே. ''மாம்'' என்கிறநிலையிறே யது. ஶர்மநியமான பாரதம். [கையறைபோழ்து] - கையுமணியும் வகுத்து அங்கோடு இங்கோடு உலாவிப் படைபொருத்தி, ''நீங்களின்னபடி செய்யக்கடவிகோள்! நாங்களின்னபடி செய்யக்கடவோம்'' என்று கைதட்டிவிட்டபோது இத்த்வநியெல்லாம் உண்டாயிற்று. (ரு)

ஆறும்பாட்டு.

போழ்துமெலிந்தபுன்செக்கரில்வான்திசை
சூழுமெழுந்து உதிரப்புனலாமலை
கீழ்துபிளந்தசிங்கமொத்ததால்அப்பன்
ஆழ்துயர்செய்தசுரரைக்கொல்லுமாறே.

ஆ—(போழ்து) - பஶ்சிம ஸந்த்யாஸமயத்திலே ஸகலபுவன விவரமும் ருதிரபூரபூரிதமாம்படி, மேருஶிகரத்திலேயேறி ஒரு ஸிம்ஹமானது மேருஶிகரத்தைப் பிளந்தாற்போலே, ஹிரண்யனை வ்யஸ்ருதனும்படிபண்ணி என்னப்பன் பிளந்தருளினபடி என் ! என்கிறார்.

ஒ.—ஆறும்பாட்டில், ஆஶ்ரிதர்க்கு உஜ்ஜீவந ஹேதுவான ஹிரண்யவத வ்ருத்தாந்தத்தை அருளிச்செய்கிறார். [போழ்தென்று தொடங்கி] - போதுபோய்ச் செவ்வானமிட்ட ஊமையிலே ஆகாசமும் திக்குக்களும்போய் ருதிரஜலமாக, ஸந்த்யா ராகத்திற்காட்டில், அவனுடைய ஹ்ருதயத்தினின்றும்புறப்பட்ட ரக்தமானது ஆகாஶத்தையும் திக்குக்களையும் மிகவும் சிவப்பிக்க என்றுமாம். [மலையென்று தொடங்கி] - ஒருமலையைக் கீழேயிட்டு அதின்மேலே யிருந்து அம்மலையைக்கீண்ட ஸிம்ஹம்போலே யிருந்தது. தன் சீற்றத்தைக்காட்டி மிகவும் உக்ரப்படுத்தி அஸுரனைக்கொன்றபடி.

ப.—அநந்தரம், ஹிரண்யவத வ்ருத்தாந்தத்தை யநுஸந்திக்கிறார்.

போழ்து - திவஸம், மெலிந்த - க்ஷயித்தவளவிலே, புன் - இளம், செக்கரில் - செக்கர்போலே, வான் - ஆகாசமும், திசை - திக்குக்களும், சூழும் - சூழ, எழுந்து - கிளம்பி, உதிரப்புனல் - ரக்தஜலம், ஆ - ஆம்படியாக, அப்பன் - ஆஶ்ரிதோபகாரகனை நரஸிம்ஹரூபியானவன், ஆழ்துயர் - அதிசயிததுக்கத்தை, செய்து - விளைத்து, அசுரரை - அஸுரனை ஹிரண்யனை, கொல்லும் - கொல்லும், ஆறு - ப்ரகாரம், மலை - மலை, கீழ்து - கீழ்தாம்படி, பிளந்த - பிளந்த, சிங்கம் - சிங்கத்தை, ஒத்தது - ஒத்திருந்தது. புன்செக்கரில் - புன்செக்கரான ஸந்த்யாகாலத்திலென்றுமாம்.

இ—ஆறும்பாட்டில், ஆஶ்ரிதர்க்கு உஜ்ஜீவநஹேதுவான ஹிரண்யவத வ்ருத்தாந்தத்தை அநுபவிக்கிறார்.

நிலை'' என்றதின்விவரணம் - ஸேநாதூளியும் இத்யாதி. அந்நிலைக்கு ப்ராப்யத்வமாத்ரமேயன்றிக்கே, ப்ராபகத்வமு முண்டென்கிறார் - மாமென்கிற இத்யாதி. ''கையறைபோழ்து'' என்றதுக்கு பாவம் - கையுமணியும் இத்யாதி. கையறைபோழ்து - கைதட்டிவிட்டபோது. கையறைகை - கைதட்டுகை, கையுமணியும் வகுத்து - படையில் வ்யூஹவிபாகம்பண்ணி. அப்பன்காணுடைப் பாரதம் கையறைபோழ்து - இத்த்வநிகளெல்லா முண்டாயிற்றின என்றந்வயம். (ரு)

[போழ்து மெலிந்தபுன் செக்கரில்]-ஸந்த்யாவேளையிலே. ஈர - மூற்ற ரக்தமை யாய்ச் செவ்வானம் மறைவதற்குமுன்பே. அவன் கொண்டவரத்திற் புகாதகாலத்திலே. [வான் திசை சூழமெழுந்து திரப்புனலா] - ஆகாசமும் திக்குக்களெங்கும் ரக்தஜல மாக. ஸந்த்யாராகத்திற்காட்டில், ரக்தமானது எல்லாவிடத்தையும் சிவப்பிக்க என்று மாம். [மலைகிழ்து பிளந்த சிங்கமொத்ததால்] - மலையைக்கீழேயிட்டு மேலேயிருந்து அத்தைப் பிளக்கிற ஸிம்ஹம்போலே இருந்ததென்னுதல். மலையை இரண்டுகூறாகக் கிழித்துப்பிளந்த ஸிம்ஹம்போலேயென்னுதல். கிழ்ந்து பிளந்தஸிம்ஹம். [அப்பன்] - பிதா வெதிராக வந்துஉதவின உபகாரகன். கீழ்ப்பாட்டில் - பந்துக்கள் பகையாக வந்து உதவினபடி சொல்லிற்று; இதில் - ரக்ஷகனை பிதா பகையாக, வந்துஉதவினபடி சொல்லுகிறது. பந்துக்கள் பகையாகவந்து உதவினவன், ஜநகன் பகையாகவந்து உத வினவன், "ஆபதி த்வமிவ ஈஶாந்ந:" என்று - தனக்குத்தானே ரக்ஷகனை அவ்வளவிலும்வந்து உதவுமவன்; ஆனபின்பு, ஸர்வரையும்விட்டு அவனையேவன்றோ பற்ற அடுப்பது. [ஆழ்துயர்செய்து அசுரரைக்கொல்லுமாறு] - தன் சிற்றத்தைக்காட்டி மிக வும் து:கத்தை விளைத்து அஸுரனைக்கொன்றபடி. நரஸிம்ஹத்தின் தோற்றத்திலே மாவகல்பனுனன், பின்னையுடலைக்கிழித்துப் பொகட்டான். "அவன்வியத்தோன்றிய சிங்கப்பிரான்" என்னக்கடவதிறே.

ஈடு.—ஆறும்பாட்டு. ஹிரண்யவத வ்ருத்தாந்தத்தை அருளிச்செய்கிறார்.

[போழ்துமெலிந்த.]-"பலிதப்ராயோவாஸர:" (பலிதப்ராயோவாஸர:) என்னுமாபோலே, பொழுதுபோகாநிற்கச் செய்தே. [புன்செக்கரில்] - செக்கர்வானமிடுகிற வளவிலே. அவன்வரத்திலகப்படாத ஸந்த்யாகாலத்திலே. †"இராப்படகில்லேன், பகல் படகில்லேன்" என்று வரங்கொண்டானே. [வான்திசை சூழமெழுந்துதிரப்புனலா] - பரப் பையுடைத்தானவாகாசம் திக்குக்களடங்கலும், பள்ளங்கண்ட இடமெங்கும் வெள்ளம் பரக்குமாபோலே ருதிரமானது கொழித்துப் பரக்கும்படி. [மலைகீழ்து பிளந்தசிங்கமொத்த தால்] - ஒரு மலையைக் கீழேயிட்டுக்கொண்டு மேலேயிருந்து அத்தைப்பிளந்த ஸிம்ஹமென்

ஆறும்பாட்டு - போழ்து இத்யாதி. "ஆழ்துயர்செய்தசுரரைக்கொல்லுமாறு" என்றத் தைக் கடாக்ஷித்தவதாரிகை - ஹிரண்ய இத்யாதி.

"போழ்துமெலிந்த" என்றதுக்கு ஸம்ப்ரமாணமாகவர்த்தம் - பலிதப்ராய இத்யாதி. "திவ ஸம் க்ஷயித்தவளவிலே" என்றுரையில் ஸப்தார்த்தம். மெலிந்த - க்ஷயிக்கிறவளவிலே யென்றபடி. புன்செக்கரில் - இளஞ் செவ்வானமிடுகிற அளவிலே யென்றபடி. விவரணம் - அவன்வரத்தில் இத் யாதி. அப்படி வரமுண்டோ? என்ன-இரா இத்யாதி. படகில்லேன - படக்கடவேனல்லேனென்ற படி. "சூழும்-வான்திசை எழுந்து"என்று அந்வயித்து அர்த்தம்-பரப்பை இத்யாதி. "சூழும் - வான்" -பரப்பையுடைத்தான ஆகாசம், திக்குக்கள், கொழித்து ரக்தஜலமாம்படி யென்று ஸப்தார்த்தம். உதி ரம் -ரக்தம். புனல் - ஜலம். "புனலா" என்றது - புனலாம்படி என்றபடி. எழுந்து - கொழித்தென் னுதல், கிளர்ந்தென்னுதல். முந்தினவர்த்தத்துக்கு, "மலைகிழ்து" என்றது - மலையைக் கிழே யிட்டுக் கொண்டென்றபடி. த்விதீயார்த்தத்துக்கு, மலையைநாயாலேக கிழித்தாற்போலே இரண்டுகூறாகப் பிளந்த ஸிம்ஹம்போலே என்று ஸப்தார்த்தம். மூன்றாமர்த்தத்துக்கு, "மரையிதழ் புரையும்சேவடி" என்று தாமரையை மரையென்றாற்போலே தலைக்குறைத்தலாய் மகரம் லோபித்து; "கீட்டுஎழி

† இராப்படற்பேன், பகற்படற்பேனென்று பாடங்காண்பது சரியன்று என்று தோன்றுகிறது.

னுதல். அன்றிக்கே, கிழித்துப்பிளந்த ஸிம்ஹம். மகிழ்ந்துபிளந்த ஸிம்ஹமென்றுமாம். (மகிழ் - அநாயாசத்தால்ஸித்தம். அதாவது - இரண்டு கூறாக்கிப்பிளந்த ஸிம்ஹமென்கை) "இரண்டுகூறுசெய்துகந்தசிங்கம்" என்னக்கடவதிறே. ஒக்கப்பிளந்த சங்கமோத்ததால். (கீழ்ந்து-உகந்து.) [அப்பனூழ்துயர்செய்து] - நரஸிம்ஹத்தினுடைய மொறுந்தமுகத்தைக் கண்டபோதே, மேல்போயனுபவிக்கக்கடவ அநுஸவமடைய அப்போதே யநுஸவித்துஅற்றான். அநாதிகாலம் ஸகவத்பாகவத விஷயங்களிலே பண்ணிப்போந்த ப்ராதிகூல்ய மடைய அரைக்ஷணத்திலே யநுபவித்தற்றபடி. மிகவும்துஃகத்தைவிளைத்து. [அசுரரைக் கோல்லுமாறே] - அசுரனைக்கோன்றபடி. இத்தால் சோல்லிற்றாயிற்று - ஸர்வஸாதாரணனாய் நிற்குநிலையொழிய, பித்ராதிகள் முகமாக ப்ரஜைகள் பக்கலிலே வத்ஸலனாய நிற்பதோரு நிலையுமுண்டிறே: அது குலைந்தால், அவன் சத்ருவாயும்நிற்குமிறே: அப்போதும் இவன்தான் முன்னின்று ரக்ஷிக்குமென்கை. இத்தாலும் சோல்லிற்றாயிற்று - ஆபத்துக் கனத்ததனையும் கடுகவந்து ரக்ஷிக்கு மென்கை. தமப்பன்பகையாக உதவினவன், அவனிலண்ணியனான தான் தனக்குப் பகையானா லுதவச்சோல்லவேணுமோ? "ஆத்மைவரிபுராத்மந:" (ஆத்மைவரிபுராத்மந:) என்கிறபடியே தனக்குத்தானேயிறே ஶத்ரு. (௬)

ஏழாம் பாட்டு

மாறுநிரைத்திரைக்குஞ்சரங்களின
நூறுபிணம்மலைபோற்புரளக்கடல்
ஆறுமடுத்துதிரப்புனலாவப்பன்
நீறுபடவிலங்கைசெற்றநேரே.

ஆ.—(மாறுநிரைத்து) - சாரிகைவருகிற சைவ ஆதிசயத்தாலே ஸர்வதிக்குக்களிலும் நின்று விட்ட திருச்சரங்கள் யுகபத்தேவ தன்னிலே சந்தித்திரைக்கும்படியாகவும், ராக்ஷஸசரீரங்கள் * சிந்நமாம்படியும் பிந்நமாம்படியும் சஞ்சர்தக்தமாம்படியும் ப்ர

நீட்டல்" என்னும் ந்யாயத்தாலே ஈகாரம்வந்து, கீழ்து என்று கிடக்கையாலே, மகிழ்ச்சியைச்சொல்லுகிறது. ஆக, மலையைப்பிளந்தாற்போலே மகிழ்ந்துபிளந்த ஸிம்ஹமென்று மூன்றுமர்த்தம். "கிழித்துப்பிளந்த" என்ற இரண்டாமர்த்தத்துக்கு ப்ரமாணம் - இரண்டு கூறு இத்யாதி. இரண்டுகூறாகப் பிளந்துகந்த சிங்கமென்றபடி. திருச்சந்தவிருத்தம் அறுபத்திரண்டாம்பாட்டு "சரண்டமாடு" இத்யாதி. "இரண்டுகூறுசெய்து" என்றத்தால் ஃபலிதம் ஒக்கப்பிளந்த இத்யாதி. ஸமபாகமாகப் பிளந்தவென்றபடி. ஆக, "கீழ்து" என்றதுக்கு - கீழேயிட்டுக்கொண்டென்றும், கிழித்தென்றும், மகிழ்ந்தென்றும் அர்த்தத்ரயம். "ஊழ்துயர்செய்து" என்றதுக்கு ஸாவம் - நரஸிம்ஹத்தினுடைய இத்யாதி. மொறுந்த - துறுமண்டின. ஊழ்துயர்செய்து - அதிஶயிததுஃகத்தைவிளைத்தென்று ஶப்தார்த்தம். விவரணம் - அநாதிகாலம் இத்யாதி. ப்ராதிகூல்யமடைய வென்றபடி. இத்தால் ஃபலிதவர்த்தம் இன்னதென்கிறார் - இத்தால் இத்யாதி. இதிலும் ஃபலிதவர்த்தம் - இத்தாலும் இத்யாதி. ஹிரண்ய நிரஸநம் சொல்லுகிறதுக்கு ப்ரயோஜநம் அருளிச்செய்கிறார் - தமப்பன் இத்யாதி. தான் தனக்குப் பகையோ? என்ன, அதுக்குப்ரமாணம் - ஆத்மைவ இத்யாதி. "உத்தரேதாத்மநாத்மாநம் நாத்மாநமவஸாதயேத் । ஆத்மைவ ஹ்யாத்மநோ பந்து: ஆத்மைவ ரிபுராத்மந:" இதி பகவத்கீதாஸப்தஷஷ்டே(ரு). அடைவே யந்வயம்.

ஹக்ஷமாம்படியும் சஸ்த்ரபிடிதமாம்படியும், ருதிரவெள்ளத்தாலே கடலெல்லாம் நிறைந்து ஆறுகளிலே யெதிர்க்கும்படியும் சரவர்ஷத்தைவர்ஷித்து என்னப்பன் பொடிபட இலங்கையைச்செற்றான் என்கிறார்.

ஒ.—ஏழாம்பாட்டில், ராவணவதவ்ருத்தாந்தத்தை அநுஸந்திக்கிறார்.

[மாறென்று தொடங்கி] - சாரிகைவருகிறகடுப்பாலே எதிராக நிரைத்து இரையாநின்றுள்ள சரஸமூஹத்தாலே அநேகப்பிணங்கள் மலைபோலே புரண்டுகிடக்க. [கடலென்று தொடங்கி] - கடல்ரக்தத்தாலே நிரம்பி ஆற்றிலேவரவெதிர்க்கஅஸ்யமாம்படி லங்கையை அப்பன்செற்றதொரு நேர்பாடே! நேரேயென்றது - ஐஶ்வரயமான ப்ரபாவத்தாலன்றிக்கே மெய்யான ஆண்பிள்ளைத்தனத்தாலே என்றுமாம்.

ப.—அநந்தரம், லங்காபங்க ப்ரகாரத்தை யநுஸந்திக்கிறார்.

(சாரிகைதிரிந்தகடுமையாலே), மாறு - எதிரெதிராக, நிரைத்து - , இரைக்கும் - சப்திக்கிற, சரங்கள் - சரங்களாலே, இனம் - இனமினமாக, நூறு - நூறுநூறும்படி, பிணம் - ராக்ஷஸசவங்களானவை, மலைபோல் - மலைபோலே, புரள - புரண்டுவிழவும், ஆறு - ஆறுகளாலேசென்று, மடுத்து - மடுத்து, கடல்-, உதிரப்புனல்-, ஆ - ஆம்படியாகவும், அப்பன்-ஆஶ்ரிதோபகாரகனை சக்ரவர்த்தித் திருமகனானவன், இலங்கை - லங்கையை, நீறுபட - பஸ்மஸாத்தாம்படி, செற்ற - போருத, நேர்-செவ்வையிருந்தபடி. நூறுதல் - நஶித்தலாகவுமாம்.

இ.—ஏழாம்பாட்டில், ராவணவதவ்ருத்தாந்தத்தை அநுபவிக்கிறார்.

[மாறுநிரைத்திரைக்கும் சரங்கள்] - சாரிகைவருகிற கடுப்பாலே, எதிராக நிரைத்து இரையாநிற்கிற சரஸமூஹத்தாலே. ஓரம்பைவிட்டால், அதுக்கு எதிராக மற்றையம்பைவிடுகையாலே திருச்சரங்கள் தன்னிலே முட்டி த்வநிக்கிறபடி. [இனநூறு பிணமலைபோல்புரள] - இனமான நூறுநூறாகப்பிணங்கள் மலைபோலே புரண்டுகிடக்க, அநேகம்பிணங்கள் என்றுமாம். [கடலாறுமடுத்துதிரப்புனலா] - "ஶுவஸ்ரீஶோண ஸமுத்திஷு" என்கிறபடியே அஸங்க்யாதமானகடல், ரக்தத்தாலே நிரம்பி ஆறுகளிலே எதிரேமடுத்து ரக்தஜலமாக, ரக்ஷகனானவன் லங்கையை பஸ்மமாம்படி அழித்தநேர்பாடென்னுதல். நேரேயென்று - ஐஶ்வரயமான ப்ரபாவத்தாலே யன்றிக்கே. செவ்வையான ஆண்பிள்ளைத்தனத்தாலே என்னுதல். க்ருத்ரிமரான ராக்ஷஸரைப்போலன்றிக்கே நேர்போராக என்னுதல்.

ஈடு.—ஏழாம்பாட்டு. ராமவ்ருத்தாந்தத்தை யருளிச்செய்கிறார்.

[மாறுநிரைத்திரைக்குஞ்சரங்கள்] - சாரிகைவந்தசடக்கு, காலுதிக்கும் விட்ட அம்புகளேதிரம்பாய் ஒன்றோடொன்று பொருது கலார் கலார் என்று த்வநிக்கிற த்வநி, கடலிரைத்தாற்போலே இராநின்றது. சாரிகைவந்த சடக்குத் தன்னில்தானெதிரம்பு கோத்

ஏழாம்பாட்டு - மாறுஇத்யாதி. "இலங்கைசெற்றநேரே" என்றத்தைக் கடாக்ஷித்தருளிச் செய்கிறார் - ராமஇத்யாதி.

"சரங்கள் - மாறுநிரைத்திரைக்கும்" என்று அந்வயிப்பது. சரங்களெதிரேகலந்து சப்திக்குமென்று மப்தார்த்தம். மாறு - எதிர். நிரைத்து - கலந்து. மாறுக்நிரைத்திரைக்கும் ப்ரகாரத்தை யருளிச்செய்கிறார் - சாரிகைவந்தஇத்யாதி. சாரிகைவந்தசடக்கு - மண்டலாகாரகதியில்வேகம்,

தது காணும். [இனநூற பிணமலைபோல்புரள] - நூறுநூருக இனமினமான பிணங்களானவை, அம்புபட்டுருவின சடக்காலே யுயிரோரிடத்தோதுங்கப்பெறுதே இரண்டுதுண்டத்திலும் கலந்து மலைபோலேகிடந்து துடிக்கிறபடி. [கடலாறுமடுத்துதிரப்புனலா] - "𑌆𑌪𑍂𑌰𑍍𑌯𑌮𑌾𑌣𑌮𑌚𑌲𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌂" (ஆபூர்யமாணமசலப்ரதிஷ்ட்டம்) என்று புக்கதெல்லாங் கொண்டிருக்கக்கடவ கடல், ருதிரவெள்ளத்தாலே நிரம்பி ஆறுகளிலே மடுக்கும்படி. ''வையமூடு பெருநீரில் மும்மைபெரிதே'' என்றூரிறே. [நீறுபட] - "𑌶𑍍𑌮𑌶𑌾𑌨𑌸𑌦𑍃𑌶𑍀"(ஸ்மஸாநஸத்ருஸீ) என்று சொன்னபடியே ஹஸ்மமாம்படியாக. [இலங்கைசெற்றநேரே] - நேர்-பொழுதென்றும், நேரமென்றும் காலபரம். இலங்கைசெற்றபொழுது-மாறுநிரைத்திரைக்கும் சரங்கள் என்றுஅங்வயம். அன்றிக்கே, இலங்கையைச்செற்ற வாய்ப்பென்னுதல். மாயாப்ரயோகத்தாலல்ல, செவ்வைப்பூசலிலே நின்றுகிடீர் இலங்கையை அழித்ததென்னுதல். நேர் - நேராகவென்னுதல். அப்போது, ஏகாரம் - தேற்றேகாரம். ஆர்ஜவத்தாலே இலங்கைசெற்றது. (௭)

ரஸோக்தி - சாரிகைஇத்யாதி. பிணங்கள் புரளுகைக்கு ஹேதுவருளிச்செய்கிறூர் - நூறுநூறகஇத்யாதி. சடக்காலே - வேகத்தாலே. கடலானது ரக்தஜலத்தாலேநிரம்பி ஆறுகளிலே யெதிர்த்தோடும்படி யென்று சப்தார்த்தம். †''புனலா'' என்றது - புனலாலேயென்றபடி. நிரம்பி இத்யத்யாஹார்யம். ஆறுமடுத்து - ஆறுகளிலேயெதிர்த்தோடும்படி, மடுத்தல் - ப்ரவர்த்தித்தலாய், ப்ரவஹிக்கையென்றபடி. ''கடலாறுமடுத்து'' என்றதுக்குஹாவம்-ஆபூர்யமாணம்இத்யாதி. '𑌆𑌪𑍂𑌰𑍍𑌯𑌮𑌾𑌣𑌮𑌚𑌲𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌂 𑌸𑌮𑍁𑌦𑍍𑌰𑌮𑌾𑌪𑌃 𑌪𑍍𑌰𑌵𑌿𑌶𑌨𑍍𑌤𑌿 𑌯𑌦𑍍𑌵𑌤𑍍। 𑌤𑌦𑍍𑌵𑌤𑍍𑌕𑌾𑌮𑌾 𑌯𑌂 𑌪𑍍𑌰𑌵𑌿𑌶𑌨𑍍𑌤𑌿 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌸 𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌮𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿 𑌨 𑌕𑌾𑌮𑌕𑌾𑌮𑍀' இதிகீதாஸுத்விதீயே.(௭0) அசலப்ரதிஷ்ட்டமென்றது-கரையையதிக்ரமியாதென்றபடி. '𑌆𑌪𑍂𑌰𑍍𑌯𑌮𑌾𑌣𑌂'' என்றத்தையுங்கூட்டியர்த்தம்-புக்கதெல்லாம்இத்யாதி. ருதிரவெள்ளம் நிரம்பினதுக்கு ப்ரமாணம்-வையமூடிஇத்யாதி. வையத்தைமூடுகிறப்ரளயஜலத்திலும் மும்மடங்குபெரிதென்றபடி. திருமொழிபதினோராம்பத்து நாலாந்திருமொழி நாலாம்பாட்டு, ''தளையவிழ்கோதை'' இத்யாதி. ''நேரே'' என்றதுக்கு மூன்றர்த்தம்-காலமும், சாதுர்யமும், ஆர்ஜவமும். முந்தின அர்த்தத்வயத்திலும், ஏகாரம் - அவ்யயம். மூன்றுமர்த்தத்தில், அவதாரணம். மூன்றுமர்த்தவிவரணம் - நேராகவென்னுதல்என்று. தேற்றேகாரம் - நிஸ்சயார்த்தகஏகாரமென்றபடி. ''நேர்'' என்றதுக்கு காலமர்த்தமானபோது, அப்பன் நீறுபடஇலங்கைசெற்றநேர் - போது, சரங்கள் - மாறுநிரைத்திரைக்கும்; இனமினமாக நூறுநூறுகப் பிணங்கள் மலைபோலேபுரண்டுவிழும் ; கடல் - உதிரப்புனலாலே நிரம்பி ஆறுகளிலே மடுக்குமென்றங்வயம். ''நேர்'' என்றது - சாதுர்யமானபோது, சரங்கள் - மாறுநிரைத்திரைக்கும்படியாகவும், இனநூறு பிணம்மலைபோல் புரளும்படியாகவும், கடல் - உதிரப்புனலாலேநிரம்பி - ஆறுகளிலே மடுக்கும்படியாகவும், அப்பன் நீறுபடவிலங்கைசெற்ற சாதுர்யமிருந்தபடி என் ? என்றங்வயம். ஆர்ஜவமர்த்தமானபோது, மாறுநிரைத்திரைக்கும்படியாகவும், மலைபோலே புரளும்படியாகவும், ஆறுகளிலே மடுக்கும்படியாகவும், அப்பன் நீறுபடவிலங்கைசெற்றது, நேரே - செவ்வையாகவே ; ஆர்ஜவத்தாலேயென்றங்வயம். "𑌹𑌤𑌾𑌯 [illegible] 𑌶𑍍𑌮𑌶𑌾𑌨𑌸𑌦𑍃𑌶𑍀 𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌤𑌿" இதி ஸுந்தரகாண்டே (௨௬ - ௨௬)

† புனலா - புனலாக; புனலாலே நிரம்பிஎன்றபடி என்றுஇருக்கலாம்.

எட்டாம் பாட்டு.

நேர்சரிந்தான்கொடிக்கோழிகொண்டான்பின்னும்
நேர்சரிந்தானெரியுமனலோன்பின்னும்
நேர்சரிந்தான்முக்கண்மூர்த்திகண்டீர் அப்பன்

ஆ.— (நேர்சரிந்தான்.) - வாணனுடைய தோள்களைத் துணித்தவன்று; தோற்கைக்குக் கொடிகட்டிக்கொண்டு வந்தாற்போலே ஸுப்ரஹ்மண்யன் முகம் மாறித் தோற்றான்; கிளர்ந்தெரிகிற அக்நியும் அப்படியே தோற்றான்; த்ரிநேத்ரனும் பராஜய வ்ரீளையாலே அவகுண்டிதனாய்க் கொண்டுபோனான்; என்னப்பன் ஜயித்தருளினபடி என்! என்கிறார்.

ஒ —எட்டாம்பாட்டில், வாணவிஜயத்தை அநுஸந்திக்கிறார். நேர்சரிந்தான் என்கிற பாட்டுக்கெல்லாம் - நேர்சரிந்தான் என்று சொல்லுகிறவற்றுக்கெல்லாம் பொருள் - தோற்றத்திலே சரிந்தானென்று. முதுகிட்டுப் பிழைத்துப்போனான் என்றுமாம். [கொடிக்கோழிகொண்டான்] - ஸுப்ரஹ்மண்யன். [திண்டோள்] - ருத்ர வரபலத்தாலே திண்ணியதோள்.

ப.— அநந்தரம், வாணயுத்தப்ரகாரத்தை யநுஸந்தித்தருளுகிறார்.

அப்பன் - அநிருத்தனுக்கு உபகாரகனான க்ருஷ்ணன், (நக்ராதிகளை முன்னிட்டு), நேர்சரி - ஒதுங்கின, வாணன் - பாணனுடைய, திண் - வரபலாதிகளாலே த்ருடமான, தோள் - தோள்களை, கொண்ட -(துணித்து வென்றி) கொண்ட, அன்று - , கோழி - மயிலை, கொடி - கொடியாக, கொண்டான் - கொண்ட சுப்ரஹ்மண்யன், நேர்சரிந்தான் - எதிர்நில்லாமல் சாய்ந்துபோனான்; பின்னும் - அதுக்குமேலே, எரியும் - ("ஸஹஸ்ராவ வஷ:யக்ஷீ:" என்று ருத்ரன் கானும்படியான க்ரௌர்யத்தையுடையனாய்) உத்கதஜ்வாலாதிகனான, அனலோன் - அக்நியானவன், நேர்சரிந்தான் - எதிர்நில்லாமல்சரிந்தான்; பின்னும் - அதுக்குமேலே, முக்கண் - த்ரிநேத்ரனாகையாலே சக்த்யதிசயத்தையுடைய, மூர்த்தி - ப்ரதாநனான ருத்ரன், (தான் முன்னிற்கமாட்டாமையாலே), நேர்சரிந்தான் - முதுகிட்டுப்போனான்; கண்டீர் - கண்டிகோளே! கோழி - மயில். கண்டீரென்று - ப்ரஸித்தியைச் சொல்லுகிறது.

இ —எட்டாம்பாட்டில், வாணவிஜயத்தை அநுஸந்திக்கிறார். [நேர்சரிந்தான்] - தோற்றத்திலே கெட்டுப்போனான் என்னுதல், முதுகுகாட்டிப் பிழைத்துப் போனான் என்னுதல். [கொடிக்கோழிகொண்டான்] - மயிலைத்வஜமாக உடையவன்; இளமறியான தேவஸேநாபதியாகையாலே ஸுப்ரஹ்மண்யன் தூசியிலே கெட்டுப் போனான் என்கை. இவன் கெட்டுப்போனபின்பு, ஜ்வலியாநின்றிருந்துள்ள அக்நிவந்து தோற்றி, கெட்டோடினான். நாற்பத்தொன்பது அக்நியும் கெட்டோடினபின்பு, த்ரிநேத்ரனான ருத்ரன் முதுகிட்டான். "மகன் கொடியாலே அகப்பட்டான்" என்று கொடியை மறைத்தவிடத்திலும், கண்ணை மறைக்க வொண்ணாமையாலே அகப்பட்டுக் கெட்டோடிப்போனான். தேவதாந்தரங்களை ரக்ஷகமாகப் பற்றினாரை, அவர்களெதிரி

கையிலே காட்டிக்கொடுத்துத் தந்தாமைக்கொண்டு தப்பிப்போவர்களென்கை. [அப்பன்] - நிருபாதிகரக்ஷகன். [நேர்சரிவாணன்] - ரக்ஷகரானார்அளவு இதுவானால், ரக்ஷ்யபூதனானவனுக்கு முதுகுகாட்டிப்பிழைக்குப் போமதொழிய வேறுபோக்கடி இல்லையிறே. [திண்டோள்] - "ஆநநம்ஸ ஹஸ்ரணோவிஜாநு நவிபைஹதி" என்றிருக்குமாபோலே, தேவதாந்தரங்களைப்பற்றித் தோள்வலிகொண்டாடி இருந்தபடி. ருத்ரன் வரபலத்தாலே திண்ணிதானதோள். [திண்டோள்கொண்டவன்றே] - உஷை பித்ருஹீனையாகாமைக்குத் தலையறாதே, தோளைத்துணித்துவிட்டான். கீழ் - அஸுரர்களைத் தேவர்களுக்காக மார்விலே அம்பேற்று ஜயித்தபடிசொல்லிற்று; அவர்களுக்கு அபாச்ரயமாய்வந்த தேவஜாதியையும் ஜயித்தபடி சொல்லிற்று - இப்பாட்டில்.

ஈடு.—எட்டாம்பாட்டு. வாணவிஜய வ்ருத்தாந்தத்தை அருளிச்செய்கிறார்.

[நேர்சரிந்தான் கொடிக்கோழிகொண்டான்] - மயிலை த்வஜமாகவுடையனாய் தேவஸேநாபதியாய் இளமறியாய்க் கூசித்தலையிலே நிற்கிற சுப்ரஹ்மண்யன், தோற்றரவிலே கெட்டான். [பின்னுமித்யாதி]-அவ்வளவிலே நாற்பத்தோன்பது அக்நிகளும் பெரிய கிளர்த்தியோடே எரிந்து தோற்றிற்று; அவையுமெல்லாம் பின்னிட்டன. [பின்னுமித்யாதி]-"மகன் கொடிகட்டிக்கொண்டுசென்றுஇளிம்புபட்டான்"என்று தன்கொடியைப் போகட்டு வந்து தோற்றினஅநந்தரத்திலே, கண்ணைப்புதைத்துக் கெட்டோடத்தொடங்கினான். அவன் மறைத்துக்கொண்டுபோக, இவர், முக்கண்மூர்த்தி கண்டீர் என்று - கண்ணைக்காட்டிக் கொடுக்கிறார். எல்லாம் செய்தாலும் உடம்பில் அடையாளத்தை மறைக்கப்போகாதிறே. "வாணனீரைஞ்ஞூறு தோள்களைத் துணித்தநாளந்தவந்தவாகுலம்" என்றுபாசுரமிட்டுச் சொல்லவொண்ணாத வ்யாகுலமிறேயது. அப்பன் - நிருபாதிகரக்ஷகன் [நேர்சரிவாணன்]- ப்ரதாநனான வாணன் தான்வாராத்தோற்றினான்; அவனும் பின்னிட்டோடத்தொடங்கினானென்னுதல்;நின்றவிடத்திலேநின்று முதுகுகாட்டினானென்னுதல். கையிலாயுதம் போகட்

எட்டாம்பாட்டு - நேர் இத்யாதி. "வாணன் திண்டோள்கொண்டவன்றே" என்றத்தைக் கடாக்ஷித்தவதாரிகை - வாணவிஜய இத்யாதி.

"கொடிக்கோழிகொண்டான்" என்றதுக்கர்த்தம் - மயிலை இத்யாதி. கோழி - மயில். இளமறியாய்-இளங்குட்டியாய்.மறி-குட்டி. இளமறியென்று - குதிரைக்குட்டிக்கும்பேர். "நேர்சரிந்தான்" என்றதுக்கர்த்தம் - தோற்றரவிலேகெட்டானென்று. "நேர்சரிந்தான்" என்றதுக்கு - "எதிர்நில்லாமைசாய்ந்துபோனான்" என்று உரையில்ஸப்தார்த்தம். "பின்னும்" என்றது - அதுக்கு மேலேயென்றபடி. இப்படி மேலுமர்த்தங்கண்டுகொள்வது. "அனலோன்" என்றது - ஜாத்யேகவசநமென்று விவக்ஷித்தர்த்தம் - அவ்வளவிலேஇத்யாதி. சுப்ரஹ்மண்யனுக்குக் கொடியைச் சொல்லி, இவனுக்குக் கண்ணைச்சொன்னதுக்குபாவம்-மகன்இத்யாதி. இளிம்புபட்டான்- எளிமைப்பட்டான். இளிம்பு - எளிமையும், அசாதுர்யமும். "கண்டீர்" என்றதுக்குபாவம் - அவன் மறைத்துஇத்யாதி. அவன் மறைத்துக்கொண்டுபோனால் இவர்க்குத்தெரியுமோ? என்ன - எல்லாம் செய்தாலும்இத்யாதி. எல்லாம்செய்தாலும் - கொடிமுதலானவற்றை மறைத்தாலுமென்றபடி. அப்படி கண்ணைப் புதைத்துக்கொண்டு ஓடும்படியான ஆபத்துண்டோ? என்ன - வாணன்இத்யாதி. பாணனுடைய ஆயிரந்தோள்களையுங்கழித்தவன்று, ருத்ரன்கெட்டுப்போன பாரவஸ்யம், க்ருஷ்ணனுடைய முகம்பெறுகைக்காக ஸ்தோத்ரம்பண்ணினபாரவஸ்யம்முதலான அந்த அந்த வ்யாகுலமென்றபடி. திருச்சந்தவிருத்தம் எழுபதாம்பாட்டு, "குந்தமோடு" இத்யாதி. "நேர்" என்று - ப்ரதாநமாய், 'ப்ரதாநனானவாணன்' என்றபடி. வாரா - வந்தென்றபடி. சரிகை - தாழ்ந்துபோகையென்று விவக்ஷித்தர்த்தம் - அவனும்பின்னிட்டுஇத்யாதி. சரிகை - சைதில்யமாகவிவக்ஷித்து, தத்கார்யமான கமந ராஹித்யமாக அர்த்தாந்தரம் - நின்றவிடத்திலேநின்று முதுகுகாட்டினான் என்னுதல்என்று,

டாரையும், மயிர் விரித்தாரையும் சொல்லக்கடவதல்லவிறே. [திண்டோள்கொண்டவன்றே] - தன்னோடொக்க ஆறல்பீறலாயிருப்பதொரு தேவதையைப்பற்றி, அரணுக்குள்ளே யிருப்பாரைப்போலே திண்ணியனாயிருந்தானாயிற்று. புருஷோத்தமஸமாச்ரயணம்பண்ணி யிருப்பாரைப்போலே, காபாலிகந்தரைப்பற்றி நிர்ப்பரனாயிருந்தான். ஸர்வேச்வரனைப்பற்றி ''நபிபேதி குதச்சந'' (ந பிபேதிகுதச்சந)என்றிருப்பாரை ஹாவித்தான். [திண்டோள்கொண்ட] - ''உஷை பித்ரு ஹீநையாகவொண்ணாது'' என்று கரத்தைக் கழித்துவிட்டான். ''கரபாதையிறேயிவனைக்கண்டார் காலிலெல்லாம் விழப்பண்ணிற்று'' என்று அவனுக்குள்ள கரத்தைக்கழித்து, இறையிலியாக்கிவிட்டான். ''யௌதத்பூஜாகரௌகரௌ''(யௌதத்பூஜாகரௌகரௌ)என்றும், ''விசித்ராதேஹஸம்பத்திரீச்வராயநிவேதிதும்'' (விசித்ராதேஹஸம்பத்திரீச்வராயநிவேதிதும்) என்றும் விதித்துக்கிடக்கச் செய்தேயும், ஆயிரங்கையையுங் கொண்டு அப்ராப்தவிஷயத்திலே கார்யங் கொள்ளுகையாலே அவற்றையே கழித்துவிட்டான். அத்தேவதை தானேவந்து, ''வரந்தந்தநீயே அத்தைக்கழிக்கவோ? நீயிவனைக்கொல்லில்என்காலில்குனிவாரில்லைஇனி'' என்று பற்காட்டுகையாலே விட்டான். ''க்ருஷ்ண க்ருஷ்ண மஹாபாஹோ ஜாநே த்வாம் புருஷோத்தமம்''(க்ருஷ்ணக்ருஷ்ணமஹாபாஹோஜாநேத்வாம்புருஷோத்தமம்)-தேவரைஉள்ளபடி யறியாதே அம்பை விட்டுக்கொண்டுநின்ற நிலையைக் கண்டு ''அவ்வளவோ!'' என்றிருந்தேன்; ''கழுத்திலேகயிறிட்டபின்புகாண் நான்இன்னதென்று அறிந்தேன்'' என்பாரைப்போலே. இத்தால் சொல்லிற்றாயிற்று - ஈச்வரனையொழிந்தாரடங்கலும், தாங்களுள

அன்றிக்கே, சரிகை - முறிந்துபோகைக்கும், முதுகுகாட்டுகைக்கும் வாசகமாக அர்த்தத்வயம் அருளிச்செய்கிறார் - அவனும் இத்யாதிவாக்யத்வயத்தாலே. தலையையறுமைக்கு மூன்றுஹேது. மூன்றினஹேது - கையிலாயுதம்இத்யாதி. முதுகுகாட்டினபோதே ஆயுதம் பொகட்டமை வித்தமென்றபடி. திண்மையேதென்ன, மநோதார்ட்யமாக அர்த்தம் - தன்னோடொக்கஇத்யாதி. ஆறல்பீறலாய் - அநுபயுக்தமாய், கார்யாக்ஷமமாயென்றபடி. பிக்ஷுகனுமாய் கங்காளியுமாயிருக்கையாலே 'ஆறல்பீறல்' என்கிறார். விவரணம் - புருஷோத்தமஇத்யாதி- காபாலிகந்தரென்றது - சாடு. பிக்ஷுகராய் கங்காளிகளாயிருப்பாரையென்று சாடுவுக்கர்த்தம்; கபாலத்தையுடைய ருத்ரன்; கந்தன். கந்தத்திலேபிறந்த ப்ரஹ்மாவென்று ஸ்வஹாவார்த்தம். கீழ்வாக்கிய விவரணம் - ஸர்வேச்வரனைஇத்யாதி. தலையையறுததுக்கு த்வீதீயஹேது - உஷைஇத்யாதி. சாடு - கரபாதைஇத்யாதி. கரம் - கையும், கப்பமும். இறையிலியாக்கி - இறையிறுப்பில்லாதவனாக்கியென்றும், வேறுஸ்வாமியில்லாதவனாக்கியென்றும் அர்த்தத்வயம். அவயவாந்தரங்களிருக்க கையைக்கழிப்பானென்? என்ன - யௌதத்பூஜா இத்யாதி. ''ஸாஜிஹ்வாயாஹரிம்ஸ்தௌதி தச்சித்தம் யத்ததர்பிதம் தாவேவ கேவலௌ ச்லாக்யௌ யௌதத்பூஜாகரௌகரௌ'' ''விசித்ராதேஹஸம்பத்திரீச்வராயநிவேதிதும் । பூர்வமேவ க்ருதா ப்ரஹ்மந்ஹஸ்தபாதாதிஸம்யுதா'' இத்யாதி ஸ்ரீவிஷ்ணுதர்மே. தலையையறுததுக்கு த்ருதீயஹேது - அத்தேவதைஇத்யாதி. அப்படி பல்காட்டினதென்? என்ன, ப்ரமாணம் - க்ருஷ்ணஇத்யாதி. பஞ்சமேம்பே, பூர்வமேவ லிகித மஸக்ருத். ''மஹாபாஹோ மஹாதேவாம் புருஷோத்தமம் ஜாநே'' என்று- ப்ராஹ்மணபலங்கண்டபின்புஉன்னை ''ஈச்வரன்'' என்றறிந்தேனென்கிறவனுடைய வ்யதிரேகவித்தமான ஹாவத்தையருளிச்செய்கிறார் - தேவரைஇத்யாதி. அவ்வளவோவென்றது - இதரஸஜாதீயனோவென்றபடி. இன்னதென்றறிந்தேன் என்றது - பூர்ணனென்றறிந்தேனென்றபடி. இவ்விடத்தில் ஹாவித்தவர்த்தமேதென்ன- இத்தால்இத்யாதி. ' அப்பன்நேர்சரிவாணன் திண்டோள்கொண்டவன்று-நேர்சரிந்தான்'என்றுதொடங்கி,'மூர்த்திகண்டீர்' இத்யந்வயம்.

ரானபோது ரக்ஷகராகவபிமானித்து,ஆபத்துவந்தவாறே இவர்களைக்காட்டிக்கொடுத்துத் தந்தாமைக்கொண்டு தப்புவர்கள் ; ஸர்வாவஸ்த்தையிலும் தன்னையழியமாறியாயினும் ஆஶ்ரித ரக்ஷணம் பண்ணுவான் ஸர்வேஶ்வரனாகையாலே ஆஶ்ரயணீயன் இவனே ; அல்லாதார் ஆஶ்ரயணீயரல்ல ரென்னுமிடம் சொல்லிற்று. (அ)

ஒன்பதாம் பாட்டு.

அன்றுமண்நீரெரிகால்விண்மலைமுதல்
அன்றுசுடர்இரண்டுபிறவும்பின்னும்
அன்றுமழையுயிர்தேவும்மற்றும்அப்பன்
அன்றுமுதல்உலகஞ்செய்ததுமே.

ஆ —(அன்று) - ஸங்கல்ப லேஶத்தாலே நிஹில ஜகத் ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களைப்பண்ணியருளுகிற ஸர்வேஶ்வரனுக்கு அத்யல்பஹ்ருலப்ரதிகூலநிரஸநம் ஒரு பொருளோ? என்கிறார்.

ஒ.—ஒன்பதாம்பாட்டில், பாணனை ஜயித்தவன்றுதொடங்கி ஜகத் உண்டாயிற்று என்கிறார். ஆதிஸ்ருஷ்டியாகவுமாம்.

[அன்றுமண்ணீர் எரிகால் விண்மலைமுதல்] - பூதபஞ்சகங்களையும் அன்று உண்டாக்கினான். [அன்று சுடரிரண்டு பிறவும்பின்னும்] - சந்த்ரஸூர்யர்களும் மற்றுமுள்ளனவும் உண்டாயிற்று. [அன்று மழையுயிர்தேவும்மற்றும்] - வர்ஷத்தையும் அத்தாலே ஜீவிக்கக்கடவதான ப்ராணிகளையும் மற்றுமுண்டான தேவதைகளையும் மற்றும உண்டாக்கினான். [அப்பனன்றுமுதலுலகஞ்செய்ததுமே] - அப்பன் அன்று தொடங்கி இந்தலோகத்தையும் உண்டாக்கிற்று.

ப.—அநந்தரம், ஜகத்ஸ்ருஷ்டிப்ரகாரத்தை அருளிச்செய்கிறார்.

அப்பன் - ஜகதுத்பாதகனான மஹோபகாரகன், முதல் - ப்ரதமத்திலே, உலகம் - லோகத்தை, செய்ததும் - உண்டாக்கிற்றும், அன்று - ஆத்யமான ஸ்ருஷ்டிகாலத்திலே, மண்நீரெரிகால்விண் - அதுக்கு ஹேதுபூதமான ப்ருதிவ்யாதி பூதபஞ்சகங்களையும், மலைமுதல் - பௌதிகங்களில் பர்வதாதி பதார்த்தங்களையும், செய்ததும் - செய்ததும், அன்று - அக்காலத்திலே, சுடர் - சந்த்ராதித்யர்கள், இரண்டு - இருவரையும், பிறவும் - அல்லாத தேஜஃ பதார்த்தங்களையும், செய்ததும் - செய்ததும், அன்று - அக்காலத்திலே, பின்னும் - அதுக்குமேலே, மழை - வர்ஷத்தையும், உயிர் - வர்ஷோபஜீவிகளான ப்ராணிகளையும், தேவும் - வர்ஷப்ரதரான தேவர்களையும், மற்றும் - மற்றும் ப்ராணிபதார்த்தங்களையும், செய்ததும் - உண்டாக்கிற்றும், அன்று - அக்காலத்திலே. க்ரமஸ்ருஷ்டியன்று, யுகபத்ஸ்ருஷ்டி யென்று கருத்து.

'நேர்சரிவாணன்' நேர் - ப்ரதானனாய், சரி - பின்னிட்டோடின, வாணனுடைய என்னுதல்; முதுகுகாட்டின வாணனுடையவென்னுதல்என்றபடி ஸப்தார்த்தம். "ருத்ராதிகளை முன்னிட்டொதுங்கின பாணனுடைய" என்று உரையில் ஸப்தார்த்தம். கொண்டவன்று - ஸ்வாதீநமாக்கிக்கொண்டஅன்று. துணித்தவன்றுஎன்றது ஃபலிதார்த்தம். "தோள்களைத்துணித்துவென்றிகொண்டவன்று" என்றஉரையில் ஸப்தார்த்தம். (அ)

இ.—ஒன்பதாம்பாட்டில், வாணனைஜயித்த அன்றுதொடங்கி, ஜகத்துண்டாயிற்று என்கிறார். ஆதிஸ்ருஷ்டியைச் சொல்லிற்றாகவுமாம். [அன்று மண்நீரெரிகால் விண்மலைமுதல்]-பூதபஞ்சகங்களென்ன, பூமிக்கு ஆதாரமான மலையென்ன, இவை தொடக்கமாக. [அன்றுசுடர்இரண்டு]-சந்த்ரஸூர்யர்களுமுண்டாயிற்றுஅன்று. [பிறவும்]-மற்றுமுண்டான நக்ஷத்ரக்ரஹாதி தேஜஃபதார்த்தங்களும். [அன்று மழையுயிர்தேவும் மற்றும்] - மேகத்தையும், வர்ஷஜலத்தாலே ஜீவிக்கக்கடவப்ராணிகளையும், வர்ஷத்துக்கு உத்பாதகரான தேவர்களையும், மற்றும் அநந்தமான பதார்த்தங்களையும் அன்று உண்டாக்கினான். [அப்பன்] - ஸர்வோத்பாதகனானவன், அன்றுமுதல் ஜகத்தை உண்டாக்கிற்று. வாணனைத்தோற்பித்த அன்றுமுதல் என்னுதல், ரூபநாமங்களை இழந்து "ஸதேவ" என்கிறதசையிலே, "பஹுஸ்யாம்" என்று ஸங்கல்பித்த அன்றுமுதல் என்றுமாம்.

ஈடு.—ஒன்பதாம்பாட்டு. ஸ்ருஷ்டியும் விஸஜாதீயமாகையாலே, அத்தையும் விஜயமாக அநுஸந்திக்கிறாராகவுமாம். [அப்பன் - முதலுலகம் செய்ததும் - அன்று] - மஹோபகாரகன் ப்ரதமத்திலே லோகத்தை யுண்டாக்கிற்றும் ஆத்யமான ஸ்ருஷ்டிகாலத்திலே. அதுக்கு ஹேதுவாக "மண்நீரித்யாதி"; அன்றிக்கே, கீழும் மேலும் க்ருஷ்ண வ்ருத்தாந்தமாகையாலே, வாணனை உமித்த அன்றுகிடீர் ஜகத்தை யுண்டாக்கிற்றென்று அத்தையே பேசுகிறாராகவுமாம்; பயிர்செய்கையேயன்றே வேண்டுவது: பயிரழியாமல் நோக்கினவன்றிறே பயிர்செய்ததாவது.

[அன்றுஇத்யாதி]- காரணங்களோடுகார்யங்களோடு வாசியற வுண்டாக்கினபடி. [சுடரிரண்டு] - சந்த்ராதித்யர்களை யுண்டாக்கினபடி. [பிறவும்] - மற்றுமுண்டான நக்ஷத்ராதி தேஜஃபதார்த்தங்களும், அதுக்குமேலே வர்ஷிக்கக்கடவதான மேகம்; (மழை - மேகம்.) வர்ஷத்தாலே ஜீவிக்கக்கடவ மற்றை ஆத்மாக்கள், வர்ஷத்துக்குஉத்பாதகரான தேவர்கள், மற்றுமுண்டான திர்யக்ஸ்த்தாவராதிகள். [அப்பன்] - ஸர்வோத்பாதகனானவன். [அன்றுமுதலுலகம்செய்ததுமே] - தனித்தனியே சொல்லவேணுமோ? வாணனை உமித்துஈரரசறுத்தவன்றுகிடீர்இத்தையெல்லாம் ஸ்ருஷ்டித்தது என்கிறார் என்னுதல். (நாமரூபங்களையிழந்து "ஸதேவ" (ஸதேவ) என்கிற தசையிலே "பஹுஸ்யாம்" (பஹுஸ்யாம்) என்று ஸங்கல்பித்த அன்றுமுதலென்றுமாம்.) (கூ)

ஒன்பதாம்பாட்டு - அன்றுஇத்யாதி. இப்பாட்டிலே - ஸ்ருஷ்டியை யருளிச்செய்ததுக்கு இரண்டுபாவம் - ஸ்ருஷ்டியும்இத்யாதிவாக்யத்வயத்தாலே. விஸஜாதீயமாகையாலே என்றது - காட்டாராற் செய்யப்படுமதல்லாமையாலேஎன்றபடி. முந்தின அவதாரிகை - 'பத்தும்பத்தாக' என்ற ப்ரவேஶவாக்யத்துக்குச்சேரும். வாணனை தமித்தவன்றோ ஜகத்உண்டாயிற்று? என்ன-பயிர் செய்கைஇத்யாதி. பூதபஞ்சகங்கள் காரணமாய், மலைமுதலானவை கார்யமாகையாலே யருளிச்செய்கிறார் - காரணங்களோடுஇத்யாதி. ப்ருதிவ்யாதி ஸ்ருஷ்டியைச் சொன்னவநந்தரம் லோகஸ்ருஷ்டியைச் சொன்னதுக்குபாவம் - தனித்தனியேஇத்யாதி. ஈரரசு - த்வைராஜ்யம். மண்நீரெரிகால் விண்மலைமுதல் - அன்றுண்டாயிற்று; இரண்டுசுடரும் பிறவும் - அன்றுண்டாயிற்று; பின்னும் - அதுக்குமேலே, மழையுயிர்தேவும்மற்றும் - அன்றுண்டாயிற்று; அப்பன் - உலகம் செய்ததும் அன்று முதல்,என்றந்வயம், ஸ்ருஷ்டிபரமானபோது, அப்பன், முதல் - ப்ரதமத்திலே, உலகம்செய்ததும், அன்று - ஆத்யமான ஸ்ருஷ்டிகாலத்திலே; மண்நீரெரிகால் விண்மலைமுதல் - செய்ததும், அன்று - அக்காலத்திலே ; சுடரிரண்டும் பிறவும் செய்ததும் அன்று; பின்னும் - மழையுயிர்தேவும் மற்றும் செய்ததும் அன்று என்றந்வயம். "செய்ததும்" என்றத்தை - மூன்றுபாதத்திலுங் கூட்டுவது. பிறவும் - மற்றுமுண்டானவையுமென்றபடி. (கூ)

பத்தாம் பாட்டு.

மேய்நிரைகீழ்புகமாபுரளச்சுனை
வாய்நிறைநீர்பிளிறிச்சோரியஇன
ஆநிரைபாடியங்கேயொடுங்க அப்பன்
தீமழைகாத்துக் குன்றமெடுத்தானே.

ஆ.—(மேய்நிரை.) - பசுக்களுக்கும் இடையர்க்கும், கீழேபுக்கு நிர்ப்பயமாக வர்த்திக்கும்படியாகவும்; மஹீயரோ பரிவர்த்தமான வநசரயூதங்கள் கீழே புரளும்படியாகவும், பூர்ணஸரஸ்ஸுக்கள் அதோமுகமாய் ஸகோஷமாய் ப்ரவஹிக்கும்படியாகவும் ஸ்ரீகோவர்த்தநத்தை எடுத்தருளி, பாதகமான வர்ஷத்தைத்தடுத்தருளி, இந்த்ரனை ஜயித்தருளினன் என்னப்பனென்கிறார்.

ஒ.—பத்தாம்பாட்டில், கோவர்த்தநோத்தரணம் பண்ணிச் செய்தருளின அநுபவிக்கிறார்.

[மேய்நிரையென்று தொடங்கி] - மேய்கிற நிரை வாயிற்புல்லோடு கீழேபுகவும், அங்குண்டான ஆனைதொடக்கமான திர்யக்குக்கள் கீழேபுரண்டுவிழவும் சுனைகள் வாயளவும் நிறைந்த நீரை ஓசைப்படச் சொரியவும் அதிஸம்ருத்தமான திருவாய்ப்பாடி அங்கே ஒடுங்கவும். மேய்நிரை கீழேபுகவென்று - மலையை எடுத்த கடுப்பைச்சொல்லிற்று. [அப்பனென்று தொடங்கி] - அப்பன் மலையையெடுத்து நாசகரமான மழையைக் காத்தான். எல்லாப்பாட்டிலும், அப்பனென்று - எம்பெருமானை உகந்து கொண்டாடினர்.

ப.—அநந்தரம், கோவர்த்தநோத்தரணத்தை அநுபவிக்கிறார்.

மேய் - மேய்கிற, நிரை - பசுக்களானவைகள், கீழ் - கீழே, புக - ஒதுங்கும்படியாகவும், (கீழ்மேலாகவெடுத்தபடியாலே), மா - பர்வதவர்த்திகளானமஜாதிம்ருகங்கள், புரள - புரண்டுவிழும்படியாகவும், சுனை - சுனைகளினுடைய, வாய் - வாயளவும், நிறை - நிறைந்த, நீர் - நீரானது, பிளிறி - பெரியகோஷத்தோடு, சொரிய - சொரியும்படியாகவும், இனம் - இனமான, † ஆய்நிரை - ஆயரையும் பசுத்திரளையுமுடைய, பாடி - திருவாய்ப்பாடியும், அங்கே - , ஒடுங்க - ஒடுங்கும்படியாகவும், அப்பன் - ஆபந்நிவாரகனான க்ருஷ்ணனானவன், தீ - விநாசஹேதுவான, மழை - மழையை, காத்து - , குன்றம் - கோவர்த்தநமாகிற பர்வதத்தை, எடுத்தான்—.

இ.—பத்தாம்பாட்டில், கோவர்த்தநோத்தரண விஜயத்தை அநுபவிக்கிறார். [மேய்நிரை கீழ்புக] - நினைவின்றியே வர்ஷிக்கப்புக்கவாறே மலையை எடுத்தபோது, மேய்கிறபசுக்கள் வாயிற்புல்லோடே கீழேபுக்கு ஒதுங்கவும். [மாபுரள] - கீழதுமேலதாக மலையைப் பிடிக்கையாலே, மலையில் ஆனைதொடக்கமான ம்ருகங்கள் கீழேபுரண்டுவிழவும். [சுனைவாய் நிறைநீர்பிளிறிச்சொரிய] - சுனைவாயளவும் நிறைந்த நீர் ஓசைப்பட்டுச் சொரியவும். [இனவாநிரைபாடி] - அதிஸம்ருத்தமான திருவாய்ப்பாடி. "கற்றுக்கறவைக்கணங்கள்" என்கிறபடியே ஒருதிறத்திற் பசுவொழுக்கையுமுடைய ஊர். [அங்கே ஒடுங்க] - பஞ்சலக்ஷம் குடியிலுள்ளாரும் மலையின்கீழே ஒதுங்கவும். [அப்

† 'ஆய்நிரை' என்று உரையின் பாடம்.

பன்] - ஆபத்ஸகனுன உபகாரகன். [தீமழைகாத்துக் குன்றமெடுத்தானே] - மலையை எடுத்து, நாஸகரமான மழையைக்காத்தான். பசுக்கள்பக்கலிலும் பெண்கள் பக்கலிலும் க்ருஷ்ணன் க்ருபை பண்ணுகைக்குஹேது - அஜ்ஞதையும் பாரதந்த்ரியமும்.

ர.—பத்தாம்பாட்டு. கோவர்த்தநோத்தரணம்பண்ணி ரக்ஷித்த செயலை

[மேய்நிரைகீழ்புக] - மேய்கிறபசுக்கள் புல்லும்உமிழாதே அசையிட்டுக்கொண்டு கீழேபுக்ர. [மாபுரள] மலையையெடுத்து மறிக்கையாலே அங்குவர்த்திக்கிற ம்ருகங்க ளெல்லாம் புரண்டுவிழ. மா-ம்ருகம். [சுனைவாய்நிறைநீர்பிளிறிச்சோரிய] - சுனையிடத்து நிறைந்துநிற்கிற நீரானது, நிறைகுடத்தைக் கவிழப்பிடித்தாற்போலே சப்தித்துக்கொண்டு சோரிய; ஒருமழைகாக்கப்புக்கு, அங்கேயநேகம் மழையையுண்டாக்கினபடி. [இனவா நிரைபாடியங்கே யொடுங்க]-பசுத்திரளும் திருவாய்ப்பாடியும்அங்கேயொடுங்க. (ஒருதரத்தில் பசுவோமுங்கையுடையவூர்.) [அப்பன்] - ஆபத்ஸகனுனவுபகாரகன். [தீமழைகாத்து] - விநாசத்தைவிளைக்கவந்தமழையாகையாலே தீமழையென்கிறார். இடையரும் பசுக்களு மன்றிக்கே அன்று தாமாகாதே நோவுபட்டார். [குன்றமெடுத்தானே] - மலையை எடுத் துக்காத்த மஹோபகாரக னென்கிறார். "பசிக்ராஹம் ஆறுந்தனையும் வர்ஷித்துப்போவா னுக்கு" என்று ஏழுநாளிறே மலையைதரித்துக் கொடுநின்று நோக்கிற்று. ராவணுதிகளாகி லிறே யழியச்செய்யலாவது? அநுகூலனுக்குவந்த ப்ராதிகூல்யமாகையாலே செய்யலாவது இத்தனையிறே. இத்தால்சொல்லிற்றுயிற்று - ஆஶ்ரிதன் தப்பினுலும் தான் பொறுத்து க்ஷிக்கு மென்றபடி. (கo)

பதினோராம் பாட்டு.

குன்றமெடுத்தபிரானடியாரொடும்
ஒன்றிநின்றசடகோபனுரைசெயல்
நன்றிபுனைந்தவோராயிரத்துள் இவை
வென்றிதரும்பத்தும்மேவிக்கற்பார்க்கே.

பத்தாம்பாட்டு — மேய்நிரை இத்யாதி. "தீமழைகாத்து" இதயாதியைக்கடாக்ஷித்தவ தாரிகை - கோவர்த்தந இத்யாதி.

வர்த்தமாநார்த்தம் - மேய்கிற இத்யாதி. "மா" என்று - நாற்காலுடைய ஜந்து. மறிக்கை - கவிழ்த்துப்பிடிக்கை. பிளிறி - சப்தித்து. ரஸோக்தி - ஒருமழை இத்யாதி. "மேய்நிரை" என்று - காட்டில் வர்த்திக்கும் பசுக்களையும், "இனவாநிரை" என்று - ஊரில்வர்த்திக்கும் பசுக்களையும் சொல் லுகையாலே, புநருக்தியில்லை. மழை நல்லதன்றோ? "தீமழை" என்பானென்? என்ன - விநாசத்தை இத்யாதி. "காத்து" என்று - ஸாமாந்யமாகச் சொன்னதுக்குபாவம் - இடையரும் இத்யாதி. "அப் பன்" என்றதுக்கர்த்தம் - மலையை இத்யாதி. மலையையெடுக்கிறதென்? அவனை நிரஸிக்கவொண் ணுதோ? என்ன - பசிக்ராஹம் இத்யாதி வாக்யத்ரயம். பசிக்ராஹம் - பசியினுலுண்டான கோபம். வர்ஷித்துப்போவானுக்கு - வர்ஷித்துப்போகட்டு. இத்தால் பலிதவர்த்தம் - இத்தால் இத்யாதி. மேய்நிரை கீழ்புகும்படியாகவும் மாபுரளும்படியாகவும் இத்யாரப்ய, ஒடுங்கும்படியாகவும், அப்பன் தீமழைகாத்துக் குன்றமெடுத்தானே இத்யந்வயம். (கo)

ஆ.—(குன்றமெடுத்த.) - ஆழ்வார் தாமும் கோவர்த்தநத்தின்கீழே திருவாயரோடே கூடிநின்று கோவர்த்தநோத்தரண பூர்வக விஜயரூப ஸகல திவ்யசேஷ்டிதங்களையும் ஏத்தின இத்திருவாய்மொழியை ஸாதரமாகக்கற்பார்க்கு, இத்திருவாய்மொழியில் ஓரோர்பாட்டே விஜயத்தைக் கொடுக்குமென்கிறார்.

ஒ.—நிகமத்தில், எம்பெருமானுடைய விஜயங்களைத்தொடுத்த இத்திருவாய்மொழியை ஸஹ்ருதயமாகக் கற்பார்க்கு இதுதானே விஜயங்களைக் கொடுக்குமென்

ப.—அநந்தரம், இத்திருவாய்மொழி கற்றார்க்கு ஸர்வப்ரகார விஜயத்தைக் கொடுக்குமென்று ஃபலத்தை யருளிச்செய்கிறார்.

குன்றமெடுத்த - கோவர்த்தநோத்தரணம்பண்ணின, பிரான் - மஹோபகாரகனான க்ருஷ்ணனுக்கு, அடியாரொடும் - அஸாதாரண சேஷபூதரான பாகவதர்களோடே, ஒன்றி - ஏகீபவித்து, நின்ற - நின்ற ஸ்வரூபத்தை யுடையராய்க்கொண்டு, சடகோபன் - ஆழ்வாருடைய, உரைசெயல் - வாசிகவ்ருத்திரூபமாய், ஓர் - அத்விதீயமான, ஆயிரத்துள் - ஆயிரத்துள்ளே, நன்றி - ஸர்வேஶ்வரனுடைய விஜயாபதாநங்களை ப்ரதிபாதிக்கையாகிற நன்மையை, புனைந்த - உடைய, இவைபத்தும் - இப்பத்தும், மேவி - அர்த்தஸஹிதமாக, கற்பார்க்கு - அப்யஸிப்பார்க்கு, வென்றி - ஸர்வப்ரகாரவிஜயத்தை, தரும் - கொடுக்கும். இது, கலிவிருத்தம்.

இ.—நிகமத்தில், ஸர்வேஶ்வர விஜயங்களைத்தொடுத்த இத்திருவாய்மொழியை ஸஹ்ருதயமாகக்கற்பார்க்கு, இதுதானே விஜயங்களைக்கொடுக்கும் என்கிறார்.

[குன்றமெடுத்தபிரான் இத்யாதி]-கோவர்த்தநோத்தரணம்பண்ணின உபகாரகனான க்ருஷ்ணன் திருவடிகளையே தஞ்சமாக நினைத்திருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்களிலே தம்மையும் அந்யதமராக நினைத்திருந்த ஆழ்வார் அருளிச்செய்த இது. மலையை எடுத்த அன்று மலைக்கீழே ஒதுங்கினவர்களைப்போலே, ஸம்ஸாரத்துக்கு அஞ்சி க்ருஷ்ணன் திருவடிகளிலே ஒதுங்குமவர்கள் வைஷ்ணவர்கள்; அச்செயலுக்குத் தோற்று அடிமைபுக்கவராயிற்று இவர். [நன்றி இத்யாதி] - ஸர்வேஶ்வரன்விஜயங்களைச் செறியத்தொடுத்த இவைபத்தும், ஆதரித்துக் கற்பார்க்கு இதிற்சொல்லுகிற விஜயத்தைக்கொடுக்கும். இச்சேதநனுக்கு விஜயமாவது - ஸர்வேஶ்வரவிஜயமிறே. அதுவேயிறே இவர்க்கு புருஷார்த்தமும். ஸம்ஸாரவிஜயத்தைக் கொடுக்கும் என்றுமாம். [நன்றிபுனைந்த] - ஸர்வேஶ்வர விஜயரூபமாய் ஆத்மாவுக்கு புருஷார்த்தமுமாயிருந்த இத்தைத்தொடுத்த.

ஈடு.—நிகமத்தில் - இத்திருவாய்மொழியை அப்யஸித்தவர்களுக்கு இது தானே விஜயத்தைக் கொடுக்குமென்கிறார்.

[குன்றமெடுத்தஇத்யாதி] - கோவர்த்தநோத்தரணம்பண்ணின நீர்மையிலும் அப்போதை யழகிலும் ஈடுபட்டிருக்குமவர்களோடே கூடிநின்று தாமும் ப்ரீதராய், ப்ரீதிக்

நிகமம்.—குன்றம் இத்யாதி. 'வென்றிதரும்பத்தும் மேவிக்கற்பார்க்கே", என்றத்தைக் கடாக்ஷித்து - அவதாரிகை.

"குன்றமெடுத்தபிரானடியார்" என்றதுக்குபாவம் - கோவர்த்தந இத்யாதி. "பிரான்" என்கையாலே - நீர்மையிலும் என்றது. அப்போதை யழகாவது - மலையை யெடுத்துக்கொண்டு த்ரிபங்கியாய் நின்றபோதை யழகு. "அடியார்" என்கையாலே - ஈடுபட்டிருக்குமவர்கள் என்கிறது.

துப் போக்குவீடாகச் சொன்ன பாசுரமாயிற்று. [நன்றிபுனைந்தவோராயிரம்] - ஸர்வேச்வரனுடைய பரத்வ ஸௌலப்யங்களை வகையிட்டுத் தொடுத்த ஆயிரம். நன்மையாவது - ஸம்ஸாரி சேதநனுக்கு, இவனே ஸர்வஸ்மாத்பரனென்றும், ஸர்வஸுலபனென்றும், ஸர்வ ஸமாச்ரயணீயனென்றும் சொல்லுகையிறே; அவையிறே - முதல்திருவாய்மொழிதொடங்கி அருளிச்செய்தது. எம்பெருமானுடைய விஜயங்களைத் தொடுத்துச்சொன்ன இப்பத்தும். [மேவிக்கற்பார்க்கு - வென்றிதரும்] - ஸாதரமாகக் கற்பார்யாவர் சிலர், அவர்களுக்கு விஜயத்தைப் பண்ணிக்கொடுக்கும். ஐச்வர்யார்த்திக்கு ஐச்வர்யவிரோதியைவென்று கொடுக்கும்; கேவலனுக்கு விரோதிநிவ்ருத்தியைப் பண்ணிக்கொடுக்கும்; பகவச்சரணார்த்திகளில், உபாஸகனுக்குஇந்த்ரியஜயாதிகளைப் பண்ணிக்கொடுக்கும்; ப்ரபந்நனுக்குக் கைங்கர்யவிரோதிகளை வென்றுகொடுக்கும். (கக)

*கூடி. நன்றி - நன்மை. உரைசெயல் - வாசகவ்ருத்திரூபமான. "நன்றிபுனைந்த" என்றதுக்கர்த்தம் - ஸர்வேச்வரனுடைய இத்யாதி. புனைந்த - தொடுத்த. "நன்றி" என்றால் - பரத்வாதிகளைக்காட்டுமோ? என்ன - நன்மையாவது இத்யாதி. அப்படிசொல்லிற்றோ? என்ன - அவையிறே இத்யாதி. "நன்றி" என்றத்தை - * ஆயிரத்துக்கு விசேஷணமாக்கிக் கீழருளிச்செய்து, "நன்றி" என்றவிஜயங்களை - இப்பத்துக்குவிசேஷணமாக்கி அர்த்தாந்தரம் - எம்பெருமானுடைய இத்யாதி. "வென்றிதரும்" என்று-ஸாமாந்யசப்தமாகையாலே. ஸகலபலப்ரதமென்கிறார் - ஐச்வர்யார்த்திக்கு இத்யாதி நாலுவாக்யத்தாலே. அடைவேயந்வயம். மேவி - ஸாதரமாக. வென்றி - ஜயம். (கக)*

த்ரவிடோபநிஷத் ஸங்கதி.— ஆத்வநாஹிதயோத்வஶாநாராமவேசாநநாசவேஷு சாஷத்தேந । ஆத்யாவதாநவிஜயாநதி ஶோஷணீயாந்வக்ஷயத் ஶம்ஜித்வநஸவவதாவயோ: ॥

த்ராவிடோபநிஷத்தாத்பர்யரத்நாவளி — (ஆழியெழ) விக்ராந்த்யா விஷ்வாநா த்ருதஜலதிமதநஸ்தாநிதே ஸேதுசயாத்யை: கல்பே காலாந்த க்ஷிதிபரஹரண: சத்ருராஜ்யஹராஸ: ஶ்ரீஸவக்ஷஸ்தலோ ரஸாஜயந வேதநாக்ஷோகவ்யஷ்டிஸ்ருஷ்ட்யாமோசநாக்ஷேத்ராஸ்பஜ்வதநவ்யுக்த்யா ஶ்ரீஶ ஶாரம்.

திருவாய்மொழி (
ஆழிவண்ணன்தன்விசயமானவை முற்றுங்காட்டி
வாழிதனுலென்றுபகிழ்ந்துநிற்க - வூழிலவை
ன்றுபோற்கண்டுதானுரைத்தமாறன்சொல்
பன்னுவரோநல்லதுகற்பார்.

ஆழ்வார் வடிகளே ஶரணம், எம்பெருமானார் திருவடிகளே ஶரணம், ஜீயர்திருவடிகளே ஶரணம்.

ஆ.—(கற்பாரிராமபிரானை) - ப்ரஸ்துத த்ரைலோக்யவிக்ரமணஅம்ருதமதநாதி விஜயரூப திவ்யசேஷ்டிதங்களுடைய பரோபகாரத்வ லக்ஷண குணத்வாகாரத்தை யநுபவிக்கிறார். அதவா, ப்ரஸ்துத தஶரதாத்மஜதிவ்யசேஷ்டிதங்களிலே திருவுள்ளந்தாழ்ந்து, மற்றும் ப்ரஸ்துத திவ்யசேஷ்டிதங்களையும் ‘ததீயம்’ என்னும் இவ்வாகாரத்தா லநுபவிக்கிறார்.

ஒ.—அஞ்சாந்திருவாய்மொழியில், எம்பெருமான் தமக்கு பலாதாநார்த்தமாகக் காட்டியருளின, பேசவும்நினைக்கவும்முடியாதே பெரும்பரப்பான விஜயப்ரகாரங்களை அநுஸந்தித்துத் தம்முடைய பலஹாநிபோய்ப்ரீத்த ஆழ்வார், ஆஶ்ரிதார்த்தமான இந்த விஜயங்களுக்குஅடியான அவனுடைய க்ருபாதிகுணங்களையும் ராமாதிதிவ்யாவதாரங்களையும் அநுஸந்தியாநின்றுகொண்டு அதிப்ரீதராய், கையிலேநிதியிருக்க அத்தை யறியாதே து:கப்படுவாரைப்போலே, இக்குணசேஷ்டிதாதிகளையொழிய வேறே சிலவற்றிலேப்ரீத்து அந்யபரராய்ச்செல்லுகிற ஜகத்தைக்கண்டு விஸ்மிதராகிறார். கீழில்திருவாய்மொழியிலே “மாறுநிரைத்திரைக்கும் சரங்கள்” என்று ப்ரஸ்துதமான ராமவ்ருத்தாந்தத்திலே மிகவும் ப்ரவணராய் அவனுடைய குணசேஷ்டிதாதிகளைமிகவும் அநுஸந்தித்த ஆழ்வார், இவனுடைய ஒரொருநீர்மையையுடைய மற்றைத்திருவவதாரங்களையும் இவனுடைய குணப்ரஸங்கத்தாலே அநுஸந்தித்து, இப்படியாலே இத்திருவாய்மொழியடைய ராமகுணவிஷயமென்றுமாம்.

ப.—அஞ்சாந்திருவாய்மொழியில், கீழ் - அநேகவித விஜயாபதாநங்களையுடையனான ஸர்வேஶ்வரனுடைய அதிஶயிதஶக்தியோகத்தை யநுஸந்தித்து, விரோதிநிரஸந ஸமர்த்தன்அவனேயென்றறுதியிட்டவர், “அவனையொழிய வேறுரக்ஷகரில்லை” என்னும்இவ்வர்த்தத்தை வெளியிடுகைக்காக; ஸ்வாபிமாநாந்தர்ப்பாவ மாத்ரத்தாலே அவனுடைய அதிஶயிதபுருஷார்த்த ப்ரதத்வத்தையும், அநிஷ்டநிவ்ருத்தி யுக்தமான ரக்ஷண ப்ரகாரத்தையும், ஶிஶுபாலமோக்ஷத்தையும், ஜகத்ஸ்ரஷ்ட்ருத்வத்தையும் ஸ்ரீவராஹவ்ருத்தாந்தத்தையும், ஆஶ்ரிதார்த்தமான அர்த்தித்வஸாமர்த்யத்தையும், மார்க்கண்டேய ரக்ஷணப்ரகாரத்தையும், ஆஶ்ரிதோபகாரகமான ஹிரண்யநிரஸநத்தையும், பாண்டவவிரோதிபஞ்சநத்தையும், ஸம்ஸாரநிவர்த்தகத்வத்தையுமநுஸந்தித்து, ஏவம்வித ஸ்வபாவனாய் அதிஶயிதஶீலப்ரகாசகமான அவதாரவைலக்ஷண்யத்தையுடைய ஸர்வேஶ்வரனையொழிய, அநிஷ்டநிவ்ருத்த்யர்த்தமாகவும் இஷ்டப்ராப்த்யர்த்தமாகவும் ஆஶ்ரயணீயர்வேறொருவரில்லை யென்னுமிடம் ஸர்வஸம்ப்ரதிபந்நமென்றருளிச்செய்கிறார்.

இ.—அஞ்சாந்திருவாய்மொழியில், கீழ் - இவர்க்கு ஓடின பலஹாநியெல்லாம் போம்படி தான்பண்ணின விஜயங்களைக்காட்டி அநுபவிப்பிக்க, அநுபவித்துப்ரீத்தார்; ஆஶ்ரிதார்த்தமான விஜயங்களுக்கடியான ஶீலாதிகுணங்களையும், அதடியாகவந்த ராமாதிதிவ்யாவதாரங்களையும் அநுஸந்தியாநின்றுகொண்டு ப்ரீதராய், “ஸம்ஸாரிகளில் இவன் வாசியறிந்து இவனுடைய குணாநுபவம் பண்ணுகிறாருண்டோ?” என்று பார்த்தவிடத்து, கையிலே நிதியிருக்க அத்தையறியாதே புறம்பே அந்யபரராய் து:கப்பட்

டுத்திரிவாரைப்போலே, இக்குணசேஷ்டிதாதிகளையொழிய வேறுசிலவற்றாலே புரிப் படுதே! என்று விஸ்மிதராய், அவதாரங்களையும், அவதரித்துப்பண்ணின விஜயங்களை யும், அதுக்கடியான ஶீலாதிகுணங்களையும் அநுஸந்தித்துப்பேசுகிறார். ஆழ்வான் பத் தும்பாட்டையும் ராமவிஷயமாக நிர்வஹித்துப்போரும்; ராமாவதாரத்தில் பக்ஷபாதத் தாலே, "'பேரெயில் சூழ்கடற்றென்னிலங்கை செற்றபிரான்' என்றும், 'மாறுநிரைத் திரைக்கும் சரங்கள்' என்றும் ப்ரஸ்துதமான ராமவ்ருத்தாந்தத்தை அநுஸந்தித்து, அவ்வவதாரத்தில் உண்டான குணசேஷ்டிதாதிகளிலே ஓரோநீர்மைகளையுடைய மற்றை யவதாரங்களையும் இக்குணப்ரஸங்கத்தாலே அநுஸந்தித்தும், இப்படியாலே ராமவ்ருத் தாந்தத்தைப் பேசுகிறார்" என்று ஆழ்வான் நிர்வாஹம்.

ஈடு.—கீழில்திருவாய்மொழியில் - எம்பெருமானுடைய விஜயங்களை யநுப வித்தார்; அவைதான்ஆஶ்ரிதார்த்தமாயிறேயிருப்பது. "அவன்தன்னை இவர்களுக்காக்கி வைக்க, இவர்கள் பாஹ்யவிஷயங்களிலே யந்யபரராவதே" என்றுஆஶ்சர்யப்படுகிறார். "யஸ்யாஸ்மி" (யஸ்யாஸ்மி) என்று - யாவனொருவனுடைய ஸத்தையே பிடித்து அவ னுக்காயிருக்கும், அப்படியிருக்கிறவன்தான் உத்பத்தியே பிடித்து இவனுக்காக்கிவைக்கிற னிறே. ரக்ஷணத்துக்கு ஏகாந்தமான ஜந்மங்களிலே வந்துபிறந்தபடியையும், தன் ஸ்வரூப ரூபகுணாதிகளையடையப் பிறர்க்குஆக்கிவைக்கிறபடியையும், அதுக்கடியான க்ருபையைத் தனக்கு வடிவாக்வுடையனாயிருக்கிறபடியையும், க்ருபாகார்யமான செயல்களையும் அநுஸந்

"𑌅𑌪𑌵𑌰𑌕𑍇 𑌹𑌿𑌰𑌣𑍍𑌯𑌨𑌿𑌧𑌿𑌂 𑌨𑌿𑌧𑌾𑌯 𑌉𑌪𑌰𑍍𑌯𑌸𑌞𑍍𑌚𑌰𑌨𑍍𑌤𑍋𑌽𑌯𑌥𑌾𑌨𑌕𑍍𑌷

(அபவரகேஹிரண்யநிதிம்நிதாய உபரிஸஞ்சரந்தோயதாநத்ரக்ஷ்யந்தி) என்கிற படியே முற்றத்திலே ஹிரண்யநிதி புதைத்துக்கிடக்க, அத்தையறியாதே மேலே ஸஞ்சரித் துப் புறங்கால் வீங்குவாரைப்போலே இஸ்ஸம்பத்துத் தங்களுக்காயிருக்க ஸம்ஸாரிகள் புறம்பே போதுபோக்குவதே! என்றுஆஶ்சர்யப்படுகிறார்.

ஆழ்வான் ஒருகால், இத்திருவாய்மொழியடங்கலும் ராமாவதாரவிஷயமாக்கி நிர்வஹித்தானும். அதுக்கடி: ஆயிரத்திலொன்றும் கடலில் குளப்படியும்போலே, பெரு மாளுடைய குணத்தில் ஏகதேசங்களிறே அல்லாத அவதாரங்கள்எல்லாவற்றிலுமுள்ள தென்று. "பேரெயில்சூழ்கடல் தென்னிலங்கைசெற்றபிரான்" என்றும், "மாறுநிரைத்

கற்பார்ப்ரவேஶ: வ்ருத்தாநுவாத பூர்வகமாக ஸங்க்ரஹஸங்கதி - கீழில்திருவாய்மொழி யில் இத்யாதி. "கற்பாரிராமபிரானையல்லால் மற்றுங் கற்பரோ," "நாரணற்காளன்றியாவரோ," "கேசவன் கீர்த்தியல்லால் மற்றுங்கேட்பரோ" இத்யாதியைப்பற்ற - பாஹ்யவிஷயங்களிலே இத்யாதி. 'தன்னையிவர்களுக்காக்கி' என்கைக்கு, வாஸ்தவாகாரம் ஏதென்கிற சங்கையிலே விஸ்தர ஸங்கதி - யஸ்யாஸ்மி இத்யாதி. "நாட்டிற்பிறந்து" இத்யாதியைப்பற்ற - ரக்ஷணத்துக்கு இத்யாதி. "பிரான்" என்றத்தைப்பற்ற - தன்ஸ்வரூப இத்யாதி. "தன்மையறிபவர்" என்றத்தைப்பற்ற - அதுக்கடியான இத்யாதி. "புற்பாமுதலா" இத்யாதியைப்பற்ற - க்ருபாகார்யமான இத்யாதி. 'யஸ் யாஸ்மி' இத்யாதிவாக்யங்கள் சிலஸ்ரீகோசங்களில்இல்லை. அபவரகே - முற்றத்திலே.

கீழ்-ஸர்வாவதாரவிஷயமாக அருளிச்செய்து, ராமாவதார விஷயமாக ஸம்வாதம்-ஆழ்வான் இத்யாதி. அநேகாவதாரங்களைச் சொல்லாநிற்க, ராமாவதாரவிஷயமென்கிறபடி எங்ஙனே? என்ன-அது க்கடிஇத்யாதி. அது அல்லாத அவதாரங்கள்பெருமாளுடையகுணத்தில் ஏகதேசங்களென்கையாலே- அவை அப்ரதாநங்களாய் இது ப்ரதாநமாயிருக்கையாலே தத்விஷயமென்றபடி. அவ்வளவேயன்று, கீழ் ப்ரஸ்துதமாகையாலும் உபக்ரமப்ராதாந்யத்தாலும் ராமாவதாரவிஷயமென்கிறார்-பேரெயில்இத்யாதி.

திரைக்கும் சரங்கள் " என்றும், கீழ் ப்ரஸ்துதமான ராமவ்ருத்தாந்தத்தை யநுஸந்தித்து, அவ்வழியாலேயிறே அவதாரங்கள் தன்னை யநுஸந்திக்கிறது. அல்லாதஅவதாரங்களிலே ப்ரவணரானவர்களும் அவ்வவதாரம் ப்ராஸங்கிகமாக ப்ரஸ்துதமானால் "மனத்துக்கினியானை" என்றிறே சொல்லுவது. "பட்டர் ராமாவதாரத்திலே போர பக்ஷபதித்திருப்பர்" என்று, அவர் அருளிச்செய்யுமது கேட்கைக்காகச் சிறியாத்தான் ஒருநாள் "பெருமாளுக்குஎல்லாநன்மைகளுண்டாகிலும், கழுத்திலே ஓலைகட்டி 'தூதுபோ' என்னப் போன க்ருஷ்ணன்நீர்மையில்லையே" என்ன, "அது அங்ஙனல்லகாண்; கழுத்திலே யோலைகட்டி 'தூதுபோ' என்பாரில்லாமைதவிர்ந்தார் அத்தனைகாண்" என்றருளிச்செய்தார். * நாடுடைமன்னர் வேறேசிலரில்லையே. அபிஷிக்த க்ஷத்ரியகுலத்திலே பிறக்கையாலே போகவிடுவாரைப்பெற்றதில்லை.முடியைத்தவிர்ந்து சடையைப்புனைந்துநாட்டைவிட்டுக்காடேறப்போனவர், தூதுபோகாமையில்லையிறே. "காடேறப்போகவுமாம், துர்யோதநகோஷ்டியிலே போகையிறே யரிது; "யத்ர ஸக்தம் த்ருக்தம் வாஸஸம் ஸ்யாந்நயாஸக்தந" (யத்ரஸக்தம்துருக்தம்வாஸமம்ஸ்யாங்மதுஸக்தந) இறே. "பாண்டவர்கள் கிடக்கைக்கு அஞ்சூர் தரவேணும்" என்று இவன்சொன்னவார்த்தைக்கும், "பந்துக்களுக்குஒருகோற்குத்துங்கொடேன்" என்றுஅவன்சொன்னவார்த்தைக்கும் வாசியறியாத கோஷ்டியிலேயிறே போய்ப்புக்கது. "ராமாவதாரத்தில் தூதுபோன திருவடியுடைய ஏற்றம் தன்திருவுள்ளத்திலேபட்டுக்கிடந்திறே;அவனே* பின்னோர்தூதாதி மன்னர்க்காகிப் பெருநிலத்தா ரின்னார் தூதனென நின்றது.

இப்படி நிர்வஹித்தால் பக்ஷபாதம்வாராதோ? என்ன - அல்லாத இத்யாதி. 'சொல்லுவது' ஆகையாலே பரமார்த்தமென்றபடி. "பெருமாளுடைய குணத்தில் ஏகதேசம் அல்லாதவவதாரங்கள்" என்கைக்கு, கழுத்திலே ஓலைகட்டித் தூதுபோன க்ருஷ்ணன் நீர்மை பெருமாளுக்கில்லையே என்கிற சங்கையை ஆப்தப்ரஶ்நமுகேநவநுவதித்து, ஆப்தஸம்வாதத்தாலே பரிஹரிக்கிறார் - பட்டர் இத்யாதி அருளிச்செய்தாரென்னுமளவாலே. அப்படி ஏவுவாரில்லையோ? என்ன - நாடுடை இத்யாதி. விவரணம் - அபிஷிக்த இத்யாதி. போகச்சொன்னால்தான்போவரோ? என்ன - முடியை இத்யாதி. 'காடேறப்போகவுமாம்' இத்யாதி - சிறியாத்தான் ஶங்காவாக்யம். இதுக்கு பட்டர் பரிஹாரவாக்யம் - ராமாவதாரத்தில் இத்யாதி. அப்படி துர்யோதநகோஷ்டி க்ரூரமோ? என்ன, அதின் பொல்லாங்கை அருளிச்செய்கிறார் - யத்ர இத்யாதி. "யத்ர ஸக்தம் த்ருக்தம் வாஸஸம் ஸ்யாந்நயாஸக்தந । நதத்ர வைதேஹாவயிசேஷிவஹாயக:" இத்யுத்யோகபர்வணி பஞ்சநவதிதமே க்ருஷ்ணம் ப்ரதிவிதுர:. இதுக்கர்த்தம் - பாண்டவர்கள் இத்யாதி. 'அவனேபின்னோர்' இத்யாதிக்கு - லங்கையிலுள்ளாரைநசிப்பித்தவனே பின்பு த்வாபராந்தத்திலே ராஜ்யத்துக்கு ப்ரதாநரான பாண்டவர்களுக்காக, மஹாப்ருதிவியிலுள்ளார் பாண்டவதூதன் என்று தன்பேரிட்டழைக்கும்படி நின்றபடி. திருமொழி இரண்டாம்பத்து, இரண்டாந்திருமொழி மூன்றாம்பாட்டு, "முன்னோர் தூது" இத்யாதி.*

முதற் பாட்டு.

கற்பாரிராமபிரானையல்லால்மற்றுங்கற்பரோ?
புற்பாமுதலாப் புல்லெறும்பாதியோன்றின்றியே
நற்பாலயோத்தியில்வாழும் சராசரம்முற்றவும்
நற்பாலுக்குஉய்த்தனன் நான்முகனார்பெற்றநாட்டுளே.

ஆ.—ப்ராக்ருதவஸ்துக்களை தாரகபோஷக போக்யமாயிருக்கக்கடவ இப்ப்ரக்ருதி மண்டலத்திலே வைத்துக்கொண்டு திருவயோத்யா திருநகரியிலே வர்த்திக்கிற தூர்வாதி நிகிலஜந்துக்களையும், கர்மயோகாத்யுபாயம் பண்ணுதிருக்கச்செய்தேயும், திருநாட்டிலுள்ளாரைப்போலே தன்திருவடிகளை தாரகபோஷக போக்யமாக்கியருளின இம்மஹாகுணத்தையுடையனாயிருந்த இராமபிரானையல்லால் மற்றுங்கற்பரோ? என்று, அவனுடைய குணங்களை யநுபவிக்கிறார்.

ஒ.—முதற்பாட்டில், ப்ரியஹிதங்களை அநுஸந்திப்பார் திருவயோத்யையிலுண்டான ஸகல பதார்த்தங்களையும் நிர்ஹேதுகமாக ஸ்வஸம்ஶ்லேஷவிஶ்லேஷைக ஸுகதுக்கராம்படிப்பண்ணியருளின உபகாரசீலனானராமனையல்லது கற்பரோ?என்கிறார்.

[பற்பாமுதலாப்புல்லெறும்பாதி] - ஸ்தாவரங்களிற் கடையான த்ருணமும் ஜங்கமங்களிற்கடையான சிற்றெறும்பும் ப்ரதாநமாக அவைதொடக்கமாக என்றுமாம். புற்பா- தரையில் பரம்பி இருந்தபுல். [ஒன்றின்றியே] - நிர்ஹேதுகமாக. [நற்பாலென்று தொடங்கி] - ஒருநன்மையின்றியேயிருக்கச்செய்தே, நிலமிதிதானே ராமபக்தராக்கவற்றும் ஸ்வபாவத்தையுடைத்தான திருவயோத்யையிலே ராமகுணங்களை அநுபவித்து இனியராய்வர்த்திக்கிற சராசரபதார்த்தங்கள் எல்லாவற்றையும் ப்ரஹ்மாவை நியந்தாவாக்கி யவனுக்கடைத்த,கர்மவஶ்யமான நாட்டிலே கர்மங்களையும் அவனுடைய நியந்த்ருத்வத்தையும் தவிர்த்துத் தன்னோட்டை ஸம்ஶ்லேஷவிஶ்லேஷங்களே ஸுகதுக்கங்களாகிற நல்லஸ்வபாவத்தை உடைத்தாம்படிபண்ணினான்.

ப.—முதற்பாட்டில், சக்ரவர்த்தித்திருமகனுடைய புருஷார்த்த ப்ரதத்வத்தையநுஸந்தித்து, கல்வியில் ஆதரமுடையார்க்கு அவரையொழிய ஜ்ஞாதவ்யரில்லையென்கிறார்.

பா-முளைத்துப்பரம்பின, புல்-, முதலா - முதலாகவும், புல் - அதிக்ஷுத்ரமான, எறும்பு-, ஆதி - முதலாகவும், நற்பால் - (ராமகுணங்கள் நடையாடுகிற) நல்ல தேசமாயுள்ள, அயோத்தியில் - திருவயோத்யையிலே, வாழும - குணாநுபவப்ரீதியுக்தராய்வர்த்திக்கிற, சராசரம் - சராசராத்மகமான, முற்றவும் - ஸகலபதார்த்தங்களையும், நான்முகனார்பெற்ற - சதுர்முகஸ்ருஷ்டமான, நாட்டுளே - ஜகத்துக்குள்ளே, ஒன்று - உஜ்ஜீவனோபாயமொன்றும், இன்றியே - இன்றியேயிருக்கச்செய்தேயும், நற்பாலுக்கு - நல்லவிடமான ப்ராப்யஸ்த்தலத்திலே, உய்த்தனன் - வைத்தான்; (ஆதலால்), கற்பார் - ப்ரியஹிதரூபமாயிருப்பதொன்றைக் கற்கநினைப்பார், இராமன் - (அதீவப்ரியதர்ஶநனாய் * விக்ரஹவானான தர்மமாயிருக்கிற) சக்ரவர்த்தித் திருமகனான, பிரானை - மஹோபகாரகனை, அல்லால் - ஒழிய, மற்றும் - வேறொருவ்யக்தியை, கற்பரோ - வ்யுத்பத்திபண்ணுவரோ ?

இ.—முதற்பாட்டில், ப்ரியஹிதங்களைப்பற்ற ஒன்றைக்கற்பார், உபகாரசீலனை சக்ரவர்த்தி திருமகனை யொழிய ... ர.

[கற்பார் இத்யாதி] - ஒருவன் ஒன்றைக்கற்பது, அப்போதை இனிமைக் காதல் விபாகத்தில் புருஷார்த்தத்தைத்தருமென்றுதல்இறே; "ஹி யவாக்யஹூதாநாம்", என்றும், "ராமோ ராமோ ராம இதி" என்றும்; "லோகாநாம் ஸம்வஸரா யத்தி:" என்றும், "ராமோ விக்ரஹவாந் தர்ம:" என்றும் ப்ரியஹிதங்கள் இரண்டும் ஒருதலைத்த விஷயமாய், நிலாத்தென்றல் சந்தனம் தண்ணீர்போலே பார்யமாயிருக்கிற விஷயத்தையொழிய, ஆயிகரிப்பார் புறம்பேயும் ஒன்றை அப்யஸிப்பரோ? அநர்த்தகரமென்றாலும் விடவொண்ணாத ப்ரியவிஷயமாய், அப்ரியமானாலும் விடவொண்ணாதபடி பத்யமான இவ்விஷயத்தையொழிய, வேறொன்றை அப்யஸிக்கக்கடவதோ? மற்றுமொன்று - தேவதாந்தரங்களைச் சொல்லுகிறதன்று: பரத்வத்தையும் அவதாராந்தரங்களையும் சொல்லுகிறது; "ஸாலோநாந்த ஸங்கதி," "தொழிலெனக்கு". [கற்பரோ] - சேதநரன்றோ, எல்லாவற்றையும்விட்டு இவ்விஷயத்தைக் கற்கைக்கு இங்குத்தைக்கு ஏற்றமென்? என்னில்; அதுசொல்லுகிறது - மேலடைய. [புற்பாமுதலா] - புல்லாகிறபதார்த்தம் முதலாக. பா-பதார்த்தம், பரம்பினபுல் என்றுமாம். அதாவது - பசுவின்வாய்க்கெட்டாதே தறையோடு ஒருமிக்கப்படருகை. [முதலா] - ப்ரதாநமாக என்றுமாம். [புல்லெறும்பு] - புல்லிய எறும்பு. [ஆதி] - தொடக்கமாக என்னவுமாம், ப்ரதாநமாக என்னவுமாம். ஸ்தாவரங்களிற்கடையான த்ருணமும், ஜங்கமங்களிற்கடையான சிற்றெறும்பும் ப்ரதாநமாகவென்கை. வெள்ளத்துக்குப பள்ளத்திலே நோக்காயிருக்குமாபோலே; வஸிஷ்டாதிகளன்றியே அறிவிற்குறைந்தவிடத்தேயாயிற்றுப் பெருமாள் நீர்மைக்குநோக்கு. வஸிஷ்டாதிகளுக்குமுன்பே த்ருணபிபீலிகைகளாயிற்றுப் பெருமாள் கண்ணுக்கிலக்காவது. [ஒன்றின்றியே] - தம்மைப்பெறுகைக்கு ஹேதுவாயிருப்பதொரு நன்மையித்தலையிலின்றிக்கே, நிர்ஹேதுகக்ருபையாலே. ஒன்றின்றியேயென்றது - ஒன்றொழியாமேயென்றது ஆனாலோ? என்னில்; மேலே [சராசரம்] - என்கையாலே அதொண்ணாது. [நற்பாலயோத்தியில்] - நல்லவிடத்தையுடைய திருவயோத்யையில். நிலமிதிதானே ராமபக்தியை விளைப்பிக்குமென்கை. "அபி வ்ருக்ஷா: பரிம்லாநா:", "ராமவாஸோ வநா ஸ்ரீராமபக்தா ஜனபதா:" என்னுமவர்கள். [வாழும்] - வர்த்திக்குமென்னும் ஸ்தாநத்திலேவாழும்என்கிறது - தேசவாஸந்தானே போகரூபமாயிருக்கை; ராமகுணங்களையே அநுபவித்திருக்கும் என்னுதல். [சராசரமுற்றவும்] - ஸ்தாவரஜங்கமாத்மகமான ஸகலபதார்த்தங்களையும். [நற்பாலுக்குய்த்தனன்] - நல்ல ஸ்வபாவத்தையுடைத்தாம்படி பண்ணினான். தன் ஸம்ஶ்லேஷவிஶ்லேஷமே ஸுகது:கமாம்படி பண்ணினான். "அபி வ்ருக்ஷா: பரிம்லாநா: ஸபுஷ்பாங்குரகோரகா:", "உபதப்தோதகா நத்ய:", "ராமோ வநம் ப்ரயாதம் சாபி ஸஹ", "ராமே ப்ரவ்ரஜிதே தஸ்மிந் ஜீவிதம் ஹி ந:" இப்படி ஸ்வஸம்ஶ்லேஷ விஶ்லேஷஸுகது:கமாம்படி பண்ணிற்று ஒருதேசவிசேஷத்திலேயோ? என்ன, [நான்முகனார் பெற்ற நாட்டுளே] - ப்ரஹ்மாவுக்கு அடைத்தநாட்டுள்ளே. அவனுடைய நியாமகத்வத்தையும் தவிர்த்து சேதநருடைய கர்மவஶ்யதையையும் தவிர்த்துத் தான்கைக்கொண்டு தன்னாலல்லது செல்லாதபடி பண்ணினான்,

௬௫.—முதற்பாட்டு. ப்ரியஹிதங்களை யநுஸந்திப்பார், திருவயோத்யையிலுண்டான ஸகலபதார்த்தங்களையும் நிர்ஹேதுகமாக ஸ்வஸம்ச்லேஷவிச்லேஷஸுகது:கராம் படிபண்ணியருளின வுபகாரசீலனை சக்ரவர்த்தித்திருமகனை யல்லது கற்பரோ? என்கிறார்.

[கற்பார் இத்யாதி] - இவ்விஷயத்தையொழியப் புறம்பு கற்குமது கல்விக்கு உடலல்ல என்றிருக்கிறார். "தஜ்ஜ்ஞாநமஜ்ஞாநமதோऽந்யதுக்தம்" (தத்ஜ்ஞாநமஜ்ஞாநமதோந்யதுக்தம்) என்றானிறே. ஐம்வல்லாஹத்துக்குஉடலான ஜ்ஞாநம் ஜ்ஞாநமாகிறது; அல்லாதது அஜ்ஞாநமென்னக்கடவதிறே. [கற்பார்] - ஒருவன் ஒன்றைக்கற்பது "அப்போதைக்கினிது" என்றுதல், "பின்போரு நன்மையைவிளைக்கும்"என்றுதல் ஆயிற்று; [இராமபிரானேன்கையாலே] - அவையிரண்டும் இவ்விஷயத்தை யொழியவில்லை யென்கை. ராமனேன்கிற இத்தால்-புறம்புபோகாமல் காற்கட்டும்படியான அழகைச் சொல்லுகிறது; பிரானென்று கொண்டு - அவ்வழகாலே சேதநரை யநந்யார்ஹமாக்கும்படியும், நிலாத்தென்றல் சந்தநம் தண்ணீர்போலே தன்னுடைய ரமணீயத்வமும் பிறர்க்கேயாயிருக்கும் உபகாரகத்வமும் சொல்லுகிறது. "ப்ரியவாதீச" (ப்ரியவாதீச) - பெருமாளொன்றையருளிச்செய்தால் அது செவிப்படாதொழியிற் செய்யலாவதில்லை; செவிப்படில் இனிதாயன்றியிராது. ஆர்க்குத்தான்? என்றால் "பூதாநாம்"(பூதாநாம்) - ஸத்தாயோகி ஸகலபதார்த்தங்களுக்கும்: அஸத் வ்யாவ்ருத்திமாத்ரமே வேண்டுவது. அப்போது ப்ரியமாய் விபாகத்தில் வேறொன்றை ஃலிப்பிக்குமோ? என்னில்,—"ஸத்யவாதீச" (ஸத்யவாதீச) - அருளிச்செய்யுமதுதான் பூதஹிதமாயன்றி இராதென்கிறது. ஒருக்திடே

முதற்பாட்டு-கற்பார் இத்யாதி "நற்பாலயோத்தி" இத்யாதி. "உய்த்தனன் - இராமபிரானை யல்லால் மற்றுங்கற்பரோ" என்கிறபதங்களைக் கடாக்ஷித்தவதாரிகை ப்ரியஹிதங்களை இத்யாதி.

"கற்பரோ" என்கிற ஸ்வரத்தால் ஃலித்த ஹாவம் இவ்விஷயத்தை இத்யாதி. அப்படிக்கல்விக்கு உடலன்றோ? என்ன; அல்லவென்னுமதுக்குப்ரமாணம்-தத்ஜ்ஞாநம் இத்யாதி. "ஸம்ஜ்ஞாயதே யேந ததஸ்ததோஷம் சுத்தம் பரம் நிர்மலமேகரூபம் । ஸம்த்ருச்யதே வாப்யதிகம்யதே வா தஜ்ஜ்ஞாநமஜ்ஞாநமதோऽந்யதுக்தம்" இதி ஸ்ரீவிஷ்ணுபுராணே (௬-௫-௮௭). இதுக்கர்த்தம்-ஐம்வல்லாஹத்துக்கு இத்யாதி. தத் - ப்ரஹ்ம. யேந - ஜ்ஞாநேந, ஸம்ஜ்ஞாயதே, ஸம்த்ருச்யதே, அதிகம்யதே; ததேவ ஜ்ஞாநம்; அதோऽந்யத் - அஜ்ஞாநம்உக்தம் இத்யந்வய:. சுத்தமித்யாதி - தச்சப்தநிர்த்திஷ்டப்ரஹ்மவிசேஷணம். ஸம்ஜ்ஞாயதஇதி - ச்ரவணமநநவிஷயத்வம், ஸம்த்ருச்யத இதி - ஸாக்ஷாத்காரஜ்ஞாநவிஷயத்வம், அதிகம்யதஇதி-பரமபக்திதசாபந்நஜ்ஞாந ப்ராப்யத்வம். "கற்பார்" என்றால் - ப்ரியஹிதங்களை யநுசந்திப்பாரென்று காட்டுமோ? என்ன, அர்த்தஸாமர்த்த்யத்தாலே காட்டுமென்கிறார் ஒருவன்இத்யாதி. "இராமன்" என்றதுக்கர்த்தம்-ராமன்இத்யாதி "பிரான்" என்றதுக்கு - ஸ்வாமித்வமும், உபகாரகத்வமும் அர்த்தமாக்கி, அவ்வழகாலே சேதநரைத்தோற்பிக்கும்படியும், அவ்வழகை யாச்ரிதரை யநுபவிப்பிக்கும் உபகாரகத்வமும் சொல்லுகிறதென்கிறார்-பிரானென்றுஇத்யாதி. "ப்ரியஹிதங்களிரண்டும் பெருமாளே" என்னுமதுக்கு ப்ரமாணம் - ப்ரியாவாதீசஇத்யாதி. "ப்ரியவாதீச பூதாநாம் ஸத்யவாதீச ராகவ:। வைசம்பாயன ... ததா ராஜா ... ப்ராஹ்மணாநாம் ... வாஸிதா" இத்யயோத்யாகாண்டே (உ-௩உ). "ஸத்யம் பூதஹிதம் ப்ரோக்தம்" என்றத்தை யுட்கொண்டருளிச்செய்கிறார் — பூதஹிதம் இத்யாதி. இச்லோகத்தில் - பெருமாள்உக்திக்கன்றோ ... சொல்லுகிறது. பெருமாளுக்குச் சொல்லவில்லையேயென்ன; அது கிம்புநர்ந்யாய

மாகாநின்றால், அல்லாததுக்குச் சொல்லவேண்டாவிறே. "ராமோ ராமோ ராம இதி" (ராமோராமோராம இதி) என்னும்படியிறே நாட்டை யகப்படுத்தியிட்டு வைக்கும்படி. அவன் ஸத்தை இவனுடைய ஸத்தைக்குஹேது; பின்புண்டானவை இவனுக்கு போகத்துக்குக் கண்டவை. ப்ரியஹிதங்களிரண்டும் வேண்டியிருப்பார் அவனையொழியக் கற்பரோ? என்றபடி. "ஸாக்ஷாத்ராமாத்விநிர்வ்ருத்தோ தர்மஶ்சாபி ஶ்ரியா ஸஹ" (ஸாக்ஷாத்ராமாத்விநிர்வ்ருத்தோ தர்மஶ்சாபிஶ்ரியாஸஹ)- அவ்யவதாநேந ஸாதநஸாத்யங்களிரண்டும்இவ்வ்யக்தியேஎன்கிறதிறே. [கற்பாரிராமபிரானை]-கற்பார்என்கையன்றுஇவர்க்கு உத்தேஶ்யம்; இதரவ்யவச்சேதம். ராமப்ராப்தமாகில் ஸ்வயமேவ ப்ரவர்த்ததேயிறே: ஆகையால், வேறொன்றிற்போகாமையே வேண்டுவது. மற்றுமென்று - தேவதாந்தரபஜநாதிகளை வ்யாவர்த்திக்கிறாரல்லர், பஜநீயவஸ்துவிலே கூறிடுகிறார். தேவதாந்தரமாகிற பதர் கூட்டிக் கழிக்குமவரல்லரிறே,பரத்வத்தையும்அவதாராந்தரங்களையும்கழிக்கிறார். [மற்றுங்கற்பரோ]-"பாவோ நாந்யத்ர கச்சதி"(பாவோநாந்யத்ரகச்சதி) என்னுமாபோலே. "ஸ்நேஹோ மே பரம:" (ஸ்நேஹோமேபரம:) - எழுந்தருளுகிறபோது "என்வழியே

ஹித்தமென்கிறார்-ஏருக்தியேஇத்யாதி. அல்லாததுக்கென்றது-ஸ்வரூபகுணாதிகளுக்கென்றபடி. "அவ்வழகாலே சேதநரை யநந்யார்ஹமாக்கும்படியும்" என்று கீழேசொன்னதுக்கு ப்ரமாணம்-ராமோராம இத்யாதி. "ராமோ ராமோ ராம இதி ப்ரஜாநாமபவந் கதா: । ராமபூதம் ஜகதபூத் ராமே ராஜ்யம் ப்ரஶாஸதி" இதியுத்தகாண்டே(கஉக-கஎ). "ராமோ ராமோ ராம:" என்று-ப்ரியத்வமொழிய, ஹிதத்வம் சொல்லவில்லையேயென்ன- அவன்ஸத்தைஇத்யாதி. அதாவது - ஹிதத்வத்துக்கு அவன் ஸத்தையேபோரும், ப்ரியத்வமே சொல்லவேண்டுவதென்றபடி. பின்புண்டானவையென்றது- குணவிக்ரஹஸௌந்தர்யாதிகளென்றபடி. நிகமிக்கிறார்-ப்ரியஹிதங்களிரண்டும்இத்யாதி. ப்ரியஹிதங்களிரண்டுமவரேயென்றத்தால் பலித்தது - உபாயோபேயங்களிரண்டும்அவரேயென்னுமதென்று ஹித்தவத்கரித்து, அதுக்குப்ரமாணம்-ஸாக்ஷாத்இத்யாதி. "ராஜஸத்தம ஸைஷாமே கௌஸல்யாநந்தவர்தந: । ஸாக்ஷாத்ராமாத்விநிர்வ்ருத்தோ தர்மஶ்சாபி ஶ்ரியா ஸஹ", இத்யயோத்யாகாண்டே(உ உக). "ஸாக்ஷாச்ச்ரியா ஸஹ, ஸாக்ஷாத்தர்ம:, ராமாத்விநிர்வ்ருத்த:" இத்யந்வய:. ஸ்ரீயென்று-ஸாத்யம். தர்மமென்று-ஸாதநம்.இவ்விரண்டும் இவரிடத்தில்நின்றும் உண்டாகிறதென்றது - இவர் தாமேயாயிருப்பரென்றபடி. ஸாக்ஷாச்ச்ரீயோடேகூட ஸாக்ஷாத்தர்மமானது ராமனாலே யுண்டாச்சுதென்றர்த்தமாகையாலே அத்தையருளிச்செய்கிறார்-அவ்யவதாநேநஇத்யாதி.ஸாதகம் ஸாதநபரம்பரயாஸாத்யமாய், அஸ்ஸாதநத்துக்கு அங்கம்பரம்பரயாஸாதநமாயிருக்கையாலே, அத்தை வ்யாவர்த்திக்கிறது - அவ்யவதாநேந என்று. கற்பாரிராமபிரானைக் கற்கவேண்டாவோ? என்னாதே, "மற்றுங்கற்பரோ" என்கிறதென்? என்ன - கற்பார்இத்யாதி. இதரநிஷேதமே ப்ரயோஜநமென்றபடி. இதரவ்யவச்சேதமாத்ரமேயோருமோ, ஆஶ்ரயியுங்கோளென்னவேண்டாவோ? என்ன-ராமப்ராப்தம்இத்யாதி வாக்யத்வயத்தாலே.கீழே "மற்றும்" என்றதுக்கு - இதரவிஷயங்களாக அருளிச்செய்து, பரத்வாவதாராந்தரங்களாக அர்த்தாந்தரம்-மற்றுமென்று-தேவத இத்யாதி.தேவதாந்தரங்களைச்சொன்னாலோ?என்ன-பதர்இத்யாதி.ஆனாலெத்தைக்கழிக்கிறார்?என்ன,பரத்வத்தையும்இத்யாதி. பரத்வத்தைக்கழிக்கிறதுக்கு த்ருஷ்டாந்தம் - பாவோநாந்யத்ரஇத்யாதி. "ஸ்நேஹோ மே பரமோ ராஜந் த்வயி நித்யம் ப்ரதிஷ்டித: । பக்திஶ்ச நியதா வீர பாவோ நாந்யத்ர கச்சதி" இதி உத்தர ஸ்ரீராமாயணே ராமம்ப்ரதி ஹநுமாந். ஶ்லோகத்துக்கவதாரிகை - எழுந்தருளுகிறஇத்யாதி. பரமபதத்துக் கெழுந்தருளுகிற என்றபடி. பரமஶப்தார்த்தம் - அவ்வளவன்றுகாணும்என்று. அவ்வளவன்றுகாணும் என்றதுக்கு - இங்கேயிருந்தே உம்முடைய சாரித்ராநுபவம் பண்ணுமதொழிய, கூடவரும்படியன்றுகாணும் என்றபடி. "பரம:" என்றதுக்கு - என்னிற்காட்டில்

போந்தாலோ?'' என்ன; அவ்வளவன்றுகாணும் எனக்கு ஸ்நேஹமென்கிறுன். ''என்றனளவன்றால் யானுடையஅன்பு'' என்றும், ''உயிரின் பரமன்றிப்பெருகுமால் வேட்கையும்'' என்னுமாபோலே. ''ராஜம்ஸ்த்வயி'' (ராஜம்ஸ்த்வயி)-இதுதானும் என்னால் வந்ததன்று. (ரஞ்சயதீதிராஜா.) - ''நித்யம்ப்ரதிஷ்டிதஃ'' (நித்யம்ப்ரதிஷ்டிதஃ) - ''இப்போதோண்ணுதாகில், மற்றொருபோதுகோள்ளுகிறோம்'' என்றால், அதுசெய்யவோண்ணாது, பூர்மியைப்பற்றிக்கிடக்கிற தோன்றுகையாலே. ''பக்திஸ்ச நியதா'' (பக்திஸ்சநியதா)(ஸ்நேஹமாவதேன், பக்தியாவதேன்? என்னில்;)பெருமாளையொழியச் செல்லாமைபிறந்துவ்யதிரேகத்தில் முடிந்தசக்ரவர்த்திநிலை-ஸ்நேஹம்; பக்தியாவது-''நில்''என்ன,''குருஷ்வ''(குருஷ்வ) என்னும்படியாய்,முறையறிந்துபற்றின இளையபெருமாள்நிலை. 'வீர'(வீர)-உம்முடையவீரங்கோண்டு புறம்பே வென்றீர்என்ன, இங்கும் வெல்லமுடியாது. தானும் அவனாகையாலே, தோற்பித்த துறையைப் பிடித்துச்சொல்லுகிறுன். ''பாவோ நாந்யத்ர கச்சதி''(பாவோ நாந்யத்ரகச்சதி) - என்னை மீட்டீராகிலும் என்னுடைய நெஞ்சைமீட்கப்போகாது. என்னுடை நன்னெஞ்சந்தன்னை அகல்விக்கத் தானுங்கில்லானினி'' என்னுமாபோலே- ஸர்வசக்தியான அவனாலும் மீட்கப்போகாதேன்கை. ''அந்யத்ர - நகச்சதி'' (அந்யத்ர - நகச்சதி) - ''கண்டகண்கள்மற்றொன்றினைக்காணா'' என்னுமாபோலே. அந்யத்ர வேன்கிறது - போகிறவிடத்தின் பேரும் சொல்லுகை அஸஹ்யமானபடி. ''மற்றாராநுமுண்டேன்பார்'' என்னுமாபோலே; இவரும் [மற்றுங்கற்பரோ] - என்கிறார். [கற்பரோ] -

*பரமமென்று விவக்ஷித்து, அதுக்குப்ரமாணம் - என்றன்இத்யாதி. உன்பக்கல் நானுடையேனான ப்ரேமம் ஆஸ்ரயபூதனான என்னளவிலேயடங்கி நிற்பதன்றுஎன்றபடி. இரண்டாந்திருவந்தாதி சாற்றுப்பாட்டு, ''மாலே'' இத்யாதி. 'உயிரின்' இத்யாதி - ஆத்மாவினளவன்றிக்கே, அபரிச்சிந்நவேசமானது பெருகாநிற்கும்என்றபடி. இந்தஸ்நேஹம் வருகைக்கடி உம்முடைய ரஞ்சநீயத்வமென்று விவக்ஷித்தருளிச்செய்கிறார் - இதுதானும்இத்யாதி. ''நித்யம்'' என்றதுக்கு பாவம் - இப்போதுஇத்யாதி. மற்றொருபோது கொள்ளுகிறோமென்றது - ஸ்நேஹமில்லாத தசையிலே கூட்டிக்கொண்டுபோகிறோமென்றபடி. பூர்மியைப்பற்றிஎன்றது - திருவடியுடைய ஸ்வரூபத்தைப் பற்றி யென்னுதல், ''ராஜம்ஸ்த்வயி'' என்ற - விலக்ஷணகுணவிசிஷ்டரான பெருமாளுடைய ஸ்வரூபத்தைப்பற்றி யென்னுதல். ''பக்திஸ்ச நியதா'' - பக்தியும் எப்போதுமுள்ளது. ஸ்நேஹத்துக்கும் பக்திக்கும் பேதமேதென்ன, அத்தலையில் குணமடியாக வருவதொரு ப்ரீதி - ஸ்நேஹமாவது; பக்தியாவது - தாஸனுக்கு ஸ்வாமியிடத்திலே பிறப்பதோர் அநுராகவிசேஷம். சக்ரவர்த்திக்குப் பெருமாளிடத்தி லுண்டான ப்ரீதி - ஸ்நேஹமாவது; இளையபெருமாளுக்குப் பெருமாளிடத்திலுண்டான ப்ரீதி - பக்தியாவது. ''வீர'' என்றதுக்கு பாவம் - தம்முடைய இத்யாதி. ''வீர'' என்றதுக்கு பாவாந்தரம் - தானும்இத்யாதி. அவனாகையாலே - வீரனாகையாலே. ''பாவஃ - அந்யத்ர - நகச்சதி'' என்றதுக்குபாவம் - என்னைமீட்டீராகிலும் இத்யாதி. இதுக்கு ப்ரமாணம் - என்னுடையஇத்யாதி. 'தானுங்கில்லான்'' என்றத்துக்கு பாவம்- ஸர்வஸக்தியானஇத்யாதி. ''அந்யத்ர'' என்றதுக்கு த்ருஷ்டாந்தம் - கண்டகண்கள்இத்யாதி. பரமபதத்திலே யென்னாதே, ''அந்யத்ர'' என்றதுக்கு பாவம் - அந்யத்ரவேன்கிறது இத்யாதி. அஸஹ்யமானமைக்குப் ப்ரமாணம் - மற்றாராநும்இத்யாதி. ''அர்த்த, காம'' என்று புருஷார்த்தங்களை தூஷித்து, மற்று - ஆநந்தாவஹமாய் * அந்தமில்பேரின்பமாய் நிலைநின்றபுருஷார்த்தம் உண்டென்பாரென்றபடி: சிறியதிருமடல், ''கற்பரோ!'' என்கிற ஸ்வரத்துக்கு ஸந்தர்ப்பமாக*

சேதநரன்றே? நாடடங்கலும் தம்முடையபடி என்றிருக்கிறார்; "இவ்வூரிற் பிள்ளைகள் கண்டசர்க்கரை யொழிய உண்ணும்படி யெங்ஙனே?" என்பாரைப்போலே. மற்றவற்றை விட்டுக் கற்கைக்கு ஹேது சொல்லுகிறது மேலடைய. [புற்பாமுதலா] – பா வென்று - பதார்த்தவாசகமாய், புல்லாகிறபதார்த்தமென்னுதல்; பாவென்று - படர்த்தியாய், படருகிறபுல்லென்னுதல். பசுவின்வாய்க்கெட்டாதபடியாயிருக்கை. தூர்வாதிஸ்த்தாவராந்தமாக என்றபடி - இத்தால். [புல்லெறும்பாதி] - ஜங்கமங்களிற்கடையான எறும்பு தொடக்கமாக. ப்ரஹ்மாவையெண்ணினால் அநந்தரம் நிற்கக்கடவதிறே பிபீலிகை. புற்பாமுதலாப் புல்லெறும்பாதி யென்று - இவற்றுக்கோரு ப்ராதாந்யஞ் சொல்லுகிறாரல்லர்; ராமவிஷயீகாரத்துக்கு முற்பட்டன இவையென்கிறார்; வெள்ளமானது தாழ்ந்தவிடத்திலே ஓடுமாபோலே. ஸ்த்தாவரங்களில் தண்ணியதுபுல்லு. ஜங்கமங்களில் தண்ணியதுஎறும்பு; இவையிரண்டையு மோக்கவேடுக்கையாலே- ஜ்ஞாநபலம் மோக்ஷமென்கிறத்தைத் தவிர்க்கிறது· சைதந்யம்உண்டாகையும் இல்லையாகையும் அப்ரயோஜகம்,பெருமாள் க்ருபைக்கென்கிறது· இவற்றின்கர்மத்தால்வரும் தாரதம்யங்கள் அப்ரயோஜகமென்கிறது; நிருபாதிகஸாபேக்ஷக்கல் அப்ரதிஷேதமேபேற்றுக்குவேண்டுவது. ஸ்ரீபரதாழ்வானைக்கண்டு சேதநரெல்லாரும் கண்ணநீர்விழவிட்டுநிற்கக்கழுத்துமட்டுநீரிலேநிற்கிறமரங்களிறே வாடிநின்றது; "அபிவ்ருக்ஷா: பரிம்லாநா:"(அபிவ்ருக்ஷா:பரிம்லாநா:), "உபதப்தோதகா நத்ய:"(உபதப்தோதகா நத்ய:)-நீரோடு, அந்நீரில்விழுகிறரோடுவாசியற்றபடிஉபதப்தமாகையாவது-கரையருகும்கிட்டவொண்ணாதபடியாயிருக்கை. "பல்வலாநிஸராம்ஸிச"(பல்வலாநிஸராம்ஸிச)-இதில், சிறுமைபெருமை என்றொருவாசியில்லை. "வநாந்யுபவநாநிச" (வநாந்யுபவநாநிச) போலே. [ஒன்றின்றியே] - எல்லாவற்றையும் என்கிறதல்ல; மேலே முற்றவுமென்று

ஹாவம் - நாடடங்கலும் இத்யாதிவாக்யத்வயம். 'இவ்விஷயத்தையொழிய' இத்யாதி அடியில்வாக்யம் - ஸ்வரத்தால் ஹலிதமானஹாவம். 'இவ்வூரிற்பிள்ளைகள் கண்டசர்க்கரையொழிய வுண்ணும்படி யெங்ஙனே' என்கிறவிடத்திலே - ஓரம்மையார்அகத்திலே ராஜகுமாரன் இளைத்துச்சென்று "ப்ரஸாதம் வேணும்" என்ன, அவளும் "உண்" என்று ப்ரஸாதமிட, "அதுக்கு உபதம்சம்வேணும்" என்ன, உப்பைச் சொடுவெந்திட, அவன் "கண்டசர்க்கரையில்லையோ" என்ன, அவளும் "இல்லை" என்ன, "இவ்வூரிற் பிள்ளைகள் கண்டசர்க்கரை யில்லாமலெப்படி யுண்பர்கள்?" என்று தன்னைப்போலே விசாரித்துச் சொன்னான் என்று கதை. "முதலா" என்றதுக்கர்த்தம் - தூர்வாதி இத்யாதி. ஜங்கமங்களிலெறும்பு புல்லியதோ? என்ன - ப்ரஹ்மாவை இத்யாதி. க்ஷுத்ரமான புல்லையுமெறும்பையும் ப்ரதாநமாகச் சொல்லுவானென்? என்ன - புற்பாமுதலா இத்யாதி. 'இவை முற்படும்படி யென்? என்ன, த்ருஷ்டாந்தம் - வெள்ளம்இத்யாதி. சேதநரைப் பொகட்டுப் புல்லையுமெறும்பையும் சொல்லுகையாலே ஹலித்ததோர்அர்த்தவிசேஷத்தை யருளிச்செய்கிறார் - ஸ்த்தாவரங்களில்இத்யாதிவாக்யத்ரயத்தாலே. ஆனால்,ஜ்ஞாநம் வேண்டாவோ? என்ன - சைதந்யம்இத்யாதி. "ஜ்ஞாநாந்மோக்ஷ:" என்றுநிற்க, "ஜ்ஞாநம்வேண்டா" என்பானென்? என்ன; மோக்ஷஹேதுவான ஜ்ஞாநத்தை"வேண்டா" என்கிறதல்ல; கர்மதாரதம்யப்ரயுக்தமான ஜ்ஞாநத்தைவேண்டா என்கிற தென்கிறாராதல், கீழ்வாக்யவிவரணமாதல் - இவற்றின் இத்யாதி. ஆனால் ப்ரயோஜகமேதென்ன - நிருபாதிகஇத்யாதி. கர்மநிபந்தநமான தாரதம்யங்கள் அப்ரயோஜகமாய், அப்ரதிஷேதமாத்ரமேகொண்டு அவன் க்ருபை பலித்தவிடமுண்டோ?என்ன - ஸ்ரீபரதாழ்வானைஇத்யாதி. கழுத்துமட்டு நீரிலேயென்றது - வ்ருக்ஷாஸேசநே என்கிற ப்ராதுவைப்பற்ற. அப்படி மரங்கள் வாடிற்றோ என்ன - அபிவ்ருக்ஷாஇத்யாதி. "உபதப்தோதகா:"என்றதுக்குஅர்த்தம்-நீரோடுஇத்யாதி."ஒன்றின்றியே" - நிர்ஹேதுகமாக என்றபடி. ஒன்றொழியாமலெல்லாவற்றையும் என்றர்த்தமானாலோ? என்ன,புநருக்தமாம்என்கிறார் - எல்லாவற்றையும்இத்யாதி, ஆனால்அதுக்கர்த்தமேது? என்ன-இனிஇத்

ஸாகல்யவசநமுண்டாகையாலே. இனி, ஒன்றின்றியேயென்கிறது - பேற்றுக்கூடாயிருப்ப தொரு ஸாதநமின்றிக்கேயிருக்கச்செய்தே யென்றபடி. பெறுகிற தன்சிறுமையையும் பேற்றின் கனத்தையும்பார்த்தால், தன்பக்கல் ஒருஸாதநமின்றிக்கே யிருக்குமிறே. பரமபக்தியோடு, அவன்தானே உபாயமானதோடு வாசியில்லை, பேற்றைப்பார்த்தால் இத்தலையில் ஒன்றும் சொல்லவொண்ணாமைக்கு. இனி, அங்கீகாரஹேதுவாயிருப்பதொருஸாதநமின்றிக்கேயிருக்க, யாதொன்றாலே பலமுண்டாயிற்று, அதிறே ஸாதநம்! அதாவது- 'திருவயோத்யையினின்றும் குடிவாங்க நினைவில்லை' என்கிற இதிறே. [நற்பாலயோத்தியில்]-நல்லஇடத்தையுடைத்தான திருவயோத்யையிலே.பால்-இடம். இத்தால்-நிலமிதியே ராமபக்தியைவிளைக்குமென்கை. "தேஶோயம் ஸர்வகாமதுக்" (தேஶோயம்ஸர்வகாமதுக்) இறே. "ஜ்ஞாதிதாஸீ யதோஜாதா" (ஜ்ஞாதிதாஸீயதோஜாதா) என்கிறதிறே. இதுக்குக்கருத்தேன்? என்னில்,— இத்தேசத்திலே பிறந்தாளாகில் பெருமாளுக்கு விரோதஞ்செய்யாளாகையாலே, எங்கேனும் ஓரிடத்தே பிறந்தாள் ஒருவிழுந்தான்கிடக்கையென்கிறது "யதஃகுதஶ்சிஜ்ஜாதா" (யதஃ குதஶ்சிஜ்ஜாதா) என்று வ்யாக்யாநம்பண்ணினான் உடாலி. இந்நிலத்திற்பிறவாமை இவளுக்குக் கொடுமைவிளைந்ததேன்கிறானிறே. தேசந்தானே யெல்லாநன்மைகளையும் பிறப்பிக்கவற்றாயிருக்குங் காணும். இவ்வூரிலவர்கள் அல்லாதாரோபாதியும்உண்டுடுத்துத் தடித்து வார்த்தைசொல்லித் திரிந்து, பெருமாளுக்கு வருவதொரு ப்ரயோஜநத்தோடு விரோதித்த

யாதி. "தேஶோயம் ஸர்வகாமதுக்" என்கிறபடியே அயோத்தியில் வாழுகையுண்டாயிருக்க, "ஒன்றின்றியே" என்கிறதென் ? என்ன - பெறுகிறதன் இத்யாதி. இத்தை கிம்புநர்ந்யாயத்தாலே ஸாதிக்கிறார்-பரமபக்தியோடுஇத்யாதி. ஆனால், "தேஶோயம் ஸர்வகாமதுக்" என்றதுக்குக் கருத்தென் ? என்ன - இனி,அங்கீகார இத்யாதி. அதாவது - தேஶவாசம் வ்யாஜமாத்ரமாகையாலே; "தேஶோயம் ஸர்வகாமதுக்" என்றது - தேசவைபவபரமென்றபடி. ஸாதநமென்றது - வ்யாஜமென்றபடி. தனித்வயத்திலே "வ்யாஜ்ஜோவ்யாப்தௌஸுநயநமஹோஶரணாமத:" என்கிற ஶ்லோகவ்யாக்யாநம்பண்ணுமிடத்தில், "ஶரணாமத:" என்றபதத்துக்கு - "தேஶம் ஸ்வதாரகத்வாவிஷயவாஸிந:" என்று உகந்தருளின தேஶங்களிலே அபிமாநித்தும் அவ்வெல்லைக்குள்ளே கிடந்துவிடுகையும் ப்ரபத்தி" என்றாரிறே. அன்றிக்கே, 'இன வாய்' இத்யாதி வாக்யத்வயமும் - "நற்பாலயோத்தியில்வாழும்" என்றதுக்கு அவதாரிகையென்னவுமாம். ஸப்தார்த்தம்-நல்லஇடத்தையுடைத்தான்இத்யாதி. "நல்லஇடத்தையுடைத்தான" என்றதால்ஸலித்தஸாவம்-நிலமிதிஇத்யாதி. நிலமிதி - நிலஸ்வபாவம். நிலமிதி ராமபக்தியைவிளைக்குமோ? என்ன-தேஶோயம்இத்யாதி. "வஸிஷ்டம்வாஸவம்ஸ்ஸ்வாந்தம்தேஶோயம் ஸர்வகாமதுக் । யஸ்மிந்வாஸாஜஜெத்ருஷ்ணாவாஸம்விஷ்யதாம் நஷ்டாஷ்ட்ர" இதி காருடபுராணே. நிலமிதியே ராமபக்திஜநகமானால்,மந்தரைக்கு ராமபக்தியில்லாமைக்குஹேதுவேது? என்ன-ஜ்ஞாதிதாஸீஇத்யாதி. "ஜ்ஞாதிதாஸீயதோஜாதாகைகேய்யாஸ்துஸஹோஷிதா । ப்ராஸாதம்சந்த்ரஸங்காஶமாருரோஹ யத்ருச்சயா" இத்யயோத்யாகாண்டே. "யதோஜாதா" என்றதுக்கு சங்காபூர்வகமாகஸாவம்-இதுக்குஇத்யாதி. ஒருவிழுந்தான்கிடக்கை - அப்ரஸித்தையாய்க்கிடப்பதொருத்தி. உக்தத்துக்கு ஸம்வாதம்-யதஃகுதஶ்சித்இத்யாதி. அப்படி வ்யாக்யாநம்பண்ணினவனுக்கு ஸாவம்தாம்கீழ்ச்சொன்னதேயென்கிறார்-இந்நிலத்தில்இத்யாதி. 'தேஶோயம்ஸர்வகாமதுக்', என்றதுக்குஅர்த்தம்-தேசந்தானேஇத்யாதி. இதுகண்டதுண்டோ?என்ன-இவ்வூரில்இத்யாதி. இவ்வூரென்றது - கோயிலை. இவ்வூரிலவர்களென்றது - கோயிலிலேயிருக்கிறவர்கள்என்றபடி. பெருமாளுக்கு - பெரியபெருமாளுக்கு. தடித்து - பூரித்து. "சத்ருசரீரம்போலே" என்றதுக்கர்த்தம்-

வாறே, சத்ருசரீரம்போலேயிருக்க, சரீரங்களைப் போகட்டுக்கோடுநிற்பர்கள். சத்ருசரீரம் போகடவேண்டுவதோன்றிறே. ''ராகவார்த்தே பராக்ராந்தா ந ப்ராணே குருதே † தயாம்''(ராகவார்த்தேபராக்ராந்தாநப்ராணேகுருதேதயாம்)- ப்ராணன்கள் பழைமையாலே பல்காட்ட, உடையவரும் நீங்களும் ஒருதலையானால் உங்களைக் கைக்கொள்ளப் போமோவென்னும்படியே. பழைமைபார்ப்பரோ, அவன் தானும்இவனைப்பற்ற''ப்ராணாநுபரித்யஜ்ய'' (ப்ராணுநபரித்யஜ்ய) என்னுநிற்க? [அயோத்தியில் வாழும்]- வர்த்திக்குமென்னாதே, வாழுமென்கிறது - அத்தேசவாஸமும், வாழ்வுமென்று இரண்டில்லாமையாலே; ''வேங்கடத்தைப்பதியாகவாழ்வீர்காள்'' என்றும், ''நல்லார்கள்வாழும் நளிரரங்கம்'' என்றும் சொல்லுகிறபடியே. அயோத்தியில் வாழுமென்கிறார் - ப்ராப்யதேசத்தில் வர்த்தநந்தான் வாழ்ச்சியாயிருக்குமிறே. நித்யப்ராப்யமான வஸ்துவிறே இங்கு ஸதாஸந்நிதி பண்ணுகிறது. நமக்குஅநுபவம் காதாசித்கமாகிறது அசித்ஸம்ஸர்க்கத்தாலேயிறே; பூமியில் ஐக்யத்தாலே அங்குத்தைச்கு ஒருகுறையில்லையிறே. [நற்பாலுக்குய்த்தனன்] - நல்ல ஸ்வபாவத்தையுடைத்தாம்படி செலுத்தினான். அதாவது - ஸ்வஸம்ஶ்லேஷ விஶ்லேஷைக ஸுகதுக்கராம்படிபண்ணுகை. இவற்றின் கர்மதாரதம்யத்தாலேவரிலிறே அவ்வோவவ்வோவளவுகளாயிருப்பது? அவனாலேவந்ததாகையாலே எல்லார்க்குமொக்க நன்மை விளைந்தபடி. ''மயாத்வம் ஸமநுஜ்ஞாதோ கச்ச லோகாநநுத்தமாந்'' (மயாத்வம்

சத்ருசரீரம்இத்யாதி. சத்ருசரீரம்போலேயிருக்க என்றது - முழுச்சொல்லு. சத்ருசரீரம்போலே என்றபடி. அவன்ப்ரயோஜநத்துக்காகத் தங்கள்ப்ராணன்களை உபேக்ஷித்தபேருண்டோ? என்ன-ராகவார்த்தே இத்யாதி; யுத்தகாண்டே. இதுக்கர்த்தம்-ப்ராணன்கள்இத்யாதி. உபைபண்ணுகைக்கு ப்ரஸக்தி - பல்காட்டஎன்றது. உடையவருமென்றது - ''ராகவார்த்தே'' என்றத்தைப்பற்ற. உடையவரும் நீங்களுமொருதலையானால்- இருவரும் நமக்கேஹேயமானால். ஒருதலைக்கே ஹேயமாகை. உடையவர் - ஶேஷிகள். ஶேஷியைவிட்டுஉங்களைக்கைக்கொள்ளப் போமோ? என்றபடி. பழமை பார்க்கவேண்டாவோ? என்ன - பழைமைபார்ப்பரோ இத்யாதி. ''க்ருதார்தோ வாயமிவாத்யைவ பரேஷாம் ஶரணாகத: । அரி: ப்ராணாந்பரித்யஜ்ய ரக்ஷிதவ்ய: க்ருதாத்மநா'' இதியுத்தகாண்டே. (௧அ-௧அ௨)கீழ்வாக்யத்துக்கு த்ருஷ்டாந்தம்-வேங்கடத்தை இத்யாதி. நாய்ச்சியார் திருமொழி, ''மதயானை'' இத்யாதி. ''பொல்லாக்குறளுருவாய்'' இத்யாதி. பதி-ஸ்தாநம். நளிரரங்கம் - ஸுபஹமான அரங்கம். நளிர் - குளிர்த்தி. வர்த்தநம் வாழ்ச்சியென்கைக்கு ஹேதுவருளிச்செய்கிறார்-ப்ராப்யதேசத்தில்இத்யாதி. ப்ராப்யதேசம் பரமபதமன்றோ? இது ப்ராப்யமாகைக்கு ஹேதுவேதென்ன-நித்யப்ராப்யமான இத்யாதி. நித்யப்ராப்யவஸ்து ஸந்நிஹிதமானால், நமக்கநுபவம் காதாசித்கமாவானென்? என்ன-நமக்குஇத்யாதி. அசித்ஸம்ஸர்க்கத்தாலே யாகவேணுமோ, விஷயஸங்கோசத்தாலேயானாலோ? என்ன-பூமி இத்யாதி. நற்பாலுக்கு - நல்லஸ்வபாவத்தை யுடைத்தாம்படி. உய்த்தனன் - நடத்தினான். புல்லெறும்பாதிகளுக்குஇந்தவவஸ்தையுண்டாகக்கூடுமோ? என்ன, அருளிச்செய்கிறார் - இவற்றின் இத்யாதிவாக்யத்வயத்தாலே. மநுஷ்யபாவனையாயிருக்கிறஇவர் நற்பாலுக்குய்க்கக்கூடுமோ? என்ன-மயாத்வம்இத்யாதி. ''யாமதிர் ஜ்ஞானிநாம் ஸாதுநாம் ஸாதூநாம் । ஸ்வாராவதிர் நாமயாவயாவஹைதிவ்யாயிநாம் । மயாத்வம் ஸமநுஜ்ஞாதோ

† 'க்ரவ்யதே' என்று பாடமிருப்பின் பொருள் சொல்வதற்குப் பொருந்தும். 'ராகவார்த்தே பராக்ராந்தா:' என்பதும், 'ந ப்ராணே க்ரவ்யதே தயாம்' என்பதும் ஓரிடத்திலுள்ளனவல்ல: வெவ்வேறிடத்திலுள்ளவை: அவை அர்த்தாநுசந்தானத்தின் பொருட்டு ஒருங்கே சேர்க்கப்பட்டுள்ளன என்பர்.

ஸமநுஜ்ஞாதோ கச்சலோகாநநுத்தமாந்) என்று இங்குண்டான பற்றறுத்து ஒருதேசவிசேஷத்தேறச்சென்று அநுபவிக்கும் அநுபவத்தைக்கொடுக்கவல்லவனுக்கு இங்குத்தன்னையொழியச்செல்லாமை விளைக்கை பணியுடைத்தன்றிறே. [நான்முகனார்பெற்றநாட்டுளே - நற்பாலுக்குய்த்தனன்] - ராஜா தன்னுடையானொருத்தனுக்கு ஒருநாட்டைக்கொடுத்தால் அவனுடையஆணையும் ஆஜ்ஞையுமாக அவனுடைய ஸ்வாதந்த்ர்யமே நடக்கும்படி பண்ணிக்கொடுக்குமாபோலே, ஸம்ஸாரி சேதநர்க்குத் தலையான சதுர்முகனுக்குக் கையடைப்பான நாட்டுக்குள்ளே, அவன் ஸ்வாதந்த்ர்யத்தையுந்தவிர்த்து, இவற்றின் கர்மபாரதந்த்ர்யத்தையும் தன்குணத்தாலே பதஞ்செய்து, தன்னைப்பெற்றபோது ஜீவிக்கும்படியாய்ப் பெறாதபோதுஉறாவும்படியான தன்மையையுண்டாக்கினான். ஆனபின்பு, அவனையொழிய வேறேயும் சிலவற்றைக் கற்பரோ? (க)

இரண்டாம் பாட்டு.

நாட்டிற்பிறந்தவர்நாரணற்காளன்றியாவரோ?
நாட்டிற்பிறந்துபடாதனபட்டுமனிசர்க்கா
நாட்டைநலியுமரக்கரைநாடித்தடிந்திட்டு
நாட்டையளித்துய்யச்செய்துநடந்தமைகேட்டுமே.

ஆ.—(நாட்டிற்பிறந்தவர்) - தான் திருவவதாரம்பண்ணியருளின திருநகரியிலே வர்த்திக்கிற ஜந்துக்களைத் தன்திருவடியே தாரகபோஷகபோக்யமாகப் பண்ணினானென்னும் இதோரேற்றமோ? மநுஷ்ய மாத்ரத்தினுடையதுஃகம் பொறுக்கமாட்டாமை தத்விரோதி நிரஸநம்பண்ணியருளின மஹாகுணத்தைப் பார்த்தாலென்கிறார்.

ராவணவ்யார்த்திகளான தேவர்களாலே யர்த்திதனாய், தனக்கு விஸத்ருஶமான மநுஷ்யலோகத்திலே தத்ஸஜாதீயனாய்வந்து திருவவதாரம்பண்ணியருளி, ஒரு மநுஷ்யமாத்ரம் துஃகப்படிலும் தான்அதிமாத்ரதுஃகிதனாய், தத்துஃகஹேதுபூதரான விராதப்ரப்ருதி ராவணபர்யந்தரான ராக்ஷஸரையெல்லாரையும், பித்ருவசனபரிபாலநவ்யாஜேநவநத்திலே யெழுந்தருளித்தேடி வயித்தருளி, இப்படிலோகத்திலே ரக்ஷித்தருளி, "தஸ்மிம் ஸ்ஸுக்ருதம் கார்யம் - ப்ருஹஸ்பதேர்விவரோ ஸுத" என்று ப்ரஹ்மா விண்ணப்பஞ்செய்தபோதே யெழுந்தருளாதே, ஸ்வவிஶ்லேஷத்தாலே விநஷ்டப்ராயமான திருநகரியில் சராசரஜந்துஜாதத்தையெல்லாம், மீண்டெழுந்தருளி யுய்யச்செய்து, பின்னைத் திருநாட்டிலே யெழுந்தருளின இம்மஹாகுணத்தைக்கேட்டும், சேதநராயிருப்பார்,

---

லோகாநநுத்தமாந்" இத்யாரண்யகாண்டே ஜடாயுஷம்ப்ரதிராமஃ. (சு௮-௩௦) பணியுடைத்தன்றிறே-வருத்தத்தையுடைத்தானதன்றிறே. நான்முகனார் நாடென்னாதே, "பெற்றநாடு" என்று விசேஷித்ததுக்குபாவம்-ராஜா இத்யாதி. கையடைப்பான - கைவசமான. பதம்செய்து - பக்வமாக்கி. நற்பாலயோத்தியில்வாழும் - புற்பாமுதலாப் புல்லெறும்பாதியான - சராசரம் முற்றவும் - நான்முகனார்பெற்றநாட்டுளே - ஒன்றின்றியே - நற்பாலுக்குய்த்தனன், ஆகையாலே கற்பாரிராமபிரானையல்லால் மற்றுங்கற்பரோ இத்யந்வயஃ. "'மற்றுங்கற்பரோ' என்றவிடத்திலே - கோயில்கந்தாடைநாயன், 'திருவடியும் திருப்பாணாழ்வாரும் தொண்டரடிப்பொடியாழ்வாருங் கூடியிருக்கிறதுக்குக் கருத்துத்தெரியுமோ' என்று ஸ்ரீபாதத்தில் முதலிகளைக்கேட்க, 'அடியோங்களுக்குத்தெரிந்ததில்லை' என்ன, ஆனால் 'நாந்யத் ஜாநாதி' என்றும், 'மற்றொன்றினைக்காணா' என்றும், அச்சுவைபெறினும்வேண்டேன்' என்றும் மூவரும் ஏகப்ரக்ருதிகளாகையாலே கூடவெழுந்தருளியிருக்கிறார்கள்' என்றருளிச்செய்தார்" என்று ப்ரஸாதித்தருளுவர். (க)

"ஸவாஸுநாராயணோதேவ:" என்று சொல்லப்படுகிற தசரதாத்மஜனான நாராயண னுக்கு அடிமையாகாதிருக்கும்படி எங்ஙனே? என்கிறார்.

ஒ.—இரண்டாம்பாட்டில், அங்குண்டான ஸகலசேதநரையும் லலது அறியாதபடி தன்குணத்தாலே பந்தித்து அசப்படுத்திவைத்து, அவர்களையிட்டு வைத்துத் தானேஎழுந்தருளாதே அவர்களையும் கூடக்கொண்டு திருநாட்டிலே எழுந்தரு ளினனென்று, கீழ்ச்சொன்னதிற்காட்டில், அதிககுணத்தை அருளிச்செய்கிறார்:—[நாட் டிற்பிறந்தவர் நாரணற்காளன்றியாவரோ] - ராமனாலே ரக்ஷிதராய் அவன்குணம் பரி மாறும் நாட்டிலேபிறந்தார் ஆச்ரிதவத்ஸலனான அவனுக்கல்லது வேறு சிலவர்க்கு அடி மைபுகுவரோ? [நாட்டிற் பிறநதென்றுதொடங்கி] - மநுஷ்யர்பக்கல் பரிவாலே கர்ம வச்யரோடொக்க நாட்டிலேபிறந்து அவர்கள் படுமளவன்றிக்கே ஜநகராஜபுத்ரீ விச்லே ஷாதி து:க்கங்களையும்பட்டு நிரபராதரான நாட்டைநலிகிற ராவணாதிராக்ஷஸரை இருந்த விடங்களிலேசென்று கொன்று, மீண்டுவந்து, தன்னுடைய ஸௌந்தர்ய சீலாதிகளைக் காட்டி இருந்ததேகுடியாக ரிப்பித்து.

ப.—அநந்தரம், அவதாரகார்யம் சமைந்தவளவிலே எழுந்தருளுகையன் றியே பதினோராயிரமாண்டு எழுந்தருளியிருந்து ரக்ஷித்த சீலாதிக்யத்தை யருளிச்செய் கிறார்.

நாட்டில் - தன்வாசியறியாத நாட்டிலே. பிறந்து - (ஆச்ரிதர் அர்த்தித்ததுக் காக கர்மவச்யர் பிறக்குமாபோலேவந்து) பிறந்து, ("ராஜ்ஞாஞ்ஞ ஸுத:" இத்யாதியாலே), படாதனபட்டு-அவர்கள் தாங்களும் படாத க்லேசத்தைப்பட்டு,மனிசர்க்கா-பின்பு பழி சொல்லும்படி க்ருதக்நரான மநுஷ்யர்க்காக, நாட்டை - அவர்கள் வர்த்திக்கிற நாட்டை, நலியும் - நலியக்கடவரான, அரக்கரை - ராக்ஷஸரை, நாடி - இருந்தவிடங்களிலே ஆராய்ந்து சென்று, தடிந்திட்டு - கொன்றிட்டு, (அநந்தரத்தில், "தசவர்ஷஸஹஸ்ராணி தசவர்ஷசதாநிச" என்று பதினோராயிரமாண்டு தன்சீலரூபசரிதங்களை உபகரித்து), நாட்டை, அளித்து - ரக்ஷித்து, உய்யச்செய்து - அபம்ருத்யு புகுராதபடி உஜ்ஜீவிப்பித்து, நடந்தமை - (பின்பு "ஸச்ரீரஸ்ஸமாருஹத்" என்கிற கணக்கிலே, அவ்வடிவோடே ஸபரிகரனாய்க்கொண்டு) எழுந்தருளின ப்ரகாரத்தை, கேட்டும் - ஸ்ரீராமாயண முகத் தாலே கேட்டிருக்கச்செய்தேயும், நாட்டில் - (அவன் சீலாதிகுணங்கள் நடையாடுகிற) நாட்டிலே,பிறந்தவர்- பிறக்கப்பெற்றவர்கள், நாரணற்கு- ("ஸவாஸுநாராயணோதேவ:" என்று)நிருபாதிக ஸம்பந்தத்தையுடைய சக்கரவர்த்தித் திருமகனுக்கு, ("வசவர்த்தீ ஸ்திதஸ்ஸதா" என்கிற இளையபெருமாளைப்போலே), ஆள் - அடிமையாவது, அன்றி - ஒழிய, ஆவரோ - வேறொருவர்க்கடிமையாவரோ? ஸத்தா நிபந்தநமன்றியேகுண நிபந்தநமாகவும் தாஸ்யம்பண்ணவேணுமென்று கருத்து. இப்பாட்டுக்களிரண்டிலும், முதற்பாட்டில் - ரக்ஷணத்தையும், இப்பாட்டில் - புருஷார்த்தப்ரதத்வத்தையுஞ் சொல் லுவாருமுளர்.

இ.—இரண்டாம்பாட்டில், தன்னை ஒழியச்செல்லாமையைப் பிறப்பித்து இங்கே அவர்களை இட்டுவைத்துத் தானேஎழுந்தருளுகை யன்றிக்கே, கூடக்கொண்டு போனானென்று, கீழ்ச்சொன்னதிற்காட்டில் அதிககுணத்தை அருளிச்செய்கிறார்.

[நாட்டிற்பிறந்தவர்] - ஒருநாட்டிற் பிறவாதார்இல்லையிறே; பெருமாள் ரக்ஷிக்கிறவெல்லையாய் அவர் குணங்கள் நடையாடுகிற தேசத்திலே பிறந்தவர்கள். ஸ்ரீராமாயணம் அவிழ்த்துக்கட்டாதவிடம் நாடல்ல, கொடுவிளைத்துாறு. "தைவம்ஸவதாரக்ஷாஸவிஷயவாஸிந:" என்று வழக்குச்சொல்லிப் பற்றலாம் விஷயம். [நாரணற்காளன்றியாவரோ]-நாராயணனென்கிறது-சக்ரவர்த்தி திருமகனை; "ஸஹி நாராயணோ தேவ:"என்றானிறே ப்ரஹ்மா தம்மைவேண்டாதாரையும்விடமாட்டாத வத்ஸலர்க்கு. "ரிவாணாவேஷிவஸ்தூ:"; தம்மையுகவாதகைகேயியையும் குறைசொல்லப்பொறாதவர், "க்ருதகாமோஸுஹ்ருஜ்ஜநோ ராஜா ராஜ்யம் ப்ரஸாதி" என்று இளையபெருமாள் ஸர்ஹிக்க, "நதேம்பாமத்யமாதாத கர்ஹிதவ்யாகதஞ்சந । தாமேவேக்ஷ்வாகுநாதஸ்ய பரதஸ்ய கதாம் குரு"என்றவரிறே. [ஆளன்றியாவரோ] - "மற்றுங்கற்பரோ"-என்றார்; கல்விக்கு பலம் ஆளாகையிறே. இவரையொழியப்புறம்பே சிலர்க்குஆளாகக்கடவரோ? [நாரணற்கு] - தன்னை இல்லைசெய்கிறார்க்கும் அந்தர்யாமியாய் ஸத்தையே நோக்கிக்கொடுக்குமவனென்றுமாம். [நாட்டிற்பிறந்து] - ப்ரஹ்மாதிகள் தேசத்தையும் அருவருத்துவர்த்திக்கிறநித்யஸூரிகளோடேவர்த்திக்கிறவன் அந்தப்ரஹ்மாதிகளும்குத்ஸிக்கும் பூமியிலேபிறந்து, ஸம்ஸாரிகள்தன்னில் அறிவுபிறந்தாரும் கால்கடைக்கொள்ளுகிற தேசத்திலேயிறே பிறந்தது; அகர்மவஶ்யனானதான் கர்மவஶ்யரோடொக்க ஸஹவாஸம் பண்ணிப் பிறந்து. [படாதனபட்டு] - ஸம்ஸாரிகள் கர்மத்தாலே படுமளவன்றிறே அவன் அநுக்ரஹத்தாலே பட்டது. ஒருசேதநன் பிறந்தால், இருக்குநாள் தானும் ஸ்த்ரீயும் சேரவிருந்து ஜீவித்துப்போகாநின்றான்; அவ்வளவுமன்றிக்கே, பிராட்டி ஓரிடத்திலும் தான்ஓரிடத்திலும் வர்த்திக்கவேண்டிற்றிறே. "ராஜ்யாத்ப்ரம்ஶ:". இப்படிபடுகிறதுதான் ஆருக்காக? என்னில்,—[மனிசர்க்கா] - தங்களுக்காக அநுக்ரஹத்தாலேபடுகிற இம்மஹாகுணத்தை குணஹாநியாகச் சொல்லும் க்ருதக்நர்க்காக. "ராவணபவநத்திலே இருந்தவளோடேசேரவர்த்தியாநின்றான்" என்றுசொன்னதிறே, இரண்டாம்பிரிவுக்கு முதல். கர்மவஶ்யரைச் சொல்லும் வார்த்தையைச் சொன்னார்களிறே. [நாட்டைநலியுமரக்கரை]- ஒருவன் விரோதித்தால், அத்தைப் பொறுக்குந்தனையளவில்லாதவன் அவனை அழியச்செய்ய ப்ராப்தம்; அங்ஙனன்றிக்கே, இருந்ததே குடியாக உண்டு உடுத்துத் திரிகிறது ஹேதுவாக நலிகிற ராக்ஷஸரை. [நாடித்தடிந்திட்டு] - அவர்கள் வந்து மேலிட்டாலன்றிக்கே, அவர்கள் இருந்தவிடங்களிலேசென்று அவர்களை அழியச்செய்து. ஸர்வஸாதாரணன் நலிகிறது, நிர்நிபந்தநமாக விபூதியை நலிகையாலேயிறே. [நாட்டையளித்து] - போந்தகாரியம் தலைக்கட்டிற்றாகில், "இனிப் போவோம்" என்னாதே, மீண்டும் தம்முடைய ஸௌந்தர்யாதிகளாலே இருந்ததே குடியாக வாழ்வித்து. தம்வரவு பார்த்திருக்கிற ஸ்ரீபரதாழ்வானையும், அபிஷேகமஹோத்ஸவங்கள் காண ஆசைப்பட்ட தாய்மாரையும், பின்தொடர வழிமாற்றிப்போந்நாட்டையும், "கடல் ஞாலத்தளிமிக்கான்" என்கிறபடியே நெடுநாள் ஆஶ்வஸிப்பித்து. [உய்யச்செய்து] - தம்மைப்பெறுகைக்கு அவர்கள் பக்கல் ஒருகைம்முதலின்றிக்கே அஸத்ஸமமாயிருக்கிறவர்களை, "ஸந்தமேநம்" என்னும்படிபண்ணி. [நடந்தமைகேட்டும்] - "திர்யக்யோநிகதாஶ்சாபி ஸர்வே ராமமநுவ்ரதா:" என்றும், "விவேஶ வைஷ்ணவம் தேஜஸ்ஸஶரீரஸ்ஸஹாநுக:" என்றும், "அன்று சராசரங்களை வைகுந்தத்தேற்றி" என்றும் சொல்

னுகிற ப்ரயாணவ்ருத்தாந்தத்தைக் கேட்டும், நாட்டிற்பிறந்தவர் நாரணற்காளன்றி யாவரோ ?

ஈடு.—இரண்டாம்பாட்டு. " 'மேல் சொல்லப்புகுகிற குணங்களை ப்ரக்ருத்ய கீழிற்பாட்டிற்சொன்ன குணம் குணஹாநி' என்னும்படி மேலிற்பாட்டுக்கள் குணுதிக்யஞ்சொல்லுகிறது" என்று அருளிச்செய்வர்.

[நாட்டிற்பிறந்தவர்] - இப்பாட்டில், திருவயோத்யையிலுள்ளார் ராமகுணைகபாரகராகப் பண்ணினவளவேயோ, நாட்டிலுள்ளாருடையவிரோதிகளைப்போக்கி ரக்ஷிக்கும்படிக்கு ? என்கிருர். [நாட்டிற்பிறந்தவர்] - நாட்டிற்பிறவாதாரில்லையிறே. ராம குணங்கள் நடையாடுமிடத்திலேபிறந்தவர்களென்கிறது. பெருமாளுடைய எல்லையில்லாத இடமில்லையிறே. " [illegible] " (இக்ஷ்வாகூணுமியம்பூமிஸ்ஸஶைலவநகாநநா) " [illegible] " (விதிதஸ்ஸஹிதர்மஜ்ஞ:)-ராவணு! பெருமாளுடைய குணங்கள் கேட்டறியாயோ ? என்றுளிறே. அக்குணங்கள் நடையாடாததோரிடம் உண்டாகிலிறே, அவ்விடம் இவரெல்லையன்றிக்கேயிருப்பது ? நாட்டில் பிறக்கையாவது - அவருடைய எல்லைக்குள்ளே பிறந்து, அவர்தோள் நிழலிலே ஜீவிக்கை. [நாரணற்காளன்றியாவரோ] - பெருமாளுக்கு ஆளன்றியாவரோ என்றபடி. ப்ரஹ்மாதிகளும் "[illegible]" (பவாந்நாராயணோ தேவ:) என்றுர்களிறே. "ஒருவன்சோற்றையுண்டவர்கள் அவனையொழிய வேறொருவற்

இரண்டாம்பாட்டு.—நாட்டில் இத்யாதி. இனி மேலுள்ளபாட்டுக்களிற் சொல்லுகிற குணங்களெல்லாம் கீழ்ச்சொன்ன குணங்களைப் பற்றஅதிகமென்னுமிடம் தோன்றவருளிச்செய்கிருர் - மேற்சொல்லப்புகுகிற இத்யாதி. ப்ரக்ருத்ய - அபேக்ஷித்தென்னுதல்.

முதற்பாட்டைப்பற்ற இரண்டாம்பாட்டில் அதிகமானகுணம் இன்னதென்கிருர் - இப்பாட்டில் இத்யாதி. 'ரக்ஷிக்கும்படிக்கு' என்றவநந்தரம், 'அதிசயமில்லையோ ? என்கிருர்' என்று ட்டிக்கொள்வது. நாட்டிற்பிறவாதாரில்லையிறே யென்றது-சேதநராகில் ஒருகுறிச்சியில் பிறவாதார் என்றபடி. இவ்வாக்யத்துக்கு அநந்தரம், ஆனுலிதுக்கர்த்தமேதென்னில் என்றத்யாஹரித் காள்வது. [illegible] 'ராமகுணங்கள் நடைய [illegible] டம்' என்னவேணுமோ ? பெருமாளுடைய ஸீமையிலேபிறந்தவர்க ளென்னவொண்ணுதோ? என்ன; அதுக் கந்யதாஸித்தி யருளிச்செய்கிருர்-பெருமாளுடைய இத்யாதிவாக்யத்வயத்தாலே. "[illegible] [illegible]" இதி கிஷ்கிந்தாகாண்டே வாலிநம் ப்ரதி ராம:. "ராமகுணங்கள் நடையாடுமிடத்திலே பிறந்தவர்கள்" என்றதுக்கும் அந்யதாஸித்தியுண்டென்கிருர்-விதித இத்யாதி. அதாவது - ஶத்ருகோஷ்டியிலும் குணங்கள்நடையாடுகையாலே இவ்வர்த்தமுங்கூடாதென்றபடி. கீழ்ச்சொன்ன அந்யதாஸித்தியிரண்டையும் சேரப்பிடித்தருளிச்செய்கிருர் - அக்குணங்கள் இத்யாதி. ஆனுல் ஸித்தாந்தார்த்தமேதென்ன - நாட்டிற்பிறக்கையாவது இத்யாதி. "[illegible]" இதி ஸுந்தரகாண்டே ராவணம்ப்ரதிஸீதா. "நாரணன்" என்றுல் பெருமாளைக்காட்டுமோ ? என்ன-ப்ரஹ்மாதிகளும் இத்யாதி. "[illegible]" இதி ராவணவதாநந்தரே ராமம்ப்ரதி ப்ரஹ்மா(கக௦-கரு). நாட்டிற்பிறந்தால் நாரணற்

குக் காரியஞ்செய்வர்களோ?'' என்னுமாபோலே. [நாரணற்கு] - வரையாதே எல்லா ரோடும் பொருந்துகையும், ஆஶ்ரிதர்க்காகத் தன்னை ஓக்கி வைக்கையும், அவர்களுக் காகத் தன்மார்பிலே அம்பேற்கையும், அவர்கள் விரோதிகளைப்போக்குகையும் ஆஶ்ரித வத்ஸலனு யிருக்கையும், அவர்கள்தோஷநிர்ஶநம்பண்ணிவிட்டுப்போகமாட்டாமையும், இவையெல்லாவற்ருலும் பெருமானை-''நாராயணன்''என்னத் தட்டில்லையிறே.[ஆளன்றி யாவரோ]-கீழிற்பாட்டிலே—''கற்பரோ''என்றது; இங்கே, [ஆளன்றியாவரோ]-என்றது; கல்வியினுடையஃபலம் ஆளாகை என்கிறது.[பிறந்தவர்-ஆளன்றியாவரோ] - ''**ஸ்ருஷ்டஸ்த்வம்வநவாஸாய**'' (ஸ்ருஷ்டஸ்த்வம்வநவாஸாய) என்னுமாபோலே; ஜநித்தவர்கள் ஜந்மஃபலத்தை இழப்பரோ?என்றபடி.வகுத்ததுறையில் பாரதந்த்ர்ய மாகையாலேவாசி யறிந்தஇவர்களுக்குஉத்தேஶ்யமாய்த்தோற்றுமிறே;வகாததுறைகளில்பண்ணினவாஸநை யாலே''இதுபுருஷார்த்தமோ?''என்றுதோற்றுகிறது[நாட்டிற்பிறந்து]-அஸ்ப்ருஷ்டஸம்ஸார ஶந்தனுயிருக்கிறவன், கர்மவஶ்யருங்கூட அருவருக்கும் தேசத்திலே பிறந்து. '**ஸஹி தேவை:**''(ஸஹிதேவை:)இத்யாதி''**ஸ:-ஜஜ்ஞே-ஹி**''(ஸ:-ஜஜ்ஞே-ஹி) -''கர்மநிபந் தநமாக ஜந்மமில்லை'' என்று ப்ரமாணப்ரஸித்தனுனவன்கிடீர்கர்மவஶ்யர்க்கும் இவ்வரு காய்வந்து பிறந்தான் என்றபடி. இப்படி பிறக்கைக்கடியேன்? என்னில்,—''**அர்த்தித:**'' (அர்த்தித:) என்கிறது ; அவர்களிரப்புக்காக என்றபடி. இரப்புத்தான் இச்சையை யும்பிறப்பிக்குமாகாதே ! ''**இச்சாக்ருஹீத**'' (இச்சாக்ருஹீத) இறே ''**தேவை:**'' (தேவை:) - தங்கள் கார்யத்துக்காக இரந்து பிறக்கப்பண்ணிக் காரியந்தலைக்கட்டின வாறே எதிரிட்டு ''**ஈஶ்வரோஹம்**'' (ஈஶ்வரோஹம்) என்றிருப்பார்க்காகக் கிடீர் !

காளாகவேணுமோ? என்ன - ஒருவன்சோற்றை இத்யாதி.இவர் ''நாரணன்'' என்கைக்கு-கீழேப்ரமா ணங்காட்டி, உபபத்திகாட்டுகிருர் - வரையாதே இத்யாதி. வரையாதே - தாரதம்யம் பாராதே. ஓக்கி வைக்கை - ஆக்கிவைக்கை. கீழே - ''கற்பரோ'' என்றுசொல்லி, இங்கே - ''ஆளன்றியாவரோ'' என்றதால் ஃபலித்ததோரர்த்தவிசேஷம் - கீழிற்பாட்டிலே இத்யாதி. ''பிறந்தவர் - ஆளன்றியா வரோ'' என்றதால் 'ஃபலித்தவர்த்தம் - ஸ்ருஷ்டஸ்த்வம் இத்யாதி. ''ஸ்ருஷ்டஸ்த்வம்வநவாஸாய ஸ்வநுரக்தஸ்ஸுஹ்ருஜ்ஜநே'' இத்யாதி லக்ஷ்மணம்ப்ரதி ஸுமித்ரா. ''ஸர்வம் பரவஶம் து:கம்'' என்று - பாரதந்த்ர்யம் து:கரூபமாயிருக்க, இத்தைக் கல்விக்குஃபலமாகச் சொல்லலாமோ? என்ன - வகுத்ததுறை இத்யாதி. இவர்களுக்கு - ஆழ்வார்களுக்கு. நமக்கப்படி தோற்றவில்லையே என்ன - வகாத இத்யாதி. வகாததுறை - அப்ராப்தவிஷயம். இங்கேவந்து பிறந்தது குணமாகைக்கு உறுப்பாக, அவனுடையமேன்மையையும் ஸம்ஸாரத்தினுடைய தண்மையையும் அருளிச்செய்கிருர் - அஸ்ப்ருஷ்ட இத்யாதி. அப்படிபிறந்தானே? என்ன, ப்ரமாணம் - ஸஹி இத்யாதி. 'ஸஹிதேவைருதீர்ணஸ்ய ராவணஸ்ய வதார்த்திபி: । அர்த்திதோ மாநுஷே லோகே ஜஜ்ஞே விஷ்ணுஸ்ஸநாதந:'' இத்யயோத்யாகாண்டே வால்மீகி:.(க-எ) ஸ: - ப்ரஸித்திபரமான தச் சப்தத் துக்குஉக்தார்த்தத்திலேநோக்கென்கைக்காக,''ஸஹி-ஜஜ்ஞே'' என்றந்வயித்து, இரண்டுக்கும் அர்த் தம்-கர்மநிபந்தநமான இத்யாதி.''ஜாயமாந:-ஸம்ஸவாதி'' என்னுநிற்க,''இரப்பாலேபிறந்தான்'' என்கிறதென்? என்ன - இரப்புத்தான் இத்யாதி. ''இச்சையாலேயவதரிக்கும்'' என்னுமதுக்கு ப்ர மாணம் - இச்சாக்ருஹீதவிறே என்று. இச்சாக்ருஹீதாபிமதோருதேஹ:'' இத்யாதி. இரக் கிறவர்கள் தான் திருவடி திருவநந்தாழ்வானல்ல, அர்மாநிகளாய் ஸ்வகார்யபரானவர்கள்கிடீர்என் கிருர் - தங்கள் கார்யத்துக்கு இத்யாதி. ''ஸ்வகார்யபரர்'' என்னுமதுக்குப்ரமாணம்- நீணகர் இத்யாதி.

''நீணகர்நீளெரிவைத்தருளாய்'' என்பர்கள் - லங்கையைச் சுட்டுத்தரவேணுமென்பார்கள். ''உதீர்ணஸ்யராவணஸ்ய'' (உதீர்ணஸ்யராவணஸ்ய)-பயாவஹனான பையல் தானே வரவு பலத்தாலே யழியச் செய்யவேண்டும்படி விஞ்சினபடி. ''வதார்த்திபி:'' (வதார்த்திபி:) - தாங்கள் பட்ட நலிவாலே திருவுள்ளத்துக்குப் பொருந்தாதவற்றையும் விண்ணப்பஞ் செய்தார்கள். '' ஒருவனை யழியச்செய்ய ஒருநாடாகப்பிழைக்குமாகிலாகாதோ ?'' என்றுஅழியச்செய்தானத்தனை. ''அர்த்தித:'' (அர்த்தித:) - * தன்னுடைச் சோதிக்கு எழுந்தருளுந்தனையும் திருவுள்ளத்திற்பட்டுக்கிடந்ததிதுவே. ''அர்த்தித:'' (அர்த்தித:)-உபாஸித்தவர்களல்ல. ''மாநுஷேலோகே''(மாநுஷேலோகே) - ஆக்கனனதேவர்கள், மநுஷ்யகந்தத்துக்கு ஊர்ஹுபண்ணி பூமியிலிழிய அருவருத்து, ஒன்றரை யோஜனைக்கவ்வருகே நின்று ஹவிஸ்ஸுக்கோள்வர்கள்; அவர்கள் மநுஷ்யஸ்த்தாநத்திலேயாம்படியான தத்த்வங்கிடீ ரிங்கேவந்து பிறந்ததென்றபடி. * மனிசர்க்குத் தேவர் போலத் தேவர்க்குந் தேவனிறே. ''ஜஜ்ஞே'' (ஜஜ்ஞே) - ஆவிர்ப்பூதமானமாத்ரமன்று; நாட்டார் பத்துமாஸம் கர்ப்பவாஸமநுபவிக்கில் பன்னிரண்டுமாஸமிறே இவன்அநுஹவித்தது; ''ததஶ்சத்வாதஶேமாஸே'' (ததஶ்சத்வாதஶேமாஸே) என்றும், ''ஜாதோஹம்யத்தவோதராத்'' (ஜாதோஹம்யத்தவோதராத்) என்றும்; ''விஷ்ணுஸ்ஸநாதந:'' (விஷ்ணுஸ்ஸநாதந:); நாட்டிற்பிறந்துஇத்யாதி–,அகர்மவஶ்யனானதான்கர்மவஶ்யரோடே ஸஜாதீயனாய் நாட்டிலே வந்துபிறந்து, அவர்கள்படும் து:கத்தளவன்றிக்கே, கடலுக்கு அக்கரையிலே உயிரும் இக்கரையிலே உடலுமாம்படியான ஜநகராஜபுத்ரீ விஶ்லேஷமென்ன, பெரியவுடையார் நிர்யாணமென்ன, ஏவமாதி து:கங்களையும்பட்டு, அதுக்குமேலே, செய்தநன்றியறியாத மனிசர்க்காக. நிரபராதமான நாட்டை நலிகிற ராவணாதிகண்டகரை, ''பொருந்தார்கைவேல்நுதிபோல் பரற்பாயமெல்லடிகள் குருதிசோர - விரும்பாத கான்விரும்பி,'' ''எவ்வாறுநடந்தனை எம்மிராமாவோ'' என்கிறபடியே, அவர்களிருந்தவிடங்களிலே தேடிச்சென்று கொன்று. லங்காத்வாரத்திலே விஜயஸ்ரீபரிவ்ருதராய்க் கொண்டு எழுந்தருளிநிற்க, அவ்வளவிலே ப்ரஹ்மாதிதேவர்கள் வந்து, ''தஷிஷம் நக்ஷ

பாசுரத்துக்கர்த்தம்-லங்கையை இத்யாதி.ராவணசப்தார்த்தம் - பயாவஹனென என்று. ''ஸஹஸ்ரஶம்ஸவ்யஸாதநாஷ'' என்றிருக்கிறவனை இதுக்காக அர்த்திக்கலாமோ? என்ன - தாங்கள் பட்ட இத்யாதி. தன்திருவுள்ளத்துக்குப் பொருந்தாதத்தைச் செய்வானென்? என்ன - ஒருவனை இத்யாதி. ''அர்த்தித:'' என்ற பூதார்த்ததாத்பர்யம் - தன்னுடைச்சோதி இத்யாதி. அதாவது - ''யதீஷ்ரமேஶ:'' இத்யாதிப்படியே பிறப்பட்டோமென்று புண்படுகிறானென்றபடி. ஹாவாந்தரம் உபாசித்தவர்களல்ல என்று. ''விஷ்ணு:'' என்று - அவன் பெருமையையும், பிறந்த ஸ்த்தலத்தின் கொடுமையையும் அருளிச்செய்கிறார் - ஆக்கனன் இத்யாதிவாக்யத்வயத்தாலே.ஆக்கனன - ஸ்ருஜ்யரான. ''அவர்கள் மநுஷ்யஸ்த்தாநத்திலே யாம்படியான தத்த்வம்'' என்றதுக்கு ப்ரமாணம்-மனிசர்க்கு இத்யாதி. ''ஜஜ்ஞே'' என்றதுக்குஹாவம் - ஆவிர்ப்பூதம் இத்யாதி. பிறந்ததுக்கு ப்ரமாணாந்தரம் - ஜாதோஹம் இத்யாதி. ஸ்வதோஹம்யஸ்யாவஸேவ்யம் வஸ்த்ராயிஷ்ணாதஷ்யதே। ஸவாஸஞ்செவிஸஜ்ஞாதம் ஜாதோஹம்யத்தவோதராத்'' இதி பஞ்சமேம்ஶே த்ருதீயே (கச).
''நாட்டிற்பிறந்து'' என்று தொடங்கி; ''நாட்டையளித்து'' என்னுமளவும் ஶப்தார்த்தமருளிச்செய்வதாக - நாட்டிற்பிறந்து இத்யாதி என்கிறார். ''பிறந்து'' என்றதுக்குஹாவம் - அகர்மவஶ்யனென இத்யாதி. ''மனிசர்க்கா - தடிந்திட்டு'' என்றந்வயிப்பது. தடிந்திட்டு - கொன்று. 'அளிமிக்கானென்னும்

தம்கார்யம் - ப்ரஹ்ருஷ்டோ திவமாக்ரம:'' (ததிதம்நஃக்ருதம்கார்யம்-ப்ரஹ்ருஷ்டோ திவமாக்ரம) என்று''நாங்கள்அர்த்தித்தவையடைய எங்கள்அளவுபாராதேதேவர்செய்தருளிற்று; இனி, * தன்னுடைச்சோதியேற எழுந்தருளவமையும்'' என்ன, அவ்வளவிலே ருத்ரன், ''நாடடைய தேவரீருடைய விஶ்லேஷத்தாலே விநஷ்டப்ராயமாய்க் கிடக்கிறது; திருத்தாய்மாரையும் திருத்தம்பிமாரையும் திருப்படைவீட்டிலுள்ள ஜநங்களையும், மீண்டுபுக்கு சிலநாளெழுந்தருளியிருந்து ஈரக்கையாலே தடவி ரக்ஷித்தெழுந்தருள வேணும்'' என்ன; ''கடல்ஞாலத்தளிமிக்கான்'' என்னும்படியே பதினோராயிரமாண்டு எழுந்தருளியிருந்து ரக்ஷித்தபடியைச் சொல்லுகிறது ''நாட்டையளித்து''என்று. இதுக்காகவிறே, முக்கண்ணனை - ''**ஷடர்த்தநயநஶ்ஶ்ரீமாந்**'' (ஷடர்த்தநயநஶ்ஶ்ரீமாந்) என்றது; இல்லையாகில், பிக்ஷுகனை ''ஶ்ரீமாந்'' என்ன விரகில்லையிறே. [உய்யச்செய்து] - நெடுநாளிருந்து தன்.ஞலல்லது செல்லாதபடி பண்ணி, இட்டுவைத்துப்போகாதே கூடக் கொடுபோய் உஜ்ஜீவிப்பித்தபடியைச் சொல்லுகிறது. [நடந்தமை கேட்டுமே] - ''**திர்யக்யோநிகதாஶ்சாபி ஸர்வே ராமமநுவ்ரதா:**,'' (திர்யக்யோநிகதாஶ்சாபிஸர்வே ராமமநுவ்ரதா:) ''**விவேஶ வைஷ்ணவம்தேஜ ஸஶரீரஸ்ஸஹாநுக:**'' (விவேஶ வைஷ்ணவம்தேஜஸ் ஸஶரீரஸ்ஸஹாநுக:) என்கிறபடியே தன்னுடனேகூடக் கொடு போனபடியைச் சொல்லுகிறது. ''இன்னவிடத்திலே கொடுபோய்வைத்தான்'' என்று ஸம்ஶயிக்க வேண்டாதபடி யருளிச்செய்து வைத்தாரிறே ஆழ்வார்; ''அன்றுசராசரங்

படியே' தயாளுவாகையாலே என்று கூட்டுவது. இதுக்காகவிறே என்றது - ''எழுந்தருளியிரும்'' என்று சொன்னதுக்காகவிறே என்றபடி. ''ஶ்ரீமாந்'' என்றதுக்கு - இது ஹாவமாகவேணுமோ? என்ன - இல்லையாகில் இத்யாதி. ''ததஶ்ஶ்ராவ ஶப்தம் ஸ ஸ்ருதிஸம்பவம் ஶுபம்'' இத்யாதி, ''கௌஸல்யாநந்தநம் ராமம் ஸர்வலக்ஷணஸம்யுதம்'' இத்யந்தம் பாலகாண்டே அஷ்டாதஶே. பெருமாள் திருமொழி,''பொருந்தாரித்யாதி''- சத்ருக்கள் கையில் வேல்முனையிட்டுவார்ந்தாற்போலே சுக்கான்பரல்களானவை பாய. பரல்களிலே மிதிக்கையாலே, மெல்லடிக்கள் குருதிசோரம்ருதுவானதிருவடிகள் ரக்தங்களைப் புறப்படவிட, 'விரும்பாதகான்விரும்பி' - சுகுமாரரல்லாதவரும் விரும்பாதகாட்டை, ''நான் போகச்சொன்னேன்'' என்னுமத்தாலே விரும்பி. எவ்வாறுநடந்தனே?- எப்படி நடந்துபோனீர்? என்றபடி. இந்தப்பாசுரம் ''வெவ்வாயேன்''என்கிறபாட்டிலே. (ததிதம்இதி):- ''ததிதம் நஃக்ருதம் கார்யம் அஸ்மாகம் புருஷர்ஷப । நிஹதோ ராவணோ ராஜந் ப்ரஹ்ருஷ்டோ திவமாக்ரம'' இதி ப்ரஹ்மா. ''இமம் ஶப்தம் குலம் வாக்யம் வ்யாஜஹார ஶுபாக்ஷர: । ஶ்ருத்வா ஸ்ரீமதாம் நீதம் கௌஸல்யாநந்தவர்தநம்'' இத்யாரப்ய, ''நந்திக்ராமம் ஸஹாநுஜ:'' என்னுமளவும் கடாக்ஷித்து - அவ்வளவிலே ருத்ரன் இத்யாதி, 'எழுந்தருளவேணுமென்ன. என்னுமளவும். ''ஷடர்த்தநயநஶ்ஶ்ரீமாந் மஹாதேவோ வ்ருஷத்வஜ:'' இதி ராவண வதாநந்தரே ''நடந்தமை'' என்றதுக்கு ஹாவம் - திர்யக் இத்யாதி. ''தேநாபி ஸஹிதே யோத்யா யாம் ஸர்வபூதேஷு விஶ்வஸ்தே । திர்யக்யோநிகதாஶ்சாபி ஸர்வே ராமமநுவ்ரதா:, ''பிதாமஹ வச: ஶ்ருத்வா விநிஶ்சித்ய மஹாமதி: । விவேஶ வைஷ்ணவம் தேஜ ஸஶரீரஸ்ஸஹாநுக:'' இத்யுத்தர ஸ்ரீராமாயணே. ராமாயணாதிகளிலே ''ப்ரஹ்மலோகத்தில் ஒருப்ரதேசத்திலே வைத்தான்'' என்றிருக்கிறதே? என்ன - இன்னவிடத்திலே இத்யாதி. 'அன்று சராசரங்களையித்

களை வைகுந்தத்தேற்றி'' என்று பரமபதத்தே கோடுபோனமையை. [நடந்தமைகேட்டும்] - இந்த ப்ரயாணவ்ருத்தாந்தத்தைக் கேட்டும். அதாவது - பசித்தார் இளைத்தாரைப் பார்த்துக் கோடுபோகையிறே. * புண்டரீகாக்ஷநாமஸங்கீர்த்தநாம்ருதமிறே பாதேயம். "ஜிதந்தே புண்டரீகாக்ஷ'' (ஜிதந்தேபுண்டரீகாக்ஷ) என்று கோடுபோலேகாணும் போவது. *"ராம꞉ கமலபத்ராக்ஷ꞉'' (ராம꞉கமலபத்ராட்ச꞉) இறே. (இப்படி யுஜ்ஜீவிப்பித்து நடந்தமைகேட்டும்- நாரணற்காளன்றியாவரோ ?கீழிற்பாட்டில்-ஶப்தாதிவிஷயப்ரவணராய், '''ஸர்வேஶ்வரன்' என்றுஒரு தத்த்வமுண்டு'' என்று கேட்டார்வாய்க்கேட்டிருக்கிறவர்களை, தான்வந்துஅவதரித்துத் தன் வடிவழகாலும் குணங்களாலும் வசீகரித்துத் தன்னையல்லதறியாதபடி பண்ணினுனென்று சோல்லிற்று; இப்பாட்டில் - இது ஓரேற்றமோ? தன்னுலல்லது செல்லாமையைப் பண்ணிப் போகட்டுப்போகையாகிறது படுகோலைக்காரரோபாதியிறே ; அங்ஙன்செய்யாதே தன்னோடேகூடக் கோடுபோய் ரக்ஷித்த குணத்துக்கு என்கிறுர். (உ)

மூன்றும் பாட்டு.

கேட்பார்கள்கேசவன்கீர்த்தியல்லால்மற்றுங்கேட்பரோ
கேட்பார்செவிசுடுகீழ்மைவசவுகளேவையும்
சேட்பாற்பழம்பகைவன்சிசுபாலன்திருவடி
தாட்பாலடைந்ததன்மையறிவாரையறிந்துமே.

ஆ.—(கேட்பார்கள்.) - மநுஷ்யமாத்ர து꞉கநிரஸநம் பண்ணியருளும் இது தான் ஒருகுணமோ, ப்ரதிகூலனை சிசுபாலனுக்குங்கூடத் தன்திருவடிகளைக்கொடுத்த இம்மஹாகுணத்தைப்பார்த்தால்? என்கிறுர்.

ஸ்வபரிவாத ஶ்ரவணைகஹோகரான ப்ரதிகூலருடைய செவிகளும் வேவ்படி பருஷபாஷணபரனாய் ப்ரதிஹ்வம் இம்மஹாபராத்யயுக்தனாயிருந்த சிசுபாலனுக்குங்கூடத்

யாதி' - பெருமாள்திருமொழி ; ஸ்பஷ்டோர்த்த꞉. ஸஹஸ்ரநாமபாஷ்யத்திலே "[illegible] ஸ்தவிஷ்ட꞉'' என்றவிடத்திலே, "[illegible]'' என்றதுக்கு - "[illegible]'' என்றாரிறே பட்டர். "நடந்தமை'' - நடந்த ப்ரகாரமென்றபடி. நடந்தப்ரகாரமேதென்ன - அதாவது இத்யாதி. 'பசித்தாரிளைத்தாரை' என்று முழுச்சொல்லு; அத்யந்தம் ஆர்த்தரையென்றபடி. அவன்பார்வை யாரகமோ? என்ன, ப்ரமாணம் - புண்டரீகாக்ஷ இத்யாதி. "[illegible] பாதேயம் புண்டரீகாக்ஷநாமஸங்கீர்த்தநாம்ருதம்'', ஸுலிதம் - ஜிதந்த இத்யாதி. பெருமாள் புண்டரீகாக்ஷரோ? என்ன - ராம இத்யாதி. "ராம꞉ கமலபத்ராக்ஷ꞉ ஸர்வஸத்த்வமநோஹர꞉। ரூபதாக்ஷிண்யஸம்பந்ந꞉ ப்ரஸூதோ ஜநகாத்மஜே'' இதி ஸுந்தரகாண்டே ஸீதாம் ப்ரதி ஹநூமான் (௩ரு-அ). இப்பட்டுக்கு அவதாரிகையிற் சொன்ன தாத்பர்யமொழிய தாத்பர்யாந்தரம் - கீழ்ற்பாட்டில் இத்யாதி. 'நாட்டிற்பிறந்தவர் - நாட்டிற்பிறந்து' என்று தொடங்கி, 'கேட்டும்-நாரணற்காளன்றியாவரோ? இத்யந்வய꞉. (உ)

தன்திருவடிகளைக் கொடுத்தருளின இஸ்ஸ்வபாவத்தை யறிவாரையறிந்துவைத்தும், ஸம்ஸாரவே மதுரமாயிருப்பதொன்றைக் கேட்கவேண்டி யிருப்பார், அவர்கள்பக்கலிலே சென்று இக்குணத்தையன்றி மற்றுமொன்றைக் கேட்பரோ? என்கிறார்.

ஒ.—மூன்றாம்பாட்டில், தன்னையல்லது அறியாதிருக்கிறவர்களைக் கூடக் கொண்டுபோனான் என்னுமிதிற்காட்டில் அதிககுணமான ஶிஶுபால விஷயீகாரத்தை அநுஸந்திக்கிறார். [கேசவன்] - கேஶிஹந்தா. [கேட்பாரென்று மேலுக்கு] - 'இவனை வையக்கேட்கவல்லோமே'' என்றிருக்கும் அவர்களுக்கும் பொறுக்கவொண்ணாதபடியான தண்ணிய வசவுகளேவையும் வழிப்பகைவனான ஶிஶுபாலன் ஸர்வேஶ்வரனுடைய திருவடிகளிலே சேர்ந்தபடி அறிவாரை அறிந்துவைத்தும்.

ப.—அநந்தரம், அநிஷ்டத்தை நிரஸித்து ரக்ஷித்தவளவன்றியே, அநிஷ்டகாரியான சிசுபாலனுக்கு மோக்ஷத்தைக் கொடுத்த குணாதிக்யத்தை யருளிச்செய்கிறார்.

கேட்பார்செவி-''பகவத்குணஹாநி கேட்கவேணும்'' என்று அபிஸந்திபண்ணியிருக்குமவர்கள் செவிக்கு, சுடு - அக்நிகல்பமாம்படி சுடக்கடவதாய், கீழ்மை - நிகர்ஷபாதகமான, வசவுகளே - பருஷோக்திகளையே சொல்லி, வையும் - வையுமவனாய், (ஹிரண்யராவணஜந்மங்களையே தொடங்கி), சேட்பால் - தூரகாலஸ்த்தனாய்க்கொண்டு, பழம்பகைவன் - பழைபதாகப் பகைவனாய்ப்போருகிற, சிசுபாலன் - சிசுபாலனானவன், திருவடி - நிருபாதிக ஸ்வாமியான க்ருஷ்ணனுடைய, தாட்பால் - திருவடிகளிடத்திலே, அடைந்த - ஸாயுஜ்யத்தை ப்ராபித்த, தன்மை - அஸாதாரணஸ்வபாவத்தை, அறிவாரை - அறிவாரான ஜ்ஞாநாதிகரை, அறிந்தும் - அறிந்துவைத்திருக்கச்செய்தேயும், கேட்பார்கள் - (தங்களுக்குஜ்ஜீவநப்ரகாரத்தைக்) கேட்கவேண்டியிருக்குமவர்கள், (அவ்வறிவுடையார் பக்கலிலே), கேசவன் - கேஶிஹந்தாவான க்ருஷ்ணனுடைய, கீர்த்தி - *(ஶிஶுபாலவைராநுபந்தாவுக்கு மோக்ஷப்ரதையான மௌக்த்ய)கீர்த்தியை, அல்லால் - ஒழிய, மற்றும் - விலக்காதார்க்கு மோக்ஷங்கொடுத்த வ்யக்த்யந்தரத்தை, கேட்பரோ-?

இ.—மூன்றாம்பாட்டில், கீழ்ச்சொன்னதிற்காட்டில் அதிககுணமான ஶிஶுபால விஷயீகாரத்தை அநுஸந்திக்கிறார். [கேட்பார்கள் இத்யாதி] - செவி உடையார், கேஶிஹந்தாவினுடைய கீர்த்தியை ஒழிய வேறொன்றைக் கேட்பரோ ப்ரியஹிதங்களுக்கு ப்ரகாஶகமாயிருப்பதொரு ஶப்தத்தைக் கேட்கவேணும் என்றிருப்பார்? கற்கையாகிறது - ஶாஸ்த்ரத்திலே அர்த்தத்தை வ்யுத்பத்திபண்ணுகை; கேட்கையாகிறது - அறிவுடையார் பக்கலிலே ப்ரியஹிதங்களைக் கேட்டறுதியிடுகை. [மற்றும் கேட்பரோ] - ராமாவதாரத்தில் இழிவார்க்கு அவர்பக்கல் உத்தேஶ்யபுத்தியைக்கொண்டு இழியவேணும்; ப்ராதிகூல்யமே பரிகரமாகத் தன்னைக் கொடுத்த அவதாரமிறே இது. வெளிச்சிறந்த காலத்திலேயிறே ராமாவதாரம்; கலிகாலம் ப்ரத்யாஸந்நமாயிருக்கிறகாலத்திலேயிறே கிருஷ்ணாவதாரம். ப்ராதிகூல்யத்தளவேதென்ன, [கேட்பார்செவி இத்யாதி]- கேட்பாராகிறார் - பகவந்நிந்தை பண்ணுவார்க்கு ஜீவநம்வைத்துக் கேட்குமவர்கள், அவர்கள் செவிக்குங்கூடக் கேட்கவொண்ணாதபடியான தண்ணிய வசவுகளேவையும். அவஶாரணத்தாலே - ப்ராமாதிகமாகவும் ஓர் ஆநுகூல்யம் கலவாதொழிகை.

இப்படி வைகைக்கு அடியென்? என்னில், [பழம்பகைவன்] - வழிப்பகைவனானவன். சேணென்று-மிகுதி. பாலென்று - ஸ்வபாவம. ப்ராதிகூல்யமேஸ்வபாவ

மாக உடையவன். அவன் ஆர் என்னில்?- [சிசுபாலன்] - [திருவடிதாட்பாலடைந்த]- ஸர்வ ஸ்வாமியுடைய பாதபார்ஶ்வததை ப்ராபித்த. இத்தையிறே - “ஸாயுஜ்யத்தை ஸாஷ்டிஃ” என்கிறது. திருவடிகளில்விச்லேஷமில்லாத கைங்கர்யத்தையிறே-“ஸாயுஜ்யம்” என்கிறது; “ஸாயுஜ்யம் ப்ரதிபந்நாயே”. [சிசுபாலன்] - ஶாஸ்த்ரங்களிற்சொன்ன அதிகாரிகளிலே ஒருத்தனல்லன்; விஷயவைலக்ஷண்யத்தாலே பெற்றவன். “வைது நின்னைவல்லவா பழித்தவர்க்கும்”,“பேரருளான் பெருமைபேசி யேசினர்”. [தன்மையறிவாரை யறிந்துமே - கேட்பார்கள் கேசவன் கீர்த்தியல்லால் மற்றுங் கேட்பரோ] - ஈஶ்வரனுடைய ஸ்வபாவத்தை யறிந்தவர்கள்பக்கலிலேசெவிதாழ்த்துவைத்தும், இஸ்ஸ்வபாவத்தை யறிந்து வைத்தும், இத்தால் சொல்லிற்றாயிற்று - ப்ராதிகூல்யமே யாத்ரையாயிருந்தவனுக்குத் தன்னாலல்லதுசெல்லாமையுடையார்பெறும் பேற்றைக் கொடுத்தான் என்றதாயிற்று.

ஈடு.—மூன்றாம்பாட்டு.சிசுபாலனையும் உட்படத் தன்திருவடிகளிலே சேர்த்துக்கோண்ட பரமக்ருபையையறிந்தவர்கள், கேசிஹந்தாவினுடைய கீர்த்தியையொழிய வேறொன்றைக் கேட்பரோ? என்கிறார்.

[கேட்பார்கள்] - கீழே - “கற்பரோ” என்றது. அதாவது-முதல் நடுவுஇறுதி தன்னெஞ்சிலே யூற்றிருக்கும்படி வாஸனைபண்ணுகையாயிற்று; இனி, கேட்கையாவது - வாஸனைபண்ணினனொருவன் ஓரர்த்தத்தை யுபபாதித்தால், அத்தைப்புத்திபண்ணி விஶ்வஸித்திருக்கை. நடுவிருந்தநாலுநாளும் தன்னெஞ்சு தெளிவுபிறந்ததில்லையே யாகிலும், விழுக்காட்டில்இருவர்க்கும் ஃபலமொத்திருக்கக்கடவது. †கற்றிலனாகிலும் கேட்க்வேண்டுவதுண்டிறே. கற்றுத்தேளியக்கண்டஅர்த்தத்தைக்கேட்டு விஶ்வசித்திருக்கை. கல்வியும் அதின்பலரூபமான கைங்கர்யத்திலும் அந்வயிக்கப்பேற்றிலனாகிலும், ஆசார்யன்பக்கலிலே ஓரர்த்தத்தைக் கேட்டமாத்ரமாயிருந்தாலும் தனக்கோராபத்திலே யுதவுகைக்கோருகுறையில்லை. இனி, தன்னிழவு - பரப்ரதிபாதந ஶக்தியில்

மூன்றாம்பாட்டு.—கேட்பார்கள் இத்யாதி. “சிசுபாலன்திருவடி” என்று தொடங்கி, “அறிந்தும் - கேட்பார்கள் கேசவன்கீர்த்தியல்லால் மற்றுங்கேட்பரோ” என்ற பதங்களைக் கடாக்ஷித்து அவதாரிகை - சிசுபாலனையும் இத்யாதி.

கீழே - “கற்பார்” என்றார், இங்கே - “கேட்பார்” என்கிறார்; இரண்டுக்கும் பதமேதென்ன - கீழே இத்யாதி. அதாவது - கற்கையாவதென்றபடி. ஊற்றிருக்கும்படி - மாறாதே அநுவர்த்திக்கும்படி. ஆனால் ஆசார்யஸந்நிதியிலே ஸம்ஶயவிபர்யயம்அறக் கற்றவனுக்கொழியக் கேட்டவனுக்கும் உஜ்ஜீவநமுண்டோ? என்ன - நடுவிருந்த இத்யாதி. விழுக்காட்டில் - பர்யவஸாநகதியிலே என்றபடி. இருவர்க்கும் - கற்றவர்க்கும் கேட்டவர்க்கும். ஃபலம் - மோக்ஷப்ராப்தி. கல்லாதவனுக்கு ஶ்ரவணாதிகாரந்தான் உண்டோ? என்ன - கற்றிலனாகிலும் இத்யாதி. ஏதத்விவரணம்- கற்றுத்தேளிய இத்யாதி. “நடுவிருந்த” இத்யாதிவாக்யவிவரணம் - கல்வியும் இத்யாதி. அதின் பலரூபமான கைங்கர்யமாவது - பிறரையும் தங்களோபாதி அப்யாஸத்துக்கு அதிகாரிகளாக்கி ஈஶ்வரன் திருவடிகளிலே சேர்த்து, அவனுக்கு முகவிகாஸத்தைப் பண்ணுகை என்றபடி. ‘தனக்கோராபத்திலே உதவுகைக்குஒருகுறையில்லை’ என்கிறவிடத்திலே - “ஶ்ரோத்ருணாமபி தேவாநாம் ந ஶ்ருணோத்யபி வாஸவ: । தேவிவாதிதஸ்ஸஞ்ஜாதஸ்ஸம்ஶயோ திவ்யசாயண:” என்கிற ஶ்லோகம் அநுஸந்தேயம். ஶ்ரோதாவுக்கு இப்படி பலமுண்டானவோபாதி, இங்கிருக்கிற நாலுநாளும் இரண்டிழவும் உண்டென்கிறார் - இனித்தன்இழவு இத்யாதி. “கேசவன்கீர்த்தியல்லால்

† கற்றிலனாயினுங்கேட்க லஃதொருவன், கொகத்தினாற்றுந்துணை - என்பது குறள்.

லாமையும், தன்னெஞ்சு தெளியாமையால் வருவதுமேயிறேயுள்ளது. [கேட்பார்கள்]- செவியில் தொளையுடையவர்கள். பகவத்குணங்கள் கேட்கையிறே செவிக்கு ப்ரயோஜநம்; "கேளாச்செவிகள்செவியல்லகேட்டாமே" என்னாநின்றதிறே; எறும்புவளையோபாதியிறே.[கேசவன்கீர்த்தியல்லால்] - விரோதிநிரஸநசீலனானக்ருஷ்ணன்கீர்த்தியல்லது வேறேசிலவற்றைக்கேட்பரோ ? பருவம் நிரம்பிக் கற்றபின்பல்ல விரோதிகளைப் போக்கிற்று; பூதனைதொடக்கமானவிரோதிகளைத் தொட்டிற்பருவத்தேயிறே போக்கிற்று. விரோதிநிரஸநந்தான்ஜ்ஞாததயாவன்று, ஸத்தயாபாதகமா யிருக்கிறபடி. நஞ்சுகொல்லுகிறது அறிவுண்டாயல்லவிறே. "வ்யாதிதாஸ்யோமஹாரௌத்ர ஸ்ஸோஸுர: க்ருஷ்ணபாஹுநா" (வ்யாதிதாஸ்யோமஹாரௌத்ர ஸ்ஸோஸுர:க்ருஷ்ணபாஹுநா) - கேசியானவன் வாயை யங்காந்துகொண்டு கண்டாரெல்லாரும் நடுங்கும்படி வந்து தோற்ற, - முக்யராயிருப்பார் த்வாரங்கண்டவிடத்தே கைநீட்டக்கடவதாயிருக்குமிறே,-அந்தவாஸனையாலே இவன் வாய்க்குள்ளேகையைநீட்ட, அபூர்வாநுபவத்தாலே கைவிம்ம வளர்ந்துகொடுத்தது ; அப்போது இடியேறுண்டமரம்போலே இருபிளவாய் விழுந்தான். [மற்றுங்கேட்பரோ] - கீழ்ச்சொன்ன ராமவ்ருத்தாந்தந்தான் கேட்பரோ ? இவர் ஸ்வபாவமிருந்தபடியென் ! "இராமபிரானையல்லால் மற்றுங்கற்பரோ" என்றார் - கீழ்; இங்கே – "கேசவன்கீர்த்தியல்லால் மற்றுங்கேட்பரோ" என்னாநின்றார் ; இது தனக்குஅடியென் என்னில்?- அவ்வவதாரத்தை யநுஸந்தித்தபோது "தயரதற்குமகன்றன்னையன்றி மற்றிலேன்தஞ்சமாக" என்பர்; இவ்வவதாரத்தை யநுஸந்தித்தபோது "நங்கண்ணன்கண்ணல்லதில்லையோர்கண்ணே" என்பர்; இப்படி இழிந்த துறைகள் தோறும் அழுந்தவல்லாரோருவரிறே.ஓரோகுணங்களை யநுபவிக்கப்புக்கால்

மற்றுங்கேட்பரோ" என்கையாலே - செவிக்கு ப்ரயோஜநம் இதென்கிறார் - செவியில்தொளை இத்யாதி. "செவிக்கு ப்ரயோஜநம்" என்றதின் வ்யதிரேகவித்யான அர்த்தத்தை அருளிச்செய்கிறார் - கேளாச்செவிகள் இத்யாதி. திருமொழி பதினோராம்பத்து எழாந்திருமொழி இரண்டாம்பாட்டு, "நீள்வான்" இத்யாதி. அவன்கீர்த்தியைக்கேளாத செவிகள் செவியல்ல என்றபடி. "செவியல்ல" என்பானென்? ரந்த்ரமிருக்கிறதே! என்ன - எறும்புவளை இத்யாதி. க்ருஷ்ணனென்னாதே, "கேசவன்" என்றதுக்குபாவம் - விரோதி இத்யாதி. விரோதி நிரஸநசீலமானபடியை விவரிக்கிறார் - பருவம்நிரம்பி இத்யாதி வாக்யத்வயத்தாலே. கற்றபின்பல்ல - ஜ்ஞாநம்பிறந்தபின்பல்ல என்றபடி. இத்தால் பலித்தவர்த்தமாதல், விவரணமாதல் - விரோதிநிரஸநந்தான் இத்யாதி. ஸத்தயாபாதகமென்றது - ஸத்தாப்ரயுக்தமென்றபடி. இது கூடுமோ? என்ன - நஞ்சு இத்யாதி. கேசியை ஸம்ஹரித்ததுக்கு ப்ரமாணம் - வ்யாதிதாஸ்ய: இத்யாதி. "வ்யாதிதாஸ்யோமஹாரௌத்ர ஸ்ஸோஸுர: க்ருஷ்ணபாஹுநா । நிபாதிதோத்விதா பூதோ வைத்யுதேந யதா த்ரும:" பஞ்சமேம்சே ஷோடசே. (கசு) அங்காந்துகொண்டு – திறந்துகொண்டு. பாஹுப்யாம் என்னாதே, "பாஹுநாபிபாதித:" என்றதுக்குபாவம் - முக்யராயிருப்பார் இத்யாதி. விம்ம - அதிகமாக: பெருக்க என்றபடி "மற்றும்" என்றதுக்கு - இதரவிஷயங்களாக - "செவியில்தொளை" இத்யாதிவாக்யத்திலே யருளிச்செய்து, அவதாராந்தரமாக அர்த்தாந்தரம் - கீழ்ச்சொன்ன இத்யாதி. வ்யாக்யாதாவின்ஈடுபாடு - இவர்ஸ்வபாவம் இத்யாதி. ஒவ்வொன்றில் இவர்க்கு உண்டான ப்ராவண்யாதிசயஞ் சொல்லுகிறதாகையாலே விரோதமில்லையென்று விவக்ஷித்து உத்தரமருளிச்செய்கிறார் - அவ்வவதாரத்தை இத்யாதி வாக்யத்ரயத்தாலே. ஓரோவவதாரங்களிலிவர்க்குண்டான ப்ராவண்யாதிசயத்தை ஸத்ருஷ்டாந்தமாக த்ருடீகரிக்கிறார் - ஓரோகுணங்களை இத்யாதி. "பகவத்குணங்களைக்கேட்பார் செவிசுடு" என்றால் இவன்பருஷோக்தியின் க்ரௌர்யம் ஸித்தியா

களில் கால்வாங்கமாட்டாதாற்போலே யாயிற்று, ஓரோவவதாரத்திலே யிழிந்தால் அவதாராந்தரங்களில் போகமாட்டாமையும். [கேட்பார்செவிசுடு கீழ்மைவசவுகளேவையும்] - இதுக்குக்கீழ் - ''கேட்பார்'' என்றதுபோலல்ல; கீழ்மைவசவுகளே கேட்பாரிறே-இங்கு. பகவந்நிந்தைக்கு ஜீவநம்வைத்துக் கேட்கும் தண்ணியவர்களுங்கூடப்பொறுக்கமாட்டாமை செவிபுதைத்து, ''இத்தனை யதிரச்சொன்னாய், இப்படிச்சொல்லப்பெறாய்காண்'' என்று சொல்லும்படியான வசவுகளே வைகை. [வசவுகளேவையும்] - அநுகூலராயிருப்பார்க்கும் அசித்ஸம்ஸர்க்கத்தாலே ப்ராமாதிகமாகவும் ஒருப்ராதிகூல்யம் விளையுமிறே ; அப்படியே இவனுக்கும் யாத்ருச்சிகமாக ஒருநல்வார்த்தையும் கலசுமோ ? என்னில் ; அதுவு மில்லை என்கிறது - ஏவகாரத்தாலே. அதுக்கடி சொல்லுகிறது மேல்: [சேட்பால் பழம்பகைவன்] - மிகவும் ஜந்மஶத்ரு என்றபடி; இந்தஜந்மமே யன்றிக்கே பூர்வஜந்மமே தொடங்கி சத்ருவாய்ப் போருகிறானிறே; இவன்ஓரோஜந்மங்களிலே பண்ணின ப்ராதிகூல்யத்துக்கு ஓரளவில்லையிறே ; இப்படிப்பட்ட ஜந்மந்தான் அநேகம். அவ்வவஜந்மங்களிலுண்டான காலத்தின்மிகுதியும், பண்ணின ப்ராதிகூல்யத்தினுடைய மிகுதியும், இவையெல்லாவற்றையும் நினைக்கிறது - பகையினுடைய பழமையாலே. அபுத்திபூர்வகமாகச் சொல்லிலும் வாஸநையாலே தப்பாதென்கை. அன்றூன்றகன்று அப்போதேதாய்முலையிலேவாய்வைக்கும். அது அஜ்ஜந்மத்திலேவாஸநை கொண்டன்றிறே; இவனுக்கும் இஜ்ஜந்மத்திலே பகவந்நிந்தைக்கடி - ஜந்மாந்தரவாஸநையிறே. [திருவடிதாட்பாலடைந்த] - ஸர்வஸ்வாமியுடைய பாதபார்ஶ்வத்தைக்கிட்டின. ஸாயுஜ்யலக்ஷண மோக்ஷமாகிறதுதான் இன்னதென்கிறது. அதாவது - விச்சேதமின்றிக்கே கிட்டிநின்று நித்யகைங்கர்யம்பண்ணப்பெறுகை. ''ப்ரஹ்ம வேத ப்ரஹ்மைவ பவதி'' (ப்ரஹ்மவேத ப்ரஹ்மைவபவதி) என்றும், ''பரமம் ஸாம்யமுபைதி'' (பரமம்ஸாம்யமுபைதி) என்றும், ''தம்மையேயொக்கவருள்செய்வர்'' என்றும், ''மம ஸாதர்ம்யமாகதா:'' (மமஸாதர்ம்யமாகதாஃ) என்றும், ''ஸஹ ப்ரஹ்மணா விபஶ்சிதா'' [?]

தென்ற திருவுள்ளம்பற்றி ''கேட்பார்'' என்றதுக்கு வேறேயர்த்தம் அருளிச்செய்கிறார் - இதுக்குக்கீழ் இத்யாதி. இதுக்குக் கருத்து - கீழ் ''கேட்பார்கள்'' என்றதுக்கு 'செவியில்தொளையுடையவர்கள்' என்றாற்போலே இங்கும் சொல்லப்போகாது; அர்த்தௌசித்யத்துக்காகவென்றபடி. ''கீழ்மைவசவுகளே - கேட்பார் செவிசுடு கீழ்மைவசவுகளேவையும்'' என்று, ''கீழ்மைவசவுகள்'' என்றத்தை இரண்டிடத்திலுங் கூட்டுவது. இப்படிச் சொல்லுகிறதுக்குபாவம் - இவன்வசவின் க்ரௌர்யம் ஸித்திக்கைக்காக என்கிறார் - பகவந்நிந்தைக்கு இத்யாதி. தண்ணியவர்களும் - நிக்ருஷ்டரும். அதிரநடுங்க. அவதாரணார்த்தம் - அநுகூலராய் இத்யாதி. ''சேட்பால்பழம்பகைவன்'' என்றதுக்குபாவம் - மிகவும் இத்யாதி. சேட்பழம்பகையைப் பாலாகவுடையவன்; ''சேண்'' என்று - மிகுதியாய், மிகவும் பழையதான பகையை ஸ்வபாவமாக வுடையவனென்று ஶப்தார்த்தம். மிகவும் ஜந்மஶத்ருவானபடி யென்? என்ன - இந்தஜந்மம் இத்யாதி. விவரணம் - இவன்ஓரோ இத்யாதி. பகையினுடைய பழமைசொன்னதுக்கு ப்ரயோஜநமேதென்ன - அவ்வவஜந்மங்களில் இத்யாதி. பலிதம் - அபுத்திபூர்வகமாக இத்யாதி. இஜ்ஜந்மத்தில் வாஸநையாலே யானாலோ? என்ன - அன்றீன்ற இத்யாதி. ''தாட்பாலடைந்த'' என்கையாலே - ஸாயுஜ்யமாவது ஐக்யமன்றென்று பரிஹரிக்கிறார் - ஸாயுஜ்யலக்ஷண இத்யாதி வாக்யத்வயத்தாலே. 'ப்ரஹ்மைவ' என்றவிடத்தில் ஏவகாரம் - ''விஷ்ணுரேவ பூஷ்ணா'' என்றவிடத்திற்போலே, ''ஸாம்யமுபைதி'' இத்யாதிவசநாநுகுணமாக, இவ ஶப்தார்த்தத்தைக் காட்டுகிறது. ஜ்யோதிஷா - பரமாத்மநேத்யர்த்தஃ மோக்ஷமாவது ஐக்யமன்றென்கைக்கு

(ஸமாநோஜ்யோதிஷா) என்றும் சொல்லுகிறவற்றால் - வஸ்த்வைக்யம்சொல்லுகிறதன்று; பேற்றில்வந்தால் அவனோடேஇவனுக்கு ஸர்வதா ஸாம்யமுண்டேன்கிறது: "ஜகத்வ்யாபாரவர்ஜம்" (ஜகத்வ்யாபாரவர்ஜம்) "போகமாத்ரஸாம்யலிங்காச்ச" (போகமாத்ரஸாம்யலிங்காச்ச) என்றும் சொல்லுகையாலே. ஸாயுஜ்யமாகிறது - "அவனோடொன்றும்" என்கிறதன்று: அவன்திருவடிகளிலே பரிசர்யைபண்ணுமென்கிறது; "ஸாயுஜ்யம்ப்ரதிபந்நாயே தீவ்ரபக்தாஸ்தபஸ்விந: | கிங்கரா மமதே நித்யம் பவந்தி நிருபத்ரவா:" (ஸாயுஜ்யம்ப்ரதிபந்நாயே தீவ்ரபக்தாஸ்தபஸ்விந: | கிங்கரா மமதேநித்யம் பவந்திநிருபத்ரவா:) என்றுஞ்சொல்லுகையாலே. [தன்மையறிவாரையறிந்துமே]-கேட்பார்க்குவிஷயமுண்டாக்குகிறார், இந்த குணஜ்ஞாநமுடையாரையறிந்து (அவர்கள்பக்கலிலேசேவிதாழ்த்து) வைத்தும் கேட்பார்கள் கேசவன்கீர்த்தியல்லால் மற்றுங்கேட்பரோ? இவன் திருவடிகளைக் கிட்டிற்றுஎன்கொண்டு என்னில்? - திருநாமங்களைச்சொல்லி த்வங்கரிக்கையும், கையுந்திருவாழியுமான அழகை அந்திமதசையிலே ஸ்மரிக்கவுங் கூடுமிறே. மேலேழ ஆராய்ந்துபார்த்தால் சிலஹேது சொல்லலாம்: இதுக்கு இனி ஒருபபத்திதேடிச்சொல்லுகையாவது. அவன் க்ருபைக்கு ஒருகோத்தை சொல்லுகையிறே. "ஸர்வேஶ்வரன் க்ருபையாலே சிசுபாலன் திருவடிகளைப்பேற்றான்" என்று ஆழ்வார்களும் ருஷிகளும்எல்லாரும் சொல்லிக்கொண்டு போருவர்களிறே. இவன்பக்கலிலே பரமபக்திபர்யந்தமாக உண்டானாலும், "அதுக்கும் கரணஸம்ப

ப்ரமாணாந்தரம் - ஜகத்வ்யாபார இத்யாதி. "நித்யகைங்கர்யம்பண்ணப்பெறுகை" என்றத்தை விவரிக்கிறார் - ஸாயுஜ்யமாகிறது இத்யாதி. "யுஜ் ஸம்யமநே" - தாது:, ஸமாநோ யோக: ஸயுக் - ஸயுஜ:, ஸயுஜோ பாவ: - ஸாயுஜ்யம்" என்று ஸாஷ்யோக்தலக்ஷணம். ஸாயுஜ்யமென்று கைங்கர்யத்தைச்சொல்லுமோ? என்ன, ப்ரமாணம் - ஸாயுஜ்யம்ப்ரதிபந்நா இத்யாதி. "ப்ராணஸ்யாபேஷ்யநிரஞ்ஜந: பரமம் ஸாம்யமுபைதி" இதி முண்டோபநிஷதி. "இதம் ஜ்ஞாநமுபாஶ்ரித்ய மம ஸாதர்ம்யமாகதா:" இத்யாதி கீதாயாம். "ஜகத்வ்யாபாரவர்ஜம் ஸமாநோ ஜ்யோதிஷா" இதி வ்ருத்தி:. "ஜகத்வ்யாபாரவர்ஜம் ப்ரகரணாதஸந்நிஹிதத்வாச்ச, போகமாத்ரஸாம்யலிங்காச்ச" இதி ப்ரஹ்மமீமாம்ஸாயாம். 'தம்மையேயொக்க அருள்செய்வர்'- தம்மோடு ஸாம்யாபத்தியைத்தந்தருளுவர் இத்யர்த்த:. திருமொழி. "ஸாயுஜ்யம்ப்ரதிபந்நாயே" இத்யாதிக்கு ஆகாரங்கண்டுகொள்வது. தன்மையறிந்துமென்னுதே, "தன்மையறிவாரையறிந்தும்" என்றதுக்குஸாவமேதென்ன - கேட்பார்க்கு இத்யாதி. அதாவது - ஓர் ஆசார்யன்பக்கலிலே கேட்கவேண்டுகையாலே, அடியிலே "கேட்பார்கள்" என்றவர்களுக்கு, "தன்மையறிவாரை" என்று கேட்கைக்கு விஷயமுண்டாக்குகிறா ரென்றபடி. கீழ்வாக்யத்தை விவரியாநிற்கச்செய்தேயும் அந்வயமுங்காட்டுகிறார் - இந்தகுணஜ்ஞாநம்இத்யாதி. தன்மை - ஸ்வபாவம்; குணமென்றபடி. த்வேஷபரனான சிசுபாலன், திருவடிகளைக் கிட்டுகைக்கு ஹேதுஏது? என்கிற சங்கையை யநுவதிக்கிறார் - இவன் இத்யாதி. ஹேதுவையருளிச்செய்கிறார் - திருநாமங்களை இத்யாதி. த்வங்கரிக்கையும், வடிவழகை ஸ்மரிக்கையுமாகிற இத்தையொரு ஹேதுவாகச் சொல்லவேணுமோ? "ஸத்ருபஸாயுஜ்யமுண்டு" என்று கார்யத்தைக்கொண்டு அநுமித்தாலோ? என்கிற சங்கையை யுட்கொண்டு பரிஹரிக்கிறார் - மேலேழ இத்யாதிவாக்யத்வயத்தாலே. நிர்ஹேதுகமென்கிறது என்கொண்டு? என்ன - ஸர்வேஶ்வரன்இத்யாதி. த்வங்கரிக்கைமுதலானவை தான் ஸத்ருபஸாயுஜ்யமா என்ன வன் பக்கலிலேஇத்யாதி. சிசுபாலனைப்போலே நாமும்

கோடுத்தான்ஈஶ்வரனன்றோ?'' என்று அதுவும் கழியாநிற்க, வருந்தி இல்லாததோன்று உண்டாக்குகை பணியன்றிறே. ஆளவந்தார் ''சிசுபாலன் பேற்றிலன்காண்'' என்றுஅருளிச்செய்வர்; அதுவேன் ? என்னில், ''இதுக்குஅடியாகச் சோல்லலாவதோரு ஸாட்யநம் இவன்கையி லில்லாமையாலே; நாட்டை நலியாமைக்குக் கோற்றவன்வாசலுக்குள்ளே சுழற்றியேறிந்தான் அத்தனைகாண்'' என்று அருளிச்செய்வர். ''காகம், திருமுன்பே எய்த்துவிழுகையாலும், இவன் திருநாமங்களைச்சோல்லி த்வங்கரிக்கையாலும், அவன் குணங்களை நினைத்தபடி விஸ்த்ருதமாகப்பேறாதே ஸங்குசிதங்களாயிற்றின'' என்றிறே சோல்லுகிறது ; ''வலிபுஜிஶிஶுபாலௌ தாத்ருகாகஸ்கரேவா குணலவஸஹவாஸாத் த்வத்க்ஷமா ஸங்குசந்தீ'' (பலிபுஜிஶிஶுபாலே தாத்ருகாகஸ்கரேவா குணலவஸஹவாஸாத் த்வத்க்ஷமா ஸங்குசந்தீ) என்கையாலே. ''பலபலநாழஞ் சோல்லிப்பழித்தசிசுபாலன்றன்னை, யலைவலைமைதவிர்த்தவழகன்'' என்றாரிறே பேரியாழ்வாரும். ''வைதுநின்னைவல்லவாபழித்தவர்க்கும்'' இத்யாதி. இப்பாட்டில் ஏற்றமாகிறது - ''தன்னலல்லதுசேல்லாமை விளைந்தாரைக்கூடக் கோடுபோனன்'' என்றது ஓர்ஏற்றமோ தன்பக்கல் அபராதம்பண்ணின சிசுபாலனுக்கும் அவர்கள்பேற்றைக் கோடுத்ததுக்கு? என்றபடி. (ரு)

வைது மோக்ஷம்பெறலாமோ என்ன, ''அது மோக்ஷமன்று'' என்கைக்கு ஸம்வாதம் - ஆளவந்தார் இத்யாதிவாக்யத்வயத்தாலே. ஸாட்யநம் இவன்கையில் இல்லாமையாலே - அபிமுக்யம் இல்லாமையாலே என்றபடி. எப்படியாகிலும் பெற்றானேயென்ன - நாட்டைஇத்யாதி. கொற்றவன் - ஸ்வாமி. ''இதுக்கு இனி ஓர்உபபத்தி தேடிச் சொல்லுகையாவது அவன் க்ருபைக்குக் கொத்தை சொல்லுகை'' என்றதுக்கு ப்ரமாணங்காட்டுவாராக, ததர்த்தத்தை அருளிச்செய்கிறார். காகம்இத்யாதி. ப்ரமாணந்தன்னை யருளிச்செய்கிறார் - வலிபுக்இத்யாதி. ஸ்ரீரங்கராஜஸ்தவே ''பலிபுஜிஶிஶுபாலே தாத்ருகாகஸ்கரேவா குணலவஸஹவாஸாத் த்வத்க்ஷமா ஸங்குசந்தீ'' (உ-கஎ) இத்யுத்தரார்த்தம். ஸர்வேஶ்வரன் க்ருபையாலே சிசுபாலன் திருவடிகளைப்பெற்றான் என்று ஆழ்வார்கள் அருளிச்செய்தார்கள் என்றார் - கீழே; அவர்கள் அருளிச்செய்தது எங்கே? என்ன - பலபலஇத்யாதி. ''சிசுபாலன் நிர்ஹேதுகமாக மோக்ஷம்பெற்றான்'' என்றதுக்கு ப்ரமாணம் வைது நின்னைஇத்யாதி. கீழ்ப்பாட்டைப்பற்ற இப்பாட்டுக்கு ஆதிக்யமேதென்ன - இப்பாட்டில்ஏற்றமாகிறதுஇத்யாதி. பெரியாழ்வார்திருமொழி, நாலாம்பத்து, மூன்றாந்திருமொழி, அஞ்சாம்பாட்டு ''பலபலநாழம்'' இத்யாதி. இதுக்கர்த்தம் - பலபல குற்றங்களையும் சொல்லி நிந்தித்த சிசுபாலன்தன்னை, 'அலைவலைமைதவிர்த்தவழகன்' - சரமதசையிலே தன்னழகைக்காட்டித் தன்னளவில் அவனுடைய த்வேஷத்தை மாற்றுகையாலே, ''தான்'' என்றால் நிந்தித்துக்கொண்டுதிரியும் அலைவலைத்தனத்தைப் போக்கி ரக்ஷித்த அழகையுடையவனென்றபடி. திருச்சந்தவிருத்தம் நூற்றுப்பதினோராம்பாட்டு: 'வைதுநின்னை'-புகழப்படும் உன்னைப் பருஷித்து; 'வல்லவாபழித்தவர்க்கும்' - சக்தியுள்ளவளவும் நிந்தித்தவர்களாய்; 'மாறில்போர்செய்து நின்னசெற்றதீயில்வெந்தவர்க்கும்' எதிரில்லாத யுத்தத்தைப் பண்ணி உன் கோபாக்நியாலே தக்தரான சிசுபாலன்வாலி முதலானார்க்கும்; 'வந்துனை'- வந்து உன்னை. 'எய்தலாகுமென்பர்'- ஸர்வாதிகனானவுன்னை வந்து ப்ராபிக்கலாமென்று ருஷிகள் சொல்லாநின்றார்கள்; ''ஸமவாப்ய பகவத்ஸாயுஜ்யம்'' என்று சிசுபாலமோக்ஷத்தை ஸ்ரீபராஶர பகவான் சொன்னான். ''ராமபாணாஸநக்ஷிப்த ஆவஹத்பரமாம் கதிம்'' என்று வாலியினுடைய பரகதியைச் சொன்னான். ஸ்ரீவால்மீகிபகவானென்றபடி. கேட்பார்கள் - 'கேட்பார் செவிசுடு' என்று தொடங்கி, 'தன்மையறிவாரை யறிந்தும் - கேசவன்கீர்த்தியல்லால் மற்றுங்கேட்பரோ ?' இத்யந்வயம். (ரு)

நான்காம் பாட்டு.

தன்மையறிபவர்தாம்அவற்கோளன்றியாவரோ?
பன்மைப்படர்பொருள்ஆதுமில்பாழ்நெடுங்காலத்து
நன்மைப்புனல்பண்ணி நான்முகனைப்பண்ணித்தன்னுள்ளே
தொன்மைமயக்கியதோற்றிய சூழல்கள்சிந்தித்தே.

ஆ.—(தன்மையறிபவர்.)-ப்ரதிகூலனான சிசுபாலனை ரக்ஷித்தருளினானென்னும் இதுதான் ஒருகுணமோ? அஸங்க்யேய ப்ரதிகூலாநுகூல ஸகலஜந்துஜாதத்துக்கும் அசேஷ புருஷார்த்தஸாதநபூத கரணகளேபரார்த்யுபகரண ப்ரதாநம்பண்ணின மஹா குணத்தைப் பார்த்தால் என்கிறார்.

தேவாதிஸ்த்தாவராந்த நிகிலஜந்துக்களுக்கும் த்விபரார்த்தகாலம் ஸ்வஸ்மிந் ப்ரலீநமாய் சேதநேதராயமாணமாய் ஸகலபுருஷார்த்த சூந்யமாயிருக்க, ஸ்வகீயநிரவதிக காருண்யத்தாலே, ஸலிலசதுர்முகாதி சேதநாசேதந ஸமஸ்தவஸ்துக்களையும் தன்னுடைய ஸங்கல்பமாத்ரத்தாலே ஸ்ருஷ்டித்தருளின இம்மஹாகுணத்தை அநுஸந்தித்தால், ஸமஸ்த வஸ்துயாதாத்ம்யத்தை யறிவார் அந்தப்பரமகாருணிகனுக்கன்றி ஆனாவரோ? என்கிறார்.

ஒ.—நாலாம்பாட்டில், தானுளனாய் ப்ரதிகூலனான சிசுபாலனை அபராதங்களைப் பொறுத்துத் திருவடிகளிலே சேர்த்துக்கொண்டபடியும் ஒரு குணமென்று எண்ணவொண்ணாதபடி மிகவும் ஸாபராதமாய் ப்ரளயத்திலே மங்கிக்கிடந்த ஜகத்தை மீளவும் உண்டாக்கின மஹாகுணத்தை அநுஸந்திக்கிறார். [தன்மையறிபவர்] - தத்த்வஸ்திதி அறியுமவர்கள். [பன்மையென்று தொடங்கி] - தேவமநுஷ்யாதி ரூபத்தாலே நாநாவாய்க்கொண்டு விஸ்தீர்ணமாயிருந்துள்ள பதார்த்தங்கள் ஒன்றுமில்லாத காலத்திலே தன்னுடைய ஸங்கல்பத்தாலே தனக்கு இப்பாலுண்டான கார்யத்தை யடையப் பிறப்பிக்கவற்றான ஜலத்தை ஸ்ருஷ்டித்து அவ்வழியே ப்ரஹ்மாவை ஸ்ருஷ்டித்து பண்டு தான் ஸம்ஹரித்த பதார்த்தங்களைப் பழையபடியே யுண்டாக்கின விரகுகளைச் சிந்தித்து.

ப.—அநந்தரம், இல்லாத ஜகத்தையுண்டாக்கின அதிசயத்தை யநுஸந்

பன்மை - பலவகைப்பட்ட தேவாதிபேதங்களை யுடைத்தாய், படர் - புண்ய பாபாநுரூபமாக விஸ்தீர்ணமான, பொருள் - பதார்த்தங்களெல்லாம், ஆதும் - ஒன்றும், இல் - இன்றியே, பாழ் - சூந்யமாய்க் கிடந்த, நெடுங்காலத்து - த்விபரார்த்த காலாவஸாநத்திலே, நன்மை - (பூதாந்தர ஸம்ஸ்ருஷ்டமாய் கார்யோத்பத்திஹேதுவான) நன்மையையுடைத்தான, புனல் - காரணஜலத்தை, பண்ணி - ("அப ஏவ ஸஸர்ஜாதௌ" என்கிற கணக்கிலே) ஸ்ருஷ்டித்து, ('தததண்டமபவத்தைமம் - தஸ்மிந் ஜஜ்ஞே ஸ்வயம் ப்ரஹ்மா" என்கிற மர்யாதையிலே அஜ்ஜலத்திலே யுத்பந்நமான அண்டத்திலே), நான்முகனை - ப்ரஹ்மாவை, பண்ணி - ஸ்ருஷ்டித்து, (இந்தசமஷ்டி ஸ்ருஷ்ட்யநந்தரம்), தொன்மை - பூர்வவாசனை யழியும்படி, தன்னுள்ளே - தன்ஸ்வரூபைகதேசத்திலே, மயக்கிய - ("ஏகீபவதி" என்கிறபடியே)மயங்குவித்துக்கிடந்த ஸமஸ்தபதார்த்தங்களையும், தோற்

றிய -(விஹக்தமாம்படி ஸ்ருஷ்டிமுகத்தாலே)தோற்றுவித்த, சூழல்கள்- (ஈக்ஷணஸ்ருஷ்ட்யநுப்ரவேஶ நாமரூபவ்யாகரணங்கள் தொடக்கமான) விரகுகளை, சிந்தித்து- (வேதாந்தமுகத்தாலே)அநுஸந்தித்து, தன்மை- (அவனுடைய அஸாதாரணலக்ஷணமான காரணமான)ஸ்வபாவத்தை, அறிபவர் - அறியுமவர்கள், தாம் - தாங்கள்,(தத்த்வஜ்ஞாநவைபவாநுரூபமாக) ,அவற்கு - "க்ருஷ்ண ஏவ ஹி லோகாநாம் உத்பத்திரபி சாப்யய:" என்று ஜகத்காரணபூதனை க்ருஷ்ணனுக்கு, அன்றி - ஒழிய, (வேறொருவருக்கு), ஆள் ஆவரோ - ?

இ.—நாலாம்பாட்டில், தானுளனாய் ப்ரதிகூலனான ஶிஶுபாலனைச் சேர்த்துக்கொண்டதிற் காட்டிலன்றோ மிகவும் ஸாபராதமாய் ப்ரளயத்திலே மங்கிக்கிடந்த ஜகத்தை மறித்தும் உண்டாக்கின மஹாகுணமென்று, அத்தை அநுஸந்திக்கிறார். அபராதத்தில் ஶிஶுபாலனிற் குறைந்தார் இல்லையிறே ஜகத்தில். [தன்மையறிபவர்தாம்]- தத்த்வஸ்திதியை உள்ளபடி அறியுமவர்கள். தன்மை - உண்மை. "காரணந்து த்யேய:," "ஜந்மாத்யஸ்ய யத:" என்று உபாஸநவாக்யங்களையும் காரணவாக்யங்களையும் அறியுமவர்கள். "ஜகத்காரணம் இன்னது" என்று அறிந்து, அதுவே உபாஸ்யம்" என்று அறியுமவர்கள். [அவற்காளன்றியாவரோ] - அந்த காரணவஸ்துவுக்காளாமதொழிய வேறு சிலர்க்குஆளாகக்கடவரோ. இவனுக்கே ஆளாக வேண்டுகிறதென் என்னில்?—இதடங்க அழிந்துகிடக்கத் தன்னை ஆஶ்ரயிக்கைக்கு கரணங்களைக் கொடுத்தவனை ஒழிய, புறம்பேசிலரைப்பற்றவோ ? [பன்மை இத்யாதி] - தேவாதிதேஹங்களை உடைத்தாய் கர்மாநுகுணமாக விஸ்த்ருதமான பதார்த்தங்களொன்றுமின்றிக்கே பாழாய், த்விபரார்த்தகாலஞ்சென்றவளவிலே, தன் ஸங்கல்பத்தாலே, தனக்கிப்பாலுண்டான கார்யத்தைப் பிறப்பிக்கும் நன்மையையுடைய ஜலத்தை ஸ்ருஷ்டித்து, அது அண்டமாய் பரிணமித்தவாறே அதிலே சதுர்முகனை ஸ்ருஷ்டித்து: "அப ஏவ ஸஸர்ஜாதௌ". நன்மைப்புனல் பண்ணி நான்முகனைப்பண்ணி என்கையாலே-சேதநாசேதநங்களை உண்டாக்குவானும் இவன்: அவற்றால் வந்த ஸ்ருஷ்டியும் இவனதே; அவை உபகரணமாத்ரமே; உபகரணமாமிடத்தில் அசேதநத்தோபாதிசேதநனும். [தன்னுள்ளே]- தன்னுடைய ஸங்கல்பைகதேசத்திலே. [தொன்மை மயக்கிய]-பூர்வவாஸனை அழியும்படி பண்ணப்பட்ட பதார்த்தங்களை. தொன்மையென்று - துர்வாஸனை. அது அழிகைக்காகத் தான் ஸம்ஹரித்திட்டு வைத்த பதார்த்தங்கள்என்கை. [தோற்றிய] - தோற்றுவித்த. தோற்றிய என்றது - "பஹு ஸ்யாம்" என்கிற ஶ்ருதிச்சாயையினாலே. "யாதாயதாவத் வ்யத தாச் சாஶ்வதீப்ய: ஸமாப்ய:" என்கிறபடியே இவற்றையுண்டாக்கின நல்விரகுகளை அநுஸந்தித்து, அவற்காளன்றி ஆவரோ ? என்று அந்வயம்.

ஈடு.—நாலாம்பாட்டு சிசுபாலனுக்குத் தன்னைக்கொடுத்ததோர் ஏற்றமோ, ப்ரளயத்திலே மங்கிக்கிடந்த ஜகத்தையுண்டாக்கின இம்மஹாகுணத்துக்கு ? என்கிறார். சிசுபாலனிற்குறைந்தாரில்லையிறே ஸம்ஸாரிகளில்.

நாலாம்பாட்டு - தன்மைஇத்யாதி. " ஆதுமில் பாழ்நெடுங்காலத்து " என்றுதொடங்கி "தோற்றிய சூழல்கள்" என்னுமளவுங்கடாக்ஷித்தவதாரிகை - சிசுபாலனுக்குஇத்யாதி. உண்டாக்கினது மஹாகுணமானபடியென் ? அவனைப்போல எல்லாரும் வைதுகொண்டிருந்தார்களோ ? என்ன - சிசுபாலன்இத்யாதி.

[தன்மை யறிபவர்தாம்] - தத்த்வஸ்த்திதியறியுமவர்தாம். அதாவது இதினுடைய உத்பத்தி அவனுக்காகக் கண்டதென்றிருக்குமவர்கள்; "ஸ்ரஷ்டஸ்த்வம் வநவாஸாய" (ஸ்ரஷ்டஸ்த்வம் வநவாஸாய)போலே. ஜகத்காரணவஸ்துவே யுபாஸ்யமென்று அறியுமவர்கள்; * "காரணந்துத்யேயஃ" (காரணந்துத்யேயஃ) இறே, "அதாதோப்ரஹ்மஜிஜ்ஞாஸா" (அதாதோப்ரஹ்மஜிஜ்ஞாஸா) என்று "ஜந்மாத்யஸ்யயதஃ" (ஜந்மாத்யஸ்யயதஃ) என்று நின்றதிறே. [அவற்காளன்றியாவரோ] - கரணகளேபரங்களைக் கொடுத்தது தனக்குஅடிமை செய்கைக்கிறே. [பன்மைப்படர் பொருளாதுமில்பாழ் நெடுங்காலத்து] - தேவாதிபேதத்தாலே பலவகைப்பட்டு, கர்மாநுகுணமாக விஸ்த்ருதமான பதார்த்தங்களொன்றுமில்லாத காலத்து. தேவதிர்யகாதிரூபேண வுண்டாகக் கடவவஸ்துக்கள் ஒன்றுமில்லாதபடி பாழ்கூவிக்கிடக்கிற நெடுங்காலத்து. ஈஸ்வரன் ஜகத்தை ஸம்ஹரித்து நெடுங்காலம் பாழ் கூவிக்கிடக்கும்படி யிட்டுவைக்கும். கர்ஷகனானவன் விளைநிலம் உவர்கழியும்படி நீரைத்தேக்கி வைக்குமாபோலே, இவற்றினுடைய துர்வாஸநை போகைக்காக ஸ்ருஷ்டியோபாதிகாலம் ஸம்ஹரித்திட்டுவைக்கும். கண்ணுக்கிட ஒரு துரும்பில்லாதபடி ஸதவஸ்த்தமானகாலத்து. [நன்மைப்புனல்பண்ணி] - அழிக்கப்பரப்பின நீர்போலல்ல. "அபஏவஸஸர்ஜாதௌ" (அபஏவஸஸர்ஜாதௌ) என்கிறபடியே முற்படஜலஸ்ருஷ்டியைப் பண்ணி. இவ்வளவும்வர அசித்தைக்கொண்டு கார்யங்கொண்டு, "இவையிரண்டும் நம் புத்த்யதீனமானபின்பு இனிச்சித்தையுங்கொண்டு கார்யங்கொள்ளுவோம்" என்றுபார்த்து சதுர்முகனையும் ஸ்ருஷ்டித்து. "யஸ்யாத்மாஶரீரம்" (யஸ்யாத்மாஶரீரம்) "யஸ்யப்ருதிவீஶரீரம்" (யஸ்யப்ருதிவீசரீரம்) என்று இரண்டும் இவனுக்குஉறுப்பாய் பரதந்த்ரமாயிறேயிருப்பது. "யோப்ரஹ்மாணம்விததாதிபூர்வம்" (யோப்ரஹ்மாணம்விததாதிபூர்வம்) 'நன்மைப்புனல்பண்ணி நான்முகனைப்பண்ணி' என்று ஒருகுழமணனைப்பண்ணி என்பாரைப்போலே. [தன்னுள்

தத்வஸ்திதியாவதேதென்ன - அதாவதுஇத்யாதி. அவனுக்காகக்கண்டது - அவனுடைய கைங்கர்யத்துக்குஉடலாக ஸ்ருஷ்டமாயிற்றென்றபடி. இதுக்கு த்ருஷ்டாந்தம் - ஸ்ரஷ்டஸ்த்வம் இத்யாதி. "தன்மையறிபவர்" என்றதுக்கர்த்தாந்தரம் - ஜகத்காரணஇத்யாதி. "காரணவஸ்துவே யுபாஸ்யம்" என்னுமதுக்கு ஶ்ருதிசூத்ரங்கள் - காரணந்துஇத்யாதி. "இதினுடையஉத்பத்திஅவனுக்காகக்கண்டது" என்கிற வாக்யாநுகுணமாகவர்த்தம் - கரணஇத்யாதி. இப்போது, "அவற்காளன்றியாவரோ" என்றதுக்கு - கரணகளேபரங்களைக்கொடுத்தவற்கொழிய வேறொருவர்க்காளாவரோ என்று சப்தார்த்தம். "தன்மையறிபவர்" என்றதுக்கு - "காரணவஸ்துவே யுபாஸ்யமென்றறியுமவர்கள்" என்றர்த்தமானபோது, "அவற்காளன்றியாவரோ" என்றதுக்கு - காரணபூதனானவனுக்கொழிய வேறொருவர்க்காளாவரோ என்று சப்தார்த்தம். இந்தஅர்த்தம் இருபத்துநாலாயிரத்திலே கண்டுகொள்வது. விவரணம் - தேவதிர்யகாத்இத்யாதி. நெடுங்காலம் பாழாகவிட்டுவைக்கிறதேதுக்கென்ன - ஈஸ்வரன் இத்யாதிவாக்யத்வயம். உவர்கழியும்படி - சவர்கழியும்படி. "ஆதுமில்" என்றதுக்கர்த்தம் - கண்ணுக்கிடஇத்யாதி. கண்ணுக்கிட ஒருதுரும்பில்லாதபடி - கண்ணாலேகாண்கைக் கொன்றுமில்லாதபடி இத்யர்த்தஃ. புனலுக்குநன்மையேதென்ன - அழிக்கஇத்யாதி. முந்தற ஜலஸ்ருஷ்டியைச்சொன்னதுக்கு ப்ரமாணம் - அபஏவஇத்யாதி. 'இவ்வளவும்வர'என்றது - அண்டஸ்ருஷ்டிபர்யந்தமென்றபடி. இவையிரண்டும் - சிஅசித்துக்களிரண்டும். இரண்டும் தன்புத்த்யதீநமோ? என்ன, ப்ரமாணம் - யஸ்யாத்மாஇத்யாதி. சேதநஸ்ருஷ்டியில் முந்தற ப்ரஹ்மஸ்ருஷ்டியைச்சொன்னதுக்குப்ரமாணம் - யோப்ரஹ்மாணம்இத்யாதி. ஸ்ருஷ்டித்தானென்னுதே, "பண்ணி" என்றதுக்குஹாவம் - நன்மைப்புனல்இத்யாதி. குழமணன் - மரப்பாச்சி. மயங்கல் - கூடலாய், 'இட்டு

ளே] - தன் ஸங்கல்பஸஹஸ்ரைகதேசத்திலே. [தோன்மையித்யாதி] - பழையதாக, "ஸதேவ" என்கிறபடியே - தானென்கிற சொல்லுக்குள்ளேயாம்படி பண்ணியிட்டு வைத்து, பின்னை "பஹுஸ்யாம்" (பஹுஸ்யாம்) என்கிறபடியே இவற்றை ஆவிர்ப்பவிப்பித்த விரகுகளைச் சிந்தித்து - தத்த்வஸ்த்திதி யறியுமவர்கள் அவனையொழிய வேறேசிலர்க்குஆளாவரோ? (தன்மை - உண்மை. புனலென்றது - மற்றவற்றுக்கு முப லக்ஷணம். தோற்றிய - தோற்றுவித்த.) விரோதியான சிசுபாலனுக்குத் தன்திருவடிகளைக் கொடுத்தானென்றது, இதோரேற்றமோ விரோதிகளை யுண்டாக்கி தன்னை வைவித்துக்கொண்ட நீர்மைக்கு? என்கிறார். 'பன்மைப் படர்பொருள் - தன்னுள்ளே தோன்மை மயக்கிய - ஆதுமில்பாழ் நெடுங்காலத்து நன்மைப்புனல்பண்ணி நான்முகனைப் பண்ணி - தோற்றியசூழல்கள் சிந்தித்து - தன்மையறிபவர் தாமவற்காளன்றியாவரோ?' என்றந்வயம். (ச)

ஐந்தாம் பாட்டு.

சூழல்கள்சிந்திக்கில் மாயன்கழலன்றிச்சூழ்வரோ?
ஆழப்பெரும்புனல்தன்னுள்அழுந்தியஞாலத்தை
தாழப்படாமல்தன்பாலொருகோட்டிடைத்தான்கொண்ட
கேழல்திருவுருவாயிற்றுக கேட்டுமுணர்ந்துமே.

—(சூழல்கள்.)-கிணற்றிலேவிழுந்த தன்னுடைய ப்ரஜையை மாதாவானவள் வாத்ஸல்யாதிசயத்தாலே விழுந்தெடுக்குமாபோலே, ரஸாதலத்திலே நிமக்னையான ப்ருதிவியை வராஹரூபியாய் க்ஷணத்திலேசென்று முழுகியெடுத்தருளின இம்மஹாகுணத்தைக்கேட்டு, †ச்ருதமானதை ஸ்மரித்திருந்துவைத்து, "தங்களுக்கொரு புருஷார்த்தஸாதநத்தைச்செய்யவேண்டும்" என்று நினைக்கில், அந்த ஆச்சர்யபூதனானவனுடைய திருவடிகளையல்லது ஆச்ரயிப்பரோ? என்கிறார்.

ஒ.—அஞ்சாம்பாட்டில், தன்னாலே ஸ்ருஷ்டமான ஜகத்தை ப்ரளயங்கொள்ள, "இன்னமும் இங்ஙனே இருக்கும் ஜகத்தை ஸ்ருஷ்டித்துக்கொள்ளுகிறோம்" என்று உபேக்ஷியாதே, தானே அதுக்கு ஈடாயிருப்பதொரு திர்யக்கின் வடிவைக்கொண்டு பூமியை எடுத்தருளின இம்மஹாகுணத்தை அநுஸந்திக்கிறார். [சூழலென்று தொடங்கி] - தந்தாமுக்கு புருஷார்த்தோபாய சிந்தையைப்பண்ணில் அத்யாச்சர்யஸ்வபாவனான எம்பெருமானுடைய திருவடிகளை ஒழிய வேறு சிலரை ஆச்ரயிப்பரோ? [ஆழப்பெரும்புனல் என்று தொடங்கி] - தெரியாதபடி கடலிலேஅழுந்தின ப்ருதிவியை அந்தரப்படாதபடி தன்னுடைய ஒருகொம்பிலே ஒருவர் அபேக்ஷியாதிருக்கத் தானே வைத்துக்கொண்ட வராஹமான திருவடிவைக் கொண்டபடியைச் சொல்லக்கேட்டும் மநநம்பண்ணியும்.

வைத்து' என்றபடி. தோற்றிய - தோற்றுவித்த. கீழ்ப்பாட்டில் இதுக்காதிக்யமென்னென் - விரோதியானஇத்யாதிவாக்யத்வயம். "ஆதுமில்பாழ்நெடுங்காலத்து - மயக்கிய" என்று - ஸம்ஹாரத்திலும், "நான்முகனைப்பண்ணி தோற்றிய" என்று - ஸ்ருஷ்டியிலும் தோற்றுகிற புநருக்திகளைப் பரிஹரிக்கைக்காக. அந்வயம் - பன்மைத்யாதி. மயக்கிய - மயக்குகையாலே யென்றபடி. (ச)

---

† ச்ருதமானத்தை-கேட்டமஹாகுணத்தை.

ப.—அநந்தரம், அழிந்தஜகத்தையுண்டாக்கினவளவன்றியே, தன்வடிவை யழியமாறியும் ஆபத்ஸகனான ஸ்ரீவராஹரூபியினுடைய வ்ருத்தாந்தத்தை யருளிச் செய்கிறார்.

பெரு - அபர்யந்தமான, புனல் தன்னுள் - ப்ரளயஜலத்திலே, ஆழ - அண்டகபாலத்தளவுமாழ, அழுந்திய - அழுந்தின, ஞாலத்தை - பூமியை, தாழப்படாமல் - காலவிளம்பத்தாலேயுருமாயாதபடி, தன்பால் - தன்திருமேனியில் ஏகதேசமாயிருப்பது, ஒரு கோட்டிடை - ஒருகோட்டினிடத்திலே, (தான் அபேக்ஷாநிரபேக்ஷமாம்படி), (ஸ்வேச்சாமாத்ரத்தாலே), கொண்ட - (இடந்தெடுத்துக்) கொண்ட, கேழல் - "கோலவராகம்" என்கிறபடியே ஸ்ரீவராஹமான, திரு - அழகிய, உரு - வடிவை, ஆயிற்று - உடையனானித்தை, கேட்டும் - வேதேதிஹாஸபுராணமுகங்களாலேகேட்டும், உணர்ந்தும் - மநநம்பண்ணியும்வைத்து, சூழல்கள் - தங்களுக்கு உஜ்ஜீவநோபாயமான நல்விரகுகள், சிந்திக்கில் - ஆராயநினைக்கில், மாயன் - (ஞானப்பிரானையல்லாலில்லைநான்கண்டநல்லதுவே" என்கிறபடியே ப்ரளயாபத்துக்குஉதவி, ஸம்ஸாரார்ணவோத்தரணோபாய பூதனுமாய்) ஆஶ்சர்யகரனான வராஹரூபியுடைய, கழல் - திருவடிகளை, அன்றி - ஒழிய, சூழ்வரோ - ஆஶ்ரயிப்பரோ ?

இ.—அஞ்சாம்பாட்டில், பூமியை ப்ரளயங்கொள்ள "இங்ஙனே இருப்பதொன்றை ஸ்ருஷ்டித்துக் கொள்ளுகிறோம்" என்று உபேக்ஷியாதே, தன்னை அழியமாறி பூமியை எடுத்தருளின இம்மஹாகுணத்தை அநுஸந்திக்கிறார்.

[சூழல்கள் இத்யாதி] - தந்தாமுக்கு புருஷார்த்தோபாய சிந்தைபண்ணில், ஆஶ்சர்யஶக்தியுக்தனை யல்லது பற்றுவரோ? சேதநபேதத்தோபாதி போருமிறே உபாயபேதமும். எல்லா உபாயங்களிலும் அநுவ்ருத்தமாய் பலப்ரதமாய் ப்ரயோஜநமுமாய் ஸ்வரூபாநுரூபமுமாய் ஸாத்யமன்றிக்கே ஸித்தமுமாயிருக்குமதை யல்லது பற்றுவரோ? இத்தலையில் பாரதந்த்ர்யத்தையும் அஜ்ஞாநாஶக்திகளையும் அநுஸந்தித்து, அவனுடைய ஸ்வாதந்த்ர்யத்தையும் ஜ்ஞாநஶக்திகளையும் ப்ராப்தியையும் அநுஸந்தித்தால், ஸ்வாபிமதஸித்திக்கு அவனையல்லது பற்றுவரோ? [மாயன்கழல்] - ஆஶ்சர்யஶக்தியுக்தன் என்னுதல், பேற்றுசொல்லுகிறவடிவில் ஏற்றத்தை நினைத்துச்சொல்லுதல். அவன் திருவடிகளையே வேண்டுகிறதென் என்னில்?—அடியானுக்குஅடியோடேயந்வயம். ஸம்ஸாரார்ணவத்திலே அஸத்ஸமனாயிருக்கு மவனுக்கு, நஷ்டோத்தாரணம் பண்ணினவனைப் பற்றவேண்டாவோ? ப்ரளயத்துக்கு கர்மீபவித்தவற்றைப் பற்றவோ? நித்யஸம்ஸாரியாகைக்கு வேண்டுவனவிறே இவன்பக்கலுள்ளது. ஸ்வவிநாஶத்துக்கு இடம் பார்த்துத்திரியும்இவன், உஜ்ஜீவநத்துக்கிடம் பார்த்துத்திரியும்அவன். [ஆழப்பெருப்புனல் தன்னுள் இத்யாதி] - ஆழத்தையுடைத்தான பெரும்புனல் என்னுதல், பெரும்புனலிலே ஆழவழுந்தின ஞாலமென்னுதல். ஸர்வஶக்திக்கும் அதுக்கீடாயிருப்பதொரு வடிவு கொண்டெடுக்கவேண்டி யிருக்கை. [தாழப்படாமல்] - ப்ரளயங்கொண்டு அங்ஙனேஉருமாய்ந்து போகாமே. [தன்பாலொரு கோட்டிடை] - தன்னுடைய ஒருகொம்பிலே. கொண்டவடிவிற் பரப்பு: பூமியடங்க தன் திருவெயிற்றுக்குள்ளே அடங்கும்படியாயிற்று; ரக்ஷ்யத்தினுடையவளவன்றே ரக்ஷகனுடைய பாரிப்பு. [தான்கொண்ட] - ஒருவர் அர்த்தியாதிருக்கத் தானேகொண்ட. [கேழற்றிருவுரு] - நீருக்கும் சேற்றுக்கும் [illegible]யாதபடி ரக்ஷணத்துக்குப் பாங்கான வடிவைக்கொண்டான் அவன்; அதுதான்

ஆலத்தி வழிக்கவேண்டி யிருக்கையாலே - 'திருவுரு' என்கிறார் இவர். "கோலவராக மொன்றாய்." "பன்றியாந்தேசு" - பரமபதநிலயனான தேஜஸ்ஸுக்கும் அவ்வருகே ஒரு தேஜஸ்ஸிறே இது. [கேட்டுமுணர்ந்துமே] - சொல்லக்கேட்டும் மநநம் பண்ணியும் - மாயன்கழலன்றிச் சூழ்வரோ. கீழிற்பாட்டில் - ஸ்ருஷ்டியைச் சொல்லுகையாலே, ஜகத் காரணமாய் உபாஸ்யமான மேன்மைதோற்றிற்று; தன்னுருக்கெடுத்து வேற்றுருக் கொண்ட நீர்மைக்கு, தாம் குலையாமல் ஸ்ருஷ்டித்தது ஓரேற்றமோ?

ஈடு.— அஞ்சாம்பாட்டு. ஜகத்ஸ்ருஷ்டிபண்ணினதோர் ஏற்றமோ, ஸ்ருஷ்டமானஜகத்தை ப்ரளயங்கோள்ள மஹாவராஹமாயெடுத்து ரக்ஷித்தகுணத்துக்கு என்கிறார்.

[சூழல்கள்சிந்திக்கில்] - தான் தன்னோடேவற ஜீவிக்கைக்கு உறுப்பான விரகு பார்க்கில். தந்தாம் அபிமதங்கள் சித்திக்கைக்கு விரகுகள்பார்க்கில். (உபாயங்கள் பல வுண்டிறே. அடியானுக்கடியோடேயிறே யந்வயம்.) [மாயன்கழலன்றிச் சூழ்வரோ] - ரக்ஷ்யவர்க்கத்தினுடைய ரக்ஷணம் ஒருதலையானால் தான் தன்னைப்பேணாதேநோக்கும் ஆஸ்சர்யபூதனானவனுடைய திருவடிகளையல்லது பற்றுவரோ? [ஆழப்பெரும்புனல் தன்னுளழுந்திய ஞாலத்தை] - ஆழத்தையுடைத்தான மிக்கஜலத்திலே யழுந்தினஞாலமென்னுதல், பெரும்புனல்தன்னுள் - ஆழ - அழுந்தியஞாலமென்னுதல். [அழுந்தியஞாலத்தை] - அண்டபித்தியிலே சென்றொட்டினபூமியை. [தாழப்படாமல்] - தறைப்படாமல்; மங்காமல். உள்ளதுகரைந்துபோனபின்பு, இனி ஸத்தையுங்கூட அழியவொண்ணாதென்று பார்த்து. [தன்பாலொரு கோட்டிடைத்தான்கொண்ட] - மஹாப்ருதிவியைத் தன் எயிற்றிலே நீலமணிபோலேகொண்ட; தன்திருவெயிற்றில்ஏகதேசத்திலேகொண்ட. உதாரராயிருப்பார் நாற்பதுபேருக்குச் சோறிடநினைத்து நூறுபேருக்குச் சோறுசமைக்குமாபோலே: ரக்ஷ்யத்தினளவு அல்லகாணும் கொண்டஎயிற்றின்பெருமை; முகாந்தரத்தாலே ரக்ஷிக்கையன்றியே, தன்முகேந வெடுத்து ரக்ஷித்தபடியிறே. [தான்கொண்ட] - கரைந்துபோன பூமி யர்த்திக்கவன்றிறேசெய்தது. [கேழல்திருவுருவாயிற்று] - அழிவுக்கிட்டவடிவுதனக்கேயாலத்திவழிக்கவேண்டி யிருந்தபடி. ஆஸ்ரிதரக்ஷணத்துக்காகவந்து தன்னைப்பேணாதே ஒழியவொழிய அதுதானே நிறம்பெறும்படியாய்க் காணுமிருப்பது; "மானமிலாப்பன்றியாந்

அஞ்சாம்பாட்டு.— சூழல்கள் இத்யாதி. "கேழற்றிருவுருவாயிற்று" என்றபதத்தைக் கடாக்ஷித்தவதாரிகை - ஜகத்ஸ்ருஷ்டி இத்யாதி.

*உபாயமென்னாதே, "சூழல்கள்" என்றதுக்குஹாவமாதல், அந்வயமுகேநஹாவமாதல் - தான் தன்னோடு இத்யாதி. வஹுவசநார்த்தம் - தந்தாம் இத்யாதி. "கேழற்றிருவுருவாயிற்று" என்றத்தைக்கடாக்ஷித்து, "மாயன்" என்றதுக்கர்த்தம் - ரக்ஷ்யவர்க்கத்தின் இத்யாதி. சூழ்வரோ - பற்றுவரோ? சூழ்கை - ஆஸ்ரயிக்கை. "ஆழ" என்றது - *பெரும் புனலுக்கு விசேஷணமாதல், "அழுந்திய" என்றதுக்கு விசேஷணமாதல். அழுந்தியிருக்க, "தாழப்படாமல்" என்னக்கூடுமோ? என்ன - உள்ளது இத்யாதி. ஸ்வேதவராஹமாகையாலே - பூமியை 'நீலமணி' என்கிறார். "இடை" என்றதுக்கர்த்தம் - தன்திருவெயிற்றில் இத்யாதி. ஏகதேசமமைந்தால் மற்றையிடமெதுக்காகக் கொண்டானென்ன - உதாரராய் இத்யாதி. ரஸோக்தி - முகாந்தரத்தாலே இத்யாதி. கொண்ட என்னாதே, "தான்கொண்ட" என்றதுக்குஹாவம் - கரைந்துபோன இத்யாதி. "திரு" என்றதுக்கு - விக்ரஹஸௌந்தர்யமாகவர்த்தம் - அழிவுக்கு இட்ட இத்யாதி. ஆத்மகுணத்தால்வந்த அழகாகவர்த்தாந்தரம் - ஆஸ்ரிதரக்ஷணத்துக்கு இத்யாதி. அழிவுக்கிட்ட வடிவுதனக்கு - தன்மேன்மைவிட்டு நீர்மையைக்கொள்ளுகையான வராஹவேஷத்துக்கென்றபடி. வராஹநாயனார்அப்படி யழகியராயிருப்*

தேசு" என்னும்படியே. "மாசுடம்பில்நீர்வாரா" - எங்கேனுமுண்டான அழுக்கும் வந்து சேரும்படியிருப்பதோரு வடிவைக்கோண்டு. "மானமிலாப்பன்றியாம்" - ஈஸ்வரத்வம் பின்னாட்டாதிருக்கை. ஸஜாதீயங்கள் மோந்துபார்த்து "தன்னினம்" என்று விஸ்வஸிக்கும்படி அகவாயிற்புரையற் றிருக்கை. மாயாம்ருகத்தைமோந்துபார்த்து "ராக்ஷஸகந்த முண்டு"என்று போயிற்றினவிறே ம்ருகங்கள். "பன்றியாந்தேசுடைதேவர்" இவ்வடிவு கோண்டிலனாகில் அருமந்ததேஜஸ்ஸை யெல்லாம் இழக்குமந்தனையாகாதே. நித்யஸூரி களுக்கு ஓலக்கங்கோடுத்து அங்கேயிருப்பதிற்காட்டிலும் தாழவிட்டத்தால்வந்த ஏற்றம். [கேட்டுமுணர்ந்துமே] - ஸ்ரவண மநநங்கள்பண்ணியும் - சூழல்கள் சிந்திக்கில் மாயன் கழலன்றிச்சூழ்வரோ? தான் ஜகத்காரணத்வாதி குணங்களோன்றும் குறையாதபடி ஸங் கல்பத்தாலே ஜகத்தை ஸ்ருஷ்டித்தானேன்னுமதுஓரேற்றமோ, ப்ரளயங்கோண்டபூமியை, தன்னுருக்கேடுத்து வேற்றுருக்கோண்டேடுத்த இவ்வுபகாரத்துக்கு? (ரு)

ஆறாம் பாட்டு.

கேட்டுமுணர்ந்தவர்கேசவற்காளன்றியாவரோ ?
வாட்டமிலாவண்கைமாவலிவாதிக்கவாதிப்புண்டு
ஈட்டங்கோள்தேவர்கள்சேன்றிரந்தார்க்கிடர்நீக்கிய
கோட்டங்கைவாமனனாய்ச்சேய்தகூத்துக்கள்கண்டுமே.

ஆ.—(கேட்டுமுணர்ந்தவர்) - *மஹாபலியாகிற மஹாஸுரனாலே பீடிதமாய் தந்நிரஸநார்த்திபான தேவஸமூஹத்தாலே யர்த்திதனான எம்பெருமான், அவனுடைய ஔதார்யத்தாலே ஸ்வரூபேண அவனை, நிரஸிக்கமாட்டாமை ஸ்ரீவாமநனாய் வந்து பிறந்தருளி, ஆஸ்ரிதார்த்தமாக "ஊஷ்ராநவ்ருதிம் ஹீயாக" என்கிற தன்ஸ்வரூபத்தையுங்கூட அங்கீகரித்துக் கொண்டவனுடைய ஜகத்தை, "கொள்வனான் மாவலிமூவடிதா" என்றுஇரந்துகொண்டுசெய்தருளின ஆஸ்சர்யங்களைக்கண்டுவைத்தும், அறிவுடையராயிருப்பார், ப்ரஹ்மேஸாநாதிகளுக்குக் காரணபூதனான ஸ்ரீவாமநனுக் கல்லது ஆளாவரோ? என்கிறார்.*

ஒ.—*ஆறாம்பாட்டில், தன் ஸாமர்த்தியத்தினாலே பூமியை எடுத்தருளின அதிற்காட்டிலும், தன் மேன்மை போகட்டிருந்துகொள்ளுகையாலே கீழ்ச்சொன்ன*

பரோ? என்ன - மானமிலா இத்யாதி. "மாசுடம்பு" என்றதுக்கர்த்தம் - எங்சேனும் இத்யாதி. "மானமிலா" என்றதுக்கர்த்தம் - ஈஸ்வரத்வம் இத்யாதி. "ஆம்" என்றதுக்கர்த்தம் - ஸஜாதீயங்கள் இத்யாதி. வராஹமானால் தன்னினமென்று விஸ்வஸியாதோ? என்ன - மாயாம்ருகத்தை இத்யாதி. "தேசு" என்றதுக்குஆவம் - இவ்வடிவு இத்யாதி. "தேவர்" என்றதுக்குஆவம் - நித்யஸூரிகளுக்கு இத்யாதி. 'கேட்டுமுணர்ந்தும் அத்தாலே ஸ்வயத்நத்தைவிட்டவர்கள், 'சூழல்கள்சிந்திக்கில் மாயன் கழலன்றிச்சூழ்வரோ' என்று கூட்டுவது. "ஜமதுஷ்ரவஷி" இத்யாத்யவதாரிகாவாக்யத்தை ஸோபபத் திகமாக அருளிச்செய்கிறார் - தான் ஜகத்காரணத்வாதி இத்யாதி. 'ஆழப்பெரும்புனல்' என்று தொடங்கி, 'கேட்டுமுணர்ந்தும் - சூழல்கள் சிந்திக்கில் மாயன்கழலன்றிச்சூழ்வரோ?' இத்யந்வயஃ.

குணங்களிற் காட்டிலும் மஹாகுணமான வாமநவ்ருத்தாந்தத்தை அநுஸந்திக்கிறார். [கேட்டும் என்று தொடங்கி] - ஹிதங்களைப் பிறர் சொல்லவும் கேட்டு தங்கள் ஹ்ருதயத்தால் அத்யவஸித்திருக்குமவர்கள் ப்ரஹ்மாதிகளுக்கு நாயகனானவனுக்கன்றி ஆளாவரோ? [வாட்டமென்று கேசனுக்கு] - நிரந்தரமாகக் கொடுக்கவல்ல கையையுடைய மஹாபலி பாதிக்கபாதிதராய்த்திரண்டுசென்று இரந்ததேவர்களுடைய துக்கத்தைக் கெடுத்தருளின வற்றகையையுடைய ஸ்ரீவாமநனுச் செய்தருளினமநோஹாரியான சேஷ்டிதங்களை அநுஸந்தித்துவைத்தும்.

ப.—அநந்தரம், ஆகாரத்தை யழியமாறினவளவன்றியே யத்தோடே ஆத்மகுணத்தையுங்கூட அழியமாறின அர்த்தித்வ ஸாமர்த்யத்தை யருளிச்செய்கிறார்.

வாட்டமிலா - ஒருகாலுஞ்சுவறாத, வண் - ஔதார்யத்தையுடைத்தான, கை - கையையுடைய, மாவலி - மஹாபலியானவன், வாதிக்க - (தன்செருக்காலே) நலிய, வாதிப்புண்டு — நலிவுபட்டு, ஈட்டங்கொள் - பரஸ்பரவிரோதமற்றுத் தம்மில்தாம் சேர்ந்துதிரண்ட, தேவர்கள் - உதாரஸ்வபாவரானதேவர்கள், சென்று - (எழுந்தருளியிருந்தவிடத்தே தாங்களே) சென்று, இரந்தார்க்கு - ("ஸ்ரணம் த்வாம் ப்ரபந்நாஸ்ம:" என்கிறபடியே) ப்ரார்த்தநாரூபையான ஸரணாகதியைப்பண்ணினவர்களுக்கு, இடர்நீக்கிய - (கார்யப்ரதிஜ்ஞாவசநத்தாலே) மநோதுக்க நிவர்த்தகனாய்க்கொண்டு, (மஹாபலியினுடையஔதார்யமே பற்றாசாகவர்த்தியாய்ச் சென்று, தன்னுடைய ஃபலப்ரதாநதசையிலுங்காட்டில்), கோடு - அர்த்தித்தேற்கையாலே, அம் - அழகுபெற்ற, கை - கையையுடையனான, வாமநனாய் - வாமநவடிவைக்காட்டி வசீகரித்தும், (வார்த்தையாலே நெஞ்சைக்கலக்கியும், வளர்ந்தளந்தபோதே அநாயாஸேந வ்யாபரித்தும்), செய்த - பண்ணின, கூத்துக்கள் - நாடகங்களை, கண்டும் - ப்ரத்யக்ஷஸமாநாகாரமாக அநுஸந்தித்தும், கேட்டும் - (அந்த அபதாநத்தைப் புராணமுகத்தாலே) கேட்டும், உணர்ந்தவர் - அறிவுடையரா யிருந்தவர்கள், கேசவற்கு - அலைந்தகுழலோடேவருகையாலே ப்ரஸஸ்தகேசனான வாமநனுக்கு, அன்றி - அல்லது, (வேறொருவர்க்கு), ஆள் - அடிமை, ஆவரோ - ஆவரோ? கேசவனென்று — ஒருவன் திருவடிவிளக்க, ஒருவன் தீர்த்தம் சுமக்கும்படி ப்ரஹ்மருத்ரர்களுக்கு நிர்வாஹகனென்றுமாம்.

ஈ—ஆறும்பாட்டில், தன் ஸாமர்த்தியத்தாலே பூமியை எடுத்தருளினதிற்காட்டிலும், இரப்பாளனாய்த் தன்னுடைமையை அழியக்கொடாத மஹாகுணமான வாமநவ்ருத்தாந்தத்தை அநுஸந்திக்கிறார். [கேட்டு இத்யாதி] - ப்ரியஹிதங்களைப்பிறர் சொல்லவுங் கேட்டுத் தங்கள் ஹ்ருதயத்தாலே அத்யவஸித்திருக்குமவர்கள், ப்ரஸஸ்தகேசனுக்கன்றி ஆளாவரோ? ப்ரஹ்மருத்ராதிகளுக்கு உத்பாதகனென்றுமாம். நிரந்தரமாகக்கொடுக்கும் கையைஉடையமஹாபலி பாதிக்கபாதிதராய்.மஹாபலிபக்கலிலே "ஔதார்யம்" என்று ஒரு குணம் கிடைக்கையாலே, ஹிரண்யராவணாதிகளைப்போலே அழியச் செய்யாதே, அவன் ஔதார்யத்துக்குத்தான்இலக்காய் தன் விபூதியை அவன் நெருக்காதபடி மீட்டானாயிற்று. [ஈட்டங்கொள் தேவர்கள்]-ஈட்டம்-திரள். ஈஸ்வராபிமாநிகளாய் "ஒருவர் பக்கல் செல்லக்கடவோமல்லோம்" என்றும், எல்லார்க்கும் இடுமதொழிய "ஒருவர் பக்கல் ஒன்றுங்கொள்ளக்கடவோமல்லோம்" என்றும் இருக்குமவர்களாய், தன்னில்தான் சேர்த்தியின்றிக்கே யிருக்கிற தேவர்கள், ஆபத்தின் மிகுதி

யாலே தன்னிலே ஒரு மிடறாய் ஸமாநாபிமாநிகளாய்ச்சென்று இரந்தவர்களுக்கு, "நம்பக்கலிலே வந்திரந்தார்கள்" என்கிற இத்தையே கொண்டு "உங்கள் காரியமெல்லாம் செய்கிறோம்" என்றுசொன்ன வார்த்தையாலே அவர்கள்து:க்கத்தைப்போக்கி, "மாஶுச:" என்றான். து:க்கம்போக்கினபடி என்? என்னில், [கோட்டங்கை வாமநனாய்] - ஏற்றுக்குவிந்த கையையுடையனாய். அங்கை - கொடுத்து வளர்ந்த கை. [செய்த கூத்துக்கள்] - அன்றேபிறந்து அன்றே வளர்ந்து அன்றே பிக்ஷையிலே அதிகரித்து, சிறு காலைக் காட்டி இரந்து பெரியகாலாலே அளந்துகொண்ட மநோஹாரிசேஷ்டிதங்களை அநுஸந்தித்தும் - கேட்டுமுணர்ந்தவர் கேசவற்காளன்றி ஆவரோ? [கூத்துக்கள்] - மநோஹாரி சேஷ்டிதங்கள். வல்லாராடினாற்போலே இருக்கிறதாயிற்று இவர்க்கு.

ஈடு.—ஆறாம்பாட்டு. கீழ்ச்சொன்ன குணங்கள்தான் ஓரேற்றமோ, * அலம்புரிந்த நெடுந்தடக்கையைக்கொண்டு கோட்டங்கைவாமநனாய் இந்தப்பூமியை ரக்ஷித்த மஹாகுணத்துக்கு ? என்கிறார்.

[கேட்டுமுணர்ந்தவர்] - ஓராசார்யன் ஓரர்த்தத்தை யுபதேசித்தால் அத்தை ஶ்ரவணம்பண்ணி, "ஏவம்ஜ்ஞாத்வாபவிதுமர்ஹதி" (ஏவம்ஜ்ஞாத்வாபவிதுமர்ஹதி) என்கிறபடியே பின்னை யவ்வர்த்தத்தைத் தெளிந்திருக்குமவர்கள். [கேசவற்காளன்றியாவரோ] - புறம்பாஶ்ரயணீயரில்லாதபடி தானே ஆஶ்ரயணீயனானவனுக்கொழிய ஆளாவரோ ? "ஆவாம் தவாங்கே ஸம்பூதௌ தஸ்மாத்கேஶவநாமவாந்" (ஆவாங் தவாங்கே ஸம்பூதௌ தஸ்மாத்கேஶவநாமவாங்) - என்கிறபடியே யாதல், ப்ரஶஸ்தகேசன் என்னுதல். [வாட்டமிலாவண்கை] - கொடுத்துமாறக்கடவதன்றியே, எப்போதும் கொடுக்கையிலே ஒருப்பட்ட கை. ராவணாதிகளைப்போலே தலையறுத்துப்போகட வொண்ணாமைக்கு நிபந்தநமுண்டாகையாலே யழியச்செய்திலன். [மாவலிவாதிக்கவாதிப்புண்டு]- இது பற்றாசாக அவன்நெருக்க நெருக்குண்டு. [ஈட்டங்கொள்தேவர்கள்] - க்ராமணிகளைப் போலே, ஒருவர் †உச்ச்ராயம்ஒருவர்பொறாதே, தலையறுப்பாரும் தலையறுப்புண்பாருமாய்த் திரியக்கடவ ஜாதியிறே ; இப்படி சேராச்சேர்த்தியா யிருக்கிறவர்கள் ஆபத்து மிக்கவாறே

ஆறாம்பாட்டு.—கேட்டும் இத்யாதி. கீழ்அஞ்சுபாட்டிலும்சொன்ன குணங்களைப்பற்ற இப்பாட்டிற்சொல்லுகிறகுணம் அதிகமென்கிறார் - கீழ்ச்சொன்ன இத்யாதி. திருநெடுந்தாண்டகம், 'அலம்புரிந்தநெடுந்தடக்கை'; அர்த்திகளுக்கு "போதும்" என்னும்படி கொடுக்கவல்ல பெரிய கையென்றபடி. 'கோட்டங்கைவாமநனாய்' - நீரேற்கக் குவித்த அழகியகையையுடைய வாமநனாயென்றபடி. கோடு - குவிக்கை.

"ஜ்ஞாத்வா - ஏவம் - பவிதுமர்ஹதி" என்றந்வயம். "ப்ரஹ்மருத்ரோத்பாதகன்" என்கிறவர்த்தத்திலேஸ்ராவம் - புறம்பாஶ்ரயணீயர் இத்யாதி. ப்ரதாநரான ப்ரஹ்மருத்ராதிகளுக்கு உத்பாதகனென்றபோதே, இவனையொழிய வேறு ஆஶ்ரயணீயரில்லையென்றபடி. ப்ரஹ்மருத்ரோத்ல ப்ரமாணம - ஆவாம் யாதி. ஹரிவம்ஶே கைலாஸயாத்ராயாம், "ப்ரஹ்மணோ நாமாஸ்ம்யாஹம் ஶம்போஶ் ச ஹரிநாம" இதி பூர்வார்த்தம். "வாட்டமிலா" என்றதுக்கர்த்தம் - கொடுத்துமாற இத்யாதி. இப்போது இவனுடைய ஔதார்யத்தை வர்ணிக்கிறதுக்கு ஸ்ராவம் - ராவணாதிகளை இத்யாதி. இதுபற்றாசாக - இந்த ஔதார்யம் பற்றாசாக. தேவர்கள் திரளாயிரார்களோ, "ஈட்டங்கொள்" என்று விசேஷிக்கிறதென் ? என்ன, ஸ்ராவம்-க்ராமணிகளை இத்யாதி. ஆனால், இப்படிப்பட்டவர்கள் திரளுகைக்கு ஹேதுவேதென்ன - இப்படி சேரா இத்யாதி. இரந்

---

† உச்ச்ராயம் - மேன்மை.

தந்தாமபிமாநங்களைப்போகட்டு, எல்லாரும் ஒருமிடறாய்வந்துவிழுந்தார்கள். ஈட்டம்-திரள். [சென்றிரந்தார்க்கிடர்நீக்கிய] - கூறுசெய்வானும் அம்பலத்தேயிருந்தால் ''ஈஶ்வரனும் நம் பக்கல் வரத் தட்டேன்?'' என்றிருக்குமாபோலே, ''' எல்லாரும்நம்பக்கல்வரவேணும் ' என்றிருந்தவர்கள் தங்களாபத்தின்கனமிறே துர்மானிகளாயிருக்கிறவர்கள் திரளவந்திரந்தது'' என்று திருவுள்ளத்திலேகொண்டு அவர்கள் இடரைப் போக்கினபடி. ''अधिकं मेनिरे विष्णुम्'' (அதிகம்மேநிரேவிஷ்ணும்) என்று - ஒரு சோத்தைவில்லை முறித்தபோதாக எம்பெருமான் ஸர்வாதிகனென்பது ; அல்லாதபோது ''ईश्वरोऽहम्'' (ஈஶ்வரோஹம்) என்பதான தேவஜாதி பற்காட்ட, அவர்கள் இடரை நீக்கினபடி. [கோட்டங்கை வாமநனாய்] - நீரேற்கக்குவித்த அழகிய கையையுடையனாய் ; ''போல்லாக்குறளுருவாய்ப் பொற்கையில்நீரேற்று'' என்கிறபடியே, தேவர்களை நெருக்குகையாலேயழியச்செய்யவேணும்: குணவிசேஷத்தாலேயழியச்செய்யமாட்டான் ; இனி, இரண்டுக்கும் அநுரூபமாக ஒரு வழி ரக்ஷகனனதான் பார்க்குமித்தனையிறே. [பொற்கை] - பொலிவெய்தின கை. அழகியகையென்றபடி. கொடுத்துவளர்ந்த கை ; ''गोसहस्रप्रदातारम्'' (கோஸஹஸ்ரப்ரதாதாரம்) என்றும், ''दद्यान्न प्रतिगृह्णीयात्'' (தத்யாந்நப்ரதிக்ருஹ்ணீயாத்) என்றும் சொல்லுகிறபடியே. (ஏற்றுக்குவிந்த கையையுடையனாய். அங்கை - அழகியகை.) [செய்தகூத்துக்கள் கண்டுமே] - அன்றேபிறந்து அன்றேவளர்ந்து அன்றேபிக்ஷையிலே யதிகரித்து, மஹாபலியஜ்ஞவாடத்தளவும் செல்ல, பூமிநெளியும்படி பதறிநடந்து சென்றுபுக்கு, க்ருஷ்ணாஜிநமும் யஜ்ஞோபவீதமும் முஞ்ஜியுமான 1 விநீதவேஷத்துடனே நின்று, ''கோள்வனான்'' என்றாற்போலேசொன்ன 2 முக்தஜல்பிதங்களும், சிறுகாலைக்காட்டிப் பெரியகாலாலே யளந்தது மாகிற இவ்வ்யாபாரங்களடங்கலும் இவர்க்குவல்லாராடினாற்போலே யிருக்கிறபடி. ஐஶ்வரமான மேன்மையுங் கிடக்கச்செய்தே, ஶ்ரிய:பதியான தான் இரந்து ஆஶ்ரிதரை ரக்ஷித்த நீர்மைக்கு, ப்ரளயங்கொண்ட பூமியையெடுத்துரக்ஷித்தது ஒரு குணமாயிற்றதோ ? என்கிறார். (சா)

தார்க்கு என்னாதே, ''சென்றிரந்தார்க்கு'' என்றதுக்குபாவம் - கூறுசெய்வான் இத்யாதி. கூறுசெய்வான் - மணியம்பண்ணுமவன். அவர்கள் துர்மானிகளோ ? என்ன - अधिकं मेनिरे இத்யாதி. கோடுதல் - குவித்தல். ''அம்'' என்று - அழகு. அதாவது - ஔதார்யம். ''நீரேற்க'' என்றதுக்கு ப்ரமாணம் - பொல்லா இத்யாதி. நாய்ச்சியார்திருமொழி. நீரேற்கவேண்டுவானென் ? என்ன - தேவர்களை இத்யாதி. கைக்கு அழகேதென்ன - கொடுத்துவளர்ந்த இத்யாதி. இதுக்கு ப்ரமாணம் - கோஸஹஸ்ர இத்யாதி. ''दक्षिणो दक्षिणं बाहुं महाबाहुररिन्दमः । गोसहस्रप्रदातारमुपधायाय महद्भुजम्'' இதி யுத்தகாண்டே, (உக - எ) வருணம்ஶரணம் கச்சதோ ராமஸ்ய க்ருத்யகதநே. ''दद्यान्न प्रतिगृह्णीयान्न ब्रूयात् किञ्चिदप्रियम् । अपि जीवितहेतोर्वा रामः सत्यपराक्रमः'' இதி ஸுந்தரகாண்டே ஹநுமந்தம்ப்ரதி ஸீதா (கூகூ - உரு$\frac{1}{2}$). ''கூத்துக்கள்'' என்ற பஹுவசநார்த்தம்-அன்றேபிறந்து இத்யாதி. இத்தை ''கூத்து'' என்கிறது. ஆகர்ஷகத்வத்தைப் பற்ற என்கிறார் - வல்லாராடினாற்போலேயிருக்கிறபடி என்று. கீழிற்பாட்டைப்பற்ற இப்பாட்டுக்கு ஆதிக்யமேதென்ன - ஐஶ்வரமான இத்யாதி. கூத்துக்களை -ஆசார்யமுகத்தாலே கேட்டுமுணர்ந்தும் - கண்டும், அதாவது - ஸாக்ஷாத்கரித்தும்இருக்குமவர்கள் -கேசவற்காளன்றி யாவரோ ? இத்யந்வய:. (சா)

---

1. விநீதவேஷம்-வணக்கமுள்ளவடிவம். 2 முக்தஜல்பிதம்-மநோஹாரியான பேச்சு.

ஏழாம் பாட்டு.

கண்டுந்தெளிந்துங் கற்றார்கண்ணற்காளன்றி யாவரோ ?
வண்டுண்மலர்த்தொங்கல் மார்க்கண்டேயனுக்கு வாழுநாள்
இண்டைச்சடைமுடியீசனுடன் கொண்டுசாச்செல்ல
கொண்டங்குத்தன்னொடுங்கொண்டு உடன்சென்றதுணர்ந்துமே.

ஆ —(கண்டுந்தெளிந்தும்.)—மாதாபிதாக்களாலே மஹாதபஸாலப்தனாய்அநவரதம் உபலாலிதனாயிருந்த மார்க்கண்டேயன் தன்னுடைய ஆயுரர்த்தமாக ருத்ரனையாஸ்ரயிக்க, அவனும் "மத்ஸமீஹித ஸித்த்யர்த்தமாக நானும் பரமபுருஷனைநோக்கி தபஸ்சர்யைபண்ணி வர்த்திக்கிறது" என்றுசொல்லித் தன்னுடைய தபோவேஷத்தையுங்காட்டி, "அவனுடைய திருவடிகளை யாஸ்ரயிக்கப்போரு" என்று அவனைக்கொண்டு ருத்ரன் வந்தாஸ்ரயிக்க, அவனுக்காக மார்க்கண்டேயனுக்கு ஸமக்ரமான ஆயுஸ்ஸைக் கொடுத்தருளி நித்யகிங்கரத்வேந விஷயீகரிப்பதுஞ்செய்தருளின இம்மஹாகுணத்தையறிந்துவைத்தும், ஸாராஸாரவிவேகஜ்ஞராயிருப்பார் அந்த க்ருஷ்ணனுக்கு ஆளன்றி யாவரோ ? என்கிறார்.

ஒ.—ஏழாம்பாட்டில், ஸ்ரீயஃபதியான தான் பிறரை இரந்து ஆஸ்ரிதருடைய அபேக்ஷிதபூரணம் பண்ணின குணத்திற்காட்டிலும், தேவதாந்தரபஜநம் பண்ணுகையாலே உபேக்ஷ்யனான மார்க்கண்டேய விஷயீகாரமாகிற விலக்ஷணமான குணத்தை அநுஸந்திக்கிறார்.

[கண்டுமென்று தொடங்கி]-ப்ரியஹிதங்களை அநுஸந்தித்தும் அத்யவஸித்துமிருக்குமவர்கள் க்ருஷ்ணனுக்கன்றி ஆளாவரோ ? [வண்டென்று தொடங்கி] - வண்டு உண்ணுநின்ற பூமாலையை உடையனாய் பாலனான மார்க்கண்டேயனுக்கு ஆயுஸ்ஸுக்காக "நானும் உன்னோடொத்த ஸாயகன்காண்" என்று தன்னுடைய ஜடையைக் காட்டிக்கொண்டு உடனே பேச்சாட்டுத்துணையாகச் செல்ல அவனை விஷயீகரித்துத் தன்னோடொத்த வரிசையைக்கொடுத்தும் பிரியாதே சென்றபடியை உணர்ந்தும். [உசாய்ச் செல்ல] - என்று பாடமாம்போது, வாழுநாள் விசாரித்துச்செல்ல என்றுமாம்.

ப.—அநந்தரம், தான் அர்த்தியாய்வைத்து ஸர்வதேவதைகளும் தன்காற்கீழேவளரும்படியான ஆதிக்யத்தளவன்றியே, தேவதாந்தரபரனான மார்க்கண்டேயனையும் அங்கீகரித்த அதிஸயிதகுணத்தை அநுஸந்தித்தருளுகிறார்.

வண்டு - வண்டுகள், உண் - மதுபாநம்பண்ணுகிற, மலர் - மலரையுடைத்தான, தொங்கல் - மாலையையுடையனாகையாலே, (போகயோக்யமான யௌவநாவஸ்தையையுடைய), மார்க்கண்டேயனுக்கு - , வாழுநாள் - உஜ்ஜீவநகாலத்தை, இண்டை - போக்த்ருத்வஸூசகமானமாலையையும், சடைமுடி - உபாஸகத்வஸூசகமான ஜடாமகுடத்தையுமுடைய, ஈசன் - ஈஸ்வராபிமாநியான ருத்ரன், (ஆஸ்ரிதனானவவன்றன்னையும்), உடன் - கூட, கொண்டு - , உசா - ஸர்வாதிகனானதன்பக்கலிலே புசாவவேணுமென்று, செல்ல - , அங்கு - அந்நிலையிலே, கொண்டு - (அவனை ரக்ஷணீயனாகத்திருவுள்ளத்திலே) கொண்டு, (தேவதாந்தராந்வயத்தைக்கழித்து), தன்னொடும் - தன்னோடே,

கூட்டிக்கொண்டு, உடன் - யாவதாத்மபாவி அவன்பிரியாதபடி, சென்றது - நடந்தப்ரகாரத்தை, உணர்ந்துமே - புராணாதிமுகத்தாலேயறிந்துமே; கண்டும் - தேவதாந்தரங்களிற்காட்டில் இவனுக்குண்டான உத்கர்ஷத்தையபரோக்ஷித்தும், தெளிந்தும் - "ஸுயிக்ஷம் ஒஜஹிரேவிஷ்ணு:" என்னும் கணக்கிலே தெளிந்தும், கற்றார் - இப்படி விலக்ஷணபுருஷமுகத்தாலே கல்வியையுடையவர்கள், கண்ணற்கு - ஆநந்தஜநகனான ஸர்வேஶ்வரனை, அன்றி - ஒழிய, (வேறொருவர்க்கு), ஆள் - அடிமை, ஆவரோ - ? இண்டை - மாலை. செறிவாகவுமாம்.

இ.—ஏழாம்பாட்டில், ஸ்ரீய:பதியான தான் ஆஶ்ரிதர்க்காக அர்த்தியான குணத்திற்காட்டிலும், தேவதாந்தரபஜநத்தினாலே உபேக்ஷ்யனான மார்க்கண்டேய விஷயீகாரமாகிற விலக்ஷணகுணத்தை அநுஸந்திக்கிறார்.

[கண்டுந்தெளிந்துங்கற்றார்] - கற்றுந்தெளிந்துங்கண்டார் - ப்ரியஹிதங்களை ஶ்ரவணம்பண்ணி, தங்களிலே அத்யவஸித்து, அத்தை ஸாக்ஷாத்கரித்தவர்கள், ஸர்வ ஸுலபனுக்கன்றி ஆளாவரோ? ஐஶ்வர்யார்த்திக்கு ஐஶ்வர்ய விஶிஷ்டனையும், கேவலனுக்கு பாஸிகுண யுக்தனையும், பகவல்லாபார்த்திக்கு ஸமஸ்தகல்யாணகுண விஶிஷ்டனையும், இப்படியால் ஸர்வஸுலபனானவனுக்கு. [வண்டென்று தொடங்கி] - வண்டு உண்ணாநின்றுள்ள பூமாலையையுடையனாய் - பாலனான மார்க்கண்டேயனுக்கு. [வாழு நாள்] - ஆயுஸ்ஸுகமாக. [இண்டைச்சடைமுடியீசன] - நெடுநாள் பச்சைகொண்டு பல வேளையிலே "நானும் உன்னோடொக்க ஸாயகன் காண்" என்று ஜடையைக் காட்டினான். [உடன்கொண்டுசாச்செலல] - "ஆஶ்ரயித்தவனை விடவொண்ணாது" என்று அவனைக் கூடக்கொண்டு உசாத்துணையாகச் செல்லவென்னுதல், புருஷகாரமாகச் செல்லவென்னுதல். அன்றிக்கே, [உசாய்ச்செல்ல] - வாழுநாள உசாவிச் செல்ல. "இவன் ஜீவிக்கும் விரகேதோ?" என்று ஆராய்ந்துகொண்டுசெல்ல [கொண்டங்கு] - அங்குக்கொண்டு: ரக்ஷ்யபூதனாகத் திருவுள்ளத்திலேகொண்டு. [தன்னொடுங்கொண்டு] - "நிரஞ்ஜந: பரமம் ஸாம்யமுபைதி" என்று தன்னோடொத்த வரிசையைக்கொடுத்து, [உடன் சென்றதுணர்ந்தும்] - பின்னை ஒருநாளும் பிரியாதே சென்றபடியை உணர்ந்தும் - கண்டுந்தெளிந்தும் கற்றார் கண்ணற்காளன்றியாவரோ? நெடுநாள் தேவதாந்தரபஜநம் பண்ணினவன், மறந்தும் புறந்தொழாமாந்தரான ஸாத்விகபுருஷகாரமாகவாதல் பிராட்டி புருஷகாரமாகவாதல் அன்றிக்கே, தாமஸதேவதையை புருஷகாரமாகக் கொண்டுவர; புறந்தொழாதவர்கடடிசிற, அவர்களையும் பொருந்தவிட்டு, மேன்மேலே ரக்ஷித்த நீர்மைக்குப்போருமோ கீழ்ச்சொன்ன குணங்கள்? என்கிறது.

ஈடு.—ஏழாம்பாட்டு. ஸ்ரீய:பதியான தன்னைத்தாழவிட்டுஇரந்து ரக்ஷித்தது பெரிய ஏற்றமோ? தேவதாந்தரபஜநம்பண்ணின மார்க்கண்டேயனை விஷயீகரித்த இம் மஹாகுணத்துக்கு? என்கிறார்.

ஏழாம்பாட்டு.—கண்டும் இத்யாதி. "மார்க்கண்டேயனுக்கு வாழுநாள்" இத்யாதிகளைக் கடாக்ஷித்தவதாரிகை - ஸ்ரீய:பதியான இத்யாதி.

[கண்டுந்தெளிந்துங்கற்றார்] - (கற்று - தெளிந்து - கண்டார்) ஒருவன்பக்கலிலே
ஓர் அர்த்தத்தைசிக்ஷித்து, அதிலே தெளியவாஸநைபண்ணி, பின்னை ஸாக்ஷாத்கார பர்
யந்தமாக்கிவைப்பார். ஶ்ரவணமநநங்கள்தான் ஓர்ஶநஸ:மாநாகாரத்தளவும் சென்றுநிற்கு
மிறே. [கண்ணற்காளன்றியாவரோ] - த்யாநபரராயிருப்பார், த்யேயவஸ்துவைவிட்டுப்
புறம்பே போவரோ ? [வண்டுண்மலரித்யாதி] - வண்டுகள் மதுபாநம்பண்ணுகிற பூமாலை
யையுடைய ஸ்ரீமார்க்கண்டேயனுக்குவாழுநாளுண்டாகைக்காகவென்னுதல்; 'வாழுநாள்
உசாச்செல்ல' என்று மேலேகூட்டுதல். மாதாபிதாக்கள் இவனையோப்பித்து விளையாட
விட, அங்கே ஓரசரீரிவாக்யம் "இவனுக்கு ம்ருத்யு குறுகிற்று" என்றுசொல்ல, அத்தைக்
கேட்டு பித்ராதிகள் வெறுக்க, "இதுக்கு நீங்கள்அஞ்சவேண்டா, நான்பரிஹரித்துக்கொள்ளு
கிறேன்" என்று இவன்சென்று தேவரையாஶ்ரயிக்க,அவரும் பச்சையிடும் நாளெல்லாம்இடு
வித்துக்கொண்டு, ஒருநாளிலேவந்தவாறே தலைக்கடையையும் புழைக்கடையையும்
அடைத்து ஜடையைவிரித்துக்காட்டி, "உன்னோபாதி யாறல்பீறல்காண்என்காரியமும்: அரு
கில் மாலையைப்பாராதே என்தலையில் ஜடையைப் புத்திபண்ணாய்" என்றுகாட்டி, "ஆனா
லும் நெடுநாள் பச்சையிட்டு ஆஶ்ரயித்த நீ பேசாதேபோகவொண்ணாதிறே; உனக்கோராஶ்ர
யம் காட்டப்பாராய்!" என்ற, அவன் ஸௌலப்யாதிகுணங்களையும் மோக்ஷப்ரதத்வாதி
குணங்களையும் உசாவிக்கொண்டு ஸர்வேஶ்வரன் பக்கலேறச்சென்றான். [கொண்டங்கு] -
"ஐயோ! ம்ருத்யுபயபீதனாய்வந்தாயாகாதே!" என்று திருவுள்ளத்திலேகொண்டு: "துர்மா
நியான இவன் கொடுவந்தான்" என்றுபாராதே, ஒருபிராட்டி புருஷகாரமாக வருவாரைக்
கைக்கொள்ளுமாபோலே கைக்கொண்டு. "நெஞ்சிற்கொண்டு" என்னும்படியே. [தன்
னொடுங்கொண்டு] - இவன்வந்தகார்யம் தலைக்கட்டி, பின்பு தன்னுடன் ஸாம்யாபத்தியை
யுங்கொடுத்து. [உடன்சென்ற துணர்ந்துமே] - ஒரு * கள்வன்கொல்லிற்பிராட்டியைக்
கொடுபோமாபோலே கொடுபோனான்போலேகாணும். "பின்னையென்றும் நின்திருவடிப்

ஶ்ரவணாதிகள் ஸாக்ஷாத்காரபர்யந்தமாயிருக்குமோ ? என்ன - ஶ்ரவணமநநங்கள்
"கண்டார்" என்றத்தைக்கடாக்ஷித்தர்த்தம் - த்யாநபரர் இத்யாதி. த்யேயவஸ்து -
வாழுநாளுண்டாகைக்கு - அவன்குணங்களை யுசாவிக்கொண்டு செல்லவென்னுதல்; வாழுநாளை - உசா
விக்கொண்டு செல்லவென்னுதல். மார்க்கண்டேயனுக்கு மாலைக்குப்ரஸக்தியேதென்ன - மாதா
பிதாக்கள் இத்யாதி "இண்டைச்சடைமுடி" என்றவிஶேஷித்ததுக்குபாவம் - அவரும் இத்யாதி.
"தேவரை" என்றும் "அவரும்" என்றும் சொன்னது - ஸோபாலம்பவசநம். ஆறல் பீறல் - கார்யா
யோக்யம். அருகில்மாலை - ஜடையருகில் மாலையென்றபடி. இவனைக்கூட்டிக்கொண்டு ஸர்வேஶ்
வரன்பக்கலிலே காட்டிக்கொடுக்கைக்கு ஹேதுவருளிச்செய்கிறார் - ஆனாலும் இத்யாதி. உசாவிக்
கொண்டு - சொல்லிக்கொண்டு. "இண்டைச்சடைமுடியீசன்" மாலையையும், ஜடையையும், கிரீ
டத்தையுமுடைய ருத்ரன். வாழுநாள் - ஜீவநகாலம். உடன்கொண்டு-ஆஶ்ரிதனானமார்க்கண்டேயனை
யும் கூடக்கொண்டு. "கொண்டு" என்றதுக்கு - காயிகஸ்வீகாரமாக அர்த்தாந்தரம் - துர்மாநியான
இத்யாதி. "திருவுள்ளத்திலேகொண்டு" என்ற முந்தின அர்த்தத்துக்கு ப்ரமாணம்-நெஞ்சிற்கொண்டு
இத்யாதி. "இத்தண்ணியனாயிருக்கிறவனுக்கு நாமல்லது வேறுபுகலில்லை" என்று நெஞ்சிலே
கொண்டு என்றபடி. திருமொழி அஞ்சாம்பத்து எட்டாந்திருமொழி நாலாம்பாட்டு, "நஞ்சுசோர்வ
தோர்" இத்யாதி. "அங்கு" - அந்நிலையிலே. "உடன்சென்றது" என்றதுக்குபாவம் - ஒருகள்வன்
கொல் இத்யாதி. ஸாம்யாபத்தியையும் கொடுத்தானோ? என்ன - பின்னையென்றும் இத்யாதி.
ம்ருத்யுவை நிரஸித்ததுக்குமேலே, ஒருநாளும் உன்திருவடிகளைப்பிரியாதபடி திருவுள்ளம்பற்றின
*என்றபடி. * ஏழையேதலனில் ஆறாம்பாட்டு, "மன்னுநான்மறை" இத்யாதி. இதுக்கர்த்தம் அருளிச்*

பிரியாவண்ணமெண்ணிய'', ''ஒருப்ருதக்தர்மி'' என்று தோற்றுதபடி, தன்னோடுவிளைகிற ரஸத்தை புஜிப்பித்தபடியை புத்திபண்ணி - கண்டுந்தெளிந்துங் கற்றார் கண்ணற்காளன்றி யாவரோ ? தன்னையாஶ்ரயித்த இந்த்ரனுக்காகத் தன்னைத்தாழவிட்டது ஒரேற்றமோ ? “[illegible]” (மாமேவயேப்ரபத்யந்தேமாயாமேதாந்தரந்திதே) என்னக்கடவ அவன் தேவதாந்தரபஜநம்பண்ணி, அதுக்குமேலே, அவன் புருஷகாரமாகக்கொண்டுவந்து காட்டிக்கொடுக்க, ''என்செய்வான், தன்னையாஶ்ரயித்தவனை யழியவிடாதே புறம்பேயாகிலும் கொண்டுபோய் ரக்ஷிப்பித்தான்'' என்னும் குணம்அவனுக்குண்டாக,மார்க்கண்டேயனைரக்ஷித்தநீர்மைக்கு. தாமஸபுருஷர்களோட்டை ஸஹவாஸம் ஸர்வேஶ்வரனுக்கு த்யாகஹேது; ஸத்த்வநிஷ்டரோட்டை ஸஹவாஸம் அவனுக்கு ஸ்வீகாரஹேது ; இங்ஙனேயிருக்கச்செய்தேயிறே அவன்முன்னிலையாக வந்த இவனுக்கும் காரியஞ்செய்தது! (எ)

எட்டாம் பாட்டு.

செல்லவுணர்ந்தவர் செல்வன்தன்சீரன்றிக்கற்பரோ?
எல்லையிலாதபெருந்தவத்தால் பலசெய்மிறை
அல்லலமரரைச்செய்யும்இரணியனாகத்தை
மல்லலரியுருவாய்ச் செய்தமாயமறிந்துமே.

ஆ.—(செல்லவுணர்ந்தவர்.) - தன்னுடைய தபோபலத்தாலே தேவர்களுக்கு ஸர்வப்ரகார பாதகனான ஹிரண்யனுடைய ஶரீரத்தை அபரிமித பரிமாண ந்ருஸிம்ஹரூபயானாய்க்கொண்டு பிளந்தருளின ஆஶ்சர்யத்தையறிந்துவைத்தும்,அறிவுடையராயிருப்பார், ஆஶ்ரிதஸம்ஶ்லேஷரூப நிரதிஶயஸம்பத்தையுடையனானவனுடைய அந்த ஆஶ்ரிதவாத்ஸல்ய குணத்தையல்லது கற்பரோ ? என்கிறார்.

ஓ.—எட்டாம்பாட்டில், தேவதாந்தரபஜநம்பண்ணினவனை விஷயீகரித்த குணத்திற்காட்டிலும், ஆஶ்ரிதரக்ஷணத்திலுண்டான த்வரையாலே நரத்வஸிம்ஹத்வங்களிரண்டையும் எறட்டுக்கொண்டு அப்போதே தோற்றியருளி ஆஶ்ரிதரக்ஷணம்பண்ணின விலக்ஷணமான குணத்தை அநுஸந்திக்கிறார்.

[செல்லவென்று தொடங்கி] - முட்டஉணர்ந்தவர் பேரழகை உடையவனுடைய குணங்களையன்றிக்கே கற்பரோ? [எல்லையென்று தொடங்கி] - எல்லையில்லாத மஹாதபஸ்ஸுக்களாலே பலமிறுக்குக்களைச் செய்யாநின்றுகொண்டு தேவர்களை ஊவேப்படுத்தாநின்றுள்ள ஹிரண்யனுடைய ஶரீரத்தைப் பெரிய ஸிம்ஹரூபத்தைக்கொண்டு பிளந்த ஆஶ்சர்ய சேஷ்டிதத்தை அறிந்துவைத்தும்.

செய்யாநின்றுகொண்டு. அந்வயங் காட்டுகிறார் - ஒரு ப்ருதக்தர்மி இத்யாதி. கீழிற்பாட்டைப்பற்ற இப்பாட்டுக்கு ஆதிக்யமருளிச்செய்கிறார் - தன்னையாஶ்ரயித்த இத்யாதி. இந் நீர்மையானபடியை யுபபாதிக்கிறார் - தாமஸ இத்யாதி வாக்யத்ரயத்தாலே. 'வண்டுண்மலர்த்தொங்கல்' என்றுதொடங்கி, 'உடன்சென்றதுணர்ந்தும் - கற்றும் தெளிந்தும் - கண்டார் - கண்ணற்காளன்றியாவரோ ?' இத்யந்வயம்.

ப.—அநந்தரம், ஆஸ்ரிதோபகாரார்த்தமாக ஸத்வரனாய்க்கொண்டு ஒன்றின் தலையும் ஒன்றினுடலுமாய்க்கூட்டின நரஸிம்ஹ விக்ரஹத்தை யுடையவனுடைய ஆஸ்சர்யாதிக்யத்தை யருளிச்செய்கிறார்.

எல்லையிலாத - அபர்யந்தமான, பெருந்தவத்தால் - மஹாதபஸ்ஸுக்களாலே, பல - பலவகையாக, செய் - செய்யப்பட்ட, மிறை - லோகபீடையையுடையனாய், அமரரை-பலப்ரதான தேவர்களுக்கும், "வி ஹாணைஂ ஈ நூவஷீஂ த நூ" என்று குடியிருப் பிழந்து நித்யது:கிகளாம்படி, அல்லல் - க்லேஶத்தை, செய்யும் - பண்ணும். இரணியன்-ஹிரண்யனுடைய, ஆகத்தை - சரீரத்தை, மல்லல் - "ஊோவிஷ்ணு" என்கிறபடியே பெரிய, அரியுருவாய்- நரஸிம்ஹரூபத்தை யுடையனாய்க்கொண்டு, செய்த - அநாயாஸேந கிழித்துப்பண்ணின, மாயம் - ஆஸ்சர்யத்தை, அறிந்தும் - ப்ரமாண முகத்தாலேயறிந்து வைத்தும், செல்ல - அந்தவவதாரதாத்பர்யமான ஆஸ்ரிதபக்ஷபாதத்தினுடைய எல்லையளவும் செல்ல, உணர்ந்தவர் - , செல்வன்தன் - அந்த *நாரசிம்ஹவபுஸ்ஸான ஸ்ரீமானுடைய, சீர் - வீரசாரித்ரப்ரதையை, அன்றி - ஒழிய, (வேறொன்றை), கற்பரோ - வ்யுத்பத்திபண்ணுவரோ? மிறை - மிறுக்கு. மல்லல் - பெருமை; ஆரவாரமாய், அட்டஹாஸமாகவுமாம்..

இ.—எட்டாம்பாட்டில், தேவதாந்தரஸஜநம் பண்ணினவனை விஷயீகரித்த குணத்திற்காட்டிலும், ரக்ஷணத்வரையாலே நரத்வஸிஹ்மத்வங்களிரண்டையும் எறட்டுக் கொண்டபோதே தோன்றின மஹாகுணத்தை அநுஸந்திக்கிறார்.

[செல்லவுணர்ந்தவர்] - ஐஸ்வர்ய கைவல்யங்களில் பர்யவஸியாதே ஐமவத் விஷயத்திலே இழிந்து, அதுதன்னிலும் அவதரித்த மேல் எல்லையளவுஞ்சென்று அநுஸந்த்ருத்தவர்கள்; "ப்ரயோஜநாந்தரபரர்க்கு அவர்கள் ப்ராப்யத்தைக் கொடுத்து அதில் களைபிடுங்கினவன், நம்முடைய ப்ராப்யமும்தந்து அதில் களையும்பிடுங்குவான்" என்று இவ்வளவும் செல்லவுணர்ந்தவர். [செல்வன்] - "நாரஸிஹவபுஸ்ஸ்ரீமாந்" என்கிற படியே பேரழகை உடையவன். [சீரன்றிக்கற்பரோ] - அவனுடைய ஆஸ்ரிதபாரதந்த்ர்யம் முதலான நீர்மைகளையல்லது அப்பஸிப்பரோ? [எல்லையிலாத பெருந்தவத்தால்] - ப்ரஹ்மாதிகளைநோக்கிப் பண்ணின் தொகையில்லாத மஹாதபஸ்ஸுக்களாலே. [பல செய்மிறை] - பலமிறுக்குக்களைச் செய்யாநின்றுகொண்டு. வரங்கொடுத்த தேவதைகளுக்கும் குடியிருப்பு அரிதாம்படி மிகைத்து வர்த்தித்தானாயிற்று. [அல்லமரரைச் செய்யுமிரணியன்] - ஸ்வப்ரஜ்ஞாநராயிருக்கிற தேவதைகளை நித்யது:கிகளாம்படி பண்ணின ஹிரண்யனுடைய. [ஆகத்தை] - திருவுகிருக்கிரைபோரும்படி வரத்தை யூட்டியாக விட்டுவளர்த்த வுடம்பை. [மல்லலரியுருவாய்] - "ஊோவிஷ்ணு" என்கிறபடியே அவனுடம்பு குளப்படியாம்படி பெரியவடிவைக்கொண்டு. மல்லல் - பெருமை. மல்லலரியுருவென்று - ஶ்ரீநரஸிஹமென்றுமாம்- "திருவொடுபுணர்ந்த சிங்கம்" என்று ஒரு தமிழன் சொல்லிவைத்தான். "நரங்கலந்த சிங்கமாய்க் கீண்டதிருவன்". [செய்த மாயமறிந்துமே] - வரபலஸஹஜபலங்களாலே திண்ணிதான உடம்பை, பெரியசீற்றத் தோடேசென்று அநாயாஸேந கிழித்துப்பொகட்ட ஆஸ்வர்யத்தை அநுஸந்தித்தும் - செல்லவுணர்ந்தவர் செல்வன்சீரன்றிக் கற்பரோ?

ஈடு.—எட்டாம்பாட்டு. தேவதாந்தரபஜநம் பண்ணினவனை விஷயீகரித்த மஹாகுணத்திற்காட்டிலும், நரத்வ ஸிம்ஹத்வங்கள் இரண்டையும் ஏறிட்டுக்கொண்டு ஆஸ்ரிதரக்ஷணம்பண்ணின மஹாகுணத்தை யருளிச்செய்கிறார்.

[செல்லவுணர்ந்தவர்] - ஆபாஸமான ஐஸ்வர்யஆத்மப்ராப்திமாத்ரங்களில் பர்யவஸியாதே, எல்லை நிலமான ஸமவத் புருஷார்த்தத்தளவும் செல்லவுணர்ந்தவர். † அவனுடன் நித்யபோகம்வேண்டியிருக்குமவர்கள். வாய்க்கரையான ப்ரக்ருதிப்ராக்ருதங்களன்றிக்கே, ஆத்மயாதாத்ம்யஜ்ஞாநபூர்வகமாக பகவத்ப்ராப்தியளவும் செல்லவுணர்ந்தவர்கள். [செல்வன் தன்சீரன்றிக்கற்பரோ] - ஸ்ரீமானுடைய கல்யாணகுணங்களை யொழியக்கற்பரோ ? "இன்னஞ்சொல்லாய் சீமானை" என்னக்கடவதிறே. [எல்லையிலாதபெருந்தவத்தால்] - அளவிறந்த மஹாதபஸ்ஸாலே. வரப்ரதரான தேவஜாதிக்கும் குடியிருப்பு அரிதாம்படியிறே பலித்தது. [பலசெய்மிறையல்லலமரரைச்செய்யும்] - தேவஜாதி கிடந்தவிடத்தில் கிடவாதபடி பலமிறுக்குக்களைச் செய்து, துக்கத்தைப்பண்ணுகிற ஹிரண்யனுடைய, (தேவர்களுடைய வரபல புஜபலங்களாலே பூண்கட்டின) ஶரீரத்தை. மிறுக்கின்கார்யம் - துக்கம். [மல்லலரியுருவாய்] - மல்லல் - பெருமை. "மஹாவிஷ்ணும்" என்னும்படியே, ஹிரண்யன் குளப்படியாம்படியாகப் பெரியவடிவைக்கொண்டு. மல்லலென்று ஸம்பத்தாய், அத்தால் - லக்ஷ்மீநரஸிம்ஹமா யென்னவுமாம்; "நாராயணோ ந்ருஸிம்ஹஸ்து ஶக்திஸ்த்வமமரேஶ்வரி"(நாராயணோந்ருஸிம்ஹஸ்துஶக்திஸ்த்வமமரேஶ்வரி) இறே அவனையொழிந்திருப்ப தொருபோதில்லையிறே. [செய்தமாயமறிந்துமே] - சிறுக்கனுடைய ப்ரதிஜ்ஞா ஸமகாலத்திலேதோற்றி, ஹிரண்யனுடையஉடலை இருபிளவாக்கின இவ்வாஶ்சர்யமான சேஷ்டிதங்களை யறிந்தும். ஒருவன் புருஷகாரமாகக் கோடுவா அவனை ரக்ஷித்ததோருகுணமோ ? தமப்பன் பகையாக. உத்தமாங்கம் ஒருவடிவும் திருமேனி யொருவடிவுமாகக் கொண்டு ரக்ஷித்த குணத்துக்கு? "பெற்றார் பெற்றொழிந்தார் பின்னு நின்றடியேனுக்குற்றனாய்வளர்த்து" என்கிறபடியேவந்து ரக்ஷித்தகுணமிறே. (அ)

எட்டாம்பாட்டு.—செல்ல இத்யாதி. "மல்லலரியுருவாய்ச்செய்தமாயமறிந்தும்" என்றத்தைக்கடாக்ஷித்தவதாரிகை - தேவதாந்தர இத்யாதி.

ஸஹிதம் - அவனுடைய இத்யாதி. "ஆபாசமான" இத்யாதிவாக்யவிவரணம் - வாய்க்கரையான் இத்யாதி. வாய்க்கரையான - மேலெழுந்தவாரியான. ஸ்ரீமானுடையகுணம் அப்யஸிக்க வேண்டியிருக்குமோ ? என்ன - இன்னம் இத்யாதி. மஹாதபஸ்ஸுண்டோ ? என்ன - வரப்ரதரான இத்யாதி. "அமரரை - பல - மிறை - செய்து - அல்லல் - செய்யும்" என்றந்வயிப்பது. மிறுக்குக்கும் துக்கத்துக்கும் பேதமேதென்ன - மிறுக்கின்கார்யம் இத்யாதி. மிறுக்கு - பீடை. "மஹாவிஷ்ணும்" இதிபதம் ந்ருஸிம்ஹ மந்த்ரே. "லக்ஷ்மீநரஸிம்ஹம்" என்னுமதுக்கு ப்ரமாணம் - நாராயண இத்யாதி. சக்தியென்றது - பத்நீயென்றபடி. இங்கும் அவளைச் சொல்லவேணுமோ ? என்ன - அவளை இத்யாதி. செய்த மாயமாவதேதென்ன - சிறுக்கனுடைய இத்யாதி. நீசைப்பற்ற இதுக் காதிக்யமேதென்ன - ஒருவன் இத்யாதி. பிதாபகையானாலும் இவன் ரக்ஷகனோ என்ன, அதுக்கு ப்ரமாணம் - பெற்றார் இத்யாதி. திருமொழி. ஸ்பஷ்டோர்த்தஃ. பூர்வமேவலிகிதஶ்ச. 'செல்லவுணர்ந்தவர் - எல்லையிலாத பெருந்தவத்தால் - அமரரை - பல - மிறை செய் - அல்லல் - செய்யும்' என்று தொடங்கி, 'மாயமறிந்தும் - செல்வன்றன் சீரன்றிக் கற்பரோ ?' இத்யந்வயஃ. (அ)

† ஜீயரரும்பதத்துக்கு 'அவனுடைய' என்று பாடமெனத் தோன்றுகின்றது.

ஒன்பதாம் பாட்டு.

மாயமறிபவர் மாயவற்காளன்றியாவரோ?
தாயஞ்செறுமொருநூற்றுவர்மங்க ஓரைவர்க்காய்
தேசமறியவோர்சாரதியாய்ச்சென்று சேனையை
நாசஞ்செய்திட்டு நடந்தநல்வார்த்தையறிந்துமே.

ஆ.—(மாயமறிபவர்.)—பாண்டவர்களுக்கு ஸர்வலோகஸாக்ஷிகமாக ஸாரத்யம்பண்ணி, அவர்களுடைய ந்யாயப்ராப்தராஜ்யாநுபவ விரோதிகளான துர்யோதநாதிகளையும் அவர்களுடைய ஸேனையையும் நாசஞ்செய்திட்டுத் திருநாடேறவெழுந்தருளின கல்யாணகுணத்தையறிந்துவைத்து நல்லதறிவார் அந்த ஆஶ்சர்யபூதனுக்குஅன்றி ஆளாவரோ? என்கிறார்.

ஒ.—ஒன்பதாம்பாட்டில், ஆஶ்ரிதர்க்காக நரஸிம்ஹமான அதிலுங்காட்டில் அதிககுணமான ஸாரத்யவ்ருத்தாந்தத்தை அநுஸந்திக்கிறார்.

[மாயமென்று தொடங்கி] - அத்யாஶ்சர்யமாயிருக்கிறவனுடைய ஆஶ்ரிதஸௌலப்யத்தை அறியில் அப்படியிருக்கிறவனுக்கு அல்லது ஆளாவரோ? [தாயமென்று தொடங்கி] - பாண்டவர்களுக்கு க்ரமப்ராப்தமாய் வருகிற ராஜ்யத்தை ஸாஜிக்கவொட்டாதே செறுக்கிறமிடுக்கரான துர்யோதநாதிகள் நூற்றுவரும் மங்கும்படி வேறுதுணையின்றிக்கே தனியரான ஐந்துபேர்க்காக லோகமெல்லாம் அறியும்படி விலக்ஷணனான ஸாரதியாய் யுத்தபூமியிலேசென்று ஸேனையை நிஶ்ஶேஷமாக்கி நிரபாயமாகத் திருநாட்டிலே எழுந்தருளினபடியைப் பேசின மஹாபாரதத்தை அறிந்துவைத்தும்.

ப.—அநந்தரம், அநவஸவநீயமான நரஸிம்ஹாவதாரத்திலும் ஆஶ்ரிதஸௌலப்யதா ப்ரகாஶகமான ஸாரத்யத்தாலே தாழநின்று அநிஷ்டவர்க்கத்தை நிரஸநம்பண்ணின குணாதிக்யத்தை யநுஸந்திக்கிறார்.

தாயம் - ந்யாயப்ராப்தமான பாண்டவர்களுடைய ராஜ்யாம்சத்தை, செறும் - செறுத்துக்கைக்கொண்ட, (நைர்க்ருண்யத்தாலும் பரிபவப்ராணாபஹாரபர்யந்தமான அதிப்ரவ்ருத்தியாலுண்டான ஔர்த்யத்தாலும்), ஒரு - அத்விதீயரான, நூற்றுவர் - துர்யோதநாதிகள் நூற்றுவரும், மங்க-, ஓர்-தனியரான, ஐவர்க்கு- பாண்டவர்களைவர்க்கு, ஆய் - தானேஸர்வவிதபந்துவுமாய், தேசமறிய - ஸர்வலோகப்ரஸித்தமாம்படி, (இரண்டு படைக்குநடுவே), ஓர் - அத்விதீயனான, ஸாரதியாய் - ஸாரதியாய், சென்று - ஸஞ்சரித்து, சேனையை - ஸகலஸேனையையும், நாசஞ்செய்திட்டு - நசிப்பித்து, (பூபாராவதரண கார்யம் சமைந்தவாறே), நடந்த - *தன்னுடைச்சோதிக்கெழுந்தருளின அபதாநத்துக்கு ப்ரகாஶமான, நல்வார்த்தை - மஹாபாரதமாகிறநல்வார்த்தையை, அறிந்தும்-, மாயம் - அதில்தாத்பர்யமான ஆஶ்ரிதஸௌலப்யரூபமான ஆஶ்சர்யத்தை, அறிபவர் - அறியுமவர்கள், மாயவற்கு-(தன்பெருமைபாராதேஆஶ்ரிதர்க்குஇழிதொழில்செய்யும்) ஆஶ்சர்யபூதனுக்கு, அன்றி - ஒழிய, (வேறொருவர்க்கு), ஆள் - அடிமை, ஆவரோ - செய்வரோ?

இ.—ஒன்பதாம்பாட்டில், ஆஶ்ரிதனுக்காக நரஸிம்ஹமான அதிலும் அதிககுணமான ஸாரத்யவ்ருத்தாந்தத்தை அநுஸந்திக்கிறார்.

[மாயமறிபவர்] - அத்யாஸ்சர்யமான அவனுடைய ஆஸ்ரிதஸவ்யதையை அறியுமவர்கள். [மாயவற்கு] - மேன்மையைக் கரைகாணிலும் கரைகாணவொண்ணாத ஸவ்யதையை உடையவர்க்கு. [ஆளன்றியாவரோ] - அவனுக்கல்லது ஆளாவரோ! ஸர்வாஸ்ரிகன் தன்னளவிலே வரத் தாழ்ந்தால், புறம்பே போகக்கடவதோ? அவன் தன் ஸ்வரூபத்தை அழியமாறினால், தன்ஸ்வரூபத்திலே குறையநிற்கக்கடவதோ? அவனுக்கே ஆளாகைக்கு அவன் செய்ததென் என்னில்?, [தாயம்செறும்] - தாயப்ராப்தியில் ராஜ்யம் பாண்டவர்களுக்காயிருக்க, அத்தைச்செறுக்கிற; தமக்கு தாயப்ராப்தமாக வந்ததொன்றை யிழந்ததாக நினைத்திருக்கிறாராயிற்று இவர்; "ஃஃவூாணாஷிவா ணுவாஃ" என்று அவன் அபிமானிக்கையாலும், "ஃஷஉ நஂ நஹொகுவஃ" என்று எதிர்த்தலை ஶத்ருக்களாகச் சொல்லுகையாலும். [ஒருநூற்றுவர்மங்க] - ஒருபார்ஶ்வமடங்கப் பெருமிடுக்கான துர்யோதநாதிகளாகிற துர்வர்க்கம் உருமாயும்படி. [ஓரைவர்க்காய்] - தனியரான ஐவர்க்காய். "யஹூஃஷ வமெரவூரவஸ-ஹூஃவெஜநா ஃ-ஃநஃ" என்று இவர்கள் இழந்தவையெல்லாம் தானேயாய். [தேசமறிய] - ஸர்வாஸ்ரிகன் தாழ்ந்தசெயலைச் செய்யாநின்றால், அப்ரஸித்தமாகச் செய்யிலுமாமிறே; அங்ஙனன்றிக்கே, ஸர்வலோக ஸாக்ஷிகமாக இச்செயலை அநுஸந்தித்தார் எல்லாரும் நிர்ஹராயிருக்கலாம்படியிறே செய்தது. "வாயஃஂரயிநஶ-தா-நஃவஸாரயிஂ ஸவஃஹொக ஸாக்ஷிகவகார". [ஓர்சாரதியாய்] - அத்விதீயனான ஸாரதியாய். [சென்று] - யுத்தபூமியிலேசென்று. [சேனையை நாசம்செய்திட்டு] - "ஆயுதமெடுக்கவொண்ணாது" என்று நிர்வந்திக்கையாலே இத்தைத் தவிர்த்து, கையில் முட்கோலாலே ஸேனையைக் கொன்றுபொகட்டு. [நடந்து நல்வார்த்தையறிந்துமே] - தன்க்ருஹத்திலே புகக்கொண்டு சிறைசெய்யத் தேடும் துர்யோதநாதிகள்போல்வாரிருக்கிற தேசத்தைவிட்டு எல்லாருமொக்கப் பரியும்தேசத்திலே நிரபாயமாகவெழுந்தருளினபடியைப் பேசின ப்ரமாணஶ்ரேஷ்டமான மஹாபாரதத்தை அறிந்துவைத்தும் - மாயவற்காளன்றியாவரோ? "கூஃதாஸாரவதரணஂ வஃயிவூஃ" (கூ)

ஈடு.—ஒன்பதாம்பாட்டு. ஆஸ்ரிதனுக்காக நரஸிம்ஹமான அதிலும் அதிககுணமான ஸாரத்யவ்ருத்தாந்தத்தை யநுஸந்திக்கிறார்.

[மாயமறிபவர்] - அவன்வ்யாபாரமடங்கலும் ஆஸ்ரிதார்த்தமாய், ஆஸ்சர்யமாயிருக்குமென்றறியுமவர்கள். [மாயவற்காளன்றியாவரோ] - ஆஸ்ரிதபரதந்த்ரனானவனுக்கன்றியாளாவரோ ? [தாயம்சேறுமொருநூற்றுவர்மங்க] - தாயப்ராப்தியாலே சேறுகிற துர்யோதனாதி துர்வர்க்கம் மங்க. தாயங்கொண்டுநெருக்கிற்றுத் தம்மையோ? அநுகூலரான பாண்டவர்களை நெருக்கிற்றும் தம்மை நெருக்கிற்றாயிருக்கிறபடி. [ஒருநூற்றுவர், ஓரைவர்] - நெருக்குகிறவர்களும் நெருக்குண்கிறவர்களுமிருக்கிறபடி ; [ஓரைவர்க்

ஒன்பதாம்பாட்டு.—மாயம் இத்யாதி. "தேசமறியவோர்ஸாரதியாய்ச்சென்று" என்றத்தைக் கடாக்ஷித்து, கீழ்ப்பாட்டைப்பற்ற இதுக்கேற்றம்அருளிச் செய்கிறார் - ஆஸ்ரிதனுக்காக இத்யாதி.

"தேசமறிய வோர்ஸாரதியாய்ச்சென்று"என்றதுக்குஅநுகுணமாக, "மாயமறிபவர்" என்றதுக்கர்த்தம் - அவன்வ்யாபாரம் இத்யாதி. "செறும்" என்றுஸாமாந்யமாகச் சொன்னதுக்குபாவம் - தாயங்கொண்டு இத்யாதி. அதெப்படியென்ன - அநுகூலரான் இத்யாதி. "நூற்றுவர், ஐவர்" என்றதுக்குபாவம் - நெருக்குகிற இத்யாதி. அதாவது - இவர்களுடைய ப்ராபல்யதௌர்பல்யங்

காய்] - துர்வர்க்கமடைய அங்கேதிரண்டு, ஒருசாரதியையொழிய வேறொருதுணையின்றிக்கே யிருக்கிறவர்கள். தன்வழியேயொழுகாதவர்களை யழியச்செய்து, தன்னையொழிய அறியாதவர்களுக்காகத் தான் தாழநின்று நோக்கினான். ஸம்பந்தம்இரண்டுதலைக்கும் ஒத்திருக்க, தாழ்ந்த தலைகண்டு நோக்கினானித்தனையிறே. ‘அஜு-ூனாங்கதளா’(அர்ஜுநாங்ககதேள)இத்யாதி' ஒருவர்க்கொருவர் கால்மேல் காலேறட்டு ஒருநாளாகவிருந்த ஸமயத்திலே, ‘‘சஞ்சயன்வாசலிலேவந்தான்’’என்று சொல்ல,‘‘அவனைப்புகுரவிடுங்கோள்; இவ்விருப்புக்காணஉகப்பானொருவன்; உகவாதார்நெஞ்சுளுக்கச்சொல்லவல்லானொருவன்; ஆனபின்புஅவனையழையுங்கோள்’’என்றான்.உகவாதார்கண்படலாகாதாப்போலே,உகந்தார் கண்பட்டால் உள்ளநன்மையும்: இப்படியிறேபாண்டவர்கள்விஷயத்தில்அவனிருக்கும்படி. [தேசமறியவோர்சாரதியாய்] - ‘‘பாத்தம்ரதிநமாத்மாநஞ்சஸாரதிம்ஸவலோகஸாக்ஷிகம் சகார’’ (பார்த்தம்ரதிநமாத்மாநஞ்சஸாரதிம்ஸர்வலோகஸாக்ஷிகம் சகார) என்னும்படியே, ‘‘இன்னார்தூதனெனநின்றான்’’என்கிறபடியே.நாட்டில் ஸ்வாதந்த்ர்யபாரதந்த்ர்யங்கள் அவ்யவஸ்த்திதமானவிடத்திலும்ரஹஸ்யத்திலேயிறேஅவைப்ரயோகிப்பது: ஹர்த்தாவும் ஹார்யையைக்காலைப்பிடிப்பது ரஹஸ்யத்திலேயிறே. இப்படியிருக்கச் செய்தேயிறே ஜகத்ப்ரஸித்தமாம்படி தன்னைத் தாழவிட்டது. [சேன்றுசேனையைநாசஞ்செய்திட்டு] - இதுதானும் அர்ஜுநாதிகள்அம்பாலேயன்றுஎன்றபடி. ‘‘ஆயுதமெடுக்கவொண்ணாது ’’ என்று வேண்டிக்கொண்டபடியாலே, ஸாரத்யம்பண்ணித் தேர்க்காலாலேயுழக்கிப் போகட்டான். [நடந்தநல்வார்த்தையறிந்துமே] - தன்மேலே ஶரவர்ஷமாக வர்ஷிக்கிற இத்தண்ணியபூமியினின்றும், தன்வரவுக்கு எதிர்கோள்வார் இருந்தவிடத்தே போய்ப்புக்கானேன்கிறபெரியவார்த்தையையறிந்தும். ‘‘க்ருத்வாபாராவதரணம்’’(க்ருத்வாபாராவதரணம்)இத்யாதி - துர்யோதநாதிகளில்லாதவிடத்தே

களைச்சொல்லுகிறதென்றபடி. ‘‘ஓரைவர்’’ என்கிறசப்தத்துக்கர்த்தம் - துர்வர்க்கம் இத்யாதி. ஸம்பந்தமொத்திருக்க, பாண்டவர்களை ரக்ஷித்து துர்யோதநாதிகளை யழிப்பானென்? என்ன - தன்வழியே இத்யாதி. பரிஹாராந்தரம் - ஸம்பந்தம் இத்யாதி. ‘‘ஆய்’’ என்றதுக்குபாவம் - அர்ஜுநாங்க இத்யாதி. ‘‘அர்ஜுநாங்கதளவாநளகேஶவஸ்யாவலோக்ய । அர்ஜுநஸ்ய த்ருஷ்ணாயாஶ்ச ஸத்யபாமாயாஸ்ததா’’ இத்யுத்யோகபர்வணிஸஞ்சய:. பாவம் - ஒருவர்க்கொருவர் இத்யாதி. இவ்விருப்பில்அவனை யழைக்கவேண்டுவானென்? என்ன-உகவாதார் இத்யாதி. ‘‘தேசமறிய வோர்ஸாரதியாய்’’ என்றதுக்கு உதாஹரணத்வயம்-பார்த்தம் இத்யாதி, இன்னார்தூதன் இத்யாதி. ‘பார்த்தம்ரதிநமித்யாதி’ கீதாபாஷ்யே; ‘இன்னாரித்யாதி’ திருமொழி. உதாஹரணத்வயத்துக்குபாவம் - தௌத்யம் ஸர்வலோகப்ரஸித்தமானாற்போலே, ஸாரத்யமும் ஸர்வலோகப்ரஸித்தமாகச் செய்தானென்றபடி.தேசமறியச் சாரதியானது இவனுக்கேற்றமோ? லோகத்திலுள்ளவர்களும் இப்படிச் செய்யார்களோ? என்ன, லோகத்தார்படியை யருளிச்செய்கிறார் - நாட்டில் இத்யாதி. அதுஎங்ஙனே கண்டதென்ன - ஹர்த்தாவும் இத்யாதி. லோகப்ரக்ரியைக்கு ப்ரதிகோடியாய், இவனுடைய ஏற்றத்தையருளிச்செய்கிறார் - இப்படியிருக்கச்செய்தே இத்யாதி. இத்தால் - லோகத்தில் பாரதந்த்ர்ய வ்யாவ்ருத்தயென்றபடி. சேனையைநாசஞ்செய்தது அர்ஜுநாதிகளல்லவோ? என்ன - இதுதானும் இத்யாதி. ஸாரதியாய்ச்சேனையை நாசஞ்செய்கிறதென், ஆயுதமில்லையோ? என்ன - ஆயுதமெடுக்க இத்யாதி. உழக்கி - மர்த்தித்து; துகைத்தென்னுதல். உழக்குதை - மர்த்திக்கையும், துகைக்கையும். பரமபதத்திலேபோனது நல்வார்த்தையானபடி யெப்படி? என்ன - தன்மேலே இத்யாதி. நல்வார்த்தை - பெரியவார்த்தை. நன்மை - பெருமை. ‘‘போனான்’’ என்றதுக்குப்ரமாணம் - க்ருத்வா இத்யாதி- ‘‘க்ருத்வாபாராவதரணம்ப்ருதிவ்யா:ப்ருதுலோசந: । மோஹயித்வா ஜகத்ஸர்வம்

மறுவலிடாதபடிபண்ணித் தன்திருவடிகளிலே சேர்த்துக்கொண்டதோரு மஹோபகாரத்தை யருளிச்செய்கிறார்.

[வார்த்தையறிபவர்]- மஹாபாரதமெல்லாவற்றாலும்சொல்லிற்றாயிற்றது ஒருவார்த்தையாகாதே. ப்ரயோஜநவத்தாவதிறே - வார்த்தையாவது; "மாமேகம்"(மாமேகம்)என்றத்தையிறே - இங்கு 'வார்த்தை' என்கிறது. கீழடங்கலும் கடல்போலே; அதில்அம்ருதம் போலே இது. [மாயவற்காளன்றியாவரோ] - அவன் "என்னையேபற்று" என்றுசொல்லாநின்றால், இவர்கள்அவனையொழியவும் பற்றுவர்களோ ? (மாயவன் - வ்யாமோஹத்தையுடையவன்.) ரஹஸ்யங்களெல்லாம் வெளியிட்டானிறே, அவள்குழல்முடிக்கைக்காக. [போர்த்தபிறப்பித்யாதி] - பரணிக்கூடு வரிந்தாற்போலே, இவ்வாத்மாவையறியவொண்ணாதபடி சூழப்போதிந்துகிடக்கிற ஜந்மங்கள், அவைபுக்கவிடத்தே புகக்கடவ வ்யாதி, அங்ஙனேயாகிலும் சிறிதுநாள் செல்லாதபடி இடிவிழுந்தாற்போலேநிற்கிற ஜரை, அங்ஙனேயாகிலுமிருக்கவொண்ணாதபடி இவனுக்குஅநபிமதமானவிநாசம், இவற்றையெல்லாம். [போர்த்து]-ஈஶ்வரனுக்கும் ஒருவிரகுபார்த்துத்தள்ளவேண்டும்படியிறே அவற்றின்கனம்; விரகர் நெடுஞ்சுவர்தள்ளுமாபோலேதள்ளி. [பெருந்துன்பம் வேரறநீக்கி]- ஜந்மம்போனால் அநந்தரம்வரக்கடவதான கைவல்யமாகிற மஹாதுஃகத்தை ஸவாஸநமாகப்போக்கி. "கீழ்நின்ற நிலைதான் நன்று" என்னும்படியிறே இதின்தன்மை; அது பின்னை ஒரு ஶரீரபரிக்ரஹம்பண்ணியாகிலும் பகவத்ஸமாஶ்ரயணம்பண்ண யோக்யதையுண்டிறே; இது நித்யவிநாசமிறே. [தன்தாளின்கீழ்ச்சேர்த்து] - பாஃரேகைபோலேயிருக்கத் திருவடிகளிலேசேர்த்து. [அவன்செய்யும் சேமத்தையெண்ணி] - பின்னை இவனுடையமீட்சி தன்புத்த்யதீநமாம்படி பண்ணிவிடுகை. இவன் நினைவோடு தன் ஸங்கல்பத்தோடு வாசியறும்படிபண்ணுகை. இவனும் சேதநனாயிருக்கச்செய்தே, முக்தனானற்கொள்ளும் நாநாபவநமும் அவன்புத்த்யதீநமாயிறேயிருப்பது. இவன்கையிலே

மென்றபடி. இந்த நாலுபாட்டுக்களிற்சொன்னது ஸம்ஸாரத்திலிருக்கச்செய்தே பண்ணினதன்றே, மற்றை ஐந்துபாட்டுக்களிலும் சொன்னது ஸம்ஸாரத்திலேயிருக்கச்செய்தே பண்ணினவையென்றபடி.

"வார்த்தை" என்ற ஏகவசநத்துக்கர்த்தம் - மஹாபாரதம் இத்யாதி. அதெப்படி ? என்ன- ப்ரயோஜநவத்தாவது இத்யாதி. அந்தவார்த்தைதான்எது?என்ன- மாமேகம் இத்யாதி. "ப்ரயோஜநவத்தாவதிறே" இத்யாதிவாக்யத்தை ஸத்ருஷ்டாந்தமாக விவரிக்கிறார் - கீழடங்கலும் இத்யாதி. அவனருளிச்செய்த வார்த்தையறிந்தால் வேறொருவர்க்காளாகவொண்ணாதோ? என்ன - அவன்என்னையே இத்யாதி. அவன் - பரமாப்தனானவனென்றபடி. "மாயவன்" என்றது, த்ரௌபதியிடத்தில் வ்யாமுக்தனென்கிறார் - ரஹஸ்யங்களேல்லாம் இத்யாதி. அவள் - த்ரௌபதி. போக்கியென்றதே, "போர்த்து" என்றதக்குபாவம் - ஈஶ்வரனுக்கும் இத்யாதி. போக்கும்ப்ரகாரத்தை யருளிச்செய்கிறார் - விரகர் இத்யாதி. விரகர் - சமர்த்தர். பரணி - நூலிடுகிற பூச்சிவிசேஷம். கைவல்யம் பெருந்துன்பமோ? என்ன - கீழ்நின்ற இத்யாதி. அத்தைவிசதமாக வுபபாதிக்கிறார் - அது பின்னை இத்யாதிவாக்யத்வயத்தாலே. "சேமம்" என்று - புநராவ்ருத்தியறப்பண்ணும் ரக்ஷையென்று விவக்ஷித்து, "ந ச புநராவர்த்ததே ந ச புநராவர்த்ததே" இத்யாதிப்படியே மீட்சியுண்டாயிருக்க, புநராவ்ருத்தி யில்லையென்னக்கூடுமோவென்ன - பின்னையிவனுடைய இத்யாதி. தன் புத்த்யதீநம் - ஈஶ்வரபுத்த்யதீநமென்றபடி. இத்தால்பலிதம் - இவன்நினைவோடு இத்யாதி வாசியறும்படி பண்ணுகையாவது - இரண்டும் ஏகரூபமாயிருக்கை. சேதநனாகையாலே இவனுக்கும் வேறொரு நினைவுண்டாகாதோ ? என்ன - இவனும் இத்யாதி. "இவன் நினைவோடு" இத்யாதிவாக்ய விவரணம் - இவன்கையிலே இத்யாதி. அதாவது - இவனுடைய ஸ்வாதந்த்ர்யமும் அவனுடைய

இவனைக்காட்டிக்கொடுத்தாலும் அவனுக்குஅஞ்சவேண்டாதபடியாயிருக்கை. [எண்ணித் தெளிவுற்று] - இத்தை மநோரதித்துத்தெளிந்து. அவன் ''என்னையேபற்று'' என்று சொன்னதில், தலையாடியிலே ''ஸகலவிரோதிகளையும் நானேபோக்கி யென்னைத்தருவன்'' என்று சொன்னதைத்தெளிந்திருக்குமவர்கள்; (தலையாடி - ''ஸர்வபாபேப்யோமோக்ஷயிஷ்யாமி'' (ஸர்வபாபேப்யோமோக்ஷயிஷ்யாமி) என்றது.) அவனுக்கல்லதுஆளாவரோ? கீழ்ச்சொன்ன குணங்களெல்லாம், ''மண்தின்னவேணும்'' என்று அழுத ப்ரஜைக்கு அத்தையிட்டு அதுக்குப்பரிஹாரம் பண்ணுமாபோலேயாயிற்று; இங்கு-இவற்றினுடைய ஹிதமேபார்த்து ஸம்ஸாரந்தொடக்கமான ஸகலதுரிதங்களும் மறுவலிடாதபடிபோக்கித் தன்திருவடிகளின்கீழேவைத்து ரக்ஷித்த பெரியநீர்மைக்குப் போருமோ கீழ்ச்சொன்னவையடங்கலும். கீழ்ப்பண்ணினபரிஹாரங்கள், க்ரந்திகிடக்கப்பண்ணும் பரிஹாரம்போலே ஸம்ஸாரம் கிடக்கப்பண்ணின பரிஹாரங்களிறே; அது நிர்வ்ரணமாம்படி சிகித்ஸித்துநோக்குவாரைப்போலே இதிற்சொல்லுகிற குணம். கீழிலவை ஸம்ஸாரிகளிச்சையாலே செய்தவை; இது ஈச்வரேச்சையாலே செய்ததிறே. (கo)

பதினோராம் பாட்டு.

தெளிவுற்றுவீவின்றிநின்றவர்க்குஇன்பக்கதிசெய்யும்
தெளிவுற்றகண்ணனைத் தென்குருகூர்ச்சடகோபன்சொல்
தெளிவுற்றவாயிரத்துள்ளிவைபத்தும்வல்லாரவர்
தெளிவுற்றசிந்தையர் பாமருமூவுலகத்துள்ளே.

ஆ.—(*தெளிவுற்று*) - *அநந்யப்ரயோஜநமாக ஒருகால் தன்னை நினைத்தவர்களுக்குத் தன்திருவடிகளை ஆத்மாந்த போக்யமாக்கிக் கொடுத்துவைத்து, பின்னையும் அவர்களுக்கு ஒன்றுஞ் செய்யப்பெற்றிலோம்'' என்று அவர்கள் செயலை நினைத்துக் கொண்டிருக்கும் இந்தமஹாகுணவிசிஷ்டனை எம்பெருமானை ஸாக்ஷாத்கரித்துச்சொன்ன இத்திருவாய்மொழியைவல்லார், இந்தலோகத்திலேயிருந்துவைத்தே அவனையறிந்து தத்போகபோக ராவரென்கிறார்.*

ஸங்கல்பாநுரூபமாயே யிருக்குமென்றபடி. ''தெளிவு'' என்றத்தைக்காட்டாநின்றுகொண்டு, அந்வயமுங்காட்டுகிறார் - அவன்என்னையே *இத்யாதி. அதாவது -* ''போர்த்தபிறப்பொடு'' *என்றுதொடங்கி, அநிஷ்டநிவ்ருத்தி பூர்வகமாக இஷ்டப்ராப்தியைப் பண்ணித்தருவேனென்று அவன் அருளிச்செய்த உத்தரார்த்தத்தினுடைய அர்த்தத்தையெண்ணித் தெளிவுற்று, ''என்னையே யுபாயமாகப் பற்று'' என்றருளிச்செய்த பூர்வார்த்தத்தையறிந்தவர்கள் மாயவற்காளன்றி யாவரோவென்றபடி. இத்தால் - ''வார்த்தை'' என்றது-பூர்வார்த்தம்; ''போர்த்தபிறப்பு'' என்றுதொடங்கி உத்தரார்த்தம். தலையாடி - உத்தரார்த்தம். அவதாரிகையிலே இப்பாட்டுக்கு ஆதிக்யம்சொன்னத்தை ஸோபபத்திகமாக அருளிச்செய்கிறார் -* கீழ்ச்சொன்ன *இத்யாதி. முகபேதேந ஏற்றத்தையருளிச்செய்கிறார் -* கீழ்ப்பண்ணினபரிஹாரம் *இத்யாதி வாக்யத்வயத்தாலே. ''மண்தின்னவேணுமென்றழுத'' இத்யாதி வாக்யத்வயத்தாலே ஃபலித்தஅர்த்தவிசேஷத்தை யருளிச்செய்கிறார் -* கீழிலவை *இத்யாதிவாக்யத்வயத்தாலே. 'வார்த்தையறிபவர் - போர்த்த' என்றுதொடங்கி 'சேமத்தையெண்ணித்தெளிவுற்று - மாயவற்காளன்றியாவரோ?' இத்யந்வயஃ.* (கo)

ஒ.—நிமமத்தில், இத்திருவாய்மொழியை அப்யஸித்தார் ஸம்ஸாரத்திலே இருந்துவைத்தே ஶுத்தஸ்வஹாவ ரென்கிறார்.

[தெளிவுற்றென்று தொடங்கி] - "எம்பெருமானே ப்ராப்யமும் ப்ராபகமும்" என்றுஅறிந்து அநந்யப்ரயோஜநராய் நின்றவர்களுக்கு நிரதிஶய புருஷார்த்தமான கைங்கர்யத்தைக்கொடுக்கும் ஸ்வஹாவனாய் அதுக்காக எப்போதும்உணர்ந்திருக்கும் க்ருஷ்ணனை. [தெளிவுற்றவாயிரத்துள்] - ஹகவத்குணங்களுக்குஸ்பஷ்டமாக வாசகமான ஆயிரத்தில்.

ப.—அநந்தரம், இத்திருவாய்மொழியை யப்யசிக்க வல்லவர்கள் ஸம்ஸாரத்துக்குள்ளே விசதஜ்ஞானசித்தராவரென்று ஃலத்தை யருளிச்செய்கிறார்.

தெளிவு- ("உபாயோபேயங்களவனே" என்னும்) தெளிவை, உற்று - பெற்று, (அதுக்கு), வீவு - விச்சேதம், இன்றி - இன்றியே, நின்றவர்க்கு - (ஸ்த்திரஸ்வரூபராய்) நின்றவர்களுக்கு, இன்பம்-நிரதிஶயாநந்தரூபமான, கதி - ப்ராப்யத்தை, செய்யும்- பண்ணிக்கொடுக்குமவனாய், தெளிவுற்ற - (இவன் கலங்கினவன்றும் தான்) தெளிந்து நோக்குமவனாய், கண்ணனை - ஆஶ்ரிதசுலபனானக்ருஷ்ணனை, தென் - ஊர்ஶநீயமான, குருகூர் - திருநகரிக்கு நிர்வாஹகரான, சடகோபன் - ஆழ்வார், சொல் - அருளிச்செய்ததாய், தெளிவுற்ற - ஸ்வஸம்பந்திகளைத் தெளிவுற்றிருக்கக்கடவதான, ஆயிரத்துள் இவை பத்தும்-,வல்லாரவர் - அப்யசிக்கவல்லரானவர்கள், பா- கர்மநிபந்தநமான பரப்பை, மரு - உடைத்தான, மூன்று - குணத்ரயக்ருதபேதத்தையுடைய, உலகத்துள்ளே - லோகத்துக்குள்ளே, தெளிவு - சுத்தஸத்த்வகார்யமான ஜ்ஞாநவைசத்யத்தை, உற்ற - உடைத்தாயுள்ள, சிந்தையர் - நெஞ்சையுடையரா யிருப்பார்கள். இது - கலித்துறை.

இ.—நிமமத்தில், இத்திருவாய்மொழி அப்யஸித்தார் ஸம்ஸாரத்துக்குள்ளே இருந்துவைத்தே ஶுத்தஸ்வஹாவரென்கிறார்.

[தெளிவுற்றுவீவின்றி இத்யாதி]-"ப்ராப்யப்ராபகங்கள் அவனே" என்று அத்யவஸித்து, பின்னையுக்த்யாஹாஸவசநாஹாஸங்களால் அதுக்குக் குலைத்தலின்றிக்கே நின்றவர்களென்னுதல்; அநந்யப்ரயோஜநராய் நிலைநின்றவர்களென்னுதல். [இன்பக்கதிசெய்யும்] - ஸுஹரூபமான ப்ராப்யத்தைக்கொடுக்கும். "ஸஷஹெஹ்வாநந்யாதி." [தெளிவுற்ற கண்ணனை] - "நாமே இவன்கார்யஞ் செய்யக்கடவோம்" என்றிருக்கும் க்ருஷ்ணனை. இவன் கலங்கினவன்றும் தான் தெளிந்திருந்து முடியநடத்துமவனை. [தென்குருகூர்ச் சடகோபன்சொல்] - அவன்படிகிடக்க, சொன்னவர்படியாலும் "ஆப்தர்" என்று விஶ்வஸித்திருக்கலாம் வார்த்தை. [தெளிவுற்றவாயிரத்துள்ளிவைபத்தும் வல்லாரவர்] - இவையிரண்டும் கிடக்க, இப்பாசுரந்தானே விஶ்வஸிக்கலாம்படி தெளிவைப் பிறப்பிக்கும் இத்தை அப்யஸிக்குமவர்கள். [பாமருமூவுலகத்துள்ளே தெளிவுற்ற சிந்தையர்] - பதார்த்தங்கள் சேர்ந்திருந்துள்ள ஸகலலோகங்களுக்குள்ளே-கலக்கமேஸ்வஹாவமாயிருந்துள்ள ஸம்ஸாரத்துக்குள்ளே, ஶுத்தமான அந்த:கரணத்தை உடையாராவர். அகர்மவஶ்யனை தான் வரிலும் ஶோகமோஹங்களை விளைவிக்கும் ஸம்ஸாரம்: ஸம்ஸாரிசெல்லிலும் தெளிவைப்பிறப்பிக்கும் பரமபதம்: இப்படி வ்யஸ்த்திதமாயிருக்க, இதுக்குள்ளே முக்தருடைய ஹாவஶுத்தியை உடையராவர்.

முதற் பாட்டில், விஷயப்ரவணரைத் தன்வாசியறியும்படி பண்ணினனென்றது; பிறப்பே பிடித்துத் தன்வாசியறிவார்திரளிலே கொடுபோய்வைத்தானென்றது; இதுக்கு எதிர்த்தட்டான த்வேஷம்பண்ணிப் போந்தவனுக்கும் அவர்கள்பேற்றைக் கொடுத்தானென்றது; அவன்படியிற் குறையாத ஜகத்தை அடியேதொடங்கி உண்டாக்கினனென்றது; தன்னுருக்கெடுத்து வேற்றுருக்கொண்டு நஷ்டமான ஜகத்தை உத்தரித்தானென்றது; வடிவை மாறுடினனன்றியே ஸ்வபாவத்தையும் மாறுடினனென்றது; தேவதாந்தரஸ்பரிஶத்தையும் பாராதே ரக்ஷித்தபடியைச் சொல்லிற்று; யோநித்வபத்தை எறட்டுக்கொண்டு தமப்பன்பகையாகப் பரிவனாய் உதவினபடிசொல்லிற்று. இவையெல்லாம் தன்ஸ்வாதந்த்ர்யம் கிடக்கச் செய்தவை. ஆஶ்ரிதபரதந்த்ரனாய் ரக்ஷித்தபடியைச் சொல்லிற்று; ஸர்வது:கத்தையும்போக்கி ஸ்வரூபாநுரூபமான புருஷார்த்தத்தைக்கொடுக்கும் மஹோபகாரத்தைச் சொல்லிற்று; இப்பாசுரமே முக்தஸ்வபாவனுக்கிவிடும் என்றது.

ஈடு.—நிகமத்தில்-இத்திருவாய்மொழி அப்யஸித்தார், ஸம்ஸாரத்துக்குள்ளேயிருந்துவைத்தே முக்தபாவரென்கிறார்.

ஒ.—ஏழாந்திருவாய்மொழியில், முன்பில் திருவாய்மொழியில் எம்பெருமானைக் காணவேணுமென்று கூப்பிட்டு, "மல்குநீலச் சுடர்தழைப்ப" என்று தொடங்கியுண்டான அவனுடைய அழகை அநுஸந்திக்கையாலே, அவ்வழகுகள் முன்பே நின்றாற் போலே, ப்ரத்யக்ஷமாகத் தோற்றுநின்றுகொண்டு பாஹ்யஸம்ஶ்லேஷத்துக்கு யோக்யமன்றிக்கே நலிய, ஆழ்வார் தாம் நலிவுபடுகிற படியை அந்யாபதேஶத்தாலே பேசுகிறார். எம்பெருமானோடே விஶ்லேஷித்து, அவனுடைய ஸௌந்தர்யாதிகளை நினைத்து தரிக்கமாட்டாதே நோவுபடுகிறாள் ஒருபிராட்டி, சேதநர் சேதநரை அகப்படுத்துவது கண் வழியேயாகையாலே பிராட்டியும் எம்பெருமானுடைய திருமுகத்திலே ஸௌந்தர்யத்தை மிகவும் ஶ்லாகிக்கையாலே, அவ்வழியே ஹ்ருதயம் அகப்பட்டு பாஹ்யவிஷயம் அநுஸந்திக்கைக்கு சக்ஷுராதிகரணங்களுக்குத் தான் துணைப்படமாட்டாதே அவ்வழகையே நிரந்தரமாக அநுஸந்திக்கையாலே சாக்ஷாத்கரித்தாற்போலே அவ்வழகு ப்ரதிபாஸிக்க, தனக்கென்று எழுந்திருந்து கிட்டச்செல்ல, அவ்வழகு தான் நினைத்தபடி பரிமாறவொட்டாமையாலே நடுக்கடலிலே அகப்பட்டாற்போலே அலமருகிற இப்பிராட்டியை, தோழிமாரும் தாய்மாரும், "நீ இப்படிப் படுகைக்கு ஹேதுவென்?" என்று கேட்க, அவர்களைக்குறித்து, எம்பெருமானுடைய திருக்கண்கள் தொடக்கமான திவ்யாவயவங்களில் அழகுகளைக் கையாலேகாட்டி, 'இவை தனித்தனியும் திரளவும்வந்து என்னை நலிய நான் இவற்றிலே அகப்பட்டேன்; இனி என்னையலைத்து உங்களுக்கு ஒருப்ரயோஜநமில்லை; என்பக்கல் நசையறுங்கோள்' என்கிறாள்.

ப.—ஏழாந்திருவாய்மொழியில், இப்படி ஆர்த்தியோடே கூப்பிட்டவர், "அடியுந்தி கைமார்பு கண்வாய்" என்று ப்ரஸ்துதமான விக்ரஹவைலக்ஷண்யத்தை அநுஸந்தித்து, "ஸர்வாங்க ஸௌந்தர்யம்" என்கிறபடியே விலக்ஷணமான உத்தமாங்காவயவங்கள் தனித்தனியேயும் ஸமுதாயமாகவும் ப்ரத்யக்ஷவத் விஶதமாம்படி ப்ரகாஶிக்க; அபரிச்சிந்நஸ்வபாவனான க்ருஷ்ணனுடைய திருக்கண்களையும், ஆஶ்ரிதவிஷயாஸக்தி விஶிஷ்டனான அவனுடைய நாஸாதண்டத்தையும், ஶ்யாமளவிக்ரஹத்துக்கு பரபாகமான அதரஶோபையையும், காமனுக்கும் உத்பாதகனும்படி கமநீயதையையுடையவனுடைய ஸ்ரீ ஆயுகளத்தையும், கோவர்த்தநோத்தாரணம் பண்ணின அநாயாஸத்தையுடையவனுடைய மந்தஸ்மிதத்தையும், அநந்தஶாயியான அவனுடைய கர்ணிகாலங்க்ருதமான கர்ணபாஶத்தையும், மஹாபுஜனான அவனுடைய லலாடஶோபையையும், ஏவம்வித அவயவ விஶிஷ்டமான க்ருஷ்ணனுடைய ஸாமாந்யமுகஶோபையையும், ஆஶ்

சர்பபூதனுள அவனுடைய மயிர்முடிபழகையும், ஸர்வாதிகத்வ ஸூசகமான அபிஷேக ஶோபையையும் அநுஸந்தித்து; அது ஸம்ஸ்லேஷபர்யந்தமல்லாமையாலே அத்யந்தம் ஆர்த்தரான இவருடைய ஆர்த்தி கண்டு நிர்விண்ணரான ஸுஹ்ருத்துக்களுக்கும் பரிவர்க்கும் தமக்குஓடுகிற தசையை யாவிஷ்கரித்த ப்ரகாரத்தை, நாயகனான க்ருஷ்ணனுடைய விஸ்லேஷதசையிலே அவனுடைய திவ்யாவயவங்கள் உருவெளிப்பாடாய்த்தோன்றக் கிட்டியநுபவிக்கப் பெறாமையாலே க்லிஷ்டையான நாயகியானவள், தனக்கு ஹிதஞ் சொல்லி நியமிக்கிற தோழிமார்க்கும் தாய்மார்க்கும் தன்னுடைய ஈடுபாட்டை யறிவித்த பாசுரத்தாலே அருளிச்செய்கிறார்.

இ.—ஏழாந் திருவாய்மொழியில், கீழில் திருவாய்மொழியிலே—"மல்குநீலச்சுடர்தழைப்ப" என்று அவன்வடிவழகை அநுஸந்தித்தார்; அவ்வழகு நெஞ்சிலே ஊற்றிருந்து, பாவநாப்ரகர்ஷத்தாலே ப்ரத்யக்ஷஸமாநாகாரமாய்த் தோற்றி, பாஹ்யஸம்ஸ்லேஷத்துக்கு எட்டாமையாலே நோவுபடுகிற தம் தசையை அந்யாபதேசத்தாலே பேசுகிறார். கலந்துபிரிந்தாள் ஒருபிராட்டி,—சேதநரோடு சேதநர்க்கு முதலுறவுபிறப்பது த்ருஷ்டிபந்தத்தாலே:—அதடியாகவிறே அல்லாதபரிமாற்றங்கள்: ஆகையாலே, அந்தத் திருக்கண்களிலே உள்ள அழகை அநுஸந்தித்து, நிரந்தராநுஸந்தாநத்தாலே உருவுவெளிப்பாடாய், நினைத்த பரிமாற்றத்துக்கு எட்டாமையாலே அலமாக்கிற இவளைத்தோழிமார் தொடக்கமான பந்துக்கள் திரண்டு, "நீஇப்படிப் படுகைக்கு ஹேதுவென்?" என்ன, தோழிமாரொழிந்தார்க்கு மறைக்கும் தசையல்லாத ஆற்றாமை மேலிடுகையாலே, அவர்களைக்குறித்து "அவனுடைய திருக்கண்கள் முதலான அழகுகள் திரளவும் தனித்தனியுமாக நலிய அவற்றாலே நோவுபடாநின்றேன்" என்ன, "இப்படி படுகையும் உன்னுடைய ஸ்த்ரீத்வத்துக்கும் அவனுடைய தலைமைக்கும் போராது" என்ன, "உங்கள் ஹிதவசநத்தளவன்று, அவ்வழகுகள் என்னை மேல்விழுந்து நலியாநின்றன; இனி உற்றத்தைப் பற்றுமித்தனை; இனி என்னை யலைத்து உங்களுக்கோ ப்ரயோஜநமில்லை" என்று அவர்களுக்கு அவள்சொல்லுகிற பாசுரத்தாலே தம்முடைய தசையை அருளிச்செய்கிறார். அல்லாத விஸ்லேஷங்களிற்காட்டில் உருவுவெளிப்பாட்டுக்கு வாசியென்? என்னில்; கீழ்நின்ற நிலைகுலைந்து மேல்பிறக்கும் அபேக்ஷை அல்லாத விஸ்லேஷங்களாகிறன: உருவுவெளிப்பாடாகிறது — கீழில் வைசத்யம் குலையாதே மேல்அபேக்ஷை வர்த்திக்கை. இந்த உருவு வெளிப்பாடு எங்ஙனேயாகிலும் சுருக்கடிக்க வுண்டு. அங்கு ப்ரீத்யப்ரீதி ஸமமாயிருக்கும்; இங்கு அப்ரீதியே யுறைத்திருக்கும்; திருக்கண்கள் "இணைக்கூற்றம்" என்னும்படியிறே இதில் ஆற்றாமை.

ஈடு.—கீழில்திருவாய்மொழியிலே - "மல்குநீலச்சுடர்தழைப்பச் - செஞ்சுடர்ச் சோதிகள்பூத்து ஒருமாணிக்கம்சேர்வதுபோல் - அந்தரமேற்செம்பட்டோடடியுந்திகைமார்பு கண்வாய் - செஞ்சுடர்ச்சோதிவிட வுறை என்திருமார்பனையே" என்று அவன்வடிவழகை அநுஸந்தித்தார்; அவ்வடிவழகுதானே நெஞ்சிலே ஊற்றிருந்து அத்தையேபாவித்து, அந்த பாவநாப்ரகர்ஷத்தாலே ப்ரத்யக்ஷஸமாநாகாரமாய், பின்னை "ப்ரத்யக்ஷம்" என்றே புத்தி

ஏழையராவி ப்ரவேசம், ஸங்க்ரஹஸங்கதி - கீழில்திருவாய்மொழியிலே இத்யாதி. ஊற்றிருந்து - ஊறிக்கொண்டிருந்து: மாறாதே அநுவர்த்தித்தென்றபடி. உருவுவெளிப்பாடு - ப்ரத்யக்ஷஸமநாகார மாநஸஸாக்ஷாத்காரம். கீழ்உக்தத்தை விஸ்தரேண அருளிச்செய்கிறார் - ஸர்வேஸ்வர

பண்ணி யணைக்கக் கணிசித்துக் கையைநீட்டி, அப்போதே பெருமையாலே தமக்குப் பிறந்த ஆற்றாமையை, எம்பெருமானோடே கலந்துபிரிந்து உருவுவெளிப்பாட்டாலே நோவு படுகிறாளொருபிராட்டிபாசுரத்தாலே யருளிச்செய்கிறார். ஸர்வேஶ்வரனோடே கலந்து பிரிந்து தளர்ந்து உருவுவெளிப்பாட்டாலே நோவுபடுகிறாளொருபிராட்டி,—சேதநர் சேதநரோடு கலக்கும்போது த்ருஷ்டிஸம்பந்தம்முன்னாகப் பின்னையிறே அல்லாதபரிமாற்றங்களை யாசைப்படுவது; ஆகையாலே,— திருக்கண்களிலழகை யநுஸந்தித்து, அவ்வழியாலே திருமுகத்திலழகை யநுஸந்தித்து அநந்தரம் அவ்வருகே சிலபரிமாற்றங்களை யாசைப்பட்டு அப்போதே அது கைவாராமையாலே நோவுபட; இவள்தசையை யநுஸந்தித்த தோழிமாரும் தாய்மாரும் "உனக்குஓடுகிறது என்?"என்று கேட்க,—சிலர்க்குச் சொல்லிச் சிலர்க்கு மறைக்கும்படியாயன்றே ஆற்றாமை ப்ரஸித்தமானபடி. ஆகையாலே,—அவர்களைக் குறித்து "அவனுடைய திருமுகத்திலழகானது தனித்தனியும் திரளவும் வந்து என்னை நலியாநின்றது" என்ன, "நீ இங்ஙனே சொல்லுமது உன்னுடைய ஸ்த்ரீத்வத்துக்குப் போராது: அவனுடைய தலைமைக்கும் போராது; நீதான் எங்களை நோக்கக்கடவதாயிருப்பதொரு ஸ்வபாவமுண்டே, அதுக்கும் போராது; ஆனபின்பு, இத்தைத் தவிர்" என்று ஹிதஞ் சொல்லுவாரும் பொடிவாருமாக; "நீங்கள் பொடிகிற இதுகேட்டு மீளுமளவல்ல அது என்னைநலிகிறபடி: இனித்தான் ஏதேனுமாக உறைத்தத்திலே ஊன்றிநிற்கு மத்தனையிறே: ஆனபின்பு, நீங்கள் என்னைவிட்டுப்பிடிக்கவமையும்" என்று அவர்களுக்குத் தன்பக்கல் நசையறவேண்டும்படி தனக்குப்பிறந்த ஆற்றாமையை அறிவிக்கிறாளாயிருக்கிறது. ஸர்வேஶ்வரனுடைய குணங்களை யாசைப்படுகையும், அதுதான் மாநஸாநுபவமாயிருக்கையும், அநுபவதகுணங்களொழிய குணாந்தரங்களிலே அபேக்ஷைபண்ணுகையும், அதுதன்னில் க்ரமப்ராப்திபற்றாமையும், அதுதான் கீழ்நின்றநிலையை மறக்கும்படிபண்ணுகையுமாகிற இவையிறே - இவர்க்குத் திருவாய்மொழியெங்கும் ஓடுகிற ஸ்வபாவந்தான். அவற்றிற்காட்டில், உருவுவெளிப்பாடாகச் சொல்லுகிற இதில் ஏறினஅம்ஶம் என்? என்னில், - கீழ்ப்பிறந்த வைஶத்யமுங் கிடக்கச்செய்தே மேலே அபேக்ஷைபிறக்குமதாயிற்று- உருவுவெளிப்பாடாகிறது. அல்லாதவிடத்தில், கீழ்ப்பிறந்த வைஶத்யத்தையழித்திறே மேலில் அபேக்ஷை பிறப்பது. * எங்ஙனேயோவிலும் - ப்ராயேண இதுவேயன்றோ ஓடுகிறது. அதில் இதுக்கு

னோடே இத்யாதி. 'ஒருபிராட்டி' என்றதுக்கு 'திருக்கண்களிலழகை யநுஸந்தித்து' என்றத்தோடே அந்வயம். முன்னே திருக்கண்ணழகைச் சொல்லுவானென்? என்ன - சேதநர் இத்யாதி. த்ருஷ்டிஸம்பந்தம்முன்னாக என்றது - "வக்ஷ:ஸ்ரீ ஶிரோஜஸ்ஸஹ:" என்றத்தைப்பற்ற. பரிமாற்றம் - காயிகவ்யாபாரம். தோழிமார்க்கொழிய தாய்மார்க்கு ஸ்வாவஸ்த்தையைச்சொல்லலாமோ? என்ன - சிலர்க்கு இத்யாதி. திரளவும்என்றது - "கோளிழைத்தாமரையும்" இத்யாதியைப்பற்ற. "நிற்றிமுற்றத்துள்" என்றத்தைப்பற்ற - ஸ்த்ரீத்வத்துக்குப்போராது என்றது. எங்களை நோக்கக்கடவதாயிருப்பதொரு ஸ்வபாவமென்றது - எங்கள்வார்த்தைகேட்டு எங்களுக்குஹவ்யையாயிருப்பதொரு ஸ்வபாவமென்றபடி. நாங்களும் நலியவில்லையோ? எங்கள்வழியே யொழுகவொண்ணாதோ? என்ன-இனித்தான் இத்யாதி. உறைத்ததிலே - ப்ரபலமானதிலேயென்றபடி. "அன்னைமீர்நசையென்நுங்கட்கே" என்றத்தைப்பற்ற - ஆனபின்பு இத்யாதி. ஸ்வாபதேசத்தில் இது ஆவதேதென்ன - ஸர்வேஶ்வரனுடைய இத்யாதி. அதுதன்னில் - குணாந்தராநுபவத்தில். ஏறின அம்ஶம் - அதிகாம்ஶம். மற்றையிடங்களில் இப்படியன்றோ? என்ன - அல்லாத இத்யாதி. அல்லாதவிடத்தில் - உருவுவெளிப்பாடல்லாத இடத்திலென்றபடி. ப்ராயேண என்கையாலே - மற்றைத்திருவாய்மொழிகளிலே ஓரோ

வாசியேன்? என்னில்; அதில் - ப்ரீத்யப்ரீதி ஸமமாயிருக்கும், இங்கு – அப்ரீதி மிக்கிருக்கும். திருக்கண்களிலழகை "இணைக்கூற்றம்" என்னும்படியாயிற்று இங்கு பாதகத்வத்தில் உறைப்பிருக்கும்படி.

முதற் பாட்டு.

ஏழையராவியுண்ணும் இணைக்கூற்றங்கொலோவறியேன்
ஆழியங்கண்ணபிரான் திருக்கண்கள்கொலோவறியேன்
சூழவுந்தாமரைநாண்மலர்போல் வந்துதோன்றுங்கண்டீர்
தோழியர்காளன்னைமீர்! என்செய்கேன்? துயராட்டியேனே.

ஆ.—பரமபுருஷ ஸம்ஶ்லேஷாபேக்ஷவநிதாஜந ப்ராணஹாரி ம்ருத்யுயுகளமோ? அன்றியே, ஆயதஅதிரமணீய விலோசந விஜித ஸகலலோகனான எம்பெருமானுடைய திருக்கண்கள்கொலோ? அறிகிறிலேன்; அப்போதலர்ந்த தாமரைப்பூப்போலே சூழவந்து தோன்றி என்னை பாதியாநின்றன; தோழியர்காள்! அன்னைமீர்! என்றும் து:கமேபடப்பிறந்தேனாகாதேயென்று, "ஹா ராமே ஹா லக்ஷ்மண ஹா ஸுமித்ரே ஹா ராமமாதஸ்ஸஹமே ஜநந்யா" என்று அஶோகவநிகையில் பிராட்டி கூப்பிட்டாற்போலே கூப்பிடுகிறாள்.

ஓ.—முதற்பாட்டில், திரு

சொல்லுகிறாள்.

[ஏழையென்று தொடங்கி] - சபலைகளான பெண்களை முடிப்போமென்று க்ருதஸங்கேதராய் வந்தார் இரண்டும்ருத்யுக்களோ? அறியேன். [ஆழியென்றுதொடங்கி]- கடல்போலே அழகிய திருநிறத்தையுடைய க்ருஷ்ணனுடைய அழகாலே ம்ருத்யுக்களிலுங் கொடிதான திருக்கண்கள் கொலோ? அறியேன். திருவாழியையுடையனாய உபகாரஶீலனான க்ருஷ்ணனுடைய கண்கள்கொலோ? என்றுமாம். [நாண்மலர்போல்] - ஸம்ஶ்லேஷதஶையிற் செவ்வி.

ப.—முதற்பாட்டில், க்ருஷ்ணனுடைய திருக்கண்கள் தன்னை நலிகிறபடி சொல்லுகிறாள்.

ஏழையர் - (சபலைகளான) பெண்பிறந்தாருடைய, ஆவி - ப்ராணனை, உண்ணும் - க்ரஸிக்கக்கடவதாய், இணை - (ஒன்றுக்கொன்று சேர்த்தியான) இரட்டை, கூற்றங்கொலோ - ம்ருத்யுவோ? அறியேன் - (பாதகத்வத்தாலே கண்ணென்று) அறுதியிடமாட்டுகிறிலேன்; (அங்ஙனன்றியே), ஆழி - ரத்நாகரம்போலே, அம் - (அபரிச்சிந்ந) விலக்ஷணஸ்வபாவனாய், (என்னோடு ப்ரதமத்திலே), கண்ணன் - விதேயனாய், பிரான் - (ஸம்ஶ்லேஷித்து உபகரித்த) க்ருஷ்ணனுடைய, திரு - விலக்ஷணமான, கண்கள் கொலோ – திருக்கண்கள்தானோ? அறியேன் - (தர்ஶநீயதையாலே ம்ருத்யு

பாட்டுக்களிலே உருவுவெளிப்பாடுண்டென்றபடி. "மிக்கிருக்கும்" என்கைக்கு நியாமகமேதென்ன - திருக்கண்கள் இத்யாதி.

வென்று) அறுதியிட மாட்டுகிறிலேன்; சூழவும் - (அகலப்போகவொண்ணாதபடி) சுற்றும், தாமரை - தாமரையினுடைய, நாண்மலர்போல் - செவ்விப்பூப்போலே, வந்து - வந்து, தோன்றும் - தோன்றாநின்றது: கண்டீர் - காணுங்கோள்; தோழியர்காள் அன்னைமீர் - (ஆந்தரக்லேசம்அறியாதே அந்தரங்கரான) தோழிமாரோடு (ப்ராக்ருதியறிந்து பெற்று வளர்த்த) தாய்மாரோடு வாசியற நியமிக்கிறவர்களே! துயராட்டியேன் — (ஸ்வஸம்வேத்யமான) க்லேசத்தையுடைய நான், என் செய்கேன் - (க்லேச நிவ்ருத்திக்கு) என்ன பரிஹாரம் பண்ணுவேன்? தோன்றுகிற திருக்கண்களை மறைக்க மாட்டேன்; கிட்டி அநுபவிக்கமாட்டேனென்று கருத்து.

இ.—முதற்பாட்டில், திருக்கண்களில் அழகுநலிகிறபடியைச் சொல்லுகிறாள்.

[ஏழையராவியுண்ணும்] - "ஆசைப்பட்ட விஷயம் கிடையாது" என்றாலும் மீளமாட்டாத சபலைகளுடைய ப்ராணனை முடிக்கும். ராமசரம்போலே, ஒப்பனை குறியழியாதிருக்க ப்ராணனைத் துணிக்கும். புருஷர்க்கும், பருவம்நிரம்பி ஹிதஞ் சொல்லும் ஸ்த்ரீகளுக்கும் பாதையில்லை. [இணைக்கூற்றங்கொலோ] - "ஒரும்ருத்யுவாலே முடிக்கவொண்ணாது" என்று, இரண்டு ம்ருத்யு க்ருதஸங்கேதிகளாய் வந்தாற்போலேயாயிற்றிருக்கிறது. [அறியேன்] - "சபலைகளையே நலியவேணும்" என்னும் நிர்வந்தமில்லையே; பாலஸாதாரணஷிக்ஷிதாவதாரியுமிறே. [ஆழிஇத்யாதி] - அன்றியே, பெண்பிறந்தாரை நலியுமவைதானேயோ? உபகாரசீலனான க்ருஷ்ணனுடைய கடல்போலேயிருந்துள்ள திருக்கண்கள் என்னுதல்; கடல்போலே ச்ரமஹரமான நிறத்தையுடையவனுடைய திருக்கண்கள் என்னுதல்; கையிலே திருவாழியையுடையவனுடைய திருக்கண்கள் என்னுதல். [அறியேன்] - "உயிர்க்கெல்லாம் தாயாயளிக்கின்ற தாமரைக்கண்" என்றிறே, இவள் ப்ரதிபத்தியிருப்பது. முதல்உறவு பண்ணினவைதானேயிறே இப்போது பாதகமாயிருக்கிறது. ஒன்றை நிர்ணயிக்கமாட்டாமையாலே அறியேன் என்கிறாள். ஆனால், தப்பப்பார்த்தாலோ வென்னில்?—[சூழவும் தாமரைநாண்மலர்போல்] - பார்த்த பார்த்தவிடமெல்லாம் அதுவேயாய், இறாய்க்கப் பார்த்தவிடத்தே வந்துநிற்கும். நாண்மலரென்று ஸம்ச்லேஷ தசையிற் செவ்வியைச் சொல்லுகிறாள். "ப்ரேமதஸம்ச்லேஷகாலே" என்று பிரிந்தபின்பு அத்தலையிலுள்ளதறியாளே. [வந்து தோன்றும்] - உருவுவெளிப்பட்டாலே வந்ததென்று இருக்கிறாளல்லள்; அத்தலையாலே வந்தது என்றிருக்கிறாள். [கண்டீர்] - ப்ரத்யக்ஷிக்கிற இவ்வர்த்தத்துக்கு உபதேசம் வேணுமோ? உங்களுக்குத் தோற்றுகிறதில்லையோ? [தோழியர்காள் அன்னைமீர்] - "தோழிமார்க்குச் சொல்லக்கடவது, தாய்மார்க்கு மறைக்கக்கடவது" என்கிற விவேகம் நடையாடாத தசாவிசேஷத்தைச் சொல்லுகிறது. [என்செய்கேன்] - இறாய்க்கப் பார்ப்பேனோ, அநுபவிக்கப் பார்ப்பேனோ? [துயராட்டியேன்] - "ஸந்தோஷஹர்ஷாவிஷ்டஹஸ்திகலதரஸ" என்றிருக்குமது தவிர்ந்து. "க்லேசேநதேஹாக்லேச" வே

ஈடு.—முதற்பாட்டு. இம்முகத்துக்கு நேத்ரபூதர் நாம்அன்றோஎன்று முற்பட, திருக்கண்களிலழகுவந்து தம்மை நலிகிறபடியை யருளிச்செய்கிறார்.

முதற்பாட்டு.—ஏழையர் த்யாதி. யன" என்றத்தைப்

பற்ற ரஸோக்தியாக அவதாரிகை - ம் த்யா ந்தமுகத்துக்கும், இப்ப்ரதேசத்

துக்கும் இதி அயர்த்தத்வயம். - க ப் அர்த்தத்வயம்.

[ஏழையராவி இத்யாதி] - ஓரோவிஷயங்களிலே சாபலத்தைப்பண்ணி, அவைபெறாவிடில் தரிக்கமாட்டாத அபலைகளுடைய ப்ராணன்களை முடிக்கிற ம்ருத்யுக்கள் இரண்டோ? பிரிந்து ஆற்றாமையை விளைத்தவனுக்குமன்றிக்கே, "இது ஆகாது" என்று ஹிதஞ்சொல்லி மீட்கப்பார்க்கும் பருவங்கழிந்த தாய்மார்க்கு மன்றிக்கே, அபலைகளையே முடிப்பன இரண்டு கூற்றமோ? தன்கண்ணழகு தான் அறிகிறிலனே! தன்னையும் நலிந்ததாகில் வாரானோ? கண்ணாடிப்புறத்திலுங் கண்டறியானோ? [ஆவியுண்ணும்] - ராமஶரம்போலே, ஒப்பனை குறியழியாதேயிருக்க உயிரை முடியாநின்றது. [இணைக்கூற்றங்கொலோ] - ம்ருத்யுக்களிருவர் தங்களிலே க்ருதஸங்கேதராய் வந்தாற்போலேகாணும் திருக்கண்களிலழகு பாதகமாகிறபடி. [அறியேன்] - அறியேனென்பானேன்? என்னில், - ம்ருத்யுக்களிருவர் க்ருதஸங்கேதராய் வந்தாலும் அபலைகளையே நலியவேண்டும் நிர்ப்பந்தமில்லையே; (*'பும்ஸாம் த்ருஷ்டிசித்தாபஹாரிணௌ'* இறே.) அத்தாலே சொல்லுகிறது: [ஆழியங்கண்ணபிரான்திருக்கண்கள் கொலோவறியேன்] - அன்றிக்கே, பெண்பிறந்தாரையே நலியக்கடவவானவை தாமேயோ? அல்பம் அண்ணியாரே பாதகராமன்று தப்பவிரகில்லை, இப்படி முதலுறவுபண்ணிப் பொருந்தவிட்ட இத்திருக்கண்கள்தானேயோ? உபகாரஶீலனான க்ருஷ்ணனுடைய கடல்போன்ற கண்களென்னுதல், கடல்போலே ஶ்ரமஹரமான வடிவையுடைய உபகாரஶீலனான க்ருஷ்ணனுடைய திருக்கண்களென்னுதல். [அறியேன்] - இதுக்குமுன்பு பிரிந்தறியாமையாலே திருக்கண்கள் பாதகமாமென்று வ்யுத்பத்தியில்லை. "உயிர்க்கெல்லாம் தாயாயளிக்கின்ற தண்தாமரைக்கண்" என்றிறே கேட்டிருப்பது? இக்கடாக்ஷமே தாரகமாகவிறே லோகமடைய ஜீவிப்பது. நாம் கேட்டிருந்தபடியன்றிக்கே இராநின்றது, இப்போது காண்கிறபடி. ஆனால், தப்பினாலோ? என்னில், - [சூழவும் இத்யாதி] - மூலபலத்தினன்று பார்த்த பார்த்த விடமெல்லாம் பெருமாளே யானாற்போலே யாயிற்று; ராமஶரத்துக்கு ராக்ஷஸர்க்குத் தப்பலாமன்றாயிற்று, இக்

---

*ஸ்த்ரீகள் என்னாதே, "ஏழையர்" என்று விஶேஷித்ததுக்கு பாவம் - ஓரோவிஷயங்களிலே இத்யாதி. "ஏழையர்" என்றத்தால் வ்யாவ்ருத்தி - பிரிந்து இத்யாதி. அவனுக்கு பாதையில்லையென்று தான் அறிந்தபடி எப்படியென்ன - தன்கண்ணழகு இத்யாதி, கண்ணழகு - கண்ணழகால்வந்த பாதையென்றபடி. அறிந்தாலோவென்ன - தன்னையும் இத்யாதி. தன்கண்ணழகு தனக்குத்தெரிய ப்ரஸக்தியுண்டோ? என்ன - கண்ணாடி இத்யாதி. "ஆவியுண்ணும்" என்றதுக்கு பாவம் - ராமஶரம் இத்யாதி. * உயிர்க்கெல்லாம் தாயாயளிக்கின்ற தண்தாமரைக்கண்ணனே, "இணைக்கூற்றம்" என்பானென்? என்ன-ம்ருத்யுக்கள் இத்யாதி. 'அறியேனென்பானென்? கூற்றமென்று நிஶ்சயித்தாலோ என்னில்' என்று கூட்டுவது. 'அத்தாலே "அறியேன்" என்று சொல்லுகிறது' என்றபடி. "கண்ணபிரான் திருக்கண்கள்" என்றதுக்கு பாவம் - அன்றிக்கே பெண்பிறந்தாரையே இத்யாதி. நலிகிறதசையிலே "பிரான்" என்பானென்? என்ன - அல்பம் அண்ணியாரே இத்யாதி. அதாவது - ப்ரதிகூலன் பாதகனானால் உபாயத்தாலே தப்பலாம்; அநுகூலன் பாதகனானால் தப்பப்போகாது என்றபடி. இத்தால் - உபகாரகனைப்போலேயிருந்து பாதகனாகிறானென்றபடி. ஸம்ஶ்லேஷாநந்தரம் விஶ்லேஷிக்கையாலே- அல்பம்அண்ணியார் என்கிறது. "திருக்கண்கள்" என்று நிஶ்சயியாதே, "அறியேன்" என்பானென்? என்ன - இதுக்குமுன்பு இத்யாதி. பிரிந்தறியாவிட்டால் கேட்டறியவில்லையோ? என்ன - உயிர்க்கெல்லாம் இத்யாதி. ஸர்வப்ராணிகளையும் தாயாய்க்கொண்டு அளிக்கின்ற, குளிர்ந்த தாமரைபோன்ற கண்களை உடையவனே! என்று ஶப்தார்த்தம். திருமொழி, ஏழாம்பத்து, முதல்திருமொழி, ஒன்பதாம்பாட்டு, "தூயாய்" இத்யாதி. இதுக்கு அர்த்தம் - இக்கடாக்ஷமே இத்யாதி. "சூழவும்" என்றதுக்கு அர்த்தம் - மூலபலத்தின் இத்யாதி. "தாமரைநாண்மலர்" என்றதுக்கு பாவம் - ராமஶரத்துக்கு இத்யாதி. திருக்கண்கள் எங்கும் பார்க்*

கண்ணழகின்கீழ் அவலைகளாயிருப்பார்க்குத் தப்பலாவது? "புண்டரீகநெடுந்தடங்கள் போலப்பொலிந்தெமக் கெல்லாவிடத்தவும்" என்னக்கடவதிறே. ஸர்ப்பஹயம்போலே இருக்கை. இறுய்க்கநினைத்த இடமெங்கும் தானேயாயிராநின்றது. இப்போது "தாமரை நாண்மலர்போல்" என்பானேன்? என்னில்; (ஸம்ஸ்லேஷதசையிற்செவ்வியைச் சொல்லு கிறாள்.) "மஹதாஜ்வலதாநித்யமக்நிநேவாக்நிபர்வதஃ"(மஹநாஜ்வலதாநித்ய மக்நி நேவாக்நிபர்வதஃ). "நைவதம்ஸாந்நமஸகாந்" (நைவதம்ஸாந்நமஸகாந்) இத்யாதி - பெருமாள் ஊர்ந்ததும் கடித்ததும் துடைக்க அறியார் என்ன; 'அதுக்குஅடியேன்?' என்ன, - "த்வத்கதேநாந்தராத்மநா" (த்வத்கதேநாந்தராத்மநா) - பெருமாள் இங்கே குடிபோர, அங்குஇவை யார்தான் அறிவார் என்றானிறே. பிரிவில் இவ்வளவல்லவிறே அத்தலைக்கு ஆற்றாமை. அது அறிகிறிலளே இவள். தன்னோடே வந்துகலந்து விளைநீரடைத்துக்கொண்டு பிரிகிறபோதைச்செவ்வியிறே இவள் அறிவது; அதுவேயிறே இவள்நெஞ்சில் பட்டுக்கிடப்பது; பின்பு அவன்பட்டது அறியாளே; ஆகையாலே சொல்லுகிறாள். [வந்துதோன்றும்] - ப்ரத்யக்ஷத்தில் அத்தலையாலேவரவுஆனாற்போலே உருவுவெளிப்பாட்டிலும் அத்தலையாலே வந்துதோன்றவாயிற்றுத் தான் அறிகிறது. [கண்டீர்] - உங்களுக்கு இது தோற்றுகிறதில்லையோ? [தோழியர்காளன்னைமீர்] - சிலர்க்குச் சொல்லிச் சிலர்க்கு மறைக்கும்படியன்றிறே இவள்தசை. "தோழிமார்க்குச்சொன்ன இந்தைத்தாய்மார்க்குச் சொல்லுவோமல்லோம்" என்று மறைக்குமளவல்லவாயிற்று, இவளுக்குப்பிறந்த தசாவிசேஷம். [என்செய்கேன்] -

---

திருக்குமோ? என்ன - புண்டரீகம் இத்யாதி. திருவிருத்தம், முப்பத்தொன்பதாம்பாட்டு, "நீலத் தடவரைமேல் புண்டரீகம்" இத்யாதி. இதுக்கு அர்த்தம் - நீலாத்மமயமான பெரிய மலையின்மேலே, தாமரையையுடைத்தான நெடிய தடாகங்கள்போலே அழகுவிஞ்சி, நமக்கு ஸர்வப்ரதேசத்திலும் ப்ரகாசியாநின்றன என்றபடி. 'பொங்கு முந்நீர்' என்று தொடங்கி,'எம்பிரான்கண்ணின்கோலங்கள் - எமக் கெல்லாவிடத்தவும்' இத்யந்வயஃ. பார்த்தபார்த்தவிடமெல்லாம் திருக்கண்கள் வ்யாபகமென்னுமதுக்கு த்ருஷ்டாந்தாந்தரம் - ஸர்ப்பபயம் இத்யாதி. "சூழவும்" என்றதுக்கு பாவார்த்தம் - இறுய்க்க இத்யாதி. விஸ்லேஷவேளையிலே "நாண்மலர்" என்னக்கூடாதென்று ஶங்கிக்கிறார் - இப்போது தாமரை இத்யாதி. என், "தாமரைநாண்மலர்போல்" என்னவொண்ணுமோ? என்ன; விஸ்லேஷ தசையில் அவன்உருவிருக்கையாலே அப்படிசொல்லவொண்ணுமென்று விவக்ஷித்து, அதுக்கு ப்ரமாணங்கள் - மஹதா இத்யாதி, நைவதம்ஸாந் இத்யாதி. இதுக்கு அர்த்தம் - பெருமாள் இத் யாதி. ப்ரக்ருதகிரியாதம் உதாஹ்ருதம் - பிரிவில் இத்யாதி. ஆற்றாமை என்றவநந்தரம், 'இப்படியிருக்க தாமரைநாண்மலர் என்பானென்? என்னில்' என்று கீழோடே அந்வயிப்பது. இதுக்குப்பரிஹாரம் - அது அறிகிறிலளே இவள் என்று."ஸதவாஹம் ப்ரநஷ்டாத்மா ஸாவயஃ ஹரிதஸ்ய தே । மஹதாஜ்வலதா" இத்யாதி, "நைவதம்ஸாந்நமஸகாந்கீடாந்ஸரீ ஸ்ருபாந் । ராகவோபநயேத்காத்ராத் த்வத்கதேநாந்தராத்மநா" இதி ஸுந்தர காண்டே ஷட்த்ரிம்ஶ ஸர்கே. (௩௬-௪௨)பின்னை எவ்வளவு அறிவளென்ன-தன்னோடே இத்யாதி.விளை நீரடைத்துக்கொண்டு - விளையும்படி யொருகாலே நீரைத்தேக்கிக்கொண்டு; பூர்ணமாக அநுபவித் தென்றபடி. "அது அறிகிறிலள்" என்றத்தை விவரிக்கிறார் - பின்பு அவன் இத்யாதி. தோன்று மென்னாதே, "வந்துதோன்றும்" என்றதுக்குபாவம் - ப்ரத்யக்ஷத்தில் இத்யாதி. இருவரையும் ஸம்போதிக்கிறதுக்குபாவம் - சிலர்க்கு இத்யாதி. கீழ்வாக்யவிவரணம் - தோழிமார்க்கு இத்யாதி. "என் செய்கேன்" என்றது - கோடித்வயாவலம்பியாகையாலே அருளிச்செய்கிறார் - இத்தை இத்யாதி.

இத்தைத் தப்பப்பார்ப்பதோ, அநுஹவிக்கப் பார்ப்பதோ, எத்தைச்செய்கேன்? [துயராட்டியேனே] - "ஆநந்தம் ப்ரஹ்மணோ வித்வாந் ந பிபேதி குதஶ்சந" (ஆநந்தம் ப்ரஹ்மணோவித்வாந் நபிபேதிகுதஶ்சந) என்று இருக்கவேண்டியிருக்க, அங்ஙனன்றிக்கே, "அவஶ்யமநுபோக்தவ்யம்" (அவஶ்யமநுபோக்தவ்யம்) என்கிறபடியே பழைய க்லேஶமே ஸித்திக்கும்படி ஆயிற்றே. (க)

இரண்டாம் பாட்டு.

ஆட்டியுந்தூற்றியும்நின்று அன்னைமீரென்னைநீர்நலிந்தென்?
மாட்டுயர்கற்பகத்தின் வல்லியோகொழுந்தோஅறியேன்
ஈட்டியவெண்ணெயுண்டான்திருமூக்கு எனதாவியுள்ளே
மாட்டியவல்விளக்கின்சுடராய்நிற்கும்வாலியதே.

ஆ.—(ஆட்டியும்) - ஸௌரப்யோபாதாநமாய்க்கொண்டு முளைத்தெழுந்த கற்பகத்தினுடைய கோமளமான வல்லியோ? அன்றிக்கே, அதினுடைய கொழுந்தோ? அதுவுமன்று, ஈட்டியவெண்ணெயுண்டான் திருமூக்கு; அந்த வெண்ணெயுடைய திவ்ய வாஸநாவாஸிதமான அத்திருமூக்கழகு, என்னுடைய ஆத்மாவினுள்ளே ஆரோபிதமாய், மஹத்தாயிருப்பதொரு விளக்கினுடைய ஜ்வாலைபோலேநின்று தஹியாநின்றது; அவ்வளவன்று, அதிலும் வாயுகமாயிராநின்றது; என்னை அலைத்துக்கொண்டு எங்கும் கோஷித்துநின்று என்னை வாயித்தால், அன்னைமீர் உங்களுக்கு என்ன ப்ரயோஜநமுண்டென்கிறாள்.

ஒ.—இரண்டாம்பாட்டில், எம்பெருமானுடைய திருமூக்கிலழகு தன்னை நலிகிறபடியைச் சொல்லுகிறாள்.

[ஆட்டியென்று தொடங்கி] - அன்னைமாரான நீங்கள் என்னை அலைத்தும் பிறர்க்குக் குற்றங்களைச்சொல்லியும் என்ன ப்ரயோஜநமுண்டு? [மாட்டென்றுதொடங்கி]- கண்ணின்பாடே அதின் நீர்மையாலே வளர்ந்து ஒழுகு நீண்டிருக்கையாலும், ஶ்ரத்தையாலும், 'கற்பகக்கொடியோ? அதின்கொழுந்தோ?' என்று துணியமாட்டுகிறிலேன். [ஈட்டியவெண்ணெயுண்டான்] - உருவுவெளிப்பாட்டிலே இவர்க்கு வெண்ணெய்நாற்றம் உபலப்யமாகிறபடி. [மாட்டியவென்று தொடங்கி] - ஏற்றிய பெருவிளக்கின் ஒளியையுடைத்தாய்நின்று அவ்வளவுமன்றிக்கே அற வலிதாய் நலியாநின்றது.

ப.—அநந்தரம், ஆஶ்ரிதருடைய த்ரவ்யத்தில் அதிநிவேஶத்தாலே நவநீதசோரனான க்ருஷ்ணனுடைய நாஸாதண்டமானது என்னெஞ்சுக்குள்ளே ப்ரகாஶியாநின்றதென்கிறாள்.

அன்னைமீர் - (ப்ரியபரைகளான) தாய்மாராயிருக்கிற, நீர் - நீங்கள், ஆட்டியும் - (ஹிதஞ்சொல்லி) இருந்தவிடத்திலிராதபடி பண்ணியும், தூற்றியும் - (புறம்பே)

"சூழவும்" என்கையாலே - தப்பப்போகாதென்றபடி. பழைய க்லேஶமே என்றது - விஶ்லேஷக்லேஶமே என்றபடி. க்ரமேணாந்வயঃ (க)

பழிதூற்றியும், நின்று - (ஒருபடிப்பட) நின்று, என்னை - என்னை, நலிந்து - நலிகிறத்தால், என் - என்னப்ரயோஜநமுண்டு ? (உங்கள் நலிவும் வலியாமைக்கடி), மாட்டு - பரிஸரத்திலே, உயர் - ஓங்கியிருப்பதொரு, கற்பகத்தின் - கற்பகத்தினுடைய, வல்லியோ - கொடியோ, கொழுந்தோ - கொழுந்தோ, அறியேன் - அறிகிறிலேன் ; ஈட்டிய - (கடைந்து) திரட்டிவைத்த, வெண்ணெய் - வெண்ணெயை, உண்டான் - (களவிலே) அமுதுசெய்தவனுடைய, திருமூக்கு - திருமூக்கானது, எனது - என், ஆவியுள்ளே - நெஞ்சுக்குள்ளே, மாட்டிய - தூண்டப்பட்டு, வாலியது - பெருத்து, வல் - ஸ்த்திரமான, விளக்கின்சுடராய்நிற்கும் - தீபஜ்வாலைபோலே ப்ரகாசியாநின்றது. ருஜுவாகையாலே - கொடியென்னவுமாய், அது அசைந்து ஓங்கின தலையையுடைத்தாகையாலே - கொழுந்தென்னவுமா யிருக்கிறது. வாலிமை - பெருமை. மாட்டிய - தூண்டின. வன்மை - ஸ்த்தைர்யம்.

இ.—இரண்டாம்பாட்டில், தோழிமார் இவள்பருவமாகையாலே நோவறிந்து அலைக்கத்தவிர்ந்தார்கள் ; அன்னைமார், தங்கள் அலைக்கிறவதுக்குமேலே திரள்களிலேயும் சொல்லப்புக்கார்கள் ; அவனுடைய திருமூக்கிலழகு திருக்கண்களினருகே நின்று என்னை பாதியாநின்றது என்கிறாள்.

[ஆட்டியும் தூற்றியும்] - ஆட்டுகையாவது - தாங்கள் ஹிதம் சொல்லியலைக்கை. தூற்றுகையாவது - பிறர்க்கும் குற்றங்களைச் சொல்லுகை. [நின்று] - ஒருகால் அச்சுமுறுத்தி மீட்க யத்நம்பண்ணினால், அதுவலியாதொழிந்தால் தவிரவிறே யடுப்பது. [அன்னைமீர்] - பித்ராதிகள் சொல்லக்கடவ ஹிதத்தை, ப்ரியமேசெய்து போரக்கடவ நீங்கள் சொல்லுகிறதென்? [என்னை] - ஒருகால்சொன்னால் மீளாத என்னை. [நீர்நலிந்தென்] - ப்ரியத்தைஒழியக் குற்றங்களைச் சொல்லி என்ன ப்ரயோஜநமுண்டு. நாங்கள் எத்தைச்செய்தால் ப்ரயோஜநமுண்டு? என்ன, [மாட்டுயர் இத்யாதி]- இஸ்ஸம்ஶயத்தை அறுத்துத் தர வல்லிகோளாகில் ப்ரயோஜநமுண்டு. கண்ணின்பாடே, "உந்நஸம்" என்கிறபடியே உயர்ந்த;கடலினருகே, அதுஊற்றுகவளர்வதொரு கொடிபோலே, அதின் நீர்மையாலே வளர்ந்ததொரு கற்பகக்கொடியோ? ஒழுகு நீண்டிருக்கையாலே கொடியென்னவுமாய், ஸ்ரத்தையாலே கொழுந்தென்னவுமாயிராநின்றது. ஸர்வப்ராஸாம்யத்தாலே "இன்னது" என்று நிஸ்சயிக்கலாயிருக்கிறதில்லை. எங்களிற்காட்டில் இவ்விஷயத்திலே அவகாஹித்த நீ சொல்லிக்காணாய் என்ன, [ஈட்டியவெண்ணெயுண்டான் திருமூக்கு] - உருவுவெளிப்பாட்டாலே வெண்ணெய்நாற்றமும் ப்ரத்யக்ஷிக்கிறதாயிற்று இவளுக்கு. ஆஸ்ரிதஸ்பர்ஸமுள்ளதொரு த்ரவ்யத்தாலல்லது செல்லாததாய், களவிலே இழந்து பிடியுண்டால் அத்தை இல்லை செய்கைக்காக முகத்திலே வெண்ணெயைப் பூசுமே;அவ்வெண்ணெய் நாற்றமும் ப்ரத்யக்ஷிக்கிறபடி. நாங்கள் காண்கிறிலோமீயென்ன: [எனதாவியுள்ளே] - என் ஹ்ருதயத்தினுள்ளே. [மாட்டியவல்விளக்கு இத்யாதி] - சுடர் வெட்டின பெருவிளக்கின் ஒளியையுடைத்தாய், வலிதாய் நலியாநின்றது. "ஏற்றிய பெருவிளக்கு" என்று ஒருதமிழன் சொன்னான். விளக்குக்குப் பெருமையாவது - இவளாற்றாமை கண்டாலும் ப்ரஜ்வலியாநிற்கை: வலிமையாவது - க்ஷணிகமாய் ப்ராதேஶிகமாயிருக்கிறதொழிந்து ஏகரூபமாய் எங்குமாய் நின்றுநலிகை.

ஈடு.—இரண்டாம்பாட்டு. "இரண்டேக்கும் நடுவே நாம்இருக்க இவை மூற் படுகைகையாவதேன்? அத்தனையோ நம்மூக்குவலி?" என்று திருமூக்கிலழகு நலிகிறபடியைச் சொல்லுகிறது.

[ஆட்டியும் தூற்றியும்] - ஆட்டுகையாவது - தாந்தாம் பழிசொல்லி அலைக்கை. தூற்றுகையாவது - பிறருமறியப் பழிசொல்லுகை. "அச்சமுறுத்தி மீட்கலாமோ?" என்று ஒருகால் அலைக்கை ப்ராப்தமிறே; அங்ஙனன்றிக்கே [நின்று] - முன்புசெய்ததுக்கு ஒரு ப்ரயோஜநம் காணுதிருக்கச்செய்தேயும் விடாதேநின்று. [அன்னைமீர் என்னை நீர் நலிந்தேன்] - ஹிதத்திலே நடக்கும் பித்ராதிகளைப்போலே என் ப்ரியத்திலே நடக்கும் நீங்கள் என்னை நலிகிறதேன்? என்னுகப்பே பேருக நினைத்திருக்கக்கடவ நீங்கள் நலிகிறதேன்? [நலிந்தேன்] - அந்த உருவுவெளிப்பாட்டைப் பரிகரிக்கலாமேன்றே, என்னை மீட்கலா மேன்றே? ஒருப்ரயோஜநமில்லாததிலேயும் ப்ரவர்த்திக்கக்கடவதோ? அவனுடைய மூக்கு வலி இருக்கிறபடியையும் அறிந்து நீங்கள் என்செய்யப்படுகிறீகோள்? 'நாங்கள் சொல்லுகிற ஹிதவசநத்துக்கு ஒருப்ரயோஜன மில்லையாகில், என்செய்தால் ப்ரயோஜநமுண்டு?' என்ன- [மாட்டுயர் இத்யாதி] - வல்லிகோளாகில் இஸ்ஸம்ஶயத்தை அறுத்துத் தாருங்கோள். மாடு - அருகு. கண்ணருகென்றபடி. ஒருகடலருகே அக்கடலூற்றே தாரகமாக வளருகிற தொரு கொடிபோலேயாயிற்று, திருக்கண்களருகே திருமூக்கிருக்கிறபடி. [உயர்] - "உந்நஸம்" (உந்நஸம்) என்கிறபடியே. [கற்பகத்தின் வல்லியோ கொழுந்தோ] - ஒழுகுநீட்சி யாலே கொடியென்னவுமாய், ஶ்ரத்தை மாறுமையாலே கொழுந்தென்னவுமாய் இரா நின்றது. அறியேன் என்கிறது - "இன்னது" என்று நிஶ்சயிக்க அரிதாகையாலே: ஸர்வதா ஸாம்யத்தாலே. [ஈட்டிய இத்யாதி] - எங்களுக்கு அறியப்போமோ? இதிலே உட்புகநின்று அநுபவிக்கிற நீ பின்னைச் சொல்லாய்என்ன, [ஈட்டிய இத்யாதி] - அநுகூலஸ்பர்ஶமுள்ள

இரண்டாம்பாட்டு—ஆட்டியும் இத்யாதி. "திருமூக்கு" என்றத்தைப்பற்ற ரஸோக்தியாக அவதாரிகை - இரண்டேக்கும் இத்யாதி. மூக்குவலி என்றது - மூச்சென்று ரஸோக்தி; மூக்கென்று பேரையுடைய நம்முடைய வலியென்று ஸ்வஹாவார்த்தம்.

"நின்று" என்றதுக்குஹாவம் - அச்சமுறுத்தி இத்யாதி. உத்தார்த்த விவரணம் - முன்பு செய்ததுக்கு இத்யாதி. இத்தனைநாளும் தோழிமாரை ப்ரியபரைகளாகவும், தாய்மாரை ஹிதபரைக ளாகவும் சொல்லிக்கொடு போந்தாள்; இப்போது பித்ரபேக்ஷயா தாய்மாரை ப்ரியபரைகளென்கிறுள. ஹிதத்திலே இத்யாதி. "நீர்" என்றதுக்குஹாவம் - என்உகப்பே இத்யாதி. "என்" என்கிறது - கோடித்வயாவலம்பியாகையாலே, உங்களுக்கு நலிகைக்கு ஒருப்ரயோஜந மில்லையென்று ஹாவாந் தரம் - அந்தஉருவு இத்யாதி. விவரணம் - அவனுடைய இத்யாதி. "வல்லியோ கொழுந்தோ அறி யேன்" என்று அவர்கள்முன்னே ஸம்ஶயிக்கிறதுக்குக் கருத்து - இத்தை நிஶ்சயித்துத் தாவேணு மென்றுகையாலே, அத்தைப்ரஶ்ந ப்ரதிவசநரூபேண அருளிச்செய்கிறுர் - நாங்கள் இத்யாதி வாச்ய த்வயத்தாலே. தாருங்கோள்-ஸம்ஶயத்தை அறுத்துத்தருகை ப்ரயோஜநமென்றபடி. ஹேது யாத்ருச்சிகோ நாவாஸ்ய:, "ஸாவித்ஸிதம் கோவிதவஹுத ஸ்ஸம் ஸம்பாதயந்த விக்ஷிப்தாய" இதி. "வல்லியோகொழுந்தோ" என்கிற ஸம்ஶயத்துக்கு ஆபாதகமாயமேதென்ன - ஒழுகு இத்யாதி. ஒழுகுநீட்சி - ஶாஸ்த்ரவிஹிதமான ஆகாரதைர்க்யம். நிஶ்சயிக்கப்போகாமைக்கு ஹேதுவேதென்ன - ஸர்வதா ஸாம்யத்தாலே என்று. "ஈட்டியவெண்ணெயுண்டான்" என்று விஶேஷித்ததுக்குஹாவம் - அநுகூலஸ்பர்ஶம் இத்யாதி. ஈட்டிய - திரட்டின. கோண்டி - களவு.

த்ரவ்யத்தாலல்லது யரிக்கமாட்டாதே வெண்ணெய் களவுகாணப்புக்குக் கொண்டியிலே பிடியுண்டு, பின்பு அத்தை இல்லைசெய்கைக்காக முகத்திலே தடவிக்கொள்ளுமே; அவ் வெண்ணெயிலே முடைநாற்றமும் உருவுவெளிப்பாட்டிலே தோற்றுகிறதாயிற்று இவளுக்கு. அப்போதை முடைநாற்றம் உபலப்தமாம்படியாயிற்று உருவுவெளிப்பாட்டில் மெய். நீ சக்ஷுர்விஷயமாகச் சொல்லுகிற இது எங்களுக்குத் தெரிகிறதில்லையே! என்ன, [எனதாவியுள்ளே] - என் ஹ்ருதயத்துக்குள்ளே. [மாட்டிய] - சுடர்வெட்டிய என்னுதல், ஏற்றிய என்னுதல். [வல்விளக்கின் சுடராய்]- (பெரிய விளக்கினொளியை யுடைத்தாய்) விரஹத்தால் அவியாத விளக்காயிற்று. '' 'ஏற்றியபெருவிளக்கு' என்று ஒருதமிழன் இட்டுவைத்தான்'' என்று அருளிச்செய்வர். [நிற்கும் வாலியதே] - வலிதாய்நின்று நலியாநிற்கும். தீபமாகிறதுதான் க்ஷணிகமுமாய் ப்ராதேசிகமுமாயிறே யிருப்பது; இது அங்ஙனன்றிக்கே, எப்போதுமாய் எங்குமுண்டாய் இராநின்றது: பாதகத்வத்திலுறைப்பை அநுஸந்தித்துச் சொல்லுகிற வார்த்தையிறே இது. (மாட்டிய வாலியதான வல்விளக்கின்சுடராய் நிற்கும். வாலிமை - பெருமை. வன்மை - ஸ்த்தைர்யம்.) (உ)

மூன்றும் பாட்டு.

வாலியதோர்கனிகொல்?வினையாட்டியேன்வல்வினைகொல்?
கோலந்திரள்பவளக் கொழுந்துண்டங்கொலோவறியேன்
நீலநெடுமுகில்போல் திருமேனியம்மான்தொண்டைவாய்
ஏலுந்திசை†யுளெல்லாம் வந்துதோன்றுமெனின்னுயிர்க்கே.

ஆ.—(வாலியதோர்) - பக்வமாய் அம்ருதரஸமா யிருப்பதொரு கனியோ? அன்றியே, பாதகமாகையாலே ஸஹஜவிரஹவ்யஸநையாயிருந்த என்னுடைய மஹாபாபமோ? ஸௌந்தர்ய ஸாரஸமுதாயமான பவளத்தினுடைய கொழுவியதாயிருப்பதொரு முறியோ? அவையெல்லாமல்ல; நீல மஹாவலாஹக ரமணீய திவ்யரூபனனவனுடைய சாருதர பிம்ப ஸத்ருசமான திருப்பவளம், ததீயதிவ்யரூப ஸௌந்தர்ய ஸஹக்ருதமாய்க்கொண்டு என்னை முடிக்கைக்காக எல்லாத்திக்குகளிலும் வந்து தோன்றுநின்றதென்கிறாள்.

முடைநாற்றம் இப்போது தோற்றுமோ? என்ன - அப்போதை இத்யாதி. உபலப்தமாம்படி - தோற்றும்படி. வன்மைக்கு அர்த்தம் - விரஹத்தால் இத்யாதி. இவ்விடத்திலே - "அல்பாக்நி, ப்ரபலாக்நிமேலிட்டால் அவியும்; இங்கு விரஹாக்நி ப்ரபலமாயிருக்கச்செய்தேயும் அவியாதவிளக்காயிற்று" என்று அருளிச்செய்வர். "ஏற்றிய" என்றதுக்கு ஸம்வாதமாக, தமிழன் நிர்வாஹம்-ஏற்றியபெருவிளக்கென்று இத்யாதி. "வல்விளக்கு" என்றும், "வாலியது" என்றும் சொல்லுகிற புநருக்திக்கு பேதம் அருளிச்செய்கிறார் - தீபம் இத்யாதி. எப்போதுமாய் என்றது - வன்மைக்கர்த்தம். எங்கும் என்றது- "வாலியது" என்றதுக்கு அர்த்தம். ஆக, வன்மைக்கு அர்த்தத்வயம். வாலியது - வலியதென்றபடி. எங்கும் உண்டாகக் கூடுமோவென்ன - பாதகத்வத்தில் இத்யாதி. (உ)

---

†'திசைகளெல்லாம்' என்று பாடாந்தரம்.

ஒ.—மூன்றாம்பாட்டில், திருப்பவளத்திலழகு தன்னை நலிகிறபடியைச்சொல்லுகிறாள்: [வாலியதோர் கனிகொல்] - விலக்ஷணமாயிருப்பதொரு பழமோ? [கோலமென்று தொடங்கி]-அழகினுடைய திரளான பவளத்தினுடைய ப்ரபைதையையுடைய முறியோ? அறிகிறிலேன். [நீலநெடுமுகிலென்று மேலுக்கு]-கறுத்துப் பெருத்திருக்கிற மேவம்போலே இருக்கிற திருமேனியையுடைய ஸர்வேஶ்வரனுடைய அழகுக்குப் பகைத்தொடையாகத் தோற்றுகிற திருப்பவளமானது, பார்த்த பார்த்த திக்கெல்லாம் என்னுடைய நல்ஜீவனை முடிக்கைக்காக வந்து தோற்றாநின்றது.

ப.—அநந்தரம், ஶ்யாமளமான வடிவுக்கு பாஹ்யமான அதர ஶோபையானது பார்த்தபார்த்தஇடமெங்கும் தோன்றாநின்றதென்கிறாள்.

வாலியது - (போதுசெய்யாத) நன்மையையுடைத்தாய், ஓர் - (மென்மையாலும் நிறத்தாலும் இனிமையாலும்) அத்விதீயமாயிருப்பதொரு, கனிகொல் - பழமென்னலாயிருக்கிறதோ? வினையாட்டியேன் - (இப்பலத்தை அப்போதே அநுபவிக்கப் பெறாத) பாபத்தையுடைய என்னுடைய, வல் - (அநுபவித்துக்) கழிக்கஅரிய, வினை கொல் - பாபம் ஒருவடிவுகொண்டதாயிருக்கிறதோ? கோலம் - ஸௌந்தர்ய ஸௌலப்ய ஸௌகுமார்ய ஸாரஸ்யாதிகள், திரள் - திரண்டதொரு, பவளம் - பவளத்தினுடைய, கொழும் - கொழுவிதான, துண்டங்கொலோ - துண்டமென்னலாயிருக்கிறதோ? அறியேன் - (இன்னதென்று நிர்த்தரித்து) அறியலாயிருக்கிறதில்லை; நீலம் - ஶ்யாமளமாய், நெடு — பெருத்த, முகில்போல் - மேகம்போலே, திருமேனி - அழகையுடையனை, அம்மான் - ஸ்வாமியுடைய, தொண்டை — தொண்டைப்பழத்தின் நிறத்தையுடைத்தான, வாய் - திருவதரமானது, ஏலும் - ஏன்றுகொண்டுபார்த்த, திசையுளெல்லாம் - திக்கெல்லாம், என் - என், இன் - இனிய, உயிர்க்கு - உயிரைநோக்கி, வந்து - வந்து, தோன்றும் - தோன்றாநின்றது.

இ.—மூன்றாம்பாட்டில், அந்தவல்லி கொழுந்துவிட்டுப் பூத்துப் பழுத்த பழமிருக்கிறபடி. திருப்பவளத்திலழகு நலிகிறபடியைச் சொல்லுகிறாள். [வாலியதோர் கனி கொல்] - பழங்கள் காலஞ்சென்றவாறே செவ்வி அழியக்கடவதாயிருக்க, ஏகரூபமாய் அத்விதீயமாயிருக்கிற பழமோ? அதினுடையபோக்யத்தை போதுசெய்ததாகிலிறே என் ஆற்றாமை போதுசெய்வது. [வினையாட்டியேன்] - போக்யவஸ்து பாதகமாம்படி பாபத்தைப்பண்ணினேன். அம்ருதம் நஞ்சாம்படி பாபத்தைப்பண்ணினேன். [வல்வினைகொல்]- அநுபவவிநாஶ்யமல்லாத பாபமோ? நான் பண்ணினபாபம் திருவதரமாய்க்கொண்டு குடியேறிற்றோ? இத்தலையாற்பண்ணின பாபம் நிக்ரஹரூபேண அவன் பக்கலிலே கிடந்திறே பலப்ரதமாவது? [கோலமித்யாதி] - அழகினுடைய திரளான பவளத்தின் ப்ரபைதையையுடைய முறியோ? முறி என்கிறது - முறிந்தபோதை அகவாயில் நெய்ப்புத் தோற்றி யிருக்கை. [அறியேன்] - நிர்ணயிக்கமாட்டுகிறிலேன். [நீலமித்யாதி] - திருவதரத்துக்குக் கூட்டுப்படை சொல்லுகிறது. கறுத்து அபரிச்சேத்யமான முகில்போலேயிருக்கிற நிறத்தையுடைய ஸர்வேஶ்வரனுடைய, தொண்டைபோலேயிருக்கிற திருவதரம். திருமேனிக்கும் தனக்குமுண்டான பகை என்னை நலிகைக்கு உறுப்பாயிற்று. அப்பப்பார்த்தாலோ? என்னில், [ஏலுமித்யாதி]-பார்த்த திக்கெல்லாம் வந்து தோற்றாநின்றது. எதுக்காகவென்னில்,-என்னுடைய நற்சீவனைக் கொள்ளுகைக்காக.

ஈடு.—மூன்றாம்பாட்டு. அது தன்முக்குவலிகாட்ட நாம் பேசாதேயிருந்தால், ''அத்தனையோ இதின்வாய்வலி?'' என்று நம்மை ஏசுவர்களென்று திருப்பவளத்திலழகு வந்து நலிகிறபடியை அருளிச்செய்கிறார்.

[வாலியதோர் கனிகொல்] - முன்பு பிஞ்சாய், அநந்தரம் பக்வமாய், பின்பு அநுபவயோக்யமன்றிக்கே போவன சிலபலங்களுண்டிறே; அங்ஙனன்றிக்கே, என்றுமொக்க ஏகரூபமாயிருப்பதொரு கனியோ? அத்தலையில் போக்யதை போதுசெய்யாமையாலே இத்தலையில் ஆற்றாமையும் போதுசெய்யாதே. [வினையாட்டியேன் வல்வினைகொல்] - போக்யவஸ்து பாதகமாயிற்று, போக்தாக்கள்பண்ணின பாபத்தாலேயிறே : அம்ருதமே விஷமாம்படியான பாபத்தைப் பண்ணினேன். பாபத்தைப்பண்ணின என்னுடைய பாபமானது பக்வமாய்க்கொண்டு அங்கே குடியேறிற்றோ? அங்கேகிடந்திறே இங்கு அநுபவிப்பிப்பது. பகவத்விஷயத்தில் நிக்ரஹரூபேண கிடந்திறே இங்கு அநுபவிப்பிப்பது. க்ரியையாகையாலே செய்தபோதே நஶித்துப்போமே. இவன்பண்ணின பாபத்துக்கு, தானே ஸ்வதந்த்ரமாய்நின்று பலப்ரதமாகைக்கு ப்ராப்தியில்லையே. [வல்வினைகொல்]-அநுபவவிநாஶ்யமாகாதபடியான பாபமாயிற்று. [கோலந்திரள் இத்யாதி]-அழகுதிரண்டிருந்துள்ள பவளத்தினுடைய ஶ்ரத்தையையுடைத்தான முறியோ? அறிகிறிலேன். முறியோ என்கிறது - புழுதி புடைத்திராமைக்கு; முறித்தவாயானது ஒளியுண்டாய் நெய்த்திருக்குமிறே. [நீலம் இத்யாதி] - இதுதான் என்றுமுண்டாயிருக்கச்செய்தே, இதுக்குமுன்பு பாதகமாயிற்றில்லையிறே; கூட்டுப்படைநின்றவாறே நலியாநின்றதாயிற்று. நீலமாய் போக்யதை அளவிறந்திருந்துள்ள முகில்போன்ற வடிவையுடைய ஸர்வேஶ்வரனுடைய. [தொண்டைவாய்] - தொண்டை - கோவை. கோவைப்பழம்போலே கனிந்து நெய்த்திறே திருப்பவளந்தான் இருப்பது. தன்னில்தான்உண்டானபகை பார்த்திருக்கிறதில்லையாயிற்று, இவனை

மூன்றாம்பாட்டு.—வாலியதோர் இத்யாதி. ''தொண்டைவாய்'' என்றத்தைப்பற்ற ரஸோக்தியாக அவதாரிகை – அதுதன் இத்யாதி.

''வாலியதோர்கனிகொல்''-ஏகரூபமாயிருப்பதொரு கனியோ என்ற ஶப்தார்த்தம். வாலியது - வலியது. வன்மையாவது - ஸ்த்தைர்யம். அதாவது - ஏகரூபமென்றபடி. ''வாலியதோர்கனி'' என்றதுக்கு வ்யாவர்த்யம் - முன்புபிஞ்சாய் இத்யாதி. சிலபலங்கள் என்றது - எட்டிப்பழம் முதலானவை. இதுக்கு ஹார்த்தபாவம் - அத்தலை இத்யாதி. போதுசெய்கை - முகுளிதமாகை. ''வல்வினை'' என்கைக்கு ஹேதுவேதென்ன - போக்யவஸ்து இத்யாதி. விவரணம் - அம்ருதமே இத்யாதி. ஶப்தார்த்தம் - பாபத்தை இத்யாதி. பக்வமாய் - பலோந்முகமாய் என்றபடி. அங்கே குடியேறிற்றே-அவனிடத்திலே அதரமாகத் திரண்டதோ என்றபடி. தன்னுற்றாமையாலே சொன்னவளவேயன்று, வாஸ்தவமான அர்த்தமும் அதுவேயென்கிறார் - அங்கேகிடந்து இத்யாதி. விவரணம்- பகவத்விஷயத்தில் இத்யாதி. நிக்ரஹரூபேண கிடந்து அநுபவிப்பிக்கவேணுமோ, தானே ஸ்வதந்த்ரமாக அநுபவிப்பித்தாலோ? என்ன - க்ரியையாகையாலே இத்யாதி. அசேதநமாகையாலும் மாட்டாதென்று பரிஹாராந்தரம் - இவன்பண்ணின இத்யாதி. வன்மைக்கு அர்த்தம் - அநுபவ இத்யாதி. துண்டம் - முறி. ஶ்ரத்தை - ஸ்நிக்ததை. துண்டம் புழுதிபுடைத்திராதோ? என்ன - முறித்தவாய் இத்யாதி. நெய்த்திருக்கை - ஸ்நிக்தமாய்ப்பளபளத்திருக்கை. இதுதான் என்றது - திருப்பவளத்திலழகை. கூட்டுப்படையாவது - திருமேனியிலழகு. திருமேனியில் கறுப்பும் பரபாகமாய் ஸ்பர்த்தியாதே, கூடி நலியக்கூடுமோ? என்ன - தன்னில்தான் இத்யாதி. நலிவில்இரண்டும் ப்ரதாநமோ? என்ன - இரண்டுக்கும் இத்யாதி. ஒன்றேப்ரதாநமென்றபடி. அதாவது - திருமுகத்திலழகைச்சொல்லுகிற ப்ரகரணமாகையாலே - திருவதரமே ப்ரதாநமாய், திருமேனியழகு கூட்டுப்

நலிகிறவிடத்தில், இரண்டுக்கும் சேர வன்னியமில்லையிறே. (வன்னியம் - ஸ்வாதந்த்ர்யம். ஒருவன்பக்கல் இருவர் பகையானால், இருவரும் ஸ்வதந்த்ரரானால் அவனை வெல்ல வொண்ணாது; ஆகையாலே, இருவரும் ஒருமிடறாய் நலிவர்கள்; அப்படியே இங்கும்.) அவை நலிந்துகோடு தோற்றாநின்றதாகில் தப்பப்பார்த்தாலோ? என்ன; வாய்வலி தப்ப லாயோ இருக்கிற தென்கிறாள் மேல். [ஏலும்திசையுளேல்லாம்] - நானும் இவைநலியாத விடந்தேடித் தப்ப விரகுபாராநின்றேன்: அவ்வோவிடங்களிலேவந்து தோன்றாநின்றது. பார்த்தபார்த்தவிடமெல்லாம் தானேயாய் இராநின்றது. தோன்றுகிறதுக்குக் கருத்தேன்? என்னில்,—[என்னின்னுயிர்க்கே] - என்னுடைய நற்சீவனை முடிக்கைக்காக. (௩)

நான்காம் பாட்டு.

இன்னுயிர்க்கேழையர்மேல் வளையுமிணை நீலவிற்கோல்?
மன்னியசீர்மதனன் கருப்புச்சிலைகோல்? மதனன்
தன்னுயிர்த்தாதை கண்ணபெருமான்புருவமவையே
என்னுயிர்மேலனவாய் அடுகின்றனவென்றுநின்றே.

ஆ.—(இன்னுயிர்க்கு) - பரமபுருஷ ஸந்தர்ஶநத்திலே லாலஸமான காமிநீ ஜநத்தினுடைய ப்ராணனையே லக்ஷ்யமாக உடையவையாய், நம்ரமாய் நீலமாயிருப்பன இரண்டுவிற்களோ? அன்றிக்கே, மதநனுடைய ஸௌந்தர்யநிகேதநமான இக்ஷு கோதண்டமோ? இவையெல்லாமல்ல; ஸௌந்தர்யஸாரனான மதநனுக்கு ஜந்மபூமியான புண்டரீகவிலோசநனுடைய புருவங்களே: இவை என்னுடைய ப்ராணன்களை எப்போதும் பாதிக்கிறன என்கிறாள்.

ஒ.—நாலாம்பாட்டில், கீழ்ச்சொன்ன அழகுகள் நலிந்த நலிவுகளெல்லாம் ஸாகமென்னலாம்படி விலக்ஷணமான இரண்டு திருப்புருவங்களும் என்னை மிகவும் நலியாநின்றன என்கிறாள்.

[இன்னுயிர்க்கென்று தொடங்கி] - நல்லஜீவனைக் கொள்கைக்கு அபலைகள் பக்கலிலேவளைகிற இரண்டு நீலமான விற்களோ? அங்ஙனாகாதே வடிவோடேநின்ற அழகையுடைய காமனுடைய கருப்புவில்லோ? [மதனனென்று மேலுக்கு] - லோகத்தை யடையப் பிச்சேற்றும் அழகையுடைய காமனுக்குங்கூட உத்பாதகனாயுள்ள க்ருஷ்ணனுடைய புருவங்களோ? என்ப்ராணனையே கணிசித்து என்றும் நின்று பாதியாநின்றன.

ப.—அநந்தரம், காமோத்பாதகனாய் ஸாக்ஷாந்மன்மதமந்மதனான க்ருஷ்ணனுடைய திருப்புருவங்களானவை என் ஆத்மாவை நலியாநின்றன என்கிறாள்.

மிடறு - மிடறு என்றபடி. சேரவன்னியமில்லை - ஸமஸாத்ரவமில்லை என்றபடி. மேலுக்கு அவதாரிகை - அவை நலிந்து இத்யாதி. "எல்லாம்" என்றதுக்கு பாவம் - நானும் இத்யாதி வாக்யத்வயம். விவரணம் - பார்த்தபார்த்த இத்யாதி. ஏலும்திசையுளேல்லாம் - தப்பயோக்யமான இடங்களெல்லாம். ஏலும் - யோக்யமான. திசை - இடம், திக்காதல். முடிக்கைக்காக என்றது - தாத்பர்யார்த்தம். உயிர்க்காகவந்ததென்று ஸப்தார்த்தம். (௩)

இன் — நல்ல, உயிர்க்கு - ப்ராணனை (அபஹரிக்கைக்காக), ஏழையர்மேல் — (சபலைகளான) பெண்பிறந்தார்மேலே, வளையும் - (தானே) வளைந்து நலிவதான, நீலம் - நீலநிறத்தையுடைய, இணை — இரண்டு, விற்கொல் - வில் என்னலாயிருக்கிறதோ? (அங்ஙனன்றியே), மன்னிய சீர்- ஸ்த்ரீஸௌந்தர்யாதிகுண யுக்தனான, மதனன் - காமனுடைய, கருப்புச்சிலைகொல் - (காமுகரை நலியும்) கருப்புவில் என்னலாயிருக்கிறதோ? மதனன்தன் - (அந்தக்) காமன்தனக்கு, உயிர் - ஸத்தாப்ரதனாய்க்கொண்டு, தாதை - உத்பாதகனாய், கண்ணன் - க்ருஷ்ணனான, பெருமான் - ஸர்வாதிகனுடைய, புருவமவையே - (தன்கைச்சார்ங்கமதுவேபோலும்) திருப்புருவங்கள் தாம்; என் - என், உயிர்மேலனவாய் - ஆத்மாவின்மேலே (அபிமுகங்களாய்க்கொண்டு), என்றும் - என்றும், நின்றே - (ஒருபடிப்பட) நின்று, அடுகின்றன - நலியாநின்றன. அவையே என்றது - முன்பு த்ருஷ்டாந்ததயா ஶங்கித்த வ்யக்திகளிற்காட்டில் வ்யாவர்த்தகத்வம் கனத்திருக்கையாலே.

இ.—நாலாம்பாட்டில், "கீழுள்ள நலிவுகள் ஸாவம்" என்னலாம்படி விலக்ஷணமான திருப்புருவங்கள் என்னை மிகவும் நலியாநின்றன என்கிறாள்.

[இன்னுயிர்க்கு] - நற்சீவனைக் கொள்ளுகைக்காக. [ஏழையர்மேல்]- அபலைகள்மேலேவளைகிற நீளமான இரண்டுவிற்களோ? திருக்குழலோசை காத்துக்கிடக்கிறவரையுறக்கிப் பெண்களை எழுப்புமாபோலே, இவையும் அபலைகள்மேலேயாயிற்று வளைகிறது. அத்தலையில் ஶக்திபூர்வகமாக வளைக்கிறாரில்லை: இத்தலையில் விஷயமில்லை. அகர்மகமாகவும் அகர்த்ருகமாகவும் வளையாநின்றது. [மன்னியவித்யாதி] - பெண்பிறந்தாரை நலியக்கடவ காமன்கையில் கருப்புவில்லோ? [மன்னியசீர்] - தேவர் கையில் உடம்பு இழப்பதற்குமுன்பு வடிவோடே நின்றஎழிலையுடைய காமன்கருப்புச்சிலைகொல்? பார்த்தார்க்கு ஆஹ்லாதமாய், வாத்ஸல்யகத்வம் விஞ்சியிருக்குமது. [மதனன் இத்யாதி] - அழகாலே லோகத்தையடைய பிச்சேற்றும் காமனுக்கும் உத்பாதகனான க்ருஷ்ணனுடைய புருவங்களேயாகவேணும்: க்ருஷ்ணஸம்பந்தங்கொண்டு ராஜகுலமடிக்கும் காமனுடைய கையில் வில்லாகக்கூடாது. "தன்கைச்சார்ங்க மதுவேபோல் புருவ வட்டமழகிய" என்னுமவனுடைய புருவமேயாகவேணும். அவதாரணத்தால் - கீழ்ச்சொன்ன அழகுகள் ஆஶ்வாஸஹேது என்னும்படி நலியாநின்றன. [என்னுயிர் மேலனவாய்] - இருப்பு அவன் பக்கலிலேயாயிற்று. இவற்றுக்கு, நோக்கு என்ப்ராணனையே கணிசித்துநின்று. [அடுகின்றன] - கொல்லாநின்றது. [என்றுநின்றே] - நித்யமாய்நின்று நலியாநின்றன.

ஈடு.—நாலாம்பாட்டு. "என்தான்! இங்ஙனே அதரோத்தரமாயிற்றேபோய்?" என்று திருப்புருவத்தி லழகு வளைந்துகோடேவந்து நலிகிறபடியை அருளிச்செய்கிறார்.

[இன்னுயிர்க்கு] - என்னுடைய நற்சீவனைக் கோள்ளுகைக்காக. [ஏழையர் மேல் வளையும்] - வளைப்பாரு மின்றிக்கே வளைக்கைக்கு விஷயமு மின்றிக்கே - அகர்மக

நாலாம்பாட்டு.—இன்னுயிர்க்கு இத்யாதி. "புருவமவையே" என்றத்தைப்பற்ற ரஸோக்தியாக அவதாரிகை - என்தான் இத்யாதி. அதரோத்தரமாயிற்றே - தாழ்ந்ததே மேலாய்விட்டதோ என்று ரஸோக்தி.

"இன்னுயிர்க்கு" என்றது - அநுவாதமன்று. புருவந்தானே வளைந்திருக்கையாலே - வளைப்பாருமின்றிக்கே என்கிறது. விஷயமும் - லக்ஷ்யமும். "வளைப்பாரும்" இத்யாதியை வ்யுத்க்ரமமாக

மாகவும் அகர்த்ருகமாகவும் வளையாநின்றது. விஷய மில்லாமையாலே கர்மமில்லை, வளைப்பாரில்லாமையாலே கர்த்தாவில்லை. ஏழையர்மேலே வளைகிற நீலமான இரண்டு வில்லோ? "𑌶𑌕𑍍𑌰𑌚𑌾𑌪𑌨𑌿𑌭𑍇 𑌚𑌾𑌪𑍇 𑌗𑍃𑌹𑍀𑌤𑍍𑌵𑌾 𑌶𑌤𑍍𑌰𑍁𑌨𑌾𑌶𑌨𑍇" (ஶக்ரசாப நிபேசாபே க்ருஹீத்வாஶத்ருநாஶநே) என்னும்படியே. இந்த்ரதநுஸ்ஸுக்கு "அபலை களையே நலியவேணும்" என்னும் நிர்ப்பந்தமில்லையிறே. [மன்னியசீர் இத்யாதி] - பெண் பிறந்தாரையே நலியக்கடவதான காமனுடைய வில்லுத்தானேயோ? அதுதன்னிலும் ருத்ரனாலே வடிவுஇழப்பதற்கு முன்புத்தை அவன்கையில் வில்லாகவேணும். [கருப்புச் சிலைகோல்]- கண்ணுக்கு ஆஹ்லாதமாய் பாதகத்வம் உறைத்திருக்கிறபடி. அவனோட்டை ஸம்பந்தத்தால் வந்த ராஜகுலங்கொண்டு திரிகிறவன்கையில் வில்லுக்கு இத்தனை உறைப் புண்டாகமாட்டாது, அவன்தனக்குங்கூட ஜநகனான க்ருஷ்ணனுடைய திருப்புருவங்கள் தாமே யாகவேணும். [மதனன் இத்யாதி] - * தன்கைச்சார்ங்கமதுவேபோல் புருவவட்ட மழகியவனுடைய புருவங்கள்தாமே யாகவேணும். ஆண்டாள்வார்த்தை இருக்கிறபடி யிறே. "தருமமறியாக்குறும்பனை"—தர்மமறியும்போது அபிஷிக்தக்ஷத்ரியன் வயிற்றிலே பிறந்தவனாகவேண்டாவோ? யாதவர்கள் நேரே முடிசூடுவதில்லையிறே. ஆந்ருஶம்ஸ்யம் இருக்கும்படி முதலிலே புதியது உண்டறியாதவனாயிற்று. ஸ்ரீநந்தகோபர், தம்முடைய ராஜ்யத்திலே மூலையடியே நடந்து திரிவானொருபிள்ளையையாயிற்றுப் பெற்றது. "தன்கை

விவரிக்கிறார் - அகர்மகம் இத்யாதி. "𑌅𑌕𑌰𑍍𑌮𑌕𑌂, 𑌅𑌕𑌰𑍍𑌤𑍃𑌕𑌂" என்கிறதுக்கு ஹேதுபூர்வகமாக விவரணம் - விஷயம் இத்யாதி. "ஏழையர்" என்கையாலே - விஷயமில்லையென்றபடி. ஶப்தார்த்தம் - ஏழையர் இத்யாதி. "விற்கொல்" என்றது - இந்த்ரதநுஸ்ஸுக்களோ என்றபடி. அப்படி இந்த்ரதநுஸ்ஸு ஶ்லாக்யமோ? என்ன - ஶக்ரசாப இத்யாதி. கிமிக்ஷுகார்முகே, ஸம்வாதீஶே ஹஸந்தீரோ, ஸம்ஶயிக்கிறதென், அதுதானேயென்னவொண்ணாதோ? என்ன - இந்த்ரதநுஸ்ஸுக்கு இத்யாதி. "மதனன் கருப்புச்சிலைகொல்" என்றதுக்கு பாவம் - பெண்பிறந்தாரையே இத்யாதி. "மன்னியசீர்" என்றதுக்கு பாவம் - அதுதன்னிலும் இத்யாதி வடிவோடே, மன்னிய - பொருந்தின, சீர் - எழிலையுடைய, காமனென்று ஶப்தார்த்தம். யுத்தபரிகரமல்லாமையாலே ஆபாஸமான கருப்புச்சிலை ஶ்லாக்யமாமோ? என்ன - கண்ணுக்கு இத்யாதி. இவையெல்லாம் ஸம்ஶயித்து, "புருவமவையே" என்று நிஶ்சயிக்கிறதுக்கு பாவம் அருளிச்செய்கிறார் - அவனோட்டை இத்யாதி வாக்யத்வயத்தாலே. மன்னியசீர்மதனன் - ஸ்திரமான ஸௌந்தர்யாதிகுணயுக்தனான காமனென்று உரையில் ஶப்தார்த்தம். மதனன்தன்னுயிர்த்தாதைக் கண்ணபெருமான் - அந்த காமன்தனக்கு ஸத்தாப்ரதனாய்க்கொண்டு உத்பாதகனாய் க்ருஷ்ணனான ஸர்வாதிகனுடைய என்று உரையில் ஶப்தார்த்தம். திருப்புருவம், "சிலைகொல்" என்று விகல்பிக்கும்படி விற்போலே இருக்குமோ? என்ன; ப்ரமாணம் - தன் கை இத்யாதி. நாய்ச்சியார் திருமொழி. ஆண்டாள்வார்த்தை இருக்கிறபடியிறே என்றது - அல்லாதாரைப்போலன்றிக்கே, திருப்புருவத்திலழகை உட்புக்கு அநுபவித்தவள்வார்த்தை என்றபடி. பாட்டுக்கு அர்த்தமருளிச்செய்வதாக ப்ரதீகோபாதாநம் - தருமம் இத்யாதி. "க்ருபயா ஸம்ஶ்ரயம் பராயஸௌ" என்றிருக்கையாலே, தர்மம் என்று - க்ருபையைச் சொல்லுகிறது. "தருமமறியா" என்றவநந்தரம், "குறும்பனை" என்று விஶேஷிக்கிறவனுடைய பாவம் - தர்மமறியும்போது இத்யாதி. ஸ்ரீவஸுதேவர் க்ஷத்ரியரன்றோ? என்ன - யாதவர்கள் இத்யாதி. "தருமம்" என்றது இன்னதென்றும், "அறியா" என்றதுக்கும் அர்த்தம்-ஆந்ருஶம்ஸ்ய இத்யாதி. "குறும்பனை" என்றதுக்கு அர்த்தம் - ஸ்ரீநந்தகோபர் இத்யாதி. குறும்பனை - தீம்பனை. ஸர்வதா ஸாம்யத்தினுடைய உறைப்பை அருளிச்செய்யா நின்றுகொண்டு அதுக்கு ஶப்தநிர்வாஹம்

"இத்யாதி" - கையிலே வில்லைக்கண்டால், 'முகத்திலே இருக்கக்கடவ அது கையிலே இருந்ததீ!' என்னலாம்படியா யிருக்கும்; முகத்திலே கண்டவாறே, 'கையிலே இருக்கக் கடவ இது முகத்திலே இருந்ததீ!' என்னலாயிருக்கும். "அதுவேபோல்" என்கிறதா யிற்று - ஸர்வதா ஸாம்யத்தாலே. "புருவவட்டமழகிய" - "தருமமறியான்" என்று இழக்கவொண்ணுதபடியாயிற்று, வடிவழகு இருப்பது. "பொருத்தமிலியை" - சிலபதார்த் தங்க ளுண்டிறே - நிறம் அழகியதாய்ப் பார்த்தவாறே, உபபோக யோக்யமன்றிக்கே யிருப் பன; அவைபோலே, வடிவழகேயாய், ஆசைப்பட்டார்பக்கல் ரஸந்தோங்கிலும் தோங்கா னாயிற்று. "கண்டீரே" - அவனுக்குப் பொருத்தமில்லாவிட்டால், நமக்குப் பொருத்த மில்லையாகிலிறே விட்டிருக்கலாவது? அவன்பொருந்தாமை தமக்குத் தொடர்ந்துதிரியு மத் தனையாயிற்று. [புருவமவையே] - கீழ்ச்சொன்ன அழகுகள்தான் அநுகூலமென்னும்படி யாகவாயிற்று, இவை பாதகமாகிறபடி. [என்னுயிர்மேலனவாய்] - இருப்பது அங்கேயா யிருக்கச்செய்தேயும், நோக்கு என்மேலேயாய் இராநின்றது. * எங்கும்பக்கநோக்கறியா திறே இருப்பது. [அடுகின்றன] - கொல்லாநின்றன. [என்றுநின்றே] - பாதகமாக நிற்கச் செய்தேயும் அநித்யமாயிருப்பன சிலபதார்த்தங்க ளுண்டிறே: இவை அங்ஙனன்றிக்கே என்றுமொக்க நின்று நலியாநின்றன. என்னை நலிகைக்காக நித்யத்வத்தை ஏறிட்டுக்கொண் டது; "நித்யம் நித்யாக்ருதிதரம்" (நித்யம்நித்யாக்ருதிதரம்) என்கிறதுதானேயிறே நலிகிறது. (ச)

ரு-ந்தாம் பா.

என்றுநின்றேதிகழும் செய்யவீன்சுடர்வெண்மின்னுக்கோல்?
அன்றியென்னுவியடும் அணிமுத்தங்கோலோ? அறியேன்
குன்றமெடுத்தபிரான்முறுவல் எனதாவியடும்
ஒன்றுமறிகின்றிலேன் அன்னைமீர்! எனக்குய்விடமே.

ரு.—(என்றுநின்றே) - தோன்றிமாயாதே என்றும் நின்று விளங்காநின்று சிவந்தசுடரை ஈனுநின்ற வெள்ளை மின்னோ? அன்றிக்கே, என் ஆத்மாவை நோவு படுத்தாநின்றுள்ள அழகிய முத்துநிரைபோ? அறிகிறிலேன்; * கோவர்த்தநோத்த

காட்டுகளுர் - கையிலே இத்யாதி வாக்யத்ரயத்தாலே. இதுக்கு நியாமகமேதென்ன - அதுவே போல் இத்யாதி. நீர்மையில்லாவிட்டால் விடுமத்தனையன்றோ? என்ன - தருமமறியான் இத்யாதி. "புருவவட்டமழகிய" என்றத்தோடே, "பொருத்தமிலியை" என்றத்தையுங் கூட்டி ஊவம் - சில பதார்த்தங்கள் இத்யாதி. பார்த்தவாறே - நிறமழகியதாய் என்று அந்வயிப்பது. சிலபதார்த்தங்கள் என்றது - எட்டிப்பழந்தொடக்கமானவை. தோங்கான் - இரான். தோங்குகை - இருக்கை. பொருத்தமில்லாவிட்டால் "கண்டீரே" என்று - அதுகேட்பானென்? என்ன - அவனுக்கு இத்யாதி வாக்யத்வயம். "அவையே" என்று அவதாரணார்த்தம் - கீழ்ச்சொன்ன இத்யாதி. அவன்முகத் திலே இராநிற்க, இவர்க்கு பாதகமாகக் கூடுமோ? என்ன - இருப்பது இத்யாதி. இந்நோக்குத் தம்மேலேயோ? என்ன, ப்ரமாணம் - எங்கும்பக்கநோக்கு இத்யாதி. "நித்யம்" என்றதுக்கு ப்ரமா ணம் - நித்யம்நித்யாக்ருதி இத்யாதி. என் ஆத்மாவின்மேலே அஹிமுகங்களாய்க்கொண்டு, என் றும் ஒருபடிப்பட நின்று நலியாநின்றன என்று பதார்த்தம். (ச)

ரணம்பண்ணி ஆஸ்ரிதர்பக்கல் அநுக்ரஹஸீலனான க்ருஷ்ணனுடைய முறுவலானது என்னுடைய ப்ராணனை நலியாநின்றது ; அன்னைமீர்! அவனுடைய திருவழகாலேவந்த நலிவைத் தப்பி உஜ்ஜீவிக்கலா மிடமொன்றும் அறிகிறிலே னென்கிறாள்.

ஒ.—அஞ்சாம்பாட்டில், கிருஷ்ணனுடைய முறுவலானது என்னை மிகவும் நலியாநின்றது என்கிறாள். [என்றும் என்றுதொடங்கி] - தோன்றிமாயாதே என்றும் நின்று விளங்காநிற்பதுஞ் செய்து சிவந்த சுடரை யீனுநின்ற வெள்ளைமின்னோ? அன்றிக்கே என் ஆத்மாவை நோவுபடுத்தாநின்றுள்ள அழகிய முத்துநிரையோ? அறிகிறிலேன். [குன்றமென்றுதொடங்கி] - கோவர்த்தநோத்தரணம்பண்ணி ஆஸ்ரிதர்பக்கல் அநுக்ரஹஸீலனான க்ருஷ்ணனுடைய முறுவலானது என்னுடைய ப்ராணனை நலியாநின்றது; அன்னைமீர்! அவனுடைய திருவழகாலே வந்த நலிவைத் தப்பி உஜ்ஜீவிக்கலாமிடம் ஒன்றும் அறிகிறிலேன்.

ப.—அநந்தரம், அநாயாஸேந கோவர்த்தநோத்தரணம்பண்ணின க்ருஷ்ணனுடைய தாத்காலிக மந்தஸ்மிதமானது என்னை நலியாநின்றது; ஒதுங்கிப்பிழைக்கலாவதோரிடம் காண்கிறிலே னென்கிறாள்.

என்றும் - என்றும், நின்றே - (ஒருபடிப்பட) நின்று, திகழும் - விளங்கக்கடவதாய், செய்ய - சிவக்க, ஈன் - ஈனுநிற்கிற, சுடர் - சுடரையுடைத்தான, வெண் - வெளுத்த, மின்னுக்கொல் - மின்னென்னலாயிருக்கிறதோ ? அன்றி - அன்றியே, என் - என், ஆவி - ப்ராணனை, அடும் - நலியக்கடவதாய், அணி - அணியாகநிரைத்த, முத்தங்கொலோ - முத்துக்களாயிருக்கிறதோ ? அறியேன் - அறுதியிடமாட்டுகிறிலேன்; குன்றம் - கோவர்த்தநத்தை, எடுத்த - எடுத்துரக்ஷித்த, பிரான் - மஹோபகாரகனுடைய, முறுவல் - (ரக்ஷணப்ரீதியாலே அப்போதுண்டான) முறுவலானது, எனது - என், ஆவி - ஆத்மாவை, அடும் - தபியாநின்றது ; அன்னைமீர் - (இவ்வளவிலும் ஹிதஞ்சொல்லுகிற அன்னைமீர்! எனக்கு - எனக்கு, உய்விடம் - பிழைக்கலாமிடம், ஒன்றும் - ஒன்றும், அறிகின்றிலேன் - அறிகிறிலேன். இவ்யாவயவஸௌந்தர்யங்கள் தனித்தனியே பாதகமாமதொழிய, ஆஸ்வாஸகரமாயிருப்பதொன்றும் உண்டாயிருக்கிறதில்லையென்றுகருத்து.

இ.—அஞ்சாம்பாட்டில், "ஒரு தலையிலே ஒதுங்கிப் பிழைக்கவல்லையே" என்ன, 'ஒதுங்க ஓரிடமில்லை' என்கிறாள். க்ருஷ்ணனுடைய முறுவல் என்னை மிகவும் நலியாநின்றது என்கிறாள். [என்று நின்று இத்யாதி] - தோன்றிமாயாதே நித்யமாய் நின்று விளங்காநிற்பதாய்,சிவந்த சுடரை ஈனுநின்ற வெள்ளைமின்னோ? "ஸ்திரா[illegible]" என்பர்களே இத்தை; என்னைநலிகைக்குஉறுப்பாக நித்யத்வத்தை ஏறிட்டுக்கொண்டது. திருமுத்தின் நிரை திருவதரத்தில் பழுப்பை ஈனுகிறுப்போலேயாயிற்றுச்சேர்த்தியழகு இருப்பது. [அன்றி] - அங்ஙனன்றியே, என் ப்ராணனை முடிக்கிற திருமுத்து நிரை தானேயோ? அறிகிலேன். [அணிமுத்தம்] - அணிவகுத்தேதறினாற்போலே தந்தபங்க்திகள் பாதகமாயிருக்கிறபடி என்னவுமாம். கீழில் - திருமுத்தும் திருவதரமும்சேர்ந்த சேர்த்தி பாதகமானபடி சொல்லிற்று. அணிமுத்தமென்று- திருமுத்துக்கள் அந்யோந்யம் சேர்ந்த சேர்த்தி பாதகமானபடி சொல்லிற்று. [குன்றமெடுத்தபிரான் முறுவல்] - 'கோவர்த்தநோத்தரணம்பண்ணின உபகாரகனுடையமுறுவல் என்னுடைய ப்ராணனை

நலியாநின்றது. பிரிவால்பட்ட நலிவெல்லாம் தீரும்படி பெண்கள் முகங்களிலேபண்ணின ஸ்மிதம் எனக்கு ஒருத்திக்கும் பாதகமாகாநின்றது. இவை நலியாதவிடத்திலே போனாலோவென்னில்?-[அன்னைமீரெனக்குய்விடம் - ஒன்றுமறிகின்றிலேன்] - இவை நலியாதபடி ஒதுங்கலாவது ஓரிடமும் காண்கிறிலேன் என்னுதல்: அழகுகளில்''உஜ்ஜீவநஹேது'' என்றுஒதுங்கலாவது ஒன்றும் காண்கிறிலேன் என்னுதல்; அழகாகில் பாதகமாயல்லது

ஈடு.—அஞ்சாம்பாட்டு. ''இம்முகத்துக்கு வாய்க்கரையிலே நாமிருக்க இவை முற்படப்போவதே!'' என்று திருமுறுவலிலழகு வந்து நலிகிறபடியை அருளிச்செய்கிறார்.

[என்றும் இத்யாதி] - என்றுமொக்க மாறாதே விளங்காநிற்பதாய், செய்யசுடரை ஈனுநின்றுள்ள வெண்மின்னோ? திருப்பவளத்திற் சிவப்பும் திருமுத்துநிரையில் வெளுப்புமாய்க் கலந்து தோற்றுகிறபோது, திருப்பவளத்தில் சிவப்பை அது ஈன்றாற்போலேயாயிற்று இருக்கிறது. இத்தை ''அசிராம்ஸவ:'' (அசிராம்ஸவ:) என்பர்களே. ''பிறரைநலிய'' என்றவாறே பல் இறுகிக்கொண்டு வருகிறதுகாணும். [அன்றி] - அன்றிக்கே, என்ப்ராணனை முடிக்கிற திருமுத்துநிரைதானேயோ? [அணிமுத்தங்கோலோ] - ஆனை அணிசெய்துவந்து தோன்றினாற்போலேயாயிற்று இருக்கிறது. [அணிமுத்தம்] - அழகியமுத்தமென்னுதல். கீழே ''வெண்மின்னுக்கோல்'' என்கிறவிடத்தே திருவதரத்தோடேகூடின ஸம்ஸர்க்கத்தாலே நலிந்தபடி சொல்லிற்று; இங்குத்தனியேநலிகிறபடி சொல்லுகிறது. [குன்றமெடுத்த இத்யாதி] - மலையையெடுத்து மழையிலே நோவுபடாதபடி பெண்களை நோக்கின உபகாரகனுடைய முறுவலானது, எனக்குஒருத்திக்கும் பாதகமாகாநின்றது. பசுக்களையன்றோ தான் நோக்கிற்று? என்னில்;—''கோகோபீஜநஸங்குலம் | அதீவார்த்தம்'' (கோகோபீஜநஸங்குலம் | அதீவார்த்தம்) என்னக்கடவதிறே. மழையால்வந்த

அஞ்சாம்பாட்டு.—என்றுநின்றே இத்யாதி. ''முறுவலெனதாவியடும்'' என்றத்தைப்பற்ற அவதாரிகை - இம்முகத்துக்கு இத்யாதி. வாய்க் கரையிலே - உபக்ரமத்திலே என்று ரஸோக்தி: அதரத்திலென்று வாஸ்தவமான அர்த்தம்.

ஸப்தார்த்தம் - என்றுமொக்க இத்யாதி. செய்யசுடரை ஈனுநின்றுள்ள வெண்மின்னென்று - அபூதோபமை. வெண்மின் செய்யசுடரை ஈனக்கூடுமோ? என்ன - திருப்பவளத்தில் இத்யாதி. அசிராம்சுவானது என்றும் நிற்கக்கூடுமோ? என்ன, அருளிச்செய்கிறார் - இத்தை இத்யாதி வாக்யத்வயத்தாலே. நலிகைக்காக நித்யத்வத்தை ஏறிட்டுக்கொண்டதென்றபடி. பல் இறுகிக்கொண்டு என்றது - சாடு. பல்லைக்கடித்துக்கொண்டு என்று ரஸோக்தி; பல்லானது ஸ்திரத்வத்தை ஏறிட்டுக்கொண்டு என்று ஸ்வபாவார்த்தம். ''அணி'' என்று - பங்க்திபரமாக முதலர்த்தம்; இந்த அர்த்தத்துக்கு பாவம் - ஆனை இத்யாதி. ஆனையென்றது - பாதகத்வத்தின் உறைப்பாலே. அணி செய்து - நிரைசெய்து. ''செய்யவீன்சுடர்வெண்மின்'' என்று த்ருஷ்டாந்தத்திலே சொன்னாற்போலே, தார்ஷ்டாந்திகத்திலும் அதரகாந்தியுக்தமான முத்தமென்னவேண்டாவோ? என்ன - கீழே வெண்மின் இத்யாதி. ''குன்றமெடுத்தபிரான் முறுவல்'' என்றது - ''அணிமுத்தங்கொலோ'' என்று கீழ்ச்சொன்னஇத்தை அநுவதிக்கிறது. அன்றிக்கே, ''முத்தம்'' என்றது - மௌக்திகமாதல்; இந்த பக்ஷத்திலும், அநுவாதமென்றது ஒக்கும். பெண்களை நோக்கினமையுண்டோவென்று ஸங்கித்து பரிஹரிக்கிறார் - பசுக்களை இத்யாதி வாக்யத்வயத்தாலே. ''ததஸ்ததாகுலம் ஸர்வம் கோகோபீஜநஸங்குலம் | அதீவார்த்தம் ஹரிர்த்ருஷ்ட்வா மைத்ரேயாசிந்தயத்ததா'' இதி விஷ்ணுபுராணே (கக - கரு). ''குன்றமெடுத்தபிரான் முறுவல்'' என்று விஸேஷித்ததுக்கு பாவம்.

நலிவை மலையையெடுத்துப் பரிஹரித்து, அவர்கள் ஆர்த்தியெல்லாம் போம்படி ஸ்மிதம் பண்ணிக்கொண்டாயிற்று நின்றது. ஆனால், இதுவாராத இடந்தேடி உஜ்ஜீவிக்கப் பார்த்தாலோ? என்ன, [ஒன்றும் இத்யாதி]- 'எனக்குப் போய் உஜ்ஜீவிக்கலாவதோரிடம் உண்டோ?' என்று நானும் தேடாநின்றேன்: இங்கு ஒதுங்குகைக்கு ஓரிடங்காண்கிறிலேனென்னுதல்; கீழ்ச்சொன்ன அழகுகள் வ்யாபகமாகிற இத்தனையல்லது, ஒதுங்க நிழலாயிருப்பதோரிடங் காண்கிறிலேனென்னுதல். (ரு)

ஆறும் பாட்டு.

உய்விடமேழையர்க்கும் அசுரர்க்குமரக்கர்கட்கும்
ஏவ்விடம்? என்றிலங்கி மகரந்தழைக்குந்தளிர்கோல்?
பைவிடப்பாம்பணையான் திருக்குண்டலக்காதுகளே
கைவிடலொன்றுமின்றி அடுகின்றனகாண்மின்களே.

ஆ.—(உய்விடம்.) - அபலைகளுக்கும் அஸுரர்களுக்கும் ராக்ஷஸர்க்கும் உய்விடம் எவ்விடமென்று இலங்கித் திருமகரகுண்டலம் தளிர்க்கிறதளிரோ? தன்னுடைய ஸ்பர்சத்தாலே விகஸிதமான ஃபணங்களையும், ப்ரதிகூலருக்கு அணுகவொண்ணாதபடி நஞ்சையு முடையனாய், தன்னுடைய திருவழகுக்கு உத்தம்ஸகனான திருவனந்தாழ்வானை அணையாகவுடைய எம்பெருமானுடைய திருக்குண்டலக் காதுகளே நிரந்தரமாக நலியாநின்றன், பாரிகோள்! என்கிறாள்.

ஓ.—ஆறும்பாட்டில், எம்பெருமானுடைய திருமகரகுண்டலங்களும் திருக்காதும் தன்னை நலிகிறபடியைச் சொல்லுகிறாள்.

[உய்விடமென்று தொடங்கி] - அபலைகளுக்கும் அஸுரர்களுக்கும் ராக்ஷஸருக்கும் உய்விடம் எவ்விடம் என்று திருமகரகுண்டலம் தளிர்க்கிற தளிரோ? அஸுரராக்ஷஸர்கள் அழகைக்கண்டு பொறுக்கமாட்டாமைமுடிவர், அபலைகள் ஸஹிக்கமாட்டாதேமுடிவர்: காமிநிகளான அபலைகளையும் சத்ருக்களான அஸுரரையும் ஒக்க ஸ்நேஹத்தை விளைத்து அழிக்கையுமாம். [பைவிடப்பாம்பணையென்று மேலுக்கு] - தன்னோட்டை ஸ்பர்சத்தாலே விகஸிதமானஃபணங்களையும் ப்ரதிகூலர்க்கு அணுகவொண்ணாதபடி நஞ்சையுமுடையனாய்த் தன்னுடைய திருவழகுக்கு உத்தம்ஸகனான திருவநந்தாழ்வானை அணையாகவுடைய எம்பெருமானுடைய திருக்குண்டலக்காதுகளே நிரந்தரமாக நலியாநின்றன, பாரிகோள்.

ப.—அநந்தரம், இந்த அவதாரகந்தமான அநந்தசாயியினுடைய திருமகரக்குழைகள் நலிகிறபடியைச் சொல்லுகிறாள்.

மழையால் இத்யாதி. ''ஒன்றும்'' என்றது - ஓரிடமுமென்னுதல், தாரகமான அழகொன்றுமில்லை என்னுதல். அழகுகளுக்குள்ளே உய்விடமான ஓரழகும் அறிகின்றிலேன் என்று இரண்டாம்யோஜனையில் ஸப்தார்த்தம். என்றுநின்றே இத்யார்ப்ய, 'எனதாவியடும், அன்னைமீர் - எனக்குய்விடம் - ஒன்றுமறிகின்றிலேன்' இத்யந்வய꞉. (ரு)

ஏழையர்க்கும்-(அநுகூலப்ரதிகூல விபாகமில்லாதபடி ஆசைப்பட்ட) அபலை களுக்கும், அசுரர்க்கும் அரக்கர்கட்கும் - (எதிரிடும்) அஸுர ராக்ஷஸர்களுக்கும், உய் விடம் - பிழைக்குமிடம், எவ்விடம் - எவ்விடம்? என்று - என்று, இலங்கி - (பெரிய) தேஜஸ்ஸையுடைத்தாய்க்கொண்டு, மகரம் - மகராகாரமாய், தழைக்கும் - தழைத்தன சில, தளிர்கொல் - தளிர்களோ என்னலாய், பை - (திருமேனியோட்டை ஸ்பர்சத் தாலே விரிகிற) பணங்களையுடைத்தாய், விடம்- (விரோதிகளுக்கு அஸஹ்யமான) விஷத்தை யுடைத்தாயிருக்கிற, பாம்புஅணையான் - திருவரவணையையுடையனதான, திரு - தர்சநீயமான, குண்டலம் - மகரகுண்டலங்களையுடைத்தான, காதுகளே - காதுகள்தானே, ஒன்றும் - ஒருப்ரகாரத்தாலும், கைவிடலின்றி - கைவிடாதே, அடு கின்றன - நலியாநின்றன; காண்மின்கள் - காணுங்கோள். ஸௌந்தர்யமான மகரகுண்ட லம் விரோதிகளுக்கு பாதகமாவது அஸஹ்யதையாலே.காண்மின்களென்று தன்னோ பாதி அவர்களுக்கும் தோற்றுமென்றிருக்கிறாள்.

இ.—ஆறும்பாட்டில், அவனுடைய திருமகரகுண்டலங்களும் திருக்காது களும் நலிகிறபடி சொல்லுகிறாள்.

[உய்விடமித்யாதி] - அபலைகளுக்கும் அஸுரர்களுக்கும் ராக்ஷஸர்க்கும் உய்விடம் எவ்விடமென்று ஜ்வலியாநின்றுகொண்டு திருமகரமானது தழைத்ததளிரோ? அஸுராதிகள், அழகுகண்டால் பொறுக்கமாட்டாதே முடிவர்கள்; அபலைகள் லபிக் கப்பெறாதே முடிவர்கள்; அபலைகளோபாதி சத்ருக்களான அஸுராதிகளையும், ஸ்நே ஹத்தை விளைத்து அழிக்கவல்ல விஷயமென்றுமாம். [பைவிடமித்யாதி] . ஸ்வஸ்பர் சத்தாலே விகஸிதமான பணங்களை உடையனாய், சத்ருக்களுக்குக் கிட்டவொண்ணாத படி விஷத்தை யுடையனான திருவநந்தாழ்வான்மேலே சாய்ந்தருளின ஸர்வேச்வர னுடைய குண்டலக்காதுகளே. அந்தக் காதுகள் பாதகமானபோலே திருவநந்தாழ் வான்மேலே சாய்ந்தபோதைச்சேர்த்தி இவர்க்கு பாதகமாயிற்றென்னுதல்; அங்கே புருஷகாரமுண்டாயிருக்கக்கிடீர் நான் நலிவுபடுகிறதென்னுதல். அவயாரணத்தாலே- கீழ்ச்சொன்ன அழகுகளை ''ரக்ஷகம்'' என்னலாம்படியிறே, இதினுடைய பாதகத்வம். [கைவிடலொன்றுமின்றியடுகின்றன] - கைவிடாதே எப்போதுமொக்க முடியாநின்றன. [காண்மின்களே] — உருவுவெளிப்பாட்டாலே தனக்குத் தோற்றுகிறாப்போலே, அவர் களுக்கும் தோற்றுமென் றிருக்கிறாள்.

ஈடு.—ஆறும்பாட்டு. ''நாம் சேவிப்பட்டிருக்க இவற்றை முன்னே போக விட் டிருந்தோம்'' என்று திருக்காதிலழகுவந்து நலிகிறபடியைச் சொல்லுகிறது. காதாட்டிக் கொண்டு சொல்லுவரே.

[உய்விடம் இத்யாதி] - அஸுரராக்ஷஸர்களுக்கும் அபலைகளுக்கும் தப்பிப் போய்ப் பிழைக்குமிடம் எவ்விடமென்று, உஜ்ஜ்வலமாய்க்கொண்டு மகரம் தழைக்கின்ற

ஆறும்பாட்டு.—உய்விடம் இத்யாதி. ''காதுகள்'' என்றத்தைப்பற்ற ரஸோக்தியாக அவ தாரிகை - நாம் இத்யாதி. கேட்டிருக்க என்று ரஸோக்தி. செவியாயிருக்க என்று ஸ்வபாவார்த்தம். ரஸோக்த்யந்தரம் - காதாட்டி இத்யாதி.

அழகு இருவர்க்கும் பாதகமாம் ப்ரகாரமேதென்ன - அஸுராதிகள் இத்யாதி வாக்ய த்வயத்தாலே. மகரம் - மகரகுண்டலம். அழகிது என்று - அர்த்தாங்கிகாரம். அபக்ஷதர்மம் - ப்ர

தளிரோ? அஸுராதிகள், அழகுகண்டால் பொறுக்கமாட்டாதே முடிவர்கள்; அபலைகள் ஸஹிக்கப்பெறாதே முடிவர்கள். "அபலைகளை நலியுமாபோலே அஸுரராக்ஷஸர்களுக்கும் ஸ்நேஹத்தை விளைத்து பாதகமாகாநின்றது" என்று ஒருதமிழன் இட்டுவைத்தான் என்றத்தைச் சீயர்கேட்டருளி, "இப்பொருள் அழகிது: ஆனாலும், அபக்ஷதர்மம் - அஸுரராக்ஷஸர்களுக்கும் பாதகமாகாநின்றதென்று இப்போது இதுசொல்லுகை, தேட்டமன்றிறே: ஆனபின்பு அதுவேண்டா"என்றுஅருளிச்செய்தாராம். [பைவிடம் இத்யாதி] - தன்னோட்டை ஸ்பர்சத்தாலே விகஸிதமாகாநின்றுள்ள பணங்களையும், உகவாதார் முடியும் படியான விஷத்தையு முடையனான திருவனந்தாழ்வானைப் படுக்கையாகவுடையவனுடைய திருக்குண்டலக்காதுகளே. திருக்காதிலழகு பாதகமாகிறப்போலே யாயிற்று, திருவனந்தாழ்வானோட்டைச் சேர்த்தியும் பாதகமாகிறபடி. பெறுகைக்கு அநந்த புருஷகார முண்டாயிருக்கக்கிடீர், நான் நோவுபடுகிறது! காதுகளேயென்று - கீழில் பாதகமானவை- 'நன்று'என்னும்படியாயிற்று; இது நலிகிறபடி.அவை தண்ணீர்ப்பந்தல் வைத்ததென்னும்படியாகவாயிற்று; "மாலை - நல்கிற்றையெல்லாம்" என்னுமாபோலே. [கைவிடலொன்றுமின்றி] - ஒருகாலும் கைவிடாதே; ஒருகால்விட்டுப் பற்றுமதன்றிக்கே. [அடுகின்றன] - முடியாநின்றன. [காண்மின்களே] - அவர்களுக்கும் எல்லாம் உருவுவெளிப்பாடாய்த் தோற்றுமென்றிருக்கிறாள்; * வாயுந்திரையுகளில் ஆழ்வாரிறே. (சா)

காணவிருத்தம்; ப்ரகரணத்துக்குச் சேராதென்றபடி. "அபக்ஷதர்மம்" என்றத்தை விவரிக்கிறார். அஸுரராக்ஷஸர்களுக்கும் இத்யாதி. தேட்டமன்றிறே என்ற வநந்தரம், 'அபலைகளுக்கு பாதகமென்று சொல்லிவருகிற ப்ரகரணமாகையாலே' என்றுகூட்டி, அநந்தரம் - ஆனபின்பு இத்யாதி. அநுஸந்திப்பது. அஸுரராக்ஷஸர்களுக்கு பாதகமாமாபோலே, ஏழையர்க்கும் பாதகமென்று விதாந்தார்த்தம். அழகுகள்சொல்லுகிற ப்ரகரணத்திலே திருவநந்தாழ்வான்சேர்த்தியைச் சொல்லுவானென்? என்ன - திருக்காதில் இத்யாதி. பரிஹாராந்தரம் - பெறுகைக்கு இத்யாதி. அவதாரணார்த்தம் - காதுகளேயென்று இத்யாதி. விவரணம் - அவை தண்ணீர் இத்யாதி. இதுக்கு ப்ரமாணம் - மாலை இத்யாதி. தாய்மார்க்குத் தெரியுமோ? என்ன - அவர்களுக்கும் இத்யாதி. அது எங்ஙனேயென்ன - வாயும் இத்யாதி. மாலை - நல்கிற்றையெல்லாம் இத்யாதி - திருவிருத்தம், முப்பத்தஞ்சாம்பாட்டு, "பால்வாய்ப்பிறைப்பிள்ளை" இத்யாதி. பால்வாய் என்றுதொடங்கி, மாலையானது உலகளந்த என்றுதொடங்கி, மனமுடையார்க்கு நல்கிற்றையெல்லாம் சோல்வான் புகுந்து இது ஓர் பனிவாடைஉழாகின்றதே இத்யந்வய꞉. இதுக்கு அர்த்தம் - ஸந்த்யையானது, அவன்திருவடிகளில் திருத்துழாயை ஆசைப்பட்ட நெஞ்சுடையார்க்கு உபகரித்த ஸத்தாமாத்ரத்தை ஒன்றும் ஶேஷியாதபடி அபஹரித்துக்கொள்வதாக ப்ரவேசித்து, பனிவாடையானது ஸத்தைகிடந்தவிடந்தேடித் தடவாநின்றதென்றபடி. மாலைநல்கிற்றையெல்லா மென்றது - அந்வயித்துச் சொன்னபடி. இத்தால் - கீழ் பாதகமானமாலை நன்றென்னும்படியாயிற்று,வாடை பாதகமானபடியென்று கருத்து.'அஸுரர்க்கும் அரக்கர்கட்கும் - ஏழையர்க்கும் - உய்விடம் - எவ்விடமென் றிலங்கி' என்றுதொடங்கி, 'காதுகளே- ஒன்றும் - கைவிடல் இன்றியடுகின்றன, காண்மின்களே!' இத்யந்வய꞉. (சா)

ஏழாம் பாட்டு.

காண்மின்களன்னையர்காள்! என்றுகாட்டும்வகையறியேன்
நாள்மன்னுவெண்திங்கள்கொல்? நயந்தார்கட்குநச்சிலைகொல்?
சேண்மன்னுநால்தடந்தோள் பெருமான்தன்திருநுதலே
கோள்மன்னியாவியடும் கொடியேனுயிர்கோளிழைத்தே.

—(காண்மின்கள் - நாள்மன்னு) - பூர்வபக்ஷத்தில் அஷ்டமீசந்த்ரனோ? அன்றிக்கே, ஆசைப்பட்டார்க்கு நச்சவேண்டா திருக்கிறதோ? கொழுந்தைவிட்டுச் சுற்றுடைத்தான நாலுதிருத்தோளையுடைய ஸர்வேஶ்வரனுடைய திருநெற்றியே, இப்படி நோவுபடுகைக்குப் பாபத்தைப் பண்ணின என் ப்ராணனை முடிக்கையிலே துணிந்து அபிநிவேஶித்து நலியாநின்றது; இத்தைக் காண்மின்கள் அன்னையர்காள்! என்று காட்டும்வகை அறிகிறிலேனென்கிறாள்.

ஒ —ஏழாம்பாட்டில், எம்பெருமானுடைய திருநெற்றியிலழகு தன்னை நலிகிறபடியைச் சொல்லுகிறாள்.

[நாளென்று தொடங்கி] - பூர்வபக்ஷத்தில் அஷ்டமீசந்த்ரனோ? அன்றிக்கே ஆசைப்பட்டார்க்கு நஞ்சாயிருப்பதொரு இலையோ? ஆசைப்பட்டார்க்கு நச்சவேண்டா திருக்கிறதோ வென்றுமாம். [சேணென்று தொடங்கி] - கொழுந்துவிட்டு சுற்றுடைத்தான நாலுதோளையுடைய ஸர்வேஶ்வரனுடைய திருநெற்றியே இப்படியே நோவுபடுகைக்கு பாபத்தைப்பண்ணின என்பிராணனை முடிக்கையிலே துணிந்து அதிலே அபிநிவேஶித்து ப்ராணனை நலியாநின்றது. கோளிழைத்தென்றது - என்னழகைப் போக்கி என்றுமாம்.

ப.—அநந்தரம், மஹாபுஜனான க்ருஷ்ணனுடைய திருநெற்றியழகு தன்னை நலியாநின்றதென்கிறாள்.

'(என்னை நலிகிறப்ரகாரத்தை), அன்னையர்காள் — அன்னையர்காள்! காண்மின்கள் - (நீங்கள்) காணுங்கோள்', என்று - என்று, காட்டும் - காட்டும், வகை - ப்ரகாரம், அறியேன் - அறிகிறிலேன்; நாள் - (அஷ்டமீபர்யந்தமான) நாளோடே, மன்னு - மன்னி, வெண் - (அர்த்தாகாரனுகையாலே களங்கமற்று) வெளுத்த, திங்கள்கொல் - சந்த்ரனோ? நயந்தார்கட்கு - ஆசைப்பட்டவர்களுக்கு, நச்சு - நச்சுவடிவாயிருப்பதொரு, இலைகொல் - இலையோ? சேண் — ஓங்குதலை, மன்னு - உடைத்தாய், நால் - நாலுவகைப்பட்டு, தடம் - பணைத்த, தோள் - தோள்களால், பெருமான்தன் - பெரியனான க்ருஷ்ணனுடைய, திரு - தர்ஶநீயமான, நுதலே - திருநெற்றிதானே, கோள்-மிடுக்கை, மன்னி - அவலம்பித்துக்கொண்டு, கொடியேன் - (அழகேபாயகமாம்படியான) கொடுமையையுடைய என், உயிர் - ப்ராணனை, கோள் - கொள்ளுகையை, இழைத்து - நிரூபித்து, ஆவி - (என்) ஆத்மாவை, அடும் - நலியாநின்றது. கோள் - மிடுக்கு; ஒளியாகவுமாம்.

இ.—ஏழாம்பாட்டில், திருநெற்றியிலழகு நலிகிறபடியைச் சொல்லுகிறாள்.

[காண்மின்களித்யாதி] - தாய்மாரான நீங்கள் காணுங்கோளென்று வைத்து, காட்டும் ப்ரகாரமறியேன். என் கைக்குப் பிடிதருதல், உங்களுக்கு உருவு

வெளிப்பாடு உண்டாதல் செய்யிலிறே காட்டவிரகுள்ளது. [அன்னையர்காள்] - புருஷருக்குக் காட்டிலிறே பருவம் நிரம்பின உங்களுக்குக் காட்டலாவது. [நாள்மன்னு வெண்டிங்கள்கொல்] - பூர்வபக்ஷத்தில் அஷ்டமீசந்த்ரனோ? இளகிஇருக்கையும், வர்ஷித்து வருகையும், ஓர்ஸ்நீயமாயிருக்கையும். [நயந்தார்கட்கு நச்சிலைகொல்] — ஆசைப்பட்டார்க்கு நஞ்சாயிருப்பதோர் இலையோவென்னுதல், ஆசைப்பட்டார்க்கு நச்சவேண்டாதிருக்கிறதோ வென்னுதல். "நச்சுமாமருந்தம்" என்றவர் கலங்கிச்சொல்லுகிற வார்த்தையிறே இது. [சேண்மன்னு நாற்றடந்தோள்] - ஓக்கத்தை யுடைத்தாய், கல்பகதரு பணைத்தாற்போலேயாய்ச் சுற்றுடைத்தாயிருக்கிற தோளழகைக் காட்டி என்னை அநந்யார்ஹையாக்கினவன். "ஆயதாஸ்து ஸம்வ்ருத்தாஸ்வபாஹவ:" என்று திருவடி அகப்பட்ட துறையிலேயாயிற்று இவளும் அகப்பட்டது. [திருநுதலே] - திருநெற்றியே. [கொடியேனுயிர்கோ ளிழைத்து - கோள்மன்னியாவியடும்] - இங்கு உயிர்-ப்ராணன். அழகுவாயுகமாம்படி பாபத்தைப்பண்ணின என்ப்ராணனை முடிக்கையிலேதுணிந்து, கொள்கையிலே அஹ்நிவேஶித்து ப்ராணனை முடியாநின்றது. தோற்புரை போகையன்றியே ஸத்தையை அழியாநின்றது. [கோளிழைத்தே] - என்னழகைப்போக்கி என்றுமாம்.

எ-டு.—ஏழாம்பாட்டு. "இவை அவள்முன்னே நிற்கவற்றோ? இவற்றுக்கெல்லாம் நாம் நெற்றிக்கையன்றோ?" என்று திருநுதலிலழகு வந்து நலிகிறபடியை அருளிச்செய்கிறார்.

[காண்மின்கள் இத்யாதி] - 'இது நலியாநின்றதாகச் சோல்லாநின்றாய்; எங்களுக்கு இது தெரிந்திருக்கிறதில்லை; எங்களுக்கும் தெரியும்படி சொல்லிக்காணாய்' என்ன, [காண்மின்கள் இத்யாதி] - நீங்களும் இத்தைக் காணுங்கோளேன்று, உங்களுக்குக் காட்டும் ப்ரகார மறிகிறிலேன். என் கைக்குப் பிடிதருதல், உங்களுக்கு உருவு வெளிப்பாடுண்டாதல் செய்யிலிறே என்னால் காட்டலாவது? [அன்னையர்காள்] - ஆண்களுக்குக் காட்டிலிறே பருவம்நிரம்பின உங்களுக்குக் காட்டலாவது. [நாள்மன்னு வெண்திங்கள்கோல்] - பூர்வாஷ்டமீசந்த்ரனோ ? இளகிப் பதித்திருக்கைக்கும், "காட்டு, காட்டு" என்று வளருகைக்கும், ஒர்ஸ்நீயமாயிருக்கைக்கும். [நயந்தார்கட்கு நச்சிலை கோல்] - ஆசைப்பட்டார்க்கு நச்சுப்பூண்டோ ? என்னுதல்; தன்னை ஆசைப்பட்டார்க்கு ஆசைப்படவேண்டாதிருக்கிறதோ? என்னுதல். "நச்சுமாமருந்தம்" என்னு

ஏழாம்பாட்டு.—காண்மின்கள் இத்யா

யாக அவதாரிகை - இவை அவள் இத்யா

எதிர்ஸேனை என்றுமாம்.

ல" என்றத்தைப்பற்ற

முந்தின வ்யூஹம்; ப்ரதாநமென்று

"காணமின்களே" என்றுவைத்து, இப்போது தெரியாதென்பானென் ? என்கிற ஶங்கையிலே அருளிச்செய்கிறார் - இதுநலியாநின்றதாக இத்யாதி. வகை - ப்ரகாரம். அறியாமைக்கு ஹேதுஎது? என்ன - என்கைக்கு இத்யாதி. பிடிதருதல் - பிடிக்கலாம்படி அகப்படுதல். "அன்னையர்காள்" என்கிற ஸம்போதநத்துக்கு பாவம் - ஆண்களுக்கு இத்யாதி. பூர்வாஷ்டமீ - பூர்வபக்ஷாஷ்டமீ. அஷ்டமீபர்யந்தமான நாளால் மன்னியிருக்கிற நிஷ்களங்க சந்த்ரனோவென்றுமப்தார்த்தம். "பூர்வாஷ்டமீசந்த்ரன்" என்று சொல்லுகைக்கு ஹேது அருளிச்செய்கிறார் - இளகிப்பதித்து இத்யாதி. காட்டுகாட்டென்று வளருகை - மேன்மேலென வளருகையென்றபடி. நச்சிலையாவது - நச்சுப்பூண்டு; விஷபத்ரமென்றபடி, த்விதீயார்த்தத்துக்கு, நச்சுதலில்லையோ. -

மவரிறே இப்போது கண்ணுஞ்சுழலையிட்டு இவ்வார்த்தை சொல்லுகிறுர். "இன்னமலை யிலே உண்டு" என்று அங்கேபோய்த் தேடி வருந்தவேண்டாதே, ஆசைப்படவேதுமாய் மேல்காற்றிலேகாட்டப் பரிஹாரமுமாய் மருந்தாயிற்று இது. மாமருந்தம் - அபத்யஸஹ மான ஔஷதம். இவன்தலையிலே பழியிட்டுக் கைவிடும் ஔஷதமன்று; வானமர்மலை யில் தலையான ஔஷதமிறே, இப்போது இவளுக்கு நச்சுப்பூண்டாகிறது. [சேண் இத் யாதி] - ஓக்கத்தையுடைத்தாய், கல்பகதரு பணைத்தாற்போலேயாய்ச் சுற்றுடைத்தா யிருக்கிற திருத்தோளிலழகாலே என்னை அநந்யார்ஹையாக்கினவனுடையதிருநெற்றியே. "ஆயதாம்ஸச ஸுவ்ருத்தாம்ஸ" (ஆயதாம்ஸச ஸுவ்ருத்தாம்ஸ) என்னும்படியே திருவடி யகப்பட்ட துறையிலேகாணும் இவளும் அகப்பட்டது. [கோடியேனுயிர்கோளிழைத்து- கோள்மன்னியாவியடும்] - என்உயிரினுடைய அழகை அழித்துக்கொள்கையிலே விருப் பத்தைப்பண்ணி முடியாநின்றது. (அழகு வாசகமாம்படி பாபத்தைப்பண்ணின என் ப்ராணனை முடிக்கையிலே துணிந்து, அதிலே அபிநிவேஶித்து, ப்ராணனை முடியாநின்ற தென்றுமாம்.) (எ)

எட்டாம் பாட்டு.

கோளிழைத்தாமரையும் கோடியும்பவளமும்வில்லும்
கோளிழைத்தண்முத்தமும் தளிருங்குளிர்வான்பிறையும்
கோளிழையாவுடைய கொழுஞ்சோதிவட்டங்கொல்? கண்ணன்
கோளிழைவாண்முகமாய்க் கோடியேனுயிர்கோள்கின்றதே.

ஆ.—(கோளிழைத்தாமரையும்.) - தன்னொளியைத் தனக்கு ஆபரணமாக வுடைய தாமரையும், கொடியும், பவளமும், வில்லும், அழகை ஆபரணமாகவுடைய குளிர்ந்தமுத்தும், தளிரும், குளிர்ந்து பெருத்தபிறையுமாய், தன்னழகே தனக்கு ஆபரணமாயிருக்கிற ஜ்யோதிர்மண்டலமோ? தன்னொளியே தனக்கு ஆபரணமாக வுடைய க்ருஷ்ணனுடைய அழகிய திருமுகம் என்று ஒருபேரையிட்டுக்கொண்டு இப்படி துக்கப்படுகைக்கீடான பாபத்தையுடைய என்னுடைய ப்ராணனை நலிகிறதென்கிறுள்.

ஒ.—எட்டாம்பாட்டில், திருக்கண்கள் தொடக்கமாக முன்புசொன்ன திவ்யா வயவங்களோடுங்கூடின திருமுகத்தி லழகு தன்னை நலிகிறபடியைச் சொல்லுகிறுள்.

ஆசையில்லையோ என்றபடி. வ்யாக்யாதாவின் ஈடுபாடு - நச்சுமாமருந்தம் இத்யாதி. இதுக்கு அர்த்தம் - இன்னமலை இத்யாதி. "நச்சுமாமருந்தம்" என்றதுக்கு - கீழ் அருளிச்செய்த அர்த்த மொழிய, இங்கேதானே இவனை நச்சுமதான மருந்தென்று அர்த்தாந்தரம். "மாமருந்தம்" என்ற துக்கு அர்த்தாந்தரம் - அபத்ய இத்யாதி. விவரணம் - இவன்தலையிலே இத்யாதி. பரமபதநாத னுடைய நெற்றி இவளுக்கு விஷப்பூண்டாகிறது விஶ்லேஷத்தின் முறுகுதலாலே என்கிறுர் - வானமாமலையில் இத்யாதி. தோளழகுக்குத் தோற்றதுக்கு ப்ரமாணம் - ஆயதாம்ஸ இத்யாதி. அர்த்தாநுகுணமாக அந்வயம் - கோடியேன் இத்யாதி. ஶப்தார்த்தம் - என்னுயிர் இத்யாதி. கொடி யேனுயிரினுடைய, கோளுண்டு - அழகு, அத்தை, இழைத்துக்கொள்கையிலே - அழித்துக் கொள்கையிலே, மன்னி - விருப்பத்தைப்பண்ணி, ஆவியடும் - ப்ராணனை முடியாநின்றதென்ற படி. உயிர் - ப்ராணன். 'காண்மின்கள்' என்றுதொடங்கி, 'கொடியேனுயிர்கோளிழைத்து - கோள் மன்னியாவியடும்' இத்யந்வயம். (எ)

[கோளிழைத்தாமரை என்றுதொடங்கி] - தன்னொளியைத் தனக்குஆஹரணமாக வுடைய தாமரையும் கொடியும் பவளமும் வில்லும், அழகை ஆஹரணமாகவுடைய குளிர்ந்தமுத்தும் தளிரும், குளிர்ந்து பெருத்த பிறையுமாய்த் தன்னழகே தனக்காஹரணமாயிருக்கிற ஜ்யோதிர்மண்டலமோ? [கோளிழையென்று தொடங்கி] - தன்னொளியே தனக்குஆஹரணமாகவுடைய அழகிய திருமுகமென்றொரு பேரையிட்டுஇப்படி உ-்ஃவெப் படுத்துகைக்கிடான பாபத்தையுடைய என்னுடைய ப்ராணனை நலிகிறது. கோளிழையென்கிறது - இவற்றை அழிக்கையென்றும், கொள்கையிலேதுணிகை யென்றும் சொல்லுவர்.

ப.—அநந்தரம், உத்தமான அவயவஸௌந்தர்யத்தை யுடைய க்ருஷ்ணனுடைய முகசோபையானது தன்னை நலிகிறபடியைச் சொல்லுகிறாள்.

கோள் - (தன்னுடைய) ஒளியே, இழை - (தனக்கு) ஆபரணமான, தாமரையும் - தாமரைகளும், கொடியும் - கொடியும், பவளமும் - பவளமும், வில்லும் - வில்லும், கோள் - (தன்னுடைய) ஒளியே, இழை - (தனக்கு) இழையாகவுடைத்தாய், தண் - குளிர்ந்த, முத்தமும் - முத்தும், தளிரும் - தளிர்களும், குளிர் - சீதளமாய், வான் - அழகியதான, பிறையும் - பிறையுமான, (இவற்றை), கோள் - கொள்கையை, இழையா - (தனக்கு) ஆபரணமாக, உடைய - உடைத்தாய், கொழும் - பூர்ணமான, சோதிவட்டங்கொல் - ஜ்யோதிர்மண்டலமோ? கண்ணன் - க்ருஷ்ணனுடைய (உத்தமான உபமாநங்களுக்கு உபமேயபூதமான திருக்கண்கள், நாஸாதண்டம், திருப்பவளம், திருப்புருவம், திருமுறுவல், கர்ணபாசம், திருநெற்றியாகிற அவயவங்களை உடைத்தாயிருப்பதாய்), கோள் - தன்னொளிதானே, இழை- ஆபரணமாம்படி, வாள் - உஜ்ஜ்வலமான, முகமாய் - திருமுகமாய்க்கொண்டு, கொடியேன் - (அழகாலே நலிவுபடும்) பாபத்தின்கொடுமையையுடைய என், உயிர் - ப்ராணனை, கொள்கின்றது - அபஹரியாநின்றது. கோள் - ஒளி.

.—எட்டாம்பாட்டில், நக்கண்கள டக்கமாகக சொன்ன திருமுகத்திலழகுகள் எல்லாம் ஒருமுகஞ்செய்து நலிகிறபடியைச் சொல்லுகிறாள்.

[கோளிழைத்தாமரையும்] - முடிக்கையிலே ஒருப்படுகிற தாமரை என்னுதல், தன்னொளியே தனக்காஹரணமான தாமரை என்னுதல், இழையைக்கொள்ளப்பட்ட தாமரை என்னுதல். "பொற்காற்றாமரை, நூற்காற்றாமரை" என்று சிலஹேஉமுண்டு; அந்த நூற்காற்றாமரையைச் சொல்லுகிறது. [கொடியும்] - திருமூக்கும். [பவளமும்] - திருவதரமும். [வில்லும்] - திருப்புருவமும். [கோளிழைத்தண்முத்தமும்] - தன்னொளியே தனக்காஹரணமாகவுடைய குளிர்ந்த திருமுத்தும். இழையைக் கொள்ளப்பட்டமுத்து - கோத்தமுத் தென்றுமாம். "ஹ்ருத்வஜி" என்னக்கடவதிறே. [தளிரும்] - திருக்காதும். [குளிர் வான்பிறையும்] - குளிர்ந்த பெருத்த பிறைபோலேயிருக்கிற திருநெற்றியும். [கோளிழையாவுடைய கொழுஞ்சோதி வட்டங்கொல்] - கொள்ளப்பட்ட, கோக்கப்பட்ட - ஆஹரணங்களாகவுடைத்தா யிருப்பதொரு ஜ்யோதிர்மண்டலமோ வென்னுதல்; தன்னழகே தனக்காஹரணமா யிருப்பதொரு ஜ்யோதிர்மண்டலமோ வென்னுதல். [கண்ணன் கோளிழை வாண்முகமாய்] - தன்னொளியே தனக்காஹரணமாகவுடைய திருமுகமாய்க்கொண்டு. உபமானோபமேயங்கள் மாறும்படி ரூபகம் முற்றினபடி. [கொடியேனுயிர்கொள்கின்றதே] - எல்லாரும்உயிர்பெறும் நிலத்திலே இப்படி உ-ஃவெப்படுத்துகைக்கு ஈடாகப்பண்ணின பாபத்தையுடைய என் ப்ராணனை நலியாநின்றது.

எ.டு.—எட்டாம்பாட்டு. "தலையானபேரை நெற்றிக்கையிலேவிட்டுக் காட்டிக் கொடுக்கவொண்ணாது" என்று, கீழ்நலிந்தவை யெல்லாம் சேர ஒருமுகமாய்வந்து நலிகிற படி சொல்லுகிறது. அங்குமிங்கும் சிதறிக்கிடந்த படையை, ஶத்ருக்கள்வந்து மூடுகின வாறே ஒன்றாகத்திரட்டி ஒருகாலே தள்ளுவாரைப்போலே, தனித்தனியே நலிந்த அழகுக ளெல்லாம் திரளவந்து நலிகிறபடியைச் சொல்லுகிறார்.

[கோளிழைத்தாமரையும்] - ஜாதி ஒன்றாயிருக்கச்செய்தேயும், "பொற்கால் தாமரை, நூற்கால்தாமரை" என்று தாமரையிலே சிலபேதமுண்டிறே; அதில், நூற்கால் தாமரை யென்னுதல்; அன்றியிலே, கோள்கையிலே துணிந்திருக்கிற தாமரை என்னுதல்; தன்னழகே தனக்கு ஆபரணமாகவுடைய தாமரை யென்னுதல்; தேஜஸ்ஸே ஆபரண மான தாமரை யென்னுதல். திருக்கண்ணும். [கொடியும்] - திருமூக்கும். [பவளமும்] - திருவதரமும். [வில்லும்] - திருப்புருவமும். [கோளிழைத்தண் முத்தமும்] - தன் தேஜஸ்ஸே ஆபரணமாகவுடைய குளிர்ந்த திருமுத்துநிரையும். அன்றியே, இழையிலே கோப்புண்ட முத்துப்போலேயிருக்கிற குளிர்ந்த திருமுத்தென்னுதல். [தளிரும்] - திருக் காதும். [குளிர்வான்பிறையும்] - திருநெற்றியும். நேத்ரபூதரானவரும், "மூக்குவலியோம்" என்றவரும், வாய்சொல்லிப்போனவரும், "அதரோத்தரமாயிற்றே" என்று வளைத்துக் கொடுபோனவரும், வாய்க்கரையிலே இருந்தவரும், தாம்சேவிப்பட்டவாறே போனவரும், "இவற்றுக்கு நெற்றி நாம்" என்று போனவருமெல்லாம் ஒருமுகமாய். [கோளிழையா இத் யாதி] - கொள்ளப்பட்ட ஆபரணத்தையுடைத்தான ஜ்யோதிர்மண்டலமோ? ரூபகமிருக் கிறபடி. தன்னழகே தனக்கு ஆபரணமாயிருப்பதோரு ஜ்யோதிர்மண்டலமோ? என்னு தல். [கண்ணன்கோளிழை இத்யாதி] - கண்ணனுடைய, தன்னழகே தனக்கு ஆபரண மாய் ஒளியையுடைத்தான முகமேன்று ஒருவ்யாஜத்தையிட்டு. [கொடியேனுயிர்கோள் கின்றதே] - கொடியேன் - உயிர்பெறுங்காலத்திலே உயிரிழக்கும்படியான பாபத்தைப் பண்ணினேன். வாழுங்காலத்திலே கெடும்படியான பாபத்தைப்பண்ணின என்னுடைய உயிரைக்கோள்கின்றது - கோளிழையாவுடைய கொழுஞ்சோதி வட்டங்கோல்? (அ)

எட்டாம்பாட்டு - கோளிழை இத்யாதி. கீழ்ச்சொன்ன அழகுகளெல்லாவற்றினுடைய அபிஸந்தியையும் ரஸோக்தியாலே அருளிச்செய்கிறார் - தலையான இத்யாதி. தலையானபேரை - நெற்றியை என்று ஸ்வபாவார்த்தம்; ப்ரதாநரை என்று ரஸோக்தி. நெற்றிக்கை - மூன்தூசி. உக் தத்தை ஸத்ருஷ்டாந்தமாக விவரிக்கிறார் - அங்குமிங்கும் இத்யாதி.

ஶப்தார்த்தம் - ஜாதி இத்யாதி. முந்தின அர்த்தத்துக்கு, இழை - நூல், கொள்கை - உடைத்தாகை; த்விதீயார்த்தத்துக்கு, கோளென்று - நெஞ்சை அபஹரிக்கை, இழையென்று - துணிகை; த்ருதீயார்த்தத்துக்கு, கோளென்று - அழகு, இழையென்று - ஆபரணம்; நாலாம் அர்த்தத் துக்கு, கோளென்று - தேஜஸ்ஸு, இழையென்று - ஆபரணம். ஃபலிதம் - திருக்கண்ணும் என்று. இரண்டாமர்த்தத்துக்கு, "இழை - கோள் - தண்முத்தம்" என்று அந்வயம். இழை - நூல். கோள்கை - கோப்புண்கை. "குளிர்வான்பிறை"-குளிர்ந்த பெரிய சந்த்ரனென்றபடி. "கோளிழையாவுடைய" க்ரவிக்கப்பட்ட ஆபரணதேஜஸ்ஸை யுடைத்தான; "கொழுஞ்சோதி வட்டங்கொல்" - பூர்ணமான ஜ்யோதிர்மண்டலமோ? என்றபடி. "ஆய் - வ்யாஜத்தையிட்டு. "கொள்கின்றது" க்ரஸியாநின்றது. உயிர்பெறுங்காலத்திலே என்றது - எல்லாரும் இவ்வழகை அநுபவித்து ஸத்தைபெறுங்காலத்திலே யென்றபடி. 'கோளிழைத்தாமரை' என்றுதொடங்கி, 'குளிர்வான்பிறையுமான - கண்ணன் கோளிழைவாண்முகமாய்க் கொடியேனுயிர்கொள்கின்றது - கோளிழையாவுடைய கொழுஞ்சோதி வட்டங்கொல்' இத்யந்வய:

(அ)

ஒன்பதாம் பாட்டு.

கோள்கின்றகோளிருளைச் சுகிர்ந்திட்டகொழுஞ்சுருளின்
உள்கொண்ட நீலநன்னூல்தழைகொல்? அன்றுமாயன்குழல்
விள்கின்றபூந்தண்துழாய் விரைநாறவந்துஎன்னுயிரை
கள்கின்றவாறுஅறியீர் அன்னைமீர் கழறுநிற்றிரே.

ஆ.—(கொள்கின்ற.) - ப்ரளயகாலத்தில் திவாராத்ரவிபாகமின்றிக்கே ஜகத்தையடைய வ்யாபியாநின்ற மிக்கதமஸ்ஸைப் புறவாயிலே வெளிறான அம்சத்தைக் கழித்து அதினுள்ளேயுண்டான கொழுவிய இருண்ட சுருளினுடைய ஸாரமான கறுத்த நூல்திரளோ? அங்ஙனமன்று; அத்யாச்சர்யமான அழகையுடைய க்ருஷ்ணனுடைய திருக்குழல், அலராநின்றுள்ள அழகிய திருத்துழாயினுடைய பரிமளம் நாறவந்து என்னுடைய ப்ராணனை யபஹரிக்கிறபடி அறிகிறிலிகோள்; ஏதேனுமொன்றைச் சொல்லிப் பொடியாநின்றிகோ ளென்கிறாள்.

ஒ.—ஒன்பதாம்பாட்டில், அதிலோகமான திருக்குழலி லழகுதன்னை நலிகிற படியைச் சொல்லுகிறாள்.

[கொள்கின்ற வென்றுதொடங்கி] - ப்ரளயகாலத்திலே திவாராத்ரவிபாகமின்றிக்கே ஜகத்தையடைய வ்யாபியாநின்றுகொண்டு மிக்க தமஸ்ஸைப் புறவாயில் வெளிறானஅம்சத்தைக் கழித்து அதினுள்ளேயுண்டான கொழுவிய இருண்டசுருளினுடைய ஸாரமான கறுத்த நூல்திரளோ? [அன்று மாயன்குழல்] - அதுவன்று; அத்யாச்சர்யமான அழகையுடைய க்ருஷ்ணனுடைய திருக்குழல். [விள்கின்றவென்று தொடங்கி] - அலராநின்றுள்ள அழகியதிருத்துழாயினுடைய பரிமளம் நாறவந்துஎன்னுடையப்ராணனை அபஹரிக்கிறபடி அறிகிறிலிகோள்: ஏதேனுமொன்றைச்சொல்லிப் பொடியா நின்றிகோள்.

ப.—அநந்தரம், ஆச்சர்யரூபனான க்ருஷ்ணனுடைய உபமாதீதமான திருக்குழல் நலிகிற ப்ரகாரத்தைச் சொல்லுகிறாள்.

கொள்கின்ற - (லோகத்தை யடங்கக்) கொள்ளக்கடவதான, கோள்-மிடுக்கை யுடைய, இருளை - இருளை, சுகிர்ந்திட்ட - (கந்தல்கழியும்படி) எஃகிப்படப்பட்டதாய், கொழும் - செறிந்த, சுருளின் - சுருட்டினுடைய, (கையழுக்குப்படாமல்), உள்-உள்ளே, கொண்ட - (நூற்றுக்)கொள்ளப்பட்ட, நீலம் - நீலநிறத்தை யுடைத்தான, நல் - அழகிய, நூல்தழைகொல் - நூல்திரளோ? அன்று - (அக்ருத்ரிமமான இது) அப்படியல்லவிறே; மாயன் - ஆச்சர்யரூபனான க்ருஷ்ணனுடைய, குழல் - (உபமாதீதமான) திருக்குழலானது, விள்கின்ற - விகஸிதமான, பூ - புஷ்பத்தையுடைத்தாய், தண் - செவ்வியை யுடைத்தான, துழாய் - திருத்துழாயின், விரை - பரிமளமானது, நாற - பரம்பும்படி, வந்து - வந்து, என் - என், உயிரை - ஆத்மாவை, கள்கின்ற - சௌர்யம்பண்ணுகிற, ஆறு - ப்ரகாரம், அறியீர் - அறிகிறிலிகோள்; அன்னைமீர் - தாய்மாராய் இருந்து வைத்து, கழறுநிற்றிர் - (அவஸ்த்தையறியாதே) நியமியா நின்றிகோள். கள்கை - களவிலே கொள்கை.

இ.—ஒன்பதாம்பாட்டில், அதிலோகமான திருக்குழலினழகு நலிகிறபடியைச் சொல்லுகிறாள்.

[கொள்கின்ற கோளிருளை] - உபமானத்தை ஶிக்ஷிக்கிறது. ப்ரளயகாலத்தில் திவாராத்ரவிபாகமின்றிக்கே, காலமெல்லாம் ஜகத்தையடைய வ்யாபியாநின்றுகொண்டிருக்கிற மிக்க தேஜஸ்ஸென்னுதல்; கோளிருள் - மிடுக்கை யுடைத்தான இருளென்னுதல். [சுகிர்ந்திட்ட] - அத்தை எஃகுவது, அதில் வெளிறான அம்ஶத்தைக்கழித்து அத்தைக்கொழுவிதாகச் சுருட்டுவது. [உள்கொண்ட நீலநன்னூற்றழைகொல்] - அதிலகவாயிலுண்டான நீலமான நிறத்தையுடைத்தாய் நன்றான நூல்திரளோ? [அன்று] - இத்தனையுஞ் செய்தாலாயிற்று அன்றென்னலாவது. [மாயன்குழல்] - ஆஶ்சர்யமான அழகையுடைய க்ருஷ்ணன் குழலென்னுமித்தனை. [விள்கின்ற பூந்தண்டுழாய் விரைநாற வந்து] - அலராநின்ற குளிர்ந்த திருத்துழாயின் பரிமளம் தூசியேறவாயிற்று? திருக்குழல்வந்து நலிகிறது. [என்னுயிரைக்கள்கின்ற வாறறியீர்] - உங்களுக்கொரு வ்யஸநமின்றிக்கே இருக்க, என்னுடைய ப்ராணனைக் களவுகாண்கிறபடி அறிகிறிலிகோள். களவாவது - இத்தலையில் இசைவின்றிக்கே இருக்க அபஹாரம் பண்ணுகை. இத்தலை யத்தலையாயிற்று. அப்ராப்தன் களவுகண்டால் பரிஹரிக்கலாம், ப்ராப்தரானார் களவுகண்டால் பரிஹரிக்க ஒண்ணாது; கைப்பட்டவாறே "தன்னது" என்று ப்ரமாணங் காட்டுகையாலே. [அன்னைமீர் கழறா நிற்றிரே] - உருவுவெளிப்பாட்டை பரிஹரிக்கையொழிய நியமிக்கைக்கு ஒருமுறை யுண்டென்றுப் பொடியத்தேடுமத்தனையோ? கழறுகை - அஹிஜவித்து வார்த்தை சொல்லுகை. கழறல் - நோவச்சொல்லுதல்.

ஈடு.—ஒன்பதாம்பாட்டு. "இவ்வவஸ்த்தைக்கன்றோ நமக்குப் பூவும் புழுகுமிட்டு ஶிரஸாவஹித்துக்கொடுபோந்தது" என்று திருக்குழற்கற்றையிலழகு வந்து நலியாநின்றதென்கிறாள்.

[கொள்கின்ற இத்யாதி] - திருக்குழலிலழகுக்கு ஓருபமானஞ்சொல்லப்புக்கு, அழகுக்கு அதுதான் நேர்கொடுநேர் உபமானமாகப் போராமையாலே அதுதன்னைக்கிடந்து ஶிக்ஷிக்கிறது. ப்ரளயகாலத்தில் திவாராத்ரவிபாகமற எங்குமொக்கத் தானேயாம்படி, கொள்ளாநின்றுள்ள - வ்யாபியாநின்றுள்ள, கோட்பாட்டையுடைய இருளென்னுதல்; கோளென்று - மிடுக்காய், மிடுக்கையுடைய இருளென்னுதல். அதுதன்னை, சுகிருவது - எஃகுவது: இப்படி எஃகுகிறதுதன்னில் கொழுவிதான அம்ஶத்தைத் திரட்டுவது, அதுதன்னிலுமுண்டான புறவிதழைக்கழித்து அகவாயில் வயிரமாய் நீலமான நிறத்தை யுடைத்தாய் நன்றாயிருந்துள்ள நூல்திரளோ? [அன்றுமாயன்குழல்] - இவள்நெஞ்சிலே அழகிதாக மயிர் பட்டதுகாணும். இத்தனை ஶிக்ஷித்தாலாயிற்று உபமாநமாகப் போராதென்னலாவது. பின்னையும், ஆஶ்சர்யபூதனான அவனுடைய திருக்குழலென்னுமித்தனை. இத்தனை இடு சிவப்பானது அவனுடைய ஸ்வாபாவிகமான திருக்குழலுக்கு ஸத்ருஶமோ? [விள்கின்ற

ஒன்பதாம்பாட்டு - கொள்கின்றஇத்யாதி. "மாயன்குழல்" என்றதைப்பற்ற யர்க அவதாரிகை - இவ்வவஸ்த்தைக்கன்றே இத்யாதி. இஸ்ஸமயத்துக்கன்றோ என்றபடி.

திருக்குழலிலழகுக்கு உபமானமான இருளை வர்ணிக்கிறதுக்கு பாவம் - திருக்குழலில் இத்யாதி. கோட்பாடாவது - அழகு. அன்றிக்கே, கோட்பாட்டையுடைய என்றது - வ்யாப்தியை ஸ்வபாவமாகவுடைய என்னுதல். எஃகுவது - பன்னுவது என்றபடி. கொழுவிதான - அழகியதான; ஸாரம்ஶமான என்றபடி. இப்படி வர்ணிக்கிறதுக்கு பாவம் - இவள்இத்யாதி. "அன்று" என்றதுக்குபாவம் - இத்தனை இத்யாதி. இடுசிவப்பானது - ஆரோபிதமான சிவப்பையுடைத்தா

இத்யாதி] - அலராநிற்பதாய் அழகிதாய்க் குளிர்ந்திருந்துள்ள திருத்துழாயில் பரிமளமானது முகத்திலே அலையேறியவாயிற்று வந்துதோற்றுகிறது. திருக்குழலிலழகுக்கு, திருத்துழாயில் பரிமளமானது தூசியேறிநடக்கவாயிற்று வந்துவாயகமாகிறது. [என்னுயிரைக் கள்கின்றவா றறியீர்] - கள்கின்ற - களவுகாண்கிற. நீங்களெல்லாரும் ஸகமே யிருக்கச்செய்தே, என்னுருத்தியுடைய ஆத்மவஸ்துவை வந்து களவுகாண்கிற ப்ரகாரமறிகிறிலிகோள். களவு காண்கையாவதேன்? என்னில், - இத்தலையில் இசைவின்றிக்கேயிருக்கக் கைக்கோள்ளுகை. அவனிறே களவுகாண்கிறான். இத்தலை அத்தலையானபடி. !அப்ராப்தன் அபஹரித்தால் பரிஹரிக்கலாம், ப்ராப்தனானவன் அபஹரித்தால் பரிஹாரமில்லையிறே. இது கைப்பட்டவாறே ஒருப்ரமாணங்கோடுநின்று வழக்குப்பேசத்தோடங்குமிறே அவன். [அன்னைமீர்கழறாநிற்றிரே] - நீங்கள் அபிஹவித்து இக்களவுக்கு நானும் பெருநிலைநின்று கூட்டுப்பட்டேனாகப் பொடியாநின்றிகோள். இந்த உருவுவெளிப்பாட்டைப் பரிஹரிக்கலாகவும் வேண்டாவோ? ஒரு நியந்த்ரு நியாம்யஹாவமேயோ வேண்டுவது பொடிகைக்கு. (கழறுகை - அபிஹவித்து வார்த்தைசோல்லுகை). கழறல் - நோவச்சோல்லுதல். (௯)

பத்தாம் பாட்டு.

நிற்றிமுற்றத்துளென்று நெரித்தகையராய் என்னை நீர்
சுற்றியுஞ்சூழ்ந்தும்வைதிர் சுடர்ச்சோதிமணிநிறமாய்
முற்றவிம்மூவுலகும் விரிகின்றசுடர்முடிக்கே
ஒற்றுமைக்கோண்டதுள்ளம் அன்னைமீர்!நசையேனுங்கட்கே?

ஆ.—(நிற்றிமுற்றத்துள்.) - தன் அகத்துமுற்றத்தே நின்றாயென்று அயுக்தஞ் செய்தேனாகக்கொண்டு, என்னுடைய தசையை யறிந்த நீங்கள், விடாதே சுற்றியும் சூழ்ந்தும் வையாநின்றிகோள்; நிரவதிக தேஜஸ்ஸான ரத்நங்களுடைய ஒளியையுடைத்தாய்க்கொண்டு, ஸமஸ்தலோகங்களையும் ஓரிடமொழியாமே வ்யாபிக்கிற தேஜஸ்ஸையுடைய திருவபிஷேகத்தில் என்னுடைய ஹ்ருதயம் அகப்பட்டது; இனி என்னைப் பொடிந்து அன்னைமீர் உங்களுக்கு ஒரு ப்ரயோஜநமில்லை யென்கிறாள்.

னது. ஸ்வதஃ இன்றிக்கே, ஆரோபிதாகாரத்தை யுடையது என்றபடி. முகத்திலே - நாயகீமுகத்திலே. "விள்கின்ற" இத்யாதியால் பலிதம் - திருக்குழலில் இத்யாதி. தூசி - ஸேநாமுகம். "என்னுயிரைக்கள்கின்றவாறு" என்று விசேஷிக்கிறவளுடைய பாவம் - நீங்களெல்லாரும் இத்யாதி. ஸ்வாபதேசத்திலே சங்கித்து பரிஹரிக்கிறார் - களவுகாண்கை இத்யாதி. "சௌரேண தாவஹாரிணா" என்று இவன் கள்ளனாயிருக்க, ப்ராப்தனானவன் ஸ்வீகரித்தத்தைக் களவென்கிறதென்? என்ன - அவனிறேஇத்யாதி. அதாவது - சேதநனுடைய ஆத்மாபஹாரப்ராபல்யம். ஈச்வரன் ஸ்வசேஷ வஸ்துவையும் இவனறியாதபடி அபஹரிக்கும்படியாயிற்று என்றபடி. பலிதம் - இத்தலைஇத்யாதி. ஆனால் அவன் ஸ்வீகரியாதபடி விலங்கினாலோ? என்ன - அப்ராப்தன்இத்யாதி. பரிஹாரமில்லாமைக்கு ஹேதுவேதென்ன - இதுகைப்பட்ட இத்யாதி. இங்கே - "ஸம்ஶேஹம்ஶ" இத்யாத்யஸந்தேயம். பெருநிலை - ஸஹாயம். "அன்னைமீர்" என்றதுக்கு பாவம் - இந்தஉருவுஇத்யாதி. 'கொள்கின்ற': இத்யாரப்ய, 'அன்று - மாயன்குழல்: அன்னைமீர் - விள்கின்ற' என்றுதொடங்கி, 'கள்கின்றவாறறியீர்-கழறாநிற்றிரே' இத்யந்வயஃ- (௯)

ஒ.—பத்தாம்பாட்டில், திருவபிஷேகத்திலழகிலே என்னுடைய ஹ்ருதய மகப்பட்டது; இனி என்னைப்பொடிந்து உங்களுக்குஒரு ப்ரயோஜநமில்லை யென்கிறாள்.

[நிற்றியென்று தொடங்கி] - தன்னகத்து முற்றத்தே நின்றாய் என்று அயுக்தம் செய்தேனாகக்கொண்டு என்னுடைய உமையறிந்த நீங்கள் விடாதே வையாநின்றி கோள். [சுற்றியும் சூழ்ந்தும்] - சுழலவந்து பார்த்தும், சூழ்ந்துகொண்டு நின்றும் என்றுமாம். [சுடர்ச்சோதியென்று மேனுக்கு] - நிரவயிக தேஜஸ்ஸான ரத்நங்களுடைய ஒளியை யுடைத்தாய்க்கொண்டு ஸமஸ்தலோகங்களையும் ஓரிடமொழியாமே வ்யாபிக்கிற தேஜஸ்ஸையுடைய திருவபிஷேகத்திலே என்னுடைய ஹ்ருதயம் ஒருமைப்பட்டது.

ப.—அநந்தரம், ஸர்வாதிகத்வ ஸூசகமான திருவபிஷேகத்திலே தன்னெஞ்சு ஒன்றுபட்டபடியைச் சொல்லுகிறாள்.

'(உள்ளில்நின்றும்), முற்றத்துள் - முற்றத்திலே, நிற்றி - நிற்றி,' என்று - என்று, நெரித்த - நெரித்த, கையராய் - கையையுடையீராய்க்கொண்டு, என்னை-என்னை, நீர் - நீங்கள், சுற்றியும் - சுற்றிக்கொண்டுநின்று, சூழ்ந்தும் - (பழியாலே) சூழ்ச்சிசெய்தும், வைதிர் - வையாநின்றிகோள்; சுடர் - சுடராய்ப்பரம்பின, சோதி-ஒளியையுடைத்தான, மணி - ரத்நங்களினுடைய, நிறமாய் - நிறத்தை யுடைத்தாய்க்கொண்டு, இம்மூவுலகு - த்ரிவித (சேதநாசேதநாத்மகமான) லோகத்தை, முற்றவும் - அடங்கலும், விரிகின்ற - வ்யாபிக்கிற, சுடர் - தேஜஸ்ஸையுடைத்தான, முடிக்கே - திருவபிஷேகத்திலே, உள்ளம் - நெஞ்சானது, ஒற்றுமைக்கொண்டது - ஒருமைப்பட்டது; அன்னைமீர்- அன்னைமீர்! நுங்கட்கு - (வைகிற) உங்களுக்கு, நசை - (என்பக்கல்) நசைபண்ணி, என் - என்னப்ரயோஜநமுண்டு?

இ.—பத்தாம்பாட்டில், திருவபிஷேகத்திலழகிலே என்னுடைய ஹ்ருதயம் அகப்பட்டது; என்னைப்பொடிந்து உங்களுக்கு ஒரு ப்ரயோஜநமில்லை என்கிறாள்.

[நிற்றிமுற்றத்துளென்று] - முற்றத்துள் நிற்றியென்று படுக்கையைவிட்டு எல்லாரும் காண முற்றத்திலே நிற்கையாகிற இதுக்குமேலே ஸ்வரூபஹாநியில்லை என்றிருக்கிறாள். "யாநஸ்ய்ரவாராதஷ்டுஷ்லவஜ்ஜிதேதராகாஸவெறாவீ। தாகேஷ்வஹீதாலவஸ்நிராஜஜோமஹுமதாஜநா:॥." பிறந்த ப்ரமாதத்துக்கு நெரித்த கையையுடையீராய். [என்னைநீர்] - உருவுவெளிப்பாடு புறப்படவிடப் புறப்பட்ட என்னை, அதிவிழியாத ஸாக்யத்தைப்பண்ணின நீங்கள். [சுற்றியும் சூழ்ந்தும் வைதிர்] - போகாதபடி நெஞ்சிலே சுற்றியும் - உங்களிலே விசாரித்தும், போகவொண்ணாதபடி சூழ்ந்து நின்றும் என்னுதல்; போயும்வந்தும் வையாநின்றிகோளென்னுதல். [சுடர்ச்சோதி யித்யாதி] - ப்ராதேஶிகமாக நோக்குமவர்களிறே இவர்கள். நோக்குகிற விஷயந்தான் சுற்றியும் சூழ்ந்தும் நலியவல்லபடி. நிரவயிக தேஜஸ்ஸான ரத்நங்களினொளியை யுடைத்தாய்க்கொண்டு ஸமஸ்தலோகங்களையும் ஓரிடமொழியாமே வ்யாபிக்கிற தேஜஸ்ஸையுடைய திருவபிஷேகத்திலே என்னுடைய ஹ்ருதயம் ஒருப்பட்டதென்னுதல், அங்கே விலைசெய்து கொடுத்ததென்னுதல். ஒற்றுமை - ஒருமை. [அன்னைமீர் நசையென் உங்கட்கே]-ஆட்டியும் தூற்றியுமென்னபயன்? பெற்றுவளர்த்து போக்யதை பிறக்குமளவும் ஹிதஞ்சொல்லிப் பின்னைப் பிறர்கையிலே கொடுத்துவிடுமதொழிய ப்ராப்தயௌவனைகளானாலும் பெற்ற ப்ராப்தியைக்கொண்டு ஹிதஞ்சொல்லி மீட்கத்தேடுமித்தனையோ?

ஈடு.—பத்தாம்பாட்டு. "ஸ்ரிய:பதியுங்கூட நம்மை ஸிரஸாவஹித்துப்போருகிறது இவ்வவஸ்த்தைக்கன்றே" என்று திருவபிஷேகத்திலழகு வந்து நலிகிறபடியைச் சொல்லுகிறாள்.

[நிற்றி இத்யாதி] - இத்தனையும் நசையறச்சொல்லாவிடில் அவர்கள் விடார்கள் போலே. [நிற்றிமுற்றத்துளென்று] - முற்றத்துள்நிற்றி என்பர்கள். படுக்கையினின்றும் எழுந்திருந்து எல்லாருங்காணும்படி முற்றத்திலே நிற்கைக்கு மேற்படப் பழியில்லையாக நினைத்திராநின்றார்கள். "யாநஸம்க்யா" (யாநஸம்க்யா) இத்யாதி. "ராஜமார்க்கதாஜநா:" (ராஜமார்க்ககதாஜநா:) என்றவோபாதியாக நினைத்திராநின்றார்களாயிற்று இத்தை. முற்றத்திலே புறப்பட்டுநிற்கும்படி பிறந்த ஸாஹஸத்துக்கு நெரித்தகையராய். [என்னைநீர்]- உருவுவெளிப்பாடுபுறப்பட விடுவித்து நிறுத்த நிற்கிற என்னை, இத்தால் நலிவுவாராதபடி ஸாக்ஷம்பண்ணின நீங்கள். அவன்புறப்பட விடுவித்துநிறுத்த நிற்கிற என்னை, இது கொண்டு காரியமில்லாத நீங்கள். [சுற்றியும் சூழ்ந்தும் வைதிர்] - "இவளைத்தப்புவித்தோமாம்விரகேன் ?" என்று நெஞ்சிலே விசாரிக்கையும், கால்வாங்கிப் போநிற்கவுமொண்ணாதபடி சூழநிற்கையு மென்னுதல். அன்றிக்கே, போயும்வந்தும் பொடியாநின்றீகோளென்னுதல். [சுடர்ச்சோதி இத்யாதி] - தப்புவிக்கைக்கு வார்த்தைசொல்லுகிற இவர்களைப்போலே ஒருப்ரதேசத்தி லல்லவிறே அகப்படுத்தி நலியக்கோலுகிற அது நிற்கும்படி. மிக்க புகரையுடைத்தான ரத்நத்தினுடைய தேஜஸ்ஸையுடைத்தாய்க்கொண்டு கண்டவிடமெங்கும் பரம்பாநின்றுள்ள தேஜஸ்ஸையுடைய திருவபிஷேகத்திலே ஒருமைப்பட்டது என்னுடைய ஹ்ருதய மென்னுதல், அங்கே விலைசெய்து கொடுத்த தென்னுதல். [அன்னைமீர்நசையேன்னுங்கட்கே] - தாய்மாரான நீங்கள் என்பக்கல் நசையறவமையும். தாய்மாராவார், பெற்றுவளர்த்து ஸோகயோக்யதை பிறந்தால் பின்பு கைப்பிடித்தவன்கையிலே காட்டிக்கொடுத்துக் கடக்க நிற்குமத்தனையோக்கி, பொடியக்கடவர்களோ? ப்ராப்தயேளவனைகளானாலும், பெற்றப்ராப்திகொண்டு ஹிதஞ்சொல்லி மீட்கப்பார்க்கக்கடவதோ? (௯)

பத்தாம்பாட்டு - நிற்றி இத்யாதி. "சுடர்முடிக்கே" என்றத்தைக் கடாக்ஷித்து ரஸோக்தியாக அவதாரிகை- ஸ்ரிய:பதியுங்கூட இத்யாதி.

"நசையென் நுங்கட்கே" என்று ஆசையறச்சொல்லுவானென் ? என்ன - இத்தனையும் இத்யாதி. முற்றத்திலேநிற்கை பழியோவென்ன - படுக்கை இத்யாதி. முற்றத்திலே புறப்பட்டு நிற்கிறத்தைத் தெருவிலே புறப்பட்டதாக நினைத்து, அப்படி புறப்பட்டதுக்கு ப்ரமாணம்-யாநஸம்க்யா இத்யாதி. "யாநஸம்க்யாவஸ்ராஷ்டும் ஸூர்யேணாகாஸகோசரா । தாத்யவேக்ஷந்தி தாம்வஸ்யாத்ராஜமார்க்கதாஜநா:" உத்யோயத்யாகாண்டே (௩௩-எ) "என்னை, நீர்" என்றபதத்வயத்துக்கும் அர்த்தம்-உருவுவெளிப்பாடு இத்யாதி வாக்யத்வயம். ஏதத்வாக்யத்வய விவரணம் - அவன்புறப்பட இத்யாதி. முந்தினவர்த்தத்துக்கு, "சுற்றியும் சூழ்ந்தும்" என்று - மாநஸ காயிகங்களைச் சொல்லுகிறது. "முற்றவிம்மூவுலகும் விரிகின்ற" என்கிறவனுடைய ஹார்த்த பாவம் - தப்புவிக்கைக்கு இத்யாதி. ஸப்தார்த்தம் - மிக்கஇத்யாதி. ஒற்றுமை - ஒருமை; ஐகாந்த்யம். ஒருப்பட்டது - தத்பரமாயிற் றென்றபடி. இரண்டாமர்த்தத்துக்கு, ஒற்றுமைக்கொண்டது- விலைசெய்துகொடுத்த தென்றபடி. ஒற்றுமை - விலையும், ஒருமையும். "இம்மூவுலகும் - முற்றவும் - விரிகின்றசுடர்முடி" என்று அந்வயிப்பது. "அன்னைமீர்" என்றதுக்கு ஹாவம் - தாய்மாராவார் இத்யாதி. "அன்னைமீர்" என்றதுக்கு ஹாவாந்தரமாதல், விவரணமாதல் - ப்ராப்தஇத்யாதி. 'அன்னைமீர் - முற்றத்துள் - நிற்றி - என்று நெரித்த' என்றுதொடங்கி, 'சுடர்முடிக்கே - உள்ளம் - ஒற்றுமைக்கொண்டது: நுங்கட்கு - நசையென் ?' இத்யந்வய:. (௧0)

பதினோராம் பாட்டு.

கட்கரியபிரமன்சிவன் இந்திரனென்றிவர்க்கும்
கட்கரியகண்ணனைக் குருகூர்ச்சடகோபன்சொன்ன
உட்குடையாயிரத்துள் இவையுமோருபத்தும்வல்லார்
உட்குடைவானவரோடு உடனாயென்றும்மாயாரே.

ஆ.—(கட்கரிய.) - மநுஷ்யருடைய இந்த்ரியங்களுக்கு விஷயமன்றிக்கே யிருக்கிற ப்ரஹ்மாதிகளுக்கும் கண்ணுற்காண அரியனை க்ருஷ்ணனைக் குருகூர்ச் சடகோபன் சொன்ன. (உட்குடையாயிரம்) - வாச்யத்தை வசிக்கவல்ல பக்தி யோகத்தையுடைய ஆயிரத்தில் இத்திருவாய்மொழிவல்லார் பகவத்குணசேஷ்டிதாதி களைப் பூர்ணமாக அநுபவிக்கவல்ல * அயர்வறுமமரர்களோடே நித்யஸம்ச்லேஷம் பண்ணப்பெறுவர்களென்கிறார்.

ஒ.—நிம்மத்தில், இத்திருவாய்மொழி அறிந்தவர்கள், ஆழ்வார் இதில் பட்ட நோவு படாதே அயர்வறுமமரர்களோடே நித்யஸம்ச்லேஷம் பண்ணுவர்களென்கிறார்.

[கட்கரியவென்று தொடங்கி] - மநுஷ்யருடைய இந்த்ரயங்களுக்கு விஷய மின்றிக்கேயிருக்கிற ப்ரஹ்மாதிகளுக்கும் கண்ணால் காணவரியனை க்ருஷ்ணனை. [உட் குடையாயிரம்] - வாச்யத்தை வசிக்கவல்ல பக்தியோகத்தையுடைய ஆயிரம். [உட் குடைவானவர்] - பகவத்குண சேஷ்டிதாதிகளைப் பூர்ணமாக அநுபவிக்கைக்கீடான பக்தியோகத்தையுடைய அயர்வறுமமரர்கள்.

ப.—அநந்தரம், இத்திருவாய்மொழியை அப்யஸித்தவர்கள், நித்யஸூரிக ளோடே நித்யஸம்ச்லிஷ்டராவரென்று பலத்தை யருளிச்செய்கிறார்.

கட்கு - (மநுஷ்யாதிகள்) கண்ணுக்கு, அரிய - அரியரான, பிரமன் சிவன் இந்திரன் - ப்ரஹ்மருத்ரேந்த்ராதிகள், என்று-என்றுசொல்லப்பட்ட, இவர்க்கும்கட்கு- இவர்கள் கண்ணுக்கும், அரிய - காண அரியனை, கண்ணனை - க்ருஷ்ணனை, குருகூர்ச் சடகோபன் - (உருவுவெளிப்பாடாம்படி மாநஸாநுபவம்பண்ணின) ஆழ்வார், சொன்ன- அருளிச்செய்ததாய், உட்கு - (ஸ்வார்த்தமான பகவத்ஸ்வரூபரூபகுணாதிகளுடைய ப்ரதிபாதநத்தில்) பக்தியை, உடை - உடைத்தான, ஆயிரத்துள் - ஆயிரத்துள், ஒரு - (பகவத்ஸௌந்தர்யாதிபர ப்ரதிபாதகத்வத்தாலே) அத்விதீயமான, இவையும்பத்தும் - இவைபத்தையும், வல்லார் - அப்யஸிக்கவல்லவர்கள், உட்குஉடை - (நிரந்தர பகவதநுபவ) பக்தியுக்தரான, வானவரோடு - பரமபதவாஸிகளோடே, என்றும் - ஸர்வகால மும், உடனாய் - ஸமவேதராய், மாயார் - (ஸம்ஸாரஸம்பந்த ரூபமான ஸ்வரூபவிநாச மற்று) வர்த்திப்பர்கள். உட்கு - மிடுக்கு. இதுவும் - கலித்துறை.

இ.—நிமமத்தில், இத்திருவாய்மொழி அறிந்தவர்கள், இதில் ஆழ்வார்பட்ட நோவுபடாதே, * அயர்வறுமமரர்களோடே நித்யஸம்ச்லேஷம் பண்ணப்பெறுவர்க ளென்கிறார்.

[கட்கரிய இத்யாதி] – மநுஷ்யர்களுடைய கண்ணுக்குக் காணவொண்ணாத ப்ரஹ்மாதிகள் கண்ணுக்கும் அவிஷயமான க்ருஷ்ணனை. ப்ரஹ்மாதிகள் என்றுங் கேட்டேபோமித்தனையல்லது, அவர்களுக்குக் காணவொண்ணாதா யிருக்கிறவன். உருவு வெளிப்பாட்டாலே "சூழவும் தாமரை நாண்மலர்போல் வந்துதோன்றுங் கண்டீர்" என்கிறபடியே-பார்த்த பார்த்தவிடமெங்கும் தானேயாயிராநின்றான். [உட்குடையாயிரம்]-ப்ரதிபாத்ய வஸ்துவை உள்ளபடியே ப்ரதிபாதிக்கவற்றான ஶக்தியையுடைய ஆயிரத்திலும் வைத்துக்கொண்டு, இப்பத்தையும் அப்யஸிக்க வல்லவர்கள். [உட்குடைவானவரோடுடனாய்]-பகவத்குணங்களைப் பூர்ணமாக அநுபவிக்கவல்ல நித்யஸூரிகளோடே ஒருகோவையாய். [என்றும் மாயாரே] - உருவுவெளிப்பாட்டாலே நோவுபடாதே நித்யாநுபவம் பண்ணப்பெறுவர்கள். உருவு வெளிப்பாட்டாலே நோவுபடுகையும் முடிகையும் பர்யாயமாயிருக்கையாலே - மாயார் என்கிறார். பகவதுபசாராதிகளாலே வரும் க்லேஶம்போலன்றிறே, பகவதங்கீகாரமுண்டாய்ப் பிரிவாலே வரும் க்லேஶம்.

ஈடு.—நிகமத்தில் - இத்திருவாய்மொழியை அப்யஸித்தவர்கள், பகவத் விஶ்லேஷத்தால் க்லேஶப்படாதே, நித்யஸூரிகளோடேகூடி நித்யாநுபவம் பண்ணப் பெறுவரென்கிறார்.

[கட்கரிய இத்யாதி] - மநுஷ்யருடைய கண்ணுக்கு அவிஷயமாம்படி யிருக்கிற ப்ரஹ்மாதிகளுக்கும் கண்ணுக்கு அவிஷயமாம்படி யிருக்கிற க்ருஷ்ணனை. ப்ரஹ்மாதிகள் கண்ணுக்கு அவிஷயமாம்படி யிருக்கிற க்ருஷ்ணன் மறக்கவொண்ணாதபடி உருவுவெளிப்பாடாய்த் தோன்ற, அத்தாலே நலிவுபட்டு, போனபோனவிடமெங்கும் சூழ்ந்துகொண்டது என்னும்படியாயிற்று இவர்க்கு ப்ரகாஶித்தபடி. அவர்கள்கண்ணுக்கு அரியனானாற்போலே யாயிற்று, இவர்க்கண்ணுக்கு "சூழவுந்தாமரை நாண்மலர்போல் வந்துதோன்றும்" என்னும்படி ப்ரகாஶித்தபடி. [குருகூர்ச்சடகோபன்சொன்ன] - ஆழ்வார் அருளிச்செய்த. [உட்குடையாயிரத்துள் இத்யாதி] - ப்ரதிபாத்யார்த்தத்தை உள்ளபடி ப்ரதிபாதிக்கவல்ல ஶக்தியையுடைத்தான ஆயிரத்திலும் வைத்துக்கொண்டு, இப்பத்தையும் அப்யஸிக்கவல்லார்கள், நித்யாநுபவம் பண்ணாநின்றாலும் மேன்மேலென பகவத்குணங்களைப் பூர்ணமாக அநுபவிக்கைக்கீடான யோக்யதையுடைய நித்யஸூரிகளோடு ஒருகோவையாய். [என்றும் மாயாரே] - மாய்கையும் உருவுவெளிப்பாடும் பர்யாய மென்றிருக்கிறார்காணும். மாயார் - பிரியார். * அடியார்கள் குழாங்களை - உடன்கூடி நித்யாநுபவம் பண்ணப்பெறுவர்கள். பகவதபசார பாகவதாபசாரங்க ளுண்டானால் வருமதுபோலன்றே, பகவதங்கீகாரமுண்

நிகமம் - கட்கரியஇத்யாதி. "இவையுமொருபத்தும்வல்லார்" இத்யாதி மேலெல்லாம் கடாக்ஷித்து அவதாரிகை - இத்திருவாய்மொழியை இத்யாதி.

பலிதம் - ப்ரஹ்மாதிகள் இத்யாதி. விவரணம் - அவர்கள்கண்ணுக்கு இத்யாதி. ஆயிரத்துக்கு மிடுக்கின்னது, நித்யஸூரிகளுக்கு மிடுக்கின்னதென்று விபஜித்து அருளிச்செய்கிறார் - ப்ரதிபாத்யார்த்தத்தை இத்யாதி. வானவர்க்கு உட்காவது - போக்த்ருத்வஶக்தி. "மாயார்" என்றது - பிரிந்து உருவுவெளிப்பாட்டாலே து:கப்படா ரென்றபடி. பிரியாரென்று - அர்த்தாந்தரமாதல். பின்னை எது செய்வாரென்ன - அடியார்கள் இத்யாதி. பகவதபசாராதிகளன்றோ சேதநஸ்வரூபநாஶகத்வேந து:காவஹங்கள், உருவுவெளிப்பாடு து:கரூபமோ? என்ன - பகவதபசாரஇத்யாதி. பகவதங்கீகாரம் - பகவதநுபவம். உருவுவெளிப்பாடு து:கரூபமாகைக்கு ஹேது

டாய் அது நிலைநில்லாமையால் படும் க்லேஶம். ப்ரளயங்கோத்தாற்போலே கண்ணைக் கண் கோத்திறே கிடக்கிறது. [சூழவும்.] - இதெல்லாம் அவன் கழுத்துக்குமேலே படுத்தின க்லேஶமிறே. (கக)

ஏதென்ன - ப்ரளயம் இத்யாதி. கண்ணைக் கண்கோத்துக் கிடக்கையாவது - தம்முடைய கண்ணை அவன்கண் கோத்துக்கிடக்கிறதென்றபடி. ரஸோக்தி - இதெல்லாம் இத்யாதி. அதாவது முகாவயவங்கள் இப்படிப்படுத்துகிறது கண்டால் எல்லாங்கூடினால் என்படுத்துமோ? என்றபடி. கழுத்துக்குமேலே என்றது - திருமுகத்திலழகாகையாலே; ஸகலஸ்கம் அன்றென்று ரஸோக்தி.()

த்ரவிடோபநிஷத்ஸங்கதி.—[illegible] ॥

த்ரவிடோபநிஷத்தாத்பர்யரத்நாவளி.—[illegible] ॥

திருவாய்மொழி நூற்றந்தாதி.

ஏழையர்கள்நெஞ்சை யிளகுவிக்குமாலழகு
சூழவந்துதோன்றித் துயர்விளைக்க— ஆழுமனம்
தன்னுடனே அவ்வழகைத்தானுரைத்தமாறன்பால்
மன்னுமவர்தீவினைபோம்மாய்ந்து.

ஆழ்வார் திருவடிகளே ஶரணம், எம்பெருமானார் திருவடிகளே ஶரணம், ஜீயர்திருவடிகளே ஶரணம்.

எட்டாந் திருவாய்மொழி—மாயா - ப்ரவேஶங்கள்.

ஆ.—கீழ்உருவுவெளிப்பாடென்றறிந்து நோவுபடச்செய்தே தன்னைக்
காட்டி ஆர்த்திதீராதொழிகிறபடியையும், அங்ஙனேயிருக்க முடியாதபடி தம்மை நடத்து
கிறபடியையுங்கண்டு“இவ்வாஶ்சர்யம் இருந்தபடியென்?” என்று எம்பெருமானுக்குஅறி
விக்க, அவனும் “ இவ்வளவோ என்படி!”என்று தன்னுடைய விசித்ர விபூதித்வத்தைக்
காட்டியருளக் கண்டு, “இது இருந்தபடியென்?” என்று விஸ்மிதராகிறார்.

ஒ.—எட்டாந்திருவாய்மொழியில், எம்பெருமானுடைய தோற்றரவு உருவு
வெளிப்பாடென்றறிந்து, அவனோடே பரிமாறுகைக்குத் தாம் பண்ணின உத்யோகத்
தைத்தவிர்ந்து, அவனாலல்லது செல்லாதபடியிருக்கிற தம்மைத் தன்னோடுவிஶ்லேஷிக்
கச்செய்தே தன்னைக்காட்டி ஆர்த்திதீராதொழிகிறபடியையும், அங்ஙனே யிருக்கச்செய்
தேயும் முடியாதபடி தம்மை நடத்துகிறபடியையுங்கண்டு, “இவ்வாஶ்சர்யம் இருந்தபடி
யென்?” என்று எம்பெருமானுக்கறிவிக்க, அவனும் “இவ்வளவோ என்படி!”என்று தன்
னுடைய விசித்ரவிபூதித்வத்தைக் காட்டியருளக்கண்டு, “இது இருந்தபடியென்? ஊர்
ஜ்ஜேயமாயிருந்தது!”என்று யமுனைக்கரையில் அவனுடைய ஆஶ்சர்யாநுஸந்தாநத்தைப்
பண்ணின அக்ரூரனைப்போலே தாம் விஸ்மிதராகிறார்.

ப.—எட்டாந்திருவாய்மொழியில், கீழ் - உருவு வெளிப்பாடான ப்ரகாசம்
நடக்கச்செய்தே அநுபவம் பெறாதபடி நிரோதித்து ஆர்த்தியை யதிஶயிப்பித்த வைசித்
ர்யங் கண்டவர், இந்த விசித்ரசக்தியோகத்துக்கு ஹேதுவானவனுடைய ஆஶ்சர்யமா
யுள்ள அர்த்தித்வ ரூபத்தையும், அஹிமதஸித்தியால்வந்த ஆதிக்யத்தையும், அம்மேன்மை
யிடக்கச்செய்தே உண்டான ஆஶ்ரிதஸவ்யதையையும், உத்துங்கஸவ்யதைகளிரண்டுக்கும்
ஸூசகமான புண்டரீகாக்ஷத்வத்தையும், அநந்ய ப்ரயோஜநர்க்கு அதிஶயித போக்ய
னாம்படியையும், சித்தப்ராமகமான சேஷ்டிதாதிகளையும், கர்மாத்யநுரூபமான துஶ்ஜ்ஞாந
கத்வத்தையும், அதிஶயிதஜ்ஞாநர்க்கும் அபோயநார்ஹதையையும், துரவபோயத்வ
ஹேதுவான ஸௌக்ஷ்ம்யாதிஶயத்தையும், ஸூத்ரூட ப்ரமாணஸித்தமான ஸூக்ஷ்ம
சிதசித்ப்ரகாரத்வத்தையும் அநுஸந்தித்து, ஏவம்ப்ரகாரவிசிஷ்டனான நீ, ஒன்றுக்
கொன்று ஒவ்வாத விசித்ராகாரமான ஜகத்தை விபூதியாகக்கொண்டு நிற்கிற ஆஶ்சர்ய
ஶக்தியோகம் இருந்தபடியென்? என்று புத்தி ஸந்நிஹிதனான ஈஶ்வரனுக்கு விண்
ணப்பஞ்செய்து, தம்முடைய விரோதிநிவ்ருத்தியில் பணியில்லாமை நினைத்து ஸந்
துஷ்டராகிறார்.

இ.—எட்டாந்திருவாய்மொழியில், கீழில் - அவனுடைய தோற்றரவை
உருவுவெளிப்பாடென்றறிந்து, அவனோடே பரிமாறுகைக்குத் தாம் பண்ணின உத்யோ
கத்தைத்தவிர்ந்து, தமக்கு அவனாலல்லது செல்லாதபடியையும், அவனுக்குத் தம்மார்த்தி
தீர்க்க ஶக்தி யுண்டாயிருக்கச்செய்தேயும் தம்மபேக்ஷிதம் செய்யாமைக்கு அடி தம்மை
இங்கேவைத்துத் தான்நினைத்தகாரியம் தலைக்கட்டுவானாக நினைத்ததென்றும் அறியாதே,
“எனக்குஇத்தோடு பொருந்தாமையுண்டாய் உன்னையொழியச்செல்லாமையுண்டாயிருக்க,
முடியும் விரகின்றியிலே உன்னைப்பெற்றுத் தரிக்கவும்பெறாதே இங்கேவைத்த ஆஶ்சர்ய
மிருந்தபடியென்!” என்ன, அவனும், ஒன்றைக்கேட்க ஒன்றைப் பரிஹரிப்பாரைப்

போலே, "இவ்வளவோஎன்படி!" என்று தன் விசித்ரவிஹிதத்வத்தைக் காட்டியரு ளக்கண்டு, "இதுவிஸ்மயமாயிருந்ததி! இது இருந்தபடி என்!" என்று, யமுனைக்கரையிலே "ஜக³தே³தந்மஹாஶ்சர்யம் ரூபம் யஸ்ய மஹாத்மந: । தேநாஶ்சர்யவரேணாஹம் ஸஹ தா க்ருஷ்ண ஸங்க³த:॥" என்று அக்ரூரன் ஆஶ்சர்யப் பட்டாற்போலே, இவரும்அவனுடைய விசித்ரஜக³தா³காரதையை அநுஸந்தித்து விஸ்மிதராகிறார்.

ஈடு.—கீழிற்றிருவாய்மொழி - உருவுவெளிப்பாடாய்ச் சென்றது. கைக்குளட் டாமையாலே உருவுவெளிப்பாடென்று அறிவரிறே. இனி, ஸர்வேஶ்வரன் தான்நினைத்த காரியஞ் செய்து தலைக்கட்டிக்கொள்ளுமளவும் நம்மை யிங்கேவைக்கிறானென்னுமிட மும் அறிவரிறே; ஆகிலும், அவனையொழிய தரிக்கமாட்டாதவராகையாலே இத்தை நினைத்து ஆறியிருக்கவும் மாட்டாரே. "விரோதியைப் போக்கித்தரவேணும்"என்று இவர் அர்த்தித்தாலும் அவனும் இவரைக்கொண்டு தான் நினைத்த ப்ரவ்ருத்தங்கள் தலைக்கட்டிக் கொள்ளுமளவும் இவர்அபேக்ஷிதம் செய்யானே. இவரபேக்ஷிதம் செய்யாதிருக்கச்செய் தேயும், இவரை இங்கேவைத்து ஜீவிப்பிக்கும் உபாயங்களும் அறிந்திருக்குமே. ஆகை யாலே, சில பதார்த்தங்களை உயிர்போகாதபடி ஒன்றிலே கோத்திட்டு வைக்குமா போலே, முடியவுமொட்டாதே ஜீவிக்கவுமொட்டாதே நடுவேயிருத்தி நலிகிறபடியை யநுஸந்தித்து, "எனக்குஇதில் பொருந்தாமை யுண்டாயிருக்கச்செய்தேயும் இஸ்ஸம்ஸா ரத்திலே வைத்து என்னை நடத்திக்கொடு போருகிற இவ்வாஶ்சர்யத்தை எனக்குஅருளிச் செய்யவேணும்" என்ன; ஒன்றைக்கேட்க வேறேசிலவற்றைச் சொல்லுவாரைப் போலே, "இதோன்றுங்கண்டோ நீர் ஆஶ்சர்யப்படுகிறது? இவ்வளவல்லாத நம்முடைய விசித்ர ஜக³தாகாரதையைப் பாரீர்!" என்று தன்னுடைய ஆஶ்சர்ய ஜகதாகாரதையைக் காட்டிக்கொடுக்க- அதுதானும் தான் நினைத்ததன்றேயாகிலும் அவன் காட்டிக்கொடுத்த தாகையாலே அதுவும் இவர்க்கு ப்ரீதிஹேதுவாயிருக்குமிறே. ஆக, இவர் ஒன்றைக் கேட்க அவன் அநேகாஶ்சர்யங்களைக்காட்டிப் பரிஹரித்தான். அக்ரூரன், யமுனையிலே புக்கு முழுகினவாறே பிள்ளைகளை நீருக்குள்ளே கண்டு அஞ்சாக் கரையிலே பார்த்தான்: அங்கேயுங்கண்டான்; கண்டு, "ஜக³தே³தந்மஹாஶ்சர்யம் ரூபம் யஸ்ய மஹாத்மந:।

ப்ர.—மாயாவாமனன் ப்ரவேஶ வர்ணநே [கக] க்ருஷ்ணம் ப்ரதி அக்ரூர:, "ஸர்வஜந்மநாஶ்சர்யம் த்ருஷ்டம் தத்³யோகவ்ருத்த்யா । தத்த்ராவிர்வஶ்யாஶ்சர்யேஷு ஸர்வதஸ்த்வம்॥ ஜக³தே³தந்மஹாஶ்சர்யம் ரூபம் யஸ்ய மஹாத்மந: । தேநாஶ்சர்யவரேணாஹம் ஸஹ தா க்ருஷ்ண ஸங்க³த:॥"

மாயாவாமனன்ப்ரவேஶே; வ்ருத்தாநுவாதம் - கீழில்இத்யாதி. உருவுவெளிப்பாடென்றறி யும்படியென்? என்ன - கைக்குஇத்யாதி. அவன் தம்மைவைத்த காரியம் அறிந்திருக்க, த்வரிப் பானென்? என்ன - இனி ஸர்வேஶ்வரன் இத்யாதி. "இனியாமுறுமை" என்றபோதே விரோதி யைப்போக்காதிருப்பானென்? என்ன - விரோதியைஇத்யாதி. இவ்வாக்யாநந்தரம், 'இனிஸர் வேஶ்வரன்' இத்யாதி வாக்யம் அநுஸந்தேயம். அபேக்ஷிதஞ்செய்யாவிட்டால் முடியாரோ? என்ன- இவர்அபேக்ஷிதம் இத்யாதி. உக்தார்த்தநிகமந பூர்வகமாக, ஆஶ்சர்யமிருந்தபடியென்? என்றுகேட் கும் ப்ரகாரத்தை யருளிச்செய்கிறார் - ஆகையாலேஇத்யாதி. சிலபதார்த்தங்களை யென்றது - மத்ஸ்யாதிகளை. 'ஆகையாலே' என்றுதொடங்கி, 'அருளிச்செய்யவேணும்'என்னுமளவும் "பாசங் கள்நீக்கி" என்கிறபாட்டைக்கடாக்ஷித்து. இவர்க்கு அநபேக்ஷிதத்தைக் காட்டினால்இஷ்டமாமோ? என்கி, ஜகதாகாரதை ஆஶ்சர்யமென்னுமதுக்கு உதாஹரணம் -

தேநாஸ்சர்யவரேணாஹம் பவதாக்ருஷ்ணஸங்கத:" (ஜகதேதந்மஹாஸ்சர்யம் ரூபம்யஸ்யமஹாத்மந: | தேநாஸ்சர்யவரேணாஹம் பவதாக்ருஷ்ணஸங்கத:) என்று கொண்டு அவன் ஆஸ்சர்யப்பட்டாற்போலே,—இவரும் அவனுடைய விசித்ர ஜகதாகாரதையை யநுஸந்தித்து விஸ்மிதராகிறார்.

முதல் பாட்டு.

மாயா!வாமனனே!மதுசூதா!நீயருளாய்
தீயாய்நீராய்நிலனாய் விசும்பாய்க்காலாய்
தாயாய்த்தந்தையாய்மக்களாய் மற்றுமாய்முற்றுமாய்
நீயாய்நீநின்றவாறு இவையென்னநியாயங்களே!

ஆ — (மாயாவாமனனே) —அத்யாஸ்சர்யபூதனும் ஆஸ்ரிதவிரோதி நிரஸந ஶீலனுமான நீ என்னைத் தெளிவிக்கவேண்டும். லோகத்தில், வஹ்நிஜல பூம்யாகாஶ வாயுக்களையும் தாயையும் தந்தையையும் மக்களையும் மற்றெல்லாரையும் விபூதியாகவுடையையாய், இவற்றோடு பிரிய அஸாதாரணாகாரத்தையு முடையையாய்க் கொண்டு நீ நின்றபடியென்? என்று விஸ்மிதராய் எம்பெருமானைக் கேட்கிறார்.

ஒ —முதற்பாட்டில், விசித்ரமான கார்யங்களையும் காரணங்களையும் எல்லாம் விபூதியாகவுடையனா யிருக்கிறபடியை யநுஸந்தித்து, இவை என்னபடிகளென்று விஸ்மிதராய் எம்பெருமானைக் கேட்கிறார்.

[மாயா] - இத்திருவாய்மொழிக்கு நிதாநமான ஆஸ்சர்யங்களை உடையனாயிருக்கிற இருப்பை ஸங்க்ரஹேண சொல்லுகிறது. [வாமனனே] - ஆஸ்சர்யங்களுக்கு உதாஹரணம். [மதுசூதா] - மதுவாகிற அஸுரனைப் போக்கினாற்போலே என்னுடைய து:க்கத்தைப் போக்கினவனே. [அருளாய்] - என்னைத் தெளிவிக்கவேணும். [தாயாய்த் தந்தையாய் மக்களாய் மற்றுமாய் முற்றுமாய்] - லோகத்தில் தாயுந்தந்தையுமா யிருக்கிறாரையும் மக்களாயிருக்கிறாரையும் மற்றுமுள்ளாரெல்லாரையும் விபூதியாகவுடையையாய். [நீயாய் நீ நின்றவாறு] - இவற்றோடு பிரியஅஸாதாரணாகாரத்தை யுடையையாய்க் கொண்டு நின்றபடி.

ப.—முதற்பாட்டில், காரணரூபமாயும் கார்யரூபமாயும் இருக்கிற ஸகல பதார்த்தங்களையும் விபூதியாக வுடையையாயிருக்கிற ப்ரகாரம் என்னாயிருக்கிறது? இத்தை ஆஸ்சர்ய ரூபனான நீ அருளிச்செய்யவேணும் என்கிறார்.

மாயா - ஸ்வாபாவிகமான ஆஸ்சர்யசக்தியை யுடையையாய், வாமனனே - (அதுக்கநுரூபமாக மஹாமேருவை மஞ்சாடியாகச் சுருக்கினாற்போலே வடிவைச்சிறுக விட்டுஇரந்த) வாமநனாய், மதுசூதா - (உன்னுடைய சக்திவைசித்ர்யத்தில் ஸந்தேஹித்தாருடைய ஸம்ஶயத்தை மதுவைநிரஸித்தாற்போலே) நிரஸித்துக்கொடுக்குமவனே! நீ - நீயே, அருளாய் - உன் ப்ரகாரத்தை யருளிச்செய்யவேணும்; தீ நீர் நிலன் விசும்பு

இத்யாதி. "ஜகதேதந்மஹாஸ்சர்யம்" இதிபஞ்சமேம்ஶே. * புகழுநல்லொருவனிலே - ஸம்ஶயம், * நல்குரவிலே - விருத்த விபூதிகத்வம், இதில் - ஆஸ்சர்யஜகதாகாரதை என்று பேதம்.

கால் - அண்டகாரணமான பூதபஞ்சகமும், தாய்தந்தைமக்கள் மற்றும் (அண்டாந்தர் வர்த்திகளில் ஒருவர்செய்தது ஒருவர்செய்யாதபடியான) மாதா பித்ரு புத்ர ப்ரப்ருதிகளும், முற்றும்- தத்ஸம்பந்திகளாயுள்ள ஸமஸ்த பதார்த்தங்களும், ஆய் - நீயிட்டவழக்காம்படி தத்தத்ப்ரகார விசிஷ்டனாய், (அவ்வளவே யன்றியே), நீயாய் - அஸாதாரணாகாரயுக்தனாய், நீ-, நின்ற - நிற்கிற, இவை ஆறு - இப்ப்ரகாரம், என்ன - என்ன, நியாயங்கள் — உபபத்தியுக்தங்களா யிருக்கின்றன ? காரணரூப வஸ்துக்களாயிருக்கிறவை தானே கார்யரூபமாகையாலே ஸர்வாத்மகனான தான் தத்கததோஷஸ்பர்ஶமில்லாதபடி வ்யாவ்ருத்தனா யிருக்கையும் ஒருவர்க்கு அறியவொண்ணாதபடியாலே இந்த வேதாந்த ரஹஸ்யோபபத்திகளை நீயே அருளிச்செய்யவேணு மென்றாராயிற்று.

இ.—முதற்பாட்டில், விசித்ரமான கார்யங்களையும் காரணங்களையும் விபூதியாகவுடையனாயிருக்கிற இருப்பை அநுஸந்தித்து, இவை என்னபடிகளென்று அவனைக் கேட்கிறார்.

[மாயா வென்கிறது] - இத்திருவாய்மொழிக்கு நிதாநமான ஆஶ்சர்யங்களை யுடையனா யிருக்கிற இருப்பை அநுஸந்தித்து ஸங்க்ரஹேண சொல்லுகிறது. [வாமனனே] - ஆஶ்சர்யங்களுக்கெல்லாம் உதாஹரணம் அன்றேபிறந்து அன்றேவளர்ந்து அன்றே அர்த்தியாய் மஹாபலியஜ்ஞவாடத்திலே சென்று சொல்விற்றெல்லாம் அவன் செய்யும்படி வார்த்தைசொன்ன ஆஶ்சர்யங்களை நினைத்து - வாமனனேயென்கிறார். [மதுசூதா நீயருளாய்] - ஆஶ்சர்யங்களுக்கு ஸ்ரீவாமன ப்ராதுர்ப்பாவம்போலே யாயிற்று. விரோதிநிரஸநத்துக்கு மதுஸூதநத்வம். மதுவாகிற அஸுரனை நிரஸித்தாற்போலே என் ஸம்ஶயத்தை யறுத்துத் தந்தருளவேணு மென்கிறார். "த்வதந்ய: ஸம்ஶயஸ்யாஸ்ய சேத்தா நஹ்யுபபத்யதே". உமக்கு ஸம்ஶயந்தானேது? என்னில்? [தீயாயித்யாதி] - கார்யத்திலுண்டானவைசித்ர்யம் காரணத்திலே யுண்டாயிருக்குமிறே. அண்டகாரணமாய் ஒன்றோடொன்று சேர்த்தி யின்றிக்கே யிருக்கிற பஞ்சபூதங்களுக்கு நிர்வாஹகனானவனே! [தாயாயித்யாதி] - கார்யங்களில் வந்தால், மாதா உபகரித்த உபகாரமன்றிறே தமப்பன் உபகரிப்பது? அவன் உபகரிக்குமதன்றிறே ப்ரஜைகள் உபகரிப்பது? அவர்களுபகரிக்குமதன்றிறே மற்றை பந்துக்களுபகரிப்பது? [முற்றுமாய்] - அநுக்தமாய் ஸ்வஸம்பந்தியாயுள்ள சேதநாசேதநங்களுக்கு நிர்வாஹகனானவனே! [நீயாய்நீ நின்றவாறு] - ஜகதாகாரனாயிருக்குமதொழிய, அஸாதாரண விக்ரஹயுக்தனாய்க்கொண்டு நீ நின்றபடி. ஜகதாகாரனாய் ரக்ஷிக்குமளவன்றிறே அஸாதாரண விக்ரஹயுக்தனாய்க்கொண்டு ரக்ஷிக்கும்படி. [இவையென்ன நியாயங்களே] - இவையென்னபடிகள்! முதல் திருவாய்மொழி தொடக்கமாகப் பலவிடத்திலும் - இவனுடைய ஐஶ்வர்யத்தை அநுஸந்தித்து, அது தன்னையே இதுக்கு முன்பு கண்டறியாதாரைப்போலே அநுபவியா நின்றார்; குணாநுபவத்தில் வந்தால், க்ஷணந்தோறும் ஒன்றையே புதியராயநுபவிக்கிறாப்போலே யாயிற்று, விபூத்யநுபவமும்.

ஈடு.—முதற்பாட்டு. விசித்ரமான கார்யகாரணங்களையெல்லாம் விபூதியாகவுடையனாயிருக்கிற இருப்பையநுஸந்தித்து, இவை யென்னபடிகள் ? என்றுஆஶ்சர்யப்படுகிறார்.

முதற்பாட்டு - மாயாஇத்யாதி. "தீயாய் ப்"என்று தொடங்கி, "இவையென்ன நியாயங்கள்" என்னுமளவும் கடாக்ஷித்து அவதாரிகை - த்ரமான் இத்யாதி.

[மாயா] - மாயாவேன்கிற - இது, இத்திருவாய்மோழிக்காக ஸங்க்ரஹமாயிருக்கிறது. [வாமனனே] - மாயாவேன்கிற பதத்திற் சோல்லுகிற ஆஃசர்யத்துக்கு வ்யாப்தி க்ரஹணபூமியாயிருக்கிறது. அன்றேபிறந்து அன்றே வளர்ந்து மஹாபலி பக்கலிலே சேன்று அவன்முன்னே நின்று, தான் சோன்னவையேல்லாம் சேய்யவேண்டும் படி வார்த்தையருளிச்சேய்து, சிற்றடியைக்காட்டிப் பேரியவடியாலே யளந்துகோண்டு, இப்படி பண்ணின வ்யாபாரங்களையுடைய முன்னேட்டுக்கோண்ட வாமனனே! என்கிறுர். [மதுசூதா] - ஆஃசர்யசேஷ்டிதங்களுக்கேல்லாம் ஸ்ரீவாமநனைப்போலேயாயிற்று, விரோதிநிரஸநத்துக்கு மதுசூதநனேன்கிறது. [மதுசூதாநீயருளாய்] - மதுவாகிற அஸுரனை நிரஸித்தாற்போலே, எனக்கு ஓடுகிற ஸம்ஶயத்தையும் நீயே போக்கித்தந்தருளவேணும். [தீயாயித்யாதி] - கார்யகதமானவைசித்ரி, காரணத்திலேயும் உண்டாயிருக்குமிறே. இனித்தான் ஒன்றின்படியாயிராதிறே மற்றையது. இப்படி விலக்ஷணமான ப்ரகாரங்களை யுடையவான பூதபஞ்சகங்களுக்கும் நிர்வாஹகனுய். [தாயாயித்யாதி]- கார்யவர்க்கத்திலும் தாய்சேய்தது தமப்பன் சேய்யமாட்டான்; தமப்பன் பண்ணும் உபகாரம் புத்ரர்கள் பண்ணமாட்டார்கள்; புத்ரர்கள் பண்ணும் உபகாரம் பந்துக்கள் பண்ணமாட்டார்கள்; இப்படி ஸர்வவித பந்துக்களுமாய்.- [முற்றுமாய்]-அநுக்தமான ஸம்பந்திகளாயுள்ள ஸகலசேதநா சேதநங்களுக்கும் நிர்வாஹகனுனவனே! [நீயாய்] - ஜகதாகாரனுயிருக்குமளவல்லவிறே அஸாதாரணவிக்ரஹயுக்தனுயிருக்கும் இருப்பு. இவர்க்குப் பரமபதத்திலே ஸூரிபோக்யனுயிருக்கிறவிருப்போடு, ஜகதாகாரனுய் நிற்கிற நிலேயோடு வாசியற போக்யமாம்படியிறே இவர்க்குப்பிறந்த ஜ்ஞாநவைஶத்யம். [நீநின்றவாறு] - இப்படி இவையேல்லாமாய்க் கோண்டு நீ நின்ற ப்ரகாரம். [இவையேன்னநியாயங்களே] - இவையேன்ன படிகள்தான்! முதற்றிருவாய்மோழியிலே-இவனுடைய ஐஶ்வர்யத்தை யநுபவித்திருக்கச்சேய்தேயும், இதுக்குமுன்பு கண்டறியாதாப்போலே புதியராய் அநுபவிக்கிறுராயிற்று. குணநுபவத்தில் க்ஷணந்தோறும் புதுமை பிறந்து * அப்போழுதைக்கப்போழுது என்னுராவமுதமாய் அநுபவிக்குமாபோலேயாயிற்று, விபூத்யநுபவத்திலும் புதியராய் அநுபவிக்கவல்லபடி. [இவையேன்னநியாயங்கள் - நீ யருளாய்] - இத்தையருளிச்சேய்யவேணும். "த்வத்ஸம்ஶயஸ்ய

மாயா - ஆஃசர்யபூதனே! வ்யாப்திக்ரஹணபூமியாவது - ஆஃசர்யமுண்டேன்கிறத்தையறிகிற ஸ்தாநம். வாமநனிடத்திலாஃசர்யம் ஏதேன்ன - அன்றேஇத்யாதி. முன்னேட்டுக்கோண்டு-மேலேயேண்ணிக்கோண்டு. விரோதிநிரஸந கதநத்துக்கு ஹேதுவம் - மதுவாகிற இத்யாதி. ஏகாகாரமான காரணத்திலே வைசித்ரியேதேன்ன - கார்யகதமான் இத்யாதி. அதாவது - கார்யம் விசித்ரமானபோதே காரணமும் ததநுகுணமாகவேணுமேன்று அநுமாநாத்ஸித்தமேன்றபடி. ஹேத்வந்தாம் - இனித்தான் இத்யாதி. அதாவது : காரணங்கள் பரஸ்பர விசித்ரங்களேன்றபடி. காரியவர்கத்திலும் வைசித்ரி யருளிச்சேய்கிறுர் - கார்யவர்க்கத்திலும் இத்யாதி. ஒருவனே ஸர்வவிதபந்துவுமாகிறதும் ஆஃசர்யமேன்றபடி. "முற்றுமாய்" என்றதுக்கர்த்தம் - அநுக்தமானஇத்யாதி. "நீயாய்" என்றதுக்கு - 'அஸாதாரணவிக்ரஹயுக்தனுய்' என்ற ஶப்தார்த்தம் விவக்ஷித்து, இதிலேயாஃசர்யமேதேன்ன - ஜகதாகாரனுய்இத்யாதி. * அழுக்குப்பதித்தவுடம்பையும், "நீயாய்" என்று பரஞ்சுடருடம்பையும் ஒக்கவருளிச் சேய்வானேன்? என்ன - இவர்க்குஇத்யாதி. நியாயம் - ப்ரகாரம். கீழேயும் விபூதியோகத்தை யநுபவித்திருக்க, இப்போதும் பூர்வம்போலே யாஃசர்யப்படுவானேன்? என்ன - முதற்றிருவாய்மோழியிலே இத்யாதி. இதுக்கு த்ருஷ்டாந்தம் - குணநுபவத்தில் இத்யாதி. உமக்கு ஸந்திக்தமான அர்த்தங்கள்என்னுல் தீர்க்கப்போமோ? என்ன - த்வதந்யஇத்யாதி.

வ்ருதா நஹ்யுபபத்யதே" (த்வதந்யஸ்ஸம்ஶயஸ்யாஸ்யச்சேத்தாநஹ்யுபபத்யதே) என்று அர்ஜுநன் ஸம்ஶயம் தீர்த்தாற்போலே, என்னுடைய ஸம்ஶயத்தையும் தீர்த்தருளவேணும். (க)

)ரண்டாம் பாட்டு.

அங்கண்மலர்த்தண்டுழாய்முடி அச்சுதனே ! அருளாய்
திங்களும்ஞாயிறுமாய்ச் செழும்பல்சுடராயிருளாய்
பொங்குபொழிமழையாய்ப் புகழாய்ப்பழியாய்ப்பின்னும் நீ
வெங்கண்வெங்†கூற்றமுமாம் இவையென்னவிசித்திரமே !

ஆ.—(அங்கண்மலர்.) - அழகிய மதுவோடுகூடின பூவையுடைய திருத்துழாயைத் திருமுடியிலே யுடையையாய், இவ்வழகுக்கு ஒருநாளும் ஒருச்யுதியில்லாதவனே ! திங்களும் ஞாயிறுமாய், அழகியதாய்ப் பலவகைப்பட்ட நக்ஷத்ரங்களுமாய், தமஸ்ஸுமாய், பொங்குபொழிமழையாய், புகழாய், பழியாய், பின்னும் நீ வெவ்விய கண்ணையுடைய வெவ்விய ம்ருத்யுவுமானபடிகள் என்ன வைசித்ரிதான் என்கிறார்.

ஒ.—இரண்டாம்பாட்டில், சந்த்ரஸூர்யாதி பதார்த்தங்களையுடையத் தனக்கு விபூதியாகவுடையனாயிருக்கிறபடியை அருளிச்செய்கிறார்.

[அங்கண்மலர்த்தண்டுழாய் முடியச்சுதனேயருளாய்] - அழகிய மதுவோடே கூடின பூவையுடைய திருத்துழாயைத் திருமுடியிலே யுடையையாய் இப்படிப்பட்டஅழகுக்கு ஒருநாளும் ஒருச்யுதியில்லாதவனே! இத்தால் - திருக்குழலில் வளையம்போலே விபூதியோகம் ஆகர்ஷகமென்று கருத்து. [செழும்பல்சுடர்] - நக்ஷத்ராதிகள்.

ப.—அநந்தரம், அபிமதஸித்திபால்வந்த பூர்த்தியாலே அச்யுச்ரிதனையுள்ளநீ, சந்த்ரசூர்யப்ரமுக ஸகலபதார்த்தங்களையும் விபூதியாக வுடையையான வைசித்ர்யத்தை யருளிச்செய்யவேணுமென்கிறார்.

அம் - விலக்ஷணமான, கள் - மதுவையுடைய, மலர் - பூவையுடைத்தாய், தண் - ஶ்ரமஹரமான, துழாய் - திருத்துழாயாலே யலங்க்ருதமான, முடி - மயிர்முடியையுடையையாய், அச்சுதனே- (அர்த்திதவஸ்து கைப்புகுந்தவாறே ஶோஷித்வபூர்த்தியாலே) அப்ரச்யுதஸ்வபாவனானவனே ! அருளாய் - நீயருளிச்செய்யவேணும் ; (சீததாபகரரான), திங்களும் - சந்த்ரனும், ஞாயிறுமாய் - சூர்யனுமாயும், செழும் - விலக்ஷணமாய், பல் - பலவாயுள்ள, சுடராய் - தாராக்ரஹநக்ஷத்ரங்களான தேஜ:பதார்த்தங்களாயும், இருளாய் - (ப்ராணிகளுக்கு பதார்த்ததர்ஶநம்பண்ணவொண்ணாத) இருளாய், பொங்கு - (அந்தப்ராணிகளுடைய அபிவ்ருத்திஹேதுவாய்க்கொண்டு) உச்ச்ரிதமாய், பொழி - சொரியும், மழையாய்-, புகழாய் - (அத்தாலுண்டான ஸஸ்யாதிபதார்த்தஸம்பத்தியாலே ஸம்பாத்யமான) புகழாய், பழியாய் - (அவற்றினுடைய பாத்ரவ்யயாதி வ்யதி

"ஏதம்மே ஸம்ஶயம் க்ருஷ்ண சேத்துமர்ஹஸ்யஶேஷத: । த்வதந்ய: ஸம்ஶயஸ்யாஸ்ய சேத்தா நஹ்யுபபத்யதே" இதிகீதாஸு ஷஷ்டே.(நக)'மாயாவாமநனே,மதுசூதா! - நீயாய்' என்று தொடங்கி, 'இவை யென்ன நியாயங்கள் - நீயருளாய்' இத்யந்வய: (க)

---

† கூற்றமுமாய் என்று பாடம் ஓதுவர்.

ரேகத்தால்வரும்) பழியாய், (அப்பழிமிகைத்தகாலத்து), பின்னும் - பின்னையும், வெங்கண்-(அவர்களை யுபஸம்ஹரிக்கைக்கடியாய்) க்ரூரேக்ஷணனாய், வெம் - க்ரூரஸ்வபாவனுமான, கூற்றமுமாம் - ம்ருத்யுவாயும்நிற்கிற, இவை - இந்தப்ரகாரங்கள், என்ன விசித்திரம் - என்ன வைசித்ர்யங்கள் ?

இ.—இரண்டாம்பாட்டில், சந்த்ரஸூர்யாதி பதார்த்தங்களைத் தனக்கு விபூதியாகவுடையனா யிருக்கிறபடியை அருளிச்செய்கிறார்.

[அங்கண்மலரித்யாதி] - அழகிய மதுவோடேகூடின பூவையுடைய திருத்துழாயைத் திருமுடியிலே யுடையையாய், இவ்வழகுக் கொருநாளும் ப்ரச்யுதியில்லாதவனே! இத்தால் - திருக்குழலில் வளையம்போலே விபூதியோகமும் தகுதியாய், ஆகர்ஷகமாயிருக்கிறபடி. [திங்களும்ஞாயிறுமாய்] - சேதநர்க்கு தர்சநீயனுமாய் ஆப்யாயகனுமான சந்த்ரனுக்கும், இவனாலுண்டான நீர்க்களிப்பையறுத்து ப்ரகாசகனுமான ஆதித்யனுக்கும் நிர்வாஹகனானவனே! [செழும்பல்சுடராய்] - சேதநர்க்கு வரக்கடவதான அநர்த்தஹேதுக்களுக்குறுப்பாக ஸஞ்சரிக்கிற நக்ஷத்ரக்ரஹாதிகளுக்கும் நிர்வாஹகனாய். [இருளாய்] - சேதநர்க்கு போகயோக்யமான காலமாய். [பொங்கு பொழிமழையாய்] - நித்யஸ்ருஷ்டிக்குறுப்பாய் ஸ்ருஷ்டமான பதார்த்தங்களுக்கு தாபஹரமுமாய் வ்ருத்திஹேதுவுமாயிருக்கையாலேயுகளித்து வர்ஷிக்கும் வர்ஷமாய், உத்தேச்யமான புகழாய், பரிஹரணீயமான பழியாய். [பின்னும் நீ வெங்கண்வெங்கூற்றமுமாம்] - இவையிப்ரவ்ருத்தமானவாறே குளிரநோக்குகை தவிர்ந்து, க்ரூரேக்ஷணனாய், அந்தகன் "தண்ணீர்" என்னலாம்படி வெவ்வியகூற்றமுமாம். அதிக்ரூரமான அந்தகனை விபூதியாக உடையவனென்றுமாம். [இவையென்ன விசித்திரமே] - இவையென்ன வைசித்ரிதான் !

ஈடு.—இரண்டாம்பாட்டு. சந்த்ர ஸூர்யாதி பதார்த்தங்களடையத் தனக்கு விபூதியாகவுடையனாயிருக்கிறபடியை யருளிச்செய்கிறார்.

[அங்கண்மலரித்யாதி] - அழகிதாய் மதுவோடேகூடின மலரையுடைத்தாய்க் குளிர்ந்திருந்துள்ள திருத்துழாயைத் திருமுடியிலே யுடையையாய், அந்த ஒப்பனையால் வந்த அழகுக்கு ஒருநாளும் ஒருவேறுபாடின்றிக்கே என்றுமொக்க நித்யமாம்படி யிருக்கிறவனே!வைத்தவளையத்தோபாதியும் போக்யமாகிறதாயிற்று விபூத்யநுபவம்இவர்க்கு. "கீழிற்றிருவாய்மொழியில் 'விள்கின்றபூந்தண்மேலாய்விரைநாறவந்து' என்று சொன்னத்தை ஸ்மரிக்கிறார்" என்று பிள்ளான்பணிக்கும். * மாயன்குழல்விள்கின்றபூந்தண்மேலா யுருவு வெளிப்பாடாய் பாஹ்யகமாகைதவிர்ந்து, ஸாக்ஷாத்கரித்து அநுபவிக்கிறாரிறே. [திங்களும் ஞாயிறுமாய்] - "ஸூர்யாம்ஸுஜநிதம் தாபம் நிந்யேதாராபதிஸ் ஸமம்" (ஸூர்யாம்ஸுஜநிதம்தாபம் நிந்யேதாராபதிஸ் ஸமம்) என்கிறபடியே, ஆதித்யகிரணங்களால்

இரண்டாம்பாட்டு - அங்கண் இத்யாதி. "திங்களும்ஞாயிறுமாய்" இத்யாதியைக்கடாக்ஷித்தவதாரிகை - சந்த்ரஸூர்யாதிஇத்யாதி.

"கண்" என்றது - கள்ளென்றபடி. "அச்சுதன்" என்றதுக்கர்த்தம் - அந்தவொப்பனை இத்யாதி. விபூத்யநுபவத்திலே ஒப்பனையழகைச் சொல்லுவானென்? என்ன - வைத்த வளையத்து இத்யாதி. பரிஹாராந்தரம் - கீழில்இத்யாதி. கீழில்திருவாய்மொழியிலே பாஹ்யகமானத்தை யாரகமாக அநுபவிக்கிற இத்திருவாய்மொழியிலே ஸ்மரிக்கக்கூடுமோ ? என்ன - மாயன்குழல் இத்யாதி. சந்த்ரஸூர்யர்களுக்கு வைசித்ரியேதென்ன - ஸூர்யாம்ஸுஜநிதம்இத்யாதி. "ஸூர்யாம்ஸுஜ

பிறந்த தாபமெல்லாம்போம்படி சேதநர்க்கு ஆப்யாயநத்தைப்பண்ணக்கடவனான சந்த்ரனும், அவனுல்வந்த நீர்க்களிப்பை அறுத்துக்கொடுக்கும் ஆதித்யனுமாய். [செழும்பல் சுடராய்] - சேதநர்க்குவரும் லாஹாலாஹங்களையறிகைக்கு ஈடான ஸஞ்சாரத்தையுடைத்தான நக்ஷத்ரங்களுமாய். [இருளாய்] - சேதநர்க்கு ஹோமயோக்யமான இருளாய். [பொங்குபொழிமழையாய்] - ஸகலப்ராணிகளுக்கும் ஜீவிக்கலாம்படி ஸஸ்யங்களையுண்டாக்கும் வர்ஷமுமாய். [புகழாய்] - எல்லாரும் ஆசைப்படும் யஶஸ்ஸாய். [பழியாய்] - எல்லார்க்கும் வருந்திப் பரிஹரிக்கவேண்டும் பழியாய். [பின்னும்] - அதுக்கு மேலே. [வெங்கண்வெங்கூற்றமுமாம்] - "புராபூத்வாம்ருதுர்தாந்தஸ்ஸர்வபூதஹிதேரத꞉ | நக்ரோதவஶமாபந்ந꞉ப்ரக்ருதிம்ஹாதுமர்ஹஸி" (புராபூத்வாம்ருதுர்த்தாந்தஸ்ஸர்வபூதஹிதேரத꞉ | நக்ரோதவஶமாபந்ந꞉ப்ரக்ருதிம்ஹாதுமர்ஹஸி) என்கிறபடியே, இவை யதிப்ரவ்ருத்தமானவாறே குளிரநோக்குமதுதவிர்ந்து, வெவ்விதானநோக்கையுடையையாய். [வெங்கூற்றம்] - அந்தகன் "தண்ணீர்" என்னும்படி வெவ்வியகூற்றமுமாம். ஸம்ஹாரத்தில் ருத்ராத்யந்தர்யாமித்வத்தைச்சொன்னபடி. [இவையென்னவிசித்திரமே] - இவையென்ன வைசித்ரிதான்! அருளாய். (உ)

ப்ர.—[வெங்கண்வெங்கூற்றமுமாம்]—ஆரண்யகாண்டே [கூ௫] "தத்ஸ்ராநம் தயாராமம் வீதாஹரணகர்ஶிதம் | ஶோகாநாமபயேவக்ஷம் ஸாம்வதந்த கிவாநலம் ||௧|| வீக்ஷமாணம்ப்ரநஷ்டாஜ்யாம் நிஶ்வஸந்தம் முஹுர்முஹு꞉ | ஹதம்காமம் வஶம்ப்ராப்தம் ரக்ஷக்ஷகத்ரமயம் ||உ|| ... ஸர்வம் ... ஸலக்ஷ்மண꞉ | ... ||௩|| புராபூத்வாம்ருதுர்தாந்தஸ்ஸர்வபூதஹிதேரத꞉ | நக்ரோதவஶமாபந்ந꞉ ப்ரக்ருதிம் ஹாதுமர்ஹஸி ||௪||"

நிதம் தாவந்நிவ்ருத்தாராவதிஶ்ரம꞉ | ... இதி பஞ்சமேம்ஶே தஶமே ஶரத்காலவர்ணநே பராஶர꞉. (௧௩) "செழும்" என்று - அழகு; நக்ஷத்ரங்களுக்கழகேதென்ன - சேதநர்க்குஇத்யாதி. அந்தகாரத்துக்கு வைசித்ரியேதென்ன - சேதநர்க்குஹோம இத்யாதி. "பொங்குபொழிமழை -" பொங்காநின்றுகொண்டு பொழியும் மழையென்று ஶப்தார்த்தம். வர்ஷத்துக்கு ஆஶ்சர்யமேதென்ன - ஸகல ப்ராணிகளுக்கும் இத்யாதி. கீர்த்திக்காஶ்சர்யமேதென்ன - எல்லாரும் இத்யாதி. பழிக்காஶ்சர்யமேதென்ன - எல்லார்க்கும் இத்யாதி. "வெவ்விதான வீக்ஷணத்தையுடையவன்" என்னுமதுக்கு ப்ரமாணம் - புராபூத்வா இத்யாதி. "புராபூத்வாம்ருதுர்தாந்தஸ்ஸர்வபூதஹிதேரத꞉ | நக்ரோதவஶமாபந்ந꞉ப்ரக்ருதிம்ஹாதுமர்ஹஸி" இத்யாரண்யகாண்டே ராமம்ப்ரதிலக்ஷ்மண꞉. 'அங்கண் மலர்த்தண்டுழாய்முடியச்சுதனே - திங்களும்' என்றுதொடங்கி, விசித்திரமே - அருளாய்இத்யயந்வய꞉

மூன்றாம் பாட்டு.

சித்திரத்தேர்வலவா ! திருச்சக்கரத்தாய் அருளாய்
எத்தனையோருகமும் அவையாய்அவற்றுள்இயலும்
ஒத்தவொண்பல்பொருள்கள் உலப்பில்லனவாய்வியவாய்
†வித்தகத்தாய்நிற்றிநீ இவையென்னவிடமங்களே !

ஆ.—(சித்திரத்தேர்வலவா) - ஸாரத்யம்பண்ணும்போது அத்யாஸ்சர்யமாம்படி தேரைநடத்தவல்லவனே! ஜயத்ரதவதத்தினன்று பகலையிரவாக்கின அத்யாஸ்சர்யமான திருவாழியையுடையவனே! க்ருதாதிகளான அநேகயுகங்களையும், அவ்வவ காலங்களிலுண்டாய் ஒரோவகையாலே ஒத்தும், ஒரோவகையாலே வேறுபட்டும் தேவமநுஷ்யாதிரூபேண பலவாய் ப்ரதிவ்யக்த்யஸங்க்யமான பதார்த்தங்களையும் விபூதியாக வுடையையாய், இப்படி விஸ்மயநீயனாய் நில்லாநின்றாய்! இவை என்ன சேராச்சேர்த்திகள் ! என்கிறார்.

ஒ.—மூன்றாம்பாட்டில், க்ருதாதிகளான அநேகயுகங்களையும், அவ்வவகாலங்களிலுண்டான தேவமநுஷ்யாதிகளையும் விபூதியாக உடையனென்கிறார்.

[சித்திரத்தேர்வலவா] - ஸாரத்யம் பண்ணும்போது அத்யாஸ்சர்யமாம்படி திருத்தேரை நடத்தவல்லவனே! [திருச்சக்கரத்தாய்] - ஜயத்ரதவதத்தினன்று பகலை இரவாக்கினஅத்யாஸ்சர்யமான திருவாழியை யுடையவனே! [ஒத்தவொண் பல்பொருள்களுலப்பில்லனவாய்வியவாய்] - ஒரோவகையாலே ஒத்தும் ஒரோவகையாலே ஒவ்வாதுமான தேவமநுஷ்யரூபேண பலவாய் ப்ரதிவ்யக்த்யஸங்க்யமான பதார்த்தங்களை விபூதியாக வுடையையாய். [வித்தகத்தாயென்று மேலுக்கு] – விஸ்மயநீயமானபடிகளை யுடையையாய் நிற்றி, இவை என்ன சேராச்சேர்த்திகள்]

ப.—அநந்தரம், உத்துங்கனாய்வைத்து ஆஸ்ரிதபாதந்த்ரனாயிருக்கிற நீ, காலோபலக்ஷித ஸகலபதார்த்தங்களுமாயிருக்க, அவற்றோடு தொற்றற்றுநிற்கிற வைஷம்யத்தை யருளிச்செய்யவேணுமென்கிறார்.

(அவஸ்தாநுரூபமாக), சித்திரம் - விசித்ரமாம்படி, தேர் - தேரை, வலவா - நடத்தவல்லனாய், திருச்சக்கரத்தாய் - அந்த வைசித்ர்யம்போலே பகலையிரவாக்கும் பரிகரமான திருவாழியையுடையவனே! அருளாய் - நீ யருளிச்செய்யவேணும்; எத்தனை - க்ருத த்ரேதா த்வாபர கலிரூபமான எல்லாவகையையு முடைத்தாய், ஓர் - ஒன்றோடொன்றொவ்வாதபடி அத்விதீயமான, உகமும் - யுகங்களுக்கு நிர்வாஹகனாய், அவையாய் - அந்த காலகார்யமாய்க்கொண்டு, அவற்றுள் - அதுக்குள்ளே, இயலும் - நடப்பதாய், ஒத்த - ஜ்ஞாநைகாகாரதயா ஒத்து, ஒண் - ஸ்வயம்ப்ரகாஸத்வ ஜ்ஞாத்ருத்வாதி குணவைலக்ஷண்யத்தையுடைத்தாய், பல் - "ஸஏகோபஹுஸ்யாம்" என்கிற மர்யாதையாலே ஸ்வரூபபேதத்தையுடைத்தாய், உலப்பில்லன - அஸங்க்யாதமான, பொருள்கள் - சிதசித்பதார்த்தங்களை, ஆய் - ப்ரகாரமாக வுடையையாய், வியவு - (அவற்றினுடைய ஸாம்யாகார திரோதாயகமான தேவமநுஷ்யாத்யாகாரங்களாலுண்டான) வேறு

† 'வித்தகத்தால்' என்று உரைக்கும் இருபத்து நாலாயிரப்படிக்கும் பாடம்.

பாட்டுக்கு, ஆய் - நிர்வாஹகனாய், (இப்படியிருக்கச்செய்தே), வித்தகத்தால் 'நசேஷ்வி தாநிஷ்டிதாநி'' ''நவாஹஜேஷ்வவஷ்டிதஃ'' என்கிறகணக்கிலே ஸ்ப்ருஷ்டனான விஸ்மயநீயதையோடே, நீ நிற்றி - நீ நில்லாநின்றாய்; இவை என்ன-விடமங்கள் - இவையென்ன வைஷம்யங்கள்!

இ.—மூன்றாம்பாட்டில், க்ருதாதிகளான யுகங்களையும், அவ்வவகாலங்களிலுண்டான மநுஷ்யாதிகளையும் விபூதியாக வுடையவனென்கிறார்.

[சித்திரத்தேர்வலவா] - விசித்ரமாகத் தேரை நடத்தினவனே! த்ரோணன்கையுமணியும் வகுத்து அர்ஜுநனுக்குப் புறப்பாடற வாசலைப்பற்றி நிற்க, அதுக்குப்புறம்பாம்படி தேரைக்கழியக் கொண்டுபோயும்; பீஷ்மன்கையிலம்பு அர்ஜுநன்மேல் தையாதபடி தேரை தூரக்கொண்டுபோய் அர்ஜுநன்கையிலம்பு பீஷ்மன்மேலே தைக்கைக்குக் கிட்டநிறுத்தியும், இப்படி விசித்ரமாகத் தேரைநடத்த வல்லவனே. [திருச்சக்கரத்தாயருளாய்] - பகலை இரவாக்கவல்ல பரிகரத்தையுடையவனே! [யாருகமுமவையாய்] - க்ருதயுகாதிகளுக்கெல்லாம் நிர்வாஹகனாய் அவற்றினுள்ளே வர்த்திக்கிற. [ஒத்தவொண்பல்பொருள்களுலப்பில்லனவாய் வியவாய்] - ஒத்தும், வியவாய் - வேறுபட்டுமிருந்துள்ள, ஒண்பல்பொருள்களுலப்பில்லனவாய்-ஜாதியாலே ஒத்தும், வ்யக்திபேதங்களாலே வேறுபட்டுமென்னுதல்; ஜ்ஞாநைகாகாரதையாலே ஒத்தும், கர்மக்ருதபேதத்தாலே வேறுபட்டுமென்னுதல்; இப்படி பலவகைப்பட்ட பதார்த்தங்கள் அஸங்க்யேயமாயிருக்கிற இத்தை விபூதியாக வுடையையாய். [வித்தகத்தால் நிற்றிநீ] - விஸ்மயமான ப்ரகாரத்தாலே நீநில்லாநின்றாய். [இவையென்னவிடமங்களே] - இவையென்ன சேராச்சேர்த்திகள்!

ஈடு.—மூன்றாம்பாட்டு. க்ருத த்ரேதாதியுகங்களையும், அவ்வவகாலங்களிலுண்டான தேவமநுஷ்யாதிகளையும் விபூதியாகவுடையவனென்கிறார்.

[சித்திரத்தேர்வலவா] - விசித்ரமாம்படியாகத் தேரைநடத்தவல்லவனே! வைசித்ரியாவது - த்ரோணன் கையுமணியும் வகுத்து வாசலைப்பற்றி நிற்க, அவனை வளைந்து அவனுக்கவ்வருகே தேரைக்கொடுபோய் நிறுத்தி அவனுக்கு வ்யாபரிக்கைக்குஇடம் அறுத்தானாயிற்று. பீஷ்மன் கையில் அம்பு தூரப்போய்விழும், அர்ஜுனன்கையில் அம்பு இவ்வருகேவிழும்; ஆகையாலே, அவன் அம்புவிடப்புக்கவாறே தேரைப்பின்னே கழலக் கொடுபோயும், இவன் அம்புவிடப் புக்கவாறே தேரைக்கிட்டநிறுத்தியும், இப்படி தேரை நடத்தும்படியைப்பற்ற 'சித்திரத்தேர்வலவா' என்கிறது. [திருச்சக்கரத்தாய்] - பகலையிரவாக்கும் பரிகரத்தையுடையவனே! [எத்தனையோருகமுமவையாய்] - க்ருதாதியுகங்களுங்கெல்லாம் நிர்வாஹகனாய். [அவற்றுள்ளியலும்] - அவற்றுக்குள்ளே வர்த்திக்கிற. [ஒத்த இத்யாதி] - †(ஒத்திருப்பதுமாய் - வியவாயிருப்பதுமான- ஒண்பல்பொருள்

மூன்றாம்பாட்டு - சித்திரத்தேர் இத்யாதி. ''எத்தனையோருகமும்' என்று தொடங்கி, ''உலப்பில்லனவாய்'' என்னுமளவும் கடாக்ஷித்தவதாரிகை - க்ருதத்ரேதாதி இத்யாதி.

ஸப்தார்த்தம் - விசித்ரமாம்படிஇத்யாதி. தேரை நடத்துகையிலுண்டான வைசித்ரியை இரண்டுவகையாக அருளிச்செய்கிறார் - வைசித்ரியாவத் இத்யாதிவாக்யத்ரயத்தாலே கையுமணியும் வகுத்து - யுத்தத்திலே வ்யூஹவிபாகம்பண்ணி. 'கிட்டநிறுத்தியும்' என்றவநந்தரம், செய்தவிது என்றத்யாஹரிப்பது. ''சித்திரத்தேர்வலவா'' என்றவநந்தரம் ''திருச்சக்கரத்தாய்'' என்கையாலே ஃபலித்தவர்த்தம் - பகலையிரவாக்கும் இத்யாதி. இதுவுமொரு வைசித்ரியென்று கருத்து. ''ஒத்து-

† இது வ்யாக்யாநத்தோடு புநருக்தம்.

களுலப்பில்லனவாய்.) ஓராகாரத்தாலே ஒத்தும், ஆகாராந்தரத்தாலே வேறுபட்டுமிருப் பனவுமாய், விலக்ஷணமுமான பலவகைப்பட்ட பதார்த்தங்களநேகங்களை யுடையை யாய். தேவமநுஷ்யாதி ஜாதியாலே ஒத்தும், வ்யக்திபேதத்தாலே வேறுபட்டும். ஸகலாத் மாக்களும் ஜ்ஞாநைகாரதயா ஒத்திருக்கச்செய்தேயும், அஹம்த்வமாதிபேதத்தாலே ஙிந்நரா யிருப்பர்களிறே. [வித்தகத்தாய்நிற்றிநீ] - இப்படி விஸ்மயநீயனுய்க்கொண்டு நில்லா நின்றாய் நீ. [இவையென்னவிடமங்களே] - இவையென்ன சேராச் சேர்த்தியான செயல் கள்தான்! (௩)

நான்காம் பாட்டு.

கள்ளவிழ்தாமரைக்கண்கண்ணனே!எனக்கொன்றருளாய்
உள்ளதுமில்லதுமாய்உலப்பில்லனவாய்வியவாய்
வெள்ளத்தடங்கடலுள்விடநாகணைமேன்மருவி
உள்ளப்பல்யோகுசெய்திஇவையென்னவுபாயங்களே!

ஆ.—(கள்ளவிழ்) - மதுஸ்யந்தியான தாமரைபோன்ற திருக்கண்களை யுடைய கண்ணனே ! எனக்கு ஒன்று அருளிச் செய்யவேணும். நித்யமாயிருக்கையாலே யுண்டென்றுசொல்லலாம் சேதநனும், பரிணமஸ்வபாவமாய்க்கொண்டு ப்ரதிக்ஷணம் அவஸ்தாந்தரபாக்காகையாலே இல்லையென்னலாம்ப்ரக்ருதியுமாய், வெள்ளத்தடங்க லுள் விடநாகணைமேல் மருவி, திருவுள்ளத்தாலே பலரக்ஷணசிந்தைகளைப் பண்ணுநிற்றி; இவையென்னவிரகுகள் ? என்கிறார்.

ஒ.—நாலாம்பாட்டில், நித்யாநித்ய பதார்த்தங்களை விபூதியாக வுடையனு யிருக்கிறபடியை அருளிச்செய்கிறார்.

[கள்ளவிழ்தாமரைக்கண்கண்ணனே] - கீழில் திருவாய்மொழியில் "தாமரை நாண்மலர்" என்றநுபவித்த திருக்கண்களிலழகை அநுஸந்திக்கிறார். [எனக்கொன்றரு ளாய்] - எனக்கு ஒன்று அருளிச்செய்யவேணும். [உள்ளதுமில்லதுமாயுலப்பில்லன வாய்வியவாய்] - நித்யமாயிருக்கையாலே உண்டென்று சொல்லலாம் சேதநனும் பரிணம ஸ்வபாவமாய்க்கொண்டு ப்ரதிக்ஷணம் அவஸ்தாந்தரபாக்காகையாலே இல்லையென்ன லாம் ப்ரக்ருதியும். [உள்ளப்பல்யோகுசெய்தி] - திருவுள்ளத்தாலே பலரக்ஷண சிந்தை

வியவாயிருக்கிற - ஒண்பல்பொருள்களுலப்பில்லனவாய்" என்றந்வயித்தர்த்தம் - ஓராகாரத்தாலே இத்யாதி. "உலப்பில்லனவாய்" என்றதுக்கு - முடிவின்றிக்கே அஸங்க்யாதமான என்றர்த்தமா கையாலே - 'அநேகங்களையுடையையாய்' என்கிறார். ஆக, ஒத்திருப்பனுமாய் - வியவாயிருப்பது மாய் - உலப்பில்லனவான - ஒண்பல்பொருள்களை யுடையையாய்க்கொண்டு - வித்தகத்தாய் நிற்றிநீ யென்றபடி. விவரணம் - தேவமநுஷ்யாதிஇத்யாதி. அர்த்தாந்தரம் - ஸகலாத்மாக்களும் இத் யாதி. விடமங்கள் - விஷமங்கள்; விசித்ரங்களென்றபடி. 'சித்திரத்தேர்வலவா! திருச்சக்கரத்தாய் - எத்தனையோருகமுமவையாயவற்றுள்ளியலும், ஒத்து - வியவாயிருக்கிற - ஒண்பல்பொருள்களுலப் பில்லனவாய் - வித்தகத்தாய் நிற்றிநீ, இவையென்னவிடமங்கள் அருளாய்' இத்யந்வயம். (௩)

ப.—அநந்தரம், பரத்வ ஸௌலப்யரூபமான போக்யதை தோன்றும்படி புண்டரீகாக்ஷனை நீ, நித்யாநித்ய ஸமஸ்த பதார்த்தங்களையும் ப்ரகாரமாகவுடையையாய், அவற்றினுடைய ரக்ஷண சிந்தை பண்ணுகிற உபாயமிருக்கிறபடி யென்? என்கிறார்.

கள் - மதுவை, அவிழ் - மலருகிற, தாமரை - செவ்வித்தாமரைப் பூப்போலே யிருக்கிற, கண் - திருக்கண்களையுடையனை, கண்ணனே - க்ருஷ்ணனே! எனக்கு-, (நீ நினைக்கிற ரக்ஷணோபாயங்கள் இன்னதென்று), ஒன்று — ஒன்றை, அருளாய் - அருளிச்செய்யவேணும்; உள்ளதும் - (நித்யமாகையாலே) என்றும் உள்ளதாய், இல்லதுமாய்- (அவஸ்த்தாந்தரார்ஹமாகையாலே) இல்லாமையையுடைத்தாய், உலப்பில்லனவாய் - அஸங்க்யாதமாய், வியவாய் - அவாந்தரமான வேறுபாட்டையுடைத்தாயிருக்கிற பதார்த்தங்களை ப்ரகாரமாகவுடையையாய், (இந்த ஸகலசேதநாசேதநங்களையும் ரக்ஷிக்கைக்காக), வெள்ளம் - பூர்ணமாய், தடம் - இடமுடைத்தான, கடலுள் - க்ஷீரார்ணவத்திலே, விடம் - (விரோதிகளுக்கு அஸஹநீயமாம்படி) விஷத்தையுமிழுகிற, நாகணைமேல் - திருவநந்தாழ்வானாகிற படுக்கையிலே, மருவி - மேவி, உள்ளம் - திருவுள்ளத்திலே, பல் - பஹுவிதமான, யோகு - ரக்ஷணயோகங்களை, செய்தி - சிந்தியாநின்றாய்; இவை என்ன-, உபாயங்கள் - உபாயங்களாயிருக்கிறன! அவதாரணோபாயமோ? அநிஷ்டநிவ்ருத்த்யுபாயமோ? அபிமத ப்ரதாநோபாயமோ? ஆஶ்ரிதஸம்ஶ்லேஷோபாயமோ? ஆவர்ஜநோபாயமோ? என்றறிகிறிலேன்; ஒன்றை நிஷ்கர்ஷித்தருளிச்செய்யவேணுமென்று கருத்து. யோகு - உபாயம்.

இ.—நாலாம்பாட்டில், நித்யாநித்ய பதார்த்தங்களை விபூதியாகவுடையனா யிருக்கிறபடியை அருளிச்செய்கிறார்.

[கள்ளவிழித்யாதி] - அப்போதலர்ந்த தாமரைப்பூப்போலே யிருக்கிற திருக்கண்களை யுடையனாய் ஸுலபனாயிருக்கிறவனே! அவனுடைய திருக்கண்கள்போலே யாயிற்று, இவர்க்கு விபூதியும் ஆகர்ஷகமா யிருக்கிறபடி. கீழில் திருவாய்மொழியிலே "தாமரை நாண்மலர்போல்" என்று பாதகமானது தானேயிறே இப்போது அநுகூல மாயிருக்கிறது. [உள்ளதுமில்லதுமாய்] - நித்யமாகையாலே உள்ளதுமாய், அவஸ்தாந்தரார்ஹமாகையாலே இல்லையென்னலுமாய். [உலப்பில்லனவாய்] - அஸங்க்யாதமான ஆத்மவஸ்துவுமாய். [வியவாய்]-வேறுபட்டிருந்துள்ள அசித்தாய். நித்யமாய் அஸங்க்யாதமான ஆத்மவஸ்துவுக்கு நிர்வாஹகனாய், அதிற்காட்டில் வேறுபட்டு நச்வரமாயிருக்கிற அசித்பதார்த்தங்களுக்கு நிர்வாஹகனென்றபடி. [வெள்ளத்தடங்கடலுளித்யாதி]- திருப்பாற்கடலிலே, ஶத்ருக்கள்வந்து கிட்டவொண்ணாதபடி விஷத்தையுடைய திருவநந்தாழ்வான்மேலே சாய்ந்தருளி. [உள்ளப்பல்யோகுசெய்தி]- திருவுள்ளத்திலே பலரக்ஷண சிந்தை பண்ணாநிற்றி. சேதநஸமூஹத்தோபாதியும் போருமிறே ரக்ஷணோபாய சிந்தைகளில் வ்யாமோஹமும். [இவையென்னவுபாயங்களே]-அவற்றோபாதியுபாயங்களும் பலவாயிருக்குமாயிற்று. "சேதநர்நின்றநின்ற நிலைகளிலே புருஷார்த்த ருசிகளைப்பிறப்பிக்கைக்கும், ருச்யநுகுணமான புருஷார்த்தோபாயங்களிலே சேர்க்கைக்காகவும் விரகு ஏதோ?" என்று சிந்திக்கைக்காகவிறே திருவநந்தாழ்வான்மேலே கண்வளர்ந்தருளுகிறது.

ஈடு.—நாலாம்பாட்டு. லோகத்தில் நித்யாநித்ய பதார்த்தங்களை **விபூதியாக** வுடையனாயிருக்கிறபடியை அருளிச்செய்கிறார்.

[கள்ளவிழித்யாதி] - அப்போதலர்ந்த தாமரைப்பூப்போலே யிருக்கிற **திருக்கண்** களையுடையனாய் ஹவ்யனாயிருக்கிறவனே! அவனுடைய திருக்கண்கள்போலேயாயிற்று இவர்க்கு விபூதியும் ஆகர்ஷகமாயிருக்கிறபடி. அன்றிக்கே, திருக்கண்களோபாதி பாதகமாகா நின்றதாயிற்று விபூத்யநுபவமும் இவர்க்கு. பாதகமாகையாவதென்னென்னில்? 'இன்னது' என்று நிஸ்சயிக்கமாட்டாதே ஸம்ஸயித்துப்பட்டதொரு க்லேஸமுண்டிறே, அதுவும் பாதகமாயிருக்குமிறே. "கீழிற்றிருவாய்மொழியிலே - 'சூழவுந்தாமரை நாண்மலர்போல்வந்து தோன்றும்' என்றத்தை ஸ்மரிக்கிறார்" என்றுபிள்ளான் பணிக்கும். அத்தைச் சீயர்கேட்டருளி, "கீழோடுகிற ரீதியின்படியே இதுவுமாகப்பெற்றதாகில் அழகிது; அங்ஙனன்றிக்கே இது ரஸாந்தரமாய் அறிவுண்டானபின்பு ப்ரகரணத்தோடு பொருந்தமாட்டாது" என்று அருளிச்செய்தாராம். [உள்ளதுமித்யாதி] - உலப்பில்லனவாய்க்கொண்டு உள்ளதுமாய் வியவாய்க்கொண்டு இல்லதுமாயிருந்துள்ள சேதநா சேதநங்களுக்கு நிர்வாஹகனாய். "**யத்து காலாந்தரேணாபி நாந்யஸம்ஜ்ஞாமுபைதி வை | பரிணாமாதி ஸம்பூதாம் தத்வஸ்து ந்ருப தச்ச கிம்**" (யத்துகாலாந்தரேணாபி நாந்யஸம்ஜ்ஞாமுபைதிவை | பரிணாமாதி ஸம்பூதாம் தத்வஸ்து ந்ருபதச்சகிம்)என்கிறபடியே, அசித்து நஸ்வரமா

ப்ர.—[கள்ளவிழித்யாதி]— [உள்ளதுமில்லதுமாய்]— **த்விதீயேம்ஸே த்ரயோதஸேऽத்யாயே ஸௌவீரராஜம் ப்ரதி ஜடபரதஃ, "யத்து ராஜேதி யல்லோகே யச்ச ராஜபடாத்மகம் | ததாந்யத் ந்ருப நேத்தம் தத் ஸங்கல்பநாமயம் || ௯௫ || யத்து காலாந்தரேணாபி நாந்யஸம்ஜ்ஞாமுபைதி வை | பரிணாமாதிஸம்பூதாம் தத்வஸ்து ந்ருப தச்ச கிம் || ௯௬ || த்வம் ராஜா ஸர்வலோகஸ்ய பிதுஃ புத்ரோ ரிபோ ரிபுஃ | பத்ந்யாஃ பதிஃ பிதா ஸூநோஃ கிம் த்வாம் பூப வதாம்யஹம் ||"**

நாலாம்பாட்டு.—கள்ளவிழ் இத்யாதி. "உள்ளதுமில்லதுமாய்" என்றத்தைக்கடாக்ஷித்தவ *கை - லோகத்தில் இத்யாதி.*

*விபூதியை அநுஸந்திக்கிறவிடத்திலே கண்ணழகைச் சொல்லுவானென்? என்ன - அவ னுடைய இத்யாதி. பரிஹாராந்தரம் - அன்றிக்கே திருக்கண்கள் இத்யாதி. விஸ்லேஷ வேளையிலே யன்றோ விபூத்யநுபவம் பாதகமாயிருப்பது, இப்போது பாதகமாகிறபடியென்? என்கிற ஸங்கையை யநுவதித்து பரிஹரிக்கிறார் - பாதகமாகையாவது இத்யாதி வாக்யத்வயத்தாலே. அதாவது- "முடிச்சோதியாய்" இத்யாதிப்படியே ஸந்தேஹமாய்க்கொண்டு பாதகமாகிறதென்றுகருத்து; ஸம்ஸ யித்துப்பட்டதொரு க்லேஸமென்றது - * முடிச்சோதிப்படியே ஸம்ஸயித்துப்பட்டதொரு க்லேஸ மென்றபடி. பிள்ளான்நிர்வாஹம் - கீழில் இத்யாதி. இதுக்கு நஞ்சீயரருளிச்செய்யும்படியை யருளிச் செய்கிறார் - அத்தை இத்யாதி. "உலப்பில்லன -" நாசமின்றிக்கேயிருக்கிற: நித்யமானவென்றபடி. கீழிற்பாட்டிலே, "உலப்பில்லனவாய்" என்றது - அஸங்க்யாதமாயென்றபடி. "வியவாய்" என்றது - வீயவாயென்றபடியாய், நஸ்வரமாயென்றபடி. சேதநாசேதநங்களை "உள்ளதுமில்லதுமாய்" என்கிறது - ஏகரூபத்வத்தையும், பரிணாமித்வத்தையும்பற்ற. இத்தை ப்ரமாணமுகேந தர்ஸிப்பிக்கிறார் - யத்துகா லாந்தரேண இத்யாதி. த்விதீயேம்ஸே த்ரயோதஸே ஸௌவீரராஜம்ப்ரதி ஜடபரதஃ, '**யத்து கா லாந்தரேணாபி நாந்யஸம்ஜ்ஞாமுபைதி வை | பரிணாமாதிஸம்பூதாம் தத்வஸ்து**'*

யிருக்கையாலே இல்லதென்று சொல்லலாயிருக்கும்; ஆத்மவஸ்து ஏகரூபமாயிருக்கையாலே உள்ள தென்கிறது. [வெள்ளத்தடங்கடலு ளித்யாதி] - திருப்பாற்கடலிலே, ப்ரதிகூலர்க்குக் கிட்டவொண்ணாதபடி விஷத்தை யுமிழாநின்றுள்ளதிருவநந்தாழ்வான்மேலேபொருந்தி. "ஆங்காரவாரமது கேட்டழலுமிழும் - பூங்காரரவணையான்" என்கிறபடியே, அஸ்த்தாநேபயஶங்கைபண்ணி அழலுமிழுமவனிறே. [உள்ளப்பல்யோகு செய்தி]- திருவுள்ளத்திலே பல ரக்ஷணசிந்தைபண்ணாநிற்றி.சேதநஹேதுத்தோபாதியும் போருமாயிற்று,அவன்பண்ணும் ரக்ஷணசிந்தையில் பரப்பு. இப்போது இது கீழோடும் மேலோடும் அந்வயிக்கிறபடியென் என்னில்? - அசித்தாவது, நஶ்வரமாய்க்கொண்டு த்யாஜ்யமாயிருக்கும்; ஆத்மவஸ்து, ஏகரூபமாய்க்கொண்டு உபாதேயமாயிருக்கும்; இவையிரண்டுக்கும் நியந்தாவாயிருக்கும் ஈஶ்வரன், "இச்சேதநன்தானும், தான் பண்ணிற்றொரு கர்மமும் 'தனக்கு' என்னவொரு ருசியுமாயிருக்கையாலே, இவன், 'தனக்கு என்ன ஓர் இச்சைபிறக்கிலல்லது நம்மைப்பெற விரகற்றிருந்தது;இவனுக்கோ அதுஇல்லையாயிராநின்றது; இனிச்செய்யும்படியென்?"என்று, இவன், "இங்கின்றநீர்மையினியாமுறாமை"என்றால்†செய்யுமத்தை,இவன்தலையில் இசைவின்றிக்கே யிருக்கச்செய்தே, "இவன் நம்மைவந்து கிட்டினும் விரகேதோ?" என்று, அதுக்கு உறுப்பாக உபாயசிந்தை பண்ணிக் கண்வளர்ந்தருளுகிறபடி. [இவையென்னவுபாயங்களே] - சேதநர் பலரானால் அவ்வவருடைய ரக்ஷணங்களும் பலவாயிறே யிருப்பது; அதுக்கீடான உபாயமும் அறியுமே ஸர்வஜ்ஞனாகையாலே. இவை என்ன விரகுகளே!

ஐந்தாம் பாட்டு.

பாசங்கள்நீக்கி என்னையுனக்கேயறக்கொண்டிட்டுநீ
வாசமலர்த்தண்துழாய்முடிமாயவனே!அருளாய்
காயமுஞ்சீவனுமாய்க்கழிவாய்ப்பிறப்பாய்ப்பின்னும்நீ
மாயங்கள்செய்துவைத்தியிவையென்னமயக்குக்களே.

ஆ.—(பாசங்கள்நீக்கி)-ஸுஜாதபரிமளதுளஸீ ஸுஷிதமான திருமுடியையுடையையாய், அத்யாஶ்சர்யபூதனனநீ, ப்ராக்ருதவிஷய ப்ராவண்யத்தைத்தவிர்த்து த்வதேகதாரகனும்படி என்னைப்பண்ணிவைத்து, பின்னையும் இப்ப்ரக்ருதியிலேயிட்டு வைக்கிற ஆஶ்சர்யத்தையருளிச்செய்யவேணும்.ஶரீரஜீவஜந்மமரணாதி நிர்வாஹகனாய், அவித்

நூவதவு " அப்படிவிஷத்தை யுமிழுவனோ? என்ன - ஆங்காரவாரம் இத்யாதி. "பல்யோகு" என்றதுக்கு ஹாவம் - சேதநஹேதுந்து இத்யாதி. கீழும்மேலும் விபூதியோகத்தைச் சொல்லாநிற்க, நடுவேஉபாயசிந்தையைச் சொல்லுவானென்? என்ன ,சேதநாசேதநப்ரஸங்கத்திலே உபாயசிந்தை ப்ராஸங்கிகமாக வந்ததென்கிறார் - இப்போது இத்யாதி கண்வளர்ந்தருளுகிறபடி யென்னுமளவாலே. உள்ளத்திலே பலவுபாயசிந்தை பண்ணுவுதியென்று ஶப்தார்த்தம். வுஹுவசநார்த்தம்-சேதநர் இத்யாதி. 'கள்ளவிழ்தாமரைக்கண் கண்ணனே - உலப்பில்லனவாய்க்கொண்டு உள்ளதுமாய் - வியவாய்க்கொண்டு இல்லதுமாய் - வெள்ளத்தடங்கடலுள்' என்றுதொடங்கி, 'உபாயங்களே - எனக்குஒன்றருளாய்' இத்யந்வயঃ. (ச)

† செய்யுமதான உபாயசிந்தை என்று யோஜிப்பது.

யாதிகளாகிற வஞ்சநங்களைப் பண்ணிவையாநின்றாய்; இவை என்ன துர்ஜ்ஞேய ப்ரவ்ருத்திகள்? என்கிறார்.

ஒ.—அஞ்சாம்பாட்டில், ப்ராக்ருதவிஷயப்ராவண்யத்தைத் தவிர்த்துத்வதேகயோகனாம்படி என்னைப் பண்ணிவைத்து, பின்னையும் இப்ரக்ருதியிலே யிட்டுவைக்கிற ஆஶ்சர்யமென்? என்றுகொண்டு இத்திருவாய்மொழிக்கு நிதாநத்தை அருளிச்செய்கிறார்

[வாசமலர்த்தண்துழாய் முடிமாயவனே] - புறம்பில் பாசத்தையும் அறுத்து அநந்யார்ஹமாக்கின அழகைச்சொல்லுகிறது. [காயமும் சீவனுமென்று மேலுக்கு] - பின்னையும் ஸம்ஸாரத்திலே நசையற்றார்க்குக்கூடாத ஜந்மமரணாத்யாஶ்சர்யங்களை! உண்டாக்கி அவற்றோடே ஜீவிப்பித்து வைத்தி; இவையென்ன தூர்ஜ்ஞேய ப்ரவ்ருத்திகள்?

ப.—அநந்தரம், என்னை அநந்யப்ரயோஜநனாம்படி பண்ணும் அபிப்ராயிதபோக்யதையையுடைய நீ, ஶரீராத்மாக்களுடைய ஸம்பந்தமும் உத்பத்திவிநாஶமும் நீயிட்ட வழக்காயிருக்க, அதிலே அகப்படுத்திவைக்கிற ப்ரகாரங்களென்ன ப்ரமங்களாயிருக்கிறன! என்கிறார்.

என்னை - (த்வதேகஶேஷமாய் த்வதேகரக்ஷ்யமான ஸ்வரூபத்தையுடைய) என்னை, பாசங்கள் - அநநுரூபவிஷயஸங்கங்களை, நீக்கி- கழித்து, ("தனக்கேயாகவெனைக் கொள்ளுமீதே" என்னும்படி), உனக்கேயற - த்வதேகப்ரயோஜநனாக, கொண்டிட்டு - அங்கீகரித்துவைத்து, வாசம் - அந்த அநந்யப்ரயோஜநத்வபாதகமாய்ப் பரிமளப்ரசுரமான, மலர்-பூவையுடைய, தண்துழாய் - செவ்வித்திருத்துழாயாலே யலங்க்ருதமான, முடி-மயிர்முடியையுடைய, மாயவனே-ஆஶ்சர்யபோக்யபூதனே! நீ-(ரக்ஷகனுமாய் போக்யனுமான) நீ, காயமும் - வந்யகஶரீரமும், சீவனும் - பத்தஜீவனும், கழிவுபிறப்பு - (இவற்றுக்குவரக்கடவதான) விநாஶோத்பத்திகளும், ஆய்-நீயிட்டவழக்காம்படியாயிருக்க, பின்னும் - பின்னையும், (நீ), (சரீராதிகளிலே ஸக்தனாம்படி), மாயங்கள் - அவித்யாகர்மவாஸநாருசிகளாகிற வஞ்சநங்களை, செய்து - பண்ணி, வைத்தி - வையாநின்றாய்; இவை -, என்ன மயக்குக்கள் - என்னப்ராமகவ்யாபாரங்களாயிருக்கிறன! அருளாய்- அருளிச் செய்யவேணும்!

இ.—அஞ்சாம்பாட்டில், த்வதேகதாரகனாக வென்னைப் பண்ணிவைத்து, பின்னையும் இப்ரக்ருதியிலே வைக்கிற ஆஶ்சர்யமென்? என்றுகொண்டு, இத்திருவாய்மொழிக்கு நிதாநத்தை அருளிச்செய்கிறார்.

[பாசங்கள்நீக்கி] - அவித்யாகர்மவாஸநாருசிகளைப் போக்கி. [என்னை] - விஷயாந்தரங்களிலே கால்தாழ்ந்திருக்கிற என்னை. [உனக்கே யறக்கொண்டிட்டு] - "துயரறுசுடரடிதொழுதெழு" என்னும்படிபண்ணி. இவர்க்கு * மயர்வையறுத்து * மதிநலத்தை அருளிற்று எத்தைக்கொண்டு என்னில்?—[வாசமித்யாதி] - சாத்தின வளையத்தின் அழகைக்காட்டியாயிற்று இப்படிபண்ணிற்று. பரிமளத்தையுடைத்தாய் மலரோடுகூடின ஶ்ரமஹரமான திருத்துழாய்மாலையைத் திருமுடியிலேயுடைய ஆஶ்சர்ய ஸௌந்தர்ய யுக்தனே! [அருளாய்] — இவ்வளவு புகுரநின்றவென்னை யிங்கேயிட்டு வைத்து நலியவோ? [காயமும் சீவனுமாய்] - ஶரீரமும் ஆத்மாவுமாய். [கழிவாய்ப்பிறப்பாய்]-உத்பத்தி விநாஶங்களாய். [பின்னும்நீ மாயங்கள்செய்து] - ஸம்ஸாரத்தில் நசையற்றபின்பும், ஜந்மமரணாத்யாஶ்சர்யங்களையுண்டாக்கி. [வைத்தி] - அவற்றோடே

ஜீவிப்பித்து வைத்தி. [இவையித்யாதி] - இவையென்ன தெரியாச்செயல்கள், உ-ஊர் 'களா?

ஈடு.—அஞ்சாம்பாட்டு. இத்திருவாய்மொழிக்கு நிதாநமான பாட்டாயிற்றுஇது. அதாவது - மயர்வறமதிநலமருளி, பின்னையும் எனக்குப்பொருந்தாதபடியான ஸம்ஸாரத்திலே என்னைவைத்து ஜீவிப்பித்துக் கொடுபோருகிற இவ்வாஸ்சர்யம் இருந்தபடியை எனக்கு அருளிச்செய்யவேணுமென்கிறார்.

[பாசங்கள் நீக்கி] - மயர்வையறுத்து. அவித்யாதிகளைப்போக்கி பலசெய்வினை வன்கயிற்றால் சூழ்த்துக்கொண்டதைத நீக்கி. [என்னை] - விஷயாந்தரங்களிலே கால் தாழ்ந்திருக்கிற என்னை. [உனக்கேயறக்கொண்டிட்டு] - *துயரறுசுடரடி தொழும்படியாகப் பண்ணி. பாசங்கள் நீக்கிற்றும் தனக்கேயறக்கொண்டதும் எத்தைக்காட்டி என்னில்?- [வாசமலரித்யாதி] - வைத்தவளையத்தி லழகைக்காட்டியாயிற்று, புறம்புண்டான பற்றறுத்ததும், தனக்கேயாம்படியாகப் பண்ணிற்றும். (பரிமளத்தையுடைத்தாய் மலரோடே கூடின ஸ்ரமஹரமான திருத்துழாய்மாலையைத் திருமுடியிலேயுடைய ஆஸ்சர்ய ஸௌந்தர்யயுக்தனே!) [அருளாய்] - இவ்வளவு புகுராநின்ற என்னை இங்கேயிட்டுவைத்துநலியவோ? [காயமித்யாதி]-ஶரீரமும் ஆத்மாவுமாய், உத்பத்திவிநாஶங்களுமாய். [பின்னும்இத்யாதி] - உன்பக்கலிலே யறிவைப் பிறப்பித்து, பின்னையும் இதல் பொருந்தாதபடியான என்னை ஸம்ஸாரத்திலே வையாநின்றாய். [இவையென்ன மயக்குக்களே] - இவையென்ன தெரியாச்செயல்கள்தாம்! புறம்புண்டான பற்றையறுத்து உன்பக்கலிலே ஸங்கத்தைப் பிறப்பிக்கையாலே நீ யங்கீகரித்தாயோ என்றிராநின்றேன்; பின்னையும் இஸ்ஸம்ஸாரத்திலே வைக்கையாலே கைவிட நினைத்தாயோ என்றிராநின்றேன்; இது என்ன ஹ்ரமம்! (ரு)

ஆறாம் பாட்டு.

மயக்கா!வாமனனே!மதியாம்வண்ணமொன்றருளாய்
அயர்ப்பாய்த்தேற்றமுமாய் அழலாய்க்குளிராய்வியவாய்
வியப்பாய்வென்றிகளாய்வினையாய்ப்பயனாய்ப்பின்னும்நீ
†துயக்காய்நீநின்றவாறு இவையென்ன துயரங்களே.

அஞ்சாம்பாட்டு.—பாசங்கள் இத்யாதி. ஆஸ்சர்ய ஜகதாகாரதையை யநுஸந்திப்பிக்கைக்கு ப்ரஸங்கம் சொல்லுகிறதாகையாலே இது நிதாநப்பாட்டென்கிறார் - இத்திருவாய்மொழிக்கு இத்யாதி. விவரணம் - அதாவது இத்யாதி.

ஃபலிதஅர்த்தம் - மயர்வையறுத்து என்று. வஹுவசநார்த்தம் - அவித்யாதிகளை இத்யாதி. இவைபாசங்களோ? என்ன - பலசெய்வினை இத்யாதி. ''உனக்கேயறக்கொண்டிட்டு'' என்றதுக்கு - உனக்கே யநந்யார்ஹனாய் கைங்கர்யத்திலே அத்யவஸிதனும்படி பண்ணி என்றுஃபலிதார்த்தமாகையாலே, அத்தையருளிச்செய்கிறார் - துயரறு இத்யாதி. கழிவு - விநாசம். விவரணம் - புறம்புண்டான இத்யாதி. 'காயமும் சீவனுமாய்க்கழிவாய்ப்பிறப்பாயிருக்கிற - வாசமலர்த்தண்துழாய்முடி மாயவனே - நீ - பாசங்கள்நீக்கி என்னை யுனக்கேயறக்கொண்டிட்டு - நீ - பின்னும் மாயங்கள்செய்து வைத்தி, இவையென்ன மயக்குக்கள்? அருளாய் இத்யந்வயঃ. (ரு)

---

† துயக்கா என்று ஈட்டின் பாடம்.

ஆ.—(மயக்காவாமனனே) - ஸ்ரீவாமநனை அழகாலே பிச்சேற்றி, நினைத்தது முடித்துக்கொள்ளவல்ல விரகனான நீ, தெளிவுடையேனாம்படி யொன்றுபண்ணியருளாய். அஜ்ஞாநஜ்ஞாநஉஷ்ணசீத விஸ்மயநீய விஸ்மயஜய பாபபுண்ய தத்பல நிர்வாஹகனாய், அதுக்குமேலே, அந்யதாஜ்ஞாநாதிஜநகனாய் நீ நின்றப்ரகாரம் என்ன

ஒ.—ஆறாம்பாட்டில், விஸ்மரணந் தொடக்கமான விருத்தபதார்த்தங்களை விபூதியாகவுடையனா யிருக்கிறபடியை அநுஸந்தித்து விஸ்மிதராகிறார்.

[மயக்கா வாமனனே] - ஸ்ரீவாமநனை அழகாலே பிச்சேற்றி நினைத்தது முடித்துக்கொள்ளவல்ல விரகனானநீ என்னுடைய ஸங்கடத்தையும் தீர்க்கவேணுமென்று கருத்து. [வியவாய் வியப்பாய்] - விஸ்மயநீயமும் விஸ்மயமுமாய்.

ப.—அநந்தரம், ப்ராமகசேஷ்டிதங்களையுடைய வாமநனானநீ, விஸ்ம்ருத்யாதி விசித்ரனாய்க்கொண்டு பண்ணுகிற க்லேசங்களென்னாயிருக்கின்றன? என்கிறார்.

மயக்கா - வடிவாலும் நடையாலும் உக்தியாலும் மஹாபலியினுடையநெஞ்சு ப்ரமிக்கும்படிபண்ணின, வாமனனே - ! மதியாம்வண்ணம் - (எனக்குக்கலக்கந்தீர்ந்து) அறிவுண்டாம்படி, ஒன்று -, அருளாய் - அருளிச்செய்யவேணும்; அயர்ப்பு - மறப்பும், தேற்றமும் - தெளிவும், ஆய் - நீயிட்டவழக்காய், அழல் - தாபமும், குளிர் - சைத்யமும், ஆய் - நீயிட்டவழக்காய், வியவு - விஸ்மயநீயமும், வியப்பு - விஸ்மயமும், ஆய் - நீயிட்டவழக்காய், வென்றிகள் - லோகத்தில் விஜயஸித்திகளும், ஆய் - நீயிட்டவழக்காய், வினை - புண்யபாபரூபகர்மங்களும், பயன் - தத்தத்பலங்களும், ஆய் - நீயிட்டவழக்காய், பின்னும் - அதுக்குமேலே, துயக்கு - இவற்றிலே சேதநர் கலங்குகிற கலக்கமும், நீயாய் - நீயிட்டவழக்காய், (நீ), நின்ற - இம்முகத்தாலே லீலாரஸிகனாய்க்கொண்டுநிற்கிற, ஆறு - ப்ரகாரங்களான இவை, (ஜகத்துக்கு), என்ன -, துயரங்கள் - க்லேசங்களாயிருக்கிறன ! வியவு - வியக்கப்பட்டன. வியப்பு - விஸ்மயமாயிருந்தவையும், மிகுதலுமாம்.

இ.—ஆறாம்பாட்டில், விஸ்ம்ருதி தொடக்கமான விருத்தபதார்த்தங்களை விபூதியாகவுடையனா யிருக்கிறபடியை அநுஸந்தித்து விஸ்மிதராகிறார்.

[மயக்கா] - அநுகூலப்ரதிகூல விபாகமின்றிக்கே மதிகெடும்படி பண்ணினவனே! [வாமனனே] - தேவர்களை நெருக்கி த்ரைலோக்யத்தையாண்ட மஹாபலி, தானே இசைந்து தேவகார்யஞ்செய்யப்போந்தானென்று அறியாதே கையிலே நீரைவார்க்கும்படியிறே அவனை மயக்கிற்று. [மதியாம்வண்ணமொன்றருளாய்] - மஹாபலியை அழகாலே பிச்சேற்றி, நினைத்தது முடித்துக்கொள்ளவல்லநீ, எனக்குண்டான ஸங்கடத்தைத்தீர்த்துத் தெளிவுபிறக்கும்படி ஒருவிரகு அருளிச்செய்யவேணும். [அயர்ப்பாய்த் தேற்றமுமாய்] - விஸ்ம்ருதியும் தெளிவுமாய். "ஏதத்³வ்யதிஜந்தூநா ஸமோஹநம்" என்கிறபடியே. [அழலாய்க்குளிராய்] - ஸீதோஷ்ணங்களிரண்டுக்கும் நிர்வாஹகனாய். [வியவாய் வியப்பாய்] - விஸ்மயமுமாய், விஸ்மயநீயமுமாய். [வென்றிகளாய்] - விஜயங்களாய், [வினையாய்ப்பயனாய்] - புண்யபாபரூபகர்மங்களும், அதினுடைய பலங்களுமாய். [பின்னும்நீ துயக்காய்] - உன்னையாஸ்ரயித்தாரும் மதிமயங்கும்படி. [நீநின்றவாறு] - நீநிற்கிற ப்ரகாரம். [இவையென்ன துயரங்களே] - இவை யுனக்கு லீலையாய், எங்களுக்கு து:கரூபமாயிரா நின்றது.

ஈடு.—ஆறும்பாட்டு. விஸ்மரணாதி விருத்தபதார்த்தங்களை விபூதியாகவுடையனு யிருக்கிறபடியை யருளிச்செய்கிறார்.

[மயக்கா]-இன்னாரென்றின்றிக்கே, ஆரேனுமாகக் கிட்டினாரைமயங்கப்பண்ணுமவனே! அதுஎங்கே கண்டோம் என்னில்? [வாமனனே] - தேவகார்யஞ் செய்யப்போந்த நீ, அந்தத்தேவர்களை நெருக்கின மஹாபலி தானே நெஞ்சுநெகிழ்ந்து உன்கையிலே நீரை வார்த்துத் தானே யிசைந்துதரும்படி மயங்கப்பண்ணினவனே! "மன்னை மனங்கொள்ள வஞ்சித்து நெஞ்சுருக்கி" என்கிறபடியே. [மத்யாமித்யாதி]- அநுகூல ப்ரதிகூல விஷயமற மயங்கப்பண்ணாதே, நான் தெளிவையுடையனாம்படி பண்ணியருளவேணும். [அயர்ப்பாய்த் தேற்றமுமாய்] - "மத்த: ஸ்ம்ருதிர் ஜ்ஞாநமபோஹநஞ்ச" (மத்தஸ்ஸ்ம்ருதிர் ஜ்ஞாநமபோஹநஞ்ச) என்றானிறே தானே. விஸ்ம்ருதியும் தெளிவுமாய். இவ்விடத்தில் விருத்தாகாரத்தைச் சொல்லுகிறதல்ல, விசித்ராகாரத்தைச் சொல்லுகிறது. [அழலாய்க் குளிராய்] - சீதோஷ்ணங்களாய். [வியவாய் வியப்பாய்] - விஸ்மய விஸ்மயநீயங்களாய். [வென்றிகளாய்] - விஜயங்களாய். [வினையாய்ப்பயனாய்] - புண்யபாப கர்மங்களாய், அவற்றினுடைய ஃபலங்களுமாய். [பின்னும் நீ துயக்கா]-அதுக்குமேலே, உன்னை யாச்ரயித்தாரும் மதிகலங்கும்படி, அந்யதாஜ்ஞானவிபரீதஜ்ஞாநங்களைப் பண்ணு. [நீ நின்றவாறு] - நீ நின்றப்ரகாரம். [இவையென்ன துயரங்களே]- உனக்கு இவைதம்மில் அருமையின்றிக்கே லீலையாயிராநின்றது; எங்களுக்கு அவைதாம் து:காத்மகமாயிராநின்றன. (௬)

ப்ர.—ஆறும்பாட்டு. [மயக்காவித்யாதி] - [அயர்ப்பாய்த்தேற்றமுமாய்]- ஸர்வஸ்ய சாஹம், "ஸர்வஸ்ய சாஹம் ஹ்ருதி ஸந்நிவிஷ்டோ மத்த: ஸ்ம்ருதிர் ஜ்ஞாநமபோஹநஞ்ச । வேதைஶ்ச ஸர்வைரஹமேவ வேத்யோ வேதாந்தக்ருத் வேதவிதேவ சாஹம் ॥ ௧௫ ॥"

ஆறும்பாட்டு.—மயக்கா இத்யாதி. "அயர்ப்பாய்த்தேற்றமுமாய்" என்றத்தைக்கடாக்ஷித் தவதாரிகை - விஸ்மரணாதி இத்யாதி.

ப்ரதியோகியைச்சொல்லாமைக்கு பாவம்-இன்னார் இத்யாதி. மஹாபலியைமயங்கப்பண்ணினானோவென்ன, ப்ரமாணம் - மன்னைமனங்கொள்ள இத்யாதி. பெரியதிருமடல். ராஜாவானமஹாபலியை மனங்கொள்ளும்படியாக வஞ்சித்து நெஞ்சையுருக்கியென்றபடி. "மதியாம்வண்ணம் -" தெளிவுடையேனாம்படி. மறப்பும் தெளிவும் அவனுக்கக்கூடுமோ? என்ன, அதுக்குப்ரமாணம் - மத்தஸ்ஸ்ம்ருதி: இத்யாதி. "ஸர்வஸ்ய சாஹம் ஹ்ருதி ஸந்நிவிஷ்டோ மத்த: ஸ்ம்ருதிர் ஜ்ஞாநமபோஹநஞ்ச । வேதைஶ்ச ஸர்வை:" இத்யாதி கீதாபஞ்சதஶே. * நல்குரவில்லர்த்தம் போலே யிருக்கையாலே, அத்தைப் பரிஹரிக்கிறார் - இவ்விடத்தில் இத்யாதி. பண்ணு - பண்ணியென்றபடி. "இதென்ன து:கம்" என்றத்தால் ஃபலிதம் - உனக்கு இவை இத்யாதி. 'மயக்காவாமனனே - அயர்ப்பாய்' என்றுதொடங்கி, 'இவையென்னதுயரங்களே - மதியாம் வண்ணமொன்றருளாய்' இத்யந்வய:. (௬)

ஏழாம் பாட்டு.

துயரங்கள்செய்யுங்கண்ணாசுடர்நீள்முடியாய்!அருளாய்
துயரஞ்செய்மானங்களாய் மதனாகி உகவைகளாய்
துயரஞ்செய்காமங்களாய்த் துலையாய்நிலையாய்நடையாய்
துயரங்கள் செய்துவைத்தி இவையென்னசுண்டாயங்களே.

ஆ.—(துயரங்கள்செய்யுங்கண்ணாசுடர்நீள்முடியாய்அருளாய்.)-உன்னுடைய திருவபிஷேகத்தில் அழகாலே நலியுங்க்ருஷ்ணனே, அப்படியே விபூதியினுடைய ஆஸ்சர்யத்தாலேயும் நலிவுபடாமே தெளிவிக்கவேணும். து:கஹேதுவான அபிமாநம், அத்தாலேவந்தமதம், உகப்பு, து:ககரமானகாமம், பரிமாணம், ஸ்திதிகமநங்கள், ஏவம்ரூபமாய் து:காத்மகமான வ்யாபாரங்களைப் பண்ணிவைத்தாய்; இவையென்ன விளையாட்டுக்களென்கிறார். ·

ஒ.—ஏழாம்பாட்டில், து:கஹேதுவான அபிமானந்தொடக்கமான விசித்ர பதார்த்தங்களை விபூதியாக வுடையனா யிருக்கிறஇருப்பை அநுஸந்திக்கிறார்.

[துயரங்கள்செய்யுங் கண்ணாசுடர்நீள்முடியாய்அருளாய்]-உன்னுடைய திருவபிஷேகத்திலழகாலே நலியும் க்ருஷ்ணனே! அப்படியே, விபூதியினுடைய ஆஸ்சர்யத்தாலேயும் நலிவுபடாமே தெளிவிக்கவேணும். [மதனாகி] - அபிமாநத்தாலே வந்த மதம். [துலையாய்] - பரிமாணம்; முடியுமவை என்றுமாம். [நிலையாய் நடையாய்] - ஸ்திதிகமநங்கள். [துயரங்கள்] - இவ்விபூத்யநுஸந்தாநம்பண்ணப் புக்காரை வருத்தும்படி சொல்லுகிறது. சுண்டாயங்கள் - விளையாட்டுக்கள்.

ப.—அநந்தரம், கர்மாநுரூபது:கங்களைப்பண்ணும் ஸ்வாமியான நீ, அந்த து:கஹேதுவான துர்மாநாதிகளை விபூதியாகவுடையையாய்ச் சேதநரை து:கிப்பியாநின்றாய்; இவையென்ன லீலார்த்த ஸ்வார்த்த ப்ரவ்ருத்திகளென்கிறார்.

துயரங்கள் - கர்மாநுரூபமான து:கங்களை, செய்யும் - பண்ணுமிடத்தில், கண்ணா - அவதாரதசையோடு, சுடர்நீள்முடியாய் - பரதசையோடு வாசியறநடத்துமவனே! துயரஞ்செய் - து:கஹேதுபூதமாயிருக்கிற, மானங்களாய் - அபிஜநாதிநிபந்தந துர்மாநங்களாய், மதனாகி - ("வநமதே மதோ:" என்கிறபடியே) அவையடியாகவரும் செருக்கும், உகவைகளாய் - அத்தால்வந்த ப்ரீதிகளுமாய், துயரம் - அபிநிவேசாதி து:கங்களை, செய் - விளைக்கக்கடவ, காமங்களாய் - பதார்த்த த்ருஷ்ணாரூபகாமங்களாய், துலையாய் - அந்தபதார்த்தங்களினுடைய தாரதம்யாபாதக பரிமாணமாய், நிலையாய் நடையாய் - அவற்றினுடையஸ்திதிகமநங்களுமாய், (இப்படி, சேதநர்க்கு), துயரங்கள்-து:கங்களை, செய்து - பண்ணி, வைத்தி - வைப்புதி; இவை-, என்ன சுண்டாயங்கள் - பரதுக்கம்பாராத ஸ்வார்த்தப்ரவ்ருத்திகள்? அருளாய் - அருளிச்செய்யவேணும். சுண்டாயம் - ஸ்வார்த்தப்ரவ்ருத்தி.

இ.—ஏழாம்பாட்டில், து:கஹேதுவான அபிமாநந் தொடக்கமான விசித்ர பதார்த்தங்களை விபூதியாகவுடையனாயிருக்கிறபடியை அநுஸந்திக்கிறார்.

[துயரங்கள்செய்யுங்கண்ணா] - ஆஸ்ரிதர்க்கு து:கத்தைவிளைக்கிறக்ருஷ்ணனே! எத்தாலே நலிவதுஎன்னில்? - [சுடர்நீள்முடியாய்] - திருவபிஷேகத்திலழகைக் காட்டியா

யிற்று நலிவது. தர்ஶநீயமாய் உபயவிபூதிக்கும் சூடின முடி. திருவபிஷேகம் நலிகிறப் போலேயாயிற்று விபூதியோகமும் நலிகிறபடி. [அருளாய்] - இவற்றால்நலிவுபடாத படிபண்ணியருளவேணும். [துயரம்செய்மானங்களாய்] - து:கத்தைப் பண்ணும் துர் மாநங்களாய். "தாஸோஹம் கோஸலேந்த்ரஸ்ய" "தாஸோஹம் வாஸுதேவஸ்ய" என்கிற அபிமாநமாகிலிறே உதேஶ்யமாவது. [மதனுகிஉகவைகளாய்]-துர்மாநத்தாலே வந்த கர்வமும், அதுக்கடியான ப்ரீதியுமாய். [துயரஞ்செய்காமங்களாய்] - "ஸங்காத் ஸஞ்ஜாயதே காம:" என்று தொடங்கி "புத்திநாஶாத் ப்ரணஶ்யதி" என்கிறபடியே, து:கத்தை விளைப்பதான காமம். [துலையாய்]- பரிமாணமாய்: பரிச்சேதகமாய்; முடியு மவையாயென்றுமாம். [நிலையாய்நடையாய்] - ஸ்திதிகமநங்களாலே என்னுதல். ஸ்தா வரஜங்கமங்களைச் சொல்லுதல். [துயரங்கள்செய்துவைத்தி] - து:கங்களைப்பண்ணி வைப்புதி. விபூத்யநுஸந்தாநம் பண்ணப்புக்காரை வருத்தும்படி சொல்லுகிறது. [இவைஎன்னசுண்டாயங்களே] - இவைஎன்ன விளையாட்டுக்கள்? உனக்கு லீலைஎனக்கு து:கரூபமாயிரா நின்றது.

ஈடு.—ஏழாம்பாட்டு. து:கஹேதுவான அபிமாநந்தொடக்கமான விசித்ர பதார்த்தங்களை விபூதியாகவுடையனு யிருக்கிறபடியை அருளிச்செய்கிறார்.

[துயரங்களித்யாதி] - து:கங்களைப்பண்ணக்கடவ க்ருஷ்ணனே! (எத்தாலே நலிவதென்னில்; * முடிச்சோதியிற்படியே திருவபிஷேகத்திலழகைக் காட்டியாயிற்று). [சுடர்நீள்முடியாய்] - (தர்ஶநீயமாய் உபயவிபூதிக்கும் சூடினமுடி.) விபூத்யநுஸந்தாநமும் திருவபிஷேகத்தோபாதி பாதகமாகாநின்றதாயிற்று."'முற்றவிம்மூவுலகும் விரிசின்றசுடர் முடிக்கே யொற்றுமைக்கோண்டது" என்றது பின்னுட்டுகிறது' என்று பிள்ளான். அவனைக் கேட்டறியவேண்டுகையாலே பாதகமாமிறே.[துயரம்செய்இத்யாதி] - "தாஸோஹம்" (தாஸோஹம்)என்கிறஅபிமாநம் அடிக்கழஞ்சுபெற்றிருக்கும்.அங்ஙனன்றிக்கே,"ஸோஹம்" (ஸோஹம்) என்றுது:கத்தைப்பண்ணும் அபிமாநங்களாய். [மதனித்யாதி] - களிப்பும், அதுக்கடியான உகவையுமாய், "ஸங்காத் ஸஞ்ஜாயதே காம: - புத்திநாஶாத் ப்ரணஶ்யதி" (ஸங்காத்ஸம்ஜாயதே காம: - புத்திநாஶாத்ப்ரணஶ்யதி) என்கிறபடியே விநாஶபர்யந்தமான காமங்களாய். அங்ஙனன்றே பகவத்காமம். [துலையாய்] - ப்ரமாண மாய்; நிறுக்குமதாய். [நிலையாய் நடையாய்] - ஸத்தாவர ஜங்கமங்களைச்சொல்லுதல்,

---

ஏழாம்பாட்டு.—துயரம் இத்யாதி. "துயரம்செய்மானங்களாய்" இத்யாதியைக் கடாக்ஷித் தவதாரிகை - து:கஹேதுவான இத்யாதி.

*விபூதியையநுஸந்திக்கிறவிடத்திலே திருவபிஷேகத்தைச்சொன்னதுக்கு பாவம் - விபூதி இத்யாதி. திருவபிஷேகத்தோபாதியென்றது - "நிற்றிமுற்றத்துள்" என்கிறபாட்டைப்பற்ற. விபூத் யநுஸந்தாநமும் திருவபிஷேகமும் பாதகமாகைக்கு ஹேதுவேதென்ன - அவனை இத்யாதி. *முடிச் சோதிப்படியே யவனைக் கேட்டறிய வேண்டுகையாலே யென்றபடி. துயரம்செய்யாத மானமு முண்டோ, இப்படிவிசேஷிக்கிற தென்? என்ன- தாஸோஹம் இத்யாதி வாக்யத்வயத்தாலே. மதன்- களிப்பு, கர்வமித்யர்த்த:. உகவை - ஸந்தோஷம். துயரம்செய்யாத காமமுண்டோ? என்ன - அங்ங னன்றேபகவத்காமம் என்று. "துலை" என்றால் ப்ரமாணத்தைக்காட்டுமோ? என்ன - நிறுக்கு மதாய் என்கிறார். "நிலையாய்" இத்யாதி - தர்மிபரமாதல், தர்மபரமாதலென்று விவக்ஷித்தார்த்தம் - ஸ்த்தாவர இத்யாதி வாக்யத்வயம். "என்னசுண்டாயங்கள்" என்று விசேஷித்ததுக்குபாவம்-உனக்கு*

ஸ்திதிகமனங்களைச்சொல்லுதல்.இப்படி துக்கங்களைப்பண்ணுவியாநின்றாய்.[இவையென்ன சுண்டாயங்களே] - உனக்கு லீலையாயிராநின்றது, எங்களுக்கு க்லேசாவஹமாயிராநின்றது.

எட்டாம் பா

என்னசுண்டாயங்களால்†நின்றிட்டாயென்னையாளுங்கண்ணா?
இன்னதோர்தன்மையையென்றுஉன்னையாவர்க்குந்தேற்றரியை
முன்னியமூவுலகுமவையாய்அவற்றைப்படைத்தும்
பின்னும்உள்ளாய்!புறத்தாய் இவையென்ன இயற்கைகளே.

ஆ.—(என்னசுண்டாயங்கள்.) - என்னலீலாயுக்தனாய் யடிமைகொள்ளுகிற க்ருஷ்ணனே? இன்னதொரு ஸ்வபாவமென்று ஜ்ஞாநாதிகர்க்கும் அறியவொண்ணாத நீ, பழையதான மூவுலகுக்குங்கடவையாய் அவற்றை ஸ்ருஷ்டித்து, பின்னையும்அந்தர்ப்பஹிஸ்ச வ்யாபித்துநின்றாய். இவையென்னஆஸ்சர்யம்! என்கிறார்.

ஒ.—எட்டாம்பாட்டில், ஸகலஜகத்தையும் ஸ்ருஷ்டித்து அந்தர்பஹிஸ்ச வ்யாபித்து இப்படி நிர்வஹியாநின்றுவைத்து ஊர்ஜ்ஜேயனாயிருக்கிறஇது என்ன ஆஸ்சர்யம்! என்கிறார்.

ப.—அநந்தரம்,அதிசயிதஜ்ஞாநர்க்கும் அவபோதிக்கைக்குஅரியையாய்க் கொண்டு ஸகலஜகத்துக்கும் ஸ்ருஷ்ட்யாதிகளைப் பண்ணாநின்றாய்; இவையென்ன செய்திகளா யிருக்கிறதென்கிறார்.

என்னசுண்டாயங்களால் - ஸ்வார்த்தமாயுள்ள என்ன லீலாவ்யாபாரங்களாலே, எங்ஙனே - என்ன ப்ரகாரத்திலே, நின்றிட்டாய் - நின்றாய், என்கண்ணா - எனக்கு வ்யனான க்ருஷ்ணனே? இன்னதோர் - இன்னபடிப்பட்ட, தன்மையை-ஸ்வபாவத்தை யுடையை, என்று - , உன்னை - அபரிச்சிந்நஸ்வபாவனான வுன்னை, யாவர்க்கும் - அதிசயித ஜ்ஞாநராயிருப்பார்க்கும், தேற்ற - நிர்ணயித்துக்காட்ட, அரியை - அரியையாயிருப்புதி;முன்னிய - ப்ரவாஹாநாதியாயிருப்பதாய், மூவுலகும் - க்ருதகாதிபேதத்தை யுடைத்தான மூன்றுலோகத்தையும், அவையாய் - ததாத்மகனாய், அவற்றை - , படைத்து - ஸ்ருஷ்டித்து, பின்னும் - அதுக்கு மேலே, உள் - அநுப்ரவேச நிபந்தநமான அந்தர்வ்யாப்தியையும், புறம் - ஆதாரத்வ நிபந்தநமான பஹிர்வ்யாப்தியையும், ஆய் - உடையை யாகாநின்றாய்; இவை - , என்ன - , இயற்கைகள் - ஸ்வாபாவிக வ்ருத்திகளாயிருக்கிறன.

இ—எட்டாம்பாட்டில், ஸகல ஜகத்தையும் ஸ்ருஷ்டித்து வ்யாபித்து நிர்வஹியா நின்றுவைத்து ஊர்ஜ்ஜேயனாயிருக்கிறஇது என்ன ஸ்வபாவம்!என்கிறார்.

லீலை இத்யாதிவாக்யத்வயம். சுண்டாயம் - லீலையும், ஸ்வார்த்தப்ரவ்ருத்தியும். 'துயரங்கள்செய்யுங் கண்ணா, சுடர்நீள்முடியாய் - துயரம்செய்மானங்களாய்' என்றுதொடங்கி, 'என்னசுண்டாயங்கள் - அருளாய்' இத்யந்வயः (எ)

---

† 'எங்ஙனே நின்றிட்டாய்' என்று உரைக்கும் இருபத்துநாலாயிரத்துக்கும் பாடம்.

[என்னசுண்டாயங்களால் எங்ஙனே நின்றிட்டாய்]-என்னலீலைகளையுடையை யாய்க்கொண்டு என்ன ப்ரகாரத்தாலே நின்றாய்! லோகத்திற்காண்கிற லீலையிற்காட்டில் லீலையும் வ்யாவ்ருத்தமாயிராநின்றதீ? [என்கண்ணா] - எனக்குஸுலபனான க்ருஷ்ணனே! [இன்னதோரித்யாதி] — இன்னபடிப்பட்ட ஸ்வபாவத்தை யுடையையாய்க்கொண்டு இன்னப்ரகாரத்தாலே நின்றாயென்று, ஸர்வகாரணபூதனாயிருந்துள்ள உன்னை எத்தனை யேனும் அதிசயித ஜ்ஞாநரான ப்ரஹ்மாதிகளுக்குங்கூட அறியவொண்ணாதிருந்தி. "யந்நாயம்ஸமவாந் ப்ரஹ்மா ஜாநாதிவாஸவேஷாத்தம்". [முன்னியமூவுலகுமவை யாய்] - ப்ரவாஹரூபேண பழையதாய்ப் போருகிற ஸகலலோகங்களையும் உடையை யாய். மூவுலகங்கள் - க்ருதகம், அக்ருதகம், க்ருதகாக்ருதகம்; த்ரிவித சேதநரென்றுமாம். [அவற்றைப்படைத்து] - லோகங்களானபோது, அவற்றை ஸ்ருஷ்டித்தென்னக் கடவது; த்ரிவித சேதநரானபோது, ஜ்ஞாநவிகாஸவிசேஷங்களாகக்கடவது. [பின்னும் உள்ளாய்புறத்தாய்] - இதுக்குமேலே, "அந்தர்பஹிஸ்ச" என்கிறபடியே வ்யாபித்து நிற்கிறவனே! [இவையென்னஇயற்கைகளே] - இவை யென்ன விலக்ஷணஸ்வபாவம்!

ஈடு.—எட்டாம்பாட்டு. ஸகலஜகத்தையும் ஸ்ருஷ்டித்து அந்தர்பஹிஸ்ச வ்யாபித்து இப்படி நிர்வஹித்துவைத்து துர்ஜ்ஞேயனாயிருக்கிற இது என்னஆஸ்சர்யம்

[என்னவித்யாதி] - என்னலீலைகளையுடையையாய் நிற்கிறாய், என்னை யடிமை கோள்ளுகிற க்ருஷ்ணனே! [இன்னதோரித்யாதி] - இன்னபடிப்பட்ட ஸ்வபாவத்தை யுடையையென்று, ஸர்வகாரணபூதனான வுன்னை, எத்தனையேனும் அதிசயிதஜ்ஞாநரான வர்களாலும் அறியவொண்ணாதபடி நிற்புதி: "ப்ரஹ்மாபிநவேத்த்யல்பம்ப்ரயத்நதः" (ப்ரஹ்மாபிநவேத்த்யல்பம்ப்ரயத்நதः) என்கிறபடியே. [முன்னியமூவுலகுமவையாய்] - ப்ரவாஹரூபத்தாலே பழையதாய்ப் போருகிற மூவுலகுக்கும் கடவையாய். த்ரிவிதசேதந ரென்னுதல், த்ரைலோக்யமென்னுதல். [அவற்றைப்படைத்து] - விபூதியானபோது, அவற்றையுண்டாக்கி யென்கிறது; சேதநரானபோது, அவர்களுக்கு ஜ்ஞாநவிகாஸத்தை யுண்டாக்கி யென்கிறது. [பின்னும் உள்ளாய்புறத்தாய்] - * அந்தர்பஹிஸ்ச வ்யாபித்திருக் கிறவனே! [இவையென்ன இயற்கைகளே] - உனக்கு இவைதான் லீலையாயிராநின்றது, எங்களுக்கு இவைதான் ஆஸ்சர்யமா யிராநின்றது. (அ)

எட்டாம்பாட்டு.—என்னசுண்டாயங்கள் இத்யாதி. "அவற்றைப்படைத்துப் பின்னும் உள்ளாய்- இன்னதோர் தன்மையையென்று உன்னை யாவர்க்கும் தேற்றரியை;என்ன இயற்கைகளே!" என்றபதங்களைக் கடாக்ஷித்தவதாரிகை - ஸகலஜகத்தையும் இத்யாதி.

சுண்டாயம் - லீலை. தேற்றரியை - தெளிகைக்கு சக்யனல்லாதவனே. அறியவொண்ணாமைக்கு ப்ரமாணம் - ப்ரஹ்மாபி இத்யாதி. "முன்னிய" என்றது - ப்ரவாஹரூபேண நித்யமா யென்றபடி. பதார்த்தம் - ப்ரவாஹரூபத்தாலே இத்யாதி. இயற்கை - செய்தி. அதாவது வ்யா பாரம். 'முன்னிய' என்றுதொடங்கி, 'புறத்தாய் - என்ன சுண்டாயங்களால் நின்றிட்டாய் என்னை யாளும் கண்ணா, இன்னதோர் தன்மையையென்று உன்னை யாவர்க்கும் தேற்றரியை - இவையென்ன இயற்கைகளே' இத்யந்வயः. "தேற்றரியை" என்றது - தேற்றரியனாய் நிற்புதி யென்றபடி. (அ)

ஒன்பதாம் பாட்டு.

என்னவியற்கைகளாலெங்ஙனேநின்றிட்டாய்என்கண்ணா !
துன்னுகரசரணமுதலாக எல்லாவுறுப்பும்
உன்னுசுவையொளி ஊறொலிநாற்றம்முற்றும் நீயே
உன்னையுணரவுறில்உலப்பில்லை நுணுக்கங்களே.

ஆ.—(என்னவியற்கைகள்.)-என்ன ஸ்வபாவங்களையுடையனாய் எந்த ஆகாரத்திலே நிற்கிறாய்? எனக்கு வஶ்யனான க்ருஷ்ணனே! நெருங்கின கரசரணம் முதலான எல்லாவுறுப்பும் - அவயவங்களுக்கும், ரஸம், ரூபம், ஸ்பர்ஶம், ஶப்தம், கந்தம் இவையெல்லாவற்றுக்கும் கடவையான உன்னை அநுஸந்திக்கப்புக்கால் உன்னுடைய வைலக்ஷண்யத்துக்கு முடிவில்லை யென்கிறார்.

ஒ.—ஒன்பதாம்பாட்டில், ஜ்ஞாநேந்த்ரியங்களும் கர்மேந்த்ரியங்களும் ஶப்தாதி விஷயங்களும் அவனுக்கு விபூதியாயிருக்கிற இருப்பை அநுஸந்திக்கிறார். [உன்னையுணரவுறிலுலப்பில்லை நுணுக்கங்களே] - உன்னை அநுஸந்திக்கப்புகில் உன்னுடைய வைலக்ஷண்யத்துக்கு முடிவில்லை.

ப.—அநந்தரம், இப்படி அறியவரியையாயிருக்கைக்கு அடியான அதி ஸௌக்ஷ்ம்யத்தாலே அக்காரணங்களோடு விஷயங்களோடுவாசியற வ்யாபரித்து நிற்கிற நிலை என்னாயிருக்கிறது? என்கிறார்.

(உன்னுடைய ஆகாரங்களைக்காட்டி), என்னை-, ஆளும்-அடிமைகொள்ளுகிற, கண்ணா - க்ருஷ்ணனே! (ஒருபடியென்று நிஷ்கர்ஷிக்க வொண்ணாதபடி), என்ன இயற்கைகளால் - என்னப்ரகாரங்களாலே, நின்றிட்டாய் - நின்றருளினாய்? துன்னு - (ஶரீரத்திலே) செறியக்கடவதாய், கரசரணம்முதலாக - கரசரணாதிகளான கர்மேந்த்ரியங்களும் ஜ்ஞாநேந்த்ரியங்களுமான, எல்லாவுறுப்பும்-எல்லாக்கரணங்களும்; உன்னு-மநஸ்ஸோடே ப்ரவணமாயுத்யோகிக்கும்படியான, சுவையொளியூறொலிநாற்றம்- ரஸ ரூப ஸ்பர்ஶ ஶப்த கந்தங்களாகிற, முற்றும் - ஸகலவிஷயங்களும், நீயே - நீயேயாம்படி, உன்னை - (அவற்றுக்கு அந்தராத்மாவான) உன்னை, உணரவுறில் - நிரூபிக்கநினைக்கில், ("அணீயஸாம் - அணீயாம்ஸம்" என்கிறபடியே), நுணுக்கங்கள் - ஸௌக்ஷ்ம்யங்கள், உலப்பு - முடிவு, இல்லை - இல்லையாயிருக்கும்.

இ.—ஒன்பதாம்பாட்டில், ஜ்ஞாநேந்த்ரிய கர்மேந்த்ரியங்களும் ஶப்தாதிகளும் அவனுக்கு விபூதியாயிருக்கிற இருப்பை அநுஸந்திக்கிறார்.

[என்னஇயற்கைகளால் நின்றிட்டாய்] - என்ன ஸ்வபாவங்களையுடையையாய்க்கொண்டு நிற்கிறாய்? [என்னையாளுங்கண்ணா] - என்னை அடிமைகொள்ளுகிற க்ருஷ்ணனே! [துன்னுஇத்யாதி] - நெருங்கப்பட்டிருந்துள்ள கரசரணாதிகளும் ஶ்ரோத்ராதிகளுமான எல்லா இந்த்ரியங்களுமாய். [உன் இத்யாதி] - ஆசைப்படப்படுவதான ஶப்தாதிகளுக்கு நிர்வாஹகனானவனே! உன்னுகை - அநுஸந்திக்கை, ஆசைப்படுகை. ஒளி - ரூபப்ரகாஶம். [உன்னை உணரவுறில்] - உன்னுடைய பெருமையையும் ஸௌக்ஷ்ம

தையையும் அநுஸந்திக்கப்புக்கால், உன்னுடைய வைலக்ஷண்யத்துக்கு முடிவில்லை. "அணீயாம்ஸமணீயஸாம்"

ஈடு.—ஒன்பதாம்பாட்டு. ஜ்ஞாநேந்த்ரியங்களும் கர்மேந்த்ரியங்களும் ஶப்தாதி விஷயங்களும் அவனுக்கு விபூதியாயிருக்கிற இருப்பை அநுஸந்திக்கிறார்.

[என்னவியற்கைகளால் எங்ஙனே நின்றிட்டாய் என்கண்ணா] - என்ன ஸ்வபாவங்களையுடையையாய்க்கொண்டேஎன்னப்ரகாரத்தாலே நிற்கிறாய்?எனக்குஸுலபனான க்ருஷ்ணனே! [துன்னு இத்யாதி] - நெருங்கியிருந்துள்ள கரசரணங்கள் தொடக்கமான எல்லாவவயவங்களுக்கும், அநுஸந்திக்கப்படுவதாய் ஆசைப்படப்படுவதாயிருந்துள்ள ஶப்தாதிகளுக்கும்கடவையாயிருந்தாய். [உன்னையுணரவுறில்] - உன்னையறியப்புகில். [உலப்பில்லைநுணுக்கங்களே] - உன் வைலக்ஷண்யங்களுக்கு முடிவில்லை. "**அணீயாம்ஸமணீயஸாம்**" (அணீயாம்ஸமணீயஸாம்) என்கிறபடியே, அசித்வஸ்துவை ஸூக்ஷ்ம ரூபதயா எங்கும்புக்கு வ்யாபித்திருக்கும் ஆத்மவஸ்து, இவ்விரண்டிலும் ஸூக்ஷ்மரூபேண வ்யாபித்திருப்புதி. (உன்னை நிரூபிக்கப்புகில் ஸௌக்ஷ்ம்யங்கள் முடிவில்லையாயிருக்கும். நுணுக்கம் - ஸௌக்ஷ்ம்யம்.) (௯)

பத்தாம் பாட்டு.

இல்லைநுணுக்கங்களே இதனிற்பிறிதென்னும்வண்ணம்
தொல்லைநன்னூலிற்சொன்னவுருவும்அருவும்நீயே
அல்லித்துழாயலங்கல்அணிமார்ப!என்னச்சுதனே!
வல்லதோர்வண்ணஞ்சொன்னால் அதுவேயுனக்காம்வண்ணமே.

ஆ.—(இல்லை) - இதிற்காட்டில், பிறிது - வேறு ஸூக்ஷ்மமில்லையென்னும்படி பழயதான வேதாந்தத்திலேசொன்ன அசித்துக்கும் சித்துக்கும் நிர்வாஹகனானவனே! அல்லியையுடைய திருத்துழாய்மாலையாலே யலங்க்ருதமான அழகியமார்பையுடையையாய், இவ்வழகுக்கு ஒருநாளுமொழிவில்லாதவனே! வேதங்களும் ஸநகாதி

ஒன்பதாம்பாட்டு.—என்ன இயற்கைகளால் இத்யாதி. "துன்னுகரசரணம்" இத்யாதியைக் கடாக்ஷித்தவதாரிகை - ஜ்ஞாநேந்த்ரியங்களும் இத்யாதி.

இயற்கை - ஸ்வபாவம். உறுப்பு - அவயவம். "எல்லாவுறுப்பும்" என்று கரசரணங்களையொழிந்த சர்வஜ்ஞாநேந்த்ரியங்களைச்சொல்லுகிறது. "உன்னு" என்றதுக்கர்த்தம் - அநுஸந்திக்க இத்யாதி. "அநுஸந்திக்கப்படுவதாய்" என்றதின் விவரணம் - ஆசைப்படப்படுவதாயிருந்துள்ள என்று. ஊறு - ஸ்பர்ஶம். ஒளி - ரூபம். நுணுக்கம் - ஸூக்ஷ்மதையால் வந்த வைலக்ஷண்யம். வைலக்ஷண்யங்களேதென்ன - அணீயாம்ஸம் இத்யாதிவாக்யத்வயம். "நாராயணமஶேஷாணாமணீயாம்ஸமணீயஸாம் । ஸமஸ்தாநாம்மஹிஷ்டம்ச ஶ்ரேஷ்டாநாம்ஶ்ரீயஸாம்" இதி ஸ்ரீ விஷ்ணுபுராணே. (௪0) "ப்ரஶாஸிதாரம்ஸர்வேஷாமணீயாம்ஸமணீயஸாம் । ருக்மாபம்ஸ்வப்நதீகம்யம் வித்யாத்தம்புருஷம்பரம்" இதி மாநவே. (க,உஉ) (௯)

யோகிகளும் உன்னுடைய ஸ்வரூபரூபகுணவிபூதிகளைப் பேசப்புக்கால் பேசினஅம்ஸம் பேசிற்றாமித்தனைபோக்கி, பேசாததுக்கு அவதியில்லை. அதவா, உனக்கு நல்லாராய் உன் குணங்களிலே ஈடுபட்டிருப்பார், உன்னை ஏதேனும் ஒருபடி பேசினால் அதுவே யுனக்காம் ப்ரகாரமென்கிறார்.

ஒ.—பத்தாம்பாட்டில், வேதைகஸமதிகம்யமாய் காரணமாய் அதிஸூக்ஷ்மமாயிருந்துள்ள சேதநாசேதநங்களை விபூதியாக உடையவனுடைய இருப்பை அநுஸந்திக்கிறார்.

[அல்லித்துழாய் அலங்கலணிமார்ப என்னச்சுதனே] - அல்லியையுடைய திருத்துழாய்மாலையாலே அலங்க்ருதமான அழகிய மார்பையுடையையாய் இங்ஙனேயிருக்கிற அழகுக்குஒருநாளுமொழிவில்லாதவனே! சேதநாசேதநங்களை விபூதியாகவுடையனாயிருக்கிற இருப்பு, இத்திருத்துழாய்மாலைபோலே தகுதியாயிருக்குமென்று கருத்து. [வல்லதோர் வண்ணஞ்சொன்னாலதுவே யுனக்காம்வண்ணமே] - வேதங்களும் ஸநகாதிபரமயோகிகளும் உன்னுடைய ஸ்வரூபகுண விபூதிகளைப் பேசப்புக்கால் "யதோ வாசோ நிவர்த்தந்தே" என்னும்படியாலே உனக்குப்பேசின அம்ஸம்பேசிற்றா மித்தனைபோக்கிப் பேசாததுக்கு அவதியில்லையென்று கருத்து. உனக்கு நல்லார் உன்குணங்களிலே யீடுபட்டிருப்பார், எத்தனையேனும்அளவில்லாதாரேயாகிலும், அவர்களேதேனும் ஒருபடி பேசினால் "நம்மை உள்ளபடியேகண்டு ஸத்ருஸமான பேச்சுப் பேசுகிறார்" என்றிறே உன்திருவுள்ளக் கருத்து.

ப.—அநந்தரம், நித்யமான வேதைகவேத்யமாயுள்ள ஸூக்ஷ்ம சிதசித்வஸ்துக்களை ப்ரகாரமாக வுடைய நீ, வாசாமகோசரமஹிமா என்கிறார்.

இதனில் - இதிற்காட்டில், பிறிது - வேறு, நுணுக்கங்கள் - ஸௌக்ஷ்ம்யம், இல்லை -, என்னும்வண்ணம் - என்னும்படி, தொல்லை - அநாதியாய், நல் - அபௌருஷேயத்வாதி குணயோகத்தையுடைத்தான, நூலில் - வேதஸாஸ்த்ரத்திலே, (அவ்யக்தாக்ஷராவஸ்த்தையிலும்அதிஸூக்ஷ்மமாக), சொன்ன - தமஸ்ஸப்தத்தாலேசொல்லப்பட்ட, உருவும் - அசித்தும், அருவும் - சித்தும், நீயே - "ஸதேவ" (ஸதேவ) என்கிறமர்யாதையாலே நீயேயானாய்; (இப்படிசிதசிச்சரீரியானவளவன்றியே), அல்லி - பூந்தாரையுடைத்தான, துழாயலங்கல் - திருத்துழாய்மாலையை, அணி - அலங்காரமாகவுடைய, மார்ப - திருமார்பையுடையனாய், என் -, அச்சுதனே - அப்ரச்யுதாகாரனான விலக்ஷணவிக்ரஹயுக்தனே! (இப்படியிருக்கிற வுன்னுடைய ஸர்வப்ரகாரவைபவத்தை), வல்லதோர் வண்ணம்-வல்லப்ரகாரம், சொன்னால்-(வேதாதிகள்) சொன்னாலும், உனக்கு-, அதுவே-, வண்ணம் - ப்ரகாரம், ஆம் - ஆம்படி: (ஆஸ்ரிதஸவ்யனாயிருப்புதி.)

இ.—பத்தாம்பாட்டில், வேதைகஸமதிகம்யமான காரணாவஸ்தையில் அதிஸூக்ஷ்மசேதநாசேதநங்களை விபூதியாகவுடையையாயிருக்கிறபடியை அநுஸந்திக்கிறார்.

[இல்லை நுணுக்கங்களே இதனில் பிறிதென்னும்வண்ணம்] - நுணுக்கங்கள் இனிற்பிறிதில்லை என்னும்படி. நுணுக்கங்கள் - ஸூக்ஷ்மபாவங்கள். சிதசிதீஸ்வர தத்வத்ரயங்களுடையவும் ஸூக்ஷ்மபாவங்களுக்கெல்லாம் எல்லைநிலமிறே, காரணாவஸ்தை. [தொல்லை நன்னூலிற்சொன்ன] - பழையதாய்ப் ப்ரமாணஸ்ரேஷ்டமான வேதத்திற்சொல்லுகிற அசேதநத்துக்கும், அதிற்காட்டில் ஸூக்ஷ்மமான சேதநபதார்த்

தத்துக்கும் நிர்வாஹகன் நீயே. "ஸதேவஸோம்யேதமக்ர ஆஸீத்" என்கிறபடியே நாமரூபங்களையிழந்து தமஶ்ஶப்தவாச்யமாய், "தத்ஸ்ருஷ்ட்வா ததேவாநுப்ராவிஶத்" என்கிறபடியே அவன் தன்னைச் சொல்லுகிற சொல்லாலே சொல்லலாம்படியிருக்கை. [அல்லியித்யாதி]- ஜகதாகாரனான நிலைபோலன்றியே, அஸாதாரண விக்ரஹயுக்தனாய்க்கொண்டு நித்ய விபூதியிலே ஒருபடிப்பட இருக்கும்இருப்பைச் சொல்லுகிறது. அல்லியையுடைத்தான திருத்துழாய்மாலையாலே அலங்க்ருதமான திருமார்பையுடையையாய், அவ்விருப்புக்கு ஒருநழுவுதலின்றியே இருக்கிறவனே! சேதநா சேதநயோகமும், திருத்துழாய் மாலைபோலே தகுதியாயிருக்குமென்கை. [வல்லதோர்இத்யாதி] - வேதங்களும் ஸநகாதிகளும்யதாபலம் பேசப்புக்கால்,பேசினஅம்ஶம் உன்னைப்பேசிற்றுமத்தனையல்லது, "யதோ வாசோ நிவர்த்தந்தே" என்று சொல்லப்படுகிற உன்னை பரிச்சேதிக்க வொண்ணாதென்கை. எத்தனையேனும் தாழ்ந்தானொருவனாகிலும் அநந்யப்ரயோஜநனாகில், அவன் சொன்னவளவு உனக்களவாய், அவ்வருகில்லாதபடி இருக்கிறவனென்றுமாம்.

ஈடு.—பத்தாம்பாட்டு. வேதைகஸமதிகம்யனாய்க்காரணமாய்அதிஸூக்ஷ்மமாயிருந்துள்ள சேதநாசேதநங்களை விபூதியாகவுடையனா யிருக்கிறபடியை யருளிச்செய்கிறார்.

[இல்லைநுணுக்கமித்யாதி] - இதிற்காட்டில் வேறு ஸூக்ஷ்மமாயிருப்பதில்லையேன்னும்படி. அதாவது - இவற்றுக்கு "தனக்கு" என்ன ஒருநாமரூபங்களின்றிக்கே ப்ரஹ்மத்தினுடைய நாமரூபங்களையிட்டு வ்யவஹரிக்கவேண்டும்படி, காரணாவஸ்த்தமாயிருக்கிறசேதநாசேதநங்கள் நீயிட்ட வழக்கு. [தொல்லை நன்னூலிற்சொன்ன] - "**ஸதேவஸோம்யேதமக்ர ஆஸீத்**" (ஸதேவஸோம்யேதமக்ரஆஸீத்) என்றதிறே. (பழைய தாய்ப் ப்ரமாணஶ்ரேஷ்ட்டமான வேதத்திலே சொல்லுகிறஅசேதநத்துக்கும், அதிற்காட்டில் ஸூக்ஷ்மமான சேதநபதார்த்தத்துக்கும்நிர்வாஹகன்நீயே.) ஆக, ஜகதாகாரனாயிருக்கும் இருப்பைச்சொல்லிற்று. [அல்லித்துழாயித்யாதி] - நித்யவிபூதியுக்தனாயிருக்கும் படியைச் சொல்லுகிறது. அல்லியையுடைத்தான திருத்துழாய்மாலையாலே யலங்க்ருதமான திருமார்பையுடையையாய், அவ்விருப்புக்கு ஒருநாளும்அழிவில்லாதபடி பரமபதத்திலே யெழுந்தருளியிருக்கிற இருப்பை எனக்கு ப்ரகாசிப்பிக்கிறவனே! [வல்லதோரித்யாதி] - இதுக்குஇரண்டுபடியாக அருளிச்செய்வர்: இவன் தனக்குள்ளஅளவேல்லாங் கோண்டுபேசினால், உன்பக்கல் சிலசோல்லிற்றும் அத்தனைபோக்கியல்லது, உனக்குஓர் இயத்தை யில்லையிறேயேன்னுதல்; அப்போதைக்கு, அதுவே யுனக்காம்வண்ணம்?-அது அன்றேன்கிறது. மற்றைப்படிக்கு, உன்பக்கல் ஸ்நேஹிகளாயிருப்பா ரேத்தனையேனும் மளவின்றிக்கே யிருந்தார்களாகிலும், அவர்கள் ஒன்றைச்சொன்னால், ஸ்ரீவைகுண்டத்

பத்தாம்பாட்டு.—இல்லை இத்யாதி. "தொல்லைநன்னூலிற்சொன்ன - இல்லைநுணுக்கங்களே-இதனில் பிறிதென்னும்வண்ணம்-உருவும்அருவும்நீயே" என்றபதங்களைக் கடாக்ஷித்தவதாரிகை- வேதைக இத்யாதி. அதிஸூக்ஷ்மமா யிருந்துள்ளவென்றது - காரணாவஸ்த்தையைப்பற்ற.

"இதனிற்பிறிது - நுணுக்கங்கள் - இல்லை - என்னும்வண்ணம்" என்றந்வயித்தர்த்தம் - ிற்காட்டில் இத்யாதி. ஏதத்விவரணம்-அதாவது இத்யாதி. வேதத்திலெங்கே சொல்லிற்றென்ன- ஸதேவ இத்யாதி. ஶப்தார்த்தம் - அல்லியை இத்யாதி. முந்தினவர்த்தத்துக்கு, "அதுவே" என்ற ஏகாரம் - எதிர்மறை; வ்யதிரேகார்த்தகமென்றபடி. த்விதீயார்த்தத்துக்கு, தேற்றேகாரம். நிஶ்சயார்த்

திலேநித்யஸூரிகள்நடுவே அவர்கள் தங்களுக்குங்கூடப் பேச்சுக்கு நிலமன்றிக்கே யிருக்கிற நம்மை ஸம்ஸாரத்திலே அதிக்ஷுத்ரனுயிருக்கிற இவன்அறிந்தானுகச்சோல்லுவதே? என்று சீறுகையன்றிக்கே, இவன்சொன்னதுவே தனக்களவாக நினைத்திருக்குமென்கிறது. (௯)

பதிஞேராம் பாட்டு.

ஆம்வண்ணமின்னதோன்றேன்று அறிவதரியவரியை
ஆம்வண்ணத்தால்குருகூர்ச்சடகோபனறிந்துரைத்த
ஆம்வண்ணவோண்தமிழ்களிவையாயிரத்துளிப்பத்தும்
ஆம்வண்ணத்தாலுரைப்பார்அமைந்தார்தமக்கேன்றைக்குமே.

ஆ.— (ஆம்வண்ணம்) - ஒருவராலும் ஒருவகையும் அறியவொண்ணுத ஸர்வேஶ்வரனை யுள்ளபடியேயறிந்து அங்குத்தைக்கு ஸத்ருஶமாக ஆழ்வாரருளிச்செய்த ஆயிரத்திலும் இத்திருவாய்மொழியை யதாஶக்தி சொல்லுமவர்களே, என்றைக்கும் க்ருதக்ருத்யரென்கிறுர்.

ஒ.—நிமமத்தில், ஒருவராலும் ஒருவகையும் அறியவொண்ணுத ஸர்வேஶ்வரனை உள்ளபடியே அறிந்து அங்குத்தைக்கு ஸத்ருஶமாக ஆழ்வார் அருளிச்செய்த ஆயிரந்திருவாய்மொழியிலும் இத்திருவாய்மொழியை யதாஶக்தி சொல்லுமவர்கள் என்றைக்கும் க்ருதக்ருத்யரென்கிறுர். ஆம்வண்ணவொண்தமிழாவது - நல்ல சந்தஸ்ஸுக்களையுடைத்தான அழகிய தமிழென்றுமாம்.

ப.—அநந்தரம், இத்திருவாய்மொழியை யப்யஸிக்கவல்லவர்கள், யாவதாத்மபாவி அநுபவத்துக்கு ஈடாகச் சமைந்தார்களென்று ஃபலத்தை யருளிச்செய்கிறுர்.

ஆம் - உண்டான, வண்ணம் - ப்ரகாரம், இன்னதொன்று - இன்னபடிப்பட்டிருப்பது ஒன்று, என்று அறிவது - என்றுஅறிகைக்கு, அரிய - அரியனுன, அரியை - ஸர்வேஶ்வரனை, குருகூர்ச்சடகோபன் - * மயர்வறமதிநலமருளப்பெற்ற ஆழ்வார், ஆம்வண்ணத்தால் - உள்ளபடி, அறிந்து-, உரைத்த-(அங்குத்தைக்குஅநுரூபமாக) அருளிச்செய்த, வண்ணம்- சந்தஸ்ஸை, ஆம் - உடைத்தாய், ஒண்-ஸர்வாதிகாரமாகிற நன்மையையுடைத்தான, தமிழ்கள் - தமிழாயுள்ள, இவை ஆயிரத்துள் -, இப்பத்தும் - இந்தப்பத்தையும், ஆம்வண்ணத்தால் - தங்கள் ப்ரகாரத்துக்கீடாக, உரைப்பார் - சொல்லவல்லவர்கள், தமக்கு- தங்களுக்கு, என்றைக்கும்-யாவதாத்மபாவியான அநுபவத்துக்கு ஈடாக, அமைந்தார் - சமைந்தார்கள். இது - கலிவிருத்தம்.

இ.—நிமமத்தில், இத்திருவாய்மொழியை யதாஶக்தி சொல்லுகிறவர்கள், எற்றைக்கும் க்ருதக்ருத்யரென்கிறுர்.

தகமென்றபடி. 'அல்லித்துழாயலங்கலணிமார்ப! என்னச்சுதனே! இதனிற்பிறிது நுணுக்கங்கள் - இல்லை என்னும்வண்ணம் தொல்லை நன்னூலிற்சொன்ன உருவும்அருவும்நீயே; வல்லதோர்வண்ணம் இத்யாரப்யார்வய:.

(௧௦)

[ஆம்வண்ணமித்யாதி]-ஒருவராலும் ஒருவகையாலும் உள்ளவளவு இதென்று அறியவொண்ணாதபடியிருக்கிற ஸர்வேச்வரனையாயிற்றுக் கவிபாடிற்று. "யதோவாசோநிவர்த்தந்தே" என்று ஸ்வரூபரூபகுணவிபூதிகளில் ஒருவகையும் பரிச்சேதிக்க வொண்ணாதிருக்கை. [ஆம்வண்ணத்தாலித்யாதி] - அவனையுள்ளபடியறிந்து அந்குத்தைக்கு ஸத்ருசமாக அருளிச்செய்தாராயிற்று இவர். விஷயம் அபரிச்சிந்நமாயிருக்கச்செய்தேயும், "மயர்வறமதிநலமருளினன்" என்று அவன்தானேகொடுத்த ஜ்ஞாநமாகையாலே உள்ளபடியை அறிந்தருளிச்செய்தார். ஸ்வயத்நத்தாலே காணப்பார்க்கிலிறே அறிகையில் அருமையுள்ளது. [ஆம்வண்ணவொண்தமிழ்கள்] - அவனுக்குத் தகுதியாயிருந்துள்ள நல்லதமிழென்னுதல்; வண்ணமென்று - ஓசையாய், நல்ல ஓசையையுடைய தமிழென்னுதல்; தகுதியாயிருந்துள்ள நல்லஸந்தஸ்ஸுக்களை யுடைத்தான தமிழென்னுதல். [ஆம்வண்ணத்தாலுரைப்பார்] - இவர் தம்மைப்போலே மயர்வற்றுச் சொல்லவேணுமென்னும் நிர்ப்பந்தமில்லை; வல்லபடி சொல்லுமவர்கள். [அமைந்தார் தமக்கென்றைக்குமே] - இவ்வாத்மவஸ்து உள்ளதனைகாலம் ஈச்வரன் முழங்கைத்தண்ணீர் வேண்டாதே, ஆழ்வார்பரிக்ரஹத்தாலே என்றுமொக்க நித்யாநுபவம் பண்ணச் சமைந்தாராவர்கள்.

ஈடு.—நிகமத்தில் அங்குத்தைக்குத் தகுதியாக ஆழ்வாரருளிச்செய்த ஆயிரந்திருவாய்மொழியிலும் இத்திருவாய்மொழியை யதாசக்தி சொல்லவல்லார் என்றைக்கும் க்ருதக்ருத்யரென்கிறார்.

[ஆம்வண்ணமித்யாதி] - இன்னபடிப்பட்டிருப்பதோரு ஸ்வபாவத்தையுடையவனென்றுகொண்டு ஒருவராலும் அறியவரியனாயிருக்கிற ஸர்வேச்வரனைக் கவிபாடிற்று. "யதோவாசோநிவர்த்தந்தே" (யதோவாசோநிவர்த்தந்தே) என்று வேதங்களும் மீண்டவனையாயிற்றுப் பேசிற்று [ஆம்வண்ணமித்யாதி] - அவனுக்குத் தகுதியாம்படி யாழ்வா ரருளிச்செய்த. அறிவதரிய அரியை என்றதாகில் ஆம்வண்ணத்தாலுரைக்கையாவதேன்? வ்யாஹதமன்றோ? என்னில்—[அறிந்துரைத்த] - அவன் * மயர்வறமதிநலமருளவாயிற்று இவர்பேசிற்று. ஸ்வயத்நத்தாலே யறியப்பார்க்கிலிறே அரிதென்றது; அவன்கொடுத்த அறிவுகொண்டுஅறிவார்க்குக் குறையில்லையிறே. "நெறிவாசல்தானே

நிகமம்.—ஆம்வண்ணம் இத்யாதி. "ஆம்வண்ணத்தால்" என்றுதொடங்கி, "அமைந்தார் தமக்கென்றைக்கும்" என்னுமளவும் கடாக்ஷித்தவதாரிகை - அங்குத்தைக்கு இத்யாதி.

"இன்னதொன்று - ஆம்வண்ணம் - என்று அறிவதரியவரியை" என்றந்வயம். இன்னபடிப்பட்டதொன்று அவனுக்காம் ஸ்வபாவம்என்று அறியவொண்ணாத ஸர்வேச்வரனை என்று இதுக்கு ஸம்தார்த்தம். இத்தால்பலித்தபாவம் - இன்னபடி இத்யாதி. அப்படி யறியப்போகாதோ? என்ன - யதோவாச இத்யாதி. "ஆம்வண்ணத்தால்" என்றது - ஆனப்ரகாரத்தாலென்றாய், அங்குத்தைக்குத் தகுதியாகவென்றபடி. ஆனால் "அறிவதரிய" என்பானென்? என்ன - ஸ்வயத்நத்தாலே இத்யாதி. ஸ்வயத்நத்தாலே யறியப்போகாதோவென்ன, ப்ரமாணம் - நெறிவாசல் இத்யாதி. முதல் திருவந்தாதி நாலாம்பாட்டு. வாசலானநெறியென்றாய், ஸ்வரூபாநுரூபமான உபாயம் தானேயாய்க்கொண்டு நின்ற ஸர்வேச்வரனையென்னுதல்; நெறியென்று - உபாயமாய், வாசலென்று - உபேயமாய், உபாயமும் உபேயமும் தானேயாய்நின்ற ஸர்வேச்வரனையென்னுதல். 'ஐந்தித்யாதி'- பஞ்சேந்த்ரியத்வாரங்களில் அடைக்கப்புக்கவர்களை முகத்திலேயறைந்து போருகிற கதவையுடைத்து. 'அறிவானும்' - ஸ்வயத்நஸித்தமான ஜ்ஞாநசக்திகளைக்கொண்டறிவதாக இருக்கிறானேயென்றாக்ஷேபிக்கிறாரென்றபடி. ஸ்வ

யாய்நின்றானையைந்து, பொறிவாசல்போர்க்கதவஞ்சாத்தி - யறிவானும்'' என்று ஆக்ஷேபிப்பது, ஸ்வயத்நத்தாலே யறியப்பார்ப்பாரையிறே. [ஆம்வண்ணம் ஒண்தமிழ்களித்யாதி]- அவனுக்குத் தகுதியாம்படியிருக்கிற அழகிய தமிழென்னுதல்; தகுதியாயிருந்துள்ள ஸந்தஸ்ஸுக்களையுடைத்தாய், ஸர்வாதிகாரமாகிற நன்மையையுடைத்தான தமிழென்னுதல். வண்ணம் - சந்தஸ்ஸு. அன்றிக்கே. வண்ணமென்று - ஓசையாய், நல்ல த்வநியையுடைத்தான செந்தமிழென்னுதல். [தமிழ்களிவையாயிரத்துளிப்பத்தும்] - தமிழாயிருந்துள்ள இவையாயிரத்துள் இப்பத்தையும். [ஆம்வண்ணத்தாலுரைப்பார்] - பின்னை, இத்தைச் சொல்லுமவர்களுக்கும் * மயர்வறமதிநலமருளப்பெற்று அவனுக்குத் தகுதியான சொல்லாலே சொல்லவேணுமோவென்னில்?—அத்தேவையெல்லாம் ஆழ்வார்தம்மோடே; இவர்களுக்குத் தாங்கள் வல்லவளவும் சொல்லவமையும். [அமைந்தார்தமக்கென்றைக்குமே] - அவர்களுக்குஇவ்வாத்மா உள்ளதனையும், ஈஸ்வரன் முழங்கைத் தண்ணீர் வேண்டா; ஆழ்வார் பரிக்ரஹமானதுவே போரும். என்றைக்கும் தந்தாமுக்குத் தாமே யமைந்தார்களா யிருப்பர்கள். (கக)

ரூபாநுரூபோபாயோபேயங்கள் தானாய்நின்றவனை, இந்த்ரியங்களை ஜயித்து ருத்ரன் அறியமாட்டானென்று கருத்து. இப்பாசுரத்தில் "நால்வர்க்கு" என்றது - அகஸ்த்ய புலஸ்த்ய தக்ஷமார்க்கண்டேயர்களை. ஃபலிதம் - அவர்களுக்கு இத்யாதி. ஆழ்வார் பரிக்ரஹமானதுவே - ஆழ்வார் பரிக்ரஹத்துக்கு விஷயமானதுவேயென்றபடி. பஸ்தார்த்தம் - என்றைக்கும் இத்யாதி. ஈஸ்வரன் முழங்கைத்தண்ணீர் வேண்டாவென்றது - ஈஸ்வரனுகிற முழங்கைத்தண்ணீர் வேண்டாவென்றபடி. முழங்கைத்தண்ணீராவது - ஒருவன் தண்ணீர்குடித்தால் அவன்முழங்கையிலே ஒழுகுகிற தண்ணீரைக்குடிக்கை. 'இன்னதொன்று - ஆம்வண்ணம் - என்றறிவதரியவரியை - குருகூர்ச்சடகோபன் - ஆம்வண்ணத்தால் - அறிந்துரைத்த ஆம்வண்ணவொண்தமிழ்களென்றுதொடங்கி, உரைப்பார் - என்றைக்கும் - தமக்கு அமைந்தார்' இத்யந்வயঃ. (கக)

த்ரமிடோபநிஷத்ஸங்கதி.—ஸர்வம் நியந்த்ரு ஜகஸம்ஸ்ருதிஜ்ஞமெ ஜாம் ஸம்ஜ்ஞாவயநு கபடவேஷ்டிதநாவொகிதெந । சூர்ணாத்மொகதநாதாஜவி உபஸ்யிதாவிஷ்காரிதঃ கிமஸாவம் ஹரிணாஉஷ்டெந ॥

த்ரவிடோபநிஷத்தாத்பர்யரத்நாவளி.—(மாயாவாமனனே.)—

ஸாகெதஸ்ம் ஸ்வாத்மஸ்ரூஜாமெஸ்வகமயாஹறெதவஸ்தாவிஸ்வதநாமெ ஸ்வெ மெஸ்ராகாநாம்நியந்த்ரூஸ்ரண தகிதெவாஸ்தாஉநாந்நாநநாமெஸ்ஃ । உபெஜ்ஞய ஸ்வாதஸாஜாம் வஹாஸாஹகரணாமெஸ்வஉஸம்வெஷ்யஹாவாஸ்ஜாநாஸ்ரூஸ்யநாநாவிஹவ உகிததஸ்யராঃவுத்யவாகி.

திருவாய்மொழி நூற்றந்தாதி.

மாயாமல்தன்னைவைத்தவைசித்திரியாலே
தீயாவிசித்திரமாச்சேர்பொருளோடு—† ஆயாமல்
வாய்ந்துநிற்குமாயன்வளமுரைத்தமாறனைநாம்
ஏய்ந்துரைத்துவாழுநாளென்று.

ஆழ்வார் திருவடிகளே ஶரணம், எம்பெருமானார் திருவடிகளே ஶரணம், ஜீயர்திருவடிகளே ஶரணம்.

---

† *ஓயாமலென்றும் பாடமுண்டு.*

ஒன்பதாந் திருவாய்மொழி—என்றைக்கும் - ப்ரவேஶங்கள்.

ஆ.—இப்படி மஹாஶ்சர்யமான ஜகத்ரூபத்தையும், அப்ராக்ருதஸ்வாஸாதாரண திவ்யரூபத்தையும், இவை அவன்பக்கலிலே ஸங்கதமாயிருக்கிறபடியையும் அநுஸந்தித்து அத்யந்த விஸ்மிதராய், நிரதிஶயப்ரீதியுக்தராய், நிரஸ்த ஸமஸ்தப்ரஸ்துத வ்யஸநராயிருந்து; நிரவதிகாஶ்சர்யரூப விபூத்யாகாரத்தையுள்ளபடியே சொன்னார்; இதுதானும் நிரூபித்தவாறே அவன் செயலாயிருந்தது, இத்தையநுஸந்தித்து, "அத்யந்த நிஹீநனாயிருந்த என்னைக்கொண்டு திருவாய்மொழி சொல்லுவித்தருளுவதே!" என்று, தம்மைக்கொண்டு திருவாய்மொழி பாடுவித்தருளினவனுடைய ஸர்வஶக்தித்வஸௌஶீல்ய வாத்ஸல்யாதி கல்யாணகுணாநுபவ ஜநிதநிரவதிக ப்ரீதியாலே சொல்லுகிறார்.

ஒ.—ஒன்பதாந் திருவாய்மொழியில், "த்வத்ப்ராப்திவிரோதியாயுள்ள இப்ரக்ருதிஸம்பந்தத்தை அறுத்தருளவேணும் என்று பலகாலும் அபேக்ஷிக்க, செய்தருளாமைக்குக் காரணமென்?" என்று எம்பெருமானை ஆழ்வார் கேட்க, அவனும், "ஶரதல்பத்திலே ஸ்ரீபீஷ்மரை வைத்து லோகத்தார்க்கு தர்மத்தைச் சொல்லுவித்தாற்போலே, என்னை ஆஶ்ரயித்தார்க்கும் எனக்கும் போகார்த்தமாகக் கவிபாடவைத்தோம்" என்று அருளிச்செய்ய, அவ்வுபகாரத்தாலே மிகவும் ஹ்ருஷ்டராய், ஹர்ஷப்ரகர்ஷத்தாலே ஸம்ப்ராந்தராய், வேதங்களும், ஸ்ரீவால்மீகிபகவான் தொடக்கமாக உண்டான ருஷிகள் சொன்ன கவிகளும், பழைய ஆழ்வார்கள் அருளிச்செய்த கவிகளுங் கிடக்கத் தம்மைக்கொண்டு கவிபாடுவித்துக்கொண்ட இம்மஹோபகாரத்துக்கு ப்ரத்யுபகாரம் காணாதே தடுமாறுகிறார்.

ப.—ஒன்பதாந்திருவாய்மொழியில், கீழ்-தம்முடைய விரோதிநிவ்ருத்திக்கு அநுரூபமான ஈஶ்வரனுடைய ஆஶ்சர்யஶக்தியோகத்துக்கு ப்ரகாசகமாயுள்ள விசித்ர விபூதிமத்தையை யநுபவித்து ஸந்துஷ்டரான இவர், இவன் விரோதி நிவர்த்தநத்தில் விளம்பிக்கைக்குஅடியென்? என்று நிரூபித்து, அவன் தம்மை வாசிககைங்கர்யங்கொள்ளுகைக்காக வைத்த ப்ரகாரத்தைக் காட்டக் கண்டு ப்ரீதராய், தம்விரோதி கிடக்கச் செய்தே அத்தை மதியாமல் அசித்கல்பமாக்கி யடிமைகொள்ளுகைக்கடியான நிருபாதிக ஸம்பந்தத்தையும், ப்ரதமப்ரவர்த்தநத்தையும், பக்தார்த்தப்ரவ்ருத்தியையும், விரோதியைமதியாமல் விரும்பினபடியையும், விருப்பத்தால்வந்த மேன்மையையும், மேன்மைக்கு எல்லைநிலத்தையும், அப் பரத்வாநுபவத்துக்கு விலக்கான பாபத்தினுடைய நிவர்த்தநத்தையும், அதிஶயிதாநுபாவ்ய குணயோகத்தையும், அதினுடைய நித்யாநுபாவ்யதையையும், நிஷ்ப்ரத்யுபகாரமான நிரவதிகோபகாரகத்வத்தையும் அநுபவித்து, ஏவம்வித ஸ்வபாவனானவன் என்விரோதியைக்கழித்து என்னை வாசிக கைங்கர்யங் கொண்டபடிக்குஎத்தைச்செய்வேனென்று உபகார ஸ்ம்ருதியாலே அத்யந்தம் ஹ்ருஷ்டராகிறார்.

இ.—ஒன்பதாந் திருவாய்மொழியில், "எனக்கு ஸம்ஸாரத்தோடு பொருந்தாமையுண்டாய் உன்னாலல்லது செல்லாமையுமுண்டாய் நீயே யுபாயமாயிருந்தபின்பு, த்வத்ப்ராப்திவிரோதியான ப்ரக்ருதிஸம்பந்தத்தை அறுத்தருளவேணும்" என்று

கீழே பலகாலும் அபேக்ஷிக்க, அவனும் இவர்க்கு நேர்கொடு நேரே தன்கருத்தை அருளிச்செய்யாதே, தன்னதொரு குணத்தை யாவிஷ்கரித்து அதிலே இவர்க்கு அந்யபரதையைப் பிறப்பித்துப்போந்தான். இவரும் அந்தக்கருத்தை யறியாதே, "நீ உன்னைச் சிலர்க்குக்கொடுக்குமிடத்துத் தடுக்கவற்றாயிருப்பதொரு ப்ரதிபந்தகமின்றிக்கேயிருக்க உன்னைத் தருவதும் செய்யாதே முடியவுமாட்டாதே ஜீவிப்பித்துக்கொண்டு போருகிற இதுக்குக் காரணமென்?" என்ன, "ஸ்ரீபீஷ்மரை ஶரதல்பத்திலே யிட்டுவைத்து நாட்டுக்கொரு வெளிச்சிறப்புப் பண்ணிக் கொடுத்தாற்போலே, நமக்கும் நம்முடையார்க்கும் போதுபோகைக்கு உறுப்பாக இப்ரபந்தத்தைத் தலைக்கட்டுகைக்குக் காணும்" என்று தன்கருத்தை நேரேயருளிச்செய்ய, ஸ்ரிய:பதியாய் அவாப்த ஸமஸ்தகாமனாய் புருஷோத்தமனாயிருக்கிற தனக்கு ஒருகுறையுண்டாய், அத்தைத் தம்மாலே தீர்ப்பதாக அவனருளிச்செய்த வார்த்தையைக் கேட்டு, அத்தாலே மிகவும் ஹ்ருஷ்டராய், வேதங்களும், ஸ்ரீவால்மீகிபகவான், ஸ்ரீபராஶரபகவான் தொடக்கமான ருஷிகள் சொன்ன கவிகளும், "செந்தமிழ் பாடுவார்" என்கிற முதலாழ்வார்களருளிச்செய்த கவிகளுங்கிடக்க, தம்மைக்கொண்டு கவிபாடுவித்துக்கொண்ட இம்மஹோபகாரத்துக்கு ப்ரத்யுபகாரம் காணாமே தடுமாறுகிறார்.

ஈடு.—கீழேபலகாலும், "ஸர்வேஶ்வரன் தன்னைப்பெறுவார்க்குப்ரதிபந்தகங்கள்உண்டாயிருந்தாலும் தானேதன்னைத்தரப்பார்க்குமன்றுதகையவல்லதொருப்ரதிபந்தகமின்றிக்கே யிருக்க, 'தன்னாலேபேறு' என்றிருக்கிறஎன்னை இங்கேவைத்ததேன்?" என்று கேட்டுப்போருவாரொருவர். அவனும், இதுக்கு நேரான பரிஹாரத்தைப்பண்ணாதே ஏதேனுமொரு குணாவிஷ்காரத்தைப்பண்ணி அந்யபரதையைப் பிறப்பிக்குமாயிற்று, இவர்க்கு இதிலே நெஞ்சு செல்லாதபடி. இனி, கீழிற்றிருவாய்மொழியிலேயும் - "ஸம்ஸாரத்தில் பொருந்தாமையுண்டாய் உன்னையொழியச் செல்லாமையுண்டாய் நீயே யுபாயமாயிருக்க, பின்னையும் என்னை இங்கேவைத்து ஜீவிப்பித்துக்கொடுபோருகிறஆஶ்சர்யம்இருந்தபடியென்? இத்தைஎனக்கருளிச்செய்யவேணும்" என்ன, "கண்டீரேதான் இதொராஶ்சர்யமிருந்தபடி!" என்று அவ்வழியாலே தன்னுடைய ஆஶ்சர்யஜந்மதாகாரதையைக் காட்டிக்கொடுத்து, அத்தோடே பணிபோரும்படி பண்ணினான். இவரும், அப்போது அத்தனையும் அத்தையநுஸந்தித்து, அது தலைக்கட்டினவாறே அநந்தரம் பழையபடியே கேட்கத்தொடங்குமவரிறே. "இஸ்ஸம்ஸாரத்திலே பொருந்தாதிருக்கிறஎன்னை இங்குவைத்ததுக்கு ஹேதுவென்? என்ன, "நம்மை இதுக்கொருஹேது நிர்ப்பந்தித்துக்கேட்கவேணுமோ? கண்டதெல்லாவற்றிலும் நாக்குநீட்டி அவற்றிலே ருசிபண்ணிப்போந்தீராகில், அதுக்கடியான கர்மங்கிடந்ததாகில், வாஸநாருசி கிடந்ததாகில், அவற்றாலே யிருந்தாலாகாதோ?"என்ன, "அவையுங்கிடக்கச்செய்தே, அவற்றையும்பாராதே என்க்கு மயர்வற மதிநலமருளி பாசங்கள் நீக்கியென்னை யுனக்கேயறக்கொண்ட பின்பு என்னை இங்குவைக்கிறதேன்?" என்று வடிம்

*என்றைக்கும் ப்ரவேஶ: ஈஶ்வரஸ்வபாவத்தையும் அருளிச்செய்துகொண்டு கீழிற்றிருவாய்மொழியோடு இதுக்கு ஸங்கதியருளிச்செய்கிறார் - கீழே இத்யாதி. பலகாலுமென்றது - * உண்ணிலாவிய தொடங்கிப் பலகாலுமென்றபடி. கேட்கும்படியைக் காட்டுகிறார் - இஸ்ஸம்ஸாரத்திலே இத்யாதி. "பாசங்கள்" என்றத்தைப்பற்ற - கண்டதெல்லாவற்றிலும் இத்யாதி. 'உனக்கேயறக் கொண்டபின்பு' என்றவநந்தரம், நீசொல்லுகிறவிது பரிஹாரமன்று; ஆகையாலே, என்று கூட்டிக்கொண்டு, அநந்தரம் - என்னையிங்குவைக்கிற தேன்னென்று வடிம்பிட்டுக்கேட்க என்றநுஸந்தி*

பிட்டுக்கேட்க, "நீர்தாம் உம்மை நமக்காகஆக்கிவைத்தீராகச்சொன்னீரே - 'தனக்கேயாக வெனைக்கொள்ளுமீதே' என்று; ஆனபின்பு நாம்வேண்டினபடி விநியோகங்கொள்ளக் கடவோ மன்றோ ? ஆனபின்பு, நமக்கு அதிசயத்தைப்பிறப்பிக்கை உமக்குஸ்வரூபமாயிருக்குமிறே ; ஆனபின்பு, உம்மைக்கொண்டு, ஸ்ரீபீஷ்மரை சரதல்பத்திலேயிட்டு வைத்து நாட்டுக்கு வெளிச்சிறப்பைப் பண்ணிக்கொடுத்தாற்போலே, நமக்கும் நம்முடையார்க்கும் போதுபோக்காகச் சிலப்ரபந்தங்களைப்பண்ணுவிக்கப்பார்த்தோம்: அது தலைக்கட்டுந்தனையுங்காணும் உம்மைவைப்பது" என்று நேரானபரிஹாரந்தன்னை யருளிச்செய்ய, இவரும் அத்தையநுஸந்தித்து, ஸர்வேச்வரனாய் அவாப்தஸமஸ்தகாமனாய் ஸர்வப்ரகார பரிபூர்ணனாயிருக்கிறஅவன் தனக்கு ஒருகுறையுண்டாய் அக்குறை பின்னைத் தம்மைக் கொண்டு தீர்ப்பதாகச்சொன்னவார்த்தையைப் பொறுக்கமாட்டிற்றிலர். "தனக்குச் சில ப்ரபந்தங்கள் வேண்டினால், அதுக்கீடான ஜ்ஞாநசக்த்யாதிகளால் குறைவற்ற ஸ்ரீவேதவ்யாஸபகவான், ஸ்ரீவால்மீகிபகவான், ஸ்ரீபராசரபகவான் தொடக்கமானார், 'செந்தமிழ் பாடுவார்' என்று சொல்லப்படுகிற முதலாழ்வார்கள், இவர்களெல்லோரும் உண்டாயிருக்க, அநாதிகாலம் ஸம்ஸாரத்திலே பழகி சப்தாதிவிஷயங்களிலே மக்னனாய், 'அஸந்நேவஸபவதி' (அஸந்நேவஸபவதி) என்கிறபடியே அஸத்கல்பனாய் உருமாய்ந்து போன என்னைக்கொண்டு தனக்கூடாகக் கவிபாடுவித்துக்கொள்ளுவதாகச் சொன்ன வார்த்தை என்னவார்த்தை ! இதொரு நீர்மையிருக்கும்படியே! இதென்னநீர்மை!!" என்று, ஸர்வேச்வரன் தந்திறத்தில் பண்ணினஉபகாரத்தை யநுஸந்தித்து, அதுக்கு ஒருப்ரத்யுபகாரங் காணாமையாலே தடுமாறிச்செல்லுகிறது.

முதற் பாட்டு.

என்றைக்கும்என்னை உய்யக்கொண்டுபோகிய
அன்றைக்கன்றுஎன்னைத் தன்னாக்கி என்னால்தன்னை
இன்தமிழ்பாடியஈசனை ஆதியாய்
நின்றவென்சோதியை என்சொல்லிநிற்பனோ ?

ஆ.—(என்றைக்கும் என்னை) - ஆத்மாந்தகிங்கரத்வேந ஸ்வீகரித்து, ப்ரதிதிநமும் என்னைத் தன்னைப்போலே பரிசுத்தனாக்கி, என்னை யுபகரணமாகக்கொண்டு திருவாய்மொழிபாடுந் தன்னுடைய ஸர்வசக்தித்வத்தையும், ஏதத்ப்ரபந்த நிர்மாண

பது. வடிப்பிட்டு - நிர்ப்பந்தித்து. "ப்ரபந்தங்களைப் பண்ணுவிக்கப்பார்த்தோம்" என்று உத்தரம் சொல்லப்பார்த்து, "ஆனால், என்னற்றமையெல்லாங்கிடக்க வெறும் ஸ்வகார்யமே பார்க்குமத்தனையோ" என்கிறசங்கையையும் பரிஹரிக்கிறார் - நீர்தாம் இத்யாதி. ஒக்கிவைக்கை - ஆக்கிவைக்கை. வெளிச்சிறப்பு - ஜ்ஞாநப்ரகாசம். பொறுக்கமாட்டிற் றிலரென்றது - "என்சொல்லிநிற்பன்" இத்யாதியைப் பற்ற. "இன்கவிபாடும் பரமகவிகள்," "ஒப்பிலாத்தீவினையேனை," "எதுவுமொன்றுமில்லைசெய்வது"
[illegible] 'க்கடா [illegible] 'ல ப்ரபந்தங்கள் [illegible] 'என[illegible]'
என்றத்தைப்பற்ற - அஸந்நேவ இத்யாதி. செந்தமிழ்பாடுவார் - அழகிய தமிழ்பாடும் முதலாழ்வார்கள் இத்யர்த்தம். திருமொழி, "வெந்திறல்"(உ-அ-உ) இத்யாதி

ஹேதுத்வக்ருத நிரவதிகதேஜஸ்ஸையும் எத்தைச்சொல்லி பர்யவஸிப்பன்? காலதத்வமுள்ளதெல்லாம் சொன்னாற்றான் ஆர்வனோ ? என்கிறார்.

ஒ.—முதற்பாட்டில், அதிக்ஷுத்ரனாயிருக்கிற என்னை ஜ்ஞாநஶக்த்யாதிகளுடையேனாம்படி பண்ணி, என்னையிட்டுத் திருவாய்மொழி பாடுவித்துக்கொண்ட உபகாரத்தை அநுஸந்தித்து தரிக்கமாட்டுகிறிலேன் என்கிறார்.

[என்றைக்குமென்று தொடங்கி] - ஒருநாளை விஷயீகாரமே ஆத்மாவதிகமாக வாழுகைக்குப் போருமென்னும்படி போனகாலமெல்லாம் நாள்தோறும் விஷயீகரித்துக் கவிபாடுகைக்குஅநுரூபமான ஸாமக்ரி யொன்றுமில்லாத என்னை ஜ்ஞாநஶக்த்யாதிகளால் தன்னோடொக்கப்பண்ணி; என்னைத் தனக்காக்கி என்றுமாம். [என்னால்தன்னை இன்தமிழ்பாடியவீசனை] - தன்னாலேஉத்தஶக்திகனானவென்னாலே ஶ்ருதிஸ்ம்ருத்யாதிகளுக்கும் பேச நிலமன்றிக்கேயிருக்கிற தன்னைத் தான் ஸர்வஶக்தியாகையாலே இனிதாய் எல்லார்க்கும்அநுபவிக்கலாய்படியாகத் தமிழான திருவாய்மொழியைப் பாடுவித்துக்கொண்டவனை. [ஆதியென்று தொடங்கி] - எனக்குத் தன்னழகைக்காட்டிக் கவிபாடுகைக்கு அடியானவனை.

ப.—முதற்பாட்டில்,நிருபாதிகஶேஷியானவன் என்னைக்கொண்டு தான் தன்னைக் கவிபாடிக்கொண்ட ஔஜ்ஜ்வல்யத்துக்கு என்சொல்லி தரிப்பேனென்கிறார்.

என்றைக்கும் - ப்ரதமாங்கீகாரம் யாவதாத்மபாவியாம்படி யங்கீகரித்து, போகிய - போகிற, அன்றைக்கன்று - காலந்தோறும், என்னை உய்யக்கொண்டு - விசேஷகடாக்ஷம்பண்ணி, என்னை-, தன்னாக்கி - தனக்கேயாம்படி செல்லாமையைப் பிறப்பித்து, என்னால் - கவிபாடுகைக்கீடான ஜ்ஞாநாதிகளில்லாதவென்னைக் காரணமாகக்கொண்டு, தன்னை - (வேதங்களும் பிற்காலிக்கும்படியானபெருமையையுடைய) தன்னை, இன் - ஶப்தந்தானே நிரதிஶயஸரஸமாய்,தமிழ் - (ஸர்வாதிகாரமான) தமிழை, பாடிய- பாடின, ஈசனை - நிருபாதிகசேஷியாய், ஆதியாய் - எனக்கு உள்ளீடாகநின்று பாடுகையாலே இதுக்கு மூலபூதனாய், நின்ற - அத்தாலேநிலைபெற்று, என்சோதியை - உஜ்ஜ்வலவிக்ரஹனா யிருக்கிறபடியை எனக்கு ப்ரகாசிப்பித்தவனை, என் - எத்தை, சொல்லி-, நிற்பன் - தரிப்பேன். ப்ரதமம் ஆபிமுக்யம்பண்ணும்படி யங்கீகரித்திலனென்னவோ? அத்தை முழுக்க நடத்திற்றிலனென்னவோ? என்னைத் தனக்கே யாக்கிற்றிலனென்னவோ? நான் பாடினேனாம்படி தான் பாடிற்றிலனென்னவோ? அத்தாலுஜ்ஜ்வலனாயிற்றிலனென்னவோ? எத்தைச்சொல்லி தரிக்கலாவது? என்று கருத்து.

இ.—முதற்பாட்டில், அதிக்ஷுத்ரனான என்னை ஜ்ஞாநஶக்த்யாதிகளால் பூர்ணனாம்படிபண்ணிக் கவிபாடுவித்துக்கொண்ட உபகாரத்தை நினைத்து தரிக்கமாட்டுகிறிலேன் என்கிறார்.

[என்றைக்குமென்னை யுய்யக்கொண்டு] - என்னை, ஒருநாள் பண்ணின விஷயீகாரமே காலதத்வமுள்ளதனையும் உஜ்ஜீவிக்கப்போருமென்னும்படி விஷயீகரித்து.ஸர்வேஶ்வரனொருவனை விஷயீகரித்தால், பின்னையாத்மாவதியா"இதொரு விஷயீகாரமே!" என்று நெஞ்சுஉளுக்கும்படியாயிற்றிருப்பது; "ஸக்ருதேவ ப்ரபந்நாய" என்கிறபடியே என்றுமொக்க ஸ்மரித்து தரிக்கலாம்படியாயிறே யிருப்பது. "ஸுராஸுராஸ்ச பாணாநாம்-விவ்யதே" என்று, ஶத்ருக்கள், வீரத்துக்கு நெஞ்சுளுக்கும்படியாயிற்று,

குணவிஷ்ரும் ஆற்றமாட்டாதேயிருக்கும்படி. அம்புபட்டாரை ஔஷதத்தாலே பரிஹரிக்கலாம், குணவிஷ்ரை பரிஹரிக்கப்போகாது. [உய்யக்கொண்டு] - "ஸந்தமேநம் ததோ விது:" என்கிறபடியே என்னை உஜ்ஜீவிக்கும்படிபண்ணி. [போகியவன்றைக் கன்று]- கழிகிறகாலமெல்லாம் நாள்தோறும் நாள்தோறும் விஷயீகரித்து. [என்னைத் தன்னாக்கி]- கவிபாடுகைக்கு அநுரூபமான ஜ்ஞாநஶக்த்யாதிகளில்லாத என்னை, தன்னோபாதிஜ்ஞாநஶக்திகளையுடையேனும்படிபண்ணி என்னுதல்; [என்னைத்தன்னாக்கி] -தனக்காளாம்படி பண்ணி என்னுதல். [என்னால்தன்னை] - தன்னாலே உத்தமஶக்திகனானவென்னாலே, ஶ்ருத்யாதிகளுக்கும் பேச நிலமன்றிக்கேயிருக்கிற தன்னை: "யதோ வாசோ நிவர்த்தந்தே" "யஸ்யாமதம் தஸ்ய மதம்", "அவிஜ்ஞாதம் விஜாநதாம்". [இன்தமிழ்பாடிய] - அர்த்தங்கிடக்க ஶப்தம்தானே ரஸித்து ஸர்வாதிகாரமான தமிழை இசையிலேவைத்துத் தானே பாடினவனை. [ஈசனை] - இப்படி வாய்க்கைக்குஅடி ஸர்வஶக்தியாகையாலே. அவன் பாடினானாகில் நீர் இங்குச் செய்ததென்? என்ன, [ஆதியாய்நின்ற] - எனக்கடியாய்நின்று பாடுவித்தான். [என்சோதியை] - இவர்க்குக் கவிபாடுகைக்குஉள்ளுறை கொடுத்தது வடிவழகாயிற்று. எனக்கு வடிவழகை ஆவிஷ்கரிக்க, அத்தைக்கண்டு கூப்பிட்டது கவியாயிற்று. பிடாத்தை விழ்விட்டு வடிவழகைக் காட்டினான்; திருத்திரை எடுத்தாற்போலே கூப்பிட்டேன்; அது கவியாயிற்று. [என்சொல்லி நிற்பனோ] - என் சொல்லியரிப்பன்? ஸம்ஸாரியாயிருக்கிற நான் தனக்காஷிமுக்யம் பண்ணுகைக்கு என் பக்கலிலே ஒருஹேதுவுண்டென்று யரிக்கவோ? பின்புதன்னையொழியச் செல்லாமை பிறக்கைக்கு என்பக்கலிலே ஸாதநலேஶமுண்டென்று யரிக்கவோ? என்னைக்கொண்டு கவிபாடுவித்துத் தனக்கோரேற்றமுண்டாக இருக்கிற நீர்மையைக்கண்டால் என்னால் யரிக்கலாமோ? ஸாரதியாய்நின்று வென்று வெற்றியை அர்ஜுநன்தலையில் ஏறிட்டாற்போலே, தானேபாடி என்தலையிலே ஏறிட்டானித்தனை.

ஈடு.—முதற்பாட்டு. அதிக்ஷுத்ரனாயிருக்கிற என்னை ஜ்ஞாநஶக்த்யாதிகளையுடையேனும்படிபண்ணி, என்னையிட்டுத் திருவாய்மொழி பாடுவித்துக்கொண்ட உபகாரத்தை யநுஸந்தித்துத் தரிக்கமாட்டுகிறிலேனென்கிறார்.

இப்படி நீர்படுகைக்கு அவன்செய்த நன்மைதான் ஏதென்ன, இதுஎன்கிறார்:— [என்றைக்குமென்னையுய்யக்கொண்டு] - ஸர்வேஶ்வரன் ஒருவனை ஒருநாள்விஷயீகரித்தால், பின்னை அவ்விஷயீகாரந்தன்னையே காலதத்த்வமுள்ளதனையும்அநுஸந்தித்து உஜ்ஜீவிக்கலாயாயிற்றிருப்பது. "தச்ச ஸம்ஸ்ம்ருத்ய ஸம்ஸ்ம்ருத்ய" (தச்சஸம்ஸ்ம்ருத்யஸம்ஸ்

முதற்பாட்டு.—என்றைக்கும் இத்யாதி. "என்னைத்தன்னாக்கி என்னால்தன்னை இன்தமிழ் பாடியவீசனை - என்சொல்லிநிற்பன்" என்றத்தைக் கடாக்ஷித்துஅவதாரிகை - அதிக்ஷுத்ரனாய் இத்யாதி.

பதாவதாரிகை - இப்படிநீர் இத்யாதி. "போகியவன்றைக்கன்று • என்றைக்கும் என்னையுய்யக்கொண்டு" என்றுஅந்வயித்தர்த்தம் - ஸர்வேஶ்வரன் இத்யாதி. "ஒருநாள் விஷயீகரித்தால் என்றுமொக்க அத்தை அநுஸந்தித்து தரிக்கலாயிருக்கும்" என்னுமதுக்கு ப்ரமாணம் - தச்சஸம்ஸ்ம்ருத்ய இத்யாதி. "தச்ச ஸம்ஸ்ம்ருத்ய ஸம்ஸ்ம்ருத்ய ரூபமத்யத்புதம் ஹரே: । விஸ்மயோ மே மஹாந் ராஜந் ஹ்ருஷ்யாமி ச புந: புந:" இதிகீதாஸு அஷ்டாதஶே.(எஎ)அவன்குணம்

ம்ருத்ய) என்கிறபடியே - பின்னை யென்றுமொக்க அத்தை ஸ்மரித்து தரிக்கலாம்படியாயிற்றிருப்பது. "ஸ்மரந்ராகவபாணாநாம்" (ஸ்மரந்ராகவபாணாநாம்) என்று அம்புக்கு இலக்கானார் அலற்றுமாபோலே யாயிற்று, குணத்துக்குஇலக்கானாரும் அலற்றும்படி. அம்புபட்டபுண் மருந்திட்டாற்றலாம், குணத்தால்வந்தபுண்ணுக்குப் பரிஹாரமில்லையிறே. ஆக, ஸர்வேஶ்வரன் ஒருநாள் ஒருவனைவிஷயீகரித்தால் அதுதன்னையே என்றுமொக்க ஸ்மரிக்கலாம்படியிருக்குமாயிற்று. இப்படிப்பட்ட விஷயீகாரந்தன்னை ஒருகால் பண்ணி விட்டவித்தனையோஎன்னில்?—[போகியவன்றைக்கன்று] - கழிகிற நாள்தோறும் நாள்தோறும் இப்படியேயாயிற்று விஷயீகரித்தது. இதுதான்இருவர்படியாலும் ஆற்றப்போகாது. அவனுடையவிஷயீகாரத்துக்கு இலக்கான இவர்படியைப்பார்த்தால், அத்தை இவர் தாம் பொறுக்கவல்ல ரல்லர் ; அவனைப்பார்த்தால், தன்னை விஶ்வஸித்து உடனே கிடந்தவனை மடிதடவினவன் "என்செய்தோமானோம்?" என்று அநுதபிக்குமாபோலே. எல்லாம் செய்தும் ஒன்றும் செய்யாதானாய் "இவனுக்கு என்செய்வோம்?" என்றிருக்குமவன். [என்னைத் தன்னாக்கி] - "அறிவிலேன்" என்கிறபடியே அஜ்ஞாநாஶக்திகளுக்கு இலக்காயிருக்கிற என்னை, தன்னோடொக்க ஜ்ஞாநஶக்த்யாதிகளை உடையேனாம்படிபண்ணி என்னுதல்; [என்னைத் தன்னாக்கி] - தன்னுடையேனாம்படிபண்ணி என்னுதல். [என்னால்தன்னை] - தன்னாலே உத்தஶக்திகனான என்னாலே,ஶ்ருதிஸ்ம்ருதீதிஹாஸாதிகளுக்கு அவிஷயமாம்படியிருக்கிற தன்னை. "யதோவாசோநிவர்த்தந்தே" (யதோவாநிவர்த்தந்தே,) "யஸ்யாமதம் தஸ்யமதம் - அவிஜ்ஞாதம் விஜாநதாம்" (யஸ்யாமதம்தஸ்யமதம்-அவிஜ்ஞாதம் விஜாநதாம்) என்கிறபடியே ப்ரமாணங்களுக்கு அவிஷயமாம்படியிருக்கிற தன்னை. [இன்தமிழ்பாடிய] - இதுதன்னிலோடுகிற அர்த்தமும் பரிமாற்றமுங் கிடக்கச்செய்தே, சொல்லில் இனிமைதானே ஆகர்ஷகமாயிருக்கும்படி. [பாடிய] - என்னைக் கொண்டு பாடுவித்தான் என்னுதல், பாடினான்என்னுதல். "ஏதத்ஸாமகாயந்நாஸ்தே" (ஏதத்ஸாமகாயந்

இப்படி ஈடுபடுத்துமென்னுமதுக்கு வ்யதிரேகத்ருஷ்டாந்தம் - ஸ்மரந் இத்யாதி. "ந ஹி குணா வ்யகாஸந்த விஷ்ணோ: தஸ்ய மஹாத்மந: । ஸ்மரந்ராகவபாணாநாம் விவ்யதே ராக்ஷஸேஶ்வர:" இதி யுத்தகாண்டே. (௬0- ௩) அம்புபோலே குணங்கள் வேதகமோ? என்ன - அம்புபட்டஇத்யாதி. உக்தார்த்தநிகமநம்-ஆக இத்யாதி. இப்படிப்பட்டவிஷயீகாரந்தன்னை-என்றுமொக்க அநுஸந்தித்து தரிக்கலாம்படியான ஒருநாளை விஷயீகாரத்தையென்றபடி. இவ்வுபய பதங்களாலும் பலித்தவர்த்தம் - இவருடைய ஆதாரமும் அவனுடைய வ்யாமோஹமும் என்றருளிச்செய்கிறார் - இதுதான் என்று. உய்யக்கொண்ட இந்த விஷயீகாரந்தானென்றபடி. விவரணம் - அவனுடைய இத்யாதிவாக்யத்வயம். அதாவது - இவர் க்ருதஜ்ஞதையாலும், அவன் "உன்னடியார்க்கென்செய்வன்" என்னும் ஸ்வபாவனையாலும், இருவராலும் ஆற்றப்போகாதென்றபடி. அன்றிக்கே இவன்தான் ஒருகால்விஷயீகரித்தால் போராதோ? இவர்தாமும் அத்தை யொருகால்அநுஸந்தித்தால் போராதோ? என்ன - இதுதான் இத்யாதி என்னுதல். மடிதடவுகை - மடியில் தநத்தைக்களவுகாண்கை. பொறுக்கவல்லவரல்லர்என்றது- ப்ரத்யுபகாரம் தேடித்தடுமாறுவரென்றபடி. தன்னுடையேனாம்படி- தனக்கு ஶேஷமாம்படி. "ஶ்ருதிஸ்ம்ருத்யாதிகளுக்கு அவிஷயம்" என்றதுக்கு ப்ரமாணம் - யதோவாச இத்யாதி. "இன்" என்றதுக்கர்த்தம் - இதுதன்னில் இத்யாதி. இதுதன்னில் - இத்திருவாய்மொழிதன்னில் என்றபடி. ஓடுகிறஅர்த்தமாவது- திருவாய்மொழி பாடுவித்துக்கொள்ளுகை, பரிமாற்றமாவது - ஈஶ்வரனுடைய வ்யாமோஹம். "பாடிய" என்றதுக்கு - ப்ரயோஜககர்த்ருத்வமாதல், ஸ்வயம் கர்த்ருத்வமாதல்என்று விவக்ஷித்தருளிச்செய்கிறார் - என்னைக்கொண்டு இத்யாதி வாக்யத்வயத்தாலே. பாடினானென்றது - "என்முன்சொல்லும்" என்கிறபடியே முற்சந்தைசொன்ன

நாஸ்தே)என்று முக்தன் ஸாமகாநம்பண்ணுமாபோலே, அவனும் இவரோட்டையநுபவத்தால் வந்த ஹர்ஷத்துக்குப் போக்குவிட்டு "தென்னா" என்றுபாடுமோயிற்று. இப்படியினிய இதுஉண்டானபடி யெங்ஙனே என்னில்?- [ஈசனை] - சொல்லவேணுமோ? ஸர்வேச்வரன் செய்யமாட்டாததுண்டோ! அரிதோ அவனுக்கு? கவிபாடினீர் நீராயிராநின்றீர்! அவனைப் பாடினானாகச் சொல்லாநின்றீர்; இதுதான்செய்தபடி யென்? என்ன, [ஆதியாய்நின்ற] - நான் கவிபாடுகைக்கு ஹேதுவாய் நின்றான் - அவனடியாக நான் கவிபாடிற்று. ஹேதுவானபடி தான்என்என்னில்?—[என்சோதியை] - பிடாத்தை விழவிட்டுத் தன்வடிவழகைக்காட்டினான். திருத்திரையெடுத்தாற் கூப்பிடுமாபோலே கூப்பிட்டேன்; அது கவியாய்த் தலைக்கட்டிற்று. வடிவழகைக்காட்டியாயிற்றுக் கவிக்கு உள்ளுறைகொடுத்தது; நீரும் கவிபாடினீராகில் பின்னை இப்படிக்கிடந்து படுகிறதென்? என்ன - [என்சொல்லிநிற்பனோ] - நானும் பாதிவழிவந்து அவனாலே விஷயீக்ருதனாயிருக்கிறேனோ? அன்றிக்கே, பெற்றபேறுதான் அளவுபட்டுஆறியிருக்கிறேனோ? ஸாதநாநுஷ்டாநம்பண்ணினார்க்குப் பலம் தப்பாமையாலே நானும் இப்பேற்றுக்குச் சிலசெய்தேனாய், இது ப்ராப்தமென்றிருக்கிறேனோ? பெற்ற பேறுதான் ஸாத்மிக்குமதாய் ஆறியிருக்கிறேனோ? எத்தைச்சொல்லித் தரிப்பது? "க்ருஷ்ணத்வைபாயநம்வ்யாஸம்வித்தி நாராயணம்ப்ரபும் | கோஹ்யந்ய:புண்டரீகாக்ஷாந்மஹாபாரதக்ருத்பவேத்" (க்ருஷ்ணத்வைபாயநம்வ்யாஸம் வித்திநாராயணம்ப்ரபும்-கோஹ்யந்ய:புண்டரீகாக்ஷாந் மஹாபாரதக்ருத்பவேத்) என்றாற்போலே யிருக்கிறதாயிற்று. இதுக்கு ஆளவந்தாரருளிச்செய்யும்படி: "ஸர்வேச்வரன் செய்யப்புக்கால் அரியதும் ஒன்றுண்டோ?" என்றும். அங்ஙனன்றிக்கே, எம்பெருமானார், இவர் தாம்சொன்னாராகிலும் ஒருபடிபோகச்சொல்லித் தலைக்கட்டுவர்; அவனும் தானே சொன்னானாகில் நிர

னென்றபடி. சொன்னானென்னாதே, "பாடினேன்" என்றதுக்கு பாவம் - ஏதத்ஸாமகாயந் இத்யாதி. இப்படிபோக்யதையுண்டாயிற்று அவன்ஸர்வசக்தியாகையாலே என்னுமத்தைஸங்காபூர்வகமாக அருளிச்செய்கிறார் - இப்படியினிய இத்யாதி. மேலுக்கவதாரிகை - கவிபாடினீர் இத்யாதி. பாட்டுக்குக் காரணபூதன்இவன் என்கிறார் - நான் கவிபாடுகைக்கு இத்யாதி. விவரணம் - அவனடியாக இத்யாதி. ஹேதுவானபடியென்? என்னிலென்றது - ஸ்வரூபத்தாலேயோ, குணத்தாலேயோ, விக்ரஹத்தாலேயோ என்றபடி. வடிவழகைக்காட்டி யென்று - ஹேதுவான ப்ரகாரத்தை யருளிச்செய்கிறார் - பிடாத்தை இத்யாதி: பிடாத்தை - போர்வையை. கவிக்கு ஹேதுவாக வடிவழகைக் கீழே சொல்லி, "என்சோதியை" என்றதுக்கு கவிக்கு விஷயமாக பாவாந்தரம் - வடிவழகை இத்யாதி. உள்ளுறைகொடுத்து - விஷயமாக்கிற்றென்றபடி. என்சோதியை - உஜ்ஜ்வலமான வடிவையுடையனாயிருக்கிறபடியை எனக்கு ப்ரகாசிப்பித்தவனை யென்று பரமார்த்தம். "என்சொல்லிநிற்பன்" என்கிறதென்? ஆறியிருக்கப் போகாதோவென்ன அருளிச்செய்கிறார் - நானும் பாதிவழி இத்யாதிவாக்யத்வயத்தாலே. எதத்விவரணம் - ஸாதநாநுஷ்டாநம் இத்யாதிவாக்யத்வயமும். 'என்னைத் பன்னையின்தமிழ்பாடியவீசனை" என்றதுக்கு த்ருஷ்டாந்தம் - க்ருஷ்ண இத்யாதி. "க்ருஷ்ணத்வைபாயநம்வ்யாஸம் வித்திநாராயணம் ப்ரபும் | கோஹ்யந்ய:புண்டரீகாக்ஷாந்மஹாபாரதக்ருத்பவேத்"இதி த்ருதீயேம்சே சதுர்த்தே(ச). அதாவது - வேதவ்யாஸரை உபகரணமாகக் கொண்டு மஹாபாரதம் செய்தார்போலே யென்றபடி. இதுக்கென்றது - இப்பாட்டுக்கென்றபடி. ஆளவந்தார் நிர்வாஹத்துக்கு, "இன்தமிழ்பாடியவீசன்" என்றதிலேநோக்கு. ஈசன்-ஸமர்த்தனென்றபடி. எம்பெருமானார் நிர்வாஹத்துக்கு, "என்னால்தன்னை இன்தமிழ்பாடியவீசனை" என்றதிலே

வத்யமாகத் தலைக்கட்டும்; சிறு ப்ரஜை யெழுத்திடப்புக்கால் தானே ஏதேனும் ஒருபடி யிட்டுத் தலைக்கட்டும்; பிதாவாதல் உபாத்யாயனாதல் இடப்புக்கால் தானே எழுத்தா யிருக்கும்: அங்ஙனன்றிக்கே, இவன்கையைப்பிடித்து இடுவிக்கப்புக்கவாறே, இவன் ஓரிடத்தே இழுக்க அவன் ஓரிடத்தேயிழுக்கக் குதறிக்கோட்டியாய் ரூபமழிந்து சிதறிப் போம்; அப்படியே, என்னை உபகரணமாகக்கொண்டு கவிபாடாநிற்கச்செய்தேயும், என் னால் வரும் தோஷம் தன்பக்கல் ஸ்பர்ஶியாதபடி பாடுவித்தான் என்கிறார்'' என்று. (க)

ரண்டாம் பாட்டு.

என்சொல்லிநிற்பன்?என்னின்னுயிரின்றொன்றாய்
என்சொல்லால்யான்சொன்ன இன்கவியென்பித்துத்
தன்சொல்லால்தான்தன்னைக் கீர்த்தித்தமாயன்என்
முன்சொல்லும்மூவுருவாம்முதல்வனே.

ஆ.—(என்சொல்லி) - ம் ஒருவஸ்துவாகக்கொண்டு, என்சொல் லால் யான்சொன்ன இன்கவியென்பித்து ப்ரஹ்மருத்ராதிகளுக்கு ஆத்மாவாய்நின்று ஸ்ருஷ்ட்யாதிகளைப்பண்ணினாற்போலே, என்னை உபகரணமாகக்கொண்டு திருவாய் மொழிபாடியருளின தன்னுடைய இந்த ணத்தை எத்தைச்சொல்லி பர்யவஸிப்பது? ர.

ஒ.—இரண்டாம்பாட்டில், "தானே தன்னைக்கவிபாடிவைத்து நான் தன் னைக் கவிபாடினேனென்று லோகத்திலே ப்ரஸித்தமாக்குவதே!" என்று "அவனுடைய படி யிருந்தபடியென்?" என்று, அவனுடைய ஆஶ்சர்யத்தைக்கண்டு விஸ்மிதராகிறார்.

[என்சொல்லிநிற்பன்] - எத்தைச்சொல்லி தரிப்பது? [என்னின்னுயிரின் றொன்றாய்] - என்னுடைய ஹேயமான ஆத்மா அவனுடைய விஷயீகாரத்தாலே இன்று ஒருசரக்காய். இன்னுயிரென்கிறது, விபரீதலக்ஷணை. [என்னென்று தொடங்கி]-சொல் லும்என்னதன்றிக்கே கவிபாடினேனும் நானன்றிக்கே யிருக்கச் சொல்லும் என்னதாக் கிக் கவிபாடினேனும் நானென்று லோகத்திலேப்ரஸித்தமாக்கித் தன்னுடைய சொல் லாலே தான் தன்னைக் கவிபாடின ஆஶ்சர்யபூதன். [என்னென்று தொடங்கி] - ப்ரஹ்மாதிகளையுண்டாக்கி அவர்களுக்கு வேதங்களை ஓதுவிக்குமாபோலே தானே கவி யைப்பாடி என்னைச்சந்தையிட்டுக் கற்பித்தானென்கிறது.

ப.—அநந்தரம், நான் தன்னைக் கவிபாடுகைக்கு, ப்ரதம ப்ரவர்த்தகனை தான் நான் பாடினேனென்று லோகத்தில் ப்ரஸித்தமாக்கித் தான் தன்னைப்பாடிக் கொண்ட ஆஶ்சர்யபூதனை எதுசொல்லி தரிப்பேன்? என்கிறார்.

நோக்கு- ஈசன் - ஹேயப்ரதிபடனென்றபடி. "க்ருஷ்ணே ஜகத்பாயநம்" இத்யாதி - ஆளவந்தார் நிர்வாஹத்திலே. 'போகியவன்றைக்கன்று - என்றைக்கு மென்னை யுய்யக்கொண்டு - என்னைத் தன்னாக்கி, என்னால்தன்னை இன்தமிழ்பாடிய' என்றுதொடங்கி, 'என்சொல்லிநிற்பனோ' இத்யந்வயஃ.

என் - என்னுடைய, இன் - விஷயாந்தர ஸக்தமான, உயிர்—ஆத்மாவானது, இன்று - இன்று, ஒன்றாய் - தனக்கொரு வஸ்துவாய், 'என்- என்னுடைய, சொல்லால்- வசநவ்யக்தியாலே, யான் - நான் கர்த்தாவாக, சொன்ன -, இன்கவி - இனிய கவி,' என்பித்து - என்று நாட்டிலேப்ரஸித்தமாக்கி, தன் - தன்னுடைய, சொல்லால் - வாக்காலே, தான் - தான்கர்த்தாவாய்க்கொண்டு, தன்னை - தன்னைவிஷயமாக்கி, கீர்த்தித்த - ஸ்துதித்தவனாய், (நான் சொன்னேனென்கைக்கு) என் - எனக்குள்ளேயிருந்து, முன் சொல்லும் - முன்னாருச்சொல்லக்கடவ, மாயன் - ஆஸ்சர்யபூதனாய், (இதுக்கு உதாஹரணமென்னலாம்படி), மூவுருவாய் - மூர்த்தித்ரயத்தையுடையனாய், முதல்வன் - ஏகீபவித்திருக்கிற காரணபூதனை, என்சொல்லி நிற்பன்- எத்தைச் சொல்லி யுரிப்பேன்? அவனுபகாரம் பாசுரத்துக்கு நிலமல்லவென்று கருத்து.

(ஈ).—இரண்டாம்பாட்டில், தானே தன்னைக்கவிபாடி நான் கவிபாடினேனென்று லோகத்திலே ப்ரஸித்தமாக்குவதே! என்று, அவனுடைய ஆஸ்சர்யத்தைக் கண்டு விஸ்மிதராகிறார்.

[என்சொல்லி நிற்பன்] - அநாதிகாலம் அஹங்காரக்ரஸ்தனாய் விமுகனாய்ப்போந்த என்னை நிர்ஹேதுகமாக விஷயீகரித்தபடியை அநுஸந்தித்தால், நான் எத்தைச்சொல்லித் தறையில் கால்பாவுவது? [என்னின்னுயிர்]-"அஸந்நேவ" என்கிற படியே உருமாய்ந்து கிடந்துபோன என்ஆத்மவஸ்து. இன்னுயிரென்றது - ஔதவச்ஸி ப்ராயத்தாலே; ஔதவஸ்வீகாரத்துக்கு இலக்கானபடி சொல்லுகிறாராதல்; விபரீத லக்ஷணையாலே ஹேயமென்கிறாராதல். [இன்றொன்றாய்] - அவனுடைய விஷயீகாரத்தையொருசரக்காய். இற்றைக்குமுன்பு இத்தை ஒன்றாக நினைத்திராராயிற்று; இன்றொரு வஸ்துவாயிற்று. இப்படி விஷயீகரித்து, கொண்டகாரியமென்? என்னில்:-[என்சொல்லால் இத்யாதி]— சொல்லும் என்னதாய், சொன்னேனும் நானாய் அதுதான் இனியகவியாம்படி நாட்டிலே ப்ரஸித்தமாக்கினான். [என்பித்து] - "பாலேய் தமிழரிசைகாரர்பத்தர்பரவும்" என்கிறபடியே லோகப்ரஸித்தமாக்கி. தான்வென்று அர்ஜுநனைநாட்டாரோடொக்கப் புகழுமாபோலே. அதுதான் அப்படியன்றோவென்னில்:- [தன்சொல்லாலித்யாதி] - சொல்லும்தன்னது, சொன்னானும்தானே, சொல்லிற்றும் தன்னை. கவிபாட்டுண்டேனாகில்கிடீர் கவிபாடினேனாவது! தான் தன்னைக் கவிபாடினானாகில், உம்முடைய கவியென்று நாட்டிலே ப்ரஸித்தமாக்கினபடி யெங்ஙனேயென்னில்?- [மாயன்] — இதிறே அவனுடைய ஆஸ்சர்யசக்தி யிருக்கும்படி. நீர்இதில் அந்வயித்த படி என்? என்ன; என்னை உபகரணமாகக்கொண்டு தானே கவிபாடினான். உபகரணமான படிதான் என்? என்ன - [என்முன்சொல்லும்] - அவன்முன்னே சந்தையிடப் பின்னே சொன்னேன். தானே சொன்னானாகில் ஸ்ரீகீதைபோலே வறளுமாறுகலாமிறே. [மூவுருவா முதல்வனே]- அதுதான் எதுபோலவென்னில்?-த்ரிமூர்த்திகளென்று தன்னையும் கூட எண்ணும்படி ஸஹஸ்ராக்ஷர்களுக்கு அடியானாற்போலேயும், ப்ரஹ்மாவை யோதுவித்து தேவர்களுக்கு வெளிச்சிறப்புப் பண்ணி அத்தை அவன்தலையிலே ஏறிட்டாற்போலேயும், ருத்ரனுக்கு அந்தராத்மாவாய் நின்று த்ரிபுரதஹநம்பண்ணி அவன்தலையிலே ஏறிட்டாற் போலேயும், தானே காரியஞ்செய்து பிறர்கையிலே ப்ரஸித்தியை ஏறிடுகை அவனுக்குப் பண்டே ஸ்வபாவமென்கை.

ஈடு.—இரண்டாம்பாட்டு. தான் தன்னைக்கவிபாடி, நான்பாடினேனென்று லோகத்தில் ப்ரஸித்தமாக்குவதே! ஒருவனுடையபடி யிருந்தபடியேன்! என்று அவனுடைய ஆஸ்சர்யத்தைக் கண்டு விஸ்மிதராகிறார். அநாதிகாலம் அஹங்காரமமகாரங்களாலே நஷ்டப்ராயமாய்த் தன்பக்கல் வைமுக்யத்தைப்பண்ணிப்போந்த என்னை, நிர்ஹேதுகமாக நான் ஆபிமுக்யம்பண்ணும்படி அவன் விஷயீகரித்தபடியை யநுஸந்தித்தால் எத்தைச்சொல்லி நான் தறையில் கால்பாவுவது? என்கிறார்.

[என்சொல்லிநிற்பன்] - அவன்என்னை விஷயீகரித்த விஷயீகாரம் நிர்ஹேதுகமென்னவோ? ஸஹேதுகமென்னவோ? இத்தலையை யாராய்ந்துபார்த்தவிடத்து ஒருஹேது காண்கிறிலர்; அத்தலையை யநுஸந்தித்துப் பார்த்தவிடத்துஒருஹேதுகாண்கிறிலர்; அநாதிகாலம் கைவிட்டதுக்கும் ஒருஹேதுகாண்கிறிலர்; இன்று கைக்கொண்டதுக்கும் ஒருஹேது காண்கிறிலர். என்றிய, அதுவென்? உடையவனுகையாலே தன்னுடைமையை வேண்டினபோது விஷயீகரித்தானுனலோ என்னில்?- அங்ஙனே செய்யப்போகிறதில்லை; தன்னுடைமையைத் தான் விஷயீகரித்தானுயிருக்கை யன்றிக்கே, இவர்வாக்காலே தன்னைக் கவிபாட, தானுமுளனுய்த் தன்விபூதியுமுண்டாயிற்றாக நினைத்திராநின்றான்அவன்; ஆகையாலேதான் தரிக்கைக்கு ஓர் ஊற்றங்கோல் காண்கிறிலர். [என்னின்னுயிரின்றேன்றாய்]- [இன்னுயிர்] - ஹமவதஸிப்ராயத்தாலே; அவனுடைய அங்கீகாரத்துக்கு இலக்கானபடியாலே சொல்லுகிறராதல்; அன்றிக்கே, விபரீதலக்ஷணையாலே பொல்லாதென்கிறராதல். [இன்றேன்றாய்] - இன்றைக்குமுன்பு இதுதன்னை ஒன்றாக நினைத்திராராயிற்று; இன்றாயிற்றுஒருவஸ்துவாயிற்றது. இப்படி யும்மை விஷயீகரித்து அவன் தான்கொண்ட காரியந் தானேது? என்ன-[என்சொல்லாலித்யாதி] - சொல்லும்என்னதாய், சொன்னேனும்நானாய், அதுதான் இனியகவியாம்படி நாட்டிலே ப்ரஸித்தமாக்கினான். ஶப்தமாகில் ஸர்வஸ்வாமி

இரண்டாம்பாட்டு.—என்சொல்லி இத்யாதி. "என் சொல்லால் யான்சொன்ன இன்கவியென்பித்துத் தன்சொல்லால் தான்தன்னைக் கீர்த்தித்தமாயன்" என்ற பதங்களைக் கடாக்ஷித்து அவதாரிகை - தான்தன்னை இத்யாதி. "என்னின்னுயிரின்றேன்றாய் - என்சொல்லிநிற்பன்" என்றவற்றைக் கடாக்ஷித்துஅவதாரிகாந்தரம் - அநாதிகாலம் இத்யாதி.

"என்சொல்லிநிற்பன்"-எந்தஹேதுவைச்சொல்லித் தரிப்பனென்று ஶப்தார்த்தம்;ஒருவழியாலும்தரிக்கைக்குஆலம்பநமில்லையென்று கருத்து. தமக்கு ஆலம்பநமில்லாமையைப்பரக்க வுபபாதிக்கிறார்-அவன்என்னை என்றுதொடங்கி, ஊற்றங்கோல் காண்கிறிலர்என்னுமளவாலே. கீழ்வாக்யத்திலர்த்தத்தை வ்யுத்க்ரமமாக விவரிக்கிறார் - இத்தலையை இத்யாதிவாக்யத்வயத்தாலே. "இத்தலையை" இத்யாதிவாக்ய விவரணம் - அநாதிகாலம் இத்யாதிவாக்யத்வயம். அதாவது - அநாதிகாலம் உபேக்ஷித்து உத்கடயாத்ருச்சிகமடியான த்ருப்தவிஷயீகாரம்போலே நிர்ஹேதுகமென்னவும்போகாது; இத்தலையில் ஒருஹேதுகாணுமையாலே உபாஸகவிஷயீகாரம்போலே ஸஹேதுகமென்னவும் போகாது என்றபடி. ஸ்வாமியானவன், ஸ்வத்தையபேக்ஷிதமானபோது அங்கீகரிப்பன்; அநபேக்ஷிதமானபோது விட்டுவைப்பன்; ஆகையாலே, நிர்ஹேதுகமென்னவொண்ணுதோ என்கிற ப்ரதிவாத்யுக்தியை யநுவதித்துப் பரிஹரிக்கிறார் - என்றிய இத்யாதி வாக்யத்வயத்தாலே. என்றிய - எதுக்காக. அதுவென் - அதேது. ஊற்றங்கோல் - ஊன்றுகோல். இன்றென்றது - * மயர்வறமதிநலமருளின இன்று என்றபடி. மேலே "ஒன்றாய்" என்னுநிற்க, "இன்னுயிர்" என்று ஶ்லாகிக்கலாமோ? என்ன - ஹகவத் இத்யாதி. பரிஹாராந்தரம் - அவனுடைய் இத்யாதி. மூன்றுமர்த்தம் - அன்றிக்கே விபரீத இத்யாதி. "இன்றேன்றாய்" என்றதுக்குஹாவம் - இன்றைக்குமுன்பு இத்யாதி. மேலுக்கவதாரிகை - இப்படியும்மை இத்யாதி.।அவன் ப்ரஸித்தமாக்கினானென்கிறதென்? வஸ்துதஃ ஶப்தம் உம்மதன்றோ

யான ஸர்வேஶ்வரனதாயிருக்கு மத்தனைபோக்கி, க்ஷேத்ரஜ்ஞனான ஸம்ஸாரிக்கு இல்லையிறே. இனி, சேதநனுக்குத் தனித்து ப்ரவ்ருத்திநிவ்ருத்திகளுக்கு யோக்யதையில்லையிறே; ஸ்வரூபஸ்தித்யாதிகள் தததீநமா யிருக்கையாலே. இதுதன்னை இனியகவியென்று நாட்டிலே ப்ரஸித்தமாக்கினான்: ''பாலேய்தமிழரிசைகாரர்பத்தர்பரவுமாயிரம்'' என்கிறபடியே; தான் வென்று அல்லாதாரோடு ஒக்கநின்று அர்ஜுநனைப்புகழுமாபோலே. ''மலைபுரைதோள்'' இத்யாதி. [செங்கணலைவலை] - ''அவாக்யநாதர:'' (அவாக்யநாதர:) என்றிருக்கக் கடவஅவன், அதுஅடைய அழிந்து எத்தத்தொடங்கினானாயிற்று. ''இன்கவி யென்பித்து'' என்னாநின்றீர், இங்ஙனன்றோ என்னில்?—அன்று; பின்னைச்செய்தபடி யென்? என்னில்,-[தன்சொல்லாலித்யாதி]. சொல்லும் தன்னது, சொன்னானும் தான், சொல்லிற்றும் தன்னை. கவிபாட்டுண்டேன் நானாகில்கிடீர் கவிபாடினேன் நானாவது. தான் தன்னைக் கவிபாடினானாகில், நீர் கவிபாடினீரென்று நாட்டிலே ப்ரஸித்தமாக்கினபடி யெங்ஙனே என்னில்,—[மாயன்] - சொல்லவேணுமோ? ஆஶ்சர்யஶக்தியுக்தனன்றோ? என்னை யுபகரணமாகக்கொண்டு தானே கவிபாடினான். 'உம்மை யுபகரணமாகக்கொண்டு கவி பாடினபடி எங்ஙனே?' என்ன,—[என்முன்சொல்லும்] - அவன் முற்சந்தையிடப் பின்னே நான் சொன்னேன். தான் சொன்னானாகில் ஸ்ரீகீதையோபாதி வறுமுறுகலாய்ப்போமிறே. நம்பிதிருவழுதிநாடுதாஸர், ஸ்ரீகீதைபோவானொருவன் ஸந்த்யாஸதஸ்ஸிலேவந்துகண்டால், பின்னையிவனுக்கு உழக்கரிசியைக்கொடுப்பித்துவிடுமித்தனைபோக்கி அங்கு அவர்கள் உள்ளிடங்கொடார்கள்; திருவாய்மொழி யப்யஸித்தான் ஒருவிண்ணப்பஞ்செய்வான் சென்றால், ஸர்வேஶ்வரனும் க்ராமத்திலுள்ளாரும் புறப்பட்டு எதிர்கொண்டு தங்களிருப்பிடத்தை யொழித்து அவனுக்குக்கொடுத்து ஆதரியாநிற்பர்கள்'' என்று ப்ரஸாதிப்பர். அதுதான் என்போல? என்றால்,—[மூவுருவாமுதல்வனே]-ப்ரஹ்மாவை ஸ்ருஷ்டித்து அவனை அத்யயநம் பண்ணுவித்துத் தேவர்களுக்கு வேளிச்சிறப்பைப்பண்ணுவித்து அதுதன்னை ''ப்ரஹ்மா செய்தான்'' என்று அவன்தலையிலே ஏறிட்டும், ருத்ரனுக்கு அந்தராத்மாவாய்ப் புக்குநின்று த்ரிபுரதஹநத்தைப் பண்ணுவித்து ''ருத்ரன்செய்தான்'' என்று அவன்தலையிலே ஏறிட்டும் விருதுபிடிக்கப்பண்ணினாற்போலே, தானே ப்ரபந்தத்தைப் பண்ணி, நான் பண்ணினே

என்ன - ஶப்தமாகில் இத்யாதி. சொன்னவர் நீரல்லீரோவென்ன - இனி, சேதநனுக்கு இத்யாதி. அதுக்குஹேது - ஸ்வரூபஸ்தித்யாதிகள் இத்யாதி. ஶப்தார்த்தம் - இதுதன்னை இத்யாதி. நாட்டிலே ப்ரஸித்தமாக்கினானென்கைக்கு, இவர்கவியை நாட்டார் இனிதென்பர்களோ? என்ன - பாலேய் தமிழர் இத்யாதி. தானேசெய்து வேறொருவர்பக்கலிலே ப்ரஸித்தமாக்கினதுக்கு த்ருஷ்டாந்தம் - தான்வென்று இத்யாதி. தானேவென்று அவனைப்புகழ்ந்தானோ என்ன, ப்ரமாணம் - மலை இத்யாதி. பெரியாழ்வார்திருமொழி. ''அலைவலை''என்றது இங்குவேண்டுவது. அலைவலை - பஹுஜல்பம். அதுக்கர்த்தம் - அவாக் இத்யாதி, தடஸ்த்தசங்கை - இன்கவி இத்யாதி. ''தன்சொல்லால்'' இத்யாதிக்கர்த்தம் - சொல்லும்தன்னது இத்யாதி. ''என்சொல்லால் யான்சொன்ன'' என்றதுக்கு ப்ரதிகோடிதயா, தன்சொல்லால் தான் கீர்த்தித்த என்னாதே, ''தன்னை'' என்று விஶேஷிக்கிறதென்? என்ன; த்ருஷ்டாந்தார்த்தமென்கிறார் - கவிபாட்டுண்டேன் இத்யாதி. கவிபாட்டுண்கை - கவிக்கு விஷயமாகை. மேலில்பதத்துக்கு சங்கதியிடுவாராக அதிஷ்டிக்கை - என்னையுபகரணமாக இத்யாதி. தான்சொல்லவொண்ணாதோ? இவரைக்கொண்டு சொல்லவேணுமோ? என்ன - தான்சொன்னானாகில் இத்யாதி. வறுமுறுகல் - கருகிப்போனது. ஸ்ரீகீதைக்கும் திருவாய்மொழிக்குமுண்டான வாசியை ஆப்தஸம்வாதத்தாலே தர்ஶிப்பிக்கிறார் - நம்பி இத்யாதி. ஸந்த்யாஸதஸ்ஸு - ஊர்ப்பொதுச் சாவடி. அதுதான் என்போல? என்றது - தான் கவிபாடி ஆழ்வார்மேலே ஏறிடுகிறதுதான் என்

னென்று என்தலையிலே ஏறிட்டு எனக்கு ஒருப்ரஸித்தியைத் தந்தான். தானே கார்யஞ் செய்து பிறர்தலையிலே ஏறிடுகை அவனுக்குப் பண்டே ஸ்வபாவங்கிடீர்! "[illegible]" (யோப்ரஹ்மாணம்விததாதிபூர்வம்யோவைவேதாம்ஸ்சப்ரஹிணோதி) என்று ப்ரஹ்மாவை ஓதுவித்ததும், "[illegible]" (விஷ்ணுராத்மாபகவதோபவஸ்யாமிததேஜஸ:! தஸ்மாத்தநுர்ஜ்யாஸம்ஸ்பர்ஸம்ஸவிஷேஹேமஹேஸ்வர:.) 'இப்போதுதானே நடத்திக் கொண்டதேன்?' என்றால்,-ஸ்வேநரூபேணநின்று கார்யஞ்செய்யுமாபோலே ப்ரஹ்மருத்ராதிகளைத் தனக்கு ஸரீரமாகக்கொண்டுநின்று ஸ்ருஷ்டி ஸம்ஹாரங்களைப்பண்ணி அவர்கள் மேலே ஏறிட்டாற்போலேகிடீர் என்மேலே ஏறிட்டுக் கவிபாடினேன் நானாகச்சொல்லித் தலைக்கட்டினபடியும் என்கைக்காகச் சொல்லிற்று. (உ)

மூன்றாம் பாட்டு

ஆமுதல்வன்இவனென்று தன்தேற்றிஎன்
நாமுதல்வந்துபுகுந்து நல்லின்கவி
தூமுதல்பத்தர்க்குத் தான்தன்னைச்சொன்னஎன்
வாய்முதலப்பனை என்றுமறப்பனோ?

ஆ.—(ஆமுதல்வன்.) - ஆம்இவனே ஸர்வேஸ்வரன் என்று தன்னை உள்ளபடியே அறிவித்து, என் நாவைநியமித்துக் கொண்டுவந்து புகுந்து, * அயர்வறுமமரர்களுக்கு போக்யமாக நல்லனவாய் இனியவான கவிகளைத் தான் தன்னைச் சொல்லுயாகிற இம்மஹோபகாரத்தை என்று மறப்பன் ? என்கிறார்.

ஓ.—மூன்றாம்பாட்டில், என்னை உபகரணமாகக்கொண்டு தன்னைத்தானே கவிபாடின மஹோபகாரகனை மறக்க வுபாயமில்லை என்கிறார்.

[ஆமென்று தொடங்கி] -கவிபாடுகைக்கு உற்ப்புஆவான்இவனொருவனென்று தானே தெளிந்து. முதலாவானிவனென்று தன்னை நான்தேறப்பண்ணி யென்றுமாம். [என்நாமுதலென்று தொடங்கி] - தானே என்னுடைய வாக்ப்ரவ்ருத்திக்கு முதலாய் வந்துபுகுந்து ஸர்வலக்ஷணோபேதமாய் இனிதான திருவாய்மொழியை அநந்யப்ரயோஜநரான ப்ரயாநஸக்தர்களுக்கு போக்யமாக. [என்னென்று தொடங்கி]-என்னுடைய வாய்

போலே என்றபடி. "கீழ்ச்சொன்ன வேதப்ரதாநமும் த்ரிபுரதஹநமும்அவனேசெய்தான்" என்னுமதுக்குமேலே ப்ரமாணங்காட்டுவாராக பீடிகை-தானேகார்யம் இத்யாதி. ப்ரமாணந்தன்னை யருளிச்செய்கிறார் - யோப்ரஹ்மாணம் இத்யாதி. 'ஸவிஷேஹேமஹேஸ்வர:' என்றதும் என்றகூட்டுவது. இதுக்கு, 'ஸ்வபாவங்கிடீர்' என்றதிலோடே அந்வயம். "மூவுருவாமுதல்வன்" என்று - ஸ்வவ்யாபாரத்துக்குக் காரணமென்பானென் ? என்ன; தான்செய்தகார்யம் தன்னதீநமானாற்போலே இவர்கள் செய்தகார்யமும் தன்னதீநமென்கைக்காகச் சொல்லுகிறதென்கிறார் - இப்போதுதானே இத்யாதி. அவர்கள்மேலே, ஏறிட்டதும் அதுபோலேகிடீர் என்றஅத்யாஹார்யம். 'என்னின்னுயிரின்றோன்றாய்' என்றதொடங்கி, 'மூவுருவர்முதல்வன் - என்முன்சொல்லும் - என்சொல்நிற்பன்' இத்யந்வய:. (உ)

த்தப்ரயோஜநபந்துவை என்று மறப்பனோ? என்னுடைய வாய்க்குமுதலான உபகாரகனை மறக்க உபாயமுண்டோ? என்றுமாம்.

ப.—அநந்தரம், பக்தர்களுக்காக என்னைக்கொண்டு தான் தன்னைக் கவி பாடின உபகாரகனை ஒருகால் மறக்க விரகுண்டோ ? என்கிறார்.

முதல்வன் - காரணபூதனான தான், இவன் ஆம் - இவன் கவிபாடுகைக்காம், என்று-,தன்-தன்னை, தேற்றி-(என்பக்கலிலே) தேறும்படிபண்ணி,(அதுக்கிடாக), முதல்-முந்துற,என் நா - என்நாவிலே,வந்துபுகுந்து-, நல் - அர்த்தசப்தலக்ஷணங்களில் குறை வற்றிருப்பதாய், இன்-ஸந்தர்ப்பஸாரஸ்யத்தையுடைய, கவி-கவியை, தூ-ஸத்வப்ரவ்ருத்தி, முதல்- முதலான, பக்தர்க்கு-பக்திகுண யோகத்தையுடையவர்க்குஅநுபாவ்யமாம்படி, தான்-தானே, தன்னை-,சொன்ன-சொல்லாநின்றுகொண்டு,என்வாய்- என்வாக்வ்ருத்திக்கு, முதல் - முதலான, அப்பனை - உபகாரகனை, என்றுமறப்பன்-? அவ்வுபகாரகத்வம் ப்ரகாசியாதது ஒருகாலமுண்டாகிலிறே மறக்கலாவதென்றுகருத்து. கவிபாடுகைக்கு ப்ரயோஜநவானிவனென்று என்னைத் தன்பக்கலிலே தேறும்படிபண்ணி என்றுமாம். வாய்முதலென்று - வாய்த்த ஹேதுபூதனென்றுமாம். தூமுதல் பத்தரென்று-அநந்ய ப்ரயோஜநராய் ப்ரதாநரான பக்தரென்றுமாம்.

இ.—மூன்றாம்பாட்டில், பார்ச்வஸ்தர் "உமக்கினி மறந்துபிழைக்கலாமத் தனை" என்ன, என்னையுபகரணமாகக் கொண்டு தன்னைத்தான் கவிபாடின மஹோபகார கனை மறக்க உபாயமில்லை என்கிறார்.

[ஆமுதல்வனிவனென்று] - முதலாமவன்இவன்என்று ; கவிபாடுகைக்கு முதலாமவன்-அடியாவான்-இவனென்று. ஆமுதல்வன் - முதலாமவன். [தன்தேற்றி]- என்பக்கலிலே தன் திருவுள்ளத்தைத் தெளியும்படி பண்ணியென்னுதல்; "ஜகத்காரண பூதன், கவிபாடுகைக்குஇவனும்" என்று தன்னை நான் தேறப்பண்ணி, ஸம்ஸாரத்தை என்னைக்கொண்டு திருத்தப்பார்த்தென்னுதல் ; எனக்குத் தன்வாசியை அறிவித்தா னென்னுதல். [என்நாமுதல் வந்துபுகுந்து] - ஸ்ரீவால்மீகிபகவான்கவிபாடிற்று, ஈச்வரன் திருவுள்ளமடியாக ப்ரஹ்மா ஸரஸ்வதியை அவன்நாவிலே ஏவியிறே ; அங்ஙன் இடையீடின்றிக்கே தானே என்னுடைய வாக்ப்ரவ்ருத்திக்கு முதலாய்வந்து புகுந்தென் னுதல் ; முந்தறநாவிலே வந்து புகுந்தென்னுதல். [நல்லின்கவி] - ஸர்வலக்ஷணோபேத மாய், அதொழிய, சொல்லுத்தானே செவிப்பாடுடைத்தாம்படி இனிதான கவி. [தூமுதற்பத்தர்க்கு] - அஸ்ப்ருஷ்ட ஸம்ஸாரகந்தரான நித்யஸூரிகளும், "கேட்டா ரார் வானவர்கள்" என்கிறபடியே விச்ராம்படி என்னுதல் ; ஸம்ஸாரத்தில் தலையான முமுக்ஷுக்களென்னுதல். [தான் தன்னைச்சொன்ன] - என்னையுபகரணமாகக்கொண்டு, கர்த்தாவும் தானேயாய் கர்மீபவிப்பானும் தானேயானன். [என்வாய் முதலப்பனை] - எனக்குவாய்த்த காரணபூதனான உபகாரகனை. [என்றுமறப்பனோ] - இனியொரு நாளும் மறக்கவுபாயமில்லை. இதுக்கு முன்புள்ள காலமடங்கலினைக்கவரிதானாற்போலே, இனிமேலுள்ள காலமடங்க மறப்பனென்றால்தான் மறக்கப்போமோ ?

ஈடு.—மூன்றாம்பாட்டு. ப்ரத்யுபகாரம் பண்ணுதொழியவு மாங்கிடீர், நான் மறந்துபிழைக்கப் பெற்றேனாகில் ! என்கிறார்.

மூன்றாம்பாட்டு.—ஆமுதல்வன் இத்யாதி. "வாய்முதல் அப்பனை யென்று மறப்பன்" என்றத்தைக் கடாக்ஷித்தவதாரிகை - ப்ரத்யுபகாரம் இத்யாதி.

[ஆமுதல்வனிவனென்றுதன்தேற்றி] - முதல்வனும்இவனென்று தன்பக்கலிலே எனக்குத் தெளிவுண்டாம்படியாகப்பண்ணி: காரணவாக்யங்களில் உபாஸ்யனுகச் சொல்லப்படுகிறன் தானேயென்று தன்பக்கலிலே நான் தெளியப்பண்ணியென்னுதல்; அன்றிக்கே, பரமபதத்தோபாதி ஸம்ஸாரத்தையும் திருத்தநினைத்தோம், அதுக்கு இவன்முதலாம்-அடியாம்இவன்-என்று, தன்தேற்றி - என்பக்கலிலே தன் ஸ்வரூபாதிகளைத் தெளியப்பண்ணி யென்னுதல். இங்கேஅருளிச்செய்யும்வார்த்தை - "திருப்புற்றுக்குக் கிழக்கே கரியமாணிக்காழ்வார்திருமுன்பின் ஸோபாநத்திலே ஆளவந்தார் எழுந்தருளியிருக்க, உடையவர் திருப்புற்றுக்குக் கிழக்காக எழுந்தருளிநிற்கிறவரைக் கண்டு, 'ஆமுதல்வனிவன்' என்றுஅருளிச்செய்தாராம்" என்று. [என்நாமுதல்வந்துபுகுந்து] - ஸர்வேஶ்வரன் ப்ரஹ்மாவைக்கடாக்ஷித்து, அவன்பின்னை "𑌮𑌚𑍍𑌛𑌨𑍍𑌦𑌾𑌦𑍇𑌵 𑌤𑍇 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌨𑍍 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑍇𑌯𑌂 𑌸𑌰𑌸𑍍𑌵𑌤𑍀" (மச்சந்தாதேவதேப்ரஹ்மந் ப்ரவ்ருத்தேயம்ஸரஸ்வதீ) என்கிறபடியே அவன் ஸரஸ்வதியை யேவி, இப்படி நாலிரண்டுநிலைநின்றிறே ஸ்ரீவால்மீகி 𑌭𑌗வானைப் பேசுவித்தது; அங்ஙனோர்இடையீடின்றிக்கே, என்னுடைய நாக்கிலே முற்பாடனாய்வந்து புகுந்தேன்னுதல். அன்றிக்கே, என் நாவுக்குஅடியாய் வந்துபுகுந்தேன்னுதல். [நல்லின்கவி] - லக்ஷணோபேதமாய், அந்தலக்ஷணங்கிடக்கச்செய்தே சொல்லிலினிமைதானே ஆகர்ஷகமாம்படி இனிதான கவிகளை. [தூமுதல்பத்தர்க்கு] - அஸ்ப்ருஷ்ட ஸம்ஸார𑌗𑌨𑍍𑌧ரான நித்யஸூரிகளுக்கு, "கேட்டாரார் வானவர்கள்" என்கிறபடியே, அவர்கள்கொண்டாடும்படிசொன்ன என்னுதல். ஸம்ஸாரத்தில் தலையான முமுக்ஷுக்களுக்கு. [தான்தன்னைச்சொன்ன] - தானேசொல்லுதல் நானேயொருபடிசொல்லுதல் செய்கையன்றிக்கே, * என்நாமுதல்வந்துபுகுந்து தான் தன்னைச் சொன்னாயிற்று. [என்வாய்முதலப்பனை] - எனக்குவாய்த்த காரணபூதனான மஹோபகாரகனை யென்னுதல்; "என் நாமுதல்" என்கிறதுதன்னையே யநுபாஷித்து, என் வாக்குக்கு முதலானஅப்பனை யென்னுதல். [என்றுமறப்பனோ] - முன்புஅநாதிகாலம் மறந்துபோந்ததாகில் இனிமேல் நினைக்கைக்குஉடலான காலத்தையெல்லாம் மறக்கைக்குஉடலாக்கினால்தான் மறப்பனோ? முன்புநினைக்கையிலுள்ள அருமையோபாதியும் போரும்இனி மறக்கையிலுள்ள அருமையும்: இனி ஏதேனுமொருநாள்தான் என்னாலே மறக்கப்போமோ? (௩)

---

† "தன்தேற்றி" என்று- தச்சப்தத்தாலே ஈஶ்வரனைச்சொல்லி, தன்பக்கலிலே தெளிவைப் பண்ணியென்றபடி. விவரணம் - காரணவாக்யங்களில் இத்யாதி. அர்த்தாந்தரம் - அன்றிக்கே இத்யாதி. "தன்தேற்றி" என்றதுக்கு - தன் ஸ்வரூபாதிகளை என்பக்கலிலே தெளியப்பண்ணி என்றிரண்டாமர்த்தம். அதாவது - ஜகத்தைத்திருத்தத்தக்க ஜ்ஞாநமுண்டாம்படி மயர்வறமதிநல மருளுகை. ப்ராஸங்கிகமாக ஐதிஹ்யம் - இங்கே இத்யாதி. இங்கேயென்றது-ஜகத்தைத் திருத்துகைக்கு இவனடியாம் என்று சொன்ன இவ்விடத்திலே யென்றபடி. என்னாவிலே முற்பாடனாய்வந்து புகுந்தென்னுமதுக்கு வ்யாவர்த்யம் - ஸர்வேஶ்வரன் இத்யாதி. இடையீடு - வ்யவதாநம். என்னாவிலே, முதல்-முற்பாடனாய், அத்வாரகமாக ப்ரவேஶித்தென்னுதல்; என்னாவுக்குமுதலான காரணமாய்வந்து புகுந்தென்னுதல். "𑌰𑌾𑌮𑌸𑍍𑌯 𑌚𑌰𑌿𑌤𑌂 𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌂 𑌕𑍁𑌰𑍁 𑌤𑍍𑌵𑌮𑍃𑌷𑌿𑌸𑌤𑍍𑌤𑌮 । 𑌮𑌚𑍍𑌛𑌨𑍍𑌦𑌾𑌦𑍇𑌵 𑌤𑍇 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌨𑍍" இத்யாதி பாலகாண்டே. என்னாவுக்கடியாயென்றது - என்வாக்ப்ரவ்ருத்திக்கடியாய் என்றபடி. தூயராய் - பரிசுத்தராய். ப்ரதாநரான நித்யஸூரிகளுக்கு என்று மூந்தின அர்த்தம். "முதல் பத்தர்" என்றதுக்கு அர்த்தாந்தரம் - ஸம்ஸாரத்தில். இத்யாதி எம்பெருமானார் நிர்வாஹத்திலே வ்யாவ்ருத்தி - தானேசொல்லுதல் இத்யாதி. "என்றுமறப்பனோ" என்றதுக்கு பாவம்-முன்பு அநாதி இத்யாதி. கீழ்வாக்ய விவரணம் - முன்புநினைக்கை இத்யாதி வாக்யத்வயமும். (௩)

---

† இந்த இடத்திலே வாக்யம் அநந்விதம்; சரியான பாடம் கோசாந்தரத்திற் பார்க்கவேணும்

நான்காம் பாட்டு.

அப்பனையென்றுமறப்பனோஎன்னாகியே
தப்புதலின்றித்தனைக்கவிதான்சொல்லி
ஒப்பிலாத்தீவினையேனையுய்யக்கொண்டு
செப்பமேசெய்துதிரிகின்றசீர்கண்டே.

ஆ.—(அப்பனையென்று) - என்னை யுபகரணமாகக்கொண்டு கவிசொல்லா நிற்கச்செய்தே, தப்பாதபடி சொல்லி ஒப்பிலாத்தீவினையேனாயிருக்கச்செய்தே என்னை ஆத்மாந்தமாக அடிமைகொண்டு, மேன்மேலன நன்மைசெய்து திரிகின்ற சீர்கண்டு, அப்பனையென்று மறப்பனோவென்கிறார்.

ஒ.—நாலாம்பாட்டில், தானே தன்னைக் கவிபாடிக்கொண்டானாகில் ஆஸ்சர்ய மில்லை; அதுக்குப் பங்கன்றிக்கேயிருக்கிற என்னைக்கொண்டே தப்பாமே கவிபாடின இவ்வுபகாரத்தை மறக்க வுபாயமில்லை யென்கிறார். [ஒப்பிலாத் தீவினையேனை யென்று தொடங்கி] - ஹேயப்ரத்யநீகத்வ ஸர்வஜ்ஞத்வாதிகளால் தன்னோடொத்தாரில்லாதாப் போலே ஹேயத்வாஜ்ஞத்வாதிகளால் ஒப்பில்லாதஎன்னைவிஷயீகரித்து செவ்விதாகப் பரிமாறின நீர்மையை அநுஸந்தித்து.

ப.—அநந்தரம், என்விரோதியைப்பாராதே விரும்பி என்னைக்கொண்டு தப்பாமல் கவிபாடுவித்துக்கொண்ட மஹோபகாரத்தைக் கண்டுவைத்து அவனைமறக்கும் படி யென்? என்கிறார்.

என்னாகியே-என்பக்கலிலேதானாய், தப்புதல் இன்றி-தப்புதல் இல்லாதபடி, தனை- தன்னை, தான் - தானே, கவி சொலி-கவிசொல்லி,ஒப்பு இலா-ஒப்பற்றிருப்பதாய், தீ-க்ரூரமான, வினையேனை - பாபத்தையுடையேனான என்னை, உய்ய - உஜ்ஜீவிக்கும்படி, கொண்டு - கைக்கொண்டு, (அஸ்ப்ருஷ்டஸம்ஸாரகந்தரோடு பரிமாறுமாபோலே), செப்பமே - செவ்வையே, செய்துதிரிகின்ற - செய்துவர்த்திக்கிற, சீர் - சீலத்தை, கண்டு - கண்டுவைத்து, அப்பனை - இப்படி யுபகாரகனானவனை, என்று - அபகாரியானபோது தான், மறப்பன் - மறப்பனோ ?

இ.—நாலாம்பாட்டில், தானே கவிபாடிக்கொண்டால் நிரவத்யமாய் என்னைக் கொண்டு தப்பாமே கவிபாடின இவ்வுபகாரத்தை மறக்க வுபாயமில்லையென்கிறார்.

[அப்பனை என்றுமறப்பன்] - இவ்வுபகாரம் பண்ணினவனை இனி அபகாரம் பண்ணினால்தான் மறப்பனோ? [என்னாகியே] - என்னை உபகரணமாகக்கொண்டே. [தப்புதலின்றி] - என்னோட்டை ஸம்ஸர்கத்தால் வந்த தோஷம் தட்டாமே. நானே கவிபாடினேனாகில் நிரவத்யமாம்; இதிறேயரிது. [தன்னைக்கவிதான் சொல்லி]-தனக்கு ஸத்ருஶமாகத் தான் சொல்லி. [ஒப்பிலாத் தீவினையேனை] - ஹேயப்ரத்யநீகத்வத்தில் தன்னோடொத்தா ரில்லாதாப்போலே, ஹேயமான பாபத்துக்கு எனக்கொப்பில்லாத என்னை. ஸர்வஜ்ஞத்வ ஸர்வஶக்தித்வத்தால் குறைவற்றிருக்குமாபோலே, அஜ்ஞாநாஶக்திகளால் குறைவற்ற என்னை. [உய்யக்கொண்டு]- “ஸந்தைநம் ததோ விஷ்ணு:”

என்னும்படி விஷயீகரித்து. [செப்பமேசெய்து திரிகின்ற] - குடிலஹ்ருதயனான என்னோடே, நித்யஸூரிகளோடு பரிமாறுமாபோலே செவ்வியனாய் வர்த்திக்கிற. [சீர் கண்டே] - ஶீலாதிகுணங்களை அநுஸந்தித்து, அப்பனை என்றுமறப்பன்?

ஈடு.—நாலாம்பாட்டு. தானே தன்னைக் கவிபாடிக்கொண்டானாகில் ஓராஶ்சர்ய மில்லை; அதுக்குப் பாங்கன்றிக்கேயிருக்கிற என்னைக்கொண்டு தப்பாமே கவிபாடின இவ்வுபகாரத்தை இனி மறக்கவுபாயமில்லைஎன்கிறார்.

[அப்பனையென்றுமறப்பன்] - உபகாரகனானவனை நான் என்று மறப்பன்? இனி, அவன்உபகாரம்பண்ணினால்தான் மறக்கப்போமோ? உமக்கு மறக்கவொண்ணாமைக்கு அவன்பண்ணினவுபகாரமேதென்றால்? - [என்னாகியேதப்புதலின்றித்தனைக் கவிதான்சொல்லி] - என்னை யுபகரணமாகக்கொண்டு கவிபாடுகிறவிடத்து, என்னுடைய ஸ்பர்ஶத்தாலேவந்த தோஷம் தட்டாதபடி கவிபாடினான். [என்னாகியே] - என்பக்கலிலேதானாய், இவ்விடத்துக்குஎம்பாரருளிச்செய்யும்படி:-''தான்பாடினானாகில் நிரவத்யமாய்த்தலைக்கட்டும்: நான் பாடினேனாகிலும் வருந்தியொருபடி தலைக்கட்டும். என்னையுபகரணமாகக்கொண்டு கவிபாடாநிற்கச்செய்தேயும் என்னோட்டை ஸ்பர்ஶத்தால் வந்ததோஷம் தட்டாதபடி கவிபாடித்தலைக்கட்டினான்'' என்று. [தனைக்கவிதான் சொல்லி] - விஷயாநுரூபமாகக் கவிபாடினான். [ஒப்பிலாத்தீவினையேனையுய்யக் கொண்டு] - என்னையுபகாரணமாகக்கொண்டு இப்படி கவிபாடுவித்தது, முன்பு நின்ற நிலையிற்காட்டில் நான்எவ்வளவுபுகுரநின்றேனாக; நான் முன்புற்றையிற்காட்டில்ஓரடி வர நின்றதுண்டோ? [ஒப்பிலாத்தீவினையேனையுய்யக்கொண்டு] - நானும்அவனுக்கொப்பன் என்கிறார். ஸர்வஜ்ஞத்வ ஸர்வஶக்தித்வங்களுக்கு அவனுக்கு ஒப்பிலாதாப்போலேயாயிற்று,அஜ்ஞாநாஶக்திகளுக்கு எனக்கொப்பில்லாதபடியும். [உய்யக்கொண்டு] ''**ஸந்தமேநம்ததோவிதுஃ**'' (ஸந்தமேநம்தோவிதுஃ) என்கிறபடியே என்னை உஜ்ஜீவிக்கும்படி கைக்கொண்டு. [செப்பமேசெய்துதிரிகின்ற] - குடிலஹ்ருதயனாயிருக்கிற என்னோடே,அஸ்ப்ருஷ்டஸம்ஸாரகந்தரான நித்யஸூரிகளோடு பரிமாறுமாபோலே என்னுடனே செவ்வையே பரிமாறினானென்னுதல்; எனக்கு ரக்ஷைபண்ணிப் போருகிற என்னுதல். [சீர்கண்டே] - இப்படியிருக்கிற ஶீலாதிகுணங்களை யநுஸந்தித்து - அப்பனைஎன்று மறப்பன்?

நாலாம்பாட்டு.—அப்பனை இத்யாதி. ''என்னாகியேதப்புதலின்றி, ஒப்பிலாத்தீவினையேனை யுய்யக்கொண்டு, அப்பனை என்றுமறப்பன்'' என்கிறவற்றைக் கடாக்ஷித்தவதாரிகை - தானேதன்னை இத்யாதி.

மறக்கப்போகாமையின் உறைப்பை அருளிச்செய்கிறார் - இனி,அவன் இத்யாதி. ''என்னாகியேதப்புதலின்றி'' என்றவநந்தரம், ''ஒப்பிலாத்தீவினையேனை'' என்றதுக்குஹாவம் - என்னையுபகரணமாக இத்யாதி. உக்தத்துக்கு ஸம்வாதம் --இவ்விடத்துக்கு இத்யாதி. அவனுக்கொத்தபடி எப்படியென்ன - ஸர்வஜ்ஞத்வ இத்யாதி. செப்பம் - ஆர்ஜவமும், ரக்ஷையும். 'என்னாகியே தப்புதலின்றி' என்று தொடங்கி, 'திரிகின்றசீர்கண்டு - அப்பனைஎன்று மறப்பன்' இத்யந்வயஃ. (ச)

சோர்வாலே வந்ததோன்றன்றோ?'' என்று, ரக்ஷகராகையாலே நாள்தோறும்புதியராயிருப்பர். ''ஹ்ரீரேஷாஹிமமாதுலா'' (ஹ்ரீரேஷாஹிமமாதுலா) என்னக்கடவதிறே. இவனளவல்லவாயிற்று, பிற்பாட்டுக்கு அவன் லஜ்ஜிக்கும்படி. [எந்நாள்சிந்தித்தார்வனே]-பண்ணினவுபகாரம் கனத்திராநின்றது; உபகாரஸ்ம்ருதிக்குக் காலம்போருகிறதில்லை; நான் என்செய்வேன்? ஶரீரவிஶ்லேஷாநந்தரத்தில்தானே வாய்புகுநீராகையால் அநுஸந்திக்கைக்கு அவகாசமில்லை; இங்கிருக்கும்நாள் காலம்போருகிறதில்லை; பண்ணினஉபகாரமோ கனத்திராநின்றது; நான் என்செய்கேன்? (எ)

எட்டாம் பாட்டு.

ஆர்வனோஆழியங்கை எம்பிரான்புகழ்
பார்விண்நீர்முற்றுங்கலந்துபருகிலும்
ஏர்விலாஎன்னைத் தன்னாக்கிஎன்னால்தன்னைச்
சீர்பெறஇன்கவிசொன்னதிறத்துக்கே.

ஆ.—(ஆர்வனோ.) - என்னைக்கொண்டு தானும் உளனும்படி கவிபாடின அந்தக்குணத்தை, இவ்வண்டாந்தர்வர்த்திகளான அஸங்க்யேயஆத்மாக்களுடையவாகாத்யுபகரணங்களையும் அயர்வறுமமரர்களுடைய வாகாத்யுபகரணங்களையுங்கொண்டு அநுபவித்தால்தான் ஆர்வனோ? என்கிறார்.

ஒ.—எட்டாம்பாட்டில், என்னைக்கொண்டு திருவாய்மொழி பாடுவித்துக் கொண்ட இம்மஹாகுணத்தை, உபயவிபூதியிலுள்ளாருடையபோக்த்ருத்வ ஶக்தியையும் அதுக்கீடான வாஹ்யாத்யுபகரணங்களையும்பெற்று அநுபவித்தாலும்ஆரேனென்கிறார்.

[ஆர்வனோவென்று தொடங்கி] - நான் கவிபாடுகைக்குப் பாங்காம்படியாகத் தன்திருவழகைக் காட்டின மஹோபகாரகனுடைய குணங்களை ஸகலசேதநரையும் துணையாகக்கொண்டு பருகிலும்ஆர்வனோ? [ஏர்விலாவென்னைத்தன்னாக்கி] - தன்னைக் கவிபாடுகைக்கு யோக்யதை இன்றிக்கேயிருக்கிற என்னைத் தன்னோடொக்கப்பண்ணி; தனக்காக்கி யென்றுமாம். [என்னாலென்று தொடங்கி] - என்னாலே தன்னை நிறம் பெறும்படி கவிசொன்ன படிக்கு.

ப.—அநந்தரம், ஸமஸ்தவிபூதியிலுமுள்ள ஆகாரங்களை யுடையனாய்க் கொண்டு மஹோபகாரகனை உன்புகழை யநுஸந்தித்தாலும் ஆர்வனோ? என்கிறார்.

நோவுபட்டிருக்குமோ? என்ன - ஹ்ரீரேஷாஹி இத்யாதி. ''ஹ்ரீஶ்சநஶ்ஶாஸவமேவமேஹ்ரீரேஷாஹிமமாதுலா । யதீசஶ்ஶோஸிமஹ்யேவமஸ்ஸவமேவஸ்ஸவஸ்தி:'' இத்யாரண்யகாண்டே ராமஃ(௪௦-௧). ''அதுலா'' என்றதுக்கர்த்தம்-இவனளவல்ல இத்யாதி. ''எந்நாள்சிந்தித்தார்வன்'' என்றதுக்குஹாவம் - பண்ணினவுபகாரம் இத்யாதிவாக்யத்வயம். ''எந்நாள்'' என்கிறதென்? காலமில்லையோ? என்ன - ஶரீர இத்யாதிவாக்யத்ரயம். ''வண், தீம், கவி'' என்று பதச்சேதம். தீம்-இனிமை. (எ)

ஏர்வு - கவிபாடுகைக்குத் தகுதியான ஜ்ஞாநஶக்த்யாதிகள், இலா - இல்லாத, என்னை - என்னை, தன்னாக்கி - தன்விஷயத்திலே ஜ்ஞாநாதிகளை யுண்டாக்கி, என்னால் - என்னையிட்டு, தன்னை - பூர்ணனான தன்னை, சீர் - சீலாதிகுணலாபம், பெற - பிறக்கும் படி, இன் - இனிய, கவி - கவியை, சொன்ன - சொன்ன, திறத்துக்கு - ப்ரகாரத்துக்கு, ஆழியங்கை - கையுந்திருவாழியுமான அழகைக்காட்டி, எம்பிரான் - அறிவைப் பிறப்பித்து உறவையுண்டாக்கின என்ஸ்வாமியுடைய, புகழ் - குணப்ரதையை, பார் - பூம்யுபலக்ஷிதமான அவதாரஸ்தலத்திலும், விண் - பரமாகாசரூபமான பரஸ்த்தலத்திலும், நீர் - க்ஷீரார்ணவமான வ்யூஹஸ்த்தலத்திலுமுள்ள, முற்றும் — சேதநரெல்லாருமாய், கலந்து - கலந்து, பருகிலும் - அநுபவிக்கிலும், ஆர்வனோ - த்ருப்தனாவனோ?

இ.—எட்டாம்பாட்டில், என்னைக்கொண்டு கவிபாடுவித்துக்கொண்ட இம் மஹாகுணத்தை, உபயவிபூதியிலுள்ளாருடைய போக்த்ருத்வஶக்தியையும் அதுக்கு ஈடான வாஹ்யாத்யுபகரணங்களையும் பெற்று இவ்வுபகாரத்தையநுபவித்தாலும் ஆமோ வென்கிறார்.

ழியங்கை யெம்பிரான்புகழ் பார்விண்நீர்முற்றுங் கலந்து பருகிலும் - ஆர்வனோ]- [ஆழியங்கை யெம்பிரான்புகழ்] - எனக்கு விஷயமாகக் கையுந் திருவாழியுமான அழகைக்காட்டின உபகாரகனுடைய குணங்களை, "ஆய்க்கொண்டசீர்வள்ளலாழிப் பிரானெனக்கேயுளன்" என்று கையுந்திருவாழியுமாய் நின்ற அழகுக்குத்தோற்றுக் கவி பாடுமவன் நானென்கிறாரிறே. தன்ஸ்வரூப குணங்களையும் ஆத்ம குணங்களையும் எனக்கு விஷயமாக்கின வுபகாரகனென்கை. [பார்இத்யாதி] - பூமியிலும் ஊர்த்வலோகத்திலும் ஜலங்களிலுமுள்ள ஸகல சேதநருடைய போக்த்ருத்வத்தையும் வகாத்யுபகரணங்களையும் துணையாகக்கொண்டு அநுபவித்தாலும்ஆர்வனோ? ஆராதபடிபண்ணின வுபகாரந் தானேதென்ன? - [ஏர்இலாவித்யாதி] - கவிபாடுகைக்கு யோக்யதைகளொன்றின்றிக்கே யிருக்கிறஎன்னை. கீழ், "ஏர்" என்று இச்சையை அழகாகச் சொல்லிற்று; இங்கு இச்சைக்கும் ஹேதுவான ஜ்ஞாநாதிகளைச் சொல்லுகிறது. [தன்னை] - ஸமஸ்த கல்யாணகுணாத்மகனை. [சீர்பெற] - என்கவிபாட்டாலே அந்தகுணங்களைப் பெற்றாலும்படி. [இன்கவிசொன்ன திறத்து] - சீர்பெறாவிடிலும் பாசுரம்அமைந்திருக்கிற கவியைச் சொன்னபடிக்கு. திறம் - படி.'ஆழியங்கையெம்பிரான்'என்று தொடங்கி, 'கலந்து பருகிலும் - ஆர்வனோ' - உயர்வறவுயர்நல முண்டாயிற்று இக்கூப்பீட்டாலே.

ஈடு:—எட்டாம்பாட்டு. நான்ஒருவனுமிருந்து ஜீவிக்கும்நாள் உபகாரஸ்ம்ருதிக்குக் காலம் போராதேன்று நோவுபடுகிறேனோ? - என்னுடைய உபகாரஸ்ம்ருதியையும் அபேக்ஷையையு முடையராய்க்கொண்டு புறம்பே அந்யபரராயிருக்கிற ஭கவத்வ்யதிரிக்த ஸமஸ்தசேதநரும் என்னுடனேகூடி நெடுங்காலமெல்லாம் நானும்அவர்களுங்கூடி நின்றுஅநுபவித்தால்தான் ஆர்வனோ?என்கிறார்.

எட்டாம்பாட்டு.—ஆர்வனோ இத்யாதி. "'பார்விண்நீர்முற்றும்கலந்துபருகிலும்' என்றதுக்கு அவதாரிகையிலே ஒருபொருளும், பாட்டிலே இரண்டுபொருளும்" என்றருளிச்செய்வர். பாரிலுள்ளார், விண்ணிலுள்ளார், நீரிலுள்ளார், இவர்களெல்லாருங்கூடிநின்று அவன் குணங்களை யநுபவித்தாலும் த்ருப்திபிறவாதென்று ஒருபொருள்; இத்தை அருளிச்செய்கிறார் - நானொருவனும் இத்யாதி.

[ஆழியங்கை இத்யாதி] - ஆழியங்கையெம்பிரான்புகழைப் பார்விண்ணீர்முற்றுங்கலந்துபருகிலும் - நான்ஆர்வனோ? தன்னுடைய ஸ்வரூபரூபகுணவிபூதிகளை என்னுடையகவிக்கு விஷயமாக்கின மஹோபகாரகனுடைய புகழை. "வாய்கோண்டு மானிடம்பாடவந்தகவியேனல்லேனாய்கோண்ட சீர்வள்ளலாழிப்பிரானெனக்கேயுளன்" என்கிறாரிறே. பாரிலுள்ளார், விண்ணிலுள்ளார், நீரிலுள்ளாரான இவர்களெல்லாருடைய வாகாத்யுபகரணங்களையும் போக்த்ருத்வத்தையும் ஶக்திவிசேஷங்களையும் உடையேனாய்க்கொண்டு காலமெல்லாம்நின்று அநுபவித்தாலுந்தான் நான்ஆர்வனோ? கலக்கை - அவற்றோடேசேர்க்கை. அன்றிக்கே, பார்விண்ணென்று - உபயவிபூதியையுஞ்சொல்லி, நீரென்று - நீர்மையாய், ஸ்வபாவமாய், உபயவிபூதியிலுள்ளோர் போக்த்ருத்வஶக்தி ஸ்வபாவத்தையுமுடையேனாய்அநுபவித்தாலும் என்றாகவுமாம். நீர் இப்படி எல்லாருடைய உபகரணங்களையும்உடையீராய்க்கொண்டு காலமெல்லாம்அநுபவியாநின்றாலும் ஆராமைக்கு அவன்பண்ணின உபகாரந்தான்ஏது? என்றால்,—[ஏர்வுஇத்யாதி] - இங்கு, நன்மையில்லையாகச் சொல்லுகிறது. கீழே - கவிபாடுகைக்குஇடமான இச்சையுமில்லையென்றார்; இங்கு, அவ்விச்சைக்குஅடியான யோக்யதையுமில்லையென்கிறார், "ப்ராஹ்மணா

ப்ர. — [ஆழியங்கை இத்யாதி] - [ஏர்விலாவனைத்தன்னாக்கி] - ப்ருஹதாரண்யகே [சு - ச] "[illegible]
[illegible]
நேந ப்ராஹ்மணா விவிதிஷந்தி । யஜ்ஞேந தாநேந தபஸாऽநாஶகேந."

அந்வயிக்கிறார் - ஆழியங்கை இத்யாதி. ஶப்தார்த்தம் - தன்னுடைய இத்யாதி.. கையுந்திருவாழியுமான தன்னை இவர்கவிக்கு விஷயமாக்கினானோவென்ன - வாய்கோண்டு இத்யாதி. "ஆழியங்கை" என்று - ரூபமும், "எம்பிரான்" என்று - குணமும் சொல்லுகையாலே, ஸ்வரூபவிபூதிகளும் அர்த்தாத்ஸித்தங்கள். அவதாரிகையிலே - பாரிலுள்ளாரும், விண்ணிலுள்ளாரும், "நீர்" என்று - கீழில் லோகங்களுக்கும் உபலக்ஷணமாய், பாதாளாதி லோகஸ்தரும், முற்றும் - எல்லாரும் நானுமாகக்கலந்து உபகாரஸ்ம்ருதிபண்ணினாலும் ஆர்வனோவென்று அர்த்தமருளிச்செய்து, "முற்றுங்கலந்து" என்றதுக்கு - அவர்களுடைய வாகாத்யுபகரணங்களையும் போக்த்ருத்வ ஶக்தி விசேஷங்களையும் உடையேனாய்க்கொண்டென்று அர்த்தாந்தரம்-பாரிலுள்ளார் இத்யாதி. "கலந்து" என்றால் இவ்வர்த்தத்தைக் காட்டுமோ? என்ன-கலக்கை இத்யாதி. மூன்றாமர்த்தத்துக்கு, "விண்" என்று - பரமபதம்; "நீர்" என்று - நீர்மை: ஸ்வபாவமாய், போக்த்ருத்வஶக்தியைச் சொல்லுகிறது, "முற்றும்" என்று - போக்த்ருத்வஶக்திஸ்வபாவ மெல்லாவற்றையும் என்றபடி. கீழேயும் "ஏர்விலா" என்றவைத்து, இங்கேயும் "ஏர்விலா" என்றால் புநருக்தமன்றோ? என்ன, அருளிச்செய்கிறார் - இங்குநன்மை இத்யாதி. நன்மையாவது - யோக்யதை என்றபடி. விவரணம் - கீழே இத்யாதி. கீழேயென்றது - அஞ்சாம்பாட்டிலே. யோக்யதையாவது - ஸுக்ருதம். இச்சைக்கு யோக்யதை வேணுமோ? என்ன - ப்ராஹ்மணா இத்யாதி. விவிதிஷந்தி - வேதிதுமிச்சந்தி. இந்த ஶ்ருதிக்கு ஶ்ருதப்ரகாசிகையிலே, "இச்சையை ஃபலமாகச்சொல்லி யஜ்ஞாதிகளை ஸாதநமாகச்சொன்னால் அந்யோந்யாஶ்ரயதோஷம் வரும்: ஆகையாலே அதுசோராது" என்றார். அந்யோந்யாஶ்ரயதோஷம் வரும் க்ரமமென்?என்ன,— இச்சையுண்டாயே யஜ்ஞதாநாதிகள்பண்ணவேணும்: யஜ்ஞாதிகளைப் பண்ணினாலொழிய இச்சையில்லை: ஆகையாலே, "விவிதிஷந்தி" என்று - வேதநத்தை ஃபலமாக்கி, அதுக்கு ஸாதநம் யஜ்ஞாதிகளென்று நிர்வஹித்தருளினார். ஜ்ஞாநத்தை ஃபலமாக்கி, அதுக்குஸாதநம் யஜ்ஞாதிகளென்று ஶப்தம் வகிக்கும்படியென்? என்னில்,—"ஶஸிநாஜிவாம்ஸதி"

விவிதிஷந்தி'' (ப்ராஹ்மணாவிவிதிஷந்தி) என்றுநிற்கச்செய்தேயும், ''யஜ்ஞேந தாநேந தபஸாநாஶகேந'' (யஜ்ஞேநதாநேநதபஸாநாஶகேந) என்று யோக்யதையைச் சொல்லிற்றிறே; அதுவுமின்றிக்கேயிருக்கிற என்னையென்கை. [என்னால்தன்னைச்சீர்பெற இன்கவிசொன்ன] - ஸமஸ்தகல்யாணகுணாத்மகனானவன் இக்கவியாலே தனக்கு நிறமாம்படியாகச்சொன்ன. நான் கவிசொல்ல ஸர்வேஶ்வரனானதனக்கு இத்தாலே நிறமாக நினைத்திராநின்றான். இச்சீர் இழக்கவரிலும் விடவொண்ணாதபடியாயிற்றுக் கவியின் இனிமை. [இன்கவிசொன்னதிறத்துக்கு] - இப்படி இனியகவிகளைச்சொன்ன ப்ரகாரமொன்றுக்கும். அல்லாதகுணங்கள் குமிருந்துபோமித்தனை. இப்ப்ரகாரமொன்றுக்கும் - ஆழியங்கையெம்பிரான்புகழைப் பார்விண்நீர் முற்றுங்கலந்து பருகிலும் - ஆர்வனோ? (அ)

ஒன்பதாம் பாட்டு.

திறத்துக்கேதுப்பரவாந்திருமாலின்சீர்
இறப்பெதிர்காலம்பருகிலும்ஆர்வனோ ?
மறப்பிலாஎன்னைத்தன்னாக்கிஎன்னால்தன்னை
உறப்பல இன்கவிசொன்னவுதவிக்கே.

ஆ.—(திறத்துக்கு.) - அஜ்ஞாநத்துக்குங்கூட ஆஶ்ரயமல்லாமையாலே அசித்கல்பனாயிருந்த என்னைத் தன்னைப்போலேயாக்கி, என்னைக்கொண்டு பிராட்டியும் தானுமாகத் திருவாய்மொழி பாடின இம்மஹோபகாரத்தை, முன்புசொன்ன ஸர்வோபகாரணயுக்தனாய்க்கொண்டு பூதபவிஷ்யத்வர்த்தமான காலமெல்லாம் அநுபவித்தால் தான் ஆர்வனோ ? என்கிறார்.

அவியானது இச்சாஸாதநமன்றிக்கே ஹநநத்துக்கு ஸாதநமானாற்போலே, இங்கும் யஜ்ஞாதிகள் ஜ்ஞாநத்துக்கே ஸாதநமாகிறதென்றபடி. ''ஏர்விலா'' என்று - இங்கு, இச்சைக்கு ஸாதநமில்லையென்னும்போது, ஸ்ரீபாஷ்யத்தோடு விரோதியாதோ? என்ன; அங்ஙன் விரோதமில்லை. லகுஸித்தாந்தத்திலே ''யதா விவிதிஷந்தி யஜ்ஞாதயோ விவிதிஷோத்பத்தௌ விநியுஜ்யந்தே'' இத்யாதி வாக்யத்திலே பாஷ்யகாரர் அப்யுபகம்யவாதம்பண்ணி, உத்தரோத்தரேச்சா ஸாதநத்வம் அருளிச்செய்தாரிறே. அப்யுபகம்யவாதமாவது - பரபக்ஷத்தையங்கீகரித்துச் சொல்லுகை. இந்தவர்த்தத்துக்கு அந்யோந்யாஶ்ரயதோஷம் பரிஹரிக்கும்க்ரமமேதென்ன; அஜ்ஞாத ஸுக்ருத ... அவ்வோ இச்சையுண்டாய், அந்த இச்சையினுடைய அவிச்சித்தியை ஸாத்யமாக்கி யஜ்ஞதாநாதிகளை ஸாதநமாகச்சொல்லும்போது தோஷம் வாராதென்று பரிஹரித்து, இதுவும் ஒருநிர்வாஹமாக்கி [illegible]த்தார்; அந்த 'யதா வி'' இத்யாதி வாக்யத்தை யநுஸரித்து இவர்இப்படி அருளிச்செய்கிறாரென்று கருத்து. அநாஶகேந - அநஶநேநேத்யர்த்தஃ. ''சீர்பெற'' என்றதுக்குபாவம் - ஸமஸ்தகல்யாண இத்யாதி. சீர்பெற - நிறமாம்படியாக. நீர் கவிசொல்ல அவனுக்கு நிறமுண்டாம்படியென்? என்ன - நான் கவிசொல்ல இத்யாதி. ''இன்கவி'' என்றதுக்கர்த்தம் - இச்சீர் இத்யாதி. ''திறத்துக்கே'' என்கிற அவதாரணார்த்தம் - அல்லாத இத்யாதி. குமிருந்துபோகை - அநுபவயோக்யமன்றிக்கேயிருக்கை. 'ஏர்விலா' என்று தொடங்கி, 'திறத்துக்கே - ஆழியங்கையெம்பிரான்புகழ் பார்விண்நீர்முற்றும்கலந்து பருகிலும் ஆர்வனோ?' இத்யந்வயஃ. (அ)

ஒ.—ஒன்பதாம்பாட்டில், என்னைக்கொண்டு கவி பாடுவித்துக்கொண்ட மஹோபகாரகனை, ஸகலசேதநருடைய போக்த்ருத்வஶக்தியை யுடையேனாய்க்கொண்டு காலமுள்ளதனையும் அநுபவித்தாலும் ஆரேனென்கிறார்.

[திறத்துக்கேயென்று தொடங்கி] - ஏதேனுமொன்றிலே புக்கால் அத்தை முடிக்கவல்ல ஸாமர்த்யத்தையுடைய ஸ்ரீய:பதியினுடைய கல்யாணகுணங்களை. [மறப்பிலாவென்னைத் தன்னாக்கி] - ஸ்வவிஷயஜ்ஞாநத்துக்கு ஸம்பாவனையில்லாமையாலே ஸ்மரணமின்றிக்கே அசித்கல்பனாயிருந்துள்ள என்னைத் தன்னோடொக்கப்பண்ணி. [என்னாலென்று தொடங்கி] - என்னாலே தனக்கு உறும்படி இனிதாகப் பல கவியைச் சொன்ன உபகாரத்துக்கு. தனக்கு நேரே வாசகமாம்படியென்றுமாம்.

ப.—அநந்தரம், கீழ்ச்சொன்ன ப்ரகாரத்தாலே ஸர்வசேதந ஶக்தியைக்கொண்டு ஸர்வகாலாநுபவம்பண்ணினாலும் ஆர்வனோ? என்கிறார்

(ஒருகால்நினைவில்லாமையாலே),மறப்பு இலா-மறப்புஇல்லாதபடியான,என்னை-, தன்னாக்கி - தன்பக்கலிலே மறப்புஅறும்படியான அறிவையுடையனாக்கி, என்னால் - என்னை யிட்டு, தன்னை-,உற - அவ்யவஹிதவாசகமாய், பல- ஸஹஸ்ரஸங்க்யாதமாய், இன்-மதுரமான, கவி—கவியை, சொன்ன—, உதவிக்கு-உபகாரத்துக்கு,— திறத்துக்கு-இழிந்தகார்யப்ரகாரங்களுக்கு, ஏய் - அநுரூபமான, துப்பரவுஆம் - ஶக்தியையுடையனான, திருமாலின் - ஸ்ரீய:பதியினுடைய, சீர் - ஔதார்யசீலஸௌலப்யாதிகுணங்களை, இறப்புஎதிர்காலம் - அதீதாநாகதங்களான காலத்தையும் கூட்டிக்கொண்டு பூர்வோத்தர காலவர்த்தி ஸகலசேதநஶக்தியுக்தனாய்க்கொண்டு, பருகிலும் - அநுபவிக்கிலும், ஆர்வனோ - ஆர்வனோ? துப்பரவு - மிடுக்கு.

இ.—ஒன்பதாம்பாட்டில், என்னைக்கொண்டு கவிபாடுவித்துக்கொண்ட உபகாரத்துக்கு, கீழ்ச்சொன்ன பரிகரங்களையும் துணையாக்கொண்டு காலதத்வமுள்ளதனையும் இத்தையநுபவித்தாலும் ஆரேனென்கிறார்.

[திறத்துக்கேதுப்பரவாந்திருமால்]- ஏதேனுமொன்றிலே புக்கால் அத்தைத் தலைகட்டவல்ல ஸாமர்த்யத்தையுடையவன். த்ருணத்தைக்கொண்டு ஒருகாரியங்கொள்ளப்புக்கால், அத்தைக்கொண்டே நினைத்த காரியங் கொள்ளும் ஸாமர்த்யத்தையுடையவன். திறம் - கூறுபாடு. துப்பரவு - ஸாமர்த்யம். [திருமாலின்சீர்]-இந்த ஸாமர்த்யத்துக்குஅடியாயிருக்கிறது ஸ்ரீய:பதித்வமாயிற்று. ஸ்ரீய:பதியினுடைய கல்யாணகுணங்களை. [இறப்புஇத்யாதி] - போனகாலமும் வருங்காலமும் நான் அநுபவித்தால்தான் ஆர்வனோ? போனகாலம்அநுபவிப்பாராய்ச் சொல்லுகிறாரல்லர், எல்லாக்காலமும் அநுபவித்தாலும் ஆராதென்கைக்காக. கீழ்ச்சொன்ன ஸமஸ்தசேதநருடைய போக்த்ருத்வ ஶக்தியையுங் கூட்டிக்கொண்டுஅநுபவித்தாலும்ஆராது. "எந்நாள் சிந்தித்தார்வனோ" என்கிறதிற்காட்டில் ஏற்றமில்லையாமிறே, சேதநரைக் கூட்டிக்கொள்ளாதபோது. உபகாரந்தான் எதுஎன்ன,—[மறப்பிலாவென்னை] - ஸ்வவிஷயஜ்ஞாநத்துக்கு ஸம்பாவனையில்லாமையாலே விஸ்ம்ருதியுமின்றிக்கே அசித்ஸமனான என்னை: "மறந்தேனுன்னை முன்னம்" என்கிறபடியே அநுதாபமுமின்றிக்கே யிருக்கிற என்னை. [என்னால்தன்னையுற] - "யதோ வாசோ நிவர்த்தந்தே" என்கிற விஷயத்தை, எல்லையுற - தனக்குநேரே வாசகமாம்படி. ஈஸ்வரனுக்கு உறும்படி என்றுமாம்; இது பிள்ளான் நிர்வாஹம். [பல

இன்கவி சொன்னவுதவிக்கே]- "வதாவிஹ்ம்ஸ்தஹஸாணி" என்றும், "வாமெ மெயெவயோராழ" என்றும் சொல்லுமாபோலே, ஆயிரமுமாய் இனிதானகவிசொன்ன உபகாரத்துக்கு. திறத்துக்கென்று தொடங்கி, பருகிலுமார்வனே'?

ஈடு.—ஒன்பதாம்பாட்டு. என்னைக்கொண்டு கவிபாடுவித்துக்கொண்ட மஹோபகாரகனை, ஸகலசேதநருடைய ஹோக்த்ருத்வஶக்தியை யுடையேனுய்க்கொண்டு காலமெல்லாம் புஜித்தாலும் ஆரேனேன்கிறார் - கீழ்; அந்தஹோக்த்ருத்வ ஶக்தியுடனே காலத்வயமும் புஜித்தாலும் ஆரே னேன்கிறார்-இதில்.

[திறத்துக்கேஇத்யாதி] - ஏதேனும்ஓரிடையாட்டத்தில் வந்தால், ஒரு த்ருணத்தைக்கொண்டு காரியங்கொள்ளப்பார்த்தால் அத்தைக்கொண்டே காரியத்தை அப்படித் தலைக்கட்டிக்கொள்ளும்படிக்கூடான துப்பரவுண்டு- ஸாமர்த்த்யம், அத்தையுடையனுன. அதுக்கு அடியேன்? என்றால்,—ஸ்ரீயஃபதியாகையாலே:நினைத்தகாரியஞ்செய்து தலைக்கட்டு கைக்கீடான ஸாமர்த்த்யத்தையுடையனுன ஸ்ரீயஃபதியுடையகல்யாணகுணங்களை. ஒருவன்செய்தது வாய்த்து வரப்புக்கவாறே "அவன்குப்பைக்காலன்காண், ஸ்ரீமான்செய்ததெல்லாம்நன்றாய்வருங்காண்"என்னக்கடவதிறே. [இறப்பெதிர்இத்யாதி]- ஸமஸ்தசேதநருடையவும் வாகாத்யுபகரணங்களையும் ஹோக்த்ருத்வாதிஶக்திகளையும் நான் உடையேனுய் அநுஹவிக்கப்புக்காலும்,ஜீவிக்கைக்குஅடியானஆயுஸ்ஸூஅல்பமாகையாலே உபகார ஸ்ம்ருதிக்குக் காலம்போருகிறதில்லை. "எங்நாள்சிந்தித்தார்வனே" என்னவேண்டாதே அவ்வவருடைய உபகரணங்களையும் உடையேனுய், போனகாலமும் மேல்வரக்கடவகாலமும்எல்லாம் அநுஹவியாநின்றாலுந்தான் ஆர்வனோ? (வர்த்தமாநகாலம் தன்னடையேவருமிறே. போனகாலம் அநுஹவிப்பாராய்ச்சொல்லுகிறார் அன்று; எல்லாக்காலமும்அநுஹவித்தாலும் போராதென்கைக்காக. 'எங்நாள் சிந்தித்தார்வனே' என்கிறதிற்காட்டில்ஏற்றமில்லையாமிறே, கீழிற்பாட்டிற்சொன்ன சேதநரைக்கூட்டிக்கொள்ளாதபோது.) எல்லாருடைய உபகரணங்களையுங்கொண்டு காலமெல்லாம் அநுஹவித்தாலும் நீர்ஆராதேயொழிகிறது அவன்பண்ணினஎவ்வுபகாரத்தைஸ்மரித்து? என்ன,—[மறப்பிலாவித்யாதி]-மறப்பில்லையானஎன்னை. மறப்புக்குப் பூர்வக்ஷணவர்த்தியான நினைவும்எனக்கில்லை என்கைக்காக, மறப்பிலாவேன்கிறபாசுரத்தாலே அருளிச்செய்கிறார். மறப்பிலாஎன்னவேண்டுவானேன்? என்னில்,— நினைவுள்ளவிடத்திலேயிறே மறப்புள்ளது. ஆக, காதாசித்கமானஸ்ம்ருதியுங்கூட எனக்

ஒன்பதாம்பாட்டு.—திறத்துக்கே இத்யாதி. உக்தார்த்தத்தை யநுவதித்துக்கொண்டு "இறப்பெதிர்காலம் பருகிலுமார்வனே" என்றத்தைக் கடாக்ஷித்தவதாரிகை - என்னைக்கொண்டு இத்யாதிவாக்யத்வயத்தாலே. காலத்வயமென்றது - பூதபவிஷ்யத்காலமென்றபடி.

இடையாட்டம் - வ்யாபாரம். ஶப்தார்த்தம் - நினைத்த இத்யாதி. "திறத்துக்கேதுப்பரவாம் -" நினைத்தகாரியத்துக்கீடான ஸாமர்த்யத்தையுடைய ஶ்ரியஃபதியுடைய சீரையென்று நிஷ்க்ருஷ்டஶப்தார்த்தம். துப்பரவு - ஸாமர்த்யம். ஶ்ரியஃபதியானல் துப்பரவுண்டாமோ? என்ன - ஒருவன் இத்யாதி. குப்பைக்காலன் - நல்வழிக்காலன். கீழிரண்டுபாட்டில் அர்த்தத்தையுங் கூட்டி அருளிச்செய்கிறார் - ஸமஸ்த இத்யாதி. "மறப்பிலா" என்று - ஸர்வஜ்ஞத்வம் சொல்லுகிறாரோ? என்ன - மறப்புக்கு இத்யாதி. மறப்பிலாவேன்னவேண்டுவானேன்? என்னிலென்றது - ஸ்ம்ருதியில்லாத என்னவேண்டியிருக்க, "மறப்பிலா" என்னவேண்டுவானேன்? என்னிலென்றபடி. இத்தால் ஃபலிதம் - ஆக இத்யாதி. விவரணமாதல் "மறப்பிலா" என்றத்தோடே "தன்னுக்கி" என்

கில்லையென்கிறார். [மறப்பிலாவென்னைத்தன்னாக்கி] - காதாசித்கமாகஸ்மரித்துப் பின்னை யொருகால் மறப்புண்டாய், அத்தைக் காணக்கண்ணிட்டுத்தான் இப்படி விஷயீகரித்தானோ? முதலிலே தன்பக்கல் ஸ்ம்ருதியின்றிக்கே யிருக்கிற என்னைத் தன்னாக்கி. [என்னால்] - "மறந்தேனுன்னைமுன்னம்" என்கிறஅநுதாபமுங்கூட இன்றிக்கேயிருக்கிறஎன்னை யிடுவித்து. [தன்னையுறப் பலவின்கவிசொன்ன] - என்றதுக்குச்சீயருளிச்செய்யும்படி - 'யதோவாசோநிவர்த்தந்தே' (யதோவாசோநிவர்த்தந்தே) என்று வேதங்கள் மீண்ட விஷயத்தை மாறுபாடுருவச்சொன்ன" என்று. அன்றிக்கே, பிள்ளான் பணிக்கும்படி:-"ஸர்வேஶ்வரனுக்குச் சாலவுற்றதென்கிறார்" என்று. [பலவின்கவிசொன்ன] - "சதுர்விம்ஶத் ஸஹஸ்ராணிஶ்லோகாநாமுக்தவாந்ருஷிஃ" (சதுர்விம்ஶத் ஸஹஸ்ராணிஶ்லோகா நாமுக்தவாந்ருஷிஃ) என்னுமாபோலே, ஸம்ஸாரத்திலே இப்படிவிலக்ஷணமாயிருப்பது ஆயிரம் பாட்டைப்பாடுவதே! என்கிறார். இனிய கவிகளைச்சொன்ன, உதவிக்கு - இவ்வுபகாரத்துக்கு திருமாலின்சீர் இறப்பெதிர் காலம்பருகிலும் ஆர்வனோ? (கூ)

பத்தாம் பாட்டு.

உதவிக்கைம்மாறென்னுயிரென்னவுற்றெண்ணில்
அதுவுமற்றாங்கவன்தன்னதுஎன்னால்தன்னை
பதவியஇன்கவிபாடியஅப்பனுக்கு
எதுவுமொன்றுமில்லைசெய்வதிங்குமங்கே.

ஆ.—(உதவி) - இப்படி என்னைக்கொண்டு திருவாய்மொழி பாடுவித்தருளின மஹோபகாரத்துக்குக் கைம்மாறாக என்னாத்மாவை அவனுக்குஅடிமையாகக் கொடுக்க எண்ணில், அதுவும் பண்டே அவனுக்கு அடிமையாதலால் இங்கும் அங்கும் இதுக்கு ஒருகைம்மாறு செய்யலாவதுஇல்லையென்று அவனுடைய மஹோபகாரத்தை யநுஸந்திக்கிறார்.

ஒ.—பத்தாம்பாட்டில், தம்மைக்கொண்டு கவிபாடுவித்துக்கொண்ட மஹோபகாரத்துக்கு ப்ரத்யுபகாரங் காணாதே பலமாக்கிறார்.

[உதவியென்று தொடங்கி] - அவனுக்கு ப்ரத்யுபகாரமாக என்னுடைய ஆத்மாவைக் கொடுக்கைக்கு என்று ஆராய்ந்தபோது அதுவும் பின்னை அவனதாயிராநின்றது. [என்னாலென்று தொடங்கி] - என்னாலே தன்னை ம்ருதுவாய் இனிதான கவியைப் பாடின மஹோபகாரத்துக்கு இங்கிருந்தாலும் திருநாட்டிலே போனாலும் பண்ணலாம் ப்ரத்யுபகாரமில்லை. [எதுவுமொன்றுமில்லை செய்வதிங்குமங்கே] - அஹங்காரமமகாரஸம்பாவனையுள்ள இஹலோகத்தில் ப்ரத்யுபகாரம் பண்ணப்பெறாத

றத்தையுங்கூட்டி ஹாவமாதல் - காதாசித்கமாக இத்யாதி. உற - மறுபாடுருவவென்னுதல், ஸத்ருஶமாகவென்னுதல். "உற" என்றதுக்குஹாவம் - யதோவாச இத்யாதி. "பலவின்கவி" என்றதுக்கு ஹாவம் - சதுர்விம்ஶத் இத்யாதி பாலகாண்டே, "தயாஸமஹஸ்ராநுவஷட்காணாநி தயோத்தரம்" இத்யுத்தரார்த்தம் (ச-உ). "மறப்பிலா" என்றதொடங்கி, 'சொன்னவுதவிக்கு' - திறத்துக்கே 'என்று தொடங்கி' பருகிலுமார்வனோ' இத்யந்வயஃ. (க)

இவர்க்கு, அவற்றைக் கணக்காணவும் முடியாத பரலோகத்தில் ப்ரத்யுபகாரம்பண்ண விரகில்லை என்று கருத்து.

ப.—அநந்தரம், அவனுடைய உபகாரத்துக்குப்ரத்யுபகாரம் ஒருப்ரகாரத்தாலும் இல்லையென்கிறார்.

உதவி - கவிபாடுவித்துக்கொண்ட உபகாரத்துக்கு, கைம்மாறு - ப்ரத்யுபகாரம், என் உயிர் - என் ஆத்மா, என்ன - என்று, (அத்தை), உற்று - சிக்கென, எண்ணில் - நிரூபித்துப்பார்க்கில், ஆங்கு - அந்தப்ரத்யுபகாராவஸ்தையில், அதுவும் - அந்த ஆத்மாவும், மற்று-பின்னை, அவன்தன்னது- அவனுக்குஅஸாதாரண சேஷமாகையாலே, என்னால் - என்னையிட்டு, தன்னை -, பதவிய - ம்ருதுவாய், இன் - இனிதான, கவி - கவியை, பாடிய - பாடின, அப்பனுக்கு - உபகாரகனுக்கு, இங்கும் - இந்தவிபூதியிலும், அங்கும் - அந்தவிபூதியிலும், செய்வது - செய்யவடுப்பது, எதுவும் - ஏதேனும் அல்பமாயிருப்பது,(ப்ரத்யுபகாரம்),ஒன்றும் இல்லை-,ஜ்ஞாநம்பிறந்தத்தால் நித்யபரசேஷமான ஆத்மாவுக்கு முமுக்ஷுதசையோடு முக்ததசையோடு வாசியற ஸமர்ப்பணீயத்வமில்லையென்றுகருத்து. ஸ்வகீயத்வாபிமாநமுள்ளது அஜ்ஞாநதசையிலிறே.

இ.—பத்தாம்பாட்டில், தம்மைக்கொண்டு கவிபாடுவித்துக்கொண்ட உபகாரத்துக்கு ப்ரத்யுபகாரங் காணாதே யலமாக்கிறார்.

[உதவிக்கைம்மாறு] - பண்ணின உபகாரத்துக்கு ப்ரத்யுபகாரமாக. [என்னுயிர்] — நித்யமாய் ஸ்வயம்ப்ரகாசமாய்ஜ்ஞாநகுணகமான ஆத்மாவைக்கொடுத்தாலோ? என்னில்,—அதுசெய்யலாமிறேமுன்பே * மயர்வற மதிநலமருளிக் கெடுத்து வைத்திலனாகில். [உற்றெண்ணிலதுவும் மற்றாங்கவன்றன்னது] - ஆராயாதே கொடுக்கில் கொடுக்குமத்தொழிய, ஆராய்ந்துபார்க்கில் அதுவும் அவனதாயிருக்கும். [அங்கு] - ப்ரத்யுபகாரம்பண்ணியல்லது நிற்கமாட்டாத தசையில். உபகாரத்தையநுஸந்தித்து, ஆத்மஸமர்ப்பணத்திலே இழிவர்; ஸ்வரூபத்தையுணர்ந்து, அத்தையநுஶயிப்பர். "எனதாவிதந்தொழிந்தேன்" என்று, "எனதாவியார்?யான்ஆர்" என்றாரிறே."யோஸ்ஸ்மி ஸோஹம்" என்று, "ஸ்வாத்மாநம் ஸமர்ப்பயாமி" என்னக்கடவதிறே. ப்ராந்திஸமயத்தில் ஆத்மஸமர்ப்பணம்போலே இருப்பதொன்றிறே, பண்ணினவுபகாரத்துக்கு ப்ரத்யுபகாரம் பண்ணினஇதுவும்; ஸர்வமுக்தி ப்ரஸங்கம் வாராமைக்காக ப்ரதமத்திலே ஆத்மஸமர்ப்பணம் பண்ணக்கடவன்; ஸ்வரூபத்தையுணர்ந்தால் அவன் அத்தை அவனதாக இசையுமித்தனை. இவையிரண்டும் ஜ்ஞாநம்பிறந்தார்க்குப் பேற்றளவும்அநுவர்த்திக்கக்கடவதாயிருக்கும். [என்னால்தன்னை] - உபகாரஸ்ம்ருதியாலே ப்ரத்யுபகாரந்தேடித் தெகுடாடாநிற்கிற என்னாலே, மஹோபகாரகனான தன்னை. [பதவியஇன்கவி] - ம்ருதுவாய்இனிதானகவி. கவிபாட்டுண்டவனுக்கு இக்கவியாலே முன்பில்லாத நீர்மையுமுண்டாம்படியிருக்கை. இக்கவிபாட்டாலே முன்பில்லாத நீர்மை தனக்குஉண்டாயிற்றதாக நினைத்திருக்கிறானாயிற்று அவன். [பாடியவப்பனுக்கு] - இப்படி கவிபாடின மஹோபகாரகனுக்கு. [எதுவுமொன்றுமில்லை செய்வது] - செய்யலாவதுஏதேனுமொன்றுமில்லை. இங்கிருந்த நாள் ஸங்கோசத்தாலே செய்யலாவது ஒன்றுமில்லையேயாகிலும், ஸங்கோசமற்று முக்தனானால் ப்ரத்யுபகாரம்பண்ணத் தட்டில்லையேயென்னில்?—[இங்குமங்கே] - இங்கானால், தேஹாத்மாபிமாந வாஸநையாலே, "செய்யலாவதுண்டோ ?" என்று

ப்ரமிக்கலாயிருக்கும்; ஸங்கோசம் கழிந்தவளவில், செய்யலாவதொன்றுமில்லை யென்னுமிடம் சொல்லவேண்டாவிறே. "ஸ்வநாதேவேணாஹிதிஷ்டதே" என்று - ஸ்வரூபஜ்ஞானம் பிறந்தவிடத்திலே ஸ்வாதந்த்ர்யமான ப்ரவ்ருத்திக்கிடமில்லை.

ஈடு.—பத்தாம்பாட்டு. உபகாரஸ்ம்ருதிக்குக் காலம்போருகிறதில்லை என்று நீர் புண்படாகில்லாதே, உம்மதாயிருப்பதொரு வஸ்துவை அவனுக்கு ப்ரத்யுபகாரமாகக் கொடுத்துப் பிழைத்துப்போக மாட்டீரோ? என்ன; அப்படிச்செய்யலாயிற்றிறே ஈஶ்வரனைப் போலே நானும் எனக்குஉடைமையாயிருப்பதொரு வஸ்துவும்பெற்றேனாகில் என்கிறார்.

[உதவி] - உதவியுண்டு - உபகாரம்: அதுக்குக் கைம்மாறாக-ப்ரத்யுபகாரமாக [என்னுயிரென்ன] - நித்யமாய் ஜ்ஞானாநந்தலக்ஷணமாய் ஶ்லாக்யமா யிருப்பதொன்றுண்டிறே - ஆத்மவஸ்து: அத்தைக்கொடுத்தாலோவென்னில்?—அது செய்யலாயிற்றிறே, அடியிலே * மயர்வறமதிநலம் அருளிற்றிலனாகில்; முன்னே அத்தைக்கொடுத்துவைத்தானே; ப்ராந்தி ஸமயத்தில்ஆத்மஸமர்ப்பணம்போலேயிருப்பதொன்றாயிற்று, உபகாரஸ்ம்ருதியாலே ப்ரத்யுபகாரந்தேடிக் கலங்குகிற இது. ப்ராந்திஸமயத்தில்ஆத்மஸமர்ப்பணந்தான்வேணும்: தெளிந்தவநந்தரம் "என்னுடையவஸ்துவை யவனுக்குக்கொடுத்தேன்" என்றிருக்கக்கடவனல்லன்; அநாதிகாலம்ஆத்மாபஹாரம்பண்ணிப்போந்த அதிலுங்கடையாயிற்று, தெளிந்த வநந்தரம் "நான்என்னுடைய வஸ்துவைத் தந்தேன்" என்றிருக்குமாகில். பின்னையும் பழைய அபஹாரமே யநுவர்த்தித்ததாமே; ஜ்ஞானம் பிறந்தமை போய்யாமிறே. ஸர்வமுக்தி ப்ரஸங்கபரிஹாரார்த்தமாக ஆத்மஸமர்ப்பணந்தான் வேண்டிவரும்; நெஞ்சிலே வெளிச்சிறப்புண்டானால்அவன்வஸ்துவை அவனதாக இசைந்திருக்கக்கடவன். "மயாஸமர்ப்பித:" (மயாஸமர்ப்பித:) "அதவாகிந்நுஸமர்ப்பயாமிதே" (அதவாகிந்நுஸமர்ப்பயாமிதே)

பத்தாம்பாட்டு.—உதவி இத்யாதி. "என்னுயிரென்னவுற்று எண்ணில் அதுவுமற்றாங்கவன் றன்னது - அப்பனுக்கெதுவுமொன்றுமில்லை செய்வதிங்குமங்கே" என்றபதங்களைக் கடாக்ஷித்தவதாரிகை - உபகாரஸ்ம்ருதிக்கு இத்யாதி.

ஆத்மவஸ்துவை ப்ரத்யுபகாரமாக ஸமர்ப்பிக்கலாமென்கைக்கு உறுப்பாக இதினுடைய ஶ்லாக்யதையை யருளிச்செய்கிறார் - நித்யமாய் இத்யாதி. "உற்றெண்ணில்" என்றதக்குபாவமருளிச்செய்கிறார் - அதுசெய்யலாயிற்று இத்யாதிவாக்யத்வயத்தாலே. அத்தை - மயர்வறமதிநலத்தை யென்றபடி. அஜ்ஞனானால் ஆத்மஸமர்ப்பணம் பண்ணுமதொழிய, ஜ்ஞானமுண்டானால் உபகாரஸ்ம்ருதியாலே ஆத்மாவை ஸமர்ப்பிக்கப்போகாதோ? என்ன - ப்ராந்திஸமயத்தில் இத்யாதி. ப்ராந்தி ஸமயமாவது - ப்ரபத்திபண்ணுகிறஸமயம். ஆத்மஸமர்ப்பணமாவது - ஆத்மீயஹாந்யாஸம். ப்ரபத்தி பண்ணுகிற ஸமயத்தை ப்ராந்திஸமயமென்கிறது - ஸமர்ப்பித்த அநந்தரம். "ஸமர்ப்பிக்கத்தான் நான்ஆர்" என்று அநுதபிக்கும்படி யிருக்கையாலே. ப்ரத்யுபகாரந்தேடிக் கலங்குகிற இதுஎன்றது - ஆத்மஸமர்ப்பணம் பண்ணுகிறேனென்று கலங்குகிறஇதென்றபடி. ஆனால் ப்ரபத்திஸமயத்தில் ஆத்மஸமர்ப்பணம் வேண்டாவோ? என்ன; ஆத்மஸமர்ப்பணம்பண்ணும் ப்ரகாரத்தையும், ததநந்தரம் இவனிருக்கக்கடவ படியையும் அருளிச்செய்கிறார் - ப்ராந்திஸமயத்தில் இத்யாதிவாக்யத்வயத்தாலே இருந்தாலோ? என்ன - அநாதி இத்யாதி. இது கடையானபடிக்கு ஹேதுகதநபூர்வகமாகவிவரணம். பின்னையும் இத்யாதிவாக்யத்வயம். ஆனால் செய்தநுதபிக்கவேணுமோ? முதலிலே செய்யாதிருக்கவொண்ணாதோ?என்ன; இன்னதுக்காகச் செய்யவேணுமென்னுமத்தையும்,செய்தவநந்தரம் இன்னபடி யிருக்கவேணுமென்னுமத்தையும் அருளிச்செய்கிறார் - ஸர்வமுக்தி இத்யாதி வாக்யத்வயத்தாலே. அப்படி ஸமர்ப்பித்தநுதபித்தபேருண்டோ? என்ன - மயாஸமர்ப்பித இத்யாதி. ஸ்தோத்ரே யாமுநாசார்யா:, 'வபுராதிஷுயோபிகோபிவா' இத்யாதி, "மமநாத யதஸ்தி யோஸ்ம்யஹம்

என்னுநின்றதிறே. ''எனதாவி தந்தொழிந்தேன்'' என்று, ''எனதாவி யார் யான்ஆர்?'' என்றாரிறே. ஸ்வரூபஜ்ஞாநம் பிறந்தால் பேற்றளவுஞ்செல்ல இவ்விரண்டாகாரமும் அநுவர்த்திக்கக் கடவதாயிருக்கும். ஆக, ஆத்மஸமர்ப்பணத்துக்கும் உபகாரஸ்ம்ருதிக்கும் தனித்துஇவனுக்கு ப்ராப்தியில்லாதபடியான இவனுடைய அத்யந்த பாரதந்த்ர்யத்தைச் சொல்லுகிறது. [உற்றேனெண்ணில்] - ஆராயாதே மேலெழநின்றுகொடுக்கில் கொடுக்கலாம்; நெஞ்சிலே சிறிதுவெளிச்சிறப்புப்பிறந்து இதினுடைய ஸ்வரூபத்தையும் ஆராய்ந்துபார்த்துக் கொடுக்குமன்று கொடுக்க ப்ராப்தியில்லை. [அதுவும்] - ஆத்மாவும். [மற்று] - அப்படிப் பட்ட ஆத்மீயங்களும். [ஆங்கவன்றன்னது] - ப்ரத்யுபகாரம்பண்ணி யரிக்கவேண்டும் தசையில்அவனதாயிராநின்றது. [என்னுலித்யாதி] - உபகாரஸ்ம்ருதிக்குங்கூட ப்ராப்தியில்லாத என்னாலே, மஹோபகாரகனாயிருக்கிற தன்னை. [பதவிய இன்கவிபாடியவப்பனுக்கு] - கவிபாட்டுண்கிறவனுக்கு இக்கவிபாட்டாலே பண்டில்லாத நீர்மையுண்டாம் படியாகக் கவிபாடின உபகாரகனுக்கு. [எதுவுமொன்றுமில்லைசெய்வது] - ஏதேனும்ஒன்றுஞ்செய்யலாவதில்லை. இங்கிருக்கும் நாள் ஸங்கோசத்தாலே செய்யலாவதோன்றில்லையேயாகிலும், ஸங்கோசமற்று முக்தனானால் ப்ரத்யுபகாரம்பண்ணத்தட்டேன்என்னில்? [இங்குமங்கே]-இங்கானால், தேஹாத்மாபிமாநத்தாலே ''நான், என்னது'' என்றுபோய்க் கால்கட்டித்திரிகையாலே, ''செய்யலாவதுண்டோ'' என்று ப்ரமிக்கவுமாயிருக்கும்; அதுவுமின்றிக்கே, ஸங்கோசங் கழிந்தவளவில், தானேசெய்யலாவதோன்றில்லை என்னுமிடம் சொல்லவேண்டாவிறே; ''ஸ்வேநரூபேணாபிநிஷ்பத்யதே'' (ஸ்வேநரூபேணாபி நிஷ்பத்யதே) என்று - ஸ்வரூபஜ்ஞாநம்பிறந்தவிடத்தில் ஸ்வரூபவிரோதியாக ப்ரவர்த்திக்கப்போகாதிறே. (க0)

ரஹஸ்யேஷ்வநபாயஸம்ஸ்ப்ருதஃ'' ''ஸநாயஸ்ஸம்வேஹோ'' இத்யாதி, ''ஈஸ்வராதீநஸ்ஸம்ஸ்ப்ருஹயாமிதே''. ஆக, ''ப்ராந்திஸமயத்தில்ஆத்மஸமர்ப்பணம்போலே'' என்றத்தையுபபாதிக்க. அநந்தரம், ''உபகாரஸ்ம்ருதியாலே'' இத்யாதியையுபபாதிக்கக்கோலி, அப்படியுபகாரஸ்ம்ருதியாலேகலங்கி ஆத்மாவை ஸமர்ப்பித்து, தெளிந்தவநந்தரம் அநுதபித்தவிடமுண்டோ? என்ன- எனதாவி இத்யாதி. இத்தால்ஸூசிதம் - ஸ்வரூபஜ்ஞாநம் இத்யாதி. இவ்விரண்டாகாரமென்றது- உபகாரஸ்ம்ருதியாலே ஸமர்ப்பிக்கையும், அநந்தரம் அநுதபிக்கையுமாகிற இவ்விரண்டாகாரமுமென்றபடி. இப்பாட்டில் ''ஆத்மஸமர்ப்பணம்பண்ணப்போகாது'' என்றத்தால் ஸூசிதம்-அத்யந்தபாரதந்த்ர்யமென்கிறார் - ஆக ஆத்மஸமர்ப்பணத்துக்கும் இத்யாதி. ''உற்றெண்ணிலதுவுமற்றாங்கவன்றன்னது'' என்கிற இத்தால் ஸூசிதமான அர்த்தவிசேஷத்தை அருளிச்செய்கிறார் - ஆராயாதே இத்யாதி வாக்யத்வயத்தாலே. மற்று - ஆத்மீயங்களென்றபடி. அங்கு - ப்ரத்யுபகாரதசையிலென்றபடி. ப்ராப்தியில்லாதவென்னாலே - அத்யந்த பாரதந்த்ரனாகையாலே, 'ப்ராப்தியில்லாதவென்னாலே' என்று கூட்டுவது. பதவிய - பதமுண்டாம்படியாக; நீர்மையுண்டாம்படியாகவென்றபடி. ''பதவிய இன்கவி'' என்றதுக்கு - ம்ருதுவாய் இனிதானகவியென்று பொருளாகையாலே, இதுக்கு மார்த்தவமேதென்ன - கவிபாட்டுண்கிற இத்யாதி. ''இங்குமங்கும்'' என்றதுக்கவதாரிகை - இங்கிருக்கும்நாள் இத்யாதி. கீழ்சங்கைக்கு பரிஹாரம் - இங்கானால் இத்யாதிவாக்யத்வயம். ''ஸங்கோசங்கழிந்த'' இத்யாதி விவரணம் - ஸ்வேநரூபேண இத்யாதி. 'உதவிக்கைம்மாறு' என்றுதொடங்கி, 'அப்பனுக்கு - இங்குமங்கும் - எதுவுமொன்றுமில்லை செய்வது' இத்யந்வயঃ. (க0)

கக-ராம் பாட்டு.

இங்குமங்குந்திருமாலன்றியின்மைகண்டு
அங்ஙனேவண்குருகூர்ச்சடகோபன்
இங்ஙனேசொன்னவோராயிரத்திப்பத்து
எங்ஙனேசொல்லிலுமின்பம்பயக்குமே.

ஆ.—(இங்குமங்கும்.)-ஸ்ரீயஃபதியானவனல்லது உபகாரகர் இல்லையென்னுமிடத்தை அநுஸந்தித்து அந்த ஸாவயுக்தரான ஆழ்வார், தம்மைத் திருவாய்மொழி பாடுவித்தருளின இம்மஹோபகாரத்தைச் சொன்ன இத்திருவாய்மொழி, எங்ஙனே சொல்லிலும் இன்பம் பயக்குமென்கிறார்.

ஒ.—நிகமத்தில், இத்திருவாய்மொழி எங்ஙனேசொல்லிலும் ப்ரீதியை விளைக்கும் என்கிறார்.

[இங்குமென்றுதொடங்கி] - இஹலோகபரலோகங்களில் ஸ்ரியஃப்பதியல்லது தஞ்சமில்லையென்னுமிடத்தை அநுஸந்தித்து அந்தஸாவயுக்தராயிருக்கிற ஆழ்வார். [இங்ஙனேயென்று தொடங்கி] - இஸ்ஸாவத்திலே அருளிச்செய்த ஆயிரந்திருவாய்மொழியிலும் இத்திருவாய்மொழி.

ப.—அநந்தரம், இத்திருவாய்மொழி, தன்னோடு அந்வயித்தார்க்கு நிரதிஶயாநந்தத்தை யுண்டாக்காநிற்குமென்று ஃபலத்தையருளிச்செய்கிறார்.

இங்கும் - இந்த விபூதியிலுண்டான ஆஶ்ரயணதசையிலும், அங்கும்-அந்த விபூதியிலுண்டான கைங்கர்யதசையிலும், திருமால் - பூர்வோத்தரவாக்ய ப்ரமுகஸித்தமான ஸ்ரீயஃபதித்வத்தையுடையவனை, அன்றி - ஒழிய, இன்மை - வேறில்லாமையை, கண்டு - அநுஸந்தித்து, அங்ஙனே - அந்தப்ரகாரத்தையுடையராய், வண் - உதாரரான, குருகூர்ச்சடகோபன் - ஆழ்வார், சொல் - தம்மை வாசிக கைங்கர்யங்கொண்ட, இங்ஙனே - இந்தப்ரகாரத்திலே, சொன்ன - அருளிச்செய்த, ஓர் ஆயிரத்து - ஓர் ஆயிரத்திலே, இப்பத்தும்—, எங்ஙனே - இவருடைய உபகாரஸ்ம்ருதிரூபமான அர்த்தவ்யக்திரேகேண, சொல்லிலும் - ஶப்தமாத்ரமேசொல்லிலும், (ஆழ்வார்வை஭வத்தாலும் இத்திருவாய்மொழியின் மாஹாத்ம்யத்தாலும்), இன்பம் - ஭கவதநு஭வஜநிதநிரதிஶயாநந்தத்தை, பயக்கும் - உண்டாக்கும். இது - கலிவிருத்தம்.

இ.—நிகமத்தில், இத்திருவாய்மொழியை அப்யஸிப்பார்க்கு, எங்ஙனே சொல்லிலும் ப்ரீதியை விளைக்குமென்கிறார். [இங்குமங்குமித்யாதி] - இஹலோகபரலோகங்களிரண்டிலும் ஸ்ரீயஃபதியல்லது தஞ்சமில்லையென்னுமிடத்தை யநுஸந்தித்து. ஸாதநாநுஷ்டானவேளையோடு ப்ராப்திவேளையோடு வாசியற இவ்வாத்மாவுக்கொரு மிது²நமே தஞ்சமென்கை. "பண்டைநாளாலே" என்கிறபடியே, கைங்கர்யம் பண்ணுமிடத்திலும் அவள் முன்னாகப் பண்ணவேணுமிறே; ஆஶ்ரயணவேளையிலும் அவள் முன்னாகவேணுமிறே. "ஹதேதஸ்மிந்நகுர்யுர்ஹி" என்று, 'ராவணன் சொல்லுகையாலே நலிந்தார்களாகில், அவன்பட்டபின்புஇன்று நலியாநின்றார்களோ?' என்று ராக்ஷஸிகள்பக்கலிலும் குணத்தையாரோபிக்கும் நீர்மையையுடையவளிறே. நமக்கு ஸஹாசார்ய

ஸந்நிதியில் அவனுபேக்ஷையாலே இவ்வர்யப்ரதிபத்தியுண்டு; இவர்க்கு ப்ரதிபத்யநுரூபமான பரிமாற்றமே எப்போதுமுண்டு. [அங்ஙனே வண்குருகூர்ச்சடகோபன்] - அந்தப்ரதிபத்தியோடே, உதாரரான ஆழ்வார். [இங்ஙனேயித்யாதி] - இஸ்ஸாவவ்ருத்தியோடே சொன்னஇப்பத்தும். "சிந்தையாலும் சொல்லாலும் செய்கையினாலும்" என்று மனோவாக்காயங்கள் மூன்றும் பாஹ்யவிஷயங்களில் தொற்றற்று உத்தேஶ்யவிஷயத்திலே மூண்டிறே இவர்க்கிருப்பது. இப்பாசுரமேயமையும் இது அப்யஸித்தவர்களுக்கு. அவர்களைப் பார்த்தன்றிறே ஈஶ்வரனங்கீகரிப்பது, இவர்பாசுரமென்று இவரைப்பார்த்திறே. [எங்ஙனே சொல்லிலும்] - அஹ்ருதயமாகவுமாம், ஸஹ்ருதயமாகவுமாம்; பலத்தில் வ்யபிசரியாதென்கை. [இன்பம்பயக்கும்] - ஆநந்தத்தையுண்டாக்கும். "ஏஷ ஹ்யேவாநந்தயாதி" என்கிறபடியே, நிரவதிகமான ஆனந்தத்தை விளைக்கும்.

ஈடு.—நிகமத்தில் - இத்திருவாய்மொழி, ஏதேனும் ஒருபடி சொல்லிலும் ஆநந்தத்தை யுண்டாக்கு மென்கிறார்.

[இங்குமங்குந்திருமாலின்றி யின்மைகண்டு] - ஸாதநாநுஷ்டான ஸமயத்தோடு ப்ராப்யவஸ்துவை ப்ராபித்த ஸமயத்தோடு வாசியற, இஹலோகபரலோகங்கள் இரண்டிலும் ஶ்ரிய:பதியல்லதுபோக்கி இவ்வாத்மவஸ்துவுக்குத் தஞ்சமாயிருப்பார் வேறில்லையென்னுமத்தை யநுஸந்தித்து ; "பண்டைநாளாலே நின்திருவருளும் பங்கயத்தாள்திருவருளுங் கொண்டு நின்கோயில்சீய்த்து" என்கிறபடியே, கைங்கர்யம்பண்ணுமிடத்திலும் அவள்முன்னாகப்பண்ணவேணுமிறே; ஆஶ்ரயணவேளையிலும் அவள்முன்னாகவேணுமிறே. "ஹதே தஸ்மிந்ந குர்யு:" (ஹதேதஸ்மிந்நகுர்யு:) என்று—'ராவணன் சொல்லுகையாலே அன்றிருந்துநலிந்தார்களாகில், இப்போதும் நலிவர்களோ ?' என்று -- அவர்கள்பக்கலிலும் குணத்தை யாரோபித்துச்சொல்லும் நீர்மையை யுடையவளாயிற்று. [அங்ஙனேயித்யாதி] - நமக்கும் ஸதாசார்யன் அருகேயிருந்து, ஶ்ரிய:பதியொழிய இவ்வாத்மவஸ்துவுக்குத் தஞ்சமாயிருப்பாரில்லை" என்று உபதேசித்தால், அத்தனைபோதும் "அப்படியே" என்றிருக்குமதுண்டிறே ; இவர் அங்ஙனமன்றிக்கே, அந்நினைவுக்கநுரூபமான பரிமாற்றத்தையுமுடையவரா யிருப்பராயிற்று. ஆக, மனோவாக்காயங்கள் மூன்றும் ஒருபடிப்பட்டிருக்குமோ ? என்னில்,— [இங்ங

நிகமம்.—இங்குமங்கும் இத்யாதி. "எங்ஙனேசொல்லிலுமின்பம்பயக்கும்" என்றத்தைக் கடாக்ஷித்தவதாரிகை - இத்திருவாய்மொழி இத்யாதி.

இன்மைகண்டு - இல்லாமையையநுஸந்தித்து. இஹலோக பரலோகங்கள் இரண்டிலும் ஶ்ரிய:பதியே தஞ்சமென்றதுக்கு பாவமருளிச்செய்யாநின்றுகொண்டு, ஸப்தார்த்தம் - ஸாதநாநுஷ்டாந இத்யாதி. பலவேளையிலும் ஆஶ்ரயணவேளையிலும் பிராட்டி ஸம்பந்தம் வேணுமோ ? என்ன - பண்டைநாளாலே இத்யாதி வாக்யத்வயம். "ஆஶ்ரயணவேளையி லவள்முன்னாகவேணும்" என்கைக்கு, இவன் தோஷத்தைப்பார்த்து ஈஶ்வரன் சீறுமளவில் அத்தையாற்றிச் சேரவிடும்படியான நீர்மையுடையவளோ ? என்ன - ஹதேதஸ்மிந் இத்யாதி. "ஆஜ்ஞப்தா ராவணேநைதா ராக்ஷஸ்யோ மாமதர்ஜயந் । ஹதே தஸ்மிந் ந குர்யுர்ஹி தர்ஜநம் வாநரோத்தம" இதி யுத்தகாண்டே ஸீதா. (௧௧௬ - ௪௧) "அங்ஙனே" என்றதுக்கு வ்யாவர்த்யபூர்வகமாக அர்த்தம்- நமக்கும் இத்யாதி. பரிமாற்றத்தை- அநுஷ்டாநத்தை யென்றபடி. ஆகவென்றது - ஆனாலென்றபடி. மூன்றும் ஒருபடிப்பட்டிருக்குமோவென்றது- மாநஸமான அத்யவஸாயமும் காயிகமான அநுஷ்டாநம்போலே

னித்யாதி] - இஸ்ஸஹாவவ்ருத்தியிலேசோல்லிற்ருயிற்று ஆயிரம்பாட்டும். நீர், மநோவாக் காயங்கள்மூன்றிலும் ''ஸ்ரீய:பதியேஇவ்வாத்மவஸ்துவுக்குத்தஞ்சம்'' என்றுஅத்யவஸித்து அருளிச்செய்த இப்பாசுரத்தை யப்யஸிப்பார்க்கு மனோவாக்காயங்கள் மூன்றும் ஸாஹ்யாதிவிஷயங்களில்நின்றும் மீளவேணுமோ? நீர் * சிந்தையாலும் சொல்லாலும் செய்கையினாலும்தேவபிரானையேதந்தைதாயென்றடைந்தவராயிராநின்றீர், இவர்களுக்குமெல்லாம் பின்னை யிப்படிவேணுமோ? என்னில்,—அத்தேவைகளெல்லாம் நம்மோடே: இது கற்பார்க்கு அதுவேண்டாவென்கிறார்:— [எங்ஙனே சோல்லிலு மின்பம்பயக்குமே] - ஏதேனுமோருபடிசோல்லிலும் இன்பமுண்டாம். என்னுடையபாசுரத்தைக் கற்றவர்களென்றிறே ஈஶ்வரன்இவர்களைக்கடாக்ஷிப்பது ; இல்லையாகில், இவர் தம்மைப்போலே மநோவாக்காயங்களுடைய நியதியுண்டாய் அநுஸவிக்கப்பெறில் அழகிது; அதில்லாதபோதும் ஸலவ்யபிசாரியாகாதேன்கைக்காகச் சோல்லிற்றத்தனை இது. [இன்பம்பயக்குமே] - ''ஏஷஹ்யேவாநந்தயாதி'' (ஏஷஹ்யேவாநந்தயாதி) என்கிறபடியே, நிரந்தரஸம்பவதநுஸவத்தாற்பிறக்கும் ஆநந்தமானது உண்டாம். (கக)

வாசிகமும் ஒத்திருக்குமோவென்றபடி. ''எங்ஙனேசொல்லிலும்'' என்றதுக்கவதாரிகை - நீர்,மநோவாக்காயங்கள் இத்யாதி. ''நீர்மநோவாக்காயங்கள்'' இத்யாதிவாக்யவிவரணம் - நீர் சிந்தையாலும் இத்யாதி. அதுக்குஹேதுவேதென்ன - என்னுடையபாசுரத்தை இத்யாதி. ''சொல்லிலும்'' என்றயதிஸப்தார்த்தம் - இல்லையாகில் இத்யாதி. பயக்கும் - உண்டாக்கும். ஆநந்தயாதி - ஆநந்தயதி என்றபடி. (கக)

த்ரமிடோபநிஷத்ஸங்கதி.—[illegible] ॥

த்ரவிடோபநிஷத்தாத்பர்யரத்நாவளி.—[என்றைக்குமென்னை] - [illegible] ॥

திருவாய்மொழி நூற்றந்தாதி.

என்தனைநீயிங்குவைத்ததேதுக்கெனமாலும்
என்தனக்குமென்தமர்க்குமின்பமதா—நன்றாகவி
பாடவெனக்கைம்மாறிலாமையகர்மாறன்
பாடணைவார்க்குஉண்டாமின்பம்.

ஆழ்வார் திருவடிகளே ஶரணம், எம்பெருமானார் திருவடிகளே ஶரணம், ஜீயர்திருவடிகளே ஶரணம்.

பத்தாந்திருவாய்மொழி—இன்பம் - ப்ரவேஶங்கள்.

ஆ.—(இன்பம்பயக்க.) -இப்படி என்னைத் திருவாய்மொழி பாடுவித்தருளுகைக்காக, திருநாட்டினின்றும் அங்கே எழுந்தருளியிருந்தபடியே ஸபரிகரமாகத் திருவாறன்விளையிலே வந்துபுகுந்து என்னைத் திருவாய்மொழி பாடுவித்துப் பாட்டைக் கேட்டருளி, திருவடிபெருமாள்குணங்களைச்சொல்லக் கேட்டருளி அஶோகவநிகையிலே பிராட்டி நிர்வ்ருதையாயிருந்தாற்போலே நிர்வ்ருதனாயிருந்த திருவாறன்விளையை என்றோ சென்று நாம் அநுபவிக்கப்பெறுவது? என்று மநோரதிக்கிறார்.

ஒ.—பத்தாந்திருவாய்மொழியில், எம்பெருமான் தம்மைக்கொண்டு கவிபாடுவித்துக்கொண்ட இவ்வுபகாரத்துக்கு ப்ரத்யுபகாரங்காணாமையாலே, இனி ஆத்மாந்தமாக அடிமை செய்யுமித்தனையே செய்யக்கடவோமென்று பார்த்து, லோகமெல்லாம் வாழும்படி பெரிய பிராட்டியாரோடேகூடத் திருவாறன்விளையிலே, பர்யங்கவித்யையில் சொல்லுகிறபடியே திருவநந்தாழ்வான்மேலே திருவாய்மொழி கேட்டருளுகைக்கீடாம்படி யணித்தாக; ஸ்ரீராமாயணங்கேட்டருளுகைக்குப் பேரோலக்கமாகவெழுந்தருளியிருந்தாற்போலே இருந்தருளுவதுஞ்செய்து தமக்குஉபகாரகனான ஸர்வேஶ்வரனைக் கண்ணாலே கண்டு எல்லாவடிமையும் செய்யவேணுமென்று துணிந்தஆழ்வார், 'அடிமை செய்யுமிடத்தில் திருநாட்டிலேபோய் அடிமைசெய்யவுமிச்சையில்லை, திருவாறன்விளையிலே போய்அடிமை செய்யவேணும்' என்று அடிமைசெய்யும்படிகளை மநோரதிக்கிறார்.

ப.—பத்தாந்திருவாய்மொழியில், கீழ் இப்படி தம்மைக்கொண்டு கவிபாடுவித்துக்கொண்ட மஹோபகாரத்தாலே தம்முடையவிரோதி அஸத்ஸமமாம்படி ஹ்ருஷ்டரானவர், அவனுபகாரத்துக்கு ஒரு ப்ரத்யுபகாரங்காணாமையாலே, 'ஶேஷியானவனுக்கு அதிஶயஜநகமான ஶேஷவ்ருத்தியொழிய இல்லை' என்று அறுதியிட்டு, ப்ரதிஸம்பந்தியான அவனுடைய அஶேஷஶேஷித்வப்ரகாஶகமான ஸ்ரிய:பதித்வபூர்த்தியையும், அநந்யார்ஹஶேஷத்வாபாதகத்தையும்; ஆஶ்ரிதரக்ஷணகாரத்தையும், அநுபாவ்யமான விக்ரஹயோகத்தையும், அநுபவார்த்தமான அவதாரத்துக்கு மூலமாயுள்ள அநந்தஶயநத்வத்தையும், அநிஷ்டநிவ்ருத்திவிஶிஷ்டமான அபிமதஸாதகத்வத்தையும், ப்ராபலவிரோதிபஞ்ஜநத்வத்தையும், ஆர்த்தாதுக்கநிவர்த்தகத்வத்தையும், பாபம்நிவ்ருத்தமாய் ப்ராப்யதேசம் ஸித்திக்கிலும் உத்தேஶ்யமான ஆஸந்நதேஶஸம்யோகத்தையும், நிரதிஶயவ்யவஸாயஜநகத்வத்தையும் அநுஸந்தித்து, ஏவம்வித ஸ்வபாவனான அவன் நம்மை விரோதியைக்கழித்து அடிமைகொள்ளுகைக்காக ஆஸந்நமான திருவாறனவிளையிலே ஸந்நிஹிதனான அவன் திருவடிகளிலே அடிமைசெய்யக்கடவோமென்று மநோரதித்து, இப்படி நிவர்த்யவிரோதிபல நிரூபண பூர்வகமாக அதினுடைய ஶரண்யநிவர்த்யத்வத்தை நிஷ்கர்ஷித்து நிகமிக்கிறார்.

இ—பத்தாந்திருவாய்மொழியில், அவன் தம்மைக்கொண்டு கவிபாடுவித்தும் இரண்ட மஹோபகாரத்துக்கு ப்ரத்யுபகாரங் காணாமை தடுமாறினார்-கீழ்; இவர்க்கு தாம்ஒருப்தால் ப்ரத்யுபகாரமாகக் கொடுக்கலாவதொன்றுமில்லை; இவர்பக்கலிலேயொன்று

பெற்று அத்தாலே குறைநிரம்பவேண்டும்படி அபூர்ணனல்லனவன்: ஆனாலும், உபகாரஸ்ம்ருதி இருந்தவிடத்திலிருக்கவொட்டாமையாலே, "நாமும் அவனுக்கு ஒன்றைச்செய்தோமாய் அவனும் நம்பக்கலிலே ஒன்றைக்கொண்டானாகலாம்; ஸ்வரூபாநுரூபமான கைங்கர்யத்திலே அந்வயிப்போம்" என்று பார்த்தார். "தான் கொடுத்த கரணங்களைக் கொண்டு தன்திருவடிகளிலே கைங்கர்யத்தைப் பண்ண அத்தையே ப்ரத்யுபகாரமாக நினைப்பானொருத்தனவன்; ஶேஷபூதன் தனக்கடைத்த வ்ருத்தியைப்பண்ண ஶேஷிக்கு அதிஶயத்தை விளைத்தானாகவுங்கடவன்; ஆகையாலே, அவன்திருவடிகளிலே ஆத்மாந்தமாகஅடிமைசெய்யுமித்தனை" என்றுபார்த்தார். அவனும்அடிமைகொள்ளுகைக்கு—ஸ்ரீராமாயணம் கேட்கைக்குப் பேரோலக்கமாகவெழுந்தருளி இருந்தாற்போலே, திருவாறன்விளையிலே லோகமெல்லாம்வாழும்படி பிராட்டியோடேகூடப்பர்யங்கவித்யையிற்சொல்லுகிறபடியே திருவநந்தாழ்வான்மேலே தன்பரிகரத்தோடேகூடத் திருவாய்மொழியைக் கேட்டருளும்படி அணித்தாகவந்திருந்தான்; அங்கே சென்று கண்ணாலேகண்டு எல்லா அடிமைகளும் செய்யவேணுமென்று துணிந்தவர், அங்கே சென்று அடிமைசெய்யும்படியை மநோரதிக்கிறார். ஸம்ஸாரஸம்பந்தமற்று ஒரு தேஶவிஶேஷத்திலேபோய் அடிமைசெய்யுமளவும் ஆறியிருக்கவல்லவரல்லாமையாலும், அவன்தான் இங்கேகிட்டவிருக்கஒருதேஶவிஶேஷத்தேபோய் அடிமைசெய்யஇச்சையில்லாமையாலும் திருவாறன்விளையிலேபுக்குத் திருவாய்மொழிபாடி யநுபவிக்கும்படியை அநுஸந்தித்து இனியராகிறார். ஸ்ரீராமாயணத்திற் காட்டில் இதுக்குவாசி - கவிபாடின ஸ்ரீவால்மீகிபகவானையொழிய குஶலவர்கள் கேட்பிக்கையன்றியே பாடினவர்தாமே கேட்பிக்கையும், பாட்டுண்டவன் தனியேயிருந்து கேட்கையன்றியே பிராட்டியுந்தானுங்கூடக் கேட்கையும்.

ஈடு.—ஸர்வேஶ்வரன் தம்மைக்கொண்டு திருவாய்மொழி பாடுவித்துக் கொண்ட மஹோபகாரத்துக்கு ப்ரத்யுபகாரந் தேடிக் காணாமை தடுமாறினார் - கீழில்திருவாய்மொழியிலே; இவர்தாம் தம்முடைய ப்ரமத்தாலே ப்ரத்யுபகாரந்தேடித் தடுமாறினாரத்தனைபோக்கி இவர்தமக்குக் கொடுக்கலாவதொன்றுமில்லை; அவன் ஒன்றுகொண்டு குறைதீரவேண்டும் ஸாபேக்ஷனல்லன்; இவர் தம்முடைய உபகாரஸ்ம்ருதி இருந்தவிடத்திலிருக்க வொட்டாமையாலே செய்ததொன்றிறே; ஆனாலும், ஆறியிருக்க மாட்டாரே. இனி, நாமும் அவனுக்கு ஒன்று கொடுத்தோமாய், அவனும் நம்பக்கல் ஒன்று பெற்றானாகச் செய்யலாவதொன்றுண்டு. அவன், தனக்குவகுத்தகைங்கர்யத்தைப்பண்ணவே, அதுதன்னைத் தனக்கு ப்ரத்யுபகாரம்பண்ணிற்றாக நினைத்திருக்கும் ஸ்வபாவனாயிருந்தான்; ஆனபின்பு, நம்முடைய ஸ்வரூபாநுரூபமான ஆத்மாந்ததாஸ்யத்திலே

இன்பம்பயக்க ப்ரவேஶம்,—வ்ருத்தவர்த்திஷ்யமாண ஸங்கதிக்காக வ்ருத்தாநுவாதம் - ஸர்வேஶ்வரன் இத்யாதி. ஆனால் வெறுமனேயிருக்க வொண்ணாதோவென்ன; உபகாரஸ்ம்ருதியாலே வெறுமனேயிருக்கமாட்டாமல் தடுமாறினாரென்கிறார் - இவர்தாம் தம்முடைய இத்யாதி வாக்ய சதுஷ்டயத்தாலே. இவருடைய ஆகிஞ்சந்யத்தாலும் அவனுடைய பூர்த்தியாலும் ப்ரத்யுபகாரம் பண்ண விரகில்லையாகில் வெறுமனேயிருக்கிறதுக்கென்? என்ன - ஆனாலும் இத்யாதி. ஆனால் ப்ரத்யுபகாரம்பண்ணும் விரகேது? என்ன; ஸங்கதி அருளிச்செய்கிறார்-இனி,நாமும் இத்யாதி. அதாவது ஏதென்ன - அவன், தனக்கு இத்யாதி. அவன் என்றதுக்கு. நினைத்திருக்கும் ஸ்வபாவனாயிருந்தான் என்றத்தோடே அந்வயம். வகுத்தகைங்கர்யம் - ப்ராப்தமான கைங்கர்யம். ஆனபின்பு- அவன்ஸ்வபாவம் இதுவானபின்பு என்றபடி. ஆத்மாந்ததாஸ்யம் - யாவதாத்மபாவியான கைங்கர்

அதிகரிப்போமென்று பார்த்தார். இனித்தான், வேதவாக்யங்களும் ''ஸ்வேந ரூபேணாபி நிஷ்பத்யதே'' (ஸ்வேநரூபேணுபிநிஷ்பத்யதே) என்று - ஸ்வரூபப்ராப்தியளவுஞ்சோல்லவே, அதுக்கு அவ்வருகில் கைங்கர்யமானது†அவவாதஸ்வேதம்போலே தன்னடையே வருமென்று ப்ரஹ்மப்ராப்தியளவும் சோல்லிவிடும். ஆழ்வார்கள் ''வழுவிலாவடிமைசெய்யவேண்டுநாம்'' என்று அதுதன்னையே சொல்லாநிற்பர்கள், ப்ராப்திபலமான கைங்கர்யத்தில் ருசியாலே. ''ஸம்ஸாரம் த்யாஜ்யம், ஸர்வேஶ்வரன் உத்தேஶ்யன்''என்கிற ஜ்ஞாநம் பிறந்து, பகவத்ஸமாஶ்ரயணம்பண்ணினவர்கள், ''பேஷஜம் பகவத்ப்ராப்தி:'' (பேஷஜம்பகவத்ப்ராப்தி:) என்று பகவத்ப்ராப்தியளவிலே நின்றூர்கள்; அவர்களிற்காட்டில் ''மயர்வறமதிநலமருளினன்'' என்று பகவத்ப்ரஸாதலப்யமான ஜ்ஞாநத்தையுடையரான இவர்களுக்கு வாசி இதுவாயிற்று. இனி, அடிமைசெய்யுமிடந்தன்னில் ''ஶரீரஸம்பந்தமற்று பரமபதப்ராப்திபண்ணிஞல் பின்புசெய்கிறோம்'' என்று அவ்வளவும் ஆறியிருக்கும்படியன்றே, உபகாரஸ்ம்ருதி இவரை நலிகிறபடி. ஆகையாலே, ''ஸ்ரீவால்மீகிபகவான்பாடின ஸ்ரீராமாயணம்கேட்கைக்குத் திருவயோத்யையிலே திருத்தம்பிமாரும் தாமுங்கூடப் பெருமாள் பேரோலக்கமிருந்தாற்போலே, ஸர்வேஶ்வரனும், நாம் பாடினதிருவாய்மொழி கேட்கைக்காகத் திருவாறன்விளையிலே பர்யங்கவித்யையிற் சொல்லுகிறபடியே திருவநந்தாழ்வான்மேலே நாய்ச்சிமாரோடேகூடி நித்யபரிஜநத்தோடேகூட எழுந்தருளியிருந்தான். அங்கேபோய்த் திருவாய்மொழிகேட்பித்து அடிமைசெய்வோம்''என்று மநோரதிக்கிருராய், அம்மநோரதந்தன்னிலும்,—ஸர்வேஶ்வரன் ப்ராப்யனுஞல் அர்ச்சிராதிகதியோடு தேஶவிஶேஷத்தோடு வாசியற ப்ராப்யாந்தர்க்கதமிறே. அதாவது - முன்பு அப்ராப்தமாய் பின்பு உபாஸநத்துக்குபலமாய் வருவன யாவைசில,அவையெல்லாம் ப்ராப்யாந்தர்க்கதமாகக்கடவதிறே; அப்படியே,— ''திருவாறன்விளையிலே எழுந்தருளியிருக்கிற ஸர்வேஶ்வரன் திருவடிகளிலேபோய் அடிமைசெய்யக்கடவோம். அதுதானும்வேண்டா, அத்தேஶப்ராப்திதானேயமையும்; அதுதானும்வேண்டா, இங்கேயிருந்தே அங்கேறப்போவதாக மநோரயிக்கிற

யம் ஶ்ருதியிலே ''பகவத்ப்ராப்தியே புருஷார்த்தம்'' என்னுநிற்க, கைங்கர்யம் புருஷார்த்தமென்பானென் ? என்ன - இனித்தான் இத்யாதி. வேதம்போலே ஆழ்வார்களும் ப்ராப்திமாத்ரத்தைச்சொல்லிவிடவொண்ணுதோ? என்ன - ஆழ்வார்கள் இத்யாதி. அதுதன்னையே - கைங்கர்யந்தன்னையே. அப்படி சொல்லுகைக்கு ஹேதுஎது? என்ன - ப்ராப்திபலமான இத்யாதி. ஆனுல் வேததாத்பர்யத்தை உபப்ரும்ஹணமுகேந வெளியிடுகிற ருஷிகள் சொல்லாமைக்கு ஹேதுஎது?என்ன,—ஸ்வரூப யாதாத்ம்யஜ்ஞாநமில்லாமையாலே யென்கிருர் - ஸம்ஸாரம் இத்யாதி. இவர்களுக்கு வாசியேதென்ன - அவர்களில் இத்யாதி. இதுவாயிற்று - கைங்கர்யத்தில் ருசியுடையராகையாயிற்று என்றபடி. பரமபதத்திலே போனுலன்றே அடிமைசெய்யலாவது, ''இங்கேசெய்யவேணும்'' என்று அபேக்ஷிக்கிறதுஎன்? என்ன - இனி அடிமை இத்யாதி. ''பாம்பணையப்பன்'' இத்யாதியைப்பற்ற-பர்யங்க இத்யாதி. ''எழில்மலர்மாதர்,'' ''தேவபிரான்'' என்றத்தைப்பற்ற - நாய்ச்சிமாரோடே இத்யாதி விஶேஷணத்வயம். அடிமை - வாசிகமான அடிமை. ஆனுல் அவனையொழிய அவனிருந்ததேசம் போகிறவழி எல்லாவற்றையும் மநோரதிக்கிறதென் ? என்ன - ஸர்வேஶ்வரன் இத்யாதி. அது எங்ஙனேயென்ன - அதாவது இத்யாதி. உபாஸநத்துக்கு - உபாயத்துக்கு என்றபடி. பலம் என்றது - அவாந்தரபலம் என்றபடி. ''ஈங்குநினைக்கப்பெற'' என்றத்தைப்பற்ற - இங்கேயிருந்தே

---

† *அவவாத ஸ்வேதம் - நெல்முதலியவற்றைக்குத்திஞல் உடம்பில்தோன்றும் வியர்வை.*

ஐந்தாம் பாட்டு.

சீர்கண்டுகொண்டு திருந்துநல்லின்கவி
நேர்படயான்சொல்லும் நீர்மையிலாமையில்
ஏர்விலாஎன்னைத் தன்னாக்கிஎன்னால்தன்னை
பார்பரவின்கவி பாடும்பரமரே.

ஆ.—(சீர்கண்டு.) - தன்னுடைய கல்யாணகுணங்களை உள்ளபடிகண்டு கொண்டு, திருந்து நல்லின்கவி நேர்பட யான் சொல்லும் நீர்மையிலாமையில் எனக்கு ஸத்ருசரில்லை; இப்படி குணலேசமின்றியேயிருந்த என்னைத் தன்னைப்போலே ஹேய ப்ரத்யநீகத்வ ஸர்வஜ்ஞத்வாதி குணவிசிஷ்டனாக்கி, என்னால்தன்னை ஸர்வலோகமும் இக்கவியை ஸ்துதிக்கும்படி இன்கவி பாடும் பரமனை என்றுமறப்பன்? என்கிறார்.

ஒ.—அஞ்சாம்பாட்டில், தன்னைக் கவிபாடுகைக்கீடான நீர்மையுமின்றிக்கே இச்சையுமின்றிக்கே யிருக்கச் செய்தே, என்னைக்கொண்டு லோகமெல்லாம் கொண்டாடும்படி கவிபாடுவதே! என்ன ஸர்வேச்வரனோ? என்கிறார்.

[சீரென்று தொடங்கி]- தன்னுடைய கல்யாண குணாநுஸந்தான பூர்வகமாகத் திருந்தி இனிதான கவியை வாய்க்கப்பாடும் நீர்மை எனக்கின்றிக்கே யிருக்கச்செய்தே. [என்னைத் தன்னாக்கி] - என்னைத் தன்னைப்போலே ஜ்ஞானசக்திகளையுடையே னாக்கி. தனக்கு நான் சேஷமென்னுமிடத்தை யறிவித்தென்றுமாம்.

ப.—அநந்தரம், எனக்குக்கவிபாடுகைக்கு யோக்யதையின்றிக்கே யிருக்க, எனக்கு யோக்யதையுண்டாக்கித் தானே தன்னைக் கவிபாடிக்கொள்ளும் பெரியவனா யிருந்தானென்கிறார்.

சீர் - ப்ரதிபாத்யங்களான தன்குணங்களை, கண்டு - அபரோக்ஷித்து, கொண்டு- அநுஸந்தித்து, திருந்து - (ப்ரதிபாதகமாம்படி) திருந்தியிருப்பதாய், நல் - சப்தார்த்த லக்ஷணோபேதமாய், இன் — ஸ்வ்ரஸே மதுரமான, கவி - கவிகளை, நேர்பட - வாய்க்கும்படியாக, யான் - நான், சொல்லும் - சொல்லுகைக்கீடான, நீர்மை - ஜ்ஞானசக்த்யாதிஸ்வபாவம், இலாமையில் - இல்லாமையாலே, ஏர்விலா - அஸத்ருசனான, என்னை-, தன் - தன்பக்கலிலே, ஆக்கி - ஜ்ஞானப்ரேமாதிகளை யுடையேனாம்படிபண்ணி, என்னால் - என்னாலே, தன்னை -, பார் - க்ருத்ஸ்ந ஸ்வபாவையான பூமியகப்பட, பரவு - கொண்டாடும்படி, இன் - மதுரமான, கவி - கவியை, பாடும் - பாடுதலால், பரமர் - பரமனா யிராநின்றான்.

இ.—அஞ்சாம்பாட்டில், தன்னைக் கவிபாடுகைக்கீடான நன்மையுமின்றிக்கே இச்சையுமின்றிக்கே யிருக்க, என்னைக்கொண்டு ஸகலலோகங்களும் கொண்டாடும்படி கவிபாடுவதே? என்ன ஸர்வாதிகனோ! என்கிறார்.

[சீர்கண்டு கொண்டு] - அவனுடைய கல்யாண குணங்களிலே அவகாஹித்து. [திருந்து நல்லின்கவி] - கட்டளைப்பட்டு லக்ஷணோபேதமாய், சொல்லினுடைய இனிமை தானே ஆகர்ஷகமான கவி. [நேர்பட] - கவிவாய்க்கும்படி. [யான்சொல்லும் நீர்மை

யிலாமையில்] - நான் கவிபாடுகைக்கடியான ஜ்ஞாநாதிகுணங்களின்றிக்கே யிருக்கச் செய்தேயும். [ஏர்விலாவென்னை] - சைதந்யப்ரயுக்தமான இச்சையுமின்றிக்கே யிருக்கிற என்னை. [தன்னாக்கி என்னால்தன்னை] - தனக்குண்டான ஜ்ஞாநாதிகளை எனக்குண்டாக்கி என்னைக்கொண்டு அபரிச்சிந்நனான தன்னை. [என்னைத் தன்னாக்கி] - தனக்கு அநந்யார்ஹமென்னும் இடத்தை யறிவித்தென்றுமாம். [பார்பரவின்கவி] - விசேஷஜ்ஞரோடு அவிசேஷஜ்ஞரோடு வாசிபற எல்லாரும்வாய்ப்புலற்றும்படியான இனியகவியென்னுதல், "பாலேய்தமிழரிசைகாரர் பத்தர்பரவுமாயிரம்" என்கிறபடியே யாதல். [பரமரே] - "ந தத்ஸமாப்யதிகஶ்ச த்ருஶ்யதே" என்கிற ப்ரமாணங்கொண்டு அறியவேண்டா; என்னையிட்டுக் கவிபாடுவித்துக்கொண்ட இத்தைக்கொண்டே பரத்வம் நிஸ்சயித்துக் கொள்ளலாம்.

ஈடு.—அஞ்சாம்பாட்டு. தன்னைக் கவிபாடுகைக்கீடான நீர்மையு மின்றிக்கே இச்சையுமின்றிக்கேயிருக்கச்செய்தே, லோகமெல்லாம் கொண்டாடும்படியான கவியை என்னைக்கொண்டு பாடுவதே! என்ன ஸர்வேஶ்வரனோ? என்கிறார்.

[சீர்கண்டுகொண்டு] - கல்யாணகுணங்களை அவகாஹித்து. [திருந்துஇத்யாதி] - கட்டளைப்பட்டு லக்ஷணோபேதமாய் இனிதான கவிகளை. [நேர்பட இத்யாதி] - இவையொன்றும் இல்லையாகிலும், சொல்லுகிறவனுடைய நன்மையாலே வருவதுஒருநன்மையும் உண்டிறே கவிக்கு; அப்படி வாய்க்கச்சொல்லும் ஸ்வபாவத்தை நான் உடையேனல்லாமையில். [ஏர்விலாவென்னை] - ஏரென்று - அழகு: அதுஇல்லாத என்னை. [தன்னாக்கி] - தன்னோடொக்கப்பண்ணி என்னுதல்: தனக்காக்கியென்னுதல். [என்னால் தன்னையித்யாதி]-என்னையுபகரணமாகக்கொண்டு தன்னைப்பாரிலுள்ளார்அடையப் பரவும்படி இனிய கவிகளைப் பாடினான். விசேஷஜ்ஞர் அவிசேஷஜ்ஞரென்று வாசியின்றிக்கே, எல்லாரும் கொண்டாடும்படி பண்ணினான். [பரமரே] - "ந தத்ஸம" (நதத்ஸமஶ்ச) என்கிற வாக்யங்கொண்டு இவனுடைய உத்கர்ஷம் அறியவேண்டா; என்னையிட்டுவித்துக் கவிபாடுவித்துக்கொண்ட இதுவே போரும் அவனுடைய உத்கர்ஷம்அறிகைக்கு. (ரு)

அஞ்சாம்பாட்டு.—சீர்கண்டு இத்யாதி "நீர்மையிலாமையில் ஏர்விலாவென்னை - பார்பரவின்கவிபாடும்பரமரே" என்றத்தைக் கடாக்ஷித்தவதாரிகை - தன்னைக்கவிபாடுகைக்கு இத்யாதி. "ஏர்விலா" என்றத்தைப்பற்ற - இச்சையுமின்றிக்கே என்றது.

"ஏர்" என்று - அழகாய், இச்சையைச்சொல்லுகிறது. கட்டளைப்பட்டு - திருந்தப்பட்டு. இவை - கட்டளைப்பாடு முதலானவை. நீர்மையென்று - ஜ்ஞாநஶக்த்யாதிகளைச் சொல்லுகிறது. இலாமையில் - இல்லாதிருக்கச் செய்தேயும் என்றபடி. 'சொல்லுகிறவனுடைய நன்மையாலே' என்றவிடத்திலே - 'கவிராஜகேஸரிஜாதஸம்ஸ்க்ருதாராமஜந்மநிஸாந்தசேவகாஸ்யு' இத்யாதியை யருளிச்செய்வர். 'ஏர்' என்று - அழகாய், கவிபாடுகைக்கீடான இச்சையில்லாத என்றபடி. "பாரிலுள்ளார்" இத்யாதியின் விவரணம் - விசேஷஜ்ஞர் இத்யாதி. பரமன் - ஸர்வாதிகன். (ரு)

ஆறாம் பாட்டு

இன்கவிபாடும் பரமகவிகளால்
தன்கவிதான் தன்னைப்பாடுவியாதுஇன்று
நன்குவந்துஎன்னுடனாக்கி என்னால்தன்னை
வன்கவிபாடும்என்வைகுந்தநாதனே.

ஆ.—(இன்கவி.)— இன்கவிபாடும்பரமகவிகள் தனக்குளராயிருக்கச்செய்தே, அவர்களைக்கொண்டு தன்னைக் கவி பாடுவியாதே, இன்று நன்குவந்து என்னுள்ளே புகுந்து, வேதங்களினுள்ளும்அடங்காத தனக்குங்கூட அடங்காத கவிகளைப் பாடின என் வைகுந்தநாதனை என்று மறப்பனென்கிறார்.

ஒ.—ஆறாம்பாட்டில், பராசர வ்யாஸ வால்மீகி ப்ரமுகரான கவிகளைக் கொண்டு கவிபாடுவித்துக் கொள்ளாதே, என்னை யுபகரணமாகக்கொண்டு வன்கவிபாடுவதே என்று ப்ரீதராகிறார்.

[தன்கவி] - தனக்கு ஸத்ருசமானகவி. [இன்றுநன்குவந்து] - என்னைக் கொண்டு கவி பாடுவித்துக்கொள்ளுமதுவே ப்ரயோஜநமாகவந்து. [என்னுடனொன்று தொடங்கி] - கவிபாடுகைக்குப் பிரியாதகொருஉபகரணமாக என்னைக்கொண்டு என்னாலே தன்னைத்தான் ஸ்ரீவைகுண்டநாயனைபடிக்கு ஸத்ருசமாம்படி அரணியகவியைப் பாடாநின்றான்.

ப.—அநந்தரம், பெரியவர்களையிட்டுக் கவிபாடுவித்துக்கொள்ளாதே, என்னாலே தான் தன்னைக்கவிபாடுவித்துக்கொண்டு எனக்குஸ்ரீவைகுண்டநாயனை பெருமை தோன்ற இராநின்றானென்கிறார்.

இன் - நிரதிசயமதுரமான, கவி - கவிகளை, பாடும் - பாடுமவர்களாய், பரம கவிகளால் - தங்களுக்கு மேலில்லாத கவிகளான பராசர பாராசர்ய வால்மீகிப்ரப்ருதிகளாலும் முதலாழ்வார்களாலும், தன் - தனக்குத்தகுதியான, கவி - கவியை, தான் - தான் (ப்ரயோஜநனாய்க்கொண்டு), தன்னை - நிரவதிகமாஹாத்ம்யயுக்தனான தன்னை, பாடுவியாது - எப்போதும் பாடுவியாதே, இன்று-, நன்கு - ஸாஹஸ்யிகனாய்க்கொண்டு, வந்து-, (அக்கவிபாட்டை), என்னுடன் - என்னோடே-, ஆக்கி-, என் - எனக்கு, வைகுந்த நாதனை - தான் ஸ்ரீவைகுண்டநாதனான பெருமையைத் தோற்றுவியாநின்றுகொண்டு, என்னால் - என்னாலே, தன்னை - அந்தப்பெருமையையுடைய தன்னை, (பெருமைக்குத் தகுதியாம்படி), வன் - சிக்கென, கவி பாடும் - கவிபாடாநிற்கும்.

இ.—ஆறாம்பாட்டில், பராசராதிகளைக்கொண்டு கவிபாடுவித்துக் கொள்ளாதே என்னை யுபகரணமாகக் கொண்டு கவிபாடுவதே! என்று ப்ரீதராகிறார்.

[இன்கவி இத்யாதி] - தன்னைக் கவிபாடுவித்துக்கொள்ள நினைத்தால், பராசரவ்யாஸ வால்மீகிகளாதல், "செந்தமிழ் பாடுவார்" என்னும் முதலாழ்வார்களாதலன்றோ பாத்ரபூதர்; அவர்களையொழிய. [தன்கவி தான் தன்னைப்பாடுவியாது] - கவியும் தன்னது, கர்த்தாவும்தான், விஷயமும்தான். [இன்று நன்குவந்து] - இன்று நானும்உஜ்ஜீவிக்கும்படி வந்தென்னுதல், என்னைக்கொண்டு கவிபாடுமிதுவே ப்ரயோஜந

மாகவென்னுதல்; அப்போது நன்கு, உவந்து - உகந்து. [என்னுடனாக்கி] - கவி பாடுகைக்கு என்னைப்பிரியாத உபகரணமாக்கி என்னுதல்; என்னைத் தன்னோடொக்க ஜ்ஞாநாதிகனாக்கி யென்னுதல். [வன்கவி] - செறிந்தகவி. "மொய்யசொல்லால்" என்கிறபடியே. [என்வைகுந்தநாதனை] - நித்யவிபூதியுக்தனாயிருக்கிற ஏற்றத்துக்குப் போரும்படி என்னைக்கொண்டு கவிபாடினான். நித்யவிபூதிக்கு அழிவில்லாதாப்போலே, அழிவில்லாத ஆயிரமென்று நித்யஸித்தமாம்படி திருவாய்மொழியைப் பாடுவித்தானென்னுதல்; நித்யவிபூதியாலே தனக்கு நிறமுண்டானாப்போலே, இக்கவிபாட்டாலே தனக்கு நிறமுண்டாம்படி பாடினானென்னுதல்.

ஈடு.—ஆறாம்பாட்டு. வ்யாஸ பராஶர வால்மீகிப்ரமுகரான கவிகளைக் கொண்டு கவிபாடுவித்துக்கொள்ளாதே, என்னை யுபகரணமாகக்கொண்டு கவிபாடுவதே! என்று ப்ரீதராகிறார்.

[இன்கவிபாடும் பரமகவிகளால்]-பின்னைத் தான் தனக்குச் சிலகவிகளைப்பாட வேண்டினால், அதுக்கீடாகவிருப்பார் ஸ்ரீவேதவ்யாஸபகவான் ஸ்ரீபராஶரபகவான் ஸ்ரீவால்மீகிபகவான் இவர்களுண்டாயிருக்க, மற்றும்வேணுமாகில் "செந்தமிழ்பாடுவார்" என்று சொல்லப்படுகிற முதலாழ்வார்களெல்லாருமுண்டாயிருக்க, என்னைக்கொண்டு கவிபாடுவித்துக்கொண்ட இதுவும் ஒருநீர்மையே! என்கிறார். முதலாழ்வார்களிலே ஒருவரை "ஒருகவிசொல்லிக்காணும்" என்ன, [பெருகுமித்யாதி] - ஆற்றுப்பெருக்குப்போலே பெருகாநின்றுள்ள மதத்தையுடைய ஆனையானது. [மாப்பிடிக்குமுன்னின்று] - மதித்து முன்னடிதோற்றாதேவருகிற இத்தையுந் தனக்குக் கையாளாக்கிக்கொள்ளவற்றா யாயிற்று இதினுடைய ஶ்லாக்யதை யிருக்கிறபடி. [முன்னின்று] "நான் இங்குத்தைக்குச்செய்ய வேண்டுவதேதென்?" என்று * ஏவிற்றுச்செய்கைக்கு அவஸரப்ரதீக்ஷமாய் நிற்குமாயிற்று. [இருகணிளமூங்கில்வாங்கி] - இரண்டுகண்ணேறி அதுக்குத்தக்க முற்றனவுமின்றிக்கேயிருக்கிற மூங்கிற்குருத்தை வாங்கி; தான் மதித்து முன்னடிதோற்றாதே திரியச்செய்தேயும் பிடியின் பக்கலுண்டான ஆதராதிசயத்தாலே அவதாநத்தோடே ஸாதரமாகவாங்கி. [அருகிருந்த தேன்கலந்து] - திருமஞ்சநத்துக்கு உபகரணங்கள் சமைந்திருக்குமாபோலே, அருகே மலைமுழைஞ்சுகளிலே நிரம்பியிருக்கிற தேன்களிலே வாங்கித் தோய்த்து. மூங்கிற்குருத்தையும் த்ரவத்ரவ்யத்தோபாதியாக அருளிச்செய்கிறார். [நீட்டும்] - இதுதான் இரந்துகொடாநிற்க, அத்தை "உனக்கு வேண்டுவார்க்குக்கொடாய்" என்று நிற்குமாயிற்று. [வான்கலந்தஇத்

ஆறாம்பாட்டு.—இன்கவி இத்யாதி. "இன்கவிபாடும் பரமகவிகளால் தன்கவிதான் தன்னைப்பாடுவியாது - என்னால்தன்னை வன்கவிபாடும்" என்றவற்றைக் கடாக்ஷித்தவதாரிகை - வ்யாஸ இத்யாதி.

ஸம்ஸ்க்ருதம் தெரியாதவர்கள் இழக்குமத்தனையன்றோ? என்ன - மற்றும் வேணுமாகில் இத்யாதி. முதலாழ்வார்கள் கவி இனிதாயிருக்குமோ? என்ன - பெருகும் இத்யாதி. இப்பாட்டுக்கு ஸங்கதி - முதலாழ்வார்களிலே இத்யாதி கீழ்வாக்யம். இதுக்கர்த்தம் - ஆற்றுப்பெருக்கு இத்யாதி. "மாப்பிடி" என்றதுக்கர்த்தம் - மதித்து இத்யாதி. "மா" என்று - ஶ்லாக்யதை. பிடுங்கியென்னாதே, "வாங்கி" என்றதுக்கு பாவம் - தான்மதித்து இத்யாதி. 'திருமஞ்சநத்துக்கு உபகரணங்கள் சமைந்திருக்குமாபோலே' என்றது - திருமஞ்சநங்கொண்டருளுகைக்குக் கலஶங்கள் பூரித்திருக்குமாபோலே யென்றபடி. தோய்த்தென்னாதே, "கலந்து" என்றதுக்கு பாவம் - மூங்கில் இத்யாதி. கொடுக்குமென்னாதே, "நீட்டும்" என்றதுக்கு பாவம் - இதுதான் இத்யாதி. "தேன்கலந்து" என்றும் "வான்

யாதி] - மூங்கிற்குருத்தும் தேனும் கலந்தாற்போலேயாயிற்று, மேகமும் அவன்திருநிறமும் கலந்திருக்கும்படி. இனிய கவிகளைப் பாடவல்ல மேலானகவிகளாலே. [தன்கவிதான் தன்னைப்பாடுவியாது] - கவியும் தன்னது, பாடினானும் தான், ப்ரதிபாத்யனும் தான். அவர்களைக்கொண்டு, தன்னுடைத்தானசொல்லாலே; அதுக்குப்ரதிபாத்யனான தான் தன்னைப் பாடுவியாதே. [இன்றுநன்குவந்து] - இன்று நான் இங்ஙனேஉஜ்ஜீவிக்கும்படிக்கு ஈடாக வந்தேனென்னுதல். அன்றிக்கே, நன்கு உவந்து என்றாய் - நன்றாகவுகந்தேன்றும்; இக்கவிபாடுகைதானே ப்ரயோஜநமாக உகந்து. [என்னுடனாக்கி] - என்னைப்பிரியாத உபகரணமாகக்கொண்டு. [வன்கவிபாடும்] - சொற்செறிவை யுடைத்தாயிருக்கை, "மொய்யசொல்லால்" என்கிறபடியே, ஸ்லஷமாயிருக்கையன்றிக்கே. [என்வைகுந்த நாதனே] - "அழியாததான * கலங்காப்பெருநகரத்தை இருப்பிடமாக வுடையோமான வோபாதி, அழியாத வேதம்போலேநித்யமான ஆயிரம்பாட்டுப் பாடுவிக்கவேணும்" என்று பார்த்தான். பரமபதத்தை இருப்பிடமாக வுடையனானகையாலே வந்த ஏற்றத்தோபாதியாக நினைத்திராநின்றானாயிற்று, இக்கவிபாட்டுடையனாகையால்வந்த ஏற்றத்தையும். (கூ)

ஏழாம் பாட்டு.

வைகுந்தநாதன்என்வல்வினைமாய்ந்தறச்
செய்குந்தன்தன்னை என்னாக்கியென்னால்தன்னை
வைகுந்தனாகப்புகழ வண்தீங்கவி
செய்குந்தன்தன்னைஎந்நாள்சிந்தித்தார்வனே?

ஆ.—(வைகுந்தநாதன்) - ஸ்ரீவைகுண்டநாதனாயிருந்துவைத்து, என்னுடைய வல்வினைகளையெல்லாம்போக்கி, ஆகலால் குந்தனென்னும் திருநாமத்தையுடையனாய், என்னைத் தன்னைப்போலே தூயனாக்கி, என்னால்தன்னை வைகுந்தனாகப்புகழ வண்தீங்கவி செய்குந்தன்தன்னை காலதத்வமெல்லாம் அநுபவித்தாற்றானார்வனே? என்கிறார்.

ஒ.—ஏழாம்பாட்டில், என்னைக்கொண்டு நிரதிசயபோக்யமான கவியைப் பாடுவித்துக்கொண்ட இம்மஹோபகாரத்துக்கு, இவனைக் காலமுள்ளதனையும்அநுபவித்தாலும் ஆரேனென்கிறார்.

[வைகுந்தநாதனென்று தொடங்கி] - அத்யந்தநிரபேக்ஷனாயிருந்து வைத்து நிர்ஹேதுகமாக என்னுடையப்ரதிபந்தகங்களை நீக்காநின்றுள்ளவனை. [தன்னை யென்னாக்கி] - என்னைத்தன்னாக்கி. [என்னாலென்று தொடங்கி] - நான் புகழ்ந்தால்

கலந்த" என்றும் ஸப்தம் ஸமாநமாகையாலே அருளிச்செய்கிறார் - மூங்கிற்குருத்தும் இத்யாதி. "தன்கவி, தான், தன்னை" என்றமூன்றுக்கும் பேதம் அருளிச்செய்கிறார் - கவியும் இத்யாதி. விவரணம் - அவர்களை இத்யாதி. உவந்து-உகந்து. உடன்-பிரியாதஉபகரணம். சொற்செறிவை யுடைத்தாயிருக்குமோ? என்ன, ப்ரமாணம் - மொய்ய இத்யாதி. இப்போது, "வைகுந்தநாதன்" என்றதுக்கு ஸ்வரம் - அழியாததான் இத்யாதி. ஸாவாந்தரம் - பரமபதத்தை இத்யாதி. 'என்வைகுந்தநாதன் - இன்கவிபாடும் பரமகவிகளால்' இத்யாரப்ய, 'வன்கவிபாடும்' இத்யந்தவ்ய ஃ. (கூ)

தான் ஸ்ரீவைகுண்டநாதனும்படி என்னைக்கொண்டு அழகியவாய் இனியவாயிருந்துள்ள கவியைப் பாடுவியாநின்றுகொண்டு அதுவே ப்ரயோஜநமாயிருந்தவனை.

ப.—அநந்தரம், என்விரோதியைப்போக்கித் தன்பெருமைக்கீடாகக் கவி பாடுவித்துக்கொண்ட உபகாரகனை யநுஸந்தித்து ஒருநாள் த்ருப்திபிறக்குமோ?

வைகுந்தநாதன் - ஸ்ரீவைகுண்டநாதனுன பெருமையையுடையனுய்வைத்து, (தன்னையநு஭விக்கைக்குவிரோதியாய்), வல் - ப்ரபலமான, என்வினை- என்பாபத்தை, மாய்ந்தற - நஶிக்கும்படி, செய் - பண்ணும், குந்தன் - தன்மையையுடைய, தன்னை-, என்னுக்கி - எனக்குவிஷயமாகும்படியாக்கி, என்னுல் - என்னைக்காணமாகக்கொண்டு, தன்னை - அந்தபாரம்யத்தையுடையதன்னை, வைகுந்தனுக - தன்னுடைய ஸர்வஸ்வ ஹாவகுண்டநம் பிறவாதபடியாக, புகழ - புகழும்படி,வண் - உதாரமாய், தீம்-இனிதான, கவி - கவியை, செய் - செய்யும்படியான, குந்தன் - உபகாரஸ்வஹாவத்தையுடைய, தன்னை-,சிந்தித்து-,எந்நாள் ஆர்வன்-எந்நாள் திருப்திபிறப்பது? உள்ளதனையும் நினைத்தாலும் ஆராதென்று கருத்து. வல்வினைமாய்ந்தறச் செய்குந்தனென்று - விரோதியைப் போக்கும் குந்தமாகிற ஆயுதத்தை யுடையவனென்றுஞ்சொல்லுவர். கவிசெய்குந்தனென்று - குந்தப்பூப்போலே ஶுத்தஸ்வஹாவனென்றுஞ்சொல்லுவர்.

ஈ.—ஏழாம்பாட்டில், என்னைக்கொண்டு நிரதிஶய ஹோக்யமான கவியைப் பாடுவித்துக்கொண்ட உபகாரத்துக்கு, காலமுள்ளதனையும் உபகாரஸ்ம்ருதியை அநு஭வித்தாலும் ஆரேனென்கிருர்.

[வைகுந்தநாதன்] - * அயர்வறுமமரர்களதிபதியா யிருந்துவைத்து, நித்ய ஸம்ஸாரியான என்பக்கலிலே வந்து மேல்விழாநின்றான்; "லொகநாயஃ ஸாராஹூதாவஸ்ரீ ஸம்நாயஜிவுதி" என்கிறபடியே. [என்வல்வினை மாய்ந்தற] - "ஈஷஸெநுவ ஷஹவதி" என்கிறபடியே அஸத்கல்பனுன என்னுடைய ப்ரபலமான பாபங்களை ஸவாஸநமாகப்போம்படி. ஸர்வஶக்திக்கும் ஒருவிரகாலே போக்கவேண்டும்படியிறே இதின் கனம். [செய்குந்தன்] - ப்ரபலப்ரதிவந்தகங்களைப் போக்குவது நிர்ஹேதுகமாக. உன்னடியார்க்குத் தீர்த்தகரர்க்குத் தீமைகள் செய்குந்தா" என்கிறபடியே, ஆஶ்ரிதர்பாபங்களை அநாஶ்ரிதர்மேலேயேறிடும் ஶக்தியைச் சொல்லிற்றாகவுமாம். [தன்னையென்னுக்கி] - என்னைத் தன்னுக்கி. [என்னுல்தன்னை வைகுந்தனுகப்புகழ] - நான் புகழ்ந்தால்தான் ஸ்ரீவைகுண்டநாதனுவானு யிராநின்றான். அதுதான் முன்பே நித்யமாயிருக்க, என்கவிபாட்டாலே இப்போது பெற்றானுயிருக்கை. தமப்பன்கொடுத்து, அது தன்னையே மகன்கொடுக்க, அன்று பெற்றானுயிராநின்றானிறே. ஆத்மா நித்யமாயிருக்கச் செய்தேயிறே, "ஈஷஸெநுவ", என்றும் "ஷநுஜெநுஃ" என்றும் சொல்லுகிறது. [வண்தீங்கவி செய்குந்தன்] - உதாரமாய் இனிதாயிருந்துள்ள கவியை யென்னையிட்டுப் பாடுவித்துக்கொண்ட ஶக்தியையுடையவன். என்கவிபாட்டாலே என் ஊஃவத்தைப் போக்கினவிது, தன்குறையற்றதாக நினைத்திராநின்றான்; "துயரறுசுடரடி" என்னுமாபோலே. [தன்னை] - மஹோபகாரகனை. [எந்நாள் சிந்தித்தார்வனே] - பண்ணினவுபகாரத்தை எத்தனைநாள் அநுஸந்தித்தால் எனக்கு பர்யாப்தி பிறப்பது? காலதத்வமுள்ளதனையும் ஸ்மரித்தாலும் பர்யாப்தி பிறக்குமோ? ஶரீரஸம்

வங்யமற்றால் இதுக்குஅவஸரமில்லை; அதுக்குமுன்பு காலம்அல்பமாகையாலே பர்யாப்தி பிறவாதென்கிறார்.

ஈடு:—ஏழாம்பாட்டு. என்னைக்கொண்டு பரமோதாரமாய் நிரதிசயபோக்ய மான கவியைப் பாடுவித்துக்கொண்ட மஹோபகாரத்துக்கு. இவனைக் காலதத்வமுள்ள தனையும் அநுபவித்தாலும் த்ருப்தனாகிறிலேனென்கிறார்.

[வைகுந்தநாதன்]-உபகரித்தவன் என்னுடையநின்றானொருவனாய் நான்ஆறி யிருக்கிறேனோ? அயர்வறுமமரர்களதிபதி ஒரு ஸம்ஸாரிபக்கலிலே மேல்விழாநின்றால் எங்ஙனே ஆறியிருக்கும்படி? **"லோகநாத: புரா பூத்வா ஸுக்ரீவம் நாதமிச்சதி"** (லோகநாத: புராபூத்வாஸுக்ரீவம்நாதமிச்சதி) என்கிற இதுக்கும் அவ்வருகாயிருக்கிறதிறே இது. ஸ்ரீஸுக்ரீவமஹாராஜரை நாதராகவுடையராகைக்கு யோக்யதைஸம்பாதித்தபடி யாயிற்று. முன்பு லோகநாதரானது. பெறுவார். பெறாதொழிவார்: முன்னம் இச்சியா நின்றார். கிடையாதத்திலேயிறே இச்சைகள்தான் செல்லுவது. **"ஸாமோவா நரேந்த்ரஸ்ய ப்ரஸாதமபிகாங்க்ஷதே"** (ஸாமோவாநரேந்த்ரஸ்ய ப்ரஸாதமபிகாங்க்ஷதே) போலேயாயிற்று [என்வல்வினைமாய்ந்தற] - வல்வினைபோகவேணுமென்றிராத என்னுடைய. "மயர்வறமதிநலமருளினன்" என்றதிக்கனையிறே: எனக்கருளினன் என்கைக்கு, அருளுவதற்குமுன்பு தாம்இருந்தவாறாகக் கண்டிலரிறே: **"அஸந்நேவ ஸ பவதி"** (அஸந்நேவஸபவதி) என்னுமிலையிறே முன்பு. [வல்வினைமாய்ந்தற] - ஸர்வ சக்தியான தன்னாலேதான் இது செய்யலாமோ? [மாய்ந்தறச்செய்குந்தன்] - என்னுடைய ப்ரபலவிரோதியைப் போக்கின சக்தியோகத்தையுடையவன்; "அடியார்க்குத்தீர்த் தகு ரர்க்குத்தீமைகள்செய்குந்தா" என்னக்கடவதிறே. குந்தா என்கிறத்தை. குந்தமென்று தலைக்குறைத்தலாய்க் கிடக்கிறதென்னவுமாம். அன்றிக்கே குந்தனென்று திருநாமமாகவு மாம். **"குமுத: குந்த: குந்த:"** (குமுத: குந்தர: குந்த:) என்று குந்தனென்றே திரு நாமமாயிற்றிறே. ஆஸ்ரிதர்பக்கலிலே பக்ஷபதித்து அவர்கள்பண்ணின பாபங்களை அநாஸ்ரி

ஏழாம்பாட்டு.—வைகுந்தநாதன் இத்யாதி "என்னுடைய தன்னை - வண்தீங்கவி செய்குந்தன் தன்னை எந்நாள் சிந்தித்தார்வனோ" என்றவர்றைக் கடாக்ஷித்தவதாரிகை - என்னைக்கொண்டு இத் யாதி. அநுபவித்தாலுமென்றது - உபகாரஸ்ம்ருதிபண்ணினாலு மென்றபடி.

பதப்ரயோகத்துக்குஹேதும் - உபகரித்தவன் இத்யாதி. லோகநாதனென்கிற மாத்ரமன் றிக்கே, "வைகுந்தநாதன்" என்கையாலே - மஹாராஜரில் இவர்க்கு வ்யாவ்ருத்தியருளிச்செய்கிறார்- லோகநாத இத்யாதி. கிஷ்கிந்தாகாண்டே ஹநுமத்ப்ரதிவசனம் (எ-கஅ)' **"லோகநாத: புரா பூத்வா ஸுக்ரீவம் நாதமிச்சதி"** இதி பூர்வார்த்த:; "**ஸநாதா**" என்கிறல்பட்டப்போலே, '**அநாதா**' *என்கிறவிதுவும் - அங்கத்வவிதாயகமென்கிறார் - ஸ்ரீஸுக்ரீவ இத்யாதி. "இச்சதி" என்றதுக்கர்த் தம் -* பெறுவார் *இத்யாதி. "இச்சதி" என்றால் இவ்வர்த்தத்தைக் காட்டுமோ? என்ன - கிடையா தத்திலே இத்யாதி. மேன்மையையுடையவன் தாழ்நின்றதுக்கு ப்ரமாணாந்தரம் -* ஸாம *இத்யாதி* †**"யஸ்ய ப்ரஸாதே ஸததம் ப்ரஸீதேயுரிமா: ப்ரஜா:"** *இதி பூர்வார்த்தம். "என்" என்ற துக்கர்த்தம் -* வல்வினை *இத்யாதி. இவ்வர்த்தத்துக்கு நியாமகமேதென்ன -* மயர்வற *இத்யாதி எனக்கருளினனென்னுமொழிந்ததென்? என்ன -* எனக்கு *இத்யாதி: தாமுளரன்றோ? என்ன -* அஸந்நேவ *இத்யாதி. "வல்" என்றதுக்கர்த்தம் -* ஸர்வசக்தியான *இத்யாதி. குந்தமென்ற - குருந்தமாய், அதின் பூ வெளுத்திருக்கையாலே சுத்தியைச்சொல்லுகிறதென்று விவக்ஷித்தருளிச்செய் கிறார் -* என்னுடைய *இத்யாதி. அதுக்கு ப்ரமாணம் -* அடியார்க்குத்தீர்த்து *இத்யாதி. இது திரு நாமமோ? என்ன -* குமுத *இத்யாதி. "அடியார்க்குத்தீர்த்து" இத்யாதிக்கர்த்தம் -* ஆஸ்ரிதர் பக்க

---

† கிஷ்கிந்தாகாண்டம் ௬-௨௧.

தார்பக்கலிலே அசல்பிளந்தேறிடும்படியான ஶாத்தியோமத்தையிறே அவ்விடத்திற்சொல்லுகிறது. தன்னையென்னுக்கின்றது - என்னைத்தன்னோடொக்கப்பண்ணியென்னுதல், தனக்காம்படிபண்ணி யென்னுதல். [என்னால் தன்னைவைகுந்தனுகப்புகழ] - பிதாவானவன் புத்ரனுக்கு ஒருபசுவை நீர்வார்த்துக்கொடுத்துத் திரிய அவன்பக்கலிலே பசுவை நீரேற்றுப்பெறுமாபோலே யிருப்பதொன்றாயிற்று இதுவும். [வைகுந்தனுகப்புகழ] - நித்யவிபூதியிறேயது; இங்ஙனே யிருக்கச்செய்தேயும், இவர்புகழ்ந்த இத்தாலே தனக்குஅவ்விபூதியுண்டாயிற்றதாக நினைத்திராநின்றான். ஆத்மவஸ்துநித்யமாயிருக்கச்செய்தே, 'அஸந்நேவ' (அஸந்நேவ) என்றும் "ஸந்தமேநம்" (ஸந்தமேநம்) என்றும் சொல்லாநிற்கிறவோபாதியாயிற்று. "இன்னான்வாக்காலே கவிபாடினபின்பு அவன்வாழ்ந்தான்" என்னக்கடவதிறே; அப்படியே, புகழ்ந்தபின்பு தனக்குஅந்தவிபூதியில் இருப்புண்டாயிற்றதாக நினைத்திராநின்றான் அவன். [வண்தீங்கவியித்யாதி] - உதாரமாயினிதாயிருந்துள்ள கவிகளைப்பாடி, அது தன்னைத் தன்பேறாக நினைத்திருக்கிற ஶாத்தியைஉடையவனை. "துயரறுசுடரடி" என்கிறபடியே இவரைக்கொண்டு கவிபாடினபின்பு, தன்துயரம் தீர்ந்தானுயிருக்கிறபடி. இவர் துயர்போனபின்பு தனக்கு ஒருதுயருண்டாய் அதுபோனாற்போலே நினைத்திராநின்றானாயிற்று. ஶரீரத்துக்குவந்த வ்யாதி யநுபவிப்பான் ஶரீரியிறே. "வ்யஸநேஷு மநுஷ்யாணாம்" (வ்யஸநேஷு மநுஷ்யாணும்) - திவ்யாந்தஃபுரத்திலுள்ளார்க்காதல் திருத்தாய்மார்க்காதல் ஒருவ்யஸநம் வந்தாலோ துஃகிதராவதென்றால்? "மநுஷ்யாணாம் ப்ருஶம் துஃகிதோ பவதி" (மநுஷ்யாணும்ப்ருஶம்துஃகிதோபவதி) - துஃகிதனானவனளவிலன்றிக்கே, ஆனை யளறுபட்டாற்போலே நோவுபடுவனாயிற்று. "துஃகிதோ பவதி" (துஃகிதோபவதி) - இன்றொருபடியாய், பிற்றைநாளொருபடியாய், அநந்தரம் ஆறிப்போம்இவர்களுக்கு; இவர்கள் க்லேசத்தில் நாள்தோறும் புதியராயிருப்பர். வ்யஸநம்இவனதானால் துஃகமும்இவனதாகவேண்டியிருக்க, இவர் துஃகிதராகைக்கு ஹேதுவேன்? என்னில்?—"இவன்படுகிற க்லேசம் இவன்காவற்சோர்வால்வந்ததொன்றன்றே, நங்காவற்

லிலே இத்யாதி. அன்றிக்கே, "குந்தன்" என்கிற திருநாமம் அங்வர்த்தஸம்ஜ்ஞையென்கிறார் - ஆஶ்ரிதர்பக்கலிலே இத்யாதி என்னுதல். அசல்பிளந்தேறிடும்படியான - ப்ரவேஶிப்பித்தநுபவிக்கும்படியான என்றபடி. அசல் பிளந்தேறிடுகை - அந்யத்ரஸங்க்ரமிப்பிக்கை. ஆக, "குந்தன்" என்றதுக்கு - மூன்றர்த்தம். "என்னுக்கியென்னால்தன்னை - புகழ" என்றதுக்கு த்ருஷ்டாந்தம் - பிதாவானவன் இத்யாதி. நித்யமான விபூதி இவர்புகழ்ந்தபின்புஉண்டாயிற்று என்னக்கூடுமோ? என்ன - நித்யவிபூதியிறே இத்யாதி. இதுக்குத்ருஷ்டாந்தம் - ஆத்மவஸ்து இத்யாதி. அப்படியொருவன் கவிபாடினால் அத்தால் அதிஶயமுண்டாமோ? என்ன - இன்னான் இத்யாதி. "தன்பேறாக நினைத்திருக்கிற" என்றதின் உபபாதநமாதல், உக்தார்த்தத்துக்கு ப்ரமாணமாதல் - துயராறு இத்யாதி. தன்துயர்தீர்ந்ததின் உறைப்பை யருளிச்செய்கிறாராதல், விவரணமாதல் - இவர்துயர் இத்யாதி. ஆழ்வார் துஃகம் தன்னதானபடியென்? என்ன - ஶரீரத்துக்கு இத்யாதி. உபபத்திகாட்டி யநுஷ்டாநமுங்காட்டுகிறார் - வ்யஸநேஷு இத்யாதி. அயோத்யாகாண்டே (உ-ஶ0) 'உத்ஸவேஷு ச ஸர்வேஷு பிதேவ பரிதுஷ்யதி' இத்யுத்தரார்த்தம். "மநுஷ்யாணாம்" என்றதுக்குபாவம் - திவ்யாந்தஃபுரத்தில் இத்யாதி. 'ப்ருஶம்' என்றதுக்கர்த்தம் - துஃகிதனானவன் இத்யாதி. "பவதி" என்கிறவர்த்தமாநார்த்தம் - இன்றொருபடி இத்யாதி. அளறுபட்டாற்போலே - சேற்றிலேயகப்பட்டாற்போலே. அளறு - சேறு. வ்யஸநம் இவனதானால் அவர்துஃகிதராகைக்கு ஹேதுவை ப்ரஶ்நோத்தரரூபேண அருளிச்செய்கிறார் - வ்யஸநம்இவன்தானால் இத்யாதி. உதவப்பெற்றிலோமென்று

அம்மநோரதந்தானேயமையும். இனி, நாம் அத்தேசத்தை "ப்ராப்யமென்று புத்தி பண்ணிப்போருகிறவோபாதி அவனும் நாம்இருந்ததேசத்தைக்குறித்து வரக்கடவன்: அவ்வளவிலும் நாம் அவனை அநுவர்த்தித்துவிட்டு நாம் அத்தேசத்திலேபோய்ப் புகக் கடவோம்; அத்தேசமே நமக்கு ப்ராப்யம்; அங்கேபோய்ப்புகவே நம்முடைய கைங்கர்யவிரோதிகளடையப் போம். இனி, நான் வேறொன்றிலே இச்சைபண்ணிலும், என் நெஞ்சானது அத்தேசத்துக்கொழிய, வேறொருதேசத்துக்கு ஆளாகமாட்டாது; "ஸாவோ நாந்யத்ர கச்சதி" (பாவோநாந்யத்ரகச்சதி) என்கிறபடியே." ஆக, திருவாறன்விளையிலே புக்கு அடிமைசெய்யக்கடவ படிகளை மநோரதித்து இனியராகிறார். ஸ்ரீராமாயணத்திற்காட்டில் இதுக்குவாசி பாடினாரே கேட்பிக்கையும், பாட்டுண்டாரே கேட்கையுமாயிற்று. "ஸீதாயாஶ்சரிதம் மஹத்" (ஸீதாயாஸ்சரிதம்மஹத்) என்னாநிற்கச் செய்தே, கவிபாட்டுண்டவளையொழியத் தனியேயிருந்திறே கேட்டது. பாடினான் ஸ்ரீவால்மீகிபகவான், கேட்பித்தாரும் குஶலவர்களிறே.

முதற் பாட்டு.

இன்பம்பயக்க எழில்மலர்மாதருந்தானும்இவ்வேழுலகை
இன்பம்பயக்கஇனிதுடன்வீற்றிருந்துஆள்கின்றஎங்கள்பிரான்
அன்புற்றமர்ந்துறைகின்றஅணிபொழில்சூழ்திருவாறன்விளை
அன்புற்றமர்ந்துவலஞ்செய்து கைதொழுநாள்களுமாதுங்கொலோ ?

ஆ.—பரஸ்பரஸாஹித்யத்தாலே தங்களுக்கு இன்பமுண்டாம்படியாகவும், அயர்வறுமமரர்களுக்கு இனிதாம்படியாகவும், பிராட்டியோடேகூடத் திருமாமணி மண்டபத்திலே வீற்றிருந்தருளி, இவ்வேழுலகை இன்பம்பயக்க ஆள்கின்ற எங்கள் பிரான் அன்புற்றமர்ந்து உறைகின்ற அணிபொழில்சூழ் திருவாறன்விளை அன்புற்றமர்ந்து வலஞ்செய்து கைதொழுநாள்களும் ஆகவற்றேயோ? என்கிறார்.

ஒ.—முதற்பாட்டில், திருவாறன்விளையிலேபுக்கு மிகவும் ஹ்ருஷ்டராய்க் கொண்டு அடிமைசெய்யும் காலமாகவற்றேஎன்று மநோரதிக்கிறார் [இன்பமென்று தொடங்கி] - எழிலையுடைய பெரியபிராட்டியாரோடேகூட வீற்றிருந்தருளுகையாலே தனக்கு நிரதிஶயாநந்தம் பிறக்கும்படியாகவும் அவளோடேகூட வீற்றிருந்தருளுகை

இத்யாதி. "ஆடுபறவைமிசைக்கண்டுகைதொழுதன்றி" என்றத்தைப்பற்ற - இனி நாம் அத்தேசத்தை இத்யாதி. "ஒன்றிவலம்செய்யவொன்றுமோதீவினை" என்றத்தைப்பற்ற - அங்கேபோய்ப்புகவே இத்யாதி. "கூடுங்கொலென்னுமென்சிந்தனை" என்றத்தைப்பற்ற - நான்வேறென்றிலே இத்யாதி. இதுக்கு த்ருஷ்டாந்தம் - ஸாவ இத்யாதி. நிகமநம் - ஆக இத்யாதி. இத்தால் வ்யாவ்ருத்தி - ஸ்ரீராமாயணத்தில் இத்யாதி. அங்கு இவ்விரண்டுமில்லையோவென்ன அருளிச்செய்கிறார்- ஸீதாயா இத்யாதி வாக்யத்வயத்தாலே. "காவ்யம் ராமாயணம் க்ருத்ஸ்நம் ஸீதாயாஶ்சரிதம் மஹத்। பௌலஸ்த்யவதமித்யேவ சகார சரிதவ்ரத:" இதி பாலகாண்டே. (ச - எ). "நிரஸ்தாதிஶயாஹ்லாதஸுகபாவைகலக்ஷணா। பேஷஜம் பகவத்ப்ராப்திரேகாந்தாத்யந்திகீ மதா" இதி ஷஷ்டாம்ஶே.

யாலே இவ்வுலோகத்துக்கு நிரதிஶயாநந்தம் பிறக்கும்படியாகவும் இவ்வுலோகங்களுக்கு ஸுவம் பிறக்கையாலே தனக்கு இனிமைபிறக்கும்படியாகவும் இவ்வுலோகங்களை ஆளா நிற்பதுஞ்செய்து இங்ஙனேயிருக்கிற மஹாஸம்பத்தைக்காட்டிஎங்களைத்திருவாய்மொழி பாடுவித்துக்கொண்ட மஹோபகாரகன். [அன்புற்றமர்ந்தென்று தொடங்கி] - ஸ்நேஹித்து அநந்யப்ரயோஜநனாய்க்கொண்டு நிரந்தரமாகவர்த்திக்கிற அழகிய பொழில் சூழ்ந்த திருவாறன்விளையை நாமும் அப்படியே அநந்யப்ரயோஜநராய்க்கொண்டு ஸ்நேஹித்து ப்ரீதி ப்ரகர்ஷத்தாலே ப்ரதக்ஷிணம்பண்ணி அடிமைசெய்யும் நாள்களும் ஆகவற்றே !

ப.—முதற்பாட்டில், ஶேஷியானவன் லக்ஷ்மியோடே பரிபூர்ணனாய் எழுந்தருளியிருக்கிற திருவாறன்விளையை அநுபவித்து அடிமைசெய்யுங்காலமும்ஆமோ? என்கிறார்.

எழில் - ஸௌந்தர்யாதிகுணோபேதையாய், மலர்மாதரும் - பத்மவாஸிநீத்வத்தாலேவந்த போக்யதையையுடைய லக்ஷ்மியும், தானும் - (அவர்கள்தான் விரும்பி மேல்விழும்படியான வைலக்ஷண்யத்தையுடைய) தானும், இன்பம் - (பரஸ்பர) ஆநந்த வ்ருத்தி, பயக்க - உண்டாம்படியாக, இனிதுடன் - போகஸாரஸ்யத்தோடேகூட, வீற்றிருந்து - (ஸர்வஶேஷித்வவ்யாவ்ருத்தி தோன்றும்படி) இருந்து, இவ்வேழுலகை - (வ்யக்தஅவ்யக்த கால ஶுத்தஸத்வாத்மக சதுர்விதஅசேதநவர்க்கமும்,பத்தமுக்த நித்ய ரூபமான த்ரிவித சேதநவர்க்கமுமாகிற) ஏழுவகைப்பட்ட இந்த லோகங்களை, இன்பம் பயக்க - ஆநந்தகந்தளிதமாம்படி, ஆள்கின்ற - அடிமைகொள்ளாநிற்குமவனாய், எங்கள் பிரான் - அப்படி யெங்களையும் வாசிககைங்கர்யங்கொண்ட மஹோபகாரகனானவன், அன்புற்று - (அடிமைகொள்ளுகைக்கு ஏகாந்தஸ்த்தலம் என்று) விரும்பி, அமர்ந்து - (அல்லாத பரவ்யூஹாதி ஸ்தலத்திற்காட்டில்) பொருத்தமுடையனாய், உறைகின்ற - (நிரந்தர) வாஸம்பண்ணுகிற, அணி - தர்ஶநீயமான, பொழில் - பொழில், சூழ் - சூழ்ந்த, திருவாறன்விளை - திருவாறன்விளையை, அன்புற்று - (அடிமைசெய்கைக்கு ஆஸந்நஸ்த்தலமென்று) ஸ்நேஹித்து, அமர்ந்து - (ப்ரயோஜநாந்தரங்களைக்கொண்டு அகலப்போகத் தேடாதே) பொருந்தி, வலஞ்செய்து - (ஸ்வரூபாநுரூபமான) அநுகூல வ்ருத்தியைப்பண்ணி, (ஹ்ருஷ்டராய்), கைதொழும் - * பத்தாஞ்சலிபுடராய் நாம் அநுபவிக்கும், நாள்களும் - நாள்கள், ஆகுங்கொல் - உண்டாமோ?

இ—முதற்பாட்டில், திருவாறன்விளையிலே புக்கு ஹ்ருஷ்டராய்க்கொண்டு அடிமைசெய்யுங்காலமாகவற்றே! என்று மநோரதிக்கிறார். [இன்பம்பயக்க] - நிரதிஶயாநந்தம் பிறக்கும்படியாக. நித்யஸம்ஸாரியானவன், ஆநந்தமயனான தன்னோட்டைச்சேர்த்தியாலே ஆநந்திக்குமாபோலேயாயிற்று, பிராட்டியோட்டைச் சேர்த்தியாலே தான் ஆநந்திக்கிறபடி. "அல்லிமலர்மகள்போக மயக்குக்களாகியும் நிற்கும்" என்னக்கடவதிறே; "ராமேண ஸீதயா ஸஹ". [எழில்மலர் மாதருந்தானும்] - "ராகவோऽர்ஹதி வைதேஹீம்" என்றிறே இவளுக்கு ஏற்றம்; "பத்மா ஸா ஜநகாத்மஜா" என்றிறே தனக்கு ஏற்றம். எழிலையுடைய பெரிய பிராட்டியார். [இவ்வேழுலகை இன்பம்பயக்க] - இருவருங்கூடின சேர்த்தியாலே ஸகல லோகங்களுக்கும் ஆநந்தமுண்டாம்படி. இருவர்க்கும் அந்யோந்யம்பிறந்த வாநந்தமிறே,லோகத்தில்ஆநந்தத்துக்குஅடி. "ராமே ஸீதாஸநாதே ப்ராப்ய ராஜ்யம் புநராப்தவாநு। ப்ரஹ்ருஷ்டமுதிதோ லோகः"

என்கிறபடியே, மாதா பிதாக்கள் சேரவிருந்தால் ப்ரஜைகளுக்கு மிகவும் ஏற்றமுண்டாமிறே. [இனிதுடன் வீற்றிருந்து ஆள்கின்ற] - இந்த லோகங்களுக்குஸ்வம் பிறக்கையாலே தனக்கு இனிமை பிறக்கும்படியாகவும், இவற்றை யாளுகைக்கு வந்திருக்கிறார்கள் இருவருங்கூடவென்று வேறுபாடு தோற்றவிருந்து இவற்றை ரக்ஷியாநிற்கிற. [எங்கள்பிரான்] - என்னையிட்டுத் திருவாய்மொழி பாடுவித்துக்கொண்ட மஹோபகாரகன். * கேசவன் தமர்க்குப் பின்பு இவர் தனியரல்லரிறே. [அன்புற்று] - திருவாய்மொழி கேட்கைக்கு நல்ல விடமென்று ஸ்நேஹத்தைப்பண்ணி. [அமர்ந்து] - வேறொரு ப்ரயோஜநத்தைக் கணிசியாதே தேசவாஸந்தானே ப்ராப்யோஜநமாகக் கொண்டு. [உறைகின்ற] - அவதாரம் போலன்றிக்கே நித்யவாஸம்பண்ணுகிற. [அணிபொழில்சூழ்திருவாறன்விளை] - உர்ஸநீயமானபொழில்சூழ்ந்த தேசத்தை. [அன்புற்று] - "தேநதேந கதோ பவாந்" என்கிறபடியே அவன் விரும்பின தேசத்தையே விரும்புமத்தனையிறே; அவன் திருவாய்மொழி கேட்கைக்கு நல்லவிடமென்று ஸ்நேஹித்தாற்போலே, நாமும் திருவாய்மொழி கேட்கைக்கு நல்லவிடமென்று ஸ்நேஹத்தைப் பண்ணி. [அமர்ந்து] - நாமும்அநந்யப்ரயோஜநராய். [வலஞ்செய்து] - அநுகூலவ்ருத்திகளைப்பண்ணி. [கைதொழுநாள்களுமாகுங்கொலோ] - மநோரதத்துக்குக் காலமானதுவே ஹோமத்துக்கும் காலமாகவற்றோ? "கவீதா நீம்ஸகாஸ்யாம:?"

ஈடு.—முதற்பாட்டு. திருவாறன்விளையிலேபுக்கு ஹ்ருஷ்டராய்க்கொண்டு அடிமைசெய்யுங் காலமாகவற்றோ? என்று மநோரதிக்கிறார்.

[இன்பம்பயக்க] - "ஆநந்தமய:" (ஆநந்தமய:) என்கிற வஸ்துவுக்கும், நித்ய து:கியான ஸம்ஸாரிசேதநனுக்குத் தன்னோட்டைச்சேர்த்தியாலே ஆநந்தமுண்டாமாபோலேயாயிற்று, பிராட்டியோட்டைச்சேர்த்தியாலே அவன்தனக்கும் ஆநந்தமுண்டாம்படியும்; "அல்லிமலர்மகள் போகமயக்குக்களாகியும் நிற்குமம்மான்" என்று பிராட்டியோட்டைச் சேர்த்தியாலே பிச்சேறியிருக்குமாயிற்று. "ராம:" (ராம:) - ஸ்ரீபரஸுராமாழ்வானைச்செருக்குவாட்டிப் படைவீட்டிலே வந்துபுகுந்து சக்ரவர்த்தியையும் மஹர்ஷிகளையும் அநுவர்த்தித்து, தர்மோத்தரமாகநடத்திப்போந்தவர். "த்வ"(து) - பித்ருஸுஸ்ருஷணாதிகளைப்பண்ணிப்பின்பு பிராட்டியோட்டை ரஸதாரையிலே இழிந்தபின்பு, "இதுக்கு முன்பெல்லாம் வாத்ஸ்யாயநம் கற்றுக் காமதந்த்ரமே நடத்திப்போந்தாரித்தனையோ!" என்னும்படி வேறுபட்டார். முன்பு போருகிறநாளில் "இவர் இதுக்குமுன்பு காமரஸம் புதியதுஉண்டறியாரோ?" என்னும்படி

முதற்பாட்டு.—இன்பம் இத்யாதி. "அணிபொழில்சூழ்திருவாறன்விளை" என்றுதொடங்கி "ஆகுங்கொல்" என்னுமளவும் கடாக்ஷித்தவதாரிகை - திருவாறன்விளையிலே இத்யாதி.

"எழில்மலர்மாதருந்தானும் - இன்பம்பயக்க" என்றுகூட்டி, "எழில்மலர்மாதர்" என்று விசேஷிக்கையாலே - ஈஸ்வரனுடைய ஆநந்தத்துக்கு ஹேது இவள்சேர்த்தியென்கிறார் - ஆநந்தமய: இத்யாதி. ஆநந்தமய: என்கிறவஸ்துவான அவன்தனக்கும் - பிராட்டியோட்டைச் சேர்த்தியாலே ஆநந்தமுண்டாம்படியும் என்று அந்வயிப்பது. பிராட்டியோட்டைச் சேர்த்தியாலே ஆநந்தமுண்டாமோ? என்ன - அல்லிமலர்மகள் இத்யாதி. இருவருமான சேர்த்தியிலே ஆநந்தமுண்டாமென்னுமதுக்கு ப்ரமாணம் - ராம இத்யாதி. "ராமஸ்து ஸீதயா ஸார்த்தம் விஜஹார பஹூந் ருதூந்" இத்யாதி வால்மீகிவசனம். (அ - உ) "ராம" என்றதுக்கு அர்த்தம் - பரசுராமாழ்வான் இத்யாதி. செருக்குவாட்டி - கர்வத்தைப்போக்கி. வாத்ஸ்யாயநம் - காமஸாஸ்த்ரம். விவரணம் -

போந்த இவர், இப்போது "இதுக்குமுன்பு தர்மதத்த்வம் புதியதுஉண்டறியாரோ?" என்னும்படி வேறுபட்டார். "सीतयासार्धम्"(ஸீதயாஸார்த்தம்) - அயோநிஜையாய் பரமபதத்தில் தானும் அவனுமாயிருந்துகலந்த போதைச் செவ்வியில் ஒன்றுங்குறையாமலிருந்தவளிறே பிராட்டி; இப்படியிருக்கச்செய்தேயும், தம்மைஅழியமாறி இதரஸஜாதீயராய் வந்து அவதரித்தாரேயாகிலும், போகத்தில் வந்தால் அவளுங்கூட அப்ரதாநையாம்படி அதில் தலைநின்றார்: அதுக்குஅடி என்? என்னில் - ராஜபுத்ரரான ரஸிகத்வத்தால்வந்த ஏற்றத்தாலே. "विजहार" (விஜஹார) பாரிப்பேயொழிய போகத்தில் இழியப்பெற்றிலர்; உபக்ரமத்துக்கே பணிபோந்த தித்தனை; உபோத்காதத்துக்குக் காலம்போந்ததித்தனை. "बहूनृतून्" (பஹூந்ருதூந்) - 'समाद्वादश तत्राहम्' (ஸமாத்வாதஶதத்ராஹம்) என்கிறபடியே பன்னிரண்டாண்டுஒருபடிப்படஅநுபவிக்கச்செய்தேயும், ருதுஶப்தத்தாலேசொல்லுகிறதாயிற்று - அவ்வவகாலங்களுக்குஅடைத்த புஷ்பாத்யுபகரணங்களைக்கொண்டு காலாவயவங்கள்தோறும் அநுபவித்துப்போந்தமை தோற்ற; ஶீதகாலத்துக்கு அடைத்தவைகொண்டு பரிமாறியும், உஷ்ணகாலத்துக்கு அடைத்தவைகொண்டு பரிமாறியும் அநுபவித்தமைதோற்றச் சொல்லுகிறது. "मनस्वी" (மநஸ்வீ) - ப்ரணயதாரையில் வந்தால், அவள்பாரித்தபாரிப்புக்கெல்லாம் யானைக்குக் குதிரைவைக்கைக்குராடான நெஞ்சில் அகலமுடையவராயிற்று. "तद्गतः"(தத்கத꞉)- த்ரவ்யம் த்ரவ்யத்தோடு சேர்ந்தாற்போலன்றிக்கே, ஜாதிகுணங்கள் த்ரவ்யத்தோடு சேருமாபோலே சேர்ந்தார்; 'अनन्याराघवेणाहम्' (அநந்யாராகவேணாஹம்) என்றும், 'अनन्याहि मया सीता' (அநந்யாஹிமயாஸீதா) என்றுமிறே இருவர் வார்த்தையும். "तस्यानित्यं हृदिसमर्पितः" (தஸ்யாநித்யம்ஹ்ருதிஸமர்ப்பித꞉)-இதில் இழிவதற்குமுன்பு இவரை அறிந்திருக்குமவளாகையாலே, "அப்படி பெரியவர் இப்போது என்பக்கலிலே தாழநிற்பதே! இப்படி இதொருநீர்மையே!" என்று எப்போதும் இவளநுஸந்தாநமே யாத்ரை

முன்புபோருகிற இத்யாதி.†"सहयज्ञाः सृष्ट्वा" என்று- அப்ரதாநே த்ருதீயையாக்கி அர்த்தம் - அயோநிஜையாய் இத்யாதி. ஸீதா - லாங்கலபத்ததி꞉ ஆகையாலே,அயோநிஜையாய் என்றது. அநேகவசநம் என்னுதே, "விஜஹார" என்றதுக்கு பாவம் - பாரிப்பே இத்யாதி. "போகத்திலிழியப்பெற்றிலர்" என்றதின் கருத்தை அருளிச்செய்கிறார் - உபக்ரமத்துக்கே இத்யாதி. விஹாரணம் - விளையாட்டாய், அத்தால் - உபக்ரமத்தைச் சொல்லுகிறது. ஏதத்விவரணம் - உபோத்காதத்துக்கு இத்யாதி. வத்ஸராந் என்னுதே, "ருதூந்" என்கிறதென்? என்ன - ஸமாத்வாதஶ இத்யாதி. விவரணம் - ஶீதகாலத்துக்கு இத்யாதி. ஸ்தோமாவிலே இந்ப்ரத்யயமாக்கி அர்த்தம் - ப்ரணயதாரையில் இத்யாதி. ஆனைக்குக் குதிரைவைக்கையாவது - பிடிகொடுக்குமாபோலே இருந்து பிடிகொடாதொழிகை. அப்படி சேர்ந்திருப்பார்களோ வென்ன, ப்ரமாணம் - அநந்யா இத்யாதி. "अनन्या राघवेणाहं भास्करेण प्रभा यथा - शक्या लोभयितुं नाहम् ऐश्वर्येण धनेन वा, रावणं प्रति सीता. (உக - கசு) "अनन्या हि मया सीता भास्करेण प्रभा यथा । विशुद्धा त्रिषु लोकेषु मैथिली जनकात्मजा" इति, रावणवधानन्तरं प्रह्लादितेवानु श्रीरामः. (கஉஉ - ககஅ) "'तद्गतः' என்றதும், 'तस्य ... समर्पितः' என்றதும், 'अस्या देव्या मनस्तस्मिंस्तस्य चास्यां प्रतिष्ठितम्' என்றாற்போலே யிருக்கிறது" என்

---

† அஷ்டோத்யாயீ.

யாகையாலே, வேறொன்றும் நெஞ்சிற்படாதே அவள் தன்னைத் தம்பக்கலிலே போகடும்படியானார். "தத்கத:" (தத்கத꞉) - என்கையாலே - இவர் தம்மை அவள்பக்கலிலே ஒக்கினபடி சொல்லுகிறது. "நித்யம்ஹ்ருதிஸமர்ப்பித:" (நித்யம்ஹ்ருதிஸமர்ப்பித꞉) என்கையாலே- அவள் தன்னை இவர்பக்கலிலே ஒக்கிவைத்தபடி சொல்லுகிறது. இப்படி இருவருமான சேர்த்தியிலே இதுக்குமுன்பு ஆநந்தம் புதியதுண்டறியாதானொருவனுக்கு ஆநந்தமுண்டாமாபோலேயாயிற்று, க்ஷணந்தோறும் ஆநந்தமுண்டாம்படி. [எழில்மலர் மாதரும்] - "ராகவோர்ஹதிவைதேஹீம்" (ராகவோர்ஹதிவைதேஹீம்) என்னுமாபோலேயாயிற்று இத்தலை. [தானும்] - "யஸ்யஸீதாபவேத்பார்யா" (யஸ்ய ஸீதாபவேத்பார்யா) என்றும், "யஸ்யஸாஜநகாத்மஜா" (யஸ்யஸாஜநகாத்மஜா) என்றும் சொல்லலாம்படியாயிற்று அத்தலை. [இவ்வேழுலகையின்பம்பயக்க] - "ராமஸ்ஸீதாமநுப்ராப்ய ராஜ்யம்புநரவாப்தவாந் | ப்ரஹ்ருஷ்டமுதிதோலோக꞉" (ராமஸ்ஸீதாமநுப்ராப்ய ராஜ்யம்புநரவாப்தவாந் | ப்ரஹ்ருஷ்டமுதிதோலோக꞉) என்கிறபடியே, மாதாபிதாக்களிருவரும் சேரவிருந்து பரியப்புக்கால் ப்ரஜைகளுக்கு ஒருகுறையும் பிறவாதிறே. ஆக, இருவருமான சேர்த்தியாலே தங்களுக்கு ஆநந்தமுண்டாக, அச்சேர்த்தியைக்காண்கையாலே லோகத்துக்கு ஆநந்த முண்டாக, அதுதன்னைக்கண்டு ப்ரஜை பால்குடிக்கக்கண்டு உகக்கும் தாயைப்போலே இவர்களுக்குண்டான ப்ரீதியைக் கண்டு அத்தாலே தாங்கள் இனியராயிருப்பார்களாயிற்று. [இனிதுடன் வீற்றிருந்தாள்கின்ற] - தன்ஸந்நிதியாலே லோகமடையத் தளிரும் முறியுமாம்படி யிருக்கிறவன், தான் பெறும்பேறுபெற்றாற்போலே, "திருவாய்மொழிகேட்கைக்கூடாயிருப்பதோருதேசம் பெற்றோம்" என்று விரும்பிவர்த்திக்கிற தேசமாயிற்று. [எங்கள்பிரான்]- * கேசவன்தமர்க்குப் பின்பு இவர்தாம் ஏகாகிகளல்லரிறே. என்னை இடுவித்துத் திருவாய்மொழிபாடுவித்துக்

---

*றருளிச்செய்வர். ஒக்கினபடி - ஆக்கினபடி. பாதந்த்ராக்கினபடி இத்யர்த்த꞉. வசநமெடுத்ததுக்குப்ரயோஜநம்-இப்படி இருவருமான இத்யாதி. "ராகவோர்ஹதி" என்கையாலே, "எழில்மலர்மாதர்" என்று - பிராட்டிவைலக்ஷண்யமும், "யஸ்யஸீதாபவேத்பார்யா" "யஸ்யஸாஜநகாத்மஜா" என்று யஸ்ய என்கிறது * ஷஷ்டியாகையாலும், "பார்யா" என்கையாலும், "தானும்" என்று - பெருமாள்வைலக்ஷண்யமும் சொல்லுகிறது என்றபடி. இத்தலை என்றது - பிராட்டியை. அத்தலை என்றது - பெருமாளை. "துல்யஶீலவயோவ்ருத்தாம் துல்யாபிஜநலக்ஷணாம் | ராகவோர்ஹதிவைதேஹீம் தஞ்சேயமஸிதேக்ஷணா." "யஸ்யஸீதாபவேத்பார்யா யஸ்யஹ்ருஷ்டாவமித்ரஜஸ் | அதிஜீவேத்ஸர்வேஷு லோகேஷ்வபி புரந்தராத்" இதி ராவணம்ப்ரதி மாரீசவசநம். (ஆரண்ய-நச-கஅ) "அப்ரமேயம்ஹிதத்தேஜோ யஸ்யஸாஜநகாத்மஜா" இதி ராவணம்ப்ரதி மாரீச꞉. இருவருடைய ஆநந்தம் சொன்னவநந்தரம், லோகத்தாருடைய ஆநந்தம் சொன்னதுக்கு பாவம் - ராமஸ்ஸீதாம் இத்யாதி. ஸமேக்ஷ்ய, "த்ருஷ்ட꞉புஷ்டஸ்ஸுபாஸித꞉" இதி ஶேஷ꞉. பூர்வோக்தரான மூவருடைய ஆநந்தத்தையும் நிகமித்துக்கொண்டு, "இனிதுடன் வீற்றிருந்து" என்றதுக்குபாவம்- ஆக இருவருமான இத்யாதி. 'அன்புற்றமர்ந்துறைகின்ற' என்றதுக்கு அவதாரிகையாதல், அத்தைக்கடாக்ஷித்து பாவமாதல் - தன் ஸந்நிதியாலே இத்யாதி. "எங்கள்" என்ற பஹுவசநத்துக்கு பாவம் - கேசவன் இத்யாதி. "பிரான்" என்றதுக்கு அர்த்தம் - என்னை இடுவித்து இத்யாதி. கணிசியாதே - அபேக்ஷியாதே.*

கொண்ட உபகாரகன். [அன்புற்று] "திருவாய்மொழி கேட்கலாயிருப்பதொரு தேசம் பெறுவோமே!" என்று அங்கே ஸ்நேஹத்தைப்பண்ணி. [அமர்ந்து] - அத்தேசவாஸத்துக்கு மேற்பட ஒருப்ரயோஜநத்தைக் கணிசியாதே விரும்பி. [உறைகின்ற] - அவதாரங்கள்போலே தீர்த்தம்ப்ரஸாதியாதே, நித்யவாஸம்பண்ணுகிற. [அணிபொழில்சூழ்திருவாறன்விளை] - "ப்ராப்யபூமி" என்று தோற்றும்படியிருப்பதாய், அவன்தனக்கும் விபூதியிலுள்ளார்க்கும் இருந்து திருவாய்மொழிகேட்கைக்கூடான பரப்பையுடைத்தாய், தர்ஶநீயமாயிருக்கிற பொழிலாலே சூழப்பட்ட திருவாறன்விளையை. "தேநதேதமநுவ்ரதா꞉" (தேநதேதமநுவ்ரதா꞉) என்கிறபடியே அவனுக்கு உத்தேஶ்யமான இடமும் இவனுக்கு உத்தேஶ்யமாகக் கடவதிறே. [அன்புற்று] - "திருவாய்மொழிகேட்கைக்கீடானதேசம் பெற்றோம்" என்று அவன் விருப்பத்தைப் பண்ணினாற்போலே, "திருவாய்மொழிகேட்பிக்கைக்கூடாயிருப்பதொரு தேசத்தைப்பெறுவோமே!"என்று அத்தேசத்திலே விருப்பத்தைப் பண்ணி. [அமர்ந்து] - அத்தேசவாஸத்துக்கு அவ்வருகு ஒருப்ரயோஜநத்தைக் கணிசியாதே. [வலஞ்செய்து] - ப்ரதக்ஷிணாதிகளைப்பண்ணி. [கைதொழுநாள்களுமாகுங்கோலோ] - "அபீதாநீம்ஸகாலஸ்ஸ்யாத்" (அபீதாநீம்ஸகாலஸ்ஸ்யாத்) என்றாரே ஸ்ரீகௌஸல்யையார்: போய்வருகை தவிராராகில் மீண்டுபுகுரும்நாள் இன்றாயிற்றாகிலோ என்றாற்போலே, இம்மநோரதத்துக்கு அடைத்தகாலமே அநுபவத்துக்கு அடைத்தகாலமாகப் பெற்றோமாகிலோ ? என்கிறார். (க)

"அழகிய பொழிலையுடைய திருவாறன்விளை" என்று - தோப்பை வர்ணித்ததுக்கு பாவம் - ப்ராப்யபூமி இத்யாதி. "அணிபொழில்" என்கையாலே - பரப்பும் அர்த்தாத்ஸித்தம். "அன்புற்று" என்றதுக்கு அவதாரிகையாதல், "அன்புற்றமர்ந்துறைகின்ற" என்றவநந்தரம், "அன்புற்று" என்றதுக்கு பாவமாதல் - தேநதேத இத்யாதி. "ஸர்வேஷாம்ஹிஸ த்ர்மாத்மா வர்ணாநாம் ப்ராஹ்மணாதிஷு। க்ருதம்ஹிவ ஸதாநாம் தேநதேதமநுவ்ரதா꞉" இதி யோத்யாகாண்டே. "அன்புற்று" என்றதுக்கு பதார்த்தம் - திருவாய்மொழி இத்யாதி. இப்போது "ஆகுங்கொலோ" என்று விவக்ஷித்து, இப்படி சொன்னாருண்டோ? என்ன - அபீதாநீம் இத்யாதி. "அபீதாநீம்ஸகாலஸ்ஸ்யாத் வநாத்ப்ரத்யாகதம் புந꞉ । யத்ராமம் த்ரக்ஷ்யஸே புத்ரம் ஜடாவல்கலதாரிணம்." இதி யோத்யாகாண்டே கௌஸல்யா. (உச - ந.எ½) ராமம் த்ரக்ஷ்யஸி, வநாத்ப்ரத்யாகதம்-ஜடாவல்கலதாரிணம்-யதா- புத்ர த்ரக்ஷ்யஸி ஸ꞉காலோ அபீதாநீம் ஸ்யாதபி இதி அந்வய꞉. இதுக்கு அர்த்தம் - போய்வருகை இத்யாதி. த்ருஷ்டாந்தத்தில்சொன்ன அர்த்தத்தை தார்ஷ்டாந்திகத்திலே அதிதேசிக்கிறார் - இம்மநோரதத்துக்கு இத்யாதி. எழில்மலர்மாதரும் தானுமான இருவர்க்கும் இன்பமுண்டாம்படியாகவும், அத்தாலே இவ்வேழுலகுக்கும் இன்பமுண்டாம்படியாகவும் இனிதுடன் வீற்றிருந்தாளுகிற என்று பதார்த்தம். 'எழில்மலர்மாதரும் தானும் - இன்பம்பயக்க-இவ்வேழுலகை' என்றுதொடங்கி, 'கைதொழுநாள்களு மாகுங்கொலோ'இத்யந்வய꞉. (க)

இரண்டாம் பாட்டு.

ஆகுங்கொல்? ஐயமொன்றின்றி அகலிடம்முற்றவும்ஈரடியே
யாகும்பரிசுநிமிர்ந்த திருக்குறளப்பன்அமர்ந்துறையும்
மாகந்திகழ்கொடிமாடங்கள் நீடு மதிள்திருவாறன்விளை
மாகந்தநீர்கொண்டுதூவிவலஞ்செய்து கைதொழக்கூடுங்கொலோ?

ஆ.—(ஆகுங்கொல்.)-ஒருஸந்தேஹமின்றிக்கே அகலிடம்முற்றவும் ஈரடியே யாகும்படி அளந்தருளின ஸ்ரீவாமநனெழுந்தருளியிருக்கிற, திருவாய்மொழி பாடுவிக்கை யாகிற மஹோத்ஸவத்துக்காகக் கொடிகட்டி அலங்க்ருதமான திருவாறன்விளையை, சந்தநகர்ப்பூராதி ஸுகந்த த்ரவ்யவாஸிதமாய் ஹ்ருத்யசீதளமான நீர்கொண்டு தூவி வலம் செய்து கைதொழக்கூடுமேயோ? என்கிறார்.

ஒ.—இரண்டாம்பாட்டில், திருவாறன்விளையிலே நிரதிஶய ஸுகந்தமான நீரைக்கொண்டு திருநீர்விட்டு ப்ரதக்ஷிணம்பண்ணிக் கையாலே தொழவும் கூடவற்றே! என்கிறார்.

[அகலிடம்முற்றவும்] - பூமியெல்லாம்: ஸர்வலோகங்களுக்கும் உபலக்ஷணம் [மாகம்] - ஆகாஶம்.

ப.—அநந்தரம், அநந்யார்ஹத்வ ஆபாதகமான த்ரிவிக்ரமாபதாநத்தையுடையவன் வர்த்திக்கிற திருவாறன்விளையை, ஸுகந்தமான ஜலங்களாலே திருநீரிட்டு ப்ரதக்ஷிணாத்யநுவ்ருத்திகள் பண்ணக்கூடுமோ? என்கிறார்.

ஒன்று - ஒரு, ஐயம்இன்றி - ஸந்தேஹம் அற, ஆகுங்கொல் - உண்டாமோ? (எதுஎன்னில்), அகல் - விஸ்தீர்ணமான, இடம் - லோகங்களை, முற்றவும் - எல்லாம், ஈரடியே ஆகும்பரிசு - இரண்டடியே யாம்படி, நிமிர்ந்த - வளர்ந்தருளின, திருக்குறள் - ஸ்ரீவாமநனை, அப்பன் - மஹோபகாரகன், அமர்ந்து - (அவதாரஸ்த்தலமான தேவலோகத்திலுங் காட்டில்) அமர்ந்து, உறையும் - உறையக்கடவதாய், மா - பெரிய, கம் - ஆகாசத்திலே, திகழ் - விளங்காநிற்கிற, கொடி - கொடிகளையுடைய, மாடங்கள் - மாடங்களையும், நீடு - நெடிய, மதிள் - மதிள்களையுமுடைத்தான, திருவாறன்விளை - திருவாறன்விளையை, மா - விலக்ஷணமான, கந்தம் - கந்தத்தையுடைத்தான, நீர் - நீரை கொண்டு - கொண்டு, தூவி - தூவி, வலம்செய்து - ப்ரதக்ஷிணம் பண்ணி, கைதொழ - அஞ்சலிபண்ண, கூடுங்கொலோ - கூடுமோ? "ஆகுங்கொல்" என்கிற நினைவை-மேலே உபபாதித்தபடியா யிருக்கிறது. ஐயமொன்றின்றி என்று - மேலேகூட்டவுமாம்; இது ஶக்யமோவென்கிற ஐயமின்றி அளந்தானென்னவுமாம்.

இ.—இரண்டாம்பாட்டில், திருவாறன்விளையிலே விலக்ஷண கந்தயுக்தமான திருநீர்விட்டு ப்ரதக்ஷிணம் பண்ணிக் கையாலேதொழவும் கூடவற்றே? என்கிறார்.

[ஆகுங்கொலையமொன்றின்றி] - இது முடியுமோவென்னும் ஸந்தேஹமின்றியே யென்னுதல், பூமிப்பரப்பை முடியவளக்க முடியுமோவென்னுதல். தன்மௌக்த்யமிறே ஸந்தேஹாஸ்பதம். [அகலிடம்முற்றவும்] - பஞ்சாஶத்கோடிவிஸ்தீர்ணையான பூமியடைய. [ஈரடியித்யாதி] - மூவடியையிரந்து இரண்டடியாலே அளந்தான், ஓரடிக்குச் சிறையிட்டு வைக்கைக்காக. அகலிடமென்று - ஸகலலோகங்களுக்கும் உபலக்ஷணம். [திருக்குறளப்பன்] - ஸ்ரீவாமநனை மஹோபகாரகன். [அமர்ந்துறையும்] - திருப்பாற்

கடலிலும் ஸ்வர்கத்திலும்போலன்றியே அவன்விரும்பி நித்யவாஸம்பண்ணுகிற தேசம். [மாகந்திகழ்இத்யாதி] - கொடியை யுடைத்தான மாடங்களையும், ஓங்கினமதிளையுமுடைத்தான திருவாறன்விளையை. [மாகம்] - ஆகாசாவகாசத்தையடைய மறையாநின்றதாயிற்று, மாடங்களில் கொடிகள். அவன் திருவடிகளாலளந்த ஆகாசாவகாசத்தளவும் கணிசிக்கிறதாயிற்றுக் கொடிகள். [மாகந்தநீர்] - மஹத்தான கந்தத்தையுடைத்தான நீர். "ஸிஞ்சந்து வஸுதாம் க்ருத்ஸ்நாம் ஹிமஶீதேந வாரிணா" என்று. ஸ்ரீநந்திக்ராமம் தொடங்கி ஸ்ரீ பரத்வாஜாஶ்ரமத்தளவும் ஸ்ரீஶத்ருக்நாழ்வான் பனிநீரை விடுவித்தானிறே; அப்படியே நாமும் அங்கேபுக்கு அநுகூலவ்ருத்திகளைப் பண்ணக்கூடவற்றோ?

ஈடு:—இரண்டாம்பாட்டு. திறவாறன்விளையிலே மிக்கபரிமளத்தையுடைத்தான நீரைக்கொண்டு திருநீர்விட்டு ப்ரதக்ஷிணம்பண்ணிக் கையாலேதொழவுங்கூடவற்றே? என்கிறார்.

[ஆதுங்கொலையமொன்றின்றி] - இது அநுபாஷணமாகாநிற்கச்செய்தே, ஆதராதிஶயஸூசகமாயிருக்கிறது. ஒருஸம்ஶயமின்றிக்கே நமக்கு இதுகூடவற்றோ? அன்றிக்கே, ஆதுங்கொல் என்கிற ஐயமுங்கூட இன்றிக்கே ஈரடியேயாகும்பரிசு நிமிர்ந்தானென்னவுமாம். எல்லாம்செய்தாலும் "நமக்கு இது கூடுமோ? கூடாதோ?" என்றுஇருந்தானாயிற்று மௌக்த்யத்தாலே. [அகலிடம்முற்றவும்]-பரப்பையுடைத்தான பூமியையும்ஸுவர்லோகாதிகளுமெல்லாம் இரண்டடியாகும்பரிசு நிமிர்ந்த. இரண்டடியாலே ஸம்யந்தரிக்ஷாதிகளை அளந்தானாயிற்று, ஓரடிக்கு இவனைச் சிறையிட்டுவைக்க நினைத்து. [திருக்குறளப்பன்] - ஸ்ரீவாமநனான மஹோபகாரகன். [அமர்ந்துறையும்] - இந்த்ரனுக்கு ராஜ்யத்தை வாங்கிக்கொடுத்துத் திருப்பாற்கடலிலேபோய்ச் சாய்கையன்றிக்கே, அவன்வந்து நித்யவாஸம் பண்ணுகிற. [மாகந்திகழ் இத்யாதி] - அவன் திருவடிகளாலளந்த ஆகாசப்பரப்படங்கலும் வ்யாபியாநின்றுள்ள கொடிகளையுடைத்தான மாடங்களையும், ஓங்கியிருந்துள்ள மதிட்களையுமுடைத்தான திருவாறன்விளையை. [மாகந்தநீர் இத்யாதி]-"ஸிஞ்சந்து வஸுதாம் க்ருத்ஸ்நாம் ஹிமஶீதேந வாரிணா" (ஸிஞ்சந்து வஸுதாம்க்ருத்ஸ்நாம்ஹிமஶீதேநவாரிணா) என்று ஸ்ரீநந்திக்ராமந்தொடங்கி ஸ்ரீபரத்வாஜமஹாமுநயாஶ்ரமத்தளவும்வர, பனிநீராலேவிடுவித்தான் ஸ்ரீஶத்ருக்நாழ்வான் என்றதிறே; அப்படியே, மாகந்தநீர்கொண்டு தூவி, அநுகூலவ்ருத்திகளைப்பண்ணிக் கைதொழக் கூடவற்றேயோ?

இரண்டாம்பாட்டு.—ஆதுங்கொல் இத்யாதி. "திருவாறன்விளை மாகந்தநீர்கொண்டு" இத்யாதி மேலெல்லாம் கடாக்ஷித்து அவதாரிகை - திருவாறன்விளையிலே இத்யாதி.

திரியவும் "ஆதுங்கொல்" என்கிறதென்? என்ன - இது அநுபாஷணம் இத்யாதி. ஸப்தார்த்தம் - ஒருஸம்ஶயம் இத்யாதி. "ஐயமொன்றின்றி - ஆதுங்கொல்" என்றபடி. அர்த்தாந்தரம் - அன்றிக்கே இத்யாதி. ஸர்வஶக்திக்கு ஸம்ஶயப்ரஸக்தியேதென்ன - எல்லாம்செய்தாலும் இத்யாதி. முற்றவும் - ஸுவர்லோகாதிகளையும். ஆதும்பரிசு - ஆம்ப்ரகாரம். மூன்றுஅடியை இரந்து இரண்டடியாலே அளப்பானென்? என்ன-இரண்டடியாலே இத்யாதி. மாகம்=மஹாகம்: விஸ்ருதமான ஆகாசமென்றபடி. "க்ருத்ஸ்நாம்" என்றதுக்கு அர்த்தம் - ஸ்ரீநந்திக்ராமம் இத்யாதி. "ஸிஞ்சந்து வஸுதாம்க்ருத்ஸ்நாம் ஹிமஶீதேநவாரிணா । ததோऽப்யவகிரந்த்வந்யே லாஜை: புஷ்பைஶ்ச ஸர்வஶ:" இதி ராமாகமநவேலாயாம் பரிஜநாந் ப்ரதி ஶத்ருக்நவச:.(யுத்-க௩௦-௬) (௨)

மூன்றும் பாட்டு.

கூடுங்கொல் ? வைகலும்கோவிந்தனைமதுசூதனைக்கோளரியை
ஆடுபறவைமிசைக்கண்டு கைதொழுதன்றியவனுறையும்
பாடும்பெரும்புகழ்நான்மறைவேள்வியைந்துஆறங்கம்பன்னினர்வாழ்
நீடுபொழில்திருவாறன்விளைதொழ வாய்க்குங்கொல்? நிச்சலுமே.

ஆ.—(கூடுங்கொல்) - ஸௌசீல்யவாத்ஸல்யாதி கல்யாணகுண விசிஷ்டனன எம்பெருமான் பெரியதிருவடிமேலே எழுந்தருளியிருக்கும்படியைக் கண்டு கைதொழுகையன்றியே, அவனுக்குங்கூட ப்ராப்யமாய், ஸாங்க ஸகலவேதவித்தக்ரேஸரராய், ததர்த்த பரமபுருஷாராதநரூப பஞ்சமஹாயஜ்ஞாத்யநுஷ்டாநசீலரா யிருந்த திவ்யஜநங்கள் வாழ்கிற திருவாறன்விளையை நிச்சலும் தொழக்கூடுமேயோ ? என்கிறார்.

ஒ.—மூன்றும்பாட்டில், திருவாறன்விளையில்எம்பெருமான் பெரியதிருவடி வடிமேலே ஏறியருளி இங்கே எழுந்தருளக் கண்டாலும் அவனைத்தவிர்ந்து, நாள் தோறும் திருவாறன்விளையைத் தொழக்கூடவற்றே ! என்கிறார்.

[கோவிந்தனை மதுசூதனைக்கோளரியை]-ஆஸ்ரிதஸுலபனாய் ஆஸ்ரிதவிரோதி நிரஸநஸ்வபாவனாய் ப்ரதிகூலர்க்கு முகங்கொள்ளமுடியாதே யிருந்துள்ள எம்பெருமானை. [பாடும்பெரும்புகழ் நான்மறை வேள்வியைந்து ஆறங்கம்பன்னினர்] - அவனுடைய பெரும்புகழைப் பாடாநின்றுள்ள ஷடங்கஸஹிதமான நாலுவேதத்தையும் பஞ்சமஹாயஜ்ஞத்தையும் பயின்றவர்கள்.

ப.—அநந்தரம், ஆஸ்ரிதாரக்ஷணார்த்தமான ஆகாரத்தையுடைய கருடவாஹநனை அநுபவித்து, அவன் வர்த்திக்கிற தேசத்தை நித்யமாகத்தொழ வாய்க்கவற்றோ ? என்கிறார்.

வைகலும் - என்றும், கூடுங்கொல் - இப்படிக்கூடவற்றோ ? கோவிந்தனை - கோரக்ஷணத்துக்கு முடிசூடினவனாய், மதுசூதனை - (ரக்ஷ்யவிரோதியான) மதுவுக்கு நிராஸகனாய், கோளரியை - அத்யுஜ்ஜ்வல தேஜோரூப ஸிம்ஹம்போலே விரோதிகளுக்கு அநபிபவநீயனானவனை, ஆடு - ஊர்ஜஸ்வியகதியான, பறவை மிசை - பெரியதிருவடி மேலே, கண்டு - கண்டு, கைதொழுது - அஞ்சலிபண்ணி, (அநுபவித்து), அன்றி - அவ்வளவன்றியே, அவன் உறையும் - அவன் வர்த்திக்குமிடமாய், பாடும் - (உச்சரிதஸ்வரமாம்படி) பாடப்படுகிற, பெரு — பெரிய, புகழ் - பகவத்குணப்ரதையையுடைத்தான, நான்மறை - (ருக்யஜுஸ்ஸாமாதர்வண ஸ்வரூபமான) நாலுவேதங்களையும், ஐந்து வேள்வி - (தேவபித்ருபூதமநுஷ்யப்ரஹ்மயஜ்ஞ ரூபமான) பஞ்சமஹாயஜ்ஞங்களையும், அங்கம் - (சிக்ஷை நிருக்தம் வ்யாகரணம் சந்தோவிசிதி கல்பஸூத்ரம் ஜ்யோதிஸ்ஸாஸ்த்ரமென்கிற) அங்கங்கள், ஆறு - ஆறையும், பன்னினர் - பரக்க நிரூபித்துப்போருகிறவர்கள், வாழ் - (பகவதநுபவத்தோடே) வாழ்வதாய், நீடு - பெரிய, பொழில் - பொழிலையுடைத்தான, திருவாறன்விளை - திருவாறன்விளையை, தொழ - தொழ, நிச்சலும் - நித்யமாக, வாய்க்குங்கொல் - வாய்க்கவற்றோ ?

இ.—மூன்றும்பாட்டில், அவன் பெரிய திருவடியின்மேலேயேறி இங்கே யெழுந்தருளக் கண்டாலும், அவனைத் தவிர்ந்து அவ்வூரை நாள்தோறும் தொழக்கூட

வற்றே? என்கிறார். [கூடுங்கொல் வைகலும்] - காலமெல்லாம்இங்ஙனே அநுபவிக்கக் கூடவற்றோ? [கோவிந்தனித்யாதி] - அங்குவர்த்திக்கிறவனைக் கண்டால் மூன்று ஸ்வபாவம் ப்ரகாஶியா நிற்கும். அதாவது - ஆஶ்ரிதஸுலபனா யிருக்கையும், தத்விரோதிநிரஸநஶீலனாயிருக்கையும், அநாஶ்ரிதர்க்கு அநபிபவநீயனா யிருக்கையும். [கோளரி] - 'ஜ்வலந்தம்' என்கிறபடியேநிரதிஶயதேஜோயுக்தனாயிருக்கை. [ஆடுபறவைமிசைக்கண்டு] - ஸ்வத்வஸ்பர்ஶத்தாலே களித்தாடா நிற்கிற பெரிதிருவடிமேலே கண்டு. திருவாறன்விளை உத்தேஶ்யமாகப் போகாநின்றால், அவன் திருநகரி யுத்தேஶ்யமாக வாராநிற்கும். [கைதொழுது] - அவனை இங்குக் கொள்ளக்கடவதொரு காரியமில்லையேயாகிலும், அநுவர்த்திக்கவேண்டும் ப்ராப்திபுண்டிறே. [அன்றி] - அவனைவிட்டு. [அவனுறையும்] - அவன் நித்யவாஸம் பண்ணுகிறவூரிலே சென்றநுபவிக்கக்கடவன். [பாடும்பெரும்புகழ் நான்மறை] - அவனுடைய கல்யாணகுணங்களைப் பாடாநின்றுள்ள நாலுவேதங்கள். [வேள்வியைந்து] - பஞ்சமஹாயஜ்ஞம். [ஆறங்கம்] - ஷடங்கம். [பன்னினர்வாழ்] - இவற்றைப் பயின்றவர்கள்: வேதாதாத்பர்யம் கைப்பட்டவர்கள். நித்யாநுபவம் பண்ணுகிற தேசம். [நீடுபொழிலித்யாதி] - ஓக்கத்தையுடைய பொழில்சூழ்ந்த திருவாறன்விளையிலேபுக்கு, அங்குள்ள வைஷ்ணவர்களோடேகூடி யநுபவிக்கக் காலமெல்லா மிங்ஙனேயாகவற்றோ?

ஈடு.—மூன்றாம்பாட்டு. திருவாறன்விளையிலெம்பெருமான் பெரியதிருவடி மேலே ஏறி எழுந்தருளக்கண்டாலும், அவனைத்தவிர்ந்து திருவாறன்விளையைத் தொழக் கூடவற்றே? என்கிறார்.

[கூடுங்கொல்வைகலும்] - இதுவும் அநுபாஷணமாய், நாள்தோறும் நமக்கு இது கூடவற்றேயோ? [கோவிந்தன் இத்யாதி] - அங்குநிற்கிறவனைக் கண்டால் மூன்று படி தோடைகோள்ளலாயிருக்கும். ஆஶ்ரிதவாத்ஸல்யமும், ஆஶ்ரிதவிரோதிநிரஸந ஶீலதையும், அநாஶ்ரிதர்க்கு அநபிபவநீயன்என்னுமிடமும்இவை [கோளரி] - "ஜ்வலந்தம்" (ஜ்வலந்தம்) என்கிறபடியே. [ஆடுபறவைமிசைக்கண்டு] - வெற்றிப்புள்ளின்மேலேகண்டு. ஆடு - வெற்றி. அன்றிக்கே, ஸர்வேஶ்வரன்வாஹநம் என்கிற ஹர்ஷப்ரகர்ஷத்தாலே, மதுபாநமத்தரைப்போலே களித்து ஆடாநின்றுள்ள பெரிய திருவடிதிருத்தோளிலே கண்டு என்றுமாம். நாம் திருவாறன்விளையை ப்ராப்யம் என்று போகிறவோபாதி, அவனும் திருநகரியை "உத்தேஶ்யமாம்" என்று வாராநிற்குமிறே. [கண்டு] - நடுவழியிலே கண்டால். [கைதொழுது] - காரியங்கொண்டிலோமேயாகிலும், கிட்டினால் கைதொழுகைக்கு ப்ராப்தியுண்டிறே; ஆகையாலே, முறைதப்பாமல் அநுவர்த்தித்து.

மூன்றாம்பாட்டு.—கூடுங்கோல் இத்யாதி. "ஆடுபறவைமிசைக்கண்டு கைதொழுதன்றியவனுறையும் - திருவாறன்விளைதொழ வாய்க்குங்கொல்நிச்சலும்" என்ற பதங்களைக்கடாக்ஷித்து அவதாரிகை - திருவாறன்விளை இத்யாதி.

மூன்று திருநாமத்தைச் சொன்னதுக்கு ஸாவம் - அங்குநிற்கிறவனை இத்யாதி. தோடைகோள்ளுகை - தோன்றுகை. "கோளரி" தேஜஸ்ஸையுடைய ஸிம்ஹமென்று விவக்ஷித்து, அதுக்கு ப்ரமாணம் - ஜ்வலந்தம் இத்யாதி. பெரியதிருவடிமேலே காண்கைக்கு ப்ரஸக்தியேதென்ன - நாம் திருவாறன் இத்யாதி. அவனைவிட்டு அத்தேசத்தேறப்போகிற உமக்கு அவனைத் தொழவேண்டுவானென்? என்ன - காரியம் இத்யாதி, இத்தால் - சரமபர்வநிஷ்டர்க்கும் ஈஶ்வரன் உத்தேஶ்யமென்

[அன்றி] - அவனைவிட்டு. [அவனுறையும்] - அவன் இராத்தங்கும்ஊரிலேபோய்ப்புகக்கடவோம்; ஸர்வேஶ்வரன் ப்ராப்யனாகாநிற்கச்செய்தே, ஒருதேசவிசேஷத்திலே போய் அநுபவிப்பதாக ஒருநியதியுண்டிறே. [பாடும்பெரும்புகழ் நான்மறை] - அவனுடைய கல்யாணகுணங்களைப் பாடாநின்றுள்ள நாலுவகைப்பட்ட வேதங்கள். [வேள்வியைந்து]- பஞ்ச மஹாயஜ்ஞங்கள். [ஆறங்கம்] - அங்கங்கள்ஆறும். இவற்றைப்பண்ணினவர்கள் - எல்லைக் கரைகண்டிருக்குமவர்கள். "வேதாந்தகாஸ்ஸமாஹூதா" (போதயந்த:பரஸ்பரம்) என்னும்படி, அவ்வூரிலுள்ளாரோடே போய்க் கூடவேணும். [வாழ்] - வேததாத்பர்யபூமிதனைக் கண்ணாலேகண்டு அநுபவித்து வாழாநின்றுள்ள. [நீடுபொழில்திருவாறன்விளைதொழ] - ஓக்கத்தையுடைத்தான பொழிலையுடையதிருவாறன்விளையைத்தொழ. [வாய்க்குங்கோல்நிச்சலுமே] - அங்குத்தை ஸ்ரீவைஷ்ணவர்களோடே கூடி நித்யாநுபவம்பண்ணக் கூடவற்றேயோ (௩)

நான்காம் பாட்டு.

வாய்க்குங்கோல் நிச்சலும் எப்போழுதும் மனத்துஈங்குநினைக்கப்பெற
வாய்க்குங்கரும்பும் பெருஞ்செந்நெலும் வயல்சூழ்திருவாறன்விளை
வாய்க்கும்பெரும்புகழ்மூவுலகீசன் வடமதுரைப்பிறந்த
வாய்க்கும்மணிநிறக்கண்ணபிரான்தன் மலரடிப்போதுகளே.

ஆ.—(வாய்க்குங்கோல்) - ஸ்ரீமதுரையிலே வந்து திருவவதாரம்பண்ணியருளுகையாலே அத்யுஜ்ஜ்வலமான ஆத்மகுணங்களையும் ரூபகுணங்களையுமுடையனாயிருந்த அவனெழுந்தருளியிருந்த திருவாறன்விளையிலே, அவன்திருவடி மலர்களை நெஞ்சால் என்று அநுபவிக்கக்கூடும்? என்கிறார்.

ஒ. – நாலாம்பாட்டில், திருவாறன் விளையிலே செல்லப்பெறாதொழிகில், அங்கு நின்றருளின எம்பெருமான் திருவடிகளை இங்கேயிருந்தாகிலும் என்றும் நிரந்தரமாக நினைக்கக்கூடவற்றே! என்கிறார். [வாய்க்குமென்று தொடங்கி.] - ஸம்ருத்தமான கரும்பும் பெரியசெந்நெலையுமுடைத்தான வயல்சூழ்ந்த திருவாறன்விளையிலே எழுந்தருளியிருக்கையாலே வாய்த்திருந்துள்ள பெரும்புகழையுடையஸர்வேஶ்வரனாயிருந்துவைத்து வடமதுரையிலே வந்து திருவவதாரம் பண்ணின வாய்த்திருந்துள்ள நீலரத்னத்தின் நிறத்தையுடைய அநுக்ரஹஶீலனான க்ருஷ்ணனுடைய நிரதிஶயபோக்யமான திருவடிகளையே.

ப.— அநந்தரம், அநுபாவ்யவிக்ரஹ விஶிஷ்டனாய்க்கொண்டு திருவாறன் விளையில் வர்த்திக்கிறவன் திருவடிகளை நெஞ்சாலே நிரந்தரமாக அநுபவிக்கும்படி வாய்க்கவற்றோ? என்கிறார்.

கிறது. அவன் இங்கேவந்தால் அத்திருநகரி ப்ராப்யமாயிருக்க, அங்கே போவானென்? என்ன - அவன் இராத்தங்கும் இத்யாதி. எதிரேவந்தவனை விட்டு அங்கேபோவானென்? என்ன - ஸர்வேஶ்வரன் இத்யாதி. "பெரும்புகழ் - பாடும் - நான்மறை" என்று அந்வயம். இங்கே - "தஸ்யஶ்ரீ காரவேத்யா மோக்ஷ:" என்றது அநுஸந்தேயம். இப்போது இவர்களைச்சொல்லுகிறதுக்கு ப்ரயோஜநம் ஏதென்ன - வேதாந்தகா: இத்யாதி. "வாழ்" என்றதுக்கு பாவம் - வேத இத்யாதி. (௩)

வாய்க்கும் - (ஸம்ருத்தமாய்) வாய்த்துவருகிற, கரும்பும் - கரும்பும், பெருசெந்நெலும் - பெருஞ்செந்நெலுமான, வயல் - வயல், சூழ் - சூழ்ந்த, திருவாறன்விளை - திருவாறன்விளையிலே, வாய்க்கும் - ஸந்நிஹிதனாகையாலே, பெரும் - அபிவ்ருத்தமான, புகழ் - புகழையுடையனாய், மூவுலகு - த்ரிவித சேதநாசேதநங்களுக்கும், ஈசன் - ஸ்வாமியாய் வைத்து, (ஆஸ்ரிதரக்ஷணார்த்தமாக), வடமதுரை - ஸ்ரீ மதுரையிலே, பிறந்த - அவதரித்து, வாய்க்கும் - (ஆஸ்ரிதர்க்கு அநுபாவ்யமாம்படி) வாய்த்த, மணி – நீலரத்நம்போலே யிருக்கிற, நிறம் - திருநிறத்தையுடைய, கண்ணன் - க்ருஷ்ணனாகிற, பிரான்தன் - மஹோபகாரகனுடைய, மலர் - விகஸிதமான, அடிப்போதுகள் - திருவடித்தாமரைகளை, ஈங்கு - இங்கேயிருந்து, மனத்து - மநஸ்ஸிலே, நினைக்க - நினைக்க, (அவன் நினைவின்படியே), நிச்சலும் - என்றும், (எப்பொழுதும் ஒரு க்ஷணமுமொழியாமல்), பெற - பெறும்படி, வாய்க்குங்கொல் - வாய்க்கவற்றோ?

இ.—நாலாம்பாட்டில், திருவாறன்விளையில் செல்லப்பெறோமாகில், அங்கு நின்றருளுகிறவனை யவ்வூரிலே சென்று புக்கு அநுபவிக்கும்படியை, இங்கேயிருந்தாகிலும் நிரந்தரமாக நினைக்கக்கூடவற்றே! என்கிறார். [வாய்க்குங்கொல் நிச்சலும்] - நாள்தோறும்இங்ஙனேவாய்க்கவற்றோ? [எப்பொழுதும்] - நித்யாக்நிஹோத்ரம்போலன்றியே, நிரந்தரமாக. [மனத்துஈங்கு நினைக்கப்பெற] - நெஞ்சாலே யிங்கேயிருந்து அநுஸந்திக்கப்பெற. "ஊருகாவலிஜாதாயா". இவ்வநுஸந்தாநம் ரஸித்தபடியினாலே யிதுக்கவ்வருகு ஒருபேறில்லையென்கிறார். [வாய்க்குமித்யாதி] - ஸம்ருத்தமான கரும்பும், அதுக்குக்கூட நிழல்செய்யும் செந்நெலையுமுடைத்தான வயலாலே சூழப்பட்ட தேசம். இட்டதெல்லாம் குறைவற விளையும் தேசம். [வாய்க்கும் பெரும்புகழ்] - இட்டதெல்லாம் ஸம்ருத்தமாக விளைகிற தேசத்திலே யிருந்தருளுகையாலே, ஸம்ருத்தமாய் அஸங்க்யாதமான கல்யாணகுணங்களையுடையனாகை. [மூவுலகீசன் வடமதுரைப்பிறந்த] - ஸர்வேஸ்வரனாய் வைத்து, *ஸாதுபரித்ராணார்த்தமாக ஸ்ரீ மதுரையிலே வந்தவதரித்த. [வாய்க்கும்மணிநிறக்கண்ணபிரான்தன்] - அப்ராக்ருதமானதிவ்யஸம்ஸ்த்தானத்தை இதரஸஜாதீயமாக்குகையாலே பெருவிலையனான நீலரத்நம்போலே யிருக்கிற நிறத்தையுடையனாய் உபகாரசீலனான க்ருஷ்ணனுடைய. [மலரடிப்போதுகளே] - நிரதிஶயபோக்யமான திருவடிகளை. விகஸிதமான திருவடிகளாகிற புஷ்பங்களை - எப்பொழுதும் மனத்துஈங்கு நினைக்கப்பெற - வாய்க்குங்கொல்.

ஈடு.—நாலாம்பாட்டு. இதில், அங்குப்போய் அநுபவிக்கவேண்டா, இங்கேயிருந்து அங்குத்தைப்பரிமாற்றங்களை மநோரதிக்கும் மநோரதம் நமக்குக் கூடுவதுகாண்? என்கிறார்.

[வாய்க்குங்கோல்நிச்சலும்] - நமக்கு இப்பேறு நாள்தோறும்கூடவேணும். [எப்பொழுதும்] - அதுதன்னிலும் நித்யாக்நிஹோத்ரம்போலே ஒருகாலவிஶேஷத்திலே

நாலாம்பாட்டு.—வ ... ஒத்யாதி. "ஈங்கு - மனத்து - நினைக்கப்பெற வாய்க்குங்கொல்" என்ற பதங்களைக் கடா. ... இதில் அங்குப்போய் இத்யாதி. கூடுவதுகாண் - கூடுமோ? என்றபடி.

... திரியவும் "எப்பொழுதும்" என்பானென்? என்ன - அதுதன்னிலும் இத்யாதி. "ஈங்கு" என்றதுக்கு - அங்குப்போய் இத்யாதி. "நினைக்க" என்றதே

யாய்ப் போகவொண்ணாது, எல்லாவவஸ்த்தைகளிலும் உண்டாகவேணும். [மனத்துஉங்கு நினைக்கப்பெற] - அங்குப்போய் அநுபவிக்கவேண்டா, இங்கேயிருந்து நெஞ்சாலே அங்குத்தைப் பரிமாற்றங்களை அநுஸந்திக்கப்பெறவமையும். ''பெற'' என்கையாலே - இம் மநோரதத்துக்கு அவ்வருகு ஒருபேறில்லை என்றிருக்கிறாராயிற்று இவர். ''**துர்க்கதாவபி**'' (துர்க்கதாவபி) - உத்க்ரமணதசையிலேவருவதொரு துர்க்கதியுண்டு, அத்தைப் பரிஹரித்துத்தரவேணுமென்று ப்ரார்த்திக்கிறேனல்லேன் ; * ஐயார் கண்டமடைக்கிலும் நின்கழலெய்யாதேத்தும்படி பண்ணியருளவேணும். ''**த்வத்கதோமேமநோரதஃ**'' (த்வத்கதோமேமநோரதஃ) எனக்கு இதுகூடுமென்று தோற்றியிருந்ததோ உனக்கு ? '**யதி நாஶம் நவிந்தேத**'' (யதிநாஶம் நவிந்தேத) - இப்படியிருக்கிற இம்மநோரதத்துக்கு அழிவு வாராதாகில். ''**தாவதாஸ்மிக்ருதீஸதா**'' (தாவதாஸ்மிக்ருதீஸதா) - நாட்டார், மநோரதமென்றும் அநுபவமென்றும் இரண்டாகவிறே சொல்லிப்போருவது ; எனக்கு இதெல்லாம்வேண்டா, இம்மநோரதமாத்ரத்தாலே க்ருதக்ருத்யன் நான். ''**ஸதா**''(ஸதா)- ஶரீரஸம்பந்தமற்றுப்பரமபதத்திலேபோய் ஏற்றமாக அநுபவிக்குமதிற்காட்டில், நான் பேறாக நினைத்திருப்பது இத்தையே. முற்காலத்திலே இடையாற்றுக்குடிநம்பியென்பா ரொருவருண்டு; அவர் திருநாட்கள்தோறும் பெருமாளைவந்து ஸேவித்துப்போனால், மறித்துத் திருநாள்வருந்தனையும் அதுதன்னையே போதுபோக்காக ஸ்மரித்துக்கொண்டிருப்பராயிற்று ; ஒருநாள் ஒருதிருநாளில் வ்ருத்தாந்தம்அநுஸந்தியாநிற்கச்செய்தே, ''அமுதுசெய்கைக்குப் போது வைகிற்று'' என்றார்களாய், ''ஆகில் வருகிறதிருநாள் அணித்தாகிறது'' என்றாராம். அவர் நூறுவயஸ்ஸாம புகுகையாலே வ்யஸநப்பிறந்து திருமுளைத்திருநாளில் பெருமாள் புறப்பட்டருளுகைக்கு உதவவந்து புகுரப்பெற்றிலர்: பெருமாளும் தேடியருளிக்காணாமை, ''நம் இடையாற்றுக்குடியான் வந்திலன், நங்கண்ணாலமல்லவோ !'' என்று திருவுள்ளமானாராம். அவர்தாம் ஆறுந்திருநாளிலே ஸேவித்திருக்கச்செய்தே, ''நாம் உனக்குச்செய்ய வேண்டுவதேன் ?'' என்றுகேட்டருள, ''தேவரீர் தந்தருளின ஶரீரத்தைக்கொண்டு போரக் காரியங்கொண்டேன்; இனிப்போக்குவரத்துக்கு யோக்யமாகாதபடி போர ஜரித்தது'' என்ன, ''வாராய், மெய்யே இளைத்தாயாகில் இங்ஙனேயிரு'' என்றருளிச்செய்தார் ; பெருமாள் நடுவிற்றிருவாசலுக்கு அவ்வருகேயெழுந்தருளுங்காட்டில் திருநாட்டுக்கெழுந்தருளினார். [வாய்க்கும் இத்யாதி] - இட்டதுஅடைய ஸம்ருத்தமான தேசமாயிற்று. வாய்த்த

''பெற'' என்றதுக்கு பாவம் - பேறஎன்கையாலே இத்யாதி. அப்படி மநோரதமாத்ரமே புருஷார்த்தமோவென்ன, ப்ரமாணம் - துர்க்கதாவபி இத்யாதி. ''துர்க்கதாவபிஜாதாயாம் த்வத்கதோமேமநோரதஃ । யதிநாஶம்நவிந்தேத தாவதாஸ்மிக்ருதீஸதா'' இதி ஜிதந்தாயாம். ஐயார் - ஶ்லேஷ்மம். ''மே'' என்றதுக்கு பாவம் - எனக்கு இத்யாதி. ''ஸம்ஸக்தஸ்ய ... ஸம்ஸ்ப்ருஹா உத்தமஶ்லோகஸ்ய ஸ்ப்ருஹா । விஷயப்ரணயோ ஹ்ருஷீகாணாம் ப்ரீதிஜநநஃ'' என்றது இவ்விடத்தில் அநுஸந்தேயம். ''தாவதா - க்ருதீ - அஸ்மி'' என்றதுக்கு வ்யாவ்ருத்தி பூர்வகமாக அர்த்தம் - நாட்டார் இத்யாதி. ''ஸதா'' என்றதுக்கு வ்யாவ்ருத்திபூர்வகமாக அர்த்தம் - ஶரீர ஸம்பந்தம் இத்யாதி. அப்படி மநோரதமாத்ரமே புருஷார்த்தமா யநுபவித்தபேருண்டோவென்ன - முற்காலத்திலே இத்யாதி. இப்படியிருப்பர் என்கைக்கு நியாமகமேதென்ன - ஒருநாள்இத்யாதி. வைகிற்று - கழிந்தது. வருகிறதிருநாள்- இரண்டாம்திருநாள். இத்தால், இப்போது அநுஸந்திக்கிறதிருநாள் முடியலாயிற்று; வருகிறேனென்றார் என்றபடி. ப்ரஸங்காத் அவர் வைபவம் - அவர்

கரும்பும், அதுக்கு நிழல்செய்யும்படியாக வளர்ந்த செந்நெலுமான வயலாலே சூழப்பட்ட திருவாறன்விளையில். [வாய்க்கும்பெரும்புகழ்] - இட்டதடைய ஸம்ருத்தமான தேசமாகையாலே, அத்தேசாபிமாநிக்கும் கல்யாணகுணங்களும் ஸம்ருத்தமாகாநிற்குமாயிற்று. [மூவுலகீசன் இத்யாதி] - ஸர்வலோகேஶ்வரனுயிருந்துவைத்து, * ஸாதுபரித்ராணார்த்தமாக ஸ்ரீமதுரையிலேவந்தவதரித்த. [வாய்க்கும் மணிநிறக்கண்ணபிரான்தன்] - அப்ராக்ருத திவ்ய ஸம்ஸ்த்தாநத்தையிறே இதரஸஜாதீயமாக்கிற்று; ஆகையாலே, அழகிய நீல மணிபோன்ற திருநிறத்தையுடைய உபகாரஶீலனுன க்ருஷ்ணனுடைய விகாஸத்தையுடைத்தான திருவடிகளாகிற சேவ்விப்பூக்களை - ஈங்கு - மனத்து - நினைக்கப்பெற — வாய்க்குங்கோல் நிச்சலும் எப்போழுதும்? (ச)

ஐந்தாம் பாட்டு.

மலரடிப்போதுகளென்னெஞ்சத்தெப்போழுதும் இருத்திவணங்க
பலரடியார்முன்பருளிய பாம்பணையப்பனமர்ந்துறையும்
மலரின்மணிநெடுமாடங்கள்நீடு மதிள்திருவாறன்விளை
உலகமலிபுகழ்பாட நம்மேல்வினையொன்று நில்லாகெடுமே.

டீ.— (மலரடிப்போதுகள்) - தன் திருவடிமலர்களை என்னெஞ்சத்தெப்போழுதும் இருத்தி வணங்கித் திருவாய்மொழிபாடி அநுபவிக்கும்படி, திருவநந்தாழ்வான் முதலாகவுள்ள பலரடியார் முன்பருளிய பரமகாருணிகன் அமர்ந்துறையும் திருவாறன்விளையினுடைய உலகமலிபுகழ்பாட நம்முடைய க்லேஶமெல்லாம் தீரும்; திருவாறன்விளையைப் பாடுங்கோளென்று ஸ்ரீவைஷ்ணவர்களைக் குறித்து அருளிச்செய்கிறார்.

ஒ.—அஞ்சாம்பாட்டில், திருவாறன் விளையினுடைய ஸம்ருத்தமான புகழைப்பாட, நம்முடைய ஸகலதத்த்வங்களும் நீங்குமென்கிறார்.

[மலரடிப்போதுகளென்று தொடங்கி] - அயர்வறுமமரர்களிருக்க அவர்கள் முன்னே தன்னுடைய நிரதிஶயபோக்யமான திருவடிகளையே எப்போதும் என்னுடைய நெஞ்சிலே இருத்தி வணங்குப்படியாக என்னை க்ருபைபண்ணியருளினவன் ஸபரிகாரனுக வந்து அநந்யப்ரயோஜநனுய் வர்த்தியாநின்ற. இத்தால் - தம்மைத்திருவாய்மொழி பாடுவித்துக்கொண்ட வுபகாரத்தை யருளிச் செய்கிறார். [பாம்பணையப்பனமர்ந்துறையும்]-திருவநந்தாழ்வானிற் காட்டிலும் விரும்பிவர்த்தியாநின்ற வென்றுமாம். [மலரில் மணியென்றுமேலுக்கு] - புஷ்பங்களோடே கூடின உரியமணிமாடங்கள்.

நூறுவயஸ்ஸு- இத்யாதி. ''மூவுலகு'' என்றது - எல்லாலோகங்களுக்கும் உபலக்ஷணமாக்கி - ஸர்வலோகேஶ்வரன் என்கிறார். இதரஸஜாதீயனுய் அவதரித்தவிடத்தே வாய்க்கும் மணிநிறமுண்டோவென்ன - அப்ராக்ருத இத்யாதி. வாய்க்கும் மணிநிறம் - அழகிய நீலமணி நிறமென்றபடி. ''வாய்க்கும்'' என்று - இங்கு, அழகைச்சொல்லுகிறது. அந்வயங்காட்டுகிறார் - ஈங்கு இத்யாதி. 'வாய்க்கும் கரும்பும்'என்றதொடங்கி, 'மலரடிப்போதுகளை - நிச்சலுமெப்பொழுதும் - ஈங்கு - மனத்து - நினைக்கப்பெற - 'வாய்க்குங்கொல்' இத்யந்வயம்.

(ச)

ப.—அநந்தரம், ஆஸ்ரிதாநுஸவார்த்தமாக அநந்தஸாயியானவன் வர்த்திக்கிற திருவாறன்விளையினுடைய ஸம்ருத்தமான புகழைப்பாட, நம் பாபம்ஒன்றுமொழியாமேபோமென்கிறார்.

மலர் - (நிரதிஸயபோக்யமாம்படி) விகஸிதமான, அடிப்போதுகள் - திருவடித்தாமரைகளை, என் - என், நெஞ்சத்து - நெஞ்சத்திலே, எப்பொழுதும் - ஸர்வகாலமும், இருத்தி - இருத்தி, வணங்க - (அந்தவுகப்பாலே) வணங்கும்படியாக, பலர் - (ஸூரிகளும் பராஸராதிகளும் பக்தர்களுமான) பலவகைப்பட்ட, அடியார் - அடியார், முன்பு - ஸந்நிதியிலே, அருளிய - (நிரவதிக) க்ருபையைப் பண்ணியருளின, பாம்பணையப்பன் - (ஆஸ்ரிதஸம்ஸ்லேஷஸ்வபாவனுயுள்ள) அநந்தஸாயியானவன், அமர்ந்து - (புறம்பு ஜகத்வ்யாபார) அந்யபரதையற்று, உறையும் - (வாஸந்தானே ப்ரயோஜநமாக) வர்த்திக்குமிடமாய், மலரில்-புஷ்போபஹாரங்களை யுடைத்தான, மணி-மணிமயமான, நெடு - ஓங்கின, மாடங்கள் - மாடங்களையும், நீடு - நெடிய, மதிள் - மதிளையுமுடைத்தான, திருவாறன்விளை - திருவாறன்விளையினுடையதாய், உலகம் - லோகத்திலே, மலி - மிக்க, புகழ் - புகழாய், பாட - (உகப்போடே) பாட, நம்-நம்மை, மேல்-மேலிட்டு வர்த்திக்கிற, வினை - பாபங்கள் (தானே), ஒன்றும் - (நம்பக்கல்) ஒன்றும், நில்லா - இல்லாதே, கெடும் - புக்கவிடமறியாமற்போம்.

இ.—அஞ்சாம்பாட்டில், திருவாறன்விளையினுடைய ஸம்ருத்தமான புகழைப்பாட, நம்முடைய ஸகலதுக்கங்களும் நீங்குமென்கிறார்.

[மலரடியித்யாதி] — விகஸிதமான செவ்விப்பூப்போலே யிருக்கிற திருவடிகளை ஸர்வகாலமும் என்நெஞ்சிலேவைத்து அதினுடைய போக்யதையாலே நிர்மமனாய்த் திருவடிகளிலே விழும்படி. [பலரடியார் முன்பருளிய] - அபர்வநமரர்களிருக்கவென்னுதல்; ஸ்ருதிப்ரஸித்தரான பராஸராதிகளிருக்கவென்னுதல்; இன்கவிபாடும் பரமகவிகளான முதலாழ்வார்களிருக்கவென்னுதல். என்பக்கலிலே விஸேஷகடாக்ஷத்தைப் பண்ணுவதே! முதலிகளெல்லாருமிருக்கத் திருவடிபக்கலிலே விஸேஷகடாக்ஷத்தைப் பண்ணினாற்போலே. அதாகிறது - தம்மைக்கொண்டு கவிபாடுவித்துக்கொண்ட வுபகாரம். [பாம்பணையப்பனமர்ந்துறையும்] - பர்யங்கவித்யையிற்போலே திருவநந்தாழ்வான் மேலே கண்வளர்ந்தருளுகிற வுபகாரகன், அப்படுக்கையிற் காட்டில் விரும்பிவர்த்திக்கிற தேசம். ஸபரிகரனுப் அநந்யப்ரயோஜநனுப் வர்த்திக்கிறதேசமென்றமாம். [மலரில்மணி நெடுமாடங்கள்] - தேவர்கள் வர்ஷித்த புஷ்பவ்ருஷ்டிபோடேகூடி, ஓங்கினமணிமயமான மாடங்கள்; ஓங்கின மதிள் இவற்றையுடைய திருவாறன்விளையினுடைய. [உலகமலி புகழ்பாட] — ஸம்ஸாரத்திலடங்காத ஏற்றத்தைப்பாடவென்னுதல், அங்கெழுந்தருளியிருக்கிறவனுடைய குணங்களைப்பாடவென்னுதல். [நம்மேல் வினையொன்று நில்லா கெடுமே] - நம்பக்கலுண்டான ஸகலதுக்கங்களும் தானேபோம்.

ஈடு.—அஞ்சாம்பாட்டு. திருவாறன்விளையிலே புக்கு அடிமைசெய்கைக்கு விரோதியானவையெல்லாம் அவனுடைய மிக்கபுகழைப்பாடப் பறந்துபோமென்கிறார்.

அஞ்சாம்பாட்டு.—மலரடி இத்யாதி. "மலிபுகழ்பாடநம்மேல் வினையொன்று நில்லா கெடும்" என்றத்தைக்கடாக்ஷித்து அவதாரிகை - திருவாறன்விளையிலே இத்யாதி.

[மலரடிப்போது இத்யாதி]-மலர்ந்திருந்துள்ள திருவடிகளாகிற செவ்விப்பூக்களை என்னுடைய ஹ்ருதயத்திலே எப்போதுமிருத்தி, அவ்வநுஸந்தாநம் போய்க்கனக்க அத்தாலே நிர்மமனாய்க்கொண்டு திருவடிகளிலேவிழும்படியாக. [பலரடியார்முன்பருளிய]-ஸ்ரீவேதவ்யாஸ ஐமவான், ஸ்ரீவால்மீகிஐமவான், ஸ்ரீபராஶரஐமவான் "இன்கவிபாடும் பரமகவிகள்" என்று சொல்லப்படுகிற முதலாழ்வார்களெல்லாருமுண்டாயிருக்க, என்பக்கலிலே விசேஷ கடாக்ஷம்பண்ணுவதே! "ஸஹஸ்ரஶோநநஸஹதாஸநஷுஸஶஸவெஸக்ஷத" (பஹுஶோநேநமஹதாஹநுமந்தமவைக்ஷத) - முதலிகளெல்லோருமிருக்கச்செய்தே திருவடிபக்கலிலே விசேஷகடாக்ஷம்பண்ணினாற்போலே யாயிற்று, பலருமுண்டாயிருக்க இவரை விஷயீகரித்தபடி. "கிழக்குத்தைராஜாக்கள்போல்லாங்காலே இங்கே நலிவு பிறக்குமளவிற் செய்வதென்?" என்று எம்பெருமானார் அத்தை அநுஸந்தித்தருளி "இத்தேசத்தை விடாதே நோக்கிக்கொண்டுகிடந்தோம்; இவ்விடத்துக்கும் அழிவுவரும்படி ஆஸுரவர்க்கம் மேலிடாநின்றது; மேல் செய்யவடுப்பதென்?" என்று பெரியநம்பிக்கு அறிவிக்க; "நான் பெருமாளுடைய திருவெல்லையிலே ஒருப்ரதக்ஷிணம் வரும்படியாக உம்முடைய ஶிஷ்யர்களிலே ஒருவரைப் போரவிடுவது" என்ன, "அதுக்காவாரார்?" என்ன, "என்பின்னேபோராநின்றால் 'ஒருவன்பின்னே போகாநின்றேன்' என்று தன் னெஞ்சிற்படாதே சாயைபோலே என்னைப்பின்செல்வா னொருவனாகவேணும்" என்ன, "அதுக்காவார் ஆர்?" என்ன, "ஆழ்வானைப் போகவிடலாகாதோ?" என்றாராம். [பலரடியார்முன்பருளிய] - பலமுதலிகளுண்டாயிருக்க, ஆழ்வானை ப்ரஸாதித்தாற்போலே. [பாம்பணையப்பனமர்ந்துறையும்]-ப்ர்யங்கவித்யையிற் சொல்லுகிறபடியே திருவநந்தாழ்வானைப் படுக்கையாகவுடைய ஸர்வேஶ்வரன், அப்படுக்கையிற்காட்டிலும் விரும்பி வர்த்திக்கிற தேசமாயிற்று. [மலரின்மணி நெடுமாடங்கள்] - தேவர்கள் வர்ஷித்த புஷ்பத்தோடேகூடி, மணிமயமான மாடங்களின் ஓக்கத்தையுடைத்தாய், ஓங்கின மதிளையுமுடைத்தான திருவாறன்விளை. [உலகமலிபுகழ்பாட] - ஈண்டினவிடத்தில் வெள்ளம்போலே, லோகத்தில் அடங்காதபடியான அவனுடைய கல்யாணகுணங்களை ப்ரீதிப்ரேரிதராய்க்கொண்டு பாட. [நம்மேல்வினையொன்றும் நில்லாகெடுமே]-பாபம்போகைக்காகத் தனித்து ஓர் உத்யோகம் பண்ணவேண்டா, பால்குடிக்க நோய்தீருமாபோலே நம்முடைய பாபங்கள் தாமே நசித்துப்போம். (ரு)

"வணங்க" என்னுமளவுக்கும் அர்த்தம் - மலர்ந்து இத்யாதி. போய்க்கனக்க - மிகவுமதிஶயிக்க. போய் - மிகவும் என்றபடி. "வார்தல் போதல் ஒழுக விவை நெடுமையாகும்" என்னக்கடவதிறே. விஶேஷகடாக்ஷம்பண்ணுகையாவது - திருவாய்மொழி பாடுவித்துக்கொள்ளுகை. பலரடியார்முன்னே விஶேஷகடாக்ஷம்பண்ணினதுக்கு த்ருஷ்டாந்தம் - ஸஹஸ்ரஶோநந இத்யாதி. "ஸ்ரீ த்ரஸ்வஸ்ஸஶோணாயஸஸவஸ:ஸஸவீரஹா। ஸஹஸ்ரஶோநநஸஹதாஸநஷுஸஶஸ வெஸக்ஷத" இதி ஸுந்தரகாண்டே. (௬௬-௩௬) பலரடியார்முன்பருளினதுக்கு த்ருஷ்டாந்தாந்தரம்-கிழக்குத்தை இத்யாதி. கிழக்குத்தை ராஜாக்கள் - க்ரிமிகண்டாதிகள். மலரில்-மலரோடேகூடின. "மலி" என்றதுக்கு பாவம் - ஈண்டின் இத்யாதி. ஈண்டினவிடம்-ஸங்குசிதஸ்த்தலம். உலகம் -லோகத்திலென்றபடி. புகழ்பாடுகிறது பாபநிவ்ருத்திக்கு ஸாதகமாகவோ? என்ன - பாபம் இத்யாதி. 'மலரடிப்போதுகள் என்னெஞ்சத்து' என்று தொடங்கி, பலரடியார்முன்பு அருளினவனாய் - 'மலரில்மணி' தொடங்கி, 'திருவாறன்விளையில் - அமர்ந்துறையும் - பாம்பணையப்பனுடைய - உலகமலிபுகழ்பாட நம்மேல்வினை' இத்யாரப்யாந்வய:. (ரு)

ஆறாம் பாட்டு.

ஒன்றுநில்லாகெடும்முற்றவுந்தீவினை உள்ளித்தொழுமின்தொண்டீர்!
அன்றங்கமர்வென்றுருப்பிணிநங்கைஅணிநெடுந்தோள்புணர்ந்தான்
என்றுமெப்போதுமென்னெஞ்சந்துதிப்ப உள்ளேயிருக்கின்றபிரான்
நின்றவணிதிருவாறன்விளை யென்னும் நீணகரமதுவே.

ஆ.—(ஒன்றுநில்லாகெடும்) - அன்றங்கமர்வென்று உருப்பிணிநங்கை யணி நெடுந்தோள் புணர்ந்தருளிய - திருமணம் புணர்ந்தருளின - திருவழகை என்றுமென்னெஞ்சம் துதிப்ப என்னெஞ்சுள்ளே புகுந்திருக்கிறபிரான் நின்ற அணி திருவாறன்விளை யென்னும் நீள்நகரமதுவே, உள்ளித்தொழுமின் தொண்டீர்! உங்கள் ஸமஸ்த து:கங்களும் போமென்கிறார்.

ஒ.—ஆறாம்பாட்டில், எம்பெருமான்பக்கல் சாபலமுடையீர்! உங்களுடைய ஸமஸ்த து:கங்களும் நீங்கும்படி திருவாறன்விளையை நெஞ்சாலேநினைத்து ஆஸ்ரயியுங்கோள்! என்கிறார்.

[அன்றங்கமரென்று மேலுக்கு] - சிசுபாலன் விவாஹார்த்தமாகக் கண்ணாலங் கோடித்த தசையிலே அவனை யுத்தபூமியிலே யுத்தத்திலேவென்று ஸௌந்தர்யசீலாதி கல்யாணகுண பூர்ணையான ருக்மிணிப் பிராட்டியுடைய அழகியதாய் நெடிதான திருத்தோள்களிலே சென்று ஸம்ஸ்லேஷிப்பதுஞ் செய்து அந்தமணக்கோலத்தோடே என்றும் எப்போதும் என்நெஞ்சம் தன்னைக் கொண்டாடும்படி என் ஹ்ருதயத்திலே இருக்கிற வுபகாரகன்.

ப.—அநந்தரம், அநிஷ்டமான விரோதியைத் தலையழித்து அர்ஹமதையான ருக்மிணியை ஸம்ஸ்லேஷித்த க்ருஷ்ணன் வர்த்திக்கிற திருவாறன்விளையை ஆஸ்ரயிக்க, ஸமஸ்தபாபங்களும் போ மென்கிறார்.

அன்று - (சிசுபாலன் கைப்பிடிப்பதாகப் படைதிரட்டின) அன்று, அங்கு - பின்தொடர்ந்து வந்தவிடத்திலே, (ருக்மனை), அமர் - பூசலிலே, வென்று - வென்று, நங்கை - பரிபூர்ணஸ்வபாவையான, உருப்பிணி - ருக்மிணியினுடைய, அணி - அலங்காராலங்க்ருதமாய், நெடு - அதிஸயிதஸௌக்யமான, தோள் - திருத்தோள்களை, புணர்ந்தான் — (“ஸதஸ்ராஸம்வரிஷ்வஸஜெ” என்கிற கணக்கிலே) ஸம்ஸ்லேஷித்தவனாய், (இவ்வபதாநத்தை), என்றும் - என்றும், எப்போதும் - ஒருக்ஷணமுமொழியாமல், என் நெஞ்சம் - என் நெஞ்சமானது, துதிப்ப - (அநுபவித்து) ஸ்தோத்ரம்பண்ணும்படி, உள்ளே - என்னகவாயிலே, இருக்கின்ற - இருக்கிற, பிரான் - மஹோபகாரகனானவன், நின்ற - (எல்லாருங் கண்டநுபவிக்கும்படி) நின்றருளின, அணி - ஸ்லாகநீயமான, திருவாறன்விளை - திருவாறன்விளை, என்னும் - என்று ப்ரசித்தமான, நீள்நகரமது - அந்த மஹாநகரத்தை, தொண்டீர் - அநுபவசாபலமுடைய நீங்கள், உள்ளி - அநுஸந்தித்து, தொழுமின் - தொழும்படி பாருங்கோள்; தீ - க்ரூரமான, வினை - பாபங்கள், ஒன்றும் - ஒன்றும், நில்லா - (ஸேஷிபாதபடி) நிலைகுலைந்து, முற்றவும் - ஸர்வமும், கெடும் - நசித்துப்போம்.

இ.—ஆறும்பாட்டில், பகவத்விஷயத்தில் சாபலமுடையார், திருவாறன் விளையை ஆஶ்ரயியுங்கோள், உங்களுடைய ஸர்வதுக்கங்களும் போமென்கிறார்.

[ஒன்றுநில்லாகெடும் முற்றவுந்தீவினை] - பாபங்களை நாமேபோக்கப் புக்காலிறே ஶேஷிப்பது; பகவத்ப்ரஸாதத்தாலே போக்குமிடத்தில் ஸவாஸநமாகப் போகத் தட்டில்லை; "ஸர்வபாபாநி ப்ரணஶ்யந்தி" "மேருமந்தரமாத்ரோபி". அவன் தானே சொல்லிலும் "ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி" என்றிறே சொல்லுவது. [உள்ளித்தொழுமின் தொண்டீர்] - பகவத்விஷயத்தில் சபலரானார், மனோவாக்காயங்களாலே அநுஸந்திக்கப் பாருங்கோள். [அன்றித்யாதி] – ஆஶ்ரிதருடைய ஆபத்துக்களிலே உதவுமவன். [அன்று] - சிசுபாலன் ஸ்வயம்வரத்துக்கு முடுகின தசையிலே. [அங்கு]- அத்தேஶத்திலே, தூணிலே தோற்றினாற்போலே தோற்றி. [அமர்வென்று]- சிசுபாலனை யுத்தத்திலே வென்று. [உருப்பிணிநங்கை] - மார்விலேஅம்பேற்றாலும் பொறுத ஆத்மகுணங்களால் பரிபூர்ணையானவள். [அணிநெடுந்தோள் புணர்ந்தான்] - தனக்குத்தானே யாபரணமாய், போக்தாவினளவல்லாத போக்யதையை யுடைத்தான தோளோடே யணைந்தான். [என்றுமெப்போதும்என்நெஞ்சம்துதிப்ப] - நாள்தோறும் இடைவிடாதே என்மநஸ்ஸு ருக்மிணீ கல்யாணகுணத்தையே கொண்டாடும்படி. [உள்ளே இருக்கின்றபிரான்] - அந்த மணக்கோலத்தோடே என்னுடைய ஹ்ருதயத்திலேயிருக்கிற மஹோபகாரகன். [நின்றவணிதிருவாறன்விளையென்னும்நீணகரமதுவே]- ஹ்ருதயத்திலே நிற்கிறவன் கண்ணுக்கு விஷயமாம்படிவந்து நிற்கிற தர்ஶநீயமான திருவாறன்விளையாகிற மஹாநகரமதுவே - உள்ளித்தொழுமின், தொண்டீர்! ஒன்றுநில்லா - முற்றவும்தீவினை கெடும்.

ஈடு.—ஆறும்பாட்டு. எம்பெருமான்பக்கல் சாபலமுடையீர்! உங்களுடைய ஸமஸ்தது:கங்களும் போம்படி திருவாறன்விளையை நெஞ்சாலே நினையுங்கோளென்கிறார்.

[ஒன்றுநில்லாகெடும்முற்றவுந்தீவினை] - இவன்தான் போக்கப்பார்க்குமன்றிறே, புதுப்புடைவை அழுக்குக் கழற்றுமாபோலே சிறிதுகிடக்கச் சிறிதுபோவது; அங்ஙனன்றிக்கே, ஸர்வஶக்தியானவன் போக்குமன்று வாஸநையோடேபோமிறே. "மேருமந்தரமாத்ரோபி" (மேருமந்தரமாத்ரோபி) – மேருவையும், அதின்மேலே மந்தரத்தையும் வைத்தாற்போலேயிருக்கிற கனத்த பாபங்கள்; சரதமாக, பிஷக்கைக்கிட்டின துர்வ்யாதி நசிக்குமாபோலே, * மருத்துவனாய்நின்ற மாமணிவண்ணனைக்கிட்டின பாபங்

ஆறும்பாட்டு.—ஒன்றுநில்லா இத்யாதி. "தொண்டீர் - தீவினை - முற்றவும் - ஒன்றுநில்லாகெடும்; திருவாறன்விளையென்னும் நீணகரமது - உள்ளித்தொழுமின்" என்கிறபதங்களைக் கடாக்ஷித்து அவதாரிகை - எம்பெருமான் இத்யாதி.

தீவினை முற்றவும் போகக்கூடுமோவென்ன - இவன்தான் இத்யாதி வாக்யத்வயம். வாஸநையோடே போமென்கிறதுக்கு ப்ரமாணம்-மேரு இத்யாதி. "மேருமந்தரமாத்ரோபி ராஶி: பாபஸ்ய கர்மண: । கேஶவம் வைத்யமாஸாத்ய துர்வ்யாதிரிவ நஶ்யதி" இதி ஸ்ரீவிஷ்ணுதர்மே (எஅ) "மேருமந்தரமாத்ரோபி" என்றதுக்கு அர்த்தம்- மேருவையும் இத்யாதி. "கேஶவம் வைத்யமாஸாத்ய" என்றதுக்கு அர்த்தம் - சரதமாக இத்யாதி. சரதமாக-நிஶ்சயமாக. மருத்துவன்-ஆசார்யன். திருவாறன்விளையை உள்ளித்தொழுதால் பாபங்கள் போமென்ற

களானவை நசிக்கும். "ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி" (ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி) என்றுனிறே. "ஸர்வே பாப்மாந: ப்ரதூயந்தே" (ஸர்வேபாப் மாந:ப்ரதூயந்தே) என்னுநின்றதிறே. இது தேசத்துக்கும் உபலக்ஷணம். [உள்ளித் தொழுமின்தொண்டீர்] - அதனையநுஸந்தித்து ஆச்ரயிக்கப்பாருங்கோள், பகவத்விஷயத்தில் சாபலமுடையீர்! [அன்றுஇத்யாதி] - அபேக்ஷித்தவர்களுடைய அபேக்ஷித ஸமயத்திலே வந்து தோன்றுமவனுயிற்று. [அன்று] - சிசுபாலன் ஸ்வயம்வரத்திலே முடிகியிருக்கிறவன்று. [அங்கு] - இவன் த்வரியாநின்ருன், உடையவன்வந்து கைக் கொள்ளானே என்றிருக்கிறவளவிலே, தூணிலே தோற்றினுற்போலே தோற்றினு யிற்று. [அமர்வென்று] - அவளுக்காக மார்விலே அம்பேற்று. [உருப்பிணிநங்கை] - எல்லாம் படவேண்டும்படி ஆத்மகுணங்களாலே பூர்ணையா யிருக்கும்படி. [அணி இத்யாதி] - தனக்குத் தானே யாபரணமாய், போக்யதை அளவிறந்துள்ள தோளோடே கலந்தவன். [என்றும் இத்யாதி] - ருக்மிணிப்பிராட்டியுடைய கல்யாணகுணமே காணும் இவர்நெஞ்சில் பட்டுக்கிடப்பது. எல்லாக்காலத்திலும் எல்லாவவஸ்த்தை களிலும் என்னுடைய ஹ்ருதயமானது ஸ்துதிக்கும்படி என்னெஞ்சிலேயிருக்கிற உபகாரகன். [நின்ற இத்யாதி] - ப்ரகாசியாநிற்கச்செய்தேயும் கண்ணுக்கு இலக்காகாதபடி யிருக்கையன்றிக்கே, "இவன் நமக்குஉளன்" என்று அச்சந்தீரும்படி கண்ணாலேகண்டு அநுபவிக்கும்படிநிற்கிற அழகிய திருவாறன்விளையாகிற மஹாநகரத்தை - உள்ளித் தொழுமின் தொண்டீர்! தாம் அடிமைசெய்ய மநோரதிக்கிறு ராகில், "உள்ளித்தொழு மின்" என்கிற பரோபதேசத்துக்குக் கருத்தேன் என்னில்?— இவர்க்கு ஸ்வாநுபவந் தான் பரோபதேசத்தை யொழிந்திராது, நெஞ்சை ஸம்போதித்ததோடு தொண்டரேன்றத் தோடு வாசியில்லை.

(சு)

ஏழாம் பாட்டு.

பதப்ரயோகத்துக்கு ஹாவம் — உயிர்நீயாய் இத்யாதி. உயிர் அவனுனல் ஸாதநாநுஷ்ட்டாநம் பண்ணப்போகாதோ? என்ன - ஶரீர இத்யாதி. விவரணமாதல். "அகலிடம்" இத்யாதிக்கு அவதாரிகை - ஸம்பந்தமேயோ இத்யாதி. ஜகத்ஸ்ருஷ்ட்யாதிகளைச் சொன்ன அநந்தரம், பிராட்டியை லபிக்கைக்குப்பண்ணின வ்யாபாரங்களைச் சொன்னதுக்கு ஹாவம் - ஸர்வவிஷயமாக இத்யாதி. வாசியற்றிருக்கும்படி என்றது - பிராட்டிகார்யம்போலே எல்லார்கார்யமும்செய்யும் என்றபடி. "பெரியநீர்படைத்தங்குறைந்து - அகலிடமுழுதும்படைத்து" என்று அந்வயிப்பது. சீர்மை ஏதென்ன - நித்யாஶ்ரிதை இத்யாதி. "உலகங்கட்கெல்லாம் - உயிர்" என்றதுக்கு ஹாவம் - கேவல இத்யாதி. "ஓர்" என்றதுக்கு ஹாவம் - நான்உன்னை இத்யாதி. கீழே "ஆருயிரேயோ" என்றது - ஸ்வவிஷயம்; "ஒருயிரேயோ" என்றது - ஸர்வவிஷயம்; ஆகையாலே புநருக்தியில்லையென்னுதல். அதவா, "ஆருயிரேயோ" என்றதின் நிகமநம் - "ஒருயிரேயோ" என்றதென்னுதல். "உன்னைநான்" இத்யாதிக்கு அர்த்தம் - உயிராயிருக்கிற இத்யாதி. விவரணம் - ஆத்மா இத்யாதி. ஶரீர ஶரீரிஹாவ லக்ஷணங்கள் சொல்லாநின்றுகொண்டு, பூர்வோக்தார்த்தத்தை ஸ்த்திரீகரிக்கிறார் -

1. பூர்வமீமாம்ஸாயாம். 2- ஹாம் உ-உ-உ.

ணத்தைப்பண்ண என்பதோன்றுண்டோ? ஆதாரமாய் நியந்தாவாய் ஶேஷியாயிருக்கிற நீயொழிய, ஆதேயமாய் நியாம்யமாய் ஶேஷமான இது ஸ்வரக்ஷணத்தைப்பண்ணவோ? ஆதாராதேய நியந்த்ருநியாம்யபாவங்களாலே ஶரீரலக்ஷணம் இதுக்குஉண்டானபின்பு, அல்பசைதந்யமும் "நீயே கடவாய்" என்கிற ப்ரதிபத்திக்குக் கண்ட வித்தனையன்றி ஸாதநாநுஷ்டாநம் பண்ணக்கண்டதோ ? (ரு)

ஆறாம் பாட்டு.

எங்குவந்துறுகோ? என்னையாள்வானே! ஏழுலகங்களும்நீயே
அங்கவர்க்கமைத்ததெய்வமும் நீயே அவற்றவைகருமமும்நீயே
பொங்கியபுறம்பால்பொருளுளவேலும் அவையுமோநீயின்னேயாறல்
மங்கியஅருவாம்நேர்ப்பமும்நீயே வான்புலனிறந்ததும்நீயே.

ஆ —(எங்குவந்து.)-ஸர்வலோகங்களும், தத்ஸமாராத்யமான அக்நீந்த்ராதி தைவமும், அவற்றினுடைய க்ரியைகளும், லோகத்துக்குப் புறம்புள்ள பதார்த்தங்களும், ப்ரக்ருதி ஸம்யுக்தமாய் கர்மஸங்குசித ஜ்ஞாநமாய் ஸூக்ஷ்மமாயிருந்த புருஷஸமஷ்டியும், கர்மஸம்பந்தரஹிதமாய், ப்ரக்ருதி விநிர்முக்தமாய், பரிசுத்தமாயிருந்த ஆத்மஸ்வரூபமும் நீயே; ஆதலால், என்னுடைய யத்நத்தால் உன்னை நான் எங்ஙனே ப்ராபிக்கும்படி? இதற்கு முன்பு நிர்ஹேதுகமாக என்னை விஷயீகரித்தாற்போலே, இன்னமும்உன் க்ருபையாலே விஷயீகரித்தருளாய் என்கிறார்.

பூர்வோக்தமான ஆத்மஶரீரபாவம் இந்த ஸாமாநாதிகரண்யமென்னுமிடஞ் சொல்லிற்றாயிற்று.

ஒ.—ஆறாம்பாட்டில், கீழிற்பாட்டில் சொன்னபொருளை விஸ்தரிக்கிறார். [என்னையென்று தொடங்கி] - என்னையாளுகிறவனே! ஸர்வலோகமும் நீயிட்டவழக்காம்படி யிருந்தவனே !

[அங்கவர்க்கென்று தொடங்கி] - அந்தலோகங்களிலுள்ளார்க்கு சமைத்த தெய்வமும் அவற்றினுடைய ஸ்ருஷ்ட்யாதி வ்யாபாரங்களும் அவற்றுக்குப்புறம்பு விஸ்த்ருதமான மஹதாதிகளும் நீயிட்டவழக்கு. [இன்னேயாறல்]—இங்ஙனேயாறல். [மங்கியவென்று தொடங்கி] - கார்யாகாரமழிந்து காரணாவஸ்தமான ஸூக்ஷ்மப்ரக்ருதியும் அத்தையும் கூட வ்யாபிக்கவல்ல புருஷனும் நீயிட்டவழக்கு. பத்தஜீவஸமஷ்டியும் முக்தாத்மாக்களு மென்றுமாம்.

ஆதாரமாய் இத்யாதி. இவ்விபூதி ஶரீரமானபடி எப்படியென்ன, ஶரீரலக்ஷணமுண்டாகையாலே என்கிறார் - ஆதாராதேய இத்யாதி. ஶரீரம்போலே அசேதநமன்றே, சிறிது சைதந்யமுண்டே யென்ன - அல்பசைதந்யமும் இத்யாதி. 'ஆருயிரேயோ! பெரியநீர்படைத்தங்குறைந்து அகலிடமுழுதும்படைத்திடந்துண்டுமிழ்ந்தளந்த பேருயிரேயோ! அதிகடைந்தடைத்துடைத்தசீரியரேயோ! மனிசர்க்குத் தேவர்போலத் தேவர்க்கும் தேவாவோ! உலகங்கட்கெல்லாம் ஓருயிரேயோ! உன்னை நான் எங்குவந்துறுகோ?' இத்யந்வய:. (ரு)

ப.—அநந்தரம், கார்யகாரணாவஸ்த்த ஸகலபதார்த்தங்களும் நீயிட்டவழக்காம்படி ஸர்வாத்மபூதனாகையாலே எங்கேவந்து கிட்டுவது? என்கிறார்.

என்னை-என்னை, ஆள்வானே-(இவ்வளவும்வர) நிர்வஹித்தவனே! ஏழுலகங்களும் - (ஸாதநாநுஷ்ட்டாநம்பண்ணுவார்க்கு அநுஷ்ட்டாநஸ்த்தலமாயும் ப்ராப்யமாயுமுள்ள) ஸமஸ்தலோகங்களும், நீயே-நீயிட்டவழக்கு: அங்கு-அந்தலோகங்களில், அவர்க்கு-(ஃபலார்த்திகளான) ஆராதகர்க்கு, அமைத்த- (ஃபலப்ரதமாகவும் ஆராத்யமாகவும்) சமைத்துவைத்த, தெய்வமும்-தைவங்களும், நீயே-நீயிட்டவழக்கு: அவற்றவை-அத்தைவங்கள் விஷயமாக, கருமமும்-(ஆராதநரூபமான அவ்வோ) கர்மங்களும், நீயே-நீயிட்டவழக்கு: பொங்கிய-(இந்தலோகங்களிற்காட்டில்) விஞ்சி, புறம்பால்-புறம்பான, பொருள்-(மஹதாதி ஸமஸ்த) பதார்த்தங்கள், உளவேலும்- (ப்ரமாணப்ரஸித்தமாய்த்தோன்றின) வுண்டாகிலும், அவையும்-அவையும், நீ-நீயிட்டவழக்கு: மங்கிய-(ஸம்ஹ்ருத்யவஸ்தமாய்) நாமரூபரஹிதமான, அருவாம் நேர்ப்பமும் - ஸூக்ஷ்மசிதசித்தும், நீயே - நீயிட்டவழக்காயிருக்கும்: வான்-பரமாகாசத்தில், புலனிறந்ததும்-அதீந்த்ரியமான முக்தாத்மவர்க்கமும், நீயே-நீயிட்டவழக்காயிருக்கும்: இன்னே-இப்படி, ஆனால்-ஸர்வாத்மபூதனானால், நான் - (த்வதேகநிர்வாஹ்யனான) நான், (யத்நம்பண்ணி), உன்னை - உன்னை, எங்கு - எங்கே, வந்து உறுகோ - வந்து கிட்டுவேன்?

இ.—ஆறாம்பாட்டில், உக்தார்த்தத்தை விஸ்தரிக்கிறார். [எங்கு வந்துறுகோ] - உன்னளவுஎது? நான்நிற்கிற நிலைஎது? நீ என்னைக் கிட்டுமதொழிய நான் ஸாதநாநுஷ்ட்டாநம்பண்ணி வந்துகிட்டவோ?

[என்னையாள்வானே] - இவ்வளவு புகுரநிறுத்தினவனே! இவ்வளவு நான்வரநின்றேனோகிலன்றோ மேலும் எனக்கு பூரமாவது? [ஏழுலகங்களும் நீயே] - ஸர்வலோகங்களும் நீயிட்டவழக்காம்படி யிருக்கிறவனே! அபேக்ஷைவர்த்திக்கிற என்னையொழிய விமுகராயிருப்பார்தானோ ஸ்வாதீநராயிருக்கிறார்கள்? அந்தலோகங்களிலுள்ளார்க்குச்சமைந்த தெய்வமும் நீயிட்டவழக்கு. அவர்களைக் குடிமைகொள்ளுகிற தேவர்களோ ஸ்வாதீநராயிருக்கிறார்கள்? அவற்றினுடைய ஸ்ருஷ்ட்யாதி வ்யாபாரங்களும் நீயிட்டவழக்கன்றோ? [பொங்கியவித்யாதி] - ஒன்றுக்கொன்று விஸ்த்ருதமாய், அண்டத்துக்குப்புறம்பாய், அதுக்குக்காரணமான மஹதாதிகளென்று சிலவுண்டாகில், அவையும் உன் அதீநம். [மங்கியவித்யாதி] - கார்யாகாரமழிந்து காரணாவஸ்தமாய், ஸூக்ஷ்மமான அவ்யக்தமும் நீயிட்டவழக்கு. [வான்புலனிறந்ததும் நீயே] - அவ்யக்தத்தையும் வ்யாபிக்கவற்றாய், அதீந்த்ரியமான காரணாவஸ்த பத்தஸமஷ்டியும் நீயிட்டவழக்கு. [நீயின்னேயானால்] - அர்த்தஸ்த்திதி இதுவானபின்பு எங்குவந்துறுகோ? ஆரேனுமாக, ஒருவன் தன்காரியம் தான் நிர்வஹித்துக்கொள்ளுமன்றன்றோ என்காரியம் எனக்குபூரமாவது?என்றபடி. "மங்கியவருவாம் நேர்ப்பமென்ற-பத்தஸமஷ்டி" என்றும், "வான் புலனிறந்ததென்று - முக்தஸ்வரூபத்தையும் சொல்லுகிறது"என்றும் பிள்ளான். அப்போது, அஸத்ஸமமாய் ஸூக்ஷ்மமான ஆத்மஸமஷ்டியென்றும், வான்புலனிறந்ததென்று வானிலேயாய் - பரமபதத்திலேயாய், அதீந்த்ரியமான முக்தஸ்வரூபமென்றும் நிர்வாஹம்.

ஈடு.—ஆறும்பாட்டு. உக்தார்த்தத்தை விஸ்தரிக்கிறார்:- [எங்குவந்துறுகோ]- மேருஶிகரத்திலே நிற்கிறானொருவனை ஒரு†பங்கு சென்றுகிட்டவோ ! [என்னையாள் வானே] - இவ்வளவும் வரநின்றேன் நானாகிலன்றோ, மேலும் நான் வந்து கிட்டப்பார்ப் பது? [ஏழுலகங்களும்நீயே] - ஸகலலோகங்களும் நீ யிட்டவழக்காம்படி இருக்கிற வனே ! அபேக்ஷைஷவர்த்திக்கிற என்னையொழிய விமுகராயிருப்பார் தாமோ ஸ்வாதீநரா யிருக்கிறார்: [அங்கவர்க்கு அமைத்த தெய்வமும்நீயே] - அவர்களைக் குடிமைகொள்ளு கிற தேவதைகளும் நீயிட்டவழக்கு. [அவற்றவைகருமமும் நீயே] - அவ்வோ தேவதை களுடைய ஸ்ருஷ்ட்யாதி வ்யாபாரங்களோதான் அவர்கள்பக்கல்கிடக்கிறது? ஆக,இவ் வருகுண்டான கார்யவர்க்கம் த்வததீநம் என்னுமிடஞ் சொல்லிற்று. [பொங்கிய இத் யாதி] - ஒன்றுக்கொன்று விஸ்த்ருதமாய், அண்டத்துக்குப் புறம்பாய், அதுக்குக் காரண மான மஹதாதிகளென்று சிலவுண்டாகில், அவையும் உன்அதீநம். [மங்கிய இத்யாதி]- கார்யாகாரமடங்க அழிந்து ஸூக்ஷ்மாவஸ்த்தையை஭ஜித்திருக்கிற அவ்யக்தமும் நீயிட்ட வழக்கு. [வான்புலனிறந்ததும் நீயே] - இவற்றின்படியன்றிக்கே, வானாய் - அவ்யக் தத்தையும் வ்யாபிக்கவற்றாய், சக்ஷுராதிகரணங்களுக்கு அவிஷயமாயிருந்துள்ள காரண மான ஜீவஸமஷ்டியும் நீயிட்டவழக்கு: பத்தாத்மஸ்வரூபமும் நீயிட்டவழக்கென்கை. [இன்னேயானால் - எங்குவந்துறுகோ] - அர்த்ததத்த்வம் இதுவானபின்பு, எங்கே வந்து கிட்டக்கடவேன் ? "மங்கிய அருவாம் நேர்ப்பமென்று - பத்தஸமஷ்டி" என்றும், "வான்புலனிறந்ததென்று - முக்தஸ்வரூபத்தைச் சொல்லுகிறது" என்றும் பிள்ளான். அப்போது, அஸத்ஸமமாய் ஸூக்ஷ்மமான ஆத்மஸமஷ்டியென்றும், பரமபதத்திலேயாய் அதீந்த்ரியமான முக்தாத்மஸ்வரூப மென்றும் நிர்வாஹம். இத்தால் சொல்லிற்றாயிற்று என் ? என்னில், - கார்யாவஸ்த்தையோடு காரணாவஸ்த்தையோடு முக்தனான அவஸ்த் தையோடு வாசியற உன்னை பார்த்திருக்கவேண்டினபின்பு, நான் என்காரியத்துக்குக் கடவேனாகையென்று ஒரு பொருளுண்டோ ? (௬)

ஆறும்பாட்டு.—எங்குவந்துஇத்யாதி."எங்குவந்துறுகோ!" என்கிற ஸ்வரத்துக்குபாவம்- மேரு இத்யாதி."எங்கு" என்று - அவனவர்த்திக்கிற ஸ்த்தாநத்தின் ஔந்நத்யமும், "வந்துறுகோ' என்று தம்முடைய அஶக்தியும் தோற்றுகிறது. இவ்வளவும்வர - உன்பக்கல் ருசிபிறக்குமளவும் வர என்றபடி. "அங்கவர்க்கு" இத்யாதிக்கு அவதாரிகை - அபேக்ஷை இத்யாதி. "பொங்கிய -" ஒன்றுக்கொன்று உபகுணிதமாய் என்றபடி. "பொருள்" என்று - மஹதஹங்காராகாஶ வாயு அக்நிஜல ஷடாவரணத்தைச் சொல்லுகிறது. "உளவேலும்" என்கிற யஶப்தம் - வார்த்தைப் பாடு. "நேர்ப்பம்-" அவ்யக்தமென்றபடி. "வானாய்" என்றதின் விவரணம் - அவ்யக்தத்தையும் வ்யாபிக்கவற்றாய் என்றது: அதாவது - ஜ்ஞாநத்வாரா விபுவாய், அத்தாலே வ்யாபிக்கவற்றாய் என்றபடி. ப்ரக்ருதியிலே லீநமாய்க் காரணமான ஜீவஸமஷ்டியு மென்றபடி. பிள்ளான் நிர்வாஹத் துக்கு, ப்ரக்ருத்யாத்யாவரண ஸப்தகத்தையும் - பொருளென்கிறது. ஶப்தார்த்தம் - அப்போது இத்யாதி. நேர்ப்பம் - ஆத்மா.'என்னையாள்வானே' என்றுதொடங்கி, "இன்னேயானல்-எங்குவந்து றுகோ" இத்யந்வயம். (௬)

† பங்கு-நொண்டியாயிருப்பவன்.

ஏழாம் பாட்டு.

இறந்ததும்நீயேயெதிர்ந்ததும்நீயே நிகழ்வதோ நீயின்னேயானால் [யேன்
சிறந்தநின்தன்மையதுவிதுவுதுவென்றுஅறிவொன்றுஞ்சங்கிப்பன்வினை
கறந்தபால்நெய்யே! நெய்யினின்சுவையே! கடலினுளமுதமே! அமுதிற்
பிறந்தவின்சுவையே! சுவையதுபயனே! பின்னைதோள்மணந்தபேராயா!

ஆ.—[இறந்ததும்நீயே] – பூதபவிஷ்யத்வர்த்தமாந ஸகலஜந்துஜாதத்துக்கும் ஆத்மாவாய் ரக்ஷகனுயிருந்த உன்னுடைய இந்த நிரவதிக காருண்யத்தையும் பொய்யோவென்று ஶங்கியாநின்றேன். இப்படி அதிஶங்கைபண்ணுவானேன்? என்னில்,—நிரவதிக போக்யபூதனுயிருந்த உன்னைக் காணப்பெறுதொழிந்தால் ஶங்கை பிறவாதோ? என்கிறுர்.

ஒ —ஏழாம்பாட்டில், ஜகத்தடைய உனக்குஶேஷமாய், அதுக்குநீயே நிர்வாஹகனுயிருத்தி என்னும் இவ்வறிவொன்றுங் கொண்டு தரித்திருக்கிறநான், கர்மத்தாலே யிதுவும் பொய்யோவென்று ஶங்கியாநின்றேன் என்கிறுர்.

[இறந்ததென்றுதொடங்கி]- காலத்ரயவர்த்திபதார்த்தங்களும்நீயிட்டவழக்கு. இங்ஙனேயாகையாலே ஶேஷியாயிருக்கிறஉனக்கு ஶேஷம் ஸகலபதார்த்தங்களும். [கறந்தபால் நெய்யென்று மேலுக்கு] - பால்தொடக்கமாக ஒன்றுக்கொன்று விலக்ஷணமான பதார்த்தங்களை அவனுடைய போக்யதைக்கு ஸத்ருஶமாகச்சொல்லி, அவன்படிக்கு அவையும் போராமையாலே அதுதன்னையே சொல்லுகிறுர். [கறந்தபால்] - கறந்தபோதை ரஸத்தை நினைக்கிறது. [சுவையதுபயனே] - ரஸாநுபவத்தால் வந்த ஸுகம். இங்குப்பேசின போக்யதாப்ரகர்ஷமுண்டாயிருக்க, இவர்க்கு அப்போதே கிடையாமை அதிஶங்காஹேது என்று கருத்து.

ப.—அநந்தரம், ஸர்வப்ரகார போக்யபூதனை நீ, காலோபாதிகமாயும் தேசோபாதிகமாயுமுள்ள ஸமஸ்தபதார்த்தங்களையும் ப்ரகாரமாக உடையையாயிருப்புதி என்கிற இத்தத்த்வஜ்ஞாநத்தையும் ஶங்கிக்கும்படி பண்ணுகின்றது உன்னைக் கிட்டப் பெறுத இழவு என்கிறுர்.

கறந்த – கறந்தபோதே, பால்–(ஸ்வாபாவிக ரஸத்தையுடைத்தான) பாலாய், நெய்யே - (அதில் ஸாராம்ஶமான) நெய்யாய், நெய்யின் - நெய்யினுடைய, இன்- இனிய, சுவையே - ரஸமாய், (இப்படி லௌகிகபோக்யமன்றியே, திவ்யபோக்யமாம்படி), கடலினுள் - கடலிலேபிறந்த, அமுதமே - அம்ருதமாய், அமுதில் - அந்த அம்ருதத்திலே, பிறந்த - உத்பந்நமாய், இன்சுவையே - (லோகோத்தரமான) இனிமையாய், சுவையது - அவ்வினிமையால்பிறந்த, பயனே - ப்ரயோஜநமான ஸுகமாய்,(இப்படி ப்ராக்ருத போக்யமாமளவன்றியே, அநந்யப்ரயோஜநர்க்கு அதிஶயித போக்யபூதனும்படி),பின்னை-நப்பின்னைப்பிராட்டி,தோள் - திருத்தோளோடே,மணந்த- ஸம்ஶ்லேஷித்த, பேராயா - மஹாப்ரபாவனை க்ருஷ்ணனே ! வினையேன்-உன்னுடைய நிரதிஶயபோக்யதையை அநுபவிக்கப்பெறுத) பாபத்தையுடைய நான், இறந்ததும் நீயே எதிர்ந்ததும்நீயே நிகழ்வதோ நீ - பூதபவிஷ்யத்வர்த்தமாந காலோபலக்ஷித ஸகல

பதார்த்தங்களும் (தனித்தனியே) நீயிட்டவழக்கு; இன்னே - இப்படி, ஆனல் - ஆனபின்பு, அது-தூரஸ்த்தமாயும், இது-ஸந்நிஹிதமாயும், உது - அதூர விப்ரக்ருஷ்ட மாயுமுள்ள தேசோபலக்ஷித ஸகலபதார்த்தங்களும், சிறந்த - விலக்ஷணமான, நின் - உன்னுடைய, தன்மை - ஸ்வபாவங்களு, என்று-எனறு,
ஜ்ஞானம், ஒன்றும் - ஒன்றையுமகப்பட, சங்கிப்பன் - குலேயப்புகுகிறதோ என்று ஶங்கியாநிற்பன்.

இ.—ஏழாம்பாட்டில், ஸகலபதார்த்தங்களும் உனக்கு ப்ரகாரதயாஶேஷமாய், ப்ரகாரியானநீயே அவற்றுக்குநிர்வாஹகனென்னும் அறிவொன்றும்கொண்டு தரித்திருக்கிற நான், என்பாபத்தாலே அதிலும் அதிஶங்கை பண்ணுகின்றேனென்கிருர்.

[இறந்தது இத்யாதி] - காலத்ரயத்திலும் வர்த்திக்கிற ஸகலபதார்த்தங்களும் நீயிட்டவழக்கு. தாந்தாமுள்ள காலத்தில் அவ்வோபதார்த்தங்களுக்கு ஶேஷிகளாயிருப்பாரில் வ்யாவ்ருத்தி. [சிறந்தநின்தன்மை அதுவிதுவுதுவென்று] - தூரஸ்யமாயும் ஸந்நிஹிதமாயும் அதூரவிப்ரக்ருஷ்டமாயுமிருக்கிற ஸகலபதார்த்தங்களும் ஶேஷித்வத்தாலே சிறந்திருந்துள்ள உன்னுடையப்ரகாரம். 'இன்னேயானல் - இறந்ததும்நீயே' என்னுதல். 'இன்னேயானல் - சிறந்தநின்தன்மை' என்னுதல் - தூரஸ்யமாயும், ஸந்நிஹிதமாயும், அதூரவிப்ரக்ருஷ்டமாயுமுள்ள பதார்த்தங்கள் உனக்குப்ரகாரமாயற்றால் காலத்ரயவர்த்தி ஸகலபதார்த்தங்களும் நீயிட்டவழக்கென்னுதல், காலத்ரயவர்த்தி ஸகலபதார்த்தங்களும் நீயிட்டவழக்காகையாலே ஸகலபதார்த்தங்களும் உனக்கு ப்ரகாரமென்னுதல். [அறிவொன்றும் ஶங்கிப்பன்] - ஶரீரகதமான தோஷம் ஆத்மாவுக்காறுப்போலே, எல்லாருடைய தோஷங்களும் ப்ரகாரியான உன்னதென்னும் ஸம்பந்தஜ்ஞானமொன்றையுமாயிற்று எனக்கு உஜ்ஜீவநஹேதுவாக நினைத்திருப்பது; அதொன்றிலும் அதிஶங்கை பண்ணுகின்றேன். [வினையேன்] - கலக்கத்தாலே அதிஶங்கைபண்ணுங்காட்டில் அவன்ஸ்வரூப மில்லையாகாதிறே; எனக்கு இப்புத்திபிறக்கைக்கடி என்பாபமிறே. கீழில் அதிஶங்கைக்கும் இதுக்கும் நெடுவாசியுண்டு. ஆஶ்ரித பரதந்த்ரனென்கிற ஸ்வபாவத்திலே அதிஶங்கைபண்ணினல், ஆஶ்ரயணத்திற்குறையாலே அங்கீகரித்திலனென்று நினைத்திருக்கலாம்; இதில் அவனுடைய ஸத்பாவத்திலே அதிஶங்கைபண்ணுகிறதிறே. ஸர்வப்ரகாரியாய்க் கொண்டிறே அவனுடையஸத்தை. ஸ்வவ்யதிரிக்தங்கள் ப்ரகாரமாய்க்கொண்டிறே யுண்டாவது? இப்படிஸ்வரூபத்திலே யதிஶங்கை வர்திக்கைக்கடியென்? என்னில், அதிஶங்காஹேது சொல்லுகிறது: [கறந்த பால் இத்யாதி] - வ்யதிரேகத்தில் ஜமத்துஉபஸம்ஹ்ருதமென்று நினைக்கவேண்டும்படியான உன்போக்யதாப்ரகர்ஷம் அதிஶங்காஹேது. [கறந்தபால்] - கறந்தபோதே ரஸத்தை நினைக்கிறது; கறவாதபாலில்லையிறே; உபாயிவிஶேஷங்களால் வந்த ரஸவிஶேஷத்தை வ்யாவர்த்திக்கிறது. [நெய்யே] - அதில் ஸாராம்ஶம். [நெய்யினின்சுவையே] - நெய்யின் இன்சுவையானவனே! மஹத்வத்தைக்கலக்கி அதில் ஸாரமான அம்ருதமானவனே! [அமுதிற்பிறந்த இன்சுவையே] - அந்த அம்ருதத்திற்பிறந்த இனியரஸமானவனே! [சுவையதுபயனே] - ரஸாநுபவத்தால் வந்த ஸுகமானவனே! ஒன்றிலொன்று மேற்பட்ட ரஸங்களைச்சொல்லி, அவைபோராமையாலே தன்னையே சொல்லுகிறது. [பின்னைதோள் மணந்தபேராயா] - ஒருமிதுநாநுபவமாயிற்று இவர்க்குபோக்யம்.

ஸம்ஸாரியை ஆநந்திப்பிக்குமாபோலேயாயிற்று ஆநந்தமயனை அவளுகப்பிப்பது; இருவருடையவுஞ் சேர்த்தியழகாயிற்று இவர்க்குஹோக்யம்.

ஈடு.—ஏழாம்பாட்டு. ஸகலபதார்த்தங்களும் உனக்கு ப்ரகாரதயா சேஷமாய், நீ ப்ரகாரியாய், நீயே அவற்றுக்கு நிர்வாஹகனென்னும் அறிவொன்றுங்கொண்டு யரித்திருக்கிற நான் என்பாபத்தாலே அதிலும் அதிசங்கைபண்ணுகின்றேனென்கிறார்.

[இறந்தது இத்யாதி]-"இக்காலத்துக்கு நான் கடவேன், மற்றொருகாலத்துக்கு வேறேசிலர் கடவர்" என்றுதான் உன்னாலே சொல்லலாமோ? பூதகாலத்திலுள்ளாரோடு பவிஷ்யத்காலத்திலுள்ளாரோடு வர்த்தமாநகாலத்திலுள்ளாரோடு வாசியற எல்லாரும் த்வததீநர். "இன்னேயானால் - எங்குவந்துறுகோ" என்று கீழிற்பாட்டோடே அந்வயம். [சிறந்தநின்தன்மை அதுவிதுவுதுவென்று] - தூரஸ்தமாயும், ஸந்நிஹிதமாயும், அதூரவிப்ரக்ருஷ்டமாயுமுள்ள ஸகலபதார்த்தங்களும், சேஷித்வத்தாலே சிறந்திருந்துள்ள உன்னுடைய ப்ரகாரம். "இன்னேயானால் இறந்ததும்நீயே" என்னுதல், "சிறந்தநின்தன்மை" என்னுதல் - இப்படி காலத்ரயவர்த்தி பதார்த்தங்களும் நீ யிட்ட வழக்காகையாலே ஸகலபதார்த்தங்களும் உனக்கு ப்ரகாரமென்னுதல்; தூரஸ்த்தமாயும் ஸந்நிஹிதமாயும் அதூரவிப்ரக்ருஷ்டமாயுமுள்ள பதார்த்தங்கள் உனக்கு ப்ரகாரமாயற்றால் காலத்ரயவர்த்தி பதார்த்தங்களும் நீயிட்டவழக்கென்னுதல். [என்றறிவொன்றும் சங்கிப்பன்] - தன்னையொழிந்ததடங்கலும் தனக்கு ப்ரகாரமாய்த் தான் ப்ரகாரியாயிருக்கையாலே, இவற்றுக்கு வந்தது தனக்கு வந்ததாக நினைத்திருப்பானொருவனென்கிற அறிவாயிற்று, இவர்க்கு ஜீவிக்கைக்குஹேது; அதொன்றிலும் அதிசங்கைபண்ணுகின்

ஏழாம்பாட்டு.—இறந்ததும் இத்யாதி. "அதுவிதுவது - சிறந்தநின்தன்மை - என்றறிவொன்றும் சங்கிப்பன்வினையேன்" என்கிறவற்றைக்கடாக்ஷித்து அவதாரிகை - ஸகல இத்யாதி. "இறப்பு எதிர்" என்று - காலபரமாகையாலே, "இறந்தது, எதிர்ந்தது" என்றது - தத்தத்கால வர்த்தி பதார்த்தவாசகமாகிறது.

ஏககாலவர்த்திபதார்த்த நிர்வாஹக னென்றதே, "காலத்ரயவர்த்திபதார்த்தநிர்வாஹகன் நீ" என்றதுக்கு பாவம் - இக்காலத்துக்கு இத்யாதி. ஸப்தார்த்தம் - பூதகாலத்தில் இத்யாதி. "இன்னேயானால் -" இப்படியானாலென்றபடி. "இறந்ததும் நீயே" என்றுதொடங்கி, "நிகழ்வதோநீயின்னேயானால் - எங்குவந்துறுகோ" என்று கீழிற்பாட்டோடே அந்வயமானபோது, "அதுவிதுவது - சிறந்தநின்தன்மை - என்றறிவொன்றும் சங்கிப்பன் வினையேன்" என்று மேலே அந்வயம். "இன்னேயானால்" என்றது - இப்பாட்டுக்குசேஷமாக யோஜநாத்வயம் அருளிச்செய்கிறார் - இன்னேயானால் இத்யாதி வாக்யத்வயத்தாலே. த்ருதீயயோஜநாவிவரணம் - இப்படி காலத்ரய இத்யாதி. இந்தயோஜனையில், "இன்னேயானால்" என்றது - இப்படியாகையாலே என்றபடி. த்விதீயயோஜநாவிவரணம் - தூரஸ்த்தமாயும் இத்யாதி. த்விதீயயோஜனையில், "அதுவிதுவுதுவென்கிறவை - சிறந்தநின்தன்மை - இன்னேயானால் - இறந்ததும்நீயே எதிர்ந்ததும் நீயே நிகழ்வதோநீயென்கிற - அறிவொன்றும் சங்கிப்பன்வினையேன்" என்று அந்வயம். த்ருதீயயோஜனையில், "இறந்ததும்நீயே எதிர்ந்ததும்நீயே நிகழ்வதோநீயின்னேயானால் - அதுவிதுவது - சிறந்தநின்தன்மை - என்றறிவொன்றும் சங்கிப்பன்வினையேன்" என்று அந்வயம். "'அதுவிதுவது - சிறந்தநின்தன்மை' என்றது- †'ஸவஂ ஸமாப்நோஷி' என்றாற்போலே; 'இறந்ததும் நீயே' இத்யாதி- †'த஦ேதாவிஸவஂ' என்றாற்போலேயிருக்கிறது" என்று அருளிச்செய்வர்.

இவவறிவிலே ஶங்கிக்கிறேனென்கைககு, இத்தைத் தஞ்சமாக நினைக்கைக்கு ஹேதும்வ

இவற்றுக்குவந்தது *இத்யாதி. "வினையேன்" என்றதுக்குக் கீழில் பதத்தோடே ஸங்கதியருளிச்*

றேன், அது எனக்குக் கார்யகரமல்லாமையாலே. [வினையேன்]- கலக்கத்தாலே அதிஶங்கைபண்ணுங்காட்டில் அவன்ஸ்வரூப மில்லையாகாதிறே: எனக்கு இப்புத்தி பிறக்கைக்கடி என்பாபமிறே. †"ஶங்கேமத்பாக்யஸங்க்ஷயாத்" (ஶங்கேமத்பாக்யஸங்க்ஷயாத்)-கீழிலதிஶங்கைக்கும் இதுக்கும் வாசியுண்டு. ஆஶ்ரிதபரதந்த்ரனென்கிற ஸ்வபாவத்திலே அதிஶங்கைபண்ணிலால்ஆஶ்ரயணத்திற் குறையாலேயென்று நினைத்திருக்கலாம்; இதில் அவனுடைய ஸத்பாவத்திலேயிறே அதிஶங்கை. ப்ரகாரியாய்க் கொண்டிறே அவனுடைய ஸத்தை; ஸ்வவ்யதிரிக்தங்கள் அவனுக்கு ப்ரகாரமாய்க்கொண்டிறே உண்டாவது? இப்படி ஸ்வரூபத்தில் அதிஶங்கை வர்த்திக்கைக்கு அடியேன்? என்னில்; - அதிஶங்காஹேது சொல்லுகிறது:[கறந்தபால் இத்யாதி]-வ்யதிரேகத்தில் ஜகத்து உபஸம்ஹ்ருதமென்று நினைக்கவேண்டும்படியான உன்போக்யதாப்ரகர்ஷம் அதிஶங்காஹேது. [கறந்தபால்] – கறந்தபோதை ரஸத்தை நினைக்கிறது: அல்லது கறவாதபாலில்லையிறே: உபாதிவிஶேஷத்தால்வந்த ரஸவிஶேஷத்தை வ்யாவர்த்திக்கிறது. [நெய்யே] - அதில் ஸாராம்ஶம். [நெய்யினின்சுவையே] - நெய்யில்இனியசுவையானவனே! [கடலினுளமுதமே] - மஹத்தத்த்வத்தைக்கலக்கி அதில் ஸாராம்ஶமாக வாங்கின அம்ருதம் போலே போக்யனானவனே! [அமுதில்பிறந்த இன்சுவையே] - அதில் ரஸாம்ஶத்தைச்சொல்லுகிறது. [சுவையதுபயனே]- ரஸாநுபவத்தால்வந்த ஸுகஸ்வரூபமானவனே! ஒன்றிலொன்று மேற்பட்ட ரஸாம்ஶங்களைச்சொல்லி, அதுபோராமையாலே தன்னையே சொல்லுகிறது. [பின்னைதோள்மணந்தபேராயா] - ஒருமிதுநாநுபவமாயிற்று இவர்க்கு போக்யம். ஸம்ஸாரியை அவன் ஆநந்திப்பிக்குமாபோலேயாயிற்று, ஆநந்தமயனை அவள் உகப்பிக்கும்படி. இருவருடைய சேர்த்தியழகாயிற்று இவர்க்கு போக்யம். (எ)

செய்கிறார் - கலக்கத்தாலே இத்யாதி வாக்யத்வயத்தாலே. உக் ப்ரமாணம் - ஶங்கே இத்யாதி. கீழிலதிஶங்கைக்கும் இதுக்கும் வாசியேதென்ன - கீழில் இத்யாதி. கீழிலதிஶங்கையென்றது - நாலாம்பாட்டிலதிசங்கை. இதுக்கும் - இப்பாட்டிலதிஶங்கைக்குமென்றபடி. ப்ரகாரித்வத்திலேயன்றோ அதிஶங்கை? ஸத்பாவத்திலேயோ? என்ன - ப்ரகாரியாய் இத்யாதி. ப்ரஸங்காத் ப்ரதிகோடியையும் காட்டுகிறார் - ஸ்வவ்யதிரிக்த இத்யாதி. அந்தஹேதுவேதென்ன - வ்யதிரேகத்தில் இத்யாதி. பால்என்னமல், "கறந்தபால்" என்று விஶேஷித்ததுக்கு ப்ரயோஜநமும், வ்யாவர்த்யமும் அருளிச்செய்கிறார் - கறந்தபோதை இத்யாதி வாக்யத்ரயத்தாலே. உபாதிவிஶேஷமாவது - காய்ச்சுகை முதலானவை. மேலுக்கு அவதாரிகை - ஒன்றிலொன்று இத்யாதி. தன்னை - அவன்தன்னை என்றபடி. பேராயா - பெரிய இடையனே! கேவலம் அவனைச்சொல்லாதே, "பின்னைதோள்மணந்த" என்றுவிஶேஷித்ததுக்கு பாவம் - ஒருமிதுந இத்யாதி. "பின்னைதோள்மணந்த" என்றத்தால் பலிதம் - ஸம்ஸாரியை இத்யாதி. "ஒருமிதுநாநுபவம்" இத்யாதியின் விவரணம் - இருவருடைய இத்யாதி. பேராயா - பெரியோனே என்றுமாம். 'கறந்தபால் நெய்யே' இத்யாரப்ய, 'மணந்தபேராயா - இறந்ததும் நீயே' என்றுதொடங்கி, 'இன்னேயானால் - அதுவிதுவது – சிறந்தநின்தன்மை – என்றறிவொன்றும் சங்கிப்பன் வினையேன்' இத்யந்வயஃ. இது மூன்றும் யோஜனையில். "என்றறிவொன்றும்" என்றது - என்கிற ஜ்ஞாநமொன்றையுமென்றபடி; என்றறிகிற அறிவொன்றுமென்றுமாம். (எ)

† ராமா-ஸுந்தர-(உ-௬-௧௩)

எட்டாம் பாட்டு.

**மணந்தபேராயா ! மாயத்தால்முழுதும் வல்வினையேனையீர்கின்ற
குணங்களையுடையாய்! அசுரர்வன்கையர்கூற்றமே! கொடியபுள்ளுயர்த்தாய்!
பணங்களாயிரமுடையபைந்நாகப்பள்ளியாய்!பாற்கடற்சேர்ப்பா!
வணங்குமாறறியேன் மனமும்வாசகமும்செய்கையும்யானும்நீதானே.**

ஆ.—(மணந்தபேராயா.) - உம்முடையஅபேக்ஷிதம் செய்யவேண்டுமாகில் ஓரஞ்சலிமாத்ரமாகிலும் பண்ணமாட்டீரோ? என்னில்;—அதுக்கு உத்தரம் மேலிட்டு, ப்ரவணஸ்வபாவனாகையாலும், "[illegible]" என்னும் ப்ரக்ரியையாலே முழுதும் வல்வினையேனாயிருந்த என்னையுங்கூட ஈராநின்ற ஸௌசீல்யாதி கல்யாணகுணங்களை உடையையாயிருக்கையாலும், ஆச்ரிதவிரோதிநிரஸநைக ஸ்வபாவனாயிருக்கையாலும், ஆச்ரிதருடைய ஆபத்துக்கு உதவவருகைக்கீடான பெரிய திருவடியை திவ்யவாஹநமாக உடையவனாகையாலும், திருநாட்டில்நின்றும் வந்து ஆச்ரிதருடைய ஆபத்தைப்போக்கப் பற்றாமை அணித்தாகத் திருப்பாற்கடலிலேவந்து திருவநந்தாழ்வான்மேலே கண்வளர்ந்தருளுகையாலும், மத்ஸ்வரூபகரணசேஷ்டிதங்கள் த்வத்ஸங்கல்பாயத்தமாய் த்வதாத்மகமாய் த்வச்சரீரமாகையாலும், என்னால் ஒரு செயலில்லை ; ஆதலால், வணங்குமாறு அறியேனென்கிறார்.

ஒ.—எட்டாம்பாட்டில், ஏதேனுஞ்செய்தாலும் நீரே யத்நம்பண்ணவேண்டாவோ ? என்னில்,—ஆத்மாத்மீயங்களடைய உன்னதாய்,எனக்கென்ன ஒருஉபகரணமில்லாமையாலே என்னால் செய்யலாவதொன்றுமில்லை; ரக்ஷிக்கவல்லையுமாய் ரக்ஷணஸ்வபாவனுமான நீயே வந்து என்னை விஷயீகரித்தருளவேணுமென்கிறார்.

[மணந்த என்றுதொடங்கி] - அத்யபிநிவிஷ்டனாய்க்கொண்டு நப்பின்னைப்பிராட்டியுடைய திருத்தோள்களையணைந்த பேராயனே! ஒன்றொழியாமே எல்லாம் என்னையீரும்படியான குணங்களையுடையவனே! இப்போது காணப்பெறாத இன்னாப்பாலே, 'வல்வினையேன்' என்கிறார். [அசுரர்வன்கையர் கூற்றமே] - வன்கையரான அஸுரர்களுக்கு ம்ருத்யுவானவனே! [கொடிய புள்ளுயர்த்தாய்] - கண்டதிசையிலே ப்ரதிபக்ஷத்தை மாய்க்கவல்ல பெரிய திருவடியைக் கொடியாகவுடையவனே! [பணங்களென்று தொடங்கி]- உன்னோட்டை ஸ்பர்சத்தாலே விகஸிதமான ஆயிரம்பணங்களையும் கண்வளரப்போரும்படி விஸ்தீர்ணமான உடம்பையுமுடைய திருவநந்தாழ்வானைப் படுக்கையாகக்கொண்டு ரக்ஷ்யஜந்துக்களுக்கு அணித்தாகத் திருப்பாற்கடலிலே கண்வளர்ந்தருளுகிறவனே !

ப.—அநந்தரம், ஆச்ரிதஸம்ச்லேஷார்த்தமாகவும் விரோதிநிரஸநார்த்தமாகவும் திருப்பாற்கடலிலே கண்வளர்ந்தருளுகிற நீயிட்ட வழக்காம்படி என் கரணங்களும் கரணியான நானும் உனக்கு ப்ரகாரமானபின்பு,நான் வணங்குவன் என்றொரு ப்ரகாரம் அறிகிறிலேனென்கிறார்.

மாயத்தால் - ஆச்சர்யசேஷ்டிதங்களாலே, முழுதும் - அகிலபதார்த்தங்களையும், மணந்த - அபிமததையோடே செறிந்து உகப்பிக்கும், பேராயா - பெருமையை

யுடைய க்ருஷ்ணனாய், வல்வினையேனை - அப்படி ஸம்ச்லேஷிக்கப்பெறாத ப்ரபலபாபத்தையுடையேனான என்னை, ஈர்கின்ற-ஸர்வகாலமும் ஈராநிற்கிற, குணங்களை - (சீலஸௌலப்ய ஸௌந்தர்யாதிகளான) குணங்களை, உடையாய் - (ஸ்வபாவமாக) உடையையாய், வன்கையசுரர் - (ஆச்ரிதவிரோதிகளான) ப்ரபலாஸுரர்க்கு, கூற்றமே - ம்ருத்யுவாய், கொடிய - (அவர்கள் கண்டபோதே) முடியும்படியான புள் - பெரியதிருவடியை, உயர்த்தாய் - (கொடியாக) உடையையாய், (இப்படி ஜகத்ரக்ஷணார்த்தமாக), ஆயிரம் பணங்கள் - ர, உடைய - உடையனுமாய், பை - அதிவிஸ்தீர்ணமான, நாகம் - நந்தாழ்வானாகிற, பள்ளி - படுக்கையை, ஆய் - உடையையாய்க்கொண்டு, பாற்கடல் - திருப்பாற்கடலிலே, சேர்ப்பா - கண்வளர்ந்தருளுகிறவனே! மநமும் வாசகமும் செய்கையும் - மனோவாக்காயரூப கரணங்களும், யானும் - (கரணியான) நானும், (உனக்கு ப்ரகாரமாய்க்கொண்டு), நீதானே - நீதானேயாம்படியாயிருந்தது; (ஆகையால்), வணங்கும் - வணங்குகைக்கு, ஆறுஅறியேன் - ஒருகர்த்தாவையும் லேன், கர லேன்.

இ:—எட்டாம்பாட்டில், ஏதேனுஞ்செய்தாலும் பேறுஉம்மதாய் ஆச்ரயிக்கைக்குக் காரணமும்உண்டானால் நீரே யத்நிக்கவேண்டாவோ? என்னில், — ஆத்மாத்மீயங்களடைய உன்ன நமானபின்பு என்னால் செய்யலாவதொன்றில்லை; நீயே ரக்ஷிக்க வேணு மென்கிறார்.

[மணந்தபேராயா மாயத்தால்] - அ ரிவேஷத்தாலே நப்பின்னைப்பிராட்டியோடே ஸம்ச்லேஷித்த பேராயனே! நப்பின்னைப் பிராட்டியிற்காட்டில் இடைத்தனத்தில் க்ருஷ்ணனுக்குஉண்டான ஏற்றம். [வல்வினையேனை முழுதுமீர்கின்ற குணங்களையுடையாய்] - குணங்களிலே ஒருகுணம் ஆச்வாஸஹேதுவாகிறதில்லை. உன்குணமாகையும் நானாகையுமே ஈருகைக்கு வேண்டுவது.எல்லாமொக்க ஈரும்படியான குணங்களையுடையவனே! [வல்வினையேன்] - சிலர் குணஜ்ஞாநத்தாலே ஜீவித்திருக்க, அதுவும் வாதகமாம்படி பாபத்தைப்பண்ணினேன். ‘‘பஹவொ நூவகஸ்யாண ஹுணாஃபு த்ருஸ்யஸந்தெ’’. [ஈர்கின்ற] - நலிந்ததாய் விடுகிறதில்லை: அம்புபட்டநோவுக்கு மருந்திட்டாற்றலாம், குணஜ்ஞாநத்தாலேவந்த நோவுக்குப் பரிஹாரமில்லை. [அசுரர்வன்கையர்கூற்றமே] - கண்பாராதே நலியும் அஸுரர்களுக்கு அந்தகனானவனே! அநுகூலரை குணங்களாலேயழிக்கும்: ப்ரதிகூலரை ஆயுதத்தாலேயழிக்கும். [கொடியபுள்ளுயர்த்தாய்] - உன்னிலும் கண்டபோதே ப்ரதிபக்ஷத்தை மாய்க்கவல்ல பெரியதிருவடியைக் கொடியாக உடையவனே! ப்ரதிபக்ஷத்தை முடிக்கைக்குத் தான் வேண்டா, கொடியைக்காணவே முடியும் அத்தனை. [பணங்கள் இத்யாதி] - ஸ்வஸ்பர்சத்தாலே விகஸிதமான பணங்களையுடையனாய், பகவதநுபவஜநித ப்ரீதிக்குப் போக்குவிடுகைக்குப் பல தலையையுடையனாய், தானும்பிராட்டியும் பரிமாறப்புக்கால் விஸ்தீர்ணமாயிருக்கும் உடம்பையுடையனான திருவனந்தாழ்வானைப் படுக்கையாகயுடையவனே! [பாற்கடல் சேர்ப்பா] - இப்படிப்பட்ட திருவநந்தாழ்வானை ஆஸநமாகக்கொண்டு பரமபதத்திலேயிருக்கையன்றிக்கே, ஆர்த்தரக்ஷணத்துக்கு அணித்தாகத் திருப்பாற்கடலிலே கண்வளர்ந்தருளுகிறவனே! [வணங்குமாறறியேன்] - பரமபதத்தைவிட்டுத் திருப்பாற்கடலிலே வந்து சாய்ந்து என்னுடைய ரக்ஷணத்துக்கு முற்பாடனாயிருக்கிற உனக்கு நானொரு

கிஞ்சித்காரம் பண்ணினேனாக ஒருவிரகறிகிறிலேன். உமக்கு மநோவாக்காயங்களுண்டு; அவற்றுக்கு ஆஶ்ரயமான நீர்உண்டு; வணங்கத்தட்டென்? என்ன, [மனமுமித்யாதி]- அவற்றினுடைய ஸத்பாவமே யமையுமோ? அவை ஸ்வாயீநமாகவேண்டாவோ? மநோவாக்காயங்களினுடைய ஸத்தை நீயிட்டவழக்கன்றோ?

ஈடு.— எட்டாம் பாட்டு. ஏதேனும் செய்தாலும் பேறு உம்மதாய் உமக்கு ஆஶ்ரயிக்கைக்குக் கரணங்களுமுண்டானால் நீரே யத்நிக்கவேண்டாவோ? என்ன, - ஆத்மாத்மீயங்களடைய உன் அதீநமானபின்பு என்னால் செய்யலாவது ஒன்றில்லை, நீயே ரக்ஷிக்கவேணுமென்கிறார்.

[மணந்தபேராயா மாயத்தால்]- அபிநிவேஶத்தாலே நப்பின்னைப்பிராட்டி தோளோடே ஸம்ஶ்லேஷித்த பேராயனே! நப்பின்னைப்பிராட்டியிற்காட்டில் இடைத்தனத்தில் க்ருஷ்ணனுக்குஉண்டானஏற்றம். [முழுதும்வல்வினையேனையீர்கின்றகுணங்களையுடையாய்] - (முழுதும் - ஈர்கின்றகுணங்கள்) சிலகுணங்கள் ஈரச் சிலகுணங்கள் தாரகமாகையன்றிக்கே, எல்லாம் ஒக்க ஈரும்படியான குணங்களையுடையவனே! உன்குணங்களாகையும் நானாகையுமே நோவுபடுகைக்குஅடி. [வல்வினையேன்]-சிலர் குணஜ்ஞாநத்தாலே ஜீவித்திருக்க, அது பாதகமாம்படி பாபந்தைப்பண்ணினேன். [ஈர்கின்ற] - நலிந்ததாய் விடுகிறதில்லை: அம்புபட்டபுண் மருந்திட்டு ஆற்றலாம், குணத்தால் வந்தநோய்க்குப் பரிஹாரமில்லையே. [அசுரர்வன்கையர்கூற்றமே] - முன்கை மிடுக்கரான அஸுரர்க்கு அந்தகன் தண்ணீரென்னும்படி கூற்றமானவனே! [கொடியபுள்ளுயர்த்தாய்] - கண்டபோதே ப்ரதிபக்ஷத்தை மாய்க்கவல்ல பெரியதிருவடியைக் கொடியாகவுடையவனே! ப்ரதிபக்ஷத்தை முடிக்கைக்குத் தான் வேண்டா, கொடியைக்காணவமையும். [பணங்கள் இத்யாதி] - ஸ்வஸ்பர்ஶத்தாலே விகஸிதமான ஃபணங்களையுடையனாய், பகவதநுபவ ஹர்ஷத்துக்குப் போக்குவீடாகப் பலதலைகளையும் உடையனாய், ஸர்வேஶ்வரனுக்கும் பிராட்டிமார்க்கும் நினைத்தபடி பரிமாறுகைக்கீடான பரப்பையுடையனாயிற்றுத் திருவநந்தாழ்வானிருப்பது; அப்படிப்பட்டிருக்கிறவனைப் படுக்கையாக உடையவனே! [பாற்கடற் சேர்ப்பா] - ஆஶ்ரிதர்கூக்குரல் கேட்கைக்காகத் திருப்பாற்கடலிலே கண்வளர்ந்தவனே! [வணங்குமாறுஅறியேன்] - பரமபதத்தைவிட்டுத் திருப்பாற்கடலிலே சாய்ந்து என்

எட்டாம்பாட்டு—மணந்த இத்யாதி. "வணங்குமாறறியேன், மனமும் வாசகமும் செய்கையும்யானும்நீதானே" என்றவற்றைக் கடாக்ஷித்து அவதாரிகை-ஏதேனும் இத்யாதி.

"மாயம் -" அபிநிவேஶம். "பேராயா" என்றதுக்கு அர்த்தம் - நப்பின்னை இத்யாதி. "முழுதுமீர்கின்ற" என்றதுக்கு பாவம் - சிலகுணங்கள் இத்யாதி. "வல்வினையேனையீர்கின்ற குணங்கள்" என்றுகூட்டி பாவம் - உன்குணங்களாகையும் இத்யாதி. விஶ்லேஷவேளையிலே குணங்கள் பாதகமாகை ஸஹஜமாயிருக்க, "வல்வினை" என்று நோவுபடுவானென்? என்ன - சிலர் இத்யாதி. குணஜ்ஞானத்தாலேயென்றது-"தஸ்மிம்ஸ்து வஸதோ வோ கணாஃ" என்றத்தைப் பற்ற. வர்த்தமாநார்த்தம் - நலிந்ததாய் இத்யாதி. ப என்ன - அம்பு இத்யாதி. "வன்கையர், வன்கூற்றம்" என்று அந்வயித்து அதுக்கு வ்யாவர்த்யம் - முன்கை இத்யாதி. புள்ளின்கொடுமைசொல்லி, "உயர்த்தாய்" என்றதுக்கு பாவம் - ப்ரதிபக்ஷத்தை இத்யாதி. "பணங்கள், ஆயிரம், பை" என்ற மூன்றுக்கும் அர்த்தம் - ஸ்வஸ்பர்ஶத்தாலே இத்யாதி. "சேர்ப்பா -" சேர்ந்தவனே. "வணங்குமாறறியேன்" என்று உபாயம் தேடுவதில், வணங்காதே வெறுமனே இருக்கவொண்ணாதோ? என்ன - பரமபதத்தை இத்யாதி. "ஆறு" என்றதுக்கு

னுடைய ரக்ஷணத்துக்கு முற்பாடனுயிருக்கிற உனக்கு நான் ஒரு கிஞ்சித்காரம் பண்ணி னேனுகைக்கு ஒருவிரகறிகிறிலேன். 'அறியாதொழிகிறதேன்?' உமக்கு மனோவாக்காயங்க ளுண்டு, அவற்றுக்கு ஆஶ்ரயம் நீருண்டு, வணங்கத்தட்டேன்?' என்ன, - [மனமும் இத் யாதி] - எனக்காயிருப்பதொரு நெஞ்சும் வாக்கும் செய்கையும் எனக்காயிருப்பதொரு நானும் உண்டாகவேணுமே; எல்லாம் நீயிட்டவழக்காயன்றோ இருக்கிறது. வணங்க வேணுமென்னும் நினைவுண்டு, வணங்குப்ப்ரகாரம் அறிகிறிலேன். (அ)

ஒன்பதாம் பாட்டு.

யானும்நீதானேயாவதோமெய்யே அருநரகவையும்நீயானல்
வானுயரின்பமெய்திலென்? மற்றைநரகமேயெய்திலென்? எனினும்
யானும்நீதானுய்த்தெளிதோறும்நன்றும் அஞ்சுவன் நரகம்நானடைதல்
வானுயரின்டம்மன்னிவீற்றிருந்தாய்! அருளுநின்தாள்களையெனக்கே.

ஆ.—(யானும்நீதானே.) - உம்முடைய ஸ்வரூபமுட்பட ஸர்வமும் நானே யென்னுமிடம் அறிந்தீராகில் உமக்கு என்பக்கல் அலப்தாம்ஶமுண்டோ? என்னில்,— ஸர்வமும் நீயேயாதலால், இவ்விடத்தே யிருந்தத்தோடு திருநாட்டிலிருந்தத்தோடு வாசி யில்லை நிரூபிக்கில்; அப்படியேயாகிலும், ஸர்வமும்நீயே யென்னுமிடத்தை அறியச் செய்தேயும், திருநாட்டிலே நீயேயாயிருக்குமிருப்பைக் காணுதேயிருக்கும் இவ்விருப் பாகிற நரகத்தை மிகவும் அஞ்சாநின்றேன்; அருளு நின்தாள்களை எனக்கே என்கிறார்.

ஒ.—ஒன்பதாம்பாட்டில், ஸகலபதார்த்தங்களும் உனக்கு ஶேஷமானபின்பு, இந்தஜ்ஞானத்தோடே ஸம்ஸாரத்திலேயிருந்தத்தோடு திருநாட்டிலே யிருந்தத்தோடு வாசியில்லையாகிலும், ஶேஷத்வ ஜ்ஞாநவிரோதியான ஸம்ஸாரத்திலேயிருக்க அஞ்சா நின்றேன்; இதுக்கு அநுகூலமான திருநாட்டிலே என்னைக் கொடுபோகவேணு மென்கிறார்.

[யானும்நீதானே யாவதோமெய்யே] - நானும் உனக்கே ஶேஷமென்னுமிடம் ஸத்யம். [அருநரகவையும்நீ] - மற்றும் ஸம்ஸாரத்திலுண்டான சேதநாசேதநபதார்த் தங்களெல்லாம் உனக்கே ஶேஷம். [ஆனல் என்றுதொடங்கி] - 'ஆனபின்பு ஶேஷத்வ ஜ்ஞாநத்தோடே திருநாட்டிலேபோய் நிரதிஶயாநந்தத்தைப் பெற்றிருந்தத்தோடு ஸ்வ்வத்துக்கும் ஶேஷத்வஜ்ஞாநத்துக்கும் எதிர்த்தலையான ஸம்ஸாரத்திலே யிருந்தத் தோடு வாசியென்?' என்று இப்பொருளுண்டேயாகிலும், [யானும்நீ என்றுதொடங்கி]- ஸகலபதார்த்தங்களும் உனக்கு ஶேஷமாகையாலே நானும் உனக்கு ஶேஷமென்று உணருந்தோறும் ஸம்ஸாரத்திலிருப்பை மிகவும் அஞ்சாநின்றேன்; இந்தஜ்ஞானம் பரி மாறக்கடவதான திருநாட்டிலே நிரதிஶயாநந்தியாய்க் கொண்டு வேறுபட இருந்தருளின நீ, அங்கே எனக்கு உன்திருவடிகளைத் தந்தருளவேணும்.

ஸாவம் - வணங்கவேணுமென்னும் இத்யாதி. 'மாயத்தால் - மணந்தபோரயா - வல்வினையேனை - முழுதும் - ஈர்கின்ற குணங்களையுடையாய்' இத்யாரப்ய, 'சேர்ப்பா - மநமும் வாசகமும் செய்கை யும் யானும்நீதானே - வணங்குமாறறியேன்' இத்யந்வய:. (அ)

ப.—அநந்தரம், இவ்வறிவோடே எங்குமிருந்தாலும் குறைவற்றிருக்க, து:காத்மகமான ஸம்ஸாரத்திலிருக்க அஞ்சாநின்றேன்; நிரதிசயபுருஷார்த்தமான ப்ராப்ய தேசவர்த்தியான உன்திருவடிகளைத் தந்தருளவேணுமென்கிறார்.

யானும் - (அஹப்புத்திவ்யவஹார விஷயமான) நானும், நீதானே - (த்வத்ப்ர காரபூதனாகையாலே) நீதானேயா யிருப்பன்; (இப்படி "அஹம் த்வம் ச ததாந்யே ச" என்று), ஆவது - இவ்வர்த்தம், (ப்ரமாணப்ரஸித்தமாகையாலே), மெய்யே- பரமார்த்தம்: அரு - துஸ்தரமாய், நரகவையும் - து:கோத்தரமான ஸம்ஸாரத்தில் வஸ்துக்களானவையும், ("ஸர்வம் ஸமாப்நோஷி ததோஸி ஸர்வ:" என்கிற மர்யாதையாலே), நீ - த்வத் ப்ரகாரபூதங்கள்; ஆனால் - ஆனபின்பு, வான் - (விலக்ஷணமான உனக்குசேஷமான ஆத்மாவுக்கு அநுரூபமான) பரமபதத்தில், உயர் - உச்ச்ரிதமான, இன்பம் - ஆநந் தத்தை, எய்தில்என் - பெற்றிருக்கில் என்? மற்றை - (அவிலக்ஷணமாய் ஸ்வாதந்த்ர்யா வஹமாய் து:கோத்தரமாகையாலே) அதுக்கெதிர்த்தட்டான, நரகமே - ஸம்ஸாரநிர யத்தை, எய்தில் - பெறில், என் - என்? எனினும் - என்கிற அர்த்தஸ்த்திதியானது லோகத்திலே வ்யவஹரித்துப்போரிலும், யானும் - (ஜ்ஞாநாநந்தலக்ஷணமாய் விலக்ஷண மான) அஹமர்த்தம், நீதானாய் - (அகிலஹேயப்ரத்யநீக கல்யாணைகதானனான) நீயாம்படி த்வத்ப்ரகாரமாக, தெளிதொறும் - உணர்ந்தபோதெல்லாம், நரகம்- ஸம்ஸாரநிரயத்தை, நான் - நான், அடைதல் - கிட்டுகையை, (ஸ்ரீ கௌஸ்துபத்தைச் சேற்றிலேபுதைத்த வோபாதி), நன்றும் - மிகவும், அஞ்சுவன் - அஞ்சாநின்றேன்; வான் - (பரமவ்யோம சப்தவாச்யமான) பரமபதத்திலே, உயர் - (அவாங்மநஸகோசரமாம்படி) உச்ச்ரிதமான, இன்பம் - ஆனந்தத்தை, மன்னி - உடையையாய்க்கொண்டு, (நிரந்தரமாக), வீறு - உன்னுடைய ஸர்வசேஷித்வ வ்யாவ்ருத்தி தோன்ற, இருந்தாய் - எழுந்தருளியிருக்கிற வனே! (இவ்விபூதியிலுள்ளார் அநுபவித்து அடிமைசெய்கிற), நின் - உன், தாள்களை - திருவடிகளை, எனக்கு - எனக்கு, அருளு - தந்தருளவேணும்.

இ.—ஒன்பதாம்பாட்டில், "ஸகலபதார்த்தங்களும் நீயிட்டவழக்கு" என் கிற இந்தஜ்ஞாநத்தோடே யிருக்குமிடத்து ஸம்ஸாரத்தோடு பரமபதத்தோடு வாசியில் லையேயாகிலும் இந்தஜ்ஞாநத்துக்கு விரோதியான ஸம்ஸாரத்திலிருக்க அஞ்சாநின் றேன்; இதுக்கு அநுகூலமான பரமபதத்திலே என்னைக் கொடுபோக வேணுமென்கிறார்.

[யானும் நீதானே]-நானும் "நீ" என்கிற சொல்லுக்குள்ளேயாம்படி உனக்கு ப்ரகாரமாயிருக்கிறவனே! "[illegible]", "[illegible]" "[illegible]." [ஆவதோமெய்யே] - உனக்கு ப்ரகாரமாயிருக்கிற இவ்வர்த்தம் ஸத்யம். [அருநரகவையும் நீ] - ஸம்ஸாரத்திலுண்டான சேதநாசேதநங் களுக்கும், என்னோபாதி உன்னோட்டைப்ராப்தியுண்டு. நான் நீயிட்டவழக்காயிருக் கிறவோபாதி ஸகலபதார்த்தங்களும் நீயிட்டவழக்கு. [ஆனால்] - அர்த்தஸித்தி இது வானபின்பு. [வானுயரின்பமெய்தில்என்]-இச்சேஷத்வ ஜ்ஞாநத்தோடே திருநாட்டிலே போய் நிரதிசயாநந்தத்தைப் பெற்றிருக்கில்என்? [உயரின்பம்] - நிரதிசயாநந்தம். [மற்றைநரகமே எய்தில்என்] - ஸ்வத்துக்கும் சேஷத்வஜ்ஞாநத்துக்கும் எதிர்த்தலை யான ஸம்ஸாரத்திலேயிருக்கில்என்? சேஷவஸ்துவானால் சேஷியுடைய எல்லைக்குள்ளே "அவன்செய்தபடி செய்கிறான்" என்றிருக்குமதொழிய, அவனை நிர்வந்திக்கக் கடவ

னல்லவென்பதோர் அர்த்தமுண்டு; [எனினும்]-இவ்வர்த்தம் இப்படியானாலும். [யானும் நீதானாய்த்தெளிதொறும்] - ஸகலபதார்த்தங்களும் உனக்கு அத்யந்தபாரதந்த்ரமாகை யாலே, நானும் உனக்கு அத்யந்தபாரதந்த்ரனென்னும் தெளிவுபிறக்கப் பிறக்க. [நன்றும் அஞ்சுவன்நரகம் நானடைதல்] - ஶேஷத்வஜ்ஞாநத்துக்கு விருத்தமான ஸம்ஸாரத்திலே யிருக்கில், அகப்பட்ட இந்தஜ்ஞாநத்தையும் இழப்பனென்று நான் அஞ்சாநின்றேன். "உம்மோடு மற்றுள்ள ஸகலபதார்த்தங்களோடு வாசிபற நம்மைக்குறித்து அத்யந்த பாரதந்த்ரமானபின்பு பரமபதத்திலிருப்போடு ஸம்ஸாரத்திலிருப்போடு வாசியென்? என்று நீகைவாங்கியிருக்கப் புகுகிறாயோ"? என்று ஸம்ஸாரத்திலிருப்பை நான் மிகவும் அஞ்சாநின்றேன். 'இப்படி யஞ்சுகிறவுமக்கு நாம் செய்யவேண்டுவதென்?' என்ன - [வானுயரின்பம் மன்னிவீற்றிருந்தாய்] - பரமபதத்திலே நிரதிஶயாநந்தயுக்தனாய்க் கொண்டு உன்னுடைய ஶேஷித்வத்தால் வந்த வேறுபாடெல்லாந்தோற்ற, உனக்கமைந் தாரும் நீயுமாகவிருப்பதோரிருப்பு உண்டு. [அருளு நின்தாள்களையெனக்கே] - அவ் விருப்பிலே என்னைக் கொண்டுபோய், அவர்கள் அநுபவிக்கிற உன்திருவடிகளை எனக் குத் தந்தருளவேணும்.

ஈடு — ஒன்பதாம்பாட்டு. "ஸகலபதார்த்தங்களும் நீயிட்டவழக்கு" என்கிற இந்தஜ்ஞாநத்தோடேயிருக்குமிடத்தில் ஸம்ஸாரத்தோடு பரமபதத்தோடு வாசியில்லையே யாகிலும், இந்தஜ்ஞாநத்துக்கு விரோதியான ஸம்ஸாரத்திலிருக்க அஞ்சாநின்றேன்: இதுக்கு அநுகூலமான பரமபதத்திலே என்னைக்கொடுபோகவேணுமென்கிறார்.

[யானுந்நீதானேயாவதோமெய்யே] - நான் "நீ" என்கிற சொல்லுக்குள்ளே அடங்கும்படி உனக்குப்ரகாரமாய், நான் ப்ரஹ்மஶப்தவாச்யனும்படியிருக்கிற இவ்வர்த் தமோ, அது ஸத்யம். †"ஆத்மேத்யேவ து க்ருஹ்ணீயாத்", ‡"அஹம் மநுரபவம் ஸூர்யஶ்ச" (ஆத்மேத்யேவது க்ருஹ்ணீயாத்,அஹம்மநுரபவம்ஸூர்யஶ்ச) என்றிறே முக்தர் பாஶுரம். [மெய்யே] - அதில் ஸம்ஶயமில்லை. [அருநரகவையுந்நீ] - எனக் குப் பொறுக்கவொண்ணாதே கால்வாங்கியல்லது நிற்கவொண்ணாதபடியான ஸம்ஸாரமும் நீயிட்ட வழக்கு. இது இப்போதுசொல்லுகிறது, நீ நினைத்தவன்று கழித்துத்தரவல்லை யென்கைக்காக. ஆக, நானும் எனக்குவிரோதியான ஸம்ஸாரமும் உனக்கு ப்ரகாரம். [ஆனால்] - அர்த்ததத்த்வம் இதுவானால். [வானுயரின்பமெய்தில்என்] - ஶேஷத்வஜ்ஞாநத் தோடே திருநாட்டிலேபோய் நிரதிஶயாநந்தத்தைப் பெற்றிருக்கில் என்? [மற்றைநரகமே

ஒன்பதாம்பாட்டு.—யானும்நீ இத்யாதி. "நன்றும் அஞ்சுவன்நரகம் நான் அடைதல், வானுயரின்பம் மன்னிவீற்றிருந்தாய்" இத்யாதியைக் கடாக்ஷித்து அவதாரிகை - ஸகல இத்யாதி. கண்டதெல்லாவற்றிலும் அதிஶங்கைபண்ணுகிறதென்? ஸர்வமும் ப்ரகாரமாக நாம் ப்ரகாரியாக விருக்கிற அறிவுகொண்டு ஆறியிருக்கவொண்ணாதோ? என்ன-ஸகல இத்யாதி என்று கீழோடே இதுக்குஸங்கதி. "யானும்நீதானே, அருநரகவையும்நீ" என்றது - ஸகலபதார்த்தங்களுக்கும் உபலக்ஷணம். தன்னை அவனாகச் சொல்லலாயிருக்குமோ? என்ன - ஆத்மேத்யேவ இத்யாதி. முக்தர்பாஶுரம் - முக்தப்ராயர் பாஶுரமென்றபடி. அவதாரணார்த்தம் - அதில் இத்யாதி. நரகவையென்றது - நரகமென்றபடி. ஸம்ஸாரமும் உனக்கு ப்ரகாரமென்றதுக்கு ப்ரயோஜநம் அருளிச்செய்கிறார்-இது இப்போது இத்யாதி. பதத்வயோக்தார்த்தத்தைச் சேர்த்து அருளிச்செய் கிறார் - ஆகநானும் இத்யாதி. "எனினும்" என்றதுக்கு அர்த்தம் - உடையவன் இத்யாதி வாக்யத்

† 3. ‡ ப்ரஹதாரணியகே-க.

யேய்திலன்] - ஸ்வபாவத்துக்கும் சேஷத்வஜ்ஞாநத்துக்கும் எதிர்த்தட்டான ஸம்ஸாரத்திலே இருக்கிலன் ? உடையவன் வைத்தவிடத்திலே கிடக்குமத்தனையன்றோ என்று ஓர்த்த தத்த்வமுண்டு; [எனினும்] - இவ்வர்த்தம் இப்படியானாலும். [யானும்நீதானாய்த் தெளிதோறும்] - இஸ்ஸம்ஸாரம் உனக்குப்புறம்பு என்கிற ஆகாரத்தாலன்றிக்கே, "நான் உனக்கு அத்யந்தசேஷபூதன்" என்கிறதெளிவு பிறக்கப்பிறக்க. [நன்றும் அஞ்சுவன்நரகம் நான் அடைதல்] - 'சேஷத்வஜ்ஞாநமுண்டானபின்பு சேஷவஸ்துசேஷிசெய்தபடிகண்டு அவனெல்லைக்குள்ளே கிடக்குமித்தனையன்றோ? நம்மை நிர்ப்பந்திக்கக்கடவனோ?'என்றிறே தேவர்க்குநினைவு! உனக்கு இது நினைவானாலும், இஸ்ஸம்ஸாரத்திலிருப்பை நான் மிகவும் அஞ்சாநின்றேன்: சேஷத்வப்ரதிபத்திக்கு விரோதியாகையாலே. நீர் அஞ்சுங்காட்டில் நம்மாற் செய்யலாவதுண்டோ ? என்னில்-[வானுயரின்பம் மன்னிவீற்றிருந்தாய்இத்யாதி]- இதுவேயன்றிக்கே, நித்யவிபூதியிலே நிரதிசயாநந்தயுக்தனாய், உன்னுடைய சேஷித்வ வ்யாவ்ருத்தி தோற்ற இருப்பதோர் இருப்புண்டு; அவ்விருப்பிலே என்னையழைத்து அஸாதாரணர்பரிமாற்றத்தை எனக்குத் தரவேணும். (கூ)

பத்தாம் பாட்டு.

தாள்களையெனக்கேதலைத்தலைச்சிறப்பத்தந்த பேருதவிக்கைம்மாறு
தோள்களையாரத்தழுவி என்னுயிரையறவிலைசெய்தனன்சோதீ ! [தாய்!
தோள்களாயிரத்தாய்! முடிகளாயிரத்தாய்! துணைமலர்க்கண்களாயிரத்
தாள்களாயிரத்தாய்!பேர்களாயிரத்தாய்! தமியனேன்பெரியவப்பனே !

ஆ.—(தாள்களை.) - ஸம்ஸாரிகளெல்லாரும் ப்ராக்ருதவிஷயைக தாரக போஷக போக்யராயிருக்கச்செய்தே, என்னை உன் திருவடிகளையே தாரகபோஷக போக்யமாயிருக்கும்படி பண்ணியருளினாய் ; இந்த மஹோபகாரமே அமையாதோ? இவ்வுபகாரத்துக்குக் கைம்மாறாக என்னுடைய ஆத்மாவை உனக்கே அடிமையாகத்தந்தேனென்னும் ப்ரீதியாலே ஸம்பாவித்து, தம்முடைய ஆத்மாவை ஆத்மாந்தசேஷமாகக் கொடுத்து, இந்தமஹோபகாரத்தைப்பண்ணின உன்னை ஒருகால் காணவேணும். காண எளிதோ ? என்னில்,—காணவேணுமென்று அபேக்ஷித்த ஆஸ்ரிதர்க்காகவன்றோ, நீ அஸங்க்யேய திவ்யரூபங்களையும், அஸங்க்யேய கல்யாணகுணங்களையும் உடையையாயிருக்கிறது; உன்னையொழிய ஒருக்ஷணமாத்ரமும் செல்லாதிருக்கிற எனக்கும் அரியையாகலாமோ? பிரானே! என்கிறார்.

வயம். புறம்பென்கிற ஆகாரத்தாலன்றிக்கேயென்றது - உன்னையொழிய ஸ்வதந்த்ரமென்கிற ஆகாரத்தாலன்றிக்கே, உனக்கு அத்யந்த பரதந்த்ரமாகையாலே என்றபடி. "நீதானாய்த்தெளிதொறும்" என்றது - நீதானாகத் தெளிவுபிறக்கப்பிறக்க என்றபடி. "நான்" என்றதுக்கு பாவம் - சேஷத்வஜ்ஞாநம் இத்யாதி என்னுதல்; "உடையவன்வைத்தவிடத்திலே" இத்யாதிவாக்யவிவரணமாதல். இதுவேயன்றிக்கே - இஸ்ஸம்ஸாரமேயன்றிக்கே என்றபடி. 'யானும்நீதானே' என்று தொடங்கி, 'யானும்நீதானாய்த் தெளிதொறும் - நரகம் - அடைதல் - நான் - நன்றும்அஞ்சுவன் - வானுயரின்பம் மன்னிவீற்றிருந்தாய் - நின்தாள்களையெனக்கு - அருள்' இத்யந்வய:. (கூ)

ஒ.—பத்தாம்பாட்டில், நான் ஆசைப்பட்டபடியே திருவடிகளை எனக்குத் தந்தருளின மஹோபகாரத்துக்கு ப்ரத்யுபகாரமாக என்னாத்மாவை உனக்குத்தந்தேனென்கிறார்.

[தாள்களையென்று தொடங்கி] - "நான்பெற்றபடி பேறுபெற்றாரில்லை" என்னும்படி மிகவும் பரிபூர்ணமாம்படி திருவடிகளை எனக்குத்தந்த மஹோபகாரத்துக்கு ப்ரத்யுபகாரமாக உனக்குத் தரப்புகுகிறதென்று மிகவும் கொண்டாடி என்னாத்மாவை உனக்கே ஸ்வம்மாகத் தந்தேன். [சோதீ] - தம்மோட்டை ஸம்ஶ்லேஷத்தாலே எம்பெருமானுக்குப்பிறந்த ஔஜ்ஜ்வல்யம். [தோள்களென்று தொடங்கி] - தம்மைத் தரிப்பிக்கையாலே எம்பெருமானுக்குப்பிறந்த பௌஷ்கல்யத்தைப் பேசி உன்படியிருந்தபடியென்? என்றுகொண்டாடுகிறார்: [தமியனேன் பெரியவப்பனே] - உன்னைப்பிரிந்து தனிமைப்பட்டு நோவுபடுகிற எனக்கு உன்னைக்காட்டியருளி, உன்னுடைய குணங்களிலே அதிஶங்கைபண்ண, அவ்வதிஶங்கையைப்போக்கின மஹோபகாரகனே!

ப.—அநந்தரம், ஆஶாநுரூபோபகாரத்துக்குத் தாம்பண்ணின ப்ரத்யுபகாரத்தாலே அத்தலையிற்பிறந்த ஔஜ்ஜ்வல்யத்தையும் அதிஶயித வைபவத்தையும் அருளிச்செய்கிறார்.

("அருளுநின்தாள்களை எனக்கே" என்ற ஆசைக்கீடாக), தாள்களை - அத்திருவடிகளை, எனக்கே - எனக்கு அஸாதாரணமாம்படி, (மோக்ஷத்வப்ரதிஸம்பந்தியாகவும், ஆஶ்ரயணப்ரதிஸம்பந்தியாகவும், கைங்கர்ய ப்ரதிஸம்பந்தியாகவும்), தலைத்தலை - மேன்மேலென, சிறப்ப - சிறக்கும்படி, தந்த - தந்தருளின, பேருதவி - மஹோபகாரத்துக்கு, கைம்மாறு - ப்ரத்யுபகாரமாக, (அமூர்த்தமான), என் - என், உயிரை — ஆத்மவஸ்துவை, (உபகாரஸ்ம்ருதியிலுண்டான ஹர்ஷாதிஶயத்தாலே), தோள்களை - தோள்கள், ஆர - நிரம்பும்படி, தழுவி - (மூர்த்தவஸ்துவை) ஆலிங்கநம்பண்ணுமாபோலே அத்யாதரம்பண்ணி, (இஷ்டவிநியோகார்ஹமாம்படி, உபகார ப்ரத்யுபகாரங்களிலுண்டான க்ரயவிக்ரயஸமாதியாலே), அறவிலை - அறவிலை, செய்தனன் - செய்துதந்தேன் : சோதீ - ("அதுவுமற்றாங்கவன்தன்னது" என்று மீளாதே உபகாரஸ்ம்ருதியிலுண்டான கலக்கத்தாலே பண்ணின ஸமர்ப்பணத்தை, ஹர்ஷப்ரகர்ஷத்தாலே, உன்னது பெற்றாயாயிராதே பெறாப்பேறுபெற்றாயான) ஔஜ்ஜ்வல்யத்தையுடையவனே! தோள்கள் ஆயிரத்தாய் - (இந்த வடிவிலொளியளவன்றிக்கே, பஹுமுகமாகத் தழைத்த "ஆயிரந்தோளால்" என்கிறபடியே (உபகாரமான திருத்தோள்கள் ஆயிரத்தையுமுடையையாய், முடிகள் ஆயிரத்தாய்-("ஸஹஸ்ரஶீர்ஷா" என்கிறபடியே) திருமுடிகள் ஆயிரத்தையுமுடையையாய், துணை மலர் கண்கள் ஆயிரத்தாய் - ("ஸஹஸ்ராக்ஷ:" என்கிறபடியே) இணையான மலர்போன்ற திருக்கண்கள் ஆயிரத்தையுமுடையையாய், தாள்கள் ஆயிரத்தாய் - ("ஸஹஸ்ரபாத்" என்கிறபடியே) திருவடிகள் ஆயிரத்தையுமுடையையாய், பேர்கள் ஆயிரத்தாய்- ("நாமஸஹஸ்ரவாந்" என்கிறபடியே) திருநாமங்கள் ஆயிரத்தையுமுடையையாய், தமியனேன் - (அறிவையும் ஶங்கிக்கும்படி தனிமைப்பட்ட) எனக்கு, பெரிய அப்பனே - உன்பெருமைக்கீடாக உபகரித்தஸ்வாமியானவனே! இப்படி ஔஜ்ஜ்வல்யத்தையும் வைபவத்தையுமுடையவனே! எனக்கு மஹோபகாரகனாய் என்றுமாம். 'என்னுயிரை அறவிலைசெய்தனன்' என்று அந்வயம்.

இ.—பத்தாம்பாட்டில், தாம் அபேக்ஷித்தபடியே திருவடிகளைத்தந்தருளின மஹோபகாரத்துக்கு ப்ரத்யுபகாரமாக இவ்வாத்மவஸ்துவை உனக்குத்தந்தேனென்கிறார். இப்போது திருவடிகளைக்கொடுக்கையாவது - ஸம்ஸாரத்தோடு பொருந்தாதபடியையும், தன்னையொழியச் செல்லாதபடியையும் தமக்குப்பிறப்பித்த ஓஸையை ப்ரகாஸிப்பிக்கை.

[தாள்களையெனக்கே தலைத்தலைச்சிறப்ப] - உன் திருவடிகளைப்பற்றினாரில், 'நான்பெற்றபேறு பெற்றாரில்லை' என்னும்படியைக்கொண்ட. "இன்கவிபாடும் பரமகவிகளால்" என்று - பராஸராதிகள், முதலாழ்வார்களுண்டாயிருக்க, என்னைக்கொண்டு வாசிகமான அடிமையைக்கொண்ட. [தலைத்தலைச் சிறப்பத்தந்த] - மிகச் சிறக்கும்படி தந்த: பூர்ணமாம்படிதந்த என்கை. [பேருதவி] - கொள்கின்ற என்தரத்திலன்றிக்கே, தன்தரத்திலே தருகை. [கைம்மாறு] - ப்ரத்யுபகாரமாக. [தோள்களையாரத்தழுவி] - உனக்குத்தரப்புகுகிற வஸ்துவென்று மிகவும் கொண்டாடி. உபகாரஸ்ம்ருதியிலுண்டான ஹர்ஷத்தாலே, அமூர்த்தமான ஆத்மவஸ்து ஸாவயவம்போலே அணைக்கலாம்படி தடித்தது. [†என்னுயிரை] — விலக்ஷணமான ஆத்மாவை. [அறவிலைசெய்தனன்] - இஷ்டவிநியோகார்ஹமாம்படி யாவிலைசெய்து தந்தேன். தாம் முன்பு "மனமும் வாசகமும் செய்கையும் யானும் நீதானே" என்று சொன்ன வார்த்தையை மறந்து உபகாரஸ்ம்ருதியாலேவந்த ஹர்ஷத்தாலே ப்ரமித்துச்சொல்லுகிறார். [சோதீ] - இவர்பண்ணின ஆத்மஸமர்ப்பணத்தாலே அவனுக்குப்பிறந்த ஔஜ்ஜ்வல்யம். இவர் தம்மதல்லாததொன்றை ஹர்ஷத்தாலே கலங்கிக்கொடுத்தார்; அவன் தன்னதல்லாததொன்றைப் பெற்றானாய் அத்தாலே உஜ்ஜ்வலனாகாநின்றான். * மயர்வறமதிநல மருளப்பெற்ற இவர் கலங்கச்சொல்லவேணுமோ? * மயர்வறமதிநல மருளினவன்தான் கலங்காநின்றான். முன்பு இழவாலே கூப்பிட்டவர், தரித்து ப்ரத்யுபகாரத்திலே [தோள்களென்று தொடங்கி]. இழிந்தபடியைக்கண்டு, அத்தாலே அவனுக்குப்பிறந்த பௌஷ்கல்யத்தைப் பேசுகிறார்:— உபகாரஸ்ம்ருதியில் உண்டான ஹர்ஷத்தாலே, அமூர்த்தமான ஆத்மவஸ்து அணைக்கலாம்படி தடித்தாற்போலே, * ஸதைகரூபரூபமானவடிவும் ஸாதஸாவமாயிற்று. அவாப்தஸமஸ்தகாமனானவன் ஒருஸம்ஸாரியைலபித்து ஹ்ருஷ்டனானானென்கிற இதுகூடுமோவென்னில்? - ஸர்வஜ்ஞனான க்ஷத்ரியனுக்கு உபர்த்தி உண்டென்ற அஸிமதையான மஹிஷிபக்கலிலே சாபலமின்றிக்கே யொழியுமோ? அவாப்தஸமஸ்த காமத்வமும் ப்ரமாணஸித்தமாய், ஆஸ்ரிதவாத்ஸல்யமும் ப்ரமாணப்ரஸித்தமானால் அப்படியேகொள்ளுமித்தனையன்றோ? எனக்கு ஹர்ஷத்தைத் தானே பிறப்பித்து, அந்தஹர்ஷத்தைக் கண்டு அத்தாலே தான் இப்படி விஸ்த்ருதனுவதே! என்று கொண்டாடுகிறார். [தமியனேன்] - அவன்ஸ்வரூபத்திலும் ஆஸ்ரிதபாரதந்த்ர்யத்திலும் அதிஸங்கைபண்ணின போதை வெறுமையைநினைத்துச் சொல்லுகிறார். [பெரியவப்பனே] - அவ்வதிஸங்கைகளையும்போக்கி இவ்வளவு புகுரநிறுத்தின மஹோபகாரகனே!

---

† இருபத்து நாலாயிரத்தில் 'இன்னுயிரை' என்று பாடமாகில் அர்த்தத்துக்குச் சேரும்.

ஈடு.—பத்தாம்பாட்டு. தாம் மநோரதித்தபடியே திருவடிகளைத் தந்தருளின மஹோபகாரத்துக்கு ப்ரத்யுபகாரமாக இவ்வாத்மவஸ்துவை உனக்குத்தந்தே னென்கிறார். இப்போது திருவடிகளைக் கொடுக்கையாவது - ஸம்ஸாரத்தோடுபொருந்தாதபடியையும் தன்னையொழியச்செல்லாதபடியையும் தமக்குப்பிறப்பித்த ஊமையை ப்ரகாசிப்பிக்கை.

[தாள்களையெனக்கே தலைத்தலைச்சிறப்பத்தந்த] - "பலரடியார்முன்பருளிய" என்கிறபடியே-ஸ்ரீவால்மீகிஹ்மவான், முதலாழ்வார்கள்தொடக்கமானார் உண்டாயிருக்க, என்பக்கலிலே விசேஷகடாக்ஷம் பண்ணி, மிகச்சிறக்கும்படி தந்த: பூர்ணமாகத் தந்த என்கை. [பேருதவி] - கொள்ளுகிற என்தரத்திலன்றிக்கே, தன்தரத்திலே தருகை. [கைம்மாறு] - ப்ரத்யுபகாரமாக. [தோள்களையாரத்தழுவி] - ஒருவனுக்குஒருவன் கந்ய கையையணைத்துக் கொடுக்குமாபோலே, இங்கும்அணைத்துக்கொடுக்கலாம்படி அமூர்த்த மான ஆத்மவஸ்து தாளுந்தோளுமாய்ப்பணைத்ததாயிற்று உபகாரஸ்ம்ருதியாலே. "என தாவியாவியும் நீ" "எனதாவியார்? யான் ஆர்?", "மனமும்வாசகமும்செய்கையும் யானும்நீ தானே" என்பதானவற்றை மறந்தார் ஹர்ஷத்தாலே. [என்னுயிரையறவிலைசெய்தனன்] - என்னுடைய ஆத்மவஸ்துவை தேவர்க்கு அநந்யார்ஹமாம்படி அற விலை செய்துதந்தேன். [சோதீ]-இவர் தம்மதல்லாததொன்றைத் தம்மதாக ப்ரமித்துக் கொடுத்தாற்போலே, அவ னும் தன்னதல்லாததொன்றைப் பெற்றாற்போலே ப்ரமித்து உஜ்ஜ்வலனாகாநின்றான்: "விஜ்வர:"(விஜ்வர:) என்னும்படி யிராநின்றான். [தோள்கள்இத்யாதி] - முன்புஇழ வாலே கூப்பிட்டவர் தரித்து ப்ரத்யுபகாரத்திலே இழிந்தபடியைக்கண்டு, அத்தாலே அவ னுக்குப் பிறந்த பௌஷ்கல்யத்தைப் பேசுகிறார். உபகாரஸ்ம்ருதியாலே இவருடைய ஆத்மவஸ்து தாளுந்தோளுமாய்த் தளிர்த்தாற்போலே, ஸ்வைகரூபமானவடிவும் ஸ்த ஸாகமாயிற்று. ஒருஸம்ஸாரியை லஹித்து அவாப்த ஸமஸ்தகாமனை இவன் இப்படி ஹ்ருஷ்டனானனென்கிறஇது கூடுமோ? என்னில், ஸார்வபௌமனை க்ஷத்ரியனுக்க ஒருயர்த்தியுண்டேன்று, அஹிமதையான மஹிஷிபக்கலிலே சாபலமின்றிக்கே ஒழியுமோ? அவாப்தஸமஸ்தகாமத்வமும் ப்ரமாணஸித்தமாய், ஆஸ்ரிதவாத்ஸல்யமும் ப்ரமாணப்ர ஸித்தமானால் அப்படியேகொள்ளுமத்தனையன்றோ? எனக்கு ஹர்ஷத்தைப்பிறப்பித்து,

---

பத்தாம்பாட்டு.—தாள்களை இத்யாதி. "பேருதவிக்கைம்மாறு" என்றுதொடங்கி, "அற விலைசெய்தனன்" என்னுமளவும் கடாக்ஷித்து அவதாரிகை - தாம் மநோரதித்த இத்யாதி. ஆனால், தாள்களைத் தந்தானோ? என்ன - இப்போது இத்யாதி.

"தலைத்தலை"-மிகவும். "சிறப்ப-" ஶ்லாக்யமாக. "எனக்கே" என்கிற அவதாரணார்த்தம் - பலரடியார் இத்யாதி. ஹவிதம் - பூர்ணமாக இத்யாதி. உபகாரத்துக்கு மஹத்வம் ஏது? என்ன - கொள்ளுகிற இத்யாதி. நிரவயவமான உயிருக்குத் தோள்களுண்டோ? என்ன - ஒருவனுக்கு இத் யாதி. ஆத்மாவாகிற பெண்ணின்தோளை ஆரத்தழுவி என்றபடி. ஆத்மஸமர்ப்பணம், கீழ் அத்யந்த பாதந்த்ரமாகச்†சொ வுக்திகளோடு விரோதியாதோ? என்ன - என்தாவி இத்யாதி.உஜ்ஜ்வலனை துக்கு ப்ரமாணம் - விஜ்வர: இத்யாதி. "தோள்களாயிரத்தாய்" என்றுதொடங்கி வர்ணிக்கிறதுக்கு ஸாவம் - முன்பு இழவாலே இத்யாதி. "அறவிலைசெய்தனன்-" அறவிலைசெய்து தந்தேனென்ற படி. விக்ரஹம் ஸதைகரூபமாயிருக்க, அநேகாவயவங்களாகப் பணைக்கக்கூடுமோ? என்ன - உபகார ஸ்ம்ருதியாலே இத்யாதி. யுக்தியேயன்றிக்கே ப்ரமாணகதியாலும் கூடுமென்கிறார் - அவாப்த ஸமஸ்தகாமத்வமும் இத்யாதி. ஆஸ்ரிதவாத்ஸல்யமும் ப்ரமாணப்ரஸித்தமானாலென்றது - "நத தௌவிஜ ஹ ஹவ ஶெ" இத்யாதி ப்ரமாணங்களைப்பற்ற. "தோள்களாயிரத்தாய்" சயா! ஸம்

இங்கே அந்வயிக்கவில்லை: சொன்ன என்று இருக்கலாமென்று தோன்றுகின்றது.

அந்தஹர்ஷத்தைக்கண்டு அத்தாலே தான் இப்படி விஸ்த்ருதனுவதே!என்று கொண்டாடுகிறர். [தமியனேன்] - இவன்ஸ்வரூபத்திலும் ஆஸ்ரிதபாரதந்த்ர்யத்திலும் அதிசங்கை பண்ணினபோதை வெறுமையை நினைத்துச்சொல்லுகிறர். [பெரியவப்பனே] - பண்ணினவுபகாரம், ஓர் அளவுபட்டிருந்ததில்லையீ!என்பக்கலிலே ஒருநன்மையுண்டாய்ச் செய்தாயல்லையிறே, ப்ராப்தியாலே செய்தாயத்தனையிறே. (கo)

பதினேராம் பாட்டு,

பெரியவப்பனைப்பிரமனப்பனை உருத்திரனப்பனை முனிவர்க்கு
உரியவப்பனை அமரரப்பனை உலகுக்கோர்தனியப்பன்தன்னை
பெரியவண்குருகூர்வண்சடகோபன் பேணினஆயிரத்துள்ளும் [கே.
உரியசொல்மாலையிவையும்பத்து இவற்றல்உய்யலாந்தொண்டீர்!நங்கட்

ஆ.—(பெரியவப்பனை) - ப்ரஹ்மாதி ஸகலஸுரகணங்களுக்கும், ஸர்வலோகத்துக்கும் ஈஸ்வரனயிருந்த நீயே உன் திருவடிகளைத் தந்தருளவேணும் என்று ஆசைப்பட்டு, "ஸமஜ்ஜ்ஞாஹ்யஸூக்ஷ்யாகு" என்று பிராட்டிசொன்னற்போலே சொன்ன உரியசொல்மாலையான இத்திருவாய்மொழியை வல்லார்க்கு எம்பெருமானைப்பெறலாம்; நான்பட்டபாடு படவேண்டா. நீர் இப்பாடு படுவானென் ? என்னில்,—இக்கண்ணாலே இப்போதே காணவேணுமென்று படுகிறேன்; எம்பெருமானைப் பெருதொழிகிறேனென்று படுகிறேனல்லே னென்கிறர்.

ஒ.—நிகமத்தில், இத்திருவாய்மொழியிற் சொன்ன அர்த்தத்தையெல்லாம் ஸங்க்ரஹேண சொல்லி, இத்திருவாய்மொழி கற்றார்க்கு எம்பெருமானைப்பெற்று உய்யலா மென்கிறர்.

[பிரமனென்று தொடங்கி]-ப்ரஹ்மேசாநாதிகளுக்கெல்லாம் நிர்வாஹகனனவனை. முனிவர்க்குரிய அப்பனுகையாவது - கேவலம் ப்ரஹ்மஸுவனேயேயானவர்களுக்குத் தன்னேடுண்டான அனுமை சொல்லுகிறது. உலகுக்கோர் தனியப்பன் தன்னையென்கிறது - ப்ரஹ்ம லோகத்துக்கெல்லாம் தனியே நிர்வாஹகனனவனை. [பேணினவாயிரம்] - எம்பெருமானைத் தாம் ஆசைப்பட்ட படியைச் சொன்ன ஆயிரம். [உரியசொல்] - ஐவத்குணங்களுக்கு நேரே ப்ரதிபாதகமாகை.

ப.—அநந்தரம், இத்திருவாய்மொழி ஆத்மோஜ்ஜீவநஹேது என்று ஹலத்தை யருளிச்செய்கிறர்.

புத்திகளுக்கு ஹாவம்-எனக்குஹர்ஷத்தை இத்யாதி. இப்போது ஹர்ஷமாயிருக்க, "தமியனேன்" என்கிறதென் ? என்ன - இவன் ஸ்வரூபத்திலும் இத்யாதி. "அப்பன்" என்றதுக்கு - உபகாரகன் என்றருளிச்செய்து, ஸ்வாமியென்று அர்த்தாந்தரம் - என்பக்கலிலே இத்யாதி. 'சோதீ, தோள்களாயிரத்தாய்' என்றுதொடங்கி, 'பெரியவப்பனே - தாள்களையெனக்கே தலைத்தலை' என்று தொடங்கி, அறவிலைசெய்தனன்' இத்யந்வய:. (கo)

பெரியவப்பனை - ஸர்வாதிகஸ்வாமியாய், பிரமன் - (ஸகலஸ்ரஷ்டாவான) ப்ரஹ்மாவுக்கு, அப்பனை - உத்பாதகனாய், (அப்படியே), உருத்திரன் - (ஸம்ஹாரகர்த்தாவான) ருத்ரனுக்கும், அப்பனை - உத்பாதகனாய், முனிவர்க்கு - (ஜ்ஞாநாதிகரான ஸநகாதி) முநிகளுக்கு, உரியஅப்பனை - அஸாதாரண சேஷியாய், அமரர் - (அஸ்மதிஷ்டரான) தேவர்களுக்கு, அப்பனை - உத்பாதகனாய், (இப்படி), உலகுக்கு - ஸகலலோகத்துக்கும், ஓர் - அத்விதீயனான, தனிஅப்பன்தன்னை - ப்ரதாந நாயகனானவனை, பெரிய - பெரிய, வண் - ஸம்பத்தையுடைத்தான, குருகூர் - திருநகரிக்குநிர்வாஹகராய், வண்- (ப்ரபந்தநிர்மாணமுகத்தாலே) மஹோதாரரான, சடகோபன் - ஆழ்வார், பேணின - (அத்யந்தாபிநிவேசம்பண்ணி) ஆதரித்துச்சொன்ன, ஆயிரத்துள்ளும் - ஆயிரந்திருவாய்மொழிக்குள்ளும், (பகவத்போக்யதாதிகுணப்ரதிபாதநத்தில்), உரிய - உரிய, சொல்மாலை - சப்தஸந்தர்ப்பத்தை யுடைத்தாயிருக்கும், இவைபத்தும் — இவைபத்தும்: இவற்றால் - இவற்றாலே, தொண்டீர் - (இதரவிஷயங்களிலே சபலராய்த்) தொண்டராய்த் திரிகிறவர்களே! நங்கட்கு - (அநாதிகாலம் அந்யபரரான) நமக்கு, உய்யலாம் - உஜ்ஜீவிக்கலாம். இது - எழுசீராசிரியவிருத்தம்.

இ.—நிகமத்தில், இத்திருவாய்மொழியிற் சொன்ன அர்த்தத்தை ஸங்க்ரஹேணசொல்லி, இத்தையப்யஸிப்பார்க்கு ஈஸ்வரனைலபித்து உஜ்ஜீவிக்கலாமென்கிறார்.

[பெரியவப்பனை]- உபயவிபூதிக்கும் நிர்வாஹகனானவனை. [பிரமனப்பனை]- சதுர்முகப்ரஹ்மாவனேஸ்வரனுக்கு ஜநகனானவனை. [உருத்திரனப்பனை] - அவனுக்குப் புத்ரனாய், அவன்தன்னளவிலும் மிகைத்துத்திரிகிற ருத்ரனுக்கு உத்பாதகனானவனை: "லலாடாத் க்ரோதஜோ ஹரா:". [முனிவர்க்குரியவப்பனை] - முனிவரென்கிறது - ஸநகாதிகளை அவர்களுக்குக் கேவலம் ப்ரஹ்மஸாவனந்யயாயிருக்கையாலே உரியவென்று - அநுஷ்டை சொல்லுகிறது. [அமரரப்பனை] - தேவர்களுக்கு உத்பாதகனானவனை: [உலகுக்கோர் தனியப்பன்தன்னை] - இப்படி ப்ரித்துச்சொல்லுகிறதென்? ஸகலலோகங்களுக்கும் ஏகநிர்வாஹகனானவனை. இப்போது இவைசொல்லுகிறதென்? என்னில்,— நிதியெடுத்தவன் "இன்னதுகண்டேன்; இன்னதுகண்டேன்" என்னுமாபோலே, ஸ்வரூபத்திலும் குணத்திலும் அதிசங்கைபண்ணினபோது இழந்தாராயிருந்தவற்றை லபிக்கையாலே, இவற்றைப் பிரித்துப் பேசுகிறார். முனிவர்க்குரியஅப்பனை யென்கிறது - ஆஸ்ரிதஸௌலப்யத்தைச் சொல்லுகிறது. [பெரியவண்குருகூர்] - ரக்ஷணம் தாழ்த்தவாறே அதிசங்கைபண்ணுகையும், உபகாரஸ்ம்ருதியாலே ஹ்ருஷ்டராகையுமாகிற இவையுண்டாகைக்கடி, அவ்வூரில் பிறப்பென்கை. [வண்சடகோபன்] - மாநஸாநுபவமாத்ரமேயாய்விடாதே, ப்ரபந்நீகரித்த ஔதார்யம். [பேணினவாயிரத்துள்ளும் உரியசொல்மாலை இவைபத்து] - அவனைத் தாம் ஆசைப்பட்டபடியைச் சொன்ன இப்பத்து. [உரியசொன்மாலை] - "யதோ வாசோ நிவர்த்தந்தே" என்று மீளுகையன்றிக்கே, பகவத்குணங்களுக்கு நேரே வாசகமாகை. [இவற்றால் உய்யலாந்தொண்டீர் நங்கட்கே] - அநாதிகாலம் பகவத் விமுகராய், விஷயாந்தரப்ரவணராய், "அஸந்நேவ" என்கிறபடியே அஸத்ஸமராயிருக்கிற நமக்கு, "ஸந்தமேநம்" என்கிறபடியே உஜ்ஜீவிக்கலாம்.

ஈடு:—நிகமத்தில் - இத்திருவாய்மொழியிற்சொன்ன அர்த்தத்தை ஸங்க்ர ஹேணசொல்லி, இத்தை அப்யஸிப்பார்க்கு ஸர்வேஶ்வரனை லபித்து உஜ்ஜீவிக்கலா மென்கிறார்.

[பெரியவப்பனை] - உபயவிபூதியுக்தனை. [பிரமனப்பனை] - சதுர்த்தஶ புவநேஶ்வரனான ப்ரஹ்மாவுக்கு உத்பாதகனானவனை. [உருத்திரனப்பனை] - அவன் புத்ரனான ருத்ரனுக்கும் நிர்வாஹகனானவனை. "முனிவர்க்குரிய வப்பனை" - யென்கி றது,ஸநகாதிகளுக்கு ப்ரஹ்மஶாவகனையேயாகையாலே: உரியவென்று *அணுமைசொல்லு கிறது. [அமரரப்பனை] - தேவர்களுக்கு உத்பாதகனானவனை. [உலகுக்கோர்தனியப்பன் தன்னை]-இப்படிப் பிரித்துச்சொல்லுகிறதேன்? ஸகலலோகங்களுக்கும் ஏகநிர்வாஹகனான வனை. §"பூதாநாம்யோவ்யயஃபிதா" (பூதாநாம்யோவ்யயஃபிதா) என்றிறேயிருப் பது. இப்போது இவை சொல்லுகிறதேன்? என்னில், நிதியெடுத்தவன் "இன்னதுகண் டேன், இன்னதுகண்டேன்" என்னுமாபோலே, ஸ்வரூபத்திலும் குணத்திலும் அதிஶங்கை பண்ணினபோது இழந்தாராயிருந்தவற்றை லபிக்கையாலே இவற்றைப்பிரித்துச்சொல்லுகி றார். முனிவர்க்குரிய அப்பனையென்று - ஆஶ்ரிதஸௌலப்யத்தையைச் சொல்லுகிறது. [பெரிய வண்குருகூர்] - ரக்ஷகன் தாழ்த்தவாறே அதிஶங்கைபண்ணுகையும், உபகாரஸ்ம்ருதி யாலே ஹ்ருஷ்டராகையுமாகிற இவற்றுக்கடி, அவ்வூரில் பிறப்பென்கை. [வண்சட கோபன்]- மாநஸாநுபவமாத்ரமாய்விடாதே, ப்ரபந்தீகரித்த ஔதார்யம். [பேணினவா யிரத்துள்ளும் உரியசொல்மாலையிவையும்பத்து] - அவனைத் தாம் ஆசைப்பட்டபடியைச் சொன்ன பத்து. [உரியசொன்மாலை] - † "யதோவாசோ நிவர்த்தந்தே" (யதோவா சோநிவர்த்தந்தே) என்று மீளுகையன்றிக்கே, பகவத்குணங்களுக்கு நேரேவாசகமாகை. [இவற்றுலுய்யலாந் தொண்டீர்நங்கட்கே] - அநாதிகாலம் பகவத்விமுகராய், விஷயாந் தரப்ரவணராய், ‡'அஸந்நேவ' (அஸந்நேவ) என்கிறபடியே அஸத்ஸமராயிருக்கிற நமக்கு, ‡'ஸந்தமேநம்' (ஸந்தமேநம்) என்கிறபடியே உஜ்ஜீவிக்கலாம். (கக)

நிறமம்.—பெரிய இத்யாதி. "இவற்றாலுய்யலாம்" என்றத்தைக் கடாக்ஷித்து அவதா ரிகை - இத்திருவாய்மொழியில் இத்யாதி. இத்திருவாய்மொழியிற் சொன்ன அர்த்தமாவது - ஆஶ்ரிதபாரதந்த்ர்யமும், ஸ்வவ்யதிரிக்த ஸமஸ்தவஸ்து ப்ரகாரித்வமும்.

"பெரியவப்பனை" என்றதுக்கு - பரமஶேஷியென்று அர்த்தமாகையாலே, அத்தால் பலித்த அர்த்தம் - உபயவிபூதியுக்தனை என்று. "உரியவப்பனை" என்று விஶேஷித்ததுக்கு பாவம் - ஸநகாதிகளுக்கு இத்யாதி. ப்ரஹ்மஶாவனை - ப்ரஹ்மைகத்யாநத்தையுடையராகை. தனி - அஸஹாயனென்றபடி. "ஏகநிர்வாஹகன்" என்னுமதுக்கு ப்ரமாணமாதல், "அப்பன்" என்றதுக்கு ஜநகனை அர்த்தாந்தரமாதல் - பூதாநாம் இத்யாதி. இப்போது இவை என் றது - "பெரியவப்பன்" என்றுதொடங்கிச் சொன்னவற்றை. ஸ்வரூபத்தில் அதிஶங்கைதீர்ந்த மைக்குப் பதங்கள் ஸ்புடமாய், ஆஶ்ரிதபாரதந்த்ர்யத்தில் அதிஶங்கைதீர்ந்தமைக்கு பதம்அஸ்புடமா யிருக்கையாலே, அது இன்னதென்று வ்யக்தமாக அருளிச்செய்கிறார் - முனிவர்க்குரிய இத்யாதி. திருநகரியில் ஸம்பந்தம் சொல்லுகிறதுக்கு பாவம் - ரக்ஷகன் இத்யாதி. *வண்மையேதென்ன - மாநஸாநுபவம் இத்யாதி. பேணின - ஆசைப்பட்ட. உரிய - தகுதியாக. 'பெரிய வண்குருகூர் வண்சடகோபன் - ஆயிரத்திலும் வைத்துக்கொண்டு - பெரியவப்பனை' என்றுதொடங்கி, 'உலகுக் கோர் தனியப்பன்தன்னை - முனிவர்க்குரியவப்பனை - பேணின - இவையும்பத்து - உரியசொன் மாலை - இந்தப் பத்துப்பாட்டும் ஸர்வேஶ்வரனுக்கு ஸத்ருஶமான ஸந்தர்ப்பத்தை யுடைத் தாகை யாலே, 'தொண்டீர், நங்கட்கு - இவற்றாலுய்யலாம்' என்றந்வயம். (கக)

---

* அணுமை - சமீபம். § ஸ்ரீமஹாபாரதம்,ஸஹஸ்ரநாமாத்யாயம். † தை-ஆ-க. ‡ தை - ஆ - க.

த்ரவிடோபநிஷத்ஸங்கதி.— [illegible] ।

த்ரவிடோபநிஷத்தாத்பர்யரத்நாவளி.— [illegible]

திருவாய்மொழி நூற்றந்தாதி.

தேவனுறைபதியிற்சேரப்பெறுமையால்
மேவுமடியார்வசனுமெய்ந்நிலையும்—யாவையுந்தா
னுய்நிலையுஞ்சங்கித்தவைதெளிந்தமாறன்பால்
மாநிலத்தீர்! நங்கள்மனம்.

ஆழ்வார் திருவடிகளே ஶரணம், எம்பெருமானார் திருவடிகளே ஶரணம், ஜீயர்திருவடிகளே ஶரணம்.

இரண்டாந் திருவாய்மொழி - நங்கள் - ப்ரவேஶங்கள்.

ஆ.—(நங்கள் வரிவளை.)- இந்தவ்யஸநம் முறுகி எம்பெருமானோடே கலந்து பிரிந்த பிராட்டியாய், காணவேணுமென்று கூப்பிடுகிறார். ஸ்ரீவைகுண்டநாதனை ஸர்வேஶ்வரனும், "உன்னுடைய கடாக்ஷலக்ஷ்யமாகப் பெறுவதுகாண், என்று ஆசைப்பட வேண்டும்படியான வடிவையுடைய நீ, ஆசைப்படுகைக்குண்டாயிருப்பதொரு விஷயமுண்டோ? நீயாசைப்பட்ட விஷயமேது?" என்றும், "உனக்குச்செல்லுகிற அவஸாதமேது?" என்றும் இவளுடைய தோழிமார் கேட்க;

ஓ.—இரண்டாந்திருவாய்மொழியில், ஸம்ஸாரத்தோடு பொருந்தாதபடி தன் பக்கலிலே மிகவும் ஆபிமுக்யத்தைப் பிறப்பித்தபடியை யநுஸந்தித்து யரித்த ஆழ்வார், "இவ்வவஸாநத்திலும் அவன் வந்து விஷயீகரியாதொழிகைக்குக் காரணம் ஸம்ஸாரத்தில் ஸங்கம் நிஶ்ஶேஷமாகப் போகாமை" என்றுபார்த்து, "நாம் அறியாமே எம்பெருமானறிய ஏதேனும் ஸம்ஸாரத்திற் பற்றுண்டாகிலும் அத்தைவிடவேணும்" என்றத்யவஸித்து, அதில் தாம் நசையற்றபடியை அந்யாபதேஶத்தாலே பேசுகிறார். எம்பெருமானோடே விஶ்லேஷித்து மிகவும் நோவுபடுகிறாளொருபிராட்டி, "அவனைப் பெறுமைக்குக் காரணம், தோழிமார்தொடக்கமான பரிகரங்களிலுண்டான ஸங்கலேஶமாகவேணும்" என்றுபார்த்து அவற்றில் நசையறவிட்டு அவனைக் காணப்பெறுமையாலே மிகவும் தளர்ந்திருக்கிற இவளைக்கண்டு இவளுடைய தோழிமாரும் தாய்மாரும் மிகவும் விஷண்ணைகளாய், "உனக்கோடுகிற வ்யஸநம் என்?" என்றுகேட்க, "என்னுடையதஶை பேசநிலமன்று; நீங்கள் என்னையலைத்து உங்களுக்கு ஒருப்ரயோஜநமில்லை"

என்றுசொல்லி, குலத்திலும், பந்துக்கள்பக்கலிலும், ஸ்வஶரீரத்திலும், தன்னுடைய அபிமானாதிகளிலும், மற்றும் தன்னுடைய பரிகரங்களிலும் உண்டான நசையற்றேன்; அதுக்கடியாக, அவனாலே அபஹ்ருதசித்தையுமானேன் என்று அவர்களைக்குறித்துச் சொல்லுகிறாள்: இவள்தானே எம்பெருமானை அபிஸரித்து அபேக்ஷிதம்பெறாதே நோவுபடுகிறாள் ஒருத்தி.

ப.—இரண்டாந்திருவாய்மொழியில், தம்முடைய ஆகாங்க்ஷாநுரூபமாக அகவாயிலே அவன்வந்து முகங்காட்டினபடியை அநுஸந்தித்தவர், அவனுடைய பூர்த்தியைக் கண்டு பாஹ்யஸம்ஶ்லேஷம்பண்ண அபிநிவேஶித்து அதித்வரிதசித்தராய், ப்ராப்யபூதனான ஈஶ்வரனுடைய அபிகம்யத்வஸூசகமான ஸௌலப்யாதி குணவத்தையையும், அநுபாவ்யாகாரத்தையும், ஆகர்ஷகமான ஆபிரூப்யத்தையும், அநிஷ்டநிராஸகமான பரிகரவத்தையையும், அபரிச்சேத்யமான ஔஜ்ஜ்வல்யாதிஶயத்தையும், அதிஶயிதஜ்ஞாநர்க்கும் அவமந்தும்ஶக்யதையையும், அபிநிவேஶஜநகமான ஆகாரவிஶேஷங்களையும், ஆஸ்பஸக்தவிஷயத்தில் அஸஹிஷ்ணுதையையும், அநந்யார்ஹத்வாபாதகத்வத்தையும், சித்தாபஹாரியான திவ்யவிக்ரஹோச்ச்ராயத்தையும் அநுஸந்தித்து, ஏவம்பூதனான ஸர்வேஶ்வரனை அநுபவிக்குமிடத்து இவ்வருகுண்டான அநுபவத்தில் ஸங்கம்அற்றாலல்லது ஸித்தியாதென்று அறுதியிட்டு த்வரையாலே ஆர்த்தரான தம்முடைய ஆர்த்தியை ஆற்றுகைக்காக நிஷேதகராகான ஸுஹ்ருத்ப்ரப்ருதிகளைக்குறித்துத் தம்முடைய நிஸ்ஸங்கதையை வெளியிட்டப்ரகாரத்தை, நாயகனான ஈஶ்வரனைப்பிரிந்த நாயகியானவள், தன்னுடைய அபிஸரணோத்யோகத்தாலே தோழிமார் தாய்மாரோடு தான் வளர்த்த கிளி பூவை மயில்குயில்களோடு வாசியற ஸர்வர்பக்கலிலும் ஸங்கமற்று, தன்னுடைய ஸ்த்ரீத்வாதிகுணங்களையும் அநாதரித்து அவன்வடிவழகிலே அபஹ்ருத சித்தையான ஆகாரத்தைப் பேசின பாசுரத்தாலே அருளிச்செய்கிறார்.

இ.—இரண்டாந்திருவாய்மொழியில், கீழில் திருவாய்மொழி ப்ராபகப்ரதாநம்; இது ப்ராப்யப்ரதாநமாயிருக்கிறது. கீழே, அவன்குணங்களிலும் ஸ்வரூபத்திலும் அதிஶங்கைபண்ணித் தெளிந்து, "வணங்குமாறறியேன்" என்று தந்தலையில் ஸாதநபோக்யதையைத் தவிர்த்து, "யானும் நீதானேயாவதோ மெய்யே" என்று அவன் பக்கல் ந்யஸ்தபரதையைச்சொல்லி, இப்படி ப்ராஸங்கிகமாக "அவனே ப்ராபகம்" என்னுமிடத்தை நிஷ்கர்ஷித்தார். அவனே ப்ராபகனென்னுமிடத்தில் பேற்றுக்கு விளம்பஹேதுவில்லையாயிருக்க, "அவன்வந்து முகங்காட்டாதொழிகைக்குக் காரணம் அவனறிய ஸம்ஸாரத்தில் ஸங்கம் நிஶ்ஶேஷமாகப்போகாமை" என்றுபார்த்து, நாம்அறியாமே அவனறிய ஏதேனும் ஸம்ஸாரத்தில் பற்றுண்டாகிலும் அத்தைவிடவேணும்" என்று அத்யவஸித்து, ஸம்ஸாரத்தில் தாம் நசையற்றபடியை யந்யாபதேஶத்தாலே யருளிச் செய்கிறார். எம்பெருமானோடே கலந்து பிரிந்தாளொரு பிராட்டி அவன்தானேவரக் கண்டிருக்குமதொழிய, தன்னுற்றாமையாலே "தலைமகனிருந்த தேசத்தேறப் போமித்தனை" என்று அபிஸாரிகையாய்ப் புறப்பட்டுப் போகப்புக, தோழிமார் தொடக்கமான பந்துக்கள், "அவன் தானேவரக்கண்டிருக்குமதொழிய நீபுறப்பட்டுப் போகை போராது" என்று ஹிதஞ்சொல்லி நிஷேதிக்க, "நமக்கு இவர்கள்பக்கலுண்டானபற்றாலே நம்பக்கலிலே அவன் நெகிழ்ந்திருக்கிறானாகவேணும்" என்று நினைத்து, தனக்குத் தோழிமார்பக்கலிலும், தாய்மார்பக்கலிலும், மற்றுமுள்ள பந்துக்கள் பக்கலிலும்,

குலத்திலும், ஸ்வஶரீரத்திலும், ஸ்த்ரீத்வமர்யாதையிலும் ஸங்கமற்றபடியைத் தோழிமார்க்கறிவிக்கிற பாசுரத்தாலே, தமக்கு ப்ராப்யவிரோதிகளில் ருசியற்றிருக்கிறபடியை ஸர்வேஶ்வரனுக்கு அறிவிக்கிறார்.

ஈடு.—கீழில்திருவாய்மொழி ப்ராபகப்ரதாநம்; இது ப்ராப்யப்ரதாநமாயிருக்கிறது. கீழே அவன்குணங்களிலும் ஸ்வரூபத்திலும் அதிஶங்கைபண்ணித் தெளிந்து, "வணங்குமாறறியேன்" என்று தந்தலையில் ஸாதநயோக்யதையைத்தவிர்த்து, "யானும் நீதானேயாவதோமெய்யே" என்று அவன்பக்கல் ந்யஸ்தபரதையைச்சொல்லி, இப்படி ப்ராபகஸங்கிகமாக "அவனேப்ராபகன்" என்னுமிடத்தை நிஷ்கர்ஷித்தார். அவனே ப்ராபகனுமிடத்தில் பேற்றுக்கு விளம்பஹேதுவில்லையாயிருக்க, அவன்வந்து முகங்காட்டாதொழிகைக்கு ஹேது உண்டாகவேணுமென்று பார்த்தார்; அதில் அவன்பக்கல் பார்க்கலாவதொன்றில்லை, இதுக்கடி நம்பக்கலிலேயாகவேணும்; "**மமைவ துஷ்க்ருதம் கிஞ்சிந் மஹதஸ்தி ந ஸம்ஶய:**" (மமைவதுஷ்க்ருதம்கிஞ்சிந்மஹதஸ்திநஸம்ஶய:) ரா-ஸு-ந-அ-ச அ௯. என்றருளிறேபிராட்டி. இவரும் அப்படியே, "நெடுநாள் ஸம்ஸரித்துக் கண்டதெல்லாவற்றிலும் ருசிபண்ணிப் போந்தோம்; நம்முடைய பூர்வவ்ருத்தத்தையும் நமக்கு இப்போதுள்ள அளவையும் ஸர்வஜ்ஞனவன் அறியாமையில்லை; நாம் அறியாதிருக்க, அவனறிய அவன்பக்கல் ருசியிலே நமக்குக்குறையுண்டாகவேணும்" என்றுபார்த்து, "அது உண்டாகவுமாம், இல்லையாகவுமாம்: புறம்புண்டானவற்றில் ருசியில்லையென்னுமிடத்தை அவன்திருவுள்ளத்திலே படுத்துவோம்" என்றுபார்த்து, ப்ராப்யவிரோதிகளிலும், ப்ராபகவிரோதிகளிலும் தமக்கு ருசியில்லாமையை அந்யாபதேஶத்தாலே அருளிச்செய்கிறார். ஸர்வேஶ்வரனோடு கலந்து பிரிந்தா ளொருபிராட்டி, அவன்தானே வரக்கண்டிருக்கையன்றிக்கே, அபிஸாரிகையாய் அவனிருந்த தேசத்தேறப் போவதாக ஒருப்பட, இத்தையநுஸந்தித்த தோழிமார் தொடக்கமானார், "உனக்கு இது ஆகாதுகாண்" என்று ஹிதஞ்சொல்லி மீட்கப்பார்க்க, அவர்களைக்குறித்து, தோழிமார் தொடக்கமானவர்களிலும் மற்றுமுள்ளவர்களிலும் நசையில்லாமையை அவர்களுக்கு அறிவிக்கிற பாசுரத்தாலே தமக்கு நசையில்லாமையை அவன்திருவுள்ளத்திலே படுத்துகிறார்.

நங்கள்வரிவளை ப்ரவேஶ: கீழில் திருவாய்மொழிக்கும் இத்திருவாய்மொழிக்கும் பலிதமான அர்த்தத்தை அருளிச்செய்கிறார் - கீழில் இத்யாதி வாக்யத்வயத்தாலே. ப்ராபகப்ரதாநமானபடி எங்ஙனே? என்ன - கீழே அவன் இத்யாதி. இத்திருவாய்மொழிக்கு ஸங்கதி- அவனே இத்யாதி. "நம்பக்கலிலேயாகவேணும்" என்றதுக்கு ப்ரமாணம் - மமைவ இத்யாதி. "மமைவ துஷ்க்ருதம் கிஞ்சிந் மஹதஸ்தி ந ஸம்ஶய:" இத்யாஹ ஸீதா. "கிஞ்சித்" என்றது- அநிர்வாச்யமென்றபடி. ப்ராப்யவிரோதி-கிளிமுதலானவை. ப்ராபகவிரோதி- தாயார்முதலானார். ப்ராபகவிரோதிகளில் நசையற்றபடியைச் சொல்லுகை இத்திருவாய்மொழிக்கு அநபேக்ஷிதம்; ஸ்ரீகோசாங்கங்களிலுமில்லை. மாதாபிதாக்களுக்கு ப்ராபகவிரோதித்வம் தச்சுஶ்ரூஷணாதிகளாலே சிலபலங்களுண்டென்று ஶாஸ்த்ரம்சொல்லுகையாலே. அந்யாபதேஶப்ரகாரத்தை விஸ்தரிக்கிறார் - ஸர்வேஶ்வரனோடு இத்யாதி. "[illegible]"

முதற் பாட்டு.

நங்கள்வரிவளையாயங்காளோ! நம்முடையேதலர்முன்புநாணி, நுங்கட்குயானொன்றுரைக்கும்மாற்றம் நோக்குகின்றேனெங்குங்காணமாட்டேன், சங்கஞ்சரிந்தனசாயிழந்தேன் தடமுலைபொன்னிறமாய்த்தளர்ந்தேன், வெங்கண்பறவையின்பாகனெங்கோன் வேங்கடவாணனைவேண்டிச்சென்றே.

ஆ.—(நங்கள் வரிவளை) - உகவாதார்முன்பு என்னுடைய அவஸாதத்தை வ்யஞ்சிப்பிக்கையிலுள்ள லஜ்ஜையாலும், அவஸாதந்தான் நிரவத்யகமாயிருக்கையாலே அதுக்கு வாசகமாயிருப்பதொரு ஶப்தம்காணாமையாலும் என்னுடைய அவஸாதத்தை உங்களுக்குச் சொல்லமாட்டுகிறிலேன். இப்படி அவஸாதம் வருகைக்கு ஆசைப்பட்டதென்? என்னில்,—தீக்ஷ்ண நிரீக்ஷண நிர்தக்த ப்ரதிபக்ஷனை பெரிய திருவடியை வாஹநமாகவுடைய திருவேங்கடமுடையானை ஆசைப்பட்டு "சங்கம்சரிந்தன சாயிழந்தேன் தடமுலை பொன்னிறமாய்த் தளர்ந்தேன்" என்கிறார்.

ஓ.—முதற்பாட்டில், எம்பெருமானை யாசைப்பட்டு அவன் உகந்தருளின விடங்களிலேசென்றும் அபேக்ஷிதம் பெறாமையாலே மிகவும் அவஸந்நையாயிருக்கிற இப்பிராட்டியை, தோழிமாரானவர்கள், "உகவாதாரெதிரன்றோ லஜ்ஜிக்கவேண்டுவது? எங்களுக்கு லஜ்ஜிக்கவேணுமோ? உனக்கோடுகிற தசையைச்சொல்லு" என்ன, 'அவர்களெதிர் லஜ்ஜித்துச்சொல்லாதே உங்களுக்குச் சொல்லலாம் வார்த்தை பார்த்தவிடத்திலொன்றுங் காண்கிறிலேன்' என்கிறார்.

[வரிவளை ஆயங்கள்] - தோழிமார். [ஏதலர்] - ஶத்ருக்கள். [சங்கஞ்சரிந்தனவென்று மேலுக்கு] - ப்ரதிகூலர்க்கு பயங்கரமான த்ருஷ்டியையுடைய பெரிய திருவடியாலே ஏறியருளிவந்து என்னை யடிமைகொண்ட திருவேங்கடமுடையானைக் காணவாசைப்பட்டு அவனிருந்தவிடத்திலே போய் அபேக்ஷிதம்பெறாமை மிகவும் நோவுபட்டு வளைகள்கழன்றன:ஒளியிழந்தேன்: பூர்ணமான முலைகளும் விரஹவ்யஸநத்தாலே விவர்ணமாய் நானுந் தளர்ந்தேன். வ்யஸநம் உங்களுக்குச் சொல்லவேண்டா: என் வடிவிலே தெரியுமென்று கருத்து. "ஸுக து:கே ஹி ஸாமுத்ரிகம்" என்றாற்போலே, அநவாப்தியாலே 'வெங்கட்பறவை' என்கிறாள் காணும்.

ப.—முதற்பாட்டில், ஸர்வஸுலபனை திருவேங்கடமுடையானை அபிநிவேஶித்து என் ஆபரணஶோபையோடு ஆபிரூப்யத்தோடு வாசியற இழந்தேனென்று தோழிமார்க்கு அறிவிக்கிறார்.

வரி - வரியையுடைத்தான, வளை - வளையையுடையாராயிருக்கிற, நங்கள் - நம்முடைய, ஆயங்காளோ - ஆயங்காள்! (நம்முடை ஸமாநஸுகது:கைகளான உங்களைப்போலன்றியே), ஏதலர் - (ஹிதவசநம்பண்ணி மீட்கத்தேடுகிறவர்களாகையாலே சாத்ரவ கோடியிலே நிற்கிறதாயார்) அயலார்: முன்பு - முன்பு, நாணி - (சொல்ல)நாணி, நுங்கட்கு - (அந்தரங்கைகளான) உங்களுக்கு, யான் உரைக்கும் - யான்சொல்லலாவது, ஒன்று-ஒரு, மாற்றம் - வார்த்தையானது, நோக்குகின்றேன்-பாராநின்றேன்: எங்கும் -

எல்லாவழியாலும், (இந்தவிகாரஹேதுவைப் பாசுரமிட்டுச்சொல்லும்படி), காணமாட்டேன் - காணமாட்டுகிறிலேன்; (ஆதலால், என்விகாரங்கொண்டு அறியுமித்தனை; அதாவது), வெம் - (ஆஶ்ரிதவிரோதிகளை யழியச்செய்யும்) வெவ்விய, கண் - பார்வையுடைய, பறவையின் - பெரியதிருவடியை நடத்தும், பாகன் - நிர்வாஹகனாய், (அந்த வாஹநாதிஷ்டாநத்தைக்காட்டி), எம் - என்னையடிமைகொண்ட, கோன் - ஸ்வாமியாய், (அநுபவிக்கைக்கீடாக), வேங்கடம் - திருமலையிலே, வாணனை - ஸாலஹனாய்வந்துநிற்கிற இவனை, வேண்டி - (இவ்வாகாரங்களடியாக) அபிநிவேஶித்து, சென்று - நடந்து, சங்கம் - (என்னுடைய) சங்குவளைகளானவை, சரிந்தன - சரிந்துகழன்றன; சாய் - (ஸ்வாபாவிகமான) வடிவிலொளியும், இழந்தேன் - இழந்தேன்; தடம் - பெரிய, முலை - முலைகள், பொன்னிறமாய் - (பசப்பாலே) பொன்னிறமாய், தளர்ந்தேன் - ஶிதில ஶரீரையானேன். நிர்த்தோஷப்ரமாணருடனாய், நிருபாதிகஸம்பந்தயுக்தனாய், நிரவதிக ஸௌலப்யவிஶிஷ்டனானவனென்று கருத்து.

ஈ.—முதற்பாட்டில், தோழிமாரானவர்கள், “உகவாதாரெதிரன்றோ லஜ்ஜிக்கவேண்டுவது? எங்களுக்கு லஜ்ஜிக்கவேணுமோ? உனக்கு ஓடுகிற தசையைச் சொல்லு” என்ன, “பிறர்க்குலஜ்ஜித்து உங்களுக்குச்சொல்லலாம் வார்த்தை பார்த்தவிடத்துஒன்றும் காண்கிறிலேன்” என்கிறாள்.

[நங்கள்வரிவளை] - முன்பு உங்களோடு என்னோடு வாசியற எல்லார்க்குமுண்டான வளை. “[illegible]” என்று ஸுகது:கங்களொன்றாகச் சொல்லிப்போந்த நீங்கள், அநுஷ்டாநத்திலே வந்தவாறே ஶோகிப்பதே! இப்போது அநுஷ்டாநத்தில் பேதமென்? என்னில்; நான் சங்கஞ்சரிந்தேன்: நீங்கள் வளை கழலாதிருந்தீகோள். [வரிவளை] - வரியையுடைத்தான வளையென்கை. இவள்கையில் வளைதொங்காதிருக்க, அவர்கள் வளையுரிப்பர்களோ? என்னில்,— பிராட்டியைப் பிரிந்தவிடத்தில் பெருமாளிற்காட்டில் தம்முடைய காவற்சோர்வாலே வந்ததென்று வ்யஸநமிரட்டித்திருக்கச் செய்தேயும் பெருமாள்தளருவ ரென்று தம்முடைய தளர்த்தி தோற்றாதபடி இளையபெருமாள் தரித்திருக்குமாபோலே, இவளையுரிப்பிக்கைக்காக வளையுரிப்பர்கள். [ஆயங்காளோ] - தோழிமாரிலும் தரமுண்டாயிருக்க, இதிலெல்லாரும் ஒருபடிப்பட்டிருக்கிறார்கள். ஆயங்கள்-தோழிமார். [ஓ] - விஷாதாதிஶயஸூசகம். அவர்களை ஸம்போதித்து வார்த்தை சொல்லுவதற்குமுன்னே விஷண்ணையாகிறாள். இவ்விஷாதஹேதுவைப் புறம்புள்ளார்க்கு மறைத்தாலும் எங்களுக்குச் சொல்லவேண்டாவோ? உனக்கோடுகிற தசையைச்சொல்லாய்! என்ன, [நம்முடை இத்யாதி] - தோழிமார் ஹிதஞ்சொல்லி இப்போது மீட்கப்பார்க்கிறார்களாகிலும், பேறும் இழவும் விழுக்காட்டிலொத்திருக்கைபாலே-நம்முடையேதலர் என்கிறாள். ஏதலர் - ஶத்ருக்கள். இவளுக்கு ஶத்ருக்களில்லையிறே; ஹிதஞ்சொல்லி மீட்கப்புகுகிற தாய்மாராயிற்று ஶத்ருக்கள். [ஏதலர் முன்புநாணி] - ஶத்ருக்கள்முன்பு லஜ்ஜித்து. [நுங்கட்கு] - தோழிமாரான உங்களுக்கு, நானொருவார்த்தை சொல்லவேணுமென்று ஆராய்ந்து பாராநின்றேன். [எங்கும் காணமாட்டேன்] - இதுக்கொரு பாசுரமிட்டுச் சொல்லவேணுமென்று பார்த்தவிடத்து ஒருபடியாலும் க்ஷமையாகிறிலேன். மாட்டேனென்கிறதென்? சிலர்க்குமறைத்து ஆப்தர்க்குச் சொல்லத்தட்டேன்? என்ன, [சங்கஞ்சரிந்தன] - இத்தை யார்க்கு மறைத்து ஆர்க்கு வெளியிடுவேன்? [சங்கஞ்சரிந்தன] -

"ஜமதக்ஷிதழ" என்றாற்போலே யிருக்கிறதாயிற்று. அதாவது - இவள் கையும் வளையு மாயிராதவன்று நாயகனுளனாகமாட்டான்: இருவருமான சேர்த்தியிலேயுண்டாகக்கடவ உபயவிபூதியுமழியும்; இவள்கையும் வளையுமாயிருக்க நாயகனுளனும்: இருவருமான சேர்த்தியிலே உபயவிபூதியும் உஜ்ஜீவிக்கும். [சாயிழந்தேன்] - அவனோடுகலந்து பெற்றதாய் அவன்வருமளவும் தரிக்கைக்குக் கைம்முதலான எழிலையுமிழந்தேன். [தட முலேஇத்யாதி] - அவன்வந்தாலும் ப்ரயோஜநமில்லாதபடி அவன்கைம்முதலும் அழிந் தது. [தடமுலே] - போக்தாவால் உண்டறுக்கவொண்ணாத பரப்பையுடைத்தாகை. [பொன்னிறமாய்] - விவர்ணமாய்; ஸக்ஷேத்ரம் மணலிட்டாய்ப் போமாபோலே. [தளர்ந் தேன்] - இழந்தவை வந்தாலும் தொங்குகைக்கு ஆஸ்ரயமில்லை. [வெங்கட்பறவை யித் யாதி] - இழந்த இழவுக்கு ஹேதுசொல்லுகிறது. [வெங்கட்பறவை] - வெவ்விய கண்ணையுடைய பெரியதிருவடி வருமிடத்தில் ப்ரபலப்ரதிபந்தகங்களைப் போக்கிக் கொடுவரவல்லனென்னுதல்: ஸம்ஸ்லேஷதசையில் கண்ணற்றுக் கொடுபோமவனென் னுதல். "சக்ஷுஷ: க்ஷுரஸ்ருஜஸ:". [பறவையின் பாகனெங்கோன்] - பெரிய திருவடிமுதுகிலிருப்பைக் காட்டியாயிற்று என்னை யநந்யார்ஹையாக்கிற்று. [வேங்கட வாணனை] - பரமபதத்திலிருப்பை யாசைப்பட்டேனல்லேன்; நமக்குக் காட்சிதருகைக்கு வரநின்ற விடத்திலே. [வேண்டிச் சென்றே]-நம்மையாசைப்பட்டு நிற்கிறவனைக் காண ஆசைப்பட்டுச் சென்று. அவன்தான் வரக்கண்டிருக்கையன்றிக்கே, அவனிருந்த தேசத்தளவும் சென்று, அபேக்ஷிதம்பெறுமையாலே சங்கஞ் சரிந்தன. [சென்று]-பால் சென்றாற்போலேசென்று என்றுமாம்.

ஈடு.—முதற்பாட்டு. தோழிமாரானவர்கள், "உகவாதார் எதிரன்றோ லஜ் ஜிக்கவேண்டுவது? எங்களுக்கு லஜ்ஜிக்கவேணுமோ! உனக்கோடுகிற தசையைச்சொல்லு" என்ன, பிறர்க்குமறைத்து உங்களுக்குச் சொல்லலாம்வார்த்தை பார்த்தவிடத்து ஒன்றுங் காண்கிறிலே னென்கிறாள்.

[நங்கள்வரிவளை] - முன்பு உங்களோடு என்னோடு வாசியற எல்லார்க்குமுண் டான வளை. †"ஏகம்து:கம்ஸுகஞ்சநௌ" (ஏகம்துஃகம்ஸுகஞ்சநௌ) என்று ஸுகதுஃகங்களொன்றாகச் சொல்லிப்போந்த நீங்கள் அநுஷ்டாநத்திலே வந்தவாறே ஹேஷிப்பதே! இப்போது அநுஷ்டாநத்தில் பேதமேன்? என்னில்,—கையிலேகண்டி லோமோ? நான் சங்கையற்றிருந்தேன், நீங்கள் சங்கையுடையீகோளாயிருந்திகோள். [வரிவளை] - வரியையுடைய வளையென்னுதல், தர்ஸநீயமான வளையென்னுதல். இவளை தரிப்பிக்கைக்காக அவர்களும் வருந்தி தரித்திருப்பர்களிறே. பிராட்டியைப் பிரிந்தவிடத்

முதற்பாட்டு.—நங்கள் இத்யாதி. "நம்முடையேதலர்" என்றுதொடங்கி, "காணமாட் டேன்" என்னுமளவும் கடாக்ஷித்து அவதாரிகை - தோழிமார் இத்யாதி.

"நங்கள்" என்றத்தை வரிவளைக்கு விசேஷணமாக்கி, விஸ்லேஷதசையிலே வரி வளையெங்கேயென்ன - முன்பு உங்களோடு இத்யாதி. 'நங்கள்" என்று - ஆத்மநிவேதநவசந மாய், "வரிவளையையுடைய நங்களாயங்காளோ" என்று - தோழிமார்க்கு விசேஷணமாக்கி, அர்த் தாந்தரம் - ஏகம்து:க இத்யாதி. ரஸோக்தியாகக் கீழ்வாக்யவிவரணம் - நான்சங்கையற்று இத்யாதி. சங்கு - வளையென்று ஸ்வபாவார்த்தம்; சங்கையென்று-யுக்தி. இவள்கையில் வளை தொங்காதிருக்க அவர்கள் தரித்திருக்கை ஸ்நேஹத்துக்குக் கொத்தையன்றோ? என்ன - இவளை தரிப்பிக்கைக்காக இத்யாதி. இதுக்கு த்ருஷ்டாந்தம் - பிராட்டியை இத்யாதி. காவற்சோர்வு -

† ராமா-கிஷ்-டு-கஅ.

தில் பெருமாளிற்காட்டிலும் "தம்முடையகாவற்சோர்வாலே வந்தது" என்று தளர்த்தி இரட்டித்திருக்கச்செய்தேயும், பெருமாள் தளருவரென்று தம்முடைய தளர்த்திதோற்றாத படி இளையபெருமாள் தரித்திருந்தாற்போலே, இவர்களும் தரித்திருப்பர்கள் வளையை. [ஆயங்காளோ] - தோழிமாரிலும் தரமுண்டாயிருக்க, இப்போது எல்லாரும் ஒருபடிப்பட்டிருக்கிறார்கள். [ஆயங்காள்] - தோழிமீர்! [ஓ]-விஷாதாதிசய ஸூசகம். அவர்களை ஸம்போதித்துவைத்து வார்த்தைசொல்லுவதுக்குமுன்னே விஷண்ணையாகிறாள். இவ்விஷாத ஹேதுவைப் புறம்புள்ளார்க்கு மறைத்தாயாகிலும் எங்களுக்குச் சோல்லவேண்டாவோ? உனக்கு ஓடுகிறதசையைச் சோல்லாயென்ன, [நம்முடை இத்யாதி] - தோழிமார் இப்போது ஹிதஞ்சோல்லிமீட்கப் பாராநின்றார்களாகிலும், பெறுமிடத்தல் விழக்காட்டில் ஒத்திருக்கையாலே 'நம்முடை ஏதலர்' என்கிறாள். ஏதலர் - சத்ருக்கள். இவளுக்குச் சில சத்ருக்களில்லையிறே; ஹிதஞ்சோல்லிமீட்கப் பார்க்கிற தாய்மாரிறே சத்ருக்கள். [ஏதலர்முன்புநாணி]- சத்ருக்கள்முன்பு லஜ்ஜித்து. [நுங்கட்கு] - தோழிமாரான உங்களுக்கு. [யான் இத்யாதி] -நான் ஒருவார்த்தைசொல்லவேணுமென்று ஆராய்ந்து பாராநின்றேன். [எங்குங்காணமாட்டேன்] - இதுக்கு ஒருபாசுரமிட்டுச்சோல்லவேணுமென்று பார்த்தவிடத்து ஒருபடியாலும் க்ஷமையாகிறிலேன். மாட்டேனென்கிறதென்? சிலர்க்கு மறைத்து ஆப்தர்க்குச்சொல்லத்தட்டேன்? என்ன, - [சங்கம்சரிந்தன] - நான்இத்தை யார்க்குமறைத்து ஆர்க்குவெளியிடுவது? "ஜகதஸ்தமிதம்" (ஜகதஸ்தமிதம்) என்றாற்போலேகாணும் இருக்கிறது. இவளைக்கிடையாதபோது நாயகனில்லை; நாயகனில்லாத போது உபயவிபூதியுமில்லை. அதாவது - இவள கையும்வளையுமாயிராதவன்று நாயகன் உளனாகமாட்டான: இருவருமானசேர்த்தியிலே உண்டாகக்கடவ உபயவிபூதியும் அழியும். [சாயிழந்தன] - அவனோடேகலந்துபெற்றதாய அவன் வருமளவும் தரிக்கைக்குக் கைம்முதலான எழிலையுமிழந்தேன். [தடமுலைஇத்யாதி] - அவன்வந்தாலும் ப்ரயோஜநமில்லாதபடி அவன்கைம்முதலும் அழிந்தது. [தடமுலை] - போக்தாவாலுண்டறுக்கவோண்ணாத பரப்பையுடைய முலை. [போன்னிறமாய்] - விவர்ணமாய். ஸுபக்ஷேத்ரம் மணலிட்டாய்ப் போமாபோலே. [தளர்ந்தேன] - இழந்தவைவந்தாலும் தோங்குகைக்கு ஆஶ்ரயமில்லை. [வேங்கட்பறவையின் பாகனேங்கோன்இத்யாதி] - இழந்த இழவுக்கு ஹேது சோல்லுகிறது. [வேங்கட்பறவை] - வெவ்வியகண்ணையுடைய பெரியதிருவடி. வருமிடத்தில் ப்ரதபந்தகங்களையும போக்கிக்கோடுவரு மென்னுதல். ஸம்ஶ்லேஷ

ரக்ஷாச்யுதி. வஹுவசநார்த்தம் - தோழிமாரிலும் இத்யாதி. விஷாதாதிசயமேதென்ன - அவர்களை இத்யாதி. என்னுடையேதலர் என்னுமே, மீட்கப்பார்க்கிற தோழிமாரையுங்கூட்டி "நம்முடையேதலர்" என்கிறதென் ? என்ன - தோழிமார் இப்போது இத்யாதி. இப்போது "ஏதலர்" என்கிறது ஆரை? என்ன - இவளுக்குச்சில இத்யாதி. "மாட்டேன்" என்றதுக்கு அர்த்தம் - இதுக்கொருபாசுரம் இத்யாதி. கழன்றன என்னுமே, "சரிந்தன" என்றதுக்கு பாவம் - ஜகதஸ்தமிதம் இத்யாதி. அஸ்தமிதமானபடி எப்படி? என்ன - இவளைக்கிடையாதபோது இத்யாதி வாக்யத்வயம். உக்தார்த்தவிவரணம் - அதாவது இத்யாதி வாக்யத்வயம். "சாய்" என்றது - ஸமுதாயஶோபை. போச்சுதென்னுதே, "இழந்தேன்" என்றதுக்கு பாவம் - அவனோடே இத்யாதி. "தடமுலை" என்று வர்ணித்து, "பொன்னிறமாய்" என்றதுக்கு பாவம் - அவன்வந்தாலும் இத்யாதி. "தடம்" என்றதுக்கு அர்த்தம் - போக்தாவால் இத்யாதி. "தடமுலை" என்று - முலையினுடைய போக்யதையைச்சொல்லி, பொன்னிறமாச்சுதென்றதுக்கு த்ருஷ்டாந்தம்-ஸுக்ஷேத்

தசையிலே பிரித்துக்கொடுபோமென்னுதல்; †“அக்ரூரஃக்ரூரஹ்ருதய:” (அக்ரூரஃ க்ரூரஹ்ருதய:.) [பறவையின்பாகனெங்கோன்] - பெரியதிருவடிமுதுகி லிருப்பைக்காட்டியாயிற்று, என்னை அநந்யார்ஹையாக்கிற்று. [வேங்கடவாணனை] - பரமபதத்திலிருப்பை ஆசைப்பட்டேனல்லேன்: நமக்குக் காட்சிதருகைக்கு வரநின்றவிடத்தே. [வேண்டிச் சென்றே] - நம்மைவேண்டிவந்தவனை நாம் வேண்டிச்சென்று: நாம்ஆசைப்பட்டுச்சென்று என்றபடி. அவன்தான் வரக்கண்டிருக்கையன்றிக்கே, அவனிருந்ததேசத்தளவும் சென்று அபேக்ஷிதம் பெறுமையாலே, சங்கஞ் சரிந்தன. [சென்று]-பால்சென்றாற்போலே சென்று அற்றேன்றுமாம். (க)

இரண்டாம் பாட்டு.

வேண்டிச்சென்றேன்றுபெறுகிற்பாரில் என்னுடைத்தோழியர்நுங் கட்கேலும், ஈண்டிதுரைக்கும்படியை அந்தோ! காண்கின்றிலேனிடராட்டி யேன்நான், காண்தகு தாமரைக்கண்ணன்கள்வன் விண்ணவர்கோன் நங்கள்கோனைக்கண்டால், ஈண்டியசங்கும்நிறைவுங்கோள்வானெத்தனை காலம்இளைக்கின்றேனே !

*ஆ.—(வேண்டிச்சென்று) - நீ ஆசைப்பட்ட விஷயம் திருவேங்கடமுடையானாகில் அது யுக்தம். உனக்குங்கூட ஸ்ப்ருஹணீயனானவனாகிலும், நீயாசைப்பட்டால் கிடையாததுண்டோ? என்னில்,— ஆசைப்பட்டபொருள் பெறவாரெல்லாரிலும் தலையாயிருக்கச்செய்தேயும், ஆசைப்பட்டுப்பெறாதே நான்படுகிறவ்யஸநம் வாசாமகோசரமாகையாலே வ்யஸநப்படுமத்தனையல்லது உங்களுக்குச் சொல்லுகைக்கு ஒருசொல்லு சொல்லக் காண்கிறிலேன். அவனை ஆசைப்பட்டால் உத்தரக்ஷணம் பெறுதொழியில் தளர்ந்துகொண்டு நிற்குமித்தனையோ வென்னில்; - ஸர்வாநுஸந்தேயமாநமானாலும் அபூர்வ தர்ஸநீயமாய், புண்டரீகதளாமலாயதமான திருக்கண்களையுமுடையனாய் தத்ஸௌந்தர்ய பரிமுஷித ஸகலஜந மநோநயநனாய், * அயர்வறுமமரர்களதிபதியா யிருந்துவைத்து, என்னை அடிமைகொண்ட பரமஶீலனாயிருந்த அவனை ஆசைப்பட்டுப் பெறாதே, என்னுடைய வலயாதிபூஷணங்களையும், ஆத்மகுணங்களையும் இழந்து, அவைகொள்கைக்கு நான்வருந்துகிறது எத்தனைகாலமுண்டு? என்கிறார்.*

ஒ.—இரண்டாம்பாட்டில், உனக்கு அத்யந்தம் அந்தரங்கைளாயிருக்கிற எங்களுக்கு உன்னுடைய நோவு சொல்லலாகாததுமுண்டோ? என்ன,— என் து:கத்தின் மிகுதியாலே உங்களுக்குச்சொல்லும் பாசுரமறிகிறிலேனென்கிறாள்.

ரம் இத்யாதி. இரண்டாமர்த்தத்துக்கு ப்ரமாணம் - அக்ரூர: இத்யாதி. “வேங்கடவாணனை” என்றதுக்கு வ்யாவர்த்யம் - பரமபதத்தில் இத்யாதி. “வேண்டிச்சென்று” என்றதுக்கு ஸப்தார்த்தம் - நம்மை இத்யாதி. “சென்று” என்றதுக்கு பாவம் - அவன்தான் இத்யாதி. “சென்று” என்றதுக்கு அர்த்தாந்தரம் - பால் இத்யாதி. முந்தின அர்த்தத்துக்கு, “சென்று” என்றது - போயென்றபடி. இரண்டாம்அர்த்தத்துக்கு, இளைத்தென்றபடி. ‘வெங்கட்பறவை’ என்றுதொடங்கி, வேண்டிச்சென்று - கிடையாமையாலே ‘சங்கம் சரிந்தன’ என்றுதொடங்கி, ‘தளர்ந்தேன்’-ஆசையாலே,‘நங்கள்வரிவளை’ என்றுதொடங்கி, ‘காணமாட்டேன்’ இத்யந்வய:. (க)

---

†விஷ்ணு-பு-ரு-கஅ ௩௦.

[வேண்டிச் சென்றேன்றுதொடங்கி] - ஏதேனுமொன்று என்னைவந்து அர்த்தித்தாலும் அதுபெறும் வரிசையையுடைய தோழிமாரான உங்களுக்காகிலும். சென்றேன்றது - வந்தேன்றவாறு. [ஈண்டென்று தொடங்கி] - படுகிறது:கத்தை உங்களுக்குச்சொல்லவேண்டாதபடி நோவாட்டியான நான் இப்போது இதுசொல்லும்படி அறிகிறிலேன். [காண்தகுதாமரைக் கண்ணனென்று மேலுக்கு] - எப்போதும் காணவேண்டும்படி ஸ்ப்ருஹணீயமான திருக்கண்களைக்காட்டிஎன்னுடைய ஆத்மாத்மீயங்களை அபஹரித்து அயர்வறுமமரர்களை யடிமைகொண்டாற்போலே நம்மை யடிமைகொண்டவனைக் கண்டிடில் அவன்பக்கலிலே திரண்டவளையும் நிறைவும் கொள்கைக்காக எத்தனை காலம் து:கப்படக்கடவேன்?

ப.—அநந்தரம், அநுபாவ்யாகார விசேஷத்தையுடையனை அவன்அபஹரித்த வளைமுதலானவற்றை வாங்குகைக்கு எத்தனைகாலம் க்லேசிக்கிறேன்?உங்களுக்கு அகப்பட இதுசொல்லும் விரகறிகிறிலேனென்கிறாள்.

சென்று - (இவன்பாடே) சென்று, ஒன்று - ஒன்று, வேண்டி - வேண்டி, பெறுகிற்பாரில் - பெறவேணுமென்றிருப்பாரில், என்னுடை - எனக்கு அஸாதாரணைகளான, தோழியர் - தோழியாரான, நுங்கட்கேலும் - உங்களுக்கேயாகிலும், ஈண்டு - இவ்விடத்தில், இது-இந்த அவஸாதஹேதுவை, இடராட்டியேன்-து:காதிசயத்தையான, நான் - நான், (சொல்லி யாறவேண்டி யிருக்கச்செய்தே), உரைக்கும்படியை - சொல்லும்படி, அந்தோ - ஐயோ ! காண்கிறிலேன் - காண்கிறிலேன்; (து:கமேதென்னில்), காண் - (எப்போதும்) காண்கைக்கு, தகு - தக்கிருப்பதாய், தாமரை - (விகாஸம், செவ்வி, குளிர்த்தி, நாற்றங்களாலே) தாமரைபோன்றிருக்கிற, கண்ணன் - கண்ணையுடையனாய், கள்வன் - (பார்வையாலே தன் சௌந்தர்யத்தைக் காட்டி வஞ்சித்து ஸர்வஸ்வாபஹாரம்பண்ணின) க்ரித்ரிமனாய், (இக்கண்ணழகாலே), விண்ணவர் - ஸூரிகளையடங்க, கோன் - ஆலற்றப்பண்ணுமவனாய், (அப்படி), நங்கள் - என்னையும், கோனை - ஈடுபடுத்தினவனை, கண்டால் - கண்டால், ஈண்டிய - (என்பக்கலில் நின்றும்) அங்கே போய்க்குவிந்த, சங்கும் - வரிவளையும், நிறைவும் - ஸ்த்ரீத்வாதிபூர்த்தியையும், கொள்வான் - வாங்கிக்கொள்ளுகைக்காக, எத்தனை - எத்தனை, காலம் - காலமுண்டு, இளைக்கின்றேன் - தளர்ந்து க்லேசிக்கிறேன்.

இ.—இரண்டாம்பாட்டில், "இப்படியானாலும் அந்தரங்கைகளான எங்களுக்கு உன்நோயிற் சொல்லலாகாததுண்டோ? சொல்லாய்!" என்ன,'து:காநுபவத்தால் வந்தஇளைப்பின் மிகுதியாலே உங்களுக்குச்சொல்லலாம் பாசுரமறிகிறிலேன்'என்கிறாள்.

[வேண்டிச்சென்றுஒன்றுபெறுகிற்பாரில்] - என்பக்கலிலே வந்து ஒன்றையபேக்ஷித்துப் பெறுமவர்களில் தலையான வரிசையையுடைய தோழிமாரான உங்களுக்காகிலும். [என்னுடைத் தோழிமார்] - நிருபாதிகஸௌஹார்த்தமுடைய தோழிமார் : உயிர்த்தோழியர். சென்றேன்றது - வந்தேன்றபடி. அங்ஙனன்றிக்கே, "அவனை ஒன்று அபேக்ஷித்துச் சென்றாரில் ஓர் அபேக்ஷிதம்பெற்றறிவாரில்லை; "ஸகலபலப்ரதோஹி விஷ்ணு:' என்கிறது - உக்திமாத்ரமே"என்றொரு தமிழன் நிர்வஹித்தான். [ஈண்டு] - இப்போது முன்பெல்லாம் சொல்லிப் போந்தேனாகிலும்இப்போது சொல்லலாவது காண்கிறிலேன். [இது] - எல்லாவற்றிலும் பாசுரமிட்டுச் சொல்லிப் போந்தேனாகிலும் இது

சொல்லுகைக்குப் பாசுரம் காண்கிறிலேன். [உரைக்கும்படியை] - நெஞ்சிலே விஷமூர்ந் தாற்போலே யூராநின்றது, பாசுரமிட்டுச் சொல்லலாவதில்லை. [அந்தோ; காண்கின்றிலேன்] - எனக்கோடுகிற ஊமையை உங்களுக்குச் சொல்லி அகஞ்சுரிப்படுத்தித்தரிக்க, கேட்கிறவுங்களிலும் எனக்குத் தேட்டமாயிருக்க, பாசுரம் காண்கிறிலேன். "ஹ்ருதா வெவொவயார்யுதெ". [இடராட்டியேன் நான்]-என்னிடருக்கன்றிக்கே, "சொல்லு, சொல்லு" என்று அலைக்கிறவுங்களுக்கன்றிபே, உடம்புப்படுகிற நான். [காண்தகுதாமரைக்கண்ணன்] - காணத்தக்கிருந்துள்ள கண்களையுடையவன். ஸதாதர்சநயோக்யமான கண்கள். விகாஸம், செவ்வி, குளிர்த்தி, நாற்றம் இவற்றாலே பங்கஜஸத்ருசமாயிருக்கை. [கள்வன்] - "நானும் என்னுடைமையும் உன்னதன்றோ" என்று ஒருகால் தன்செல்லாமையை ஆவிஷ்கரித்து, ஆத்மாத்மீயங்களை யபஹரித்தவன். [விண்ணவர்கோன் நங்கள் கோனை] - நித்யஸூரிகளைப்போலே என்னை அநந்யார்ஹையாக்கினவன். ஒருவிபூதியாகப் படுத்தினபாட்டைக்கிடீர் என்னையொருத்தியையும் படுத்திற்று! [கண்டால்]- காணப்பெற்றால். [ஈண்டியசங்கும் நிறைவும் கொள்வான்] - அவன்பக்கலிலே திரண்ட வளையையும், அடக்கத்தையும் அவன்பக்கலிலே கொள்ளுகைக்காக. தன்பக்கல் தொங்காதவை யெல்லாவற்றுக்கும் புகல் அங்கேயன்றிருக்குமே. [எத்தனை காலம் இளைக்கின்றேனே] - இவ்வாசையோடே எத்தனைகாலமென்று இளைத்துப்போருகிறது?

ஈடு — இரண்டாம்பாட்டு. "இப்படியானாலும் அந்தரங்கைகளான எங்களுக்கு நோவிற் சொல்லலாகாததுண்டோ? சொல்லாய்" என்ன, "து:காநுபவத்தால்வந்த இளைப்பின் மிகுதியாலே உங்களுக்குச் சொல்லும் பாசுரம் அறிகிறிலேன்" என்கிறாள்.

[வேண்டிச்சென்றொன்று பெறுகிற்பாரில் இத்யாதி]-என்பக்கலிலே வந்துஒன்றை யபேக்ஷித்துப் பெறுமவர்களில் தலையான வரிசையையுடைய தோழிமாரான உங்களுக்காகிலும். [என்னுடைத்தோழியர்] - உயிர்த்தோழியர். சென்றென்றது - வந்தென்றபடி. அங்ஙனன்றிக்கே, பதஸங்கத்தைப்பண்ணி, [வேண்டிச்சென்றொன்றுபெறுகிற்பார்இல்]- அவனை ஒன்றபேக்ஷித்துச்சென்றாரில் ஓரபேக்ஷிதம்பெற்றாரில்லை; "**ஸகலபலப்ரதோ ஹி விஷ்ணு:**" (ஸகலபலப்ரதோஹிவிஷ்ணு:) 'வேண்டிற்றெல்லாந்தரும்' என்கிற விடம் உக்திமாத்ரமே" என்று நெருப்பிழன் நிர்வஹித்தான். [ஈண்டு] - இப்போது. முன்பெல்லாம் சொல்லிப் போந்தேனேயாகிலும் இப்போது சொல்லலாவதுகாண்கிறிலேன். [இது] - எல்லாவற்றிலும் பாசுரமிட்டுச் சொல்லிப்போந்தேனேயாகிலும், இது சொல்லு

இரண்டாம்பாட்டு.—வேண்டி இத்யாதி. "ஈண்டுஇதுரைக்கும்படியை யந்தோ காண்கின்றிலேனிடராட்டியேன்" என்றவற்றைக் கடாக்ஷித்து அவதாரிகை - இப்படியானாலும் இத்யாதி.

"சென்று வேண்டி - ஒன்றுபெறுகிற்பாரில் என்னுடைத்தோழியர் நுங்கட்கேலும்", என்று அந்வயித்து அர்த்தம் - என்பக்கலிலே இத்யாதி. "தலையானவரிசையையுடைய" என்றதுக்கு ஸப்தமேதென்ன - என்னுடைத்தோழியர் இத்யாதி. இவ்வர்த்தத்துக்கு, "பெறுகிற்பாரில்" என்றது - ஸப்தமீ, "சென்று" என்றது - விபரீதலக்ஷணையாய், வந்தென்றபடி. த்விதீயார்த்தம் - வெறுப்பிலே. பதஸங்கத்தைப் பண்ணியென்றது - "பெறுகிற்பார்" என்கிற இவ்வளவிலே பதத்தைநிறுத்தி என்றபடி. "இல்" என்றது - இல்லையென்றபடி. "பெறுகிற்பார்"-பெற்றாரென்றபடி. "ஈண்டு" என்கிறதுக்கு ஹாவம் - முன்பெல்லாம் இத்யாதி. "இது" என்றதுக்கு வாஸனை -

கைக்குப் பாசுரங் காண்கிறிலேன். [உரைக்கும்படியை] - நெஞ்சிலே விஷமூர்ந்தாற்போலே ஊராநின்றது; பாசுரமிட்டுச் சொல்லலாவதில்லை. [அந்தோ! காண்கின்றிலேன்]- எனக்கோடுகிற தசையை உங்களுக்குச் சொல்லி அகஞ்சுரிப்படுத்தி ப்ரீக்கைக்கு, கேட்கிற உங்களிலும் எனக்குத் தேட்டமாயிருக்க, பாசுரங் காண்கிறிலேன். † "ப்ரலாபைரேவ தார்யதே" (ப்ரலாபைரேவ தார்யதே). [இடராட்டியேன்நான்] - நோவாட்டியேன் நான். என் இடருக்கன்றிக்கே, "சொல்லு, சொல்லு" என்றலைக்கிற உங்களுக்கன்றிக்கே, து:கப்படுகிற நான்: [காண்தகு தாமரைக்கண்ணன்] - காணத்தக்கிருந்துள்ள கண்ணையுடையவன். ஸதா த்ருஶ்யயோக்யமான கண்கள்: விகாஸம், செவ்வி, குளிர்த்தி, நாற்றம். இவற்றால் பங்கஜஸத்ருஶமாயிருக்கை. [கள்வன்] - நோக்காலே தன் செல்லாமையை ஆவிஷ்கரித்து, என் ஆத்மாத்மீயங்களை அபஹரித்தவன். [விண்ணவர்கோன் நங்கள்கோனை] - நித்யஸூரிகளைப்போலே என்னை அநந்யார்ஹையாக்கினவன். ஒருவிபூதியாகப் படுத்தின பாட்டைக்கிடீர் என்னையொருத்தியையும் படுத்திற்று. [கண்டால்] - காணப்பெற்றால். [ஈண்டியசங்கும்] - திரண்டவளையையும். ஒருவலம்புரி கிடந்தவிடத்தே ஆயிரம் சங்குசேரும். "வலம்புரியாழியன்வேங்கடவேதியன்" இறே. [நிறைவும்] - அடக்கத்தையும். [கொள்வான்] - கொள்ளுகைக்காக. தன் பக்கல் தோங்காததைவையெல்லாவற்றுக்கும் புகல் அங்கேயென்றிருக்குமே. இவளுக்குக் கைமுதல் அங்கேயிறே. இதுவாகில் உன்துணிவு காலஞ்சென்றவாறே நீயே இளைத்துமீளுகிறாயென்ன?—[எத்தனை காலமிளைக்கின்றேனே] - இதுசொல்லிப் பகட்டக் கேட்பனோ? இவ்வாசையோடே எத்தனைகாலமுண்டிளைத்துப்போருகிறது? (உ)

எல்லாவற்றிலும் இத்யாதி. "உரைக்கும்படியை" என்றதுக்கு வாஸநை - நெஞ்சிலே இத்யாதி. "உரைக்கும்படியை - காணமாட்டேன்" என்கையாலே - நெஞ்சில் நிறைந்திருக்கிறது ஸித்தம். "அந்தோ!" என்று விஷண்ணையாகிறவளுடைய பாவம் - எனக்கோடுகிற இத்யாதி. அகஞ்சுரிப்படுத்தி - ஸங்கோசிப்பித்து. அப்படி சொலவு ப்ராணத்துக்குடலாய்த் தேட்டமாயிருக்குமோவென்ன - ப்ரலாபைரேவ: இத்யாதி. நோவேது? என்ன - என் இடருக்கு இத்யாதி. "இடராட்டியேன்" என்றதுக்கு அவதாரிகையிலொரு பாவமும், இங்கேயொரு பாவமும். விவரணம் - ஸதா த்ருஶ்ய இத்யாதி. "தாமரைக்கண்" என்றதுக்கு அர்த்தம் - விகாஸம் இத்யாதி. "தாமரைக்கண்ணன்" என்றத்தையும் கூட்டி, "கள்வன்" என்றதுக்கு பாவம் - நோக்காலே இத்யாதி. இத்தால் பாவம்-ஒருவிபூதியாக இத்யாதி. இவள்கையிற்சங்குகள் அவனிடத்தில் திரளுகைக்கு ஹேதுவேதென்ன - ஒருவலம்புரி இத்யாதி. அவனுக்கு வலம்புரியுண்டோவென்ன - வலம்புரியாழியன் இத்யாதி. திருமொழி. ஸ்பஷ்டோர்த்த:. அவனிடத்திலே கொள்ளவேணுமென்கிறதென்? என்ன - தன்பக்கல் இத்யாதி. கேட்பனோ - கேட்பேனோவென்றபடி. பகட்ட - ப்ரமிப்பிக்க. 'காண்தகுதாமரை' என்றுதொடங்கி, எத்தனைகாலமிளைக்கின்றேன்; ஆகையாலே, இடராட்டியேன் நான் - சென்றொன்று - வேண்டி - பெறுகிற்பாரில் வைத்துக்கொண்டு, 'என்னுடைத்தோழியர் நுங்கட்கேலும் ஈண்டிதுரைக்கும்படியை - காண்கின்றிலேன் - அந்தோ!' இத்யந்வய:. அன்றிக்கே, 'காண்தகுதாமரை' என்றுதொடங்கி, இளைக்கின்றேன்; ஆகையாலே, வேண்டிச்சென்றொன்று பெறுகிற்பாரில்: 'என்னுடைத்தோழியர் என்றுதொடங்கி, இடராட்டியேன்நான் - காண்கின்றிலேன் - அந்தோ!' என்று தமிழன் நிர்வாஹத்துக்கு அந்வயம். "தேவேஶ ஸிம்ஹாஸந மத்யஸம்ஸ்தம் ஜகஸ்ருஷ்டிஸ்திதிஸம்ஹாரகாரணம் ... வீர்ய: ... ஸாத்யவிஷ்ணும் ஸம்ப்ராப்தஸைந்யஶோபிதவிஷ்ணு:" இதி ஶ்ரீ விஷ்ணுபுராணே.

† "ஶோகக்ஷோபே ச ஹ்ருதயம்" இத்யாதி உத்தரராம சரிதநாடகே.

மூன்றும் பாட்டு.

காலமிளைக்கிலல்லால்வினையேன்நான் இளைக்கின்றிலன்கண்டுகோண்மின்
ஞாலம்அறியப்பழிசுமந்தேன் நன்னுதலீர்! இனிநாணித்தானென் ?
நீலமலர்நெடுஞ்சோதிசூழ்ந்த நீண்டமுகில்வண்ணன்கண்ணன்கொண்ட
கோலவளையொடுமாமைகொள்வான் எத்தனைகாலமுங்கூடச்சென்றே.

ஆ.—(காலமிளைக்கில்.) - அவனை யாசைப்பட்டுப் பெறாதே உனக்குள்ள வையுமிழந்து அவைபெறுகைக்கு நெடுங்காலம் வருந்தியும் பெறாதபின்பு இனித்தான் வருந்தினால் கிடைக்குமோ? இனி, அவைபெறுகையில் வருந்தாதேவிட்டாலோ ? என்னில்,—நிரவதிக நீலஜ்யோதி:பரிவ்ருதமஹாவலாஹக ஸத்ருஶமான திருமேனியையுடையனான க்ருஷ்ணனாலே அபஹ்ருதமான கோலவளையொடுமாமைகொள்வான் உத்யுக்தையான நான், எத்தனைகாலம் கூடச்சென்றாகிலும் கொள்வன் ? இக்காலதத்வந்தான் முடிந்துபோமத்தனையல்லது நான்கொண்டல்லதுவிடேன்; இத்தைக் கண்டு கொண்மின். அவன்தானாசைப்பட அவனுக்கும் அரியையாயிருக்கடவ நீ, "அவனையாசைப்பட்டால் உனக்குப் பழிவருமென்று லஜ்ஜையில்லையோ? என்னில்,—'ஞாலமறியப் பழிசுமந்தேன்: நன்னுதலீர்! இனி, நாணித்தானென் ?' என்கிறாள்.

ஒ.—மூன்றும்பாட்டில், நாங்கள் சொல்லவிட்டிலையேயாகிலும் நீயேயிளைத்து விடுகிறாயிறே? என்ன; நித்யகாலதத்வம் முடியிலும் நான் அவனைக் கண்டல்லதுவிடே

[ஞாலம் அறியவென்று மேலுக்கு] - "உனக்கு லஜ்ஜையில்லையோ" என்று தோழிமார் சொல்ல, நெடுங்காலம் ஸம்ஶ்லேஷார்த்தமாகச் சென்றாகிலும் நீலமாய்விகஸியாநின்றுள்ள மிக்க ஒளிசூழ்ந்து பெருத்த முகில்நிறத்தையுடைய க்ருஷ்ணன் இவ்வழகைக்காட்டி அபஹரித்துக்கொண்ட அழகியவளையும் மாமையும் கொள்ளுகைக்காக ஜகத்தெல்லாம் அறியும்படி பழிசுமந்தேன் ? இனி லஜ்ஜித்து என்னப்ரயோஜநமுண்டு?

ப.—அநந்தரம், அபிமதாஸிருப்யத்தை யுடையவனைச் சென்று கிட்டி என்வளைதொடக்கமானவை வாங்குமிடத்தில், நீங்கள் "அவன் துர்லபன்" என்று விலக்கிலும், காலம் முடிந்துபோகிலும், நான் கிட்டியல்லது விடேனென்கிறாள்.

நீலம் - நீலநிறமாய், மலர் - விகஸிதமாய், நெடும்-அபரிச்சேத்யமான, சோதி-தேஜஸ்ஸாலே, சூழ்ந்த - சூழப்பட்ட, நீண்டமுகில் - மஹாமேகம்போலே யிருக்கிற, வண்ணன் - நிறத்தையுடைய, கண்ணன் - க்ருஷ்ணன், கொண்ட - அபஹரித்துக் கொண்ட, கோலம் - ஊர்ஶநீயமான, வளையொடு - வளையோடேகூட, மாமை - என் நிறத்தை, எத்தனைகாலமும்-, கூடச்சென்றே - கூடச்சென்றேயாகிலும், கொள்வான் - கொள்ளுகைக்காக, ஞாலம் - லோகம், அறிய - அறியும்படி, பழி - (துணிந்து புறப்பட்டாளென்கிற) பழியை, சுமந்தேன் - சுமந்தேன்; நல் - அழகிய, நுதலீர் - நுதலையுடைய தோழிமீர்! இனி - இனி, நாணித்தான் - லஜ்ஜித்து, என் - என்னப்ரயோஜநமுண்டு ? (ஆதலால்), காலமிளைக்கிலல்லால் - காலமிளைத்து முடிந்துபோமதொழிய, வினையேன் - (அவன் துர்லபனானாலும் விடமாட்டாத) பாபத்தையுடைய, நான் - நான்,

இளைக்கின்றிலன் - இளைத்துவிடுகிறேனல்லேன்; கண்டுகொண்மின் - இது ப்ரத்யக்ஷித்துக்கொள்ளுங்கோள் !

இ.—மூன்றாம்பாட்டில், "ஸ்வவத்விஷயத்தில் ப்ராவண்யம் தண்ணிது" என்கிறோமல்லோம்: நாங்கள் சொல்லமீண்டிலையேயாகிலும் எட்டவொண்ணாத விஷயமாகையாலே நாட்சென்றவாறே நீயே மீளுவுதி; எங்கள் வார்த்தைக்கு மீண்டாயாகவமையாதோ?' என்ன ; காலதத்த்வம் முடியிலும் அவனைக்கண்டாலல்லது விடேனென்கிறாள்.

[காலம் இத்யாதி]-"கநாஷிஷூமவாநுகாமொநா௦தொஸ்" என்கிற காலம் முடியுமத்தனையல்லது நானிளைத்து மீளுகிறேனல்லேன். [நானிளைக்கின்றிலன்]-"நகாஷஸ்த்ருவெஷ்ஸ:" என்று காலத்துக்கும் அவ்வருகான விஷயத்தை விளாக்குலை கொண்ட அபிநிவேசத்தையுடைய நான் மீளுவேனோ? [வினையேன்] - "துர்லபம்" என்றாலும் விடவொண்ணாத விஷயத்திலே கைவைக்கும்படி பாபத்தைப்பண்ணினேனென்னுதல், நீங்கள்சொன்ன வார்த்தை நெஞ்சில் படாதபடியான பாபத்தைப்பண்ணினேனென்னுதல். [கண்டு கொண்மின்] - சொல்லுமத்தனைபோக்கி முடியாதுகாண் என்ன, ப்ரத்யக்ஷிக்கப் புகுகிற வர்த்தத்துக்கு வேறொன்று வேணுமோ? இப்படித்துணிந்தால் லோகமடையப் பழிப்புச்சொல்லாதோ? என்ன, [ஞாலம் அறியப் பழிசுமந்தேன்]- "நாடுமிரைக்கவே - யாமடலூர்ந்தும்" என்ற அன்றுதொடங்கிப் பழிசுமந்துபோருகிறேனன்றோ ? ஆனாலும் ஸ்த்ரீத்வப்ரயுக்தமான லஜ்ஜையைவிடாதே நோக்கவேண்டாவோ? என்ன-[நன்னுதலீர்இனி நாணித்தானென்] - ஜகத்தெல்லாம்அறியப் பழிசுமந்த பின்பு லஜ்ஜித்து என்ன ப்ரயோஜநமுண்டு? [நன்னுதலீர்] - நுதல் - நெற்றி. உங்கள்முகத்தில் எழிலழியாதிருக்க என்முகத்தில் எழில் குடிபோனபடி கண்டிகோளே! இந்நெடுவாசியைப் பார்த்தன்றோ ஒருவார்த்தை சொல்லுவது. [நீலமலர் இத்யாதி] — நீலமாய், விஸ்த்ருதமாய், அபரிச்சேத்யமான தேஜஸ்ஸு சூழ்ந்த அபரிச்சேத்யமான காளமேகத்தின் நிறம்போலேயிருக்கிற நிறத்தையுடைய ஆஸ்ரிதஸவ்யன் இவ்வழகைக் காட்டி யபஹரித்துக் கொண்ட. [கோலவளை] - அவன் தன்கையிலேயிட்டுக்கொண்டு கொண்டாடும் வளையாகையாலே - அழகிய வளையென்கிறாள். [மாமை] - அவன் கொண்டாடுகிற நிறம். [கொள்வான்] - வளையோடேகூடின நிறத்தை மீட்டுக்கொள்ளுகைக்காக. [எத்தனைகாலமும் கூடச்சென்றே] - நெடுங்காலம் ஸம்ஸ்லேஷார்த்தமாகச் சென்றாகிலுமென்னுதல், காலமெல்லாங் கூடியாகிலும் சென்றேன்னுதல். 'நீலமலரென்று தொடங்கி, கோலவளையொடுமாமை - எத்தனைகாலமும் கூடவாகிலும் சென்று - கொள்வன் ; ஞாலம் அறியப் பழிசுமந்தேன்: நன்னுதலீர் ! இனி நாணித்தானென் ? காலம் இளைக்கிலல்லால் வினையேன் நானிளைக்கின்றிலன் கண்டுகொண்மின்' என்று வாக்யயோஜநம் பண்ணி அந்வயிக்கை முக்யம்.

ஈடு.—மூன்றாம்பாட்டு. 'நாங்கள் சொல்ல மீண்டிலையாகிலும் எட்டவொண்ணாத விஷயமாகையாலே நாட்சென்றவாறே நீயேமீளுவுதி: எங்கள்வார்த்தைக்கு மீண்டாயாக அமையாதோ?' என்ன, - காலதத்த்வம் முடியிலும் நான் அவனைக் கண்டல்லது விடேனென்கிறாள்.

மூன்றாம்பாட்டு.—காலம் இத்யாதி. "காலமிளைக்கிலல்லால்வினையேன் நானிளைக்கின்றிலன்" என்ற பதத்தைக் காடக்ஷித்து அவதாரிகை - நாங்கள் இத்யாதி.

[காலம் இத்யாதி] - "அநாதிரப்பகவாந் காலோநாந்தோஸ்ய" (அநாதிர்ப்பகவாந் காலோநாந்தோஸ்ய) என்கிற காலம் முடிந்துபோமித்தனையல்லது நான் இளைத்து மீளுகிறிலேன். [நான் இளைக்கின்றிலன்]-† "நகாலஸ்தத்ரவைப்ரபு:" (நகாலஸ்தத்ரவைப்ரபு:) என்று காலத்துக்கும் அவ்வருகான விஷயத்தை விளாக்குலை கொண்ட அபிநிவேசத்தையுடைய நான் மீளுவனோ? [வினையேன்] - "துர்லபம்" என்றாலும் மீளவோண்ணாதவிஷயத்திலே கைவைக்கும்படியான பாபத்தைப் பண்ணினேனென்னுதல், நீங்கள்சொன்னவார்த்தை நெஞ்சில் படாதபடியான பாபத்தைப் பண்ணினே னென்னுதல். இப்போது இங்ஙனேசொன்னாயாகிலும் மேல்அநுஷ்டிக்கிறாய் நீயேயென்ன, [கண்டுகோண்மின்] - ப்ரத்யக்ஷிக்கலானவர்த்தம் பிறர்பக்கலிலே கேட்டறியவேணுமோ? உன்துணிவு இதுவானபின்பு எல்லாருமோக்கப் பழிசொல்லுகிறார்களிறேயென்ன, [ஞாலம்அறியப்பழிசுமந்தேன்] - இன்றோ நான்பழிசுமந்தது? "நாடுமிரைக்கவே" என்றவன்றே பழிசுமந்திலேனோ? "பழிசுமந்தேன் என்னுமது வார்த்தையோ? ஸ்த்ரீத்வப்ரயுக்தமான லஜ்ஜையை நோக்கவேண்டாவோ?" என்ன, [நன்னுதலீரினிநாணித்தானேன்] - நம் அழகு அழிவதற்குமுன்பன்றோ அவைநோக்கவேண்டுவது? ஜகத்ப்ரஸித்தமாய்விட்டதாகில் இனிலஜ்ஜித்து என்னப்ரயோஜநமுண்டு? [நன்னுதலீர்] நுதல்-நெற்றி. உங்கள்முகத்தில் எழிலழியாதிருக்க என்முகத்தில் எழில் குடிபோனபடி கண்டிகோளே; இந்தநெடுவாசியைப் பார்த்தன்றோ வார்த்தைசொல்லுவது? அது கிடக்க: அவன் ஸௌந்தர்யம் நம்மை நினைத்தபடிசெய்யவொட்டாநின்றதோவென்கிறது மேல்:—[நீலமலர் இத்யாதி]-நீலமான நிறத்தையுடைத்தாய். [மலர்]- விஸ்த்ருதமாய். [நெடு]-அபரிச்சேத்யமாய்.[சோதிசூழ்ந்தஇத்யாதி]-தேஜஸ்ஸாலே சூழப்பட்டு, அபரிச்சேத்யமாயிருப்பதொரு காளமேகத்தின் நிறம்போலேயிருக்கிற நிறத்தையுடையனாய், அவ்வடிவைப் பரார்த்தமாக்கிவைக்கும் அவன்அபஹரித்த சோபநீயமான வளையோடேகூட அவன் வாய்புலற்றும் நிறத்தையும் மீட்டுக்கொள்ளுகைக்காக, காலமெல்லாம் கூடச்சென்றும் - ஞாலமறியப்பழிசுமந்தேன், நன்னுதலீர்! இனிநாணித்தானேன்? [எத்தனைகாலமும் கூடச்சென்று] - நெடுங்காலம் ஸம்ஶ்லேஷார்த்தமாகச் சென்று என்னுதல். (ரு)

நீ இளையாமைக்கு ஹேதுவேதென்ன - நகால இத்யாதி. அநாதிரப்பகவாந் இத்யாதி- "ஸ்ருஷ்டிஸ்திதிஸம்ஹாரஸம்யுக்தஸம்யம:" இத்யுத்தரார்த்தம். (விஷ்ணு-பு-க-உ-உஅ) அவர்களை "நன்னுதலீர்" என்கையாலே தான் எழிலிழந்தமையை ஸூசித்தவத்கரிக்கு; '', என்றதுக்கு அர்த்தம் - நம்மழகு அழிவதற்கு இத்யாதி. "ஞாலமறியப்பழிசுமந்தேன் என்று கூட்டி ஸாவாந்தரம்-ஜகத்ப்ரஸித்தமாய் இத்யாதி. "நன்னுதலீர்" என்று அவர்களை ஸம்போதிக்கிறவளுடைய ஹார்த்தபாவம்-உங்கள்முகத்தில் இத்யாதி வாக்யத்வயமும். அதுகிடக்க-பரிஹரிக்குமது கிடக்கச்செய்தே என்றபடி. முந்தின அர்த்தத்துக்கு, "எத்தனைகாலமும் கூடச்சென்று" என்று-முழுச்சொல்லாய், காலமெல்லாம் கூடியுமென்றபடி. நீலமலர் என்றுதொடங்கி, 'கூடச்சென்று - ஞாலமறியப்பழிசுமந்தேன் நன்னுதலீரினிநாணித்தானென்? ஆகையாலே, காலமிளைக்கிலல்லால் வினையேன் நானிளைக்கின்றிலன் கண்டுகொண்மின்' இத்யந்வய:. அன்றிக்கே, "நாணித்தானென்" என்று க்ரியாபதமாகவுமாம். (ரு)

† இது, ஸ்ரீவிஷ்ணுபுராணத்தில் ப்ரதமாம்ஶத்தில் ஒன்பதாவது அத்தியாயத்திலுள்ளதென்பர்.

நான்காம் பாட்டு.

கூடச்சென்றேன் இனியென்கொடுக்கேன் ? கோல்வளைநெஞ்சத்
தொடக்கமெல்லாம், பாடற்றொழிய இழந்துவைகல் பல்வளையார்முன்பரி
சழிந்தேன், மாடக்கொடிமதிள்தென்குளந்தை வண்குடபால்நின்றமாயக்
கூத்தன் ஆடற்பறவையுயர்த்தவெல்போர் ஆழிவலவனைஆதரித்தே.

ஆ. --(கூடச்சென்றேன்) - இதுக்குமுன்பு அவனை யாசைப்பட்டு உன்னு டைய உபகரணங்களை இழந்தாற்போலே, இனியுள்ளவற்றையும் இழவாதே அவனை யாசைப்படத்தவிர்ந்தாலோ ? என்னில்,—ஹேமமணிமயகர ஸத்ருஶ ப்ராஸாதாலங்க்ருத மாய், த்வஜவிராஜித ப்ராகாரபரிவ்ருதமாய், தக்ஷிணதிக்திலகபூதமாயிருந்த திருக்குளந் தையில் பரமோதாரமான மேலைதிக்கிலே, வைநதேயவாஹநனாய், விஜிதரிபுநிகர ஸூதர் ஶந விஸ்ராந்த தக்ஷிணபுஜனாய்க்கொண்டு, ஸாந்ருத்தவதர்ஶநீயனாம்படி நின்றருளின அவனை ஆதரித்துக் கூடச்சென்றேன். சென்று, கோல்வளைநெஞ்சந்தொடக்கமெல்லாம் பாடற்றொழிய இழந்து வைகல் பல்வளையார்முன்னே என்ஸ்வபாவமெல்லாமிழந்தேன். இனி என்கொடுக்கேன் ? என்கிறார்.

ஒ.—நாலாம்பாட்டில், உன்துணிவுஇதுவாக எல்லாவற்றையுமிழக்கிறாயிறே என்று தோழிமார் சொல்ல ; இனியெத்தையிழப்பது ? பண்டே எல்லாமிழந்தோமிறே யென்று யதாஶநாயம் ஸம்ஶ்லேஷிக்கப் பெறுமையாலே சொல்லுகிறாள்.

[கூடச்சென்றேன்] - இப்பாட்டுக்கு, நல்ல மாடங்களையும் கொடியோடு கூடின மதிள்களையுமுடைய தெற்குதிக்கிலேயுண்டான திருக்குளந்தையில் விலக்ஷண மான மேற்பார்ஶ்வத்திலே நின்றருளுவதுஞ்செய்து ஸர்வேஶ்வரவாஹந மென்னும் ஹர்ஷத்தாலே ஆடாநின்றுள்ள பெரியதிருவடியாலே வஹிக்கப்படுவதுஞ் செய்து போரிலேவெல்லும் திருவாழியை வலதிக்லயுடைய மாயக்கூத்தனை ஆதரித்து ஸம் ஶ்லேஷிக்கச்சென்று என் அழகிதான வளை நெஞ்சுதொடக்கமாக எல்லாவற்றையும் நிஶ் ஶேஷமாக இழந்து அவனையும் குணஹாநி சொல்லக்கடவ ஸ்த்ரீகள் எதிரே என்னு டைய ஸ்த்ரீத்வப்ரகாரமான குணங்களை யிழந்தேன். இனி எத்தைக் கொடுப்பேன் ?

ப.—அநந்தரம், ஆஶ்ரிதாநிஷ்ட நிவர்த்தகமான ஆயுதாதிபூர்த்தியையுடைய வனைக் கிட்டவேணுமென்று நினைத்து ஸர்வஸ்வாபஹாரம்பிறந்த நான் இனி எத்தைக் கொடுப்பதென்கிறாள்.

மாடம் - மாடங்களையும், கொடி - கொடியோடேகூடின, மதிள் - மதிளையு முடைத்தாய், தென் - நன்றான, குளந்தை - திருக்குளந்தையில், வண் - அழகிய, குட பால் - மேற்பக்கத்திலே, நின்ற - நின்ற, மாயக்கூத்தன் - ஆஶ்சர்ய சேஷ்டிதயுக்தனாய், ஆடல் - (ஹர்ஷத்தாலே) தர்ஶநீயகதியான, பறவை - பெரியதிருவடியை, உயர்த்த - மேற்கொண்டிருப்பானாய், (ஆஶ்ரிதஸம்ரக்ஷணத்தில்), வெல் - வெற்றியையுடைத் தான, போர் - போரையுடையனான, ஆழி - திருவாழியை, வலவனை - வலத்திலே யுடையனானவனை, ஆதரித்து - ஆதரித்து, கூட - ஸம்ஶ்லேஷிக்கவேணுமென்று, (நான்), கோல் - அழகிய, வளை - வளை, நெஞ்சம் - நெஞ்சு, தொடக்கமெல்லாம் - தொ

டக்கமானவையெல்லாம், பாடு - என்பக்கல், அற்று - ஶேஷியாமல், ஒழிய - விட்டுப் போம்படியாக, இழந்து - இழந்து, பல் - பல, வளையார் - வளையையுடையபெண்டுகள், முன் - முன்னே, வைகல் - நெடுங்காலமுண்டு, பரிசு - என்ஸ்வபாவம், அழிந்தேன் - அழிந்துபோய், இனி - இனி, என் - எத்தை, கொடுக்கேன் - கொடுப்பேன்? ஆழி வலவனென்று - வல்லவனென்றுமாம். நெஞ்சத்துளக்கமென்று - நெஞ்சோடுண்டான துவக்கு இழந்தேனென்றுமாம்.

இ.—நாலாம்பாட்டில், உன்துணிவிதுவாக இன்னமெல்லாவற்றையும் இழக்கிறுயிறே என்ன; இனி எத்தையிழப்பது? எல்லாமிழந்திலேனோ? என்கிறள்.

[கூடச்சென்றேன்] - ஸம்ஶ்லேஷார்த்தமாகச் சென்றேன். ஸ்வரூபத்தை யழியமாறியன்றோ நான் சென்றது? [இனியென் கொடுக்கேன்] - பண்டே எல்லாம் இழந்தபின்பு இனி எத்தையிழப்பது? [கோல்வளை] - அழகியவளை. [நெஞ்சமித் யாதி] - நெஞ்சு தொடக்கமானவையெல்லாம். அவன் விஶ்லேஷாதிடோபாதி போரும் இவளுடைய பரிகரத்தின்பரப்பும். [பாடற்றொழிய இழந்து] - என்பக்கல் ஸவாஸநமாக ஸம்பந்தமற்றுப்போம்படி யிழந்து. [வைகல் பல்வளையார்முன்] - என்றுமொக்கப் பல வகைப்பட்ட வளையையுடைய ஸ்தரீகள்முன்பே, அவனையுமென்னையும் குணஹாநி சொல்லக்கடவ ஸ்திரீகள் எதிரே. [பரிசழிந்தேன்] - பரிசு - ப்ரகாரம். என்னுடைய ப்ரகாரம் - ஸ்த்ரீத்வப்ரகாரம்; அத்தையிழந்தேன். கழற்றிப் பூணுமவற்றை அவர்கள் பறித்திருக்க, கழற்றவொண்ணுதபடி ஆபரணமாயிருக்கிற லஜ்ஜாதிகளை யிழந்தேன். [மாடக்கொடிமதிள் தென்குளந்தை] - மாடங்களையும் கொடியோடுகூடின மதிள்களையுமுடைத்தாய், தெற்குத்திக்குக்கு ஶ்லாக்யமான திருக்குளந்தையில். [வண்குடபால் நின்ற] - அழகிதான மேற்பார்ஶ்வத்திலே நின்ற. மேலைத்திக்கில் நிற்கிறவிதுவும் ஒரு வைலக்ஷண்ய ஹேது. [மாயக்கூத்தன்] - ஆஶ்சர்யசேஷ்டிதன். [ஆடல்பறவையுயர்த்த] - ஸர்வேஶ்வர வாஹநமென்னும் ஹர்ஷத்தாலே மயூரபாநம் பண்ணினாற்போலே களித்தாடாநின்றுள்ள பெரியதிருவடியாலே வஹிக்கப்பட்டவனை. பெரியதிருவடி திருத்தோளிலிருப்பும் ஒருவைலக்ஷண்யஹேது. [வெல் போராழிவலவனை] - யுத்தத்தில் வெற்றியோடல்லது மீளாத திருவாழியை வலவருகே யுடையவனை யாதரித்து. 'மாடக்கொடிமதிள்' என்றுதொடங்கி, 'வெல்போராழிவலவனை - மாயக்கூத்தனை - ஆதரித்து - கூடச்சென்றேன் - கோல்வளை நெஞ்சத்தொடக்கமெல்லாம் பாடற்றொழியவிழந்து வைகல்பல்வளையார்முன் பரிசழிந்தேன் - இனியென் கொடுக்கேன்?'

ஈடு.—நாலாம்பாட்டு. உன்துணிவு இதுவாக இன்னமுள்ளதடைய இழக்கிறுயிறேயென்ன; 'இனி நான் எத்தை இழப்பது?' என்கிறள்.

[கூடச்சென்றேன்]-நான் முடிந்து ஒருதலையேயாம்படி கிட்டினேனென்னுதல், ஸம்ஶ்லேஷார்த்தமாகச்சென்று கிட்டினேனென்னுதல். [இனியேன்கொடுக்கேன்] – பண்டே எல்லாமிழந்தபின்பு இனி எத்தை இழப்பது? [கோல்வளை இத்

நாலாம்பாட்டு.—கூடச்சென்றேன் இத்யாதி. "கோல்வளை" என்றுதொடங்கி, "பரிசழிந்தேன் - இனியென்கொடுக்கேன்" என்றவற்றைக் கடாக்ஷித்து அவதாரிகை - உன்துணிவு இத்யாதி.

முந்தினயோஜனையில், ஶரீரத்தைவிட்டு நித்யவிபூதியிலேபோய் அவனோடே கூடும்படி சென்று என்று ஶப்தார்த்தம்; அத்தைக்கடாக்ஷித்து அருளிச்செய்கிறார் - பண்டே இத்யாதி.

யாதி]-உர்ஸநீயமான வளை, நெஞ்சுதோடக்கமானவை யெல்லாம் என்பாடற்று வாஸநை யோடே போம்படியாக இழந்து. அவன் விபூதியோபாதி போரும், இவள்பரிகரத்தின் பரப்பும். [வைகல்பல்வளையார்முன் பரிசழிந்தேன்]-கழற்றிப்பூணும் ஆஹரணமும் இழ வாதவர்கள் முன்பே, கழற்றவேண்டாத ஆஹரணமான பரிசுண்டு-ப்ரகாரம்-லஜ்ஜை; அத்தை இழந்தேன். [மாடக்கொடிமதிள் தென்குளந்தை] - மாடங்களையும், கொடி யோடேகூடின மதிளையுமுடைத்தான தென்குளந்தையிலே. [வண்குடபால்நின்ற]-அழகி தான மேலைப்பார்ஸ்வத்திலேநின்ற. இதுவும் ஒரு பரத்வஹேதுபோலே. [மாயக்கூத்தன்]-ஆஸ்சர்யசேஷ்டிதன். [ஆடல் பறவையுயர்த்த] - ஸர்வேஸ்வரவாஹநமேன்னும் ஹர்ஷ ப்ரகர்ஷத்தாலே களித்தாடாநின்றுள்ள பெரியதிருவடியாலே வஹிக்கப்பட்டிருப்பானாய். [வெல்போராழிவலவனை] - புக்கபோரிலே வென்றல்லது மீளாத திருவாழியை வல வருகேயுடையனாயிருக்கிற ஸர்வேஸ்வரனை ஆசைப்பட்டு. 'மாடக்கொடிமதிள் தென் குளந்தை வண்குடபால் நின்ற - ஆடல்பறவையுயர்த்த வெல்போராழிவலவனை - மாயக்கூத்தனை - ஆதரித்து - கூடச்சென்றேன் - கோல்வளைநெஞ்சத் தொடக்கமெல் லாம் பாடற்றொழிய இழந்து வைகல்பல்வளையார்முன் பரிசழிந்தேன் - இனி என்கொடுக் கேன்?' என்றந்வயம். (ச)

ஐந்தாம் பாட்டு.

ஆழிவலவனையாதரிப்பும்ஆங்கவன் நம்மில்வரவுமெல்லாம்
தோழியர்காள்!நம்முடையமேதான்?சொல்லுவதோஇங்கரியதுதான்
ஊழிதோறூழியொருவனாக நன்குணர்வார்க்குமுணரலாகா
சூழலுடையசுடர்கொளாதித் தொல்லையஞ்சோதிநினைக்குங்காலே.

*(ஆழிவலவனை) - அவனை ஆசைப்பட்டாற் பெறவொண்ணாத: துஷ்ப்ராபன், அவனை ஆசைப்படவேண்டாவென்னில்; * பரஞ்ஜ்யோதிஸ்ஸான ஸர் வேஸ்வரனை நினைக்கப்புக்கால் ஜ்ஞாநவதாம் அக்ரேஸரர்களான ஸநகாதிமுநிகளுக்கும் ஊழிதோறூழிகூடினாலும் ஒருவனாக உணரவொண்ணாத திவ்யசேஷ்டிதங்களையும், தேஜஃ ப்ரப்ருத்யஸங்க்யேய கல்யாணகுணத்தையும் உடையானொருவனாகிலும் அந்தஸங்கசக்ர தாரனாயிருந்தவனை ஆசைப்படுகையும், ஆசைப்பட்ட நம்போல்வார்பக்கல் அவன் வருகையும், நாம் தொடங்கியோ? இப்படி அரியனாயிருக்கச்செய்தே, ஆசைப்படு வாரும், பெறுவாருமெத்தனைவர்? "அவனரியன், அவனையாசைப்படவேண்டா" என்று சொல்லுகை வெளிதென்னச் சொல்லுமித்தனையோ? என்கிறார்.*

ஒ.—அஞ்சாம்பாட்டில், அறியவும்எட்டவும் அரிதானநிலத்தை ஆசைப் பட்டு அதுக்குஉஃகப்படுகிறாயென்று தோழிமார்சொல்ல, அவன் எத்தனையேனும்

பாடு - பக்கமாய், என்பார்ஸ்வத்திலே. அற்று - இராதே. ஒழிய - போம்படியாக என்றபடி. "எல்லாம்" என்கைக்கு அநேகமுண்டோவென்ன - அவன்விபூதி இத் யாதி. மேலைப்பார்ஸ்வத்திலே நிலையைச்சொன்னதுக்கு ஊவம் - இதுவும் இத்யாதி. இதுவும் ஒரு பரத்வஹேதுவென்று - ஆடல் பறவை, ஆழிவலவன் என்றத்தை ஸமுச்சயிக்கிறது. (ரு)

விஸஜாதீயனாய் துர்ஜ்ஞேயனாயிருந்தானே யாகிலும், அவனையாஶ்ரயிக்கையும், அவனாலே விஷயீகரிக்கப்படுகையும், இம்மர்யாதை நான் தோற்றியுண்டாயிற்றோ? இது அநாதியன்றோ? என்கிறாள்.

[ஆழிவலவனையென்று தொடங்கி] - தோழியர்காள்! ஸர்வேஶ்வரனை நாம் ஆதரிக்கையும் அவன் நம்மை விஷயீகரிக்கையும் இவையெல்லாம் நம்மளவதோ? அர்த்தஸ்திதி ஏதேனுமாயிருக்க இங்கேயிருந்து தோற்றிற்றுச் சொல்லாநிற்கைதான் அரிதோ! [ஊழியென்று மேலுக்கெல்லாம்] - அவன்படியை யநுஸந்திக்கப்புகில் அர்த்தஸித்தி அழகிதாகவறிய வல்லவர்களுக்கும் காலமுள்ளதனையும் கூடினாலும் இப்படிப்பட்டவனென்று நிலையிடவொண்ணாதானுமாய்த் தப்பாமே யகப்படுத்திக்கொள்ளும் விரகுகளையுடைய தேஜ:ப்ரப்ருதி அஸங்க்யேயகல்யாணகுணங்களையுடையனாய் நிருபாதிகமுமாய் விஸஜாதீயமுமான அழகையுடைய ஜகத்காரணபூதன்.

ப.—அநந்தரம், தத்த்வஜ்ஞராயிருப்பார்க்கும் அபரிச்சேத்யமான அதிஶயித ஔஜ்ஜ்வல்யத்தை யுடையனான ஸர்வேஶ்வரனை யாசைப்படுகையும், அவன் நமக்கு முகங்காட்டுகையும், நம்முடைய அளவேயாயிருக்கிறதோ வென்கிறாள்.

நினைக்குங்கால் - (ஆராய்ந்து) பார்க்குமளவில், (தத்த்வத்தை), நன்கு - நன்றாக, உணர்வார்க்கும் - உள்ளபடி அறியவல்லார்க்கும், ஊழிதோறூழி - காலதத்வமுள்ளதனையும், ஒருவனை-ஏவம்வித ஸ்வபாவனாயிருப்பானொருவனை, உணரலாகா - பரிச்சேதித்தறியவொண்ணாதபடி, சூழல் - (ஆஶ்ரிதரை அகப்படுத்திக் கொள்ளும்) சூழ்ச்சியாகிற சேஷ்டிதங்களை, உடைய - உடையனாய், சுடர் - (ஸ்வரூபபரிணாமம் வாராதபடி உபாதாநமாகையும் உபாதாநமான தானே நிமித்தமாகையும், சிதசித்பரிணாமம் தனக்குத் தட்டாதபடியுமாகிற) தேஜஸ்ஸை, கொள் - உடைய, ஆதி - காரணபூதனாய், தொல்லை - நித்ய அஸாதாரணமாய், அம் - அப்ராக்ருதமான, சோதி - ஜ்யோதிர்மயரூபத்தை யுடையனாய், ஆழிவலவனை - கையுந்திருவாழியுமான ஸர்வேஶ்வரனை, ஆதரிப்பும் - ஆதரித்தாஶ்ரயிக்கையும், ஆங்கு - ஆஶ்ரயணாவஸ்தையில், அவன் - (ஸர்வஸ்மாத்பரத்வத்தோபாதி ஸௌஶீல்யத்தையுமுடைய) அவன், நம்மில் - (ஆஶ்ரிதைகளான) நம்பக்கலிலே, வரவும் - வருகையும், (அபேக்ஷிதங்கள்செய்கையும்), எல்லாம் - எல்லாம், நம்முடையமே தான் - நம்மளவிலே உடையோமானோமோ? தோழியர்காள் - (என்னோபாதி இவ்விஷயத்தில் வாசியறியும்) தோழிமீர்காள்! (ஸர்வஸாதாரணமான ஸௌலப்ய ஸௌஶீல்யாதிகள் கிடக்க), சொல்லுவதோ - ஸ்வைரமான தௌர்லப்யம் சொல்லுகையோ, இங்கு - இங்கு, அரியதுதான் - அரியதாயிருக்கிறது?

இ.—அஞ்சாம்பாட்டில், அறியவும் எட்டவுமொண்ணாத விஷயத்திலே அதிப்ரவணையாய் எதுக்கு து:கப்படுகிறாயென்ன, ஆனாலும் அவனையாஶ்ரயிக்கையும், அவனாலே விஷயீக்ருதராகையுமான இம்மர்யாதை நான் தோற்றியுண்டாயிற்றோ? அநாதியன்றோ? என்கிறாள்.

[ஆழிவலவனையாதரிப்பும்] - கையுந்திருவாழியுமான ஸர்வேஶ்வரனை நாம் ஆஶ்ரயிக்கையும். [ஆங்கு] - ஆஶ்ரயணதஶையிலே. [அவன்] - மேன்மையோபாதி நீர்மையுமுடையவன். [நம்மில்வரவும்] - ஆஶ்ரயித்த நாம் இருந்த ப்ரதேஶங்களிலே வந்து விஷயீகரிக்கையும் இவையெல்லாம். [தோழியர்காள்] - என்னோபாதியிவ்விஷயத்தில் அவகாஹித்தவர்களல்லீரோ? [நம்முடையமே தான்] - நம்அளவதோ?

அவனையாஶ்ரயிக்கையும், அவனபேக்ஷிதம் செய்கையுமாய்ப் போருகிற இது நம்மளவிலே யுண்டாயிற்றதொரு மர்யாதையோ? [சொல்லுவதோ இங்கரியதுதான்]- அர்த்தஸ்த்திதி யேதேனுமாயிருக்க, தோற்றிற்றுச்சொல்லாநிற்கைதான் அரிதோ? நிவாரகரில்லையென்று ப்ரதிபந்நங்களைச் சொல்லக்கடவதோ? அவன் கிட்டவரியனென்று ப்ரதிபந்நங்களைச் சொல்லக்கடவதோ? அவன் கிட்ட அரியனாயிருக்கிறமை யில்லையோ? என்ன, அது தானும் என்வாயிலே கேளுங்கோள்! [ஊழியித்யாதி] - [நன்குணர்வார்க்கும் - ஒருவனென்று - ஊழிதோறூழி - உணரலாகா] - அர்த்தஸ்திதியுள்ளபடி யறியவல்லவர்களுக்கும் ஏவம்விஶிஷ்டனென்று காலமெல்லாம் கூடினாலும் நிலையிடவொண்ணாது. [சூழலுடைய] - தன்பக்கலிலே தப்பாமல் அகப்படுத்திக்கொள்ளும் விரகுகளையுடையவனாயிருக்கும். [சுடர்கொளாதி] - தேஜ:ப்ரப்ருத்யஸங்க்யேய கல்யாணகுணகணஜநகதாரண பூதன். [தொல்லையஞ்சோதி] - ஸ்வாபாவிகமாய், நிரவத்ய தேஜோரூபமான விக்ரஹத்தையுடையவனை. [நினைக்குங்கால்] - அவன் பெருமையையாராயப்புகில். 'நினைக்குங்கால் - நன்குணர்வார்க்கும் - ஒருவனை - ஊழிதோறூழி - உணரலாகாச் சூழலுடைய சுடர்கொளாதித் தொல்லையஞ்சோதி - ஆழிவலவனை யாதரிப்பும்', என்றந்வயம். ஊர்ஜ்ஜிதனென்றதால் வைலக்ஷண்யம் சொல்லிற்று : விலக்ஷண விஷயமே ஸாலம்பமானால், மேல்விழுந்து பற்றவன்றோ வடுப்பது ? என்கை.

ஈடு.—அஞ்சாம்பாட்டு. 'வாங்மநஸ்ஸுக்களுக்கு எட்டவொண்ணாத விஷயத்திலே அதிப்ரவணையாய் ஏதுக்கு து:கப்படுகிறாய்'என்ன ; ஆனாலும் அவனையாஶ்ரயிக்கையும் அவனாலேவிஷயீக்ருதராகையுமான இம்மர்யாதை நம்மைத் தோற்றியுண்டாயிற்றோ, அநாதியன்றோ ? என்கிறாள்.

[ஆழிவலவனையாதரிப்பும்] - திருவாழியை வலவருகேயுடையனானவனை ஆஶ்ரயிக்கையும். [ஆங்கு] - ஆஶ்ரயணதஶையிலே. [அவன்] - மேன்மையோபாதி நீர்மையுடையனானவன். [நம்மில்வரவுமெல்லாம்] - ஆஶ்ரயித்த நாமிருந்த ப்ரதேசங்களிலேவந்து விஷயீகரிக்கையுமாகிற இவையெல்லாம். [தோழியர்காள்] - என்னோபாதி இவ்விஷயத்திலே அவகாஹித்திகோளல்லிகோளோ? [நம்முடையமேதான்] - நம்மளவதோ ? அவனை யாஶ்ரயிக்கையும் அவன் அபேக்ஷிதம் செய்கையுமாய்ப் போருகிற இது, நம்மைத்தோற்றிப் புதியதாகவிட்டதொரு மர்யாதையோ ? [சொல்லுவதோ இங்கரியதுதான்] - அர்த்தஸ்த்திதி ஏதேனுமாயிருக்க, தோற்றிற்றுச் சொல்லுகையோ அரியது ! நிவாரகரில்லையேன்று ப்ரதிபந்நங்களைச் சொல்லக்கடவதோ? அவன் கிட்ட அரியவனாயிருக்கிறமை இல்லையோவென்ன ; அதுதானும் நான் சொல்லக் கேட்கவேண்டாவோ உங்களுக்கு? [ஊழி இத்யாதி] - (நன்குணர்வார்க்கும் - ஒருவனேன்று - ஊழிதோறூழி - உணரலாகா) எத்தனையேனும் அதிஶயிதஜ்ஞாநரா யிருப்பார்க்கும், காலமெல்லாம் கூடியறியப்புக்காலும் அறியப்போகாது, ஏவம் விஶிஷ்டன் என்று. [சூழலுடைய] - கிட்டினாரை அகப்படுத்திக்கொள்ளுகைக்கு ஈடான விரகுகளை யுடையனாயிருக்கும். [சுடர்கோள்] - தேஜ: ப்ரப்ருதிஅஸங்க்யேய கல்யாணகுணங்களை யுடைய

அஞ்சாம்பாட்டு.—ஆழிவலவனை இத்யாதி. "ஆழிவலவனை" என்று தொடங்கி, "நம்முடையமேதான்" என்னுமளவும் கடாக்ஷித்து அவதாரிகை - **வாங்மநஸ்ஸுக்களுக்கு** இத்யாதி.

"நம்மில்வரவும்" என்றதைப்பற்ற - **மேன்மையோபாதி** இத்யாதி. நம்மில்-நாமிருந்த

வன். [ஆதி] - ஜகத்காரணபூதன். [தொல்லையஞ்சோதி] - ஸ்வாபாவிகமாய், நிரவயிகதேஜோரூபமாய், இதரவிஸஜாதீயமான திவ்யவிக்ரஹத்தை யுடையனுயிருக்கும். [நினைக்குங்கால்] - அவன்பெருமையை ஆராயப் புகில். 'நினைக்குங்கால் - நன்குணர்வார்க்கும் - ஒருவனுக - ஊழிதோறூழி - உணரலாகாச் சூழலுடைய சுடர்கொளாதித் தொல்லையஞ்சோதி - ஆழிவலவனை யாதரிப்பும், ஆங்கவன் நம்மில் வரவுமெல்லாம், தோழியர்காள்! நம்முடையமேதான், சொல்லுவதோ இங்கரியதுதான்?'—விலக்ஷண வஸ்துவே ஸாலப்யமானல், பற்றவடுக்குமோ? விடவடுக்குமோ? என்கிருள். (ரு)

ஆரும் பாட்டு.

தொல்லையஞ்சோதிநினைக்குங்கால் என்சொல்லளவன்றிமையோர்தமக்கும்
எல்லையிலாதனசூழ்ப்புச்செய்யும்அத்திறம்நிற்கவெம்மாமைகொண்டான்
அல்லிமலர்த்தண்துழாயுந்தாரான் ஆர்க்கிடுகோவினிப்பூசல்?சொல்லீர்
வல்லிவளவயல்சூழ்குடந்தை மாமலர்க்கண்வளர்கின்றமாலே.

ஆ.—(தொல்லையஞ்சோதி) - அவன் அரியனல்லனேவென்னில்?— நாம் சொல்லுமளவோ அவனுடைய அருமை? ப்ரஹ்மாதிதேவர்களுக்குங்கூட அறியவொண்ணுத ஸ்வரூபஸ்வபாவங்களையுடையா ஞெருவனல்லனே? அத்திறம்நிற்க, என்னை விஷயீகரித்தருளுகைக்காகத் திருக்குடந்தையிலேபுகுந்துவைத்து என்னுடைய ஸர்வஸ்வத்தையும் அபஹரித்துத் தன்திருவடிகளில்அல்லிமலர்த்தண்துழாயும் தருகிறிலன். இப்படி அந்யாயஞ்செய்த அவனையொழிய மற்று ஆரைக்கூப்பிடுவோம்? சொல்லீர் ! என்கிறுர்.

ஒ.— ஆரும்பாட்டில், "நீர்சொல்லுகிறபடி எளியனல்லன், எட்டாதாஞெருவன்" என்று தோழிமார் சொல்ல, 'ஊர்ஜனுகிலும் ஸாலபனுகிலும் நம்மை இப்படி நோவுபடுத்தினவன்வாசலிலே கூப்பிடாதே நம்மோடே ஸம்பந்தமில்லாதாரையோ இன்றுதாவது?' என்கிறுள்.

[என்சொல்லளவென்று தொடங்கி] - அவனுடைய வைலக்ஷண்யம் பேச்சினளவன்று; அதிசயிதஜ்ஞாநரான ப்ரஹ்மாதிகளுக்கும் மிகவும் ஊர்ஜ்ஜேயமாயிருக்கும் வைலக்ஷண்யத்தை யுடையனு யிருந்துவைத்துத் தன்னுடைய ஸௌந்தர்யாதிகளைக் காட்டி என்னை ஈடுபடுத்தினுன். [அல்லிமலரென்று தொடங்கி] - என்னை இப்படி நோவுபடுத்தி வைத்த தான் வந்து ஸம்ஶ்லேஷியாவிட்டால் தன்னோடு ஸ்பர்ஶமுள்ளவற்றைத் தந்தாகிலும் என்னை உஜ்ஜீவிப்பிக்கிறிலன். என்னை யிப்படிநலிந்த இவனுக்குக் கூப்பிடாதே யாருக்குக் கூப்பிடுவோம்? சொல்லிகோள். [வல்லியென்று தொடங்கி]- பூங்கொடிபடர்ந்த சோலைகளும் வளவிதான வயலும் சூழ்ந்த திருக்குடந்தையிலே கண்வளர்ந்தருளுகிற ஸர்வேஶ்வரன். [குடந்தை] - கூப்பீடு கேட்கும்படி ஸந்நிஹிதனென்று கருத்து.

விடத்தே. விவரணம் - நிவாரகர் இத்யாதி. அந்வயத்தில் பாத்வத்தை முந்தறச்சொல்லி, அநந்தரம் நீர்மையைச் சொன்னதுக்கு ஹாவம் - விலக்ஷணவஸ்து இத்யாதி. (ரு)

ப.—அநந்தரம், அதிசயிதஜ்ஞாநர்க்கும் அவமர்ந்தும்அசக்யமாம்படி ஸம்ஶயஜநகனான அவன், நம்மோடே ஸம்ஶ்லேஷித்து ஈடுபடுத்தினபின்பு, வேறு ஆர்க்குக் கூப்பிடுவோமென்கிறாள்.

நினைக்குங்கால் - ஆராயப்பார்த்தோமாகில், தொல்லை - அஸாதாரணமாய், அம் - அநவயிகமான, சோதி - அவனுடைய தேஜஸ்ஸானது, என் - என்னுடைய, சொல்லளவு - சொல்லிலடங்குமது, அன்று - அன்று; இமையோர்தமக்கும் - (அதிசயித ஜ்ஞாநரான) ப்ரஹ்மாதிகளுக்கும், (நிஷ்கர்ஷிக்கவொண்ணாதபடி), எல்லையிலாதன-அபர்யந்தமான, சூழ்ப்பு - ஸம்ஶயத்தை, செய்யும் - விளைக்கும், அ - அந்த, திறம் - மேன்மையிடையாட்டம், நிற்க - நிற்க: வல்லி - பூங்கொடியும், வளம் - அழகிய, வயல் - வயலும், சூழ் - சூழ்ந்த, குடந்தை - திருக்குடந்தையிலே, மா - ஶ்லாக்யமான, மலர் - தாமரைபோலேயிருக்கிற, கண் - திருக்கண்கள், வளர்கின்ற - வளரும்படி சாய்ந்தருளின, மால் - ஆஶ்ரிதவ்யாமோஹத்தை யுடையவனைக்கொண்டு, எம் - என், மாமை - நிறத்தை, கொண்டான் - அபஹரித்தான், அல்லி - பூந்தாரினுடைய, மலர் - விகாஸத்தையுடைத்தான, தண்துழாயும் - திருத்துழாய்மாலையையும், தாரான்-தருகிறிலன்; இனி - (நாம் அவனாலேநலிவுபட்ட) பின்பு, (நலிந்த அவனையொழிய), ஆர்க்கு - ஆரிருக்கலாரிட்டு, பூசலிடுகோ - கூப்பிடுவோம் ; (உறவுசெய்து அகப்படுத்தினவனையொழிய உறவில்லாதார்க்குக் கூப்பிட்டுப்ரயோஜநமென்)? சொல்லீர் - சொல்லிகோள்!

இ.—ஆறும்பாட்டில், நீ சொல்லுகிறபடியே எளியனல்லன், ஊர்லஹன் என்ன; ஸுலஹனாகிலும் ஊர்லஹனாகிலும் தன்னையொழியச் செல்லாதபடி நம்மைப் புகுரநிறுத்தினவன் வாசலிலே கூப்பிடாதே, ஸம்பந்தமில்லாதார் வாசலிலேயோ கூப்பிடுவது? என்கிறாள்.

மேல் ஸௌகுமார்யத்தையும் அழகையும் சொல்லுகிறது: [பூமகள் மண்மகளாய் மகள் - அங்கஞ்சேரும்] - அவனையாஶ்ரயிக்கைக்கு புருஷகாரமாகப் பிராட்டிமார் உண்டென்பர்கள். "நகஶ்சிந்நாபராத்யதி" என்பாரும், "குற்றத்தையுணருகிறதென்? பொறுக்குமித்தனையன்றோ?" என்பாரும், முதலிலே குற்றங்காணவொண்ணாதபடி ஸ்வபோக்யதையை முன்னிடுவாரும் அங்கேயுண்டென்பர்கள். "வடிவாய் நின் வலமார்பினில் வாழ்கின்றமங்கையும் பல்லாண்டு" என்று அச்சேர்த்திக்கு மங்களாஶாஸநம் பண்ணுவாரில்லை. [சங்குசக்கரக் கையவன்] - கையுந்திருவாழியுமான அழகையநுபவிக்க இழிவாரில்லை. நம்விரோதிகளைத் துணிக்கைக்குக் கையிலே திவ்யாயுதங்களையுடையவனென்பர்கள். "வடிவார்சோதி வலத்துறையும்" என்று அச்சேர்த்திக்கு மங்களாஶாஸநம் பண்ணவேண்டியிறேயிருப்பது. [என்பர்-சரணமே] - அபிமதஸாதநமென்பர்கள். அபிமதமென்றறிவாரில்லை; ஸுகுமாரமான விஷயமென்றறிவாரில்லை. முந்தானையேற்றல், எதிரிகளம்புக்கு இலக்காக்குதல் செய்யுமித்தனை.

ஈடு.—முதற்பாட்டு. இதில், முதற்பாட்டில், உன் ஸௌகுமார்யத்தையறிந்து பரிகையன்றிக்கே, தங்களுக்குஇஷ்டப்ராப்திஸாதநமென்றுஇருப்பர்களென்று ஐஶ்வர்யார்த்திகளை க்ஷேபிக்கிறார்.

[அங்குமிங்கும் இத்யாதி]-உபரிதநலோகங்களிலும், பூமியிலும். [எங்கும்]-அநுக்தமான பாதாளாதிகளிலும். [வானவர்]-அநுகூலர். [தானவர்] - ப்ரதிகூலர். [யாவரும்] - இரண்டுவகையுமான மநுஷ்யாதிகளும். [இனையையென்றுஉன்னை] - உன்னை இனையையென்று - ஸர்வஶேஷியான உன்னை, இப்படிப்பட்டாயென்று - நிரதிஶய ஸௌகுமார்யயுக்தனென்று. இவர் நெஞ்சில் அவன் ஸௌகுமார்யமேயாயிற்று உறைத்திருப்பது. கருமுகை மாலைபோலேயிருக்கிற உன்படியறியாதே. [அறியகிலாது] - அறியாதே பரிய அறியாமைக்கு, அநுகூலரான தேவர்களோடு, ப்ரதிகூலரான அஸுரர்களோடு, இவ்விரண்டுங்கூடின மநுஷ்யரோடு வாசியில்லை. அவனைப் பரியக்கண்டவர்கள்எல்லாரு மென்றிருக்கிறாராயிற்று இவர். [அலற்றி]- † "யஸ்ஸர்வஜ்ஞஸ்ஸர்வவித்." (யஸ்ஸர்வஜ்ஞஸ்ஸர்வவித்) ‡ "பராஸ்ய ஶக்திர்விவிதைவ ஶ்ரூயதே ஸ்வாபாவிகீ ஜ்ஞாநபலக்ரியா ச" (பராஸ்யஶக்திர்விவிதைவஶ்ருயதே ஸ்வாபாவிகீ

முதற்பாட்டு.—அங்கும் இத்யாதி. "இனையையென்று - அறியகிலாது - சரணம - என பர்" என்றவற்றைக் கடாக்ஷித்து அவதாரிகை - உன் ஸௌகுமார்யத்தை இத்யாதி.

"எங்கும்" என்றது - பாதாளாதிவாஸிகளான தானவரென்றபடி. விவரணம் - நிரதிஶய இத்யாதி. "இனையை" என்றது - ஸாமாந்யமாயிருக்க, "ஸௌகுமார்யயுக்தன்" என்று சொல்லுமோவென்ன, புத்திஸ்த்தமாகையாலே சொல்லுமென்கிறார் - இவர்நெஞ்சில் இத்யாதி. "இனையை, அறியகிலாது" என்கிற இரண்டையுங்கூட்டி பாவம் - கருமுகை இத்யாதி. ப்ரஸக்தஸ்யஹி ப்ரதிஷேத:, ப்ரதிகூலரான தாநவர்க்குப் பரிய யோக்யதையுண்டோ? வெறுக்கிறதென் ? என்ன,- த்ருஷ்டாந்தார்த்தமென்கிறார் - பரிய அறியாமைக்கு இத்யாதி. அதாவது - ப்ரதிகூலரானவர்கள் பரிய அறியாதாப்போலே, அநுகூலரும் பரிய அறியார்களென்றபடி. "விஷ்ணோஸ்ஸம வர்த்தி ஶ்ரீஶாய" த்யாதிப்படியே வஸ்துகத்யா பரியக்கண்டவர்களென்று பரிஹாராந்தரம் - அவனைப்பரிய இத்யாதி. வஸ்துஸ்த்திதியறிந்து ஆஶ்ரயித்தமை - ப

† முண்டகோபநிஷத் - 1, 1. ‡ ஶ்வேதாஶ்வதரோபநிஷத்- 6.

ஜ்ஞாநபலக்ரியாச) என்று, தங்களுடைய ரக்ஷணத்துக்குஉடலான வசநங்களைக் கதறு நிற்பர்கள். உன்னை ரக்ஷ்யனென்று அறியார்கள். [அங்கஞ்சேரும் இத்யாதி] - இதுக்கு மேல் ஸௌகுமார்யத்தையும் அழகையுஞ்சொல்லுகிறது:—[பூமகள் மண்மகளாய்மகள் - அங்கஞ்சேரும்] - அவனையாஶ்ரயிக்கைக்குப் புருஷகாரமாகப் பிராட்டிமாருண்டேன் பர்கள். †"நகஶ்சிந்நாபராத்யதி" (நகஶ்சிந்நாபராத்யதி) என்பாரும். "குற்றத்தை யுணருகிறதேன்? பொறுக்குமித்தனையன்றோ?" என்பாரும், முதலிலே குற்றங்காணுதபடி ஸ்வபோக்யதையை முன்னிடுவாரும் அங்கேஉண்டேன்பர்கள். "வடிவாய்நின்வல மார்பினில் வாழ்கின்றமங்கையும்பல்லாண்டு" என்று அச்சேர்த்திக்கு மங்களாஶாஸநம் பண்ணுவாரில்லை. [சங்குசக்கரக்கையவன்] - கையுந்திருவாழியுமான அழகை அநு பவிக்கைக்கு இழிவாரில்லை. நம் விரோதியைத் துண்டிக்கைக்குக் கையிலே திவ்யாயு தங்களையுடையவ னேன்பர். "வடிவார்சோதிவலத்துறையும் சுடராழியும்பல்லாண்டு" என்னவேண்டியிருக்குமே இவர்களுக்கு. [என்பர்சரணமே] - (சரணம் - என்பர்) அபிமதஸாதநம் என்பர் அபிமதமென்றறிவாரில்லை - ஸௌகுமாரவிஷயமென்றறிவா ரில்லை; முந்தானையேற்றல், எதிரிகளம்புக்கு இலக்காக்குதல் செய்வர்கள். (க)

இரண்டாம் பாட்டு.

சரணமாகிய நான்மறைநூல்களுஞ்சாராதே
மரணந்தோற்றம் வான்பிணிமூப்பென்று இவைமாய்த்தோம்
கரணப்பல்படை பற்றறவோடுங்கனலாழி
அரணத்திண்படையேந்திய ஈசற்குஆளாயே.

களிலே கண்டுகொள்வது. "அலற்றி" என்றதுக்கு - அக்ரமமாக ஸ்தோத்ரம்பண்ணியென்றுதே "கதறுநிற்பர்கள்" என்றது, ஆழ்வார்க்கு அஸஹ்யமென்னுமிடம் தோற்றுகைக்காக. பின்னை எது செய்யவேணுமென்ன; ஸௌகுமார்யத்தை அநுஸந்தித்துப்பரியவேணும், அதுசெய்கிறார்களில்லை யென்கிறார் - உன்னைரக்ஷ்யனென்று *இத்யாதி. புஷ்பஹாஸஸுகுமாரமாகையாலே நிரதிஶய ஸௌ குமார்ய ஸௌந்தர்யயுக்தையான பிராட்டிமுதலானார்சேரும் திருமேனியென்கையாலே - இவ னுடைய ஸௌந்தர்யமும் ஸௌகுமார்யமும் ஸித்தமென்று திருவுள்ளம்பற்றி அருளிச்செய்கிறார்-* இதுக்குமேல் *இத்யாதி. அவனை ரக்ஷகனென்றிருக்குமவர்கள், பிராட்டிமாரை ப்ரதிபத்திபண் ணும் ப்ரகாரத்தை யருளிச்செய்கிறார்-*அவனை *இத்யாதி. புருஷீகரிக்கும் ப்ரகாரமெப்படியென்ன -* நகஶ்சித் *இத்யாதி.* ஸ்வபோக்யதையைமுன்னிடுவாரும் *என்றவிடத்திலே -‡"நிரஶாயதா ஶேம்நிஷாயஸௌரமவடிதௌஷ்பூஷ்பௌ ஹாவிதம்ஶ்ரீநிவாஸஸ்யஸத்வஹோஷஷ்டுஷகு நம்" என்கிற ஶ்லோகம் அநுஸந்தேயம். அவர்களுடைய ப்ரதிபத்தியை அங்கீகரிக்கும் இவ ருடைய பாவத்தை அருளிச்செய்கிறார் -* வடிவாய் *இத்யாதி. இப்பதத்தை ப்ரயோகிக்கிறவ ருடைய ஹார்த்தபாவம் -* கையும் *இத்யாதி. ஆனால் தாம் எப்படியிருப்பர்? என்ன -* வடிவார் சோதி *இத்யாதி. விவரணம் -* ஸௌகுமாரவிஷயம் *இத்யாதி. ஸாதநமென்றுசெய்வதேதென்ன -* முந்தானையேற்றல் *இத்யாதி. இத்தால் - த்விவிதைஶ்வர்யகாமரையும் சொல்லுகிறது. 'அங்குமிங் கும்-எங்கும்வானவர்தானவர் - யாவரும் - உன்னை-இனையையென்று - அறியகிலாதலற்றி - பூமகள் மண்மகள்ஆய்மகள் - அங்கஞ்சேரும் - சங்குசக்கரக்கையவன் - சரணம் - என்பர்' இத்யந்வய:. (க)*

† *ரா-யுத்.* 116, 44. ‡ *உயாஶதகம் -* 8.

ஆ.—(சரணமாகிய) - இப்படி ஐஶ்வர்யார்த்திகள் துணையல்லரென்று அருளிச்செய்து, கைவல்யார்த்திகளும் தமக்குத் துணையல்லரென்கிறார். ஐஶ்வர்யோபாய விஷயக ஶாஸ்த்ரங்களை விட்டு மோக்ஷோபாயவிஷயக ஶாஸ்த்ரத்தை அவலம்பித்த நாமும், அப்ராக்ருத ஸ்வாஸாதாரண திவ்யரூபவிஶிஷ்டனாய், ஶங்கசக்ரகதாதரனான பரமபுருஷனை ஶாஶ்ரயமாக அநுஸந்தித்து, இத்ரியஜயத்தைப்பண்ணி, ஸம்ஸார நிவ்ருத்திமாத்ரத்தை ப்ராப்யமாகப்பற்றினோ மித்தனையிறே; அவன் திருவடிகளை ப்ராப்யமாகப் பற்றிற்றிலோமிறே; ஆகலால், நீங்களும் எனக்குத் துணையல்லீரென்கிறார். தம்மோடு அவர்களுக்குஉண்டான ஐஶ்வர்ய வைராக்யரூப ஸாம்யத்தாலே கைவல்யார்த்திகளை அஸ்மச்சப்தத்தாலே வ்யபதேஶிக்கிறார்.

ஒ.—இரண்டாம்பாட்டில், கைவல்யபுருஷார்த்த நிஷ்டரை யிகழ்கிறார்.

[சரணமென்று தொடங்கி] - "ஸ்த்ரைகுண்யவிஷயா வேதா:" என்கிற படியாலே ஐஶ்வர்யபுருஷார்த்தத்தையும் புருஷார்த்தத்துக்கு ஸாதநத்தையும் ப்ரதிபாதிக்கிற வேதபாகங்களைவிட்டு மோக்ஷோபதேஶம்பண்ணுகிற வேதாந்தபாகத்திற் சொல்லுகிறபடியே ஜந்மமரணங்களும், ப்ரபலமான வ்யாதிகளும், ஜரைதொடக்கமான ஷட்பாவவிகாரங்களையும் மாய்த்தவித்தனையிறே, நாம் செய்ததென்று முமுக்ஷுக்களை க்ஷேபிக்கிறது. [கரணப்பல்படை யென்றுதொடங்கி] - உபகரணங்களையுடையராய் வந்த ஶத்ருஸேனை நிஶ்ஶேஷமாக ஓடும்படி கனலாநிற்பதுஞ்செய்து ஆஶ்ரிதர்க்கு அரணாய் அவர்களையொருநாளும் விடக்கடவதன்றிக்கேயிருக்கிற திருவாழியாழ்வானுகிற திவ்யாயுத்தை ஏந்தினஸர்வேஶ்வரனுக்கு அடிமையாகே. 'கரணப்பல் படையென்றது' - கரணக்ராமம் விஷயங்களில் நின்றும் பற்றறவோடும்படி கனலாநின்றுள்ள திருவாழியென்றுமாம்.

ப.—அநந்தரம், விரோதிநிரஸக பரிகரவானானவனைக்கொண்டு கேவலம் ஜராமரணாதிநிவ்ருத்தியைப் பண்ணிக்கொள்ளுகிற கேவலரை, மோக்ஷத்வ ஸாதர்ம்யத்தாலே உடன்பட்டுநின்று க்ஷேபிக்கிறார்.

(த்ரைகுண்யபுருஷர்களுக்கு), சரணமாகிய - புகலிடமாய், (ஐஶ்வர்யதத் ஸாதந ப்ரதிபாதகமான), நால் - நாலுவகைப்பட்டதாயிருக்கிற, மறை - வேதங்களாகிற, நூல்களும் - ஶாஸ்த்ரங்களை, சாராதே - ("வேதவாதரதா: பார்த நாந்யதஸ்தீதி வாதிந:" என்று மேலெழத்தோன்றுகிற அர்த்தங்களை) ப்ரதிபத்திபண்ணப்பற்றாதே, (நிஸ்த்ரைகுண்யராய்க்கொண்டு, முமுக்ஷுக்களாய்), கரணம் - வாயுகோபகரணங்களையுடைத்தாய், பல் - பஹுவிதமான, படை - ஶத்ருஸேனைகள், பற்று - பற்று, அற - அற, ஓடும் - ஓடும்படி, கனல் - தீப்தனுகிற, ஆழி - திருவாழியாழ்வானுகிற, அரணம் - க்ஷேமங்கரமாய், திண் - [illegible]ரமான, படை - ஆயுதத்தை, ஏந்திய - உடையனை, ஈசற்கு - ஸர்வேஶ்வரனுக்கு, ஆளாய் - மோக்ஷபூதராய்வைத்து, (மோக்ஷத்வாநுரூபமான அதிஶயத்தை விளைத்துப் பரியாதே), மரணம் - மரணம், தோற்றம்-ஜந்மம், வான் - பெரிய, பிணி - வ்யாதி, மூப்பு - ஜரை, என்று - என்றுசொல்லுகிற, இவை - ஷட்பாவவிகாரங்களை, மாய்த்தோம் - கழித்துக்கொண்டுவிட்டோ மித்தனையிறே. தாஸ்யம் ஸ்வரூபமாயிருக்க, ஸ்வார்த்தபரராகை அநுரூபமோ? என்றுகருத்து.

இ—இரண்டாம்பாட்டில், அஸ்திரத்வாதி தோஷயுக்தமான ஐஶ்வர்யத்தைவிட்டு, நித்யாத்மாநுபவ காமரான கைவல்யநிஷ்டரை யிகழ்கிறார்.

[சரணமாகிய இத்யாதி] - "த்ரைகுண்யவிஷயாவேதா:" என்கிறபடியாலே ஐஶ்வர்யதத்ஸாதநங்களை ப்ரதிபாதிக்கிற பூர்வபாகத்தில் இழியாதே, மோக்ஷத்தையுபதேசிக்கிற வேதாந்தபாகத்திலே புகுராநின்று, ஸர்வேஶ்வரனையாஶ்ரயித்து, ஶரீரஸம்பந்தத்தை மாய்த்தோமித்தனையன்றோ நாமும் செய்தது? என்று க்ஷேபிக்கிறது. [சரணமாகிய]-ஐஶ்வர்யதத்ஸாதந விஷயஜ்ஞாநஸாதநமான. [நான்மறை நூல்கள்]-சதுர்வேதமாகிற ஶாஸ்த்ரங்கள். நூல் - ஶாஸ்திரம். "வேதஶாஸ்த்ராவிரோதிநா" என்னக்கடவதிறே. [மரணம் தோற்றம்]-ஜந்மமரணங்கள். [வான்பிணி மூப்பென்றிவை மாய்த்தோம்] - ப்ரபல வ்யாதி, ஜரை தொடக்கமான ஷட்பாவவிகாரங்களை மறுவ விடாதபடி கழித்துக்கொண்டவித்தனையிறே நாமும் செய்தது. பூர்வவசநம் க்ஷேபத்திலே. [காரணப்பல்படை யித்யாதி] - உபகரணங்களையுடைய பலவகைப்பட்ட ஶத்ருஸேனை நிஶ்ஶேஷமாக ஓடும்படி ஜ்வலியாநின்ற திருவாழிபென்னுதல்; கரணக்ராமம் விஷயங்களினின்றும் நிஶ்ஶேஷமாகப்பற்றற ஓடும்படி கனலாநின்றிருந்துள்ள திருவாழியென்னுதல். [அரணத்திண்படை] - ஆஶ்ரிதர்க்கு அரணுப், ஶத்ருக்களுக்கு ஸஹிக்க வொண்ணுகதாயிருக்கை. [திண்படை] - ஈஶ்வரன் விடிலும் ஆஶ்ரிதரை விடாதவென்றுமாம். [ஏந்திய ஈசற்கு] - திருவாழியையேந்துகையாலே ஸர்வேஶ்வரனானவனுக்கு. [ஆளாயே] — இவர்கள் ஆளாகையாவதென்? என்னில்,—பகவத்ப்ராப்தி காமநோபாதி, பகவத்பஜநமும் அந்திமஸ்ம்ருதியும் உண்டாகைபாலே சொல்லுகிறது. ஆளாயே - மரணந்தோற்றம் வான்பிணி மூப்பென்றுஇவை மாய்த்தோம்.

ஈடு.—இரண்டாம்பாட்டு. "ஐஶ்வர்யம்போலே நிலைநில்லாததொன்றன்றே இது: நித்யமாயிருப்பதொன்றன்றோ?" என்று ஆத்மலாபத்துக்காக உபாஸிக்கிற கேவலர் வந்துதோற்ற, அவர்களை க்ஷேபிக்கிறர்.

[சரணம்இத்யாதி] - †"த்ரைகுண்யவிஷயாவேதா:" (த்ரைகுண்யவிஷயா வேதா:)என்கிறபடியேஐஶ்வர்யதத்ஸாதநங்களை ப்ரதிபாதிக்கிறபூர்வபாகத்தில்இழியாதே, அத்தைவிட்டுமோக்ஷத்தை உபதேசிக்கிறவேதாந்தபாகத்திலே புகுராநின்று, ஸர்வேஶ்வரனை ஆஶ்ரயித்து, ஶரீரஸம்பந்தத்தை மாய்த்தோமித்தனையன்றோ நாம் செய்தது! என்று க்ஷேபிக்கிறது. [சரணமாகிய] - ஐஶ்வர்ய தத்ஸாதந விஷயஜ்ஞாந ஸாதநமான. [நான்மறை நூல்கள்] - சதுர்வேதமாகிற ஶாஸ்தரங்கள். நூல் - ஶாஸ்த்ரம். நூலென்று - பிரித்து, ஆகமாதிகளைச் சொல்லுகிறதென்றுமாம். நான்மறையாகிற ஶாஸ்த்ரமென்றே அருளிச் செய்வது. ‡"வேதஶாஸ்த்ராவிரோதிநா"(வேதஶாஸ்த்ராவிரோதிநா) என்னக்கடவதிறே. [மரணம்தோற்றம்] - ஜந்மமரணங்கள், ப்ரபலவ்யாதி, ஜரைதொடக்கமான ஷட்பாவ

இரண்டாம்பாட்டு.—சரணமாகிய இத்யாதி. "மரணம் தோற்றம் வான்பிணிமூப்பென்றிவை மாய்த்தோம்" என்றத்தைக் கடாக்ஷித்துஅவதாரிகை - ஐஶ்வர்யம்போலே இத்யாதி.

இப்பாட்டுக்கெல்லாம் பாவம் - த்ரைகுண்ய இத்யாதி. தத்ஸாதநமென்றது - ஜ்யோதிஷ்டோமாதிகளை. "நான்மறைநூல்" என்றது - பூர்வபாகத்தை. வேதாந்தபாகத்திலே நின்று என்றது - அர்த்தாத்ஸித்தம். நாம் செய்ததென்றது - நீங்கள் செய்ததென்றபடி. நான்மறைநூல் சரணமாகையாவதென்? என்ன - ஐஶ்வர்ய இத்யாதி. தத்ஸாதநமென்றது- ஜ்யோதிஷ்டோமாதிகளை; ஐஶ்வர்யவிஷய தத்ஸாதநவிஷய ஜ்ஞாநங்களுக்கு ஸாதநமான என்றபடி. "வேதமான ஶாஸ்த்ரம்" என்ற இடமுண்டோவென்ன - வேதஶாஸ்த்ர இத்யாதி.

† ஸ்ரீபகவத்கீதை-2, 45.

விகாரங்களை மறுவலிடாதபடி கழித்துக்கொண்டவித்தனையிறே நாமும் செய்தது. பூஜா வசநம் க்ஷேபத்திலே. [கரணப்பல்படை இத்யாதி] - உபகரணங்களையுடைத்தாய்ப் பல வகைப்பட்ட ஶத்ருஸேநை நிஶ்ஶேஷமாக ஓடும்படி ஜ்வலியாநின்ற திருவாழியென்னுதல்; கரணக்ராமங்களை விஷயங்களினின்றும் நிஶ்ஶேஷமாகப் பற்றற ஓடும்படி கனலாநின்றிருந்துள்ள திருவாழியென்னுதல். [அரணத்திண்படை] - ஆஶ்ரிதர்க்கு அரணாய், ஶத்ருக்களாலே பேதிக்கவொண்ணாதபடியா யிருக்கை. [திண்படை] - ஈஶ்வரன்விடிலும் ஆஶ்ரிதரை விடாதவென்றுமாம். [ஏந்தியவீசற்கு] - திருவாழியை ஏந்துகையாலே ஸர்வேஶ்வரனானவனுக்கு. [ஆளாயே] - அவர்கள் ஆளாகையாவதேன் என்னில்? - பகவத்ப்ராப்திகாமநோபாதி பகவத்பஜநமும் அந்திமஸ்ம்ருதியுமுண்டாகையாலே சொல்லுகிறது. ஆளாயே - மரணந்தோற்றம் வான் பிணி மூப்பென்றிவைமாய்த்தோம். (உ)

மூன்றும் பாட்டு.

ஆளுமாளார் ஆழியும்சங்கும்சுமப்பார்தாம்
வாளும்வில்லுங்கொண்டு பின்செல்வார்மற்றில்லை
தாளுந்தோளும் கைகளையாரத்தொழக்காணேன்
நாளும்நாளும்நாடுவேன் அடியேன்ஞாலத்தே.

ஆ.—(ஆளுமாளார்) - தன்தனிமையினுடைய ப்ரஸங்கத்தாலே அவன் தனிமையை நினைத்து, "அவன்தனிமைக்கு உதவப்பெற்றிலேன்" என்று சொல்லிக்கொண்டு தம்முடைய தனிமையைச் சொல்லுகிறார்.

மாரீசநிரஸநார்த்தமாகவாதல், கரதூஷணநிரஸநார்த்தமாகவாதல் எழுந்தருளும்போது, துணையின்றியே, தன்னுடைய ஶங்கசக்ராதி திவ்யாயுதங்களைத் தானே சுமந்துகொண்டுபோகாநிற்கும்; வாளும் வில்லுங்கொண்டு பின்செல்வார்மற்றில்லை; தானெழுந்தருளும்போது அவனுடைய திவ்யாயுதங்களைச் சுமந்துகொண்டு, அவன் திருவடிகளையும் திருத்தோள்களையும் என்னுடைய கைகளினுடைய விடாய்தீரும்படி தொழக் காணப் பெறுகிறிலேன்! "[illegible] [illegible]"என்றபிராட்டியைப்போலே, அவனைக் காணவேணுமென்று ஆசைப்

"[illegible] । [illegible]". ஆர்ஷம் - ருஷித்ருஷ்டபுராணாதிகம். யர்மோபதேஶம் - மநுவசநம். மாய்த்துக்கொண்டிகோளென்னாதே, "மாய்த்தோம்" என்று - பூஜ்யோக்தியேதென்ன - பூஜா வசநம் இத்யாதி. "மாய்த்தோம்" என்றதிலேநோக்கு. உபகரணங்களாவன- ரத கஜாதிகள். த்விதியார்த்தத்துக்கு, "கரணம்" என்று - இந்த்ரியங்களாய், "பல்படை" என்று - ஸமூஹமாய், இந்த்ரியக்ராமங்களென்றபடி. ஆளாகையாவதேன்னென்னில் என்றது - பகவதநுபவத்தைவிட்டு ஸ்வாநுபவத்ருப்தர் ஆளாகையாவதென்? என்னில் என்றபடி. 'சரணமாகிய நான்மறைநூல்களும் சாராதே - கரணப்பல்படை' என்றுதொடங்கி, ஆளாய்க்கொண்டு 'மரணம் - தோற்றம்' என்று தொடங்கி, மாய்த்தோம் இத்யந்வய:. ஆழியாகிற அரணத்தின் படையென்றபடி. (உ)

பட்டு, நாளும்நாளும் இந்தலோகமாகிற காட்டிலே தனியே கிடந்து கூப்பிடாநின்றேனென்கிறார்.

ஒ.—மூன்றாம்பாட்டில், ஆரேனும் ஸ்வப்ரயோஜநபரராய், அர்த்தித்ததுவே வ்யாஜமாகக்கொண்டு, வீறறியாதே தன்னோடே எதிரிடவல்ல ஸம்ஸாரத்திலேவந்து வர்த்தியாநிற்கும்; அங்குத்தைக்கு ரக்ஷையாக நான் உதவப்பெறுகிறிலேனென்கிறார்.

[ஆளுமென்றுதொடங்கி]-திருவாழியையும் ஸ்ரீபாஞ்சஜந்யத்தையும் வருந்தி யரிக்கிறார், அதிஸுகுமாரரான தாம். [வாளும்வில்லுங்கொண்டு பின்செல்வார்மற்றில்லை] - திருவாழியையும் பாஞ்சஜந்யத்தையும் ஒருநாளும் கைவிடாராகில் மற்றை திவ்யாயுதங்களைக்கொண்டு பின்செல்வாரின்றிக்கே யொழிந்தால் அதில் என்னையாகிலும்வவுகிறில ரென்றுகருத்து. [தாளுந்தோளுமென்று மேலுக்கு] - தனக்குரக்ஷார்த்தமாகப் பின்னே திரிந்து தன்னைப்பெறாதே யுறுவிக்கிடக்கிற கைகள் பூர்ணமாம்படி தான் நடந்தருளும்போதை பரிஸ்பந்தத்தாலே மிகவும் அழகிதானதிருவடிகளையும் திருத்தோள்களையும் தொழலாம்படி காணப்பெறுகிறிலேன்: நான் என்றுமொக்கஸம்த்தியிலே தேடாநிற்பன்.

ப.—அநந்தரம், விரோதிபூயிஷ்டமான ஜகத்தில் ஆஸ்ரிதரக்ஷணார்த்தமாக ப்ரவ்ருத்தனான அவனுடைய ஸஹாயாந்தரராஹித்யத்தை அநுஸந்தித்து, நான் அடிமைசெய்யும்படி காணப்பெறுகிறிலேனென்று வெறுக்கிறார்.

ஞாலத்து — (ராவணதுர்யோதநஸமரான ப்ரதிகூலர் வர்த்திக்கிற) ஜகத்திலே, ஆளும் - (பரிவராயிருப்பார்) ஆளும், ஆளார் - (வேணுமென்று) அங்கீகரிக்கிறிலர்; தாம் - (அடுத்துப் பார்க்கப்பொறாத ஸௌகுமார்யத்தையுடைய) தாம், யும் - திருவாழியையும், சங்கும் - திருச்சங்கையும், சுமப்பார் - (மலையெடுத்தாற்போலே) வஹிப்பர், (அப்படியானாலும்), வாளும்-நந்தகத்தையும், வில்லும் - ஸ்ரீசார்ங்கத்தையும், கொண்டு-கொண்டு, (“ப்ருஷ்டதஸ்து அநுகச்சந்தி” என்கிற இளையபெருமாளைப்போலே), பின்செல்வார் - பின்செல்லுகைக்கு, மற்று - வேறொருவர், இல்லை - இல்லையாயிராநின்றது; (நான் பின்செல்லவென்றுநினைக்கிலும்), தாளும் - (“த்ரீந் க்ரமாந்” என்னும்படி நடக்கிற) திருவடிகளையும், தோளும் - (“ஸாலஸ்கந்த இவோத்கத:” என்று நிழல்செய்கிற) திருத்தோள்களையும், கைகளை - என்கைகளைக்கொண்டு, ஆர - பூர்ணமாக, தொழ - தொழுது அடிமைசெய்கைக்கு, காணேன்-(என் கண்ணாலே) காணப்பெறுகிறிலேன்; அடியேன் - (சேஷத்வமே ஸ்வரூபமான) நான், (சேஷிக்கு அதிசயஜநகமான சேஷவ்ருத்தியே ஜீவநமாகையாலே, பசியர் சோறு தேடுமாபோலே), நாளும் நாளும் - நாள்தோறும், நாடுவன் - தேடாநின்றேன்.

இ.- -மூன்றாம்பாட்டில், அவர்களைவிட்டுத் தம்முடையஸந்நிதியிலேயிழிகிறார். ப்ரயோஜநாந்தரபரர்க்காகத் தன்வாசியறியாதே எதிரிடவல்ல ஸம்ஸாரத்திலே தனியே வர்த்தியாநிற்கும்; அங்குத்தைக்குரக்ஷையாக நான்உதவப்பெறுகிறிலேனென்று இன்னாதாகிறார்.

[ஆளுமாளார்] - உபயவிபூதியிலும் பரிகைக்கு ஓர் ஆளில்லை. தனியேயொருத்தரை யாளவேணு மென்றிருக்கிறார். நித்யஸூரிகள் பகவதநுபவத்திலே அந்யபரர்; ஸம்ஸாரிகள் சப்தாதிவிஷயபரர். [ஆழியும்சங்கும்சுமப்பார்தாம்] - ஆஸ

ரணமான திவ்யாயுதங்கள், அவன்ஸௌகுமார்யத்தாலே மலையையெடுத்தாற்போலே சுமையாய்த் தோற்றுகிறது இவர்க்கு. எதிரிகளுக்கு அஸ்த்ரமாய் அநுபவிப்பார்க்கு ஆபரணமாயிருக்கிறவை, ஸௌகுமார்யத்தை யநுஸந்தித்த இவர்க்கு மலையாயிருக்கிறது. [தாம்] - தம்மைப் பார்த்துக்கொள்ள வேண்டாவோ? 'எப்போதும்கைகழலா நேமியானன்றோ, நிரூபகங்களானவை சுமையோ?' என்ன, அதுதானே செய்கிறது? [வாளும்வில்லுங்கொண்டு பின்செல்வார்மற்றில்லை] - வாளும்வில்லுங்கொண்டுபின்னே செல்லுகைக்கு இளையபெருமாள்மாத்திர மொருவருண்டானாலோ? "ஆளுமாளார், சுமப்பார்தாம், பின்செல்வார்மற்றில்லை" என்கிறது— பரிவரானநீர்இவற்றுக்கு ஆளன்றோவென்று தம்மை யேவுகைக்காக. [தாளும்தோளும்] - நடக்கும்போது நடைச்சக்ரவத்து பிடிக்கவேண்டும்படியாயிற்று மாறியிடுந் திருவடிகளிருப்பது. "ஆஜாநுபாஹு:" என்னக் கடவதிறே: அத்தையும், வீசுந்தோள்களையும். [கைகளையார] - தன்னைப்பிரிந்துஉறுவிக்கிடக்கிற கைகளை, ஆர - வயிறாரஉண்ண என்பாரைப் போலே. [தொழக்காணேன்] - தொழக்காணப்பெறுகிறிலேன்; தொழுகையென்றும் பரிகையென்றும் பர்யாயமாயிற்றுஇவர்க்கு.நமஶ்ஶப்தத்தாலே - எனக்கன்று, அவனுக்கென்றிறே சொல்லுகிறது. தொழுகையும், நம: என்கையும், பர்யாயமிறே. [நாளும் நாளும்நாடுவன்] - அவன்தனிமையை யநுஸந்தித்து, "அவனுக்கு என்வருகிறதோ?" என்று நாள்தோறும் ஆராயாநிற்பன். [நாளும்நாளும்] - ஸம்பந்தம் நித்யமானால், தத்கார்யமான பரிவும் நித்யமாகக் கடவதிறே. [அடியேன்]-ஸ்வரூபஜ்ஞாநமுடையநான்: ரக்ஷிக்கஅபிமதத்தை விளக்கை ரக்ஷ்யவஸ்துவுக்கு ஸ்வரூபமென்றறிந்த நான். [ஞாலத்தே] - பரமபதத்திலேயிருந்து அஸ்தாநே பயஶங்கைபண்ணுகிறேனோ? அஸ்த்ரப்ரயோகம் பண்ணுவார், நாகபாஶத்தையிட்டுக் கட்டுவார், அழைத்துவைத்து மல்லரையிட்டு வஞ்சிக்கத்தேடுவார், பொய்யாஸநமிடுவாராகிற தேசத்திலேயிறே வர்த்திக்கிறது.

ஈடு.—மூன்றாம்பாட்டு. ப்ரயோஜநாந்தரபரர்க்காகத் தன்வாசியறியாதே எதிரிடவல்ல ஸம்ஸாரத்திலே தனியே வர்த்தியாநிற்கும்; அங்குத்தைக்கு ரக்ஷையாக நான் உதவப்பெறுகிறிலேனென்று இன்னாதாகிறார்.

[ஆளுமாளார்] - விபூதித்வயத்திலும் பரிகைக்கு ஆளில்லை; தனியே ஒருவரை ஆளவேணுமென்றிருக்கிறார். நித்யஸூரிகள் பகவதநுபவத்திலே அந்யபரர், ஸம்ஸாரிகள் ஶப்தாதிகளிலே அந்யபரர். [ஆழியும் சங்கும் சுமப்பார்தாம்] - ஆபரணமான திவ்யாயுதங்கள், அவன் ஸௌகுமார்யத்தாலே மலையெடுத்தாற் போலே சுமையாய்த் தோற்

அஸ்த்ரமாய் அநுபவிப்பார்க்கு ஆபரணமாயிருக்கிறவை.

மூன்றாம்பாட்டு.—ஆளும் இத்யாதி. "ஞாலத்தே - ஆளுமாளார்" என்று தொடங்கி "தொழக்காணேன்" என்னுமளவும் கடாக்ஷித்து அவதாரிகை-ப்ரயோஜநாந்தர இத்யாதி. "தொழக்காணேன்" என்றத்தைப்பற்ற - நான் உதவப்பெறுகிறிலேன் என்றது.

உபயவிபூதியையும்ஆளாநிற்க, "ஆளுமாளார்" என்கிறதென்? என்ன - விபூதித்வயத்திலும் இத்யாதி வாக்யத்வயம். இல்லாதபடி எப்படியென்ன - நித்யஸூரிகள் இத்யாதி வாக்யத்வயம், எந்திஞர் என்னாதே, "சுமப்பார்" என்றதுக்கு பாவம் - ஆபரணமான இத்யாதி. ஆயுதங்கள் ஆபரணமானபடி எப்படியென்ன - எதிரிகளுக்கு இத்யாதி. "வாளும்வில்லுங்கொண்டு" என்

[தாம்] - தம்மைப் பார்த்துக்கொள்ளவேண்டாவோ. • எப்போதும் கைகழலா நேமியா னன்றோ, அவனுக்கு நிரூபகங்களான இவை சுமையோ? என்ன,— அது தான்செய்கிறது. [வாளும்வில்லுங்கொண்டு] - இளையபெருமாளைப்போலே ஒருவர் பின்னே கொடுசென்றுலா காதோ? "ஆளுமாளார், சுமப்பார்தாம், பின்செல்வார்மற்றில்லை" என்கிறது - "பரிவரான நீர் அவற்றுக்கன்றோ?" என்று தம்மை ஏவுவாராக. [தாளுந்தோளும்] - நடக்கும்போது நடைச்சக்ரவத்துப்பிடிக்கும்படியாயிற்று, மாறியிடும்திருவடிகளிருப்பது. "அக்ர தஃப்ரயயௌராமஃ" (அக்ரதஃப்ரயயௌராமஃ) என்னக்கடவதிறே. அத்தையும், வீசுதோள்களை யும். [கைகளையார] - "வயிறுரவுண்ண" என்பாரைப்போலே. [தொழக்காணேன்] - தொழுகையும், பரிகையும், பர்யாயம்போலேகாணும். தொழக்காணப் பெறுகிறிலேன். நமஶ்ஶப்தத்தால் - எனக்கன்று, அவனுக்கென்றிறே சொல்லுகிறது. தொழுகையும், நமஃ என்கையும், பர்யாயமிறே. [நாளும்நாளும் நாடுவேன்] - அவன்தனிமையை அநுஸந்தித்து, "அவனுக்கு என்வருகிறதோ?" என்று நாள்தோறும் ஆராயாநிற்பன். ஸம்பந்தம் நித்யமா ளுல் தத்கார்யமான பரிவும் நித்யமாகக் கடவதிறே. [அடியேன்]- ஸ்வரூபஜ்ஞாநமுடைய நான்-ஶேஷிக்கு அதிஶயத்தை விளைக்கையே ஶேஷவஸ்துவுக்கு ஸ்ரூபமென்றறிந்த நான். [ஞாலத்தே] - பரமபதத்திலேயிருந்து அஸ்த்தாநேஹயஶங்கை பண்ணுகிறேனே? ப்ரஹ் மாஸ்த்ர ப்ரயோகம்பண்ணுவார், நாகபாசத்தையிட்டுக் கட்டுவார், அழைத்துவைத்து மல் லரையிட்டு வஞ்சிக்கத்தேடுவார், பொய்யாஸநமிடுவாராகிற தேசத்திலே வர்த்தியாநின்றால் நான் அஞ்சாதேசெய்வதேன்? (௩)

இறதுக்கு அவதாரிகை - எப்போதும் இத்யாதி. "பின்செல்வார்மற்றில்லை" என்று வயிறெரி கைக்கு, பின்செல்வாருண்டோ? என்ன - இளையபெருமாளை இத்யாதி. ஏவுவாராக என்றது - தம்மை ஏவுகைக்காக என்றபடி. தாள்களையும் தோள்களையும் தொழுகைக்கு, அப்படி ஆகர்ஷகமா யிருக்குமோவென்ன-நடக்கும்போது இத்யாதி. நடைச்சக்ரவத்துப் பிடிக்கையாவது - கதிஸார்வ பௌமன்வந்தானென்றுவிருதுபிடிக்கை.மாறியிடும்திருவடிகள் ஆகர்ஷகமென்னுமதுக்குப்ரமாணம்- அக்ர தஃஇத்யாதி."அக்ர தஃப்ரயயௌராமஸ்ஸீதாமத்யே ஸுமத்யமா"(ஸ்ரீரா-அயோத்யா3,28) இத்யாதி. "கைகளையார" என்றது-கைகளார என்றபடி. ஐகாரம் - அவ்யயம். "ஆர" என்றதுக்கு அர்த்தம்-வயிறார இத்யாதி. பரியக்காணேனென்னாதே,"தொழக்காணேன்"என்பானென்?என்ன - தொழுகையும் இத்யாதி. தொழுகையும் பரிகையும் பர்யாயமானபடி எப்படியென்ன - நமஶ்ஶப் தத்தால் இத்யாதி. அதாவது - அவனுக்கு பரதந்த்ரமானால் அவனுக்கு அதிசயத்தைப்பண்ணுகை ஸ்வரூபமாகையாலே, நமஶ்ஶப்தத்தாலே பரிவைச் சொல்லுகிறதென்றபடி. தொழுகைதான் நமஸ்கார வாசியோவென்ன - தொழுகையும் இத்யாதி. நாள்தோறும் ஆராயவேணுமோ? என்ன - ஸம்பந்தம் இத்யாதி. விவரணம் - ஶேஷிக்கு இத்யாதி. "ஞாலத்தே" என்றதுக்கு பாவம் - பரம பதத்திலே இத்யாதி வாக்யத்வயம். (௩)

நான்காம் பாட்டு.

ஞாலம்போனகம்பற்றி ஓர்முற்றுருவாகி
ஆலம்பேரிலை அன்னவசஞ்செய்யுமம்மானே!
காலம்பேர்வதுஓர்காரிருளூழியொத்துளதால் உன்
கோலங்காரெழில் காணலுற்றுஆழுங்கொடியேற்கே.

ஆ.—(ஞாலம்) - ஓர் முற்றுருவாய், அந்தப்பிள்ளைத்தனத்தாலே ஸர்வ லோகங்களையும் அமுதுசெய்து, பெரியவெள்ளத்திலே சிறியதோராலிலையிலே, யசோதைப்பிராட்டியைப்போலேயிருப்பாளொருதாயாருமின்றியே, தனியே கண்வளர்ந்தருளுகிறதுமையில் துணையாயிருக்கப்பெறாமையாலும், உன்வடிவழகைக்காண ஆசைப்பட்டுப்பெறாமையாலும், அபாரமான துர்வார்ணவத்திலே நிமக்நனாய்க்கிடக்கிற எனக்கு ஒருக்ஷணமானது, அந்தகாரமயமான ராத்ரி யுகமாய்ச் செல்லுகிறதென்கிறார்.

ஒ.—நாலாம்பாட்டில், ஸப்ரமாணமாம்படி ஆலிலையிலே ரக்ஷகரின்றிக்கே தனியே கண்வளர்ந்தருளுகிறபடியை யநுஸந்தித்து, "இவனுக்குஎன்வருக்கிறதோ?" என்று வீதராகிறார்.

[ஞாலமென்று தொடங்கி] - அத்யந்தஸுகுமாரமான சிறுவடிவைக்கொண்டு ஜகத்தையெல்லாம் வயிற்றிலே புகவைத்து சிறிய ஆலிலையிலே இடம் வலங்கொள்ளும் ஸ்வபாவனான பெரியோனே! [காலமென்று தொடங்கி] - ஒருக்ஷணத்தில் நின்றும் ஒருக்ஷணத்தில் பேரும் ஸந்திமாத்ரம் மஹாந்தகாரமான கல்பத்தோடு ஒவ்வாநின்றது, உனக்கு ரக்ஷாசிந்தை பண்ணுகைக்காகக் கறுத்த ஒளியையுடைய உன் அழகியவடிவைக் காண ஆசைப்பட்டுப்பெறாதே மிகவும் நோவுபடுகிற மஹாபாபியான எனக்கு.

ப.—அநந்தரம், அஸஹாயனான வடதளசாயியினுடைய ஆஹிருப்யத்துக்கு என்னப்ரமாதம்வருகிறதோவென்று அஞ்சிக்கலங்கின ப்ரகாரத்தை அருளிச்செய்கிறார்.

ஓர் - அத்விதீயமாய், முற்று - அதிமுக்தமான, உருவாகி - வடிவையுடையையாய், ஞாலம் - மஹாஜகத்தை, போனகம் - போஜநமாக, பற்றி - அமுதுசெய்து, ஆல் - ஆலென்று, பேர் - பேர்சொல்லலாமளவானது, இலை - ஓரிலையிலே, அன்னவசஞ் செய்யும் - இடம்வலங்கொண்டு கண்வளர்ந்தருளுகிற, அம்மானே - ஸ்வாமியானவனே! (அந்தப்ரளயத்திலே என்னப்ரமாதம் வருகிறதோவென்று), கார் - காளமேகத்தின், எழில் - எழிலையுடைத்தான, உன்-, கோலம் - வடிவழகை, காணலுற்று - காணவேணுமென்று நிர்ப்பந்தித்து, ஆழும் - (அச்சத்தாலே) அழுங்காற்படும்படியான, கொடியேற்கு - கொடியபாபத்தையுடைய எனக்கு, பேர்வது - ஒருக்ஷணத்தில்நின்றும் க்ஷணாந்தரத்திலேபேருகிற, காலம் - காலாவகாசமானது, ஓர் - அத்விதீயமான, காரிருள் - காடாந்தகாரத்தையுடைத்தான, ஊழியொத்து - கல்பம்போலே, உளது - ஆகாநின்றது. உன்னுடைய அகடிதகடநாஸாமர்த்யமான சக்தியோகமும் ஸர்வரக்ஷகத்வ பூர்த்தியும் அச்சத்துக்குஉறுப்பாமென்று கருத்து.

இ.—நாலாம்பாட்டில், "ஞாலத்தே - நாளும் நாளும் நாடுவன்" என்றார்; அந்த ஸம்ஸாரத்திலே வடதளசாயகத்திலே பிறந்த ப்ரமாதத்தையநுஸந்தித்து வீத

ராகிறார். நீர் இங்ஙனே க்லேசப்படுகிறதென்? ப்ரளயாபத்திலே ஸர்வரக்ஷகனானவனன்றோ நான்? என்ன; ஸர்வரக்ஷகவஸ்துவோ ப்ரளயத்திலேயகப்பட்டதென்று பீதராகிறாரென்றுமாம்.

[ஞாலம் போனகம்பற்றி] - பரப்பையுடைத்தான பூமியைத் திருவயிற்றிலேவைத்து. "ஸாத்மிக்கும், ஸாத்மியாது" என்றறியாதே, இத்தைச்செய்வதே! "வெண்ணெயும் ஸாத்மியாது" என்றிருக்குமவரிறே. [ஓர் முற்றுருவுருவாகி] - அதுக்கடி, இவனுடைய பைசவமென்கிறார். வெண்ணெயமுது செய்தருளுவதற்குங் கீழேயிறே யிங்கில. யசோதாஸ்தநந்யபத்துக்கும் கீழாயிறேயிருப்பது இந்தமௌக்த்யம். ப்ரளயாபத்திலே வரையாதே ரக்ஷித்தஸர்வரக்ஷகத்வமும், அவடிதகடநாஸாமர்த்யமும் இவர்நெஞ்சிலே பட்டதில்லை; ஸௌகுமார்யமே யாயிற்று இவர்க்குத் தோற்றியிருப்பது. அங்கு ஒருதொட்டிலிலே கிடக்கப்பெற்றது; இங்கு, ஒருபவனான ஆலிலையிலேயாயிற்றுக் கண்வளர்ந்தருளுகிறது. [பேரிலை] - ஆலிலையென்று பேர்மாத்ரமானத்திலேயென்னுதல்; விபரீதலக்ஷணையாய், சிற்றிலையென்னுதல். [அன்னவசம் செய்யும்] - உணவுக்கீடாக இடம்வலம் கொள்ளும். "கிடக்கில் தொட்டில்கிழியவுதைத்திடும்" என்கிறபடியே பண்ணும் வ்யாபாரமடைய, இதிலேபண்ணாநின்றான். தனக்கு ஸாத்மியாத பூமியை அமுதுசெய்கையும், "ஸாத்மியாது" என்றறியாத முக்த்யத்தையும், ப்ரளயத்திலே அல்பாவகாசமான ஆலிலையிலே கண்வளர்ந்தருளுகையும், அதிலே வ்யாபரிக்கையும், இதெல்லாம் பயஸ்தாநமாயாயிற்றிருக்கிறது இவர்க்கு. [அம்மானே] - ஸர்வரக்ஷகனானவனே! ஒரு காபுருஷனுக்கு வந்ததொன்றன்றிக்கே ஸர்வரக்ஷகனானவனுக்கு வந்தப்ரமாதமென்று இதுவும் பயஸ்தாநமாகிறது இவர்க்கு. [காலம்பேர்வதோர் காரிருள் ஊழியொத்துளதால்] - உன்தனிமையை யநுஸந்திக்க, ஒருக்ஷணத்தினின்றும் க்ஷணாந்தரத்திலே பேரும் ஸங்க்யைமாத்ரம், மஹாந்தகாரமான கல்பமாய்க்கொண்டு நெடுகாநின்றது எனக்கு. [உன்கோலங்காரெழில் காணலுற்று] - உன்னுடைய கறுத்த எழிலான கோலமென்னுதல்; மேகத்தினுடைய எழில்போலேயிருந்துள்ள அழகென்னுதல். [காணலுற்றாழுங் கொடியேற்கே] - மங்களாசாஸநம் பண்ணுகைக்கு உன்னுடைய அழகிய வடிவைக்காண ஆசைப்பட்டுப் பெறாதே மிகவும் நோவுபடுகிற மஹாபாபியான எனக்கு. ஒருகாலத்திலே முடியாதே, நித்யமாயிருப்பதொரு பயம் அநுவர்த்திக்கும்படியான பாபத்தைப்பண்ணினேன். ஸம்ஸாரபயம் அவன்காலிலே குனியத்தீரும்; "ரக்ஷகனுக்கு என்வருகிறதோ?" என்கிற பயத்துக்கு முடிவில்லை.

ஈடு.—நாலாம்பாட்டு. இவர் இப்படி அஞ்சினவாறே, ப்ரளயாபத்தினின்றும் ஜகத்தையெடுத்து வயிற்றிலேவைத்து நோக்கினவனன்றோ நான்? நீர் நமக்கு பயப்பட வேண்டாகாணுமென்று தான் ஸர்வரக்ஷகனாயிருக்கிறவிருப்பைக் காட்டினான்; ஸர்வரக்ஷகமான வஸ்துவாகாதே ப்ரளயத்திலே அகப்படப்புக்கதென்று அதுக்கும் அஞ்சுகிறார்.

நால்ம்பாட்டு.—ஞாலம் இத்யாதி. "ஆலம்பேரிலையன்னவசம்செய்யுமம்மானே" என்றத்தைக் கடாக்ஷித்து அவதாரிகை - இவர் இப்படி இத்யாதி.

[ஞாலம் போனகம்பற்றி] - "இது நமக்கு ஸாத்மியாது" என்றறியாதே, பூமிப்பரப்பையன்றே வயிற்றிலே யெடுத்துவைத்தது? "வெண்ணெயும் ஸாத்மியாது" என்றிறே இவரிருப்பது? [ஓர்முற்றுருவுருவாகி] - †ஒருகோறுட்டிலே தெறித்தால் மற்றைக் கோறுட்டாலே பால்பாயும் பருவமாயிற்றுப் பருவம். யசோதாஸ்தநந்தயத்துக்கும் கீழாயிறேயிருப்பது, இந்த மௌக்த்யம். ப்ரளயாபத்திலே வரையாதே ரக்ஷித்தரக்ஷகத்வமும், அகடிதகடநாஸாமர்த்யமும் இவர்நெஞ்சில் படுகிற தில்லை; ஸௌகுமார்யமேயாயிற்று இவர்க்குத் தோற்றியிருக்கிறது. [ஆலம்பேரிலை] - அந்த ஒரு தொட்டிலிலே கிடக்கப்பெற்றது, இங்கு ஒருபவனுன ஆலிலையிலேயாயிற்றுத் திருக்கண் வளர்ந்தருளுகிறது. [பேரிலை] - பேருகிற இலை : முகிழ்விரிகிற இலை. "கதம் த்வயம் ஶிஶுஶ்ஶேதே லோகே நாஶமுபாகதே | ஶாகாயாம் வடவ்ருக்ஷஸ்ய பல்லவே த்வதிவிஸ்மித:" (கதந்வயம்ஸிஸூக்ஷ்மேதே லோகேநாஸமுபாகதே | ஸாகாயாம்வடவ்ருக்ஷஸ்ய பல்லவேத்விதிவிஸ்மிதஃ) † "இளந்தளிரில் கண்வளர்ந்த" என்கிறபடியே. ஆலிலையென்று - ஒரு பேர் மாத்ரமென்னுதல், பெரிய இலையென்று விபரீதலக்ஷணையாய், சிற்றிலையென்றுதல். [அன்னவசஞ் செய்யும்] - உணவுக்கூடாகஇடம் வலங்கொள்ளும். யசோதைப்பிராட்டி தொட்டிலில் பண்ணும் வ்யாபாரமெல்லாம் பண்ணுமாயிற்று அதுக்குள்ளே. * கிடக்கில் தொட்டில் கிழியவுதைத்திடுமேதில். தனக்கு ஸாத்மியாதபூமியை அமுதுசெய்கையும், "ஸாத்மியாது" என்றறியாத முக்யனுகையும், ப்ரளயத்திலே அல்பாவகாசமான ஆலிலையிலே கண்வளர்ந்தருளுகையும், அதிலேகிடந்தவிடத்திற்கிடவாதே வ்யாபரிக்கையும், இதெல்லாம் ஹயஸ்த்தாநமாயிருக்கிறதாயிற்று இவர்க்கு. [அம்மானே] - ஸர்வரக்ஷகனுனவனே! ஒரு காபுருஷனுக்கு வந்ததோன்றன்றிக்கே ஸர்வரக்ஷகனுனவனுக்கு வந்ததென்று இதுவும் ஹயஸ்த்தாநமாகிறது இவர்க்கு. [காலம் இத்யாதி] - உன்தனிமையை அநுஸந்திக்க அநுஸந்திக்க, ஒரு க்ஷணத்ின்றும் க்ஷணாந்தரத்திலேபேருகிற நடுவில்ஸந்திமாத்ரம், மஹாந்தகாரமான கல்ப

"ஞாலத்தைப்போனகமாகப்பற்றி" என்றதுக்கு ஹாவம்-இதுநமக்கு இத்யாதி. போனகம்பற்றி - திருப்போனகமாக ஸ்வீகரித்து. "ஓர்" என்றதுக்கு ஹாவம் - ஒரு † கோறட்டிலே இத்யாதி. கோறடு - கபோலம். "ஓர்" என்றதுக்கு வ்யாவர்த்யம் - யசோதா இத்யாதி. ரக்ஷகத்வமும் அகடிதகடநாஸாமர்த்யமும் ஸங்க்ருத்திஹேதுவன்றோ? என்ன - ப்ரளயாபத்திலே இத்யாதி. "ஞாலம்போனகம்பற்றி" என்கையாலே - ரக்ஷகத்வமும், "ஆலம்பேரிலை" என்கையாலே - அகடிதகடநாஸாமர்த்யமும் தோற்றுகிறது. "ஆலம்பேரிலை" என்றத்தால் வ்யாவ்ருத்தி - அந்த ஒரு தொட்டில் இத்யாதி வாக்யத்வயம். "பேரிலை" என்றதுக்கு - மூன்றர்த்தம். ஆலந்தளிரிலேகண்வளர்ந்தானேவென்ன - கதம் த்வயம் இத்யாதி. "கதம் த்வயம் ஶிஶுஶ்ஶேதே லோகே நாஶமுபாகதே | ஶாகாயாம் வடவ்ருக்ஷஸ்ய பல்லவே த்வதிவிஸ்மித:". உணவுக்கீடாக - உண்டதுக்கீடாக. விவரணம் - யசோதைப் பிராட்டி இத்யாதி. இளந்தளிரில் கண்வளந்த என்றது - திருமொழியில் "மஞ்சாடு" இத்யாதி. தொட்டிலில்பண்ணும் வ்யாபாரம்ஏதென்ன - கிடக்கில் இத்யாதி; பெரியாழ்வார் திருமொழி. தொட்டிலில்வளர்த்திஞல் தொட்டில்கிழியும்படி உதையாநிற்குமென்றபடி. "ஞாலம்போனகம்" இத்யுக்தார்த்தத்தை நிகமிக்கிருர் தனக்கு ஸாத்மியாத இத்யாதி. "அம்மான்" என்றதுக்கு ஹாவம் - ஒரு காபுருஷனுக்கு இத்யாதி. "பேர்வதோர் - காலம் - காரிருளூழியொத்துளதால்" என்று அந்வயித்து அர்த்தம் - உன் தனிமையை இத்யாதி. "காரிருள்":

---

† கொறட்டிலே என்று சியாரும்பதத்துக்குப் பாடம். கொடிற்றிலே என்று இருக்கலாமோ எனத்தோன்றுகின்றது.

மாய்க்கொண்டு நெடுகாநின்றது எனக்கு. [உன்கோலம் காரேழில்காணலுற்று] - உன்னுடைய கறுத்த எழிலான கோலமென்னுதல், மேகத்தினுடைய எழில் போலேஇருந்துள்ள அழகென்னுதல். [காணலுற்றாழுங்கொடியேற்கு] - மங்களாசாஸநம் பண்ணுகைக்கு உன்னழகியவடிவைக்காணஆசைப்பட்டுப் பெறாதே நோவுபடுகிற மஹா பாபியான எனக்கு. ஸம்ஸாரபயம் அவனை ஆஸ்ரயிக்கப்போம்; ஒருகாலத்திலும் முடியாதே நித்யமாயிருப்பதொரு பயம் அநுவர்த்திக்கும்படியான பாபத்தைப் பண்ணினேன். "ரக்ஷகனுக்குஎன்வருகிறதோ ?" என்கிற பயத்துக்கு முடிவில்லையே. (ச)

ஐந்தாம் பாட்டு.

கொடியார்மாடக் கோளூரகத்தும்புளிங்குடியும்
மடியாதின்னே நீதுயில்மேவிமகிழ்ந்தது தான்
அடியார்அல்லல் தவிர்த்தஅசைவோ? அன்றேல்இப்
படிதான்நீண்டுதாவிய அசைவோ?பணியாயே.

—(கொடியார்) - "அந்தஇழவுதீரவேணும்" என்று ஆஸ்ரிதர்க்கு ஆத்ம ஊரம்பண்ணுகைக்குக் கொடிகட்டிக்கொண்டிருக்கிற திருக்கோளூரிலும் திருப்புளிங்குடியிலும் போய்ப் புக்கவிடத்திலே, தம்மைத்திருக்கண்ணாலே பார்த்தருளுதல், ஒருவார்த்தை யருளிச்செய்தல், ஒருதிவ்யசேஷ்டிதத்தைப்பண்ணுதல் செய்தருளாதே ஒருபடியே கண்வளரக்கண்டவாறே நீயொருபடியே கண்வளர்ந்தருளுகிறது ஆஸ்ரிதவிரோதி நிரஸநஜநித ஸ்ரமத்தாலேயோ? அன்றிக்கே, த்ரைலோக்ய விக்ரமணஜநித ஸ்ரமத்தாலேயோ? என்றுகொண்டு, இவனுக்குஒரு வ்யஸநமுண்டானதாக ஸங்கித்து வ்யஸநப்படுகிறார்.

ஓ.—அஞ்சாம்பாட்டில், திருக்கோளூரிலும் திருப்புளிங்குடியிலும் கண்வளர்ந்தருளுகிறபடியை இவர் பயந்தீரக் காட்டியருளக்கண்டு சேஷ்டைகளைப்பண்ணாதே ஒருபடிப்படக் கண்வளர்ந்தருளி அத்தாலே இனியையாகைக்குக் காரணமென்? என்று தம்முடைய பயத்தாலே எம்பெருமானைக் கேட்கிறார்.

[மடியாது] - சோம்பாமையுமாம். [அடியாரென்றுதொடங்கி] - ஆஸ்ரிதர்க்காக அஸுரராக்ஷஸரோடேபிணங்கி அவர்களுடைய உஜ்ஜீவங்களைக் கெடுத்தவருத்

காரென்று - கறுப்பாய், மஹாந்தகாரமென்றபடி. முந்தின அர்த்தத்துக்கு, "கார்" என்று - கறுப்பாய், "எழில்" என்று - தேஜஸ்ஸாய், "கோலம்" என்று - விக்ரஹமாய், கறுத்ததேஜஸ்ஸையுடைய விக்ரஹ மென்றபடி. த்விதீயார்த்தத்துக்கு "கார்" என்று - மேகமாய், "எழில்" என்று - அழகாய், "கோலம்" என்றும்-அழகாய், மேகத்தினுடைய அழகுபோலேயிருந்துள்ள அழகென்னுதல். "ஆழும்" என்கிற வர்த்தமாநார்த்தம் - ஸம்ஸார பயம் இத்யாதி வாக்யத்வயம். இது நித்யமாயிருக்குமோ? என்ன - ரக்ஷகனுக்கு இதயாதி. விக்ரஹவைலக்ஷண்யம் நித்யமாகையாலே பரிவும் நித்யமாயிருக்குமென்றபடி. 'ஞாலம் போனகம்' என்றுதொடங்கி, 'அம்மானே - உன் - காரெழில் - கோலம் - காணலுற் றாழும்கொடியேற்கு - பேர்வதோர் - காலம் - காரிருளூழியொத்துளதால்' இத்யந்வய:.

(ச)

நமோ? அன்றிக்கே, இப்பூமியை அதிஸுகுமாரமான வடிவோடே வளர்ந்தருளி அளந்த நோவோ? அருளிச் செய்தருளாய்!

ப.—அநந்தரம், திருக்கோளூரிலும் திருப்புளிங்குடியிலும் முசியாதே கண்வளர்ந்தருளுகிறது, ஆஶ்ரிதவிரோதிநிவர்த்தநத்தாலும் த்ரிவிக்ரமாபதாநத்தாலும் வந்த ஆயாஸமோ? என்கிறார்.

(விரோதிகளும்அறியலாம்படி), கொடி - கொடிகள், ஆர் - செறிந்த, மாடம் - மாடத்தையுடைய, கோளூர் - திருக்கோளூர்க்கு, அகத்தும் - உள்ளும், (பலவிடத்தில் படுக்கைபடுத்தது அலேச்சலின் மிகுதியென்று ஶங்கிக்கலாம்படி), புளிங்குடியும் - திருப்புளிங்குடியிலும், மடியாது - மீளாதே, இன்னே - (ஒருபடிப்பட) இப்படி, துயில் மேவி - கண்வளர்ந்தருளினவத்தாலே, நீ - நீ, மகிழ்ந்ததுதான் - உகட்புப்பிறந்திருக்கிறவிது, (ஆஶ்ரிதவிரோதிகளான ராவணாதிகளை நிரஸித்து), அடியார் - அவர்கள், அல்லல் - துஃகத்தை, தவிர்த்த - போக்கின, அசைவோ - அலேச்சலாலேயோ? அஃறேல் - அதல்லவாகில், இ - இந்த, படிதான் - பூமியை, நீண்டு - ஒருநாளே வளர்ந்து, தாவிய - அளந்துகொண்ட, அசைவோ - ஆயாஸமோ? (உன்திருமிடற்றோசையில் வாசியாலே நான் உன்ஆயாஸத்தின் மிகுதி யறிகைக்காகவும், நொந்தவிடம்அறிகைக்காகவும்), பணியாய் - அருளிச்செய்யவேணும். அளந்ததாளைப்பிடித்தல், எய்த்த தோளைப்பிடித்தல் செய்கையிலே இவர்க்குக் கருத்து.

இ.—அஞ்சாம்பாட்டில், ப்ரளயார்ணவத்திலே தனியே கண்வளர்ந்தருளினவிடத்தில் ஸயந்திர நிர்ப்பயமாய்ப் பரிவருண்டான திருக்கோளூர் திருப்புளிங்குடி தொடக்கமான இடங்களிலே கண்வளர்ந்தருளுகிறபடியை இவர் ஸயநிவ்ருத்திக்காகக் காட்டிக்கொடுக்க, 'அதுதானும் ஸயஹேது' என்கிறார்.

[கொடியார்மாடக் கோளூரகத்தும்] - கொடிமிக்க மாடங்களையுடைய திருக்கோளூரிலும், ஶத்ருக்கள்கிடந்தவிடம்அறிந்து அபிசரிக்கும்படி கொடிகட்டிக்கொண்டு கிடக்கவேணுமோ? கம்ஸஸயத்தாலே பிறரறியாதபடி வளர்ந்தாற்போலே யிருக்கலாகாதோ? [புளிங்குடியும்] - இதுவும் ஒருஸயஹேது. பலவிடங்களிலே படுக்கை படுக்கிறது ஶ்ரமத்தின்மிகுதி யென்றிருக்கிறார். [மடியாது] - இடம்வலம்கொள்ளாதே - பாடோடும்படியாக வென்னுதல்; மடியென்று சோம்பாய், சோம்பாதேயென்னுதல். அதாகிறது - அவன் நமக்காகக் கிடக்கிறானென்றறிந்து பரிகைக்குஒருத்தரைப் பெற்றிலோமென்று கிடையிளகா தொழிகை. [இன்னே] - ''கிடந்ததோர்கிடக்கை'' என்னுமித்தனையொழிய, பாசுரமிடப் போகாதிருக்கை. [நீதுயில்மேவி மகிழ்ந்ததுதான்] - அவிகாரியாயிருக்கிற நீ, ஒருபடியே கண்வளர்ந்தருளி, அத்தாலே இனியையாகைக்குஹேதுவென்? இவன்முகத்தில் தெளிவுக்குஅடி முன்னேயொரு ஶ்ரமமுண்டாகையிறே. ஶ்ரமமுண்டாயிருப்பார்க்கு உறங்கவுறங்க முகம்தெளிந்துவரக் காண்கையாலே, இங்கும் இத்தெளிவுக்கடி ஶ்ரமமென்கிறார். [அடியாரல்லல்தவிர்த்த அசைவோ]- திருவடிகளிலே ஶரணம்புகுந்த இந்த்ராதிகளுக்காக ராவணாதிகளை யழியச்செய்து, அவர்கள் துஃகங்களைக்கெடுத்த இளைப்போ? [அன்றேல்] - அன்றிக்கே. [இப்படி இத்யாதி] - அன்றேபிறந்து அன்றேவளர்ந்து ஸுகுமாரமான திருவடிகளைக்கொண்டு காடுமோடையும் அளந்து கொள்ளுகையாலே திருவடிகள் நொந்தோ? [பணியாயே] - தோள்நொந்தோ, திருவடிகள் நொந்தோ, அருளிச்செய்யாய்! தோள்நொந்ததென்னில்

தோளைப்பிடிக்கவும், திருவடிகள் நொந்ததென்னில் திருவடிகளைப் பிடிக்கவும் அருளிச்செய்யாய். ஸாவஜ்ஞராய் அகவாயிலோடுகிறது அறிந்து அது செய்கையன்றியே "பணியாய்" என்கிறதென் என்னில்? சொல்லும்போதை ஸ்வரஸாதங்கொண்டு ஓடுகிற உமையறிந்து பரிஹரிப்பாராக. உகந்தருளின நிலங்களிலும் செய்யமுடியாததில்லை, சொல்லமுடியாமை யிருக்கிறனத்தனையோ! என்றிருப்பாரிறே.

ஈடு—அஞ்சாம்பாட்டு. ப்ரளயார்ணவத்திலே தனியே கண்வளர்ந்தருளுகிறானென்று பயப்பட்டவர் பயந்தீர, பரிவரும்உண்டாய், நிர்ப்பயமான திருக்கோளூர் திருப்புளிங்குடி தொடக்கமான இடங்களிலே கண்வளர்ந்தருளுகிறபடியைக் காட்டிக்கொடுக்க, அதுதானும் இவர்க்கு பயஹேதுவாயிற்று.

[கோடியார்மாடக் கோளூரகத்தும்] - கொடிமிக்க மாடங்களையுடைய திருக்கோளூரிலும்: ஶத்ருக்கள்கிடந்தவிடமறிந்து அபிசரிக்கும்படி கொடிகட்டிக்கொண்டு கிடக்கவேணுமோ? கொடிக்கு பயப்படவல்லார் இவரைப்போலில்லை. கம்ஸ ஹயத்தாலே ஒளித்து வளர்ந்தாற் போலே இருக்கலாகாதோ? இந்தப்பயமில்லையிறே கீழ்ப்பாட்டில், அநுகூலப்ரதிகூலவிபாகமற ஸம்ஹ்ருதமாய்க் கிடக்கையாலே. [புளிங்குடியும்]-இதுவும் ஒருபயஹேது. பலவிடங்களிலும் படுக்கை படுக்கிறது ஶ்ரமத்தின்மிகுதி யென்றிருக்கிறார். [மடியாது] - இடம்வலங்கொள்ளாதே என்னுதல்; மடியென்று - சோம்பாய், சோம்பாதே என்னுதல். அதாவது - நமக்காக இவன்கிடக்கிறானென்றுஅறிந்து "பரிகைக்குஒருத்தரைப் பெற்றிலோம்"என்று இளகாதொழிகை. [இன்னே] - இப்படியே. "கிடந்ததோர்கிடக்கை" என்னுமித்தனையொழிய, பாசுரமிடப்போகாதிருக்கை. [நீ துயில்மேவி மகிழ்ந்ததுதான்] - * அவிகாரியாயிருக்கிற நீ ஒருபடியே கண்வளர்ந்தருளி, அத்தாலே இனியனாகைக்கு ஹேதுவென்? இவன்முகத்திலே தெளிவுண்டாயிருந்தது, அதுக்கடி முன்பே ஒருஶ்ரம முண்டாகையிறே என்றிருக்கிறார்; ஶ்ரமமுடையார்க்கு உறங்கவுறங்க முகந் தெளிந்துவரக் காண்கையாலே. [அடியாரல்லல்தவிர்த்தஅசைவோ]-திருவடிகளிலே ஶரணம்புகுந்த இந்த்ராதிகளுக்காக ராவணாதிகளை அழியச்செய்து, அவர்களுடைய து:கங்களைக் கெடுத்த இளைப்போ? [அன்றேல்] - அன்றியே. [இப்படி இத்யாதி] - அன்றே பிறந்துஅன்றேவளர்ந்து ஸுகுமாரமான திருவடிகளைக்கொண்டு காடுமேடையும் அளந்து கொள்ளுகையாலே திருவடிகள்நொந்தோ? [பணியாயே]-தோள்நொந்தோ, திருவடிகள்

அஞ்சாம்பாட்டு - கோடியார் இத்யாதி. "கோளூரகத்தும்புளிங்குடியும் - துயில்மேவி மகிழ்ந்தது" என்றவற்றைக் கடாக்ஷித்து அவதாரிகை - ப்ரளயார்ணவத்திலே இத்யாதி.

"கொடியார்" என்று விசேஷிக்கிறவருடைய ஹார்த்தபாவம் - ஶத்ருக்கள் இத்யாதி வாக்யத்வயம். "கொடியார்மாடம்" என்றதுக்கு ரஸோக்தி - கொடிக்கு இத்யாதி. கொடியென்று - ஸ்த்ரீக்கும்பேர். கீழ்ப்பாட்டைப்பற்ற வாசியை அருளிச்செய்கிறார் - இந்தப்பயம் இத்யாதி. இல்லாமைக்கு ஹேது அருளிச்செய்கிறார் - அநுகூல இத்யாதி. இரண்டு திருப்பதியில் கண்வளர்ந்தத்தைச் சொல்லுகிறவருடைய பாவம்-இதுவும் இத்யாதி - அதெப்படியென்ன - பலவிடங்களிலும் இத்யாதி. இடம்வலங்கொள்ளாதே என்கிறவர்க்கு பாவம்-பாடோடிக்கிடப்பதே என்று விஷண்ணராகிறாரென்று. "சோம்பாதே" என்றதுக்கு பாவம் - அதாவது நமக்காக இத்யாதி. இளகாதொழிகையாவது - எழுந்திராதொழிகை யென்றபடி. இன்னபடி யென்று சொல்லுகிறதுக்கென்? என்ன - கிடந்ததோர் இத்யாதி. இனியனாகை நல்லதன்றோவென்ன - அதுக்குபாவம் - இவன்முகத்திலே இத்யாதி. இது எங்கேகண்டோமென்ன - ஶ்ரமமுடையார்க்கு

நொந்ததோ? அருளிச்செய்யாய்; தோள் நொந்ததென்னில் தோளைப்பிடிக்க, தாள்நொந்ததென்னில் தாளைப்பிடிக்கவும் அருளிச்செய்யவேணும். ஸ்வரஸாதங்கொண்டு அறியலாமென்று கேட்கிறார். உகந்தருளினவிடங்களிலும் செய்யமுடியாததில்லை: சொல்ல நினையாமலிருக்கிறு னித்தனையென்றிருக்கிறார். (ரு)

ஆறாம் பாட்டு.

பணியாவமரர் பணிவும்பண்புந்தாமேயாம்
அணியாராழியுஞ்சங்கமும் ஏந்துமவர்காண்மின்
தணியாவெந்நோய் உலகில்தவிர்ப்பான் திருநீல
மணியார்மேனியோடு என்மனம்சூழவருவாரே.

ஆ.—(பணியாஅமரர்) - ஸ்வாச்ரித சதுர்முகாதி தேவர்களுக்கு ஸ்வேதர ஸகலஜநாதிவந்த்யத்வ நிரதிசயஐச்வர்ய ப்ரதனாய், ஸகலலோகது:க நிரஸநார்த்தமாக ஸ்வாத்மவிபூஷண சங்க சக்ராதி திவ்யாயுததரனாய், நிரதிசய ரமணீய நீலரத்நஸத்ருசனாயிருந்த அவனை ஆசைப்பட்டுக்கிடீர் நான் இப்பாடுபடுகிறதென்கிறார்.

ஒ.—ஆறாம்பாட்டில், திருநாட்டிலே அயர்வறுமமரர்கள் பரியஎழுந்தருளியிருக்கிற ஸர்வேச்வரன்கிடீர் ஸமஸ்தாத்மாக்களுடைய தணியாவெந்நோய் தவிர்க்கைக்காக என்மனம் மறுகும்படி இவ்வுலகிலே வருகிறவன்! என்கிறார்.

[பணியாவமரரென்று தொடங்கி] - வேறுசிலரைப் பணிகைக்கு ஸம்பாவனையின்றிக்கேயிருக்கிற அயர்வறுமமரர்கள் பணிவுக்கும் ஜ்ஞாநாதிகுணங்களுக்கும் தாமே விஷயமாய்க்கொண்டு அழகுமிக்கிருந்துள்ள திருவாழியையும் ஸ்ரீபாஞ்சஜந்யத்தையும் ஏந்துமவர்கிடீர்! [தணியாவென்று மேலுக்கு] - ஒருநாளும் முடியாத கொடிய து:கங்களைத் தவிர்க்கைக்காக அழகியவடிவோடே இவ்வுலகத்திலே வருகிறவர்.

ப.—அநந்தரம், நித்யஸூரிகளுக்கு அநுபாவ்யமான நிரதிசயபோக்ய விக்ரஹத்தோடே ப்ரதிகூல பூயிஷ்டமான இஜ்ஜகத்தில் "என்னாகிறதோ". என்று என்நெஞ்சு கலங்கும்படி வாராநின்றாரென்கிறார்.

("நக்ஷத்ராணி" என்கிறபடியே ஓரவஸ்தையிலும்), பணியா - (ஔபாதிகமாகவாகிலும் வேறொருவர்காலில்) பணியவேண்டாதபடி, அமரர் - (அநந்யாதிபதிகளான) நித்யஸூரிகளுடைய, பணிவும் - (ஸ்வரூபப்ரயுக்தமாய் ஸ்வாபாவிகமான) பணிவுக்கும், பண்பும் - (அவர்கள் ஜ்ஞாநப்ரேமாதி) ஸ்வபாவங்களுக்கும், தாமேயாம் - தாமே விஷயமாய்க்கொண்டு, அணி - ஆபரணரூபமான, ஆர் - போக்யதையையுடைய, ஆழியும் - திருவாழியையும், சங்கமும் - திருச்சங்கையும், ஏந்தும் - (அவர்களுக்கு அநுபாவ்ய

இத்யாதி. அசைவு - இளைப்பு. இப்படி - இப்பூமி. கீழ்வாக்யவிவரணம் - தோள்நொந்ததென்னில் இத்யாதி. "பணியாய்" என்றதுக்கு ஹார்த்தபாவமாதல், பாவாந்தரமாதல் - ஸ்வரஸாதம் இத்யாதி. ஸ்வரஸாதம் - ஸ்வரத்தின் தளர்த்தி. ஸாதம் - தளர்த்தி. அர்ச்சாவதாரம் வார்த்தையருளிச்செய்யக் கூடுமோ? என்ன - உகந்தருளின இத்யாதி. (ரு)

மாம்படி) ஏந்தியிருக்கும், அவர்காண்மின் - அவர்கிடீர், (அப்பரிவரிருக்கச்செய்தே), உலகில் - லோகத்தில், தணியா - ஒருகாலும்தணியாமல் நடக்கக்கடவதாய், வெம் - அதிஶயிதபரிதாபஹேதுவான, நோய்-(அவித்யாகர்மவாஸநாருசி ப்ரக்ருதிஸம்பந்தரூப) வ்யாதிகளை, தவிர்ப்பான் - களைகைக்காக, திரு - (அந்த நித்யஸூரிகளுக்கு நித்யாநுபாவ்யமாய் நிரதிஶயஸௌந்தர்ய ஸௌகுமார்யாதி) ஸம்பத்தை, ஆர் - உடைத்தான, நீலமணி - நீலரத்நம்போலேயிருக்கிற, மேனியோடு - திருமேனியோடேகூட, (இவ்வடிவழகுக்குஎன்ன தீங்குவருகிறதோ'! என்று), என் - என், மனம் - மனஸ்ஸானது, சூழ - ப்ரமிக்கும்படி, வருவார் - ஸம்ஸாரத்திலே வருவர்.

ஈடு—ஆறாம்பாட்டில், ரக்ஷகனைக்குறித்து இப்படி அஞ்சக்கடவீரோ? என்ன; நித்யஸூரிகள் அநுபவிக்கும் ஊமையிலும் அஸ்தாநேபயஶங்கை பண்ணிப் பரியவிருக்கும்அவன் அவ்வடிவோடே ஸம்ஸாரத்திலேவந்து உலாவாநின்றால், அஞ்சாதே செய்வதென்? என்கிறார்.

[பணியாவமரர்] - வேறே சிலரைப்பணிய ஸம்பாவனையில்லாத நித்யஸூரிகள். முன்பு அஸேவ்யர்காலிலே குனிந்து ஒருநாளிலே அநுகூலித்து, "அழுக்குடம் பெச்சில்வாய்" என்று அநுதபித்தது, பின்பு அவன்காலிலே குனிந்தவர்களல்லர். [பணிவும்பண்பும் தாமேயாய்] - அவர்கள்பணிவுக்கும் ஜ்ஞாநாதிகுணங்களுக்கும் தாமே விஷயமாயிருக்குமவர். [அணியாராழியும் சங்குமேந்தும்] - ஸர்வாபரணமும் தானேயாகப்போரும்படியான திவ்யாயுதங்களை தரித்து நித்யஸூரிகளுக்குக் காட்டிகொடுத்தால், அவர்களுக்கும் அஸ்தாநேபயஶங்கை பண்ணவேண்டும்படியிறே யிருப்பது. அவர்களுக்கு நான் பட்டது படவேண்டியிருக்கும். [அவர்காண்மின்] - அவர்கிடீர் ஐஶ்வர்யாநத்திலே வருகிறார். தமக்கு ஒருப்ரயோஜநத்துக்காகத்தான் வருகிறாரோ? [உலகில் - தணியாவெந்நோய் தவிர்ப்பான்] - உலகில் தணியாவெந்நோய் தவிர்க்கைக்காக. [தணியாவெந்நோய்] - ஒருநாளும் தணியாத தாபத்ரயாதிகள். [திருநீலமணியார் மேனியோடு] - நீலமணிபோலே பரமஹரமாய் ஸௌகுமாரமான வடிவோடே: இங்கேவரவேண்டினால், அவ்வடிவைக்கொண்டு வரவேணுமோ? [என்மனம்] - அந்த ஸௌகுமாரமான வடிவோடே ஸம்ஸாரத்திலே யுலாவாநின்றான் என்றறிந்த என்மநஸ்ஸானது. [சூழவருவாரே] - சுழன்றுவரும்படி வருகிறவர். 'தணியாவெந்நோய் — தவிர்ப்பான் - உலகில் - வருவார் என்றுமாம்.

ஈடு.— ஆறாம்பாட்டு. நீர் இங்ஙனே கிடந்து படுகிறதேன்? ஸர்வரக்ஷகனன்றோ அவன்! என்ன; நித்யஸூரிகள் பரியவிருக்கக்கடவ அவன் ஸம்ஸாரத்திலே அவ்வடிவோடேவந்து உலாவாநின்றால் நான் இப்படிப் படாதே செய்வதேன் என்கிறார்.

[பணியாவமரர்]-வேறே சிலரைப் பணிய ஸம்ஹாவனையில்லாத நித்யஸூரிகள். முன்பு அஸேவ்யர்காலிலே குனிந்து ஒருநாளிலே அநுகூலித்து, "அழுக்குடம் பேச்சில்வாய்" என்றுஅநுதபித்து, பின்பு வகுத்தார்காலிலே குனிந்தவர்களல்லர்: பணித்

ஆறும்பாட்டு, - பணியா இத்யாதி. "பணியாவமரர்" என்று தொடங்கி "என்மனஞ் சூழவருவாரே" என்றத்தைக் கடாக்ஷித்து அவதாரிகை - [illegible]

இத்தால் வ்யாவ்ருத்தி - முன்புஅஸேவ்யர் இத்யாதி. அழுக்குடம்பெச்சில்வாய் என்கிறதுக்கு பாவம், ஶரீரத்துக்குஅழுக்காவது - பிறரைவணங்குகை, வாய்க்குஎச்சிலாவது - பிறரை

தல் பணிதல் செய்யாதவர்கள். இத்தால் - முக்தரை வ்யாவர்த்திக்கிறது. [பணிவும் பண்பும்தாமேயாம்] - அவர்கள் பணிவுக்கும் ஜ்ஞாநாதிகுணங்களுக்கும் தாமே விஷயமாயிருக்குமவர். [அணியாராழியும் சங்குமேந்தும்] - ஸர்வாபரணமும் தானேயாகப் போரும்படியான திவ்யாயுதங்களை யரித்து, நித்யஸூரிகளுக்குக் காட்சி கொடுத்தால் அவர்களும் அஸ்தாநே பயசங்கைபண்ணி மங்களாசாஸநம் பண்ணும்படியாயிற்று இருப்பது. அவர்களுக்கும் நான் பட்டதுபடவேணும். [அவர்காண்மின்]-அவர்கிடீர் ஹயஸ்தாநத்திலே பிறக்கிறார். தமக்கு ஒரு ப்ரயோஜநத்துக்காகத்தான் வருகிறாரோ? [உலகில் - தணியாவெந்நோய் - தவிர்ப்பான்] 'தணியாவெந்நோய்' - ஒருநாளும் முடியாத தாபத்ரயாதிகள். [திருநீலமணியார்மேனியோடு] - நீலமணிபோலே ச்ரமஹரமாய் ஸௌகுமாரமானவடிவோடே. இங்கே வரவேண்டினால், அவ்வடிவோடே வரவேணுமோ? [என் மனம்]-அந்த ஸௌகுமாரமானவடிவோடே ஸம்ஸாரத்திலே உலாவுகிறானென்றறிந்த என் மநஸ்ஸானது. [சூழவருவாரே] - சுழன்றுவரும்படி வருகிறவர். தணியாவெந்நோய் - தவிர்ப்பான் - உலகில் - வருகிறவ ரென்றுமாம். (சு)

ஏழாம் பாட(

வருவார்செல்வார் வண்பரிசாரத்திருந்த என்
திருவாழ்மார்வற்கு என்திறம்சொல்லார்செய்வதென் ?
உருவார்சக்கரம்சங்குசுமந்து இங்குஉம்மோடு
ஒருபாடுழல்வான் ஓரடியானுமுளனென்றே.

ஆ.—(வருவார்) - நான் இப்பாடுபடாநிற்கச்செய்தே அவன்எழுந்தருளாதொழிகிறது என்னுடைய வ்யஸநமறியாமை என்று பார்த்து; ஸ்வகார்யார்த்தமாகப் போகிறாரும் வருகிறாரும் திருப்பரிசாரத் தேறப்போகிறாராகவும் அங்குநின்று வருகிறாராகவும் நிஸ்சயித்து, அவர்கள், திருப்பரிசாரத்திலே எனக்குத் தாயும் தந்தையுமாய் என்னைத் தேடிக்கொண்டிருக்கிற என்திருவாழ்மார்வற்கு, நிரதிசய உஜ்ஜ்வலநீயஸௌந்தர்யாதிஸங்க்ரஹ திவ்யாயுதங்களைச் சுமந்துகொண்டு இந்தலோகத்திலே தனியேயெழுந்தருளும்போது பின்னே சாயையைப்போலே திரிவான்ஓரடியானும் உளனென்று என்திறஞ் சொல்லார், செய்வதென்? என்கிறார்.

ஒ.—ஏழாம்பாட்டில், நான் அங்கு உதவப்பெறாதே அவஸந்நனானால், என்னைப்போலே அக்ஷமதையின்றிக்கே நிரந்தரமாய்ப் போவதுவருவதாய்த் திரிகிறவர்

ஸ்தோத்ரம்பண்ணுகையென்று. திருக்குறுந்தாண்டகம், "ஆவியை" இத்யாதி.
என்றதுக்கு தந்த்ரேண அர்த்தத்வயம்-பணித்தல் இத்யாதி. பணித்தல் - ஸ்தோத்ரம் பண்ணுகை. பணிதல் - வணங்குகை. பணிவுக்கும் - வணங்குகைக்குமென்றபடி. "பண்பு" என்று - நீர்மையாய், ஜ்ஞாநாதி குணங்களுக்குமென்றபடி. "அணி" என்று - ஆபரணமாய், ஆர்தல் - அமைதலாய், ஸர்வாபரணமும் தானேயாகப் போரும்படியானஎன்று பதார்த்தம்- "வருவார்" என்றத்தைக் கடாக்ஷித்து ஹாவம் - அவர்கிடீர் இத்யாதி. மேலுக்குஅவதாரிகை - தமக்கு இத்யாதி. சூழ - சுழல என்றபடி. கீழே, "உலகில் - தணியாவெந்நோய் - தவிர்ப்பான்" என்றுகூட்டி, இங்கே 'உலகில் - வருவார்" என்று கூட்டுகிறார் - தணியாவெந்நோய்தவிர்ப்பான் இத்யாதி. (சு)

களிலே ஒருவர், ஒருபாடுழல்வான் ஓரடியானுமுளனென்று திருப்பரிசாரத்து என் ஸ்வாமிநியான பெரியபிராட்டியார் ஸந்நிதியிலே எம்பெருமானைத் தருவிப்பாரைப் பெறுகிறிலேனோமென்கிறார்.

[உருவார் சக்கரமென்று தொடங்கி] - அழகுமிக்கிருந்துள்ள திருவாழியையும் ஸ்ரீபாஞ்சஜந்யத்தையும் ஸாதரமாக தரித்துக்கொண்டு ஒருபார்ஶ்வத்துக்கெல்லாம் நிரந்தரமாகப்பரிவான் ஒரு அநந்யபரனும் உளன் என்று.

ப —அநந்தரம், கிஞ்சித்கரிக்கைக்குப் பிராட்டியோடே திருப்பரிசாரத்திலே யிருக்கிறவர்க்கு, உமக்குப் பரிவனாயிருப்பான் ஒருகிங்கரனுண்டென்று ஒருவரும் சொல்லுகிறிலர் என்று வெறுக்கிறார்.

வருவார் - (அங்குநின்றும்) வருவார், செல்வார் - (இங்குநின்றும்) செல்லுவாராகிற அவர்கள், வண் - விலக்ஷணஸம்பத்தையுடைத்தான, பரிசாரத்து - திருப்பரிசாரத்திலே, என் - என்னை அடிமைகொள்ளுகைக்கீடாக, இருந்த - எழுந்தருளியிருக்கிற, திருவாழ்மார்வற்கு — ஸ்ரீமானுக்கு, உரு - வடிவழகால், ஆர் - பொருத்தமான, சக்கரம் - திருவாழியையும், சங்கும் - திருச்சங்கையும், சுமந்து - தரித்துக்கொண்டு, இங்கு - இந்தவிபூதியிலே, உம்மோடு - உம்மோடேகூட, ஒருபாடு - பார்ஶ்வவர்த்தியாய்க்கொண்டு, உழல்வான் - திரிவான், ஓர் - (அத்விதீயனாயிருப்பான்) ஒரு, அடியானும் - அடியானும், உளன் - உளன், என்று - என்று, என் - என், திறம் - இடையாட்டம், சொல்லார் - சொல்லுகிறிலர்கள். வருகிறவர்கள் தம்மை அழைத்துவாராமையாலும், போகிறவர்கள் ஒருமறுமாற்றம் கேளாமையாலும், இவர்கள் வரத்தும் போக்கும் தமக்காகவென்று நினைத்துச் சொல்லுகிறிலீரொன்கிறார். (இவர்கள் சொல்லாதவளவில் அவர் அறிந்து அங்கீகரிக்கைக்கு), செய்வது - செய்யலாவது, என் - ஏது? என்று வெறுக்கிறார்.

இ.—ஏழாம்பாட்டில், இங்கேவந்து திருப்பரிசாரத்திலே எழுந்தருளியிருக்க, நான் உதவப்பெறாதே யவஸந்நனானல், ஓரடியானுமுளனென்று அவனுக்கு அறிவிப்பாரையும் பெறுகிறிலேனோமென்கிறார்.

[வருவார் செல்வார்] - திருநகரியில்நின்றும் திருப்பரிசாரத்திலே மஹாபதமாக இசங்காநிற்கும். ஸ்வகார்யத்தாலே த்வரித்துப்போவாரை நம்தஶையை யங்கே யறிவிக்கப்போகிறாரென்றும், அங்குநின்று இங்கேவருவாரைத் தம்மையழைக்க வருகிறாரென்றும் இருப்பர். இயக்கமற்றிருக்கிறதன்றுகிடீர்! [வண்பரிசாரத்திருந்த] - திருப்பரிசாரத்திலிருப்புக்கு மங்களாஶாஸநம் பண்ணவேணும். [என் திருவாழ்மார்வற்கு] - அதுக்குமேலே பிராட்டியோட்டைச் சேர்த்திக்கு மங்களாஶாஸநம் பண்ணவேணும். "பவாம்ஸ்து ஸஹ வைதேஹ்யா" என்று இளையபெருமாளைப்போலே தொடர்ந்து அடிமைசெய்யவேண்டும்படியாயிற்று இங்குத்தையிருப்பு. [என் திறஞ்சொல்லார்] - என்னிடையாட்டம் ஒருவரும் சொல்லுகிறிலர்கள். [திருவாழ்மார்வர்க்கு] - என் ஸ்வாமிநி ஸந்நிதியாகையாலே சொன்னவார்த்தை விலைசெல்லுங்கிடீர்! [செய்வதென்] - இதுக்கு என்னாற் செய்யலாவதென்? அங்குச்சென்றால் சொல்லும்பாசுரமென் என்னில்?—[உருவார் இத்யாதி] - அழகுமிக்கிருந்துள்ள ஆழ்வார்களை ஸாதரமாக தரித்தென்னுதல், திருமேனிக்கெல்லாம் வேறு ஆபரணம்வேண்டாதே தானே யாபரணமாகப் போரும்படியான ஆழ்வார்களென்னுதல். [இங்கு] - ஒருநாடாகப் பரியும்

தேசமிறே அது. பரிவாரின்றிக்கேயிருக்கிற தேசத்திலே. [உம்மோடு ஒருபாடுழல்வான்] - இடைவிடாதே ஒருபார்ஶ்வத்தைப்பற்றித் திரிவான். ஒருபார்ஶ்வத்துக்கு இளையபெருமாளுளரிறே. [ஓரடியானுமுளனென்று] - அநந்யபரனாயிருப்பான் ஒருவனுளனென்று. "ஸஹோதரஸ்ஸுஹ்ருத்" என்று கைவாங்கியிருப்பர்; ஒருவன் உளனென்று என் திறம் சொல்லார்; செய்வதென்?

எ௫.—ஏழாம்பாட்டு. இங்கேவந்து திருப்பரிசாரத்திலே எழுந்தருளியிருக்க நான்உதவப்பெறாதே அவஸந்நனானால், ஓரடியானுமுளனென்று அவனுக்கு அறிவிப்பாரையும் பெறுகிறிலோ மென்கிறார்.

[வருவார்செல்வார்] - திருநகரியினின்றும் திருப்பரிசாரத்திலே மஹாபத்மாக இசங்காநிற்கும். ஸ்வகார்யத்தாலே த்வரித்துப்போவாரைத் தம்தசையையறிவிக்கப்போகிறார்களென்றும், அங்குநின்றும் வருவாரைத் தம்மையழைக்கவருகிறார்களென்று மிருப்பர். இயக்கமற்றிருக்கிறதன்று கிடீர். திருப்பரிசாரத்திலிருப்புக்குப் பரியவேணும்; அதுக்குமேல் பிராட்டியோட்டைச்சேர்த்திக்குப் பரியவேணும். "ஸவாம்ஸ்து ஸஹவைதேஹ்யா" (பவாம்ஸ்துஸஹவைதேஹ்யா) என்று இளையபெருமாளைப்போலே தொடர்ந்துபோய் அடிமைசெய்யவேண்டும்படியாயிற்று இங்கிருக்கிறவிருப்பு. [என்திறஞ்சொல்லார்] - சொன்னவார்த்தைகேட்பிப்பாரில்லாமை சொல்லாதொழிகிறாரல்லர்கிடீர்! [என்திருவாழ்மார்வற்கு]-என்ஸ்வாமிநி ஸந்நிதியாகையாலே சொன்னவார்த்தை விலைசெல்லுங்கிடீர். [செய்வதேன்] - இதுக்கு என்னாற்செய்யலாவதேன்? ஸ்வகார்யபரராய்ப் போவர்களாகில், அவர்கள் அங்குப்போனால் சொல்லும்பாசுரமெது? என்ன—[உருவார்சக்கரம் இத்யாதி] - அழகுமிக்கிருந்துள்ள ஆழ்வார்களை ஸாதரமாக தரித்தேனனுதல், திருமேனிக்கெல்லாம் வேறோராபரணம் வேண்டாதே தானே ஆபரணமாகப்போரும்படியான ஆழ்வார்களை தரித்து என்னுதல் [இங்கு]-பரிவரின்றிக்கேயிருக்கிற ஸம்ஸாரத்திலே. [உம்மோடொருபாடுழல்வான்] - இடைவிடாதே ஒருபார்ஶ்வத்தைப்பற்றித்திரிவான். ஒருபார்ஶ்வத்துக்கு இளையபெருமாளுண்டிறே. [ஓரடியானுமுளனேன்றே] - அநந்யப்ரயோஜநனு

ஏழாம்பாட்டு.—வருவார் இத்யாதி. "வண்பரிசாரத்திருந்த என்திருவாழ்மார்வற்கு - ஓரடியானுமுளனென்று - என்திறஞ்சொல்லார்"என்ற பதங்களைக் கடாக்ஷித்து அவதாரிகை - இங்கேவந்து இத்யாதி.

அவனுக்குத் தாம்உளரென்றறிவிக்கை தேட்டமானால் "செல்வார்"என்ன அமைந்திருக்க, வருவாரைச் சொல்லுவானென்? என்ன - திருநகரியில் இத்யாதி. அதாவது - போவாரும் வருவாருமாய் வழிநடவாநிற்கச்செய்தே, என்திறஞ்சொல்லாதிருக்கிறார்களென்றபடி. இசங்காநிற்கும் - நடவாநிற்கும். பரிஹாராந்தரம் - ஸ்வகார்யத்தாலே இத்யாதி. "திருநகரியில்" இத்யாதி முந்தின பரிஹாரவிவரணம் - இயக்கம் இத்யாதி. இயக்கம் - வழிநடப்பு. "வண்பரிசாரத்திருந்த" என்றதுக்கு ஹாவம் - திருப்பரிசாரத்தில் இத்யாதி. "திருவாழ்மார்வற்கு" என்றதுக்கு ஹாவம் - அதுக்குமேல் இத்யாதி. கைங்கர்யப்ரதிஸம்பந்தி ஒருமிதுநமென்னுமிடம் தோற்றுகைக்சாகப் பிராட்டியோட்டைச் சேர்த்தி சொல்லுகிறதென்று ஹாவாந்தரம்- 'ஸவாம்ஸ்து' இத்யாதி. புருஷகாரத்வேந பிராட்டியோட்டைச் சேர்த்தி சொல்லுகிறதென்று மூன்றாம்ஹாவம்-சொன்னவார்த்தை இத்யாதி. ஏதத்விவரணம் - என்ஸ்வாமிநி இத்யாதி. முந்தின அர்த்தத்துக்கு, "உரு" என்று - அழகு. இரண்டாமர்த்தத்துக்கு, "உரு" என்று - திருமேனி, "ஆர்" என்று - அழகு. "உழல்வான்" என்ற வர்த்தமாநார்த்தம் - இடைவிடாதே என்றது. மற்றைப் பார்ஶ்வத்துக்கோ? என்ன - ஒருபார்ஶ்வத்துக்கு இத்யாதி. "அடியான்" என்றதுக்குஹாவம் - அநந்யஇத்யாதி.

யிருப்பா ஞெருவனுளனேன்று. "ஸமஹாத்மாஸுதுர்லபஃ" (ஸமஹாத்மாஸுதுர்லபஃ) என்கிறபடியே ஒருவரில்லையென்று கைவாங்கியிருப்பர்; அதுவேண்டா, ஒருவனுளனேன்று என்னிடையாட்டம் சொல்லுகிறிலர்கள் ; செய்வதேன் ? (எ)

எட்டாம் பாட்டு.

†என்றேயென்னை உன்னேரார்கோலத்திருந்தடிக்கீழ்
நின்றேயாட்செய்ய நீ*கோண்டருளநினைப்பதுதான் ?
குன்றேழ்பாரேழ் சூழ்கடல்ஞாலமுழுவேழும்
நின்றேதாவிய நீள்கழலாழித்திருமாலே!

ஆ.—(என்றேயென்னை.) 'அவன் ஸர்வஜ்ஞனல்லனோ? அறிந்து அருளாமையுண்டோ நினையாமையல்லது?' என்று பார்த்து, 'என்னை உன்ஏரார்கோலத் திருந்தடிக்கீழ் நின்றே ஆட்செய்யும்படி நீ விஷயீகரித்தருள நினைப்பதுதான் என்று?' என்று அபேக்ஷித்து, பின்னையும் அபேக்ஷிதம் செய்தருளாதொழிந்தவாறே, 'நான் ஒருபாயாநுஷ்ட்டாநம் பண்ணுமையாலாகாதே அபேக்ஷிதஞ் செய்தருளாதொழிகிறது?' என்று பார்த்து, 'உன்னுடைய க்ருபையாலே நிர்ஹேதுகமாக ஸர்வலோகத்தையும் அளந்தருளினாற்போலே, அடியேனுடைய அபேக்ஷிதம் செய்தருளாய்' என்கிறார்.

ஒ.—எட்டாம்பாட்டில், 'உன்திருவடிக்கீழ் என்னை நிலைபாளாகக்கொள்வது என்று ?' என்று எம்பெருமானை ஆழ்வார் கேட்கிறார்.

[ஏரார் கோலத்திருந்தடிக்கீழ்] - அழகுமிக்கிருந்துள்ள
திருவடிக் கீழ். [குன்றென்று தொடங்கி] - ஶங்கசக்ராதி திவ்யாயுதயானுப், ஸ்ரீயஃபதியாய், குலபர்வதங்களையும் ஏழுத்வீபங்களையும் ஏழுகடல்சூழ்ந்த பூமியையும் எல்லாவற்றையும் நின்றநிலையிலே அநாயாஸேந அளந்தருளின நீண்ட திருவடிகளையும் உடையையானவனே! நினைத்தது முடிக்கவல்லவனே ! என்றுகருத்து. லோகங்களையெல்லாமளந்த ப்ரமந்தீர அடிமைசெய்யப் பெறுகிறிலே னென்றுமாம்.

ப.—அநந்தரம், அகிலவஸ்து ஸம்ஶ்லேஷ ஸ்வபாவனான நீ, உன்திருவடிகளிலே நான் அடிமைசெய்யும்படி அங்கீகரிப்பது என்று ? என்கிறார்.

ஏழ்குன்று - ஸப்தகுலபர்வதங்களையும், ஏழ்பார் - ஸப்தத்வீபங்களையும், சூழ் - சூழ்ந்த, கடல் - அவ்வோஸமுத்ரங்களையும், ஏழ்ஞாலமும்- பூம்யாதியான ஸப்த லோகங்களையும், முழு - முழுக்க, நின்றே - நின்றநிலையிலே நின்று, தாவிய - கவடடித்துக்கொண்ட, நீள்-நெடிய, கழல் - திருவடிகளையுடையனாய், ஆழி-(அந்த ஶேஷித்வ ஸூசகமான) திருவாழியையுடையனாய், திருமாலே ஸ்ரீய:பதியானவனே ! என்னை -

---

'ஓர், உளன்" என்றதுக்குஹாவம் - "ஸமஹாத்மா" இத்யாதி. வண்பரிசாரத்திருந்த என்று தொடங்கி, மார்வற்கு - உருவார்என்று தொடங்கி, உளனென்று - வருவார்செல்வார் - என்திறஞ் சொல்லார்: செய்வதென்? இத்யந்வய:. (எ)

---

† என்றேல் என்று பன்னீராயிரப்படிக்குப் பாடம் எனக் காண்கிறது.

* பன்னீராயிரப்படிக்கு 'கொண்டருளி' என்ற பாடமுமுண்டு : இருபத்து நாலாயிரப் படிக்கு 'கொண்டருளி' என்று பாடம் எனக்

(உனக்கு மோக்ஷஸாதநனாய்ப் பரிவனாயிருக்கிற) என்னை, உன்-(ஸுகுமாரனாய் போக்யபூதனான) உன்னுடைய, ஏர்-அழகு, ஆர்-விஞ்சின, கோலம்-ஆபரணசோபையையுமுடைத்தாய், திருந்து - ஸ்வாபாவிக ஸௌந்தர்ய விசிஷ்டமான, அடிக்கீழ் - திருவடிகளின் கீழே, நின்றே - (ஒருகாலும் பிரியாதே) நின்று, ஆட்செய்ய - (உன்னுடைய ஸ்ரிய:பதித்வ ஸௌகுமார்யாதிகளுக்கீடாக மங்களாசாஸநம்பண்ணி) அடிமைசெய்வேனும்படி, நீ - நீ, கொண்டருளி - (உன் திருவுள்ளத்தாலே) அங்கீகரித்து, நினைப்பதுதான் - (இது முழுக்க நிர்வஹிப்பதாக) நினைத்தருளுவதுதான், என்று - என்றாயிருக்கிறது? கொண்டருள நினைப்பதென்றுஞ் சொல்லுவர். என்றேல் - என்றதில், ஏல் - அசை.

இ.—எட்டாம்பாட்டில், 'பிறரைவிடீர்: உன்திருவடிக்கீழே பரிகைக்கு நிலையாளாக என்னைக்கொள்வது என்று?' என்று அவன்தன்னைக் கேட்கிறார்.

[என்றே] - உம்முடைய கார்யம் செய்கிறோமென்ன; அதுதான் என்று? என்கிறார். [என்னை] - உனக்குப்பரிந்தன்றி உளனாகாதிருக்கிற என்னை. [உன் இத்யாதி]- உன்னழகுமிக்க ஒப்பனைதிருந்தின திருவடிகளின்கீழே. மங்களாசாஸநம் பண்ணியல்லது நிற்கவொண்ணாத திருவடிகளென்கை. [நின்றேயாட்செய்ய] - "ஜெஹிமெ ஊஷாமெ த" என்று ப்ரயோஜநத்தைக் கொண்டுபோகையன்றிக்கே, விடாதே நின்று அடிமைசெய்ய. [நீகொண்டருளி] - நான் கிடந்தானை கண்டேறுகையன்றிக்கே, அடிமைசெய்வானென்று திருவுள்ளத்திலே கொண்டருளி. [நினைப்பதுதான்] - [நின்றேயாட்செய்ய - நினைப்பதுதான்] - அவன்நினைவுக்கே ஃபலவ்யாப்தியுள்ளது, அபிநிவேசம் அப்ரயோஜநமென்றிருக்கிறார். [குன்றேழ் இத்யாதி]-"வண்பரிசாரத்திருந்த" என்று- எழுந்தருளியிருக்கிற இருப்புத் தனக்கே பரியவேண்டியிருக்க, அதிமாநுஷமான செயல்களைச்செய்தால் மங்களாசாஸநம் பண்ணியே நிற்கவேண்டாவோ? ஸப்தகுலபர்வதமென்ன, ஸப்தத்வீபமென்ன, அவற்றைச்சூழ்ந்த ஸப்தஸமுத்ரமென்ன, இப்படி ஏழுவகைப்பட்ட பூமியையடைய நின்றநிலையிலே நின்றளந்துகொள்ளும்படி நீண்ட திருவடிகளை யுடையையாய்! கையும் திருவாழியுமான ஸ்ரிய:பதியே! சங்கசக்ராதி திவ்யாயுயதரனாய், ஸ்ரிய:பதியாய் வைத்து, காடுமேடுடையுமான பூமியை ஸுகுமாரமான திருவடிகளைக்கொண்டு அளந்துள்ள ப்ரமந்திர சிரிரோபசாரம் பண்ணப்பெறுவது என்றுகாண்! என்கை. அரியனசெய்பவல்ல நீ,நான் உன் யடிமை செய்யும்படி நினைத்தருள வேணுமென்றுமாம்.

ஈடு.—எட்டாம்பாட்டு, 'பிறரைவிடீர்: உன்திருவடிக்கீழே பரிகைக்கு நிலையாளாக என்னைக் கோள்வது என்று?' என்று அவன்தன்னைக் கேட்கிறார்.

[என்றே] - உம்முடைய கார்யம் செய்கிறோமிறே என்ன; அதுதான் என்று? என்கிறார். [என்னை] - உனக்குப் பரிந்தன்றி உளேனாகாதிருக்கிற என்னை. [உன் இத்யாதி]-உன் அழகு மிக்க ஒப்பனை திருந்தின திருவடிகளின் கீழே. மங்களாசாஸநம் பண்

எட்டாம்பாட்டு - என்றே இத்யாதி. "அடிக்கீழ்நின்றே ஆட்செய்ய நீகொண்டருள" என்றத்தைக் கடாக்ஷித்து அவதாரிகை - பிறரைவிடீர் இத்யாதி.

செய்கிறோமென்றாலொழிய, "என்று" என்று கேட்கக்கூடாமையாலே, அவன் கார்யம் செய்கிறோமென்று திருவுள்ளம்பற்றினமையை அருளிச்செய்கிறார் - உம்முடைய இத்யாதி. "ஏரார்" இத்யாதியால் வர்ணித்ததுக்கு பாவம் - மங்களாசாஸநம் இத்யாதி. இத்தால் ஃபலிதம்.

ணியல்லது நிற்கவொண்ணாத திருவடிகளென்கை. [நின்றேயாட்செய்ய] - " **தெஹமி தெஷாவிதெ**" (தேஹமேததாமிதே) என்று ப்ரயோஜநத்தைக் கொண்டுபோகையன்றிக்கே, விடாதே அடிமைசெய்ய. [நீ கொண்டருள] - நான் கிடந்தானை கண்டேறுகையன்றிக்கே, அடிமை செய்வானென்று திருவுள்ளத்தே கொண்டருள. [நினைப்பதுதான்]- † (நின்றேயாட்செய்ய - நினைப்பதுதான்) அவன் நினைவுக்கே ஃபல வ்யாப்தியுள்ளது. தம்மஹிநிவேஸம் அப்ரயோஜகமென்றிருக்கிறார். [குன்றேழ் இத்யாதி]- "வண்பரிசாரத்திருந்த" என்று - எழுந்தருளியிருக்கிறவிருப்புத்தனக்குப் பரியவேண்டியிருக்க, அதிமாநுஷமான செயலைச் செய்தால் மங்களாஶாஸநம்பண்ணியே நிற்கவேண்டாவோ? ஸப்தகுலபர்வதமென்ன, ஸப்தத்வீபமென்ன, அவற்றைச் சூழ்ந்த ஸப்தஸமுத்ரமென்ன, இப்படி ஏழுவகைப்பட்ட பூமியையடைய நின்ற நிலையிலே நின்று அளந்து கொண்டருளும்படி நீண்ட திருவடிகளை உடையையாய்க் கையும் திருவாழியுமான ஶ்ரியஃபதியே! ஶங்கசக்ராதி திவ்யாயுதங்களையுடைய ஶ்ரியஃபதியாய்வைத்து, காடுமோடையுமான பூமியையடைய, நின்ற நிலையிலே ஸுகுமாரமான திருவடிகளைக்கொண்டு அளந்த ஶ்ரமந்தீர ஶிஶிரோபசாரம் பண்ணப்பெறும் நாள் என்று? என்கை. அரியனசெய்யவல்ல நீ, நான் உன் திருவடிகளைக்கிட்டிநின்று அடிமை செய்யும்படி நினைத்தருளவேணு மென்றுமாம். (அ)

ஒன்பதாம் பாட்டு.

திருமால்! நான்முகன் செஞ்சடையானென்றிவர்கள் எம்
பெருமான்தன்மையை யாரறிகிற்பார்? பேசியென்?
ஒருமாமுதல்வா! ஊழிப்பிரான்! என்னையாளுடை
கருமாமேனியனென்பன் என்காதல்கலக்கவே.

ஆ. — (திருமால்.)-'ஆகிலும் என்னை உள்ளபடியறிந்து வத்திலல்லது உம்முடைய அபேக்ஷிதம் செய்யக்கடவது என்?' என்னில்,-திருமால்! எம்பெருமானுயிருந்த உன்னுடைய ஸ்வரூபரூப குணவிபூத்திகளை ஸர்வஜ்ஞரான ப்ரஹ்மாதிகள்தாம் அறியவல்லரோ? இவ்வர்த்தம் உபபாதநீயமோ? ஆன்பின்பு அதிக்ஷுத்ரனான நான் அறிந்தேதத்துகையாவதென்? என்ன, - அங்ஙனேயாகில், அத்விதீயபரமகாரணபூதனே! "காலவக்ராஜஜஹ்வக்ஷம் யாஷ்வக்ஷம் வ கெஶவஃ । க்ருத்யொமெந ஹஷாநு வஶிவதபூயதெஜநிஸூ" என்று சொன்னாற்போலே, ஸங்கல்பமாத்ரத்தாலே க்ருதத்ரேதாதி ஸகலயுகப்ரவர்த்தகனே! ப்ராக்ருத க்ஷுத்ரவிஷய ப்ரவணனான என்னையுங்கூடத் தோற்பித்து அடிமையாக்கவல்ல * நிரவயிக ஸௌந்தர்ய ஸௌகுமார்யலாவண்ய யௌவநாதி

அவன் நினைவுக்கே இத்யாதி. மேலுக்கெல்லாம்பாவம் - வண்பரிசாரத்து இத்யாதி. வாக்யவிவரணம் - ஶங்க சக்ராதி இத்யாதி. த்ரிவிக்ரமாபதாநத்தை அருளிச்செய்தது பரியவேண்டும் செயலாகையாலே யென்று கீழேயருளிச்செய்தது. பாவாந்தரம் - அரியன இத்யாதி. அதாவது திருவுலகளந்தருளின அபேக்ஷிதம்போலே என்னையும் உன் திருவடிகளிலே ஆளாக்கிக்கொள்ளுகையும் அபேக்ஷிதமிறே; இத்தையும் செய்யவேணுமென்றபடி. 'குன்றேழ்' என்று தொடங்கி, 'திருமாலே - என்னை உன்னேரார்' என்று தொடங்கி, என்றே - கொண்டருள நினைப்பதுதான்' இத்யந்வய: (அ)

† குண்டலிதம்—ப்ரக்ஷிப்தம்.

அநந்த குணநிதியாய், * நீலமேயவ ஸத்ருஶமான திவ்யரூபத்தையுடையவனே யென்று சொல்லுவானேன்? என்னில்; காதலாலே கலக்குண்டு சொன்னேன், நான் அறிந்து சொன்னேனல்லேன் என்கிறார்.

ஒ.—ஒன்பதாம்பாட்டில், ப்ரஹ்மாதிகள் உகூராதிகளுண்டாயிருக்க, நீர் என் செய்ய அஞ்சுகிறீர்! என்று எம்பெருமான் அருளிச்செய்ய; அவர்கள் உன்னுடைய ஸௌகுமார்யாதிகளையறியார்கள். நான் என்னுடைய ஸ்நேஹத்தாலே கலங்கிக் கதறுநின்றேனென்கிறார்.

[திருமால்] - திருமாலே! [எம்பெருமான் தன்மையை] - ஸர்வேஶ்வரனை உன்னுடைய படியை. [ஒருமாவென்று மேனுக்கு] - விலக்ஷணபரமகாரணமாய் காலோபலக்ஷிதஸகலபதார்த்தங்களுக்கும் ஸ்வாமியாய் என்னையடிமை யாக்கிக்கொண்ட அழகிய கறுத்த திருமேனியையுடையவன் என்று சொல்லாநிற்பன், என்னுடைய ஸ்நேஹம் என்னையஞ்சிக் கலங்கப்பண்ண.

ப.—அநந்தரம், அதிஶயிதஜ்ஞாநரான ப்ரஹ்மாதிகளும் உன்ஸௌகுமார்யம் அறியாமையாலே, என்ப்ரேமம்கலக்க நான் பரிவனாய்க் கூப்பிடாநின்றேனென்கிறார்.

திரு - பெரியபிராட்டியார்க்கு; மால் - வல்லஹனை வைலக்ஷண்யத்தை புடையவனே! நான்முகன் - (ஸ்ருஷ்டியில் பஹுமுகவ்யாபாரனை) ப்ரஹ்மாவும், செஞ்சடையான் - (தபஃபரனை) ருத்ரனும், என்று - என்றுப்ரஸித்தரான, இவர்கள் - இவர்கள், எம்பெருமான் - எனக்குஸ்வாமியாய் ஸர்வாதிகனை உன்னுடைய, தன்மையை-(ஸௌந்தர்ய ஸௌகுமார்யாதியான ஸ்வாபாவிக) வைலக்ஷண்யத்தை, அறிகிற்பார் - அறிய வல்லார், ஆர் - ஆர்தான்? என் - என்னுடைய, காதல் - ப்ரேமமானது, கலக்க - (நெஞ்சைக்) கலக்க, ஒரு - அத்விதீயமான, மா முதல்வா - பரமகாரணபூதனே! (ஸ்ருஷ்டமான ஆத்மாக்களுக்கு), ஊழி-காலாநுரூபமாக, பிரான்-உபகாரகனானவனே! என்னை - என்னை, ஆளுடை - அடிமைகொண்ட, கரு-ஶ்யாமளமான, மாமேனியன்-விலக்ஷணவிக்ரஹயுக்தனே! என்பன் - என்றுசொல்லாநிற்பன்; (உன் ஸௌகுமார்யத்தைப்பாராதே, "மாதுர்யமே!" என்று பிராட்டியஞ்சும்படி ஜகத்ரக்ஷணத்தைபண்ணுவது, உத்பந்நரானசேதநர்க்கு ஆபத்துத்தோற்றுங்காலந்தோறும் உபகாரகனாய் வ்யாபரிப்பது, என் போல்வாரை அங்கீகரிக்கைக்காக அழகியவடிவைக்கொண்டு வருவதாகப்புக்கவாறே உன்னுடைய ஸௌகுமார்யத்துக்கு அஞ்சாநின்றேன்; அவாங்மநஸகோசரமான இந்த ஸௌகுமார்யத்துக்கு), பேசியென் - என்னபாசுரமிட்டுச்சொல்லுவது?

இ.—ஒன்பதாம்பாட்டில், நமக்குப்பரிய ப்ரஹ்மாதிகளுண்டாயிருக்க, நீர் இங்ஙன் அஞ்சுகிறதென்? என்ன; அவர்கள் உன்ஸௌகுமார்யம் அறிவர்களோ? என

[திருமால்] - திருமாலே! என்று ஸம்போதிக்கிறார். நீயும் பிராட்டியுமான சேர்த்திக்கு மங்களாஶாஸநம் பண்ணவல்லர்களோ அவர்கள்? [நான்முகன்] - ஸ்ருஷ்டிக்கு உறுப்பான பலமுகங்களையுமுடையனாய், அதிலே அந்யபரனானவன்; [செஞ்சடையான்] - ஸாதகவேஷந் தோற்றநிற்கிற ருத்ரன், தன்அபிமதலாபத்திலே யந்யபரன். [எம்பெருமான் தன்மையை] - ஸர்வேஶ்வரனை உன்னுடைய ஸௌகுமார்யத்தை. [யார் அறிகிற்பார்]-யார்அறிகிறவர்? அந்யபரராயிருக்கிறவர்கள் உன்ஸௌகுமார்யத்தை

அறிவர்களோ? அநந்யபரராலுல்தான் தேவருடைய ஸௌகுமார்யம் சிலர்க்கு அறியநிலமோ? [பேசியென்]-சொல்லியென்ன ப்ரயோஜநமுண்டு ? அவர்களைப் பரிவராக்கவோ ! உன் ஸௌகுமார்யத்தைப் பரிச்சிந்நமாக்கவோ ? பரிகைக்கு நீருண்டே யென்ன ; நானும்செய்வது இவ்வளவன்றோ ? என்கிறார்: -[ஒருமாமுதல்வா] - விலக்ஷணமான பரமகாரணபானவனே ! [ஊழிப்பிரான்] - காலோபலக்ஷித ஸகலபதார்த்தங்களுக்கும் ஸ்வாமியானவனே! [என்னை]-புறம்பே அந்யபரனான என்னை, அநந்யபரனும்படி பண்ணின வடிவழகையுடையவனே! [என்பன்] - இவ்வளவிறே என்னளவு. ஸர்வநிர்வாஹகனாய் வடிவழகாலே யென்னைச்சேர்த்துக்கொண்ட இதிறே என்னைக்கலங்கப்பண்ணிற்று. [என்காதல் கலக்கவே] - என்ப்ரேமமானது நான் அஞ்சும்படி கலங்கப்பண்ண, உன்வடிவழகிலும் மேன்மையிலும் கலங்கிச்சொன்னேன் இத்தனைபோக்கி, உன்ஸௌகுமார்யத்தை எல்லைகண்டு சொன்னேனல்லேன்: ப்ரேமாந்யனாய்ச்சொன்னேனத்தனைபோக்கி, நெஞ்சொழிந்து சொன்னேனல்லேன். ப்ரயோஜநாந்தரபரரான ப்ரஹ்மாதிகள் பரிவும் உனக்கு ஸத்ருமமன்று; ப்ரேமாந்யனான என்னுடையபரிவும் உனக்கு ஸத்ருமமன்று என்ற

ஈடு.—ஒன்பதாம்பாட்டு. நமக்குப்பரிய ப்ரஹ்மாதிகளுண்டாயிருக்க, நீர் இங்ஙன் அஞ்சுகிறதென் ? என்ன, அவர்கள் உன் ஸௌகுமார்யம் அறிவர்களோவென்கிறார்.

[திருமால்] - திருமாலென்று நிஷ்கர்ஷித்து ஸம்போதிக்கிறார். நீயும் பிராட்டியுமான சேர்த்திக்கு மங்களாஶாஸநம்பண்ணுவர்களோ அவர்கள் ? [நான்முகன்] - ஸ்ருஷ்டிக்கு உறுப்பான பலமுகங்களையுடையனாய், அதிலே அந்யபரனானவன். [செஞ்சடையான்] - ஸாதகவேஷந்தோற்ற நிற்கிற ருத்ரன்: தன்னபிமதலாபத்திலே அந்யபரன். [எம்பெருமான்தன்மையை] - ஸர்வேஶ்வரனான உன்னுடைய ஸௌகுமார்யத்தை. [ஆரறிகிற்பார்] - சிலராலே அறியலாயிருந்ததோ ? அந்யபரராயிருக்கிறவர்கள் உன் ஸௌகுமார்யத்தை அறிய வல்லர்களோ ? அநந்யபரராலுல்தான் தேவருடைய ஸௌகுமார்யந்தான் சிலராலறியலாமோ ? [பேசியேன்] - இதுசொல்லி என்னப்ரயோஜநமுண்டு ? அவர்களைப் பரிவராக்கவோ ? உன் ஸௌகுமார்யத்தைப் பரிச்சிந்நமாக்கவோ? அவர்கள் நம்மை அறியமாட்டார்களாகில் அறிந்த நீர் பேசிக்காணீரேன்ன, "என்னால்தான் செய்யலாயிருந்ததோ!" என்கிறார்: [ஒருமாமுதல்வா] - விலக்ஷணமான பரமகாரணமானவனே ! [ஊழிப்பிரான்] - காலோபலக்ஷித ஸகலபதார்த்தங்களுக்கும் ஸ்வாமியானவனே ! [என்னை இத்யாதி] - புறம்பே அந்யபரனான என்னை அநந்யபரனும்படி பண்ணின வடிவையுடையவனே ! [என்பன்] - இவ்வளவிறே என்னளவும். ஸர்வநிர்வாஹகனாய் வடிவழகிலே

ஒன்பதாம்பாட்டு.—திருமால் இத்யாதி. "நான்முகன் செஞ்சடையானென்றிவர்கள் - ஆரறிகிற்பார்" என்றவற்றைக்கடாக்ஷித்து அவதாரிகை - நமக்குப்பரிய இத்யாதி.

திருமாலும் நான்முகனுமென்கிற ப்ரமநிவ்ருத்யர்த்தமாக, "திருமால்" என்றது - ஸம்போதநமென்று அருளிச் செய்கிறார் - திருமாலென்று நிஷ்கர்ஷித்து இத்யாதி. நிஷ்கர்ஷித்து - பிரித்துஎன்றபடி. "நான்முகன்" என்றுதொடங்கி, "ஆரறிகிற்பார்" என்னுமளவும் பாவம் - நீயும்பிராட்டியும் இத்யாதி. ப்ரஹ்மாவென்னாதே, "நான்முகன்" என்றுவிஶேஷித்ததுக்கு பாவம்- ஸ்ருஷ்டிக்கு இத்யாதி. "செஞ்சடையான்" என்றுவிஶேஷித்ததுக்கு பாவம் - ஸாதகவேஷம் இத்யாதி. தன்மை-ஸௌகுமார்யம். "ஆரறிகிற்பார்" என்றதுக்கு பாவம் - அநந்யபரராலுல்தான் இத்யாதி. ஸப்தார்த்தம் - இதுசொல்லி இத்யாதி. விவரணம்-அவர்களை இத்யாதி. "என்பன்" என்றதுக்கு பாவம் - இவ்வளவிறே இத்யாதி. இவ்வளவிறே என்னளவுமென்றது - உன்ஸௌகுமார்யத்

என்னைச் சேர்த்துக்கொண்ட இதிறே என்னைக்கலங்கப்பண்ணிற்று. [என்காதல்கலக்கவே] - என்னுடையப்ரேமமானது நான் அஞ்சும்படி கலங்கப்பண்ண, உன்வடிவழகிலும் மேன்மையிலும் கலங்கிச் சொன்னவத்தனைபோக்கி, உன் ஸௌகுமார்யத்தை எல்லை கண்டுசொன்னேனல்லேன். ப்ரேமாந்தனாய்க்கொண்டு சொன்னேனத்தனைபோக்கி, நெஞ்சொழிந்துசொன்னேனல்லேன். ப்ரயோஜநாந்தரபரரான ப்ரஹ்மாதிகள்பரிவும்உனக்கு ஸத்ருஶமன்று, ப்ரேமாந்தனான என்பரிவும் உனக்கு ஸத்ருஶமன்று என்றதாயிற்று. (௯)

பத்தாம் பாட்டு.

கலக்கமில்லா நல்தவ முனிவர் கரைகண்டோர்
துளக்கமில்லா வானவர் எல்லாந்தொழுவார்கள்
மலக்கமெய்த மாகடல்தன்னைக்கடைந்தானை
உலக்கநாம்புகழ்கிற்பது என்செய்வது? உரையீரே.

ஆ.—(கலக்கமில்லா.) அவனை அறிந்து ஏத்தினீராலோவென்னில்,—அஸ்ஷுபிதஜ்ஞாநராய், நிரதிஶயஶக்தியுக்தராய், ஶ்ரவதஶவைகபோகரான * அயர்வறுமமரர்கள், அவனுடைய - கல்யாணகுண மஹோததியினுடைய-இக்கரைகண்டார்; ஶ்ரவத்பரிசர்யைகபோகரான நித்யஸித்தபுருஷர்கள், அவன்திருவடிகளில் ஸ்துத்யாதி பரிசர்யைபண்ணுவார்; அக்ஷோப்யமஹோததியை க்ஷுபிதமாம்படி கடைந்தருளினவன் பரிசர்யைபண்ணப்படுகிறவன். இப்படியிருக்கிற அவனை நாம் உள்ளபடியறிந்து புகழுகையாவதென்? ஆகில், நீர் புகழ்வானென்? என்னில்,—என்காதல் என்னைக் கலக்காநின்றால் நான் செய்வதென்? ஆனபின்பு, உன்க்ருபையாலே அடிமைகொண்டருளவேணுமென்கிறார்.

ஒ.—பத்தாம்பாட்டில், 'என்னுடைய ஸௌகுமார்யாதிகளை யநுஸந்தித்துப் பரிவராய்க் காப்பார் அநேகருளர்: ஒருவரும் பரியவேண்டாதபடி நான் பெரியமிடுக்கன்' என்று எம்பெருமான் அருளிச்செய்ய; அத்தையநுஸந்தித்துத் தம்முடைய பயங்கெட்டு ஹ்ருஷ்டராகிறார்.

[கலக்கமென்று தொடங்கி] - தங்களுடைய அறிவுகளுக்கு, விஷயங்களால் கலக்கமின்றிக்கே நல்ல தபஸ்ஸுக்களையுமுடையராய் முமுக்ஷுக்களான முனிகளும் முக்தரும் அஸ்ப்ருஷ்ட ஸம்ஸாரகந்தரான அயர்வறுமமரர்களும் என்கிற இவர்களெல்லாம் அவனைப் பரிந்து காக்கக்கடவார். [மலக்கமென்று தொடங்கி]-பெருங்கடல் மலங்

இக்குத் தகும்படி சொன்னேனல்லேன், கலங்கிச்சொன்னேன் என்றபடி. கலங்குகைக்கு ஹேது ஏதென்ன - ஸர்வநிர்வாஹகனுய் இத்யாதி. கீழ்வாக்யவிவரணம் - ப்ரேமாந்தனாய் இத்யாதி. இப்பாட்டால் ஃபலித்ததென்? என்ன - ப்ரயோஜநாந்தர இத்யாதி. 'திருமால் - எம்பெருமானே உன்தன்மையை - நான்முகன்என்றுதொடங்கி, ஆரறிகிற்பார்? பேசியென்? என்காதல்கலக்கவே - ஒருமாமுதல்வாஎன்றுதொடங்கி, கருமாமேனியனென்பன்' இத்யந்வய:. (௯)

கும்படிகடைந்த பெருமிடுக்கனை நாம் முடியப் புகழவல்லோமாகையாவது என்செய்தபடி? சொல்லீர்கோள்.

ப.—அநந்தரம், முமுக்ஷுக்களோடு முக்தர்களோடு நித்யஸூரிகளோடு வாசியற நமக்குப் பரிவராயிருக்க, நாம் ஶக்திமான்களாயிருக்க, நீர் அஞ்சவேண்டாவென்ன,—ஆஶ்ரிதஜநஸாமக்ர்யத்தையும் அதிஶயித ஶக்தியோகத்தையும் அநுஸந்தித்து ஸமாஹிதராகிறார்.

(வ்யூஹஸாவநாநிஷ்டராகையாலே), கலக்கம் - (ஸாம்ஸாரிக ஸ்வபாவங்களாகிற) கலக்கம், இல்லா - அற்ற, நல்தவம் - ஜ்ஞாநரூப தபஸ்ஸையுடைய, முனிவர் - ஸநகாதிமுநிகள், கரைகண்டோர் - ("ஸோऽத்வந: பாரமாப்நோதி" என்கிறபடியே ஸம்ஸாரஅத்வாவைக்) கரைகண்டமுக்தர், (அஸ்ப்ருஷ்டஸம்ஸாரகந்தராகையாலே ஒருகாலும்), துளக்கம் - சலநம், இல்லா - அற்ற, வானவர் - நித்யஸூரிகள், எல்லாம் - எல்லாரும், தொழுவார்கள் - (பரிவராய்க்கொண்டு) தொழுது மங்களாஶாஸநம் பண்ணுமவர்கள்; மா - அபரிச்சிந்நமான, கடல்தன்னை - ஸமுத்ரத்தை, மலக்கமெய்த - கலங்கும்படி, கடைந்தானை - கடைந்தஸர்வஶக்தியுக்தனை, நாம் - , உலக்க - முடியக்கண்டு, புகழ்கிற்பது - புகழவல்லோமாகையாகிற இது, என்செய்வது - என்செய்ததாயிற்று? உரையீர் - சொல்லீர்கோள்என்று லௌகிகரைப்பார்த்துச் சொன்னாராயிற்று.

இ—பத்தாம்பாட்டில், நம் ஸௌகுமார்யாதிகளை யநுஸந்தித்துப் பரிவராய் நமக்குரக்ஷகராயிருப்பார் அநேகருளர்; ஒருத்தர் பரியவேண்டாதபடி நான் பெருமிடுக்கன் என்று அவன் அருளிச்செய்ய, அத்தையநுஸந்தித்து பயங்கெட்டு ஹ்ருஷ்டராகிறார்.

[கலக்கமில்லா நல்தவமுனிவர்] - தங்கள் ஜ்ஞாநத்துக்கு விஷயங்களால் கலக்கமின்றிக்கே, மஹாதபஸ்ஸுக்களையுடைய மநநஶீலரான ஸநகாதிகள். [கரைகண்டோர்] - முக்தர். [துளக்கமில்லாவானவர்] - முதலிலே ஸம்ஸார ஸ்பர்ஶகந்தமில்லாத நித்யஸூரிகள். துளக்கம் - சலநம்; அதாகிறது - ஸங்கோசம் [எல்லாந்தொழுவார்கள்] - முமுக்ஷுக்களும் முக்தரும் நித்யஸித்தருமான இவர்களெல்லாம் அடிமை செய்கிறவர்கள். அடிமைசெய்கையாவது - ஸ்வாமிக்கு அதிஶயத்தைப் பண்ணுமதாகையாலே மங்களாஶாஸநமிறே. [மலக்கமெய்த] - மஹத்தத்த்வமானகடலை க்ஷுபிதமாம்படி கடைந்த பெருமிடுக்கனை: பரியுமவர்கள் தாங்களும் குழைசரக்காம்படி மிடுக்கனென்கை. [உலக்கநாம்புகழ்கிற்பதென்செய்வது? உரையீரே] - அவன்படியை நேராக அறியாதநாம் பரிவிலேயிழிந்து முடியப்பேசப்புக்கது, என்செய்தோமானோம்? சொல்லீர்கோள்! முன்பு தன்மிடுக்கைக் காட்டினவிடங்களில் அத்தை ப்ரதிபத்திபண்ணாதே, அதுதன்னைச் சொல்ல, இப்போது ஸமாஹிதராயிற்று, இப்ப்ரபந்தம் தலைக்கட்டக் கடவதாகையாலேயாதல்; ஈஶ்வரனுடைய ஜீவநாத்ருஷ்டத்தாலே யாதலிறே.

ஈடு.—பத்தாம்பாட்டு. இவர் பயத்தைப்பரிஹரிக்கைக்காக நமக்கு ஸநகாதிகள் முக்தர் நித்யஸூரிகள் இவர்கள் கிட்டிநின்று பரிமாறுகிறார்கள்: நாம்தாம் அரிய செயல்களும் செய்யவல்லோம் சிலரானபின்பு, நீர் நமக்கு அஞ்சவேண்டாகாணுமென்ன; முன்பு

பத்தாம்பாட்டு.—கலக்கமில்லா இத்யாதி. "கடைந்தானை" என்னுமளவும் கடாக்ஷித்து அவதாரிகை - இவர்பயத்தை இத்யாதி. முன்பு பயஹேதுக்களானவை என்றது - திருவுலகளந்தருளினது, வடதளஶாயித்வம் தொடக்கமானவற்றை. "மலக்க மெய்தமாகடல்தன்னைக்கடைந்

ஸயஹேதுக்களானவைதானே பயநிவ்ருத்திக்கு உடலாய் ‘அத்தையநுஸந்தித்து இனியராகிறார். இவர்தமக்கு இன்னபோது இன்னது ஸயஹேதுவாம், இன்னபோது இன்னது பரிஹாரமாம் என்று தெரியாதிறே.

[கலக்கமில்லாநல்தவமுனிவர்] - தங்கள் ஜ்ஞாநத்துக்கு விஷயங்களால்வரும் கலக்கமின்றிக்கே, மஹாதபஸ்ஸுக்களை யுடையராய் மநநஶீலரான ஸநகாதிகள். [கரைகண்டோர்] - முக்தர். [துளக்கமில்லாவானவர்] - துளக்கம் - நடுக்கம். ஸம்ஸாரஸ்பர்ஶமில்லாத நித்யஸூரிகள். துளக்கம் - சலநம். அதாவது - ஸங்கோசம். [எல்லாந்தொழுவார்கள்] - முமுக்ஷுக்களும் முக்தரும் நித்யஸித்தருமான இவர்கள் அடிமை செய்கிறவர்கள். அடிமையாவது - ஸ்வாமிக்கு அதிஶயத்தைப் பண்ணுமதாகையாலே, மங்களாஶாஸநமிறே. [மலக்கம்இத்யாதி]-மஹத்தத்த்வமான கடலை க்ஷுபிதமாம்படி கடைந்த பெருமிடுக்கன். பரிகிறவர்கள்தாங்களும் குழைசரக்காம்படி பெருமிடுக்கனென்கை. [உலக்கஇத்யாதி] - அவன் படியை நேராக அறியாத நாம் பரிவிலே யிழிந்து முடியப்பேசப்புக்கது, என்செய்தோமானோம்? சொல்லிகோள். முன்பு தன்மிடுக்கைக்காட்டினவிடங்களில் அத்தை ப்ரதிபத்திபண்ணாதே அதுதன்னையேசொல்ல இப்போது ஸமாஹிதமாயற்றது, இப்ப்ரபந்தம் தலைக்கட்டக்கடவதாகையாலேயாதல், ஈஶ்வரனுடைய ஜீவநாத்ருஷ்டத்தாலேயாதலிறே. (கய)

பதினோராம் பாட்டு.

உரையாவெந்நோய்தவிர அருள்நீள்முடியானை
வரையார்மாட மன்னுகுருகூர்ச்சடகோபன்
உரையேய்சொல்தொடை ஓராயிரத்துளிப்பத்தும்
நிரையேவல்லார் நீடுலகத்துப்பிறவாரே.

ஆ.—(உரையா) - துர்வசமாய் காலாக்நிஸத்ருஶமாயிருந்த விரஹவ்யஸநத்தாலுள்ள ஸந்தாபம் தவிரும்படி நிரதிஶயவிஷயீகார ஸூசகமான காருண்யமய ஶிரஃகம்பநத்தாலே தம்மைவிஷயீகரித்த எம்பெருமானைச்சொன்ன இத்திருவாய்மொழியை வல்லார், ஸம்ஸாரமருகாந்தாரத்தில் பிறவார் என்கிறார்.

ஒ —நிகமத்தில், இத்திருவாய்மொழிவல்லார், எம்பெருமானுடைய தனிமைகண்டு நோவுபடும் ஸம்ஸாரத்திலே பிறவாரென்கிறார்.

தானை'' என்றத்தைப்பற்ற-பயநிவ்ருத்திக்கு உடலாய் என்றது. பயஹேதுவானது பயநிவ்ருத்திக்குஉடலாகக்கூடுமோ? என்ன - இவர்தமக்கு இத்யாதி.

அர்த்தாந்தரம் - சலநம் இத்யாதி. ''துளக்கம்'' என்று ஸம்ஸாரஸ்பர்ஶமாதல், ஜ்ஞாநஸங்கோசமாதல். பரிவர்களென்னாதே, 'தொழுவார்கள்' என்கிறதென்? என்ன - அடிமையாவது இத்யாதி. ஃபலிதம் - பரிகிறவர்கள் இத்யாதி. குழைசரக்கு - ரக்ஷ்யவஸ்து. உலக்க-முடிய. முன்பு மிடுக்கைக்காட்ட பயப்பட்டுப் பரிகிற இவர், இப்போது ஸமாஹிதரானதுக்கு ஹேதுவை இரண்டுவகையாக அருளிச்செய்கிறார் - முன்பு இத்யாதி வாக்யத்வயத்தாலே. ''உரையீர்'' என்றது - ஸந்நிஹித ஸ்ரீவைஷ்ணவர்களைக்குறித்து. 'கலக்கமில்லா' என்றுதொடங்கி, தொழுவார்கள் - மாகடல் தன்னை - மலக்கமெய்த - கடைந்தானை, நாம் - உலக்க - புகழ்கிற்பது என்செய்வது? உரையீர் இத்யந்வய:. (கய)

[உரையாவென்று தொடங்கி] - வாயால் பேசவொண்ணாதபடி தமக்கு வர்த்தித்த பயம்போம்படியருளும் ஸ்வபாவனும் அதுக்கீடான ஸர்வேஶ்வரத்வஸூசகமான பெரிய திருவபிஷேகத்தையுமுடையவனைத் தம்முடைய வ்யஸநம்போகையாலே ஸம்ருத்தமான திருநகரியையுடைய ஆழ்வாருடைய உக்தியாய் சேர்ந்த சொற்றொடையை உடைத்தாயிருந்துள்ள விலக்ஷணமான ஆயிரந்திருவாய்மொழியிலும் இத்திருவாய்மொழியை. [நிரையேவல்லார்] - அர்த்தக்ரமத்திலே அறிவார்.

ப.—அநந்தரம், இத்திருவாய்மொழியை அப்யஸித்தார்க்கு பலமாக ஸம்ஸாரநிவ்ருத்தியை அருளிச்செய்கிறார்,

உரையா - வாசாமகோசரமாம்படி, ("ஸௌகுமார்யாதிகளுக்கு என்னவருகிறதோ?" என்று அதிஶங்கையைப்பிறப்பித்து), வெம் - பரிதாபஹேதுவான, நோய்- (கலக்கமாகிற) நோயானது, தவிர - தீரும்படியாக, அருள் - தன்னுடைய விபூதிபூர்த்தியையும் ஶக்திபூர்த்தியையுங்காட்டின, நீள்முடியானை - ஸர்வாதிகஶேஷியானவனை, வரை - வரை, ஆர் - செறிந்தாற்போலேயிருக்கிற, மாடம் - மாடங்கள், மன்னு - ஸ்திரமாம்படியாயிருக்கிற, குருகூர் - திருநகரிக்கு நிர்வாஹகரான, சடகோபன் — ஆழ்வாருடைய, உரை - உக்திப்ரகாரமாய், ஏய் - செறிந்த, சொல்தொடை - சொல்தொடையையுடைத்தாய், ஓர் - அத்விதீயமான, ஆயிரத்துள் - ஆயிரத்துள், இப்பத்தும் - இப்பத்தையும், நிரையே - அடைவுபட, வல்லார் - சொல்லவல்லர்கள்,—நீடு - விஸ்தீர்ணமாய், உலகத்து — (பகவத்விஷயத்துக்குப் பரிவரில்லாத) இஸ்ஸம்ஸாரத்திலே, பிறவார் - பிறவார். இது - கலித்துறை.

இ.—நிகமத்தில், இத்திருவாய்மொழியை யப்யஸிப்பார், அவன்தனிமை கண்டு பயப்படும் ஸம்ஸாரத்தில் பிறவாரென்கிறார்.

[உரையா வெந்நோய்] - வாசாமகோசரமாய் அதிக்ரூரமான நோய். தம்மளவில் ஸாத்மிக்கையன்றிக்கே, "உபயவிபூதியுக்தனுக்கு என்வருகிறதோ?" என்று அஞ்சின நோயிறே. [தவிர அருள்] - இதுபோம்படிக்கீடாக அருளும் ஸ்வபாவனான உபயவிபூதி நாதனை. இவ்வாழ்வாருடைய பயந்தீர்ந்தபின்பாயிற்று உபயவிபூதிக்கும் ரக்ஷகனாகச் சூடின முடி நிலைநின்றதாயிற்று. [வரையார் இத்யாதி] - இவர் பயம் நிவ்ருத்தமானவாறே, ஸம்ருத்தமுமாய் ஸ்திரமுமாயிற்றுத் திருநகரியும். உக்தியாய்ச்சேர்ந்த சொற்றொடையையுடைத்தாய், விலக்ஷணமான ஆயிரம். [இப்பத்தும் நிரையேவல்லார்] - இப்பத்தை அடைவுதப்பாமல் அப்யஸிக்கவல்லார். தமக்குப்பிறந்த கலக்கத்தாலே, இதில் இழிவார்க்கும் அடைவுபட அநுஸந்திக்கவொண்ணாதென்றிருக்கிறார். [நீடுலகத்துப் பிறவாரே] - பூமிப்பரப்புடைய அநுஸந்தித்தால், பரப்பேயாய், ஸர்வேஶ்வரன் தனிமைக்குப்பரிவ ரொருவரைக்கிடையாத இத்தேசத்தில் பிறவார்கள் ; ஒருநாடாக மங்களாஶாஸநம் பண்ணுகிற தேசத்திலேபோய் நித்யாநுபவம் பண்ணப்பெறுவர்கள்.

ஈடு.—நிகமத்தில் - இத்திருவாய்மொழி யப்யஸிப்பார், அவன்தனிமைகண்டு பயப்படும் ஸம்ஸாரத்தில் பிறவா ரென்கிறார்.

நிகமம் - உரையா இத்யாதி. "வல்லார் நீடுலகத்துப்பிறவார்" என்றதைக் கடாக்ஷித்து அவதாரிகை - இத்திருவாய்மொழி இத்யாதி.

[உரையாவெங்நோய்] - வாசாமகோசரமாய், அதிக்ரூரமான நோய். தம்மளவில் ஸாத்மிக்கையன்றிக்கே, "உபயவிபூதிநாயனுக்குஎன்வருகிறதோ?" என்று அஞ்சின நோயிறே [தவிரவருள்நீள்முடியானை] - இதுபோம்படிக்கீடாக அருளும் ஸ்வபாவனான உபயவிபூதிநாயனை. "இவர்பயம்போம்படி 'உம்முடைய அபேக்ஷிதம் செய்கிறேம்' என்று ஶிரஃகம்பநம் பண்ணினான்போலேகாண்" என்று அம்மங்கியம்மாள். இவ்வாழ்வாருடைய பயம் நிவ்ருத்தமானபின்பாயிற்று, உபயவிபூதிக்கும் ரக்ஷகனாய்ச் சூடின முடியும் நிலைநின்றதாயிற்று. [வரையார்இத்யாதி] - இவர்பயம் நிவ்ருத்தமானவாறே ஸம்ருத்தமுமாய் ஸ்த்திரமுமாயிற்றுத் திருநகரியும். [உரையேய் இத்யாதி] - உக்தியால் சேர்ந்த சொல் தொடையையுடைத்தாய் விலக்ஷணமான ஆயிரம். [இப்பத்தும் நிரையேவல்லார்] - இப்பத்தை அடைவுதப்பாமல் அப்யஸிக்கவல்லார்: தமக்குப்பிறந்த கலக்கத்தாலே, இதிலிழிவார்க்கும் அடைவுபட அநுஸந்திக்கவொண்ணாதென்றிருக்கிறார். [நிலத்துப்பிறவாரே] - இப்பூமிப்பரப்பையடைய அநுஸந்தித்தால், பரப்பேயாய், ஸர்வேஶ்வரன்தனிமைக்குப் பரிய ஒருவரைக் கிடையாத இத்தேசத்திலே பிறவார்கள்; ஒருநாடாக மங்களாஶாஸநம்பண்ணுகிற தேசத்திலேபோய் நித்யாநுபவம் பண்ணப்பெறுவர். (கக)

உரையா - உரைக்கப்போகாதபடியான என்றபடி. வாசாமகோசரதை ஏதென்ன - தம்மளவில் இத்யாதி. தம்மளவில் ஸாத்மிக்கையன்றிக்கே என்றது - ஸம்ஸாரதோஷத்தைக் கண்டு தமக்காகப் பயப்படுகையன்றிக்கே என்றபடி. "நீள்முடியான்" என்றதுக்கு அர்த்தம் - உபயவிபூதிநாதனை என்று. பரிகிறப்ரகரணத்திலேதிருவபிஷேகத்தைச்சொன்னதுக்கு இரண்டு வகையாக பாவம் - இவர்பயம் இத்யாதி வாக்யத்வயத்தாலே. "வரையார்மாடம் -" வரையோடே ஸாத்ருஶ்யாகாரேணபொருந்தின மாடமென்றபடி. இதுக்குபாவம் - இவர்பயம் இத்யாதி. மன்னு - ஸ்த்திரமான என்றபடி. எய்கை - பொருந்துகையாய், ஸுஶப்தங்களாய்ச்சேர்ந்த ஶப்தஸந்தர்ப்பமென்றபடி - நிரையே - அடைவே என்றபடி. அடைவென்கிறதென்? அருமையுண்டோ? என்ன - தமக்குப்பிறந்த இத்யாதி. அநுஸந்தித்தால் - விசாரித்துப்பார்த்தால் என்றபடி. 'வரையார்மாடமன்னுகுருகூர்ச்சடகோபன் - உரையாவெங்நோய் தவிர அருள் நீள்முடியானை - உரையேய்சொல்தொடை' இத்யாரப்ய, 'பிறவார்' இத்யந்வய: (கக)

த்ரவிடோபநிஷத்ஸங்கதி. — ப்ரேம்ணைவ விவஶஹ்ருத்க்ஷாரோ த்ப்ரேக்ஷ: ப்ரேக்ஷாயஸ்ந்நஹ்ருதய: ஸ்வாஶாவேஷாத்தவே | தத்ஸம்பூர்த்தாத்தவாநிஸ்த்ய ஶாஶ்வதாத்தவேக்ஷ: க்ஷிப்ர்த்தாஹிதநாஶம்ஜித்த்யேதீயே ||

த்ரவிடோபநிஷத்தாத்பர்யரத்நாவலி.— ஶ்ரீஹ்ரீநாயகத்வாத் அஸத்ருஶதயயா கல்யவித்யாளஸிம்ஹாத் ஸ்வாமித்வே ஸத்யநாத்ஸ்வப்ரஹிதகரணாத் ஸந்நிவாஸக்ஷமாத்மா | விக்ராந்த்யாவிஷ்காராந்விதமஹிமதத்ஸ்வாஸ்ய ஸஹ்ய ஸந்த்ரௌசகாக்ஷாஶ்ரிதாநாம் விஹாரணவாயேஶ்யாஸ்ஸூத்யவாதீ ||

திருவாய்மொழி நூற்றந்தாதி.

அங்கமரர்பேண அவர்கடுவேவாழ்திருமாற்கு
இங்கோர்பரிவரிலையென்றஞ்ச—எங்கும்
பரிவருளரென்னப்பயந்தீர்ந்தமாறன்
வரிகழற்றுள்சேர்ந்தவர்வாழ்வார்.

ஆழ்வார்திருவடிகளே ஶரணம், எம்பெருமானார்திருவடிகளே ஶரணம், ஜீயர்திருவடிகளே ஶரணம்.

நான்காந் திருவாய்மொழி—வார்கடாவருவி - ப்ரவேஶங்கள்.

ஆ.—இப்படி விரஹவைவர்ணிதப்தரான ஆழ்வாருடைய விடாயைப் போக்கியருளுகைக்காக, முன்னமே திருச்செங்குன்றூரில் திருச்சிற்றாற்றங்கரையிலே, ஒரு தாமரைத்தடாகம் நின்றாற்போலே தான் நின்றருளினபடியைக் காட்டக்கண்டு, ப்ரீதியாலே, ஸகலஜநமநோநயநஹாரி திவ்யசேஷ்டித ஸௌலப்ய ஸௌந்தர்யாதி கல்யாண குணகண ஸர்வேஶ்வரத்வங்களைப்பேசி, அந்தத்தாமரைத்தடாகம் இருந்தவிடத்தேறச் செல்லவேணுமென்கிறார்.

ஒ.—நாலாந்திருவாய்மொழியில் கீழில் திருவாய்மொழியில் எம்பெருமானுடைய தனிமையை யநுஸந்தித்து மிகவும் பீதரான ஆழ்வார்க்கு, ஸௌர்யவீர்யாதி குணங்களையும், ஸ்ருஷ்டிஸ்திதியாதிகளாகிற அத்புதகர்மங்களையு முடையனாய், அதுக்குமேலே மிகவும்ஶக்திமான்களாய்த் தனக்குப் பரிவராயிருப்பார் அநேகரோடேகூடத் திருச்செங்குன்றூரிலே தானிருந்தருளினபடியைக் காட்டியருளக்கண்டு; எம்பெருமான், ஸ்ரீஸுக்ரீவ மஹாராஜருடைய பயத்தைத் தம்முடைய ஸாமர்த்த்யத்தைக்காட்டிப் பெருமாள் தீர்த்தருளினாற்போலேயும், மல்லயுத்தத்தில் பார்ஶ்வஸ்தருடைய பயத்தை அம மல்லனை முடித்து க்ருஷ்ணன் தீர்த்தருளினாற் போலேயும், தம்முடைய பயத்தைப் போக்கியருள, அத்தாலே "க்ருதார்த்தனானேன், இனி அவனையல்லது எனக்கு தாரக போஷக போக்யாதிகளில்லை," என்று மிகவும் ப்ரீதராகிறார்.

ப.—நாலாந் திருவாய்மொழியில், கீழ் அவனுடைய ஸௌகுமார்யத்தாலே தனிமைக்குஅஞ்சின இவருடைய பயந்தீரும்படி பரிவரையும் ஶக்தியையுங்காட்டி ஆஶ்வஸிப்பித்த ஸர்வேஶ்வரன், "இவர் இப்படியஞ்சிற்று விரோதிபூயிஷ்டதேசமென்றாயிருக்கும்: நம்முடைய விரோதிநிவர்த்தகத்வத்தையும் ஜகத்ஸ்ருஷ்ட்யாதி ஶக்தியையுங் காட்டுவோம்" என்று இவர் திருவுள்ளத்திலே ப்ரகாஶிப்பிக்க; அவனுடைய அகில விரோதி நிவர்த்தகத்வத்தையும், அஶேஷ ஜகத்விஷயமான ஸ்ருஷ்ட்யாதி வ்யாபாரத்தையும், ஆஶ்ரிதாபத்ஸகத்வத்தையும், ஆஶ்ரிதார்த்தமான அதிஶயித வ்யாபாரத்தையும், ஆஶ்ரயணீயஸ்தலாந்தர விலக்ஷணமான தேசவிஶேஷஸ்திதியையும், ஆஶ்ரயணீயதா வைலக்ஷண்யத்துக்கு அடியான ஸர்வப்ரகாரோபகாரகத்வத்தையும், அநுபாவ்யமான ஆபிரூப்யாதிஶயத்தையும், ஜகஜ்ஜந்மாதி ஹேதுத்வத்தையும், ஸ்ரஷ்ட்ருஸ்ருஜ்யாதி விபாகமில்லாத ஸர்வாத்மபாவத்தையும், ஸததாவிர்பூதிஹேதுவான நிருபாதிக ஶேஷித்வத்தையும் அநுஸந்தித்து, ஏவம்பூதனான ஸர்வேஶ்வரன், பரிவரான வைதிகாக்ரேஸருடைய ஸம்பத்தே தனக்குஸம்பத்தாம்படி திருச்செங்குன்றூரிலே யெழுந்தருளி நின்ற அதிஶயத்தை அநுஸந்தித்து ஸந்துஷ்டராகிறார்.

இ.—நாலாந்திருவாய்மொழியில் "ஸர்வேஶ்வரன் ஸம்ஸாரிகளுடையஅபேக்ஷையாலம்பநமாக ஸம்ஸாரத்திலே வந்துஅவதரித்துத் தனியேயுலாவாநிற்கும். ஸம்ஸாரிகளும் தந்தாம் அபேக்ஷிதத்தைப்பற்றக் கிட்டுமதொழிய இவன்வாசியறிந்து பரியக் கடவாரில்லை. என்னாகிறதோ?" என்றுஅஞ்சின இவர்க்கு, அந்தஅச்சந்தீரும்படி, 'நமக்குப் பரிவருமுண்டு, ஒருத்தர்பரிய வேண்டாதபடி அவர்களுக்கு ரக்ஷகமாம்படியான மிடுக்

கும் நமக்குஉண்டு” என்று தன்படிகளைக் காட்டி ஸமாதாநம்பண்ண ஸமாஹிதராய்நின்றார் கீழ்; இதில்-“தேஹாத்மாபிமாநிகளுக்கு தேஹஜ்ஞாநம் பிறந்தாலும் தேஹாத்மாபிமானம் பின்னாட்டுமாபோலே, இவராகிறார் ப்ரேமஸ்வபாவராயிருப்பர், இன்னமும் மறுவலிடக்கூடும், மறுவலிடாதபடி பரிஹரிக்கவேணும்” என்று தன் ஐஶ்வர்யவீர்யாதி குணங்களையும், ஸ்ருஷ்ட்யாதிகளாகிற அத்புதகர்மங்களையும், எதிரிட்ட விரோதிவர்க்கத்தை வேரோடே வாங்கிப்பொகடவல்ல ஸர்வஶக்தியையும் காட்டி; ஸ்ரீ விபீஷணாழ்வான் நிமித்தமாக மஹாராஜர்க்குப் பிறந்த பயத்தை, “பிஶாசாந்தாநவாந்யக்ஷாந்” என்று தன்மிடுக்கைக்காட்டிச் சக்ரவர்த்தித்திருமகன் போக்கினாற்போலேயும், மல்லயுத்தத்தில் “நவஸம்யோஜிதஹ்ருதயா:” என்கிறபடியே பாரஶ்வஸ்தருடைய பயத்தை க்ருஷ்ணன் மல்லரையழித்துத் தீர்த்தருளினாற்போலேயும், தம்முடைய பயத்தைப் போக்கியருள, அத்தாலே க்ருதார்த்தராய், “இனி நமக்கு ரக்ஷகபோஷகபோக்யாதிகள் அவனல்லதில்லை” என்று ப்ரீதராய் முன்பு அழகைக்கண்டு பரிவாலேபீதரானவர், அழகிலே நெஞ்சு சென்று அநுபவித்து க்ருதக்ருத்யராய்த் தலைக்கட்டுகிறார்.

ஈடு.—“ஸர்வேஶ்வரன் ஸம்ஸாரிகளுடைய அபேக்ஷையே ஆலம்பநமாக ஸம்ஸாரத்திலே வந்தவதரித்துத் தனியே உலாவாநிற்கும்: ஸம்ஸாரிகளும் தந்தாம் அபேக்ஷிதங்களைப்பற்றக் கிட்டுமேதொழிய இவன்வாசியறிந்து பரியக்கடவாரில்லை: என்புகுகிறதோ?” என்று அஞ்சின இவர்க்கு, அந்த அச்சந்தீரும்படி “நமக்குப்பரிவருண்டு: ஒருத்தர் பரியவேண்டாதபடியான மிடுக்கும் நமக்குண்டு” என்று தன்படிகளைக்காட்டி ஸமாதாநம்பண்ண ஸமாஹிதராய்நின்றார்-கீழ்; இதில் - “இவராகிறார் ப்ரேமஸ்வபாவராயிருப்பர், * காதல்மையலேறிக்கலங்கி, “முக்தரும் நித்யரும் இங்கில்லையே, ஸநகாதிமுமுக்ஷுக்கள் நல்லதபஸ்ஸும் மநநத்யானமும் விடமாட்டார்கள்: கடல்கடைந்தது தேவயோநியிலேயன்றோ” என்று கலங்குவர். இன்னம் இவர்க்கு இது மறுவலிடக்கூடும்” என்று பார்த்து, மறுவலிடாதபடி தன்ஐஶ்வர்யவீர்யாதி குணங்களையும், ஸ்ருஷ்ட்யாத்யத்புதகர்மங்களையும், எதிரிட்டவிரோதி வர்க்கத்தை வேரோடேவாங்கிப் போகடவல்ல ஶக்தியையும் காட்டிக்கொடுத்து, அதுக்குமேலே, “அதிஶயிதஜ்ஞாநஶக்திகராய்த் தனக்குப்பரிவராயிருப்பார் மூவாயிரம் ப்ராஹ்மணருண்டு” என்று காட்டிக்கொடுக்கக்கண்டு க்ருதார்த்தராய், அவன் வடிவழகிலேயும் நெஞ்சுசென்றநுபவித்து இனியராகிறார்.

ஸ்ரீ விபீஷணாழ்வான் †“ராகவம் ஶரணம் கத:” (ராகவம்ஶரணம்கத:) என்றுவந்து விழுந்தபோது, மஹாராஜர் பெருமாள்பக்கல் ப்ரேமத்தாலேகலங்கி, துணுக்

வார்கடாவருவி ப்ரவேஶே,—ஸங்கதிகயநார்த்தம் வ்ருத்தத்தை அநுவதிக்கிறார் - **ஸர்வேஶ்வரன் இத்யாதி.** *ஸமாஹிதரானால் மீளவும் இத்திருவாய்மொழியிலே பயநிவ்ருத்தி பண்ணிக்கொடுப்பானென்? என்ன* - **இதில் இவராகிறர் இத்யாதி.** *“சீர்கொள்” இத்யாதியைப்பற்ற* - **ஐஶ்வர்யவீர்யாதி இத்யாதி.** *“படைத்தளித்தழிக்கும்” இத்யாதியைப்பற்ற* - **ஸ்ருஷ்ட்யாத்யத்புத இத்யாதி.** *“கஞ்சனைத்தகர்த்த,” “அசுரர்வன்கையர்வெங்கூற்றை” இத்யாதியைப்பற்ற* - **விரோதி வர்க்கத்தை இத்யாதி.** *“வண்சிவனுமயனும் தானுமொப்பார்” என்றத்தைப்பற்ற* - **அதிஶயித ஜ்ஞாந இத்யாதி.** *“மனக்கொள்சீர்,” “மூவாயிரவர்” இத்யாதியைப்பற்ற* - **தனக்குப் பரிவராய் இத்யாதி.** *“திருச்செய்யகமலக்கண்ணும்” இத்யாதியைப்பற்ற* - **அவன்வடிவழகிலேயும் என்றது.**

அப்படி அவன் தன்ஐஶ்வர்யாதிகளைக்காட்டி ஸமாதாநம்பண்ண பயந்தீர்ந்து ஸமாஹிதரானார் உண்டோவென்ன, - **இரண்டு த்ருஷ்டாந்தங் காட்டுகிறார்** - **ஸ்ரீவிபீஷணாழ்வான் இத்யாதி**

† ரா- யுத்- 17, 14.

கென்று, "இவன்சொன்னவார்த்தை பெருமாள் திருச்செவியிலே படுமாகில் சாலத்தப்பாம்" என்று, "நாயன்றே! ராவணப்ராதா ராக்ஷஸஜாதி: அவன் புகுரக்கடவனல்லன்" என்ன, "இவர் நம்பக்கல் பரிவாலேசொல்லுகிறவார்த்தை, நம்முடேக்கைக்காட்டவே தெளிவர்" என்றுபார்த்து, "பிஶாசாந்தாநவாந்" (பிஶாசாந்தாநவாந்) இத்யாதியாலே தம்முடைய மிடுக்கைக்காட்டக்கண்டு அவர் அச்சந்தீர்ந்து, "கிமத்ரசித்ரம்" (கிமத்ரசித்ரம்) என்று இனியரானாற்போலவும், மல்லயுத்தத்தில் *"நஸமம்யுத்தமித்யாஹு:" (நஸமம்யுத்தமித்யாஹு:) என்கிற பார்ஶ்வஸ்த்தருடைய ஹயத்தை, அவர்கள் ஸந்நிதியிலே க்ருஷ்ணன் மல்லரை யழியச்செய்து தீர்த்தருளினாற்போலவும், தம்முடைய ஹயத்தைப் போக்கியருள, அத்தாலே க்ருதார்த்தராய், "இனி நமக்கு தாரகபோஷக போக்யங்கள் இவனல்லது இல்லை" என்று ப்ரீதராய், முன்பு அழகைக்கண்டு பரிவாலே பீதரானவர், அழகிலே நெஞ்சுசென்றநுபவித்து க்ருதார்த்தராய்த் தலைக்கட்டுகிறார்.

முதற் பாட்டு.

வார்கடாவருவியானைமாமலையின் மருப்பிணைக்குவடிறுத்துருட்டி, ஊர்கொள்திண்பாகனுயிர்செகுத்துஅரங்கின் மல்லரைக்கொன்றுசூழ்பரண்மேல், போர்கடாவரசர்புறக்கிட மாடமீமிசைக்கஞ்சனைத்தகர்த்த, சீர்கொள்சிற்றயன்திருச்செங்குன்றூரில் திருச்சிற்றாறெங்கள்செல்சார்வே.

ஆ.—(வார்கடாவருவி) - நிஷ்யந்தமாந மதஜலமாகிற ஸரித்தையுடைத்தான குவலயாபீடமாகிற மஹாசலத்தினுடைய தந்தயுகளமாகிற ஶிகரங்களை முறித்துருட்டி, ஊர்கொள் திண்பாகனுயிர் செகுத்து, கஜதந்த வராயுத தரராய், நம்பி மூத்தபிரானும் தானும் ஸர்வலீலாவலோகிதங்களையுடைய இரண்டுஸிம்ஹங்கள் க்ஷுத்ரம்ருகங்கள் நடுவே புக்காற்போலே, ரங்கமத்யத்திலே போய்ப்புக்கு மல்லரைக்கொன்று, மஞ்சோபரிஸ்த்திதராய், இத:பூர்வம் யுத்தத்தில் பராஜிதரான ராஜாக்கள் த்ரஸ்தராய்க் கெடும்படி யெழப்பாய்ந்து, மஞ்சோந்நதஸ்த்தலஸ்த்தனை கம்ஸனை, * வெண்ணெய்விழுங்கி வெறுங்கலத்தை வெற்பிடையிட்டதனோசைகேட்டு விளையாடினாற்போலே தகர்த்த சீர்கொள் சிற்றயன் திருச்செங்குன்றூரில் திருச்சிற்றாறு எங்களுக்கு ப்ராப்யமென்கிறார்.

ஒ.—முதற்பாட்டில், குவலயாபீட மல்லப்ரப்ருதிகளான ப்ரதிகூலரை நிரஸித்த சீர்கொள் சிற்றயனுடைய திருச்செங்குன்றூரில் திருச்சிற்றாறு எங்களுடைய ஹயத்தைப் போக்கவல்ல புகலென்கிறார்.

பெருமாள் உக்தியாலே பயத்தைப் போக்கினார்: க்ருஷ்ணன் அநுஷ்டாநத்தாலே பயத்தைப்போக்கினான். "தேனை நன்பாலை" இத்யாதியைப்பற்ற - இனி நமக்கு தாரக இத்யாதி. "பிஶாசாந் தாநவாந்யக்ஷாந் ப்ருதிவ்யாம் சைவ ராக்ஷஸாந் । அங்குல்யக்ரேண தாந்ஹந்யாம் இச்சந் ஹரிகணேஶ்வர" இதி யுக்தாதேந, ஸுக்ரீவப்ரமுகாந், ஸர்வாந் ப்ரதி ராம:. தமேவ, ஸுக்ரீவ:, "கிமத்ர சித்ரம் தர்மஜ்ஞ லோகநாதஶிகாமணே । யத்த்வமார்யம் ப்ரபாஷேதா ஸத்த்வவாந் ஸத்பதே ஸ்தித:".

(க)

*ரா - யுத் - 103 - 51.

[வார்கடாவென்று தொடங்கி] - பாயாநின்றுள்ள மதஜலமாகிற அருவியை யுடைய ஆனையாகிற பெரியமலையினுடைய இரண்டுகொம்புகளாகிற ஶிகரங்களை அநாயாஸேந முறித்து அத்தையுருட்டி நிலையுடையனாய், ஆனையைநடத்துகிற பாகனுடைய ப்ராணனைப்போக்கி ரங்கத்திலே புகுந்த மல்லரைக்கொன்று. [சூழ்பர ணென்று தொடங்கி] - சூழவுண்டான பரண்களின்மேலே நின்ற ஆண்பிள்ளைகளான ராஜாக்கள் முதுகிட்டுப் போம்படி மாடத்தின்மேலேயிருக்கிற கம்ஸனை விழவிட்டுத் தகர்த்த.

ப.—முதற்பாட்டில், குவலயாபீடம் முதலான அகில விரோதி நிரஸகனான சீர்கொள் சிற்றாயன் வர்த்திக்கிற திருச்செங்குன்றூர் நமக்கு நிர்ப்பயமான ஆஶ்ரய ணீயஸ்தலமென்கிறார்.

வார் - பாய்கிற, கடா - மதமாகிற, அருவி - அருவியையுடைய, ஆனை - ஆனை யாகிற, மா - பெரிய, மலையின் - மலையினுடைய, மருப்பு - கொம்புகளாகிற, இணை - சேர்ந்த, குவடு - ஶிகரங்களை, இறுத்து - முறித்து, உருட்டி - (அநாயாஸேந ஆனையை) உருட்டி, ஊர்கொள் - (ஆனை கொம்பு முறிந்திருக்கவும்) நடத்திக்கொண்டு வரவல்ல ஶிக்ஷையில், திண் - திண்மையையுடையனான, பாகன் - பாகனுடைய, உயிர் - ப்ராணனை, செகுத்து - அழித்து, (அநந்தரத்திலே), அரங்கில் - ரங்கமத்யகதரான, மல்லரை - (சாணூரமுஷ்டிகராகிற) மல்லரை, கொன்று - கொன்று, சூழ் - (ரங்கம்) சூழ்ந்த, பரண்மேல் - மச்சுக்களிலே (நிற்பாராய்), போர் - போரை, கடா - நடத்தக்கடவ, அரசர் - ராஜாக்கள், புறக்கிட - பிறகிட்டுப்போம்படியாக, மாடமீமிசை - உத்துங்கமான மாடத்தில் மேல்நிலத்திலேயிருக்கிற, கஞ்சனை - கம்ஸனை, தகர்த்த - (பசுவைக்குட முடைத்தாற்போலே தள்ளிக்குதித்து) உடைத்துப்பொகட்ட, சீர் - வீரஶ்ரீயை, கொள் - உடையனாய், சிறு - பாலனான, ஆயன் - க்ருஷ்ணனெழுந்தருளிநிற்கிற, திருச்செங் குன்றூரில் - திருச்செங்குன்றூரில், திருச்சிற்றாறு - திருச்சிற்றாறானது, எங்கள் - எங்க ளுக்கு, செல் - சென்று கிட்டுகைக்கு, சார்வு - ஆஶ்ரயணீயஸ்தலம்.

இ.—முதற்பாட்டில், குவலயாபீடம் முதலான ப்ரதிகூலரை நிரஸித்த சீர்கொள் சிற்றாயனுடைய திருச்செங்குன்றூரில் திருச்சிற்றாறு எங்களுக்கு நிர்ஹேயமான புகலென்கிறார்.

[வார்கடாவருவியானை மாமலையின்] - வாராநின்றுள்ள மதஜலமான அரு வியையுடைய ஆனையாகிற மாமலையினுடைய. கடா - மதம். மதகரமான த்ரவ்யங் களைத் தீற்றிப்பிச்சேற்றி, புகுகிறவாசலிலே நிறுத்தினான், ப்ரமாதத்தாலே பிறந்த தென்று மாதுலனாய் வெறுத்துவிடுவானாக நினைத்து. "புகுவாய்நின்ற போதகம்வீழப் பொருதான்" என்னக்கடவதிறே: "பொற்றையுற்ற முற்றல்யானை" என்றுதொடங்கி, "மருப்பொசித்த பாகன்" என்னக்கடவதிறே. [மருப்பிணைக் குவடிறுத்து] - மருப் பாகிற இணைக்குவடுகளை யிறுத்து: கொம்பாகிற சேர்ந்தஶிகரங்களை அநாயாஸேந முறித்து. [உருட்டி] - திருவடிகளாலே அநாயாஸேந தூக்கி. [ஊர்கொள் திண்பாக னுயிர்செகுத்து] - திண்ணியனாய் ஆனையைநடத்துகிற பாகனுடைய ப்ராணனைப்போக்கி. திண்மையாகிறது - ஆனை கொம்பைமுறிந்தாலும் உயிர்பெறுத்தி நடத்தவல்ல ஶிக்ஷா பலம். ஆனையின்கொம்பை முறித்தாலும் இவனையழியாவிடில் ப்ரயோஜநமில்லை. ஆனையின்கொம்பை முறிக்கைக்குள்ள அருமைபோருமாயிற்று, இவனுயிரைப் போக்கு

கைக்கு. [அரங்கின் மல்லரைக்கொன்று] - ஆனையினுடைய இரண்டுகொம்பையும் இருவருங்கொண்டு ரங்கமத்யத்திலே புக்கவளவிலே, யுத்தோந்முகராய்வந்த சாணூர முஷ்டிகரைக்கொன்று. ஆனைபோயிற்றாகிலும் மல்லருண்டென்று கம்ஸன் நினைத்திருந் தவர்களையும் அழியச்செய்தபடி. "நலம்யாம் ஸஹிதௌ ராமௌ:" என்று பெண்கள் முதலான பார்ஸ்வஸ்தரடங்கக் கூப்பிட்டு ஹீதரான ஸமயத்திலே, அவர்கள் ஐய மெல்லாம் போம்படி அநாயாஸேந மல்லரைக்கொன்று. [சூழ்பரண்மேல்] - சுற்றுமுண் டான மஞ்சஸ்தலத்தின்மேலே நின்ற. [போர்கடா அரசர்புறக்கிட] - கெடும்படையை வெற்றியுண்டாம்படி கடாவிப்போரும் அரசர். "ஸேநாநயவிஶாரத:" என்கிற படியே, தூசித்தலையிலே வெற்றியேயடல்லது மீளாதபடி படைபொருத்தி யுத்தத்தை நடத்தவல்ல ராஜாக்கள் ஸிம்ஹத்தைக்கண்ட நரிபோலே முதுகுகாட்டி ஓடும்படியாக. [மாடமீமிசை] - "துங்கமஞ்சஸ்திதஃ" என்கிறபடியே, உயர்ந்த மாடத்திலே யிருந்த. [கஞ்சனைத்தகர்த்த] - கம்ஸனைக் கீழே விழவிட்டு மேலே தான் குதித்து, அதிலேநக்கரைந்து நசிக்கும்படிபண்ணினான்; "கவஜ்ரபாதஸம்ஶ்லிஷ்டாக்ருஷ்ண ஸம்ஶ்ரஹஸ்ய" என்கிறபடியே. "கேஶேஷ்வாக்ருஷ்யவிகலத்கிரீடமவநீதலே ஸகம்ஸம்பாதயாமாஸதஸ்யோபரிபபாதச ॥" "ராஜத்ரோஹிகளைக் கொல்லும் போது ராஜசிஹ்நங்களை வாங்கிக்கொல்லுமாபோலே, தான்கொடுத்த முடியைவாங்கிக் காண் கொன்றது!" என்று பணிக்கும் அம்மங்கியம்மாள். [சீர்கொள் சிற்றாயன்] - பருவம் நிரம்பாதிருக்கச்செய்தே, வீரஶ்ரீயால் குறைவற்றிருக்கிறவன். [திருச்செங் குன்றூரில் திருச்சிற்றாறு] - புலிநின்ற தூறுபோலே ப்ரதிகூலர்க்கு அஞ்சவேண்டும் ஊர். [எங்கள்] - மஹாராஜர், பெரியாழ்வார், ஸ்ரீவிதுரர், தாம் இங்ஙனொத்த பரி வர்க்கு. [செல்சார்வே] - நிர்ப்பயஸ்தாநமென்று புகும் புகல்; கீழ் இவர்க்கு ஓடின பயம்நீங்கிற்று என்னுமது இயல் தழைப்பிலே தெரிந்திருக்கிறபடி கண்டதே.

ஈடு.—முதற்பாட்டு. குவலயாபீடம் முதலான ப்ரதிகூலரை நிரஸித்த சீர் கோள் சிற்றாயனுடைய திருச்செங்குன்றூரில் திருச்சிற்றாறு எங்களுக்கு நிர்ப்பயமான புகலென்கிறார்.

[வார்கடாவருவியானைமாமலையின்] - வாராநின்றுள்ள மதஜலமான அருவியை யுடைய ஆனையாகிற மாமலையினுடைய. கடா - மதம். மதகரமான த்ரவ்யங்களைத் தீற்றிப் பிச்சேற்றி, புகுகிறவாசலிலே நிறுத்தினான், ப்ரமாதத்தாலே வந்ததென்று மாதுல னாய்க் கண்ணநீர்விழவிட்டுத்தானிருப்பானாக. "புகுவாய்நின்றபோதகம் வீழப்பொரு தான்" என்னக்கடவதிறே. [மருப்பிணைக் குவடிறுத்து] - மருப்பாகிற இணைக்குவடுகளை இறுத்து: கொம்பாகிற ஶிகரங்களை அநாயாஸேந முறித்து. அம்மலையிலே இரண்டு ஶிக

முதற்பாட்டு.—வார்கடா இத்யாதி. வார்கடாவருவி தொடங்கி, "எங்கள்செல்சார்வு" என்னுமளவும் கடாக்ஷித்து அவதாரிகை-குவலயாபீடம் இத்யாதி.

வார்தல் - ஒழுகுதல். அருவிபோலே மதம் ப்ரவஹிக்கைக்கு ஹேதுவை அருளிச்செய் கிறார் - மதகரமான இத்யாதி. தீற்றி - புஜிப்பித்து. நிறுத்தினவனுக்குக் கருத்து அருளிச்செய் கிறார் - ப்ரமாதத்தாலே இத்யாதி. அப்படி வாசலிலே நிறுத்தினானேயென்ன - புகுவாய் இத் யாதி. புகுகிறவழியிலெ நின்ற குவலயாபீடமானது முறிந்துவிழும்படி பொருதவன் வர்த்திக்கிற தேசமென்றபடி. திருமொழி, ஆறும்பத்து, ஐந்தாந்திருமொழி, ஆறும்பாட்டு, "புகுவாய்" இத் யாதி. போதகம் - ஆனை. அது எப்படியிருக்கிறதென்ன - அம்மலையிலே இத்யாதி. இது

ரங்களை ஒடித்தாற்போலே. [உருட்டி] - கொம்புகளைப்பறித்தவாறே யுளுக்காந்தது: திருவடிகளாலே அநாயாஸேந தள்ளி. [ஊர்கோள்திண்பாகன்] - உயிருள்ள பதார்த்தத்தை நடத்துமாபோலே நடத்தவல்லனுயிற்று ஶிக்ஷாபலத்தாலே. திண்ணியனுய் ஆனையை நடத்துகிற பாகன். [உயிர்சேகுத்து] - அத்தைத் தள்ளினாலும் இவனுயிர் போகாதவன்று அத்தை முடித்ததாகாது காணும். [அரங்கின்மல்லரைக்கொன்று] - ஆனையின் கொம்புகளை இரண்டையும் இருவருங்கொண்டு ரங்கமத்யத்திலே புக்கவளவிலே, அச்செருக்குப் பொறுமையாலே, யுத்தோந்முகராய் வந்த சாணூரமுஷ்டிகர்களைக் கொன்று. ஆனை திர்யக்காகையாலே விரகறியாதே பட்டது; அது போயிற்றாகிலும் மல்லருண்டேன்று கம்ஸன் நினைத்திருந்தவர்களை அழியச்செய்தபடி. † "நவஸம்யுத்தமித்யாஹு:" (நவஸம்யுத்தமித்யாஹு:) என்று பெண்கள்முதலான பார்ஶ்வஸ்தரடங்கக் கூப்பிட்டு ஸீதரான ஸமயத்திலே, அவர்கள் ஹயமெல்லாம் போம்படி அநாயாஸேந மல்லரைக்கொன்று. [சூழ்பரண்மேல்]-சுற்றுமுண்டான மஞ்சத்தின்மேலே நின்ற. [போர்கடாவரசர்புறக்கிட]- கேடுபடையை வெற்றியுண்டாம்படி கடாவிப்போரு மரசர்: "ஸேநாநயவிஶாரதா:" (ஸேநாநயவிஶாரதா:) என்கிறபடியே தூசித்தலையிலே வெற்றியோடல்லது மீளாதபடி படைபொருத்தி யுத்தத்தை நடத்தவல்ல ராஜாக்கள் முதுகுகாட்டி ஓடும்படியாக. [மாடமீமிசை]-"துங்கமஞ்சவ்யவஸ்தித:" (துங்கமஞ்சவ்யவஸ்த்தித:) என்கிறபடியே, உயர்ந்த மாடத்திலே இருக்கிற. தனக்கு ஹயம்எவ்வளவுண்டு அவ்வளவும் உயர்த்தினானுயிற்று மாடத்தை. [கஞ்சனைத்தகர்த்த] - அவனிருக்கிற இடத்தளவும் எழப்பாய்ந்து, "கஞ்சன் குஞ்சிபிடித்தடித்தபிரான்" என்கிறபடியே - மயிரைப்பிடித்துக் கீழே விழவிட்டு மேலே பாய்ந்து பசளைக்கலம்போலே உடைத்தான்; "அவஜ்ஞயாஹதம் த்ருஷ்ட்வா க்ருஷ்ணேந மதுரேஶ்வரம்" (அவஜ்ஞயாஹதம்த்ருஷ்ட்வா க்ருஷ்ணேநமதுரேஶ்வரம்) என்கிற

"குவடு" என்றதுக்கு ஹாவம். "உருட்டி" என்றதுக்கு ஹாவம் - கொம்புகளை இத்யாதி. கொம்புகளைப்பறித்து உருட்டினால் இவன் நடத்தும்படி எப்படியென்ன - உயிருள்ள இத்யாதி. ஶப்தார்த்தம்-திண்ணியன் இத்யாதி. ஆனையைக்கொன்றால் போராதோ, பாகனையும் முடிக்கிறதென்? என்ன - அத்தைத்தள்ளினாலும் இத்யாதி. ஆனையையும் பாகனையும் நிரஸித்தவநந்தரம், மல்லர்களை நிரஸிக்கைக்கு நிதாநத்தை அருளிச்செய்கிறார் - ஆனையின் இத்யாதி. இம்மல்லநிரஸநத்தால் ஃபலித்த ப்ரயோஜநத்தை அருளிச்செய்கிறார் - ஆனைதிர்யக்கு இத்யாதி. கீழ்ச்சொன்ன ப்ரயோஜநத்தை ப்ரகாராந்தரேண அருளிச்செய்யாநின்றுகொண்டு, ஶப்தார்த்தமும் அருளிச்செய்கிறார் - நவஸம் இத்யாதி. கடா - கடாவுகிற. அவர்கள் யுத்தத்தை நடத்துகிற ஸாமர்த்யத்தின் உறைப்பை அருளிச்செய்கிறார் - கேடுபடையை இத்யாதி. விவரணம் - ஸேநாநய இத்யாதி. "ஜயிதாரோ ஹததரோஹ ஸேநாநயவிஶாரதா: । அப்ரத்ருஷ்யாஸ்ஸ்ஸம்க்ராமே ஸர்வவிஶாரதாஸ்ஸர்வே:" உத்யோகபர்வணி (௨௧) ராஜஶௌர்யகதநே. "மீமிசையானமாடம்" என்றதுக்கு ப்ரமாணங்காட்டாநின்றுகொண்டு, அதுக்கு அர்த்தமும் அருளிச்செய்கிறார்-துங்கமஞ்ச இத்யாதி. மாடத்தை உயர்த்துவானென்னென்ன-தனக்கு பயம் இத்யாதி. மஞ்சத்திலிருக்கிறவனை நிரஸித்த ப்ரகாரத்தை விசதமாக்காநின்றுகொண்டு, "தகர்த்த" என்றதுக்கு அர்த்தம் - அவனிருக்கிற இத்யாதி. பசளைக்கலம் - பச்சைப்பானை. அநாயாஸேந கொன்றதுக்கு ப்ரமாணம் - அவஜ்ஞயா இத்யாதி. மயிரைப்பிடித்துக் கீழேவிழவிட்டு மேலே பாய்ந்து கொன்ற

† இது, ராமாயணத்தில் யுத்தகாண்டத்திலே (103-5) தேவகந்தர்வாதியரின் வசனமாக வந்துள்ளதேயாகிலும், ஸ்ரீக்ருஷ்ணனுடைய ஸௌகுமார்யத்தையும் அசுரரின் கொடுமையையுங்கண்டு அஞ்சிய மதுராநகரத்துப் பெண்களின் வசனமாகவும் வருதற்குரியதாதலால் இங்கு எடுத்தாளப்பட்டதென்பர்.

படியே. “கேஶேஷ்வாக்ருஷ்ய விகளத்கிரீடமவநீதலே | ஸகம்ஸம்பாதயாமாஸ தஸ்யோபரிபபாத ச.” (கேஶேஷ்வாக்ருஷ்ய விகளத்கிரீடமவநீதலே | ஸகம்ஸம்பாதயாமாஸ தஸ்யோபரிபபாதச). “ராஜத்ரோஹிகளைக்கொல்லும்போது ராஜசிஹ்நங்களை வாங்கிக் கொல்லுமாபோலே, தான் கொடுத்த முடியை வாங்கிக்காண் கொன்றது” என்று அம்மங்கியம்மாள் பணிப்பர். [சீர்கொள்சிற்றாயன்] - பருவம் நிரம்பாதிருக்கச்செய்தே வீரஸ்ரீயால் குறைவற்றிருக்கிறவன். [திருச்செங்குன்றூரில் திருச்சிற்றாறு] - புலிநின்றதூறுபோலே ப்ரதிகூலர்தங்களுக்கு அஞ்சவேண்டும்ஊர். [எங்கள்]-மஹாராஜர், பெரியாழ்வார், ஸ்ரீவிதுரர், தாம், பிள்ளையுறங்காவில்லிதாஸர், இங்ஙனொத்த பரிவர். [செல்சார்வே] - நிர்ப்பயஸ்த்தாநமென்று புகும் புகல். கீழ், இவர்க்கு ஓடினஹயம்நீங்கிற்றென்னுமிடம் இயல்தழைப்பிலே தெளிந்திருக்கிறபடி கண்டதே! (க)

இரண்டாம் பாட்டு.

எங்கள்செல்சார்வு யாமுடையமுதம் இமையவரப்பனென்னப்பன் [ன்
பொங்குமூவுலகும்படைத்தளித்தழிக்கும் பொருந்து மூவுருவனெம்மருவ
செங்கயலுகளுந்தேம்பணைபுடைசூழ் திருச்செங்குன்றூர்த் திருச்சிற்றாறு
அங்கமர்கின்ற ஆதியானல்லால் யாவர்மற்றுஎன்அமர் துணையே?

*ஆ.—(எங்கள்செல்சார்வு) - நமக்கு ப்ராப்யமாய், நமக்கு போக்யமாய், * அயர்வறுமமரர்களதிபதியாய், எனக்கு ஸ்வாமியாய், நிகிலபுவநநிர்மாணத்ராணஸம்ஹரணலீலனாய், த்ரிமூர்த்திரூபனாய், ப்ரதிகூலஜநதுர்த்தர்ஶனாய், ஸர்வகாரணமாய், மதமுதிதமீநாகுல மஹாமிளிதஸலில ஶீதள ஶ்யாமள பஹுள பலாச ஸுரபி குஸும தருநிகர பரிவ்ருதமான திருச்செங்குன்றூரில் திருச்சிற்றாறு அங்கமர்கின்றவனல்லது மற்று எனக்கொரு துணையில்லையென்கிறார்.*

ஒ.—இரண்டாம்பாட்டில், ஜகத்ஸ்ருஷ்ட்யாதிஸமர்த்தனாய் திருச்செங்குன்றூரிலே நின்றருளின எம்பெருமானல்லது எனக்கு நல்ல துணையில்லை என்கிறார்.

துக்கு ப்ரமாணம் - கேஶேஷு *இத்யாதி.* கஞ்சன்துஞ்சி பிடித்தடித்தபிரான் *- கம்ஸனுடைய மயிரைப்பற்றி யடித்த உபகாரகன் இத்யர்த்தஃ.* திருமொழி, *மூன்றாம்பத்து, பத்தாந்திருமொழி, மூன்றாம்பாட்டு, “உம்பரும்” இத்யாதி.* விகளத்கிரீடம் *என்றதுக்கு ப்ரயோஜநத்தை ஆப்தஸம்வாதத்தாலே தர்ஶிப்பிக்கிறார் -* ராஜத்ரோஹிகளை *இத்யாதி. “சிற்றாயன் - சீர்கொள்” என்று அந்வயித்து பாவம் -* பருவம் *இத்யாதி. சூரன்வர்த்திக்கிறவூர் என்றதுக்கு பாவம் -* புலிநின்ற தூறு *இத்யாதி. “எங்கள்” என்ற பஹுவசநத்துக்கு பாவம் -* மஹாராஜர் *இத்யாதி.* இத்திருவாய்மொழியிலே *பயம் நிவ்ருத்தமானதுக்கு நியாமகமேதென்ன -* கீழ் இவர்க்கு *இத்யாதி.* “[illegible] க்ருதஃ கம்ஸநகம்ஸோ [illegible]” (உரு) இத்யாதி, “கேஶேஷ்வாக்ருஷ்ய விகளத்கிரீடமவநீதலே | ஸகம்ஸம்பாதயாமாஸ தஸ்யோபரிபபாத ச.” தஸ்யைவ, “[illegible]” இதி வசநமும் விரோதமும்.

(க)

[எங்களென்று தொடங்கி] - எங்கள்புகல் எங்களுடைய நிரதிஶயபோக்யம். அயர்வறு மமரர்கள் அதிபதியாய்வைத்து என்னை அடிமைகொண்டவன். [பொங்கென்று தொடங்கி] - தனக்கு விஹாரபூமியாய் ஸம்ருத்தமான இம்மூன்று லோகத்தையும் படைப்பது, ரக்ஷிப்பது, அழிப்பதான இச்செயல்களுக்குப் பொருந்தின மூன்றுவடிவையுமுடையான். [எம்மருவன்] - எனக்கு யாரகனுயுள்ளான். [செங்கயலுகளுமென்று மேலுக்கு] - இளமையாலே சிவந்திருக்கிற கயல்கள் களியாநின்றுள்ள தேனையுடைத்தான நீர்நிலம் சூழ்ந்த திருச்செங்குன்றூரில் திருச்சிற்றாற்றிலே நிரந்தரவாஸம் பண்ணுகிற ஸர்வகாரணமானவனல்லது வேறு எனக்குச்சேர்ந்த துணையில்லை.

ப.—அநந்தரம், அபோஷஜகத்விஷபமான ஸ்ருஷ்ட்யாதி வ்யாபார ஸமர்த்தனைத் திருச்செங்குன்றூரில் எழுந்தருளியிருக்கிறவனல்லது எனக்கு நல்துணையில்லை யென்கிறார்.

எங்கள் - எங்களுக்கு, செல் - சென்று ஆஶ்ரயிக்கப்படுவதான, சார்வு - புகலிடமாய், (புகலிடமாமளவன்றியே), யாம் - நாம், உடை - உடையோமான, அமுதம் - போக்யமுமாய், இமையவர் - (அஸ்கலிதஜ்ஞாநரான) ஸூரிகளுக்கு, அப்பன் - உபகாரகனாய், (அப்படியே), என் - எனக்கும், அப்பன் - உபகாரகனாய், பொங்கு - ஸம்ருத்தமான, மூவுலகும் - லோகத்ரயத்தையும், படைத்து - ஸ்ருஷ்டித்து, அளித்து - ரக்ஷித்து, அழிக்கும் - ஸம்ஹரிப்பானாய், பொருந்து - (இதுக்குப்) பொருந்தின, மூவுருவன் - மூர்த்தித்ரயத்தையுமுடையனாய், (இவ்வாகாரங்கள் எனக்கு ப்ரகாஶிக்கும்படி), எம் - எனக்கு, அருவன் - அந்தராத்மாவாய், (அப்படியே முகந்தோன்றாமை நிற்கையன்றியே, கண்கண்டு அநுபவிக்கும்படி), செம் - (இளமையாலே) சிவந்த, கயல் - கயல்கள், உகளும் - உகளிக்கும்படி, தேம் - தேன் விஞ்சின, பணை - மருதநிலத்தாலே, புடைசூழ் - சூழப்பட்ட, திருச்செங்குன்றூர் - திருச்செங்குன்றூரில், திருச்சிற்றாறு - திருச்சிற்றாறுகிற, அங்கு - விலக்ஷணதேசத்திலே, அமர்கின்ற - பொருந்தி வர்த்திக்கிற, ஆதியான் - ஸகல ஸத்தாஹேதுபூதனானவன், அல்லால் - அல்லது, மற்று - வேறு, என் - எனக்கு, அமர் - அநுரூபமான, துணை - ஸஹாயம், யாவர் - ஆர் தான்? பணை - நீர்நிலமுமாம்.

இ.—இரண்டாம்பாட்டில், ஜகத்ஸ்ருஷ்ட்யாதிஸமர்த்தனைத் திருச்செங்குன்றூரிலேநின்றருளினவனல்லது எனக்கு நல்லதுணையில்லை என்கிறார்.

[எங்கள் செல்சார்வு] - ஆஶ்ரிதர்க்கு நிரபாயமானபுகல். * கேசவன்தமர்க்குப்பின்பு இவர் தனியரல்லரே. "குன்றமெடுத்தபிரா னடியாரொடு மொன்றிநின்ற சடகோபனுரை" என்று அவர்களோடுஒன்றிநின்றுசொல்லுகிற சொல்லிறே. [யாமுடையமுதம்] - புகலேயாய் போக்யவஸ்து வேறு தேடவேண்டாதிருக்கை. தேவர்களுடைய அம்ருதத்தை வ்யாவர்த்திக்கிறது. [இமையவரப்பன் என்னப்பன்] - நித்யஸூரிகளை அடிமைகொண்டாற்போலே என்னை அடிமைகொண்டவன்: குறைவற்றார்க்கு ஸத்தாஹேதுவாய், குறைவுக்கெல்லையான எனக்கும் ஸத்தாஹேதுவானவன். [பொங்கு இத்யாதி] - விஸ்த்ருதமாய் மூன்றுவகைப்பட்ட லோகங்களையுண்டாக்கி நோக்கியழிக்குமவன். [பொருந்து மூவுருவன்] - இச்செயல்களுக்குப் பொருந்தின மூன்றுவடிவையுடையவன். ப்ரஹ்மாந்தர்யாமியாய்நின்று ஸ்ருஷ்டிக்கும்: ருத்ராந்தர்யாமியாய்நின்று ஸம்ஹரிக்கும்: ஸ்வேநரூபேணநின்று பாலநம்பண்ணும். பொருந்துகையாவது -

ரஜஸ்தமஃ ப்ரசுரமான ப்ரஹ்மாதிகளோடு, திவ்யவிக்ரஹத்தோடு வாசியற்றிருக்கை. [எம்மருவன்] - தான் ஸகலத்துக்கும் உத்பத்த்யாதி ஹேதுவாயிருப்பதொன்று இல்லையென்னுமிடத்தைக்காட்டி எனக்கு யாரகனுனவன். "உத்பத்திஸ்திதிநாஸாநாமேஹத் ஹேதுர்ஜீவஸ்ரஷ்" ஸ்வேதரஸகலமும் தன்நினைவாலேயாய்த் தான் ஒருவர்நினைவின்படியன்றிக்கேயிருக்கிறபடியைக்காட்டி என்னையரிப்பித்தவன். [செங்கயலுகளும்]-யௌவநத்தாலே சிவந்த கயல்கள் களித்துவர்த்திக்கிற தேஸம். பரிவரில்லையென்று முன்பே க்லேசித்து, பின்பு * வார்கடா வருவியாய் ப்ரீதராகவேண்டாதே, ஸகலபதார்த்தங்களும் களித்துவர்த்திக்கிற தேஸமென்கை. [தேம்பணை புடைசூழ்] - தேனையுடைத்தான நீர்நிலம் சூழப்பட்ட என்னுதல், மருதநிலத்தாலே சூழப்பட்ட வூரென்னுதல். [அங்கமர்கின்ற] - அவதாரங்கள் போலன்றிக்கே நித்யவாஸமபண்ணுகிற வூர். [ஆதியான்] - ஸர்வகாரணபூதனனவன் என்னுதல், எனக்கு ஸத்தாஹேதுவானவனென்னுதல். ப்ரஜைக்கு பரத்யாஸந்நையாய் வர்த்திக்குந் தாயைப்போலே, என்ஸத்தையை நோக்கிக் கொண்டிருக்கிறவன். [அல்லால் யாவர் மற்று என் அமர்துணையே] — இவனையொழிய வேறு எனக்குச் சேர்ந்த துணையில்லை. அல்லாதார் கழுத்துக்கட்டியாதல்; துணையென்று பேராய், ஆபத்திலே கூட விழுதல் செய்யுமித்தனை யென்கை.

ஈடு.—இரண்டாம்பாட்டு. ஜகத்ஸ்ருஷ்ட்யாதி ஸமர்த்தனுய்த் திருச்செங்குன்றூரிலே நின்றருளினவனல்லது எனக்கு நல்துணையில்லையென்கிறார்.

[எங்கள் செல்சார்வு] - அநுகூலராயிருப்பார்க்கெல்லாம் அஞ்சவேண்டாத புகல். [யாமுடை யமுதம்] - புகலேயாய், போக்யவஸ்து வேறே தேடவேண்டாதேயிருக்கை. "எங்கள், யாம்" என்னப்பலருண்டே; *கேசவன்தமர்க்குப்பின்பு தனியரல்லரே. "குன்றமெடுத்தபிரானடியாரோடு ஒன்றிநின்ற சடகோபன்" என்று அவர்களோடு ஒன்றிநின்று சொல்லுகிற சொல்லிறே. [இமையவரப்பனென்னப்பன்] - நித்யஸூரிகளை அடிமைகொண்டாற்போலே என்னை அடிமைகொண்டவன்: குறைவற்றார்க்கும் ஸத்தாஹேதுவாய், குறைவுக்கெல்லையான எனக்கும் ஸத்தாஹேதுவானவன். [பொங்கு இத்யாதி] - விஸ்த்ருதமான த்ரைலோக்யத்தையும் உண்டாக்கி ரக்ஷித்து, அழிக்குமவன். [பொருந்துமூவுருவன்] - இச்செயல்களுக்குப் பொருந்தின மூன்று வடிவை உடையவன்: ப்ரஹ்மாந்தர்யாமியாய் ஸ்ருஷ்டிக்கும்: ருத்ராந்தர்யாமியாய் ஸம்

இரண்டாம்பாட்டு.—எங்கள் இத்யாதி. "படைத்தளித்தழிக்கும் - திருச்செங்குன்றூரில்" என்றுதொடங்கி, "அல்லால்யாவர்மற்றென்னமர்துணையே" என்னுமளவும் கடாக்ஷித்து அவதாரிகை - ஜகத்ஸ்ருஷ்ட்யாதி இத்யாதி.

"எங்கள், யாம்" என்று - மங்களாசாஸநபரரைக் கூட்டி அருளிச்செய்கிறார் - அநுகூலராய் இத்யாதி. புகலேயாய் இத்யாதி †வாக்யத்வயத்துக்கு - உபாயாந்தரங்கள்போலன்றிக்கே, ப்ராப்யப்ராபகங்களிரண்டும் தானேயாயிருக்கை என்று கருத்து. "எங்கள், யாம்" என்ற பஹுவசநத்துக்கு - ஸ்வஸம்பந்திகளையும் கூட்டி அருளிச்செய்கிறாரென்று தாத்பர்யாந்தரம் - எங்கள் யாம் இத்யாதி வாக்யத்வயம்: ஏகார்த்தமாதல். இப்போது, "எங்கள்" என்கைக்கு அவர்கள் ஸந்நிஹிதரோவென்ன - குன்றமெடுத்த இத்யாதி. நித்யஸூரிகளுக்கு அநந்தரம் தம்மைச் சொன்னதுக்கு பாவம் - நித்யஸூரிகளை இத்யாதி. விவரணம் - குறைவற்றார்க்கும் இத்யாதி. "பொருந்து" என்றதுக்கு - செயல்களோடே சேர்ந்த விக்ரஹமென்று அர்த்தம் - இச்செயல்களுக்கு இத்யாதி. மூன்றுவடிவையும் இவன் உடையனுகையாவதேதென்ன - ப்ரஹ்மாந்தர்யாமி இத்யாதி. கீழே

---

† இருபத்துநாலாயிரப்படியிற்போல "தேவர்களுடைய அம்ருதத்தை வ்யாவர்த்திக்கிறது" என்று வாக்யமும் ஈட்டிலிருந்தால்தான் இங்கு வாக்யத்வயத்துக்கு என்பது சேரும்.

ஹரிக்கும்: ஸ்வேநரூபனே நின்று பாலநத்தைப் பண்ணும். பொருந்துகையாவது - ரஜஸ் தமஃ ப்ரசுரரான ப்ரஹ்மாதிகளோடு ‡ திவ்யவிக்ரஹத்தோடு வாசியற்றிருக்கை. [எம்மருவன்] - "அல்லாதார்காரியம் நம் புத்த்யதீநமாயிருக்குமல்லது நங்கார்யம் அல்லாதார் நினைவின்படியல்லகாணு மிருப்பது" என்று எனக்குஅறிவித்து, என் ஸம்ஸயநிவ்ருத்தியைப்பண்ணி, எனக்கு தாரகனானவன். "[illegible]" (உத்பத்திஸ்த்திதிநாசாநாமஹேதும்ஹேதுமீச்வரம்) - ஸ்வேதர ஸகலங்களும் தன்னினைவிலேயாய், தான் ஒருவன் நினைவின்படி யன்றிக்கே இருக்கிறபடியைக் காட்டி என்னை தரிப்பித்தவன். [செங்கயலுகளும்] - யௌவநத்தாலே சிவந்தகயல்கள் களித்து வர்த்திக்கும் தேசம். பரிவரில்லையென்று முன்பே க்லேசித்து, பின்பு * வார்கடாவருவியாய் ப்ரீதராகவேண்டாதே, ஸகல பதார்த்தங்களும் களித்தேவர்த்திககும் தேசமென்கை. [தேம்பணைபுடைசூழ்] - தேனையுடைத்தான நீர்நிலங்கள் சூழ்ந்த என்னுதல், மருதநிலத்தாலே சூழப்பட்ட ஊரென்னுதல். [அங்கமர்கின்ற] - அவதாரங்கள்போலே தீர்த்தம் ப்ரஸாதியாதே நித்யவாஸம்பண்ணுகிற ஊர். [ஆதியான்] - ஸர்வகாரணமானவ னென்னுதல், எனக்கு ஸத்தாஹேதுவானவ னென்னுதல்: ப்ரஜைக்கு ப்ரத்யாஸந்நமாக வர்த்திக்கும் தாயைப்போலே, என் ஸத்தையை நோக்கிக்கொண்டிருக்கிறவன். [அல்லால் யாவர்மற்றுஎன்னமர்துணையே] - இவனையொழிய எனக்குச் சேர்ந்த துணையில்லை. அல்லாதார் கழுத்துக் கட்டியாதல், துணையென்று பேராய் ஆபத்திலேகூட வழுதல் செய்யுமித்தனை. (உ)

மூன்றாம் பாட்டு.

என்னமர்பெருமான்இமையவர்பெருமான்இருநிலமிடந்தவெம்பெருமான்
முன்னைவல்வினைகள்முழுதுடன்மாள என்னையாள்கின்றவெம்பெருமான்
தென்திசைக்கணிகொள்திருச்செங்குன்றூரில்திருச்சிற்றாற்றங்கரைமீபால்
நின்றவெம்பெருமான்அடியல்லால்சரணநினைப்பிலும் பிறிதில்லையெனக்கே.

ஆ.—(என்னமர்) - பரமஸாம்யஸம்ஶ்லேஷைகபோகனுயிருந்துவைத்து, மத்ஸம்ஶ்லேஷைகபோகனாய், மத்ஸ்வாமியாய், மஹார்ணவமக்நையான பூமியை எடுத்

---

*"செயல்களுக்குப் பொருந்தின" என்று அருளிச்செய்து திவ்யமங்களவிக்ரஹம்போலே அப்ருதக்ஸித்தமாகப் பொருந்தின மூவுருவன் என்று அர்த்தாந்தரம் - பொருந்துகையாவது இத்யாதி. "மூவுருவன்" என்ற அநந்தரம், "எம்மருவன்" என்று - தமக்கு தாரகனென்றதுக்கு பாவம் - அல்லாதார் இத்யாதி. எம்மருவன் - எனக்கு அந்தராத்மாவானவ னென்றபடி. எல்லாவற்றுக்கும் தான் காரணமாய், தனக்கு ஒரு காரணமின்றிக்கே இருக்குமோவென்னில் - உத்பவ இத்யாதி. "[illegible]"(ரு-சு) இதி, [illegible]. இதுக்கு அர்த்தம் - ஸ்வேதர இத்யாதி. இத்தால் பாவம் - பரிவரில்லை இத்யாதி.*மருதநிலம் - நதீதீரம். "ஆதியான்" என்றதுக்கு முந்தின அர்த்தம் - "பொங்குமூவுலகும் படைத்த" இத்யாதியின் அநுவாதம்; த்விதீயார்த்தம் - "எம்மருவன்" என்றதின் அநுவாதம். த்ருஷ்டாந்தபூர்வகமாக த்விதீயார்த்தவிவரணம் - ப்ரஜைக்கு இத்யாதி. 'ஆதியானல்லால் - என்னமர்துணை - மற்று - யாவர்' என்றந்வயம். வேறில்லையோ? என்ன,—அல்லாதார் இத்யாதி. (உ)*

---

* மருதநிலம் - வயலும், வயல்சார்ந்த இடமும் என்பர், தமிழர்.

‡ திவ்யமங்கள விக்ரஹத்தோடு என்று பாடமிருக்கலாமென்று தோன்றுகின்றது.

தருளினாற்போலே ஸ்வவிரஹஜநித நிரவதிகவ்யஸநமஹார்ணவநிமக்நனான என்னையெடுத்தருளி, ஸ்வவிஷய கைங்கர்யைகபோகப்ரதனாய், தக்ஷிணதிக்பூஷணமான திருச்செங்குன்றூரில் திருச்சிற்றாற்றங்கரைமீபால்நின்ற எம்பெருமானுடையதிருவடிகளல்லது மற்று நினைப்பிலும் எனக்கொரு ப்ராப்யமில்லையென்கிறார்.

ஒ.—மூன்றாம்பாட்டில், ஸ்ரீவராஹமாய் ப்ரளயங்கொண்ட ஜகத்தையெடுத்தருளித் திருச்செங்குன்றூரிலே நின்றருளின எம்பெருமானுடைய திருவடிகளல்லது வேறு ஶரணம் எனக்கு மநோரதத்திலுமில்லை என்கிறார்.

[என்னென்று தொடங்கி] - அயர்வறுமமரர்கள் அதிபதியாய் எனக்கு அமர்ந்த ஸ்வாமியாயுள்ளான். நித்யஸூரிகள் மங்களாஶாஸநத்தைக்கொண்டு எப்போதும் ஸேவிக்கிறபடியைக் காட்டித் தம்முடைய ஶயத்தைக கெடுத்தானென்று கருத்து. [இருநிலமிடந்த எம்பெருமான்] - ப்ரளயங்கொண்ட மஹாப்ருதிவியை யெல்லாம் எடுத்த தன்னுடைய ஸாமர்த்யத்தைக்காட்டி என்னையடிமைகொண்டவன். [முன்னையென்று தொடங்கி] - தன்னுடைய ஶௌர்யவீர்யாதிகளைக்காட்டிக் கீழில்திருவாய்மொழியிற் சொன்ன ஸம்ஶயமெல்லாம்போம்படி என்னையாளுகிறவன். ப்ராக்தநமான ப்ரபல கர்மங்களாகவுமாம். [தென்திசைக்கு அணியென்று தொடங்கி மேலுக்கு] - தெற்குத்திக்குக்கு ஆபரணமான திருச்செங்குன்றூரில் திருச்சிற்றாற்றங்கரையில் மேல் பார்ஶ்வத்தில்.

ப.—அநந்தரம், வராஹரூபியாய் ப்ரளயாபத்திலே பூமியை இடந்தெடுத்து ரக்ஷித்தவன் திருவடிகளொழிய வேறு உபாயமில்லையென்கிறார்.

இமையவர் - நித்யஸூரிகளுக்கு, பெருமான் - நிர்வாஹகனானாற்போலே, என் - எனக்கு, அமர் பெருமான் - அநுரூபநாயகனாய், இரு நிலம் - மஹாப்ருதிவியை, இடந்த - (ப்ரளயாபத்தில் ஈடுபடாமல்) இடந்தெடுதத, எம்பெருமான் - என்னுடைய நாதனாய், (அப்படியே), முன்னை - அநாதியாய், வல் - ப்ரபலமான, வினைகள் - பாபங்கள், முழுது - எல்லாம், உடன் - ஏகோத்யோகத்திலே, மாள - நசிக்கும்படி, என்னை - என்னை, ஆள்கின்ற - அடிமைகொண்டருளுகிற, எம்பெருமான் - பெருமையையுடையனாய், தென் திசைக்கு - தெற்குத்திக்குக்கு, அணி - அலங்காரமாக, கொள் - கொள்ளப்படுவதான, திருச்செங்குன்றூரில் - திருச்செங்குன்றூரில், திருச்சிற்றாற்றங்கரை - திருச்சிற்றாற்றங்கரையின், மீபால் - மேல்பக்கத்திலே, நின்ற - நின்றநிலையழகிலே, எம்பெருமான் - என்னை அடிமையாக்கினவனுடைய, அடி - திருவடிகளை, அல்லால் - ஒழிய, எனக்கு-என்னுடைய, நினைப்பிலும் - மநோரதஶையிலும், பிறிது - வேறொரு, சரணம் - புகல், இல்லை - இல்லை.

இ.—மூன்றாம்பாட்டில், ஸ்ரீவராஹமாய் ப்ரளயங்கொண்ட பூமியை எடுத்தருளித் திருச்செங்குன்றூரிலே நின்றருளினவனுடைய திருவடிகளல்லது வேறு மநோரதத்திலும் எனக்கு ஶரணமில்லையென்கிறார்.

[என்னமர்பெருமான் இமையவர்பெருமான்] - * அயர்வறுமமரர்கள் அதிபதியாய், எனக்கு அமர்ந்தஸ்வாமியாயுள்ளான். நித்யஸூரிகள் இடைவிடாமல் மங்களாஶாஸநம் பண்ணுகிறபடியைக்காட்டி என் ஶயத்தைத் தீர்த்தானென்கை. [இருநிலமிடந்த எம்பெருமான்] - ப்ரளயங்கொண்ட மஹாப்ருதிவியையெடுத்த தன்ஸாமர்த்யத்தைக்காட்டி என்னை யடிமைகொண்டவன். ப்ரளயங்கொண்ட பூமியோபாதி ஸர்

வரும் தனக்குக் குழைசரக்காயிருக்கிற படியைக் காட்டித் தம்ஸபத்தைக் கெடுத்தானென்கை. [முன்னையித்யாதி]-ப்ராக்தநமான ப்ரபல கர்மங்கள் ஸாகல்யேந போம்படி என்னை அடிமைகொண்டவன். ஸௌர்யவீர்யாதிகளைக் காட்டிக் கீழ் எனக்குப்பிறந்த ஸயமெல்லாம் போம்படி யென்னையடிமைகொண்டவ னென்கை. வல்வினை யென்கிறது - ஸக்திபாரவஸ்யத்தையாயிற்று. இதிறே "உஸபவிஸூதி நாதனுக்கு என்வருகிறதோ?" என்னும் ஸயத்தைப் பிறப்பித்தது. ஸயஹேதுவிறே பாபமாகிறது. ப்ராக்தந ப்ரபலகர்மங்களென்றுமாம். [தென்திசைக்கு அணியித்யாதி] - ஆர்யர் இகழ்ந்தஸூமியான தெற்குத் திக்குக்கு ஆஸரணமான ஊர். [மீபால்நின்ற எம்பெருமான்]-மேலைத்திக்கில் நிலையும்உத்கர்ஷஹேதுவாய்,இவர்க்கு ஸபநிவ்ருத்திக்குஉடலாயிருக்கிறது.ஸிமபேக்ஷயாஇறே பரத்வமிருப்பது. [அடியித்யாதி] - அவன்திருவடிகளொழிய மற்று ரக்ஷகமாயிருப்பதொருவஸ்து மநோரயூத்திலு மில்லை.

கொள்ளுகிறவனுடைய இரப்பைத் தானுடையனாய்க் கொடுக்கை; "ஸஸர்வாநர்த்திநோ த்ருஷ்ட்வா ஸமேத்ய ப்ரதிநந்த்ய ச" (ஸஸர்வாநர்த்திநோத்ருஷ்ட்வா ஸமேத்யப்ரதிநந்த்யச) என்கிறபடியே. [அம்மானை] - ஸர்வேஶ்வரனை: பூர்ணனையென்னுதல், ப்ராப்தனையென்னுதல். [அமர்ந்ததண்பழனம் இத்யாதி]-சேர்ந்து குளிர்ந்த நீர்நிலங்களையுடைய திருச்செங்குன்றூரில் திருச்சிற்றாற்றங்கரையிலே நின்றருளினவனை. [அமர்ந்தசீர்] - சேர்ந்தகுணங்களையுடைய மூவாயிரம் ப்ராஹ்மணர். ஶேஷித்வத்துக்கு அவன் தக்கிருக்குமாபோலே, சொன்னசொன்ன ஏற்றமெல்லாம் தகும்படி இருப்பர்கள். [வேதியர்கள் தம்பதி] - மூவாயிரவரளவன்றிக்கே, ப்ராஹ்மணஜாதிக்காக வாஸஸ்த்தாநம். [அவனிதேவர்வாழ்வு] - பூஸுரரான வைஷ்ணவர்களுக்கு ப்ராப்யபூமி. [அமர்ந்தமாயோனை] - அத்தேசத்திலே நித்யவாஸம்பண்ணுகிற ஆஶ்சர்யபூதனான ஸர்வேஶ்வரனை. [முக்கணம்மானை நான்முகனையமர்ந்தேனே] - ப்ரஹ்மாதிகளுடைய ஸத்தாதிகளுக்கு நிர்வாஹகனானவனை. ப்ரஹ்மருத்ரர்களைப் பலகால் சொல்லுகிறது - இவனுடைய நிர்வாஹகத்வம் தோற்றுகைக்காகவும், நிர்வாஹ்யங்களிலே யொன்றால் நலிவுண்டாகை கூடாதென்கைக்கும். அன்றிக்கே, "அமர்ந்தமாயோன்" என்றுவைத்து, இவர்களைச் சொல்லித்தலைக்கட்டுகையாலே - ஸமாநாதிக்ருதஶப்தங்கள் விஶேஷ்யத்திலே பர்யவஸிக்கக் கடவதாகையாலே, ப்ரகாரியானவனை. [அமர்ந்தேனே] - கிட்டப்பெற்றேனென்கிறார். "பூதாநி விஷ்ணு:" (பூதாநிவிஷ்ணு:) இத்யாதிவத். (க௰)

க்ஷிதங்களை இத்யாதி வாக்யத்வயத்தாலே. அர்த்திகள்ஸ்வபாவம் இவனுக்குண்டென்னுமதுக்கு ப்ரமாணம் - ஸஸர்வாந் இத்யாதி. "[illegible] ॥ ஸஸர்வாநர்த்திநோ த்ருஷ்ட்வா ஸமேத்ய ப்ரதிநந்த்ய ச" இத்யயோத்யாகாண்டே. ஸமேத்ய-எதிர்கொண்டு, கீழ் தன்பேறாகக் கொடுக்குமென்றும், தான் இரந்துகொடுக்குமென்றும் சொன்ன அர்த்தத்வயத்துக்கும் ஹேது இப்பதமென்னுமிடம்தோன்ற, "அம்மானை" என்றதுக்கும் அர்த்தத்வயமருளிச்செய்கிறார் - பூர்ணனை இத்யாதி வாக்யத்வயத்தாலே. அதாவது - அர்த்தியினுடைய அர்த்தித்வம் இவனுக்குண்டாவது நிறையக்கொடுக்கக் கைம்முதலுண்டானாலிறே; ஆகையாலே, பூர்த்தி அர்த்தித்வத்துக்கு ஹேது. இழவுபேறு தன்னதாம்படியான ஸம்பந்தம் - தன்பேறாகக் கொடுக்கைக்கு ஹேது. "அமர்ந்தநாதனை, அமர்ந்தசீர் மூவாயிரவர்" என்று ஶப்தமொத்திருக்கிறதுக்கு பாவம் - ஶேஷித்வத்துக்கு இத்யாதி. "நிர்வாஹ்யநிர்வாஹகபாவேந ஸாமாநாதிகரண்யம்" என்று விவக்ஷித்து அருளிச்செய்கிறார் - ப்ரஹ்மாதிகளுடைய இத்யாதி. ப்ரஹ்மாதிகளைப் பலகால் சொல்லுகிறதுக்கு இரண்டுப்ரயோஜநம் - ப்ரஹ்மருத்ரர்களை இத்யாதி. "ப்ரகாரப்ரகாரிபாவநிபந்தநம் ஸாமாநாதிகரண்யம்" என்று விவக்ஷித்து அர்த்தாந்தரம் - அன்றிக்கே இத்யாதி. அப்படி ஸர்வப்ரகாரியோவென்ன, ப்ரமாணம்-பூதாநி இத்யாதி. "பூதாநி விஷ்ணுர் புவநாநி விஷ்ணுர் வநாநி விஷ்ணுர் கிரயோ திஶஶ்ச ॥ நத்ய: ஸமுத்ராஶ்ச ஸ ஏவ ஸர்வம் யதஸ்தி யந்நாஸ்தி ச விப்ரவர்ய" இதி ஸ்ரீவிஷ்ணுபுராணே [2-12-39]. அமர்ந்தநாதனாய், அவரவராகி அவர்க்கருளருளுமம்மானாய்-முக்கணம்மானாய், நான்முகனாய் - அமர்ந்தசீர்,-என்று தொடங்கி, வாழ்வு - அமர்ந்ததண்பழனத்திருச்செங்குன்றூரில் திருச்சிற்றாற்றங்கரையானை - அமர்ந்தமாயோனை - அமர்ந்தேனே இத்யந்வய:. (க௰)

பதினோராம் பாட்டு.

தேனைநன்பாலைக்கன்னலையமுதைத் திருந்துலகுண்டவம்மானை
வானநான்முகனைமலர்ந்ததண்கொப்பூழ் மலர்மிசைப்படைத்தமாயோனை
கோனைவண்குருகூர்வண்சடகோபன் சொன்னவாயிரத்துளிப்பத்தும்
வானின்மீதேற்றியருள்செய்துமுடிக்கும் பிறவிமாமாயக்கூத்தினையே.

ஆ.—(தேனை.) ஸர்வகந்த: ஸர்வரஸ: வண்ட அம்ருதவத் போக்யபூதனாய், நிகீர்ணஸகலலோகனாய், ஸ்வநாபீகமலோத்பூத சதுர்முகனாய், ஆஸ்சர்யபூதனாய், ஸர்வஸ்வாமியாயிருந்த திருச்செங்குன்றூரில் திருச்சிற்றாற்றங்கரையானை, வண்குருகூர்ச்சடகோபன் சொல்லாயிரத்துள் இப்பத்தும், அருள்செய்து வானின்மீதேற்றி, பின்னை ஸம்ஸாரஸம்பந்தத்தைப் போக்குமென்கிறார்.

ஒ.—நிகமத்தில், இத்திருவாய்மொழியிற் சொன்ன ஸாமாநாதிகரண்யத்துக்கு நிதானமான ஸ்ருஷ்ட்யாத்யுபகரணங்களைச் சொல்லாநின்றுகொண்டு, இது கற்றார்க்குஉள்ள பலத்தை யருளிச்செய்கிறார்.

[தேனையென்று தொடங்கி] - நிரதிசயபோக்யனா யிருந்துவைத்து கட்டளைப்பட்டிருந்துள்ள இஜ்ஜகத்தை ப்ரளயத்திலேயழியாதபடி திருவயிற்றிலேவைத்துப் பரிஹரித்த பெரியோனை வானிலேயிருக்கிற சதுர்முகனை ஸ்ருஷ்ட்யநுகுணமான செவ்வியையுடைய திருநாபீகமலத்திலே படைத்த ஆஸ்சர்யபூதனுமான ஸர்வேஸ்வரனை. [வண்குருகூர் என்று மேலுக்கு] - ஆழ்வார் அருளிச்செய்த ஆயிரந்திருவாய்மொழியிலும் இத்திருவாய்மொழியானது முதலில் திருநாட்டில் கொடுபோய் பின்னை ஸம்ஸாரமஹாநாடகத்தை அறுக்கும்.

ப.—அநந்தரம், இத்திருவாய்மொழி கற்றார்க்கு பலமாக, ஜந்மநிவ்ருத்தி விசிஷ்டமான பரமபதப்ராப்தியை அருளிச்செய்கிறார்.

தேனை - (ஸர்வரஸ ஸமவாயரூபமான) தேனாய், நன் - ஸ்வாபாவிகரஸமான, பாலை - பாலாய், கன்னலை - (பர்வந்தோறும் ரஸிக்கும்) கரும்புமாய், அமுதை - (முடிந்த உயிரைப் பிழைப்பிக்கும்) அம்ருதமாய், (இப்படி ஸர்வவித போக்யபூதனாய்), திருந்து உலகு - விலக்ஷணமஹாலோகம், உண்ட - (ப்ரளயத்திலே அழியாதபடி) அமுது செய்துநோக்கின், அம்மானை - ஸ்வாமியாய், வானம் - ஊர்த்வலோக வாஸியான, நான்முகனை - சதுர்முகனை, மலர்ந்த - விகஸிதமாய், தண் - செவ்வியையுடைத்தான, கொப்பூழ்மலர்மிசை - திருநாபீகமலத்திலே, படைத்த - ஸ்ருஷ்டித்த, மாயோனை - ஆஸ்சர்யபூதனாய், கோனை - (அத்தாலே) நிருபாதிகஸ்வாமியானவனை, வண் - நிரதிசயஸம்பத்தையுடைய, குருகூர் - திருநகரிக்கு நிர்வாஹகராய், வண் - பரமோதாரரான, சடகோபன் - ஆழ்வார், சொன்ன - அருளிச்செய்த, ஆயிரத்துள் - ஆயிரத்துள், இப்பத்தும் - இப்பத்தும், வானின்மீது - பரமபதத்திலே, ஏற்றி, - ஏறவிட்டு, அருள் - (கைங்கர்ய ஸாம்ராஜ்யமாகிற) பகவதங்கீகாரத்தை, செய்து - பண்ணி, பிறவி - ஸம்ஸாரஸம்பந்தரூப பர்யந்தமாயுள்ள, மாமாயக்கூத்தினை - ஆஸ்சர்யநாடகத்தை, முடிக்கும் - முடித்துவிடும். இது - எழுசீராசிரியவிருத்தம்.

இ.—நிகமத்தில், இத்திருவாய்மொழியை யப்யஸிப்பார்க்கு இதுதானே முந்துற பரமபதத்தேறக் கொடுபோய்ப் பின்னை ஸம்ஸாரமாகிற மஹாநாடகத்தை யறுக்கும் என்கிறார்.

[தேனேயித்யாதி] - இவருடைய பயஶங்காஹேதுக்கள் சொல்லுகிறது. அவனுடைய ரஸ்யதையிறே இவரையஞ்சப் பண்ணுகிறது. எனக்கு ஸர்வவிஷயபோக்யனானவனை. "ஸர்வரஸ:" என்னக்கடவதிறே. [திருந்துலகுண்ட இத்யாதி] - மேல் பயநிவ்ருத்திஹேதுக்களைச் சொல்லுகிறது. கட்டளைப்பட்ட ஜகத்தை ப்ரளயத்தில் அழியாதபடி திருவயிற்றிலேவைத்துப் பரிஹரித்த பெரியோனை. வானிலேயிருக்கிற சதுர்முகனை, ஸ்ருஷ்ட்யநுகுணமான செவ்வியையுடைய திருநாபீகமலத்திலே ஸ்ருஷ்டித்த ஆஸ்சர்ய பூதனை. [கோனை] - நிருபாதிக ஶேஷியை. கீழ் ப்ரஹ்மாதிகளுக்குச்சொன்ன ஐக்யம் ஸ்வரூபேணவன்று, கார்யகாரண பாவத்தாலுண்டான ஸம்பந்தம் சொல்லுகிறதென்னுமிடம் இங்கே ஸ்பஷ்டம். ஆபத்ஸகனாய், அழிந்தவற்றை யுண்டாக்குமவனாய், ப்ராப்தனாயிருக்குமவனென்கை. [வண்குருகூர் இத்யாதி] - அராஜகமானால் ராஜபுத்ரன்தலையிலே முடியைவைத்துப் பின்னை விலங்குவெட்டி விடுமா போலே, இப்பத்துத்தானே முந்துற பரமபதத்தைக்கொடுத்துப் பின்னை ஸம்ஸாரமாகிற மஹாநாடகத்தை யறுத்துக்கொடுக்கும்.

ஈடு.—நிகமத்தில் - இத்திருவாய்மொழியை அப்யஸிப்பார்க்கு, இதுதானே முதலிலே பரமபதத்தேறக்கோடுபோய், பின்னை ஸம்ஸாரமாகிற மஹாநாடகத்தை அறுக்கு மென்கிறார்.

[தேனே இத்யாதி] - இவருடைய பயஶங்காஹேதுக்கள் சோல்லுகிறது. அவனுடைய ரஸ்யதையிறே இவரை அஞ்சப்பண்ணுகிறது. எனக்கு ஸர்வவிஷயபோக்ய னானவனை. "ஸர்வரஸ:" (ஸர்வரஸ:) என்னக்கடவதிறே. [திருந்துலகுண்ட இத்யாதி] - மேல் பயநிவ்ருத்தி ஹேதுக்களைச் சோல்லுகிறது. கட்டளைப்பட்ட ஜகத்தை ப்ரளயத்திலே அழியாதபடி திருவயிற்றிலேவைத்துப் பரிஹரித்த பெரியோனை. [வானம் இத்யாதி] (கோப்பூழ் - மலர்ந்ததண் - மலர்மிசை - வானநான்முகனை - படைத்த மாயோனை)-வானிலேயிருக்கிற சதுர்முகனை, ஸ்ருஷ்ட்யநுகுணமான சேவ்வியையுடைய திருநாபீகமலத்திலே ஸ்ருஷ்டித்த ஆஸ்சர்யபூதனை. [கோனை] - நிருபாதிகஶேஷியை. கீழ் ப்ரஹ்மாதிகளுக்குச் சொன்ன ஐக்யம் ஸ்வரூபேணவன்று, கார்யகாரணபாவத்தாலே சோல்லிற்றென்னுமிடம் இங்கே ஸ்பஷ்டம். ஆபத்ஸகனாய், அழிந்தவற்றை உண்டாக்கவல்லனாய், ப்ராப்தனாயிருக்குமவ னென்கை. [வண்குருகூர் இத்யாதி] - அராஜக

நிகமம், - தேனே இத்யாதி. "வானின்மீதேற்றி" இத்யாதியைக் கடாக்ஷித்து அவதாரிகை - இத்திருவாய்மொழி இத்யாதி.

அவனுடைய ரஸ்யதையை வர்ணிக்கிறதுக்கு பாவம் - இவருடைய இத்யாதி. அதுவென்ன - அவனுடைய இத்யாதி. ஶப்தார்த்தம் - எனக்கு இத்யாதி. இதுக்கு ப்ரமாணம் - ஸர்வரஸ: இத்யாதி. மேல் பயநிவ்ருத்தி இத்யாதிவாக்யத்திலே, கோனை யென்னுமளவும் இதி ஶேஷ:. கீழிற்பாட்டிற்சொன்ன ஐக்யநிர்வாஹம் கார்யகாரணபாவேந நிர்ணயித்தருளினாராயிற் றென்கிறார் - கீழ்ப்ரஹ்மாதிகளுக்கு இத்யாதி. மூன்று ஶப்தத்தாலும் பலித்த அர்த்தம் - ஆபத்ஸகனாய் இத்யாதி. "உலகுண்ட" என்றத்தைப்பற்ற- ஆபத்ஸகனாய் என்றது. "படைத்த" என்றத்தைப்பற்ற - அழிந்தவற்றையுண்டாக்கவல்லனாய் என்றது. "கோனை" என்றத்தைப் பற்ற-ப்ராப்தனாயிருக்குமவன் என்றது. பிறவியைஅறுத்தன்றோ வானின்மீதேற்றுவ தென்ன-

மானால் ராஜபுத்ரன்தலையிலே முடியைவைத்து விலங்கு வெட்டிவிடுமாபோலே, இப்பத்துத்தானே முந்துற பரமபதத்தைக் கொடுத்து, பின்னை ஸம்ஸாரமாகிற மஹாநாடகத்தையும் அறுக்கும். (கக)

அராஜகமானால் இத்யாதி. 'தேனை' என்றுதொடங்கி, 'இப்பத்தும் - அருள்செய்து - வானின் மீதேற்றி - பிறவி மாமாயக்கூத்தினை - முடிக்கும்' இத்யந்வய:. ஸம்ஸாரமாகிற ஆஶ்சர்யமான மஹாநாடகத்தை என்று ஶப்தார்த்தம். (கக)

டாப ப்ரவேஶஸங்கதி.— [illegible]

த்ரவிடோபநிஷத்தாத்பர்யரத்நாவளி.— [illegible]

திருவாய்மொழி நூற்றந்தாதி.

வாராமலச்சம்இனிமால்;
சீரார்பரிவருடன்சேர்த்தியையும்—பாருமெனத்
தானுகந்தமாறன் தாள் சார்நெஞ்சே!சாராயேல்
மானிடவரைச் சார்ந்துமாய்.

ஆழ்வார்திருவடிகளேஶரணம், எம்பெருமானார்திருவடிகளேஶரணம், ஜீயர்திருவடிகளேஶரணம்.

ஐந்தாந் திருவாய்மொழி—மாயக்கூத்தா-ப்ரவேஶங்கள்.

ஆ.--இப்படி அந்தத்தாமரைத்தடாகமிருந்த திருச்செங்குன்றூரில் திருச்சிற்றாறெறச் செல்லவேணுமென்று மநோரதித்துப் போக உத்யோகித்தவர், எம்பெருமானைக் காணப்பெறாத விடாயின்மிகுதியாலே போக க்ஷமரன்றியே, "நான் வர க்ஷமனாகிறிலேன், நீவாராய்" என்று அத்தாமரைத்தடாகத்தைக் கூப்பிட் டழைக்கிறார்.

ஓ.—அஞ்சாந்திருவாய்மொழியில், எம்பெருமானுடைய தனிமைக்கஞ்சி அவனுடைய ஶௌர்யவீர்யாதிகளை யநுஸந்தித்துத் தமக்குப்பிறந்த பயங்கெட்டு யரித்து, "திருச்செங்குன்றூரில் திருச்சிற்றாறதனுட் கண்டவத்திருவடி" என்று தொடங்கி, சீர்கொள்சிற்றாயனுடைய திருவழகை மிகவும் அநுஸந்தித்து, "முதலே தொடங்கி யிவ்வளவும்பிறந்த ப்ரீதியெல்லாம் இதிலேயொரு திவலை" என்னும்படி மிகவும் ப்ரீதரான ஆழ்வார், அவனைக் கண்ணாலேகண்டு தழுவி முழுகிப் பரிமாறவேணுமென்று அபேக்ஷை பிறந்தபோதே பெருமையாலே, கீழ்ப்பிறந்த நிரவதிகப்ரீதியும் போய், தாம் திருநகரியிலாராகவும் அவன் திருச்செங்குன்றூரிலானாகவும் அநுஸந்தித்து,

"முதலிலேதொடங்கி யிவ்வளவும்பிறந்த வ்யஸநமெல்லாம் இதிலே யொருகலாமாத்ரம்" என்னும்படிவந்த மஹாவ்யஸநமாகிற தவதஹநபரீதராய், தம்மிற்காட்டிலும் தப்தமாய் ஆகுலமான ஸர்வகரணங்களையுமுடையராய், "அவனைக்காணவேணும்" என்று பெருவிடாய்ப்பட்டு, என்னார்த்திதீர ஶ்ரமஹரமான படிகளாலேதோற்றியருள வேணுமென்று, கேட்டார்க்குத் தரிப்பு அரிதாம்படி பெரிய ஆர்த்தநாதத்தோடே கூப்பிடுகிறார்.

ப.—அஞ்சாந்திருவாய்மொழியில், கீழ் - திருச்செங்குன்றூரிலே யெழுந்தருளிநிற்கிறநிலையிலே "திருச்செய்ய கமலக்கண்ணும்" என்றுதொடங்கி, திவ்யாவயவஶோபை தொடக்கமானவற்றை ப்ரத்யக்ஷஸமாநாகாரமாம்படி அந்தரங்கமாக அநுபவித்து ஹ்ருஷ்டரானவர், அவ்வடிவழகோடே பாஹ்ய ஸம்ஶ்லேஷம் பண்ணவேணுமென்று அபிஸந்திபண்ணிக் கிட்டாமையாலே ஆர்த்தராய்; அவனுடைய அநுபாவ்யமான ஆபிரூப்யாதிஶயத்தையும், ஆர்த்திஹரமான மயிர்முடியையும், ஔதார்ய வைலக்ஷண்யத்தையும், ஆஶ்ரிதோபகாரார்த்தமான அர்ணவஶாயித்வத்தையும், ஆபத்ஸகத்வத்தையும், ஆகர்ஷகஸ்வபாவயோக்யத்தையும், அஶேஷஜநஸம்ஶ்லேஷத்தையும், ஆஶ்ரிதபக்ஷபாதத்தையும், ஏகாஶ்ரிதனையே அநேகவித கிஞ்சித்காரங்கொள்ளும்படியையும், ஆஶ்ரிதஸுலபனாய்வைத்து அறியவரியனான நிலையையும் அநுஸந்தித்து, ஏவம்விதஸ்வபாவனானவனை யதாமநோரதம் அநுபவிக்கப்பெறாமையாலே அத்யந்தம் ஆர்த்தராய்க் க்லேஶித்த ப்ரகாரத்தை அருளிச்செய்கிறார். இப்படி ப்ராவண்யத்தை ஈஶ்வரன் தன்பக்கலிலே களிப்பித்தது, அநுபவப்ரதிபந்தகத்தைக் கழிக்கையிலுண்டான கணிசமென்று கருத்து.

இ.—அஞ்சாந்திருவாய்மொழியில், கீழிரண்டு திருவாய்மொழியாலே - அவன் ஸம்ஸாரத்திலேவந்து அவதரித்துத் தனியேயுலாவுகிற தனிமைக்கஞ்சி, அவனுடைய ஶௌர்யவீர்யாதிகுணங்களை யநுஸந்தித்து பயங்கெட்டு தரித்தஸமநந்தரம், "திருச்செங்குன்றூரில் திருச்சிற்றாறதனுட்கண்ட அத்திருவடி" என்றுதொடங்கிச் சீர்கொள்சிற்றாயனுடைய வடிவழகை யநுபவித்து, "முன்புத்தை ப்ரீதிகளெல்லாமொரு திவலை" என்னும்படி யதிப்ரீதராய், அதுதான் ப்ரத்யக்ஷஸமாநாகாரமான மாநஸாநுபவமாகையாலே பாஹ்யஸம்ஶ்லேஷாபேக்ஷை பிறந்து, அந்தப்ரீதியெல்லாம் போய், தாம் திருநகரியிலாராய், அவன் திருச்செங்குன்றூரிலானாய், அவ்வடிவோடே யணையப் பெறாமையாலே, "கீழ் பட்டவ்யஸநங்களெல்லாம் ஒருகலாமாத்ரம்" என்னும்படி நொந்து, காட்டுத்தீயிலே யகப்பட்டாரைப்போலே தப்தராய், தம்மிலும் ஆகுலமான கரணங்களையுடையராய், "என் ஆர்த்தி தீர ஶ்ரமஹரமான படிகளாலே தோற்றியருளவேணும்" என்று கேட்டார்க்குத் தரிப்புஅரிதாம்படி பெரியஆர்த்தநாதத்தோடே கூப்பிடுகிறார். கீழ்-"இவ்விஷயத்துக்குப் பிறராலே யழிவுவருகிறதோ?" என்று பீதரானார்; இப்போது, தம்மார்த்தத்வநியாலே யழிக்கிறார். "மாயக்கூத்தனில் விடாய்" என்று ப்ரஸித்தமிறே. இதுக்குமேலுள்ள இழவுகள் பாதிதாநுவ்ருத்திமாத்ரம்.

ஈடு.—கீழிரண்டுதிருவாய்மொழியிலுமாக பகவத்தத்த்வம் பிறராலே அழியப்புகுகிறதென்று வெறுத்தார்; இதில் தம்முடைய ஆர்த்தநாதத்தாலே அவனை அழிக்கப்

மாயக்கூத்தா ப்ரவேஶே,—ஸங்க்ரஹஸங்கதி - கீழில்இரண்டு திருவாய்மொழியாலும் இத்யாதி. வெறுத்தாரென்றது - வெறுத்து அவன் ஸமாதாநம்பண்ண ஸமாஹிதரானாரென்றபடி.

பார்க்கிறார். கீழில்திருவாய்மொழியிலே அவனுக்குப் பரிவருண்டென்று ஐயமுந்தீர்ந்து வடிவழகையநுஸவித்தாராய் நின்றார்; அவ்வழகு, நெஞ்சிலே, ''திகழவென்சிந்தையுளிருந்தான்'' என்கிறபடியே ஊற்றிருந்து, ஙாஹ்யஸம்ஶ்லேஷாபேக்ஷை பிறந்து, அதுபெறுமையாலே, ''கீழ் பட்ட க்லேசங்களுமெல்லாமொன்றுமல்ல: இதிலே ஒருகலாமாத்ரம்'' என்னும்படி நொந்து, காட்டுத் தீ கதுவினாரைப்போலே தப்தராய், தம்மிற்காட்டிலும் ஆகுலமான கரணங்களையுடையராய், ''என்விடாயெல்லாந்தீரும்படி திவ்யாவயவங்களோடே வரவேணும், அழகிய திருவஹ்ஷேகத்தோடே வரவேணும், மேவம்போலே வரவேணும்: அழகியவடிவோடே வரவேணும்: உதயஸமயத்திலாதித்யனைப்போலே பெரியபுகரோடே வரவேணும்'' என்றாற்போலே கூப்பிட்டு, பின்னையும் அவன்வந்து முகங்காட்டக்காணாமையாலே, நாம் இந்தக்லேஶத்தோடே முடிந்துபோமித்தனையாகாதே யென்றுஇழவோடே தலைக்கட்டுகிறது.

முதற் பாட்டு.

மாயக்கூத்தா!வாமனா!வினையேன்கண்ணா!கண்கைகால்
தூயசெய்யமலர்களாச் சோதிச்செவ்வாய்முகிழதா
சாயல்சாமத்திருமேனிதன்பாசடையாதாமரைநீள்
வாசத்தடம்போல்வருவானே! ஒருநாள்காணவாராயே!

ஆ.—(*மாயக்கூத்தா*) - வாமநனாயும் ஸ்ரீவஸுதேவர்திருமகனாயும் வந்து திருவவதாரம்பண்ணி, ஆஶ்சர்யமாய் ஊர்ஜநீயமான திவ்யசேஷ்டிதங்களைப்பண்ணுகிறது அடியேனுக்காகவன்றோ? பின்னையும் நான் ஸாமக்ரியஹீநனாகைபாலே காணப்பெறுகிறிலேன்; அடியேனுடைய கண்களின் விடாய்தீரும்படி ஒருநாள்காண உன்னுடைய திருக்கண் கை கால்கள் தூயசெய்யமலர்களாகவும், சோதிச்செவ்வாய்முகிழதாகவும், உஜ்ஜ்வலமாய் ஆஶ்சர்யமாயிருந்த திருமேனியைக் குளிர்ந்த இலைபாகவுமுடையையாய், புண்யமந்த்ர வாஸிதஅநந்தஶீமந்தராளனுமாயிருந்த நீ, ஒருதாமரைத்தடாகம் நடந்துவருமாபோலே வாராயென்று கூப்பிடுகிறார்.

ஒ.—முதற்பாட்டில், என்விடாய் கெடும்படி தாமரைத்தடாகம்போலே வந்து தோற்றியருளவேணுமென்கிறார்.

[*மாயக்கூத்தா வாமனா*] - ப்ரயோஜநாந்தரபரனான இந்த்ரனுடைய அபேக்ஷிதம்பூரிக்கைக்காக ஸ்ரீவாமநனாய் மஹாபலியையுடைய யஜ்ஞவாடமேறநடக்கை

கதுவினாரை-ஸ்பர்ஶித்தாரை. ''*கண்ணும்வாயுந்துவர்ந்து*'' *என்றதைப்பற்ற* - தம்மிற்காட்டிலும் இத்யாதி. ''*கண்கைகால்*'' இத்யாதியைப்பற்ற - என்விடாயெல்லாம் இத்யாதி. ''*பவளவாயும்நால்தோளும்*'' இத்யாதியைப்பற்ற - திவ்யாவயவங்களோடே என்றது. ''*முடிசேர்சென்னி*'' என்றத்தைப்பற்ற - அழகிய இத்யாதி. ''*தூநீர்முகில்*'' என்றத்தைப்பற்ற-மேகம் இத்யாதி. ''*கொண்டல்வண்ணா*'' என்றத்தைப்பற்ற - அழகியவடிவோடே இத்யாதி. ''*கருநாயிறுதிக்கும்,*'' ''*இளநாயிரண்டுபோல்*'' என்றத்தைப்பற்ற - உதயஸமயத்தில் இத்யாதி. ''*எங்கே காண்கேனே*'' என்றத்தைப்பற்ற - நாம் இந்தக்லேஶத்தோடே இத்யாதி.

தொடக்கமான மநோஹாரியான திவ்ய சேஷ்டிதங்களையுடையவனே! [வினையேன் கண்ணா] - எனக்காக க்ருஷ்ணனாய்வந்து திருவவதாரம் பண்ணினவனே! இத்திருவவதாரம் தமக்கு கார்யகரமாகாமையாலே, வினையேனென்கிறார். [சாயற் சாமத்திருமேனி] - சாயலையுடைய ஶ்யாமமான திருமேனி குளிர்ந்த இலையாக.

ப.—முதற்பாட்டில், நிரதிஶயாநுபாவ்யமான வடிவழகையுடைய வாமநாதி ப்ராதுர்பாவத்தை அநுஸந்தித்து, ஶ்ரமஹரமான பத்மதடாகம்போலே நான் காணும்படி வரவேணுமென்றபேக்ஷிக்கிறார்.

மாயம் - ஆஶ்சர்யரூபமான ஶீலவ்யாபாரங்களையும், கூத்தா - மநோஹாரி சேஷ்டிதத்தையு முடையையாய், வாமனா - (மஹாமேருவை மஞ்சாடியாகச்சுருக்கினாற் போலே ஸ்லாக்யமான) வாமநவேஷத்தைபுடையையாய், வினையேன் - (யதாமநோரதம் அநுபவிக்கப்பெறாத) பாபத்தையுடைய எனக்கு, கண்ணா — (ஆஸந்நனாய்ப்பிறந்து வைத்து அவ்வருகுபட்ட) க்ருஷ்ணனானவனாய், கண் - (அநுபவிக்க ஆசைப்பட்டாரை அங்கீகரிக்கும்) திருக்கண்ணும், கை - (அபயப்ரதமான) திருக்கையும், கால் - (ஆஶ்ரயணீயமான) திருவடிகளும்,—தூய- அழுக்கற்று, செய்ய - சிவந்து, மலர்களா- (அலர்ந்த) பூக்களாகவும், சோதி - மந்தஸ்மிதோஜ்ஜ்வலமான, செம் - சிவந்த, வாய் - திருவதரம், முகிழதா - முகுளமாகவும், சாயல் - ஒளியையுடைத்தாய், சாமம் - ஶ்யாமளமான, திருமேனி - திருமேனி, தண் - குளிர்ந்த, பாசடையா - பச்சிலைச்செறிவாகவும், ("உத்தமேஷ்வஷ்டஜதடாகவிவ" என்கிறபடியே), தாமரை - (அலர்ந்த) தாமரைப்பூக்களையுடைத்தாய், நீள் - பெரியதாய், வாசம் - பரிமளோத்தரமான, தடம்போல் - தடாகம் (நடக்குமாபோலே), வருவானே - வருமவனே! ஒருநாள் - ஒருநாள், காண - காணும்படியாக, வாராய் - வந்தருளவேணும்.

இ—முதற்பாட்டில், என்விடாயெல்லாம் கெடும்படி, தாமரைத்தடாகம் போலே வந்து தோற்றியருளவேணு மென்கிறார்.

[மாயக்கூத்தா] - ஆஶ்சர்யங்களையும் மநோஹாரிசேஷ்டிதங்களையும் உடையவனே! இந்த்ரனிரப்புத் தலைக்கட்டுகைக்காக அன்றேபிறந்து அன்றேவளர்ந்து அன்றேயிரப்பிலே அதிகரிக்கையும், மஹாபலியஜ்ஞவாடத்தளவும் தர்ஶநீயமாம்படி நடந்துசென்று "மாவலி" என்றாற்போலே முக்தஜல்பிதங்கள் முதலான மநோஹாரி சேஷ்டிதங்களையு முடையவனே! நடந்துசென்ற நடை, வல்லாராடினாற் போலேயிருக்கிறதாயிற்று இவர்க்கு. [வாமனா] - இந்த்ரனுக்காகத் தன்னையிரப்பாளனாக்கினவன்கிடீர், தன்னைக்காண்கையே ப்ரயோஜநமாயிருக்கிற என்னை இரப்பாளனாக்கினான்! [வினையேன் கண்ணா] - ஸ்ரீவாமநனாய் வந்தவதரித்தது இந்த்ரனுக்கானாற் போலே, க்ருஷ்ணனாய் வந்தவதரித்தது தமக்காக என்றிருக்கிறார். அவதாராந்தரங்களிற் காட்டில்க்ருஷ்ணாவதாரத்தில் அண்ணிமையாலே சொல்லுகிறார். ஸர்வஸாதாரணனுடைய அவதாரமாகையாலே, உணர்ந்தவர்களுக்கு "எனக்கு" என்னலாம்படியிருக்கையாலே சொல்லுகிறாரென்றுமாம். வினையேனென்கிறது - பல்லிலைபட்டுத் தெறித்தாற்போலே, அவதாரத்துக்குப் பிற்பட்டபடியாலே சொல்லுகிறார். [கண் கை கால் தூயசெய்யமலர்களா]-கிட்டினாரை முதலுறவுபண்ணும் கண், நோக்குக்குத்தோற்றவர்களை யணைக்கும் கை, ஸ்பர்ஶத்துக்குத் தோற்றுவிழும் திருவடிகள், அங்கேகிடந்து தலையெடுத்தநுபவிக்கும் வடிவு கண்டபோதே விடாய்கெடும்படி நிர்மலமாய்ச் சிவந்திருந்துள்ள பூக்க

ளாக. ஒருபொய்கை பரப்புமாறப் பூத்தாற்போலே, ஊரஸ்யர்க்குப் பூவேயாப்த் தோற்றுமித்தனையிறே. [சோதிச்செவ்வாய் முகிழதா]-தேஜோரூபமாய்ச் சிவந்திருந் துள்ள திருவதரம் முகுளமாக. "ஸ்வாகூநாஸ:" என்கிற தத்த்வமாகையாலே, ஸ்மிதம் விகாஸோந்முகமான அளவாயிறேயிருப்பது. "ஸ்மயமாநவாம்புஜ:" என்கிறபடியேயிறே, வந்து தோற்றும்போதிருப்பது. [சாயற்சாமத்திருமேனி தண்பாசடையா]-ஒளியையுடைத்தாய் ஶ்யாமமான திருமேனி குளிர்ந்த பச்சிலையாக. "பாருஷ: பாண்டுரீகாக்ஷ:" "அக்கமலத்திலைபோலும் திருமேனி" என்னக்கடவதிறே. [தாமரை நீள்வாசத் தடம்போல் வருவானே] - பரப்புமாறத் தாமரையலர்ந்திருப்பதாய், ஏகார்ணவத்தை ஒருதாமரைத்தடாகமாக்கினாற்போலே பரந்திருப்பதாய், அப்பரப்படங்கப் பரிமளம் நிரம்பியிருப்பதொரு தடாகம் நடந்து வருமாபோலேயாயிற்று, பரிமளம் முன்பேயலையெறிய வரும்போதிருப்பது. "ஸர்வகந்த:" என்னக்கடவதிறே. [வருவானே] - வரும் ஸ்வபாவனே! முன்பு தம்பக்கல் வரும்படியை யுபகாரஸ்ம்ருதியாலே சொல்லுகிறார். [ஒருநாள்] - "ஒருகால் நாக்குநனைக்க" என்பாரைப்போலே. [காண] - வந்தால் கொள்ளும் ப்ரயோஜநம் காணுமதுவே. ஒருபூவிஶேஷத்திலும் ஸாக்ஷாத்காரத்தையிறே ப்ரயோஜநமாகச் சொல்லிற்று. [வாராயே] - ஆற்றாமையில் காலும் தானேவந்து காட்டக்காணும்அது முறை. "தமேவைஷ வ்ருணுதே தேந லப்யஸ்தஸ்யைஷ" , "ஸர்வஸ்வதாநாதிஹ" என்னக்கடவதிறே.

ஈடு.—முதற்பாட்டு. என்விடாயெல்லாந்தீரும்படி, ஒருதாமரைத்தடாகம் போலே வந்து தோற்றியருளவேணு மென்கிறார்.

[மாயக்கூத்தா] - ஆஶ்சர்யங்களையும் மநோஹாரிசேஷ்டிதங்களையு முடையவனே! இந்த்ரனுடைய இரப்புத் தலைக்கட்டுகைக்காக அன்றேபிறந்து அன்றே வளர்ந்து அன்றே இரப்பிலே அதிகரிக்கையும், மஹாபலி யஜ்ஞவாடத்தளவும் தர்ஶநீயமாம்படி நடந்து சென்று "மாவலி" என்றாற்போலே முக்யஜல்பிதங்கள் முதலான மநோஹாரி சேஷ்டிதங்களையு முடையவனே! நடந்துசென்றநடை, வல்லாராடினாற்போலே யிருக்கிறதாயிற்று இவர்க்கு. [வாமனா] - இரந்தும் இரந்தவர்க்கீகையே ப்ரயோஜநமாயிருக்கிறவன்கிடீர், தன்னைக்காண்கையே ப்ரயோஜநமாயிருக்கிற என்னை இரப்பாளனாக்கி இரங்காதிருக்கிறான். [வினையேன்கண்ணா] - ஸ்ரீவாமநனாய்வந்தவதரித்தது இந்த்ரனுக்கானாற்போலே, க்ருஷ்ணனாய்வந்தவதரித்தது தமக்காக என்றிருக்கிறார். அவதாராந்தரங்களிற்காட்டில் க்ருஷ்ணாவதாரத்தில்அண்ணிமையாலே சொல்லுகிறார்.ஸர்வஸாதாரணனுடைய அவதாரமாகையாலே,உகந்தவர்களுக்கெல்லாம்"எனக்கு"

முதற்பாட்டு.—மாயக்கூத்தா இத்யாதி. "தாமரைநீள்வாசத்தடம்" இத்யாதியைப்பற்ற அவதாரிகை - என்விடாய் இத்யாதி.

வ்யுத்பத்திகாரண ஸமாஸமாக்கி அர்த்தம் - ஆஶ்சர்யங்களையும் இத்யாதி. ஆஶ்சர்யமெது? மநோஹாரிசேஷ்டிதங்கள் எது?என்ன - இந்த்ரனுடைய இத்யாதி. நடையை, "கூத்து" என்பானென்? என்ன - நடந்துசென்ற இத்யாதி. நடை உக்த்யாதிகளுக்கும் உபலக்ஷணம். ஆர்த்தி ப்ரகரணத்திலே, "வாமனா" என்று ஸம்போதிக்கிறதுக்கு பாவம் - இரந்தும் இத்யாதி. எல்லார்க்குமொவ்வாதோ? "வினையேன்கண்ணா" என்கிறதென்? என்ன - ஸ்ரீவாமநனாய் இத்யாதி. அவதாராந்தரங்களிருக்க, இவ்வவதாரத்தை "மதீயம்" என்பானென்? என்ன - அவதாராந்தரங்களில் இத்யாதி. அண்ணிமை - ஸாமீப்யம்."எல்லார்க்குமொவ்வாதோ" இத்யாதி ஶங்கைக்குப் பரிஹாரா

என்னலாயிருக்கையாலே சொல்லுகிறு ரென்றுமாம். வினையேனென்கிறது - பல்லிலே பட்டுத் தெறித்தாற்போலே, அவதாரத்துக்குப் பிற்பட்டபடியாலே சொல்லுகிறுர். [கண் கைகால்தூயசெய்யமலர்களா] - கிட்டினுரோடு முதலுறவுபண்ணும் கண், நோக்குக்குத் தோற்றவர்களை அணைக்கும் கை,ஸ்பர்ஶத்துக்குத் தோற்றுவிழும் திருவடிகள்,—அங்கே கிடந்து தலையெடுத்து அநுபவிக்குமதாய்க் கண்டபோதே விடாய்தீரும்படி ஶ்யாமமான திருமேனிக்குப் பரபாகமான நிறத்தையுடைத்தான தாமரைப்பூவாக.[சோதிச்செவ்வாய் முகிழதா] - புகரையுடைத்தாய்ச் சிவந்திருக்கிற திருவதரமானது, அதில் முகுளமாக. †"அவாக்யநாதரஃ"(அவாக்யநாதரஃ)என்கிற தத்த்வமாகையாலே, காம்பீர்யாதிஶயத்தாலே, ஸ்மிதம் விகாஸோந்முகமான அளவாயிறேயிருப்பது ; ஆகையாலே - முகுள மென்கிறது. [சாயற்சாமத்திருமேனிதண்பாசடையா] - ஒளியையுடைத்தாய் ஶ்யாம மான திருமேனி, குளிர்ந்தபச்சிலையாக ; ‡"புருஷஃபுண்டரீகாக்ஷஃ" (புருஷஃ புண்டரீகாக்ஷஃ) "அக்கமலத்திலைபோலும்" என்கிறபடியே. [தாமரைநீள் வாசத்தடம் போல் வருவானே] - பரப்புமாறத் தாமரைமலர்ந்திருப்பதாய், ஏகார்ணவத்தை ஒரு தடாகமாக்கினுற்போலே பரந்திருப்பதாய், அப்பரப்படங்கப் பரிமளத்தாலே நிரம்பியிருப்ப தோரு தடாகம் நடந்துவருமாபோலேயாயிற்று, பரிமளம் முன்பே அலையெறிய வரும்போ திருப்பது: §"ஸர்வகந்தஃ" (ஸர்வகந்தஃ) என்னக்கடவதிறே. [வருவானே] - வரும் ஸ்வபாவனே ! முன்பு தம்பக்கல் வரும்படியை உபகாரஸ்ம்ருதியாலே சொல்லுகிறுர். [ஒருநாள்] - "ஒருகால் நாக்குநினைக்க" என்பாரைப்போலே. [காண] - வந்தால் கொள்ளும் ப்ரயோஜநம், காணும்இதுவே. ஒரு தேஶவிஶேஷத்திலும் ஸாக்ஷாத்காரத்திலேயிறே அந்வயம். அப்பேறுபெறும்படி. [வாராயே] - அத்தலையாலே வரக் காணவிருக்கு மவ ரிறே; []"தஸ்யைஷ ஆத்மா விவ்ருணுதே தநூம்ஸ்வாம்" (தஸ்யைஷ ஆத்மா விவ்ருணுதேதநூம்ஸ்வாம்) என்கிறபடியே, தாம் கிட்டிக் காணுமது ஸ்வரூபவிரோதி மென்றிருக்கிறுர். (க)

ந்தரம்- ஸர்வஸாதாரணன் இத்யாதி. என் கண்ணு என்னவமைந்திருக்க, "வினையேன்" என்ற துக்கு பாவம் - வினையேனென்கிறது இத்யாதி. "கண், கை, கால்" என்கிற க்ரமத்துக்கு பாவம்- கிட்டினுரோடு இத்யாதி. "செய்ய" என்றதுக்கு பாவம் - அங்கேகிடந்து இத்யாதி. மலர் என் ஞதே, "முகிழ்" என்றதுக்கு பாவம் - அவாக்யநாதரஃ இத்யாதி. சாய்-ஒளி. பாசு - பசுமை. அடை - இலை. திருமேனி பச்சிலைபோலேயிருக்குமோவென்ன, ப்ரமாணம் - புருஷஃ இத் யாதி. "வ்யூஹாதஸ்மாத் ப்ராதுர்பூதஃகாருண்யநிதிஸ்ஸ்வயம் । புருஷஃபுண்டரீகாக்ஷஃ ஸர்வதேவநமஸ்க்ருதஃ" அத்ர, புண்டரீகஶப்தேந - புண்டரீகபலாசா உச்யந்தே. வாசம் - பரிமளம். 'தாமரை ... என்றதுக்கு அர்த்தம் - பரப்புமாற இத்யாதி. அந்த ...சியை உத்ப்ரே க்ஷிக்கிறுர் - ஏகார்ணவத்தை இத்யாதி. அப்படி வாசமுண்டோவென்ன - ஸர்வகந்த இத்யாதி. ...ப்போது வாராதிருக்க, "வரும் ஸ்வபாவன்" என்கிறதென்னென்ன - முன்பு இத்யாதி. ஒரு நாள்போருமோவென்ன - ஒருகால் இத்யாதி. அநுபவிக்க என்னுதே, "காண" என்றதுக்கு பாவம் - வந்தால் இத்யாதி. ஆனால் காண்கைபோருமோ, அநுபவிக்கவேண்டாவோவென்ன - ஒருதேசம் இத்யாதி. தாம் போகிறதுக்கென் ? என்ன - அத்தலையாலே இத்யாதி. அவன்காட்டக் காணவேணுமோவென்ன, ப்ரமாணம் - தஸ்யைஷ ... 'காணவாராய்' என்றதுக்கு பாவார்த்தம் - தாம்கிட்டி (க)

† வாக்-3-14. ‡ வராஹபுராணம். §[] கட-2-23; முண்ட-3-2.

இரண்டாம் பாட்டு.

காணவாராயென்றென்று கண்ணும்வாயும்துவர்ந்து அடியேன்
நாணிநன்னாட்டலமந்தால் இரங்கியொருநாள்நீயந்தோ!
காணவாராய்கருநாயிறுதிக்கும் கருமாமாணிக்க
நாள்நல்மலைபோல்சுடர்ச்சோதி முடிசேர்சென்னியம்மானே!

ஆ.—(காணவாராய்.) - காணவாராயென்றென்று கூப்பிட்டுக் கண்ணும் வாயும் துவர்ந்து, நான் இப்பாடுபடச்செய்தேயும் நீ வாராதொழிந்தவாறே உன்னை நிர்க்ருணனென்று லோகத்தார் சொல்லுகிறாரென்று அடியேன் லஜ்ஜித்து, உன்னைக் காணப்பெற்று ஸம்ருத்தமான இந்நாட்டிலே நானொருவனும் காணப்பெறாதே கிடந்து அலமந்தால், என்பக்கலிலே க்ருபைபண்ணி, ஜாஜ்வல்யமான நீலாலக பந்த பந்துரோத்தமாங்கனாய், நீலஜ்யோதிர்மயதிவ்யரூபனாய், உதயந்நீல கபஸ்திமாலி விலஸிதமாய், புஷ்பஹாஸ ஸுகுமாரமாயிருப்பதொரு கருமாணிக்கமலை நடந்துவருமாபோலே காணவாராயென்கிறார்.

ஒ.— இரண்டாம்பாட்டில், என்விடாய்கெடும்படி அழகிய மயிர்முடியோடே வந்து தோற்றியருளவேணு மென்கிறார்.

[நாணி] - இவனை நாட்டார் பழிசொல்லுகிறார்களென்று லஜ்ஜித்து. இவனை யாசைப்பட்டுப் பெறாமையாலே "என்செய்தேனானேன்?" என்று லஜ்ஜித்தென்றுமாம். [நன்னாடு] - விபரீதலக்ஷணை. விஷயாநுபவத்தாலே ஸுகிதமான தேசத்திலேயென்றுமாம். தம்மைப்போலே கூப்பிடக்காணாமையாலே, ஆத்மாநுமாநத்தாலே ஸுகிப்பார் ஸுகிப்பது எம்பெருமானைப் பெற்றிறேயென்றுகொண்டு நன்னாடென்கிறாராகவுமாம். [அலமந்தால்] - தடுமாறினால். [கருநாயிறென்று தொடங்கி] - கறுத்திருந்துள்ள ஆதித்யன் உதியாநிற்பதுஞ்செய்து அபிநவமான யோக்யதையை யுடையதொரு மாணிக்கமலைபோலே அழகிய மயிர்முடியோடேகூடின சென்னியையுடைய பெரியோனே!

ப.—அநந்தரம், ஶ்லாக்யமான மயிர்முடியையுடைய நீ, என்க்லேஶந்தீரக் கண்டு அநுபவிக்கும்படி வந்தருளவேணுமென்கிறார்.

'கரு - கறுத்த, நாயிறு - ஆதித்யன், உதிக்கும் - உதித்துக்கிளம்பியிருப்பதாய், மா - மஹத்தான, கருமாணிக்கம் - நீலரத்நமாய், நாள் - செவ்வியழியாதபடி, நல் - ஶ்லாக்யமான, மலைபோல் - பர்வதம்போலே, சுடர் - (பரம்புகிற) சுடரையுடைத்தான, சோதி - தேஜஸ்ஸையுடைய, முடி - மயிர்முடியோடே, சேர்-சேர்ந்த, சென்னி - உத்தமாங்கத்தையுடைய, அம்மானே - ஸ்வாமியானவனே! காண - (உன்வடிவழகைக்) காணும்படி, வாராய் - வரவேணும்', என்றென்று - என்று பலகாலும் பார்த்துக் கூப்பிட்டு, கண்ணும் — (பார்க்கிற) கண்ணும், வாயும் - (கூப்பிடுகிற) வாயும், துவர்ந்து - (பசையற) உலர்ந்து, நாணி-(நம்மபேக்ஷை எங்ஙனே ஸலப்ராப்தையாயிற்றென்று) லஜ்ஜித்து, நல் - ஸ்வாமிமதம்பெற்று உகந்திருக்கிற, நாடு-நாட்டிலே, அடியேன் - ஶேஷத்வம் நிரூபகமான நான், அலமந்தால் - (இப்படி) அலமந்தால், ஒருநாள் - ஒருநாள்;

இரங்கி - க்ருபைபண்ணி, நீ - (க்ஷணமும் பிரியவொண்ணாத அழகையுடைய) நீ, காண- காட்சியாகிற ப்ரயோஜநத்தைப் பெறும்படி, வாராய் - வருகிறிலை. அந்தோ - ஐயோ! ஆசைப்பட்டுக் கூப்பிட்டாலும் முகங்காட்டவரலாகாதோ?

இ.—இரண்டாம்பாட்டில், என்விடாய் கெடும்படி அழகிய மயிர்முடியோடே வந்து தோன்றியருளவேணு மென்கிறார்.

[காணவாராய் என்றென்று] - ஒருகால் அழைத்துவரக் காணுவிட்டால், "நம்மாசையை ஆவிஷ்கரித்தோம், வந்தபோது வருகிறான்" என்றிருக்கிறாரல்லர்; நிரந்தரமாகக் கூப்பிடாநிற்பர். [கண்ணும்வாயும் துவர்ந்து] - எங்ஙனே வருமென்று அறியாமையாலே, திக்குக்கள்தோறும் பார்த்துக் கண் பசைபற வுலர்ந்தது. "கண்ணநீர் கைகளாலிறைக்கும்" என்கிறஅவஸ்தையையும் கழிந்தது, கூப்பிட்டுநாவும் பசையறவுலர்ந்தது. [அடியேன் நாணி] - அத்தலையில் அவத்யம் நம்மதாம்படியான ஸம்பந்தத்தை யுடைய நான் லஜ்ஜித்து. இவனைநாட்டார் என்சொல்லுகிறாரென்று லஜ்ஜித்தென்னுதல்; ப்ரயோஜநார்த்தியாய்க்கூப்பிடுகையன்றிக்கே, முறையறிந்து காண்கைக்குக்கூப்பிட்டநமக்கு உதவினபடி யழகிதாயிருந்ததென்று லஜ்ஜித்தென்னுதல். [நன்னாடு] - * ஸுநந்தகௌஸ்ஸாஜநமாகையாலே விபரீதலக்ஷணையாதல்; விஷயாநுபவத்தாலே களித்துவர்த்திக்கிற தேசமென்னுதல்; தம்மைப்போலே கூப்பிடக் காணாமையாலே அவனைப்பெற்றிருக்கிறார்களென்னும் நினைவாலேயாதல். இது பிள்ளான் நிர்வாஹம். [அலமந்தால்] - தடுமாறினால். [இரங்கி] - உனக்கு அபேக்ஷையில்லாவிட்டால் பரார்த்தத்துக்கிரங்க வேண்டாவோ? ருஷிகளுக்குள்ள ஆந்ருஸம்ஸ்யமுமில்லையோ? [ஒருநாள்] - பலநாள் வேணுமென்கிறேனோ? [நீ] - கண்டுகொண்டு நிற்கவேண்டும் வைலக்ஷண்யத்தை யுடைய நீ. [அந்தோ] - உன் வைலக்ஷண்யம் அறியாதொழிந்தால், என்னார்த்தியும் அறியாதொழிவதே! [காணவாராய்] - ப்ரயோஜநார்த்தியாய் அழைக்கிறேனோ? [கருநாயிறுதிக்கும்] - கறுத்திருக்கிற ஆதித்யன் உதிக்கிற. [கருமாமாணிக்கநாள் நல்மலை போல்] - அவ்வாதித்யனுடைய உதயகிரி இருக்கிறபடி. நீலமாய்ப் பெருவிலையனை ரத்நபர்வதம்போலே. [நாள் நல்மலை] - "நாட்பூ" என்னுமாபோலே, தர்ஸநீயமான மலை. [சுடர்ச்சோதி முடி] - மிக்கபுகரையுடைய மயிர்முடி. 'கருநாயிறுதிக்கும்' - என்கிற த்ருஷ்டாந்தபலத்தாலே முடியென்று - மயிர்முடியாகிறது. [சேர்சென்னி] - அதுக்காஸ்ரயமான திருமேனி நீலரத்நபர்வதம் போலேயாயிற்றிருப்பது. [அம்மானே] - ஸர்வேஸ்வரனே! நித்யஸூரிகளையாய்ப் போந்தஸம்ஸாரி முக்தனாய்ச்சென்றால், தாபஹாரமாக அவனுக்குச்செய்வது திருக்குழலைப் பேணுமத்தனை. "கேஸவக்லேஸநாஸந:"

ஈடு.—இரண்டாம்பாட்டு. என்விடாய் கெடும்படி அழகியமயிர்முடியுடனே வந்து தோற்றியருளவேணு மென்கிறார்.

[காணவாராயென்றென்று] - ஒருகால் "காணவாராய்" என்றால் வரக் காணாவிட்டால், ஆறியிருக்கவல்லரன்றே; பின்னையும் "காணவாராய், காணவாராய்"

இரண்டாம்பாட்டு.—காணவாராய் இத்யாதி. "கருநாயிறுதிக்கும் - சுடர்ச்சோதிமுடி" என்றத்தைக் கடாக்ஷித்து அவதாரிகை - என்விடாய் இத்யாதி.

திரியவும் "காணவாராய்" என்கிறதென்னென்ன - ஒருகால் இத்யாதி. கண்ணும் வாயும் துவருகைக்கு ஹேது அருளிச்செய்கிறார் - எங்ஙனேவரும் இத்யாதி வாக்யத்வயத்தாலே.

என்பராயிற்று. [கண்ணும் வாயும் துவர்ந்து] - எங்ஙனேவருமென்று அறியாமையாலே, திக்குக்கள்தோறும் பார்த்துக் கண்பசையறவுலர்ந்தது. "கண்ணநீர்கைகளாலிறைக்கும்" என்னும் தசையும் கழிந்தது. கூப்பிட்டு வாயும் பசையறவுலர்ந்தது. [அடியேன்நாணி]- அத்தலையில்அவத்யம் நம்மதாம்படியான ஸம்பந்தமுடைய நான் லஜ்ஜித்து. இவனை நாட்டார் என்சொல்லுகிறார்களென்று லஜ்ஜித்தேன்னுதல்; ப்ரயோஜநார்த்தியாய்க் கூப்பிடுகையன்றியே, முறையறிந்து காண்கைக்குக் கூப்பிட்ட நமக்குத் தன்படி அழகிதாயிருந்ததென்று லஜ்ஜித்தேன்னுதல். [நன்னாடு] - * அநந்தக்லேஸபாஜநமாகையாலே விபரீதலக்ஷணையாதல், விஷயாநுபவத்தாலே களித்துவர்த்திக்கும் தேசமேன்னுதல். பிள்ளான், "எம்பெருமானைப்பெற்று அநுபவிக்கும் நாடுகாண்" என்னுமாம், "இல்லையாகில் கூப்பிடார்களோ?" என்று. [அலமந்தால்] - தடுமாறினால். [இரங்கி] - உனக்கு அபேக்ஷையில்லாவிட்டால் பராநர்த்தத்துக்கு இரங்கவேண்டாவோ? ருஷிகளுக்குள்ள ஆந்ருஸம்ஸ்யமு மில்லையோ? [ஒருநாள்] - பலநாள் வேணுமென்கிறேனோ? [நீ] - கண்டுகொண்டு நிற்கவேண்டும்படி வைலக்ஷண்யத்தையுடைய நீ. [அந்தோ] - உன் வைலக்ஷண்யம் அறியாதொழிந்தால், எனனார்த்தியும் அறியாதொழிவதே! [காணவாராய்] - ப்ரயோஜநார்த்தியாய் அழைக்கிறேனோ. [கருநாயிறுதிக்கும] - கறுத்திருக்கிற ஆதித்யனுதிக்கிற. [கருமாமாணிக்கநாள்நல்மலைபோல] - அவ்வாதித்யனுதிக்கிற உதயகிரி இருக்கிறபடி. நீலமாய்ப் பெருவிலையனான ரத்நபர்வதம்போலே. [நாள்நல்மலை] - "நாட்பூ" என்னுமாபோலே, அபிநவமாய் ஶ்லாக்யமான மலை. "கருமாமாணிக்கம் - நன்மலைமேல் - கருநாயிறுதிக்கும் - பொழுது - போல் - முடிசேர்சென்னியம்மான்" என்றுகூட்டுவது. நாள் - பொழுது. [சுடர்ச்சோதிமுடி] - மிக்க புகரையுடைய மயிர்முடி. 'கருநாயிறுதிக்கும்' - என்கிற த்ருஷ்டாந்தபலத்தாலே, முடியென்று - மயிர்முடியாகிறது. [சேர்

இத்தால் பாவம் - கண்ணநீர் இத்யாதி. கூப்பிட்டு இத்யாதிவாக்யம் எங்ஙனேவரும் இத்யாதி வாக்யத்தோடேகூட்டு. "நாணி" என்றதின் †முந்தின அர்த்தாநுகுணமாக "அடியேன்" என்றதுக்கு அர்த்தம் - அத்தலையிலவத்யம் இத்யாதி. "அடியேன்" என்றதுக்கும் "நாணி" என்றதுக்கும் அர்த்தாந்தரம் - ப்ரயோஜநார்த்தியாய் இத்யாதி. ஆக, லஜ்ஜாஹேது இரண்டு. "நன்னாடு" என்றதுக்கு மூன்றர்த்தம் - அநந்தக்லேஸ இத்யாதி வாக்யத்ரயத்தாலே. இரண்டாமர்த்தம் - ஸம்ஸாரிகளபிப்ராயத்தாலே. விஷயாநுபவத்தாலே - ஶப்தாதிவிஷயாநுபவத்தாலே. அது எப்படியென்ன-இல்லையாகில் இத்யாதி. "அலமந்தால் - தடுமாறினால்இரங்கி" என்றதுக்கு பாவம்- உனக்கு இத்யாதி.பராநர்த்தத்துக்கு இரங்கினவர்களுண்டோவென்ன-ருஷிகளுக்கு இத்யாதி.ருஷிகளுக்குள்ள என்றது - பிராட்டிக்கு இரங்கின வால்மீகியைக்கடாக்ஷித்து. "நீ" என்றதுக்கு - "காணவாராய்" என்றதுக்கு அநுகுணமாக அர்த்தம் - கண்டுகொண்டு இத்யாதி. "அந்தோ" என்றதுக்கு ஹார்த்தபாவம் - உன் வைலக்ஷண்யம் இத்யாதி. "கருமாமாணிக்கமலை" என்று -வர்ணிக்கிறதுக்கு பாவம் - அவ்வாதித்யன் இத்யாதி. நாட்பூ - அப்போதலர்ந்தபூ. அர்த்தாந்தரம் - கருமாமாணிக்கம் இத்யாதி- முந்தின அர்த்தத்துக்கு, நாளநன என்று - முழுச்சொல்லாய், அதுக்கர்த்தம் - அபிநவமாய், அத ஏவ ஶ்லாக்யமானமலையென்றபடி. கருமாமாணிக்கநாள்நல்மலையில் - கருநாயிறுதிக்குமாபோலேயிருக்கிற - முடிசேர்சென்னியம்மானென்றபடி. இரண்டாமர்த்தத்துக்கு, "நாள், நல்" என்று பிரித்து, நாளென்று - பொழுதாய், "கருமாமாணிக்கம் - நன்மலைமேல் கருநாயிறுதிக்கும் - பொழுது - போல் - முடிசேர்சென்னியம்மான்" என்று அந்வயிப்பது. "முடி" என்றால் - மயிர்முடியென்கைக்கு நியாமகமேது?என்ன- கருநாயிறு இத்யாதி. மயிர்முடிக்கு ஆஶ்ரயம் - உத்தமாங்கமாய், அது திருமேனியிலேகதேசமாகையாலே - அதுக்காஶ்ரயமானதிருமேனி என்கிறாராதல்,

† இங்கே அரும்பதவாக்யம் அந்வயிக்கவில்லை.

சென்னி] - அதுக்குஆஶ்ரயமான திருமேனி ரத்நபர்வதம்போலேயாயிற்றிருப்பது. [அம்மானே] - ஸர்வேஶ்வரனே! ஸம்ஸாரி முக்தனாய்ச்சென்றால், தாபஹரமாக அவனுக்குச் செய்வது திருக்குழலைப்பேணுமத்தனை. "கேஶவ꞉ க்லேஶநாஶந꞉"(கேஶவ꞉க்லேஶ நாஶந꞉) என்றிறே இருப்பது. (உ)

மூன்றாம் பாட்டு.

முடிசேர்சென்னியம்மா!நின்மொய்பூந்தாமத்தண்துழாய்
கடிசேர்கண்ணிப்பெருமானே! என்றென்றேங்கியழுதக்கால்
படிசேர்மகரக்குழைகளும் பவளவாயும்நால்தோளும்
துடிசேரிடையுமமைந்தது ஓர்தூநீர்முகில்போல்தோன்றாயே.

ஆ.—(முடிசேர்.) - நிரதிஶயபரிமள துளஸீலலிததாமான அலகஹாரத்தை யுடையவனேயென்றென்று ஏங்கி அழுதக்கால், கர்ணபாஶ ஸுஸம்ஶ்லிஷ்ட மகர குண்டல வித்ருபஸத்ருஶாதர சதுர்பாஹுதநுதர மத்யஶோபிதமாய், விமலஸலில பரிபூர்ணமாயிருப்பதொரு பயோதம்போலே வந்து தோன்றுகிறிலை என்கிறார்.

ஒ.—மூன்றாம்பாட்டில், என்னுடைய ஆர்த்திதீரும்படி விலக்ஷணமாய் ஶ்ரம ஹரமான தூநீர்முகில்போலே வந்துதோற்றியருள வேணுமென்கிறார்.

[முடியென்று தொடங்கி] - ஸர்வைஶ்வர்யஸூசகமான திருவபிஷேகத் தோடேகூடின சென்னியையுடைய ஸர்வேஶ்வரனே! உனக்குத்தகுதியாய் மிகவும் அழ கியதாய் ஒளியையுடைத்தாய் ஶ்ரமஹரமாய்ப் பரிமளம் மிகாநின்றுள்ள திருத்துழாய் மாலையையுடைய பெரியோனே என்று நிரந்தரமாகச் சொல்லாநின்றுகொண்டு பொருமி யழுதால். [படிசேர் மகரக்குழையென்று மேலுக்கு] - படியாய்ச் சேர்ந்திருந்துள்ள மகரக்குழைகளும் பவளம்போலேயிருக்கிற வாயும் நாலுதோளும் துடியையொத்திருந் துள்ள இடையையுமுடைத்தாய்க்கொண்டு சமைந்து தெளிந்த நீரை முகக்கையாலே நல்லநிறத்தையுடைய மேகம்போலே வந்துதோன்றவேணும். படியாவது - திரு வுடம்பென்றுமாம்.

ப.—அநந்தரம், ஆஹ்ரணுவபவஶோபையையுடைய காளமேகம்போலே உன்னுடைய ஔதார்யம் ப்ரகாஶிக்கும்படி வந்துதோற்றவேணுமென்கிறார்.

முடி-(உஹபவிஹூதிநாதத்வத்தால்வந்த ஆயிராஜ்யத்துக்கு ஸூசகமான) திரு வபிஷேகத்தோடு, சேர் - பொருந்தின, சென்னி - திருமுடியையுடைய, அம்மா -

---

"சென்னி" என்று - விக்ரஹத்துக்கும்உபலக்ஷணமாதல், மயிர்முடியைச்சொன்னதுக்கு ஹாவம் ஸம்ஸாரி இத்யாதி. அப்படி தாபஹரமோவென்ன, ப்ரமாணம் - **கேஶவ꞉** இத்யாதி. "**நாகேஶவ்யோ நஹ்யந்தே நவஶிஷாஷிதக꞉ । கிம்ஷயாநாதிபுதோதேவ꞉கேஶவ꞉ க்லேஶநாஶந꞉**" "கருமாமாணிக்கம் - நன்மலைமேல் கருநாயிறுதிக்கும் நாள் - போலேயிருக்கிற சுடர்ச் சோதி முடிசேர்சென்னியம்மானே - காணவாராயென்றென்று" என்று தொடங்கி, 'நீ அந்தோ! காணவாராய ந்யந்வய: (உ)

ஸ்வாமியானவனாய், நின் - உனக்கு அஸாதாரணமாய், மொப் - செறிந்து, பூ - தூப்ப நீயமாய், தாமம் - ஒளியையுடைத்தாய், தண் - குளிர்ந்த, துழாய் - திருத்துழாயாகிற, கடி சேர் - பரிமளோத்தரமான, கண்ணி - மாலையையுடைய, பெருமானே - ஸர்வாதிக னானவனே! என்றென்று - என்றென்று, ஏங்கி - பொருமி, அழுதக்கால் - அழுதால், படி - வடிவுக்கு, சேர் - சேர்ந்த, மகரக்குழைகளும் - திருமகரக்குழைகளும், பவளம்- பவளம்போன்ற, வாயும் - திருவதரமும், நால் - நாலு, தோளும் - திருத்தோளும், துடிசேர் - துடிபோலேயிருக்கிற, இடையும் - இடையுமுடைத்தாம்படி, அமைந்தது - சமைந்த, தூ - நிர்மலமான, நீர் - நீர்மையாலே பூர்ணமாய், ஓர் - அத்விதீயமாயி ருப்பதொரு, முகில்போல் - மேகம்போலே (உன்னுடைய உபகாரகத்வம் ப்ரகாசிக்கும் படி), தோன்றாய் - தோன்றவேணும்.

இ.—மூன்றாம்பாட்டில், தெளிந்தநீரைப் பருகின காளமேகம்போலே ஸ்ரமஹரமான வடிவோடே என்னார்த்தி தீரவந்து தோன்றவேணுமென்கிறார்.

[முடிசேர் சென்னியம்மா] - ஆதிராஜ்யஸூசகமான திருவபிஷேகத்தோடே சேர்ந்தசென்னியையுடையஸர்வேஸ்வரனே! [நின்மொய் பூந்தாமத்தண் துழாய்]- தகுதி யாய்ச் செறியத்தொடுக்கப்பட்டு மநோஹரமாய் ஒளியையுடைத்தாய் ஸ்ரமஹரமாய், நாட்செல்லநாட்செல்லப் பரிமளம் மிக்குச்செல்லுகிற திருத்துழாய் மாலையையுடைய ஸர்வேஸ்வரனே! [என்றென்று] - ஒருகால் சொல்லி யாறியிருந்தேனாய்த்தான் தாழ்க் கிறாயோ? [ஏங்கியழுதக்கால்] - பொருமியழுதக்கால்: என்னுடைய அழுகைக்குரலில் தளர்த்தியைக்கேட்டால் சடக்கெனவந்துகொடு நிற்கவேண்டாவோ? [படிசேர் மகரக் குழைகளும்]-ஸ்வபாவமாய்க்கொண்டு சேர்ந்தவென்னுதல்; படியென்று-திருமேனியாய், அதுக்குச் சேர்ந்தவென்னுதல். "படிகண்டறிதியே" என்னக்கடவதிறே. [பவள வாயும்] - வைரூபமெல்லாம் தோற்றும் திருவதரமும், அணைக்கைக்கு கல்பகதரு பணைத் தாற்போலே நாலுதோள்களும், துடிபோலேயிருந்த இடையுமாய்க்கொண்டு சமைந்த தொரு முகில்போலேயாயிற்று வடிவிருப்பது. இவ்விசேஷணங்கள் கேவலம் முகி லுக்கில்லாமையாலே அத்புதோபமை. [தூநீர்முகில்] - தெளிந்தநீரை முகந்த முகில். அகவாயில்தண்ணளியெல்லாம் வடிவழகிலே காணலாம்படி வந்துதோற்றவேணும்.

ஈடு.—மூன்றாம்பாட்டு. தெளிந்தநீரைப்பருகின காளமேகம்போலே ஸ்ரம ஹரமான வடிவோடே என்னார்த்தி தீரவந்து தோற்றவேணுமென்கிறார்.

[முடிசேர்சென்னியம்மா] - ஆதிராஜ்யஸூசகமான திருவபிஷேகம் சேர்ந்த சென்னியையுடைய ஸர்வேஸ்வரனே! [நின்மொய்பூந்தாமத்தண்துழாய்] - தகுதியாய்ச் செறியத் தொடுக்கப்பட்டு மநோஹரமாய் ஒளியையுடைத்தாய் ஸ்ரமஹரமாய், நாட்செல்ல நாட்செல்லப் பரிமளம் மிக்குச்செல்லுகிற திருத்துழாய்மாலையையுடைய ஸர்வேஸ்வரனே. [என்றென்று] - ஒருகால்சொல்லி ஆறியிருக்கிறேனாய்த்தான் ஆறியிருக்கிறாயோ? [ஏங்கி யழுதக்கால்] - பொருமி அழுதக்கால். என்னழுகைக்குரலில் தளர்த்தியைக்கேட்டால்

மூன்றாம்பாட்டு.—முடிசேர் இத்யாதி. "தூநீர்முகில்போல்தோன்றாயே" என்றத்தைக் கடாக்ஷித்து அவதாரிகை - தெளிந்தநீரை இத்யாதி.

"முடிசேர்" என்று விஸேஷித்ததுக்குபாவம் - ஆதிராஜ்ய இத்யாதி. நின் - உனக்குத் தகுதியாய். தாமம் - ஒளி. "சேர்" என்கிற வர்த்தமானார்த்தம் - நாட்செல்ல இத்யாதி. இத்தால்

சடக்கெனவந்து கொடுநிற்கவேண்டாவோ? [படிசேர்மகரக்குழைகளும்] - படியாய்ச் சேர்ந்தவென்னுதல், படியிலேசேர்ந்தவென்னுதல்: ஸ்வபாவமாய்க்கொண்டு சேர்ந்த வென்னுதல், திருமேனியிலேசேர்ந்த வென்னுதல். "படிகண்டறிதியே" என்னக் கடவதிறே. [பவளவாயும்] - வைந்யமெல்லாந்தோற்றும் திருப்பவளமும். [நால்தோளும்] - அணைக்கைக்குக் கல்பகதருபணைத்தாற்போலே நாலுதோளும். [துடி இத்யாதி] - துடி போலேயிருந்த இடையுமாய்க்கொண்டு சமைந்ததொரு முகில்போலேயாயிற்று வடிவிருப்பது. இவ்விஶேஷணங்கள் கேவலம் முகிலுக்கு இல்லாமையாலே அபூதோபமை. [தூநீர்முகில்] - தெளிந்தநீரைமுகந்த முகில். அகவாயில்தண்ணளியெல்லாம் வடிவிலே காணலாம்படி வந்துதோற்றவேணும். (௩)

நான்காம் பாட்டு

தூநீர்முகில்போல்தோன்றும்நின்சுடர்கோள்வடிவுங்கனிவாயும்
தேநீர்கமலக்கண்களும் வந்தென்சிந்தைநிறைந்தவா!
மாநீர்வெள்ளிமலைதன்மேல் வண்கார்நீலமுகில்போலத்
தூநீர்க்கடலுள்துயில்வானே! எந்தாய்! சொல்லமாட்டேனே.

ஆ.—(தூநீர்.) - விமலஜலில பரிபூர்ணமாயிருப்பதொரு பயோதம்போலே யிருந்த உன்னுடைய உஜ்ஜ்வலமான திருவடிவும், கனிவாயும், மகரந்தநிர்ஹரமாய் கம்பீராம்பஸ்ஸமுத்பூதமாய் - ஸம்ருத்தநாளமாய் - ரவிகரவிகஸிதமான புண்டரீக தளம்போலேயிருந்த திருக்கண்களும், நயநகோசரமன்றியே வந்து என்சிந்தைநிறைந்து வ்யஸநகரமாகிறபடி சொல்லநிலமல்ல வென்கிறார்.

ஒ. – நாலாம்பாட்டில், உன்னுடைய அழகுவந்து என்ஹ்ருதயத்தில் நிறைந்து நலிகிறபடி என்னால் சொல்லி முடிகிறதில்லையென்று எம்பெருமானை நோக்கி விஜ்ஞாபிக்கிறார்.

[தேநீரென்று தொடங்கி] - தேனுகிற நீரையுடைய செவ்வித்தாமரைப் பூப்போலேயிருக்கிற கண்களும் என்ஹ்ருதயத்திலே பூர்ணமாய் நலிகிறபடி. தேனின் நீர்மையையுடைய வென்றுமாம். [மாநீர்வெள்ளிமலையென்று மேலுக்கு] - நீர் வெள்ளத்திலே வெள்ளிமலையின்மேலே அழகிதாய்க் கறுத்துக் கிடந்ததொரு மேகம்போலே ஶுத்தஜலமான கடலிலே திருவநந்தாழ்வான்மேலே கண்வளர்ந்தருளும் என்ஸ்வாமீ!

ஹாவம் - என்னழகை இத்யாதி. உக்தார்த்ததத்வயவிவரணம் - ஸ்வபாவமாய் இத்யாதி வாக்யத்வயம். "படி" என்றால் - திருமேனியைக்காட்டுமோவென்ன - படிகண்டு இத்யாதி. திருப்பவளத்தைச்சொல்லுகிறவதுக்குஹாவம்-வைந்யமெல்லாம் இத்யாதி, "நாற்றோள்" என்றதுக்குஹாவம்-அணைக்கைக்கு இத்யாதி. "தூநீர்முகில்போல்தோன்றும்" என்றதுக்குஹாவம் - அகவாயில் இத்யாதி. துடி - வாத்யவிஶேஷம். முடிசேர்சென்னியம்மா! நின்மொய்பூந்தாமத்தண் - கடிசேர் - துழாய் - கண்ணிப்பெருமானே என்றுதொடங்கி அந்வயம். இங்கு த்ருஷ்டாந்தமில்லாமையாலே, "முடி" என்று - திருவபிஷேகம், (௩)

ப.—அநந்தரம், ஆஶ்ரிதார்த்தமாக க்ஷீரார்ணவத்திலே கண்வளர்ந்தருளுகிற உன்வடிவழகு என்னெஞ்சிலே நிறைந்தபடி சொல்லமாட்டுகிறிலேனென்கிறார்.

மா - பெரிய, நீர் - நீருக்குள்ளே (கிடக்கிறதொரு), வெள்ளிமலைதன்மேல் - வெள்ளிமலையின்மேலே, வண் - உதாரமான, கார் - கார்காலத்தில், நீலமுகில்போல - காளமேகம்போலே, தூ - வெளுத்த, நீர் - நீரையுடைய, கடலுள் - க்ஷீரார்ணவத்திலே, (ஓங்கின திருவரவணையின்மேலே), துயில்வான் - கண்வளர்ந்தருளுகிற, எந்தாய் - என் ஸ்வாமியானவனே ! தூ - தெளிந்த, நீர் - நீராலேபூர்ணமான, முகில்போல் - மேகம்போலே, தோன்றும் - ப்ரகாஶியாநிற்கிற, நின் - உன்னுடைய, சுடர் - ஒளியை, கொள் - உடைத்தான, வடிவும் - வடிவும், கனி - பக்வபலம்போலேயிருக்கிற, வாயும் - திருவதரமும், தேன்நீர் - மதுஜலத்தையுடைய, கமலம் - கமலம்போலே (ஶ்ரமஹரமான), கண்களும் - திருக்கண்களும், வந்து - (இங்கே) வந்து, என் - என், சிந்தை - நெஞ்சு, நிறைந்தவா - நிறைந்தபடி, சொல்லமாட்டேன் - (பாசுரமிட்டுச்) சொல்லமாட்டுகிறிலேன். தேநீர்கமலம் - தேனை ஸ்வபாவமாகவுடைய கமலமென்றுமாம். வெள்ளிமலையென்கிற த்ருஷ்டாந்தபலத்தாலே திருவரவணை அத்யாஹார்யம். அன்றியே, ஶ்லாக்யமான நீர்மையையுடைய வெள்ளிமலையென்று - ஓங்கின க்ஷீரார்ணவத்துக்கு த்ருஷ்டாந்தமாகவுமாம்.

இ.—நாலாம்பாட்டில், உன்னழகு வந்து என்மநஸ்ஸிலே நிறைந்து நலிகிறபடியை என்னால் பேசிமுடிகிறதில்லையென்கிறார்.

[தூநீர்முகில்போல் தோன்றும்] - கண்டபோதே விடாய்கெடும்படியான வர்ஷுகவலாஹகம்போலேயாயிற்றுத் தோன்றும்போது. [நின்சுடர் கொள்வடிவும்] - ஶுத்தஸத்த்வமாகையாலே நிரவதிகதேஜோரூபமான விக்ரஹத்துக்கு, †உபசயஸ்வரூபமான மேகமோ த்ருஷ்டாந்தம்? [கனிவாயும்] - கண்டபோதே நுகரலாம் கனிபோலேயிருந்துள்ள வாயென்னுதல், கனிந்திருந்துள்ள வாயென்னுதல். [தேநீர் கமலக்கண்களும்] - தேனுகிற நீரையுடைத்தான தாமரைப்பூப்போலேயிருக்கிறகண்களும். இத்தால் செவ்வியை நினைக்கிறது. தேனினுடைய நீர்மையையுடைய கண்களென்றுமாம். அதாவது – கண்ணாலே பருகலாம்படியிருக்கை. [வந்தென் சிந்தை நிறைந்தவா] - வந்து என் ஹ்ருதயத்திலே நிறைந்தபடி - சொல்லமாட்டேனென்றந்வயம். இதரவிஷயங்கள் அநுபவித்துவிட்டால் விஸ்மரிக்கலாயிருக்கும், இவ்விஷயம் அநுபவித்துப் போகின்றாலும் நெஞ்சிலே யூற்றிருக்கும். [மாநீர் வெள்ளிமலைதன்மேல்] - மிக்க நீர் வெள்ளத்திலே ஒருவெள்ளிமலையின்மேலே. திருப்பாற்கடலிலே திருவநந்தாழ்வான் மேலேயென்கை. [வண்கார் நீலமுகில்போல] - உதாரமாய்க் கறுத்து நெய்த்திருப்பதொரு முகில் படிந்தாற்போலே. தார்ஷ்டாந்திகமான திருவநந்தாழ்வானையழைத்துக் கொள்ளுமித்தனை. [எந்தாய்] - கீழ்ச்சொன்ன வைலக்ஷண்யமில்லையாகிலும் விடவொண்ணாத ப்ராப்தியிருக்கிறபடி. [வந்தென்சிந்தை நிறைந்தவா - சொல்லமாட்டேன்] - மநஸ்ஸில் ப்ரகாஶம் க்லேஶஹேதுவாகாநின்றது, இதுக்கொரு பாசுரம் அறிகிறிலேன். விரஹதஶையில் குணாநுஸந்தாநம் க்லேஶத்துக்கு உடலாமித்தனையிறே. தூநீர்க்கடலுள் துயில்வானேயென்று - "நெஞ்சுநிறையக் காணவேணும்" என்னும் அபேக்ஷையில்லாதார்க்கு முற்பாடனாய்வந்து சேர்ந்தபடி சொல்லுகிறது.

† உபசயாபசய என்ற பாடம் பொருந்தும்.

ஈடு.—நாலாம்பாட்டு. உன்னுடைய வடிவழகுவந்து என்மநஸ்ஸிலே நிறைந்து நலிகிறபடி என்னால் பேசிமுடிகிறதில்லையென்கிறார்.

[தூநீர்முகில்போல்தோன்றும்] - கண்டபோதே விடாய்கெடும்படியான வர்ஷுகவலாஹகம்போலேயாயிற்றுத் தோன்றுவது. [நின்சுடர்கொள்வடிவும்]-சுத்தஸத்த்வமயமாகையாலே நிரவதிகதேஜோரூபமான விக்ரஹத்துக்கு, அன்னலும் துன்னலுமாய்த் திரண்ட மேகத்தை ஒப்பாகச் சொல்லவொண்ணாதிறே. * ஒண்சுடர்க்கற்றையிறே. [கனிவாயும்] - கண்டபோதே நுகரலாம் கனிபோலேயிருக்கிற வாயும். [தேநீர்கமலக் கண்களும்] - தேனாகிற நீரையுடைத்தான தாமரைப்பூப்போலேயிருந்த கண்களும். இத்தால் - செவ்வியை நினைக்கிறது. தேனினுடைய நீர்மையையுடைய கண்களென்றுமாம். அதாவது - கண்ணாலே பருகலாயிருக்கை. [வந்தென் சிந்தைநிறைந்தவா] - வந்து என் சிந்தைநிறைந்தவா - சொல்லமாட்டேனென்றந்வயம். இதரவிஷயங்கள் அநுபவித்துவிட்டால் விஸ்மரிக்கலாயிருக்கும்: இவ்விஷயம்அநுபவித்துப் போரநின்றாலும் நெஞ்சிலேயூற்றிருக்கும். [மாநீர்வெள்ளிமலைதன்மேல்]-மிக்கநீர்வெள்ளத்தே ஒருவெள்ளிமலையின்மேலே. [வண்கார்நீலமுகில்போல] - உதாரமாய்க் கறுத்து நெய்த்திருப்பதொருமுகில் படிந்தாற்போலே யென்னுதல். உதாரமாய்க் கார்காலத்தில் முகில்படிந்தாற்போலே என்னுதல். [தூநீர்க்கடலுள்துயில்வானே] - சுத்தஜலத்திலே திருவநந்தாழ்வான்மேலே கண்வளர்ந்தருளுகிறவனே! வெள்ளிமலையென்கிற த்ருஷ்டாந்தபலத்தாலே தார்ஷ்டாந்திகத்திலும் அழைத்துக்கொள்ளுமித்தனை. [எந்தாய்] - கீழ்ச்சொன்ன வைலக்ஷண்யமில்லையாகிலும் விடவொண்ணாத ப்ராப்தியிருக்கிறபடி. [எந்தாய் - வந்தென்சிந்தைநிறைந்தவா - சொல்லமாட்டேன்] - மநஸ்ஸில் ப்ரகாசம் க்லேசஹேதுவாகாநின்றது, இதுக்கு ஒரு பாசுரம் அறிகிறிலேன். விரஹதசையில் குணாநுஸந்தாநம் க்லேசத்துக்கு உடலாமத்தனையிறே. தூநீர்க்கடலுள் துயில்வானென்று - ''காணவேணும்'' என்னும் அபேக்ஷையில்லாதார்க்கு முற்பாடனாய்வந்து சாய்ந்தபடி சொல்லுகிறது. (௪)

நாலாம்பாட்டு.—தூநீர் இத்யாதி. ''சுடர்கொள்வடிவும் கனிவாயும் - கண்களும் - சிந்தை நிறைந்தவா - சொல்லமாட்டேன்'' என்றத்தைக்கடாக்ஷித்துஅவதாரிகை - உன்னுடைய இத்யாதி.

''தூநீர்முகில்'' என்றுவிசேஷித்ததுக்குபாவம் - கண்டபோதே இத்யாதி. *'முகில் போல்' என்று த்ருஷ்டாந்தம்சொன்னால், ''வடிவும்'' என்னாதே, ''சுடர்கொள்'' என்றுவிசேஷிக்கிறதென்னென்ன -* சுத்தஸத்த்வ இத்யாதி. அன்னல் - *புகை.* துன்னல் - *சிறுதிவலை. ''நிரவதிகதேஜோரூபம்'' என்றதுக்குப்ரமாணம் -* ஒண்சுடர் இத்யாதி. *''தேனீர்கமலக்கண்'' என்கிறத்தால் பலிதம் -* இத்தால் இத்யாதி. *தேனாகிற நீரென்றபோது, செவ்வியைச் சொல்லுகிறது; தேனினுடைய ஸ்வபாவத்தையுடைய கண்ணென்றபோது, போக்யதையைச்சொல்லுகிறது. நிறைந்தவா - நிறைந்தப்ரகாரம். விஶ்லேஷதசையிலே ''நிறைந்தவா'' என்கிறதென்னென்ன -* இதரவிஷயங்கள் இத்யாதி *வாக்யத்வயம். ''கார், நீலம்'' என்றதுக்குஅர்த்தம் -* கறுத்துநெய்த்தது *என்று. ''கார்'' என்றதுக்கு அர்த்தாந்தரம் -* கார்காலத்தில் *என்று.* திருவநந்*தாழ்வானுக்கு வாசகஶப்தமில்லையேயென்ன -* வெள்ளிமலையென்கிற இத்யாதி. *ஶப்தார்த்தம் -* மநஸ்ஸில் இத்யாதி. *மநஸ்ஸிலே ப்ரகாசிக்கிறது க்லேசஹேதுவோவென்ன -* விரஹதசையில் இத்யாதி. *ஸமுத்ரஶாயித்வகதநப்ரயோஜநமேது?என்ன -* தூநீர்க்கடலுள் இத்யாதி. *மாநீர் வெள்ளி என்றுதொடங்கி, எந்தாய் - தூநீர்முகில்போல் என்றுதொடங்கி, நிறைந்தவா - சொல்லமாட்டேன் இத்யந்வய:.* (௪)

ஐந்தாம் பாட்டு.

சொல்லமாட்டேனடியேன் உன்துளங்குசோதித்திருப்பாதம்
எல்லையில்சீரிளநாயிறு இரண்டுபோலென்னுள்ளவா !
அல்லலென்னுமிருள்சேர்தற்கு உபாயமென்னே ? ஆழிசூழ்
மல்லைஞாலமுழுதுண்ட மாநீர்க்கொண்டல்வண்ணனே !

ஆ.—(சொல்லமாட்டேன்)-ப்ரளயகால ஸகல ஸலில பரிபூர்ணமான மேகத்தின் நிறம்போலேயிருந்த திருநிறத்தையுடையவனே ! உன்னுடைய நிரதிஶயதீப்தியுக்தமான திருவடிகள், நிரதிஶயதேஜோமயமாய் நிரவதிகஸௌந்தர்யநிதியாயிருப்ப இளநாயிறிரண்டுபோலே என்னுள்ளே விளங்குகிறபடி மறக்கவும் முடிகிறதில்லையென்கிறார்.

ஒ.—அஞ்சாம்பாட்டில், உன்னுடைய அழகு என்னுடைய ஹ்ருதயத்திலே யநுஸம்ஹிதமாய் நின்று நலியாநின்றது; இது மறக்க விரகுசொல்ல வேணுமென்கிறார்.

[சொல்லமாட்டேனென்று தொடங்கி] - விளங்காநின்ற வொளியையுடைய திருவடிகள் எல்லையில்லா வொளியையுடைய இரண்டு ஆதித்யர்களைப்போலே என்னுள்ளேநின்று நலிகிறபடி நான் சொல்லமாட்டுகிறிலேன். [அல்லலென்று தொடங்கி] - அநர்த்தரூபமாகச் சொல்லுகிற அஜ்ஞாநம் வருகைக்கு உபாயமென் ? சொல்லவல்லையே !; கடல்சூழ்ந்த மஹாப்ருதிவியையெல்லாம் ப்ரளயத்தில் அந்தரப்படாமே திருவயிற்றிலேவைத்துப் பரிஹரித்தருளின பரமோதாரனே !

ப.—அநந்தரம், ஆபத்ஸகனான உன்திருவடிகள், பாலாதித்யர்கள்போலே என்னெஞ்சிலே ப்ரகாஶியாநின்றதுகள் ; கிட்டி அநுபவிக்கப்பெறாமல் க்லேஶியாதபடி மறக்க விரகேதோ? என்கிறார்.

ஆழி - ஸமுத்ரத்தாலே, சூழ் - சூழப்பட்ட, மல்லல் - பெரிய, ஞாலம் - ஜகத்தை, முழுது - எல்லாம், உண்ட-(ப்ரளயங்கொள்ளாமல்) வயிற்றிலேவைத்து, மா - நிரம்பின, நீர் - நீரையுடைத்தான, கொண்டல் - காளமேகம்போலேயிருக்கிற, வண்ணனே - வடிவையுடையனானவனே ! அடியேன் - (உன் ஆபத்ஸகத்வத்துக்குத்தோற்று) அடிமைப்பட்ட நான், (என்னகவாயில் ப்ரகாஶத்துக்கு), சொல்லமாட்டேன் - பாசுரமிட்டுச் சொல்லமாட்டுகிறிலேன் ; உன் - உன்னுடைய, துளங்கு - விளங்குகிற, சோதி - தேஜஸ்ஸையுடைத்தான, திருப்பாதம் - திருவடிகளானவை, எல்லைஇல் - அளவிறந்த, சீர் - அழகையுடைய, இளநாயிறு - பாலாதித்யர்கள், இரண்டுபோல் - இருவரைப்போல, என் - என், உள்ளஆ - உள்ளேயாகாநின்றன; 'இப்படி ப்ரகாஶியாநிற்க, (கண்டு கிட்டி அநுபவிக்கப் பெறாமல் க்லேஶியாதபடி), அல்லல் - து:கரூபம், என்னும் - என்னலாம்படியான, இருள் - (மறப்பாகிற) இருளை, சேர்தற்கு - கிட்டுகைக்கு, உபாயம் - வழி, என்னே-எது ? (சொல்லவேணும்.) ஆநந்தமாக ப்ரகாஶிக்கச்செய்தே, பாஹ்யஸம்ஶ்லேஷம் கிடையாதொழிவதில் மறக்கை உத்தேஶ்யமென்று கருத்து. பூர்வோத்தரங்களான பாட்டுக்கள் ஆர்த்திஸூசகமாகையாலே இதுக்கும் இதுவே பொருள்.

இ.—அஞ்சாம்பாட்டில், உன்னுடைய அழகு என்னுடையஹ்ருதயத்திலே ஸ்ம்ருதிவிஷயமாய் நின்று நலியாநின்றது: இது மறக்க ஒருவிரகு சொல்லவேணு மென்கிறார். மறக்கும்பரிஹாரம் என்னுடைய அஸக்தியாநமன்றோ? மறவீரென்ன; நீ * மயர்வறுக்கையாலே * துயரறுசுடரடி என்மநஸ்ஸிலே குடிபுகுந்து நலியாநின்றது; "சரணம்" என்று நீயே சொல்லவேணும்.

[சொல்லமாட்டேன்] - என்ஹ்ருதயத்திலே நின்று நலிகிறபடிக்குப் பாசுர மிடப்போகிறதில்லை. [அடியேன்] - ஸம்பந்தத்தாலே தவிரமாட்டுகிறிலேன். அதே தென்ன? [உன்துளங்கு இத்யாதி] - விளங்காநின்ற ஒளியையுடைய உன்திருவடிகள். [எல்லையில்சீர்] - அளவிறந்த அழகையுடைய பாலாதித்யர்கள் இருவரைப்போலே என்ஹ்ருதயத்திலேநின்று நலிகிறபடி. பாலாதித்யர்களென்கிறது - கண்ணாலேபருக லாம்படியிருக்கையாலும், பாதிக்கத்தொடங்கின இத்தனையென்று தோற்றுகையாலும். [இளநாயிறு] - என்னை பாதிக்க அது இளமை மிகுகிறது. என்னுள்ளவா - சொல்ல மாட்டேன். [அல்லல் இத்யாதி] - உன்னைக்காட்டாதே அருமைப்படுத்தப் பார்த்தா யாகில், து:கஸ்வாத்மகமாகச் சொல்லுகிற அஜ்ஞாநமாகிற இருள்சேருகைக்கு உபாயமென்? சொல்லவல்லையே! அநர்த்தரூபமான விஸ்ம்ருதி தேட்டமாம்படியிறே, வடிவழகு ஹ்ருதயத்திலேநின்று நலிகிறபடி. ஏதேனுமாக இவர்க்கு து:கநிவ்ருத்தியேயிப் போது வேண்டுவது. திருவடிகள் நெஞ்சிலே ப்ரகாசியாநிற்க, அஜ்ஞாநம் வந்துசேரு கைக்கு ப்ரஸங்கமின்றியேயிருக்க, அதனைஅபேக்ஷிக்கிறாரிறே. கடல்சூழ்ந்த மஹா ப்ருதிவியையெல்லாம் ப்ரளயத்தில் அந்தரப்படாமே வயிற்றிலேவைத்து ரக்ஷித்த பர மோதாரனே! என்னுதல்; ஆழ்சூழ்மல்லை ஞாலமுழுதுண்ட மாநீரென்று - ஏகார்ணவ மாய், அத்தைப்பருகின மேகம்போலேயிருந்துள்ள வடிவையுடையவனே! என்னுதல். மல்லைஞாலம் - மஹாப்ருதிவி.

ஈடு.—அஞ்சாம்பாட்டு. உன்னுடைய அழகு என் ஹ்ருதயத்திலே ஸ்ம்ருதி விஷயமாய் நலியாநின்றது; இதுமறக்க ஒருவிரகு சொல்லவேணு மென்கிறார்.

[சொல்லமாட்டேன்] - என் ஹ்ருதயத்திலே நின்று நலிகிறபடிக்குப் பாசுர மிடப்போகிறதில்லை. [அடியேன்] - ஸம்பந்தத்தாலே தவிரமாட்டுகிறிலேன். [உன்துள ங்கு இத்யாதி] - அதேதேன்ன,-விளங்காநின்றுள்ள ஒளியையுடைய உன்திருவடிகள். [எல்லே இத்யாதி] - அளவிறந்த அழகையுடைய பாலாதித்யர்களிருவரைப்போலே என்ஹ்ருதயத்தே நின்று நலிகிறபடி. பாலாதித்யர்களேன்கிறது * கண்ணாலே பருகலாயி ருக்கையாலும், பாதிக்கத்தொடங்கினவித்தனை என்றுதோற்றுகையாலும். [இளநாயிறு]- என்னை பாயிக்க பாயிக்க இளமை மிகுகிறபடி.(என்னுள்ளவா சொல்லமாட்டேன்.)

அஞ்சாம்பாட்டு.—சொல்லமாட்டேன் இத்யாதி. "உன்துளங்குசோதித்திருப்பாதம் - என்னுள்ளவா, அல்லலென்னுமிருள் * சேர்தற்குஉபாயமென்னே" என்றபதங்களைக்கடாக்ஷித்து அவதாரிகை -உன்னுடைய இத்யாதி.

"இரண்டுபோலென்னுள்ளவா - சொல்லமாட்டேன்" என்றந்வயாநுகுணமாக அர்த்தம். என்ஹ்ருதயத்திலே இத்யாதி. ஆனால் விடுகிறதுக்கென்னென்ன - ஸம்பந்தத்தாலே இத்யாதி. அதேதேன்ன என்றது - மாட்டாதப்ரகாரமேதென்ன என்றபடி. சீர் - அழகு. "இளநாயிறு" என்றதுக்குஸாவம் - பாலாதித்யர்கள் இத்யாதி. ஸாவாந்தரம் - என்னைபாயிக்க இத்யாதி,

[அல்லல் இத்யாதி] - "உன்னைக்காட்டாதே அருமைப்படுத்தப்பார்த்தாயாகில், நாட்டார் 'தண்ணிது' என்கிற அஜ்ஞாநம்வருவதுஓருபாயம்ஏதோ?" என்றருளிச் செய்வர் பட்டர்; இப்போது மறந்து பிழைக்கலாமேன்னுமத்தாலே. "திருவடிகள் என்ஹ்ருதயத்திலே ப்ரகாஶியாநிற்க, து:கவாத்மகமாம்அஜ்ஞாநம் வருகைக்கு உபாயமுண்டோ" என்னும் அம்மாள். உண்டாகில், உண்டுடுத்துத் திரியலாமே நாட்டாரோபாதி! [ஆழி இத்யாதி] - கடல்சூழ்ந்த மஹாப்ருதிவியையெல்லாம் ப்ரளயத்திலே நசியாமே வயிற்றிலே வைத்து ரக்ஷித்த பரமோதாரனே! ஆழிசூழ்மல்லைஞாலம் முழுதுண்டமாநீரேன்று - ஏகார்ணவமாய், அத்தைப்பருகின மேகம்போலேயிருக்கிற வடிவையுடையவன் என்னுதல். மல்லை ஞாலம் - மஹாப்ருதிவி. (ரு)

ஆறாம் பாட்டு.

கொண்டல்வண்ணா! குடக்கூத்தா! வினையேன்கண்ணா! கண்ணா! என்
அண்டவாணா! என்றுஎன்னையாளக்கூப்பிட்டழைத்தக்கால்
விண்தன்மேல்தான்மண்மேல்தான்விரிநீர்க்கடல்தான்மற்றுத்தான்
தோண்டனேனுன்கழல்காண ஒருநாள்வந்துதோன்றாயே.

ஆ.—(கொண்டல்வண்ணா) - மேகஶ்யாமளனே, அஶேஷ மநோஹர திவ்யசேஷ்டிதங்களையுடையவனே, பாக்யஹீநனான என்னுடையகண்ணா, கண்ணா என்று என்னை யடிமைகொண்டருளுகைக்காகக் கூப்பிட்டழைத்தக்கால், திருநாட்டில் நின்றுதல், பூமியிலுள்ள திருநகரிகளில் நின்றுதல், திருப்பாற்கடலில் நின்றுதல், ஒரு தூணில்நின்றுதல், தொண்டனேனுன்கழல்காண ஒருநாள்வந்து தோன்றாயென்கிறார்.

ஒ.—ஆறாம்பாட்டில், உன்னுடைய ஸௌந்தர்யாதிகளைநினைத்து, "காணவேணும்" என்று நோவுபட்டுக் கூப்பிடுகிற நான் உஜ்ஜீவிக்கும்படி எங்கேனுமோரிடத்திலேவந்து தோற்றியருளவேணுமென்கிறார்.

[கொண்டல்வண்ணாகுடக்கூத்தா] - நிரதிஶயஸௌந்தர்யத்தையும் மநோஹாரியான சேஷ்டிதத்தையுமுடையவனே! [வினையேன் கண்ணாகண்ணா] - எனக்கு த்ருஷ்டியான க்ருஷ்ணனே! [வினையேன்] - காணப்பெறாத இன்னாப்பாலே - வினை

"அல்லலென்னுமிருள்சேர்தற்குபாயமென்னே" என்றதுக்கு ஹார்த்தபாவம் - உன்னைக்காட்டாதே இத்யாதி. "உபாயமேதோ" என்று அவனைக் கேட்கிறாரென்று பட்டர்நிர்வாஹம்; இப்பக்ஷத்தில், "அல்லல்" என்று - தண்மை. அஜ்ஞாநத்தை ப்ரார்த்திக்கைக்கு ஹேது அருளிச்செய்கிறார் - இப்போது இத்யாதி. "என்னுள்ளவா" என்றத்தைக்கூட்டி, "அல்லல்" என்றதுக்கு அர்த்தாந்தரம் - திருவடிகள் இத்யாதி. உபாயமுண்டோ, இல்லையே என்று - †பிரிநிலையேகாரமாக அம்மாள் நிர்வாஹம்; இப்போது, "அல்லல்" என்று - து:கம். உண்டானாலோவென்ன - உண்டாகில் இத்யாதி. "முழுதுண்ட" என்றது - முந்தின அர்த்தத்தில், ஈஶ்வரனுக்கு விஶேஷணம்; இரண்டாமர்த்தத்தில், மாநீர்க்கு விஶேஷணம். ஆழிசூழ் என்றுதொடங்கி, கொண்டல்வண்ணனே - உன்துளங்குசோதி என்றுதொடங்கி, என்னுள்ளவா - அடியேன் - சொல்லமாட்டேன்- அல்லலென்னுமிருள்சேர்தற்கு உபாயமென்னே இத்யந்வய:. (ரு)

† எதிர்மறை என்று இருக்கலாம்.

யேன் என்கிறார். [என்னண்டவாணனென்று தொடங்கி] -. என்னை விஷயீகரிக்கைக்காக அண்டாதிபதியானவனே! என்று என்னையடிமை கொள்ளுகைக்காகக் கூப்பிட்டழைத்தக்கால். [தொண்டனேன்] - சபலனான நான்.

ப.—அநந்தரம், ஆகர்ஷகமான ஸௌந்தர்யசேஷ்டிதாதிகளிலேயகப்பட்டுக் கூப்பிட்டால் ஏதேனும் ஒருமுகத்தாலே வந்து தோன்றவேணுமென்கிறார்.

கொண்டல் - (ப்ரமஹரமான) காளமேகம்போன்ற, வண்ணா - வடிவையுடையவனே! (அவ்வழகேயன்றியே), குடக்கூத்தா - (மநோஹாரிசேஷ்டிதமான) குடக்கூத்தையுடையவனே! வினையேன் - (அத்தைக்கண்டு அநுபவிக்கப்பெறாத) பாபத்தையுடைய எனக்கு, கண்ணா - த்ருஷ்டிபூதனானவனே! கண்ணா - (ஆஸ்ரிதஸுலபனாகைக்காகக்) க்ருஷ்ணனானவனே! என்-எனக்கு ப்ராப்யபூதனாகைக்காக, அண்டவாணா-பரமபதநிர்வாஹகனாயிருக்கிறவனே! என்று — என்று (பலகாலும் உன்ஸ்வபாவங்களைச் சொல்லி), என்னை - என்னை, ஆள - அடிமைகொள்ளுகைக்காக, கூப்பிட்டு-(என்னார்த்தி அதிசயத்தாலே) கூப்பிட்டு, அழைத்தக்கால் - அழைத்தக்கால், (காளமேகம்போலே), விண்தன்மேல்தான் - பரமபதத்தில் நின்றாதல், மண்மேல்தான் - (அவதாரங்களுக்கும் அர்ச்சைகளுக்கும் ஸ்தலமான) பூமியில் நின்றாதல், விரி நீர் கடல்தான் - (அவதாரகந்தமான) க்ஷீரார்ணவத்தில் நின்றாதல், மற்றுத்தான் - (அந்தராத்மாவாய் நிற்கிற) அகவாயில் நின்றாதல், தொண்டனேன் - அதிசபலனான நான், உன் - உன், கழல் - திருவடிகளை, காண - காணும்படியாக, ஒருநாள் - ஒருநாள், வந்து-வந்து, தோன்றாய் - தோன்றவேணும்.

இ.—ஆறாம்பாட்டில், உன்னுடைய ஸௌந்தர்யாதிகளை நினைத்து, "காணவேணும்" என்று கூப்பிடுகிற நான் காணும்படி ஏதேனுமோரிடத்திலே வந்து தோற்றியருளவேணுமென்கிறார்.

[கொண்டல்வண்ணா] - கண்டபோதே விடாய்கெடும்படி ப்ரமஹரமான வடிவையுடையவனே! [குடக்கூத்தா] - மநோஹரமான சேஷ்டிதங்களையுடையவனே! [வினையேன் கண்ணாகண்ணா] - எனக்கு த்ருஷ்டியான க்ருஷ்ணனே! [வினையேன்] - கண்ணையிழந்திருக்கும் படியான பாபத்தைப் பண்ணினேன். [என்னண்டவாணா என்று] - என்னை விஷயீகரிக்கைக்காக அண்டாதிபதியானவனே! கல்யாணகுணஸ்தோமம் ஆஸ்ரிதார்த்தமாயிருக்கிறாப்போலே, விபூதியோகமும் தமக்காகவென்றிருக்கிறார். [என்னையாள] - ஒருப்ரயோஜநாந்தரத்துக்காக அழைக்கிறேனோ? என்னை நித்யகைங்கர்யங் கொள்ளவேணுமென்றன்றோ அழைக்கிறது? [கூப்பிட்டழைத்தக்கால்] - க்ரமப்ராப்தியை ஸஹிக்கவல்லேனாய்த்தான் தாழ்க்கிறாயோ? என் ஆர்த்தத்வநி கேட்டால் "க்ரமத்திலே வருகிறோம்" என்று ஆறியிருக்கலாயிருந்ததோ? [விண்தன்மேல்தான்] - மாநீர்க்கொண்டல் வருமாகாசத்திலே தோற்றவேணும். [விண்தன்மேற்றான்]- பரமபதத்திலிருக்கிற விருப்போடே வந்து தோற்றவுமாம். [மண்மேற்றான்] - அவதரித்துவந்து தோற்றவுமாம். [விரிநீர்க் கடல்தான்] - க்ஷீராப்தியில் கண்வளர்ந்தருளுகிறபடியே வந்து தோற்றவுமாம். [மற்றுத்தான்] - தூணிலேவந்து தோற்றினாற்போலேயாதல் ஆனைக்கு உதவவந்து தோற்றினாற்போலேயாதல் தோற்றவுமாம். [தொண்டனேன்] - உன் திருவடிகளில் கைங்கர்யத்திலே சபலனான நான். [உன்கழல்

காண] - எனக்கு ஜீவநமான திருவடிகளைக்காண. [ஒருநாள்வந்து தோன்றாயே] - "பல நாள் வேணும்" என்று நிர்பந்திக்கிறேனோ? என் ஸத்தை நயை நோக்குகைக்கு ஒரு நாள் வந்து தோற்றியருளவேணும்.

ஈடு.—ஆறாம்பாட்டு. உன்னுடைய ஸௌந்தர்யாதிகளை நினைத்து "காண வேணும்" என்று கூப்பிடுகிற நான் காணும்படி ஏதேனுமோரிடத்திலேவந்து தோற்றி யருளவேணுமென்கிறார்.

[கொண்டல்வண்ணா] - காணவே விடாயாறும்படியான வடிவை யுடைய யவனே! [குடக்கூத்தா] - மநோஹாரியான சேஷ்டிதத்தையுடையவனே! [வினையேன் கண்ணாகண்ணா] - எனக்கு த்ருஷ்டிபூதனான க்ருஷ்ணனே! [வினையேன்] - கண்ணை யிழந்திருக்கும்படியான பாபத்தைப் பண்ணினேன். [என்னண்டவாணாவென்று] - என்னை விஷயீகரிக்கைக்காக அண்டாதிபதியானவனே! கல்யாணகுணயோகம் ஆஸ்ரி தார்த்தமாய் இருக்குமாபோலே, விபூதியோகமும் தமக்காகவென்றிருக்கிறார். [என்னை யாள] - ஒரு ப்ரயோஜநாந்தரத்துக்காக அழைக்கிறேனோ? என்னை நித்யகைங்கர்யங் கொள்ளவேணுமென்றன்றோ அழைக்கிறது? [கூப்பிட்டழைத்தக்கால்] - க்ரமப்ராப்தி ஸஹிக்கவல்லேனாய்த்தான் தாழ்க்கிறாயோ? என் ஆர்த்தநாதங்கேட்டால் "க்ரமத்திலே வருகிறோம்" என்று ஆறியிருக்கலாயிருந்ததோ? [விண்டன்மேல்தான்] - மாநீர்க்கொண் டல் ஸஞ்சரிக்கும் ஆகாசத்திலே தோற்றவுமமையும். [விண்தன்மேல்தான்] - பரமபதத் திலிருக்கிற இருப்போடேவந்து தோற்றவுமாம். [மண்மேல்தான்] - அவதரித்துத்தோற் றவுமாம். [விரிநீர்கடல்தான்] - க்ஷீராப்தியில் கண்வளர்ந்தருளுகிறபடியே வந்து தோற் றவுமாம். [மற்றுத்தான்] - தூணிலேவந்து தோற்றினாற்போலே யாதல், ஆனைக்குவந்து தோற்றினாற்போலே யாதல் தோற்றவுமாம். [தொண்டனேன்] - உன் திருவடிகளில் கைங்கர்யத்தில் சபலனான நான். [உன்கழல்காண] - எனக்கு ஜீவநமான திருவடிக ளைக்காண. [ஒரு நாள் வந்து தோன்றாயே] "பலநாள்வேணும்" என்று நிர்ப்பந்திக்கிறே னோ? என்ஸத்தை கிடக்கைக்கு ஒருநாள் வந்து தோற்றியருளவேணும். (சு)

ஆறாம்பாட்டு.—கொண்டல் இத்யாதி. "கொண்டல்வண்ணா" இத்யாதிகளையும், "வந்து தோன்றாய்" என்றத்தையும் கடாக்ஷித்து அவதாரிகை - உன்னுடைய இத்யாதி.

"கொண்டல்வண்ணா" என்றதுக்கு ஹாவம் - காணவே இத்யாதி. வினைஎது? என்ன- கண்ணை இத்யாதி. தம்மை விஷயீகரிக்கைக்காகவோ விபூதியோகமென்ன - கல்யாணகுண யோகம் இத்யாதி. "கூப்பிட்டழைத்தக்கால்" என்கிற புநருக்திக்குஹாவம் - க்ரமப்ராப்தி இத் யாதி. ஏதத்விவரணம் - என்ஆர்த்தநாதம் இத்யாதி. யத்வா, "அழைத்தக்கால்" என்றதுக்கும் "கூப்பிட்டு" என்றதுக்கும் க்ரமேண ஹாவத்வயம் - க்ரமப்ராப்தி இத்யாதி வாக்யத்வயமும் என்னுதல். அர்த்தாந்தரம் - பரமபதத்தில் இத்யாதி. ஒருநாளமையுமோவென்ன - என்ஸத்தை இத்யாதி. (சு)

ஏழாம் பாட்டு.

வந்துதோன்றாயன்றேல் உன்வையந்தாயமலரடிக்கீழ்
முந்திவந்துயான்நிற்ப முகப்பேகூவிப்பணிகொள்ளாய்
செந்தண்கமலக்கண்கைகால் சிவந்தவாயோர்கருநாயிறு
அந்தமில்லாக்கதிர்பரப்பி அலர்ந்ததொக்குமம்மானே!

ஆ.—(வந்துதோன்றாய்.) — * ஆதாம்ர சீதள ஸரோருஹ ஸத்ருஶமான நயன பாணி வதநங்களையுடைத்தாய், நிரவதிக தீப்தியுக்தமாயிருப்பதொருகருநாயிறு போலேயிருந்த நீ வந்துதோன்றாய்; அன்றேல், * அநாலோசித விசேஷாசேஷ லோகசரண்யமாய், * லோகவிக்ராந்தமா யிருந்த உன் திருவடிமலர்களின்கீழே, உன் திருவுள்ளத்தி லபேக்ஷிதமான கைங்கர்யத்தை நீ அருளிச்செய்வதற்கு முன்பே அறிந்து செய்யக்கடவனாய்ச் சமைந்துநிற்க முகப்பே கூவிப்பணிகொள்ளாயென்கிறார்.

ஒ.—ஏழாம்பாட்டில், இங்கேவந்து தோன்றியருளுதல், வாராமைக்குக் கண்ணழிவுண்டாகில் என்னை அங்கேயழைத்து அடிமைகொள்ளுதல் செய்யவேணு மென்கிறார்.

[வையந்தாய மலரடிக்கீழ் முந்திவந்துயான்நிற்ப] - ஒருவரையும் இழக்கக்கட வதன்றிக்கே நிரதிசயபோக்யமாய் லோகத்தையெல்லாம் அளந்த உன்னுடைய திருவடிக்கீழே முற்கோலிவந்து நிற்கும்படி.

ப.—அநந்தரம், அசேஷஸம்ஶ்லேஷ ஸ்வபாவனாய், அதிரமணீயமான ஸௌந்தர்யத்தையுடையையாயிருக்கிற நீ, என்முன்னே வந்து தோன்றுதல், உன் முன்னே யழைத்து அடிமைகொள்ளுதல் செய்யவேணு மென்கிறார்.

செம் - சிவந்து, தண் - குளிர்ந்த, கமலம் - தாமரைபோலேயிருக்கிற, கண் - கண்ணையும், கை - கையையும், கால் - காலையும், சிவந்த - சிவந்த, வாய் - வாயையு முடைத்தாயிருப்பது, ஓர் - ஒரு, கருநாயிறு - நீலநிறமான நாயிறானது, (ஆயிரமென் கிற அளவன்றியே), அந்தம் - முடிவு, இல்லா - இல்லாத, கதிர் - கதிரை, பரப்பி - பரப்பி, அலர்ந்ததொக்கும் - விஸ்தீர்ணமானாற்போலே யிருக்கிற, அம்மானே - (வடிவழகையுடைய) ஸ்வாமியே! வந்து - (அவ்வழகோடே) வந்து, தோன்றாய் - தோன்ற வேணும்; அன்றேல் - அந்தநினைவன்றாகில், வையம் - ஸகலஜகத்தையும், தாய - (வரையாமல்) ஸம்ஶ்லேஷித்த, மலர் - (விகஸிதமான) தாமரைபோலே யிருக்கிற, அடிக்கீழ் - திருவடிகளின்கீழே, முந்தி - முற்பாடனாய்க்கொண்டு, யான் - நான், வந்து - வந்து, நிற்ப - (தரித்து) நிற்கும்படியாக, உன் - உன், முகப்பே - திருமுன்பே, கூவி - அழைத்து, பணி - அடிமை, கொள்ளாய் - கொண்டருளவேணும்.

இ.—ஏழாம்பாட்டில், இங்கேவந்து தோற்றியருளுதல், அதுக்குக் கண்ணழிவுண்டாகில் என்னையங்கேயழைத்து அடிமைகொள்ளுதல் செய்தருளவேணு மென்கிறார்.

[வந்துதோன்றாய்] - நானிருந்தவிடத்திலே உன்னைக்கொண்டுவந்து காட்டியருளாய்! [அன்றேல்] - என் ஆர்த்தியைப்பார்த்து உன்க்ருபையாலே வந்து முகங்

காட்டவேணும். அதுசெய்யப் பார்த்திலையாகில்; உன்பூர்த்தியையும் என்சிறுமையையும் பார்த்து வந்துமுகங்காட்டிற்றிலையாகில் என்றுமாம். [உன் வையம் தாயமலரடிக்கீழ்] - வஸிஷ்ட்டசண்டாள விபாகம்பாராத திருவடிகள். [மலரடிக்கீழ்] - ஒருசெவ்விப்பூவைக் கொண்டாயிற்றுக் காடுமோடையும் அளந்தது. [மலரடிக்கீழ் முந்திவந்து யான்நிற்ப] - நிரதிசயபோக்யமான திருவடிகளின்கீழே முற்பாடனாய்வந்து நிற்கும்படியாக. [முகப்பேகூவிப் பணிகொள்ளாய்] - "க்ரியதாமிதிமாம்வத" என்று கண்முகப்பே யடிமை கொண்டருளவேணும். குணஜ்ஞாநத்தாலே தரித்திருக்கும் ஸாதாம்வான் ப்ரக்ருதியல்லேன்; "ஜஹார்த்தஸ்யாவிவோஷ்யதாம்" என்னும்இளையபெருமாள் ப்ரக்ருதியான என்னை அடிமைகொண்டருளவேணும். [செந்தண் இத்யாதி] - சிவந்து குளிர்ந்த தாமரைபோலே கண்ணையும் கையையும் காலையுமுடையனாய், சிவந்தவாயையும் உடையனாய், நீலமான நிறத்தையுமுடையனாயிருப்பானொரு ஆதித்யன், "ஸஹஸ்ரம்" என்று ஒருஸங்க்யையின்றிக்கே யளவிறந்த கிரணங்களைப் பரப்பிக்கொண்டு விகஸிதனானாற்போலே வந்துதோன்றவேணும். [அம்மானே] - உன்மேன்மையைப் பார்த்து அங்கேயழைத்து அடிமைகொள்ளுதல், உன்னுடைமை நலியாமைக்கு த்வரையுண்டாகில் உனக்கு வந்தடிமைகொள்ளுதல் செய்தருளவேணும்.

ஈடு.—ஏழாம் பாட்டு. இங்கேவந்து தோற்றியருளுதல், அது திருவுள்ளமல்லவாகில் அங்கேயழைத்து அடிமைகொள்ளுதல் செய்தருளவேணுமென்கிறார்.

[வந்துதோன்றாய்] - என் கண்வட்டத்திலே வந்து தோன்றவேணும். தந்தைகாலில் விலங்கற வந்துதோன்றிய தோன்றலையிறே. வந்து தோன்றாயென்கிறது. [அன்றேல்] - என்னார்த்தியைப்பார்த்து உன்னுடைய க்ருபையாலே வந்து முகங்காட்டப் பார்த்திலையாகில். உன்பூர்த்தியையும் என் சிறுமையையும் பார்த்து முகங்காட்டப் பார்த்திலையாகிலென்றுமாம். [உன்வையந்தாயமலரடி]-வஸிஷ்ட்டசண்டாளவிபாகம் பாராத திருவடிகள். [மலரடி] - ஒரு செவ்விப்பூவைக்கோண்டாயிற்றுக் காடுமோடையு மளந்தது. [மலரடிக்கீழ் முந்திவந்துயான்நிற்ப] - நிரதிசயபோக்யமான திருவடிகளின்கீழே முற்பாடனாய் வந்து நிற்கும்படியாக. [முகப்பே] - கண்வட்டத்திலே. [கூவிப்பணி கோள்ளாய்] - சோற்றையிட்டுப் பணிகோள்ளாய். "க்ரியதாமிதிமாம்வத" (க்ரியதாமிதிமாம்வத) என்று கண்முகப்பே அடிமைகோண்டருளவேணும். குணஜ்ஞாநத்தாலே

ஏழாம்பாட்டு.—வந்துதோன்றய் இத்யாதி. "வந்துதோன்றாயன்றேல் - உன் - முகப்பே கூவிப்பணிகொள்ளாய்" என்றவற்றைக் கடாக்ஷித்து அவதாரிகை - இங்கே இத்யாதி.

தோன்றாய் - தோன்றவேணும். "வந்துதோன்றாய்" என்கைக்கு முன்பு ஆர்க்குவந்து தோன்றினானென்ன - தந்தைகாலில் இத்யாதி. திருமொழி. தோன்றல்-முதலி: ப்ரயோகமென்றபடி. "அன்றேல்" என்றதுக்கு பாவத்வயம் - என்னார்த்தியை இத்யாதி வாக்யத்வயம். "வையம்" என்ற அசேதந ஸமாதிக்கு பாவம் - வஸிஷ்ட்ட இத்யாதி. முற்பாடனென்றது - "ஸஹஸ்ரம் ஸஹஸ்ரம் ஸஹ ஸ்ரீஸ்மாதி" என்று முற்பாடனென்றபடி. "கூவி" என்றதுக்கு பாவம் - சோற்றை இத்யாதி. கீழ் - மிடற்றோசை போக்யமாகையாலே "கூவிப்பணிகொள்ளவேணும்" என்றருளிச்செய்து, ப்ராப்தமாகையாலும் கூவிப்பணிகொள்ளவேணுமென்று பாவாந்தரம் - க்ரியதாம் இத்யாதி. "பணிகொள்ளாய்" என்று நிர்ப்பந்திக்கிறதென்? குணஜ்ஞாநத்தாலே தரித்திருக்கவொண்ணாதோவென்ன - குணஜ்ஞாந இத்யாதி. இளையபெருமாள்ப்ரக்ருதியானபடி எப்படி? என்ன-

தரித்திருக்கும் ஸ்ரீஹரதாழ்வான் ப்ரக்ருதி யல்லேன்; "ஜலாந்மத்ஸ்யாவிவோத்த்ருதௌ" (ஜலாந்மத்ஸ்யாவிவோத்த்ருதௌ) என்னும் இளையபெருமாள் ப்ரக்ருதியான என்னை அடிமைகொண்டருளவேணும். "வழுவிலாவடிமைசெய்யவேண்டும்" என்றும், "நின்னலாலிலேன்" என்றும் இட்டுவைத்தவிடத்தில் கிடக்கமாட்டேன். "நன்றுமஞ்சுவன் நரகம்நானடைதல்" என்னுமவரிறே. [சேந்தண் இத்யாதி] - சிவந்து குளிர்ந்த தாமரை போலே கண்ணையும் கையையும் காலையுமுடையனாய், சிவந்த வாயையுமுடையனாய், நீலமான நிறத்தையுடையனாயிருப்பானொராதித்யன், "ஸஹஸ்ரம்" என்றுஒரு ஸங்க்யையின்றிக்கே அளவிறந்த கிரணங்களைப் பரப்பிக்கொண்டு விகஸிதமானாற்போலே வந்து தோன்றவேணும். [அம்மானே] - உன்மேன்மையைப் பார்த்து அங்கேயழைத்து அடிமைகொள்ளுதல், உன்னுடைமை நசியாமைக்கு த்வரையுண்டாகில் இங்கேவந்து அடிமைகொள்ளுதல் செய்தருளவேணும். (எ)

எட்டாம் பாட்டு.

ஒக்குமம்மானுருவமென்று உள்ளங்குழைந்துநாணாளும்
தொக்கமேகப்பல்குழாங்கள் காணுந்தோறுந்தொலைவன்நான்
தக்கவைவர்தமக்காய் அன்றுஈரைம்பதின்மர்தாள்சாயப்
புக்கநல்தேர்த்தனிப்பாகா!வாராயிதுவோபொருத்தமே?

ஆ.—(ஒக்குமம்மான்.)-உன் திருமேனியோடொக்குமென்று தொக்கமேகப் பல்குழாங்கள் காணுந்தோறும் நாணாளும் உள்ளங்குழைந்து தொலைவன்நான்; உன்னை மறந்திருக்கவொட்டுகிறதில்லை இந்தமேகங்கள்; உன்திருவடிகளையே ப்ராப்யமும் ப்ராபகமுமென்றிருக்கும் ஐவர்க்கு மோக்ஷபூதனாய், அன்று ஈரைம்பதின்மர்தாள்சாயப் புக்கநற்றேர்த்தனிப்பாகா! அத்தேரை இங்ஙனே நிறுத்திக்கொண்டுவாராய், இதுவோ உன்னுடைய ப்ரணயித்வமென்கிறார்.

ஓ.—எட்டாம்பாட்டில், உன்னோடு ஸத்ருசமான மேகதர்சநத்தாலே நான் வ்யஸநப்படாநிற்க, என்னோடுவந்து ஸம்ஸ்லேஷித்தருளுகிறிலை; இங்ஙனேயோ உன்னுடைய ஸ்வபாவம்? என்கிறார்.

[நாணாளும்] - நாள்தோறும் நாள்தோறும். [தொக்க] - திரண்ட. [தக்கவைவரென்று தொடங்கி] - மிகவும் சீர்மையுடைய பாண்டவர்களைவர்க்குமாய், ஒருசீர்மையுமின்றிக்கே இவர்களுக்கு விரோதிகளுமான து:ர்யோதநாதிகள் நூற்றுவரும் காலறும்படி புக்க உன்னைஸாரதியாகவுடைத்தாகையாலே அதிச்லாக்யமான தேருக்குத் தனியே நிர்வாஹகனானவனே! வருகிறிலை. "ஸேநயோருபயோர்மத்யே ரதம் ஸ்தாபய

வழுவிலா இத்யாதி. அப்படி இட்டுவைத்தவிடத்தில் கிடக்கமாட்டாரோவென்ன - நன்றுமஞ்சுவன் இத்யாதி. கிரணஸ்த்தாநே - அவயவங்கள். "அம்மான்" என்றதுக்கு - பரத்வமும், ஸ்வாமித்வமுமென்று அர்த்தத்வயம் - உன்மேன்மை இத்யாதி வாக்யத்வயத்தாலே. செந்தண்கமலம் என்றுதொடங்கி, அம்மானே - வந்துதோன்றாயன்றேல் என்றுதொடங்கி, பணிகொள்ளாய் இத்யந்வய:. அவதாரிகையிலே, அங்கேயழைத்தடிமைகொள்ளுதலென்றது - "முந்திவந்து யான் நிற்கும்படிபண்ணி முகப்பே" என்கையாலே; அங்கேயழைத்து என்றது அர்த்தாத்ஸித்தம். (எ)

சேஷ்யந்த" என்றால் அப்படிச் செய்யலாவது அர்ஜுநனுக்கேயோ? எனக்காக அந்தத் தேரைத் திரியவிட்டால் ஆகாதோ? என்றுகருத்து.

ப.—அநந்தரம், போலிகண்டு நான் க்லேஶியாநிற்க, ஆஶ்ரிதபக்ஷபாதியான நீ வந்து தோன்றுகிறிலையென்கிறார்.

'அம்மான் - ஸ்வாமியானவன், உருவம் - வடிவழகு, ஒக்கும் - ஒக்கும்,' என்று - என்று, உள்ளம் - நெஞ்சு, குழைந்து - ஶிதிலமாய், நாள்நாளும் - நாடோறும், தொக்க - திரண்ட, மேகம் - மேகங்களினுடைய, பல் - பல, குழாங்கள் - ஸமூஹங்களை, காணுந்தோறும் - காணும்பொழுதெல்லாம், நான்—நான், தொலைவன் - க்லேஶியாநிற்பன்: தக்க - (நீயெல்லாவுறவுமாம்படியான) தக்கோர்மையையுடைய, ஐவர்தமக்கு - பாண்டவர்களைவர்க்கும், ஆய் - ஏவலாளாய்க்கொண்டு, அன்று - (பாரதயுத்தம் ப்ரவ்ருத்தமான) அன்று, ஈரைம்பதின்மர் - (அவர்களுக்கெதிரிகளான) நூற்றுவரும், தாள் சாய - காலற்றுப்போம்படி, புக்க - (ஸேநாமத்யத்திலே) ப்ரவேஶித்த, நல் - (உன்னையிஷ்டடாநத்தாலே) ஶ்லாக்யமான, தேர் - தேருக்கு, தனிப்பாகா - (ரதியான அவன் உன் முதுகின் கீழே ஒதுங்கும்படி) அத்விதீயஸாரதியானவனே! வாராய் - (அவ்வழகோடே) வருகிறிலை; இதுவோ - இதுவோ, பொருத்தம் - (ஆஶ்ரிதவிஷயத்தில்) பொருத்தமிருந்தபடி?

இ.—எட்டாம்பாட்டில், உன்னோடு ஸத்ருஶமான மேகதர்ஶநத்தாலே நோவுபடாநிற்க, வந்து முகங்காட்டுகிறிலை; உன்ஸங்க ஸ்வபாவமிதுவோவென்கிறார்.

[ஒக்குமம்மான் உருவமென்று] - ஸர்வேஶ்வரனுடைய வடிவுக்கு, * யஜ்ஜ்யோதிஷாம் ஶ்ரேஷ்டதாம ஸமூஹமான மேகத்தை ஸத்ருஶமென்று ப்ரமிப்பர். [உள்ளங்குழைந்து] - இது தோற்புரையன்றியே, அகவாய் ஶிதிலமாய். [நாணாளும்] - நாள்தோறும் நாள்தோறும்; இந்த ஶைதில்யம் காதாசித்கமன்றியே, இடைவிடாமல் செல்லுகை. திரண்ட மேகஸமூஹங்களைக் காணுந்தோறும். [தொலைவன் நான்] - "கண்ட நாள் காருருவம் காண்டோறும் நெஞ்சோடும்." யர்மிலோபம் பிறக்கிறதுமில்லை, ஜீவித்திருக்கவும் பெறுகிறிலேன். [நான்] - மேகதர்ஶநம் ஆஶ்வாஸஹேதுவிறே நாட்டுக்கு. [தக்கவைவர்] - என்ன மேகதர்ஶநத்துக்கு இடைந்து பாண்டவர்களை நோக்கிற்று? "பந்துக்களும் ஜீவிக்கவேணும், எங்களுக்கு ஐந்து குடிக்காடமையும்" என்னும் தக்கோர்மையுடையவர்கள். [தமக்காய்] - "ரக்ஷம்ஸ்ரவயா" என்னலாம்படி கையாளாய். [அன்று] - அன்று உதவிற்றும் தமக்கென்றிருக்கிறார். [ஈரைம்பதின்மர் தாள் சாயப்புக்க] - "பந்துக்கள் ஜீவிக்கில் ஜீவியோம்" என்ற நூற்றுவர் காலறும்படியாகத் தூசித்தலையிலே புக்கவனன்றோ? [நல்தேர்] - இவனை ஸாரதியாகவுடைத்தாகையாலே அதிஶ்லாக்யமான தேர். [தனிப்பாகா] - தனியே நிர்வாஹகனானவனே! ரதியைக் காண்கிறிலர். "நகாங்க்ஷே விஜயம் க்ருஷ்ண" என்றவனைச் சேஷஞ்சாத்தி வ்யாபரிக்கையாலே, ஸாரதியையாயிற்று இவர்காண்கிறது. [வாராய்] - "ஸேநயோருபயோர்மத்யே ரதம் ஸ்தாபய" என்று பாண்டவர்கள் ஶத்ருக்கள் மேலேவிட்ட தேரை, என்னை நலிகிற மேகத்தின்மேலே விடலாகாதோ? ஐவருமாய், எதிரிகள் நூற்றுவரென்று ஸங்க்யாதராலோ செய்யலாவது? தனியனுமாய், மேகங்கள் அஸங்க்யாதமானால் உதவலாகாதோ? [இதுவோ

பொருத்தப்] - ஆஶ்ரிதரோடு முன்பு பொருந்திப் போந்தபடியிதுவோ? ஆஶ்ரிதர்க்காக ஸாரத்யஸாரத்யங்களைப்பண்ணியும், "ஆயுதமெடேன்" என்று ஆயுதமெடுத்தும், பகலையிரவாக்கியும் பக்ஷபதித்தது பொய்யோ? "நாராயணகயாரிஶேஷ" என்றவனும் கைக்கூலிகொண்டு புலமைபாடினனென்கிறார். இப்போது தமக்கு உதவில் அவையும் பொய்யாவதென்றிருக்கிறார். [வாராய்] - எனக்கு இதெல்லாம் வேணுமோ? வந்து முகங்காட்டவமையாதோ? உன்வடிவைக்காட்டி மேகங்கள் அநுகூலமாப்படி பண்ணுதல், மேகதர்ஶநம் பாதகமாகாதபடி பண்ணுதல் செய்தருளவேணும்.

ஈடு.—எட்டாம்பாட்டு. உனக்குப்போலியான மேகதர்ஶநந்தாலே நோவுபடாநிற்க, வந்துமுகங்காட்டுகிறிலே; இதுவோ உன்ஸங்கஸ்வபாவம்? என்கிறார்.

[ஒக்குமம்மானுருவமென்று] - "ஸர்வேஶ்வரன்வடிவு இதரவிஸஜாதீயம்" என்று புத்திபண்ணுநிற்கச்செய்தே, * தூமஜ்யோதிஸ்ஸலிலமருதாம் ஸமூஹமான மேகத்தை ஸத்ருஶமென்று ப்ரமிப்பர். [உள்ளங்குழைந்து] - இது தோற்புரையன்றியே, அகவாய் ஶிதிலமாய். [நாளும்] - இந்தஶைதில்யம் காதாசித்கமன்றிக்கே, இடைவிடாமல்செல்லுகை. [தோக்கமேகப்பல்குழாங்கள்] - மேகஶகலங்களுக்குஇடையார்; திரண்டமேகஸமூஹங்களைக் காணுந்தோறும். [நாளும்-தொலைவன்] - தர்மிலோபம் பிறக்கிறதுமில்லை, ஜீவித்திருக்கவும் பெறுகிறிலேன். [நான்] - மேகதர்ஶநம் நாட்டார்க்கு ஆஶ்வாஸஹேதுவிறே. [தக்கஐவர்]- என்ன மேகதர்ஶநத்துக்குஇடைந்து பாண்டவர்களை நோக்கிற்று? "பந்துக்கள்ஜீவிக்கவேணும், எங்களுக்கும் ஐந்துகுடிக்காடு அமையும்" என்னும் தக்கோர்மையுடைய ஐவர். [தமக்காய்] - "ரதம்ஸ்த்தாபய" (ரதம்ஸ்த்தாபய) என்னும்படி கையாளாய். [அன்று] - அவர்கள் தனியரான அன்று. [ஈரைம்பதின்மர்தாள்சாய]-' பந்துக்கள் ஜீவிக்கில் ஜீவியோம்"என்ற நூற்றுவரும் கால

எட்டாம்பாட்டு.—ஒக்கும் இத்யாதி. "தொக்கமேகம்" என்றுதொடங்கி, "தொலைவன் நான்-வாராய், இதுவே பொருத்தம்" என்றபதங்களைக் கடாக்ஷித்துஅவதாரிகை-உனக்கு இத்யாதி.

"ஒக்கும்" என்றதுக்குபாவம் - ஸர்வேஶ்வரன் இத்யாதி. "தூமஜ்யோதிஸ்ஸலில-மருதாம் ஸந்நிபாத: க்வமேகஸ்ஸந்தேஶார்தா: க்வ படுகரணை: ப்ராணிபி: ப்ராபணீயா:। இத்யௌத்ஸுக்யாதபரிகணயந்குஹ்யகஸ்தம்யயாசே காமார்தா ஹி ப்ரக்ருதி க்ருபணாஶ்சேதநாசேதநேஷு" இதி மேகஸந்தேஶே (க-ரு). இதுவென்றது - மேகஸமூஹதர்ஶநத்தால்வந்த து:கமென்றபடி. தொலைவன் - தொலையாநிற்பன்; க்லேஶியாநிற்பனென்றபடி. "தொலைவன்" என்கிற வர்த்தமானார்த்தம் - தர்மிலோபம் இத்யாதி வாக்யத்வயம். "நான்" என்றதுக்கு லௌகிகவ்யாவ்ருத்தியென்றுவிவக்ஷித்து, மேகதர்ஶநத்தில் நாட்டார்க்கிருக்கும்படியை அருளிச்செய்கிறார் - மேகதர்ஶநம் இத்யாதி; ஆஶ்வாஸஹேதுவிறே, அதின்றியே நோவுபடுகிறநான்என்றபடி. "தக்கஐவர்" இத்யாதிக்குஹ்ருதயபாவம் - என்ன மேக இத்யாதி. "தக்கவைவர்" என்றதுக்குஅர்த்தம் - பந்துக்கள் இத்யாதி. குடிக்காடு - குப்பம். தக்கோர்மை - நன்மை. "ஆய்" என்றதுக்குஅர்த்தம் - ரதம் இத்யாதி. "ஸேநயோருபயோர்மத்யே ரதம்ஸ்த்தாபய மேऽச்யுத" இத்யாதி, ஸ்ரீகீதா ப்ரதமே (உக). தேருக்கு

றும்படியாக. [புக்க] - தூசித்தலையிலேபுக்க. [நல்தேர்] - இவனை ஸாரதியாகவுடைத்தாகையாலே அதிஶ்லாக்யமான தேர். [தனிப்பாகா] - தனியே நிர்வாஹகனானவனே! ரதியைக்காண்கிலர். "நகாங்க்ஷே விஜயம் க்ருஷ்ண" (நகாங்க்ஷேவிஜயம்க்ருஷ்ண) என்றவனைச் சேமம் சாத்திவைத்து வ்யாபரிக்கையாலே, ஸாரதியையாயிற்று இவர்காண்கிறது. [வாராய்] - "ஸேநயோருபயோர்மத்யே ரதம் ஸ்தாபய" (ஸேநயோருபயோர்மத்யேரதம்ஸ்த்தாபய) என்ன, உபயஸேனையின் நடுவே தேரைநிறுத்தின நீ, அத்தேரை இம்மேகங்களின்நடுவே நடத்தினாலாகாதோ?ஐவருமாய்,எதிரிகள் ஸங்க்யாதருமானாலோ உதவலாவது ? தனியனுமாய், மேகஸமூஹங்கள் அஸங்க்யாதமானால் உதவலாகாதோ ? [இதுவோபொருத்தம்] - ஆஶ்ரிதரோடு முன்பு நீ பொருந்திப்போந்தபடி இதுவோ? ஆஶ்ரிதர்க்காக தௌத்யஸாரத்யங்கள்பண்ணியும்,"ஆயுதமெடேன்" என்று ஆயுதமெடுத்தும், பகலை இரவாக்கியும் பக்ஷபதித்தது பொய்யோ?† "நாராயணகதாமிமாம்" (நாராயணகதாமிமாம்) என்றவனும் கைக்கூலிகொண்டு புலமைபாடினானாகாதே யென்கிறார். இப்போது தமக்கு உதவில் அவை மெய்யாவதென்றிருக்கிறார். [வாராய்] - எனக்கு இதெல்லாம் வேணுமோ? முகங்காட்டவமையாதோ ? (அ)

ஒன்பதாம் பாட்டு.

இதுவோபொருத்தம் ? மின்னாழிப்படையாய்! ஏறுமிருஞ்சிறைப்புள்
அதுவே கொடியாவுயர்த்தானே! என்றென்றேங்கியழுதக்கால்
எதுவேயாகக்கருதுங்கொல்? இம்மாஞாலம்பொறைதீர்ப்பான்
மதுவார்சோலை உத்தரமதுரைப்பிறந்தமாயனே.

இத்யாதி. ரதியிருக்க, ஸாரதிக்குத் தனிமையேதென்ன - ரதியை இத்யாதி. அதுக்குஹேதுவேதென்ன - நகாங்க்ஷே இத்யாதி. "நகாங்க்ஷே விஜயம் க்ருஷ்ண நசராஜ்யம் ஸுகாநிச। கிம்நோராஜ்யேந கோவிந்த கிம்போகைர்ஜீவிதேநவா" இதி கீதாஶாஸ்த்ரே (க-உ). "தேர்த்தனிப்பாகா வாராய்" என்றதுக்கு ஹார்த்தபாவம் - ஸேநயோ: இத்யாதி. பாண்டவர்களில் தமக்குஉண்டான வ்யாவ்ருத்தியை அருளிச்செய்கிறார் - ஐவருமாய் இத்யாதி வாக்யத்வயத்தாலே. விவரணம்-ஆஶ்ரிதர்க்காக இத்யாதி.புராணஸித்தமான ஆஶ்ரிதபாரதந்த்ர்யம் பொய்யாகக்கூடுமோவென்ன -நாராயணகதாமிமாம் இத்யாதி."நமோஸ்து தஸ்மை வ்யாஸாய ஸாத்யவதேயாய। யஸ்ய ப்ரஸாதாத் வக்ஷ்யாமி நாராயணகதாமிமாம்" புலமை - கவி. ஆனால்அது மெய்யாவதெப்போதென்ன - இப்போது இத்யாதி. வாராய் - வருகிறிலை. பாவாந்தரம் - எனக்கு இத்யாதி. தொக்கமேகப்பல்குழாங்கள் காணுந்தோறும் - அம்மானுருவம் - ஒக்கும் - என்றுஉள்ளங்குழைந்து, நாணாளும் - நான் - தொலைவன் ; தக்கவைவர்என்று தொடங்கி, தனிப்பாகா - இதுவோபொருத்தம்? வாராய் இத்யந்வய:. (அ)

† பாரதாதௌ.

ஆ.—(இதுவோபொருத்தம்.) - திருவாழியை மின்னுகவுடைய திவ்ய ரூபமாகிற நீலமேகத்தையுடையவனே! ஆஸ்ரிதருடைய ஆபத்துக்கு உதவ வருகைக்கீடான பெரியதிருவடியை திவ்யவாஹநமாகவுடையவனே! இதுவோ முடிந்தது என்றென்று ஏங்கியழுதக்கால், ஆஸ்ரிததுஃகாஸஹிஷ்ணுவாகையாலே தத்துஃகஹேதுபூத ஸம்ஹார நிர்ஹரணார்த்தமாக, மதுவார்சோலை உத்தரமதுரைப்பிறந்த ஆஸ்சர்யபூதனே! நீ ஏதுவாக நினைத்திருக்கும்? என்கிறார்.

ஒ.—ஒன்பதாம்பாட்டில், இநந்ததேகுடியாக எல்லாருடைய ஆர்த்திகளையும்போக்கி ரக்ஷித்தருளுகைக்காக ஸ்ரீமதுரையிலே வந்து திருவவதாரம்பண்ணியருளின ஆஸ்சர்யகுணகனான க்ருஷ்ணன், தன்னைக் காணவாசைப்பட்டு நோவுபடுகிற எனக்கு என்செய்தருள நினைக்கிறானோ? என்கிறார்.

[மின் என்று தொடங்கி] - ஆஸ்ரிதவிரோதிநிரஸநத்துக்கு உறுப்பாய் மின்னுநின்றுள்ள திருவாழியாகிற திவ்யாயுதத்தையுடையையாய் ஆஸ்ரிதரோடு ஸர்வவிதஸம்ஸ்லேஷமும் பண்ணுமவனே! [ஏதுவேயாகக் கருதுங்கொல்] - இவ்வார்த்தியைப்போக்கியருளத் திருவுள்ளமாயருளுமோ? இவ்வார்த்த நாதம் கேட்டால் அத்யந்ததயாளுவானவனுடைய திருவுள்ளம் எங்ஙனே புண்படுமோ? என்றுமாம்.

ப.—அநந்தரம், ஆஸ்ரிதரை அநேகவித கைங்கர்யங்கொள்ளும் ப்ரகாரத்தை நினைத்துக் கூப்பிட்டால், ஆஸ்ரிதவிரோதி நிரஸநார்த்தமாக அவதரித்தவன் என்னினைத்திருக்கிறானோ? என்கிறார்.

'மின் - ஒளியாலே ஆபரணமாம்படியான, ஆழி - திருவாழியை, படையாய் - ஆயுதமாகவுடையவனே! ஏறும் - வாஹநமான, இரு - பெரிய, சிறை — சிறகையுடையனை, புள்ளதுவே - பெரியதிருவடி தன்னையே, கொடிஆ - கொடியாக, உயர்த்தானே - எடுத்தவனே! இதுவோ - இதுவோ, பொருத்தம் - (அவர்களளவிலும்) பொருத்தமிருக்கும்படி,' என்றென்று-என்றுபலகாலுஞ்சொல்லி, ஏங்கி - பொருமி, அழுதக்கால்- அழுதக்கால், இ - இந்த, மாஞாலம் - மஹாப்ருதிவியின், பொறை - பாரத்தை, தீர்ப்பான் - போக்குகைக்காக, மது - மது, வார் - ப்ரவாஹியான, சோலை - சோலையையுடைய, உத்தரமதுரை - வடமதுரையிலே, பிறந்த - ஸர்வேஸ்வரத்வ ஸூசகமான (சிஹ்நங்களோடே) அவதரித்த, மாயன் - ஆஸ்சர்யபூதனானவன், (என் கண்ணநீர் மாற வருவதாக நினைத்திருக்கிறானோ? இப்படி அழுதேபோவனென்று நினைத்திருக்கிறானோ), ஏதுவேயாக - ஏதாகவோ, கருதும் - திருவுள்ளம்பற்றுவது?

இ—ஒன்பதாம்பாட்டில், இநந்ததே குடியாக ரக்ஷிக்க வந்தவதரித்த க்ருஷ்ணன், தன்னைக்காண்கையே தேட்டமான எனக்கு என்செய்ய நினைத்திருக்கிறான்? என்கிறார்.

வோ பொருத்தம்] - இப்படிக் கூப்பிடச் செய்தேயும் வரக்காணாமையாலே கண்ணுஞ்சுழலையிட்டு மறித்து 'இதுவோ பொருத்தம்?' என்கிறார். [மின்னாழிப் படையாய்] - மேவத்திலே மின்னினாற்போலே, ஆஸ்ரிதவிரோதி நிரஸநஸீலமான திருவாழியைப்படையாக உடையவனே! அத்திருவாழியைக்கொண்டு என்னுடைய ப்ரதிவந்தகத்தின்மேலே வ்யாபரிக்கலாகாதோ? என்கை. [ஏறும் இத்யாதி] - ஏறக்கடவதான பெரியசிறகையுடைய புள்ளானதுதன்னையே த்வஜமாக எடுத்தவனே! ஆஸ்

ரிதரை எல்லாவடிமையும் கொள்ளுமவனன்றோ? [என்றென்று இத்யாதி] - இப்பாசுரம் மாறாதே பொருமிப்பொருமி அழாநின்றால். [எதுவேயாகக் கருதுங்கொல்] - இக்கூப்பீட்டுக்கு முகங்காட்ட நினைக்கிறானோ? கூப்பிட்டே போவானென்றிருக்கிறானோ? இக்கூப்பீட்டுக்கு அவன்திருவுள்ளம் எங்ஙனே புண்படுகிறதோ? என்றுமாம். [இம்மாஞாலம் பொறைதீர்ப்பான்] - இம்மஹாப்ருதிவியின் பாரத்தைப் போக்குகைக்காக. [மதுவார் சோலையித்யாதி] - மதுஸ்யந்தியான சோலையையுடைய வடமதுரையிலே, ஶத்ருக்களான கம்ஸாதிகள் நடுவே பிறந்த மாயனே! ஆவிர்பவிக்கையன்றிக்கே கர்ப்பவாஸம் பண்ணிவந்து அவதரித்த ஆஶ்சர்யகுணகனான க்ருஷ்ணன். "ஸாதுஸமாஶ்ரய ஸகம்" என்கிற வ்யாஜத்தாலே ஸம்ஸாரிஸஜாதீயனாய் வந்தவதரித்து ஆஶ்ரிதவிரோதிகளைப்போக்கி ஆஶ்ரிதரை ரக்ஷிக்கும் ஸ்வபாவனானவன், நம்கூப்பீட்டுக்கு என்ன நினைத்திருக்கிறானென்கை.

ஈடு.—ஒன்பதாம்பாட்டு. அந்திமதசையில் ஸ்வர்க்கத்தேறப்போன இவர்கள் நிற்கிடீர்; திருவாழியாழ்வான்முதலான நித்யரோடும் பொருத்தமிதுவோ? என்று ஸ்வகதமாக விசாரிக்கிறார். இருந்ததேகுடியாக ரக்ஷிக்கவந்த க்ருஷ்ணன், தன்னைக்காண்கையே தேட்டமான எனக்கு என்செய்தருளுமென்று நினைக்கிறாராகவுமாம்.

[இதுவோபொருத்தம்] - இப்படிக்கூப்பிடச்செய்தேயும் வரக்காணாமையாலே கண்ணஞ்சுழலையிட்டு, மீண்டும் 'இதுவோபொருத்தம்?' என்கிறார். [மின்னாழிப்படையாய்] - மேகத்திலே மின்னினாற்போலே, ஆஶ்ரிதவிரோதிநிரஸநஶீலமானதிருவாழியைப் படையாகவுடையவனே! அத்திருவாழியைக்கொண்டு என்னுடைய ப்ரதிபந்தகத்தின் மேலே வ்யாபரித்தாலாகாதோ? [ஏறும் இத்யாதி] - ஏறக்கடவ பெரியசிறகையுடைய புள்ளானதுதன்னையே த்வஜமாக எடுத்தவனே! ஆஶ்ரிதரை எல்லாவடிமையும் கொள்ளுமவனன்றோ? [என்றென்றேங்கியழுதக்கால்] - இப்பாசுரம் மாறாதே பொருமிப்பொருமி அழாநின்றால். [எதுவேயாகக்கருதுங்கொல்] - இக்கூப்பீட்டுக்கு முகங்காட்டநினைக்கிறானோ? கூப்பிட்டேபோவானென்றிருக்கிறானோ? இக்கூப்பீட்டுக்கு அவன்திருவுள்ளம் எங்ஙனே

ஒன்பதாம்பாட்டு.—இதுவோ இத்யாதி. "மின்னாழிப்படையாய் - புள்ளதுவே கொடியாவுயர்த்தானே - இதுவோபொருத்தம்" என்றவற்றைக்கடாக்ஷித்து அவதாரிகை - அந்திமதசையில் இத்யாதி. "மின்னாழிப்படையாய்" என்றுதொடங்கி, "கொடியாவுயர்த்தானே - இதுவோ பொருத்தம் - என்றென்றேங்கியழுதக்கால் - இம்மாஞாலம்" என்றுதொடங்கி, "பிறந்தமாயனே - எதுவேயாகக் கருதுங்கொல்" என்று அந்வயம் விவக்ஷிதம். அன்றிக்கே, "இம்மாஞாலம்" என்று தொடங்கி, "பிறந்த மாயனை - மின்னாழிப்படையாய்" என்றுதொடங்கி, "எதுவேயாகக் கருதுங்கொல்" என்றுஅந்வயவிவக்ஷயாஸங்கத்யந்தரம் - இருந்ததே இத்யாதி. இப்பக்ஷத்தில், "இதுவோ பொருத்தம்" என்றது - அநுவாதம். ஸ்வகதமாகவென்றது - யோஜநாத்வயத்துக்குமொக்கும். இரண்டாம்யோஜனை - "எதுவேயாகக்கருதுங்கொல்இம்மாஞாலம்" இத்யாதிபதங்களைக்கடாக்ஷித்து. இருந்ததேகுடியாக - எல்லாரையுமொக்க. "மாயனே" என்ற ஏகாரம்-ஈற்றசை.

த்விதீயயோஜநாநுகுணமாக அர்த்தம் - இப்படிக்கூப்பிட இத்யாதி. இத்தால்பாவம் - அத்திருவாழியை இத்யாதி. வாஹநத்வ த்வஜத்வங்கள் சொன்னதுக்குபாவம் - ஆஶ்ரிதரை இத்யாதி. "அதுவேகொடியாவுயர்த்தானே" என்றது - எல்லாவடிமைக்கு முபலக்ஷணமென்றபடி. இரண்டாம்அவதாரிகைக்கு அநுகுணமாக அர்த்தம் - இக்கூப்பீட்டுக்குமுகம் இத்யாதி. முந்தின அவதாரிகைக்கு அநுகுணமாக அர்த்தம் - இக்கூப்பீட்டுக்கு இத்யாதி. "பொறை" என்று - பாரத்தை

புண்படுகிறதோ? என்றுமாம். [இம்மாஞாலம்போறைதீர்ப்பான்] - இம்மஹாப்ருதிவியி னுடைய ஹாரத்தைப் போக்குகைக்காக. [மதுவார்சோலை] - மதுஸ்யந்தியான சோலை யையுடைய. [உத்தரமதுரை] - வடமதுரையில், ஶத்ருக்களான கம்ஸாதிகள்நடுவே பிறந்த மாயனே! ஆவிர்ப்பவிக்கையன்றியே, "ததஸ்ஸத்வாதசேமாஸே" (ததஸ்சத்வாதசேமாஸே) என்கிறபடியே கர்ப்பவாஸம்பண்ணிப்பிறந்த ஆஶ்சர்யபூதனே! 'பூபாரநிரஸநம்' (பூபாரநிரஸநம்) என்கிற வ்யாஜத்தாலே இதரஸஜாதீயனாய்வந்தவதரித்து ஆஶ்ரிதவிரோதிகளைப்போக்கும் ஸ்வபாவனானவன், நம் கூப்பீட்டுக்கு என்கினைத்திருக்கிறானென்கை. (௯)

பத்தாம் பாட்டு.

பிறந்தமாயா! பாரதம்பொருதமாயா! நீயின்னே
சிறந்தகால்தீநீர்வான்மண்பிறவுமாயபெருமானே
கறந்தபாலுள்நெய்யேபோல்இவற்றுளெங்குங்கண்டுகோள்
இறந்துநின்றபெருமாயா! உன்னையெங்கேகாண்கேனே ?

ஆ—(பிறந்தமாயா) - ஸாதுபரித்ராணார்த்தமாகவும், துஷ்க்ருத்விநாஶார்த்தமாகவும் ஸ்ரீமதுரையிலே பிறந்தருளின ஆஶ்சர்யபூதனே! - நீ இப்படி ஸர்வத்ர ஸந்நிஹிதனாயிருந்துவைத்து உன்னைக்காட்டியருளுகிறிலை, இனி உன்னை எங்கே காண்கேன்? என்கிறார்.

ஒ—பத்தாம்பாட்டில், ஸந்நிஹிதனாய் வைத்துக் கண்ணால் காணவொண்ணாதபடிநின்ற ஆஶ்சர்யபூதனை உன்னைநான் காண்பதெவ்விடத்தே? என்கிறார்.

[பிறந்தமாயா]- அகர்மவஶ்யனாயிருந்து வைத்து க்ருபாதிஶயத்தாலே அப்ராக்ருத திவ்யஸம்ஸ்தாநத்தோடே கர்மவஶ்யரோடே ஸஜாதீயனாய்வந்து திருவவதாரம் பண்ணியருளின ஆஶ்சர்யபூதனே! [பாரதம்பொருதமாயா] - ஆயுதமெடுக்கக் கடவதன்றாக ப்ரதிஜ்ஞைபண்ணி ஸாரத்யத்திலே அதிகரித்துவைத்து, பாண்டவர்கள் வெல்லும்படி பாரதயுத்தம் பண்ணின ஆஶ்சர்யபூதனே![நீயின்னே]- நீ இப்படி ஸுலபனாயிருக்கச்செய்தே. [சிறந்தகாலென்றுதொடங்கி] - ப்ருதிவ்யாதிகளான பூதங்களுக்கும், அவற்றின் கார்யங்களுக்கும் ஆத்மாவாய் நின்றவனே! காற்றுக்குச் சிறப்பாகிறது தாரகத்வம். [கறந்தபாலென்றுதொடங்கி] - கண்ணாலேகாண்கிறபாலினுள் நெய்யுண்டாயிருக்கச் செய்தே காண்கையரிதானாற்போலே இவை எல்லாவற்றினுள்ளும் நின்று வைத்துக் காணவொண்ணாதபடி நிற்கிற அத்யாஶ்சர்யபூதனே! [கறந்த] - காலத்தாலும் ஆதஞ்சநாதிகளாலும் உள்ள பரிணாமராஹித்யத்தை நினைக்கிறது.

லக்ஷிக்கிறது. "உத்தரமதுரை" என்றதுக்குபாவம் - ஶத்ருக்களான இத்யாதி. "மாயன்" என்றதுக்குபாவம் - ஆவிர்ப்பவிக்கை இத்யாதி.ஃபலிதம்-பூபார இத்யாதி.இதுவோபொருத்தம், மின்னொழிப்படையாய் என்றுதொடங்கி, அழுதக்கால் - இம்மாஞாலம் என்றுதொடங்கி, மாயனே - எதுவேயாகக் கருதுங்கொல் இத்யந்வயம். (௯)

ப.—அநந்தரம், அவதாரப்ரயுக்த ஸௌலப்யத்துக்குப் பிற்பட்டு, அ நிலையும் அதீந்த்ரியமானால் எங்கேகாண்பதென்று ஆர்த்தராகிறார்.

பிறந்த - "அஜாயமாந:" என்கிறபடியே அஜஹத்ஸ்வபாவனாய்க்கொண்டு அவதரித்த, மாயா - ஆஸ்சர்யபூதனாய், (ஆஸ்ரிதார்த்தமாக), பாரதம் - மஹாபாரதயுத்தத்தைப்பண்ணுமிடத்தில், பொருதமாயா - ("ஆயுதமெடேன்" என்று ஆயுதமெடுத்தல், பகலைஇரவாக்குதல் முதலான) ஆஸ்சர்யசேஷ்டிதங்களைச்செய்து நடத்தினவனே! நீ - நீ, இன்னே - இப்படி ஸுலபனாயிருக்கச்செய்தே, சிறந்த - (ஜகத்காரணத்வத்தால்வந்த சிறப்பையுடைய, கால்தீநீர்வான்மண் - பஞ்சபூதங்களையும், பிறவும் - மற்றுமுள்ள ஜௌதிகபதார்த்தங்களையும், ஆய - ப்ரகாரமாகவுடைய, பெருமானே - ஸர்வாதிகனுப், ("வ்யாப்ய வ்யாபக நிர்தேசம்" என்கிறகணக்கிலே), கறந்த - கறந்த, பால்-பாலுக்கு, உள் - உள்ளில், நெய்யேபோல் - நெய்போலே, (மதித்துக்காண்பார்க்கொழிய), கண்டுகொள் இறந்து - காண அரிதாம்படி, இவற்றுள் - இப்பதார்த்தத்துக்குள்ளில், எங்கும் - எல்லாவிடத்திலும், நின்ற - நின்ற, பெருமாயா - அத்யாஸ்சர்யபூதனானவனே! உன்னை - (இப்படி அதீந்த்ரியனான) உன்னை, எங்கே - எவ்விடத்திலே, காண்கேன் - காணக்கடவேன்.

இ.—பத்தாம்பாட்டில், அவதாரத்துக்குப் பிற்பாடனுப், அந்தர்யாமித்வம் கண்ணுக்கு அவிஷயமானபின்பு, உன்னை எவ்விடத்தேபோ காண்பது? என்கிறார்.

[பிறந்தமாயா] - அகர்மவஸ்யனாய் வைத்து, அப்ராக்ருத திவ்ய ஸம்ஸ்தானத்தை இதரஸஜாதீயமாக்கிவந்தவதரித்த ஆஸ்சர்யபூதனே! [பாரதம்பொருதமாயா] - பிறந்தாற்போலே இருப்பதொன்றுயிற்று இவ்வாஸ்சர்யமும்; ஸத்யப்ரதிஜ்ஞனானவன் அஸத்யப்ரதிஜ்ஞனானவாஸ்சர்யம்; "ஆயுதமெடேன்" என்று ஆயுதமெடுக்கையும், பகலை இரவாக்குகையும். [நீயின்னே] - இப்படிஸுலபனாயிருக்கச்செய்தே. [சிறந்த இத்யாதி] - காரணமான ப்ருதிவ்யாதிபூதங்களுக்கும். [பிறவும்இத்யாதி] - கார்யமான தேவாதிபதார்த்தங்களுக்கும் ஆத்மாவான ஸர்வேஸ்வரனே! காற்றுக்குச் சிறப்பாகிறது—காரணத்வம் ஒத்திருக்கதாரகத்வத்தால் வந்தவுற்றம். [கறந்த இத்யாதி] - கண்ணாலேகாண்கிற பாலினுள்ளே நெய்யுண்டாயிருக்கக் காண்கைஅரிதானாற்போலே, ஸகல பதார்த்தங்களிலும் நின்றுவைத்துக் காணவொண்ணாதபடி நிற்கிற ஆஸ்சர்யபூதனே. [கறந்த பால்] - காலத்தாலும் ஆதஞ்சநமுதலானவைகளாலும் தோற்றுகிற நெய் கறந்தகாலத்தில் தோற்றாதிறே. உன்பக்கலிலே ந்யஸ்தபரராகையாகிற ஸம்ஸ்காரத்தாலல்லது காணவரியை என்கை. [உன்னை எங்கே காண்கேனே] - பரமபதத்தில் காட்சிக்கு ஸரீர ஸம்பந்தமும் அறவேணும்; அவதாரத்துக்குப் பிற்பாடனானேன்; அர்ச்சாவதாரம் நினைத்தபடி கிடையாது; அந்தர்யாமித்வம் கண்ணுக்கு விஷயமன்று. இனி, எங்கே காணப்புகுகிறேன்?

ஈடு.—பத்தாம்பாட்டு. அவதாரத்துக்குப் பிற்பாடனாய், அந்தர்யாமித்வம் கண்ணுக்கு அவிஷயமானபின்பு, உன்னை நான் எவ்விடத்தே காண்பதென்கிறார்.

பத்தாம்பாட்டு.—பிறந்தமாயா இத்யாதி. "பிறந்தமாயா" இத்யாதியையும், "கண்டுகொள்இறந்துநின்ற பெருமாயா உன்னையெங்கேகாண்கேன்" என்றத்தையும் கடாக்ஷித்து அவதாரிகை - அவதாரத்துக்கு இத்யாதி

[பிறந்தமாயா] - அகர்மவஶ்யனுய்வைத்து, அப்ராக்ருத திவ்யஸம்ஸ்த்தாநத்தை இதரஸஜாதீயமாக்கி வந்தவதரித்த ஆஶ்சர்யபூதனே! [பாரதம்பொருதமாயா] - பிறந்தாற் போலே யிருப்பதோன்றுயிற்று இவ்வாஶ்சர்யமும்! ஸத்யப்ரதிஜ்ஞனவன் அஸத்யப்ரதி ஜ்ஞனை ஆஶ்சர்யம். "ஆயுதமெடேன்" என்று ஆயுதமெடுக்கையும், பகலை இரவாக்குகை யும். [நீயின்னே]-நீ இப்படி ஸாலஹனுயிருக்கச்செய்தே. [சிறந்த இத்யாதி] - காரணமான ப்ருதிவ்யாதிபூதங்களுக்கும். [பிறவும்] - தத்கார்யமான தேவாதிபதார்த்தங்களுக்கும். [ஆய பெருமானே] - ஆத்மாவான ஸர்வேஶ்வரனே! காற்றுக்குச்சிறப்பாவது- காரணத்வமோத்திரு க்கவாரகத்வத்தால்வந்த ஏற்றம். [கறந்த இத்யாதி] - கண்ணாலே காண்கிற பாலினுள்ளே நெய்யுண்டாயிருக்கக் காணவரிதானுற்போலே ஸகலபதார்த்தங்களிலும் நின்றுனைத்துக் காணவொண்ணுதபடி நிற்கிற அத்யாஶ்சர்யபூதனே! ப்ரஹ்மவிதுபநிஷத்து, "ഗവാമനേകവർണാനാം ക്ഷീരസ്യത്വേകവർണതാ । ക്ഷീരവത്പശ്യതി ജ്ഞാനം ലിംഗിനസ്തു ഗവാംയഥാ ॥ ഘൃതമിവ പയസി നിഗൂഢം ഭൂതേ ഭൂതേ ച വസതി വിജ്ഞാനം । സതതം മന്ഥേതവ്യം മനസാ മന്ഥാനഭൂതേന ॥ സർവഭൂതാധിവാസം യദ്ഭൂതേഷു ച വസത്യപി । സർവാനുഗ്രാഹകത്വേന തദസ്മ്യഹം വാസുദേവ ഇതി ॥" (கவாமநேகவர்ணநாம்க்ஷீரஸ்யத்வேகவர்ணதா | க்ஷீரவத்பஶ்யதி ஜ்ஞாநம்லிங்கிநஸ்துகவாம்யதா || க்ருதமிவபயஸிநிகூடம் பூதேபூதேசவஸதிவிஜ்ஞாநம் | ஸததம்மந்தேதவ்யம்மநஸாமந்தாநபூதேந || ஸர்வபூதாதிவாஸம்யத் பூதேஷுசவஸத்யபி | ஸர்வாநுக்ராஹகத்வேந ததஸ்ம்யஹம்வாஸுதேவஇதி) என்கிறபடியே. [கறந்தபால்] - காலத்தாலும் மதநாதியாலும் தோற்றுகிறநெய், கறந்தகாலத்தில் தோற்றுதிறே. உன்பக்க லிலே ந்யஸ்தபரனுகையாகிற ஸம்ஸ்காரத்தாலல்லது காண அரியையென்கை. [உன்னை எங்கேகாண்கேனே] - பரமபதத்தில் காட்சிக்கு ஶரீரஸம்பந்தமறவேணும்; அவதாரத்துக் குப் பிற்பாடனுனேன்; அர்ச்சாவதாரம் நான் நினைத்தபடி கிடையாது; அந்தர்யாமித்வம் கண்ணுக்கு விஷயமன்று; இனி இவ்விழவோடே முடிந்துபோமித்தனையாகாதே. (௧௦)

அவதாரத்தில்ஆஶ்சர்யமேதென்ன-அகர்மவஶ்யனுய் இத்யாதி. பாரதம்பொருகையில்ஆஶ்சர்ய மேதென்ன-ஸத்யப்ரதிஜ்ஞன்இத்யாதி. அஸத்யப்ரதிஜ்ஞனைபடிஎப்படி?என்ன-ஆயுதம்இத்யாதி காரணத்வமோத்திருக்கஎன்றது- ஸூக்ஷ்மதாந்தரங்களோபாதிகாரணத்தம்ஒத்திருக்கஎன்றபடி. 'கண்டு கொள்இறந்துநின்ற' என்றது - கண்டுகொள்ளுகையை அதிக்ரமித்துநின்றஎன்றபடி. பாலுக்குள்ளே நெய்யிருக்குமாபோலேஅந்தர்யாமியாயிருக்குமோவென்ன-ഗവാം இத்யாதி. ஜ்ஞாநமென்றது-ஜ்ஞா நஸ்வரூபனை ஆத்மாவை. ലിംഗിന:-தேஹிந:, தேவாதிஶரீரபேதங்களையுடையவர்களென்றபடி. ഗവാംയഥാ-கோக்களுக்குஎப்படி வர்ணபேதவிஶிஷ்டஶரீரபேதங்கள், அப்படியே தேவாதிஶரீர பேதங்கள். 'ഘൃതമിവ പയസി നിഗൂഢം ഭൂതേ ഭൂതേ ച വസതി വിജ്ഞാനം' என்றமாத்ரமே இவ்விடத்துக்குவேண்டுவது. விஜ்ஞாநம் - பரமாத்மா. "സർവഭൂതാധിവാസം" என்று- தத்புருஷனில்அர்த்தத்தையும், "ഭൂതേഷു ച വസത്യപി" என்று-பஹுவ்ரீஹியிலர்த்தத் தையும் சொல்லுகிறது. "മന്ഥേതവ്യം" என்று - உபாஸகனவார்த்தை. பாலென்னுதே, "கறந்த பால்" என்று விஶேஷித்ததுக்கு ஸ்வாரஸ்யம் - காலத்தாலும் இத்யாதி. மதநாதி என்கிற ஆதிஶப்தத் தாலே- மதநபூர்வபாவியான †ஆதஞ்சநத்தைச்சொல்லுகிறது. தோற்றுதிறே - அதுக்காகவிஶேஷிக் கிறதென்றபடி. "മന്ഥാനഭൂതേന-മനസാ-സതതം മന്ഥേതവ്യം" என்றதுக்கு அர்த்தம் - உன்பக்கலிலே இத்யாதி. பரத்வத்தையும் அர்ச்சாவதாரத்தையுங் கூட்டி, உக்தத்தை நிகமிக் கிறார் - பரமபதத்தில் இத்யாதி. (௧௦)

† ஆதஞ்சநம் - பாலிற் பிரைகுத்தித் தோய்த்தல்.

எங்கேகாண்கேன்!ஈன்துழாயம்மான்தன்னையான்?என்றென்று
அங்கேதாழ்ந்தசொற்களால்அந்தண்குருகூர்ச்சடகோபன்
செங்கேழ்சொன்னவாயிரத்துள் இவையும்பத்தும்வல்லார்கள்
இங்கேகாண இப்பிறப்பேமகிழ்வர் எல்லியுங்காலையே.

ஆ—(எங்கேகாண்கேன்.) - எங்கேகாண்கேன் ஈன்துழாயம்மான்தன்னை யானென்றென்று அங்கே ப்ரவண மநஸ்காராய், ப்ரேமார்த்ர விஹ்வலமான சொற்களாலே அந்தண்குருகூர்ச்சடகோபன் ஆர்ஜவோபேதமாகச்சொன்ன ஆயிரத்துள் இவை பத்தும் வல்லார்கள், இந்த லோகத்திலே இஜ்ஜந்மத்திலே எல்லாருங்காண எம்பெருமானை எப்போதும் காணப்பெற்று மகிழ்வரென்கிறார்.

ஒ.—நிகமத்தில், இத்திருவாய்மொழி வல்லார், ஆழ்வார்பட்ட து:க்கம் படாதே, இஹலோகத்திலே இஜ்ஜந்மத்திலே எம்பெருமானைப் பெற்று நிரந்தரமாக ஸுகிப்பரென்கிறார்.

[எங்கேயென்றுதொடங்கி] - ஸர்வைச்வர்ய ஸூசகமாய் நிரதிசயபோக்யமான திருத்துழாய்மாலையாலே அலங்க்ருதனான ஸர்வேச்வரனை நான் எங்கே காண்கேன் என்று நிரந்தரமாகச் சொல்லாநின்றுகொண்டு அந்தபாவத்திலே ப்ரவணமான சொற்களாலே. [செங்கேழ்] - செவ்விதாம்படி. [எல்லி] - இரவு. [காலை] - பகல்.

ப.—அநந்தரம், இத்திருவாய்மொழிக்கு பலமாக, ஸம்ஸாரத்திலே ஸதா பகவதநுபவலாபத்தை அருளிச்செய்கிறார்.

'ஈன் - நிரதிசயபோக்யமான, துழாய் - திருத்துழாய்மாலையையுடைய, அம்மான்தன்னை - ஸர்வேச்வரனை, யான் - (இப்படி ஆர்த்த்யதிசயத்தையுடைய) நான், எங்கே - எங்கே, காண்கேன் - காணக்கடவேன்', என்றென்று - என்று பலகாலுஞ் சொல்லி, அங்கே - அவனுடைய போக்யதையிலும் சேஷித்வத்திலும், தாழ்ந்த - ப்ரவணமான, சொற்களால் - சொற்களாலே, அம் - தர்சநீயமாய், தண் - ச்ரமஹரமான, குருகூர் - திருநகரிக்கு நிர்வாஹகரான, சடகோபன் - ஆழ்வார், (பகவத்ஸ்வபாவங்களை ப்ரதிபாதிக்குமிடத்தில்), செங்கேழ் - ஆர்ஜவத்தை யுடைத்தாய்க்கொண்டு போரும்படி, சொன்ன - அருளிச்செய்த, ஆயிரத்துள் - ஆயிரத்துக்குள்ளே, இவையும்பத்தும் இவைபத்தையும், வல்லார்கள் - பாவவ்ருத்தியோடே அப்யஸிக்கவல்லவர்கள், இங்கே - இந்தப்பூமியிலே, காண - (எல்லாரும்) காணும்படி, இப்பிறப்பே - இஜ்ஜந்மத்திலே, எல்லியுங்காலை - ராத்ரிந்திவம் இடைவிடாதபடி, மகிழ்வர் - பகவதநுபவஜநிதாநந்தத்தை யுடையராவர்கள். எல்லி - ராத்ரி. இது - அறுசீராசிரியவிருத்தம்.

இ.—நிகமத்தில், இத்திருவாய்மொழிவல்லார், இவ்வாழ்வார்பட்ட து:க்கம் படாதே, இஹலோகத்திலே இஜ்ஜந்மத்திலே அவனைப்பெற்று நிரந்தரமாக ஸுகிப்பரென்கிறார்.

[ஈன்துழாயம்மான்தன்னை - எங்கேகாண்கேன்] - ஐச்வர்ய ஸூசகமான திருத்துழாய்மாலையையுடைய ஸர்வேச்வரனைக் கண்டல்லது தரிக்கமாட்டாதபடி சபல

ஞன நான் எங்கேகாணக்கடவேன்? [என்றென்று] - நிரந்தரமாகச் சொல்லி. ஒரு கால்சொல்லி "ஆசையை ஆவிஷ்கரித்தோமிறே" என்று ஆறியிருக்கிறாரல்லரே; லாபத் தளவும் சொல்லுமித்தனையிறே. [அங்கேதாழ்ந்த சொற்களால்]- தோளும், தோள்மாலையிலும் அந்த ஶேஷித்வத்திலும் ப்ரவணமான சொற்களாலே. [அந்தண்குருகூர்ச் சடகோபன்] - "உபதிஷ்டந்தாம் ஸம்ஸ்லேஷ" என்னுமாபோலே, இவ்வாற்றாமைக்கெல்லாம் இடங்கொடுத்த ஆழ்வார் என்று ஆளவந்தார் நிர்வாஹம்: [செங்கேழ்சொன்ன] - செவ்விதாகச்சொன்ன; நினைவும், சொல்லும், செயலும் ஒருபடிப்பட்டிருக்கை. [செங்கேழ்] - செவ்விதாக என்றபடி, [இங்கேயித்யாதி] - இஹலோகத்திலே இஜ்ஜந்மத்திலே திவாராத்ரவிபாகமின்றிக்கே ஸம்ஶ்லேஷம்பண்ணி மகிழப்பெறுவர். "ஆளக்கூப்பிட்டழைத்தக்கால்" என்று - கூப்பிடவந்து முகங்காட்டாதத்தால் பிறந்த தன்னுடைய அவத்யத்தை, ஆழ்வாரை ஆஶ்ரயித்தார்பக்கலிலே தீருமாயிற்று அவன்; பார்யையோடே வெறுப்புண்டானால் அவள்பக்கல் முகம்பெறுகைக்கு ப்ரஜைகளை ஶ்லாகிப்பாரைப் போலே.

ஈடு.— நிகமத்தில் - இத்திருவாய்மொழிவல்லார், தாம்பட்ட து:கம்படாதே, இஹலோகத்திலே இஜ்ஜந்மத்திலே அவனைப்பெற்று நிரந்தரமாக ஸம்ஶ்லேஷிப்பரென்கிறார்.

[ஈன்துழாயம்மான்தன்னையான்எங்கேகாண்கேன்] - ஐஶ்வர்ய ஸூசகமான திருத்துழாய்மாலையையுடையஸர்வேஶ்வரனைக் கண்டல்லதுதரிக்கமாட்டாதபடிசபலனான நான் எங்கேகாணக்கடவேன்? [என்றென்று] - பரத்வாதிகளைப் பெறாத நான்உன்னை நிரந்தரமாகச்சொல்லி. ஒருகால்சொல்லி "ஆசையை யாவிஷ்கரித்தோமிறே" என்று ஆறியிருக்கிறாரல்லரே;லாபத்தளவும் சொல்லுமித்தனையிறே [அங்கேதாழ்ந்தசொற்களால்]-தோளும், தோள்மாலையிலும், அந்த ஶேஷித்வத்திலும் ப்ரவணமான சொற்களாலே. [அந்தண்குருகூர்ச்சடகோபன்] - "உபதிஷ்டந்தாம் ஸம்ஸ்லேஷவ்யாயய:" (உபதிஷ்டந்தாம் ஸர்வேவ்யாதய:)என்கிறபடியே, இவ்வாற்றாமைக்கேல்லாம் ஆடல்கொடுத்த ஆழ்வார்" என்று ஆளவந்தார் நிர்வாஹம். [செங்கேழ்சொன்னஇத்யாதி]-மனோவாக்காயங்கள் ஏகரூபமாய்ச்சொன்ன ஆயிரத்திலும் இப்பத்தையும். [வல்லார்கள்]-அப்யஸிக்கவல்லார். [இங்கே இத்யாதி] - இஹலோகத்திலே இஜ்ஜந்மத்திலே திவாராத்ர விபாகமின்றிக்கே ஸம்ஶ்லேஷம் பண்ணி மகிழப்பெறுவர்: "ஆளக்கூப்பிட்டழைத்தக்கால்" என்று கூப்பிட வந்து

நிகமம்.—எங்கேகாண்கேன் இத்யாதி- "இவையும்பத்தும்வல்லாகள் இங்கே - இப் பிறப்பே மகிழ்வர்எல்லியுங்காலையே" என்ற பதங்களைக் கடாக்ஷித்து அவதாரிகை - இத்திருவாய்மொழி இத்யாதி.

ஈன் - இனிதான என்றபடி. "அம்மான்" என்று ஶேஷித்வம். வீப்ஸையேதென்ன - ஒருகால் இத்யாதி. "அங்கேதாழ்ந்த" என்றதுக்கு அர்த்தம் - தோளும் இத்யாதி. "அங்கே" என்று - "ஈன்துழாயம்மான்" என்றத்தைப் பராமர்ஶிக்கிறது. ஆழ்வார் து:கிதராயிருக்க, "அந்தண் குருகூர்" என்னலாமோவென்ன-உபதிஷ்டந்தாம் இத்யாதி. அதாவது "கர்மபலமென்றுதல், க்ருபாபலமென்றுதல்" இத்யாதிப்படியே சலியாதிருக்கையாலே, ஊரும் தழைத்ததென்றபடி. "உபதிஷ்டந்தாம் ஸம்ஸ்லேஷவ்யாயய: ஸர்வே ஸம்ஸ்லேஷிதா: । க்ருஷ்ணோ ஹம் பதிஷ்யாமி தமிஷோ: ஸாரஸம்பவ:" இதிஹாஸஸமுச்சயே. ஆடல்கொடுத்த - இடங்கொடுத்த. "செங்கேழ்" என்று முழுச்சொல்லாய், செவ்விதாக என்றபடி. "இங்கே - இப்பிறப்பே-எல்லியுங் காலையும் - காண - மகிழ்வர்" என்று அந்வயித்து அர்த்தம் - இஹலோகத்திலே இத்யாதி. இவர்க்கு

முகங்காட்டாத அவத்யத்தை இப்பத்தை யப்யஸித்தவர்களோடே கடுகவந்து முகங் காட்டித் தீருமாயிற்று ஈஶ்வரன்; பார்யையோடே வெறுப்புண்டானால் அவள் பக்கல் முகம் பெறுகைக்காக ப்ரஜைகளை ஶ்லாகிப்பாரைப்போலே. (சக)

ஸகவதநுஸவம் கிடையாதிருக்க, இப்பத்தை யப்யஸித்தார்க்குக் கிடைக்கக் கூடுமோவென்ன - ஆளக்கூப்பிட்டு இத்யாதி. இதுக்கு த்ருஷ்டாந்தம்-பார்யையோடே இத்யாதி. ஈன்துழாயம்மான் தன்னை யான் - எங்கேகாண்கேன் - என்றென்று, அங்கே தாழ்ந்த என்று தொடங்கி எல்லியுங் காலையும் - மகிழ்வர் இத்யந்வய:. (கக)

த்ரவிடோபநிஷத்ஸங்கதி.— [illegible] ॥.

த்ரவிடோபநிஷத்தாத்பர்யரத்நாவளி.— [illegible] ॥

திருவாய்மொழி நூற்றந்தாதி

மாயன் வடிவழகைக்காணுதவல்விடா
யாய்அதறவிஞ்சியழுதலற்றம்— தூயபுகழ்
உற்றசடகோபனைநாமொன்றிநிற்கும்போதுபகல்
அற்றபொழுதானதெல்லியாம்.

ஆழ்வார்திருவடிகளே ஶரணம், எம்பெருமானார்திருவடிகளே ஶரணம், ஜீயர்திருவடிகளே ஶரணம்.

ஆறும் திருவாய்மொழி—எல்லியும் ப்ரவேஶங்கள்.

ஆ.—(எல்லியுங்காலையும்.) - எம்பெருமான் என்னுடைய விடாயெல்லாம் தீரும்படி அருள்செய்தருளினான்.

ஒ.—ஆறுந்திருவாய்மொழியில், ஆழ்வாருடைய ஆர்த்தத்வநியைக் கேட்டு தப்தஹ்ருதயனாய், அவருடைய ஆர்த்திதீரும்படி ஸம்ஶ்லேஷித்தருளுகைக்காக வருகையிலே உத்யுக்தனான எம்பெருமான்,— ஸ்ரீபரதாழ்வானுக்குத் தாம் எழுந்தருளின ப்ரீதி ஸாத்மிக்கத்தால் திருவயோத்யையிலே புக்கருளுகைக்காக ஸ்ரீபரத்வாஜ பகவான் ஆஶ்ரமத்திலே பெருமாள் விட்டருளினாற்போலேயும், ஸ்ரீவஸுதேவர் திருமகன்

தூதெழுந்தருளினபோது நேரே சென்று ஹஸ்திநபுரத்தில் புகாதே குஶஸ்தலத்திலே விட்டருளினாற் போலேயும், ஆழ்வார்தம்பாடு நேரவந்து புகுந்தருளாதே, தான்வந்த வரவில் இவர்க்குப் பிறந்த ப்ரீதி ஸாத்மித்தால் வந்து ஸம்ஶ்லேஷித்தருளுகைக்காகத் திருக்கடித்தானத்திலே வந்து புகுந்தருளித் தம்மோடே கலக்கிறபடியைக்கண்டு ப்ரீதராகிறார்.

ப.—ஆறாந்திருவாய்மொழியில், இப்படி அநுபூதாபிநிவேஶத்தாலே அத்யந்தம் ஆர்த்தராய்க் கூப்பிட்ட இவ்வாழ்வாருடைய ஆர்த்தி தீருகைக்காக "இவருடைய ஸகலவிரோதிகளையும்போக்கி ஸம்ஶ்லேஷிப்போம்" என்று ஈஶ்வரன் திருக்கடித்தானத்திலே ஆஸந்நமாக வந்து ஸந்நிஹிதனானபடியை ப்ரகாஶிப்பிக்க; அவனுடைய ஆஸக்திநிதாநமான ஶேஷித்வத்தையும், அஶேஷவிரோதிநிவர்த்தகமான ஸாமர்த்யத்தையும், பராக்ரமைசர்யத்தால் வந்த வீரஶ்ரீயோகத்தையும், ஆந்தரவிரோதிநிவர்த்தகமான அந்தஃப்ரவேஶத்தையும், ப்ரத்யாஸத்திக்கடியான ப்ராப்யதேசவர்த்தித்வத்தையும், அவனிலும் அவன்தேசம் விரோதிநிவர்த்தகமென்னுமிடத்தையும், தேசஸ்ம்ருதிமாத்ரமே து:கநிவர்த்தகமென்னுமிடத்தையும், ஆஸந்நதேசத்தினுடைய அஸாதாரண்யத்தையும், அர்ச்சாந்தர ஸ்தலத்திலும் ஸந்நிஹிதனென்னுமிடத்தையும், ஆஸந்நதேசஸ்த்திதி அந்த:ப்ரவேஶார்த்தமென்னுமிடத்தையும் அநுஸந்தித்து, நெஞ்சிலே வந்து புகுந்து தம்முடைய விரோதியைப்போக்கி அநுபவிப்பதாக அத்யாஸந்நனான அவனுடைய அபிநிவேஶத்தைக்கண்டு தமக்குப்பிறந்த ஹர்ஷத்தை அருளிச்செய்கிறார்.

இ.—ஆறாந்திருவாய்மொழியில், * மாயக்கூத்தனில் ஆழ்வார்க்கோடின ஆர்த்தியளவன்று, ஈஶ்வரனுக்குப் பிறந்தவிடாய்; இது பேச்சுக்கு நிலமாகையாலே பேசலாயிற்று. அவனுக்குப் பேச்சுக்கு நிலமல்லாமையாலே பேசப்பெற்றதில்லை. "ஊயு ஊஂரோஸாந ஜீவிஷெ" என்றிறே இத்தலையில்விடாய்; "நஜீவேயம் க்ஷணமபி" என்றிறே அத்தலையிருப்பது. கீழ் இவர் ஆர்த்தியோடே கூப்பிட முகங்காட்டப் பெறாமையாலே, "ஹ்ரேஷாஹிரோத" என்று பிற்பாட்டுக்கு லஜ்ஜித்து, தப்தஹ்ருதயனாய், இவருடைய ஆர்த்திதீர ஸம்ஶ்லேஷிக்கைக்காக வருகையிலே உத்யுக்தனானவன், "ஒருகாலே சென்று முகங்காட்டில், ஒருகாலே ஆறுபெருகில் உடைகுலைப்படுமாபோலே இவர் ஶிதிலராவர்" என்று இவர் பக்கலிலே நேரே வந்து புகுராதே, "வரவை அறிவித்து ப்ரீதி ஸாத்மித்தவாறே முகங்காட்டுவோம்" என்றுபார்த்து, பெருமாள் ஸ்ரீகுஹப்பெருமாளுக்குத் தாம் எழுந்தருளின ப்ரீதி ஸாத்மித்தவாறே எழுந்தருளுகைக்காக ஸ்ரீபரத்வாஜபகவானாஶ்ரமத்திலே [illegible]ற்போலேயும்; ஸ்ரீக்ருஷ்ணன் தூதெழுந்தருளுகிறபோது "நினைவின்றிக்கே போய்ப்புக்கவாறே யுதிஷ்டிராதிகள் ப்ரீதியாலே ஶிதிலராகக்கூடும்" என்று, "க்ஷஸ்ருஹாநிவஸஸநிஹவகஸம் ப்ராதஸிமோஷ்யதி" என்று வரவு வார்த்தையானவாறே பிற்றைநாள் ஹஸ்திநபுரத்திலே போய்ப் புக்காற்போலேயும் ஸம்ஶ்லேஷோந்முகனாய், திருக்கடித்தானத்திலேபுகுந்து நிற்கிறநிலையைக் காட்டிக்கொடுக்க, தம்மோடு கலக்கைக்கு ஒருப்பட்டு நிற்கிறநிலையை அநுஸந்தித்து க்ருதக்ருத்யராய், அத்தைப் பேசி இனியராகிறார். கீழில்திருவாய்மொழியில் வ்யஸநப்படுத்தின நினைவுதானே இப்போது உஜ்ஜீவநமாம்படி பண்ணினான். * செறுவாரும் நட்பாகுவரிறே செங்கோனருள் பெற்றவாறே.

ஈடு.— * மாயக்கூத்தனில், ஆழ்வார், தமக்கோடினவிடாய் பேச்சுக்கு நிலமாகையாலே பேசினர்; ஈச்வரனுக்தோடினவிடாய் பேச்சுக்கு நிலமல்லாமையாலே பேசிற்றில்லை. "ஊர்த்வம்மாஸாந்நஜீவிஷ்யே" (ஊர்த்த்வம்மாஸாந்நஜீவிஷ்யே) என்று இத்தலையில் விடாய்; "நஜீவேயம்க்ஷணமபி" (நஜீவேயம்க்ஷணமபி) என்றிறே அத்தலையிருப்பது * "மாயக்கூத்தனில் இவர்க்கோடினவிடாய்க்கு உதவப்பெற்றிலோம்" என்னுமத்தாலே தப்பனாய், ஆதலனாய், பிற்பாட்டுக்கு "ஹ்ரீரேஷாஹிமமாதுலா" (ஹ்ரீரேஷாஹிமமாதுலா) என்கிறபடியே லஜ்ஜித்து "இனி நாம் கடுகமுகங்காட்டில் ப்ரீதியாலே உடைகுலைப்படுவர், ப்ரீதியை ஸாத்மிப்பித்து உளராக்கிப் பரிமாறவேணும்" என்று, பதினாலாண்டு பிரிவாலே நோந்த ஸ்ரீபரதாழ்வானை ஸ்ரீப்பித்து முகங்காட்டுகைக்காகத் திருவடியைப் போகவிட்டு, ஸ்ரீபரத்வாஜமஹாநுச்ரமத்திலே இருந்தாற்போலவும்; பாண்டவர்களுக்காகத் தூதுபோகிறபோது, ப்ரேமபரவசரான விதுராதிகள் ப்ரீதியை அகஞ்சுரிப்படுத்தி முகங்காட்டுகைக்காக, *"குசஸ்த்தலேநிவஸதிஸசப்ராதரிஹேஷ்யதி" (குசஸ்த்தலேநிவஸதிஸச ப்ராதரிஹேஷ்யதி) என்கிறபடியே - குசஸ்த்தலத்திலே விட்டுக்கொண்டிருந்து, பிற்றைநாள் ஹஸ்திநபுரத்திலே எழுந்தருளினாற்போலவும்; தம்மோடே ஸம்ச்லேஷோந்முகனான ஸர்வேச்வரன், தம்முடைய ப்ரீதியை ஸாத்மிப்பித்துத் தம்மோடே கலக்கைக்காகத் திருக்கடித்தானத்திலே எழுந்தருளியிருந்து, தம் பக்கல் பண்ணுகிற வ்யாமோஹத்தை அநுஸந்தித்து இனியராய், அத்தைப்பேசி அநுபவிக்கிறார். கீழில் திருவாய்மொழியில் வ்யஸநஹேதுவான நினைவுதானே இப்போது உஜ்ஜீவநமாம்படி பண்ணினான். * சேறுவாரும் நட்பாகுவரிறே செங்கோனருள்பெற்றவாறே.

எல்லியும்காலையும் ப்ரவேசம்: தம்முடையவிடாய் சொன்னாற்போலே அவனுடைய விடாயையும் சொல்லவேண்டாவோவென்ன - மாயக்கூத்தனில் இத்யாதி. அப்படி அதிசயித்திருக்குமோவென்ன - ஊர்த்வம் இத்யாதி. ஸங்கதி - மாயக்கூத்தனில் இத்யாதி. ஆதலனாய் - கால் பாவாதவனாயென்றபடி. இப்படி வ்யஸநாதிசயத்தையுடையவனாகையாலே மாயக்கூத்தனில் என்றுகூட்டுவது. கீழேஅப்படி விடாய்த்தவரைப் பூர்ணமாக அநுபவிப்பியாதே, திருக்கடித்தானத்திலேவந்து நிற்கிறதுக்கு ஹேதுவேதென்ன - இனிநாம் இத்யாதி. இவ்விடத்திலே - "நாளைவதுவை" என்கிறத்தை அருளிச்செய்வர். வதுவை - விவாஹம். அதாவது - இன்று வதுவையென்னாதே, "நாளைவதுவை" என்றது - ப்ரீதி ஸாத்மிக்கைக்காக என்றபடி. ஒருஸ்திரீ, தாரித்ர்யத்தாலே நொந்திருக்க, புத்ரன் தேடிக்கொண்டுவந்த தநராசியை முன்னே சொரிய, ப்ரீதியாலே வாராநிற்கச்செய்தே, ப்ரீதி தலைமண்டையிட்டு முடிந்தாளென்கிற லௌகிககதையை அருளிச்செய்வர். "ஸாத்மிப்பித்து உளராக்கிப் பரிமாறவேணும்" என்றதுக்கு த்ருஷ்டாந்தம் - பதினாலாண்டு இத்யாதி.கீழேயும் குறைநுஸந்தாநமாயிருக்க, அங்கே துக்கமும்,இங்கே ப்ரீதியுமாவானென்? என்ன - கீழில்திருவாய்மொழியில் இத்யாதி. இதுகூடுமோவென்ன - சேறுவாரும் இத்யாதி. திருவிருத்தம், "சேமம்" இத்யாதி. சேறுவார் - சூர்யர். நட்பாகுவர் - உறவாவர்கள்.
"உபப்லவ்யாதிஹக்ஷத்தா வ்யபாதேராஜநாத்யநந்தரம் குசஸ்த்தலேநிவஸதிஸசப்ராதரிஹேஷ்யதி"

* பார - உத்தியோக (அகூ-க) இப்போது அச்சிட்ட புத்தகத்தில் 'வ்ருகஸ்த்தலே' என்று பாடபேதம் காண்கிறது.

முதற் பாட்டு.

எல்லியுங்காலையும் தன்னைநினைந்தெழ
நல்லவருள்கள்நமக்கே தந்தருள்செய்வான்
அல்லியந்தண்ணந்துழாய்முடி அப்பனூர்
செல்வர்கள்வாழுந் திருக்கடித்தானமே.

ஆ.—ஒருவன் செய்தருளினபடியே என்றென்று நினைத்துக் கிடக்கும்படி அருள்செய்தருளினான்; அவ்வருள்தான் ஏதென்னில்,—முன்னம் திருக்கடித்தானத்திலே வந்து புகுந்தருளினானென்கிறார்.

ஒ.—முதற்பாட்டில், என்னுடைய ஆர்த்தி தீர்த்தருள்வான் ஸர்வேஶ்வரனே; அவன் ஊர் திருக்கடித்தானம் என்கிறார்.

[எல்லியுமென்று தொடங்கி] - காலதத்த்வமுள்ளதனையும் "ஒருவன் செய்தருளும்படியே" என்று தன்னை நினைத்து உஜ்ஜீவிக்கும்படி. [செல்வர்கள்] - எம்பெருமானோடு நித்ய ஸம்ஶ்லேஷம்பண்ணுமவர்கள். [அல்லியித்யாதி] - கீழில் திருவாய்மொழியில், "நின்மொய்பூந்தாமத்தண்துழாய்" என்று ஆசைப்பட்டபடியே தோற்றி.

ப.—முதற்பாட்டில், நமக்கு நிரதிஶயோபகாரம்பண்ணவந்த ஸர்வஶேஷியானவன் தேசம் திருக்கடித்தானமென்கிறார்.

எல்லியும்காலையும் - ராத்ரிதிவாவிபாகமில்லாதபடி, தன்னை-(உபகாரகனை) தன்னை, நினைந்து - ஸ்மரித்து, எழ - உஜ்ஜீவிக்கும்படியாக, (நிர்ஹேதுகமாகையாலே), நல்ல - விலக்ஷணமான, அருள்கள் - (ஆமந ஆஸக்தி அந்த:ப்ரவேஶ விரோதிநிவர்த்தந அநுபவங்களுக்கடியான)நிரவதிகக்ருபைகளை, ("தாரேன்பிறர்க்குஉன்னருளென்னிடை வைத்தாய்" என்கிற கணக்கிலே), நமக்கே - நமக்கே அஸாதாரணமாக, தந்து-தந்து, (மேலும் இடைவிடாமல்), அருள் - அருள், செய்வான் - செய்வானாய், ("தாமத்தண்துழாய்க்கடிசேர் கண்ணிப்பெருமான்" என்று இவர் ஆசைப்பட்டாற்போலே), அல்லி - பூந்தாரையுடைத்தாய், அம் - தர்ஶநீயமாய், தண்ணம் - குளிர்ந்த, துழாய் - திருத்துழாய் மாலையாலே அலங்க்ருதமான, முடி - திருமுடியையுடைய, அப்பன் - ஶேஷியாயுள்ள உபகாரகனானவனுடைய, ஊர் - (அஸாதாரண) தேசம், செல்வர்கள் - (பகவத் கைங்கர்யஸம்பத்தையுடையரான) பாகவதரானவர்கள், வாழும் - (அநுபவ அவிச்சேதத்தாலே ஆநந்திகளாய்) வர்த்திக்கிற, திருக்கடித்தானம் - திருக்கடித்தானமாம்.

இ.—முதற்பாட்டில், என்னுடைய ஆர்த்தி தீர்த்தருள்வான் ஸர்வேஶ்வரனே; அவன் ஊர் திருக்கடித்தானம் என்கிறார்.

[எல்லியும் இத்யாதி] - அஹோராத்ர விபாகமின்றிக்கே உபகாரகனை தன்னை, "ஒருவன் செய்தருளும்படியே" என்று நினைத்து நான் உஜ்ஜீவிக்கும்படியாக. [நல்லவருள்கள்] - இத்தலையில் குற்றம்பாராதே, வெறுமையே பார்த்துத் தன்பேறாக அருளுகை. * மாயக்கூத்தனில் விடாய்க்கருளினான் என்றிருக்கிறிலர். [நமக்கே தந்தருள் செய்வான்] - "பலரடியார் முன்பருளிய" என்று நித்யஸூரிகளும் தாம்பெற்ற

*பேறு பெற்றிலர் என்றாயிற்று நினைத்திருப்பது. [அல்லியந்தண்ணந்துழாய் முடியப்பன்]-கீழில் திருவாய்மொழியில்-“மொய் பூந்தாமத்தண்டுழாய்க் கடிசேர் கண்ணிப்பெருமான்” என்று இவர் ஆசைப்பட்டபடியேயாயிற்று வந்துநிற்கிறது. [ஊர்செல்வர்கள் வாழும் திருக்கடித்தானமே] - [செல்வர்கள்] - முன்பு * மாயக்கூத்தனைப், பின்பு * எல்லியும் காலையுமாக வேண்டாதவர்கள். ஸ்வாநுபவமாகிற நிரவதிகஸம்பத்தையுடையவர்கள். “லக்ஷ்மணோ லக்ஷ்மிஸம்பந்ந:”. [வாழும்] - கைங்கர்யாநுபவம்பண்ணுகிற ஊர். செல்வர்கள் வாழும் ஊர் - திருக்கடித்தானமென்னுதல்; அப்பனூர் செல்வர்கள் வாழும் திருக்கடித்தானமென்னுதல். தண்ணந்துழாய் முடியப்பன் - அருள்செய்வான், அவன்நிற்கிற திருக்கடித்தானம் நமக்கு ப்ராப்யபூமியென்கை. அப்பன் - உபகாரசீலன்.*

ஈடு.—முதற்பாட்டு.—என்னுடைய ஆர்த்திதீர்த்தருளுவான் ஸர்வேச்வரனே; அவனூர் திருக்கடித்தானமென்கிறார்.

[எல்லியுங்காலையும் இத்யாதி] - அஹோராத்ர விபாகமின்றிக்கே எல்லாக்காலத்திலும் உபகாரகனை தன்னை நினைத்து உஜ்ஜீவிக்கும்படி. [நல்லவருள்கள்] - என்குற்றமாதல், தன் ஸார்வஜ்ஞ்யமாதல் பாராதே, தன்பேறாகப்பண்ணின அருள். * மாயக்கூத்தனில் விடாய்க்கு அருளினானென்று இருக்கிறிலர். [நமக்கேதந்தருள் செய்வான்] - “பலரடியார்முன்பருளிய” என்கிறபடியே, நித்யஸூரிகளும் தாம் பெற்ற பேறு பெற்றிலர் என்றாயிற்று நினைத்திருப்பது. [அல்லியந்தண்ணந்துழாய்முடி] - கீழில்திருவாய்மொழியிலே “மொய்பூந்தாமத்தண்டுழாய்க்கடிசேர்கண்ணிப்பெருமானே” என்று இவர் ஆசைப்பட்டபடியே காட்டிக்கொடுத்தான். [ஊர்] - இப்படி உபகாரகனானவன் வர்த்திக்கையாலே நமக்கு ப்ராப்யபூமி திருக்கடித்தானமென்கிறார். [செல்வர்கள்வாழும்] - * மாயக்கூத்தனும் * எல்லியுங்காலையுமாக வேண்டாதே, அநுபவத்தோடே காலங்கழிக்கிறவர்கள்; “லக்ஷ்மணோ லக்ஷ்மிஸம்பந்ந:” (லக்ஷ்மணோலக்ஷ்மிஸம்பந்ந:) என்கிறபடியேயிருப்பார் சிலர். [எல்லியும் இத்யாதி] - அப்பனானவனூர் என்னுதல்; செல்வர்கள்வாழும் ஊர் திருக்கடித்தானமென்னுதல்; அல்லியந்தண்ணந்துழாய் முடியப்பன் - நல்லவருள்கள் நமக்கேதந்து அருள்செய்வானென்னுதல். (க)

முதற்பாட்டு.—எல்லியும் இத்யாதி. “நமக்கேதந்தருள்செய்வான் - அப்பன், ஊர் - திருக்கடித்தானம்” என்றத்தைக்கடாக்ஷித்து அவதாரிகை - என்னுடைய இத்யாதி.

“அப்பன்” என்றத்தைப்பற்ற - உபகாரகன் என்றது. எழ - எழும்படி; உஜ்ஜீவிக்கும்படி. அருளுக்கு நன்மையேதென்ன - என்குற்றமாதல் இத்யாதி. “தன்பேறாக” என்கிறதென்? கீழில்விடாய்க்காகவன்றோ? என்ன - மாயக்கூத்தனில் இத்யாதி. “நமக்கே” என்றஅவதாரணார்த்தம் - பலரடியார் இத்யாதி. தண்ணம் - முழுச்சொல்லு. குளிர்த்தி. “வாழும்” என்கிற வர்த்தமானார்த்தம்-மாயக்கூத்தனும் இத்யாதி. அநுபவம் ஸம்பத்தோவென்ன - லக்ஷ்மணோ லக்ஷ்மி இத்யாதி. செல்வர்கள்வாழும் திருக்கடித்தானம் - எல்லியும் காலையும் என்றுதொடங்கி, அப்பனூரென்னுதல்; அன்றியே, எல்லியும் காலையும் என்றுதொடங்கி, அப்பனதாய் - செல்வர்கள் வாழும் ஊர் - திருக்கடித்தானமென்னுதல்; அன்றிக்கே, அல்லியந்தண்ணந்துழாய்முடியப்பன் - எல்லியும் காலையும் தன்னை நினைந்தெழ நல்லவருள்கள் நமக்கே தந்தருள்செய்வான்: அவனூர் செல்வர்கள்வாழும் திருக்கடித்தானமென்னுதல்; இது அவதாரிகாநுகுணம். (க)

இரண்டாம்பாட்டு.

திருக்கடித்தானமும் என்னுடைச்சிந்தையும்
ஒருக்கடுத்து உள்ளேஉறையும்பிரான்கண்டீர்
செருக்கடுத்துஅன்றுதிகைத்தஅரக்கரை
உருக்கெட வாளிபொழிந்தவொருவனே.

ஆ.—(திருக்கடித்தானமும்.) பின்னையும் செய்தருளுகிறான். திருக்கடித்தானத்தையும் என்னெஞ்சையுமொக்கத் தனக்கு இருப்பிடமாகக் கொண்டருளினான். அவனாரென்னில்?—செருக்கடுத்துஅன்றுதிகைத்தவரக்கரை உருக்கெடவாளிபொழிந்த அத்விதீயன் கண்டீர்! என்கிறார்.

ஒ.—இரண்டாம்பாட்டில், என்பக்கல்வருகைக்கு ப்ரதிபந்தகங்களையுமெல்லாம் எம்பெருமான் தானே போக்கி, திருக்கடித்தானத்திலும் என்னுடைய சிந்தையிலும் ஒக்க அபிநிவேஶத்தைப்பண்ணி என்னுள்ளே வர்த்தியாநின்றான் என்கிறார்.

[பிரானென்று மேலுக்கு] - யுத்தகண்டூதியாலே மதிகெட்ட ராக்ஷஸரை ஶரீரம் அழியும்படி ஶரவர்ஷத்தை வர்ஷித்த உபகாரகன் கிடீர்!

ப.—அநந்தரம், அஶேஷவிரோதிநிவர்த்தநஸமர்த்தனான சக்ரவர்த்தித்திருமகன், திருக்கடித்தானத்தையும் என்னெஞ்சையும் ஒருபடிப்பட நினைத்து வர்த்திக்கும் உபகாரசீலனென்கிறார்.

(வரபலபுஜபலங்களாலே), செரு—யுத்தத்திலே, கடுத்து - செருக்குமிஞ்சி, அன்று - (நீரிலேநெருப்பெழுந்தாற்போலே சீறப்விளையும்படி பெருமாளுக்கு அபராதம்பண்ணின) அன்று, திகைத்த - (ஆசைவெல்லலாமென்று) ப்ரமித்த, அரக்கர்-(ராவணாதி) ராக்ஷஸர், உரு - உருவம், கெட - அழிந்து ஶிந்நமாம்படிக்கீடாக, வாளி - ஶரவர்ஷத்தை, பொழிந்த - வர்ஷித்த, ஒருவன்கண்டீர் - ஏகவீரனானவன்கிடீர், திருக்கடித்தானமும் - திருக்கடித்தானமாகிற திருப்பதியையும், (அப்படி அபிமதமான), என்னுடை சிந்தையும் - என் நெஞ்சையும், ஒருக்கடுத்து - ஒருமைப்படப்பிடித்து, உள்ளே - இரண்டுக்குள்ளே, உறையும் - வர்த்திக்கிற, பிரான் மஹோபகாரகன். இரண்டையுமொக்கப்பிடித்து என்னுள்ளே வர்த்திக்கிறவனென்றுமாம்.

இ.—இரண்டாம்பாட்டில், என்பக்கல் வருகைக்கு ப்ரதிபந்தகங்களையும் தானேபோக்கி, திருக்கடித்தானத்திலும் என் ஹ்ருதயத்திலும் ஒக்க அபிநிவேஶித்து, என்னுள்ளே வர்த்தியாநின்றான் என்கிறார்.

[ஒருக்கடுத்து] - ஒருங்கவடுத்து. அதாகிறது - ஒக்கநினைக்கை. திருப்பதியையும் என்ஹ்ருதயத்தையும் ஒக்க ஆதரித்து. [உள்ளேயுறையும்] - என்மநஸ்ஸிலே நித்யவாஸம் பண்ணாநின்றான். விரோதி செய்ததுஎன்? என்ன; அது ராக்ஷஸர்பட்டது பட்டது. [செருக்கடுத்து] - யுத்தகண்டூதி வர்த்தித்து. [திகைத்த அரக்கரை] - சக்ரவர்த்தித்திருமகனை வெல்ல நினைத்த மதிகேடரான ராக்ஷஸரை. [அன்று] - ‘‘நநந்தேயு’’ என்றஅன்று. [உருக்கெட] - ‘ஶீர்ணம் ஶீர்ணம் ஶரீரேஷு’’. [வாளிபொழிந்த] - ‘ஶரவர்ஷம் வவர்ஷ ஹ’’. [ஒருவனை பிரான்கண்டீர்] - ஏகவீரனை உபகாரகன் கண்டீர்!

ஈடு.—இரண்டாம் பாட்டு. என்பக்கல் வருகைக்கு ப்ரதிபந்தகங்களையும் தானேபோக்கி, திருக்கடித்தானத்திலும் என்ஹ்ருதயத்திலும் ஒக்கஅபிநிவேசித்து என்னுள்ளே வர்த்தியாநின்ற னென்கிறார்.

[ஒருக்கடுத்து] - ஒருங்கவடுத்து. அதாகிறது - ஒக்க நினைக்கை. திருக்கடித்தானத்தையும் என்ஹ்ருதயத்தையும் ஒக்கவிரும்பி. [உள்ளேயுறையும்] - மநஸ்ஸிலே நித்யவாஸம்பண்ணாநின்றான். விரோதிசெய்ததென்? என்ன, - அது ராக்ஷஸர்பட்டது பட்டது. [செருக்கடுத்து] - யுத்தகண்டூதி வர்த்தித்து. [அன்று] - "நநமேயம்" (நநமேயம்) என்றவன்று. [திகைத்தவரக்கரை] - சக்ரவர்த்தித்திருமகனை வெல்லலாமென்று நினைத்த மதிகேடரான ராக்ஷஸரை. [உருக்கெட] - "ஸிம்ஹம் ஸிம்ஹம்ஸரைரிவ." (சிங்கம் பிங்கம்ஸரைர்த்தக்தம்). [வாளிபொழிந்த] - "ஸரவர்ஷம் வவர்ஷஹ" (ஸரவர்ஷம் வவர்ஷஹ) என்கிறபடியே. [ஒருவன்] - ஏகவீரனானவன். (உ)

மூன்றும் பாட்டு.

ஒருவரிருவரோர்மூவரெனநின்று
உருவுகரந்துஉள்ளுந்தோறுந்தித்திப்பான்
திருவமர்மார்வன் திருக்கடித்தானத்தை
மருவியுறைகின்ற மாயப்பிரானே.

ஆ.—(ஒருவர்.) பின்னையும் ஒருவராய் இருவராய் மூவராய்த்தோன்றி, உருவுதெரியாதபடி வந்து வாளிபொழிந்தவனென்று அவன் செயலையே அநுஸந்தித்து, அதுக்குமேலே, இன்று திருக்கடித்தானத்திலும் என்னெஞ்சிலும் பிராட்டியோடே கூடவந்து புகுந்தருளினா னென்கிறார்.

ஒ —மூன்றும்பாட்டில், பிராட்டியோடேகூடத் திருக்கடித்தானத்தை மருவியுறையாநின்றுகொண்டு என்பக்கலிலே ஆஸ்சர்யமாம்படி ப்ரவணனானவன், உள்ளுந்தோறும் தித்தியாநின்றான் என்கிறார்.

[ஒருவ ரிருவ ரோர்மூவரெனநின்று உருவுகரந்து] - மூலபலத்தோடு யுத்தம் பண்ணியருளுகிறபோது மூந்துற ஒருவராய்த்தோற்றிச் சாரிகையிலே வேகப்மிகமிக இருவரும் மூவருமாய்த்தோற்றி இந்த்ரியஸம்யோகத்துக்கு இடமில்லாதபடி வேகம்

இரண்டாம்பாட்டு.— திருக்கடித்தானம் இத்யாதி. "செருக்கடுத்தன்று" என்றதொடங்கி, "உள்ளேயுறையும்பிரான்கண்டீர்" என்கிற பதங்களைக்கடாக்ஷித்து அவதாரிகை - என்பக்கல் இத்யாதி.

ஸப்தார்த்தம் - திருக்கடித்தானத்தையும் இத்யாதி. உத்தரார்த்தமநுஸந்தித்து பூர்வார்த்தம்அநுஸந்திப்பது. திகைத்த - ப்ரமித்த. உரு - சரீரம்; ஸப்தஸ்வாரஸ்யம் - ஸரவர்ஷம் இத்யாதி. தஸ்மின் காலே மஹாதேஜா ராக்ஷஸாநாம் பலீ ... । ஸ்வஷ்டாராக்ஷஸ வெஸந்யம் தத் ஸரவர்ஷம் வவர்ஷஹ" இதியாரண்யே (கூச-கஅ). (உ)

மிக்கவாறே வடிவுதெரியாதபடியாய் உருக்கெட வாளிபொழிந்த ஒருவனென்று கீழில் பாட்டோடே அந்விதமாகக்கடவது.

ப.—அநந்தரம், பராக்ரமஸௌர்யத்தாலே வீர ஸ்ரீவிஸிஷ்டனானவன், திருக்கடித்தானத்திலே ஸந்நிஹிதனாய், எனக்கு போக்யபூதனாயிராநின்றானென்கிறார்.

(மூலபலநிரஸநத்தில் பராக்ரமஸௌர்யத்தாலே), ஒருவர் - (ப்ரதமம்) ஒருவராய், இருவர் - (பின்னை) இருவராய், மூவரென - (பின்) மூவரென்னும்படி, நின்று - நின்று, ஓர் - அத்விதீயமான, உருவு - ரூபம், கரந்து - (இலக்குக் குறிக்கவொண்ணாதபடி) இந்த்ரியாவிஷயமாய்க்கொண்டு, (உருக்கெட வாளிபொழிந்த ஒருவனானவன் அந்த வீர ஸ்ரீயோடே வந்தானென்னும்படி), திரு - லக்ஷ்மியை, அமர் மார்வன் - திருமார்பிலே உடையனாய்க்கொண்டு, திருக்கடித்தானத்தை - திருக்கடித்தானத்தை, மருவி - பொருந்தி, உறைகின்ற - நித்யவாஸம் பண்ணுகிற, மாயப்பிரான் - ஆஸ்சர்யோபகாரகனாய், உள்ளுந்தோறும் - நினைக்குந்தோறும், தித்திப்பான் - இனியனாகாநின்றான்.

இ.—மூன்றாம்பாட்டில், பிராட்டியோடேகூடத் திருக்கடித்தானத்திலே வந்தானென்கிறார்.

"ஒருவரிருவர் மூவரெனநின்று உருவுகரந்து - உருக்கெட வாளிபொழிந்த ஒருவன்" என்று கீழோடே அந்விதமாகக்கடவது. மூலபலம் சாம்படி யருளுகிறவன்று முந்துற ஒருவனாய்த்தோற்றி, சாரிகையில் வேகம் மிகமிக இருவரும் மூவருமாய்த்தோற்றி. [உருவுகரந்து] - வேகம் மிக்கவாறே இந்த்ரியஸம்யோகத்துக்கு இடமில்லாதபடியாகையாலே, ரூபக்ரஹணமரிதாய் - உருக்கெடவாளிபொழிந்த ஒருவன் என்று அந்வயம். வ்யாபரித்த சடக்காலே ரூபம் கண்ணுக்குப் பிடிபடாதொழிகை. [திருவமர்மார்வன்] - "நக்ஷ்ஸிந்ாவபாயூஷி" என்னும் பிராட்டியோடே கூடவாயிற்று வந்தது. திருக்கடித்தானத்தோடே பொருந்திவர்த்திக்கிறவனாய், என்பக்கலிலே ஆஸ்சர்யமாம்படி ப்ரவணனான ஸர்வேஸ்வரன். [உள்ளுந்தோறும் தித்திப்பான்] - அநுஸந்திக்க அநுஸந்திக்கப் புதியனாய்க்கொண்டு ரஸியாநின்றான்.

ஈடு.—மூன்றாம் பாட்டு. பிராட்டியோடேகூடத் திருக்கடித்தானத்திலே நித்யவாஸம்பண்ணுகிற ஆஸ்சர்யபூதனான உபகாரகன் அநுஸந்திக்குந்தோறும் இனியனாகாநின்றானென்கிறார்.

[ஒருவர் இத்யாதி] - வாளிபொழிந்தபடி எங்ஙனேஎன்ன, - இங்ஙனேயென்கிறார். [ஒருவரிருவரோர்மூவரெனநின்று உருவுகரந்து] - ஒருவராய்த்தோன்ற, இருவராய்த்தோன்ற, மூவராய்த்தோன்ற, பின்னை இந்த்ரியார்த்தஸம்யோகமில்லாதபடி சாரிகைவந்து. ஒருவரிருவரோர் மூவரென நின்று உருவுகரந்து - செருக்கடுத்தன்று திகைத்த அரக்கரை உருக்கெட வாளிபொழிந்தவோருவன் - திருக்கடித்தானமும் என்னுடைச்சிந்தையும் ஒருக்கடுத்து உள்ளேயுறையும்பிரான் கண்டீர் என்று கீழிற்பாட்டோடே அந்வய

மூன்றாம்பாட்டு.—ஒருவர் இத்யாதி. "திருவமர்மார்வன்" என்றுதொடங்கி, "மாயப்பிரான் - உள்ளுந்தோறும்தித்திப்பான்" என்றவற்றை அநுஸந்தித்துஅவதாரிகை - பிராட்டியோடு இத்யாதி.

"ஒருவரிருவரோர்" இத்யாதிக்குஅர்த்தம் - வாளிபொழிந்த இத்யாதி. உருவுகரந்து சாரிகைவந்தவேகம், சக்ஷுரிந்த்ரியத்தாலே விக்ரஹம் க்ரஹிக்கப்போகாதென்றபடி. சாரிகைவந்து - அதிவேகத்துடனே ஸாரிவந்து. "உருவுகரந்து" என்னுமளவும் கீழ்ப்பாட்டோடே அந்

மாகக்கடவது. [திருவமர்மார்வன்] – "நகஸ்ஹிஙாவராயதி" (நகஸ்சிங்நாபராத்யதி) என்னும் பிராட்டியோடே கூடவாயிற்று வந்தது. [திருவமர்மார்வன் திருக்கடித்தானத்தை மருவியுறைகின்ற மாயப்பிரான் - உள்ளுந்தோறும்தித்திப்பான்] - பெரிய பிராட்டியார் நித்யவாஸம்பண்ணுகிற திருமார்வையுடையனாய், திருக்கடித்தானத்தை மருவியுறையாநின்றுகொண்டு என்பக்கலிலே ஆஶ்சர்யமாம்படி ப்ரவணனானவன், அநுஸந்யிக்குந்தோறும் புதியனாய் இனியனாகாநின்றான். (௩)

நான்காம் பாட்டு.

மாயப்பிரான் எனவல்வினைமாய்ந்தற
நேசத்தினால் நெஞ்சம்நாடுகுடிகொண்டான்
தேசத்தமரர் திருக்கடித்தானத்தை
வாசப்பொழில் மன்னுகோயில்கொண்டானே.

ஆ —(மாயப்பிரான்) - இவன் திருக்கடித்தானத்தைக் காட்டிலும் என்னெஞ்சிலே, வல்வினைகள் தீரும்படி ஸ்நேஹத்தைப் பண்ணிக்கொண்டு குடியாக இருந்தருளினானென்கிறார்.

ஓ.—நாலாம்பாட்டில், எம்பெருமான் திருக்கடித்தானத்தைப் பகலிருக்கைமாத்ரமாகக்கொண்டு, என்னுடைய ஹ்ருதயத்தை, அத்யபிநிவேஶத்தைப்பண்ணி நிரந்தர வாஸஸ்தானமாகக் கொண்டருளினான் என்கிறார்.

[மாயப்பிரானென்று தொடங்கி] - ஆஶ்சர்யமான குணசேஷ்டிதாதிகளையுடைய ஸர்வேஶ்வரன் தன்னைப்பிரிந்து காணவாராயென்றென்று கண்ணும் வாயும் துவர்ந்து நான் படும் து:வமெல்லாம் நிஶ்ஶேஷமாகப் போம்படி தன்னோட்டை ஸம்ஶ்லேஷ விஶ்லேஷங்களாலே நாடுபோலேவளர்ந்த நெஞ்சிலே ஸ்நேஹத்தாலே ஸபரிகரமாக நிரந்தரவாஸம் பண்ணாநின்றான். [தேசத்தமரரென்று தொடங்கி] - * அயர்வறுமமரர்களுக்கும் ப்ராப்யபூமியான திருக்கடித்தானத்தைத் தனக்கு வாசத்தையுடைய பொழிலோடுகூடின கோயிலாகக் கொண்டானான மாயப்பிரான்.

ப.—அநந்தரம், திருக்கடித்தானத்தை வாஸஸ்தானமாக ஸ்வீகரித்தவன், என்னுடைய ப்ரபலபாபங்களைப் போக்குகைக்காக நெஞ்சுக்குள்ளே நித்யவாஸம்பண்ணாநின்றானென்கிறார்.

தேசம் - (நிரதிஶய) தேஜஸ்விகளான, அமரர் - ஸூரிகளுக்கு ப்ராப்யமாய், வாசம் - பரிமளோத்தரமான, பொழில் மன்னு - பொழில் சேர்ந்த, திருக்கடித்தானத்தை - திருக்கடித்தானத்தை, கோயில் - கோயிலாக, கொண்டான் - கொண்ட, மாயப்பிரான் - ஆஶ்சர்யோபகாரகனானவன், என - என்னுடைய, வல் - ப்ரபலமான, வினை - பாபங்கள், மாய்ந்துஅற-நசித்துப்போம்படியாக, நேசத்தினால் - என்பக்கல் ஸங்

விதம். "திருவமர்மார்வன் - பிரான் - உள்ளுந்தோறும் தித்திப்பான்" என்று - தனியேவாக்யம், பாட்டுக்கு உரைக்கும் அந்வயம் - திருவமர்மார்வன் இத்யாதி. ஶப்தார்த்தம் - பெரிய இத்யாதி.

ராதிஶயத்தாலே, நெஞ்சம் - என்நெஞ்சாகிற, நாடு - விஸ்தீர்ணபூமியை, குடி - (தனக்குக்) குடியிருப்பாக, கொண்டான் - கொண்டான்.

இ.—நாலாம்பாட்டில், திருக்கடித்தானத்தைக் கலவிருக்கையாகக்கொண்டு ஸ்நேஹாதிஶயத்தாலே என்நெஞ்சை நிரந்தர வாஸஸ்தாநமாகக்கொண்டான் என்கிறார்.

[மாயப்பிரான்] - ஆஶ்சர்யகுண சேஷ்டிதங்களையுடைய உபகாரகன். [எனவல்வினைமாய்ந்தற] - தன்னைப்பிரிந்து நான்பட்ட து:க்கமெல்லாம் நிஶ்ஶேஷமாகப் போம்படி. மாயக்கூத்தனில் * காணவாராயென்றென்று கண்ணும்வாயும் துவர்ந்துபட்ட விடாயெல்லாம் வாஸனையோடே போம்படி. [நேசத்தினால்] - எனக்கு உபகரித்தாணு யிருக்கையன்றிக்கே, என்பக்கல் ஸங்காதிஶயத்தாலே. [நெஞ்சம்நாடு] - ஸம்ஶ்லேஷவிஶ்லேஷங்களாலே இவர்நெஞ்சு பரமபதம்போலே இடமுடைத்தானபடி. [குடிகொண்டான்] - ஸபரிகரமாக நித்யவாஸம் பண்ணுகின்றான்; "அரவத்தமளியினோடும்" என்கிறபடியே. [தேசத்தமரர் இத்யாதி] - நிரந்தர ஭க³வத³நுப⁴வத்தாலே தேஜஸ்ஸையுடைய நித்யஸூரிகளுக்கு ப்ராப்யபூ⁴மியாய் - வாசத்தையுடைய பொழிலோடே கூடின - திருக்கடித்தானத்தை - கோயிலாகக்கொண்டு வர்த்திக்கிற - மாயப்பிரான் - நேசத்தினால் நெஞ்சம்நாடு குடிகொண்டான்.

ஈடு.—நாலாம்பாட்டு. திருக்கடித்தானத்தைப் பகலிருக்கைமாத்ரமாகக் கொண்டு ஸங்காதிஶயத்தாலே என்னெஞ்சையே நிரந்தரவாஸஸ்த்தாநமாகக் கொண்டானென்கிறார்.

[மாயப்பிரான்] - ஆஶ்சர்யமான குணசேஷ்டிதங்களையுடை உபகாரகன். [எனவல்வினைமாய்ந்தற] - தன்னைப் பிரிந்து நான்பட்ட க்லேசமெல்லாம் நசித்துப்போம்படி; * மாயக்கூத்தனில் * காணவாராயென்றென்று கண்ணும்வாயும் துவர்ந்து பட்ட விடாயெல்லாம் வாஸநையோடேபோம்படி. [நேசத்தினால்] - தான் என்பக்கல்பண்ணின ஸங்கத்தாலே. [நெஞ்சம் நாடு] - ஸம்ஶ்லேஷவிஶ்லேஷங்களாலே ஒரு த்ரிபாத்விபூதி போலே ஆக்கினானாயிற்று, இவர்திருவுள்ளத்தை. [குடிகொண்டான்] - ஸபரிகரமாக நித்யவாஸம்பண்ணுகின்றான்: † அரவத்தமளிப்படியே. [தேசத்தமரர்திருக்கடித்தானத்தை] - நித்யாநுபவம் பண்ணுகையா லுண்டான தேஜஸ்ஸையுடைய நித்யஸூரிகளுக்கு ப்ராப்யமான திருக்கடித்தானத்தை. [வாசப்பொழில்மன்னு] - வாசத்தையுடைய பொழிலோடே கூடின. தேசத்தமரர் திருக்கடித்தானத்தை - கோயில்கொண்டான் - நேசத்தினால் நெஞ்சம் நாடு குடிகொண்டான். (௪)

நாலாம்பாட்டு.—மாயப்பிரான் இத்யாதி- "திருக்கடித்தானத்தை - கோயில்கொண்டான் - நேசத்தினால் நெஞ்சம் நாடு குடிகொண்டான்" என்றவற்றைக்கடாக்ஷித்து அவதாரிகை - திருக்கடித்தானத்தை இத்யாதி. பகலிருக்கை - பகலுக்குஒலக்கமிருக்கை.

கீழில்திருவாய்மொழியி லார்த்திக்கு அநுகுணமாக அர்த்தம் - தன்னைப்பிரிந்து இத்யாதி. ஏதத்விவரணம் - மாயக்கூத்தனில் இத்யாதி. அணுவான நெஞ்சு நாடாம்படியென்? என்ன - ஸம்ஶ்லேஷ இத்யாதி. இருந்தானென்றதே. "குடிகொண்டான்" என்றதுக்கு ஭ாவம் - ஸபரிகரமாக இத்யாதி. இதுக்கு ப்ரமாணம் - அரவத்தமளிப்படியே என்று. தேஜஸ்ஸேதென்ன - நித்யாநுபவம் இத்யாதி. மாயப்பிரானெனவல்வினைமாய்ந்தற - வாசப்பொழில்மன்னு - தேசத்தமரர் திருக்கடித்தானத்தை - கோயில்கொண்டான் - நேசத்தினால் நெஞ்சம்நாடு குடிகொண்டான் இத்யந்வய:. (௪)

† பெரியாழ்வார் திருமொழி, 5, 2, 10.

ஐந்தாம் பாட்டு.

**கோயில்கொண்டான்தன்திருக்கடித்தானத்தைக்
கோயில்கொண்டான்அதனோடும் என்னெஞ்சகம்
கோயில்கொள் தெய்வமெல்லாந்தொழ வைகுந்தம்
கோயில்கொண்ட குடக்கூத்தவம்மானே.**

ஆ.—(கோயில்கொண்டான்) - அங்குமிங்குமாய் இருந்தருளுகையன்றியே, ஸ்நேஹாதிசயத்தாலே திருக்கடித்தானத்தையுங்கொண்டு, என்னெஞ்சினுள்ளே புகுந்தருளினனென்கிறார்.

ஒ.—அஞ்சாம்பாட்டில், என்பக்கலுள்ள ப்ரேமாதிசயத்தாலே, திருக்கடித்தானத்தோடேகூட என்ஹ்ருதயத்திலே புகுந்தருளினன் என்கிறார்

[கோயிலென்று தொடங்கி.] - நித்ய ஸித்தபுருஷர்கள் தன்னைத்தொழும் ஸ்ரீவைகுண்டத்தைக் கோயிலாகக்கொண்ட குடமாடுகைதொடக்கமான மநோஹாரியான சேஷ்டிதங்களையுடைய ஸர்வேச்வரன்.

ப—அநந்தரம், ப்ராப்யமான பரமபதத்திலே வர்த்திக்கிறவன், திருக்கடித்தானத்தோடே என்னெஞ்சை வாஸஸ்தாநமாகக் கொண்டானென்கிறார்.

கோயில்கொள் - விலக்ஷணவிமாநோபேதரான, தெய்வமெல்லாம் - நித்யஸூரிகள், தொழ - தொழும்படியாக, வைகுந்தம் - (ப்ராப்யதேச) பரமபதத்தை, கோயில் - வாஸஸ்தாநமாக, கொண்ட - உடையனாய், (ஆஸ்ரிதார்த்தமாக அவதரித்து), குடக்கூத்த - குடக்கூத்தாகிற (மநோஹாரிசேஷ்டிதத்தை யுடைய), அம்மான் - (க்ருஷ்ணனான) ஸ்வாமியானவன், திருக்கடித்தானத்தை - திருக்கடித்தானத்தை, தன் கோயில் - தனக்கு அஸாதாரணதேசமாக, கொண்டான் - ஸ்வீகரித்துக்கொண்டு, அதனோடும் - அதுதன்னோடே, என் - என், நெஞ்சகம் - நெஞ்சையும், கோயில் - (தனக்குக்) கோயிலாக, கொண்டான் - கொண்டான்.

இ.—அஞ்சாம்பாட்டில், என்பக்கல் ப்ரேமாதிசயத்தாலே திருக்கடித்தானத்தோடே கூடவந்து என்நெஞ்சிலே புகுந்தான் என்கிறார்.

[கோயில்கொண்டான் இத்யாதி] - திருக்கடித்தானத்தைத் தனக்கு அஸாதாரணமான கோயிலாகக்கொண்டான். [கோயில்கொண்டான் இத்யாதி] - "செருப்பு வைத்துத் திருவடித் தொழப்புக்காரைப்போலே யாகவொண்ணாது" என்று திருக்கடித்தானத்தோடே வந்துபுகுந்தான். [கோயில்கொள் தெய்வம்] - அநந்த கருட விஷ்வக்ஸேந ப்ரமுகர். பரமபதத்திலும் இவர்களுக்கும் ஓரோர்கோயி லுண்டாயாயிற்றிருப்பது. நித்யஸூரிகள் அநுபவிக்கப் பரமபதத்தைக் கோயிலாக உடையவன். [குடக்கூத்தவம்மான்] - ஸர்வேச்வரனுகையாலே நித்யஸூரிகளோபாதி ப்ராப்திபொத்திருக்க, "ஸம்ஸாரிகள் இழக்கவொண்ணாது" என்று க்ருஷ்ணனாய் வந்தவதரித்து, குடக்கூத்து முதலான மநோஹாரி சேஷ்டிதங்களைப் பண்ணி, அவதாரத்துக்குப் பிற்பாடரான எனக்காகத் திருக்கடித்தானத்தைக் கோயிலாகக்கொண்டு, அதுதன்னோடே வந்து என்நெஞ்சிலேபுகுந்தான்; "அழகிய பாற்கடலோடும்" என்கிறபடியே. திருக்கடித்தா

னத்தில் நிலை என்னைப்பெறுகைக்காகையாலே, ஸாயுஜ்யம் கைப்பட்டால் ஸாயுநத்தில் இழிவாரில்லையிறே. இனியொரு ஜ்ஞந்தவ்யஷமி உண்டென்றிராதொழிகை.

ஈடு.—அஞ்சாம்பாட்டு. என்பக்கல் ப்ரேமாதிஶயத்தாலே திருக்கடித்தானத்தோடேகூட என்ஹ்ருதயத்திலே புகுந்தருளினானென்கிறார்.

[கோயில்கொண்டான் இத்யாதி] - திருக்கடித்தானத்தைத் தனக்கு அஸாதாரணமான கோயிலாகக்கொண்டான். [கோயில் இத்யாதி] - ''செருப்புவைத்துத் திருவடிதொழுவாரைப்போலே ஆகவொண்ணாது'' என்று, திருக்கடித்தானத்தோடேகூட வந்து என்னெஞ்சிலே புகுந்தருளினான். [கோயில்கொள் இத்யாதி] - ஓரோ கோயில்களுண்டாயிருக்குமிறே - திருவடி, திருவநந்தாழ்வான், ஸேனைமுதலியார் இவர்களுக்கு; அவர்கள்தொழும்படி ஸ்ரீவைகுண்டத்தைத் தனக்குக் கோயிலாகக்கொண்ட ஸர்வேஶ்வரன், க்ருஷ்ணனாய்வந்து அவதரித்துக் குடக்கூத்தாடி, அந்தஶ்ரமமாறும்படி திருக்கடித்தானத்தைக் கோயில்கொண்டான்; அத்தோடேகூட ''என்ஹ்ருதயத்தை – தனக்குக் கோயிலாகக்கொண்டான்; *அழகியபாற்கடலோடும்'' என்கிறபடியே. திருக்கடித்தானத்தில் நிலை என்னைப் பெறுகைக்குஆகையாலே, ஸாத்யம் கைப்பட்டால் ஸாதநத்தி லிழிவாரில்லையாயிருக்க, என்னைப்பெற்றது அத்தேசத்திலே நிற்கையாலேயென்று அத்தேசத்தோடே வந்துபுகுந்தான். (ரு)

ஆறாம் பாட்டு.

கூத்தவம்மான் கொடியேனிடர்முற்றவும்
மாய்த்தவம்மான் மதுசூதவம்மானுறை
பூத்தபொழில் தண்திருக்கடித்தானத்தை
ஏத்தநில்லா குறிக்கொண்மினிடரே.

ஆ.—(கூத்தவம்மான்.) - இஸ்ஸம்ருத்தியெல்லாம் திருக்கடித்தானத்தை ஆஶ்ரயித்ததினாலே வந்ததென்னும் ப்ரீதியாலே, மது கைடபாதி ப்ரதிகூலநிரஸநம் பண்ணினாற்போலே ஸ்வகீயகுணசேஷ்டித ஆவிஷ்காரத்தாலே ஸ்வவிஶ்லேஷஜநிதமான என்னுடைய துஃகத்தைப் போக்கியருளினவன் உறைகின்ற திருக்கடித்தானத்தை ஏத்த

அஞ்சாம்பாட்டு.—கோயில் இத்யாதி. ''அதனோடுமென்னெஞ்சகம் - கோயில்கொண்டான்'' என்றத்தைக் கடாக்ஷித்து அவதாரிகை - என்பக்கல்இத்யாதி. ''திருக்கடித்தானத்தோடே இவர்ஹ்ருதயத்திலே புகுருகைக்கு ஹேது - 'இவரைப்பெற்றது இவ்வூரிலே நிற்கையாலேயன்றோ' என்று இவர்பக்கல் ஆதராதிஶயத்தாலே'' என்னுமிடந்தோன்ற - என்பக்கல் ப்ரேமாதிஶயத்தாலே என்கிறார்.

தன் - தனக்கு. ''அதனோடும்'' என்றதுக்கு ஹாவம் - செருப்புவைத்து இத்யாதி. திருக்கடித்தானத்தோடு என்னெஞ்சைக் கோயிலாகக் கொள்ளக்கூடுமோ? என்ன - அழகிய இத்யாதி. திருக்கடித்தானத்தோடேகூட இவர் திருவுள்ளத்திலே இருக்கிறதுக்கு ஹாவமேதென்ன - திருக்கடித்தானத்தில் இத்யாதி. 'கோயில்கொள்'என்று தொடங்கி, 'கூத்தவம்மான் - திருக்கடித்தானத்தை - தன் - கோயில்கொண்டான்; அதனோடும்என்னெஞ்சகம் - கோயில்கொண்டான்' இத்யந்வயஃ. (ரு)

வாருங்கோளென்று ஸ்ரீவைஷ்ணவர்களை அழைத்துக்கொண்டு, அவர்களோடேகூட ஏத்தி ஹர்ஷிக்கிறார்.

ஒ.—ஆறாம்பாட்டில், மது கைடபாதிகளைப் போக்கினாற்போலே தன்னைக் காணப்பெறாத என்னுடைய விடாயெல்லாம் போக்கின ஸர்வேச்வரன் நிரந்தரவாஸம் பண்ணுகிற திருக்கடித்தானத்தை ஏத்துங்கோள்; உங்களுடைய ஸமஸ்தது:க்கங்களும் போம்; இத்தைக் குறிக்கொள்ளுங்கோள் என்று ப்ரீதிப்ரகர்ஷத்தாலே பரரைக் குறித்து அருளிச்செய்கிறார்.

[கூத்தவென்று தொடங்கி] - மநோஹாரியான குணசேஷ்டிதாதிகளால் பெரியனாய் நிரதிசயது:க்கத்தை உடையேனான என்னுடைய து:க்கத்தைப்போக்கின என் ஸ்வாமி. [மதுஸூதனென்று மேலுக்கு] - ப்ரதிகூல நிரஸநஸ்வபாவனான ஸர்வேச்வரன் நிரந்தரவாஸம் பண்ணுவதுஞ்செய்து பூத்தபொழிலையுடைத்தாய் பரமஹரமான திருக்கடித்தானத்தை.

ப.—அநந்தரம், விரோதிநிரஸநஸ்வபாவனானவன் வர்த்திக்கிற தேசந் தானே விரோதியைப் போக்குமென்கிறார்.

கூத்த - மநோஹாரிசேஷ்டிதங்களாலே, அம்மான் - (லோகத்துக்கு) ஸ்வாமியாய், கொடியேன் - ("காணவேணும்" என்று பலகாலும் நிர்ப்பந்தித்துக் கூப்பிட்ட) கொடுமையையுடைய என், இடர் - நெஞ்சுது:க்கத்தை, மாய்த்த - போக்கி, அம்மான் - அடிமைகொண்டவனும், (ஆஸ்ரிதவிரோதியை), மதுஸூதன் மதுவை அழித்தாற்போலே அழிக்கும், அம்மான்-ஸ்வாமியானவன், உறை - வர்த்திக்கும்தேசமாய், பூத்த - புஷ்ப ஸம்ருத்தமான, பொழில் - பொழிலையுடைய, தண் - குளிர்ந்த, திருக்கடித்தானத்தை - திருக்கடித்தானத்தை, ஏத்த-ஸ்தோத்ரம்பண்ணினவளவிலே, இடர் - து:க்கங்கள் முற்றவும் - எல்லாம், இல்லா - நிலைகுலைந்துபோம்; குறிக்கொண்மின் - (இத்தைக்) குறிக்கொள்ளுங்கோள்.

இ.—ஆறாம்பாட்டில், தம்முடைய ப்ரீதிப்ரகர்ஷத்தாலே, திருக்கடித்தானத்தை எல்லாரும் ஆஸ்ரயியுங்கோளென்று பரரைக்குறித்து அருளிச்செய்கிறார்.

[கூத்தவம்மான்] - மநோஹாரிசேஷ்டிதங்களாலே பெரியனானவன். [கொடியேன்] - தன்னைப்பிரிகையாலே நிரதிசயது:க்கத்தையுடைய நான். [இடர்முற்றவும்] - என்னுடையது:க்கத்தை நிஸ்ஸேஷமாக. [மாய்ந்தவம்மான்] - உருமாய்த்த என் ஸ்வாமி. [மதுஸூதவம்மானுறை] - ப்ரதிகூலநிரஸநஸ்வபாவனான ஸர்வேச்வரன் நித்யவாஸம்பண்ணுகிற தேசம். [பூத்தபொழில்] - அவன் நித்யவாஸம்பண்ணுகையாலே நித்யவஸந்தமான பொழில். கடாக்ஷவர்ஷம் மாறிலிறே பூ மாறுவது. [தண்திருக்கடித்தானத்தை] - பரமஹரமான திருக்கடித்தானத்தை. [ஏத்தநில்லா இடர்] - இனி ஏத்தைச்செய்ய, இடரானது, "நமக்கு தேசமன்று" என்று தானே போம். [குறிக்கொண்மின்] - இத்தை "ஓலக்கவார்த்தை" என்றிராதே, பஹுமாநம்பண்ணுங்கோள்.

ஈடு — ஆறாம்பாட்டு. தம்முடைய ப்ரீதிப்ரகர்ஷத்தாலே, திருக்கடித்தானத்தை எல்லாரும் ஆஸ்ரயியுங்கோ ளென்கிறார்.

ஆறாம்பாட்டு.—கூத்தவம்மான் இத்யாதி. "குறிக்கொண்மின்" என்றத்தைக்கடாக்ஷித்துஅவதாரிகை - தம்முடைய இத்யாதி. இதில் பரோபதேசம் பண்ணுகைக்கடி அருளிச்செய்கிறார் - தம்முடைய ப்ரீதிப்ரகர்ஷத்தாலே என்று.

[கூத்தவம்மான்] - மநோஹாரியான சேஷ்டிதங்களையுடைய ஸர்வேஶ்வரன். [கொடியேன்] - மஹாபாபியான என்னுடைய. [இடர்முற்றவும்மாய்த்தவம்மான்] - தன்னைப்பிரிந்து நான் பட்ட க்லேசத்தையெல்லாம் வாஸனையோடேபோக்கின என் ஸ்வாமி. [மதுசூதன் இத்யாதி] - ப்ரதிகூலநிரஸந ஸ்வபாவனான ஸர்வேஶ்வரன் நித்ய வாஸம்பண்ணுகிற தேசம். [பூத்தபொழில்]-அவன் நித்யவாஸம்பண்ணுகையாலே நித்ய வஸந்தமானபொழில். கடாக்ஷவர்ஷம் மாறிலிறே பூ மாறுவது? [தண்திருக்கடித்தானத்தை] - பரமபோக்யமான திருக்கடித்தானத்தை. [ஏத்தநில்லா - இடர்] - இனியத்தைச் செய்ய, இடரானது "நமக்கு இது தேசமன்று" என்று * சும்மெனாதே கைவிட்டோடும். [குறிக்கொண்மின்] - இத்தை "லோகவார்த்தை" என்றிராதே, புத்திபண்ணுங்கோள்.

ஏழாம் பாட்டு.

கொண்மினிடர்கெட உள்ளத்துக்கோவிந்தன்
மண்விண்முழுதுமளந்த ஒண்தாமரை
மண்ணவர்தாந்தொழ வானவர்தாம்வந்து
நண்ணு திருக்கடித்தானநகரே.

ஆ.—(கொண்மின்) - கோவிந்தனுடைய மண் விண் முழுதுமளந்த ஒண் தாமரையை மண்ணவர்தாம் தொழுகிறபடியைக் காண்கைக்காக, வானவர்தாம்வந்து நண்ணு திருக்கடித்தானநகரை நினையுங்கோள்; இடர்கெடுமென்கிறார்.

ஓ.—ஏழாம்பாட்டில், உங்களுடைய ஸமஸ்தது:க்கங்களும் போம்படியாகத் திருக்கடித்தானத்தை ஹ்ருதயத்தால் நினையுங்கோள் என்கிறார்.

*[கோவிந்தனென்றுதொடங்கி] - எல்லார்க்கும் ஸுலபனானவனுடைய ஸகல லோகங்களையும் அளந்த நிரதிசயபோக்யமான திருவடிகளை ஒன்றும் அளவில்லாத பூமியிலுள்ளாரும் தொழ அவர்களுக்கு ஸுலபனாயிருந்த இருப்பைக் காண்கைக்காக பேரளவுடைய * அயர்வறுமமரர்களும் வந்து நண்ணுநின்றுள்ள திருக்கடித்தானநகரை.*

ப.—அநந்தரம், அவனுடைய தேசஸ்ம்ருதிமாத்ரமே விரோதிநிவர்த்தகமென்கிறார்.

கோவிந்தன் - ஸர்வஸுலபனான ஔஜ்ஜ்வல்யத்தை யுடையவனுடைய, மண் - பூமியையும், விண் - ஊர்த்த்வலோகத்தையும், முழுதும் - ஒன்றொழியாமல், அளந்த - அளந்துகொண்ட, ஒண் - நிரதிசயபோக்யமான, தாமரை - திருவடித்தாமரைகளை, மண்ணவர் - பூமியிலுள்ளார், தாம் - தங்களுக்கு அஸாதாரணபோக்யமென்று, தொழ - தொழாநிற்க, வானவர் - (நித்யாநுபவம்பண்ணுகிற) பரமபதவாஸிகள், தாம் - தாங்களும், வந்து - (ஸௌலப்யமநுபவிக்கைக்கு) வந்து, நண்ணு - ப்ராபிக்கும்படியான, திருக்கடித்தானம் - திருக்கடித்தானமாகிற, நகரை - நகரத்தை, இடர் - து:க்கமெல்லாம்,

---

அவன் நித்யவாஸம்பண்ணினால் நித்யவஸந்தமாகவேணுமோ வென்ன - கடாக்ஷவர்ஷம் இத்யாதி. "பூத்தபொழில்" என்கையாலே - போக்யதையாலே ஏத்தினார் என்று கருத்து போக்யதையாலே ஏத்தினால் இடர்போமோவென்ன - இனியத்தை இத்யாதி. சும்மெனாதே - மூச்சுவிடாதே. கூத்தவம்மான் இத்யாரப்ய ஏத்த - இடர் - நில்லா, குறிக்கொண்மின் இத்யந்வய:.

கெட - போகும்படியாக, உள்ளத்து - நெஞ்சிலே, கொண்மின் - கொள்ளும்படிபாருங்கோள்.

இ.— ஏழாம்பாட்டில், உங்கள் து:கநிவ்ருத்திக்கு ஏத்தவேண்டா; திருக்கடித்தானத்தை நெஞ்சாலே நினையுங்கோள் என்கிறார்.

[கொண்மின் இத்யாதி] - உங்கள் ஸமஸ்தது:கங்களும் போம்படியாகத் திருக்கடித்தானத்தை மநஸ்ஸாலே நினையுங்கோள். [கோவிந்தன் இத்யாதி] - ஸர்வஸுலபனானவனுடைய, ஸகலலோகங்களையும் வரையாதே அளந்த. [ஒண்டாமரை] - ஒருசெவ்விப்பூவைக் கொண்டாயிற்று அளந்தது. [மண்ணவர் தாம்தொழ] - ஸௌலப்யத்தையும் போக்யதையையும் அறியமாட்டாத அஜ்ஞர் தொழ. [தாந்தொழ] - பரமபதம் நித்யஸூரிகளுக்கேயாயிருக்குமாபோலே, உகந்தருளினதேசம் ஸம்ஸாரிகளுக்கேயாயிருக்கை. அந்யர்க்குவைத்த இறையிலியில் கண்ணுடையார்க்கு ப்ராப்தியில்லையிறே. [வானவர்] - அஸங்குசிதஜ்ஞாநராய் நித்யாநுபவம்பண்ணுமவர்கள் தாம்வந்து நண்ணுகிற தேசம். "நமக்கவ்வருகானவன், தாழ்வுக்கு எல்லையான ஸம்ஸாரிகள் தொழும்படி நிற்கிற சீலமிருந்தபடியென்?" என்று இத்தை அநுபவிக்கைக்கு இங்கேவந்து ஆஶ்ரயிக்கும் திருக்கடித்தான நகரை - கொண்மினிடர்கெட வுள்ளத்து. இங்குள்ளார் அங்கேபோவது மேன்மையை அநுபவிக்க; அங்குள்ளார் இங்குவருவது சீலகுணாநுபவம்பண்ண.

ஈடு.— ஏழாம்பாட்டு. உங்கள் து:கநிவ்ருத்திக்கு ஏத்தவேண்டா, திருக்கடித்தானத்தை நெஞ்சாலே நினைக்க வமையு மென்கிறார்.

[கொள்மின் இத்யாதி] - உங்கள் ஸமஸ்தது:கங்களும் போம்படியான திருக்கடித்தானத்தை மநஸ்ஸாலே நினையுங்கோள். [கோவிந்தன்] - ஸர்வஸுலபனானவனுடைய. [மண்விண்முழுதுமளந்தவொண்தாமரை] - ஒருதாமரைப்பூவைக்கொண்டாயிற்று, பூம்யந்தரிக்ஷங்களை அளந்துகொண்டது. [மண்ணவர்தாந்தொழ] - இடக்கை வலக்கையறியாத பூமியிலுள்ளார்தொழ; பரமபதம் நித்யர்க்கேயாயிருக்குமாபோலே, உகந்தருளினதேசம் ஸம்ஸாரிகளுக்கேயாயிருக்கை. [வானவர் இத்யாதி] - ஸம்ஸாரிகளுக்கு முகங்கொடுத்துக்கொடுநிற்கிற நீர்மையை அநுஸந்தித்து, நித்யஸூரிகளும் வந்துகிட்டுகிற தேசத்தை - கொண்மினிடர்கெடவுள்ளத்து. இங்குள்ளார் அங்குப்போவது மேன்மையை அநுபவிக்க; அங்குள்ளார் இங்குவருவது சீலகுணாநுபவம் பண்ணுகைக்கு. (எ)

ஏழாம்பாட்டு.—கொண்மின் இத்யாதி. "இடர்கெடவுள்ளத்து - கொண்மின்" என்றத்தைக்கடாக்ஷித்துஅவதாரிகை - உங்கள் இத்யாதி.

ஸப்தார்த்தம்-உங்கள்ஸமஸ்த இத்யாதி. அளந்ததிருவடிகளென்னாதே, "தாமரை" என்று விஶேஷித்ததுக்கு பாவம் - ஒருதாமரை இத்யாதி. இத்தால் பாவம் - பரமபதம் இத்யாதி. ஸம்ஸாரிகளுக்காயிருக்கிறவிடத்திலே வானவர் வருவானென்? என்ன - ஸம்ஸாரிகளுக்கு இத்யாதி. இங்குள்ளாரங்கும், அங்குள்ளாரிங்கும் வருகிறதெதுக்காகவென்ன - இங்குள்ளாரங்கு இத்யாதி. கோவிந்தன் மண் விண்முழுதும் என்றுதொடங்கி, நகரை இடர்கெடஉள்ளத்து - கொண்மின் இத்யந்வய:. (எ)

எட்டாம் பாட்டு.

தானநகர்கள் தலைச்சிறந்தெங்கெங்கும்
வானிந்நிலங்கடல் முற்றுமெம்மாயற்கே
ஆனவிடத்தும் என்னெஞ்சுந்திருக்கடித்
தானநகரும் தனதாயப்பதியே.

ஆ.—(தானநகர்கள்.) - இப்படி திருக்கடித்தானத்தை அநுஸந்தித்து, பின்னையும் தன்திறத்துச்செய்தருளின நன்மையைச்சொல்லுகிறார். உம்முடையநெஞ்சும், திருக்கடித்தானமும் எம்பெருமானுக்குஇருப்பிடமாகச் சொன்னீர்; வானிந்நிலங்கடல் முற்றும் அவனுக்கிருப்பிடமல்லவோ? என்னில்,— அங்ஙனேயாகிலும் என்னெஞ்சும் திருக்கடித்தானமும் அவனுக்குப்பிறந்துடைய திருநகரியாயிருக்குமென்கிறார்.

ஒ —எட்டாம்பாட்டில், எம்பெருமானுக்கு ஸ்தாநமான விலக்ஷணமான நகரங்களெங்கும் பல உண்டாயிருக்கச்செய்தேயும், என்னுடைய நெஞ்சையும் திருக்கடித்தானத்தையும் தன்னுடைய தாயப்ராப்தமான ஸ்தாநமாக்கொண்டு ஸ்நேஹித்திருக்கும் என்கிறார்.

[தானநகவென்று தொடங்கி] - மேலில் லோகங்களிலும், பூமி, கடலிலும் எல்லாவிடங்கள் எல்லாம் ஆச்சர்யபூதனானவனுக்கு மிகவும் ச்லாக்யமான இருப்பிடமான நகரங்களாயிருக்கச்செய்தேயும்.

ப.—அநந்தரம், பரமபதாதி ஸர்வப்ரதேசத்திலும் ச்லாக்யமான ஸ்தாநங்களுண்டாயிருக்க, என்னெஞ்சும் திருக்கடித்தானமும் அவனுக்கு அஸாதாரண தேசமாகாநின்றதென்கிறார்.

வான் - பரமபதம், இ - இந்த, நிலம் - பூமி, கடல் - க்ஷீரார்ணவங்களாகிற, எங்கெங்கும் - எல்லாவிடத்திலும், தானம் - ஆவாஸஸ்தாநமான, நகர்கள் - நகரங்கள், முற்றும் - முற்றவும், தலை - தலைப்பட்ட, சிறந்து - சிறப்பையுடைத்தாய்க்கொண்டு, எம்மாயற்கே - எனக்கு ஆச்சர்யபூதனானவனுக்கே, ஆனவிடத்தும் - ஆயிருக்கச்செய்தேயும், என் - என்னுடைய, நெஞ்சும் - நெஞ்சும், திருக்கடித்தானம் நகரும் - (இங்கிருக்கைக்காகவந்து ஸந்நிஹிதனை) திருக்கடித்தானமாகிற நகரமும், தன - தனக்கு, தாயம் — தாயப்ராப்தமான, பதியே - அஸாதாரணதேசமாய் இராநின்றது.

இ.—எட்டாம்பாட்டில், அவனுக்கு விலக்ஷணமான நகரங்கள் பல உண்டாயிருக்கச்செய்தேயும், என்னெஞ்சையும் திருக்கடித்தான நகரையும் தாயப்ராப்தமான ஸ்தாநமாக விரும்பியிருக்கும் என்கிறார்.

[தானநகர் இத்யாதி] - [வானிந்நிலங்கடல் - எங்கெங்கும் - தலைச்சிறந்த - தானநகர்கள் - முற்றுமெம்மாயற்கே யானவிடத்தும்] - மேலில் லோகங்களிலும், பூமியிலும், கடலிலும், கண்டவிடமெல்லாம் மிகவும் ச்லாக்யமான இருப்பிடமான நகரங்கள் முற்றும். [எம்மாயற்கே] - என்பக்கலிலே அபிநிவிஷ்டனான ஆச்சர்யபூதனுக்கு. [ஆனவிடத்தும்] - ஆயிருக்கச்செய்தேயும். என்னெஞ்சும் திருக்கடித்தான நகரமும் தனக்கு தாயப்ராப்தமான ஸ்தாநமாக விரும்பியிராநின்றான்.

ஈடு.—எட்டாம்பாட்டு. அவனுக்கு விலக்ஷணமானநகரங்கள் பலவுமுண்டாயிருக்கச்செய்தேயும், என்னுடைய நெஞ்சையும் திருக்கடித்தானத்தையும் தாயப்ராப்தமான ஸ்த்தாநமாக விரும்பியிருக்கு மென்கிறார்.

[தானநகர் இத்யாதி] - (வானிந்நிலங்கடல் - எங்கேங்கும் - தலைச்சிறந்த - தானநகர்கள் - முற்றுமெம்மாயற்கேயானவிடத்தும்) - மேலில் லோகங்களிலும், பூமியிலும், கடலிலும், கண்டவிடமெல்லாம் மிகவும் ஶ்லாக்யமான இருப்பிடமான நகரங்கள்முற்றும் என்பக்கலிலே அபிநிவிஷ்டனான ஆஶ்சர்யபூதனுக்கு. [ஆனவிடத்தும்] - ஆயிருக்கச்செய்தேயும். என்னெஞ்சும் திருக்கடித்தானநகரும் தனக்கு தாயப்ராப்தமான ஸ்த்தாநமாக விரும்பியிராநின்றான். (அ)

ஒன்பதாம் பாட்டு.

தாயப்பதிகள் தலைச்சிறந்தெங்கெங்கும்
மாயத்தினால் மன்னிவீற்றிருந்தானுறை
தேசத்தமரர் திருக்கடித்தானத்துள்
ஆயர்க்கதிபதி அற்புதன்தானே.

ஆ.—(தாயப்பதிகள்.) - எல்லாம் அவனுக்குத் தாயப்பதிகளன்றோவென்னில்,— அதுஅப்படியேயாகிலும் திருக்கடித்தானமென்றால் அவன்திருவுள்ளம் விழுந்து கிடக்கும்படி ஆஶ்சர்யமென்கிறார்.

ஒ.—ஒன்பதாம்பாட்டில், 'கீழ்ச்சொன்னவையெல்லாம் அவனுக்குத்தாயப்பதிகள் அல்லவோ?' என்னில்,— அதுஅப்படியாகிலும், என்னோடே ஸம்ஶ்லேஷிக்கைக்கு உறப்பான நிலமென்று திருக்கடித்தானத்திலே அத்யபிநிவிஷ்டனானான் என்கிறார்.

[தாயப்பதிகளென்று தொடங்கி] - மிகவும் விலக்ஷணமாய்ப் பழையதாய் வருகிற ஸ்தாநங்களெங்கும் அபிநிவேஶத்தாலே விடாதே தன்ஐஶ்வர்யமெல்லாந் தோற்றும்படி இருந்தருளினவன் நிரந்தரவாஸம்பண்ணுகிற. [தேசத்தமரர் திருக்கடித்தானத்துள்] - தேஜஸ்ஸையுடைய நித்யஸூரிகளுக்கும் பரமப்ராப்யமான திருக்கடித்தானத்துள்.

ப.—அநந்தரம், திருக்கடித்தானத்திலே நித்யவாஸம்பண்ணுகிற ஆஶ்சர்யபூதக்ருஷ்ணன்தானே அல்லாதஸ்த்தலங்களிலு மிருந்தானென்கிறார்.

தேசம் - தேஜஸ்விகளான, அமரர் - நித்யஸூரிகளுக்கு ப்ராப்யமான, திருக்கடித்தானத்துள் - திருக்கடித்தானத்துள்ளே, உறை - வர்த்திக்குமவனாய், ஆயர்க்கு - கோபர்களுக்கு, அதிபதி - நிரவதிகஸ்வாமியான, அற்புதன்தான் - ஆஶ்சர்யகுணசேஷ்

எட்டாம்பாட்டு.—தானநகர்கள் இத்யாதி. "தலைச்சிறந்த - தானநகர்கள் - திருக்கடித்தானநகரும் தனதாயப்பதியே" என்கிறபதங்களைக்கடாக்ஷித்து அவதாரிகை - அவனுக்கு இத்யாதி. "வான், இந்நிலம்" என்று பதஹேதம். தலைச்சிறந்த - மிகவும்ஶ்லாக்யமான. எம்மாயற்கு. வானிந்நிலங்கடல் - எங்கெங்கும் - தலைச்சிறந்த தானநகர்கள் - முற்றும் - உண்டானவிடத்திலும், என்னெஞ்சும் திருக்கடித்தானநகரும் தனதாயப்பதியே இத்யந்வயம். (அ)

டிதங்களையுடையவன்தான், தாயம் - அஸாதாரணமான, பதிகள் - அர்ச்சாஸ்த்தலங்கள், எங்கெங்கும் - எல்லாவிடத்திலும், தலை - தலைப்பட்ட, சிறந்து - ஸ்ரீலாதிகுணஸம்பத்தையுடையவனாய்க்கொண்டு, மாயத்தினால் - ஆஶ்சர்யஸௌந்தர்யாதி விக்ரஹகுணவிஶிஷ்டனாய், மன்னி - பொருந்தி, வீற்று - (பரவ்யூஹாதிகளிற்காட்டில் தன்னுடைய வ்யாவ்ருத்தி) தோன்றும்படியாய், இருந்தான் - இருந்தவன்.

இ—ஒன்பதாம்பாட்டில், 'கீழ்ச்சொன்னவையெல்லாம் அவனுக்குத்தாயப்பதிகள் அன்றோ?' என்னில்,—அப்படியேயாகிலும், ''என்னோடே கிட்டுகைக்கு உறுப்பானநிலம்'' என்று திருக்கடித்தானத்திலே அபிநிவிஷ்டனானான் என்கிறார்.

[தாயப்பதிகள் இத்யாதி] - [தலைச்சிறந்த - தாயப்பதிகள் - எங்கெங்கும்] - மிகவும் விலக்ஷணமாய்ப் பழையதாய் வருகிறஸ்த்தாநங்களெங்கும். [மாயத்தினால்] - அபிநிவேஶத்தாலேயென்னுதல், இச்சையாலே என்னுதல்: ''மாயாவயுநம்ஜ்ஞாநம்''. [மன்னிவீற்றிருந்தான்] - விரும்பி, தன்னைஶ்வர்யமெல்லாம் தோற்ற இருந்தருளினவன். ஐஶ்வர்யத்தால்வந்த வேறுபாடுதோற்ற இருந்தவன் என்றுமாம். [உறை] - நித்யவாஸம்பண்ணுகிற. [தேசத்தமரர்] - தேஜஸ்ஸையுடைய நித்யஸூரிகளுக்குப் ப்ராப்யபூமியான திருக்கடித்தானத்துள். [ஆயர்க்கதிபதி] - கோபஸஜாதீயனாய் வந்து அவதரித்து, அவர்களில் தலைவனானவன். [அற்புதன்] - ஆஶ்சர்யமானபடிகளை உடையவன். உகந்தருளின தேசங்கள் எல்லாவற்றிலும் விருப்பம் உண்டாகிலும், என்னைலபிக்கைக்குத் திருக்கடித்தானத்திலே தன்மேன்மையும் நீர்மையுமெல்லாம் ப்ரகாஶியாநின்றான் என்கிறார்.

ஈடு.—ஒன்பதாம்பாட்டு. அல்லாததிருப்பதிகளுமெல்லாம் அவனுக்கு அப்படியேயன்றோவென்னில், - அதுஅப்படியேயாகிலும் ''என்னோடேகிட்டுகைக்கு உறுப்பானநிலம்'' என்று திருக்கடித்தானத்திலே அத்யபிநிவிஷ்டனானனென்கிறார்.

[தாயப்பதிகள் இத்யாதி] - (தலைச்சிறந்த - தாயப்பதிகள் - எங்கெங்கும்) மிகவும் விலக்ஷணமாய்ப் பழையதாய்வருகிற ஸ்த்தாநங்களெங்கும். [மாயத்தினால்] — அபிநிவேஶத்தாலே யென்னுதல், இச்சையாலே என்னுதல். 'மாயாவயுநம்ஜ்ஞாநம்'' (மாயாவயுநம்ஜ்ஞாநம்). [மன்னிவீற்றிருந்தான்] - விரும்பி, தன் ஐஶ்வர்யமெல்லாந்தோற்றும்படி இருந்தருளினவன். ஐஶ்வர்யத்தால்வந்த வேறுபாடுதோற்ற இருந்தவனென்றுமாம். [உறை] - நித்யவாஸம்பண்ணுகிற. [தேசத்தமரர் இத்யாதி]-தேஜஸ்ஸையுடைய நித்யஸூரிகளுக்கு ப்ராப்யபூமியான திருக்கடித்தானத்துள். [ஆயர்க்கதிபதி] - கோபஸஜாதீயனாய் வந்தவதரித்து அவர்களில் தலைவனானவன். [அற்புதன்] - ஆஶ்சர்யமானபடிகளையுடையவன். உகந்தருளின தேசங்களெல்லாவற்றிலும் விருப்ப

ஒன்பதாம்பாட்டு.—தாயப்பதிகள் இத்யாதி. ''எங்கெங்கும் - தலைச்சிறந்த - தாயப்பதிகளாயிருக்கச்செய்தேயும் - திருக்கடித்தானத்திலே - மாயத்தினால் - வீற்றிருந்தான்'' என்றவற்றைக்கடாக்ஷித்து அவதாரிகை - அல்லாத இத்யாதி. அப்படியேயன்றோ என்றது - தாயப்ராப்தமன்றோவென்றபடி.

''மாயம்'' என்றால் - இச்சையைக்காட்டுமோவென்ன - மாயாவயுநம் இத்யாதி. ''வீற்றிருந்தான்''என்று முழுச்சொல்லாய், ஐஶ்வர்யமெல்லாம் தோற்றும்படியிருந்தான் என்னுதல்; ''வீறு'' என்றுபிரித்து, வேறுபாடு தோற்றவிருந்தான் என்னுதல். பாட்டுக்கு ஃபலித்த

முண்டாகிலும், என்னை லஹிக்கைக்காகத் திருக்கடித்தானத்திலே, தன்மேன்மையும் நீர்மையுமெல்லாம் ப்ரகாசிக்கநின்றுனென்கை. (கூ)

—

பத்தாம் பாட்டு.

—

அற்புதன்நாராயணன் அரிவாமனன்
நிற்பது மேவி இருப்பதென்னெஞ்சகம்
நற்புகழ்வேதியர் நான்மறைநின்றதிர்
கற்பகச்சோலைத் திருக்கடித்தானமே.

ஆ —(அற்புதன்.) - இப்படி திருநாடு திருப்பாற்கடல் தொடக்கமாகவுள்ள திருநகரிக ளெல்லாவற்றிலும் அத்யந்தம் அபிமதமாயிருந்த திருக்கடித்தானத்திலே நிற்பது; மேவியிருப்பது என்னெஞ்சகமென்கிறார்.

ஒ.—பத்தாம்பாட்டில், என்னைப்பெறுந்தனையும் திருக்கடித்தானத்திலே நின்றருளினன்; என்னோடு ஸம்ஶ்லேஷித்தபின்பு நிற்பதும் இருப்பதும் என்னெஞ்சிலே என்கிறார். இப்பாட்டுக்கெல்லாம் அநந்யப்ரயோஜநர் என்னும் புகழையுடைய வைதிகராலே உச்சரிக்கப்படாநின்றுள்ள நாலுவேதங்களும் நிரந்தரமாக முழங்காநின்றுள்ள கல்பகவநத்தை உடைத்தான திருக்கடித்தானத்தில் ஆஶ்ரிதவத்ஸலனாய் ஆஶ்ரிதவிரோதி நிரஸநஸமர்த்தனாய் ஆஶ்ரிதருடைய ஸர்வாபேக்ஷிதங்களும் முடித்துக்கொடுக்கும் ஸ்வபாவனாய் இப்படி அத்யாஶ்சர்யபூதனானவன் நிற்பதும் மேவியிருப்பதும் என்ஹ்ருதயத்திலே. திருக்கடித்தானமென்று - ஸப்தம்யர்த்தே ப்ரதமையாகிறது.

ப.—அநந்தரம், ஆஸந்நமான திருக்கடித்தானத்தில் நிற்கிறது என்னெஞ்சிலே பொருந்தி வர்த்திக்கைக்காக என்கிறார்.

அற்புதன் - (அநுபாவ்யமான) ஆஶ்சர்யசேஷ்டிதங்களையுடையனாய், நாராயணன் - (அதுக்கு அநுரூபமான) ஸம்பந்தத்தையுடையனாய், அரி - அநுபவவிரோதி நிரஸநஶீலனாய், வாமனன் - அர்த்தியாய்வந்து அநுபவிப்பிக்குமவன், மேவி-பொருந்தி, இருப்பது - இருப்பது, என் - என், நெஞ்சகம் நெஞ்சுக்குள்: நிற்பது - (அதுக்கு உறுப்பாகவந்து) நிற்பது, நற்புகழ் - அநந்யப்ரயோஜநத்வப்ரதையையுடையரான, வேதியர் - வைதிகருடைய, நால் - நாலு, மறை - வேதங்களும், நின்று - நின்று, அதிர் - முழங்கும்படியாய், கற்பகம்-கல்பகமயமான, சோலை-சோலையையுடைத்தான, திருக்கடித்தானம் - திருங்கடித்தானம்.

இ.—பத்தாம்பாட்டில், என்னைப்பெறுந்தனையும் திருக்கடித்தானத்திலே நின்றான்: என்னோடு ஸம்ஶ்லேஷித்தபின்பு நிற்பதும் இருப்பதும் என்னெஞ்சிலே என்கிறார்.

ஸாவம் - உகந்தருளின இத்யாதி. 'தலைச்சிறந்த - தாயப்பதிகள் - எங்கெங்கும் மாயத்தினால்' என்று தொடங்கி, 'தேசத்தமரர் திருக்கடித்தானத்துள் - உறை - ஆயர்க்கதிபதியற்புதன்தானே இத்யந்வயஃ. (கூ)

[நாராயணன்] - தன்னுடைமையைவிட்டுக்கொடாத வத்ஸலன். "ரிபுஹ ணாவேவ ஷுநு:" [அரி] - ஆஸ்ரிதவிரோதி நிரஸந ஸமர்த்தன். வயிற்றிலேபிறந்த ப்ரஜை தாயை அறிந்து நேர்முகம் பார்த்தால் அதின் தோஷம் போக்குகை. [வாமனன்] - தன்னைத்தாழவிட்டு ஆஸ்ரிதருடைய ஸர்வாபேக்ஷிதங்களையும் முடித்துக் கொடுக்குமவன். தான் அர்த்தியாய் வந்து கிட்டுமவன். [அற்புதன்] - கிட்டினால் அநுபவிக்கைக்கு நிரதிஶயபோக்யனானவன். இப்படிகளாலே அத்யாஶ்சர்யபூதன். [நற்புகழித்யாதி] - அநந்யப்ரயோஜநரென்னும் புகழை யுடைய வைதிகராலே உச்சரிக்கப்பட்ட நாலுவேதங்களினுடைய ப்ரதித்வநியாலே முழங்காநின்றுள்ள கல்பக வனத்தையுடைய திருக்கடித்தானத்திலே - நிற்பது, மேவியிருப்பது என் நெஞ்சகமென்னுதல்; திருக்கடித்தானத்து - நாராயணன் அரிவாமனன் - அற்புதன் - நிற்பதும் மேவியிருப்பதும் என் நெஞ்சகமென்னுதல்: திருக்கடித்தானமென்று ஸப்தம்யர்த்தே ப்ரதமை.

ஈடு.—பத்தாம்பாட்டு. என்னைப்பெறுமளவும் திருக்கடித்தானத்திலே நின்றான், என்னைப்பெற்றபின்பு நிற்பதுமிருப்பதும் என்னெஞ்சிலே யென்கிறார்.

[நாராயணன்] - தன்னுடைமையை விட்டுக்கோடாத வத்ஸலன். [அரி] - ஆஸ்ரிதவிரோதிநிரஸந ஸமர்த்தன். [வாமனன்] - தன்னைச் சிறுகவிட்டு ஆஸ்ரிதருடைய ஸர்வாபேக்ஷிதங்களையும் முடிக்குமவன். [அற்புதன்] - இப்படிகளாலே ஆஶ்சர்ய பூதன். [நற்புகழ் இத்யாதி]-அநந்யப்ரயோஜநர் என்னும் புகழையுடைய வைதிகராலே உச்சரிக்கப்பட்ட நாலுவேதங்களாலும் முழங்காநின்றுள்ள கல்பகவநத்தையுடைய திருக்கடித்தானத்திலே - அவன்நிற்பது, மேவியிருப்பது என்னெஞ்சகமென்னுதல்; திருக்கடித்தானத்து - நாராயணன் அரி வாமனன் - அற்புதன் - நிற்பதும் - என்னெஞ்சகம், மேவியிருப்பதும் - என்னெஞ்சகமென்னுதல். திருக்கடித்தானமென்று - ஸப்தம்யர்த்தே ப்ரதமை. (க0)

பதினோராம் பாட்டு.

சோலைத்திருக்கடித்தானத்து உறைதிரு
மாலை மதிள்குருகூர்ச் சடகோபன்சொல்
பாலோடமுதன்ன ஆயிரத்திப்பத்தும்
மேலைவைகுந்தத்து இருத்தும்வியந்தே.

பத்தாம்பாட்டு.— அற்புதன் இத்யாதி. "சோலைத்திருக்கடித்தானத்து - நாராயணன் - நிற்பதும் மேவியிருப்பதுஎன்னெஞ்சகம்" என்றவற்றைக் கடாக்ஷித்து அவதாரிகை - என்னைப் பெறுமளவும் இத்யாதி-

வாத்ஸல்யாதிகளால் ஆஶ்சர்யபூதனென்கைக்காக, நாராயணாதி ஶப்தங்களுக்கு வ்யாக்யாநம். வேதியர்புகழுக்கு நன்மையாவது - அநந்யப்ரயோஜநத்வம்; அத்தை அருளிச்செய்கிறார் - அநந்ய இத்யாதி. நான்மறைநின்றதிராநின்றுள்ளதுமாய், கற்பகச்சோலையையுமுடைய திருக்கடித்தானத்திலே. திருக்கடித்தானமென்று - ப்ரதமையாயிருக்க, ஸப்தமியாகச் சொல்லுவானென்? என்ன - திருக்கடிதானம் இத்யாதி. இரண்டாமந்வயம்-நற்புகழ்வேதியர் என்றுதொடங்கி மேலே வ்யாக்யாநத்தி லிருந்தபடியே. (க0)

ஆ.—(சோலை) - சோலைத்திருக்கடித்தானத்துறை திருமால் கவிக்கு ப்ரதிபாத்யன். மதிள்குருகூர்ச் சடகோபன் கவிபாடுகிறானாதல் இவைபெய்ந்தனையிருக்கின்றன. இவைவல்லாரை, எம்பெருமான் ஒருக்ஷணம் பிரியில் தரிக்கமாட்டானென்கிறார்.

ஒ.—நிகமத்தில், இத்திருவாய்மொழி கற்றவர்களை இதுதானே திருநாட்டில் கொடுபோய்விடுமென்கிறார்.

[சோலையென்றுதொடங்கி] - அழகிய திருச்சோலையையுடைய திருக்கடித்தானத்திலே உறைகிற ஸ்ரீய:பதியை ஆழ்வார் அருளிச்செய்த பாலும்அமுதும்கலந்தாற்போலேயிருக்கிற வாச்யவாசகங்களுடைய பொருத்தத்தையுடைய ஆயிரந்திருவாய்மொழியிலும் இத்திருவாய்மொழி. [வியந்து] - அத்யாதரத்தைப்பண்ணி.

ப.—அநந்தரம், இத்திருவாய்மொழிக்கு ஃலமாக பரமபதப்ராப்தியை அருளிச்செய்கிறார்.

சோலை - சோலைகளையுடைய, திருக்கடித்தானத்து - திருக்கடித்தானத்திலே, உறை - நித்யவாஸம்பண்ணுகிற, திருமாலை - ஸ்ரீய:பதியைப்பற்ற, மதிள் - (அரணான) மதிளையுடைய, குருகூர் - திருநகரிக்கு நிர்வாஹகரான, சடகோபன் - ஆழ்வாருடைய, சொல்-சொல்லாய், (வாச்யவாசக ஸம்ப்ரதிலேஷத்தில் இனிமையாலே), பாலோடமுதன்ன-பாலும்அமுதும் கலந்தாற்போலே யிருக்கிற, ஆயிரத்து - ஆயிரந்திருவாய்மொழியில், இப்பத்தும் - இப்பத்தும், மேலை - உத்துங்கதேசமான, வைகுந்தத்து - பரமபதத்திலே, (இத்திருவாய்மொழியில் ஸம்பந்தமுடையாரை), வியந்து - உகந்து, இருத்தும் - ப்ரதிஷ்டிதராக்கும். இது - கலிவிருத்தம்.

இ.—நிகமத்தில், இத்திருவாய்மொழி கற்றவர்களை, இதுதானே திருநாட்டிற் கொடுபோய்விடும் என்கிறார்.

[சோலையித்யாதி] - ப்ரமஹரமாய் தர்சநீயமான சோலையையுடைய திருக்கடித்தானத்திலே நித்யவாஸம்பண்ணுகிற ஸ்ரீய:பதியை. [மதிள்குருகூர்] - ஸாம்ஸாரிக துரிதங்களுக்குப் போகவொண்ணாத அரணையுடைய திருநகரி. [சடகோபன்சொல்] - "ரஸாரஸவாவிதம்...நிவூணீத்மூ" என்னுமாபோலே. பாலோடமுதன்ன - ஆயிரமென்னுதல்; இப்பத்தென்னுதல். வாச்யவாசகங்களுடைய சேர்த்தியிருக்கிறபடி. பாலென்கிறது—சோலைத்திருக்கடித்தானத்துறை திருமாலென்கிற வாச்யத்தை; அமுதென்கிறது - சடகோபன்சொல் என்கிறவாசகத்தை. இது ஆளவந்தார் நிர்வாஹம். [இப்பத்தும்-வியந்து-மேலைவைகுந்தத்திருத்தும்]-"ஸம்ஸாரத்திலேஇத்தை அப்யஸிப்பாரொருவன் உண்டாவதே!" என்று விஸ்மயப்பட்டு, ஸர்வாதிகமான பரமபதத்திலே கொடுபோய்வைக்கும். மாயக்கூத்தன் நடையாடாத தேசத்திலே வைத்து, ஒருநாளும் பிரியாத அநுபவத்தைக் கொடுக்கும்.

ஈடு.—நிகமத்தில் - இத்திருவாய்மொழி கற்றவர்களை, இதுதானே திருநாட்டிலே கோடுபோய்விடு மென்கிறர்.

நிகமம் - சோலை இத்யாதி. "மேலைவைகுந்தத்திருத்தும்வியந்தே" என்றத்தைக்கடாக்ஷித்து அவதாரிகை - இத்திருவாய்மோழி இத்யாதி.—

[சோலை இத்யாதி] - ஸ்ரமஹரமாய் ௨ர்ஸநீயமான சோலையையுடைய திருக்கடித்தானத்திலே நித்யவாஸம்பண்ணுகிற ஸ்ரிய꞉பதியை. [மதிள்குருகூர்] - ஸாம்ஸாரிக துரிதங்களுக்குப் புகவொண்ணாத அரணையுடைய திருநகரி. [சடகோபன்சொல்] - *“[illegible]”(ரகுவரசரிதம்முநிப்ரணீதம்)என்னுமாபோலே. பாலோடமுதன்ன ஆயிரமென்னுதல், பாலோடமுதன்ன - இப்பத்தென்னுதல். வாச்ய வாசகங்களுடைய சேர்த்தியிருக்கிறபடி. பாலென்கிறது-சோலைத் திருக்கடித்தானத்துறை திருமாலை. அமுதென்கிறது - சடகோபன் சொல்லென்கிற வாசகத்தை. இது - ஆளவந்தார் நிர்வாஹம். [இப்பத்தும் - வியந்து - மேலைவைகுந்தத்திருத்தும்]-“ஸம்ஸாரத்திலே இத்தை அப்யஸிப்பாரொருவனுண்டாவதே என்று விஸ்மயப்பட்டு ஸர்வாதிகமான பரமபதத்திலே கொடுபோய்வைக்கும். மாயக்கூத்தனில் விடாய் நடையாடாத தேசத்திலேவைத்து, ஒருநாளும் பிரியாத அநுபவத்தைக் கொடுக்கும். (கக)

சோலைக்குஉண்டான ஸைத்ய ஸௌந்தர்யங்களைப்பற்ற - ஸ்ரமஹரமாய்௨ர்ஸநீயமான என்றது. “மதிள்” என்றதுக்கு ஹ்ருதயம் - ஸாம்ஸாரிக இத்யாதி. “திருமாலை - சடகோபன்” என்கையாலே ஹ்ருதயம் - ரகுவர இத்யாதி. அன்ன - ஸத்ருஸமான. இப்பத்துக்கு விஸேஷணமானதிலே ஒருஸௌகர்யமுண்டென்கிறார் - வாச்ய இத்யாதி. இத்தை விவரிக்கிறார் - பாலென்கிறது இத்யாதி வாக்யத்வயத்தாலே. ப்ரகரணாநுகுணமாக விவரிக்கிறார் - மாயக்கூத்தனில் இத்யாதி. இத்திருவாய்மொழியால் - பாடி வீடுபெற்றபடி சொல்லுகிறது. இத்திருவாய்மொழியில் அதிஷ்டாநதேவதையான எம்பெருமான் ஆஸ்சர்யப்பட்டடென்றபடி. (கக)

த்ரவிடோபநிஷத்ஸங்கதி.—[illegible] ॥

த்ரவிடோபநிஷத்தாத்பர்யரத்நாவலி.—[illegible] ॥அ௭॥

திருவாய்மொழி நூற்றந்தாதி.	எல்லிபகல்நடந்த இந்தவிடாய்தீருகைக்கு மெல்லவந்துதான் கலக்கவேணுமென - நல்லவர்கள் மன்னுகடித்தானத்தேமாலிருக்கமாறன்கண்டு இந்நிலையைச்சொன்னனிருந்து.

ஆழ்வார் திருவடிகளேஸரணம், எம்பெருமானார் திருவடிகளேஸரணம், ஜீயர்திருவடிகளே ஸரணம்.

---

* ராமா - பால - (உ-சரு).

ஏழாந்திருவாய்மொழி—இருத்தும்-ப்ரவேஶங்கள்.

ஒ.—ஏழாந்திருவாய்மொழியில், தாமே தமக்கு ப்ராதிகூல்யநிவ்ருத்தியைப் பிறப்பித்து, அதுவே பற்றாசாக ஒருநாளும் அபாயங்கள்கண்டு உபேக்ஷியாதே அத்யந்தவத்ஸலனுமாயிருந்துள்ள ஸர்வேஶ்வரன், அநாதிகாலம் தம்மைப்பெறுகைக்குப் பண்ணின யத்நபாஹுள்யத்தையும், அவனுக்குத் தம்மைப் பெறுகையிலுண்டான அபிநிவேஶத்தையும், தம்மோடே ஸம்ஶ்லேஷித்து இந்த ஸம்ஶ்லேஷத்தைப் பெரும்பேறு பெற்றானாகக் கொண்டிருந்தருளுகிறபடியையும் அநுஸந்தித்து, அவனுடையபடியைப் பார்க்க, தம்முடைய அர்த்தித்வாதிகள் புறணியாயிருக்கிறபடியை அநுஸந்தித்து, ஸ்ரீவிபீஷணாழ்வான் பெருமாளுடைய நீர்மையைக்கண்டு ஈடுபட்டாற்போலே, "நாம் என்செய்தோமானோம்!" என்று லஜ்ஜிதருமாய், எம்பெருமானுடைய வ்யாமோஹத்தைக்கண்டு விஸ்மிதருமாய், ஹ்ருஷ்டருமாய், அவனுடைய க்ருபாதிகுண ஸமுத்ரத்திலே அழுந்தின ஆழ்வார், —ராமகதாஶூந்யமான அஶோகவநிகையின் நடுவே ராமகீர்த்தநத்தைப் பண்ணிக்கொண்டுவந்த திருவடியைக்கண்டருளி மிகவும் ஹ்ருஷ்டையாய், "ராமஸம்பந்திகளாயிருப்பார் இத்தேஶத்தில் வரக்கூடாது: ஆனபின்பு, இது ஸ்வப்நாதிகளோ?" என்று ஸ்ரீஜநகராஜன் திருமகள் அதிஶங்கையைப்பண்ணி மெய் என்று தெளிந்து இனியளானாற்போலே,—எம்பெருமான் அதிவ்யாமோஹத்தோடே தம்மோடே கலந்தருளினபடியை அநுஸந்தித்து, "இது ப்ரமஸ்வப்நாதிகளிலொன்றோ?" என்று அதிஶங்கையைப்பண்ணி, அன்று என்று தெளிந்து ப்ரீதராகிறார்; எம்பெருமானுக்கு ஈஶ்வரத்வமன்று ஸ்வரூபம்: பாரதந்த்ர்யம்" என்று இத்திருவாய்மொழிக்குக் கருத்து.

ப.—ஏழாந்திருவாய்மொழியில், திருக்கடித்தானத்திலே எழுந்தருளியிருந்த ஸர்வேஶ்வரன், தம்முடைய திருவுள்ளத்திலே ஸமஸ்தவிரோதிகளும் கழியும்படி புகுந்து பரிபூர்ணமாக எழுந்தருளியிருக்கக்கண்டு, அவன்தானே அர்த்தியாய்ப்புகுந்தபடியையும், அவனுடைய விரோதிநிவர்த்தகத்வத்தையும், அஜ்ஞாந தமோநிரஸநத்தையும், அதுக்கடியான அத்யுஜ்ஜ்வல விக்ரஹஶோபத்தையும் ஶாஸ்த்ரஸ்திதியையும், அத்தால் பிறந்த அவயவஶோபையையும், அவ்வழகினுடைய அநுபாவ்யத்வாதிஶயத்தையும், நிர்ஹேதுகோபகாரத்தையும், அதிஶயிதோபகாரத்தினுடைய அநுஸந்தேயத்வத்தையும், நித்யாநுபாவ்யபரத்வத்தையும் அநுஸந்தித்து, ஏவம்பூதனான ஸர்வேஶ்வரன் தன்திருவுள்ளத்தில் புகுந்திருக்கிற அதிஶயிதவ்யாமோஹத்திலே விஸ்மிதராய், "இது ப்ரமமோ? மாயாதிவிகாரமோ?" என்று ஶங்கித்து, நம்மளவில் விப்ரலம்பியன்றென்று தெளிந்து, "இதோருபகாராதிஶயமே!" என்று அத்யந்தம் ஹ்ருஷ்டராகிறார்.

இ.—ஏழாந் திருவாய்மொழியில், தமக்கு ப்ராதிகூல்யநிவ்ருத்தியைப் பிறப்பித்து, அத்வேஷாபிமுக்யம் முதலான அவஸ்தைகளைப் பிறப்பித்து, அநாதிகாலம் புத்திபூர்வம்பண்ணின ப்ராதிகூல்யத்தை விஸ்மரித்து, ஆநுகூல்யம் பிறந்தபின்பு ப்ராமாதிகமாகப்பிறந்த குற்றங்களில் அஜ்ஞனென்னும்படி வத்ஸலனு

யிருக்கிற ஸர்வேஶ்வரன், அநாதிகாலம் தம்மைப்பெறுகைக்கு “எதிர்சூழல்புக்கு” என்கிறபடியே தாட்பிறந்த ஜந்மங்கள்தோறும் அவதரித்தபடியையும், கீழ்ப்பிறந்த இழவெல்லாம் தீரும்படி கலந்தபடியையும், இது தமக்கு உபகரித்தானயிருக்கை யன்றியே தான் பெறுப்பேறு பெற்றானயிருக்கிறபடியையும் அநுஸந்தித்து, அவனுடைய அர்த்தித்வத்தைக்கண்ட அநந்தரம் தாம் அர்த்தித்துக்கூப்பிட்ட இது புறணியாய்த் தோற்றுகையாலே,—“ராவணோநாம துர்வ்ருத்தோ ராக்ஷஸோ ராக்ஷஸேஶ்வர:” என்று - ஸ்ரீவிபீஷணாழ்வான் பெருமாள் நீர்மையைக் கண்டபின்பு “நாம் என்செய்தோமானோம்!” என்று லஜ்ஜித்தாற்போலவும், ராமகுணங்கள் நடையாடாத அஶோகவநிகையில்திருவடி சென்று, “ஸம்ஶ்ருத்யைவம் ஸ்ரவாக்யம்” என்று இனிதாம்படி ராமகுணங்களைச்சொல்லக்கேட்ட பிராட்டி, “இந்நிலத்தில் இதுகூடாது, ‘கிந்நு ஸ்யாச்சித்தமோஹோऽயம் பவேத்வாதகதிஸ்த்வியம் । உந்மாதஜோ விகாரோ வா ஸ்யாதியம் ம்ருகத்ருஷ்ணிகா’” என்று அதிஶங்கைபண்ணி “மெய்” என்று தெளிந்து இனியளானாற்போலவும்,—அவன் தம்பக்கல்பண்ணின வ்யாமோஹத்திலே அதிஶங்கைபண்ணி, “மெய்” என்றுதெளிந்து, அந்தவ்யாமோஹத்தைப் பேசி ஹ்ருஷ்டராகிறார். இத்திருவாய்மொழியில் லாபத்துக்கு க்ருஷிபண்ணினபடியாயிருக்கிறது கீழெல்லாம்; இது ஸ்திரமாகைக்கு வேலியடைக்கிறார் மேல். ஸர்வேஶ்வரன் ஸ்வதந்த்ரனென்று உபபாதித்தது கீழ்; அங்ஙனன்று, ஆஶ்ரிதபாரதந்த்ர்யமே அவனுக்கு ஸ்வரூபமென்கிறது இத்திருவாய்மொழியில்.

ஈடு.—இத்திருவாய்மொழியில் பேற்றுக்கு க்ருஷிபண்ணினபடி கீழுடைய; மேல்-இப்பேற்றுக்கு வேலியாயிருக்கிறது. ‘இத்திருவாய்மொழிதன்னில் செய்கிறதேன்?’ என்னில், தாம் அநாதிகாலம் புத்திபூர்வகமாகப் பண்ணிப்போந்த ப்ராதிகூல்யங்களையடைய விஸ்மரித்து, ஆநுகூல்யம் பிறந்தபின்பு ப்ராமாதிகமாக உண்டானவற்றைக் காணக் கண்ணிட்டு, தம்முடையபேற்றுக்குத் தானே யத்நித்து, தமக்குப்பிறந்த விடாய் தீரும்படி ஸம்ஶ்லேஷித்து, இதுதான் இவர்க்கு உபகரித்தானயிருக்கையன்றிக்கே தன் பேறாயிருக்கிறபடியை அநுஸந்தித்து “தானே அர்த்தியாய்த் தன்பேறாக வந்துகலந்தவனை நாம் இரப்பாளராய்க் கூப்பிட்டவிடம் என்செய்தோமானோம்!” என்று லஜ்ஜித்து, “ஒரு ஸம்ஸாரிசேதநன்பக்கலிலே ஸர்வேஶ்வரன் பண்ணும் விஷயீகாரமிருக்கும்படியேயிது!” என்று வித்தராய்; *“ராவணோநாம துர்வ்ருத்தோ ராக்ஷஸோ ராக்ஷஸேஶ்வர:”

இருந்தும் வியந்து ப்ரவேஶ. * மாயக்கூத்தனில் விடாய்தீரக் கலந்த கலவியாலுண்டான இத்திருவாய்மொழியில் ப்ரீதி வாசாமகோசரமென்று விவக்ஷித்து, கீழும்மேலும் ப்ரீதியுண்டாயிருக்க இதுக்கு ஆதிக்யமேதென்ன அருளிச்செய்கிறார் - இத்திருவாய்மொழியில் இத்யாதிவாக்யத்வயத்தாலே. வேலியாயிருக்கிறதென்றது - வர்த்தகமாயிருக்கிறதென்றபடி. வாசாமகோசரமான ப்ரீதியை உபபாதிக்கைக்காக, தத்விஷயஶங்கையை அநுவதிக்கிறார் - இத்திருவாய்மொழிதன்னில் இத்யாதி. “எதிர்சூழல்புக்கு” என்றத்தைக் கடாக்ஷித்து - தம்முடைய் பேற்றுக்கு இத்யாதி. “என்னுள் இருள்தானறவீற்றிருந்தான்” என்றத்தைப்பற்ற - தமக்குப் பிறந்தவிடாய் இத்யாதி. “இருந்தான்கண்டுகொண்டு” என்றத்தைப்பற்ற - இதுதான் இவர்க்கு இத்யாதி. “அருத்தித்தெனைத்தோர்பலநாளழைத்தேற்கு” என்றத்தைக்கடாக்ஷித்து - தானே அர்த்தியாய் இத்யாதி. “என்தன்கருத்தையுறவீற்றிருந்தான்” என்றத்தைப்பற்ற - ஒருஸம்ஸாரி சேதநன் இத்யாதி. ஸ்வகதங்கீகாரத்தாலே ஈடுபட்டமைக்கு த்ருஷ்டாந்தம்-ராவணோ இத்யாதி. “விபீஷணோ மஹாப்ராஜ்ஞோ வைராஜ்யேऽபிஷேசிதஃ” இத்யுத்தரார்த்தம். யுத் - (கக-க)

(ராகவேணுபயேதத்தே ஸங்நதோராவணுநுஜ:) என்று 'ராவணன் பின் பிறந்த நாம் ரகு குலத்திலுள்ளார்க்கு ஆளாகப் புகாநின்றோமோ?' என்றிருந்தவன், பெருமாள்பாடேநின்றும் அருளப்பாடிட்டு வந்தவாறே, "என்னையே இப்படி கைக்கொண்டருளுவது! அவன் பின் பிறந்த தண்மை எங்கேபோயிற்று?" என்று, வேரற்றமரம்போலே, கூடவந்த நால்வ ரோடும் திருவடிகளிலேவிழுந்து தறைப்பட்டாற்போலவும்; ராமகுணங்கள் நடையாடாத அசோகவநிகையிலே திருவடி போய்ப்புக்கு, "ஸம்ப்ர வேமதுரம்வாக்யம்" (ஸம்ப்ர வேமதுரம்வாக்யம்) என்று, பிராட்டி உளளாம்படி ராமநாமஸங்கீர்த்தநத்தைப்பண்ண, "இந்நிலத்தில் இது பரிமாறுவதோன்றல்ல: "கிந்நு ஸ்யாச்சித்தமோஹோயம்பவேத்வாதகதிஸ்த்வியம் | உந்மாதஜோவிகாரோவா ஸ்யாதியம் ம்ருகத்ருஷ்ணிகா" (கிந்நு ஸ்யாச்சித்தமோஹோயம்பவேத்வாதகதிஸ்த்வியம் | உந்மாதஜோவிகாரோவா ஸ்யாதியம் ம்ருகத்ருஷ்ணிகா) என்று இது சித்தமோஹத்தால் வந்ததோ? வாதகதியோ? உந்மாதஜ விகாரமோ? ம்ருகத்ருஷ்ணிகையோ?" என்று பலபடிகளை ஶங்கித்து, "முன்னேநின்று வார்த்தைசோல்லாநின்றான்: இது கேட்டு நாம் விக்ருதராகிறமையு முண்டு: ஆனபின்பு, இது மெய்யாமித்தனை" என்று ஸ்ரீஜநகராஜன்திருமகள் தேளிந்து ஹ்ருஷ்டையானாற் போலவும்;—இவரும், "இதுவும் ப்ரபஸ்வட்நாதிகளிலேயோன்று" என்று ஶங்கித்து, "அங்ஙனல்ல, மெய்" என்று தேளிந்து ப்ரீதராய், "நமக்கு அத்வேஷத்தைப் பிறப்பித்து, ஆபிமுக்யத்தையுண்டாக்கித் தன்னாலல்லது செல்லாமையைப்பிறப்பித்து, தன்மேன்மை பாராதே இப்படி தாழநின்று வந்து கலந்து பரிமாறுவதே! இதேன்ன ஆஶ்ரிதபாரதந்த்ர் யம்! இதேன்ன நீர்மை!" என்று அவன்படிகளை அநுஸந்தித்து ஹ்ருஷ்டராகிறார்.

முதற் பாட்டு.

இருத்தும்வியந்தேன்னைத் தன்போன்னடிக்கீழேன்று
அருத்தித்தேனைத்தோர்பலநாளழைத்தேற்குப்
போருத்தமுடை வாமனன்தான்புகுந்துஎன்தன்
கருத்தையுற வீற்றிருந்தான்கண்டுகோண்டே.

ஆ —(இருத்தும்வியந்து) - இப்படி "என்னெஞ்சிலே புகுந்தருளுகிறான், 'நான் தன்னைப்பிரிந்து பட்ட பாடெல்லாம் ஒன்றன்று' என்னும்படி தான் என்னைப்பிரிந்து வ்யஸநப்பட்டு ஒருவண்ணம் என்னைக்கண்டுகொண்டு புகுந்து பரிபூர்ணனாயிருந்தருளினான்: ஒருவனுடைய ப்ரணயித்வமிருக்கும்படியென்? இவனையாகாதே நான், 'இதுவோ பொருத்தம்?' என்றுசொல்லிற்று" என்கிறார்.

"ஸங்கத:" என்றதிலே நோக்கு. ஶங்கித்துத் தெளிந்ததுக்கு த்ருஷ்டாந்தம் - ராமகுணங்கள் இத்யாதி. "மருள்தானீதோ மாயமயக்குமயக்கே" என்றத்தைப்பற்ற-இவரும் இத்யாதி. 'மாய மயக்கு மயக்கான்' என்றத்தைப்பற்ற - அங்ஙனல்ல மெய்யேன்று தெளிந்து என்றது. "வைத்தேன்மதியால்" என்றத்தைப்பற்ற - நமக்குஅத்வேஷத்தை இத்யாதி. ஸம்ஸேவமாநா வியாம்ஜாம் ஜநயிஷ்யாமாகவி: | ஸம்ப்ர வேமதுரம்வாக்யம்வைதேஹ்யாவ்யாஜஹாரஹ" (௩௧-௧) "கிந்நு ஸ்யாச்சித்தமோஹோயம்" இத்யாதி, ஸுந்தரகாண்டே. (௩௪-௨௩)

ஒ.—முதற்பாட்டில், இத்திருவாய்மொழியில் தம்மோடுகலந்த கலவியைச் சுருக்காகவருளிச்செய்கிறார்.

[இருத்துமென்று தொடங்கி] - "ஸம்ஸாரத்திலே நம்மை ஆசைப்படுவாருண்டாவதே!" என்று விஸ்மயப்பட்டு என்னைத் தன்னுடைய ஶ்லாக்யமான திருவடிகளின்கீழே இருத்தும் என்று தன்னை அர்த்தித்து அநேககாலம் கூப்பிட்ட எனக்காக. [அழைத்தேற்கென்று] - அவனுடைய ப்ரணயித்வஸ்வபாவத்தை அநுஸந்தியாதே இவன் தான் தாழ்த்தானாகவும், † ப்ரணயஸ்வபாவனான வாமநன் தன் அர்த்திதைபாலே புகுந்து 'தனக்கேயாக எனைக்கொள்ளுமீதே" என்றுள்ள என்னுடைய மநோரதத்தைத் தான் கைக்கொண்டு க்ருதார்த்தனாயிருந்தான்.

ப.—முதற்பாட்டில், நான் அர்த்தியாய்க் கூப்பிட்டழைத்த விடாயெல்லாம் தீரும்படி தான் அர்த்தியாய், என்னெஞ்சிலே பெறாப்பேறுபெற்றானாகப் புகுந்திருந்திருந்தானென்கிறார்.

என்னை — (தன்னையொழியச்செல்லாமையையுடையேனான) என்னை, (என் ப்ராவண்யாதிசயத்தைக்கண்டு), வியந்து - விஸ்மிதனாய், 'தன் - தன்னுடைய, பொன் - நிரதிஶயபோக்யமான, அடிக்கீழ்-திருவடிகளின்கீழே, இருத்தும்-இருத்தும்,' என்று - என்று, அருத்தித்து - அர்த்தித்து, எனைத்து - அநேககாலம், ஓர் பலநாள் - ஒருபடிப்பட நாள்தோறும், அழைத்தேற்கு - அழைத்துக்கூப்பிட்ட எனக்கு,—தான் - தான், பொருத்தம் - ப்ராவண்யம், உடை - உடையனான, வாமனன் - வாமநனாய்க்கொண்டு, புகுந்து - (மஹாபலியஜ்ஞவாடத்துக்குப்போனாற்போலே தானேவந்து) புகுந்து, என் தன் - என்னுடைய, கருத்தை - (அர்த்தித்வவிஶிஷ்டமான) நெஞ்சிலே, உற - ஸுஸ்த்திரமாம்படிக்கீடாக, வீறு - (என்னிலும் தனக்குப்பிறந்த அதிஶயமான) வ்யாவ்ருத்தி தோற்றும்படி, (பெறாப்பேறுபெற்றாற்போலே), கண்டுகொண்டு - பூர்ணவலோகநம்பண்ணிக்கொண்டு, இருந்தான் - இருந்தான்.

இ —முதற்பாட்டில், இத்திருவாய்மொழியில் தம்மோடுகலந்த கலவியை ஸங்க்ரஹேண அருளிச்செய்கிறார்.

[என்னைத்தன் பொன்னடிக்கீழ் - வியந்த இருத்தும் - என்று] - தன்வாசி அறியாதே ஶப்தாதிவிஷயங்களிலே அந்யபரனான என்னை ஶ்லாக்யமான தன்திருவடிகளின்கீழே. * வடிவிணையில்லா மலர்மகள் மற்றை நிலமகள்பிடிக்கும் மெல்லடியிறே. [வியந்து] - "ஸம்ஸாரத்திலே நம்மையே அபேக்ஷிப்பானொருவன் உண்டாவதே!" என்று விஸ்மயப்பட்டு: "ஸஹோதாஸூ........." என்று கைவாங்கியிருக்கும் அவனிறே ஒருநாளும்பிரியாதபடி இருத்தி அடிமைகொள்ளும். தன்பொன்னடிக்கீழ் என்று - ப்ராப்யஸ்வரூபம் சொல்லிற்று; இருத்துமென்று - ப்ராபகஸ்வரூபமும் அவனே என்கிறது. [வியந்து - இருத்தும்] - தன்பேறாக இருத்தும். [அருத்தித்து] - "தன் பேறாக இருத்தும்" என்கையாலே - அர்த்தித்வமும் மிகை, சைதந்யப்ரயுக்தமாய் வந்ததித்தனை. [எனைத்தோர் பலநாள்] - நாளும் தொக்க மேகப்பல்குழாங்கள் காணுந்தோறும் தொலைவன்நான்" என்றத்தைச் சொல்லுகிறார். [அழைத்தேற்கு]-"என்னை ஆளக்கூப்பிட்டழைத்தக்கால்" என்றத்தைச் சொ ா.

அறியாதே தாழ்த்தானாகவும், நாம் அதிவிஷ்டமாகவும் கூப்பிட்டு என்னகார்யம்

† இங்கே க்ரந்தம் லோபித்திருக்கிறதுபோல் தோன்றுகின்றது அந்வயிக்கவில்லை.

செய்தோம் என்கிறார்காண்'' என்னும் பிள்ளான். அழைக்கவுங்கூட மாட்டாத இவனையோ நாம் அழைத்தது? அத்தலையில் ப்ரணயித்வத்தை அநுஸந்யித்தால், அர்யித்வமேதொடங்கி மிகையாயிறே இருப்பது: *எழுதுமென்னும் இதுமிகையிறே. [பொருத்தமுடை]-இப்படி பொருத்தமுடையவனையோ நான் "இதுவோ பொருத்தம்'' என்றது? [வாமனன்] - அர்யித்வமில்லாத மஹாபலியோடே பொருந்தினவனையோ, அர்யித்வமுடையேனாயிருக்க என்னோடு பொருந்திற்றிலன் என்கிறது? [தான்புகுந்து] — தன்னுடைமை பெறுகைக்கு அர்யியானவன், என்னைத் தான் பெறுகைக்கு அர்யியாய் வந்துபுகுந்தான். [என் தன் கருத்தையுற] - ''தனக்கேயாக எனைக்கொள்ளுமீதே'' என்ற என் கருத்தை - மநோரதத்தை, தான் கைக்கொண்டு வந்துபுகுந்தான். [வீற்றிருந்தான்] - என்னைப்பெறுகையாலே 'ஸம்ஸாரங்கொண்டவரை மீட்டோம் என்றிருந்தோம்: மாயக்கூத்தன் கொண்டவரும் பிழைக்கப் பெற்றோமே' என்று குறைவற்றிருந்தான் என்னுதல்; என்னோட்டைக் கலவி தன்பேறாக இருக்கிற வேறுபாடு தோற்றும்படி இருந்தான் என்னுதல். [கண்டுகொண்டே] - ப்ரபலவ்யாயிக்குப் பிழைத்த புத்ரனைப் பார்த்துக்கொண்டிருக்கும் பிதாவைப்போலே, '' விஜ்வரஃப்ரமுமோத ஹ '' என்கிறபடியே † மாயக்கூத்தனில் ஆற்றாமைக்குப் பிழைத்தவனென்று, வைத்தகண் வாங்காதே யிரா நின்றான்.

ஈடு.—முதற்பாட்டு. இத்திருவாய்மொழியில் தமக்குண்டான லாஹத்தை ஸங்க்ரஹேண அருளிச்செய்கிறார்.

[என்னைத்தன்போன்னடிக்கீழ் - வியந்து - இருத்தும் - என்று] - தன் வாசியறியாதே ஶப்தாதிவிஷயங்களிலே அந்யபரனான என்னை, ஶ்லாக்யமான தன் திருவடிகளின்கீழே, '' † 'ஸமஹாத்மாஸுதுர்லபஃ' (ஸமஹாத்மாஸுதுர்லபஃ) என்று கைவாங்கியிருக்கும் ஸம்ஸாரத்திலே நம்மை அபேக்ஷிப்பானொருவனுண்டாவதே!'' என்று விஸ்மயப்பட்டு இனி ஒருநாளும் பிரியாதபடி இருத்தி அடிமைகொள்ளும். இத்தால், ப்ராப்ய ப்ராபகங்களைச் சொல்லுகிறது. தன்போன்னடிக் கீழென்று - ப்ராப்ய ஸ்வரூபம் சொல்லிற்று; இருத்துமென்று - ப்ராபகனுமவனே யென்றது. [வியந்து-இருத்தும்] - தன்பேறாக இருத்தும். [அருத்தித்து] - சேதநனைவாசிக்க இத்தனையும்வேணுமிறே. [எனைத்தோர்பலநாள்] - ''நாளுளும்'' என்றத்தைச் சொல்லுகிறார். [அழைத்தேற்கு]-''என்னையாளக்கூப்பிட்டழைத்தக்கால்'' என்றத்தைச் சொல்லுகிறார். ''இவன் ப்ரணயித்வத்தையறியாதே, தாழ்த்தானாகவும், நாம் அஹிநிவிஷ்டராகவும் நினைத்துக்கூப்பிட்டு என்னகார்யஞ்செய்தோமேன்கிறார்காண்!'' என்னும் பிள்ளான் ‡ (அழைக்கவுங்கூடமாட்டாத இவனையோ நாமழைத்தது)அத்தலையில் ப்ரணயித்வத்தை அநுஸந்தித்தால்,

முதற்பாட்டு.—இருத்தும் இத்யாதி.

விஸ்மயஹேதுகப்ரநமுவேநார்த்தம் - ஸமஹாத்ம)ப்படி சொன்னத்தால் ஹலிதத்தை அருளிச்செய்கிறார் - இத்தால் இத்யாதி. சொல்லும் ப்ரகாரமேதென்ன - **தன்போன்னடிக்கீழ்** இத்யாதிவாக்யத்வயம். '' வியந்து '' என்றதுக்கு ஹாவம் - **தன்பேறாக** இத்யாதி. அருத்தித்து - அர்த்தித்து. தன்பேறாகவிருத்தினால் அர்த்திக்கிறதென்? என்ன - **சேதநனை இத்யாதி.** * மாயக்கூத்தனில் ''நாளுளும்'' என்றத்தை அநுஹாஷிக்கிறதென்கிறார் - **நாளுளும் இத்யாதி.** கீழுக்கெல்லாம் ஹாவம் - **இவன் ப்ரணயித்வத்தை** இத்யாதி. அநுதபிக்கிறதென்? அர்த்திக்கவேண்டாவோ? என்ன - **அத்தலை** இத்யாதி. ''அர்த்தித்வம் மிகை'' என்னுமிதுக்கு ப்ர

† ஸ ந - எ - கக. ‡ குண்டலிதம் ப்ரக்ஷிப்தம்.

அர்த்தித்வமேதொடங்கி மிகையாயிறேயிருப்பது ; *எழுதுமென்னுமிது மிகையாயிறேயிருப்பது. [பொருத்தமுடை] - இப்படிப் பொருத்தமுடையவனையே "இதுவோபொருத்தம்?" என்றது. [வாமனன்] - நான் அர்த்தித்தவிடம் என்செய்தேனானேன். தன்னுடைமைபெறுகைக்குத் தான்இரப்பாளனானவனே. [தான்புகுந்து]-என்னைத் தான் பெறுகைக்கு அர்த்தியாய்வந்துபுகுந்து. [என்தன்கருத்தையுற] - "தனக்கேயாக எனைக்கொள்ளுமீதே" என்ற என்னினைவைத் தான் கைக்கொண்டான். [வீற்றிருந்தான்] - இவரைப்பெற்ற அத்தாலுண்டான வேறுபாடு வடிவிலேதோற்ற க்ருதக்ருத்யனாயிராநின்றான். [கண்டுகொண்டே] - மஹாவ்யாதியைத் தப்பின புத்ரனை மாதாபிதாக்கள் பார்த்துக்கொண்டிருக்குமாபோலே * மாயக்கூத்தனில் விடாய்க்குத்தப்பினவரென்று பார்த்துக்கொண்டிராநின்றான்.

ரண்டாம் பாட்டு.

இருந்தான்கண்டுகொண்டு எனதேழைநெஞ்சாளும்
திருந்தாதவோரைவரைத் தேய்ந்தறமன்னிப்
பெருந்தாட்களிற்றுக்கு அருள்செய்தபெருமான்
தருந்தானருள்தான் இனியானறியேனே.

நந்தான்.] - எனனுள்ளே புகுந்தருளாநின்று, என்னுடைய ஸர்வகரணங்களும் இக்குணமல்லது மற்றொருகுணமறியாததொருபடி இருந்தருளினான் ; ஆதலால், "இதின்மேலில்லை" என்னும்படி பண்டெனக்குச் செய்தருளின அருளை ஓரருளாக மதியேனென்கிறார்.

ஓ.—இரண்டாம்பாட்டில், என்னுடைய இந்த்ர்யவஶ்யதையைத் தன்னழகைக்காட்டித் தவிர்த்து என்னை விஷயீகரித்தருளின மஹோபகாரத்தோடு ஒவ்வாது ஸ்ரீகஜேந்த்ராழ்வானுடைய ஆபந்நிவாரணமும் என்கிறார்

[இருந்தானென்று தொடங்கி.] - நிதிகண்டாரைப்போலே என்னைக்கண்டு க்ருதார்த்தனாய் என்னுடைய சபலமானநெஞ்சை ஆளாநிற்பதுஞ்செய்து எத்தனையேனும் பலவான்கள் திருத்தப்புக்காலும் திருந்ாதே சேதநரைப்போலேநின்று நலிகிற ஐந்து இந்த்ரியங்களும் போய் க்ஷயிக்கும்படி என்மநஸ்ஸிலே விடாதேயிருந்தான். [பெருந்

மாணம் - எழுதுமென்னும் இத்யாதி. "பொருத்தமுடை" என்றதுக்கு ஹார்த்தஹாவம் - இப்படி இத்யாதி. "வாமனன்" என்றதுக்கு ஹார்த்தஹாவம் - **நான்அர்த்தித்த** இத்யாதி வாக்யத்வயம். **தன்னுடைமை** இத்யாதி வாக்யாநந்தரம் **நான்அர்த்தித்த** இத்யாதிவாக்யம் அநுஸந்தேயம். "என்தன்கருத்தையுற-" என்னுடைய ப்ரார்த்தநாரூபமான நினைவைத் தான்உற்றென்றபடி. **என்னினைவைத் தான் கைக்கொண்டான்** என்றது - நான் தனக்கேயுறுப்பாக விநியோகப்பட என்னுமாபோலே, தான் எனக்கேயுறுப்பாக விநியோகப்படவேணுமென்று அபிஸந்திபண்ணினானென்றபடி. "கண்டுகொண்டு" என்றதுக்கு ஹாவம் - **மஹாவ்யாதி** இத்யாதி. 'என்னைத் தன்பொன்னடிக்கீழ் வியந்து - இருத்தும் - என்று அருத்தித்தெனைத்தோர்' என்றுதொடங்கி, 'என்தன்கருத்தையுற - கண்டுகொண்டு - வீற்றிருந்தான்' இத்யந்வயஃ. (க)

தாட்களிறு என்று மேலுக்கு] - என்னுடைய இந்த்ரியங்களை வென்று தந்தபின்பு ஸ்ரீ கஜேந்த்ராழ்வானுடைய ஆபந்நிவாரணோபகாரத்தையும் ஓர் உபகாரமாக நினையேன். [தருமருள்] - தந்த அருள். ‘பெருந்தாட்களிற்றுக் கருள்செய்த பெருமான் - தான் - தரும்-அருள்தான் இனி யான் அறியேன்’ என்றந்வயம்.

ப.—அநந்தரம், விரோதியான இந்த்ரியங்கள் பலக்ஷயம்பிறக்கும்படி என்னெஞ்சில் எழுந்தருளியிருந்த உபகாரத்துக்கு அளவறிகிறிலேனென்கிறார்.

எனது - என்னுடைய, ஏழை-சபலமான, நெஞ்சு-நெஞ்சை, (தாங்கள் இட்ட வழக்காம்படி), ஆளும்-ஆண்டுகொண்டுபோருவதாய், திருந்தாத-அநியாம்யதயா, ஓர் - அத்விதீயமான, ஐவரை - ஐந்திந்த்ரியங்களும், தேய்ந்து - க்ஷபித்து, அற - முடியும் படியாக, மன்னி - ஸுஸ்த்திரமாம்படி (நெஞ்சிலே) புகுந்து, கண்டுகொண்டு - (நிதி யெடுத்துக்) கண்டுகொண்டிருப்பாரைப்போலே, இருந்தான் - பேராமலிருந்தவன், பெரு - பெரிய, தாள் - தாளையுடைத்தான, களிற்றுக்கு — களிற்றுக்கு, அருள்செய்த - (ஒருமுதலையால்வந்த க்லேசத்தைத் தீர்த்து) அருள்செய்த, பெருமான் -ஸர்வாதிகன், தான் - தான் , தரும் - (அவனுக்கு) உபகரிக்கும், அருள்தான் - உபகாரம், (இனி என்னளவில் அருளைக்கண்டபின்பு), யான் அறியேன் - (ஓரருளாக) அறிகிறிலேன். ஐந்துஇந்த்ரியங்களாகிற முதலையிலே அநாதிகாலமகப்பட்ட எனக்கு நீ பண்ணின இந்த வுபகாரத்துக்கு அது ஸத்ருஶமன்று என்று கருத்து.

ஈ.—இரண்டாம்பாட்டில், என்னுடைய இந்த்ரியவஶ்யதையைத் தன்னழகாலேதவிர்த்து, என்னை விஷயீகரித்தருளின உபகாரத்தோடொவ்வாது ஸ்ரீ கஜேந்த்ராழ்வானுடைய ஆபந்நிவாரணமும் என்கிறார்

[இருந்தான் கண்டுகொண்டு.] - தரித்ரன் நிதி கண்டால் கண்டுகொண்டிருக்குமாபோலே, பார்த்தபடியே இராநின்றான். ‘‘கடெந்ராநந்தஹிவீக்ஷணதநத்ருவிஹவ ஜஹத:’’ என்கைக்கு, எதிர்த்தலையான தம்மைக் காண்கிறிலர். இத்தை நினைத்திறே ‘‘அர்யித்வம் மிகை’’ என்றது, முதற்பாட்டில். [எனதேழை நெஞ்சாளும்] - கண்டதெல்லாவற்றிலும் சபலமாயிருக்கிற என் நெஞ்சை அதுவேபற்றாசாக இந்த்ரியங்கள் பொதி எடுக்கத்தொடங்கிற்று; ஈஶ்வரஶேஷமான நெஞ்சை இந்த்ரியங்கள் பணிகொள்ளத்தொடங்கிற்று. [திருந்தாத] - அநாதிகாலம் ஸர்வஶக்தி திருத்தப்பார்த்தவிடத்திலும் திருந்தாத வன்மையையுடைய இந்த்ரியங்கள். [ஓரைவரை] - இப்படிபண்ணுகைக்கு இன்னம் ஓரைவரில்லை: இவற்றால் பட்ட நலிவின்மிகுதியாலே சேதநஸமாயியாலே சொல்லுகிறார். [தேய்ந்தறமன்னி இருந்தான்] - ப்ராக்ருதவிஷயங்களில் பற்று அறும்படி புகுந்திருந்தான். ப்ராக்ருதவிஷயங்களில் பற்றுநேராக க்ஷயிக்கும்படி தன் வடிவழகைக் காட்டிக்கொண்டு புகுந்திருந்தான். விஷயாந்தரங்களிலும் வடிவழகிலே யிறே இவன் துவக்குண்டிருப்பது. ராஜாக்கள் ஶத்ருக்களை ஆஸநபலத்தாலே அழிக்குமாபோலே, இந்த்ரியங்களுக்கு விஷயங்களில் பற்றுஅறும்படி புகுந்திருந்தான். [பெருந்தாள் இத்யாதி] - பெரியதாளையுடைய களிற்றுக்கு அருளின ஸர்வேஶ்வரன். வடிவில்கனமும் நோவிற்பாடாற்ற வொண்ணுமைக்கு உடல் என்கை. [பெருமான் - தான் - தரும் - அருள்தான்] - தருமருள் - தந்த அருள் ; ‘‘தரும்’’ என்கிற இது காலத்ரயத்திலும் சொல்லலாயிருக்கையாலே. ஆஶ்ரிதர்க்குச்செய்தது தமக்குச் செய்த

தாகவிறே இவர் நினைத்திருப்பது. [இனியானறியேனே] - எனக்கு உதவினபின்பு நான் அத்தை ஒன்றாக நினைத்திரேன். ஆனைநோவுபட்டது ஆயிரம் வத்ஸரம், அகப்பட்ட பொய்கை பரிச்சின்னம், முதலையொன்று; எனக்குக்காலம் அநாதி, அகப்பட்டது ஸம்ஸாரார்ணவத்திலே, முதலைஐந்து; இத்தை மீட்டுக்கொண்ட மஹாகுணத்துக்கு அது ஒருகுணமாயற்றதோ? ஸ்ரீகஜேந்த்ராழ்வான்பக்கல் பண்ணின அருளையிட்டுப் புறம்புள்ளார்பக்கல் பண்ணின அருளை வ்யாவர்த்தித்தார்; தமக்குப்பண்ணின அருளையிட்டு அதுதன்னை வ்யாவர்த்திக்கிறார்.

ஈடு.—இரண்டாம் பாட்டு. என்னுடைய இந்த்ரியவஶ்யதையைத் தன்னழகாலே தவிர்த்து, என்னை விஷயீகரித்த உபகாரத்தோடொவ்வாது ஸ்ரீகஜேந்த்ராழ்வானுடைய ஆபந்நிவாரணமுமென்கிறார்.

[இருந்தான் கண்டுகொண்டு] - ஊரித்ரன், யானலாஹமுண்டானால் பார்த்துக்கொண்டிருக்குமாபோலே, பார்த்தபடியே இராநின்றான். "அந்யோந்யமபி வீக்ஷந்தௌ நத்ருப்திமுபஜக்மது:" (அந்யோந்யமபி வீக்ஷந்தௌ நத்ருப்திமுபஜக்மது:) என்கிறபடியே சொல்ல எதிர்த்தலையான தம்மைக் காண்கிறிலர். [ஏனதேழைநெஞ்சாளும்] - கண்டதெல்லாவற்றிலும் சபலமாயிருக்கிற என்னெஞ்சை, அதுவே பற்றாசாக இந்த்ரியங்கள் போதியெடுக்கத்தொடங்கிற்று. ஒரு ப்ரபலனைப்பற்றாதே நடுவேநின்றவாறே பணிகொள்ளத்தொடங்கிற்று. [திருந்தாத] - ஸர்வஶக்தியான ஸர்வேஶ்வரனாலும் அநாதிகாலம் திருத்தப்போகாதபடியிறே இவற்றின் வன்மையிருப்பது. [ஓரைவரை] - இனியிப்படி ஓரைவரைத் தேடப்போகாது. இவற்றால்பட்ட நலிவின் மிகுதியாலே சொல்லுகிறார். [தேய்ந்தறமன்னி - இருந்தான்] - கண்ணுக்கிலக்கான ப்ராக்ருதவிஷயங்களில் பற்று நேராகக்ஷயிக்கும்படி, தன்வடிவழகைக் காட்டிக்கொண்டு புகுந்திருந்தான். விஷயாந்தரங்களிலும் வடிவழகிலேயிறே இவன் துவக்குண்டிருப்பது. ராஜாக்கள், ஶத்ருக்களை ஆஸநபலத்தாலே வெல்லுமாபோலே, "இருப்பாலே இந்த்ரியங்களை வெல்லவேணும்" என்று வந்து புகுந்திருந்தான். * போதரேயென்றுசொல்லிப்

இரண்டாம்பாட்டு.—இருந்தான் இதயாதி. "திருந்தாதவோரைவரை" என்றுதொடங்கி, "அருள்தானினியானறியேன்" என்னுமளவும் கடாக்ஷித்து அவதாரிகை - **என்னுடைய** *இத்யாதி.*

"கண்டுகொண்டு - இருந்தான்" என்றதுக்கு த்ருஷ்டாந்த பூர்வகமாக ஸாவம் - **ஊரித்ரான்** *இத்யாதி. "அவன்கண்டுகொண்டு - இருந்தான்" என்றதைச் சொல்லுகிறதென், தாம் பார்த்துக்கொண்டிருந்தத்தைச் சொல்லாதே? என்ன -* **அந்யோந்ய** *இத்யாதி. "தத்ஸ்தௌ தத்ர* **ஸஹாஸீநௌ ஸம்வாதேந வராநநௌ । அந்யோந்யமபி வீக்ஷந்தௌ நத்ருப்திமுபஜக்மது:" ஹரிவம்ஶம்** *(ரு-கஎ௦). "அவன்கண்டுகொண்டு - இருந்தான்" என்கையாலே - எதிர்த்தலையான தம்மைக்காண்கிறில ரென்றபடி. விவரணம் - ஒருப்ரபலனை இத்யாதி.* **நடுவேநின்றவாறேயென்றது** *- விஷயசபலனாய் நடுவே நின்றவாறேயென்றபடி. இந்த்ரியங்களைத் திருத்தப்போகாததின் உரப்பை அருளிச்செய்கிறார் - ஸர்வஶக்தி இத்யாதி. ஐந்து என்னாதே ஐவர் என்றதுக்கு ஸாவம் -* **இவற்றால்பட்ட** *இத்யாதி. தேய்ந்தற - நிஶ்ஶேஷமாம்படியாக. குணங்களிருக்க வடிவழகைக் காட்டுவானென்? என்ன -* **விஷயாந்தரங்களிலும்** *இத்யாதி. "மன்னி - இருந்தான்" என்றதுக்குஸாவம் -* **ராஜாக்கள்** *இத்யாதி. அழகாலே இந்த்ரியவஶ்யதையைப் போக்கிக்கொண்டு - புகுந்திருந்தானென்றதுக்கு ப்ரமாணம் -* **போதரே** *இத்யாதி. இங்கே போரீர் என்றுசொல்லி, ஹ்ருதயத்திலே புகுந்து தன்பக்கல் ஆதாரம் பெருகும்படி வைத்த அழகை*

புந்தியிற்புகுந்து தன்பாலாதரம்பெருகவைத்த அழகனிறே [பெருந்தாள் இத்யாதி] - பெரியதாள்களையுடைய களிற்றுக்கு அருளின ஸர்வேஶ்வரன். வடிவில் கனமும் நோவில் பாடாற்றவொண்ணுமைக்கு உடலென்கை. [பெருமான் - தான் - தரும் - அருள்தான்] - தருமருள் - தந்தவருள். "தரும்" என்கிறவிது - காலத்ரயத்திலும் சொல்லலாயிருக்கை யாலே சொல்லுகிறுர். ஆஶ்ரிதர்க்குச் செய்ததும் தமக்குச்செய்ததாகவிறே இவர்நினைத் திருப்பது. [இனியானறியேன்] - எனக்கு உதவினபின்பு, நான் அத்தை ஒன்ருக நினைத் திரேன். ஆனை நோவுபட்டது ஆயிரம்வத்ஸரம், அகப்பட்ட பொய்கை பரிச்சிந்நம், முதலையோன்று; எனக்குக் காலம் அநாதி, அகப்பட்டது ஸம்ஸாரார்ணவத்திலே, முதலை அஞ்சு: இத்தை மீட்டுக்கொண்ட மஹாகுணத்துக்கு அதொருகுணமா யற்றதோ ? ஸ்ரீ கஜேந்த்ராழ்வான்பக்கல் பண்ணின அருளையிட்டுப் புறம்புள்ளாரை வ்யாவர்த்தித்தார்; தமக்குப்பண்ணின அருளையிட்டு அதுதன்னை வ்யாவர்த்திக்கிருர். (உ)

மூன்ரும் பாட்டு.

அருள்தானினியானறியேன் அவனென்னுள்
இருள்தானற வீற்றிருந்தானிதுவல்லால்
பொருள்தானெனின் மூவுலகும்பொருளல்ல
மருள்தானீதோ ? மாயமயக்குமயக்கே.

ஆ — [அருள்தான்.] - என்னுள்ளேயிருந்தருளின இவ்வருளல்லது மற்ருேரருளை நான் ஓரருளாக மதியேன்; அவனும் என்னுள்ளேயிருந்தருளின இவ்விருப்பல்லதுமற்று லீலோபகரணமான அண்டங்களையும் திருநாட்டையும் ஒருபொருளாக மதியானென்று, இப்படி எம்பெருமானுக்குத் தம்பக்கலுள்ள அபிநிவேஶத்தைப்பேசி, தம்முடைய நிகர்ஷத்தை அநுஸந்தித்து, ஏவம்விய ஸகவதபிநிவேஶ விஷயத்வ ரூபஸம்பத்தானது எனக்கு ஸம்பவியாது; என்னுடைய ப்ரமமாதல், அவன் என்னை ப்ரமிப்பித்தாலுதலல்லது இது கூடாதென்கிருர்.

ஒ.—மூன்ரும்பாட்டில், ஸர்வேஶ்வரன் தம்பக்கல் இப்படி நிரதிஶயவ்யாமோஹத்தைப் பண்ணுகையாகிற இது கூடாதது ஒன்று; ஆகையாலே, இவ்வநுபவம் விப்ரமாதிகளிலே ஒன்ருே ? என்று ஶங்கிக்கிருர்

[அவனென்று தொடங்கி.] - ஸர்வேஶ்வரன் எனக்குண்டான அஜ்ஞாநாதிகள் எல்லாம் போம்படி என்ஹ்ருதயத்திலே வீற்றிருந்தான்; இவ்விருப்பொழிய தன்னு

யுடையவனூர் இத்யர்த்தம். திருமாலே "தூதனய்" இத்யாதி. "களிறு" என்னுதே, "பெருந்தாள்" என்று விஶேஷித்ததுக்கு ஸாவம்-வடிவில் இத்யாதி. "தரும்" என்ருல்-தந்தவென்று ஸாதார்த்த வாசகமாமோவென்ன - தருமென்கிற இத்யாதி. கொடுத்தவென்னுதே, "தரும்" என்பானென்? என்ன - ஆஶ்ரிதர்க்கு இத்யாதி. அருள்தான் - அருள்தன்னையென்றபடி. "இனி" என்றதுக்கு ஸாவம் - எனக்குஉதவின இத்யாதி. எனக்கு உதவினவென்றது - இந்த்ரியவஶ்யதையைப் போக்கினத்தை. நினையாமைக்கு வாசியேதென்ன - ஆனை இத்யாதி. 'எனதேழை' என்று தொடங்கி, தேய்ந்தமன்னி - கண்டுகொண்டு - இருந்தான்: இனியான் - பொருந்தாட்களிற்றுக்கு அருள் செய்தபெருமான் - தான் - தரும் - அருள்தான் - அறியேன்' இத்யந்வயம். (உ)

டைய ஸர்வைஶ்வர்யமும் ஒருபுருஷார்த்தமாக நினைத்திருக்குமோ என்றுபார்த்தால் அதுவும் அவனுக்கு ஒரு சரக்கல்ல. [யருளென்று தொடங்கி] - என்னுடைய ப்ரமமோ? ஆஶ்சர்யமான ப்ரமஸாதநங்களாலே ப்ரமிப்பித்தானோ?

ப.—அநந்தரம், என்னுடைய அவித்யாதிரூபமான இருள்போம்படி என்னெஞ்சிலே புகுந்திருந்தான்; இது அவனுக்கு அதிசயித புருஷார்த்தமாய் இராநின்றது; இத்தை இப்போது உபகாரமென்று நினைத்திருக்கிறிலேன்; இது ப்ரமமோ? மாமாயயோ? என்கிறார்.

அவன்-என்பக்கலிலே அத்யந்தாபிநிவிஷ்டனானவன், என்னுள் - என்னெஞ்சுக்குள்ளான, இருள்தான் - (அஜ்ஞாநாதி) தமஸ்ஸெல்லாம், அற - போம்படி, வீற்று - பெரிய மேன்மையோடே, இருந்தான்; இருந்தான், (அவனுக்கு), இது - இவ்விருப்பு, அல்லால் - ஒழிய, பொருள்தான் - வேறு புருஷார்த்தம், எனில் - உண்டோவென்னில், மூவுலகும் - த்ரிவித சேதநாசேதநஸமஷ்டியும், பொருளல்ல - ஒருபொருளாயிருக்கிறதில்லை; (இது அஸம்பாவிதமாகையாலே), இனி - இனி, (இத்தை), அருள்தான்-ஓர்உபகாரமாக, யான் - , அறியேன் - நினைத்திருக்கிறிலேன்: ஈதுதான் - இதுதான், மருளோ - என்ன ப்ரமமோ, (அவன்தான்), மாயம் - ஆஶ்சர்யமான, மயக்கு - ப்ராமகசேஷ்டிதங்களாலே, மயக்கே - ப்ரமிப்பிக்கிறபடியோ.

இ.—மூன்றாம்பாட்டில், ஸர்வேஶ்வரன் தன் பக்கல் இப்படி வ்யாமோஹம் பண்ணுகை கூடாததொன்றாகையாலே, இவ்வநுபவம் ப்ரமாதிகளிலே பிறந்ததோ என்று ஶங்கிக்கிறார்.

[அருள்தானினியானறியேன்]- என்னுடைய இந்த்ரியவஶ்யதையைத்தவிர்த்த இது தன்னையும் இப்போது நான் ஒன்றாக நினைத்திருக்கிறிலேன்: எத்தைப் பற்றி? என்னில்,—அவன் என்னுடைய ஹ்ருதயத்திலே அஜ்ஞாநாதிகள் எல்லாம் போம்படி தன் குறைவு தீர்ந்தானாய் அத்தாலே வந்த வேறுபாடு தோற்ற இருந்தான். [இதுவல்லால் பொருள்தானெனில் மூவுலகும் பொருளல்ல] - "நாட்டார் ஐஶ்வர்யங்களில் தலையாக நினைத்திருப்பது - த்ரைலோக்ய ஐஶ்வர்யத்தை ஆயிற்று: இவன் என்ஹ்ருதயத்திலே புகுந்தபின்பு, அத்தையும் ஒருபொருளாக நினைத்திலேன்" என்று ஆளவந்தார் நிர்வாஹமாகத் திருமாலையாண்டான் பணிக்கும். "என்ஹ்ருதயத்திலே வீற்றிருந்த விதொழிய வீற்றிருந்தேழுலகும் தனிக்கோல் செல்ல இருக்கிற ஐஶ்வர்யத்தையும் ஒரு புருஷார்த்தமாக நினைத்திருக்குமோ? என்று பார்த்தால் அதுவும் அவனுக்கு ஒருசரக்கல்ல" என்று எம்பெருமானார் நிர்வாஹம்; இதுவே ப்ரகரணத்துக்குச் சேருவது. [மருள்தானீதோ] - ஸர்வேஶ்வரன் ஒரு ஸம்ஸாரியைப்பெற்று ஹ்ருஷ்டனானான் என்கிற இது கூடுவதொன்றன்று. நான் ப்ரமித்தேனோ? [மாயமயக்கு மயக்கே] - தன் ஆஶ்சர்யமான ப்ரமஸாதநங்களாலே ப்ரமிப்பித்தானோ? அநாதிகாலம் ப்ரக்ருதியைக்காட்டி அறிவுகெடுத்தான்; இப்போது தன் வ்யாமோஹத்தைக் காட்டி அறிவு கெடாநின்றான்.

ஈடு.—மூன்றாம்பாட்டு. அவாப்த ஸமஸ்த காமனான ஸர்வேஶ்வரன், தன் பக்கல் இப்படி வ்யாமோஹம் பண்ணுகை கூடாததொன்று என்று ஶங்கித்து, இவ்வநுபவம் ப்ரமாதிகளிலே பிறந்ததோவென்கிறார்.

மூன்றாம் பாட்டு.—அருள்தான் இத்யாதி. "மருள்தானீதோ" என்றத்தைக் கடாக்ஷ. அவதாரிகை - அவாப்த இத்யாதி.

[அருள்தானினியானறியேன்] - என்னுடைய இந்த்ரியவஶ்யதையைத் தவிர்த்த இதுதன்னையும் இப்போது ஒன்றாக நினைத்திரேன். எத்தைப்பற்ற? என்னில்,— [அவன் இத்யாதி]-அவன், என்னுடைய ஹ்ருதயத்தில் அஜ்ஞாநாந்தகாரமெல்லாம் போம்படி பெறுப்பேறுபெற்றானாய், அவ்வேறுபாடுதோற்ற இராநின்றான்; இனி எனக்கு வேறொன்று தோற்றுமோ? [இதுவல்லால் இத்யாதி] - இதுக்குத் திருமாலையாண்டான் பணிக்கும்படி - "நாட்டார், ஐஶ்வர்யங்களில் தலையாகச் சொல்லுவது - த்ரைலோக்யைஶ்வர்யத்தையிறே; அதுவும் எனக்கு ஒரு சரக்கல்லவென்கிறார்" என்று. எம்பெருமானார் அருளிச்செய்யும்படி - "என்னுடைய ஹ்ருதயத்திலே புகுந்து எழுந்தருளியிருக்கிற இருப்பொழிய, * வீற்றிருந்தேழுலகுந்தனிக்கோல்செல்ல இருக்குமிருப்பையும் தனக்கு ஐஶ்வர்யமாக நினைத்திருக்குமோவென்றுபார்த்தால், அதுவும் ஒரு சரக்காக நினைத்திருக்கிறிலன்" என்று; இதுவே ப்ரகரணத்துக்குச் சேருவது. [மருள்தானீதோ] - ஒருஸம்ஸாரி சேதநனைப்பெற்று ஸர்வேஶ்வரன் இப்படி இருந்தானென்னுமது கூடவேதோன்றன்று; இது என்னறிவுகேட்டாலே சொல்லுகிறேனோ? [மாயமயக்குமயக்கே] - அன்றிக்கே, அவன் தன்னுடைய ஆஶ்சர்யமான ப்ரமஸாதநங்களையிட்டு ப்ரமிப்பித்தானோ? நெடுநாள் ப்ரக்ருதியையிட்டு அறிவுகெடுத்தான், இப்போது தன் வ்யாமோஹத்தாலே என்னை ப்ரமிப்பித்தான். (௩)

நான்காம் பாட்டு.

மாயமயக்குமயக்கான் என்னைவஞ்சித்து
ஆயனமரர்க்கரியேறு எனதம்மான்
தூயசுடர்ச்சோதித் தனதென்னுள்வைத்தான்
தேசந்திகழும் தன்திருவருள்செய்தே.

வேறொன்றுதோற்றுமோ என்றது - இந்த்ரியவஶ்யதையைப் போக்கினதுவும் ஓரதிசயமாய்த் தோற்றுமோ என்றபடி. "இதுவல்லால் - மூவுலகும் - பொருள்தானெனில் - பொருளல்ல" என்று அந்வயம். இன்னார்க்குப்பொருளல்ல என்னாமையாலே நிர்வாஹத்வயம் - இதுக்கு இத்யாதி. "இதுவல்லால் - * மாயக்கூத்தனில் விடாய்தீரக் கலந்த இவனை அநுபவித்திருக்குமதொழிய, மூவுலகும் பொருள்தானெனில் - த்ரைலோக்யைஶ்வர்யமும் ஐஶ்வர்யமோவென்று பார்த்தால், பொருளல்ல - அது எனக்கு ஓரைஶ்வர்யமாய்த் தோற்றாது" என்று ஆளவந்தார் நிர்வாஹத்துக்கு ஸப்தார்த்தம். என்னுடைய ஹ்ருதயத்திலே இருக்குமதொழிய, ஸர்வலோகேஶ்வரனாயிருக்கையும் ஐஶ்வர்யமோவென்று பார்த்தால், அது அவனுக்கு ஐஶ்வர்யமல்ல" என்று எம்பெருமானார் நிர்வாஹத்துக்கு ஸப்தார்த்தம். இன்னார்க்குப்பொருளல்ல என்னாமையாலே - எனக்குப் பொருளல்ல: ஈஶ்வரனுக்குப்பொருளல்லவென்றபடி. ஈஶ்வரவ்யாமோஹகயநப்ரகரணமாகையாலே சேருமென்றபடி. "ஈது - மருள்தான் - ஓ - " இதுஎன்னுடைய ப்ராந்தியோவென்று ஸப்தார்த்தம். ப்ராந்தியாவானென்? யதார்த்தமாக வொண்ணாதோ? என்ன - ஒரு ஸம்ஸாரி இத்யாதி. "மாய மயக்கு"-ஆஶ்சர்யமான ப்ரமஸாதநம். அவன் எப்போதும் ப்ரமிப்பிக்குமோ?என்ன,— நெடுநாள் இத்யாதி. அகனென்னுள் இருள்தானறவீற்றிருந்தான்: இனி - அருள்தான் - யானறியேன்; இதுவல்லால் - மூவுலகும் - பொருள்தானெனில் - பொருளல்ல; ஈது மருள்தான் - ஓ - மாயமயக்கு மயக்கே இத்யந்வயம். (௩)

ஆ —(மாயமயக்கு.)-நிரவதிக வாத்ஸல்ய ஸௌசீல்யத்தையுடையனுயிருந் தவனே, என்னுடைய நிகர்ஷத்தைப்பார்த்து, என்திறத்துப் பொய்செய்தருளான்; ஆதலால், ஹேயப்ரத்யநீகமானவன் திருவடிவை என்னுள்ளே ஸர்வலோகமும் அறியும் படி மெய்யே வைத்தருளினுனென்கிறார்.

ஒ.—நாலாம்பாட்டில், அபர்வருமமரர்களுக்கும் முகக்கொள்ள வொண்ணுத படியையுடையனுயிருந்துவைத்து, ஆடனுய் என்னையடிமைகொண்ட பரமப்ராப்தன், என்னைவஞ்சித்து ப்ரமிப்பியான்; என்னுள்ளே கலந்தருளினுன் என்கிற இதில் ஒரு ஸம்ஶயமில்லை என்கிறார். என்பக்கலிலே நிர்ஹேதுகக்ருபையைப்பண்ணி ஹேயப்ரத்ய நீகமாய் விலக்ஷணதேஜோரூபமான திருவடிகளை என்னுள்ளே வைத்தருளினுன்.

ப.—அநந்தரம், விலக்ஷண தேஜோரூபமான விக்ரஹத்தை எனக்குள்ளே வைத்தான்; ஆதலால், என்னை ப்ரமிப்பியானென்கிறார்.

ஆயன் - அறிவில்லாத இடையர்க்கு ஸஜாதீயனுய்க்கொண்டு ஸுலபனுய், அம ரர்க்கு - (அறிவுடைய) ஸூரிகளுக்கு, அரியேறு - அபரிச்சேத்யமான மேன்மையை யுடையனுய், எனதம்மான் - (இந்த பரத்வஸௌலப்யங்களை எனக்கு ப்ரகாஶிப்பித்த) என் ஸ்வாமியானவன், தேசந்திகழும் - தேசப்ரஸித்தமாம்படியான, தன் - தன், திரு - அஸாதாரணமான, அருள் - க்ருபையை, செய்து - நிர்ஹேதுகமாகப்பண்ணி, தனது - தனக்கு அஸாதாரணமாய், தூய - நிர்மலமாய், சுடர் - அத்யுஜ்ஜ்வலமாய், சோதி - தேஜோமயமான திவ்யவிக்ரஹத்தை, என் - என்னுடைய, உள் - நெஞ்சுக்குள்ளே, வைத்தான் - (ப்ரதிஷ்டிதமாம்படி) வைத்தான்; (ஆதலால்), என்னை - (தன்னை யொழிய அறியாத) என்னை, வஞ்சித்து — (அநாஶ்ரிதரைச் செய்யுமாபோலே) வஞ் சித்து, மாயமயக்கு - தன்னுடைய ஆஶ்சர்ய ப்ரமஸாதநங்களாலே, மயக்கான் - ப்ர மிப்பியான்.

இ.—நாலாம்பாட்டில், க்ருஷ்ணனுய் அவதரித்து என்னை அடிமைகொண்ட பரமாப்தனுனவன் என்னை ப்ரமிப்பித்தானுகக்கூடாது; என்னுள்ளே கலந்தருளினுன் என்கிறவிதில் ஒருஸம்ஶயமில்லை என்கிறார்.

[என்னைவஞ்சித்து - மாயமயக்குமயக்கான்]-அநாஶ்ரிதரான து்ர்யோதநாதி களைக்குறித்து, "ஆயுதமெடேன்" என்று ஆயுதமெடுத்தும், பகலை இரவாக்கியும் வஞ்சித்தான் இத்தனையொழிய, பாண்டவர்கள் விஷயத்திலே யத்தைச் செய்தானே? ஆகையால், தனக்கேஶேஷமான என்னை, ஆஶ்சர்யமான ப்ரமஸாதநங்களாலே ப்ரமிப் பியான். ஹேதுவென் என்னில்? [ஆயனமரர்க்கரியேறெனதம்மான்] - நித்யஸூரி களுக்கும் முகக்கொள்ள வொண்ணுதபடியையுடையனுய் வைத்து, க்ருஷ்ணனுய் வந் தவதரித்து, எனக்கு முறையை அறிவித்த பரமாப்தன் - என்னைவஞ்சித்து - மாய மயக்குமயக்கான். முறையை உணர்த்தின வழியென் என்ன? [தேசந்திகழும் தன் திருவருள்செய்து - தூயசுடர்ச்சோதித்தனதென்னுள் வைத்தான்] - லோகமெல்லாம் அறியும்படி என்பக்கலிலே நிர்ஹேதுக க்ருபையைப்பண்ணி. [தன்திருவருள்] - புறம்பொருவர்க்கின்றிக்கே தனக்கே அஸாதாரணமானவருள். ஹேயப்ரத்யநீகமாய், விலக்ஷணதேஜோரூபமாய், தனக்கு அஸாதாரணமான வடிவை என்னுள்ளத்தே வைத் தான். தான் அநந்யஸாத்யன் என்னும்படியைக்கொண்டு என்னுள்ளே தன்னை ப்ரகா சிப்பித்தான். "தமெஸ்ஷ்வஷக்ஷூ விவூணுமெதிதநம் ஹாம்."

ஈடு.—நாலாம்பாட்டு. அவன் என்னை ப்ரமிப்பித்தானல்லன்; என்னுள்ளே கலந்தருளினனே; இதில் ஒருஸம்ஶயமில்லை யென்கிறார்.

[என்னைவஞ்சித்து மாயமயக்கு மயக்கான்] - அநாஶ்ரிதரான து-ர்யோத நாதிகளைக் குறித்து "ஆயுதமெடேன்" என்று ஆயுதமெடுத்தும், பகலை இரவாக்கியும் வஞ்சித்தானித்தனை யல்லது, பாண்டவர்கள்விஷயத்தில் அத்தைச் செய்தானோ? ஆகையால், தனக்கே பரமான என்னை வஞ்சித்து, ஆஶ்சர்யமான ப்ரமஸாதநங்களாலே ப்ரமிப்பியான். ஹேதுவேன்னேன்ன - [ஆயனமரர்க்கரியேறு எனதம்மான்] - நித்யஸூரிகளுக்கும் அவ்வருகான ஏற்றத்தையுடையனாய்வைத்து, க்ருஷ்ணனாய் வந்து அவதரித்து, என்னுடைய ஶேஷத்வத்தை நிர்வஹித்த பரமாப்தன் , என்னைவஞ்சித்து - மாயமயக்குமயக்கான்: ஆனால், இப்பேறு வந்தபடிதானேன்னேன்ன - [தேசந்திகழும் தன்திருவருள்செய்து - தூயசுடர்ச்சோதித் தனதேன்னுள் வைத்தான்] - லோகமேல்லாம் அறியும்படி என்பக்கலிலே நிர்ஹேதுக க்ருபையைப்பண்ணி. [தன்திருவருள்] - புறம்போருவர்க்கின்றிக்கே தனக்கே அஸாதாரணமான அருள். ஹேயப்ரத்யநீகமாய், விலக்ஷண தேஜோரூபமாய், ஶுத்தஸத்த்வமயமாய், தனக்கே அஸாதாரணமான வடிவை என்னுள்ளேவைத்தான். தான் அநந்யஸாத்யனேன்னும்படியைக் கொண்டு என்னுள்ளே ப்ரகாஶிப்பித்தான்; "तस्यैष आत्मा विवृणुते तनूं स्वाम्" (தஸ்யைஷ ஆத்மா விவ்ருணுதே தநூம்ஸ்வாம்) என்கிறபடியே. (௪)

ஐந்தாம் பாட்டு.

திகழுந்தன்றிருவருள்செய்து உலகத்தார்
புகழும்புகழ் தானதுகாட்டித்தந்துஎன்னுள்
திகழும்மணிக்குன்றமோன்றே ஒத்துநின்றான்
புகழும்புகழ் மற்றேனக்குமோர்போருளே.

ஆ.—[திகழும்.] - லோகமெல்லாம் அறியும்படி என்னுள்ளே யிருந்தருளின அத்தனையேயோ? இப்புகழையே லோகமெல்லாம் புகழும்படியாகவு மிருந்தருளினான். இருந்தருளுகிறான்; தன்னுடைய உத்கர்ஷத்தையும் என்னுடைய நிகர்ஷத்தையும் பார்த்து, "நான் அத்தைவிட்டகலுகிறேன்" என்னும் பயத்தாலே, நான் தன்னை

நாலாம்பாட்டு.—மாயம் இத்யாதி. "மாயமயக்குமயக்கான் - தனதேன்னுள்வைத்தான்" என்றத்தைக் கடாக்ஷித்து அவதாரிகை - அவன்என்னை இத்யாதி.

"என்னைவஞ்சித்து - மாயமயக்குமயக்கான்" என்கிறது என்ன உரப்புக்கொண்டு என்ன: அவனுடைய ஆஶ்ரிதபாரதந்த்ர்யத்தை அநுஸந்தித் தென்கிறார் - அநாஶ்ரிதரான இத்யாதி. விலக்ஷணதேஜோரூபதைக்கு ஹேது - ஶுத்தஸத்த்வமயத்வம். திகழுகை - ப்ரகாசமாய், அறியும்படியென்றபடி. ஈஶ்வரன் வைக்கவேணுமோவென்ன - தான் அநந்ய இத்யாதி. "அநந்யஸாத்யன்" என்னுமதுக்கு ப்ரமாணம் - तस्यैष இத்யாதி. அமரர்க்கரியேறு - ஆயன் - எனதம்மான் - தேசந்திகழும்திருவருள்செய்து - தூயசுடர்ச்சோதித் தனதேன்னுள்வைத்தான்; ஆகையால், என்னைவஞ்சித்து - மாயமயக்கு மயக்கான் இத்யந்வயஃ. (௪)

விடமாட்டாதபடியாகத் தன்னழகைக்காட்டி என்னை வசீகரித்துக் கொண்டருளின புகழல்லது மற்று அவனுடையபுகழை ஒருபுகழாக மதியேனென்கிறார்.

ஒ.—அஞ்சாம்பாட்டில், "ஒருவர் பெறும்பேறே" என்று என்னை எல்லாரும் கொண்டாடும்படி வந்து என்னுள்ளே நின்றருளினான்; இத்தால்வந்த புகழை அல்லது இவனுடைய மற்றுள்ள புகழை ஒருபுகழாகமதியேன் என்கிறார்.

[உலகத்தார் புகழும் புகழ் தானது காட்டித்தந்து] - என்னுடைய பேற்றை லோகமெல்லாம் ஸ்தோத்ரம் பண்ணும்படி. [என்னுள்ளென்று தொடங்கி] - விளங்காநின்றது ஒரு நீலமலைபோலே என்னுள்ளே நின்றான். மணிக்குன்றமென்று - தம்முடைய ஹ்ருதயத்திலே யிருக்கிற எம்பெருமான் இங்கு நின்று போராமையும், இத்தாலே பூர்ணனைகயும், தேஜஸ்வியாகையும் தொடக்கமானவற்றைச் சொல்லுகிறது.

ப.—அநந்தரம், என்னெஞ்சுக்குள்ளே அசலப்ரதிஷ்டிதனாய்க்கொண்டு நின்றான். இதுவொழிய வேறொன்றை அவனுக்குப் புகழாக நினைத்திருக்கிறிலேனென்கிறார்.

திகழும் - (நிர்தோஷதுகமாயும் நிரவதிகமாயு மிருக்கையாலே இரண்டுதலைக்கும்) ஔஜ்ஜ்வல்யாவஹமான, தன்—, திருவருள் - திருவருளை, செய்து - பண்ணி, உலகத்தார் - லோகத்தார், புகழும் - (இதுகண்டு) புகழுகிற, அது - அந்த, புகழ் - (ப்ரஸித்தமான) புகழையும், தான் - தான், காட்டித்தந்து - எனக்கு ப்ரகாசிப்பித்து, என்னுள் - எனக்குள்ளே, திகழும் - விளங்காநிற்கிறது, ஒன்று - ஒரு, மணிக்குன்றம் ஒத்து - மாணிக்கமலைபோலே, நின்றான் - நின்றான்; எனக்கு - எனக்கு, (இந்நிலை யொழிய), மற்று - மற்று, புகழும் - (அவனைப்) புகழுகிற, புகழும் - புகழானதுவும், ஓர் - ஒரு, பொருளே - பொருளாயிருக்கிறதோ?

இ.—அஞ்சாம்பாட்டில், "ஒருவர்பெறும்பேறே!" என்று லோகமாகக் கொண்டாடும்படி வந்து என்னுள்ளே நின்றருளினான். இத்தால் வந்த புகழை யல்லது இவனுடைய மற்றுள்ள புகழை ஒன்றாக மதியேன் என்கிறார்.

[திகழும் தன் திருவருள் செய்து] - பிறருடைய பரிச்சிந்நமான அருள்போலன்றிக்கே, இரண்டு தலைக்கும் நிறமாம்படியான தன் க்ருபையை என்பக்கலிலேபண்ணி. [உலகத்தார் இத்யாதி] - என்னுடைய பேற்றைக் குறித்து லோகத்தார் பண்ணும் ஸ்தோத்ரத்தைத் தான் காட்டித்தந்தான். பாலேய் தமிழரிசைகாரர் பத்தர் பரவுமாயிரம்" என்று லோகமாகக் கொண்டாடும்படி பண்ணுகை; "ஐஶ்வர்யாணி தநாநி நிவஹதஸ்ஸந்த்யஸ்ய கோ விஸ்மய: | சோர்யம் ததேதம் கவீஶ்வர ஸுமநஸாம் க்லாகோ நஸ்தத்யம்புலத" என்று ஸர்வர்க்கும் ஸம்ருத்தியை விளக்கக்கடவ இத்தை எல்லாரும் செவிதாழ்த்துக் கேளுங்கோள் என்றாற்போலே. [என்னுள் திகழும் மணிக்குன்றமொன்றே யொத்துநின்றான்] - விளங்காநின்றதொரு நீலமலைபோலே, என்னுள்ளே நின்ற இம்மஹாகுணத்தையல்லது மற்றுள்ள புகழை ஒரு புகழாக மதியேன். என்னுடைய இந்த்ரிய வஶ்யதையைத் தவிர்த்த குணத்தையும் இனி நான் ஒரு சரக்காக நினைத்திரேன்.

ஈடு.—அஞ்சாம்பாட்டு. "ஒருவர்பெறும்பேறே!" என்று லோகமடையக் கோண்டாடும்படி என்னுள்ளே வந்து நின்றருளினான்: அத்தால்வந்த புகழையல்லது இவனுடைய மற்றுள்ள புகழையும் ஒன்றாக மதியேனென்கிறார்.

[திகழுந்தன்திருவருள்செய்து] - பிறருடைய பரிச்சிந்நமான அருள்போலன்றிக்கே, இரண்டுதலைக்கும் நிறமாம்படியான தன்க்ருபையை என்பக்கலிலே பண்ணி. [உலகத்தார் இத்யாதி] - என்னுடையபேற்றைக் குறித்து லோகத்தார்பண்ணும் ஸ்தோத்ரத்தைத் தான் காட்டித்தந்தான். "பாலேய்தமிழரிசைகாரர்பத்தர் பரவுமாயிரம்" என்று லோகமாகக்கோண்டாடும்படி பண்ணுகை. "இமௌ முநீ பார்த்திவலக்ஷணாந்விதௌ குஶீலவௌ சாபி மஹாதபஸ்விநௌ" (இமௌமுநீபார்த்திவலக்ஷுணாந்விதௌகுஶீலவௌ சாபி மஹாதபஸ்விநௌ) என்றாற்போலே நாடாகப் புகழாநின்றது. [என்னுள் இத்யாதி] - என்னுள்ளே வந்து புகுந்து, பெறுப்பேறுபெற்றானாய், நிலைபேற்றுப் புகருடையனாய்க் கால்வாங்கிப்போகமாட்டாதே, விளங்காநின்ற ஒரு ரத்நபர்வதம் போலே நின்றான். [புகழும்புகழ்] - என்னுள்ளேநின்ற இம்மஹாகுணத்தை யல்லது, மற்றுள்ள புகழை ஒருபுகழாக மதியேன். என்னுடைய இந்த்ரியவஶ்யதையைப் போக்கினானென்று நான்சொன்ன இது ஒருசரக்காகநினைத்திரேன். (ரு)

அஞ்சாம்பாட்டு.—திகழும் இத்யாதி. "உலகத்தார்புகழும்புகழ்தானது காட்டித்தந்து என்னுள் - நின்றான்; புகழும்புகழ் மற்றெனக்குமோர்பொருள்" என்கிற பதங்களைக் கடாக்ஷித்து அவதாரிகை - ஒருவர் இத்யாதி.

"தன்திருவருள்" என்றதுக்கு ஹாவம் - பிறருடைய இத்யாதி. "திகழும்" என்றத்தைப் பற்ற - இரண்டுதலைக்கும் இத்யாதி. இரண்டுதலைக்கும் நிறமாம்படியென்றது - நிர்ஹேதுகமாகையாலே, அவன் நைரபேக்ஷ்யத்துக்கும் இவன் பாரதந்த்ர்யத்துக்கும் நிறமாம்படியென்றபடி. "புகழும்புகழ்"- கொண்டாடும் கொண்டாட்டம். என்னுடைய பேற்றைக் குறித்து-என்னைக்கொண்டு திருவாய்மொழி பாடுகையாகிற பேற்றைக்குறித்தென்றபடி. காட்டித்தருகையாவதென்? என்ன- பாலேய்தமிழர் இத்யாதி. ப்ரபந்தத்தை ஶ்லாகித்தபேருண்டோவென்ன - இமௌ முநீ இத்யாதி.

இமௌ முநீ பார்த்திவலக்ஷணாந்விதௌ குஶீலவௌ சைவ மஹாதபஸ்விநௌ । மமாபி தத்பூதிகரம் ப்ரவக்ஷ்யதே மஹாநுபாவம் சரிதம் நிபோதத" இதி வால்மீகே (4-32). *ப்ரபந்தத்தைக் கொண்டாடின இது பாடினபேரை ஶ்லாகித்ததுக்கும் உபலக்ஷணம்; ஸ்ரீ ராமாயணத்தையும், அத்தைப்பாடின குசலவர்களையும் கொண்டாடினாற்போலேயென்று இவ்வாக்யத்துக்குக் கருத்து. "திகழும்" என்றத்தைப்பற்ற - பெறுப்பேறுபெற்றானாய் என்றது. நிலைபெற்றுக் கால்வாங்கிப் போகமாட்டாதேயென்றது - "குன்றம்" என்றத்தைப்பற்ற. "மணி" என்றத்தைப் பற்ற - புகருடையனாய் என்றது. மற்றுமுள்ள புகழாவதேதென்ன - என்னுடைய இத்யாதி. மற்று புகழும்புகழ் - எனக்குமோர்பொருளே என்று அந்வயம். ஓர்பொருளே - ஒருபொருளாயிருக்[illegible]ரோ? உலகத்தார் புகழும்புகழைத் தான்காட்டித்தந்து என்று அந்வயிப்பது.* (ரு)

ஆறாம் பாட்டு.

பொருள்மற்றெனக்குமோர்பொருள்தன்னில் சீர்க்கத்
தருமேல் பின்னையார்க்கு அவன்தன்னைக்கொடுக்கும்?
கருமாணிக்கக்குன்றத்துத் தாமரைபோல்
திருமார்புகால்கண்கை செவ்வாயுந்தியானே.

ஆ.—(பொருள்மற்றெனக்கும்.) - தானுகிற ஸம்பத்தையொழிய வேறே சீரியதொருஸம்பத்தை எனக்குத்தந்தால், நிரவதிக ஸௌந்தர்யஸம்பத்தையுடையனான தன்னை வேறுகொள்வாரில்லையென்று, இப்படி தன்னை எனக்கு போக்யமாகத் தந்தருளினானல்லனிறே; என்பக்கலுள்ள அபிநிவேசமிறே யென்கிறார்.

ஒ.—ஆறும்பாட்டில், வேறு ஒரு புருஷார்த்தத்தை எனக்குத் தந்தால், அத்யந்த விலக்ஷணமான திருவழகையுடைய தன்னைக் கொள்ளுவாரில்லாமையன்றிறே, என்பக்கலுண்டான அபிநிவேசத்தாலே தன்னை எனக்குத் தந்தருளினான் என்கிறார்

[பொருளென்று தொடங்கி.] - லோகத்தில் புருஷார்த்தவர்க்கத்தில் மற்றொரு புருஷார்த்தத்தை எனக்கு சீர்க்கத்தந்தால். [ஆர்க்கு அவன்தன்னைக் கொடுக்கும்] - தன்னைக் கொள்ளுவாரில்லை என்று க்ஷேபம்.

ப.—அநந்தரம், என்னளவாயிலேநின்ற உபகாரத்தாலே, நிரதிசயஸௌந்தர்ய விசிஷ்டனானவன் தன்னை ஒருவர்க்குக்கொடுக்கவொண்ணாமல் எனக்குத்தந்தானோ? என்கிறார்.

(எனக்குத்தன்னைத்தந்த இத்தாலே), கருமாணிக்கக்குன்றத்து-கருமாணிக்க மலையின்மேலே, தாமரைபோல் - தாமரைக்காடு அலர்ந்தாற்போலே செவ்விபெற்ற, திருமார்வு - திருமார்பு, கால் - திருவடிகள், கண் - திருக்கண்கள், கை - திருக்கைகள், செம்- சிவந்த, வாய் - திருவதரம், உந்தியான் - திருவுந்திகளையுடையனானவன், மற்று - மற்றுமுள்ள, பொருள்தன்னில் - புருஷார்த்தங்கள்தன்னிலே, எனக்கும் - எனக்கும், ஓர் - ஒரு, பொருள் - புருஷார்த்தத்தை, சீர்க்க - சீர்க்க, தருமேல் - தந்துவிட்டானாகில், பின்னை - பின்னை, அவன் - அவன், தன்னை - (நிரதிசயபுருஷார்த்தமான தன்னை) தன்னை, ஆர்க்கு - ஆருக்கு, கொடுக்கும் - கொடுப்பான்? புறம்புகொள்வாரில்லாமல் மறந்தானல்லனே; க்ருபாகார்யமென்றுகருத்து.

இ.—ஆறும்பாட்டில், விலக்ஷண புருஷார்த்தங்களில், இது ஒழிய எனக்கு வேறொன்றைத் தந்துவிட்டால், புறம்பு தன்னை வேறொருவர் கொள்வாரில்லாமல் தன்னை எனக்குத் தந்தானோ? என்பக்கல் அபிநிவேசத்தாலே தந்தருளினானத்தனையன்றோ? என்கிறார்.

[பொருளித்யாதி] - [பொருள்தன்னில் - மற்றெனக்கும் ஓர் பொருள் - சீர்க்கத்தருமேல்] - புருஷார்த்தவர்க்கத்திலே வேறே கனத்ததொரு புருஷார்த்தத்தை. [தருமேல்] - தந்துவிட்டால். [அவன் - பின்னையார்க்கு - தன்னைக் கொடுக்கும்] - இப்பொகடுசரக்கைக் கொள்வாரில்லையிறே என்று க்ஷேபம். [கருமாணிக்கமித்யாதி] - கொள்வாரில்லாதவஸ்தை இருக்கிறபடி. [கருமாணிக்கக்குன்றது]- ஆஸ்ரயத்துக்கு த்ருஷ்

டாந்தம். [தாமரைபோல்] - அவயவஶோபைக்கு த்ருஷ்டாந்தம். [திருமார்வு] - புருஷகாரமான பிராட்டியிருக்கிற திருமார்வு. [கால்] - அச்சேர்த்திக்குத் தோற்றுவிழும் திருவடிகள். [கண்] - திருவடிகளிலே விழுந்தாரைக் குளிரநோக்கும் கண். [கை] - அவர்களை எடுத்தணைக்கும் கை. [செவ்வாய்] - இன்சொல்லுச் சொல்லும் திருவதரம். [உந்தி] - அவர்களுக்கு அநுபாவ்யமான திருவுந்தி. "உந்திமேலதன்றோ?" என்னக்கடவதிறே.

ஈடு.—ஆறும்பாட்டு. எனக்குத் தன்னையொழிய வேறொன்றைத் தந்துவிட்டால், புறம்புதன்னை வேறொருவர்கோள்வாரில்லாமை எனக்குத்தந்தானே? என்பக்கல் அபிநிவேஶத்தாலே தந்தருளினானென்கிறார்.

[பொருள் இத்யாதி.] - † (பொருள்தன்னில் - மற்றெனக்குமோர் - பொருள் - சீர்க்கத்தருமேல்)-புருஷார்த்தவர்க்கத்திலே வேறே கனத்ததொரு புருஷார்த்தத்தை, தருமேல் - தந்துவிட்டால். [பின்னையார்க்கு அவன் தன்னைக் கொடுக்கும்] - பின்னை இப்பொருள் கடிதாகக் கைக்கோள்வாருண்டோ? என்! கைக்கோள்வாரில்லையோ? என்னில், - [கருமாணிக்கம் இத்யாதி]-இவ்வேப்பங்குடிநீரைப் புறம்பு ஸ்வீகரிப்பாருண்டோ? [கருமாணிக்கக்குன்றத்து] - ஆஶ்ரயத்துக்கு த்ருஷ்டாந்தம். [தாமரைபோல்] - அவயவ ஶோபைக்கு த்ருஷ்டாந்தம். [திருமார்வு] - புருஷகாரமான பிராட்டியெழுந்தருளியிருக்கிற மார்வு. [கால்]-அச்சேர்த்திக்குத்தோற்றுவிழும்திருவடிகள். [கண் இத்யாதி]-திருவடிகளிலே விழுந்தாரைக் குளிரநோக்கும் கண், அவர்களை எடுத்தணைக்கும் கை, இன்சோல்லுச் சோல்லும் திருவதரம், அவர்களுக்கு அநுபாவ்யமான திருவுந்தி. * "உந்திமேலதன்றோ" என்னக்கடவதிறே. (சு)

ஏழாம் பாட்டு.

சேவ்வாயுந்தி வெண்பல்சுடர்க்குழைதம்மோடு
எவ்வாய்ச்சுடரும் தம்மில்முன்வளாய்க்கோள்ளச்
சேவ்வாய்முறுவலோடு எனதுள்ளத்திருந்த
அவ்வாயன்றி யானறியேன்மற்றருளே.

ஆறும்பாட்டு.—பொருள் இத்யாதி. "பின்னையார்க்கு அவன் தன்னைக்கொடுக்கும்" என்றத்தைக்கடாக்ஷித்து அவதாரிகை - எனக்கு இத்யாதி. இப்பாட்டு ப்ரீதியதிஶயத்தாலே க்ஷேபோக்தியேயாகிலும், ஸ்வபாவார்த்தத்திலே அவதாரிகையென்று கண்டுகொள்வது.

அர்த்தாநுகுணமாக அந்வயம் - பொருள்தன்னில் இத்யாதி. மற்று - வேறென்றபடி. புருஷார்த்தவர்க்கத்தில் வைத்துக்கொண்டு, வேறு எனக்குக் கனத்தபுருஷார்த்தத்தைத் தந்துவிட்டாலென்று ஶப்தார்த்தம். கடிதாக-சீக்ரமாக. வேப்பங்குடிநீரென்று-வ்யதிரேகலக்ஷணயா, ஸௌக்யதையைக் காட்டுகிறது. வேப்பங்குடிநீர் - வேப்பஞ்சாறு கஷாயம். உண்டோ என்றது - இல்லையோ? என்றபடி. "குன்றம்" என்றது - அவயவங்களுக்கு ஆஶ்ரயமான விக்ரஹத்துக்கு த்ருஷ்டாந்தமென்றபடி. திருவுந்தி அநுபாவ்யமென்னுமதுக்கு ப்ரமாணம்-உந்திமேலதன்றே இத்யாதி. கருமாணிக்கம்என்றுதொடங்கி, உந்தியானே - பொருள்தன்னில்வைத்துக்கொண்டு - எனக்கு - மற்றுமோர் - பொருள் - சீர்க்கத்தருமேல், பின்னையார்க்கு அவன்தன்னைக்கொடுக்கும் இத்யந்வய: "பின்னையார்க்கு அவன் தன்னைக்கொடுக்கும்" என்ற ஸ்வரத்தாலே - கொள்வாரில்லாமல் தந்தானே? அன்றே; தன்க்ருபையாலே தந்தானென்றபடி. (சு)

ஆ.—(செவ்வாயுந்தி) - இன்னமும் இவ்வபிநிவேசத்தையே விஸ்தரிக்கிறது. "என்னோடு கலந்தருளின கலவியாலுள்ள நிரவதிகப்ரீதியாலே, திருப்பவளத்தினழகையும், மற்றுமுள்ள திவ்யாவயவ திவ்யபூஷணகதமான நிரவதிகதேஜஸ்ஸையுமெல்லாம் வளைந்துகொடுவைத்து, என்முன்னே திருமுகத்தினொடு வெள்ளம் பெருகிப் புறப்படும்படியாகச் செவ்வாய்முறுவலோடு எனதுள்ளத்திருந்த அவ்வபிநிவேசகுணமல்லது மற்றொருகுணத்தைக் குணமாக மதியேனென்கிறார்.

ஒ.—ஏழாம்பாட்டில், எம்பெருமானுக்குத் தம்மோட்டைக் கலவியாலுள்ள ஹர்ஷத்தாலே முறுவல்செய்த திருப்பவளத்தில் அழகை யநுபவித்து மிகவும் ப்ரீதராகிறார்

[செவ்வாயென்று தொடங்கி.]-திருப்பவளமும் திருநாபீகமலமும் வெளுத்த திருமுத்தும் சுடரையுடைத்தான திருமகரக்குழையோடே மற்றும் எவ்விடத்திலுமுண்டான ஒளியும் ஒன்றுக்கொன்று முற்கோலி தம்முள்ளே கலசும்படி. ஒன்றுக்கொன்று முற்பட்டு என்னை வளைத்துக்கொள்ள வென்றுமாம். [செவ்வாயென்று தொடங்கி] - சிவந்ததிருப்பவளத்தில் முறுவலோடு என்னுடைய ஹ்ருதயத்திலே இருந்தபடி அல்லது மற்றுஅருள்கள், அறியேன். இதுவே அமையும், மற்றொன்றும் வேண்டா என்றுகருத்து.

ப.—அநந்தரம், இவ்வழகோடே என்னுள்ளே முறுவல் செய்திருக்கிற இருப்பொழிய வேறோராகாரத்தையும் அறிகிறிலேனென்கிறார்.

செம் - சிவந்த, வாய் - வாய், (செம்) உந்தி - சிவந்த திருநாபி, வெண் - வெளுத்த, பல் - திருமுத்து, சுடர் - ஒளியையுடைத்தான, குழைதம்மோடும் - திருமகரக்குழை இவற்றோடேகூட, எவ்வாய் - எல்லா அவயவங்களினுடைய, சுடரும் - ஒளியும், தம்மில் - தம்மில்தாம், முன் - முற்பட்டு, வளாய்க்கொள்ள-சூழ்ந்துகொள்ள, (திருவுள்ளத்திலுகப்புக்கு ப்ரகாசகமாம்படி), செம் - சிவந்த, வாய் - திருப்பவளத்தின், முறுவலோடு - முறுவலோடே, எனது - என், உள்ளத்து - நெஞ்சுக்குள்ளே, இருந்த- இருந்த, அ - அந்த, வாய் - ப்ரகாரத்தை, அன்றி - ஒழிய, மற்று - வேறொரு, அருள் - ஆகாரத்தையும், யான் அறியேன் - யான் நினைக்கிறிலேன்.

இ.—ஏழாம்பாட்டில், அவன் தம்மோட்டைக்கலவியாலே ஹ்ருஷ்டனாய், அது தன்பேறாக முறுவல்செய்த திருப்பவளத்தை அநுபவித்து ப்ரீதராகிறார்.

[செவ்வாய் இத்யாதி] - சிவந்த திருவதரம், திருவுந்தி, வெளுத்த திருமுத்து, புகரையுடைத்தான திருமகரக்குழை இவற்றோடேகூட. [எவ்வாய்ச்சுடரும்] - மற்றுமெவ்விடத்திலும்உண்டான தேஜஸ்ஸும். வாய் - இடம். [தம்மில் முன் வளாய்க்கொள்ள] - ஒன்றுக்கொன்று முற்கோலி என்னை வளைத்துக்கொள்ள. அஹமஹமிகையாய் முற்பட்டு வளைத்துக்கொள்ள வென்னுதல், ஒன்றுக்கொன்று முற்பட்டு என்னை வளைத்துக்கொள்ளவென்னுதல். [செவ்வாய் இத்யாதி] - சிவந்த திருப்பவளத்தில் முறுவலோடே என்னுடைய ஹ்ருதயத்திலே இருந்த. "அவாக்யநாதர:" என்றிருக்குமவன் இவரைப்பெற்றவிது தன்பேறென்று தோற்ற, ஹ்ருஷ்டனாய் முறுவல் செய்திருந்தபடி. பூவலரும்போது எங்குமொக்க ஒருசெவ்வி பிறக்குமாபோலே, திவ்யாவயவங்கள் தோறும் ஒருவிக்ருதி பிறக்கும்படியாயிற்று ஸ்மிதம்பண்ணிற்று.

[அவ்வாயன்றி] - அவ்விடமன்றி. ஸ்மிதம்பண்ணிக் கொண்டிருந்த இருப்பல்லது, "காந்தஸ்மிதா" என்று ஸ்வரூபத்தைச்சொல்லி, "ஜாதஹாஸா" என்றதிறே, அப்போதைய ஹர்ஷத்தால் உண்டான விக்ருதி என்னுமிடம் தோற்ற. மற்றுண்டான அருளை நான் அறியேன். இதுவே, அமையும்; மற்றொன்றும் வேண்டா என்கை.

ஈடு.—ஏழாம்பாட்டு. அவன் தம்மோட்டைக் கலவியாலே ஹ்ருஷ்டனாய், அது தன்பேறாக முறுவல்செய்த திருப்பவளத்தை அநுபவித்து ப்ரீதராகிறார்.

[செவ்வாய் இத்யாதி] - சிவந்த திருவதரம், திருவுந்தி, வெளுத்ததிருமுத்து, புகரையுடைத்தான திருமகரக்குழை இவற்றோடேகூட. [எவ்வாய்ச்சுடரும்] - மற்றுமேவ்விடத்து முண்டான தேஜஸ்ஸமூஹம். வாய் - இடம். [தம்மில்முன்வளாய்க்கோள்ள] - ஒன்றுக்கோன்று "நான், நான்" என்று தம்மில்தாம் முற்பட்டு வளைத்துக்கோள்ள. †அஹமஹமிகையாய் முற்பட்டு வளைத்துக்கோள்ளவேன்னுதல், முற்பட்டு என்னைவளைத்துக் கோள்ளவேன்னுதல். [செவ்வாய்முறுவலோடு எனதுள்ளத்திருந்த] - "அவாக்யநாதர:" (அவாக்யநாதர:) என்றிருக்கடவ தத்த்வம், இவரைப்பேற்று "இது தன்பேறு" என்று தோற்ற முறுவல்செய்திருந்தபடி. பூவலரும்போது எங்குமோக்க ஒரு சேவ்விபிறக்குமாபோலே, திவ்யாவயவங்கள்தோறும் ஒருவிக்ருதி பிறக்கும்படியாயிற்று ஸ்மிதம்பண்ணிற்று. [அவ்வாயன்றி] - அவ்விடமன்றி. ஸமிதம் பண்ணிக்கோண்டிருந்த இருப்பல்லது. "காந்தஸ்மிதா" (காந்தஸ்மிதா)என்று ஸ்வரூபத்தைச்சோல்லி, "ஜாதஹாஸா" (ஜாதஹாஸா) என்றதிறே, அப்போதை ஹர்ஷத்தாலுண்டான விக்ருதியேன்னுமிடந் தோற்ற. மற்றுண்டான அருளை நான்அறியேன். இதுவேயமையும், மற்றோன்று வேண்டாவேன்கை. (எ)

ஏழாம்பாட்டு.—செவ்வாய் இத்யாதி. "செவ்வாய்முறுவலோடு" இத்யாதிகளைக் கடாக்ஷித்து அவதாரிகை - அவன் இத்யாதி.

மற்றுமெவ்விடத்துமுண்டான என்றது - ஸமுதாயஶோபை. "நான் நான்" என்று தன்னில்தான் முற்பட்டு வளைத்துக்கொள்ள என்றத்தை இரண்டுவகையாக அருளிச்செய்கிறார் - அஹமஹமிகை இத்யாதி வாக்யத்வயத்தாலே. முந்தின அர்த்தத்துக்கு, "தம்மில்முன்" என்று முழுச்சொல்லு; தன்னில்தான் முற்பட்டு, பரஸ்பரம் வளைத்துக்கொள்ள என்றபடி. த்விதீயார்த்தத்துக்கு, "தம்மில், முன்" என்றுஇரண்டுபதம்: தங்களிலே முன்பு ஆழ்வாரை வளைத்துக்கொள்ள என்றபடி. முன் - முன்பே. "செவ்வாய்முறுவல்" என்றதுக்குபாவம் - அவாக்யநாதர: இத்யாதி. முறுவலின் ஸ்வபாவகதநம்பண்ணுகிறார் - பூவலரும் இத்யாதி. "அவ்விடமன்றி" என்றதின் விவரணம் - ஸ்மிதம்பண்ணி இத்யாதி. "செவ்வாய்" என்றும், "செவ்வாய்முறுவல்" என்றும் புநருக்தமன்றோவென்ன - காந்தஸ்மிதா இத்யாதி. அப்படியே, செவ்வாயென்று - ஸ்வரூபகதநமாய், செவ்வாய்முறுவலென்று - இவரைப்பெற்ற ப்ரீதியாலே வந்த ஸ்மிதத்தைச் சொல்லுகிறதென்றபடி. இத்தால் பலிதம்-இதுவேயமையும் இத்யாதி. "ஸ்மிதேந பாவாய ச ஸாத்விகேந ஸமேந ஸத்யாநுவிதேந சேதஸா। காந்தஸ்மிதாம் க்ஷணஜாதஹாஸா ஸ்நேஹஸிக்தா பஹுமாந்ய ஜாதம்" இதி ஶ்ரீராமாயணே, ஸுந்தரகாண்டே, ஸர்க்க: (கங-கஉ). (எ)

---

† அஹமஹமிகயா என்று பாடமிருக்கலாமென்று தோன்றுகின்றது.

எட்டாம் பாட்டு.

அறியேன்மற்றருள் என்னையாளும்பிரானார்
வெறிதேயருள்செய்வர் செய்வார்கட்குகந்து
சிறியேனுடைச் சிந்தையுள்மூவுலகும்தன்
நெறியாவயிற்றில்கொண்டு நின்றொழிந்தாரே.

ஆ.—(அறியேன்மற்றருள்.) - இப்படி அஹ்நிவிஷ்டனாய்க்கொண்டு தன்னுடைய ஸர்வைச்வர்யத்தோடுங்கூட என்னுள்ளே புகுந்திருந்தருளுகைக்கு ஹேது வென்? என்றால், ஒருஹேதுவின்றியே வெறிதேசெய்தருளினனென்கிறார்.

ஒ.—எட்டாம்பாட்டில், இப்படி எம்பெருமான் தன்னோடேவந்து ஸம்ச்லேஷிக்கைக்கு ஹேது அவனுடைய க்ருபைபோக்கி மற்றொன்றில்லையென்கிறார்.

[என்னையென்று தொடங்கி.] — என்னை அடிமைகொள்ளுகிற மஹோபகாரகரானவர் தாம் விஷயீகரிக்கவேண்டுவார்க்குநிர்ஹேதுகமாக உகந்துக்ருபைபண்ணுவர். [சிறியேனென்று தொடங்கி] — மூவுலகையும் தன்னுடைய வயிற்றினுள்ளே வைத்து அதுக்குப்பாங்காக வைத்துக்கொண்டு அவ்வைச்வர்யத்தோடே சிறியேனுடைய சிந்தையுள் நின்றொழிந்தார்.

ப.—அநந்தரம், க்ஷுத்ரனை என்னெஞ்சிலே பூர்ணராய்க்கொண்டுவந்து புகுந்துநின்றவர்தாம், உபகரிக்க நினைத்தார்க்கு நிர்ஹேதுகமாக உபகரிப்பராகாதே யென்கிறார்.

மற்று - வேறொன்றை, அருள் - உபகாரமாக, அறியேன் - நினைத்திருக்கிறிலேன்; என்னை - என்னை, ஆளும் - அடிமைகொண்ட, பிரானார் - மஹோபகாரகனானவர், செய்வார்கட்கு - தாம் உபகரிக்கநினைத்தார்க்கு, வெறிதே - நிர்ஹேதுகமாக, உகந்து - உகந்து, அருள் - உபகாரத்தை, செய்வர் - பண்ணுவர்; (எங்ஙனேயென்னில்), சிறியேனுடை - அதிக்ஷுத்ரனான என், சிந்தையுள் - நெஞ்சிலே, மூவுலகும் - ஜகத்த்ரயத்தையும், நெறிஆ - ரக்ஷ்யரக்ஷகபாவமாகிற முறை தப்பாதபடி, தன்வயிற்றில் - தமக்குள்ளே, கொண்டு - கூடக்கொண்டு, நின்றொழிந்தார் - நின்றுவிட்டார்: ஆதலாலென்று கருத்து.

இ.—எட்டாம்பாட்டில், அவன் தம்மோடுவந்து கலக்கைக்கடி, அவன் க்ருபை என்கிறார்.

[அறியேன் மற்றருள்] - வேறு ஓர்அருள் அறியேன். [என்னையாளும் பிரானார்] - என்னை அடிமைகொள்ளுகிற உபகாரகரானவர். [வெறிதேயருள் செய்வர்] - நிர்ஹேதுகமாக க்ருபைபண்ணுவர். ஆருக்கென்னில்? [செய்வார்கட்கு]-தாந்தாமொன்றைச் செய்வார்கட்கென்னில், "வெறிதேயருள் செய்வர்" என்னக்கூடாது; "யமேவைஷவ்ருணுதே": தாம் விஷயீகரிக்க நினைத்தார்க்கு. [உகந்து] - தம்முடைய உகப்பேஹேதுவாக: தம்முடைய உகப்புக்கு, "ப்ரியதமோவரணீயோ பவதி" என்று ப்ரியதமனன்றோ விஷயமென்னில்; சைதந்யப்ரயுக்தமானருசி, ஸ்வரூபம் இத்தனையல்லது, பேற்றுக்கு ஸாதநமாகப் பெறுமையாலே அத்தை ஹேதுவாகச்

சொல்லவொண்ணாது. அத்யல்பனான என்னுடைய ஹ்ருதயத்திலே. ஸம்ஸாரிகள் நித்யஸித்தர் கோடியிலேயாம்படியிறே தம்மை நினைத்திருப்பது. மூவுலகும் தன் வயிற்றினுள்ளே அவற்றுக்குப் பாங்காகவைத்துக்கொண்டு. நெறியா - பாங்காக. அன்றியே, மூவுலகை முறையிலே வயிற்றிலே கொண்டு என்றுமாம். ரக்ஷகன் ரக்ஷ்யத்தை நோக்குகை முறையிறே. [நின்றொழிந்தாரே] - [சிறியேனுடைச் சிந்தையுள் நின்றொழிந்தாரே] - ஐச்வர்ய ரக்ஷணத்தில் முறையிலே நின்றார், என்பக்கல் முறைகெட நில்லாநின்றார். அதிக்ஷுத்ரனான என்ஹ்ருதயத்திலே தன்மேன்மையோடே புகுந்து நிற்கிறவனுக்கு, தன்னுடைய ரக்ஷ்யவர்கத்தை நோக்கினான் என்கிற இது ஒரு குணமோ? அவன் - மூவுலகுக்கும் அவ்வருகாக இவரை நினைத்திராநின்றான்; இவர் - தம்மை ஸம்ஸாரிகளுக்குக் கீழாக நினைத்திராநின்றார்.

ஈடு.—எட்டாம்பாட்டு. அவன் தம்மோடேவந்து கலக்கைக்கடி அவன் க்ருபையென்கிறார்.

[அறியேன்மற்றருள்] - வேறருளுமறியேன். [என்னையாளும்பிரானார்] - என்னை அடிமைகொள்ளுகிற உபகாரகரானவர். [வெறிதேயருள்செய்வர்] - நிர்ஹேதுகமாக க்ருபைபண்ணுவர். ஆருக்கென்னில் - [செய்வார்கட்கு] - "யமேவைஷவ்ருணுதே" (யமேவைஷவ்ருணுதே) என்று தாம் விஷயீகரிக்க நினைத்தார்க்கு. தாந்தாமொன்று செய்வார்க்கென்னில், "வெறிதே" என்னக்கூடாதிறே. ஆனாலும் ஒருஹேதுவேண்டாவோ அருளுக்கென்னில்,— உகப்பாயிற்று ஹேது: "ப்ரியதமஏவவரணீயோபவதி" (ப்ரியதம ஏவஹிவரணீயோபவதி) என்னக்கடவதிறே. ருசியுண்டானாலும், இவன் சேதநனானவாசிக்குச் சைதந்யப்ரயுக்தமான ஸ்வபாவமாகக்கொள்ளுமித்தனையல்லது, பேற்றுக்கு ஸாதநமாகச்சொல்லவொண்ணாதிறே. நிர்ஹேதுகமாகவருள் இப்படி எங்கேகண்டோமென்ன-புறம்பு தேடிப்போகவேணுமோ? [சிறியேனுடைச்சிந்தையுள்] - அத்யல்பனாயிருக்கிற என்னுடைய ஹ்ருதயத்தினுள்ளே. [மூவுலகும் இத்யாதி] - உடையவன் உடைமையைநோக்குவது முறையாலேயாயிருக்குமிறே. தம்முடைய ரக்ஷ்யவர்க்கத்தை முறையிலே நோக்குகிறவர், என்னுடைய ஹ்ருதயத்திலே பொருந்தி முறைகெடப் பரிமாறாநின்றார். தம்மைச் சிறுமைக்கெல்லையாக நினைத்தபடியாலே முறைகேடாய்த்தோற்றாநின்றது

எட்டாம் பாட்டு.—அறியேன் இத்யாதி. "வெறிதேயருள்செய்வர்" என்றத்தைக் கடாக்ஷித்து அவதாரிகை -அவன் தம்மோடே இத்யாதி.

"செய்வார்கட்கு" என்று ஸாதநத்தை அநுஷ்டிப்பார்க்கென்றாலோவென்ன - தாந்தாம் இத்யாதி. உகப்பென்றது ஈச்வரனுடைய உகப்பென்றபடி. ஈச்வரனுகப்பே விஷயீகாரஹேது வென்னுமதுக்கு ப்ரமாணம் - ப்ரியதம இத்யாதி. கேவலநிர்ஹேதுகமென்னலாமோ, ருச்யாதிகள் ஸாதநமானாலோவென்ன - ருசியுண்டானாலும் இத்யாதி- மூன்றுலோகத்தையும் வயிற்றிலே கொண்டது முறையோவென்ன - உடையவன் இத்யாதி. முறையாலேயாயிருக்குமிறே என்றதுக்கு - முறைகெடப்பரிமாறாநின்றார் என்றத்தோடே அந்வயம். "நெறியா -" முறையிலே. "தன் வயிற்றிற்கொண்டு" என்று அந்வயிப்பது. "நின்றொழிந்தார்" என்கையாலே - முறைகெட வென்றது ஸித்தம். முறைகெடப்பரிமாறுகையாவது - இவரை சேஷியாய்வைத்து, தான் சேஷபூதனாய்ப் பரிமாறுகை. சேஷபூதனை, சேஷிவிஷயீகரிக்கிறது முறைகேடோவென்ன - தம்மை இத்யாதி. ஆனால் அவன்படிஎது? என்ன - அவன்இவரை இத்யாதி. என்னையாளும்பிரானார் - செய்வார்கட்குகந்து - வெறிதேயருள்செய்வர்; மூவுலகும் - நெறியா - தன் வயிற்றிற்கொண்டு -

யிற்ற இது. அவன் இவரை மூவுலகுக்கும் அவ்வருகாக நினைத்திராநின்றான்; இவர், தம்மை மூவுலகுக்கும் இவ்வருகாக நினைத்திராநின்றார். (அ)

ஒன்பதாம் பாட்டு.

வயிற்றில்கொண்டு நின்றொழிந்தாரும்யவரும்
வயிற்றில்கொண்டு நின்றொருமூவுலகும் தம்
வயிற்றில்கொண்டு நின்றவண்ணம்நின்றமாலை
வயிற்றில்கொண்டு மன்னவைத்தேன்மதியாலே.

ஆ.—(வயிற்றில்கொண்டு) - அண்டங்களையும், அண்டாந்தர்வர்த்திகளான சதுர்முகர்களையும், சதுர்முகாஜ்ஞாநுவர்த்திகளான தேவாதி ஸ்தாவராந்தமான ஸமஸ்தஜந்துக்களையும், ஸ்வஸங்கல்ப ஸஹஸ்ரைகதேசத்திலே நியமித்தருளுகிற எம்பெருமான்படியை அறிந்துகொண்டேனிறே யென்கிறார்.

ஒ.—ஒன்பதாம்பாட்டில், இப்படி விஷயீகரிக்கைக்கு நீர் செய்ததென் என்னில்? அநுமதிமாத்ரம் பண்ணினேனத்தனை என்கிறார்.

[வயிற்றிற்கொண்டு நின்றொழிந்தாரும் யவரும் வயிற்றிற்கொண்டுநின்று] - ஜருத்தை வயிற்றிலேவைத்துப்பரிஹரிக்குமாபோலே, பரிஹரிக்கும் க்ஷத்ரியாதிகளையும் அவர்களில் அளவுடைய ப்ரஹ்மாதிகளையும் ஸங்கல்பத்திலேகொண்டு நிற்பதுஞ்செய்து. [ஒருமூவுலகும் தம்வயிற்றிற் கொண்டென்று மேலுக்கெல்லாம்] - மூன்றுலோகத்தையும் தன்ஸங்கல்ப ஸஹஸ்ரைகதேசத்தாலே நடத்துகையாலே ஓர் ஆயாஸம் தோற்றாதே பண்டுபோலேநின்ற ஸர்வேஶ்வரனை நிரந்தரமாக என்மநஸ்ஸிலே வைத்துக்கொண்டேன், அநுமதியாலே. ஜருத்தை வயிற்றிலே வைத்துப் பரிஹரிப்பாரைப் பரிஹரிக்கும் க்ஷத்ரியாதிகளும், அவர்களிற்காட்டில் அளவுடைய ப்ரஹ்மாதிகளும் இவர்களெல்லாம் தன்னுள்ளே அடங்கும்படியாக இடம் உடைத்தான மூன்றுலோகத்தையும் என்றுமாம். "மன்னவைத்தேன்மதியாலே" என்றது - இவன்படியை அறிந்துகொண்டேன் என்கிறார்" என்றும் சொல்லுவர்.

ப.—அநந்தரம், அவனுடைய ஸர்வப்ரகார ரக்ஷகத்வத்தை என்னெஞ்சிலே ஸுஸ்த்திரமாக வைத்தேனென்கிறார்.

வயிற்றிற்கொண்டு - (தாயானவள் வயிற்றிலேவைத்து நோக்குமோபாதி) ரக்ஷகராய் நின்றுபோந்த, நின்றொழிந்தாரும் - க்ஷத்ரியர்களையும், யவரும் - (அவர்களுக்கு மேலான)ப்ரஹ்மாதிகளையும், வயிற்றில்- தன்னுடைய ஸ்வரூபைகதேசத்திலே, கொண்டு - கொண்டு, நின்று - நின்று, ஒரு - அத்விதீயமான, மூவுலகும் - ஜகத்த்ரயத்தையும், தம்- தம்முடைய, வயிற்றில் - ஸங்கல்பைகதேசத்திலே, கொண்டு - தரித்து, நின்றவண்ணம் - (யதாபூர்வாவஸ்த்திதியான) ஸ்வரூபத்தோடே, நின்ற - நின்ற, மாலை - ஸர்வாஶ்ரயரானவரை, மதியாலே - ("இசைவித்தென்னை" என்று அவர்தந்த)

சிறியேனுடைச்சிந்தையுள் நின்றொழிந்தார்; ஆகையாலே, மற்றருள் - அறியேன் இத்யந்வய: "ப்ரியதமேனவரணீயோ லப்ய:" இதிஶ்ரீஸாஷ்யே, ஜிஜ்ஞாஸாதிகரணே. (அ)

அநுமதியாலே, வயிற்றில் - என்னகவாயிலே, கொண்டு - கொண்டு, மன்ன - பேராத படி, ன.

).—ஒன்பதாம்பாட்டில், 'இப்படி விஷயீகரிக்கைக்கு நீர் செய்தது என்?' என்னில்,— 'அநுமதிமாத்ரம் பண்ணினேனித்தனை' என்கிறார்.

[வயிற்றிற்கொண்டு நின்றொழிந்தாரும்] - ஜநநியானவள், ப்ரஜையை வயிற்றிலே வைத்து நோக்குமாபோலே, ஜகத்தைநோக்கும் க்ஷத்ரியாதிகளையும். [யவரும்] - அவர்களிற்காட்டில் அளவுடைய ப்ரஹ்மாதிகளையும். [வயிற்றிற்கொண்டு நின்றொருமூவுலகும்] - க்ஷத்ரியாதிகளையும் ப்ரஹ்மாதிகளையும் தன்னுள்ளே கொண்டிருந்துள்ள மூவுலகையும். [தம்வயிற்றிற்கொண்டு] - தம்முடைய ஸங்கல்ப ஸஹஸ்ரைகதேசத்திலேநடத்திக்கொண்டு என்னுதல்; அவர்களையும் வயிற்றிலேகொண்டு நின்று ஒருமூவுலகையும் தம்வயிற்றிலேகொண்டுஎன்னுதல். [நின்ற வண்ணம் நின்ற மாலே]- இவற்றையடையத் தம்வயிற்றிலேகொண்ட விடத்திலும், ஒருவிகாரமின்றிக்கே முன்புபோலேநின்ற ஸர்வேஶ்வரனை. ஸவிபூதிகனானவனை என்னுடைய ஹ்ருதயத்திலே கொண்டு ஒருநாளும் பிரியாதபடியாக வைத்துக்கொண்டேன். [மதியாலே] - "இவன்படியை அறிந்துகொண்டேன் என்கிறார்" என்னும் அம்மாள். அங்ஙனன்றிக்கே, "ஙதிஃ - கூந-ஙதிஃ" என்றாக்கி என் அநுமதிமாத்ரத்தாலே" என்பர் பட்டர்; அவன் புகுருகிறவிடத்தில் விலக்காமைபாலே என்கை.

ஈடு.—ஒன்பதாம்பாட்டு. இப்படி விஷயீகரிக்கைக்கு நீர்செய்ததேன்? என்னில், - அநுமதிமாத்ரம்பண்ணினே னித்தனை யேன்கிறார்.

[வயிற்றில்கொண்டு நின்றொழிந்தாரும்]-ஜநநியானவள், ப்ரஜையை வயிற்றிலே வைத்து நோக்குமாபோலே, ஜகத்தை நோக்கும் க்ஷத்ரியாதிகளையும். [யவரும்] - இந்த க்ஷத்ரியர்தங்களையும் நோக்கிக்கொண்டு போருகிற ப்ரஹ்மாதிகளையும். [வயிற்றில் இத்யாதி] - ப்ரஹ்மாதிகளையும் க்ஷத்ரியாதிகளையும் தன்னுள்ளே கொண்டிருந்துள்ள மூவுலகையும். [தம்வயிற்றில்கொண்டு] - தம்முடைய ஸங்கல்ப ஸஹஸ்ரைகதேசத்தாலே நடத்திக்கொண்டேன்னுதல்; வயிற்றில்கொண்டு நின்றொழிந்தாரையும் யவரையும் வயிற்றிற்கொண்டு நின்றொருமூவுலகையும் தம் வயிற்றிற்கொண்டேன்று பிரித்துச் சொல்லுதல். [நின்றவண்ணம்நின்றமாலே] - இவற்றையடையத் தன்வயிற்றில் கொண்ட விடத்திலும், ஒருவிகாரமின்றிக்கே நின்ற ஸர்வேஶ்வரனை. ஸவிபூதிகனான ஸர்வேஶ்வரனை என்னுடைய ஹ்ருதயத்திலே பேராதபடி வைத்தேன். [மதியாலே] - "இவன்

ஒன்பதாம்பாட்டு.—வயிற்றில் இத்யாதி. "மதியாலே - மன்னவைத்தேன்" என்றதைக் கடாக்ஷித்து அவதாரிகை பட்டர்நிர்வாஹத்திலே-இப்படி இத்யாதி.

"வயிற்றில்கொண்டுநின்று" என்று விஶேஷிக்கையாலே ஃலித்தஹாவம் - ஜநநி இத்யாதி. "நின்றொழிந்தாரும் -" நின்று போந்தவர்களுமென்றபடி. ப்ரஹ்மாதிகளையுமென்றது - "யஸ்ய ஹ்ம ஊஹ" என்றவிடத்திற்போலே, ப்ராஹ்மணாதிகளையு மென்றபடி. வஸிஷ்டாதிகள், இக்ஷ்வாகு வம்ஶத்தில் ராஜாக்களை ஸ்வஸ்வமஹிமாவிலேலே நோக்கிக்கொண்டிருந்தார்களிறே. ஆதிஶப்தத்தாலே - அவர்களுக்கும் கௌரவ்யரான தேவர்களைச் சொல்லுகிறது. வயிறு - ஹ்ருதயம். நின்றவண்ணம் - பூர்வமிருந்த ப்ரகாரத்திலே.'மன்ன' - பேராதபடி. "மதி" என்று - ஜ்ஞானமாதல், அநுமதியாதல். "மதி" என்றதுக்கு அம்மாள் நிர்வாஹம் - "மதி" என்று ஜ்ஞானமாய், ஜ்ஞானத்தாலே அவனை ஹ்ருதயத்திலே வைத்தேனென்றபடி. அதாவது - அவன்படிகளை அறிந்து

படியை அறிந்துகொண்டேனென்கிறார்” என்னும் அம்மாள். ௰”

என்றுக்கி, “அநுமதிமாத்ரத்தாலே’? என்பர் பட்டர்; அதாவது - அவன் புகுருகிறவிடத்தில் விலக்கிற்றிலனேன்கை. (௬)

பத்தாம் பாட்டு.

வைத்தேன்மதியால் எனதுள்ளத்தகத்தே
எய்த்தேயொழிவேனல்லேன் என்றுமெப்போதும்
மொய்த்தேய்திரைமோதுதண்பாற்கடலுளால்
பைத்தேய்சுடர்ப் பாம்பணைநம்பரனையே.

ஆ.—(வைத்தேன்மதியால்) - அவன்படி எங்ஙனேயாக அறிந்ததென்றால்,—ஆஸ்ரிதர்பக்கல் அபிநிவிஷ்டனாயிருக்கை அவன்படியென்று அறிந்துகொண்டேன்; இது அவன்படியான பின்பு, அவனை நான் ஒருநாளும் விடுவேனல்லேனென்கிறார்.

ஒ.—பத்தாம்பாட்டில், ‘எம்பெருமான் ஸபரிகரமாக என்னுள்ளே வந்து புகுந்தான்; அவனை இனி ஒருநாளும் விஸ்லேஷித்து து:கப்படேன்’ என்கிறார்.

[மொய்த்தென்று தொடங்கி] - நிரந்தரமாகத் தகுதியான திரைகள் மோதா நிற்பதுஞ்செய்து ஸ்ரமஹரமான திருப்பாற்கடலினுள்ளே தன்னுடைய ஸ்பர்ஸ ஸுகத்தாலே ஃபணம் விரிப்பதும்செய்து தகுதியான தேஜஸ்ஸையுமுடையனான திருவநந்தாழ்வானை அணையாகவுடையனுமாய் ஆஸ்ரிதஸுலபனான ஸர்வேஸ்வரனை.

ப.—அநந்தரம், ஸர்வஸ்மாத்பரனான க்ஷீராப்திநாயனை என்னெஞ்சுக்குள்ளே வைத்து, இடைவிடாமல் அநுபவிப்பேனென்கிறார்.

மொய்த்து - செறிந்து, ஏய் - (திருவநந்தாழ்வான் திருமேனிக்குத்) தகுதியான, திரை - திரைகள், மோது - அலையாநிற்பதாய், தண் - ஸ்ரமஹரமான, பாற்கடலுள் - க்ஷீராப்தியினுள்ளே, பைத்து - விரிகிறபணங்களையுடையனாய், ஏய் - ஸ்வாபாவிகமான, சுடர் - தேஜஸ்ஸையுடையனான, பாம்பு - திருவநந்தாழ்வானை, அணை - படுக்கையாக உடையனாய்; நம் - நமக்கு, பரனை - ஸேஷியானவனை, மதியால் - என்னநுமதியாலே, எனது - என், உள்ளத்தகத்தே - நெஞ்சுக்குள்ளே, வைத்தேன் - வைத்தேன்: என்றும் - எல்லாத்திவஸத்திலும், எப்போதும் - எல்லாப்போதிலும், எய்த்தேயொழிவேனல்லேன் - இனி விஸ்லேஷித்துத் தளரக்கடவேனல்லேன். இந்நிலையிலே தவிரக் கடவேனல்லேனென்றுமாம்.

இ.—பத்தாம்பாட்டில், அவன் ஸபரிகரமாக என்னுள்ளே புகுந்தான்: அவனை இனி ஒருகாலமும்பிரிந்து க்லேஸப்படுகிறேனல்லேன் என்கிறார்.

[வைத்தேன் இத்யாதி] - அநுமதியாலே என்னெஞ்சினுள்ளே வைத்தேன். அநுமதிமாத்ரத்துக்குள்ள ஃபலாதிக்யமென்? அவன் ஹ்ருதயஸ்தனானபின்பு பிரிந்து

கொண்டு என்றதாய், நிர்ஹேதுகமாக அங்கீகரிக்கும் ப்ரகாரத்தையறிந்து, “இனி ப்ரதிஷேதிக்கக் கடவோமல்லோம்” என்றிருக்கிறானென்றபடி. “ஊதிஃ-க்ஷநா ஊதிஃ” என்றது - “யாதநாஸ்ரீ நகேவஸஷ-ஜவாய-டி” என்று தாதுலீநமானவர்த்தத்துக்கு வாசகமான உபஸர்க்கத்தைக் கூட்டி, அநுமதியென்கிறதென்றபடி. (௬)

துஃகப்படுகிறேனல்லேன். இது எத்தனை குளிக்குநிற்கும் என்ன? - [என்றும் எப்போதும்]-ஸர்வதிவஸத்திலும், ஸர்வாவஸ்தையிலும். [மொய்த்தேய்திரை] - நிரந்தரமாய், ஏய்ந்த - தகுதியான, திரை மோதாநிற்பதாய், ப்ரமஹரமான திருப்பாற்கடலிலே: சிறுதிவலை படிலும், "மோதிற்று" என்னும்படியிறே ஸௌகுமார்யமிருப்பது. [பைத்தேய் சுடர்ப்பாம்பணை] - திரைகள் அவன்திருமேனியில் படாதபடி விரித்த பணத்தையுடையனாய் அநுபவத்துக்குத் தகுதியான தேஜஸ்ஸையுடைய திருவநந்தாழ்வானைப் படுக்கையாக வுடையவனை. [நம்பரனை] - நமக்கு ஸுலபனான ஸர்வேச்வ - வைத்தேன் மதியால். "அரவத்தமளியினோடும் அழகிய பாற்கடலோடும்" படியே.

ஈடு.—பத்தாம்பாட்டு. எம்பெருமான் ஸபரிகரமாக என்னுள்ளேபுகுந்தான்; அவனை நான் இனி ஒருநாளும் விச்லேஷித்து துஃகப்படேனென்கிறார்.

[வைத்தேன்மதியாலெனதுள்ளத்தகத்தே] - அநுமதியாலே என்னெஞ்சினுள்ளே வைத்தேன்: ஓரநுமதிமாத்ரத்துக்கு இத்தனை ஃபலமுண்டாவதே!. [எய்த்தேயொழிவேனல்லேன்] - இனி ஒருநாளும் இளைத்து க்லேசப்படக்கடவேனல்லேன். இவ்வார்த்தை எத்தனைகுளிக்கு நிற்குமென்ன,-[என்றுமெப்போதும்] - எல்லாத்திவஸத்திலும், எல்லாவவஸ்த்தையிலும். [மொய்த்தேய்திரை] - திரண்டு தகுதியான திரைகள் மோதாநின்றுள்ள ப்ரமஹரமான திருப்பாற்கடலிலே. சிறுதிவலை படிலும் "மோதிற்று" என்னும்படியிறே ஸௌகுமார்யமிருப்பது! [பைத்தேய்சுடர்ப்பாம்பணை] - திரைகள்வந்து திருமேனியில் படாதபடி விகஸிதமான ஃபணங்களையுடையனாய், ஸம்வதநுபவத்தால்வந்த தகுதியான புகரையுடையனான திருவநந்தாழ்வான்மேலே கண்வளர்ந்தருளுகையாலுண்டான ஏற்றத்தையுடையவன். [நம்பரனை] - அவ்வேற்றத்தை நமக்கு வெளியிட்டுத்தந்தவனை: வைத்தேன்மதியால் எனதுள்ளத்தகத்தே, எய்த்தேயொழிவேனல்லேன் என்றுமெப்போதும். * அரவத்தமளியினோடும் அழகியபாற்கடலோடுங்காணும் இவர்திருவுள்ளத்திலே புகுந்திருந்தது. (க0)

பத்தாம்பாட்டு.—வைத்தேன் இத்யாதி. "பாம்பணைநம்பரனை - எனதுள்ளத்தகத்தே - வைத்தேன்மதியால், எய்த்தேயொழிவேனல்லேனென்றுமெப்போதும்" என்ற பதங்களைக் கடாக்ஷித்து அவதாரிகை - எம்பெருமான் இத்யாதி. "பாம்பணைநம்பரன்" என்றத்தைப்பற்ற - ஸபரிகரமாக என்றது.

"மன்னவைத்தேன்மதியால்" என்று கீழேசொல்லியிருக்க, மீளவும் "வைத்தேன்மதியால் எனதுள்ளத்தகத்தே" என்றதுக்கு பாவம் - ஓரநுமதி இத்யாதி. "எய்த்தேயொழிவேனல்லேன்" என்று - முழுச்சொல்லாய், இளைத்து க்லேசப்படக் கடவேனல்லேனென்றபடி. "என்றுமெப்போதும்" என்ற பதத்தைக்கடாக்ஷித்து அருளிச்செய்கிறார் - இனிஒருநாளும் இத்யாதி. "என்றுமெப்போதும்" என்ற புநருக்திக்கு பாவம்-எல்லாத்திவஸத்திலும் இத்யாதி. "மொய்த்து, ஏய்" என்று பதச்சேதம். மொய்த்து - திரண்டு. "ஏய்" என்று - தகுதியாய், திருமேனியில் ஸௌகுமார்யத்துக்குத் தகுதியான திரையென்றபடி. "தகுதியானதிரை" என்றுவைத்து, "மோது" என்னலாமோவென்ன - சிறுதிவலை இத்யாதி. "பைத்து, ஏய், சுடர்" என்று பதச்சேதம். "பைத்து" - விகஸிதமானஃபணங்களையுடையனாய் என்றபடி. இத்தால் பாவம் - அரவத்தமளி இத்யாதி. அமளி - படுக்கை. மொய்த்தேய்திரை என்றுதொடங்கி, பரனை - மதியாலெனதுள்ளத்தகத்தே - வைத்தேன்; என்றுமெப்போதும்-எய்த்தேயொழிவேனல்லேன் என்றுஅந்வயம்: ஆல் - அவ்யயம். (க0)

பதினோராம் பாட்டு.

சுடர்ப்பாம்பணைநம்பரனைத் திருமாலை
அடிச்சேர்வகை வண்குருகூர்ச்சடகோபன்
முடிப்பான்சொன்னவாயிரத்து இப்பத்தும்சன்மம்
விடத் தேய்ந்தறநோக்கும் தன்கண்கள்சிவந்தே.

ஆ.—(சுடர்ப்பாம்பணை) - இத்திருவாய்மொழி, ஐகவதநுபவவிரோயி ஸம்ஸார த்ருஷ்டிவிஷ மென்கிறார்.

ஒ.—நிகமத்தில், கற்றவர்களுடைய ஸம்ஸாரத்துக்கு இப்பத்தும் த்ருஷ்டி விஷம் என்கிறார்.

[அடிச்சேர் வகையென்று தொடங்கி] - திருவடிகளைச் சேருகை ஸ்வபாவமான ஆழ்வார் தம்முடைய ஸாம்ஸாரிக ஸகலது:க்கங்களையும் போக்குகைக்காக அருளிச்செய்த ஆயிரம் திருவாய்மொழியிலும் இத்திருவாய்மொழி.

ப—அநந்தரம், இத்திருவாய்மொழிக்கு பலமாக, ஜந்மஸம்பந்தநிவ்ருத்தியை. அருளிச்செய்கிறார்.

சுடர் - நிரவதிகதேஜஸ்ஸையுடைய, பாம்பு - திருவநந்தாழ்வானை, அணை - படுக்கையாகவுடையனாய், நம் - நமக்கு, பரனை - சேஷியான, திருமாலை - ஸ்ரிய:பதியை, அடி - திருவடிகளிலே, சேர்வகை - சேரும்படியை, முடிப்பான் - தலைக் கட்டிக்கொள்ளுகைக்காக, வண் - நிரதிசயஸம்பத்தையுடைய, குருகூர் - திருநகரிக்கு நிர்வாஹகரான, சடகோபன் - ஆழ்வார், சொன்ன - அருளிச்செய்த, ஆயிரத்து - ஆயிரத்தில், இப்பத்தும் - இப்பத்தும், சன்மம் - (பகவதநுபவப்ரதிபந்தகமான)ஜந்மம், அற - மிகவும், தேய்ந்து - க்ஷயித்து, விட - நசிக்கும்படியாக, தன் - தன், கண்கள் - கண்கள், சிவந்து - சிவந்து, நோக்கும் - பார்க்கும். ஜந்மவிநாசஹேதுத்வத்தால் திருவாய்மொழியைப் புருஷஸமாதியாலே சொல்லுகிறது. இது கலிவிருத்தம்.

இ.—நிகமத்தில், இப்பத்தானது, தன்னைக் கற்றவர்கள் ஸம்ஸாரத்துக்கு த்ருஷ்டிவிஷம் என்கிறார்.

[சுடர்ப்பாம்பணை நம்பரனைத் திருமாலை] - இப்பத்தும் கற்றார்க்கு ஜந்மமறுகையிறே பலமாகச்சொல்லுகிறது. அது அற்றால் போய் அநுபவிக்கும் ப்ராப்யத்தைச் சொல்லுகிறார்-பர்யங்கவித்யையிற் சொல்லுகிறபடியே திருவநந்தாழ்வான் மடியிலே ஸர்வேச்வரனும் பிராட்டியும் எழுந்தருளியிருக்கிற இருப்பை அநுபவிக்கையிறே முக்தப்ராப்யம்: "அணைவதரவணைமேல் பூம்பாவையாகம் புணர்வது" என்னக்கடவதிறே. [அடிச்சேர்வகை யித்யாதி] - திருவடிகளைச் சேருகையே ஸ்வபாவமாக உடைய ஆழ்வார், ஜ்ஞாநாநந்தங்களன்று நிரூபகம்; திருவடிகளில் சேர்த்தியே நிரூபகம். [முடிப்பான் சொன்னவாயிரத்திப்பத்தும்] - ஸம்ஸாரஸம்பந்தத்தையறுக்க அருளிச்செய்தஆயிரத்திலும் இப்பத்து. அடிச்சேர்வகை - முடிப்பான் என்றுமாம். [சன்மமித்யாதி]-ஜந்மஸம்பந்தம் அறும்படிஇப்பத்தும் தன்கண்கள் சிவந்துநோக்கும். அதாகிறது-ஜந்மத்துக்கு இப்பத்தும் த்ருஷ்டிவிஷமென்கை. ஜந்மத்துக்கும் இப்பத்துக்கும் ஸஹாநவஸ்தாநலக்ஷண விரோதமுண்டென்கை.

ஈடு.—நிகமத்தில் - இப்பத்தானது, தன்னைக்கற்றவர்கள் ஸம்ஸாரத்துக்கு த்ருஷ்டிவிஷ மென்கிறார்.

[சுடர்ப்பாம்பணைநம்பரனைத்திருமாலை] - இப்பத்தும் கற்றார்க்கு ஜந்மமறுகை யிறே ஃபலமாகச் சோல்லுகிறது; அத்தால் போய் அநுபவிக்கும் ப்ராப்யத்தைச்சொல்லுகிறது - பர்யங்கவித்யையிற் சொல்லுகிறபடியே திருவநந்தாழ்வான்மடியிலே பெரியபிராட்டியாரோடே எழுந்தருளியிருக்கக் கண்டு அநுபவிக்கையிறே முக்தப்ராப்யபோகந்தான். [அடிச்சேர்வகை இத்யாதி] - திருவடிகளிலே சேருகையே தமக்கு ஸ்வபாவமாகவுடைய ஆழ்வார். ஜ்ஞாநாநந்தங்களன்று இவர்க்கு நிரூபகம்; சேஷத்வமாயிற்று. [முடிப்பான் சொன்ன இத்யாதி] - ஸம்ஸார ஸம்பந்தத்தை அறுக்கைக்காகச் சொன்ன ஆயிரத்து இப்பத்து அடிச்சேர்வகை - முடிப்பானென்றுமாம். சன்மமானது விட்டுப்போம்படியாக நோக்கும். அதுசெய்யுமிடத்தில், [இப்பத்தும் - தன்கண்கள்சிவந்து - நோக்கும்] - அதாவது-ஜந்மத்துக்கு இப்பத்தும் த்ருஷ்டிவிஷமென்கை. இப்பத்துக்கும் ஜந்மத்துக்கும் ஸஹாநவஸ்தாநலக்ஷண விரோத முண்டென்கை. (கக)

நிகமம்.—சுடர்ப்பாம்பணை இத்யாதி. "சன்மம்விட - கண்கள்சிவந்து - நோக்கும்' என்கிற பதங்களைக் கடாக்ஷித்து அவதாரிகை - இப்பத்தானது இத்யாதி.

"ஜந்மத்துக்கு இப்பத்தும் த்ருஷ்டிவிஷம்" என்கிற ப்ரகரணத்திலே, "சுடர்ப்பாம்பணை நம்பரனைத்திருமாலை" என்று விசேஷிக்கிறதுக்கு பாவமேதென்ன அருளிச்செய்கிறார் - இப்பத்தும் கற்றார்க்கு இத்யாதி வாக்யத்வயத்தாலே. போய்அநுபவிக்கும் ப்ராப்ய மெப்படியிருக்குமென்ன - பர்யங்கவித்யையில் இத்யாதி. வகை - ஸ்வபாவம். "அடிச்சேர்வகை" என்றத்தால் பலிதம் - ஜ்ஞாநாநந்தங்கள் இத்யாதி. முடிப்பான் - முடிக்கைக்காக என்றபடி. விவரணம் - இப்பத்துக்கும் இத்யாதி. சுடர்ப்பாம்பணை என்றுதொடங்கி, இப்பத்தும் - தன்கண்கள்சிவந்து - சன்மம் - தேய்ந்தறநோக்கும் இத்யந்வயம். தேய்ந்தற - விட்டுப்போம்படியாக. ஜந்மவிநாசஹேதுத்வத்தாலே இப்பத்தைப் புருஷஸமாதியாலே சொல்லுகிறது. (கக)

த்ரவிடோபநிஷத்ஸங்கதி.— [illegible]

த்ரவிடோபநிஷத்தாத்பர்யரத்நாவளி.— [illegible]

திருவாய்மொழி நூற்றந்தாதி

இருந்தவன்தான்வந்திங்கிவரெண்ணமெல்லாம்
திருந்தவிவர்தந்திறத்தேசெய்து - பொருந்தக்
கலந்தினியனாய்நிற்கக்கண்டசடகோபர்
கலந்தநெறிகட்டுரைத்தார்கண்டு.

ஆழ்வார் திருவடிகளே சரணம், எம்பெருமானார் திருவடிகளே சரணம், ஜீயர்திருவடிகளே சரணம்.

எட்டாந்திருவாய்மொழி—கண்கள்சிவந்து - ப்ரமேயங்கள்.

ஒ.—எட்டாந்திருவாய்மொழியில், இப்படி ஆழ்வாரோடே ஸம்ஶ்லேஷிக்கப் பெற்று இவர் தம்மிற்காட்டிலும் அதிப்ரீதனான எம்பெருமான், இவர் * வளவேழுலகிற்படியே தம்மை அயோக்யராக அநுஸந்தித்து அகன்று வ்ருத்தஸம்ஶ்லேஷம் கலங்காமே இஸ்ஸம்ஶ்லேஷம் உருவச்செல்லுகைக்கு உறுப்பாக இவருடைய ஆத்மவைலக்ஷண்யத்தைக் காட்டிக்கொடுக்கையிலே உபக்ராந்தனாய், "முதலிலே தம்முடைய ஆத்மஸ்வரூபாநுஸந்தாநம் பண்ணவென்னில், 'இந்த க்ஷேத்ரத்தில் என்?' என்று அத்தைக் காற்கடைக்கொண்டு பிடிதாரார்" என்று பார்த்தருளி, ஆத்மாவலோகத்துக்கு இசையும்படியாக நிரதிஶயபோக்யனான தன்னுடைய ஸ்வரூபரூபகுணாதிகளைக் காட்டிக்கொடுத்து, அவ்வழியாலே, "இவ்வாத்மா தனக்கு அநந்யார்ஹஶேஷம்" என்னுமிடத்தையும், "தனக்கு நிறம் கொடுக்கும்படியான வைலக்ஷண்யத்தை யுடைத்து" என்னுமிடத்தையும் காட்டிக் கொடுத்தருளக்கண்டு அநுஸந்தித்து ப்ரீதராகிறார். "முதலிலே இரண்டரைப்பாட்டு - * இருந்தும்வியந்தில் அநுபவித்த அழகு பின்னாட்டுகிறது" என்றுஞ்சொல்லுவர். "ஆத்மா ஸ்வாஶ்ரயமென்னுமிடத்தைக் காட்டிக்கொடுக்கைக்காக, அதுக்கு ஆஶ்ரயமான தன்னை முற்படக்காட்டிக் கொடுக்கிறான்" என்றுஞ் சொல்லுவர்.

ப.—எட்டாந்திருவாய்மொழியில், கீழ்-தம்முடைய நெஞ்சிலே வந்து புகுந்திருந்து இந்த்ரியாதிவிரோதிகளையும் நஶிப்பித்துத் தன்பேறாகக்கலந்து ப்ரீதனான ஈஶ்வரன், "'இவருக்கு நிகர்ஷாபாதகமான விரோதி வந்தேறி' என்னுமிடம் இவரறியும்படி, இவருடைய ஸ்வரூபமானது நமக்கு ப்ரகாரமாயிருக்கிறபடியையும், விலக்ஷணமாயிருக்கிறபடியையும் காட்டி நைர்தோஷ்யத்தை ப்ரகாஶிப்பிப்போம்" என்று திருவுள்ளம்பற்றி; இவருடைய ஆத்மஸ்வரூபம் தன்னை ஆஶ்ரயித்திருக்குமென்கைக்கு உறுப்பாகத் தான் இவருடைய ஹ்ருதயத்திலே இருக்கிறவிருப்பையும், ஸர்வாந்தராத்மபூதனான தன்னுடைய நிரதிஶயஜ்ஞாநாநந்த யோகத்தையும், அஹமர்த்தபூதனான ஆத்மாவும் தனக்கு ப்ரகாரபூதனென்னு மிடத்தையும், ஸர்வகாரணபூதனான தான் விலக்ஷணஸாரஸ்யத்தையுடையனான சேதநனுக்கு அப்ருதக்ஸித்தனான நிலையையும், ஸ்வப்ரகாரபூதனான ஆத்மாவினுடைய [illegible]ரவஹமத்வத்தையும், நிஷ்க்ருஷ்டாத்மஸ்வரூபத்தினுடைய ப்ராப்யபாவத்தையும், ஏவம்வித ஆத்மஜ்ஞாநமில்லாதாருடைய ஸம்ஸாரஸம்பந்தத்தையும், ஆத்மப்ராப்திகாமனுடைய அந்திமஸ்ம்ருத்யபேக்ஷையையும், ஸ்வரூபைக்யரூபமான மோக்ஷம் அஸம்பாவிதமென்னுமிடத்தையும், ஏவம்விதனான ஆத்மாவுக்குத் தன்பக்கல் ப்ரத்யாஸத்தியே உஜ்ஜீவநஹேதுவென்னுமிடத்தையும் ப்ரகாஶிப்பித்தபடியை அநுஸந்தித்து, இப்படி விலக்ஷணமான ஆத்மாவினுடைய நைர்தோஷ்யத்தை ப்ரகாஶிப்பித்துத் தன்திருவடிகளிலே சேர்த்துக்கொண்டானென்று ப்ரீதராகிறார்.

இ—எட்டாந்திருவாய்மொழியில், * மாயக்கூத்தனில் விடாய்தீர * இருத்தும் வியந்திலே, இப்படி "எவ்வாய்ச்சுடரும் தம்மில் முன்வளாய்க்கொள்ள" என்கிறபடியே நிரவயிகப்ரீதியோடே ஸம்ஶ்லேஷிக்கப்பெற்றானாய், இவர்விடாயும் தீர்ந்து தன்விடாயும் தீர்ந்து தம்மிலும் அதிகப்ரீதனானவன், "இவர் * வளவேழுலகிற்படியே தம்மை 'சிறியேனுடைச் சிந்தையுள்' என்று அயோக்யராக அநுஸந்தித்து அகலுவார் ஒருத்தர்; அத்தாலே வ்ருத்தஸம்ஶ்லேஷம்ஶிதிலமாம்: இஸ்ஸம்ஶ்லேஷரஸம் கலங்காமே உருவச்செல்லுகைக்கு உறுப்பாக ஆத்மவைலக்ஷண்யத்தைக் காட்டுவோம்" என்று காட்டிக்கொடுக்கையிலே உபக்ரமித்தான்; இவர்தாம் அகலநினைப்பது - "நித்யஸம்ஸாரியாய்ப்போந்த இவ்வாத்மா அங்குத்தைக்கு அயோக்யம்" என்றாயிற்று; அவன் வைலக்ஷண்யத்தைக் காட்டிக் கொடுக்கையாவது: — "ஸ்வயம்ப்ரகாஶஜ்ஞாநாதி குணகமாய், "ஈஈவுவொஊடுகிலெவெஷெஷீழு" என்று பிராட்டிமாரோபாதியும் ஸ்ரீகௌஸ்துபத்தோபாதியும் உம்மோட்டைச்சேர்த்தி நமக்கு ஸத்ருஶமாய்க்காணுமிருப்பது: வந்தேறியான குறையைப் பார்க்கக்கடவீரல்லீர் காணும்"என்றாயிற்று. "இந்தஸ்வரூப வைலக்ஷண்யத்தை இவர்நெஞ்சிலே படுத்தவே இவர் நம்மைவிடார்; அதுசெய்யுமிடத்தில் முதலிலே 'ஆத்மஸ்வரூபத்தைப் பாரீர்' என்னில்; அவ்வாயன்றி யானறியேன்' என்று நம்முடைய குணங்களிலே கால்தாழ்ந்து, புறம்பொன்றில் போகாதவராகையாலே, 'மின்மினிபோலேஇருக்கிற இதுகொடு கார்யமென்?' என்று அத்தைக் காற்கடைக்கொண்டு பிடிதாரார்" என்றுபார்த்து, தன்வடிவைக்காட்டி இவரை வரவணைத்து, இவருடைய ஸ்வரூபம் தனக்கு ப்ரகாரமாய், தன்னைக்காணும் காட்சிக்குள்ளே காணலாம்படியிருக்கிறபடியையும், தனக்கும் நிறங்கொடுக்கும்படியான வைலக்ஷண்யத்தை உடைத்தாயிருக்கிறபடியையும் காட்டிக்கொடுக்கக் கண்டு ப்ரீதராகிறார். முதல் இரண்டரைப்பாட்டாலே – தன்வடிவழகைக்காட்டி, அவ்வழியாலே ஸ்வரூபத்தைக் காட்டிக் கொடுக்கிறானாயிருக்கிறது. " முதல் இரண்டரைப்பாட்டு ஆத்மாஶ்ரயமென்னுமிடத்தைக் காட்டிக்கொடுக்கைக்காக ஆஶ்ரயமான தன்னைக் காட்டிக்கொடுக்கிறான்" என்றும் சொல்லுவர். * "இருத்தும் வியந்தில் அழகு பின்னாட்டுகிறது" என்றும் சொல்லுவர்கள்.

போய்ப்போய் ஒன்றுக்கொன்று மேலாயிருக்கிற * அந்நமய ப்ராணமய மநோமயா க ளுக்கு அவ்வருகாய். [யாதுமின்றித்தேய்ந்தற்று] - அவற்றின் ஸ்வபாவங்கள் ஒன று மின்றிக்கே அவற்றோடேறத்தேய்ந்தற்று. [நன்றுதீதென்றுஅறிவரிதாய்] - தேஹம், தேஹ த் திற்காட்டில் இந்த்ரியம், அதிற்காட்டில் மநஸ்ஸு, அதிற்காட்டில் ப்ராணன் என்றுஒ ர றுக்கொன்று வைலக்ஷண்யமுண்டாகிறுப்போலே, ப்ராக்ருதங்களின்படியால் நன்றே ர றும் தீதென்றும் அறியவரிதாயிருக்கும். [நன்றாய்] - ஸ்வதோவ்யாவ்ருத்தமாய். [ஞான ங் கடந்ததே] - ஐந்த்ரியிகஜ்ஞாநத்துக்கு எட்டாதிருக்கும். கீழில் அவை ஒன்றுக்கோன் று றுவோசியாயிருக்கச்செய்தேயும் ஏகப்ரமாண கம்யத்வ ஸாம்யமுண்டு; அதுவுமில்:) யென்கிறது. ஆக, இப்பாட்டில்-ஸாங்க்யத்தில் தத்த்வஸங்க்யாநக்ரமத்தாலே ஆத்மஸ்) ரூபத்தைச்சொல்லும்படியையும், அதுதன்னை அறிகையிலுண்டான அருமையுஞ்சொ) லிற்று.

(( )

ஆறாம் பாட்டு.

நன்றாய்ஞானங்கடந்துபோய்நல்லிந்திரியமெல்லாமீர்த்து
ஒன்றாய்க்கிடந்தஅரும்பெரும்பாழ் உலப்பிலதனையுணர்ந்துணர்ந்து
சென்றாங் கின்பத்துன்பங்கள் செற்றுக்களைந்துபசையற்றால்
அன்றேயப்போதேவீடு அதுவேவீடுவீடாமே.

ஆ. – (நன்றாய்.) - யோகத்தினாலே ஆத்மஸ்வரூபத்தை ஸாக்ஷாத்கரிக்கை லருமையென்னென்னில்,—ப்ராக்ருதவிஷயங்களினுடைய அஸ்த்திரத்வாதி தோஷாநு ஸந்தாநத்தாலே ரஸயுக்தமான ஸர்வேந்த்ரியங்களையும் ஆத்மவ்யதிரிக்த ஸர்வவிஷய களினின்றும் நிவர்த்திப்பித்தால், இவ்வாத்மஸ்வரூபம் கைவருவது; ஆகையாலே காண்கை அரிதென்கிறார்.

ஒ.—ஆறாம்பாட்டில், யோகசாஸ்த்ரத்தில் ஆத்மஸ்வரூபப்ராப்தி யுபாய மாகச்சொல்லுகிற இந்த்ரியஜயாதிரூபமான யோகத்தாலே ப்ரக்ருதிவிநிர்முக்த ஆத்ம ஸ்வரூபத்தை ஸாக்ஷாத்ப்ராபிக்கலாமென்கிறார்.

[நன்றாய் ஞானங்கடந்து] - அநுபாஷணம். அதவா [ஞானங்கடந்துபோய் நல்லிந்திரியமெல்லாம் ஈர்த்துஒன்றாய்க்கிடந்த அரும்பெரும்பாழ் உலப்பிலதனை, உணர்ந் துணர்ந்து - நன்றாய் - சென்று] - சக்ஷுராதிகரணங்களுக்கு விஷயமான ஶப்தாதி விஷயங்களில் அகப்படாதே தப்பிப்போய்ப் போனாலும் அவையிருந்த இடமேற இழுக் கக்கடவதாய் மிகவும் வலவத்தான இந்த்ரியகணத்தையும் வென்று ஆத்மாவோடு அநாதியாக விவேகிக்கவொண்ணாதபடி ஸம்ஸ்ருஷ்டமாய் ஸூக்ஷ்மமாய் மஹதாதிவிகா ரங்களாலும் ஸ்வரூபத்தாலும் பெரும்பரப்பாய் நித்யமான ப்ரக்ருதிதத்த்வத்தை மிக

மற்று. அவற்றின் ஸ்வபாவமென்றது - தேஹாதிகளின் ஸ்வபாவமென்றபடி. தேஹாதிகள் நன்று தீதென்றறியலாயிருக்கைக்கு ஹேதுவைவும்,அது அப்படி அறியப்போகாதென்னுமத்தையும்தர்ஶிப் பிக்கிறார் - தேஹம் இத்யாதி. இத்தால்பாவம்-கீழில் அவை இத்யாதி வாக்யத்வயம்.ஸாங்க்யத்தில்- ஸாங்க்யஶாஸ்த்ரத்திலென்றபடி. தத்த்வஸங்க்யாநக்ரமம் - தத்வகணநாக்ரமம். க்ரமேணாந்வயீ (ரு)

வும் உணர்ந்து அதில் அவமாநமின்றிக்கே முக்தமாய்ப்போய் அதினுடைய ஸாம ஸாமநிமித்தமான ஸுகதுக்கங்களையும் அற விட்டு அவற்றிலுண்டான ருசிவாஸ னைகளும் போனால். [அன்றே அப்போதேவீடு, அதுவேவீடு] - அன்றே அப்போதே ப்ரக்ருதி தொற்றுமறும்; அதுவே ஆத்மப்ராப்தியாவது. [வீடாமே] - இதுவும் புரு ஷார்த்தமாக இச்சிப்பார்க்குப் புருஷார்த்தமாம்.

ப.—அநந்தரம், யோகசாஸ்த்ரத்வாரா நிஷ்கர்ஷித்து வருந்தி அபரோ க்ஷிக்கப்பட்ட ஆத்மாவினுடைய ப்ராப்யரூபத்தை யருளிச்செய்கிறார்.

நன்றுஆய்-(ப்ராக்ருத ஸகல பதார்த்தங்களிலும் ஸங்காராஹித்யமாகிற) சுத்தி யையுடையராய், ஞானம் - (அந்தவிஷயங்களிலே ஸங்கிப்பதான) வைஷயிக ஜ்ஞாநங் களையும், கடந்து - தப்பி, போய் - (அவ்வருகே) போய், நல் - (இந்த ஜ்ஞாநஜநகத் வாரா இவனைத் தப்பாமல்ப்ரவர்த்திப்பிக்கும்) நன்மையுடைத்தான, இந்திரியம் - இந் த்ரியங்கள், எல்லாம் - எல்லாவற்றையும், ஈர்த்து - தலையழித்து, ஒன்றாய்க்கிடந்த - ("ஸ்ரீஜெதவஷாநாஷஷிஷக" என்கிறபடியே துர்விவேசயாம்படி சேதநனோடு) சேர்ந்துகிடப்பதாய், அரு - துரத்யயமாய், பெரு - ("ஊநஜஸூநஜஸூஜஸூ ஜூநஂவாவிஷூதெ" என்று தான்) அபரிச்சின்நமாய், உலப்பு இல் - (கார்யமுகத்தாலே) அஸங்க்யாதமுமாயிருக்கிற, பாழ்தனை - ப்ரக்ருதிதத்த்வத்தை, (ஆத்மாவிற்காட்டில் அத்யந்தவைஹிர்ப்பூதமாம்படி), உணர்ந்துணர்ந்து - (ஶ்ரவணமநநாதிகளால் பலகாலும்) உணர்ந்துணர்ந்து, சென்று - போய், ஆங்கு - அந்த ஆத்மவிஷயத்தில், இன்பத்துன் பங்கள் - (ப்ராக்ருதமாய் புண்யபாபகார்யமான) ஸுகதுக்கங்களை, செற்றுக்களைந்து - ஸஹேதுகமாகக் கழித்து, பசை - (தத்விஷய வாஸநாருசிகளுமாகிற) பசையும், அற் றால் - அற்றால், அன்றே - அந்நாளிலே, அப்போதே - அம்முஹூர்த்தத்திலே, வீடு - (ஸகல ஸாம்ஸாரிக தோஷ) மோக்ஷம்பிறக்கும்: அதுவே - அதுவே, வீடு - ஆத்மாநு பவ மோக்ஷமாகிறது: வீடாமே — ஐகவத்ப்ராப்பூதமாய் விலக்ஷணமான ஆத்மாநுப வமும் ப்ராப்யாந்தர்க்கதமாகக் குறையில்லை.

இ.—ஆறும்பாட்டில்,யோகஶாஸ்த்ரத்தில் இந்த்ரியஜயாதிரூபமானயோகத் தாலே ப்ரக்ருதி விநிர்முக்த ஆத்மஸ்வரூபத்தை ஸாக்ஷாத்கரிக்கலாமென்கிறார்.

[நன்றாய் ஞானங்கடந்துபோய்] - அநுவாஷணமென்றுதல். "நன்றாய்" என்கிற இதுகிடக்க; ஶப்தாதிவிஷயங்களை ஜ்ஞாநஶப்தத்தாலே சொல்லுகிறது. [நல் லிந்திரியமெல்லாம் ஈர்த்து] - தப்பிப்போனாலும் அவையிருந்தவிடத்தே இழுக்கக்கடவ ப்ரபலமான இந்த்ரியகணத்தையும் வென்று. [ஒன்றாய்க் கிடந்த] - ஆத்மாவோடு சேர்ந்து விவேகிக்க ஸம்ஸ்ருஷ்டமாய். [அரும்பெரும் பாழ்] - "ஜஜஜாயாதுரத்யயா" என்கிறபடியே துஸ்தரமாய் மஹதாதிவிகாரங்களாலும் காரண மான அவ்யக்தஸ்வரூபத்தாலும் பெருப்பரப்பையுடைத்தாய் போகமோக்ஷங்களை விளைத்துக்கொள்ளுகைக்கு யோக்யமாய். [உலப்பிலதனை உணர்ந்துணர்ந்து] - நித்ய மான ப்ரக்ருதிதத்த்வத்தை மிகவுமுணர்ந்து. [நன்றாய் சென்று] - ப்ரக்ருதிப்ராக்ரு தங்களில் கால்தாழாதே முக்தனாய்ச்சென்று. [அங்கு] - ஆத்மஸ்வரூபத்திலே. [இன் பத்துன்பம் இத்யாதி] - ப்ராக்ருதங்களை த்யாஜ்யமென்று விட்டாலும், ஸுகதுக்க ஹேதுவான புண்யபாபங் கிடக்குமாகில், அவை கொடுவந்து மூட்டுமிறே; புண்யபாப ஹேதுவான ஸாஹஸாஜங்களைப் பற்றிவரும் ஸுகதுக்கங்களைவிட்டு. [பசையற்

ருல்] - அவற்றைவிட்டாலும் ருசிவாஸநைகள் கிடக்குமாகில் பின்னையும் ஸர்ஷிக்கு :
அந்த ருசிவாஸநைகளும் போனால் [அன்றேஇத்யாதி] - அம்முஹூர்த்தத்திலே ப்ராக்ரு
ப்ராக்ருதங்களில் தொற்றறும். ப்ரக்ருதிபின்தனை ஸ்ஸளகுமார்யமுடையாரில்லை. த
பக்கல் த்யாஜ்யபுத்திபண்ணினாரைத் தானும் முகம்பாராது. [அதுவேவீடு] - "அ
றது பற்றெனில் உற்றதுவீடுயிர்" என்று ப்ராக்ருதங்களில் தொற்றுஅற்றவாறே ஆ
ப்ராப்திலக்ஷணம் மோக்ஷமாயிருக்கும். அதுக்கென்னச் செய்யவேண்டுவதொன்றில்
[வீடாமே] - இதுவும் ஒரு புருஷார்த்தமாம். ஸர்வேஶ்வரன் ப்ராப்யனாமிடத்தி
அவனுக்கு ப்ரகாரமாய்க்கொண்டு ஆத்மாவும் ப்ராப்யமாகக் கடவதாகையாலே இது
புருஷார்த்தமாமே என்கிறார். தம்முடைய உத்தேஶ்யத்தில் ஏகதேசத்தைப் பு
ஷார்த்தத்தில் சரமாவதியாக நினைக்கையாலேயிறே முன்பு இவர் இத்தைச் சிரி

ஈடு. — ஆறாம்பாட்டு. யோகஶாஸ்த்ரத்திற் சொல்லுகிறபடியே இந்த்ரி
ஜயாதிரூபமான யோகத்தாலே பரக்ருதிவிநிர்முக்தஆத்மஸ்வரூபத்தை துஃகேந ஸாக்ஷா
கரிக்கலா மென்கிறார்.

[நன்றாய் ஞானங்கடந்துபோய்] - வ்யாவ்ருத்தமான நன்மையை யுடை
தாய், இந்த்ரியஜ்ஞாநத்துக்கு அவிஷயமா யிருக்குமென்று அவற்றை அநுஸந்திக்கி
தென்னவுமாம். நன்றாயென்கிற இதுகிடக்க, ஶப்தாதி விஷயங்களைத் தப்பிப்டே
யென்னுதல். "ஜ்ஞாயத இதிஜ்ஞாநம்" என்கிற ப்ரக்ரியையாலே - ஜ்ஞாநமெ
கிறது: ஜ்ஞாநத்தால் காணப்படும் விஷயங்களை, ஜ்ஞாநஶப்தத்தாலே சொல்லுகிற
[நல்லிந்திரியமெல்லாமீர்த்து] - விஷயங்களைத் தப்பிப்போனாலும், அவையிருந்தவிட
களிலே மூட்டக்கடவதான ஸாமர்த்யத்தையுடைய இந்த்ரியங்களையும்கழித்து. [ஒ
ன்றாய்க்கிடந்த இத்யாதி] - அநாதிகாலம் சேதநனோடு ஸம்ஸ்ருஷ்டமாய்க் கிடப்பதாய்
"[illegible]" (மமமாயாதுரத்யயா) என்கிறபடியே ஒருவரால் கடக்க வ
தாய், மஹதஹங்காராத்யவஸ்தைகளாலே பரப்பையுடைத்தாய், போகமோக்ஷங்கஃ
விளைத்துக்கொள்ளலாம்படியாய், ப்ரவாஹரூபத்தாலும் ஸ்வரூபத்தாலும் நித்யமாயிரு
கிற அசித்தத்த்வத்தை ; ப்ரக்ருதியை கார்யங்களாயும் காரணங்களாயு மிருக்குமென்ன
மிடத்தை மிகவுமுணர்ந்து. [ஆங்கு - நன்றாய் - சென்று] - தன்பக்கல் போக்யத
புத்தியைப் பிறப்பிக்கக் கடவதான இதில் கால்தாழாதே, ஆத்மஸ்வரூபத்தளவும்சென்ற

ஆறாம்பாட்டு. — நன்றாய் இத்யாதி. "நல்லிந்திரியமெல்லாமீர்த்து" என்றுதொடங்கி "அன்றேயப்போதேவீடு" என்னுமளவும் கடாக்ஷித்து அவதாரிகை - யோகஶாஸ்த்ரத்திலே இத்யாதி.

த்விதீயார்த்தத்துக்கு, "ஆங்கு - நன்றாய் - சென்று" என்று மேலே அந்வயம். ஜ்ஞா
மென்று விஷயங்களைச் சொல்லுமோவென்ன - ஜ்ஞாயதே இத்யாதி. விவரணம் - ஜ்ஞாநத்தால் இத்யாதி. இந்த்ரியங்களுக்கு நன்மையேதென்ன - விஷயங்களை இத்யாதி. இவ்விடத்திலே [illegible] [illegible]" என்றது அநுஸந்தேயம். ஈர்த்து-கழித்து. மஹதாதி கார்யாவஸ்தையைப் பற்ற - ப்ரவாஹரூபத்தாலும் நித்யமாய் என்றது. காரணாவஸ்த்தையைப்பற்ற - ஸ்வரூபத்தாலும் நித்யமாய் என்றது. "உணர்ந்துணர்ந்து" என்கிற வீப்ஸைக்கு அர்த்தம் - ப்ரக்ருதியை இத்யாதி. "ஆங்கு - சென்று" அவ்வாத்மவஸ்துவிலே சென்று என்றுஶப்தார்த்தம். "நன்றாய்" என்

[இன்பத்துன்பம் இத்யாதி] - அத்தை "த்யாஜ்யம்" என்று விட்டாலும், ஸுகதுஃகங்களுக்கு ஹேதுவான புண்யபாபகர்மங்கள் கிடக்குமாகில் பின்னையும் கோண்டு மூட்டுமிறே; அவற்றையும் விட்டு. அவற்றைவிட்டாலும் ருசிவாஸநைகள் கிடக்குமாகில் பின்னையும் கர்ப்பிக்கும்: [பசையற்றால்] - ருசிவாஸநைக ளற்றால். [அன்றேயப்போதே] - அக்காலத்திலே அம்முஹூர்த்தத்திலே. [வீடு]-ப்ரக்ருதி ப்ராக்ருதங்களில் தொற்றுஅறும். ப்ரக்ருதியின்தனை சுணையும், ஸௌகுமார்யமுமுடையதில்லை. தன்பக்கல் த்யாஜ்யபுத்தி பண்ணினாரைத் தானும் முகம்பாராது. [அதுவேவீடு] - "அற்றதுபற்றெனிலுற்றது வீடுயிர்" என்று-ப்ராக்ருதங்களில் தொற்றுஅற்றவாறே ஆத்மப்ராப்திலக்ஷண மோக்ஷமாயிருக்கும். அதுக்கென்னச் செய்யவேண்டுவதில்லை. [வீடாமே] - அவனுக்கு ப்ரகாரமாக ஆத்மவஸ்துவை அநுஸந்தித்து, அவ்வழியாலே இதுதன்னை ப்ராப்யமாகவிறே இவர்தாம் நினைத்திருப்பது. அவ்வளவுபோகமாட்டாதே, இதின் நன்மையைக்கண்டு இவ்வளவிலே கால்தாழ்வார்க்கும் போந்திருந்ததீ! என்கிறார். தம்முடைய உத்தேஶ்யத்தில் ஏகதேசத்தைப் புருஷார்த்தத்தில் சரமாவதியாகக் கொள்ளுகையாலேயிறே முன்பு இவர் இத்தைச் சிரித்திருந்தது. (௬)

ஏழாம் பாட்டு.

அதுவேவீடு வீடுபேற்றின்பந்தானுமதுதேறி
எதுவேதானும்பற்றின்றி யாதுமிலிகளாகிற்கில்
அதுவேவீடு வீடுபேற்றின்பந்தானுமதுதேறாது
எதுவே வீடு? எதின்பம் என்றெய்த்தாரெய்த்தாரெய்த்தாரே.

துக்கு ஹாவம் - தன்பக்கல் இத்யாதி. இன்பத்துன்பங்கள் என்றது - ஸுகதுஃகஹேதுவான புண்யபாபங்களையென்றபடி. பலாபிஸந்திரஹிதமான கர்மாநுஷ்டாநத்தாலே முன்பு ஃபலாபிஸந்தியுக்தமாகப் பண்ணின புண்யபாபங்கள் க்ஷயிக்கும்; அத்தைப்பற்ற - அவற்றையும் விட்டு என்கிறார். "செற்றுக்களைந்து-" முழுச்சொல்லு: ஸவாஸநமாகவிட்டு. வீடு - விடுகையுண்டாம். இவனாசையற்றாலும், அநாதியாய் வருகிற ப்ரக்ருதிஸம்பந்தம் விடுமோவென்ன - ப்ரக்ருதியின் தனை இத்யாதி. அதெப்படியென்ன - தன்பக்கல் இத்யாதி. சுணை - லஜ்ஜை. இவ்விடத்திலே - "ப்ரக்ருதேஸ்ஸுகுமாரதரம் நகிஞ்சிதஸ்தீதி மே மதிர்பவதி। யாத்ருஷ்டாஸ்மீதி புநர்ந தர்சநமுபைதி புருஷஸ்ய" என்ற ஸாங்க்யகாரிகை அநுஸந்தேயம். "அதுவே என்ற அவதாரணார்த்தம் - அதுக்கென்ன இத்யாதி. நினைத்திருப்பது என்றவநந்தரம், 'இப்படி இருக்கிறவர் "வீடாம்" என்று ஈடுபடுவானென்னென்ன' என்று கூட்டுவது. இப்ப்ரஶ்நைக்கு பரிஹாரம் - அவ்வளவு இத்யாதி. இப்போது கொண்டாடுகிறவர், "அதுசெற்று" என்று முன்பு நிரஸிப்பானென்னென்ன - தம்முடைய இத்யாதி. ஏகதேசத்தை என்றது - தமக்கு உத்தேஶ்யமான பகவதநுபவ ஸுகத்திற்காட்டில் அல்பமான ஆத்மாநுபவஸுகத்தை என்றபடி. ஆக, ஈடுபடுகிறது அவர்களபிப்ராயத்தாலே. சிரித்திருந்தது - ஸ்வாபிப்ராயத்தாலே என்றபடி. அன்றே - அக்காலத்திலே. அப்போதே - அம்முஹூர்த்தத்திலே என்றபடி. க்ரமேணாந்வய:. அதுவேவீடு- விடுகைதானே ஆத்மப்ராப்திலக்ஷண மோக்ஷமாயிருக்கும். வீடாமே - ஆத்மப்ராப்திலக்ஷணமோக்ஷந்தானே, அவனுக்கு ப்ரகாரதயா அநுஸந்திக்கிற வழியாலே ப்ராப்யமுமாயிருக்குமென்றபடி. (௬)

ஆ.—(அதுவேவீடு.) - இந்த ஆத்மஸ்வரூபாவிர்பாவமே மோக்ஷமாகிற. ம:
மோக்ஷம்பெற்றால் பெறும்ஸுகமாவதும் அதுவேயென்று அத்யவஸித்துக்கொண் டு
வ்யதிரிக்த விஷயஸங்கத்தையெல்லாம் விடில், ஆத்மஸ்வரூபாவிர்பாவலக்ஷணமாயிரு ந
மோக்ஷம் கைவரும்: இப்படிசெய்யாதார்க்குக் கைவாராது: அவர்கள் ஸம்ஸரித்தே தே ர
மித்தனையென்கிறார்.

ஒ.—ஏழாம் பாட்டில், இங்குச் சொன்னபடியே ஆத்மாவலோகநம் ப ர
ணப்பாராதே அத்தையும்விட க்ஷமராகில்; அது மோக்ஷமாவதுவும் மோக்ஷத்தா ல்
பெறும் ஸுகமாவதுவும்.

[அதுவே வீடென்று மேலுக்த] - அதுவே மோக்ஷமாவதுவும் மோக்ஷ ;
தால் பெறும் ஸுகமாவதுவும் என்று தேறாதே எதுவே மோக்ஷம் எதுவே ஸுக ,
என்று அத்யவஸிக்கமாட்டாதார் என்றும் க்லேசப்பட்டேபோமத்தனை.

ப.—அநந்தரம், உக்தப்ரகாரத்திலே ஆத்மாவலோகநம்பண்ணாதார், தத்
பாவஸித்தியின்றியே ஸம்ஸரிப்பர்களென்கிறார்.

அதுவே - (கீழ்முகவத்ப்ரகாரதயா ப்ரஸ்துதனான) ஆத்மாவினுடைய அநு
பவமே, வீடு - மோக்ஷமாவது ; வீடுபேறு - அந்த மோக்ஷலாபத்தால்வரும், இன்ப
தானும்அது - ஆநந்தமுமேயாக, தேறி,-நிஷ்கர்ஷித்து, எதுவேதானும் - ப்ரக்ருதி ப்ரா
க்ருதங்களெல்லாவற்றிலும், பற்று- (போக்யபோகோபகரண போகஸ்தாநரூபேணவரு
கிற) ஸங்கம், இன்றி - அற்று, யாதும் - (அத்தாலேவந்த) ருசிவாஸனைகளும், இலிக
ளாகில் - இன்றியிலேயொழியப்பெறில், அதுவே - (முன்பு தான் அறுதியிட்ட) ஆத்
மாநுபவமே, வீடு-மோக்ஷமும், வீடுபேறு - மோக்ஷலாபஜநிதமான, இன்பந்தானும்
ஆநந்தமும், அது - அதுவே; தேறாது - (இப்படி ஸ்வதாத்மகமாக ஆத்மாவை) நிஷ்க
ர்ஷிக்கமாட்டாதே, 'எது - எது, வீடு - மோக்ஷம்? இன்பம் - (அத்தால்வரும் ஸுகம்)
எது - எது?' என்று - என்று, எய்த்தார் - சித்ததௌர்ப்பல்யம்பிறந்தவர்கள், எய்த்தார்
எய்த்தாரே - கர்ப்பநரகங்களிரண்டாலும் எய்த்தேவிடுவார்கள்.

ஈ.—ஏழாம்பாட்டில், இங்குச் சொன்னபடியே ஆத்மாவலோகநம் பண்
ணப்பாராதே வேறே சில வழிகளாலே ப்ராபிக்கப் பார்க்கில் அது கைவாராதென்கி
றார்.

[அதுவே வீடு] - அந்த ஆத்மப்ராப்தியே மோக்ஷமாவது. [வீடு பேற்றின்
பந்தானுமது] - அம்மோக்ஷத்தைப் பெற்றால் வரும் ஸுகமாகிறதும் அந்த ஆத்மாநு
பவமே. [தேறி] - இப்படி தெளிந்து. [எதுவேதானும் பற்றின்றி] - ப்ரக்ருதியிலும்
ப்ராக்ருதமான சப்தாதிகளிலும் உண்டான பற்றடங்க அற்று. [யாதுமிலிகளாகி
கில்] - அவற்றிலுண்டான வாஸனைகளும் அறத் தவிரப்பெறில். கர்மத்தை அநுஷ்ட்
டித்து ஜ்ஞாநத்தையுடையனாய், ஸ்திதப்ரஜ்ஞாக்யாவஸ்தைகள் பிறந்து யோகமும்
நிலைநின்று, ஆத்மஸாக்ஷாத்காரம் பண்ணப்பெறில். [அதுவே வீடு] - கீழ்ச் சொன்ன
ஆத்மப்ராப்தியேமோக்ஷம் [வீடு பேற்றின்பந்தானுமது] — மோக்ஷஸித்தியால் வரும்
ஸுகமும் அந்த ஆத்மாநுபவம். [தேறாது] - இப்படி தெளியமாட்டாதே. [எதுவே
வீடு எதின்பமென்று எய்த்தார்] - 'மோக்ஷமாகிறது எது? மோக்ஷஸுகமாகிறது எது?'
என்று இளைத்தவர்கள். [எய்த்தாரெய்த்தாரே] - என்றும் க்லேசப்பட்டுப் போமித்
தனை. நிராச்ரயமாக ஆத்மஸ்வரூபத்தை அநுஸந்திக்கை நிஷ்ப்ரயோஜநமென்கை.

ஈடு.— ஏழாம்பாட்டு. கீழ்ச்சொன்ன உபாயத்தின்படியே அவ்வஸ்துவை ப்ராபிக்கமாட்டாதே அதிலே ஸம்ஶயமநுவர்த்திக்குமவர்கள் உருவ க்லேஶப்பட்டேபோமித்தனை யென்கிறார்.

[அதுவேவீடு] - கீழ்ச்சொன்ன அதுவே ஆத்மப்ராப்திலக்ஷணமோக்ஷமாகிறது. [வீடுபேற்றின்பந்தானுமது] - அம்மோக்ஷத்தை ப்ராபித்தால்வரும் ஸுகமும் அதுவே. [தேறி] - இப்படி தெளிந்து. [எதுவேதானும்பற்றின்றி] - ப்ரக்ருதிப்ராக்ருதங்களிலுண்டான தொற்றற்று. [யாதுமிலிகளாகிற்கில்]-அதில் ருசிவாஸனைகளும் அறப்பெறில். கர்மத்தையநுஷ்டித்துஜ்ஞாநத்தையுடையனாய்,*ஸ்த்திதப்ரஜ்ஞாவஸ்த்தையாவஸ்த்தைபிறந்து, யோகமும் தலைநின்று, ஆத்மஸாக்ஷாத்காரம்பண்ணப்பெறில். [அதுவேவீடு] - கீழ்ச்சொன்ன ஆத்மப்ராப்தியே மோக்ஷம். [வீடுபேற்றின்பந்தானுமது] - மோக்ஷஸித்தியில்வரும் ஸுகமும் அந்த ஆத்மாநுபவம். [தேறுது] - இப்படி தெளியமாட்டாதே. [எதுவே வீடேதின்பமென்றெய்த்தார்]-'மோக்ஷமாகிறது எது? மோக்ஷஸுகமாகிறது எது?' என்று இளைத்தவர்கள். [எய்த்தாரெய்த்தாரே] - இளைத்தாரிளைத்தாரென்று உருவ க்லேஶப்பட்டேபோமித்தனை; நிராஶ்ரயமாக ஆத்மஸ்வரூபத்தை அநுஸந்திக்கை நிஷ்ப்ரயோஜநமென்கை. (எ)

எட்டாம் பாட்டு.

எய்த்தாரெய்த்தாரெய்த்தாரென்று இல்லத்தாரும்புறத்தாரும்
மொய்த்து ஆங்கலறிமுயங்கத் தாம்போகும்போது உன்மத்தர்போல்
பித்தேயேறியனுராகம்பொழியும்போது எம்பெம்மானோடு
ஒத்தேசென்று அங்குள்ளங்கூடக்கூடிற்றாகில் நல்லுறைப்பே.

ஏழாம்பாட்டு.—அதுவே இத்யாதி. "எதுவேவீடேதின்ப மென்றெய்த்தாரெய்த்தாரெய்த்தாரே" என்றத்தைக்கடாக்ஷித்து அவதாரிகை - கீழ்ச்சொன்ன இத்யாதி. கீழ்ச்சொன்ன உபாயமாவது - யோகஶாஸ்த்ரம்.

வீடுபேற்றின்பம் - வீடுபெறுகையாலுண்டான ஆநந்தம். "அதுவேவீடு, வீடுபேற்றின்பந்தானுமதுதேறி" என்றது - ஜ்ஞாநதசை. "எதுவேதானும்" என்று-முழுச்சொல்லு. "யாதும்" என்று - ருசிவாஸனைகளைச் சொல்லுகிறது. "இலிகளாகிற்கில்-" இல்லாதவர்களாகப்பெறில். விவரணம் - கர்மத்தை இத்யாதி. கர்மத்தையநுஷ்டிக்கையாவது - ஃபலாபிஸந்திரஹிதமாக வர்ணாஶ்ரமதர்மங்களைச் செய்துபோருகை. ஜ்ஞாநத்தையுடையனாகையாவது - ஆத்மப்ராப்திக்கு ஸாதநமுமாய், இந்த்ரியஜயாதிரூபமான ஜ்ஞாநயோகத்திலே ஆரம்பிக்கை. ஸ்த்திதப்ரஜ்ஞாவஸ்த்தையை பிறக்கையாவது - விஷயங்கள் வந்துமேலிட்டாலும் கலங்காததைர்யத்தையுடையவனாகை. யோகம் தலைநிற்கையாவது - ஜ்ஞாநாநந்தலக்ஷணமான ஆத்மவஸ்து ப்ரதிபாஸிக்கும்படி அஷ்டாங்கயோகத்திலே முதிர்நிற்கை. கீழ், "அதுவேவீடு" இத்யாதி - ஜ்ஞாநதசை; இங்கு, "அதுவேவீடு" இத்யாதி - ஃபலதசை. நிராஶ்ரயமாக என்றது - யோகஶாஸ்த்ரக்ரமத்தாலன்றிக்கே என்னுதல், விஶ்வாஸஹீநமாக என்னுதல். என்று தேறி என்றும், என்று இப்படி தேறுது என்றும் கூட்டுவது. க்ரமேணாந்வய:. (எ)

ஆ.—(எய்த்தாரெய்த்தார்.) - இவ்வாத்மஸ்வரூபாவிர்பாவலக்ஷண மோ மானது இந்த்ரியஜயமாத்ரத்தாலே கைவாராது, அந்திமதசையிலே பகவத்ஸமாந ராத்மாநுஸந்தாநமும் வேண்டுமென்கிறார்.

ஒ.—எட்டாம்பாட்டில், இப்படி உக்தஸம்பாதமான ஜ்ஞாநம் ஒரு கைவந்தாலும், அந்திமஸ்ம்ருதி இல்லையாகில் அந்த ஜ்ஞாநம் கைவருகைக்குப்பட க்லேஶமெல்லாம் வ்யர்த்தமென்கிறார்.

[எய்த்தாரென்று தொடங்கி] - முடிந்தாரென்று பலகால் சொல்லி ஸ்வ ஹத்தில் ஆர்யாதிகளும் அவர்களுடைய அவஸ்தையை அறியவந்த புறம்புள்ளா திரண்டு அத்தசையிலே இவர்கள் தங்களுக்கு ஸபாவஹமாம்படிக் கூப்பிட்டுக் கட் கொள்ள, தாங்கள் ஶரீரத்தை விட்டுப்போம்போது. [உன்மத்தரென்று தொடங்கி எத்தனையேனும் வீதராகருங்கூட உன்மத்தரைப்போலே அறிவுகெட்டுப் புத்ராதி பக்கலிலே மிகவும் ஸ்நேஹத்தைப்பண்ணும் தசையிலே எம்பெருமானுடைய கை க்ஷண்யத்தை அநுஸந்தித்து "இப்படி விலக்ஷணன்" என்று ஆத்மாவை அநுஸந்திக் கூடிற்றாகில் ஆத்மப்ராப்தி ஸித்திப்பது. இல்லாவிடில் செய்ததெல்லாம் வ்யர்த்த "நின்ற ஒன்றை உணர்ந்து" என்கிற பாட்டுத்தொடங்கி இப்பாட்டளவும், "அவர் நி க்ருஷ்டாத்மாநுஸந்தாந மாத்ரமின்றிக்கே பகவச்சேஷமானவளவும் ஆத்மாவை அ ஸந்திக்கிறது என்றும், இப்பாட்டில், "அந்திமஸ்ம்ருதியும், எம்பெருமான் இவ்வாத் தனக்கு போக்யமென்றிருக்குமாபோலே, இவன்றனக்கும் அத்தசையில் போக்யத்வா ஸந்தாநம் கூடுமாகில் அவனுக்கு ஆத்மப்ராப்தி உள்ளது. இல்லையாகில் கிடையாது என்றும் சொல்லுவர்.

ப.—அநந்தரம், கீழ்க்தமான ப்ரக்ரியையாலே ஆத்மப்ராப்திகாமனுக் தாவலோகநரூபமாநஸாதநம் கைப்பட்டாலும், பகவத்விஷயமான அந்திமஸ்ம்ரு யுண்டாகிலுமாயிற்று ப்ராப்தி ஸித்திப்பது என்கிறார்.

'எய்த்தார் - (அவயவங்கள் வ்யாபாரக்ஷமமல்லாதபடி) இளைத்தார், எய்த்தா (இந்த்ரியங்கள் விஷயக்ரஹணஸமர்த்தங்களாம்படி) இளைத்தார்,' எய்த்தார் - (ஶ்வா மும் மந்தீபவிக்கும்படி) இளைத்தார், என்று - என்று, இல்லத்தாரும் - க்ருஹத்தி ஸார்யாபுத்ரப்ருத்யாதிகளும், புறத்தாரும் - புறம்புள்ள ஸம்பந்திவர்க்கவ ப்ரப்ரு களும்,மொய்த்து - திரண்டு, ஆங்கு - அவ்வவஸ்தையிலே, அலறி - இரிபக்கூப்பிட் முயக்க - மேல்விழ, ("[illegible]" என் இவர்கள்பக்கலிலே நெஞ்சைவைத்து, யமபடரே வழித்துணையாக), தாம் - தா போகும்போது - போம் அவஸ்த்தையிலே, உன்மத்தர்போல் - உந்மாதங்கொண்ட ரைப்போலே, பித்தேபேறி - நெஞ்சுகலங்கி, ("[illegible]" என்று இ றின்பக்கல் மமதையாலே), அனுராகம் - அநுராகம், பொழியும்போது - அபிவர்த்தி கும்காலத்தில், (இக்கலக்கமற்றுத் தெளிவுபிறந்து), எம்பெம்மானோடொத்தேசென்று என்நாயனை ஈஶ்வரன் இவனைத் தனக்கு போக்யமென்று நினைத்திருக்குமாபோலே இ னும் தன்னை அவனுக்கு போக்யமாக அநுஸந்தித்து, அங்கு - அவன் பக்கலிலே, உ ளம் - (தன்)நெஞ்சு, கூடக்கூடிற்றாகில்-சென்றுகூடப்பெற்றதாகில், நல்-நல்ல, உறைப்பு உறுதி. தத்ப்ரகாரபூதனை ஆத்மாவை லஹித்ததாகலாம். இப்படி துஸ்ஸஹமான ஆ மாவலோகநத்தையிறே எனக்கு எளிதாக ப்ரகாஶிப்பித்ததென்று கருத்து.

இ.—எட்டாம்பாட்டில், இச்சோத்ஸவஸம்பாதகமானஜ்ஞாநம் கைவந்தாலும் அந்திமஸ்ம்ருதி இல்லையாகில் இஜ்ஜ்ஞாநம் கைவருகைக்குக் கீழ்ச் செய்தவையெல்லாம் வ்யர்த்தமென்கிறார்.

[எய்த்தாரெய்த்தா ரெய்த்தாரென்று] - இவனுக்கு உத்க்ரமணதசை பிறப்பதற்குமுன்னே இவன்முடிகை இஷ்டமாயிருக்கையாலே, "முடிந்தான்" என்று பலகாலும் சொல்லுவர்கள். இவன் கலங்கினதசையில் நெஞ்சைத் தெளியவிட ப்ராப்தமாயிருக்க, இவன் பயப்படும்படி "முடிந்தான், முடிந்தான்" என்பர்கள். [இல்லத்தாரும்] - இவன் பார்யாதிகள் ஜீவிக்கும்நாள் லோபத்தாலே சிலவற்றை மறைத்துப் போருகையாலே, "இது ஒருநடுவில் பெருங்குடி என்? எல்லாம் நமக்கே ஆகவேணும்; இவன்போக அமையும்" என்றிருப்பர்கள். [புறத்தாரும்] - இவனும் இவர்களுமான ஸமுதாயந்தன்னைப் பொறாமையாலே புறம்புள்ளார், "போக அமையும்" என்றிருப்பர்கள். பார்யாதிகளுடைய அநாத்மகுணங்களைப் புறம்புள்ளார்க்கு மறைத்திறே இவன்போருவது. [மொய்த்து] - கல்யாணத்துக்கு அழைக்கவேணும்: உத்ஸவத்துக்குத் தாங்களே வருவர்கள் ஆதரத்தாலே. [ஆங்கலறி] - மீளுகைக்கு சங்கை உண்டான தசையிலே, பயத்தாலே ப்ராணன் போம்படி கூப்பிடுவர்கள். [முயங்க] - கட்டிக்கொள்ள; மோஹிக்க என்னவுமாம். கூப்பீட்டிலே போகாத குறைப்ராணனும் போம்படி, ஸ்நேஹித்தார்களாக மேல்விழுந்து கட்டிக்கொள்ளுவர்கள். [தாம்போகும்போது] - "இவர்களைவிட்டுப் போகாநின்றோம்!" என்று நெஞ்சு அங்கேகிடக்க, தன்னால் மீளவொண்ணாதபடியாலே சரீரத்தைவிட்டுத் தாங்களே போகாநிற்பர்கள். [உன்மத்தர் இத்யாதி] - வீதராகருங்கூட உன்மாததசையிற்போலே அறிவுகெட்டு; தெளிவுபிறந்து ஸர்வேச்வரனையும் தன்னையும் அநுஸந்திக்கவேண்டும் தசையிலே கலங்கி. [அநுராகம் பொழியும்போது] - புத்ராதிகள்பக்கலிலே முன்பு ஸ்நேஹியாத நாளைக்கும்போர ஸ்நேஹத்தைப் பண்ணும். இத்தசையிலே அபிமதவிஷயங்களை முன்னே கொடுவந்து நிறுத்துவர்கள். ஜீவித்த நாள், லோபத்தாலே த்ரவ்யத்தைப் புதைத்துவைத்து உபேக்ஷித்தவன் இப்போதாக 'த்ரவ்யத்தையிட்டு அவர்களை ரக்ஷித்துக் காணப்பெற்றிலோம்' என்று கீழ் ஸ்நேஹியாத நாளைக்கும்போர ஸ்நேஹிக்கத் தொடங்கும். [எம்பெம்மான் இத்யாதி] — அத்தசையில் தெளிவுபிறந்து ஈச்வரனுடைய வைலக்ஷண்யத்தை யநுஸந்தித்து, இப்படி அவனோடொத்த சுத்தி இவ்வாத்மாவுக்கு உண்டென்று அநுஸந்திக்கக் கூடிற்றாகில் நல்லவாய்ப்பு. ஆத்மப்ராப்தி ஸித்திக்கும். அல்லாதபோது செய்ததெல்லாம் வ்யர்த்தம். உன்மத்தர்போல் பித்தேறில் அபிமதம் ஸித்தியாது. அநுராகம் பொழியில் ஆதிபரதனைப்போலே மானாய்ப்போமித்தனை. ' "நின்றவொன்றை" என்கிறபாட்டுத் தொடங்கி நிஷ்க்ருஷ்டாநுஸந்தாநமாத்ரமன்றியே பகவச்சேஷத்வபர்யந்தமாக அநுஸந்திக்கிறது. இப்பாட்டிலே 'எம்பெம்மானோடு ஒத்தே சென்று அங்குள்ளங்கூடக் கூடிற்றாகில்' என்கிற அந்திமஸ்ம்ருதியும் எம்பெருமான் தனக்கு சேஷமாக இவ்வாத்மாவை நினைத்திருக்குமாபோலே இவனுக்கும் அத்தசையிலே சேஷத்வாநுஸந்தாநம் கூடுமாகில் நல்லவாய்ப்பு" என்று ஆண்டான் நிர்வஹிக்கும். பகவத்குணங்களிலே வித்தராயிருக்கிற இவர் இதெல்லாம் அநுஸந்திக்கிறதென்? என்னில்,— இப்படி உத்கர்ஷமாயிருக்கிற இத்தைக்கிடீர் எனக்குக் காட்டித்தந்தது! என்று அவன்பக்கல் உபகாரஸ்ம்ருதியாலே என்கிறார்.

ஈடு.—எட்டாம்பாட்டு. இப்படி துஸ்ஸம்பாதமான ஜ்ஞாநம் கைவந்தா
அந்திமஸ்ம்ருதியில்லையாகில் செய்ததெல்லாம் வ்யர்த்தமென்கிறார்.

[எய்த்தாரெய்த்தாரெய்த்தாரென்று]-இவனுக்கு உத்க்ரமணதசை பிறப்ப
முன்னே இவன்முடிகை இஷ்டமாயிருக்கையாலே, "முடிந்தான் முடிந்தான் மு
தான்" என்று பலகாலும் சொல்லாநிற்பர்களாயிற்று. இவன் கலங்கினதசையிலே
சைத்தெளிவித்து உத்தேஶ்யவஸ்துவை அநுஸந்திக்கவல்லனும்படி பண்ணுகை
றிக்கே, "முடிந்தான், முடிந்தான், முடிந்தான்" என்கிற இத்தையே சொல்லாநிற்ப
ளாயிற்று. [இல்லத்தாரும் புறத்தாரும்] - இவன் தான் உள்ளநாளில் இவர்களு
ஒன்றுங்கொடாமையாலே, "இவனும் இதொருநடுவிற்பெருங்குடியும்என்? இவன்முடி
உள்ளத்ரவ்யத்தை நாமே விநியோகங்கொண்டாலாகாதோ?" என்றிருப்பர்கள் ஹார்ய
கள். [புறத்தாரும்] - அவனும் இவர்களுமான ஸமுதாயம் பொறுமையாலே "போ
மையும்" என்றிருப்பர்கள் புறம்புள்ளார். [மொய்த்து] - கல்யாணத்துக்கு அழைத்தா
வாராதவர்கள், து꞉கமுண்டானவாறே தாங்களே வந்து மேல்விழுவர்கள். [ஆங்கலறி
இவனுக்குள்ளதெளிவும் போம்படி கூப்பிடாநிற்பர்கள்; மீளுகைக்கு ஶங்கையுண்ட
தசையிலே, பயத்தாலே ப்ராணன்போம்படி கூப்பிடுவர்கள். [முயங்க] - கட்
கொள்ள. கூப்பீட்டுக்குப்போகாத குறைப்ராணன்களும் போம்படி, ஸ்நேஹிக
போலே மேலேவிழுந்து கட்டிக்கொள்வர்கள். [தாம்போகும்போது] - "இவர்களை
இவ்வைஶ்வர்யத்தையும் விட்டுப் போகாநின்றோம்" என்று நெஞ்சு இங்கேயிழுக்க, த
ளுல் மீளவொண்ணாமையாலே ஶரீரத்தைவிட்டுத் தாங்களே போகாநிற்பர்கள். "தா
போகும்போது" என்கிறார்காணும், - அப்போதை க்லேஶத்தைப்பற்ற. [உன்மத்தர் இ
யாதி] - வீதராகருங்கூட, உந்மாததசையிற்போலே அறிவுகெட்டு; தெளிவுபிறந்த தன்
யும் ஸர்வேஶ்வரனையும் அநுஸந்திக்கவேண்டும்தசையிலே கலங்கி. [அநுராகம்பொழிய
போது] - இளையாளைப் பொன்னையும் பூட்டிக்கொடுவந்து முன்னே நிறுத்துவர்கள். புத்
திகள்பக்கல் ஸ்நேஹியாதநாளைக்கும் போர ஸ்நேஹிக்கத்தொடங்கும். ஜீவிக்கும்நா
லோபத்தாலே இவற்றுக்கு ஒன்றும்செய்யான்; இப்போதாக, "புதைத்துவைத்த தா

எட்டாம்பாட்டு.—எய்த்தார் இத்யாதி. உக்தத்தை அநுவதியாநின்றுகொண்டு, "அ
குள்ளங் கூட" என்ற பதத்தைக் கடாக்ஷித்து அவதாரிகை - இப்படி இத்யாதி.

"எய்த்தார்" என்கிற த்ரிருக்திக்கு ப்ரயோஜநம்-இவனுக்கு இத்யாதி. விவரணம்-இவ
கலங்கின இத்யாதி. "இல்லத்தாரும் புறத்தாரும் மொய்த்து - எய்த்தார்" என்கைக்கு ஹேது
தென்ன, அருளிச்செய்கிறார் - இவன் தான் இத்யாதி வாக்யத்வயத்தாலே. நடுவில்பெருங்குடி
க்ராமண்யம். "மொய்த்து" என்றதுக்கு பாவம் - கல்யாணத்துக்கு இத்யாதி. ஆங்கு - அவ்
வஸ்தையிலே. இருவர்க்கும் ரோதநத்திலுண்டான ஊற்றத்தை யருளிச்செய்கிறார் - இவனுக்
இத்யாதி. விவரணம் - மீளுகைக்கு இத்யாதி. இவர்கள் கட்டிக்கொள்ளுகைக்கும் ப்ரயோஜந
முன்புசொன்ன அபிஸந்தியென்கிறார் - கூப்பீட்டுக்கு இத்யாதி. "தாம" என்றதுக்கு அர்த்தம்
இவர்களையும் இத்யாதி. "போகும்போது" என்றதுக்கு பாவம் - தாம்போகும்போது இத்யாதி
கீழ்வாக்யவிவரணம் - தெளிவுபிறந்து இத்யாதி. அநுராகம்வர்த்திக்கைக்கு ஹேதுவேதென்ன
இளையாளை இத்யாதி. ஹேத்வந்தரம் - புத்ராதிகள் இத்யாதி. முன்பு ஸ்நேஹிக்கவில்லையோ
வென்ன - ஜீவிக்கும்நாள் இத்யாதி. "பொழியும்" என்றதுக்கு அர்த்தம் - இப்போதாக இத்யாதி

தை ஆபரணமாகப்பூட்டிக் காணப்பெற்றிலோம்'' என்று மதகுதிறந்து ஸ்நேஹிக்கும். [எம்பெம்மானோடொத்தேசென்று இத்யாதி] - இப்படி கலங்குகிற ஸமயத்திலே தெளிவுண்டாய், தன்னையும் அவனையும் அநுஸந்தித்து, ''அவனோடொத்தசுத்தியையும் இது உடைத்து'' என்று அநுஸந்திக்கையாகிற இவ்வர்த்தம் கூடிற்றாகில். ''அவ்வஸ்துவும் ஜ்ஞாநாநந்தலக்ஷணமாயிருக்கும்: இவ்வஸ்துவும் ஜ்ஞாநாநந்தலக்ஷணமாயிருக்கும்''என்று அநுஸந்திக்கும்படி அவ்வாத்மவஸ்துவிலே ஹ்ருதயம் சேருகையாகிற அர்த்தம் கூடுமாகில். [நல்லுறைப்பு] - நல்லவாய்ப்பு. (ஆத்மப்ராப்திஸித்திக்கும்.) † அல்லாதபோது, செய்ததெல்லாம் வ்யர்த்தம். உன்மத்தர்போல் பித்தேயேறில் அபிமதம் ஸித்தியாது; அநுராகம்பொழியில் ஆஹாரதனைப்போலே மாளுய்ப்போமித்தனை. ஆண்டான்பணிக்கும்படி - ' ''நின்றவொன்றையுணர்ந்தேனுக்கு'என்னும் பாட்டுத்தொடங்கி, நிஷ்க்ருஷ்டாத்மாநுஸந்தாநமாத்ரமே யன்றிக்கே பகவச்சேஷத்வ பர்யந்தமாக அநுஸந்திக்கிறது; இப்பாட்டில் - 'எம்பெம்மானோடொத்தேசென்றங்குள்ளங் கூடக்கூடிற்றாகில்' என்கிற அந்திமஸ்ம்ருதியும், எம்பெருமான் தனக்கு சேஷமாக இவ்வாத்மவஸ்துவை நினைத்திருக்குமாபோலே, இவனும் அவனோடொத்து அவன்நினைவோடொத்து அத்தசையிலே சேஷத்வாநுஸந்தாநம் கூடுமாகில் நல்லவாய்ப்பு'' என்று. பகவத்குணங்களிலே வித்தராயிருக்கிற இவர் இதெல்லாம் அநுஸந்திக்கிறதேன்? என்னில்,— ''இப்படி அரிதாயிருக்கிற இத்தைக்கிடீர் எனக்குக் காட்டித்தந்தது'' என்று அவன்பக்கல் உபகாரஸ்ம்ருதியாலே. (அ)

எம்பார்யோஜநைக்குச்சேர அர்த்தம் - இப்படிகலங்குகிற இத்யாதி. விவரணம் - அவ்வஸ்துவும் இத்யாதி. அர்த்தாந்தரமாதல். ''அவனோடொத்தசுத்தியையுடைத்து'' என்றது-ஆத்மாவினுடைய ஸ்வாபாவிகாகாரத்தையிட்டு. §''ஒத்தேசென்று-'' ஒத்தசுத்தியையுடைத்தென்று. ஒத்ததேசு என்றத்தை ''ஒத்தேசு'' என்று நீக்குரைத்தல். அங்கு - அந்த ஆத்மவஸ்துவிலே. ''உள்ளங்கூட-'' உள்ளங்கூடுகையாவது - அநுஸந்திக்கையாய், அநுஸந்திக்கிற இவ்வர்த்தம். கூடிற்றாகில் - கூடுமாகில். அல்லாதபோதென்றது - கூடாதபோதென்றபடி. வ்யர்த்தமாம் ப்ரகாரமேதென்ன - உன்மத்தர் இத்யாதி. அபிமதமாவது - ஆத்மப்ராப்தி. மாளுய்ப்போம் என்றவிடத்தில் - ''யம் யம் வாபி ஸ்மரந் பாவம் த்யஜத்யந்தே களேபரம் । தம் தமேவைதி கௌந்தேய ஸதா தத்பாவபாவித:'' என்றது அநுஸந்தேயம். '' 'ஒத்தேசென்று' என்றதுக்குஅர்த்தம் - எம்பெருமான் தனக்கு இத்யாதி. 'எம்பெம்மானோடொத்தேசென்று -' எம்பெம்மான் நினைவோடொத்துச்சேர்ந்து. ஏகாரம் - அவ்யயம். அங்கு - அத்தசையில்; சரமதசையிலென்றபடி. உள்ளம் கூடுகையாவது - சேஷத்வாநுஸந்தாநம். கூடிற்றாகில் - கூடுமாகில். நல்லுறைப்பு - நல்லவாய்ப்பு. பகவதநுபவம் ஸித்திக்குமென்றபடி என்று ஆண்டான் நிர்வாஹத்தில ஸப்தார்த்தம். ''எம்பெம்மானோடு'' இத்யாதிக்கு - என்நாயகனான ஈச்வரன் இவனைத் தனக்கு சேஷமாகநினைத்திருக்குமாபோலே, இவனும் அவனோடொத்து, அதாவது - தன்னை அவனுக்கு சேஷத்வமாய் அநுஸந்தித்து. அங்கு - அவன்பக்கலிலே. ''உள்ளம் - சென்று - கூட'' நெஞ்சுசென்றுகூட, கூடிற்றாகில் - பெற்றதாகில். நல்லுறைப்பு - நல்லவாய்ப்பு. ''தத்ப்ரகாரபூதனான ஆத்மாவை லபித்ததாகலாம்'' என்று உரையில் ஸப்தார்த்தம். உபகாரஸ்ம்ருதியாலே என்கையாலே - உபகர்த்ருத்வ ரூபகுணாநுஸந்தாநத்திலே இதுவும் அந்தர்க்கதமென்றுகருத்து. க்ரமேணாந்வய:. (அ)

---

† குண்டலிதம் இருபத்துநாலாயிரம்.

§ ஒத்தே சென்று என்றுபிரித்தே இவ்வர்த்தம் கொள்ளலாம்: 'ஒத்தேசு என்று'என க்லிஷ்டகல்பனை செய்யவேண்டிய அவசியம் இல்லை.

ஒன்பதாம் பாட்டு.

கூடிற்றாகில்நல்லுறைப்புக் கூடாமையைக்கூடினால்
ஆடற்பறவையுயர்கொடி எம்மாயனாவதுவதுவே
†வீடைப்பண்ணியொருபரிசே எதிர்வும்நிகழ்வுங்கழிவுமாய்
ஓடித்திரியும்யோகிகளும் உளருமில்லையல்லரே

ஆ —(கூடிற்றாகில்.) - பரமபுருஷ ஸமாநாகாரதயா ஆத்மஸ்வரூபம் அ ஸந்நேதயமென்று சொல்லுவானேன்? ததஹிந்நமன்றோ? என்னில்,—பரமபுருஷனுக்கு இவ்வாத்மாவுக்கும் ஐக்யங்கூடுவது ஸாவாஸ வங்களுக்கு ஐக்யங் கூடிலன்றோ? ஆதலா அவனும்அவனே: இவனும்இவனே: அவன் இவனாகக்கூடாது. இங்ஙனே இவற்றை சொல்லுவார் சிலருளரோவென்னில்,— ஸ்வமதி பரிகல்பித நிர்மூல அத்வைதவாதி ளான குத்ருஷ்டிகள் என்றுமுளரென்கிறார்.

ஒ.—ஒன்பதாம்பாட்டில், அந்திமஸ்ம்ருதியிலே ஈஸ்வரனும் ஆத்மா மென்று இருவர் ப்ராஸக்தரானவாறே, "இந்த தத்த்வபேதமும் இல்லை; இவ்வாத்மாவு ப்ரஹ்மமும் ஒன்று" என்றுகொண்டு நித்யஸம்ஸாரியான சேதநனையே ப்ரஹ்மமாக சொல்லுகிற மாயாவாதிகளை க்ஷேபிக்கிறார்.

[கூடாமையென்று தொடங்கி] - "ஸர்வேஸ்வரபரிக்ரஹய்" என்னும் ஹர்ஷ ப்ரகர்ஷத்தாலே ஆடாநின்றுள்ள பெரியதிருவடியைத் தனக்குப் பரிகரமாகவுடை னாய் ஆஸ்சர்யமான குணசேஷ்டிதங்களையுடையனான ஸர்வேஸ்வரனாகை ஸம்ஸாரியா இந்த ஜீவாத்மாவுக்குக்கூடுவது, அஸம்பாவிதமான ஸம்பாவிஷாணாதிகள் உண்டாகக்கூடில் [அதுவதுவே] - அந்த ஆத்மவஸ்து அந்த ஆத்மவஸ்துவேயா யிருக்குமத்தனை [வீடைப் பண்ணியென்று மேலுக்கு] - இங்ஙனே மோக்ஷஞ் சொல்லுவாரும் உளரோ என்னில்,—ப்ரமாணமூலமாகவன்றிக்கே ஸ்வபுத்திகளாலே சிலவற்றை மோக்ஷ மாகக்கட்டி காலத்ரயத்திலும் இந்த மோக்ஷத்துக்கு யத்நப்பண்ணி வ்யர்த்தமே தட்டித் திரிவாரும் உளர்; இல்லாமை இல்லை.

ப —அநந்தரம், இப்படி ப்ரகாரதயா ப்ராப்தியின்றியே ஸ்வரூபைக்யப் மோக்ஷமென்கிற குத்ருஷ்டிபக்ஷம் அஸம்பவக்ரஸ்தமென்று அதிக்ஷேபிக்கிறார்.

கூடிற்றாகில் - (நித்யஸம்ஸாரியான ஜீவஸ்வரூபம் நிரதிஶயவிலக்ஷண ப்ரஹ்ம ஸ்வரூபமாகக்) கூடுமாகில், நல் - நல்ல, உறைப்பு - பெரும்பேறன்றோ? கூடாமையை - லோகத்தில் கூடாமையே வடிவாயிருக்கிற ஸம்பாவிஷாணாதிகளை, கூடினால் - லபிக்கப் பெற்றதாகிலிறே, அது - அந்தஜீவவஸ்து, (நிர்த்தோஷப்ரமாண வேதமயனாய்), ஆடல் - (ஐகவத்ப்ரத்யாஸத்தியாலே) தர்ஶநீயகதியான, பறவை - பெரியதிருவடியை, உயர்கொடி - (ஸ்வஸ வலக்ஷண்ய ப்ரகாஶகமான) உச்ச்ரிதத்வஜமாகவுடைய, எம் - ஆஸ்ரிதாநுபாவ்யமான, மாயன் ஆவது - ஆஸ்சர்யஸ்வரூப ரூப குணங்களையுடையனான ஸர்வேஸ்வரனாய்விடுவது; அதுவே - அந்தஜீவவஸ்து தானேயாமத்தனை; (த்ரவ்யம் த்ரவ்யாந்தரமாகை அஸம்பாவிதமிறே, ஆனால் இதுக்கு மூலமென்னென்னில்) ; ஒரு

† 'வீடைப்பண்ணி' என்று மிகாது வந்தது எதுகைநயம்பற்றி.

பரிசே - ஸ்வபுத்திமர்யாதையா யிருப்பதொருபடியாலே, (அப்ரமாணமாக), வீடை - மோக்ஷத்தை, பண்ணி - கல்பித்து, எதிர்வும் - மேல்வரும் காலத்தோடு, நிகழ்வும் - இப்போது வர்த்திக்கிற காலத்தோடு, கழிவும் - முன்பு கழிந்த காலத்தோடு வாசியற, ஆய் - ஒருபடிப்பட வுள்ளராய், ஓடி - ("ஸம்ஸாரவநவீம்வ்ருஜு" என்று ஜங்காலராய்) ஓடி, திரியும் - திரியக்கடவ, யோகிகளும் - யோகிகளும், உளரும் - உண்டாயிருக்கும்; (அநாதியான கர்மஜநிதமான ஸம்ஸாரப்ரவாஹத்தில்), இல்லைபல்லரே - இல்லாதாரில்லையிறே. ஏவம்வித மஹாயோமிகளும் ஸம்ஹாவிதமென்று அதிக்ஷேபித்தாராயிற்று.

இ.—ஒன்பதாம்பாட்டில், அந்திமஸ்ம்ருதியிலே ஜீவபரபேதம் ப்ரஸ்துதமானவாறே, "இந்தபேதம் பரமார்த்தம்; தத்த்வஜ்ஞாநம் பிறந்தால் ஆத்மாவும் ப்ரஹ்மமும் ஒன்று" என்றுகொண்டு நித்யஸம்ஸாரியான சேதநனையே ப்ரஹ்மமாகச் சொல்லுகிற மாயாவாதிகளை க்ஷேபிக்கிறார்.

[கூடிற்றாகில் நல்லுறைப்பு] - அநுபாஷணம். [கூடாமையித்யாதி] - "ஸர்வேஸ்வரபரிக்ரஹம்" என்னும் ஹர்ஷப்ரகர்ஷத்தாலே ஆடாநின்றுள்ள பெரியதிருவடியைத் தனக்கு வ்யாவர்த்தக விசேஷணமாகவுடையனாய் ஆஸ்சர்யகுண சேஷ்டிதங்களையுமுடைய ஸர்வேஸ்வரனை, இஸ்ஸம்ஸாரியான ஜீவாத்மாவுக்குக்கூடுவது, ஸஸ விஷாணம் வந்த்யாஸுதன் என்கிற அநுபபந்நங்கள் உபபந்நமாகக்கூடில். [அது அதுவே] - அந்த ஆத்மவஸ்து அந்த ஆத்மவஸ்துவேயாயிருக்குமத்தனை; கருடவாஹநனாய், ஸமஸ்த கல்யாணகுணாத்மகனாய், அதிமாநுஷசேஷ்டிதனை ஸர்வாயிகனைகமாட்டாது. தத்த்வஜ்ஞாநம் பிறந்தவாறே, வஸ்து வஸ்த்வந்தரமாமோ? "ஜநந்த் ஹ்ருதவ்யம் ஹி ஜெநகி தத்வக்தாபத:" [வீடைப்பண்ணி யித்யாதி] - நித்யஸித்தர்க்கும் அவ்வருகான தத்த்வமாக நித்யஸம்ஸாரியைச் சொல்லுவார் உண்டோ? என்னில்,— அப்படி இருப்பாரும் உண்டென்கிறார். [ஒருபரிசே வீடைப்பண்ணி] - ஸாஸ்த்ரமூலமாகவன்றிக்கே அவித்யாநிவ்ருத்தியே மோக்ஷமென்று ஸ்வபுத்தியாலே ஒன்றைக்கட்டி. [எதிர்வும் இத்யாதி] - பூத பவிஷ்யத் வர்த்தமாநகாலத்ரயங்களிலும் உளராய், நிஷ்ப்ரயோஜநமாகத் தட்டித்திரியும் மஹாயோமிகளும் உளர். [இல்லைபல்லரே] - இல்லாமை இல்லை. காலம் அநாதி; பண்ணிவைக்கும் பாபங்களுக்கு எல்லை இல்லை. இப்படி இருப்பாரில் மஹாபுருஷர்கள் உண்டாகக்கூடாதோ? ஸம்ஸாரத்தில் கூடாதது உண்டோ?

ஈடு.—ஒன்பதாம்பாட்டு. அந்திமஸ்ம்ருதியிலே ஜீவபரபேதம் ப்ரஸ்துதமானவாறே, இந்த "பேதம் அபரமார்த்தம்: தத்த்வஜ்ஞாநம் பிறந்த ஆத்மாவும் ப்ரஹ்மமும் ஒன்று" என்றுகொண்டு நித்யஸம்ஸாரியான சேதநனையே ப்ரஹ்மமாகச் சொல்லுகிற மாயாவாதிகளை க்ஷேபிக்கிறார்.

[கூடிற்றாகில்நல்லுறைப்பு]-அநுபாஷணம். [கூடாமை இத்யாதி]-ஸஸவிஷாணமாதல், ககநகுஸுமமாதல், வந்த்யாஸுதனாதல் அநுபபந்நமானவை கூடுமாகில், "ஸர்

ஒன்பதாம்பாட்டு.—கூடிற்றாகில் இத்யாதி.

"கூடாமையை" என்றது - கூடாதவை யென்றாய், அநுபபந்நமானவையென்றபடி. ஐகாரம் - அவ்யயம். "கூடிநல்" என்றது - கூடுமாகிலென்றபடி. உயர்கொடி - உச்ச்ரி

வேஶ்வரவாஹநம்'' என்னும் ஹர்ஷப்ரகர்ஷத்தாலே ஆ--ாநின்றுள்ள பெரியதிருவடி ய
த்வஜமாகவுடையவனும், ஆஶ்சர்யமான குணசேஷ்டிதங்களை யுடையனும், பெரிய ரு
வடிதிருத்தோளிலே பின்பும் பிறதுவாளியுமாய் ஸம்ஸாரிசேதந னிருப்பது. [அதுவதுவே]-
அவ்வஸ்து அவ்வஸ்துவே; வஸ்து வஸ்த்வந்தரமாகாதிறே. நித்யஸித்தர்க்கும் அவ்வருக க
ஸம்ஸாரிசேதநரைச் சொல்லுவாரும் சிலருண்டோவென்ன,—[வீடைப்பண்ணியே ரு
பரிசே] - (ஒருபரிசே - வீடைப்பண்ணி) - ஶாஸ்த்ரமூலமாகவன்றிக்கே, அவித்யா வ்
ருத்தியே மோக்ஷ மென்று ஸ்வபுத்தியாலே ஒன்றைக் கட்டி. [எதிர்வும் நிகழ்வும் கழி வு
மாய்] - ஹூதஹவிஷ்யத்வர்த்தமாந காலத்ரயத்திலுமுளராய். [ஓடித்திரியும்யோகிக ந
முளரும்] - நிஷ்ப்ரயோஜநமாகத் தட்டித்திரியும் மஹாயோகிகளும் உளர். [இல் ல
யல்லரே] - இல்லாமையில்லை. காலம் அநாதி: பண்ணி வைக்கும் பாபங்களுக்கு 6 ங்
லையில்லை. இப்படியிருப்பார் சில மஹாபுருஷர்க ளுண்டாகக்கூடாதோ? ஸம்ஸாரத்தி ப்
கூடாதது உண்டோ ?
( )

பத்தாம் பாட்டு.

உளருமில்லையல்லராய் உளராயில்லையாகியே
உளரெம்மொருவரவர்வந்து என்னுள்ளத்துள்ளேயுறைகின்றார்
வளரும்பிறையுந்தேய்பிறையும்போல அசைவும் ஆக்கமும்
வளருஞ்சுடருமிருளும்போல் தெருளும்மருளும்மாய்த்தோமே.

ஆ.—(உளரும்.) - இப்படி துர்த்தர்ஶமாய், ஹேயப்ரத்யநீகஸமாய் விலக்ஷணமான ஆத்மஸ்வரூபத்தை, வ்ருத்தஸம்ஶ்லேஷஸ்த்தைர்யார்த்தமாக, கேவல க்ருபையாலே எனக்குக் காட்டித்தந்தருளின னிப்போது; முன்பு, இஸ்ஸம்ஸ்லே

தத்வஜமாக வுடையவ னென்றபடி. பிறதுவாளி - பின்னே சாத்துகிற ஆபரணம். ஆனு அர்த்ததத்த்வமேதென்ன - அதுவதுவே இத்யாதி. இவ்விடத்திலே - 'ஸம்ஹர்த்தா ஸம்ஹாரணம் ஸம்ஹார்யஶ்ச இதீஷ்யதே । த்ரைவித்யம் ஸ்ருஷ்டேர் ஹி ப்ரோக்தம் தத்த்வ தாம்யத:'' என்றது அநுஸந்தேயம். '' 'ஸம்ஹர்த்தா ஸம்ஹாரணம் - ஸம்ஹார்யஶ்ச' இதி இஷ்யதே. இஷ்டமாகாநின்றது: அத:, 'ஸ்ருஷ்டிர் தத்த்வதாம் ஏதி' இதேதத்நிரஸ்தம்'' இதி ஸம்பந்தவக்ஷ: ; ஸித்தாந்தஸ்து, ''யத: ஸ்ருஷ்டிர் ஜீவஸம்ஹதா ஸ்ருஷ்டி. தத்த்வதா - ஸம்ஹர்த்த்வதாம் ஏதி. அத: 'ஸம்ஹர்த்தா ஸம்ஹாரணம் ஸம்ஹார்ய இதீஷ்யத இதியக்ஷஸந்நியம்.'' நித்யஸித்தர்க்கும் நித்யஸூரிகளுக்கும், அவ்வருகாக - அவ்வருகான ஸர்வேஶ்வரனுக. ''ஒருபரிசே-வீடைப்பண்ணி' என்றதுக்கர்த்தம் - ஶாஸ்த்ரமூலமாக இத்யாதி. பரிசு - ப்ரகாரம். ''யோகிகளு முளருமில்லை யல்லரே'' என்றது-க்ஷேபோக்தி. மாயாவாதிகளிடத்தில் உபாலம்பம்தோற்றச் சொல்லுகிற ஆழ்வா ருடைய ஹார்த்தபாவத்தை அருளிச்செய்கிறார் - காலம் அநாதி இத்யாதி. வாக்யசதுஷ்டயத் தாலே. ஸம்ஸாரிசேதநன் - ஆடல்பறவையுயர்கொடி யெம்மாயனுவது என்று மூலத்திலே அத்யாஹரித்துக்கொள்வது.

(க

க்ஷஸ்த்தைர்பார்த்தமாக, திரவ்யஶ்ரநஸௌக்ஷர்ய ஸௌகந்த்ய ஸௌகுமார்ய லாவண்ய யௌவநாத்யநந்தகுண விஶிஷ்டனாய், அஸங்க்யேய கல்யாண திவ்யபூஷண திவ்யாயுதோ பேதனான தன்னைக் காட்டிக்கொண்டு என்னுள்ளே புகுந்தருளினான்; நிரீஶ்வரஸாங்க்ய குத்ருஷ்டிகளில் நான் புகாதபடி தன்னைக் காட்டிக்கொண்டிருந்தருளினான்; ஆதலால், அநர்ஹதாநுஸந்தாநஜ்ஞாந அஜ்ஞாந வ்ருத்திக்ஷயாதி ஸகலதநுஹவவிரோதிகளெல்லாம் போக்கினேனென்கிறார்.

ஒ.—பத்தாம்பாட்டில், ஸாங்க்யாதிகுத்ருஷ்டிகளில் நான் புகாமே காத்து எனக்குமேஷியான தான், என்னோடேவந்து நிரந்தரஸம்ஶ்லேஷம் பண்ணுகையாலே என்னுடைய ஸகலதுஃக்கங்களும்போயிற்று என்கிறார்.

[உளருமில்லையல்லராய்] - "இல்லையென்னவொண்ணாதே அஸ்திமாத்ரமாயிருப்பர்" என்று ஸேஶ்வரஸாங்க்யமதம். [உளராயில்லையாகியே] - "இல்லையாகியே உளரென்று நிரீஶ்வரஸாங்க்யமதம். இவையிரண்டையும் ஆஶ்ரித அநாஶ்ரிதவிஷய மென்றுஞ் சொல்லுவர். [உளரென்று தொடங்கி] - குணவிஶேஷாத்யாதிகளெல்லாவற்றாலும் பூர்ணமாயிருந்துள்ளவர் அவற்றைக்காட்டி என்னை அடிமைகொண்டு என்னுடைய ஹ்ருதயத்திலே எப்போதும் வர்த்தியாநின்றார். [வளருமென்று மேலுக்கு] - வளரும்பிறையும் தேய்பிறையும்போலே மாறிமாறி வருகிற வ்ருத்திக்ஷயங்களும், தமஃப்ரகாஶங்கள்போலே மாறிமாறிவருகிற ஜ்ஞாநாஜ்ஞாநங்களும் போக்கப்பெற்றோம்.

ப.—அநந்தரம், ஏவம்விதமான ஆத்மஸ்வரூபத்தை ப்ரகாஶிப்பித்து பாஹ்யகுத்ருஷ்டிமதங்களில் கைகழலாதபடி என்னெஞ்சிலே பவன் புகுந்திருக்கையாலே, என்னுடைய ஸம்ஸாரிக க்லேஶமெல்லாம் தீர்ந்தேனென்கிறார்.

இல்லை - ஆஶ்ரிதவிஷயத்தில் இல்லையென்கிற சொல்லுக்கு, அல்லராய் - விஷயமல்லராய்க்கொண்டு, உளரும் - என்றுமுளருமாய், இல்லையாகியே - (அநாஶ்ரித விஷயத்தில்) இல்லையாயே, உளராய் - உளராமவர், எம் - எங்களுக்கு (ஸ்வரூபரூபகுண விஶிஷ்டராய்க்கொண்டு), ஒருவர் - அத்விதீயராய், உளர் - ப்ரகாஶிப்பித்தார்; அவர் - அவர்தாமே, வந்து - (அஸிதிவிஷ்டராய்)வந்து,என் - என், உள்ளத்துள்ளே - நெஞ்சுக் குள்ளே, உறைகின்றார் - நித்யவாஸம் பண்ணாநின்றார்; (அத்தாலே), வளரும் பிறை போல - வளரும் பிறைபோலேயிருக்கிற, ஆக்கமும் - ஆக்கத்தையும், தேய்பிறையும் போல - தேய்பிறைபோலேயிருக்கிற, அசைவும் — அழிவையும், வளரும்சுடரும்போல்- அஸிவ்ருத்ததேஜஸ்ஸையுடைய ஆதித்யனைப்போலும், தெருளும் - ஜ்ஞாநத்தையும், இருளும்போல் - அந்தகாரம்போலேயிருக்கிற, மருளும் — அஜ்ஞாநத்தையும், மாய்த்தோம் - நசிப்பித்தோம். ஔபாதிக வ்ருத்திக்ஷயங்களும் ஜ்ஞாநாஜ்ஞாநங்களும் போய் ஏகரூப ஸ்வபாவனான ஆத்மாவை ஊர்சிக்கப்பெற்றோம் நாம் என்று கருத்து.

இ.—பத்தாம்பாட்டில்,ஸாங்க்யகுத்ருஷ்டிகளில் நான் புகாதபடி தானே ஸ்வயம்வரித்து அஜ்ஞாநாதிகளுக்கு அவகாஶம் இல்லாதபடி நினைவுக்கு வாய்த்தலையான மநஸ்ஸிலே நித்யவாஸம் பண்ணுகையாலே, என்னுடைய ஸகலதுஃக்கங்களும் போயிற்று என்கிறார்.

[உளருமில்லையல்லராய்] - "இல்லையென்னவொண்ணாதே அஸ்திமாத்ரமாயிருப்பர்" என்று ஸேஶ்வரஸாங்க்யமதம். விபிநிஷேதக்ஷம னன்றிக்கேயிருக்கும்

ஸர்த்தாவைப்போலே, ஈஶ்வரனாகிறான் ஜகந்நியமநக்ஷமனன்றிக்கே ஸத்பாவமாத்
யிருக்கை. [உளராயில்லையாகியே] - "இல்லையாகியே உளர்" என்று நிரீஶ்வரஸா
மதம். இல்லையாய்க்கொண்டே அவ்வஸ்துவினுடைய ஸத்பாவமென்கை. 'ஆஶ்
ர்க்கு இல்லையல்லராய் உளர்; அநாஶ்ரிதர்க்கு இல்லையாகியே உளர்' என்று ஆஶ்
அநாஶ்ரித விஷயமென்றும் சொல்லுவர். [உளரெம்மொருவர்] - குணவிபூத்
களால் பூர்ணராய்க்கொண்டு உளராய், அவற்றைக்காட்டி என்னை விஷயீகரித்த
விதீயர். [அவர்வந்து என்னுள்ளத்துள்ளே உறைகின்றார்] - குணாதிகரானவர்
னளவும் வந்து * மயர்வற மதிநலமருளித் தாந்திருத்தின நெஞ்சிலே நித்யவாஸம்பண்
நின்றார். [வளரும் இத்யாதி] - அவன்வந்து நித்யவாஸம் பண்ணுகையாலே
ரனைப்போலே மாறிமாறிவருகிற வ்ருத்திக்ஷயங்களும், ஆதித்யனையும் அந்தகாரத்
யும்போலே மாறிமாறிவருகிற ஜ்ஞாநாஜ்ஞாநங்களும் நிஶ்ஶேஷமாகப் போகப்
றேம்.

ஈடு.—பத்தாம்பாட்டு. ஸாங்க்யாதிகுத்ருஷ்டிகளில் நான் புகாதபடி தா
ஸ்வயம்வரித்து, நினைவுக்கு வாய்த்தலையான மநஸ்ஸிலே நித்யவாஸம்பண்ணுகையா
என்னுடைய ஸகலதுரிதங்களும் போயிற் றென்கிறார்.

[உளருமில்லையல்லராய்] - "ஈஶ்வரனென்பானொருவனுளன். இல்லையென்
வொண்ணாதே அஸ்திமாத்ரமாயிருக்கும்" என்று ஸேஶ்வரஸாங்க்யமதம்: விதிநிஷேதக்ஷ
னன்றிக்கேயிருக்கும் பர்த்தாவைப்போலே, ஈஶ்வரனாகிறான் ஜகந்நியமநக்ஷமனன்றிக்
ஸத்பாவமாத்ரமேயாயிருக்குமென்கை. [உளராயில்லையாகியே] - "இல்லையாகியேகா
அவனுடையவுண்மை" என்னும் நிரீஶ்வரஸாங்க்யன்: அந்த பக்ஷங்களை நிரஸிக்கிற
அன்றிக்கே, ஆஶ்ரிதாநாஶ்ரிதவிஷயமாக்கி, இல்லையல்லராய் உளராயிருப்பர் ஆஶ்ரிதர்க்
இல்லையாகியே யுளராயிருப்பர் அநாஶ்ரிதர்க்கு. [உளரேம்மோருவர்] - குணவிபூத்
திகளால் பரிபூர்ணராய்க்கொண்டு உளராய், அவற்றைக்காட்டி என்னை விஷயீகரித்த
விதீயர். [அவர்வந்து என்னுள்ளத்துள்ளேயுறைகின்றார்] - குணாதிகரான அவர் என்ன
வும் வந்து, * மயர்வறமதிநலமருளித் தாம் திருத்தின நெஞ்சிலே நித்யவாஸம்பண்ணுகி
றார். [வளரும் இத்யாதி] - தீபஸந்நிதியில் அந்தகாரம் நில்லாதாப்போலே, அவர் என்ஹ்
தயத்திலே நித்யவாஸம்பண்ணுகையாலே, சந்த்ரனுக்குப்போலே மாறிமாறி வரக்கட

பத்தாம்பாட்டு.—உளரும் இத்யாதி. "உளரெம்மொருவர்" என்றுதொடங்கி, "மாய
தோம்" என்னுமளவும் கடாக்ஷித்து அவதாரிகை - ஸாங்க்யாதி இத்யாதி. ஸாங்க்யன் - நிரீஶ்
ஸாங்க்யன். ஆதிஶப்தத்தாலே - ஸேஶ்வரஸாங்க்யரைச்சொல்லுகிறது.

"இல்லையல்லராய் - உளர்" என்று அந்வயிப்பது. இல்லாதவரல்லராய்க்கொண்டு உள
யிருப்பரென்று ஶப்தார்த்தம். 'இல்லையல்லராயுளரும்" என்றதுக்கு அர்த்தம் - ஈஶ்வரனெ
பான் இத்யாதி. விவரணம் - விதிநிஷேத இத்யாதி. "உளராயில்லையாகியே" - இல்லையாகியே
யுளர்; இல்லையன்றியே யுளராயிருப்பர். இல்லையென்றபடியென்று ஶப்தார்த்தம். அர்த்தாந்தர
அன்றிக்கே இத்யாதி. குணவிபூத்யாதிகளால் பரிபூர்ணராய் என்றது - அர்த்தாத்ஸித்தம். "உள
மில்லையல்லரா யுளராயில்லையாகியே" என்று - ஸேஶ்வர நிரீஶ்வர ஸாங்க்யருடைய மதாநுவா
மாதல், ஆஶ்ரிதாநாஶ்ரித விஷயத்தில் இவன் இருக்கும்படியை ஸ்வாபிப்ராயத்தாலே அருளி
செய்கிறாராதல். வளரும்பிறைபோல், ஆக்கமும் - வ்ருத்தியும், தேய்பிறையும்போல், அசைவும்
ஸங்கோசமும், அதாவது - வ்ருத்திக்ஷயமுமென்றபடி. இத்தால் - ஶரீரத்தினுடைய வ்ருத்திக்ஷய

தான வ்ருத்திக்ஷயங்களும், ஆதித்யனும் அந்தகாரமும் போலே மாறிமாறிவரக்கடவதான ஜ்ஞாநாஜ்ஞாநங்களும் மாய்க்கப்பெற்றோம். (க0)

௰ாம் பாட்டு.

தெருளும்மருளும்மாய்த்துத் தன்றிருந்துசெம்போற்கழலடிக்கீழ்
அருளியிருத்துமம்மானும் அயனுஞ்சிவனும் திருமாலால்
அருளப்பட்ட சடகோபன் ஓராயிரத்துளிப்பத்தால்
அருளியடிக்கீழிருத்தும் † நம்மண்ணல்கருமாணிக்கமே.

ஆ.—(தெருளும்) - சதுர்முக பசுபதி ப்ரப்ருதி ஸர்வாத்மாக்களுக்கும் நியந்தாவாய், ஸ்ரீய:பதியாயிருந்துவைத்து, ப்ராக்ருதவிஷய ஜ்ஞாநாஜ்ஞாநாதி ஸ்வாநுபவ விரோதிகளைப் போக்கி, ஸ்வாஸ்ரிதரைத் தன் திருவடிகளிலே சேர்விக்கும் ஸ்வபாவனாயிருந்த எம்பெருமானுடைய அருளுக்கே பாத்ரமான சடகோபன் ஓராயிரத்துளிப்பத்தும் வல்லாரை யருளி அவனடிக்கீழிருத்து மென்கிறார்.

ஒ.—நிகமத்தில், இப்பத்தும் கற்றாரை, ஆழ்வார்தம்மை விஷயீகரித்தாற்போலே எம்பெருமான் தானே வந்து விஷயீகரித்துத் தன்திருவடிகளின்கீழே வைத்துக்கொள்ளும் என்கிறார்.

[தெருளும் மருளுமென்று மேலுக்கு] - ப்ரஹ்மருத்ர ப்ரமுகரான ஸர்வாத்மாக்களுக்கும் ஈஸ்வரனாய், தன்னை அநுபவிக்கைக்கு விரோதியான ப்ராக்ருத விஷய ஜ்ஞாநாஜ்ஞாநங்களைப் போக்கி, தன்னை ஆஸ்ரயித்தவர்களைத் தன்திருவடிக்கீழே சேர்த்துக்கொண்டருளும் ஸ்வபாவனை ஸ்ரீய:பதியாலே நிர்ஹேதுகமாக விஷயீகரிக்கப்பட்ட ஆழ்வாருடைய.

ப.—அநந்தரம், இத்திருவாய்மொழிக்கு பலமாக பகவத்ப்ராப்தியை அருளிச்செய்கிறார்.

தெருளும் மருளும் - ஸாம்ஸாரிகமான ஜ்ஞாநாஜ்ஞாநங்களை, மாய்த்து - போக்கி, தன் - ஆஸ்ரிதரைத் தானேயங்கீகரிக்கும், திருந்து - திருத்தத்தையுடைத்தாய், செம் - சிவந்த, பொன் - பொன்னான, கழல் - வீரக்கழலையுடைய, அடிக்கீழ் - திருவடிகளின்கீழே, அருளி - ("அடிக்கீழமர்ந்துபுகுந்து அடியீர்வாழ்மின்" என்று) அருளி, இருத்தும் - (புறம்புபோகாதபடி) இருத்தும், அம்மானும் - ஸ்வாமியாம், அயனும் சிவனும் - (ஜகத்ஸ்ருஷ்டி ஸம்ஹாரங்களுக்குக்கடவ) ப்ரஹ்ம ருத்ராதிகளுக்கும் அந்தராத்மபூதனை, திருமாலால் - ஸ்ரீய:பதியாலே, அருளப்பட்ட - (மயர்வறமதிநலம்) அருளப்பட்ட, சடகோபன் - ஆழ்வாருடைய, ஓர் - அத்விதீயமான, ஆயிரத்துள் - ஆயிர வாய்மொழியில், இப்பத்தால் - இப்பத்துநிமித்தமாக, நம் - நம்முடைய, அண்

களைச் சொல்லுகிறது. "வளரும் - சுடர் போல் - தெருளும், இருள்போல் - மருளும்" என்று வைஷயிக ஜ்ஞாநங்களைச் சொல்லுகிறது. (க0)

† 'எம்மண்ணல்' என்பதும் பாடம்.

ணல் - ஸ்வாமியாய், கருமாணிக்கம் - நீலரத்நம்போலே யிருக்கிற திருநிறத்தையுை
வன், அருளி - நிரவதிக க்ருபையைப்பண்ணி, அடிக்கீழ் - தன்திருவடிகளின்கீ
இருத்தும் - இருத்தும். இதுவும் - அறுசீராசிரியவிருத்தம்.

இ.—நிகமத்தில், இப்பத்தும் கற்றாரை, தம்மை விஷயீகரித்தாற்போ
விஷயீகரித்துத் தன்திருவடிகளின்கீழே வைத்துக்கொள்ளுமென்கிறார்.

[தெருளும்மருளும் மாய்த்து] - ப்ரஹ்மாவின் ராஜஸமடியாகவந்த குத்ரு
ஜ்ஞாநமானதும், ருத்ரன் தாமஸமடியாகவந்த ஆகமாதிபாஹ்ய ஜ்ஞாநமான அஜ்ஞ
மும் மாய்த்து- ஸ்வாநுபவவிரோதியான ப்ராக்ருதவிஷய ஜ்ஞாநாஜ்ஞாநங்களை
போக்கி. [தன்திருந்து செம்பொற்கழலடிக்கீழ்] - ஆஶ்ரிதரை வேறொருவர்காலி
போகவிடாததாய், ஸ்ப்ருஹணீயமாய், வீரக்கழலையுடைத்தான தன்திருவடிகள
கீழே. இப்போதை வீரக்கழல், பிராட்டிமுன்னாக ஆஶ்ரயித்தாரைத் தன்கையிலு
பிறர்கையிலும் காட்டிக்கொடாத வீரக்கழல். [அருளியிருத்தும்] - கேவலக்ருபை
யாலே இருத்தும். [அம்மானாய் அயனும் சிவனும் திருமாலால்] - ப்ரஹ்மருத்ர
முகரான ஸர்வாத்மாக்களுக்கும் நிர்வாஹகனாய், ஸர்வேஶ்வரனான ஶ்ரிய:பதியாலே
[அருளப்பட்ட சடகோபன்] - "மயர்வறமதிநலம் அருளினன்" என்கிறபடியே - க
பைக்கு விஷயபூதரான ஆழ்வார். இவ்வருளுக்கு வாய்த்தலை பிராட்டியென்ன
[ஓராயிரத்துள் இப்பத்தால்] - இப்பத்தை அப்யஸித்தவர்களை அதுவே ஹேதுவா
[நம்மண்ணல் கருமாணிக்கம் அருளி அடிக்கீழ் இருத்தும்] - நமக்கு ஸ்வாமியா
ஸ்ப்ருஹணீயமான வடிவழகையுடையவன், தன்கேவலக்ருபையாலே தன்திருவடிகளி
கீழே சேர்த்துக்கொள்ளும். இப்பத்தும் கற்றவர்களை ஆழ்வார்க்குப்பண்ணின க்
பையைப் பண்ணிச் சேர்த்துக்கொள்ளும்.

ஈடு.—நிகமத்தில் - இப்பத்தும் கற்றாரை, தம்மை விஷயீகரித்தாற்போலே
விஷயீகரித்துத் தன்திருவடிகளின்கீழே வைத்துக்கொள்ளு மென்கிறார்.

[தெருளும்மருளும்மாய்த்து] - ப்ரஹ்மாவின் ராஜஸமடியாகவந்த குத்ருஷ்
ஜ்ஞாநமானதும், ருத்ரன் தாமஸஜ்ஞாநமடியாகவந்த ஆகமாதி பாஹ்யஜ்ஞாநமான அ
ஞாநமும் மாய்த்து; ஸ்வாநுபவ விரோதியான ப்ராக்ருதவிஷயஜ்ஞாநாஜ்ஞாநங்களை வாஸனை
யோடே போக்கி. [தன்திருந்துசெம்பொற்கழலடிக்கீழ்] - ஆஶ்ரிதரை வேறொருவர்காலி
குனியவிடாததாய், ஸ்ப்ருஹணீயமாய், வீரக்கழலையுடைத்தான திருவடிகளின்கீழே. இ
போதை வீரக்கழல், பிராட்டி முன்னாக ஆஶ்ரயித்தாரைத் தன்கையிலும் பிறர்கை

நிகமம்.—தெருளும் இத்யாதி. "இப்பத்தாலருளியடிக்கீழ்" இத்யாதியைக் கடாக்ஷித்து
அவதாரிகை - இப்பத்தும் இத்யாதி. "அருளப்பட்ட" என்றவநந்தரம், "அருளியடிக்கீழிரு
தும்" என்கையாலே தம்மைவிஷயீகரித்தாற்போலே விஷயீகரித்து என்கிறார்.

இப்பாட்டில் நிவர்த்யமாகச்சொல்லப்பட்ட ஜ்ஞாநாஜ்ஞாநங்களை இரண்டுவகையாக அரு
ளிச்செய்கிறார் - ப்ரஹ்மாவின் இத்யாதி வாக்யத்வயத்தாலே. குத்ருஷ்டிஜ்ஞாநமென்றது
ஸேஶ்வரஸாங்க்யனுடைய ரஜகார்ய அந்யதாஜ்ஞாநத்தை. பாஹ்யஜ்ஞாநமான அஜ்ஞாநமென்
றது - நிரீஶ்வரஸாங்க்யனுடைய தமகார்யவிபரீதஜ்ஞாநத்தை. "தெருளும் மருளும்" என்றதுக்கு
அர்த்தாந்தரம்-ஸ்வாநுபவ இத்யாதி. மாய்த்து-போக்கி. ப்ராக்ருதவிஷய ஜ்ஞாநாஜ்ஞாநங்களாவன -
அவற்றினுடைய ஸம்ஶ்லேஷ விஶ்லேஷங்களால் வந்த தெளிவும் கலக்கமும். "திருந்து" என்று -
கட்டளைப்பாடேதென்ன - ஆஶ்ரிதரை இத்யாதி. வீரக்கழலைச்சொன்னதுக்கு பாவம் - இப்
போதை இத்யாதி. "திருமாலால்" என்றத்தைப்பற்ற - பிராட்டிமுன்னாக என்றது. "அயனும்

லும் காட்டிக்கோடாத வீரக்கழல். [அருளியிருத்தும்] - கேவல க்ருபையாலே இருத்தும். [அம்மானும்அயனும்சிவனும் திருமாலால்] - ப்ரஹ்மருத்ரப்ரமுகரான ஸர்வாத்மாக்களுக்கும் நிர்வாஹகனாய் ஸர்வேஶ்வரனான ஸ்ரிய:பதியாலே. [அருளப்பட்டசடகோபன்] - "மயர்வறமதிநலமருளினன்" என்கிறபடியே அருளுக்கு விஷயபூதரான ஆழ்வார். இவ்வருளுக்கு வாய்த்தலை பிராட்டியென்கை. [ஓராயிரத்துளிப்பத்தால் - நம்மண்ணல்கருமாணிக்கமே - அருளியடிக்கீழிருத்தும்] - ஸர்வநிர்வாஹகனாய், ஸ்ப்ருஹணீயமான வடிவழகையும் குணங்களையுமுடையனான ஸர்வேஶ்வரன் தானேயருளித் தன்திருவடிகளின் கீழே சேர்த்துக்கொள்ளும். இத்திருவாய்மொழி யப்யஸித்தார்க்குத் தாம் பெற்ற பேறு என்கிறார். (கக)

